# வலிமார்கள் வரலாறு

# அப்துற்- றஹீம்

## பொருளடக்கம்


1. இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) ........ 9
2. உவைஸுல் கரனி (ரஹ்) ........ 42
3. ஹஸன் பஸரீ (ரஹ்) ........ 64
4. மாலிக் இப்னு தீனார் (ரஹ்) ........ 108
5. ஹபீப் அஜமீ (ரஹ்) ........ 139
6. ராபியா பஸரீ (ரஹ்) ........ 152
7. அப்துல் வாஹித் இப்னு ஸைத் (ரஹ்) ........ 195
8. அபூசுலைமான் தாரானி (ரஹ்) ........ 208
9. புலைல் இப்னு இயால் (ரஹ்) ........ 220
10. இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) ........ 248
11. தாவூத் தாயீ (ரஹ்) ........ 320
12. ஷகீக் பல்கி (ரஹ்) ........ 333
13. சுப்யான் அத்தெளரீ (ரஹ்) ........ 347
14. அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) ........ 376
15. மஃரூபுல் கர்கீ (ரஹ்) ........ 408
16. பிஷ்ர் இப்னுல் ஹாரித் (ரஹ்) ........ 421
17. ஹாத்திம் அஸம் (ரஹ்) ........ 442
18. துன்னூன் மிஸ்ரி (ரஹ்) ........ 461
19. ஸரீ அஸ்ஸகதி (ரஹ்) ........ 495
20. அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) ........ 519

பொருளடக்கம்


| | |
|---|---|
| امام جعفر صادق رضي الله تعالى | 1 |
| اويس القرني رحمة الله عليه | 2 |
| حسن البصري رحمة الله عليه | 3 |
| مالك بن دينار رحمة الله عليه | 4 |
| حبيب عجمي رحمة الله عليه | 5 |
| رابعة البصرية رحمة الله عليها | 6 |
| عبد الواحد بن زيد رحمة الله عليه | 7 |
| ابو سليمان الداراني رحمة الله عليه | 8 |
| فُضَيل بن عِياض رحمة الله عليه | 9 |
| ابراهيم بن ادهم رحمة الله عليه | 10 |
| داؤد الداعي رحمة الله عليه | 11 |
| شقيق البخي رحمة الله عليه | 12 |
| سفيان الثوري رحمة الله عليه | 13 |
| عبد الله بن مبارك رحمة الله عليه | 14 |
| معروف الكرخي رحمة الله عليه | 15 |
| بشر بن الحارث رحمة الله عليه | 16 |
| حاتم الاصم رحمة الله عليه | 17 |
| ذوالنون المصري رحمة الله عليه | 18 |
| سري السقطي رحمة الله عليه | 19 |
| ابويزيد البستامي رحمة الله عليه | 20 |

பொருளடக்கம்

© நூல் உரிமை : யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை - 17.

முதற் பதிப்பு : ஏப்ரல், 1972
நான்காம் பதிப்பு : டிசம்பர், 2004

விலை : ரூ. 175.00

ஒளி அச்சு:

**விக்னேஷ்வர் கிராபிக்ஸ்,**
சென்னை - 600 005.
தொலைபேசி : 9444186261

அச்சிட்டோர் :

**மணி ஆப்செட்**
112, பெல்ஸ் ரோடு,
சென்னை - 600 005.
போன் : 2855 5249, 2858 8186

# முன்னுரை

"என் உம்மத்திலே உள்ள அறிஞர்கள் பனீ இஸ்ராயீல்களிடையே தோன்றிய நபிமார்களுக்கு இணையானவர்கள்" என்று அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்து விட்டுச் சென்றனர். அவர்கள் திருவாய் மலர்ந்த செய்தியை உறுதிப்படுத்தும் வண்ணம் உலகில் அவ்வக்காலத்தில் தோன்றும் இஸ்லாமிய அறிஞர்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் வாரிசு போன்று துலங்கி இஸ்லாத்தை, இறை நெறியை இவ்வுலகில் பரப்பும் பணியில் ஈடுபட்டுச் சென்றனர். அந்த அறிஞர்கள், மார்க்க அறிஞர்கள் என்றும் ஆன்மீக அறிஞர்கள் என்றும் இரு வகைப் பட்டார்கள். அவர்களில் ஆன்மீக அறிஞர்களின் பரம்பரை அலீ (ரலி) அவர்கள் முதல் துவங்குகிறது.

அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் தாயிஃப் போரிலிருந்து திரும் புங்கால் அலீ (ரலி) அவர்களை மட்டும் தனியே அழைத்து ஆன்மீக இரகசியங்களை எடுத்தோதினர். அப்பொழுது உமர் (ரலி) அவர்கள் அண்ணல் அவர்களை அணுகி, "நாயகமே! தாங்கள் அலீக்கு மட்டும் ஏதோ இரகசியத்தைக் கூறுகின்றீர்களா?" என்று வினவியபொழுது, "நான் அவருக்கு யாதொரு இரகசியத்தையும் போதிக்கவில்லை. அல்லாஹ்தான் போதித்தான்" என்று இயம்பினர் அண்ணல். அதன் பொருள், "அல்லாஹ்வின் ஆணை மீதுதான் நான் அதனை அவருக்குப் போதித்தேனேயன்றி நானாகவே அதனைப் போதிக்கவில்லை" என்பதேயாகும். இவ்வாறு ஆன்மீக இரகசியத்தை அண்ணல் அவர்கள் அலீ (ரலி) அவர்களுக்கு மட்டும் போதித்ததன் காரணமாகவே, 'அனமதீனத்துல் இல்ம் வஅலிய்யுன் பாபுஹா' (நான் அறிவென்னும் பட்டணம், அலீ அதன் வாயில்) என்று கூறினர் அண்ணல்.

அந்த அலீ என்ற வாயிலின் வழியாக, இறைவன் அண்ணல் அவர்களுக்கு 'வஹீ' மூலம் போதித்த அந்த ஆன்மீக அறிவு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் மூலமாக உலகில் தோன்றிய, தோன்றிக் கொண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான வலிமார்களுக்கும் வந்து கொண்டிருக்கின்றது. இஃதன்றி எவ்வாறு நபிமார்கள் 'வஹீ' மூலம் இறைவனிடமிருந்து ஆன்மீக அறிவைப் பெற்ற னரோ, அதேபோன்று இவர்கள் 'இல்ஹாம்' மூலம் இறைவனிடமிருந்து ஆன்மீக அறிவைப் பெற்றார்கள். இதனையே பாயஸீத் பிஸ்தாமீ (ரஹ்) அவர்களும் "நீங்களெல்லாம் இறக்கக் கூடிய மனிதர்களிடமிருந்து அறிவைப் பெறுகின்றீர்கள். நாங்களோ பிறப்பிறப்பில்லா இறைவனிடமிருந்து அறிவைப் பெறுகின்றோம்" என்று கூறினர். இதன் காரணமாகவே பள்ளி சென்று ஒழுங்காகப் பயிலாத பலர் இறைவனால் 'இல்ஹாம்' மூலம் அறிவு போதிக்கப்பட்டு ஆன்மீகப் பேரரசர்களாக விளங்கினர்; விளங்குகின்றார்கள். ஆன்மீகப் பெருங்கடலில் மூழ்கி அவர்கள் கொண்டு வந்த மணி மணியான கருத்துக்கள் சிலபொழுது மார்க்கத்திற்கு முரண் போன்று தோன்றியதன்

காரணமாக, அவர்கள் இறைவனளவில் தங்களை அழித்துக் கொண்ட ஃபனா நிலையில் கூறிய சொற்கள் ஷரீஅத்திற்கு மாறுபட்டதாகத் தோன்றியதன் காரணமாக, மார்க்க விற்பன்னர்கள் அவர்களைக் காஃபிர் என்றும் ஸிந்தீக் (நிரீஸ்வரன்) என்றும் கூறினார்கள்.

மார்க்க அறிவும், ஆன்மீக அறிவும் அறிவின் இருவேறு பிரிவுகளாகும். மார்க்க அறிவு மோர் என்றால் ஆன்மீக அறிவு வெண்ணெய் ஆகும். இரண்டும் வெவ்வேறு தன்மை பெற்றதாகும். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் நிஜாமிய்யா மதரஸாவின் முதல்வராக இருந்து பணியாற்றிய பல்லாண்டுகளுக்குப்பின் தான் இந்த உண்மையைக் கண்டறிந்தார்கள். மாபெரும் மார்க்க விற்பன்னராகிய அவர்கள் ஆன்மீகக் கடலில் கணுக்கால் அளவு தண்ணீரிலேயே நிற்கும்பொழுது ஆன்மீக அறிஞர்கள் அதில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் தம் வாழ்விலேயே வெறுப்புற்றுப் பதவி துறந்து, நாடு துறந்து, ஆன்மீகத் துறையில் ஈடுபட்டனர். இதுபற்றிய தங்களின் அனுபவங்களை, அவர்கள் 'பிழையிலிருந்து விடுதலை' என்ற தம் நூலில் எடுத்தியம்புகின்றார்கள். இதன்பின் தான் அவர்கள் மன அமைதியுற்றனர். இதன்பின் தான் அவர்கள் தாம் உண்மையான அறிவைப் பெற்றதாகவும் உணர்ந்தார்கள்.

ஒருநாள் மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் தம் பள்ளியில் அமர்ந்து மார்க்கக் கல்வி போதித்துக் கொண்டிருந்தக்கால் அங்குக் காடுவாழ் மனிதர் போன்று வந்த ஒருவர் ''இஃது என்ன?'' என்று வினவினார். ''இதைப் பற்றி யெல்லாம் உமக்குத் தெரியாது. வெறுமனே இரும்'' என்றனர் மௌலானா ரூமி வெறுப்போடு. அவ்வளவுதான். அந்த மனிதர் ஆங்கிருந்த நூல்களை யெல்லாம் எடுத்து அண்மையிலுள்ள நீர்த் தேக்கத்தில் போட்டு விட்டார்கள். அது கண்ட மௌலானா ரூமி அவர்களும் அவர்களின் மாணவர்களும் அலறித் துடித்துவிட்டனர். அப்பொழுது அந்த மனிதர் அமைதியாக அந்த நீர்த் தேக்கத்திற்குள் கையை விட்டு அந்நூல்களை எடுத்தார். என்ன வியப்பு! அந்நூல்களெல்லாம் அணுவத்தனையும் நனையாது அப்படியே இருந்தன. அதைப் பார்த்த மௌலானா ரூமி (ரஹ்) அவர்களுக்குத் தம் கண்களையே தம்மால் நம்ப இயலவில்லை. ''இது என்ன?'' என்று வியப்புடன் வினவினர் அந்த மனிதரை நோக்கி, ''இதைப் பற்றியெல்லாம் உமக்குத் தெரியாது. வெறுமனே இரும்'' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டும் வெருண் டோடினார் அந்த மனிதர். இப்பொழுது தான் ''அந்த மனிதர் சாமான்யரல்லர், தாம் கற்ற கல்வி வேறு, அவர் கற்ற கல்வி வேறு'' என்ற உண்மையை மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் உணர்ந்து அந்த மனிதரை - ஷம்சுத் தப்ரேஸ் (ரஹ்) அவர்களை - பின் தொடர்ந்து ஓடிக் கண்டு பிடித்து அவர்களிடம் பிழை பொறுத்தருளுமாறு வேண்டி அவர்களின் ஆன்மீக மாணவரானார்கள் என்று வரலாறு கூறுகிறது.

இந்த ஆன்மீக அரசர்கள் இவ்வுலகில் பற்பல காலங்களில் தோன்றி மக்களிடையே அறிவொளியை, ஆன்மீக ஒளியைப் பரத்திச் சென்றார்கள்.

அவர்களின் மாண்பின்முன் மன்னாதி மன்னர்களின் மாண்பெல்லாம் மங்கின. அவர்களைக் காண்பதற்காக மன்னர்களெல்லாம் தவம் கிடந்தார்கள். அவர்களின் அருள் வேண்டி அரசர் பெருமக்களெல்லாம் அவர்களின் முன் மண்டியிட்டு நின்றனர்.

மாபெரும் இறை நேசச் செல்வரான ஸையித் ஆதம் பன்னூரி (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 1052-ஆம் ஆண்டில் லாகூர் வந்தபொழுது அவர்களுடன் பதினாயிரம் பேர்களும் வந்தனர். லாகூரிலும் அதன் சூழலிலும் வாழ்ந்து வந்த மக்கள் அவர்களுக்கு வழங்கிய வரவேற்பையும் காட்டிய பக்தியையும் கண்டு பெரிதும் பொறாமையும் அச்சமும் உற்ற முகலாயப் பேரரசர் ஷாஜஹான், அவர்களுக்குப் பெருந் தொகையைக் காணிக்கையாக அனுப்பிப் பின்னர், ''அவர்களிடம் இப்பொழுது பணம் இருப்பதால் அவர்கள் மீது ஹஜ்ஜு க் கடமையாகி விட்டது'' என்று லளிதமாகப் பிறரைக் கொண்டு எடுத்துரைக்கச் செய்து அவர்களை மக்காவுக்கு அனுப்பிவைத்து விட்டார்.

நிஜாமுத்தீன் ஔலியாவின் தரிசனத்தைப் பெறுவதற்காக சுல்தான் அலாவுத்தீன் கில்ஜி வருவதாக எத்தனையோ முறை சொல்லி அனுப்பியும் அவர்கள் அனுமதி வழங்க மறுத்து விட்டார்கள். ''அவ்விதமாயின் நான் வன்முறையில் அவர்களின் தவமடத்தில் நுழைந்து அவர்களைத் தரிசிப்பேன்'' என்று அவர் சொல்லி அனுப்பியபொழுது, ''அவர் அதன் தலைவாயில் வழியாக உள்ளே நுழையின் நான் அதன் கடை வாயில் வழியாக வெளியேறி விடுவேன்'' என்று மொழிந்தனர் அம்மேதகை. இறுதிவரை அவர் தம்மைப் பார்க்க அவர்கள் அனுமதிக்கவே இல்லை.

ஷைகு அலி (ரஹ்) அவர்களைக் கலீபா ஒருவர் காண வந்தபொழுது அவர்கள் தங்களின் கால்களை நீட்டிக் கொண்டே இருந்தார்கள். கால்களைச் சற்று மடக்கிக் கொள்ளுமாறு அமைச்சர் அவர்களின் காதோடு காதாகக் கூறிய பொழுதும் அவர்கள் தம் கால்களை மடக்கிக் கொள்ளவில்லை. பின்னர் கலீபாவும், அமைச்சரும் விடைபெற்ற பொழுது அவர்கள் அவ்விருவரின் கைகளையும் பிடித்துக் கொண்டு, ''நான் என் கைகளை மடக்கிக் கொண்டேன். எனவே என் கால்களை நீட்டிக் கொண்டேன்'' என்று கூறினர்.

வாரத்திற்கு இருமுறை குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களை சுல்தான் இல்துத்மிஷ்கானும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். ஒரிரவு அவர் அவர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுது கண்ணீர் வடித்தவராய், ''நியாயத் தீர்ப்பு நாளின் போது நான் எக்கூட்டத்தினருடன் இருப்பேன் என்று எண்ணியே எனக்கு அழுகை, அழுகையாக வருகிறது. கூறுங்கள், கூறுங்கள்'' என்று கூறிக் கதறினார்.

இவ்வாறு பேரரசர்களும் வந்து பணியும் வண்ணம் ஆன்மீகச் செங்கோலோச்சிய வலிமார்களின் வரலாற்றை நான்கு பாகங்களில் எழுத எண்ணி முதல் பாகமாக இந்நூலை எழுதியுள்ளேன். வலிமார்களின் வரலாற்றைப்

பார்ஸி மொழியில் ''தத்கிரத்துல் ஒளலியா'' என்ற பெயருடன் எழுதிய ஃபரீதுத்தீன் அத்தார் (ரஹ்) அவர்களைப் பின்பற்றி இந்நூலில் முதன் முதலாக அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அருமைப் பேரர் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்களின் வரலாற்றைப் பொறித்துள்ளேன். மற்றவர்களெல்லாம் கால வரிசைப்படி இதில் இடம் பெற்றுள்ளார்கள். ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர் களிலிருந்து துவங்கும் இவ்வரலாற்று வரிசை, இன்ஷா அல்லாஹ், பல்லக்கு வலியுல்லாஹ் (ரஹ்) அவர்களுடன் முடிவுறும்.

இந்நூலில் வலிமார்கள் செய்த அற்புதங்கள் (கராமாத்துகள்) உணவில் உப்பு கலந்துள்ள அளவே இடம் பெறுகின்றன. அந்த அற்புதங்களை இறைவனே அவர்களை மாண்புறச் செய்வதற்காக அவர்கள் மூலமாக வெளிப்படுத்தும்பொழுது அவை சிறப்புறுகின்றன. அவர்களும் சிறப்புறு கிறார்கள். ஆனால் அவர்கள் தாங்களே விரும்பி அவற்றை ஆற்றும் பொழுது இறைவனளவில் அவர்களுக்குள் தகுதி குறைவதோடு அவர்களின் ஆன்மீக முன்னேற்றமும் தடைப்படுகிறது. இறந்தவர் ஒருவரை உயிர்த்தெழச் செய்ய, கீழக்கரை வாழ்ந்த மாபெரும் இறைநேசச் செல்வர் கல்வத்து நாயகம் (ரஹ்) அவர்கள் விரும்பிய பொழுது, ''அவ்விதமாயின் உம் தகுதி உயர்வடைவது தடைப்படும்'' என்ற அருள் எச்சரிக்கை இறைவனிடமிருந்து கிடைத்ததன் காரணமாக அவர்கள் அதனைச் செய்வதைவிட்டும் தவிர்ந்து கொண்டனர் என்று அவர்களின் வரலாறு கூறுகிறது. அற்புதங்கள் நிகழ்த்துவதைப் பற்றி ஒரு தடவை அவர்கள் கூறுங்கால் ''பூப்பெய்திய கன்னிப் பெண் எவ்வாறு அதனை எடுத்துரைக்க நாணமுறுவாளோ அதே போன்று வலிமார்கள் அற்புதங்கள் நிகழ்த்தித் தங்களை வெளிப்படுத்த நாணமுறுவர்'' என்று இயம்பினர்.

கல்வத்து நாயகம் அவர்களின் பாட்டனார் தைக்கா சாஹிபு வலியுல் லாஹ் அவர்கள் ஒருவர் விலாயத் எய்த விரும்பின் அவர் ''ஒன்பத்தெட்டில் ஆகாமல் ஒன்றில் தரிபட வேண்டும்'' என்று எடுத்துரைத்துள்ளார்கள். இதன் பொருள் என்ன?

''இப்ராஹீம் (அலை) அவர்களைப் பின்பற்றியவர்கள் எழுபது பிரிவின ராகவும், மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றியவர்கள் எழுபத்தொரு பிரிவினராகவும், ஈஸா (அலை) அவர்களைப் பின்பற்றியவர்கள் எழுபத் திரண்டு பிரிவினராகவும், தம்மைப் பின்பற்றுபவர்கள் எழுபத்து மூன்று பிரிவினராகவும் உலகில் பிரிந்து வாழ்வர். தம்மைப் பின்பற்றிய அந்த எழுபத்து மூன்று பிரிவினரில் ஒரே ஒரு பிரிவினர் தாம் நேர்வழி பெற்ற வர்கள்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறிச் சென்றுள்ளார்கள். அவர் களே சுன்னத் - வல் ஜமா - அத்தைச் சேர்ந்தவர்கள் என்று நாம் கூறுகிறோம். இதனையே தைக்காசாஹிபு வலியுல்லாஹ் அவர்கள் மேலே கண்ட வண்ணம் எடுத்துரைக்கின்றனர். ஒன்பதை எட்டால் பெருக்கினால் எழுபத்திரண்டு வருகிறது. இதனையே அவர்கள் ஒன்பத்தெட்டில் ஆகாமல் என்று கூறி

ஒன்றாகிய சுன்னத் - வல்- ஜமாஅத்தில் தரிபட வேண்டும் என்று எடுத்துரைக் கிறார்கள்.

மேலும் அவர்கள் மக்களை ஃபாஸிக் (பெரும்பாவி) என்றும் ஸாலிஹ் (நல்லடியார்) என்றும் வலி (இறைநேசர்) என்றும் குத்பு (அகிலத்துக்கு முளை யானவர்) என்றும் நான்கு வகையாகப் பிரித்து அவர்களின் பண்புகளைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றனர்.

1. தனக்குத் துயரிழைத்தோனைத் தன் மனம் போன போக்கில் பழி வாங்குபவன் ஃபாஸிக்.
2. தமக்குத் துயரிழைத்தோனைத் தமக்கு எந்த அளவு அவன் துயரிழைத்தானோ அந்த அளவேயன்றி அதற்கு அதிகமாகவும் இல்லாது, குறைவாகவும் இல்லாது (இறைவன் தன் திருமறைவில் அனுமதித்த வண்ணம்) பழிக்குப்பழி வாங்குபவர் ஸாலிஹ்.
3. தமக்குத் துயரிழைத்தோனைப் பழிக்குப்பழி வாங்காது மன்னிப்பவர் வலி.
4. தமக்குத் துயரிழைத்தோனை மன்னிப்பதோடு மட்டுமின்றி அவனுக்காக இறைவனிடம் இறைஞ்சுபவர் குத்பு. இத்தகு பண்பே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காட்டிச் சென்ற அருட்பண்பாகும். தாயிஃபும் உஹதும் இதற்குச் சிறந்த நற்சான்றுகள்.

இவ்வாறு தைக்கா சாஹிபு வலியுல்லாஹ் அவர்கள், ஒருவர் சுன்னத் - வல் - ஜமாஅத்தின் வரையறைகளைப் பேணி நடந்து அன்பு, இரக்கம், தயை ஆகிய அற நற்பண்புகளை மேற்கொண்டொழுகுவதே அவரை வலியாக ஆக்கவல்லது என்று கூறாமல் கூறிச் சென்றுள்ளார்கள்.

எனவே நான் இந்நூலை ஒரு ''கராமாத்துக் களஞ்சியம்'' ஆக ஆக்காது அறிவுக் களஞ்சியமாக, ஆன்மீகக் களஞ்சியமாக ஆக்கியுள்ளேன். அவ்வக் காலங்களில் தோன்றிய வலிமார்கள் உதிர்த்துச் சென்ற அறிவுரைகள், வாழ்ந்து காட்டிய நெறிமுறைகள் ஆகியவற்றை இதில் ஆங்காங்கே பொதிய வைத்து வழிதவறிச் செல்லும் மனித இனத்திற்கு இதனை ஒரு வழிகாட்டும் ஒளி விளக்காக ஒளிரச் செய்துள்ளேன். இஃது ஒவ்வொரு இஸ்லாமியரின் இல்லத்திலும் உள்ளத்திலும் இடம் பெற்று அருள் ஒளியை, ஆன்மீக ஒளியை, ஆண்டவனை அறியும் ஒளியை அவர்களுக்கு வழங்கி, அவர்களை அறநெறியில், அருள் நெறியில் ஔலியாக்கள் அடியெடுத்து வைத்துச் சென்ற இறை வழியில் அழைத்துச் செல்லின், நான் என் பிறவிப் பயனைப் பெற்றதாக எண்ணிப் பெரு மகிழ்வுறுவேன்.

**- அப்துர்-றஹீம்**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# வலிமார்கள் வரலாறு

## (முதல் பாகம்)

## 1. இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்)

ஒருநாள் மாலை. திமிஷ்க் நகரத்திலிருந்து செல்லும் இராஜ பாட்டையிலே ஒரு நடுத்தர வயதினரும் அவரின் இளம் மகனும் நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரின் முகத்திலும் ஒரு தெய்வீகக்களை ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. விறுவிறுவென அடியெடுத்து வைத்த அவர்கள் இருவரும் இறுதியாக ஓரிடத்தை அடைந்தனர். அவ்விடம் விழாக் கோலம் பூண்டு காட்சியளித்துக் கொண்டிருந்தது. மக்கள் அங்குமிங்கும் குழுமி யாதேதோ பேசிக் கொண்டு நின்றார்கள். பாமரர்களும், பண்டிதர்களும், புரோகிதர்களும், பாதிரிகளும் வழி எங்கணும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது இவர்கள் இருவரும் அவர்களில் ஒருவரை அணுகி, ''ஐயா! இன்று இங்கு யாது விசேடம்?'' என்று வினவினர். அவர் இவர்கள் இருவரையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''தங்களைப் பார்த்தால் வேற்றூரார் போன்று தோன்றுகின்றது. இன்று எங்களுக்கு ஒரு பெருநாள். அதோ தெரிகின்றதே ஒரு மலை; அம்மலைமீது ஒரு முதியவர், அறிவுசால் பேரறிஞர் வாழ்ந்து வருகிறார். அவர் ஏசு பெருமானின் அடி தழுவி நடக்கும் நெறியாளர். அவரின் மாணவர் சிலருடன் பழகிய பெரும் பேறு வாய்க்கப் பெற்ற அறவாளர். அவர் ஆண்டுக்கு ஒரு தடவை எங்களுக்குத் தரிசனம் தருவார். அந்நன்னாள்தான் இந்நாள். இந்நாள் எங்களுக்கோர் பொன்னாள்'' என்று அவர் கூறி வாய் மூடுவதற்கு முன் ஆங்குத் திரண்டிருந்த மக்கட் கடல் அகோர ஒலி எழுப்பிக் கொண்டு அம்மலை நோக்கி அலைவீசிப் பாய்ந்தது.

இதைக் கண்டதும் அந்த நடுத்தர வயதினருக்கும் அவரின் இளம் மகனுக்கும் தாங்களும் ஆங்குச் செல்ல வேண்டும், ஆங்கு என்ன நிகழ்கின்றது என்பதைக் காண வேண்டும் என்னும் பேரவா அவர்களின்

உள்ளத்தில் முகிழ்த்தது. அடுத்த கணம் அவர்களின் கால்கள் அவர்களை அவர்கள் அறியாமல் அம்மலை நோக்கி இழுத்துச் சென்றன. சென்ற அவர்கள் ஆங்கு முன்னணியிலே போய் அமர்ந்து கொண்டிருந்தார்கள். இதைக் கண்டதும் ஆங்குக் குழுமி இருந்த மக்கள், ''யார் இவர்கள்? யார் இவர்கள்?'' என்று ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்துக் கண்மொழியால் வினவிக் கொண்டார்கள். ஆனால் யார் இவர்கள் என்பதுதான் எவர்க்கும் தெரியாத புதிராக இருந்தது.

சற்று நேரம் கழிந்தது. ஒரு பழுத்த கிழவர், கழியூன்றிய கையுடன் குகையிலிருந்து வெளியே மெது மெதுவாக அடியெடுத்து வைத்து நடந்து வந்தார். அவரைக் கண்டதும் ஆங்குக் குழுமி இருந்த மக்கள் அனைவரும் களிபேருவகை கொண்டார்கள். ஆனால் அவரோ முன் அணியிலே யாரோ வேற்று இனத்தவர் இருவர் வீற்றிருப்பதைக் கண்டதும் தம் உடலிலும், உள்ளத்திலும் ஒரு வகை மின் ஆற்றல் ஊடுருவிப் பாயப் பெற்றது போன்று மலைப்புற்று அவர்கள் இருவரையும் வைத்த கண் வாங்காது பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தார். பின்னர் மெதுமெதுவாக முன்னே நடந்து வந்து தமக்குரிய இடத்தில் அமர்ந்தார். அதன்பின் அவ்விருவரையும் நோக்கி, ''ஐயன்மீர்! தாங்கள் யார்? எங்கள் இனத்தவரா? அல்லது இறையருள் பெற்ற பேரினத்தவரா'' என்று வினவினார்.

''இறையருள் பெற்ற பேரினத்தவர்'' என்ற பதில் ஆங்கு வீற்றிருந்த நடுத்தர வயதினரின் வாயிலிருந்து கணீரென வெளி வந்தது.

''நல்லது; அப்பேரினத்தில் பாமரர்களில் ஒருவரா? அறிஞர்களில் ஒருவரா?''

''அப்பேரினத்தின் பாமரர்களில் ஒருவன் அல்லன்.''

''தாங்கள் என்னிடம் ஏதேனும் கேட்கின்றீர்களா? அல்லது நான் தங்களிடம் ஏதேனும் கேட்கவா?''

''தாங்களே கேளுங்கள். விடையளிக்கிறேன்.''

''சரி; தங்களுடைய இனத்தில் சுவனப்பேறு பெற்றவர்கள் உண்ணவும் அருந்தவும் செய்தபோதினும் அவர்களின் உடலிலிருந்து மலக்கழிவு ஏற்படாது என்று கூறப்படுகின்றதே. அது எவ்வாறு?''

''அன்னையின் வயிற்றில் கருவுற்றிருக்கும் குழந்தை அன்னை அருந்தும் உணவுப் பொருளிலிருந்து சத்துணவு பெற்ற போதினும் அது அக்குழந்தையின் உடலிலிருந்து நீங்குவதில்லையல்லவா? அதே போன்றுதான் அதுவும்.''

இதைக் கேட்டதும் அக்கிழவரின் வெண் புருவங்கள் விண்ணை நோக்கி மேலேறின. ''ஆகா! என்ன அருமையான பதில்! சற்று நேரத்திற்குமுன் இறையருள் பெற்ற அப்பேரினத்தின் பாமரர்களில் ஒருவன் என்று கூறினீர்களே. இஃதென்ன பாமரன் கூறக்கூடிய பதிலா?'' என்று கூறி வாயார்ந்தார் அம்முதியவர்.

''நான் அப்பேரினத்தின் பாமரர்களில் ஒருவன் அல்லன் என்று கூறினேனேயன்றி பாமரன் என்று கூறவில்லையே'' என்று அடக்கத்துடன் மொழிந்தார் அந்த ஆன்றவிந்தவர்.

அதுகேட்ட அம்முதியவர், ''அப்படியா? தாங்கள் கூறியது எனக்குச் சரியாகக் காதில் விழவில்லை. நல்லது. நான் தங்களிடம் மற்றொரு கேள்வி கேட்க விரும்புகின்றேன். தங்களின் பேரினத்தின் சுவனம் வாழ் பெருமக்கள் பல்வேறு வகைப் பழங்களையும் வயிறார உண்டபோதினும் அவை அணுவேனும் குறைவதில்லை என்று கூறப்படுகிறதே, அது எவ்வாறு?'' என்று வினவினார்.

''ஒரு விளக்கைக் கொண்டு ஆயிரம் ஆயிரம் விளக்குகளை ஏற்றியபோதினும் அம்முதல் விளக்கின் ஒளி ஒரு சிறிதேனும் குறையாதல்லவா? அதுபோன்றுதான் அது'' என்று மிடுக்காகப் பதில் வந்தது அந்த நடுத்தர வயதினரின் வாயிலிருந்து.

அவரின் இப்பதில் அம்முதுகிழவரை அப்படியே அயரச் செய்து விட்டது. தாம் இரண்டாவது தடவையும் தோற்றுவிட்டதை அவர் உணர்ந்தார். இதன்பின் சற்று நேரம் அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு, ''நல்லது; நான் மற்றொரு கேள்வி கேட்கப் போகின்றேன். அதற்குத் தாங்கள் எவ்வாறு பதிலிறுக்கப் போகின்றீர்கள் என்பதைப் பார்ப்போம்'' என்று மீண்டும் பேச்சைத் துவக்கிய அவர், ''ஒரே சூலில் இரட்டைக் குழந்தைகள் - ஒருவருக்கு மற்றொருவர் சில நிமிடங்கள் முன் பின்னாக இவ்வுலகில் பிறக்கின்றனர். அவர்கள் இருவரும் இவ்வுலகில் வாழ்ந்து ஒரே நாளில் இறப்பெய்திய போதினும் அவர்களில் ஒருவருக்கு வயது ஐம்பது. மற்றொருவருக்கு நூற்று ஐம்பது. இது எவ்வாறு?'' என்று வினவினார்.

முதியவர் இவ்வினா விடுத்து வாய் மூடுமுன் அந்த நடுத்தர வயதினரின் வளமாரும் மூளையிலே உஜைரின் வரலாறு பளிச்சிட்டது. அடுத்த கணம் அவரின் வாயிலிருந்து அருவி கொட்டினாற்போன்று பின்வரும் பதில் வெளிவந்தது.

''ஒரே சூலில் பிறந்த இரட்டைக் குழந்தைகள் அஸீஸும் உஜைரும் ஆவர். அவர்கள் இருவரும் முப்பதாண்டுகள் வரை உலகில் ஒன்று

சேர்ந்து வாழ்ந்தனர். அதன்பின் ஒருநாள் உஜைர் தம் கழுதை மீதேறி பரிசுத்த நன்னகரம் பைத்துல் முகத்தஸ் வழியே சென்றபொழுது அது பக்து நஸரின் படையெடுப்பால் பாழடைந்து கிடப்பதைக் கண்டதும் இதனை எவ்வாறு இறைவன் மீண்டும் வளமுறச் செய்து இதற்குப் புதுவாழ்வு நல்குவான் என்று எண்ணினார். இதன்பின் அவர் ஆங்கொரு மரநிழலில் அமர்ந்து அத்திப் பழங்கள் சிலவற்றை உண்டு, திராட்சைப் பழச்சாறு சிறிது அருந்தினார். இதன்பின் அவரை ஒருவித உறக்கம் ஆட்கொண்டது. உறங்கினார்; உறங்கினார். ஒரு நாளல்ல, ஒரு மாதமல்ல, ஓர் ஆண்டல்ல, ஒரு நூறு ஆண்டுகள்.

ஒரு நூறு ஆண்டு உறக்கத்திற்குப்பின் விழித்தெழுந்த அவர் சுற்று முற்றும் பார்த்தபொழுது தாம் அருந்தியது போக எஞ்சியிருந்த அத்திப் பழங்களும் திராட்சைப் பழச்சாறும் அப்படியே ஆங்கு இருக்கவும் ஆனால் கழுதை மட்டும் இறந்து அதன் எலும்புகள் ஆங்குச் சிதறுண்டு கிடக்கவும் கண்டார். இறந்ததை உயிர்ப்பிக்கத் தன்னால் இயலும் என்பதை அவருக்கு உணர்த்த விரும்பிய இறைவன் அக்கழுதையை உயிர் பெற்று எழச் செய்தான்.

பின்னர் அவர் தம் ஊர் திரும்பியபொழுது இளமை எழிலுடன் இருந்த அவரை எவரும் உஜைர் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. தள்ளாத வயதில் இருந்த அவரின் தமயனும் அவரைத் தம் தம்பி என ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அதன்பின் அவரின் உடலிலிருந்த மச்சத்தின் மூலம் அவரை அவரைவிட முதியவராகக் காணப்பட்ட அவரின் தனயன் இலக்குக் கண்டு தம் தந்தையென ஏற்றுக் கொண்டார். தௌராத் என்னும் தெய்வீகத் திருமறையை தம் உள்ளத்திலே வைத்துப் பாதுகாத்த அனைவரையும் பாதகன் பக்து நஸர் பதைபதைக்கக் கொன்றொழித்ததன் காரணமாக அவ்வான்மறையே இந்த வையத்தில் இல்லாது ஒழிந் திருந்தது. அதனை அவர் துவக்கத்திலிருந்து இறுதிவரை தம் உளச் சுரங்கத்திலிருந்து எடுத்துரைக்க, எடுத்துரைக்க, அதனை அவர்கள் தங்களின் எழுது கோலால் காகிதத்தில் எழுதிக் கொண்டு, 'இத்துணை இறையருள் பெற்ற இவர் இறைவனின் திருமகனேயன்றி வேறல்லர்' என்று வியப்பு மொழி பகர்ந்தனர். இதன்பின் இவரும் இவரின் உடன் பிறந்தார் அஸீஸுும் இவ்வுலகில் இருபதாண்டுகள் உயிர் வாழ்ந்து ஒரே நாளில் இறப்பெய்தினர். இதன் காரணமாக ஒரே நாளில் பிறந்து ஒரே நாளில் இறப்பெய்திய உஜைருக்குவயது ஐம்பதும் அஸீஸுக்கு நூற்று ஐம்பதும் ஆயின.''

இதனைச் செவியுற்றதும் அம்முது கிழவரின் முகம் வாடியது. குழுமி இருந்த தம் இனத்தவரை நோக்கி, ''இன்றையத் தினம் ஒரு மாபெரும்

அறிஞரை என்முன் அழைத்து வந்து என்னை இழிவுபடுத்தி விட்டீர்கள். என் மாண்பு மறைந்தது. இனிமேல் நீங்கள் என்னிடம் கேட்க விரும்பிய ஐயங்கள் அனைத்தையும் அவரிடமே கேட்டுத் தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறினார். அப்பொழுது அவரின் கண்களி லிருந்தும் கண்ணீர் வழிந்தோடியது.

அன்றிரவு அம்முதியவர் தனியாக அந்த நடுத்தர வயதினரைச் சந்தித்தார்; கரத்தோடு கரம் இணைத்து இஸ்லாத்தைக் தழுவினார். அப்பொழுது அவரின் திருவாயிலிருந்தும் ''இறைவன் ஒருவனே, அவரின் திருத்தூதர் முகம்மதெம்மான்'' என்னும் உணர்ச்சிமிகு சொற்கள் உள்ளத்தில் பொங்கி வெளிவந்தன.

அம்முதியவர் இஸ்லாத்தில் இணைந்ததைத் தவிர்த்து ஏனைய செய்திகள் அனைத்தையும் அரசாங்க உளவாளிகள் நிமிடத்திற்கு நிமிடம் கலீபா ஹிஷாமுக்கு அனுப்பிவைத்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டதும் பொறாமை உணர்வால் அவரின் உள்ளம் புழுங்கியது. சின்னாட்களுக்கு முன் இந்நடுத்தர வயதினரையும், அவரின் இளம் மகனையும் மதினாவிலிருந்து திமிஷ்குக்கு வரவழைத்து அவர்களை அவர் படுத்தியபாடோ சிறிதல்ல. மூன்று நாட்கள்வரை அவர் அவர்களுக்கு பேட்டியளிக்கவே மறுத்துவிட்டார். நான்காவது நாள் அவர்கள் அரண்மனைக்குள் அனுமதி பெற்று நுழைந்த பொழுது ஆங்குச் சில இளவல்கள் ஒரு குறியை நோக்கி அம்பெய்து கொண்டிருப்பதைக் கண்டனர். கம்பீரமாகக் கொலு வீற்றிருந்து அதனைப் பார்த்துக் கொண்டிருந்த கலீபா ஹிஷாம் அந்நடுத்தர வயதினரைக் கண்டதும், ''நீரும் அம்பெய்து அக்குறியை அடியும்'' என்று திடுதிடுப்பெனக் கூறினார். ''நானோ இளமையைக் கடந்து முதுமையை நோக்கிச் சென்று கொண்டிருப்பவன். இதுவோ இளைஞர்கள் விரும்பும் விளையாட்டு. மேலும் நான் இவ்வித்தையைக் கற்றும் அறியேன்'' என்று அவர் பதிலிறுத்தார். உடனே ஹிஷாம், ''அவ்விதமுள்ளோர் இருந்தும் என்ன? இறந்தும் என்ன?'' என்று கடுமொழி பகர்ந்தார். அடுத்த கணம், 'அவரைக் கொல்க' என்று ஆணை பிறந்தது.

ஆணையை நிறைவேற்றத் தன் அம்பறாத் தூணியிலிருந்து ஓர் அம்பினை வெளியே எடுத்தான் அண்மையில் நின்று கொண்டிருந்த வீரன் ஒருவன். அப்பொழுது அந்த நடுத்தர வயதினர் மின்னெனப் பாய்ந்து அவனின் கையிலிருந்த அம்பையும் வில்லையும் பிடுங்கி, குறியை நோக்கி ஒன்று, இரண்டு, மூன்று என மும்முறையும் சரியாக அடித்தார். இதைக் கண்டதும் கலீபா ஹிஷாம் உட்பட அங்கிருந்த அனைவருக்கும் திக்பிரமை ஏற்பட்டது. எவ்வாறு இது இவரால் இயன்றது என்று வியப்பு

மேலீட்டால் தங்களின் மூக்கின் மேல் விரல் வைத்துக் கொண்டிருந் தார்கள் அவர்கள்.

இதன்பின் அவரின் மகாத்மியத்தை நன்கு உணர்ந்த கலீபா ஹிஷாம் அவரையும் அவரின் இளம் மகனையும் தம் அருகே அமரச் செய்து, ''ஒரு குலத்தில் பிறந்தோர்கள் உடன்வாழும் வாழ்வினைப்போல் உறுதி யுண்டோ? நம்மிடையே வீண் பகைமை ஏன்?'' என்று இதமொழி நவின்றார். அதன்பின் அவரிடம் மார்க்கம் பற்றிப் பல விளக்கங்கள் வேண்டினார். பின்னர் அவரை நோக்கி, ''தங்களுக்கு யாது வேண்டும்? கூறுங்கள், தருகிறேன்'' என்று கூறினார்.

அதுகேட்ட அந்த நடுத்தர வயதினர், ''எனக்குத் தங்களிடமிருந்து யாதொன்றும் தேவை இல்லை. எங்களின் வாழ்வில் வீணே குறுக்கிடாது அமைதியாக நாங்கள் மதீனாவில் தங்கி எங்களின் அருட்பெரும் தந்தை அண்ணலெம்பெருமானின் திருச் சந்நிதானத்தில் வாழ்ந்துவர அனுமதி வழங்குங்கள். அதுபோதும்'' என்று மறுமொழி பகர்ந்தார்.

''நல்லது; அவ்விதமே நலமாக வாழ்ந்து வாருங்கள். என் இதய பூர்வமான ஆதரவு உங்களுக்கு என்றென்றும் உண்டு'' என மொழிந்து அவரை மகிழ்வுடன் அனுப்பிவைத்த ஹிஷாம் இப்பொழுது அவரின் செல்வாக்கு விண்மீன் மீண்டும் மீண்டும் உயர்வதைக் கண்டு மனம் புழுங்கினார். அவரின் பொறாமை உள்ளம் அவரை வெறுமனே இருக்கவிடவில்லை. 'அந்த நடுத்தர வயதினரும் அவரின் இளம் மகனும் மலைமீது வாழும் கிறிஸ்தவ முதியவரைச் சந்தித்து மதம் மாறிவிட்டனர். எனவே எவரும் அவ்விருவருடனும் எவ்விதத் தொடர்பும் கொள்ளக் கூடாது. மாறாக நடப்பின் அவர்களின் தலை தரையிலே புரளும்' என்ற அரச ஆணை நாடெங்கணும் பறை முழக்கப்பட்டது.

இஃது ஒன்றும் அந்த நடுத்தர வயதினருக்கோ அவரின் இளம் மகனுக்கோ தெரியாது. மலைமீது வாழ்ந்த அந்தக் கிறிஸ்தவ முதியவரைச் சந்தித்து அளவளாவி அவரை இஸ்லாத்தில் இணைத்தபின் அவர்கள் இருவரும் மதாயின் நகர் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். சின்னாட் களுக்கு முன் அன்புக் கரங்களால் அரவணைத்த அம்மதாயின் நகரம் இன்று அவர்களை நோக்கி, 'போங்கள்; போங்கள்; திரும்பிப் போங்கள். மதம் மாறியவர்களே! திரும்பிப் போங்கள்' என்று கூறி வெறுப்புக் கரங்களை வீசியது.

''நாங்கள் மதம் மாறவில்லை. பிற மதத்தில் இருந்த ஒரு முதியவரை இஸ்லாத்தில் இணைத்துவிட்டு வருகிறோம். உங்களிடையே தவறான செய்தி பரத்தப்பட்டுள்ளது'' என்று இவர்கள் இருவரும் இதமாக

எவ்வளவோ எடுத்துரைத்தும், அவ்வூர் மக்களின் செவிகள் அனைத்தும் செவிடாக இருந்தன. செவியின் அலுவல் இப்பொழுது செவிடாக இருப்பதுதான் என்று அவர்கள் எண்ணிக் கொண்டு வெறுப்புக் கணைகளை வேகமாக வீறி எறிந்தார்கள்.

எனவே யாது செய்வதென அறியாது அவ்விருவரும் அவ்வூரின் அண்மையிலிருந்த ஒரு குன்றின் மீது ஏறினர். அப்பொழுது அந்த நடுத்தர வயதினர் பெரும் குரலெடுத்து ஷுஐப் (அலை) அவர்கள் பற்றி இறைவன் தன் திருமறையில் அருளிய திருவசனத்தை உணர்ச்சி ததும்ப ஓதினார். அது அவ்வூர் மக்கள் அனைவருடைய கேளாச் செவியையும் குடைந்து, அவர்களின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து அவர்களின் உடலை ஒரு குலுக்கு குலுக்கியது. மாபெரும் தவறு செய்துவிட்டவர்கள் போன்ற மனோ நிலையை அவர்கள் அனைவரும் அடைந்தார்கள். அடுத்த கணம் உணர்ச்சியால் உந்தப்பட்டு அம்மலை நோக்கி இழுபட்டு நடந்து கொண்டிருந்தார்கள்.

இறுதியாக அவர்கள் அனைவரும் அம்மலையின் அடிவாரத்தை அடைந்ததும் ஒரு முதியவர் அவர்களை நோக்கி 'நாம் இம்மலையினும் பெரிய தவறிழைத்து விட்டோம்' என்று கூறினார். அதுகேட்டு அவர்கள் அனைவரும் மலைப்புற்று நின்றார்கள். அதன்பின் மீண்டும் பேச்சைத் துவக்கிய அப்பெரியார், ''நாம் அண்ணலெம்பெருமானின் அருமைப் பேரர்களை அவமதித்து விட்டோம். ஷுஐப் (அலை) அவர்கள் தம் மக்களுக்கு இம்மலை மீதேறி அருள் எச்சரிக்கை செய்தது போன்று இவரும் நமக்கு இறுதி எச்சரிக்கை நல்கிவிட்டார். அவ்விருவரிடமும் நாம் சென்று, நாம் அவர்களுக்கிழைத்த பொல்லாங்கை மன்னிக்குமாறு வேண்டி, அதற்கு மாறாக அவர்களுக்கு அளப்பரும் மரியாதை செய்யத் தவறின் ஷுஐப் (அலை) அவர்களின் இனத்தவருக்கு ஏற்பட்ட பொல்லா விதிதான் நமக்கு ஏற்படும்'' என்று கூறினார். அதுகேட்டு ஆங்குக் குழுமியிருந்த அனைவருடைய உள்ளங்களும் உடலங்களும் ஒருமித்து அதிர்ந்தன. அடுத்த கணம் அவர்கள் விறுவிறுவென மலை மீதேறிச் சென்று அவ்விருவரையும் அணுகித் தங்களின் தவற்றினைப் பொறுத் தருளுமாறு வேண்டி அவர்களைத் தங்களின் திருநகருக்கு அழைத்து வந்து அளப்பரும் மரியாதைகள் செய்து அன்புடன் அனுப்பி வைத்தார்கள். இச்செய்தி ஹிஷாமின் செவிப்பட்டதும் அவரின் உள்ளத்தில் பொறாமைத் தீ பன்மடங்கு அதிகமாகக் கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

இதன்பின் அந்த நடுத்தர வயதினரைச் சூழ்ச்சியினால் கொன்றொழிக்கும் 'திருப்பணி'யில் ஈடுபட்டார் ஹிஷாம். தம் சகோதரரின் மகன் இப்ராஹீம் பின் வலீதை மதீனாவுக்கு அனுப்பி அவர்களை நஞ்சூட்டி

கொல்லச் சதி செய்தார். அவரின் சதி வென்றது. அந்தச் சதிக்கு ஆளாகிய அந்த நடுத்தர வயதினர் ஹிஜ்ரி 114-ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் திங்கள் இரவு பிறை 7-இல் தம் இளம் மகனை அருகே அழைத்து, ''மகனே! அழிவுறும் இவ்வுலகத்திலிருந்து அழியாப் பேருலகத்திற்கு இன்றிரவு நான் பயணம் செல்லப் போகின்றேன். இதே போன்று ஒரு திங்கள் இரவில்தான் எம்பெருமானார் (ஸல்) அவர்களும் இப்பயணத்தை மேற்கொண்டனர்; என் தந்தையாரும் மேற்கொண்டார்கள்'' என்று கூறிக் கண்களை இறுக மூடிக்கொண்டார்கள்.

அண்ணலெம்பெருமான் முகம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் அருமைப் பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் அன்புத் திருமகனார் ஜைனுலாபிதீன் (ரஹ்) அவர்களின் அருமந்த மைந்தர் இமாம் முகம்மது பாகிர் அவர்கள் இறுதியாக தங்களின் கண்களை இறுக மூடிக் கொண்டார்கள். உலகில் நீதியைப் பரத்துவதற்காக வந்த அண்ணலெம் பெருமானின் அன்புத் திருப்பெயரர் இமாம் முகம்மது பாகிர் அநீதிக்கு இலக்காகி அதன் காரணமாக இவ்வுலகை இனிமேல் ஏறிட்டும் பாரேன் என்று கூறுமாப்போன்று தங்களின் கண்களை இறுக மூடிக் கொண்டார்கள். என்னுடைய 57 ஆண்டுகால உலக வாழ்வே! நான் இனிமேல் வாழப்போகும் அளப்பரும் பெரு வாழ்வோடு நீ ஒப்பு நோக்கப்படின் நீ எம்மாத்திரம்?' என்று கூறி அதனைத் துச்சமெனத் தூக்கி எறிந்து இறைவன் பக்கல் தம் முகத்தைத் திருப்பி தம் கண்களை இறுக மூடிக் கொண்டார்கள். அப்பொழுது அவர்களின் குலம் தழைக்க வந்த கோமகன் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களின் முகமெல்லாம் வாடியது, உளமெல்லாம் கனத்தது. ஒரு மாபெரும் சுமை திடீரெனத் தம்மீது வந்து வீழ்ந்ததைப் போன்ற ஓர் உணர்வை அவர்கள் பெற்றார்கள்.

⁂ ⁂ ⁂

அண்ணலெம்பெருமானின் அருள் வழி வந்து வான் புகழ்பெற்ற பன்னிரண்டு இமாம்களில் ஆறாவது இமாமான ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்கள் இவ்வகிலத்தோர் ஆற்றிய அருந்தவப் பயனாய் ஹிஜ்ரி 83-ஆம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 17 திங்கள் இரவு இவ்வவனி தோன்றினர். இவர்களின் அன்னையின் பெயர் உம்முபர்வா என்பதாகும். இவர் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகன் முகம்மதின் மகன் காசிமின் மகளாவார். காசிம் என்பார் அபூபக்ர் (ரலி) அவர்களின் மற்றொரு மகன் அப்துர் ரஹ்மானின் மகள் அஸ்மாவை மண முடித்தே உம்முபர்வாவை ஈன்றெடுத்திருந்தார். இவ்வாறு பார்க்குங்கால் இவர்கள் இருவகைகளில் அபூபக்ர் (ரலி) அவர்களின் பேரராக விளங்குகின்றார்கள். எனவேதான் இவர்கள் தங்களைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, ''அபூபக்ர் (ரலி)

அவர்கள் என்னை இருமுறை ஈன்றெடுத்தனர்'' என்று பெருமிதத்துடன் கூறினர்.

மற்றொரு வகையில் பார்க்குங்கால் இவர்கள் இரு வழிகளில் பாரசீக அரச பரம்பரையைச் சேர்கின்றார்கள். ஹுஸைன் (ரலி) அவர்கள் பாரசீக மன்னர் யஸ்த் ஜர்தின் அன்பு மகள் ஸஹர் பானுவை மணமுடித்தே ஜைனுல் ஆபிதீன் (ரஹ்) அவர்களை ஈன்றெடுத்திருந்தார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களின் மகனார் முகம்மது என்பார் யஸ்த் ஜர்தின் அருமைத் திருமகள் ஒருவரை மணமுடித்தே உம்முபர்வாவின் தந்தை காசிமைப் பெற்றெடுத்திருந்தார். இவ்வாறு அவர்களின் இரத்த நாளங்களிலே பாரசீகப் பேரரசின் பச்சை இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. அவற்றிற் கெல்லாம் மணிமுடி வைத்தாற் போன்று, அவர்கள் அகிலத்திற்கோர் அருட்கொடையாக வந்த அண்ணலெம்பெருமான் முகம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் அன்புக் கொள்ளுப் பேரராக இவ்வவனியிலே மாண்பு பெற்று விளங்கினர்.

உம்மு பர்வாவின் மணி வயிறு உதித்த தம் அன்புத் திருமகனை ஒருநாள் வாரி அணைத்துத் தம் அருமைத் தந்தை ஜைனுல் ஆபிதீன் அவர்களின் மடிமீது வைத்துப் பெயர் சூட்டுமாறு வேண்டி நின்றார் தனயர் முகம்மது பாகிர். தம் குலக்கொழுந்தாம் அக்கோமகனின் அழகுத் திருமுகத்தைத் தம் அருளொழுகும் கண்களால் பன்முறை திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்ந்த பாட்டனார் ஜைனுலாபிதீன் அவர்கள் தம் அருமைப் பெயரருக்கு தம் பாட்டனார் அலீ (ரலி) அவர்களின் உடன் பிறந்தாரின் அழகு சால் நற்பெயராம், சுவனப் பேராற்றின் சிறப்புமிகு திருப்பெயராம் ஜஃபர் என்பதனைத் தம் அமுத வாயால் விண்டு பெயர் சூட்டிப் பெருமகிழ்வு பூத்தனர். பிற்காலத்தில் இமாம் அவர்கள் உண்மைக்கோர் உறைவிடமாய், உயர்விற்கோர் தாயகமாய், 'உண்மையே! உன் பெயர் தான் ஜஃபர்' என்று கூறுமாப் போன்று விளங்கியதன் காரணமாக அவர்களின் அழகுத் திருப்பெயரோடு உண்மையாளர் என்று பொருள்படும் 'சாதிக்' என்ற உயர் பெயரும் ஒருங்கிணைந்து அவர்களின் மாண்பினை உலகம் முழுவதும் பறை முழக்கலாயிற்று.

இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்கள் தம் சின்னஞ்சிறு வயதில் தம் அருமைப் பாட்டனார் ஜைனுல் ஆபிதீன் (ரஹ்) அவர்களின் அரவணைப்பிலேயே வாழ்ந்து, அவர்களிடமிருந்து இறைவன்தன் திருமறையையும் அவனின் திருத்தூதர்தம் அருள்மொழிகளையும் கற்றுத் தேறினர். தம் இளம் பெயரரின் பிஞ்சுவாயில் அமுதூட்டி மகிழ்ந்த தோடல்லாது அவரின் பசுமை நெஞ்சில் இஸ்லாமியப் பெருநெறி களையும் பேரறங்களையும் ஆழமாகப் பதிய வைத்து அகம்பூரித்தனர் பாட்டனார் ஜைனுல் ஆபிதீன். இதன் காரணமாக ஜஃபர் சாதிக் (ரஹ்)

அவர்கள் தம் இளமையிலேயே அன்பும் அறனும் ஒருங்கே வாய்க்கப் பெற்று கற்றாரும் மற்றாரும் வியந்தேற்றும் வண்ணம் விளங்கி வந்தார்கள்.

ஒருநாள் அன்னை உம்முபர்வா அடுப்பிலே பெரும் விறகுக் கட்டைகளோடு சிறு சிறு சுள்ளிகளையும் வைத்து நெருப்பு மூட்டியதைக் கண்ட சிறுவர் ஜஃபர் சாதிக் அவர்களின் செங்கமலக் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோடியது. இதைக்கண்டு பதறிப் போன அன்னை தம் அருமை மகனை வாரி அணைத்து முத்தமிட்டு 'மகனே! ஏன் அழுகின்றாய்?' என்று ஏக்கத்துடன் வினவினர். ''தாங்கள் அடுப்பிலே பெரும் விறகுக் கட்டைகளோடு சிறு சிறு சுள்ளிகளையும் வைத்து நெருப்பு மூட்டியதைக் கண்டதும் மறுமையில் இவ்வாறு தானே பாவம் புரிந்த பெரிய மனிதர்களுடன் பாவமிழைத்த சின்னஞ்சிறார்களையும் இறைவன் நரக நெருப்பில் தள்ளுவான் என்ற எண்ணம் என் உள்ளத்திலே மிகைத்தது. நானும் அச்சிறுவர்களில் ஒருவனாக ஆகிவிடக் கூடாதே என என் குலையெல்லாம் நடுங்கியது. அதன் காரணமாக என்னை அறியாமல் என் கண்கள் கண்ணீர் கக்கின'' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதார் சிறுவர். அதுகேட்ட அன்னை தம் அருமை மகனின் அழகுத் திருமுகத்தில் ஆயிரம் ஆயிரம் முத்தங்களைச் சொரிந்து, ''மகனே! அழாதே!! அளப்பரும் அருளாளனாகிய அல்லாஹ் உன்னைச் சுவனம் புகச் செய்வான்!'' என்று ஆறுதல் மொழி பகர்ந்தனர்.

இவர்களுக்குப் பதினோர் ஆண்டும் பத்து மாதமும் எட்டு நாட்களும் நிறைவுற்றபொழுது பாட்டனார் ஜைனுலாபிதீன் அவர்கள் இவ்வுலகு நீத்தனர். இதன்பின் இவர்களின் ஆசானாக, இவர்களின் அன்புத் தந்தை முகம்மது பாகிரே விளங்கி இவர்களுக்கு இறைஞானச் செல்வங்களை யெல்லாம் வாரி வாரி வழங்கினார். பாட்டனாரின் மறைவுக்குப்பின் இவர்கள் தம் மாண்பாரும் தந்தையாருடன் பத்தொன்பது ஆண்டு பத்து மாதம் பன்னிரண்டு நாட்கள் கழித்தார்கள். இந்த 7250 நாட்களில் தந்தையார் தம் அறிவுத் திருமகனுக்கு 7250-க்கு மேற்பட்ட இகபர இரகசியங்களையும் இறைஞான உண்மைகளையும் போதித்துத் தமக்குப்பின் தம் பீடத்தில் அமரும் தகுதி வாய்ந்தவராகத் தனயனை ஆக்கினார்.

தம் முப்பத்து ஒன்றாவது வயதில் இமாமின் பீடத்தில் அமர்ந்த ஜஃபர் சாதிக் (றஹ்) அவர்களின் புகழ்க்கொடி எட்டுத் திக்கும் பட்டொளி வீசிப் பறந்தது. முழுமதி நிகர்த்த அவர்களின் திருமுகத்தில் ஒரு கருமச்சம் அமைந்து அவர்களின் அழகுக்கு அழகு செய்தது போன்று, அவர்களின் உளப்பண்பாடுகள் அவர்களின் முகத்திலே பிரதிபலித்து, அவர்களின் உயரிய பாரம்பரியத்தை உலகெங்கும் விரித்தோதிக் கொண்டிருந்தன.

நபி திருப்பேரர் மதினாவில் குரு பீடத்தில் அமர்ந்து நடத்திவந்த கல்லூரி, அரபு அவனியில் பல்வேறு திக்குகளிலிருந்தும் மக்களைக் காந்தம் போல் இழுத்தது கண்கொள்ளாக் காட்சி! ஹிஜாஸ், இராக், சிரியா, குராஸான் ஆகிய நாடுகளிலிருந்து நாலாயிரம் மாணவர்கள்வரை வந்து அங்குக் கல்வி கற்றார்கள். அம்மாணவர் குழாத்திலே மாபெரும் மார்க்க விற்பன்னர்களும் நபிமொழிக் கலை வல்லுனர்களும் அடங்கி இருந்தது வியத்தகு நிகழ்ச்சி!!

மதீனாவில் தாம் நடத்தி வந்த கல்லூரியோடு மனநிறைவுறாது ஆல்விழுது விட்டது போன்று இமாம் அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பற்பல பள்ளிகளைத் தோற்றுவித்தனர். அவற்றில் படித்துப் பட்டம் பெற்று வெளிவருபவர்கள் பல்வேறு கலைகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கியது, ஒவ்வொரு நகரிலுமுள்ள குதிரை வீரனுக்கும் தெரிய வந்தது என்பது இப்னு ஹஜர் அஸ்கலானி வாயார்ந்து கூறும் வாக்கு.

இவ்வாறு ஆன்மீக அரசாட்சி செய்து வந்த இமாம் அவர்கள் தம் மாணவர்களுக்கு அரும் பெரும் அற போதங்களை நல்கினர். தாம் கூறும் அற போதங்களை எழுதிக் கொள்ளுமாறும், அவை அனைத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள இயலாதென்றும் கூறினர்.

ஒருநாள் இமாம் அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''நீங்கள் பயபக்தியுடையவர்களாகவும், அமானிதத்தை நிறைவேற்றுபவர் களாகவும், மக்களுடன் நன்முறையில் பழகுபவர்களாகவும், சுருக்கமாகப் பேசக்கூடிய சன்மார்க்கப் பிரசாரகர்களாகவும் திகழுங்கள்'' என்று கூறினர்.

அதுகேட்ட மாணவர்கள், ''சுருக்கமாகக் கூறின் மக்களின் மனத்தை எவ்வாறு தொடுவது?'' என்று வினவினர்.

அதற்கு இமாம் அவர்கள் விடையிறுக்குங்கால், ''நீங்கள் இறை கட்டளைக்குப் பணிந்து நேரியவழியில் நடப்பின் நீங்கள் அதிகமாகப் பேச வேண்டியதில்லை. உங்களின் செயலே பெரும் முழக்கம் செய்துவிடும்; அதுவே பெரும் பிரசாரமாகிவிடும். செயல் விரிவாகப் பேசும்பொழுது சொற்கள் சொற்பம் போதும்'' என்று திடமாக மொழிந்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் தம் மாணவர்களுக்கு அறிவுரை பகருங்கால், ''நீங்கள் அணியும் ஆடைகள் அழகாகவும் தூய்மையாகவும் இருக்கட்டும். அல்லாஹ் அழகை விரும்புகின்றான். தான் ஒருவனுக்கு நல்கிய நற்பேறுகள் அவனிடம் பிரதிபலிப்பதையும் விரும்புகின்றான்'' என்று இயம்பினார்கள்.

வேறொரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, எல்லா மனிதர்களுடனும் அன்புடனும் தயையுடனும் நடந்து கொள்ளுங்கள்.

ஒருவனின் இனவெறி அவனின் இனத்திலுள்ள தீயவர்களை மற்றோர் இனத்தின் நல்லவர்களை விட அதிகமாக நேசிக்கச் செய்கிறது'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

பிறிதொரு தடவை அவர்கள் தம் மாணவர்களைப் பார்த்து, ''நீங்கள் உலகத்திற்கு ஓர் அணியாக விளங்க வேண்டும். அதனை நீங்கள் ஒருபோதும் மாசுறச் செய்து விடக் கூடாது. அப்பொழுதுதான் உலக மக்கள் ஜஃபர் இப்னு முகம்மதுக்கு இறைவன் அருள்பாலிப்பானாக! அவர் தம் மாணவர்களை நன்முறையில் பயிற்றுவித்திருக்கிறார் என்று கூறுவர்'' என்று எடுத்தோதினர்.

இன்சொல்லும் இனிய பண்பும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற இந்நல்லார் இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் உளப்பண்பு பெற்று விளங்கினர். ஒருநாள் அவர்கள் பள்ளிவாயிலுக்குத் தொழச் சென்றகாலை ஆங்கு ஒரு மூலையில் வேற்றூரார் மட்டும் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டனர். தம் அன்புப் பாட்டனார் அண்ணலெம் பெருமான் நின்று தொழுத புனிதமிகு இடத்தில் தொழுது, 'சலாம்' கூறிய இவர்களை அந்த வேற்றூரார் அணுகி, 'என் பணப் பையைக் கொடும்' என்று கூறினார். 'பணப்பையா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே, விளக்கமாகக் கூறுங்கள்' என்று இவர்கள் இதமாக வினவ அவரோ, 'என்ன பாசாங்கு பண்ணுகின்றீர்? நான் எத்துணை சிரமப்பட்டு அந்த ஆயிரம் பொற்காசு களைச் சேகரித்து வந்தேன். அவற்றை ஒரு நொடியில் கபளீகரம் செய்து விட்டீரே! உம்மைத் தவிர இங்கு ஒருவரும் இல்லை, நீர் தாம் அவற்றைக் களவு செய்திருக்க வேண்டும். கொடும்' என்று அதட்டினார்.

இமாம் அவர்கள் மறு வார்த்தைப் பேசவில்லை. அந்த வேற்றூராரின் அவலநிலை அவர்களின் உள்ளத்தை உருகச் செய்தது. அவரைத் தம் இல்லம் அழைத்துச் சென்று ஒரு பணப்பையை அவரிடம் கொடுத்து, 'எண்ணிப் பாருங்கள். எண்ணிப் பார்த்தபின் யாதொன்றும் எண்ணாது எடுத்துச் செல்லுங்கள்' என்று கூறினர். அவரும் அவ்வாறே எண்ணினார். அதிலே இரண்டாயிரம் பொற்காசுகள் மின்னின.

இப்பொழுது அந்த வேற்றூரார்க்கு இஃதெல்லாம் என்னவென்றே விளங்கவில்லை. ஆயிரம் பொற்காசுகளை இழந்து அவலமெய்திய அவரின் கரங்களில் இரண்டாயிரம் பொற்காசுகள் மின்னியது, அவரைக் கண்சிமிட்டிக் கேலி செய்வது போன்றிருந்தது. 'என்ன இது!' என்று வியப் புடன் வினவினார் அவர் இமாம் அவர்களை நோக்கி, ''பொற்காசுகள்! எடுத்துச் சென்று தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்'' என்று புன்முறுவல் பூத்துப் பொன்மொழி பகர்ந்தனர் இமாம். கனவா,

நனவா என்று அறிய இயலாவண்ணம் குழப்பமே உருவெடுத்தாற் போன்று அப்பணப்பையை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினார் அவ்வேற்றூர்க்காரர்.

சற்று நேரத்தில் இமாம் அவர்களின் வீட்டுக் கதவை யாரோ தடதடவென்று தட்டுவது போன்று கேட்டது. கதவைத் திறந்தனர் இமாம் அவர்கள். அடுத்த கணம் அவர்களின் காலடியிலே ஒரு மனிதர் கண்ணீருடனும் கம்பலையுடனும், 'மன்னியுங்கள் மன்னியுங்கள்' என்று அலறிக்கொண்டு கிடந்தார். இமாம் அவர்கள் அவரின் முகத்தை உற்றுப் பார்த்தார்கள். அவர் வேறு யாருமில்லை. தம்மிடமிருந்து சற்று நேரத்திற்கு முன் இரண்டாயிரம் பொற்காசுகளைப் பெற்றுச் சென்ற அந்த வேற்றூர்க்காரர் தாம் அவர். 'என்ன செய்தி?' என்று வியப்புடன் வினவினர் இமாம் அவர்கள் அவரை நோக்கி. அதுகேட்ட அவர், ''நான் தங்களுக்குப் பெரும் அநீதி இழைத்து விட்டேன். தங்களின் மாண்பினை அறியாது தங்களுடன் தவறாக நடந்து என் வாழ்வினையே மாசுபடுத்திக் கொண்டேன். இழந்த என் பணப்பை கிடைத்துவிட்டது. இதோ தாங்கள் தந்த பணப்பை. பெற்று என்னை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும்' என்று அலறினார்.

அதுகேட்டு இமாம் அவர்கள் புன்னகையை அள்ளிச் சொரிந்து, இழந்த பணப்பையை மீளப்பெற்றதற்காகப் பெரு மகிழ்ச்சி. ஆனால் அளித்த அன்பளிப்பை மீளப்பெறுவது எங்களுக்கு அழகன்று. ஆதலின் அதனை எடுத்துச் சென்று பயன்படுத்தி மகிழுங்கள். அளப்பரும் அருளாளனாகிய அல்லாஹ் தங்களுக்கு அருள் பாலிப்பானாக!'' என்று அமுத மொழி பகர்ந்தனர்; பகர்ந்துவிட்டு மகிழ்ச்சி மண்டிய உள்ளத்துடன் உள்ளே சென்றனர். உள்ளே செல்லும் அவர்களை வியப்பு மிகு கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தார் அந்த வேற்றூர்க்காரர். அப்பொழுது அவரின் உள்ளம் இவர் வானவரா அல்லது மண்ணவர்தாமா என்று வினா எழுப்பிக் கொண்டிருந்தது.

'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாக இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களின் வாழ்வு அமைந்திருந்தது. ஒருநாள் இமாம் அவர்கள் தம் நண்பர் கஷ்அமீயின் கையில் பணப்பை ஒன்றைக் கொடுத்து, 'இதனை எங்களின் உறவினரான இன்னாரிடம் கொண்டு போய்க் கொடுத்து விடுங்கள். அவர் பெரிதும் வறுமையில் வாடுகின்றார். எனவே இஃது அவரின் வாழ்விற்கோர் செழுமையாக அமையட்டும். ஆனால் ஓர் எச்சரிக்கை. தாங்கள் என் பெயரை மட்டும் அவரிடம் கூறக்கூடாது'' என்று இயம்பினார்.

''ஏன் அவ்வாறு?''

''அவருக்கு என்மீது அளவற்ற வெறுப்பு. அஃது விரோதமாக உருவெடுத்துள்ளது. நான் வள வாழ்வு வாழ்ந்தபோதினும் அவருக்கு நான் உதவவில்லை என்று அவர் வருந்துகின்றார். எனவே நான் அவருக்கு இதனை அனுப்பி வைத்ததாகத் தாங்கள் கூறின், அவர் அதனைத் தவறான தன்மதிப்பின் காரணமாக ஏற்றுக்கொள்ளாது திருப்பி அனுப்பினாலும் அனுப்பிவிடலாம் என்று நான் அஞ்சுகின்றேன். அதனால் எனக்கு இலாபமேயன்றி இழப்பில்லை. ஆனால் அவருக்கோ பேரிழப்பு.''

''நல்லது; அவ்விதமே செய்கின்றேன்.''

இவ்வாறு கூறி அப்பணப்பையுடன் சென்ற அந்நண்பர் இமாம் அவர்களின் உறவினரை அணுகி அவரின் கையில் அப்பணப்பையைக் கொடுத்ததும் கதிரவனைக் கண்ட கமலம் போன்று அவருடைய முகம் மலர்ந்தது. அடுத்த கணம் அவருடைய வாயிலிருந்து 'ஏது இது? யார் அனுப்பியது இதனை?' என்ற சொற்கள் வியப்பில் தோய்ந்து வெளி வந்தன.

அதுகேட்ட கஷ்அமீ, ''தெருவில் சென்ற ஒருவர் இதனைத் தங்களிடம் ஒப்படைத்து விடுமாறு கூறினார்'' என்று கருக்கமாகப் பதில் கூறினார். அந்தப் பதிலிலே தாம் பொய்யுரைக்கவில்லை என்ற பெருமித உணர்வும் கலந்திருந்தது. காரணம், மனிதர்கள் அனைவரும் தெருவில் நடமாடக் கூடியவர்கள்தாமே! அவ்விதம்தானே இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களும் என்று அவர் எண்ணினார்.

இதன்பின் சற்று அமைதி நிலவியது.

இமாம் அவர்களின் உறவினர் பேச்சைத் துவக்கினார். ''பாருங்கள்!'' எவரோ தெருவில் செல்லக் கூடிய ஒருவர் என் அவல நிலையை அறிந்து இவ்வாறு எனக்கு உதவி செய்து விட்டுச் சென்றுள்ளார். இவ்விதம் அவர் உதவி செய்தது ஒன்றிரண்டு தடவையல்ல, பல தடவைகள். ஆனால் எங்களின் உறவினர் ஜஃபர் சாதிக் இருக்கின்றாரே, அவர் வளவாழ்வு வாழ்ந்தபோதினும் எங்களை ஏறிட்டுப் பார்ப்பதில்லை.''

சிரிப்பை அடக்கிக் கொண்ட கஷ்அமீ விரைவில் அவரிடமிருந்து விடைபெற்று இமாம் அவர்களை அணுகி நடந்த விவரங்கள் அனைத்தையும் அணுவேனும் விடாது கூறினார். அதுகேட்டு இமாம் அவர்களின் உள்ளம் உவகைக் கடலில் மூழ்கியது.

இவ்வாறு மறைவாகச் செய்யும் அறமே இமாம் அவர்களுக்குப் பெருமகிழ்வை நல்கி வந்தது. எனவே அவர்கள் இதனை அதிகமாகச்

செய்து வந்தார்கள். இரவில் ரொட்டிக் கூடைகளைச் சுமந்து சென்று வழிப்போக்கர்கள் தங்கும் விடுதிகளை அணுகி அவர்கள் உறங்குங்கால் அவர்களின் விரிப்பின் கீழ் அந்த ரொட்டிகளை வைத்துவிட்டு வருவதை அவர்கள் தங்களின் நீங்காப் பெருவழக்கமாகக் கொண்டிருந்தனர்.

பிறர் தமக்குச் செய்யும் பொல்லாங்குகளையும் அவர்கள் அணுவத் தனையும் பொருட்படுத்துவதில்லை. ஒருநாள் நண்பர் ஒருவர் அவர்களை அணுகி, ''தங்களின் சிறிய தந்தையாரின் மகன் தங்களை வாயில் வந்த வண்ணமெல்லாம் திட்டி கொண்டுள்ளான்'' என்று கூறினார். அதுகேட்ட இமாம் அவர்கள் அவன்மீது சற்றேனும் சீற்றமுறவில்லை. அதற்கு மாறாக, 'உளூ' செய்து இரண்டு 'ரக்அத்' தொழுது, ''இறைவனே! நான் அவரை மன்னித்துவிட்டேன். நீயும் அவரை மன்னித்துவிடு. அவர் அறியாது செய்த பிழைக்கு அவரைத் தண்டித்துவிடாதே!'' என்று இறைஞ்சினர்.

இதுகண்டு அந்த நண்பருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. அப்பொழுது இமாம் அவர்கள் அவரை நோக்கி, ''நம்மை ஒருவர் ஏசின் அதற்கு நாம் எழுபது விதங்களில் நல்ல காரணங்களை கற்பிக்க வேண்டுமேயன்றி, அவரை நாமும் திரும்ப ஏசிவிடக் கூடாது. அதற்கு நற்காரணம் ஒன்றையேனும் நம்மால் கற்பனை செய்ய இயலாவிடின், அதற்கு நாம் அறியாத விதத்தில் ஒரு நற்காரணம் இருக்கத்தான் வேண்டும் என்று எண்ணிக் கொள்ள வேண்டும்'' என்று அருள்மொழி பகர்ந்தனர்.

இமாம் அவர்களின் உள்ளத்தில் அன்பும் அருளும் ஒருங்கே நிறைந்து வழிந்து கொண்டிருந்தன. அதன் காரணமாக, பிறரின் துன்பம் கண்டு தாமே வருந்தும் உள்ளத்தினராக அவர்கள் விளங்கி வந்தார்கள். தங்கள் வீட்டு மேல்மாடிக்கு எவரும் செல்லக் கூடாது எனக் கண்டிப்பான உத்தரவிட்டிருந்த இமாம் அவர்கள், ஒருநாள் தம் பணிப்பெண் தம் சின்னஞ்சிறு குழவியை இடுப்பிலே இடுக்கிக் கொண்டு மாடிப்படிமீது ஏறியபொழுது பார்த்து விட்டனர். அதனை அவளும் பார்த்து விட்டாள். அவளின் உள்ளமும் உடலும் ஒருங்கு சேர்ந்து அதிர்ந்தன. அதன் காரணமாக அவளின் இடுப்பிலே இருந்த குழவி கீழே நழுவி விழுந்து விட்டது. பணிப் பெண்ணோ நடுங்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். அதைக் கண்ட இமாம் அவர்களின் அன்புள்ளம் இளகியது. அவள் வேண்டுமென்றே தம் குழவியைக் கீழே போடவில்லை என்பதையும் தம்மைக் கண்ட அதிர்ச்சியினாலும் அச்சத்தினாலுமே அவ்வாறு நிகழ்ந்தது என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். எனவே அவளை அவர்கள் கழிவிரக்கத்துடன் நோக்கி, ''அஞ்சாதே! நடக்க வேண்டியது நடந்து விட்டது'' என்று ஆறுதல் மொழி பகர்ந்தனர். அப்பொழுது இமாம் அவர்களின் அன்பு மகவோ ஆவி பிரியும் நிலையில் துடித்துக் கொண்டு கிடந்தது.

அன்புள்ளம் கொண்ட அப்பெருமகர் தம் பாட்டனார் முகம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் கூறிச் சென்ற அறநெறிகளுக்கு அணுவேனும் மாறு செய்யாது நடந்து வந்தனர். ஒருநாள் அவர்களின் தோட்டத்தில் சில பணியாட்கள் வேலை செய்தனர். வேலை முடியும் தறுவாயில் ஆங்குப் போந்த இமாம் அவர்கள் அவ்வேலையாட்களின் உடலில் வியர்வை நீர் ஓடையென ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டதும் தம் ஊழியரிடம் பணப்பை ஒன்றைக் கொடுத்து, ''அதோ பாரும்! அந்த வேலையாட்களின் உடலிலிருந்து வியர்வை வழிந்தோடிக் கொண்டுள்ளது. அது உலர்வதற்கு முன் அவர்களுக்கு உரிய கூலியைக் கொடுத்துவிடும்'' எனப் பணித்தார்கள்.

இவ்வாறு அவர்கள் அன்புள்ளம் கொண்டு விளங்கிய போதினும், முட்டாள்தனமாக வினா எழுப்புபவர்களுக்கு முரட்டுத்தனத்துடன் விடையளித்து அறிவு புகட்டவும் அவர்கள் தயங்கவில்லை. ஒருநாள் இமாம் அவர்கள் தம் நண்பர்களுடன் தஜ்லா நதி தீரத்திலே அமர்ந்து இறைவனைப்பற்றி உரையாடிக் கொண்டிருக்கும்பொழுது அவ்வழியே சென்ற ஒருவர், ''தாங்கள் இறைவனைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இறைவனை எனக்குத் தங்களால் காட்ட இயலுமா? இயலாவிடின் இயலாது என்று கூறிவிடுங்கள். நானும் இறைவனே இல்லை, இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பது மனிதனின் உள்ளத்தில் தோன்றிய ஒரு கற்பனை எண்ணம் என்று எண்ணிக் கொண்டு சென்று விடுகிறேன்'' என்று கூறினார்.

அதுகேட்ட இமாம் அவர்கள் அவருக்கு எவ்வளவோ இதமாகப் பதிலுரைத்தும் அவர் கேட்கவில்லை. இனிமேல் அவருக்கு அவருடைய 'பாஷை'யிலேயே பாடம் கற்பிக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்ட இமாம் அவர்கள். 'நீங்கள் இறைவனைப் பார்க்க வேண்டுமென்று தீர்மானமாக எண்ணி விட்டீர்களா?' என்று வினவினார். ''ஆம்'' என்று அவர் திடமாக மறுமொழி பகர்ந்தார். உடனே இமாம் அவர்கள் கயிறு கொணரச் செய்து அவருடைய கைகளையும் கால்களையும் இறுகப் பிணைக்குமாறு செய்து அந்தத் தஜ்லா நதியிலே அவரைத்தூக்கி எறியுமாறும் அவர் மூழ்கிச் சாகும் வரை அவரை விடக் கூடாதென்றும் தம் நண்பர்களுக்குக் கண்டிப்பான ஆணையிட்டனர்.

ஆற்றுப் பிரவாகத்திலே வீசி எறியப்பட்ட அவர் அலை நடுவே அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டார். கைகால்களை வீசி சமாளிக்கத் துவங்கிய அவரைப் பேரலை ஒன்று வந்து உயரத் தூக்கிப் பாதாளத்திலே அமிழ்த்தியது. மீண்டும் தலை கிளப்பிய அவர், இனிமேல் தலை தப்ப முடியாது என்பதை உணர்ந்ததும் தண்ணீரைக் குடித்துக்கொண்டு

தத்தளித்த வண்ணம், ''சாதிக்! சாதிக்!! என்னைக் காப்பாற்றுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!!'' என்று அலறினார். ''இறைவன் இல்லை என்று சாதிக்கின்றவரே! சாகும்!! சாகும்!!!'' என்று பதிலுரைத்தார்கள் இமாம் அவர்கள். ''அபயம்! அபயம்'' என்று அவர் அலறியபொழுது, ''அழிந்துபோம்! அழிந்துபோம்!!'' என்று ஆவேசமாகக் கூறினார்கள் இமாம் அவர்கள்.

இமாம் அவர்களோ, அவரின் நண்பர்களோ தம்மைக் காப்பாற்ற மாட்டார்கள் என்பதை நன்கு விளங்கிக் கொண்ட அவர் இனிமேல் தமக்கு இறைவனையன்றி வேறு எவரும் கதியில்லை என்ற முடிவுக்கு வந்தார். அப்பொழுது அவரின் வாயிலிருந்தும் அவரை அறியாமல், ''அல்லாஹ்! அல்லாஹ்!! என்னைக் காப்பாற்று'' என்ற சொற்கள் அபயக் குரலில் வெளிப்போந்தன. இவை இமாம் அவர்களின் செவிப்பட்டதும் அடுத்த கணம் அவர்கள் தம் நண்பர்களை நோக்கி ஆற்றிலே பாய்ந்து அவரை எவ்வாற்றானும் காப்பாற்றிக் கொணருமாறு பணித்தனர். அவ்வாறே அவர்கள் அவரைக் காப்பாற்றிக் கரை சேர்ந்தாத்தார்கள்.

இப்பொழுது இமாம் அவர்கள் அவரை நோக்கி, ''இறைவனைத் தாங்கள் பார்த்துவிட்டீர்களல்லவா? அவனுடன் தாங்கள் உரையாடியது கூட எங்களின் செவிப்பட்டது'' என்று கூறினர்.

அதற்கு அவர், ''ஆம்; பார்த்துவிட்டேன். எனக்கு அவனைத் தவிர வேறு யாதொரு கதியும் இல்லை என்ற நிலை ஏற்பட்டபொழுது, அவனுக்கும் எனக்கும் இடையே இருந்த திரை கிழித்தெறியப்பட்டது. அப்பொழுது நான் அவனையே பார்த்தேன். அவனைத் தவிர வேறு யாதொன்றையும் நான் பார்க்கவில்லை'' என்று மறுமொழி பகர்ந்தார் அவர். அதுகேட்டு இமாம் அவர்களின் முகம் மலர்ந்தது.*

---

* இதே போன்று மற்றொரு நிகழ்ச்சியும் அவர்களின் வரலாற்றில் காணப்படுகிறது. ஒருநாள் இமாம் அவர்கள் கப்பலோட்டி ஒருவனுடன் உரையாடிக் கொண்டிருந்தக்கால் அவன் ஒரு நிரீஸ்வரன் என்பதைக் கண்டு கொண்டனர். அப்பொழுது இமாம் அவர்கள் அவனை நோக்கி, ''நீ உன் கடற்பிரயாணத்தில் எப்பொழுதேனும் கடலில் சிக்கியுள்ளாயா?'' என்று வினவினார். 'ஆம்' என்று பதில் கூறிய அவன் ஒருதடவை தான் சென்ற கப்பல் புயலில் சிக்குண்டு உடைந்து, கடலில் மூழ்கிவிட்டபோது கப்பலில் இருந்தோர் அனைவரும் இறந்துபட, தான் மட்டும் ஓர் உடைந்த மரத்துண்டைப் பிடித்துக் கொண்டு நீந்தி வந்ததையும், பின்னர் ஒரு பேரலை வந்து அந்த மரத்துண்டையும் தன் கையைவிட்டுப் பிய்த்துக் கொண்டு சென்றதையும், அதன்பின் தான் பெரிதும் சிரமப்பட்டுக் கரை சேர்ந்ததையும் விரிவாக எடுத்துரைத்தான். அப்பொழுது இமாம் அவர்கள் அவனை நோக்கி, ''நீ கப்பலில் ஏறி இருக்கும்பொழுது கப்பல் உன்னைக் கரை சேர்க்கும் என்று எண்ணி இருந்தாய். பின்னர் கப்பல் கடலில் மூழ்கிவிட்ட பொழுது நீ கைப்பிடித்த மரத்துண்டு உன்னைக்

ஒருநாள் ஒருவர் இமாம் அவர்களிடம் வந்து, 'நான் உண்ணல், அருந்துதல் ஆகிய அனைத்துப் பண்புகளும் (ஸிஃபத்துகளும்) ஒருங்கே பெற்ற இறைவனை வணங்குகிறேன்'' என்று கூறினார். அதுகேட்ட இமாம் அவர்கள், ''நீர் மனிதனையோ மனிதன் செய்த தொழு உருவங்களையோ வணங்குகின்றவரேயன்றி வேறில்லை. ஏனெனில் உண்ணல்., அருந்துதல் ஆகியவைகளெல்லாம் படைப்பினங்களின் பண்புகளேயாம்'' என்று கூறினர்.

அதன்பின் மற்றொருவர் வந்து தாம் எத்தகைய ஸிஃபத்துகளும் (பண்புகளும்) இல்லாத இறைவனை வணங்குவதாகக் கூறியபொழுது, அவர்கள் ''நீர் இறைவனை வணங்கவில்லை. சூன்யத்தையே வணங்குகிறீர்'' என்று இயம்பினர்.

சற்றுநேரம் கழித்து வேறொருவர் வந்து தாம் மனிதனின் பண்புகள் போன்று அழியும் தன்மையுள்ள பண்புகளைப் பெற்றிராது சம்பூரணமான அழியாப் பண்புகளைக் கொண்ட கண்ணின்றிப் பார்க்கவும் காதின்றிக் கேட்கவும் செய்யக் கூடிய இறைவனை வணங்குவதாகக் கூறிய பொழுது, அவர்கள், ''நீர் தாம் அண்ட கோளங்களைப் படைத்தாளும் உண்மையான இறைவனை வணங்குகிறீர்'' என்று பதிலிறுத்தனர்.

இறை நம்பிக்கையின் மாபெரும் சின்னமாக விளங்கிய இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்கள், ''நான் மனிதர்களையும் ஜின்னையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி வேறு எதற்காகவும் படைக்க

---

கரை சேர்க்கும் என்று நம்பிக்கை உனக்கிருந்தது. அதுவும் உன் கையை விட்டு நீங்கியகாலை, நிர்க்கதியாக நீ தவித்துக் கொண்டிருந்த நேரத்தில், நீ உன்னை எவரேனும் காப்பாற்றினால்தான் உயிர் பிழைக்க இயலும் என்று நம்பினாயா, அல்லவா?'' என்று வினவினர். 'அவ்விதமே நம்பினேன்' என்று அவன் பதிலிறுத்தான். இப்பொழுது இமாம் அவர்கள் அவனை நோக்கி, 'அந்நம்பிக்கை உனக்கு எதன்மீது இருந்தது? உன்னைக் காப்பாற்றுபவர் யார்?' என்று வினவினர். அவன் யாதொரு பதிலும் கூற இயலாது வாய் மூடி இருந்தான். இமாம் அவர்கள் பேசினார்கள், ''நிர்க்கதியாயிருந்த நீ உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு எதன்மீது நம்பிக்கை கொண்டாயோ, அவன்தான் அல்லாஹ். அவனே உன்னைக் காப்பாற்றியவனாவான்'' இவ்வாறு அவர்கள் பேசி வாய் மூடுமுன் அவன் இஸ்லாமிய மூல மந்திரத்தைக் கூறி இஸ்லாத்தைத் தழுவினான்.

இது மட்டுமல்லாது மக்காவில் ஹரம் ஷரீபில் வைத்துத் தம்முடன் வாக்குவாதம் செய்ய வந்த நிரீஸ்வரத் தலைவன் இப்னு அபில் அவ்ஜாவை இமாம் அவர்கள் வாக்குவாதத்தில் வென்றதும் அவன் தோற்றோடியதும் அது கண்டு நகைத்த தன் நண்பர்களை நோக்கி 'என் தோல்வியை மறக்கச் சிறிது மது தாருங்கள். என்னை அவரிடம் போய் வாக்குவாதம் பண்ணுமாறு கூறி என்னை எரி நெருப்பில் தூக்கி எறிந்து விட்டீர்களே' என்று அவன் அலறியதும் பிரசித்த வரலாறாகும்.

வில்லை'' என்ற இறைவசனத்தை மனத்திற் கொண்டு செயலாற்றி வந்தார்கள். ''எப்பொழுது பார்த்தாலும் நான் அவர்களைத் தொழுது கொண்டிருக்கவே கண்டேன்'' என்று அவர்களைப் பற்றி அவர்களின் மாணவர் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் நற்சான்று பகர்கின்றார்கள். ''நான் ஒருதடவை அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். அப்பொழுது அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். குனிந்த நிலையிலும் குப்புற வீழ்ந்து வணங்கிய நிலையிலும் அவர்கள் இறைவனின் திருப்பெயரை அறுபது தடவை ஓதியதை நான் எண்ணிக்கொண்டு நின்றேன்'' என்று இப்னு தஅலப் என்பார் வாயார்ந்து எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு இறைவனை வணங்கி வந்த இமாம் அவர்கள் ஒருநாள் ஹம்மாத் என்பவர் தொழுகையை முறைப்படி தொழாததைக் கண்டதும், ''ஹம்மாத்! தாங்கள் தொழுகையை முறைப்படித் தொழவில்லை. ஒருவன் தன் வாணாளில் ஒரு தொழுகையைக் கூட முறைப்படி நிறைவேற்றவில்லையாயின் அது எண்ணிப் பார்க்க இயலாத பேரிழப்பாகும்'' என்று இயம்பினர்.

''அதுகேட்டு அதிர்ந்து போன ஹம்மாத் தம் தவற்றை எடுத்துரைப்பின் திருத்திக் கொள்வதாகக் கூறினார்.

''நான் தங்களின் தவற்றை எடுத்துரைப்பதைவிட நானே தொழுகையை ஒழுங்காகத் தொழுது காட்டுவதே மாண்புடைத்து'' என்று கூறி கிப்லாவை முன்னோக்கி நின்று, 'அல்லாஹு அக்பர்' என்று கூறித் தக்பீர் கட்டித் தொழத் துவங்கிவிட்டார்கள் இமாம். தொழுகையின் முதல் நிலையாகிய நிற்கும் (கியாம்) நிலையில் அவர்கள் இடுப்பையோ முதுகையோ வளைக்காது நின்றதையும் அப்பொழுது கால்கள் இரண்டிற்கும் இடையே மூன்று அங்குல இடைவெளிதான் இருந்ததையும் அவர்களின் விரல்கள் அனைத்தும், 'கிப்லாவை' நோக்கி நேராக வைக்கப்பட்டிருப்பதையும், அவர்களின் பார்வை 'சுஜூது' செய்யும் இடத்தில் வீழ்ந்து கிடப்பதையும் அவர் கண்ணுற்றார். பின்னர் சூரா பாத்திஹாவையும், சூரா இக்லாஸையும் ஓதி முடித்தபின் நின்ற நிலையிலேயே 'அல்லாஹு அக்பர்' என்று கூறிய அவர்கள் குனியும் (ருகூவு) நிலையில் ஆகியதையும் அப்பொழுது அவர்களின் முழங்கால்களை அவர்களின் கைகள் இரண்டும் வன்மையாகப் பிடித்துக் கொண்டிருப்பதையும் கை விரல்கள் தனித் தனியாக விலகியிருப்பதையும் முதுகு வளைவில்லாது சரி மட்டமாகக் கழுத்தோடு சமநிலையில் இருப்பதையும் கண்டார். பின்னர் தலையை உயர்த்தி, எழுந்து நின்று முழங்காலைத் தரையிலே ஊன்றி, தலையைத் தரையிலே வைத்து வணங்கும் (சுஜூது) நிலைக்கு இமாம் அவர்கள் வந்ததையும்

அப்பொழுது அவர்களின் உடலிலுள்ள எட்டு உறுப்புக்கள் அதாவது அவர்களின் இரு கைகள், இரு முழங்கால்கள், நெற்றி, மூக்கு, இரண்டு கால்களின் பெரு விரல்கள் ஆகியவை தரையிலே பதிந்திருப்பதையும் பார்த்தார். இதே போன்று அடுத்த 'ரகஅத்'தையும் இமாம் அவர்கள் தொழுது முடித்ததையும் வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தார் ஹம்மாத்.

இமாம் அவர்கள் தொழுது முடித்ததும் ஹம்மாதை நோக்கி, ''ஹம்மாத்! நீங்களும் இவ்வாறுதான் தொழ வேண்டும். இதுதான் உங்களின் வாணாளின் இறுதித் தொழுகை என்று உங்களின் ஒவ்வொரு தொழுகையிலும் எண்ணிக் கொண்டு அதனை எத்துணை பயபக்தியுடன் நிறைவேற்ற வேண்டுமோ? அத்துணை பயபக்தியுடன் நிறைவேற்றுங்கள். ஒரு பேரரசனின்முன் எவ்வாறு அவனின் ஊழியன் அவனை ஏறிட்டுப் பார்க்கக் கூடத் துணிச்சலின்றி தலைதாழ்த்தி நிற்பானோ அவ்விதம் இறைவனின் திருமுன் கைகட்டி நில்லுங்கள். அரச ஊழியன் அரசனை ஏறிட்டுப் பார்க்கும் துணிச்சல் பெறாவிடினும் அவ்வரசன் அவனின் ஒவ்வோர் அங்க அசைவையும் அணுவத்தனையும் விடாது பார்த்துக் கொண்டுள்ளான் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள். உங்களின் உள்ளமும் உடலும் 'கிப்லா'வை முன்னோக்கியதாகவே இருக்க வேண்டும். முகம் கிப்லாவை விட்டுச் சற்று விலகி விட்டாலும், நீங்கள் பின்னால் உள்ளதைக் கடைக்கண்ணால் பார்க்கும் அளவுக்கு உங்களின் முகம் 'கிப்லா'வை விட்டுத் திரும்பி விட்டாலும், உங்களின் தொழுகை செல்லுபடியாகாது. நிற்கும் நிலையில் நேராக நிற்காது முதுகையோ இடுப்பையோ வளைத்துக் கொண்டு தொழுதாலும் உங்களின் தொழுகை செல்லுபடியாகாது. 'முதுகைச் சமப்படுத்தாது ஒருவன் தொழின் அவனுடைய தொழுகை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது' என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். பார்வையைக் கீழே தாழ்த்திக் கொள்வதோடு, உள்ளத்தில் பல்வேறு எண்ணங்களும் வந்து சேராது, கூடியவரைப் பேணுதலாக இருங்கள். அதற்கு மேல் உங்களை அறியாமல் உங்களின் உள்ளத்தில் பல்வேறு எண்ணங்களும் வந்து கூடிக் குழுமின் அதனைப் பொறுத்தருள இறைவன் போதுமானவன்'' என்று அறிவுரை பகர்ந்தனர்.

ஒருநாள் இமாம் அவர்கள் தங்களின் இல்லத்தில் அமர்ந்திருக்குங்கால் அவர்களைச் சந்திக்க இருவர் வந்தார்கள். வந்தவர்களில் ஒருவர் மற்றவரை இமாம் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் முறையில், ''இவர்கள் இராக் நாட்டின் சட்ட மேதைகளில் ஒருவர்'' என்று கூறி வாய்மூடுவதற்கு முன் இமாம் அவர்கள் அவரை நோக்கி ''அப்படியா! பகுத்தறிவு ரீதியில் மார்க்கத்தை அணுகும் நுஃமான் இப்னு தாபித் தானே

இவர்'' என்று வினவினர். ''ஆம்; என் பெயர் அதுதான். ஆனால் என்னை மக்கள் அபூஹனீஃபா என்று அழைப்பர்'' என்று பதில் கூறினார் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர்.

இது அவரை இமாம் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்த வருக்குப் பெருவியப்பை நல்கியது. தாம் பல்லாண்டுகளாக அவருடன் பாலும் பழமும் போல் பழகியும் அவருடைய இயற்பெயர் தமக்குத் தெரியாதிருக்க இவ்வளவு தொலைவிலுள்ள இமாம் அவர்களுக்கு எவ்வாறு அது தெரியவந்தது என்று எண்ணினார் அவர்.

இப்பொழுது இமாம் அவர்கள் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களை நோக்கி, ''நான் தங்களைப் பற்றி நிறையக் கேள்வியுற்றுள்ளேன். இஸ்லாமிய மார்க்க சட்ட திட்டங்களைத் தாங்கள் பகுத்தறிவு ரீதியில் அணுகுவதாகவும் விளக்கம் கூறுவதாகவும் அறிந்தேன். ஆதம் (அலை) அவர்களுக்குச் சிரவணக்கம் (சுஜூது) செய்யுமாறு இறைவன் பணிக்க, 'நான் நெருப்பால் படைக்கப்பட்டவன். மண்ணால் படைக்கப்பட்ட ஆதத்திற்கு நான் எவ்வாறு சிரவணக்கம் செய்வேன்' என்று இப்லீஸ் பகுத்தறிவு ரீதியில் வாக்குவாதம் செய்ததன் காரணமாகவே அவன் இறை முனிவுக்கு ஆளாகி இழிநிலை அடைந்தான் என்பதைத் தாங்கள் மறந்து விடாதீர்கள். தங்களிடம் உள்ள எத்தனையோ விஷயங்களைப் பற்றியே தாங்கள் சரியாக விளங்காதிருக்கும் பொழுது இறைவன் வகுத்த சட்ட திட்டங்களுக்கெல்லாம் தாங்கள் பகுத்தறிவு ரீதியாக ஏதேதோ விளக்கம் கொடுத்துத் தங்களையும் மற்றவர்களையும் குழப்பத்தில் ஆக்கி விடாதீர்கள்.

''சரி; நான் கேட்கிறேன். இவற்றிற்குச் சரியான விடை கூறுங்கள். கண்ணீரில் உப்பு கலந்திருக்கிறதே. காதில் உள்ள குறும்பி கசப்பாக இருக்கிறதே. நாவிற்கு அடியில் ஒருவித நீர் உற்பத்தியாகிறதே. இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன?'' என்று வினவினர்.

''நபி திருப்பேரரரே! எனக்குத் தெரியவில்லை'' என்று இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்கள் பதிலிறுத்தனர்.

கண்களில் நீர் கரப்பதற்குக் காரணம், கண்களை எப்பொழுதும் ஈரப்பசையுடன் வைத்திருந்து அவற்றைச் சுழலச் செய்வதற்கும் அவற்றிற்குப் பாதுகாப்பு நல்குவதற்குமாகும்.

காதுகளில் கசப்பான குறும்பி உற்பத்தியாவதற்குக் காரணம் பூச்சி புழுக்கள் காதுத்துளை வழியாக மூளைக்குக் குடைந்து செல்லாமல் இருப்பதற்காகும்.

நாவுக்கடியில் உமிழ் நீர் சுரப்பதற்குக் காரணம் உணவை ருசிகரமாகச் செய்வதற்கும் அதனை விரைவில் தொண்டையில் வழுக்கிச் சென்று குடலை அடைந்து செரிக்கச் செய்வதற்குமாகும்.''

இவ்வாறு இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களின் பதில் கணீரென வெளிவந்தது.

மீண்டும் இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்கள் தம் பேச்சைத் துவங்கினார்கள்.

''நல்லது நுஃமான்! ஹஜ்ஜுக்காக இஹ்ராம் அணிந்த ஒருவர் ஒரு மானின் நாய்ப் பற்களை உடைத்து விட்டால் அது பற்றித் தங்கள் கருத்து என்ன?''

''தெரியவில்லை''

''என்ன! திறனார்ந்த அறிவு வாய்க்கப் பெற்ற தங்களுக்குக் கூட மானுக்கு நாய்ப் பற்கள் கிடையாது, ஏனைய பற்கள் தாம் உண்டு என்ற உண்மை விளங்காதா? தங்களை ஒன்றும் குறை கூறுவதற்கில்லை. பொதுவாக மனித அறிவு இவ்வாறு தான் உள்ளது. இறைவன் மனிதனுக்கு நல்கிய இந்த அற்ப சொற்ப அறிவைக் கொண்டு இறைவனின் மாபெரும் சட்ட திட்டங்களைப் பகுத்துப் பார்ப்பது எத்துணை தவறில் போய் முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நல்லது, நுஃமான்! அறிவுள்ளவன் என்றால் யார்?''

''நன்மையையும் தீமையையும் பிரித்தறிபவன்.''

''நன்மையையும் தீமையையும்தான் நாற்கால் மிருகங்களும் பிரித்தறிகின்றனவே. தனக்குத் தீனி போட்டு தடவிக் கொடுப்பவனை நல்லவனென்றும், தன்னை அடித்து விரட்டுகின்றவனைத் தீயவன் என்றும் அவை தெரிந்து வைத்துள்ளனவே.''

''அவ்விதமாயின் தாங்களே அதற்கு விளக்கம் பகர வேண்டும்.''

''அப்படியா! கூறுகிறேன், கேளுங்கள். இரண்டு நன்மைகளுக் கிடையில், இரண்டு தீமைகளுக்கிடையில் பகுத்தறிந்து இரண்டு நன்மைகளில் எது மேலானது என்பதைத் தேர்ந்தெடுக்கவும், இரண்டு தீமைகளில் எது கீழானது என்பதைத் தெரிந்து நீக்கவும் அறிவு பெற்றவனே உண்மையான அறிஞனாவான். நுஃமான்! சிறந்த அறிஞராகிய தங்களுக்கே அறிஞன் என்றால் யார் என்பதற்குச் சரியான விளக்கம் கூற இயலவில்லை. இத்தகு அறிவை வைத்துக் கொண்டு நாம் இறைவனின் சட்ட திட்டங்களுக்குப் 'பகுத்தறிவு' ரீதியில் விளக்கம் கொடுக்க முயல்வது எத்துணை விபரீதத்தில் போய் முடியும் என்பதைச் சிந்தித்துப்

பாருங்கள். நல்லது; இறைவன் கொடியவை என்று கூறும் இரண்டில், அதாவது கொலையிலும் விபசாரத்திலும் கொடுமையானது எது என்று தாங்கள் கருதுகின்றீர்கள்?''

''கொலை''

''அவ்விதமாயின் கொலையை நிரூபிப்பதற்கு இரண்டு பேர் சான்று பகர வேண்டுமென்று கூறும் இறைவன் விபசாரத்தை நிரூபிப்பதற்கு நான்கு பேர் சான்று கூறவேண்டுமென்று பணித்துள்ளானே, ஏன்? இதிலிருந்து கொடிது கொடிது விபசாரமே கொடிது என்று பெறப்படுகின்றதல்லவா? உண்மை இவ்விதமிருக்க, தாங்கள் பகுத்தறிவைக் கொடி கட்டிப் பறக்கச் செய்வது எத்துணைத் தவற்றில் போய் முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.''

''நல்லது; இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இரண்டு தொழுகையும் நோன்பும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இவற்றில் எது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது?

''தொழுகை''

''அவ்விதமாயின் மாதவிடாயினால் தவறிப்போன தொழுகையை நிறைவேற்ற வேண்டியதில்லை என்று பெண்களுக்குச் சலுகை நல்கிய இறைவன், மாதவிடாயினால் தவறிப் போன நோன்பைப் பின்னர் நோற்றுத்தான் தீர வேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருக்கக் காரணம் என்ன? இதிலிருந்து தொழுகையை விட நோன்பே சிறப்புடையதென்று பெறப்படுகின்றதல்லவா?

''ஆதலின் நுஃமான்! இறைவனின் சட்ட திட்டங்களுக்குப் பகுத்தறிவுப் பாசறையில் வீற்றிருந்து விளக்கம் கூறாதீர்கள். மறுமையில் நாம் அனைவரும் இறைவனைச் சந்திக்க வேண்டியுள்ளது. அப்பொழுது நாங்கள், 'இறைவ எம் பெரும! நீயும் உன் திருத்தூதரும் கூறியவற்றை நாங்கள் அணுவத்தனையும் வழுவாது மக்களுக்கு எடுத்துரைத்தோம்' என்று இயம்புவோம். அப்பொழுது தாங்களோ, 'இறைவா, எங்கள் பெருமானே! நீயும் உன் திருத்தூதரும் கூறியவற்றை எங்களின் பகுத்தறிவுப் பாசறையிலே வைத்து அலசி ஆராய்ந்து தெளித்து வடித்து எங்களின் பகுத்தறிவுக்கு ஏற்ற வண்ணம் விளக்கம் நல்கிச் சட்டம் இயற்றினோம்' என்று கூறவேண்டி இருக்கும். ஆதலின் எச்சரிக்கையாய் இருங்கள். தங்களின் பகுத்தறிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவனுடையவும் அவனுடைய திருத்தூதருடையவும் சட்டத் திட்டங்களுக்குத் தவறான விளக்கம் நல்கித் தவறுப் படுகுழியில் வீழ்ந்து

விடாதீர்கள். இறைவன் தங்களுக்குப் பேரருள் பாலிப்பானாக'' என்று கூறி இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்கள் தம் பேச்சை முடித்தனர்.*

இதன்பின் இமாம் ஜஃபர் சாதிக் அவர்களின் காலடியில் இரண்டாண்டுகள் கால் மடக்கி அமர்ந்து பற்பல கல்விகளையும் கற்றுத் தேர்ந்து இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்கள் கல்வி கற்று வெளியே வந்தபோது அவர்களின் வயது என்னவென்று ஒருவர் வினவியக்கால் இரண்டு என்று கூறினர். அவர் வியப்புடன் ''என்ன இவ்வாறு வினவுகின்றீர்கள்?'' என்று வினவியபொழுது, ''ஆம்; நான் இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களிடம் கல்வி கற்ற இரண்டு ஆண்டுகளே, நான் இவ்வுலகில் உயிரோடு வாழ்ந்த ஆண்டுகளாகும்'' என்று அவர்கள் பதிலிறுத்தனர். பிற்காலத்தில் அவர்கள் தம் ஆசானைப் பற்றிக் குறிப்பிடுங்கால் ''கண்டேன், கண்டேன், இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களிடம் சீராரும் மார்க்க ஞானத்தைக் கண்டேன்.

---

* ஆனால் இவ்வுரையாடல் இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களின் வரலாற்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இமாம் ஜஃபர் சாதிக் அவர்களைச் சந்திக்கச் சென்ற அவர்களின் ஒத்த வயதினரான இமாம் அபூஹனீபா அவர்களிடம், 'நீர்தாமா பகுத்தறிவு ரீதியில் மார்க்க சட்ட திட்டங்களை அணுகுபவர்' என்று இமாம் ஜஃபர் சாதிக் வினவ, 'இல்லை; என்னைப் பற்றித் தவறான செய்தி தங்களுக்கு எட்டியுள்ளது. அத்தகு தவற்றினைச் செய்யாது இறைவன் என்னைக் காத்தருள் புரிவானாக. அன்பு கூர்ந்து நான் கேட்கும் மூன்று கேள்விகளுக்குத் தாங்கள் பதிலுரைக்க வேண்டும்' என்று கூறி, 'மூத்திரம், விந்து ஆகியவற்றில் எது அதிக அசுத்தமானது?' என்று வினவினர் இமாம் அபூஹனீஃபா, 'மூத்திரம்' என்று இமாம் ஜஃபர் சாதிக் அவர்கள் மறுமொழி பகர, 'மூத்திரம் பட்ட இடத்தை மட்டும் கழுவினால் போதும் என்றும் விந்து வெளிப்படின் அவ்விடத்தைக் கழுவ மட்டுமின்றி, குளித்து உடல் முழுவதையும் சுத்தம் செய்ய வேண்டும் என்றல்லவோ விதிக்கப்பட்டுள்ளது. நான் பகுத்தறிவு ரீதியாகத் தீர்ப்புக் கூறுவதென்றால் இதற்கு மாற்றமாகவல்லவோ தீர்ப்புக் கூறியிருப்பேன். அவ்விதம் நான் செய்யவில்லையே'' என்று இமாம் அபூஹனீஃபா கூறினார்.

பின்னர், 'ஆணிலும் பெண்ணிலும் வலுவற்றவர் யார்?' என்று இமாம் ஜஃபர் சாதிக் அவர்களை இமாம் அபூ ஹனீஃபா வினவ, 'பெண்' என்றனர் இமாம் ஜஃபர் சாதிக். 'அப்படியானால் சொத்துரிமையில் பெண்ணுக்கு ஒரு பங்கு என்றும் ஆணுக்கு இரண்டு பங்கு என்றும் விதிக்கப்பட்டிருப்பதை மாற்றி. பெண் ஆணை விட வலுவற்றவளாயிருப்பதால் அவளுக்கே சொத்துரிமையில் இரண்டு பங்கு கிடைக்க வேண்டும் என்று பகுத்தறிவு ரீதியாக நான் தீர்ப்பளித்திருப்பேன். அவ்விதம் நான் செய்யவில்லையே' என்று கூறினர் இமாம் அபூஹனீஃபா. பின்னர் மேலே குறிப்பிட்ட வண்ணம் தொழுகை, நோன்பு பற்றிய விளக்கங்கள் கூறினர். அதுகேட்டு மகிழ்ந்த இமாம் ஜஃபர் சாதிக், இமாம் அபூஹனீஃபா அவர்களைக் கட்டி அணைத்து அவர்களின் நெற்றியில் முத்தமிட்டனர்.

அவர்களைவிடச் சிறப்புமிகு மார்க்க மேதையைக் காணவில்லை'' என்று வாயார்ந்து கூறினர்.*

இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களை அணுகி அறிவுரை பெற்று ஆன்மீகப் பரிபக்குவம் பெற்றவர்களில் கல்தானுல் ஆரிபீன் பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களும் ஒருவர். அவர்கள் தம் குருநாதரைப் பற்றி ஓரிடத்தில் குறிப்பிடும் பொழுது ''நான் நானூறு ஆசிரியர்களை அணுகி ஆன்மீகக் கல்வி பயின்றுள்ளேன். ஆனால் நான் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களை வந்தெய்தியிராவிடின் ஒரு முஸ்லிமாகி இருக்கமாட்டேன்'' என்று எழுதியுள்ளார்கள்.**

இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்கள் பிற்காலத்தில் தம் இல்லத்தில் தனித்திருப்பது இறைவணக்கத்தில் ஈடுபடவும் தம்மைக்காண வருபவர்களுக்கும் அறபோதம் செய்யவுமாக இருந்தார்கள். ஒருநாள் சுப்யான்தௌரீ (ரஹ்) அவர்கள் இமாம் அவர்களை நோக்கி, ''தாங்கள் அதிகமாக வெளியே வராததன் காரணமாக, மக்கள் தங்களுடன் தொடர்பு கொண்டு நற்பேறு பெறும் வாய்ப்பே அரிதாகி விட்டது'' என்று கூறினர். அதற்கு இமாம் அவர்கள் நல்கிய பதில் ''காலம் கெட்டுவிட்டது. மக்கள் இப்பொழுது மதி மயக்கத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். வாக்குறுதியை நிறைவேற்றுவது இயலாத்தன்மை என்று எண்ணப்படுகிறது. வாக்கு மாறுவது திறனார்ந்த பண்பு என்று மதிக்கப்படுகிறது. உள்ளத்தில் ஷைத்தானை வைத்துக் கொண்டு, வெளியிலே சான்றோர் என மக்கள் பாசாங்கு செய்து திரிகின்றனர். எனவே இனிது இனிது ஏகாந்தமினிது என எண்ணி ஒதுங்கி வாழ்கின்றேன்'' என்பதாக இருந்தது.

இவ்வாறு கூறித் தனிமையில் தனி இன்பம் கண்ட இமாம் அவர்களிடம் தாவூத்தாயீ என்ற பெரியார், ''நபி பெருமானின் வழித் தோன்றலே! எனக்கு அறிவுரை நல்குங்கள். அதற்குத் தாங்களே முழுக்க

---

* ஆனால் இப்னு தைமிய்யாவோ இமாம் அபூஹனீஃபா அவர்கள், இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களிடம் மாணவராய் அமர்ந்து பயிலவில்லை என்று கூறியுள்ளார். இதற்கு மௌலானா ஷிப்லி தம் 'ஸீரத்துன்னுஃமான்' என்னும் நூலில் பதில் கூறும்பொழுது, 'இது இப்னு தைமிய்யாவின் தவறையும் அகங்காரத்தையுமே காட்டுகிறது. அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்கள் சிறந்த மார்க்க மேதையாக இருந்த போதினும் ஆன்மீகப் பரிபக்குவத்தின் மூலம் நபி குடும்பத்தினர்களல்லவோ? அவர்கள் வேறு எவரினும் சிறந்தவர்களல்லவோ?'' என்று எடுத்துரைக்கின்றார்கள்.

** ஆனால் பெருமானாரின் குடும்பத்தின்மீது அளவற்ற பொறாமை கொண்ட இப்னு தைமிய்யாவோ, 'ஜஃபர் சாதிக்கை முகஸ்துதி செய்தவர்களில் பாயஸீத் பிஸ்தாமி ஒருவர்' ஒன்று எழுதியுள்ளார்.

முழுக்க அருகதை வாய்ந்தவர்கள்'' என்று கூறியபொழுது ''பெருமானா ரின் வழித்தோன்றல் என்பதன் காரணமாகப் பிறருக்கு அறிவுரை நல்கும் தகுதி எனக்கு ஏற்பட்டு விடுமாயின் நான் பெரிதும் தவறிழைத்த வனாவேன். இறைவணக்கத்திலேயே நான்பெரிதும் குறை வைத்திருக்கும் பொழுது என்னால் எவ்வாறு பிறருக்கு அறிவுரை நல்கும் தகுதியைப் பெற இயலும்? மறுமையில் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் என்னை நோக்கி, 'நீ என்னை ஒழுங்காகப் பின்பற்றவில்லையே' என்று வினவின் நான் என் செய்வது என்று கலங்கிக் கொண்டிருக்கும்பொழுது என்னால் எவ்வாறு பிறருக்கு அறிவுரை நல்கல் சாலும்?'' என்று தம் அழகுத் திருவாயால் நவின்றார்கள்.

ஒரு தடவை அவர்கள் தங்களின் அடிமைகளையெல்லாம் ஒருங் கழைத்து, ''நாம் இன்று ஒருவர் கையை மற்றொருவர் பிடித்து 'பைஅத்' செய்து மறுமையில் நம்மில் எவர் ஈடேற்றம் பெறுவாரோ அவர் ஏனையோருக்காக இறைவனிடம் பரிந்துரைக்க வேண்டும் என்று உறுதிப் பிரமாணம் செய்து கொள்வோம்'' என்று கூறினர். அதுகேட்டு அவர் களின் அடிமைகளில் ஒருவர், ''தாங்களோ மறுமையில் அனைவருக்கும் இறைவனிடம் பரிந்துரைக்கும் பேறு பெற்ற அண்ணலெம் பெருமா னாரின் திருப்பேரர். அத்தகு பெருமை சால் தாங்களா எங்களிடம் இத்தகா வார்த்தைகளைப் பகர்வது?'' என்று கூறியபொழுது, ''நான்தான் என் பாவங்களின் காரணமாக மறுமையில் என் அருமைப் பாட்டனாரின் கண்களில் விழிக்க நாணிக் கொண்டுள்ளேனே'' என்று அவர்கள் நவின்றார்கள்.

ஒருநாள் அவர்களைக் காண வந்த சுப்யான் தெளரீ (ரஹ்) அவர்கள், இமாம் அவர்களை நோக்கி, ''இறைவன் செல்வத்தை உலகின் வனப்பும் உயிரும் ஆகும் என்று தன் திருமறையில் கூறியுள்ளான். ஆம்; அது முற்றிலும் உண்மையேயாகும். ஆனால் செல்வம் எவரிடமும் நிலைத்து நிற்பதில்லையே'' என்று கூறிய பொழுது, ''செல்வம் உங்களிடம் நிலைத்து நிற்க விரும்பினால் இறைவனைத் துதித்துக் கொண்டிருங்கள். அவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருங்கள். 'நீங்கள் எனக்கு நன்றி செலுத்தின் நான் உங்களுக்கு அதிகமாக நல்குவேன்' என்று அவன் தன் திருமறையில் கூறியுள்ளான். வருவாய் குறைந்துவிடின் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள். 'அவன் மன்னிப்பவன். அவன் விண் ணிலிருந்து உங்களுக்காக மழையைப் பொழிவிப்பான். செல்வத்தையும் மக்களையும் நல்கி உதவி செய்வான்' என்று அவனே தன் திருமறையில் குறிப்பிடுகின்றான். அதிகாரிகளாலோ, பிறராலோ உங்களுக்குத் தீமை நிகழின், 'லாஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அளிய்யுல் அளீம்' என்று கூறிக் கொண்டிருங்கள்'' என்று அறிவுரை வழங்கினர்.

அவர்கள் ஆன்றோராகவும், சான்றோராகவும், அறிஞராகவும், வணக்கவாளராகவும், ஆத்மீக ஞானியாகவும், இறை நேசச் செல்வராகவும் இருந்ததோடன்றி விண் இயலிலும் மருத்துவ இயலிலும் சிறப்புற்று விளங்கினர். இரும்பைப் பொன்னாக்கும் 'கீமியா' வித்தையிலும் அவர்கள் திறன் பெற்று விளங்கினார்கள் என்றும் அவர்களிடமிருந்தே 'கீமியாவின் தந்தை' என்று கருதப்படும் ஜஃபர் இப்னு ஹையான் கீமியா வித்தையைக் கற்றுக் கொண்டார் என்றும் கூறப்படுகிறது.

இமாம் அவர்கள் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் மார்க்கச் சட்ட திட்டங்கள் பற்றி எழுதிய நூலே ஷியாக்களின் பிக்ஹுக் கலைக்கு மூல நூலாக அமைந்துள்ளது. அவர்கள் வகுத்த மார்க்கச் சட்ட திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே 'ஜஃபர் மத்ஹப்' என்ற பெயருடன் ஒரு மத்ஹபும் ஏற்பட்டது.* கனவு விளக்கம் பற்றியும் அவர்கள் ஒரு நூல் எழுதியுள்ளார்கள்.

இத்துடனல்லாது இமாம் அவர்கள் ஒரு கவிஞராகவும் விளங்கினர். அவர்களின் கவிதைகள் எளிமையும் இனிமையும் ஏற்றமும் ஆழமும் நிறைந்து பொலிவுற்றன. அவர்கள் ஒரு கவிதையில், ''நீ பலருக்கு நடுவில் வீற்றிருந்து உரையாடிக் கொண்டிருக்குங்கால் உன்னை ஈன்ற உன் தந்தை ஆங்கு வந்துவிடின் அவருக்கு மரியாதை செய்யும் முகத்தான் எழுந்து நில்'' என்று கூறுகின்றனர். அவர்கள் மற்றொரு கவிதையில், ''உனக்கு ஒரு நூறு பணியாளர்கள் இருந்த போதினும் உன்னுடைய விருந்தினருக்கு நீயே பணிபுரிய வேண்டும்'' என்று குறிப்பிடுகின்றார்கள். அவர்கள் பிறிதொரு கவிதையில் ''பொய்யுரைப்பவனுடன் நீ நட்புறவாட வேண்டாம். அவனால் நீ எவ்வித முன்னேற்றத்தையும் அடைய இயலாது போய்விடும். அண்மையில் இருப்பவர்களைத் தொலைவில் காட்டுவான். தொலைவில் இருப்பவர்களை அவன் அண்மையில் காட்டுவான். இந்த நட்பு கானல் போன்றது. அறிவற்றவனுடனும் நீ நட்புக் கொள்ள வேண்டாம். அவன் தன் மடமையினால் உன்னை அவனறியாமல் எதிலேனும் மாட்டிவிட்டு விடுவான். அவன் செய்த தவறுக்கு நீ சிரமப்பட வேண்டி ஏற்பட்டு விடும். உலுத்தனுடனும் நீ உறவு கொள்ள வேண்டாம். அவனுடைய உலுத்த குணம் உன்னிடம் ஒட்டிக் கொள்ளும். மேலும் உன்னுடைய தேவைகளில் முக்கியமானதையே நொறுக்கி எறிந்து விடுவான்.

---

* அந்த மத்ஹபின் சட்ட திட்டங்கள் பற்றி பிற்காலத்தில் கூஃபாவிலுள்ள பள்ளிவாயிலில் 900 உலமாக்கள் உலகின் நானா பக்கங்களிலிருந்தும் வந்திருந்த மாணவர்களுக்கு விளக்கம் கூறிக் கொண்டிருந்ததாக ஹுஸைன் இப்னு அலி வஷ்ஷா கூறுகின்றார்.

# பொருளடக்கம்

''கோழையுடன் நட்புக் கொள்வதும் கொள்ளாதிருப்பதும் ஒன்றுதான். ஏனெனில் அவன் உனக்கு உதவி செய்ய வேண்டிய நேரத்தில் காலை வாரிவிட்டு ஓடிவிடுவான். தீயவனுடன் நீ இணங்கி இருக்க வேண்டாம். அவன் ஒரு கவள உணவுக்காகவும் அல்லது அதற்குக் குறைந்ததற்காகவும் உன்னை விலை பேசி விற்று விடவும் தயங்க மாட்டான்'' என்று கூறுகின்றனர். ''அதற்குக் குறைந்தது என்றால் யாது?'' என்று அவர்களிடம் விளக்கம் வினவப்பட்டபொழுது ''அதன் மீது அவன் கொள்ளும் ஆசை'' என்று மறுமொழி பகர்ந்தனர் இமாம்.

அவர்கள் மற்றொரு கவிதையில் ''சுவனமும் நரகமும் மறுமையில்தான் உள்ளன என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். அவை இரண்டும் இவ்வுலகிலேயே உள்ளன. இவ்வுலகில் உடல் நலத்துடன் வாழ்வது சுவன வாழ்வாகவும், உடல் நலமின்றி நோயுற்று வாழ்வது நரக வாழ்வாகவும் உள்ளது. மேலும் இவ்வுலக ஆசாபாசங்களில் மூழ்கி, கவலை வாய்ப்பட்டுத் துன்புறுபவனே இவ்வுலகில் நரக வாழ்வு வாழ்பவன். தன் கவலைகளையெல்லாம் இறைவனிடம் ஒப்படைத்து விட்டு அமைதியாக இருப்பவனே இவ்வுலகில் சுவன வாழ்வு வாழ்பவன்'' என்று கூறுகின்றார்கள்.

இவ்வாறு இவ்வுலகிலேயே சுவன வாழ்வு வாழ்ந்து வந்த இமாம் அவர்கள், இவ்வுலகத்திற்காகவும் இவ்வுலக மக்களுக்காகவுமே உயரிய உடுப்புகளை உடுத்தவும் மற்றவர்கள் போன்று செயலாற்றவும் செய்து வந்தார்களேயன்றி அவர்களின் உள்ளமோ எளிமை நிரம்பியதாக விளங்கியது. ஒருநாள் அவர்கள் உயரிய ஆடை ஒன்றை அணிந்திருப்பதைக் கண்ட ஒருவர், ''நபி திருப்பேரரே! தாங்களுமா இதனை அணிந்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வியப்புடன் வினவியபொழுது அவர்கள் அவரின் கையைப் பிடித்துத் தங்களின் சட்டைக்குள் விட அவர்களின் உடலோடு ஒட்டிக்கொண்டு முரட்டுத் துணியாலான சிறு சட்டை இருப்பதை உணர்ந்தார். அப்பொழுது இமாம் அவர்கள் அவரை நோக்கி, ''இந்த மெல்லிய மேல் சட்டையை உலகத்திற்காக அணிந்துள்ளேன். எனவே அதனை வெளியில் தெரியும்படியாக அணிந்துள்ளேன். முரட்டுத் துணியாலான கீழ் சட்டையை அல்லாஹ்வுக்காக அணிந்துள்ளேன். எனவே அதனை மறைவாக உள்ளே அணிந்துள்ளேன்'' என்று கூறினர்.

''தனக்காக தன் மனத்துடன் போராடுகிறவன் மாண்பு பெறலாம்; ஆனால் இறைவனுக்காகத் தன் மனத்துடன் போராடுகிறவனோ இறைவனையே பெற்றுக் கொள்வான்'' என்று அவர்கள் கூறியதற்கிணங்க அவர்கள் இறைவனுக்காகத் தம் மனத்துடன் போராட்டம் நிகழ்த்தி

இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏந்தலாக விளங்கி, பகுத்தறிவுக்கே எட்டாத பற்பல அற்புதங்களை நிகழ்த்திப் பெருமை பெற்றனர்.

★ ★ ★

திமிஷ்கிலிருந்து அரசோச்சிய உமையாக்களின் ஆட்சி முடிவுற்று பக்தாது மாநகரிலே அப்பாஸியக் கலீபா அல்மன்சூர் அரியாசனம் அமர்ந்து அரசோச்சிய காலம் அது. ஒரு தடவை அவரின் அழைப்பின் மீது இமாம் அவர்கள் அவரின் அரண்மனைக்கு வந்த நேரத்தில் ஈ ஒன்று அவரின் மூக்கின் மீது விடாப்பிடியாக வந்து, வந்து அமர்ந்து கொண்டிருந்தது. எவ்வளவுதான் அவர் விரட்டியும் அது செல்லவில்லை. அப்பொழுது அவர் ஆங்கு வந்த இமாம் அவர்களை நோக்கி, ''அபூ அப்துல்லாஹ்! இறைவன் ஏன் ஈயைப் படைத்தான்?'' என்று வினவினார். 'தங்களைப் போன்ற அநீதவான்களை இழிவுபடுத்துவதற்காக'' என்று எவ்விதத் தயக்கமுமின்றி மறுமொழி பகர்ந்தார்கள் இமாம். இமாம் அவர்களின் இத்துணிச்சலான பதில் அரசவையிலிருந்த அனைவரையும் தூக்கி வாரிப்போட்டது.

இதிலிருந்து இமாம் அவர்கள் மீது ஒருவித வெறுப்பு கலீபா மன்சூரின் உள்ளின் உள்ளே வேரூன்றலாயிற்று. அவர்களுக்கு இராக் நாட்டில் நாளுக்கு நாள் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டிருப்பதையும், இராக் மக்கள் 'ஜகாத்' பணத்தைச் சேகரித்து அவர்களுக்கு அனுப்பி வைப்பதையும், அவர்களின் ஆதரவாளர்களில் சிலர் அப்பாஸியக் கிலாபத்தை எதிர்த்துப் புரட்சி செய்வதையும் கண்டு இமாம் அவர்கள்மீது அவர் கொண்ட வெறுப்பு பகைமையாக உருவெடுக்கலாயிற்று. ஆனால் இமாம் அவர்களோ எவ்வித அரசியல் விவகாரங்களிலும் ஈடுபடாது தம் இல்லத்தில் ஒதுங்கி இருந்து இறைவணக்கத்தில் அல்லும் பகலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஹிஜ்ரி 147 ஆம் ஆண்டில் 'ஹஜ்' செய்வதற்காக மக்கமா நகரம் வந்த மன்சூர், ஹஜ்ஜுக் கடன்களையெல்லாம் முடித்து மதீனமா நகரம் வந்து சேர்ந்திருந்தார். அப்புனித மண்ணில் மிதித்ததும் அவருடைய உள்ளத்தில் தோன்றிய முதல் எண்ணம் எவ்வாற்றாலும் ஜஃபர் சாதிக்கை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்பதாகவே இருந்தது. தம் அமைச்சர் ரபீஉவை அழைத்து உடனே ஜஃபர் சாதிக்கை அழைத்து வருமாறு ஆணையிட்டார் அவர்.

சிறிது நேரத்திற்குப்பின் இமாம் அவர்களும் அரச ஆணையை ஏற்று அரசவைக்கு வந்தார்கள். அவர்களைக் கண்டதும், ''இறைவனின் பகைவனே! என் அரசாங்கத்தின் கீழ் நீயும் ஓர் அரசாங்கத்தை நிறுவியா

உள்ளாய்? உன் வாணாள் இன்றோடு முடிவுற்றது. அதற்காகவே நான் உன்னை இங்கு அழைத்து வரச் செய்தேன்'' என்று அனற்பொறி தெறித்தாற் போல் அலறினார் மன்சூர்.

அப்பொழுது இமாம் அவர்கள் யாதும் மறுமொழி கூறாது அமைதியே உருவெடுத்தாற்போன்று நின்று கொண்டிருந்தார்கள். அவர்களின் வாய்மட்டும் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அரசரின் ஆவேசமெல்லாம் தணிந்ததும் இமாம் அவர்கள் அமைதியாகப் பின்வருமாறு பேசினர்:

''இறை நம்பிக்கையாளரின் தலைவ! தங்களுக்கு முன் மாபெரும் அரசாங்கத்தை இறைவன் ஏந்தலார் சுலைமான் (அலை) அவர்களுக்கு நல்கி இருந்தான். அதற்காக அவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தின ரேயன்றி அணுவத்தனையும் பெருமையுறவில்லை. ஐயூப் (அலை) அவர்களுக்கு இறைவன் அளப்பரும் சோதனையை அளித்தபோதினும் அவர்கள் அளவற்ற பொறுமையுடன் அதனைச் சகித்துக் கொண்டன ரேயன்றி அணுவத்தனையும் இறை நிந்தனை செய்யவில்லை. எழில் உருவத்தார் யூசுப் (அலை) அவர்களுக்கு அவர்களின் அண்ணன்மார்கள் அளவற்ற இன்னல், அடாத கொடுமை செய்த போதினும் அவர்கள் அணுவத்தனையும் தாழ்ந்து விடவில்லை. அதற்கு மாறாக விண்ணைத் தொடும் வண்ணம் உயர்ந்து நின்றார்கள். இவை அனைத்தும் தங்களுக்குத் தெரியாததல்ல.''

இவ்வாறு இமாம் அவர்கள் மளமளவென்று பேசினார்கள். என்ன வியப்பு! ஒரு நொடியில் மன்சூரின் சினமெல்லாம் அவிந்தது. இமாம் அவர்களைத் தம் அருகே அமரச் செய்து,''அபூ அப்துல்லாஹ்! தங்களின் மாண்பினை நான் இப்பொழுதுதான் உணர்கிறேன். தங்களைப் பற்றித் தவறான செய்திகளை என்னிடம் கூறியவன் இந்த அயோக்கியன்தான்'' என்று ஆங்கு நின்று கொண்டிருந்த ஒருவனைச் சுட்டிக் காட்டினார்.

''அப்பொழுது இமாம் அவர்கள் அவனை நோக்கி, ''நீ என்னைப் பற்றிக் கலீஃபாவிடம் கூறியவை அத்தனையும் உண்மை என்று ஆணையிட்டுக் கூற இயலுமா?'' என்று வினவினார்கள்.

''ஆம்; இயலும்'' என்று கூறிய அவன் அடுத்த கணமே, ''நான் தங்களைப் பற்றிக் கலீஃபாவிடம் கூறியவை அத்தனையும் உண்மை என்று இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன்'' என்று இயம்பினான்.

''அது சரியல்ல; இவ்வாறு ஆணையிடடுக் கூறு. என் திறனையும் ஆற்றலையும் துணை கொண்டு இறைவன் மீது ஆணையிட்டுக்

கூறுகின்றேன். நான் தங்களைப் பற்றிக் கலீபாவிடம் கூறியவை அத்தனையும் உண்மை என்று கூறு'' என்று ஆணையிடும் முறையை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தனர் இமாம் அவர்கள்.

அவ்விதமே அவனும் செய்தான். அடுத்த கனம் அவன் இறை முனிவுக்கு இலக்காகி இடியேறுண்ட நாகம்போல் கீழே விழுந்து உயிர் நீத்தான்.

இதுகண்டு அரசவை முழுவதும் அதிர்ச்சியுற்றது. கலீபா மன்சூர், உடலும் உள்ளமும் ஒருங்கு சேர்ந்து உதற இமாம் அவர்களை நோக்கி, ''மாதவத்தவரே! மாநபியின் திருப்பேரரே!! சற்று நேரத்திற்குமுன் இந்த உன்மத்தனின் உளறலை உண்மையென நம்பித் தங்களிடம் தகாத மொழி பேசியதற்காக என்னை மன்னித்தருள்க, மன்னித்தருள்க!'' என்று வேண்டி நின்றார். அதன்பின் அவர்களுக்கு பல்வேறு காணிக்கைகளை நல்கிப் பாங்குடன் வழியனுப்பி வைத்தார்.

எனினும் அவர்கள்மீது மன்சூர் கொண்ட வஞ்சம் முற்றிலும் அவிந்து விடவில்லை. அது நீறு பூத்த நெருப்பென அவரின் உள்ளத்தில் இருந்து கொண்டிருந்தது. அவர் பக்தாது சென்றதும், அது மீண்டும் வடவாக்கினியெனக் கொழுந்து விட்டெரியலாயிற்று. மதீனாவில் அமைதியாக வாழ்ந்து வந்த இமாம் அவர்களை பக்தாதுக்கு அழைத்து வரச் செய்தார் அவர். இமாம் அவர்கள் தம் அத்தாணி மன்றம் வந்ததும் அவர்களைத் தம் அருகே அமரச் செய்து அவர்களுடன் உரையாடிக் கொண்டிருப்பதாகவும் அப்பொழுது தம் தலைப்பாகையைக் கழற்று வதாகவும் அதனைச் சைக்கினையாகக் கொண்டு அவர்கள்மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவர்களைக் கொன்றொழித்து விட வேண்டும் என்று தம் மெய்ப்பாதுகாவலன் ஒருவனுக்கு இரகசியமாக ஆணை யிட்டிருந்தார் மன்சூர்.

ஆனால் இமாம் அவர்கள் அரண்மனைக்குள் அடி எடுத்து வைத்ததும், ஏனோ மன்சூரின் உடலெல்லாம் நடுங்கியது. தம்மை அறியாமல் தம் அரியாசனத்திலிருந்து எழுந்து இமாம் அவர்களைக் கைலாகு கொடுத்து வரவேற்றதோடு அவர்களை அவ்வரியாசனத்தில் அமர்த்தி அவர்களின் காலடியில் அமர்ந்து, ''தங்களுக்கு ஏதேனும் தேவைப்படின் கூறுங்கள், அடுத்த கணமே நிறைவேற்றித் தருகிறேன்'' என்று அன்போடு வேண்டிக் கொண்டிருந்தார் அவர்.

கலீபா தன்னிடம் முன்னர் கூறியது வேறு இப்பொழுது நடந்து கொள்வது வேறாக இருப்பதைக் கண்டு அவரின் மெய்ப்பாதுகாவலனின் மூளை கழன்றது. அவனுடைய கண்கள் மங்கின.

இதற்கு இமாம் அவர்கள் அமைதியாக பதில் கூறினார்கள்: "என்னை அமைதியாக மதீனாவிலேயே வாழ அனுமதியுங்கள். என்னுடைய இறை வணக்கத்தில் வீணே குறுக்கிட்டு எனக்கு இடையூறு விளைவிக்காதீர்கள்.''

இதன்பின் இமாம் அவர்களுக்கு அளவற்ற மரியாதை செய்து அவர்களை நலமே மதீனா அனுப்பிவைத்த மன்சூர் மூன்று நாட்கள் வரை பித்துப் பிடித்தவர் போன்று காணப்பட்டார். இந்த மூன்று நாட்களாக அவரால் ஒழுங்காகத் தொழுகையைக் கூட நிறைவேற்ற இயலவில்லை.

பின்னர் இதைப்பற்றி அவரின் அமைச்சர் ரபீஉ அவரிடம் வினவியபொழுது, ''ஜஃபர் சாதிக் அண்மனைக்குள் நுழைந்த நேரத்தில் அவரின் தலைக்கு மேல் பெரும் பாம்பு ஒன்று படம் எடுத்து நின்று நீ அவருக்கு ஏதேனும் துன்பம் இழைப்பின் நான் உன்னைத் தூக்கி விழுங்கி விடுவேன் என்று எச்சரிக்கை செய்தது போல் இருந்தது. நான் மருண்டு விட்டேன்'' என்று கூறினார் அவர்.

ஒருநாள் ஒற்றர் படைத் தலைவனான முகம்மதுபின் சுலைமானை அழைத்து வருமாறு மன்சூரின் ஆணை பிறந்தது. சற்று நேரத்தில் முகம்மதுபின் சுலைமான், மன்சூரின் முன் வந்து நின்றான். அவனுடைய காதோடு காதாக ஏதோ கூறினார் மன்சூர். அடுத்த கணம் அவன் அவ்விடத்தை விட்டும் அகன்றான்.

விரைவில் மதீனா மாநகரம் வந்தடைந்த அவன் இமாம் ஜஃபர் சாதிக் அவர்களின் இல்லத்திற்கு அடிக்கடி வந்து அறிவுரை கேட்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தான்.

ஒருநாள், அது ஹிஜ்ரி 148 ஆம் ஆண்டு ரஜப் பிறை 15 ஆம் நாளாக இருந்தது. அப்பொல்லா நாளில் அவன் ஒரு தட்டிலே திராட்சைப் பழங்களைக் கொண்டு வந்து இமாம் அவர்களின் திருமுன்வைத்து, ''அடிகளாரே! இவற்றைத் தாங்கள் என்னுடைய காணிக்கையாக ஏற்று, என் கண் குளிர, என் உளம் மகிழ ஈங்கு என் முன்வைத்து அருந்த வேண்டும்'' என்று வினயமாக வேண்டி நின்றான்.

கள்ளம் கபடமறியாத வெள்ளை மனத்து இமாம் அவர்களும் அவனைத் திருப்திப்படுத்துவதற்காக அவற்றை எடுத்து அவன் முன்னிலையிலே வைத்து அருந்தலானார்கள். ஒன்று, இரண்டு, மூன்று என்று பழங்களை எடுத்து அவர்கள் அருந்தினார்கள். அதன்பின் தம் எதிரே நின்று கொண்டிருந்த முகம்மதை ஏறிட்டுப் பார்த்தார்கள். தன் அலுவல் முடிந்துவிட்டது என்பதை உணர்ந்த அவன் அங்கிருந்து மாயமாய் மறைந்துவிட்டான்.

இமாம் அவர்களின் உடலின் உள்ளே நுழைந்த நஞ்சு விரைவில் தன் அலுவலைச் செய்யத் துவங்கிவிட்டது. திடீரென அவர்களுக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. தாம் நஞ்சூட்டப் பெற்று விட்டதையும் 68 ஆண்டு காலம் தம் உடலிலே ஆட்சி செய்த ஆன்மா இன்னும் சற்று நேரத்தில் தம் உடலை விட்டுப் பிரியப் போவதையும் இமாம் அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். தம் அருமந்த மைந்தன் மூஸல் காலிமை அருகழைத்து, தம் நிலையை அவருக்கு எடுத்துரைத்து அவருக்கு இறுதி அறிவுரை நல்கினார்கள். அதன்பின் தம் நண்பர்கள், மாணவர்கள் அனைவரையும் வரவழைத்து அவர்களுக்கு இறுதியாகச் சில நல்லுரைகள் வழங்கி, அவர்களிடமிருந்து விடைபெற்றார்கள். பின்னர் 'அல்லாஹ்' என்ற முழக்கத்துடன் அவர்களின் ஆன்மா அவர்களின் உடலை விட்டும் பிரிந்தது.

அவர்கள் 'ஹஜ்' செய்தபொழுது அவர்கள் இஹ்ராம் அணிந்த இரண்டு துணிகளையும் அவர்களிடமிருந்த அலீ (ரலி) அவர்களின் தலைப்பாகைத் துணியையும் கொண்டு அவர்களுக்குக் 'கஃபன்' செய்து ஜன்னத்துல் பகீயில் அவர்களின் தந்தையார், பாட்டனார் ஆகியவர்களின் அடக்க இடத்திற்கு அண்மையில் தோண்டப் பெற்ற மண்ணறையில் அவர்களின் பொன்னுடலை வைத்து நல்லடக்கம் செய்தார் அவர்களின் அன்புத் தனயர் மூஸல் காலிம். அப்பொழுது மண்ணும் மலையும் அழுதன. மக்களும் மாக்களும் அழுதனர். மரமும் செடியும் அழுதன, மாநபியின் மாண்புமிகு பேரர் மறைந்து விட்டார்; அத்தகு மாண்பாளரை நாம் இனி என்று காண்போம் என்று ஏங்கித் தவித்து அண்ட சராசரங்கள் அனைத்தும் அழுதன. ஆம், காண்பதற்கரிய அம்மேதகை இப்பூவுலகைப் 'பூ'வென உதறித்தள்ளி இதுகாறும் மனிதக் கண்கள் கண்டறியா மாபெரும் பொன்னுலகை, விண்ணுலகை அடைந்துவிட்டார்கள். அப்பொழுது மண்ணகத்தின் இழப்பே என் அகத்தின் பாக்கியம் என்று விண்ணுலகம் முழங்கியது.

---

* இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களுக்கு இரண்டு மனைவியர் மூலம் ஏழு ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் பிறந்தனர். அவர்களில் முதல் மனைவி மூலமாகப் பிறந்த இஸ்மாயீல் என்பவர் இமாம் அவர்கள் உயிரோடிருக்கும் பொழுதே உயிர் நீத்தார். இமாம் அவர்கள் இறந்தபின் அவர்களின் ஆதரவாளர்களில் ஒரு சாரார் இஸ்மாயீலே மூத்த மகனாதலின் அவர் தந்தைக்கு முன் இறந்துவிட்ட போதினும் அவரே ஏழாவது இமாம் என்று கூறினர். ஏனையோர் மூஸல்காலிம் (ரஹ்) அவர்களைத் தங்களின் ஏழாவது இமாமாக ஏற்றுக் கொண்டனர். இஸ்மாயீலைத் தங்களின் ஏழாவது இமாமாக ஏற்றுக் கொண்டவர்களே இஸ்மாயிலி ஷீயாக்களாவர்.

## 2. உவைஸுல் கரனீ (ரஹ்)

*அகிலத்திற்கோர் அருட்கொடையாக அனுப்பப் பெற்ற முகம்ம தெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் ஒருநாள் மதீனாவின் பள்ளி வாயலிலே அமர்ந்து மக்களுக்கு அறபோதம் நல்கிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் திடீரெனத் தங்களின் செங்கமலத் திருமுகத்தை எமன் நாட்டின் பக்கல் திருப்பிப் புன்முறுவல் பூத்தவர்களாய், 'திட்டமாக நான் எமன் நாட்டிலிருந்து வரும் ஆழிய அன்புத் தென்றலின் மென்சுகத்தை நுகர்கின்றேன்' என்று மொழிந்தனர். அதன்பின் அவர்கள் ''என்னைப் பின் தொடரும் ஒரு மனிதரின் பரிவுரை காரணமாக, ரபிஆ, முலறு ஆகிய இரு கூட்டத்தினரின் ஆடுகளின் மீதுள்ள உரோமத்தின் எண்ணிக்கை அளவுள்ள மக்கள் சுவனம் புகுவர்'' என்று திருவாய் மலர்ந்தனர்.**

*அண்ணலாரின் இச்சொற்கள் அவர்களின் தோழர்களுக்கு அளவற்ற வியப்பை அளித்தது. ''நாயகமே! அந் நல்லார் யார்? நலமெல்லாம்*

---

* ஆனால், 'ஹுல்யத்துல் ஔலியா' என்ற நூலில் அபூ ஹுறைரா (ரலி) அவர்கள் மூலம் கிடைத்த வரலாற்றை அதன் ஆசிரியர் ஹாபிஸ் அபூநயீம் பொறித்துள்ளார். 'நாளை சுவனவாசி ஒருவர் தொழ வருவார்' என்று அண்ணல் நபி நவின்றதாகவும் அவ்விதமே அடுத்த நாள் கறுப்பு நிறமும் ஒட்டுப் போட்டு தைத்த உடையும் அணிந்த ஒருவர் வந்து பள்ளியில் தொழுது தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு அண்ணல் அவர்களை வேண்ட அவர்கள் அவருக்கு மார்க்கப் போரில் ஈடுபட்டு உயிர் நீக்கும் பேற்றினை நல்குமாறு இறைஞ்சியதாகவும் அவரின் உடலிலிருந்து கஸ்தூரி கமழ்ந்ததென்றும் அப்பொழுது அபூஹுறைரா (ரலி) அவர்கள் அண்ணல் அவர்களை நோக்கி, 'தாங்கள் குறிப்பிட்ட அப்பெரியார் இவர்தாமோ?'' என்று வினவ, 'ஆம்' என்று பதிலிறுத்த அண்ணல் இவர் இன்ன கோத்திரத்தாரின் அடிமை என்று கூற 'அவரைத் தாங்கள் விலைக்கு வாங்கி உரிமைவிட்டால் என்ன?' என்று அபூஹுறைரா வினவினர் என்றும், 'அவர் இங்கு அடிமையாய் இருந்த போதினும் சுவனத்துப் பேரரசர்களில் ஒருவராய் இருக்கிறாரே. அவரை நான் ஏன் விடுதலை செய்ய வேண்டும்?' என்று அண்ணல் பதிலுரைத்ததாகவும் 'இத்தகையோரை வேறு எங்கு காண்பது?' என்று அபூஹுறைரா வினவ உவைஸுல் கரனீயைப் பற்றி அண்ணலார் எடுத்துரைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரண்ட அந்தப் புனிதர் யார்?'' என்று அவர்கள் பெரிதும் ஆவலுடன் வினவினார்கள். அதற்கு அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், ''அவர் அல்லாஹ்வின் நல்லடியார். எமன் நாட்டிலுள்ள கரன் என்னும் ஊரில் வாழ்ந்து வருகிறார்'' என்று பதிலிறுத்தனர்.

''அவர் தங்களை வந்து தரிசித்துள்ளாரா?'' என்று தோழர்கள் வினவ, ''இல்லை; அவர் என்னைத் தம் புறக்கண்ணால் தரிசிக்காத போதினும் அகக்கண்ணால் தரிசித்துள்ளார்'' என்று மறுமொழி பகர்ந்தனர் அண்ணல்.

அப்பொழுது அண்ணல் அவர்களின் அன்புத் தோழர்கள் அண்ணல் அவர்களை நோக்கி, ''அவர் ஏன் தங்களைத் தரிசிக்க வரவில்லை?'' என்று வினவினார்கள். அதற்கு அண்ணலார், ''அவர் இறை வணக்கத்தில் தம்மை மறந்து, தம் சுற்றம் மறந்து, தம் சூழல் மறந்து மூழ்கி இருப்பதன் காரணமாகவும் என்னுடைய வழிமுறையை (ஷரீஅத்தை) பேணுதலுடன் பின்பற்றி வருவதன் காரணமாகவும் அவர் என்னைத் தரிசிக்க வரவில்லை. கண்ணிழந்த அவரின் வயோதிக அன்னைக்குப் பணிவிடை செய்தபின் ஆடுமேய்த்து, அதிலிருந்து கிடைக்கும் சிறிதளவு வருவாயைக் கொண்டு அவர் தம் அன்னைக்கு உணவளித்து வருகிறார்'' என்று கூறினர்.

அதன்பின் தோழர்கள் அண்ணல் அவர்களை நோக்கி, ''அவரைத் தரிசிக்கும் பேறு எங்களுக்குக் கிடைக்குமா?'' என்று வினவினர்.

''கிடைக்காது'' என்று அண்ணல் அவர்கள் மறுமொழி பகர ''அபூபக்ருக்கு?'' என்று அடுத்த வினா எழுப்பினர் தோழர்கள்.

''அவருக்கும் கிடைக்காது'' என்று திடமாக விடைபகர்ந்த அண்ணல் அவர்கள், ''எனினும் உங்களில் உமரும் அலீயும் அவரைக் காண்பார்கள். அவரின் உடலெல்லாம் உரோமம் முளைத்திருக்கும். அவரின் வலது முன் கையிலும் இடது விலாவிலும் மருக்கள் காணப்பெறும். நடுத்தர உயரமுள்ள அவர் கம்பளி உடை அணிந்திருப்பார். எப்பொழுதும் அழுது கொண்டிருப்பதன் காரணமாக அவருடைய கண்கள் கலங்கி இருக்கும். மண்ணகத்தோர் அவரை அறியார். எனினும் விண்ணகத்தோர் அவரை நன்கு அறிந்துள்ளார்கள். அவருடைய இறைஞ்சுதல் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் பேறு பெற்றது. மறுமையில் நல்லடியார்களைப் பார்த்து 'சுவனம் செல்க' என்று கூறப்படும் பொழுது அவரை நோக்கி, 'நீர் இங்கு தங்கிப் பாவிகளுக்காகப் பரிந்துரையும்' என்று கூறப்படும். அதன் காரணமாக ரபீஆ, முலறு ஆகிய இரு கூட்டத்தினரின் ஆடுகளின் மீதுள்ள உரோமத்தின் எண்ணிக்கை அளவுள்ள மக்கள் சுவனம் புகுவர்.

# பொருளடக்கம்

''அவர் எவ்வாறு இவ்வுலகில் பிறரின் கண்களிலிருந்து மறைந்து காணப்படுகிறாரோ அவ்வாறே அவர் மறுமையிலும் பிறரின் பார்வை யிலிருந்து காக்கப் பெறுவார். எனவே அவர் சுவனம் புகுங்கால் அவரே போன்று எழுபதாயிரம் வானவர்களை இறைவன் படைத்து அவருடன் சேர்ந்து சுவனம் புகச் செய்வான். எனினும் இறையாண்மையை எய்திய ஒரு சில வானவர்களைத் தவிர, வேறு எவராலும் அவர் யார் என்று இலக்குக் கண்டுகொள்ள இயலாது. அக்காலை நான் அவரைப் பார்க்க விரும்பி வெளியே வரும்பொழுது, 'நீர் உலகில் அவரைக் காணாதது போன்று இங்கும் அவரைக் காண மாட்டீர்' என என்னிடம் கூறப்படும். உலகில் எவ்வாறு மக்களின் கண்களிலிருந்து விலகி இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்தாரோ அவ்வாறே இறைவன் அவரை மறுமையிலும் மக்களின் கண்களிலிருந்தும் பாதுகாத்தருள்வான்'' என்று இயம்பினர்.

இவ்வாறு இயம்பிய அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்கள் அதன்பின் உமர் (ரலி) அவர்களையும் அலீ (ரலி) அவர்களையும் நோக்கி, ''நீங்கள் இருவரும் அவரைச் சந்திக்குங்கால் என்னுடைய சலாத்தை அவருக்குத் தெரிவித்து, என்னுடைய இந்த மேலங்கியை அவருக்கு என்னுடைய அன்பளிப்பாக வழங்கி, என்னைப் பின்பற்றியவர்களுக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு அவரிடம் கோருங்கள். அவர் வலிமார் களில் மேலானவர்; நன்மையைப் பின்பற்றுபவர்களில் சிறந்தவர் (உவைஸுல் கர்னீ பிஇஹ்ஸான்)'' என்று இதழ் விரித்து ஓதினர்.

நாட்கள் உருண்டோடின. அண்ணலெம்பெருமானும் அவனி நீத்து மறைந்தார்கள். அதன்பின் கலீபாப் பதவி தாங்கிய அபூபக்ர் (ரலி) அவர்களும் உயிர் நீத்து, உம்பர் உலகம் எய்தினார்கள். அதன்பின் அரபு அவனியிலே உமர் (ரலி) அவர்களின் ஆட்சி துவங்கியது.

'அண்ணலெம்பெருமானின் முன்னறிவிப்பு எப்பொழுது நிறை வேறுமோ? உவைஸுல் கரனீ என்னும் நல்லாரை என்று காண போமோ?' என்று ஏங்கிக் கொண்டிருந்த உமர் (ரலி) அவர்கள் எமன் நாட்டு மக்களைக் காணுந்தோறெல்லாம் அவர்களைப் பற்றி விசாரித்துக் கொண்டே இருந்தார்கள். எனினும் ஒருவரேனும் அவர்களைப் பற்றி யாதொரு விவரமும் கூறவில்லை. இவ்வாறு இருபதாண்டுகள் கழிந்தன.

இதன்பின் ஒரு தடவை உமர் (ரலி) அவர்கள் ஹஜ்ஜுச் செய்ய மக்கா சென்றிருந்தபொழுது ஆங்குக் குழுமியிருந்த மக்களை நோக்கி, 'மக்களே! இங்கு வீற்றிருப்பவர்களில் இராக் நாட்டினர் எவரேனும் இருப்பின் அவர்கள் எழுந்து நில்லுங்கள்!'' என்று கூறினர். அவ்விதமே அவர்கள் எழுந்து நின்றதும், ''நல்லது! உங்களில் கூஃபாவாசிகளைத் தவிர ஏனையோர் அமர்ந்து விடுங்கள்'' என்று கூறினர். அவ்வாறே ஏனையோர்

அமர்ந்தனர். பின்னர் உமர் (ரலி) அவர்கள் எஞ்சி நின்று கொண்டிருந்தவர்களை நோக்கி, ''உங்களில் முராதுக் கிளையினரைத் தவிர்த்து மற்றையோர் அமர்ந்து விடலாம்'' என்றார்கள். அவ்வாறே மற்றையோர் அமர்ந்ததும் உமர் (ரலி) அவர்ககள் எஞ்சி நின்று கொண்டிருந்தவர்களை நோக்கி, ''உங்களில் கரன்வாசிகளைத் தவிர்த்து மற்றவர்கள் அமர்ந்து விடுங்கள்'' என்றார்கள். அவ்வாறே மற்றவர்கள் அமர்ந்ததும் ஒரே ஒருவரே நின்று கொண்டிருந்தார். அப்பொழுது உமர் (ரலி) அவர்கள் அவரை நோக்கி, ''உமக்கு உவைஸுல் கரனீ என்பவரைத் தெரியுமா?'' என்று வினவினார்கள். அப்பொழுது அவர், ''இறை நம்பிக்கையாளரின் தலைவ! அவரை எனக்குத் தெரியும். அவர் என் பெரிய தந்தையார் அம்ரின் மகன்தான். அவர் தங்களைப் போன்றோர் விசாரிக்கும் வண்ணம் அத்துணைப் பெருமகரல்லர். அவர் ஒட்டகங்களை மேய்க்கிறார். இரவில் மட்டும் ஒருவேளை காய்ந்த ரொட்டிகளை உண்கிறார். அவர் ஊருக்கு வருவதுமில்லை; ஒருவரோடும் உரையாடுவதுமில்லை. இன்பம் என்றால் என்னவென்பதையும் அவர் அறியார். துன்பம் என்றால் யாது என்றும் அவருக்குத் தெரியாது. மற்றவர்கள் சிரித்தால் அவர் அழுவார். அவர்கள் அழுதால் இவர் சிரிப்பார்'' என்று கூறினார்.

இது கேட்டதும் உமர் (ரலி) அவர்களின் செந்தாமரை முகம் மலர்ந்தது. அண்ணலெம் பெருமான் அருளிச் சென்ற தீர்க்க தரிசனம் நிறைவேறும் நாள் அண்மிவிட்டது என்பதை அறிந்து அவர்களின் உள்ளம் உவகைக் கடலில் மூழ்கியது. ஹஜ்ஜுக் கடமைகளையெல்லாம் செவ்வனே நிறைவேற்றி விட்டு அபூதாலிபின் அருமைத் திருமகனார் அலீ (ரலி) அவர்களையும் தம் உடன் அழைத்துக் கெண்டு அவர்கள் எமன் நாடு நோக்கி விரைந்தார்கள்.*

காதம் பல கடந்து, எமன் நாட்டை அடைந்து கரனீ என்னும் சிற்றூரை வந்தெய்திய அவ்விருவரும் அதன் அண்மையிலிருந்த ஓடைக் கரைக்குச் சென்றார்கள். ஆங்குத் தம் ஒட்டகங்களை மேய விட்டுவிட்டு ஒரு மரநிழலில் கம்பளி உடையணிந்த ஒருவர் அமைதியாக நின்று தொழுது கொண்டிருந்ததைக் கண்டார்கள். கண்டதும் இவர் தாம் உவைஸுல் கரனீயாக இருப்பாரோ என்ற எண்ணம் மேலிடத் தம் ஒட்டகைகளிலிருந்தும் கீழே இறங்கி அவரை நோக்கிச் சென்றனர். எவரோ தம் அண்மையில் நடமாடுவதை உணர்ந்த அப்பெரியார் தொழுகையை விரைவில் முடித்துக் கொண்டு 'ஸலாம்' உரைத்து,

* ஹஜ்ஜுச் செய்ய உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் வந்திருந்த பொழுது, 'அரபாத்' வெளியில் வைத்து அவர்களை உமர் (ரலி) அவர்கள் சந்தித்ததாக மற்றொரு வரலாறு கூறுகிறது.

''தாங்கள் யார்?'' என்று வினவினார். அப்பொழுது அலீ (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்களளைச் சுட்டிக்காட்டி ''இவர்கள் அமீருல் மூமினீன் உமர் இப்னு கத்தாப் ஆவர்; நான் அலீ இப்னு அபூதாலிப் ஆவேன்'' என்று மறுமொழி பகர்ந்தனர்.

அதைக் கேட்டதும் அவ்விருவருக்கும் மரியாதை செய்யும் முகத்தான் எழுந்து நின்ற அப்பெரியார், ''இறைவன் தங்களுக்குப் பேரருள் பாலிப்பானாக!'' என்று கூறி அவர்களை வாழ்த்தினார்.

அப்பொழுது உமர் (ரலி) அவர்கள் அப்பெரியாரை நோக்கி, ''தாங்கள் யார்?'' என்று கேட்க, ''நான் ஓர் ஒட்டகை மேய்ப்பவன்'' என்று அடக்கத்துடன் மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

''அதைப்பற்றி நாங்கள் வினவவில்லை. தங்களின் பெயர் யாது?''

''என் பெயர் அப்துல்லாஹ்'' (அல்லாஹ்வின் அடியான்)

''நாம் அனைவரும் அல்லாஹ்வின் அடியார்கள் தாமே, தங்களுக்குத் தங்களின் பெற்றோர்கள் சூட்டிய பெயர் என்ன?''

''உவைஸ்''

உவைஸ் என்ற பெயரைச் செவியுற்றதும் அவர்களின் உடலெல்லாம் இனித்தது; உள்ளமெல்லாம் இனித்தது. அவர்கள், சற்று நேரம் இன்ப வாருதியில் மூழ்கித் திளைத்தார்கள்.

அதன்பின் அண்ணலெம்பெருமான் கூறிய அடையாளங்கள் அவர்களின் உடலிலே காணப் பெறுகின்றனவா என்பதை அறிய, ''நல்லது; தங்களின் வலது முன் கையை நீட்டுங்கள், பார்ப்போம்'' என்று அவர்கள் இருவரும் நவின்றார்கள்.

அவர்கள் அவ்வாறே நீட்ட அதனை உமர் (ரலி) அவர்களும், அலீ (ரலி) அவர்களும் துண்டித் துருவிப் பார்த்தார்கள். ஆ! என்ன வியப்பு! அதிலே அண்ணல் அவர்கள் கூறிய அடையாளம் அப்படியே காணப் பட்டது. அவ்வளவுதான். அம்மலர்க்கரததை அவர்கள் தம் மலர்விழி களிலே ஒற்றி ஒற்றி மகிழ்ச்சிக் கண்ணீர் உகுத்தார்கள். உகுத்து, உகுத்து அவர்களின் கரத்தில் தங்களின் கண்ணீரைக் காணிக்கையாக வைத்தார்கள்.

இதன்பின் உமர் (ரலி) அவர்கள் மீண்டும் பேச்சைத் துவக்கினார்கள்.

''மாண்புமிகு மாதவத்தீர்! அண்ணலெம்பெருமான் (ஸல்) தங்களுக்கு அவர்களின் சலாத்தைத் தெரிவிக்குமாறு பணித்துவிட்டுப் போந்தனர். எனவே முதற்கண் அவர்களின் சலாத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். இரண்டாவதாக அவர்கள் தங்களின்

மேலங்கியைத் தங்களுக்கு அன்பளிப்பாக நல்குமாறு வழங்கிவிட்டுச் சென்றுள்ளனர். இதோ அவ்வங்கி உள்ளது. அதனைப் பெற்று மகிழுங்கள். மூன்றாவதாக, முஸ்லிம்களுக்காகத் தாங்கள் இறைவனிடம் இறைஞ்ச வேண்டுமென்று கூறியுள்ளார்கள்.'' இவ்வாறு உமர் (ரலி) அவர்கள் பேசினார்கள்.

அதுகேட்ட உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் உமர் (ரலி) அவர்களை நோக்கி, ''தாங்களே யாவரினும் சிறந்தோர். எனவே முஸ்லிம்கள் அனைவருக்காக வேண்டியும் இறைவனிடம் இறைஞ்ச அதிக அருகதை பெற்றவர்கள் தாங்களேயன்றி வேறில்லை'' என்று பகர்ந்தார்கள்.

அப்பொழுது உமர் (ரலி) அவர்கள் உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''அண்ணலெம்பெருமானின் அன்புக் கட்டளையைச் சிரமேற்றாங்கிச் செயலாற்றுவது தங்கள் மீது கடமை. அவ்வளவுதான்'' என்று முத்தாய்ப்பு வைத்தாற்போல் பேசினர்.

''அதுசரி; ஆனால் அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட உவைஸுல் கரனீ வேறொரு நபராக இருக்கக் கூடுமோ என்று நான் அஞ்சுகின்றேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

''அல்ல; அல்ல, அவர்கள் குறிப்பிட்ட அந்த உவைஸுல் கரனீ தாங்களேயன்றி வேறல்ல. அவர்கள் கூறிய அடையாளங்கள் அத்தனையும் தங்களிடம் காணப் பெறுகின்றன'' என்று ஆணித்தரமாகக் கூறினர் உமர்.

இப்பொழுது உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் உமர் (ரலி) அவர்களை நோக்கி, ''அண்ணலெம்பெருமான் (ஸல்) இட்ட அருட்பணியை நிறைவேற்றுவது என் தலையாய கடமை. அவர்கள் எனக்கு அன்பளிப்பாக வழங்கிய அவர்களின் சீராரும் மேலங்கியைத் தாருங்கள். நான் அனைத்து முஸ்லிம்களுக்காகவும் இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்'' என்று கூறி எழுந்து சற்றுத்தொலை சென்றார்கள். ஆங்கு ஓரிடத்தில் தலையைத் தரையிலே வைத்து முஸ்லிம்கள் அனைவருக்காகவும் இறைவனிடம் மன்றாடினார்கள்.

''உம் இறைஞ்சுதலை ஏற்றுக் கொண்டோம். உமக்காகச் சிலரின் பவம் பொறுத்தோம்'' என்று இறைவன் அவர்களுக்கு இல்ஹாம் (உதிப்பு) மூலம் செய்தி அனுப்பினான்.

''இறைவ எம்பெரும! அது பற்றாது; எல்லா முஸ்லிம்களையும் நீ மன்னிக்க வேண்டும். இன்றேல் எக்காலமும் என் தலையை உயர்த்தேன். எக்காளம் ஊதப்படும் வரையும் என் தலையை உயர்த்தேன்.

எம்பெருமானின் மேலங்கியையும் அணியேன், அணியேன்'' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதவண்ணம் மீண்டும் மீண்டும் இறைஞ்சினர் அம்மேதகை.

''உம் இறைஞ்சுதலை ஏற்றுக்கொண்டோம். உம் பொருட்டு ஆயிரம் ஆயிரம் பேரை மன்னித்தோம்'' என்று இறைவனிடமிருந்து மீண்டும் செய்தி வந்தது.

''இறைவ எம்பெரும! அதுவும் பற்றாது. நீ எல்லா முஸ்லிம்களையும் மன்னித்தாலொழிய நான் உன்னை விடப் போவதில்லை. நீ அவர்களை மன்னிக்காவிடின் வேறு எவர் தாம் அவர்களை மன்னிப்பர்?'' என்று வினவிய வண்ணம் விம்மி விம்மி அழுது இறைஞ்சினர் அம்மாதவர்.

இவ்வாறு அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையே உரையாடல் நெடு நேரமாக நடந்து கொண்டிருந்தது. அவர்களின் கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீர் தரையை ஈரமாக்கியதோடல்லாது இறைவனின் உள்ளத்தையும் ஈரமாக்கி இளகச் செய்து கொண்டிருந்தது.

நீண்ட நேரமாக அவர்கள் தம் தலையை உயர்த்தாது குப்புற வீழ்ந்து கிடப்பதைக் கண்ட உமர் (ரலி) அவர்களும் அலீ (ரலி) அவர்களும் அவர்களுக்கு யாது நேர்ந்ததோ என்று ஐயுற்றவர்களாய் அவர்களின் அண்மையில் வந்தார்கள். அப்பொழுது உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களும் தம் தலையை உயர்த்தி அவர்களை நோக்கி, ''பொறுத்தது பொறுத்தீர்கள் இன்னும் சற்று நேரம் பொறுத்திருக்கக் கூடாதா?'' ஊழியூழி காலம் வரை உலகிலே தோன்றும் முஸ்லிம்கள் அனைவருக்கும் நான் இறைவனிடம் மன்றாடிப் பாவமன்னிப்புப் பெற்றிருப்பேனே'' என்று பெரிதும் வருத்தத்துடன் மொழிந்தனர்.

அதன்பின் அவர்கள் அவ்விருவரையும் நோக்கி, ''எனினும் அளப்பரும் அருளாளனாகிய இறைவன் என்னுடைய இறைஞ்சுதலைச் சிறிது சிறிதாக ஏற்றுக் கொண்டான். அண்ணலெம்பெருமானின் புனித அங்கியை நான் எடுத்துச் சென்ற பாக்கியத்தினால் ரபீஆ, முலறு ஆகிய இரு கூட்டத்தினரின் ஆடுகளின் உரோமத்தின் எண்ணிக்கை அளவு முஸ்லிம்களின் பவம் பொறுத்து அவர்களை ஆட்கொண்டான்'' என்று கூறினர். அண்ணலெம்பெருமான் கூறிச் சென்ற முன்னறிவிப்புக்கிணங்க இவர்கள் மொழிந்ததைக் கண்டதும் அவர்கள் இருவரும் பெரு வியப்பெய்தினார்கள்.

கம்பளி உடைக்குள்ளே மாபெரும் காரணீகர் ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டதும் உமர் (ரலி) அவர்களுக்குத் தம்மீதும் தாம் வகித்து வரும் கிலாபத் பதவி மீதும் வெறுப்பு வெறுப்பாக வந்தது. அவர்கள்

ஆற்றொணாப் பெரும் சினத்துடன் தங்களின் சவுக்கைத் தரையிலே வலுவாய் அடித்து, ''உமரே! உன் அன்னை உன்னைப் பெறாதிருந்திருக்கக் கூடாதா? ஒரு ரொட்டித் துண்டுக்குப் பகரமாக நான் வகித்து வரும் கிலாபத்தை வாங்கிக் கொள்ள ஒருவன் முன் வந்த போதினும் நான் அவனுக்கு அதனைக் கொடுத்து விடத் தயாராயுள்ளேன்'' என்று அலறினார்கள். அதுகேட்ட உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள், ''அறிவற்றவனைத் தவிர்த்து வேறு எவன் அதனை விலைக்கு வாங்குவான்? எனவே வாங்குவது, விற்பது பற்றிப் பேசாது அதனைத் தூக்கி வீசி எறியுங்கள். அதனை வேண்டுவோர் எடுத்துக் கொள்ளட்டும்'' என்று விளம்பினர்.

இதன்பின் உமர் (ரலி) அவர்கள் உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''தாங்கள் ஏன் அண்ணலெம்பெருமான் (ஸல்) உயிரோடிருக்குங் காலை அவர்களை வந்து தரிசிக்கவில்லை?'' என்று வினவினார்கள். அதற்கு உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் நேரடியாகப் பதிலுரைக்காது உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, ''தாங்கள் அவர்களைத் தரிசித்துள்ளீர்களா?'' என்று மறுவினாவிடுத்தனர். ''ஆம்'' என்று உமர் (ரலி) அவர்கள் விடையிறுத்தனர். ''நல்லது; அண்ணலெம்பெருமானின் அழகுத் திருநுதலில் அவர்களின் புருவங்கள் ஒன்று சேர்ந்திருந்தனவா, பிரிந்திருந்தனவா?'' என்று வினவினர் உவைஸுல் கரனீ.

இது கேட்டு யாது கூறுவதெனத் தெரியாது உமர் (ரலி) அவர்களும் அலீ (ரலி) அவர்களும் வாளாவிருந்தார்கள்.

அப்பொழுது உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் அவ்விருவரையும் நோக்கி, 'இஃதென்ன புதுமை! தாங்கள் அண்ணலெம்பெருமானின் அன்புத் தோழர்கள் தாமே. தங்களுக்கு அவர்களைப் பற்றி இதுகூடத் தெரியவில்லையே. நல்லது; அண்ணலெம்பெருமானுக்கு உஹுத் போர்க்களத்தில் வைத்து ஒரு பல் முறிந்து விழுந்த பொழுது தாங்கள் அவர்களின் உண்மையான அன்புத் தோழர்களாயிருந்திருப்பின் தாங்களும் ஏன் அதுபோன்று தங்களின் ஒரு பல்லை விழச் செய்யவில்லை. நட்பு என்றால் அஃதன்றோ உண்மையான நட்பு! என்னைப் பாருங்கள்! நான் என் பற்கள் அனைத்தையும் பிடுங்கி விட்டேன். நான் ஒரு பல்லைப் பிடுங்க, அது அண்ணலெம்பெருமானுக்கு வீழ்ந்த பல்லாக இல்லாதிருக்குமோ என்ற ஐயம் எனக்கு ஏற்பட, அடுத்த ஒரு பல்லை நான் பிடுங்க அதே போன்ற ஐயம் எனக்கு மீண்டும் முளையிட இவ்வாறு நான் என் பற்கள் அனைத்தையும் பிடுங்கிவிட்டேன்'' என்று கூறித் தம் பொக்கை வாய் திறந்து புன்னகை பூத்தனர் அப்பெரியார். அது கண்டு நபித் திருத்தோழர் இருவரும் நவிலவொண்ணா வியப்பெய்தினர்.

இதன்பின் தன்னுணர்வு பெற்ற உமர் (ரலி) அவர்கள் உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களை நோக்கி, தமக்காக இறைவனிடம் 'துஆ' இறைஞ் சுமாறு வேண்டி நின்றனர்.

அதற்கு உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள், ''நான் ஒவ்வொரு தொழுகையின் போதும் முஸ்லிம்கள் அனைவருக்கும் இறைவனிடம் இறைஞ்சுகின்றேன். அதில் தாங்களும் அடங்குவீர்கள்'' என்று பதிலிறுத்தனர்.

''அது சரி; ஆனால் எனக்காகத் தனிப்பட்ட முறையில் இறைவனிடம் இறைஞ்சுங்கள்'' என்று வேண்டினார்கள் உமர்.

அதற்கிணங்கி அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

இதன்பின் உமர் (ரலி) அவர்கள் உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''அறிவுரை பகருங்கள்'' என்று வேண்டி நின்றனர்.

அதுகேட்ட அம்மாதவர், ''தாங்கள் இறைவனை அறிவீர்களா?'' என்று வினவ ''ஆம்'' என்று பதிலிறுத்தனர் கலீபா.

''இறைவனையன்றி வேறொன்றையும் தாங்கள் அறியாதிருப்பின் அதைவிடச் சிறந்த நற்பேறு வேறு என்ன வேண்டும்?'' என்று கூறினர் உவைஸ்.

மேலும் தமக்கு அறிவு நல்குமாறு உமர் (ரலி) அவர்கள் வேண்ட ''இறைவன் தங்களை அறிந்துள்ளானா?'' என்று வினவினர் உவைஸ்.

''ஆம்'' என்று மறுமொழி பகர்ந்தனர் உமர்.

''அவனைத் தவிர வேறொருவரும் தங்களை அறியவில்லையாயின் அதைவிடச் சிறந்த நற்பேறு வேறு என்ன வேண்டும்?'' என்று கேட்டனர் உவைஸ்.

இதன்பின் உமர் (ரலி) அவர்கள் அப்பெரியாரை நோக்கி, ''தங்களுக்கு நான் ஏதேனும் கொண்டு வரவா?'' என்று வினவினர்.

உடனே உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் தங்களின் சட்டைப் பையிலிருந்து இரண்டு தீனார்களை எடுத்து, ''இது நான் உழைத்துச் சம்பாதித்த ஊதியம். இதனை நான் செலவழித்துத் தின்று முடிக்கும் வரையில் நான் உயிரோடிருப்பேன் என்று தாங்கள் உறுதி கூறின் நான் தாங்கள் அளிக்கும் அன்பளிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். இல்லையெனில் வேண்டாம்'' என்று மறுத்துரைத்தார்கள்.

''தங்களுக்கு ஏதேனும் ஆடைகள் தரவா?'' என்று மீண்டும் உமர் (ரலி) அவர்கள் வினவினர்.

அதற்கு அவர்கள் "நான் அவற்றைக் கொண்டு என்ன செய்வேன்? எனக்கு உடுக்க ஒரு கம்பளியும் போர்த்திக் கொள்ள ஒரு கம்பளியும் உள்ளன. அவை இரண்டும் எப்பொழுது கிழியும் என்று எண்ணுகிறீர்கள்? என்னிடம் ஒரு சோடி செருப்பு உள்ளது. அது எப்பொழுது பிய்யும் என்று எண்ணுகிறீர்கள்?" என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அதன்பின் அவ்விருவரையும் நோக்கி, "தாங்கள் பெரிதும் சிரமப் பட்டு வெகுதொலை வந்துவிட்டீர்கள். மறுமையோ அண்மிக் கொண்டுள்ளது. அதற்கான ஆயத்தங்களை நான் செய்ய வேண்டும். மறுமை செல்லும் பாதை எனக்கும் உங்களுக்கும் கடினமானதாக உள்ளது. கனமில்லாத, மெலிந்த கதியாகச் செல்லக் கூடிய சாதிக் குதிரையே அப்பாதையை இலகுவாகக் கடந்து செல்லும். தங்கள் மீது இறைவன் பேரருள் பாலிப்பானாக!" என்று கூறினர்.

பின்னர் அம்மேதகை அவ்விருவரையும் நோக்கி "நீங்கள் உங்கள் வழியே செல்லுங்கள். நான் என் வழியே செல்கிறேன். மறுமையில் நாம் சந்திப்போம்" என்று கூறித் தம் ஒட்டகங்களை விரட்டிக் கொண்டு சென்று விட்டார்கள்.

அமீருல் மூமினீன் உமர் (ரலி) அவர்களும் அண்ணலெம் பெருமானின் அருமை மருகர் அலீ (ரலி) அவர்களும் ஒட்டகை மேய்க்கும் உவைஸைக் காண்பதற்காகக் கரனீ ஊருக்கு வருகை தந்து அவர்களுடன் கலந்துறவாடிய செய்தியும், அவர்களைக் கண்ணியப் படுத்திய புதுமையும் அச்சிற்றூர் முழுவதும் அதற்கு அப்பாலும் ஒரு நொடியில் பரவிவிட்டது. தாங்கள் சாமன்யர் என்று எண்ணிக் கொண்டிருந்த அந்த ஒட்டகை மேய்ப்பவர் மன்னர் மன்னர்களும் திரை நல்கும் மாதவத்து மன்னர் உமர் (ரலி) அவர்களால் தரிசிக்கப் பெற்ற மேதகை என்பதை மக்கள் அறிய வந்ததும், அப்பெரியாரைத் தரிசிக்க சாரி சாரியாக வரத் துவங்கினார்கள். இனிமேல் தாம் அவ்வூரில் தங்கியிருப்பது சரியல்ல என்பதை உணர்ந்த அச்சான்றோர் தாம் மேய்த்து வந்த ஒட்டகைகளை அவற்றின் உரிமையாளரிடம் ஒப்படைத்துவிட்டு, மனிதர்களின் கண்களை விட்டும் ஒதுங்கி வாழ்வதற்காக கூஃபாவை நோக்கி வெருண்டோடினார்கள்.

உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் தம் பிறந்தகம் துறந்து கூஃபாவை நோக்கி ஓடும் செய்தி உமர் (ரலி) அவர்களுக்கு எவ்வாறோ தெரிய வந்தது. "நான் கூஃபாவின் ஆளுநருக்கு மடல் எழுதி, தங்களுக்கு உதவி வழங்குமாறு செய்கிறேன்" என்று அவர்களுக்குச் செய்தி அனுப்பினர் உமர். "வேண்டேன் வேண்டேன். எனக்கு அல்லாஹ்வின் உதவியே போது மானது என்று உமரிடம் கூறும்" என்று மறுமொழி அனுப்பினர் உவைஸ்.

அவர்கள் கூஃபாவிற்கு வந்த புதிதில் ஒரு பள்ளிக்குச் சென்று ஆங்கு நபி மொழிகள் போதிக்கப் பெறுவதை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். தொடர்ந்து சில நாட்களாக அவர்கள் வராததைக் கண்ட ஆஸிர் இப்னு ஜாபிர் என்ற ஒருவர் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் பள்ளிக்கு வராததற்கான காரணத்தை வினவினார். தம்மிடம் உடையில்லாததனால் வரவில்லை என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

உடனே அவர் தம்முடைய மேலாடையை அவர்களிடம் கழற்றிக் கொடுத்து அதனை அணிந்துகொண்டு பள்ளிக்கு வருமாறு கூறினார். அதற்கு அவர்கள், ''நான் இதனை அணிந்து கொண்டு வந்தால் அங்குள்ளோர் என்னை இழித்துரைப்பரே'' என்று எவ்வளவோ கூறியும் கேளாது அவர்களை வற்புறுத்தி அணியச் செய்தார் அவர்.

அவர்கள் அதனை அணிந்துகொண்டு பள்ளி சென்ற பொழுது, ''நீர் இதனை எங்குத் திருடினீர்?'' என்று ஆங்கிருந்தோர் அவர்களை இழித்துரைத்துப் பரிகசித்தனர். உடனே அவர்கள் ஆஸிரை நோக்கி, ''பார்த்தீரா! நான் சொன்ன வண்ணம் நடந்துவிட்டது'' என்று கூறி அவரின் மேலாடையைக் கழற்றி அவரிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

உவைஸ் அவர்கள் கூபாவிற்கு வந்து இரண்டாண்டுகள் உருண்டோடி விட்டன. அங்கு அவர்களைப் பெரும்பாலோர் அறியார்கள். அறிந்தவர்களில் சிலர் அவர் வேற்றூரிலிருந்து வந்திருக்கும் ஒரு பித்துக்குளி என்றே எண்ணிக் கொண்டார்கள். ஆம்; அவர்களும் ஒரு பித்துக்குளி போன்றே காட்சி வழங்கினார்கள். குப்பை மேடுகளில் கிடக்கும் கந்தல் துணிகளைச் சேகரித்துக் கசக்கிப் பிழிந்து தைத்து அணிந்து கொள்வார்கள். அதில் கிடக்கும் ரொட்டித் துண்டுகளைப் பொறுத்தி எடுத்துக் கழுவி உட்கொள்வார்கள். அவற்றில் சிலவற்றை அவர்கள் பிறருக்கும் கொடுத்து விடுவார்ள். அதன்பின் இறைவனை நோக்கி, ''இறைவனே! என்னுடைய வயிற்றிலுள்ள உணவையும் உடலிலுள்ள துணியையும் தவிர்த்து வேறொன்றும் என்னிடம் இல்லை என்பதை நீ நன்கு அறிவாய். ஆதலின் உணவின்றியோ, உடையின்றியோ எவரேனும் இறப்பின் அதற்காக நீ என்னைத் தண்டித்து விடாதே'' என்று இறைஞ்சுவார்கள்.

சில பொழுது அவர்கள் குப்பை மேடுகளில் கிடக்கும் பேரீத்தம்பழக் கொட்டைகளைப் பொறுக்கி எடுத்து விற்று அதிலிருந்து கிடைக்கும் பணத்தைக் கொண்டு உணவு வாங்கி அருந்துவர். சில பொழுது பேரீத் தம்பழங்கள் வாங்கின் அப்பழங்களை உண்டு அவற்றின் கொட்டைகளை விற்று அப்பணத்தை அறம் செய்து விடுவார்கள். சில பொழுது

அப்பணத்தைக் கொண்டு உணவுப் பொருள் வாங்கி நோன்பு திறப்பதற்காக வைத்துக் கொள்வார்கள்.

ஒருநாள் கூஃபாவின் குப்பை மேடொன்றில் அவர்கள் ரொட்டித் துண்டுகளை அங்குமிங்கும் தேடிப் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந் தார்கள். அப்பொழுது ஆங்கு உணவு தேடுவதற்காக வந்த ஒரு நாய் அவர்களைப் பார்த்துக் குலைத்தது. அப்பொழுது அவர்கள் அந்நாயை நோக்கி, ''நாயே! உனக்குக் கிடைத்ததை நீ உண். எனக்குக் கிடைத்ததை நான் உண்கிறேன். ஆதலின் நீ என்னைப் பார்த்துக் குலைக்க வேண்டாம். நான் நேரிய வழி செல்லின் நான் நல்லவன். இல்லையேல், நீயே என்னை விட நல்லது'' என்று கூறினர்.

ஒருதடவை அவர்கள் உணவு கிடைக்காது மூன்று நாட்களாகப் பட்டினி கிடந்தனர். கானகம் சென்று இலைகளையும் தழைகளையும் தின்றார்கள். அப்பொழுது ஆங்கு ஓரிடத்தில் சில பொற்காசுகள் கிடந்தன. எனினும் அவர்கள் அவற்றை ஏறிட்டும் பார்க்கவில்லை. அப்பொழுது ஓர் ஆடு தன் வாயில் ஒரு ரொட்டித் துண்டைக் கௌவிக்கொண்டு வந்தது. எவருக்கோ அதனை எடுத்துச் செல்கின்றது என்று எண்ணி னார்கள் அவர்கள். ஆனால் அந்த ஆடோ அதனை அவர்களின் முன் வைத்து, ''உண்ணுக!'' என்று கூறுமாப் போன்று சமிக்ஞை செய்தது. அதன்பின் தான் அவர்கள் அதனை எடுத்து உண்டு பசி தீர்த்தனர்.

அவர்களைத் தீயோர்கள் எள்ளி நகையாடவும் அவர்களுக்குத் தீமை பல புரியவும் செய்தார்கள். அவர்களைச் சிலர் பொய் வேடதாரி என்று பரிகசிக்கவும் செய்தார்கள். சிறுவர் சிறுமியர் அவர்களைத் தெருவிலே காணின் 'கிறுக்கன், கிறுக்கன்' என்று கூறி அவர்களைக் கேலி செய்வர். அதுமட்டுமல்ல; அவர்களைக் கல்லாலும் அடிப்பார்கள். அதுகண்டு அவர்கள் சற்றேனும் சினமுறாது 'என் கண்மணி மக்களே! பொடிக் கற்களை என் மீது எறியுங்கள். பெருங்கற்களால் எறியின் அதனால் எனக்குக் காயம் ஏற்பட்டு அதிலிருந்து இரத்தம் ஓடி என் 'உளூ' முறிந்து விடும். அதன் காரணமாக என் தொழுகையும் முறிந்துவிட ஏதுவாகும். மேலும் நான் நின்று தொழவும் இயலாது போய்விடும்'' என்று கூறுவர்.

அவர்கள் பித்துக்குளி போன்று அங்குமிங்கும் அலைந்து திரிந்த போதிலும் அவர்களின் சிறப்பினை உணர்ந்த சிலர், சிறிது பணம் சேகரித்து அவர்களுக்கென ஒரு சிறு குடில் எழுப்பி அதில் அவர்களை வசித்து வருமாறு கூறினர். ஆனால் அவர்களுக்கும் அக்குடிலுக்கும் உள்ள தொடர்போ பெரிதும் விசித்திரமாக இருந்தது. வைகறையில் 'பாங்கு' சொல்வதற்கு முன் அக்குடிலை விட்டு நீங்கும் அவர்கள் இரவுத்

தொழுகைக்குப் பின்தான் அக்குடில் வந்து சேர்வார்கள். சிலபொழுது ஆண்டுக் கணக்காக அவர்கள் மக்களின் கண்களிலிருந்து மறைந்து வாழ்வார்கள். அப்பொழுது அவர்கள் எங்குள்ளார்கள், யாது செய்கின்றார் கள் என்பது எவருக்கும் தெரியாது.

உமர் (ரலி) அவர்களுக்கு உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களின் மீது ஒருவிதத் தனி அன்பு இருந்து வந்தது. இதேபோன்று உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களுக்கும் உமர் (ரலி) அவர்களின் மீது ஒருவிதப் பேரன்பு இருந்து வந்தது. இருவர் உள்ளங்களும் ஒன்றையொன்று நன்கு அறிந்திருந்தன. ஒருதடவை உமர் (ரலி) அவர்கள் மக்காவுக்கு ஹஜ்ஜுச் செய்யச் சென்றிருந்த காலை ஆங்கு வந்திருந்த கூஃபாவாசி ஒருவரைக் கண்டதும் அவரிடம் உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களைப் பற்றி விசாரித்தார்கள். ''அவரோ ஒரு சிறிய குடிலில் மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வருகின்றார். நாங்கள் அவரைப் பரிகசித்து இழித்துரைப்போம்'' என்று அவர் பதில் கூறினார். அப்பொழுது உமர் (ரலி) அவர்கள் உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களின் மாண்பினை அவரிடம் எடுத் துரைக்க, அது கேட்டுப் பெரிதும் வியப்புற்ற அலர் கூஃபா வந்ததும் முதல் வேலையாக அவர்களைச் சந்தித்துத் தமக்காக இறைவனிடம் 'துஆ' இரக்குமாறு வேண்டி நின்றார். அதுகேட்ட உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள், ''தாங்களன்றோ புனித யாத்திரையை மேற்கொண்டு, மாசு நீக்கப்பெற்ற பத்தரை மாற்றுத் தங்கம் போன்று திரும்பி வந்துள்ளீர்கள். தாங்களன்றோ என் போன்ற பாவிகளுக்காக இறைவனிடம் இறைஞ்ச வேண்டும்'' என்று கூறினர். அதன்பின் அவர்கள் அம்மனிதரை நோக்கி, ''தாங்கள் உமரைச் சந்தித்தீர்களா?'' என்று வினவினர். ''ஆம்'' என்று அவர் பதில் கூறவே அவர் மீது அவர்களுக்கு ஒருவித அன்பு ஏற்பட்டது. அவர் பெரிதும் வற்புறுத்தி வேண்டிக் கொண்டதன் பேரில் அவருக்காக அவர்கள் இறைவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சினார்கள். பின்னர் அவர்கள் அவரை நோக்கி ''இனிமேல் என்னை இழித்துரைத்துப் பரிகசிக்காதீர். உமர் என்னைப் பற்றிக் கூறியவற்றையும் எவரிடமும் எடுத்துரைக்காதீர்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

மக்களின் கண்களை விட்டும் மறைந்து வாழ்ந்த இந்த மாதவரின் மகாத்மியத்தைப் பற்றிக் கேள்வியுற்று அவரைக் காண்பதற்காகவும், கண்டு அவரைத் தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டுவதற் காகவும் தொலைவையும் தொல்லையையும் ஒரு பொருட்டாகக் கருதாது நெடுந்தொலைப் பயணம் செய்து சிலர் கூஃபாவிற்கு வந்தார்கள். அவர்களில் ஒருவர் ஹரம் பின் ஹயான் என்பவர். அவர் தாம் அப் பெருந்தகையைச் சந்தித்த விவரத்தை இதோ கூறுகின்றார். நாமும் கேட்போம்.

''நான் உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்களைக் காண்பதற்காகக் கூஃபா சென்றேன். ஆங்கு புராத் நதியின் கரையோரத்தில் நல்ல திடகாத்திரமான உடலமைப்புடன் வட்ட முகமும் வழுக்கைத் தலையும் அடர்த்தியான தாடியும் உடையோராய்க் கம்பளி உடையணிந்த பெரியார் ஒருவர் 'உளூ' செய்து கொண்டிருப்பதைக் கண்டேன். அவர்களைப் பற்றி நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்த அடையாளங்களைக் கொண்டு அவர்கள்தாம் அப்பெரியாராக இருக்க வேண்டுமென்று திடமான முடிவுக்கு வந்து அவர்களை அண்மி அவர்களுக்கு 'சலாம்' உரைத்தேன். அவர்களும் அதற்கு பதிலுரைத்துச் சற்று நேரம் அமைதியாக இருந்தனர். பின்னர் அவர்கள் என்னை நோக்கி, 'இறைவன் தங்களுக்கு நீண்ட ஆயுளை நல்குவானாக!' என்று வாழ்த்தினர். அதன்பின் நான் அவர்களின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொள்ள எண்ணி என் கைகளை நீட்டினேன். ஆனால் அவர்களோ தங்களின் கைகளை மடக்கிக் கொண்டார்கள். இதன்பின் மீண்டும் அவர்கள் என்னை நோக்கி, 'இறைவன் தங்களுக்கு நீண்ட ஆயுளை நல்குவானாக!' என்று கூறி மீண்டும் என்னை வாழ்த்தினர். அதுகேட்ட நான் 'இறைவன் தங்களுக்குப் பேரருள் பாலிப்பானாக!' என்று இயம்பினேன். பின்னர் நான் அவர்களை நோக்கி அவர்களின் உடல் நலன் பற்றி விசாரித்தேன். விசாரித்து வாய் மூடுமுன் அவர்கள் இருந்த அவல நிலையைக் கண்டு என்னை அறியாமல் எனக்கு அழுகை வந்து வாய்விட்டு அலறிவிட்டேன். அதுகண்டு அவர்களும் அழுதார்கள். இவ்வாறு நாங்கள் இருவரும் சற்று நேரம் அழுதபின் அவர்கள் என்னை நோக்கி, 'ஹரம்பின் ஹயானே! இறைவன் தங்களுக்குப் பேரருள் பாலிப்பானாக! என்னைப்பற்றித் தங்களுக்கு அறிவித்தவர் யார்?' என்று வினவினர். அப்பொழுது நான் வியப்புக் கண்களுடன் அவர்களை நோக்கி, 'என்னைத் தாங்கள் முன்பின் அறிந்திராத போதிலும் என் பெயரையும் என் தந்தையின் பெயரையும் தங்களுக்கு அறிவித்தவர் யார்?' என்று வினவினேன். 'எல்லாம் வல்ல அல்லாஹ் அவற்றை எனக்கு அறிவித்தான். என்னுடைய ஆன்மா தங்களுடைய ஆன்மாவை அறிந்து கொண்டது. இறை நம்பிக்கை யாளர்களின் ஆன்மாக்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு உரையாடிக் கொள்கின்றன என்ற உண்மையைத் தாங்கள் அறிய மாட்டீர்களா, என்ன?' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

''பின்னர் நான் அவர்களைப் பார்த்து, 'பெருமானாரின் பொன் மொழிகள் சிலவற்றை எனக்குக் கற்றுத் தாருங்கள்!' என்று வினயமாக வேண்டி நின்றேன். அதற்கு அவர்கள், 'நான் அப்பெருமான் நபியைக் காணும் பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றேனில்லையே. அவர்களைக் கண்டோரைக் கண்டுள்ளேன். கண்டார் விண்டதைக் கேட்டுள்ளேன்.

அவற்றைத் தவிர எனக்கு வேறொன்றும் அதிகமாகத் தெரியாது. மேலும் நான் ஹதீதுக் கலையின் விற்பன்னனாக விளங்க வேண்டும் என்றோ, மார்க்கச் சட்ட திட்டங்களை வகுக்கும் மாபெரும் நிபுணனாக ஒளிர வேண்டுமென்றோ, சாடாது கோடாது நீதி வழங்கும் சான்றாண்மை மிகு நீதிபதியாகத் திகழ வேண்டுமென்றோ விழைந்தேனில்லை. நான் என் குறிக்கோளை எய்தப் பெற இன்னும் எவ்வளவோ முயற்சியாற்ற வேண்டியுள்ளது' எனக் கூறி இறைக் காதலில் தம்மை அழித்துக் கொள்வதே தம் குறிக்கோள் என்பதைக் கூறாமற் கூறினர்.

''அப்பொழுது நான் அவர்களை நோக்கி, 'அவ்விதமாயின் இறை திருவசனங்கள் சிலவற்றையாவது ஓதுங்கள். நான் என் செவிகுளிர, உடல் குளிர, உளம் குளிரக் கேட்டு மகிழ்கிறேன்' என்று கூறினேன். அப் பொழுது அவர்கள் என் கையைப் பிடித்துக் கொண்டு, 'அவூதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்' (எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டும் நான் இறைவனிடம் காவல் தேடுகின்றேன்) என்று ஓதியது தான் தாமதம், ஒரே அழுகையாக அழுதார்கள். அதன்பின், 'இறைவனே மிகப் பெரியவன். அவனுடைய திருவசனங்களே எல்லா வசனங்களையும் விட மேலா னவை' என்று கூறிய அவர்கள், 'நான் மனிதர்களையும், ஜின் களையும் என்னை வணங்குவதற்காகவேயன்றிப் படைக்கவில்லை' என்று துவங்கும் இறைவசனத்தை ஓதத் துவங்கி, 'அவன் சிறந்த அருளாளன்' என்று முடியும் திருவசனம் வரை ஓதி 'ஓ'வென்று அலறினர். அதுகண்டு நான் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று எண்ணினேன்.

''பின்னர் அவர்கள் என்னைப் பார்த்து, 'தாங்கள் இங்கு வரக் காரணம் யாது?' என்று வினவினர்.

''அதற்கு நான், 'தங்களின் அன்பிற்குப் பாத்திரமாகி, தங்களின் நட்பைப் பெற வேண்டும். அதன் மூலம் நல்லருள் வாய்க்கப் பெற்ற வேண்டும் என்று எண்ணியே நான் இங்கு வந்தேன்' என்று கூறினேன்.

''அப்பொழுது அவர்கள் என்னை நோக்கி, 'எவன் இறைவனை அறிந்தானோ அவன் அல்லாஹ்வின் மீதன்றி வேறு எதன் மீதும் அன்பு செலுத்தவோ அல்லாஹ்வுடனன்றி வேறு யாருடனும் நட்புக் கொண்டு மகிழவோ மாட்டான்' என்று இயம்பினர்.

''அதன்பின் நான் அவர்களை நோக்கி, 'நான் உளத்தில் என்றென்றும் பேணிப் பாதுகாத்துச் செயலாற்றும் வண்ணம் எனக்கு ஏதேனும் அறிவுரை நல்குங்கள்' என்று வேண்டினேன்.

''அதற்கு அவர்கள், 'தாங்கள் எப்பொழுதும் இறப்பைத் தங்களின் தலையணைக்குக் கீழே வைத்துக்கொண்டு படுத்துறங்குங்கள். விழித்தெழுந்ததும் மீண்டும் பேராசையில் உழலாதீர்கள். பாவங்களைச்

சிறிதாக எண்ணாதீர்கள். பாவங்களைச் சிறிதாக எண்ணுவது இறைவனைச் சிறிதாக எண்ணுவதாகும். அவ்விதம் எண்ணிப் பெரும் பாவியாகி விடாதீர்கள்'' என்று அருள் எச்சரிக்கை புரிந்தனர்.

''அப்பொழுது நான் அவர்களிடம், 'நான் எங்குப் போய்த் தங்கி வாழ வேண்டுமென்று தாங்கள் விரும்புகின்றீர்கள்?' என்று வினவினேன். 'சிரியா நாடு சென்று அங்குச் சீராக வாழுங்கள்' என்று அவர்கள் விடையிறுத்தனர். 'ஆங்குச் செல்லின் என் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கு என் செய்வேன்?' என்று மீண்டும் நான் அவர்களை வினவ, 'ஐயம் மிகுந்த உள்ளங்களுக்கு அறிவுரையால் யாதொரு பலனும் இல்லை' என்று அவர்கள் பெரிதும் வருத்தத்துடன் கூறினார்கள்.

''பின்னர் நான் அவர்களை எனக்கு அறிவுரை நல்குமாறு பெரிதும் வேண்டிக் கொண்டேன். அதற்கு ஒருவாறு இணங்கி அவர்கள் பின்வருமாறு பேசினார்கள்:

''ஹையானுடைய மகனே! தங்களின் தந்தை இறந்துவிட்டார். தாங்களும் ஒருநாள் இறக்கத்தான் போகின்றீர்கள். உலகில் பிறந்த அனைவரும் ஒரு நாள் இறப்பென்னும் பானத்தை அருந்தியே தீர வேண்டும். ஆதம் (அலை) அவர்கள் முதற்கொண்டு அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் ஈராக வந்த அனைத்து நபிமார்களும் இறப்பெய்தினர். அபூபக்ர் (ரலி) அவர்களும் இறப்பெய்தினார்கள். இவ்வாறு கூறிக் கொண்டே வந்த அவர்கள், 'ஆ! ஹையானுடைய மகனே! உமர் இப்னு கத்தாபும் இறந்துவிட்டார்' என்று பெருங் குரலெடுத்துக் கூறி, 'ஆ! உமரே!!' ஆ! உமரே!!' என்று அலறினார்கள். அதன்பின் அவர்கள் உமர் (ரலி) அவர்களின் ஆன்ம நலனிற்காக இறைவனிடம் இறைஞ்சினார்கள்.

''அவர்களின் இச்சொல் எனக்குப் பெரும் திடுக்கத்தையும் வியப்பையும் அளித்தது. 'இஸ்லாத்தின் இரண்டாவது கலீபாவான உமர் (ரலி) அவர்கள் உயிரோடல்லவோ இருக்கின்றனர்' என்று நான் கூறினேன். அதற்கு அவர்கள், 'உமர் (ரலி) அவர்களின் இறப்புபற்றிய செய்தியை எனக்கு இறைவன் இப்பொழுதுதான் அறிவித்தான்' என்று கூறிவிட்டு, 'தாங்களும் நானும் இறந்தவர்களைச் சேர்ந்தவர்களேயாவோம்' என்று கூறினர். பின்னர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது 'ஸலவாத்' ஓதி ஏதோ இறைஞ்சி விட்டு என்னை நோக்கி மேலும் பேசினார்கள்:

''ஹையானுடைய மகனே! திருக்குர்ஆனையும் அது கூறும் நேரிய வழியையும் தாங்கள் பின்பற்ற வேண்டும். எப்பொழுதும் இறப்பைப் பற்றிய எண்ணம் தங்களின் உள்ளத்தில் மிகைத்திருக்க வேண்டும். ஒரு

கணமேனும் அதனைத் தாங்கள் மறந்துவிடக் கூடாது. தாங்கள் மக்களுக்கு அறிவுரை பகர்ந்து கொண்டிருக்க வேண்டும். தங்களின் ஆன்ம நலனிற்காக வேண்டியும் பாடுபட வேண்டும். முஸ்லிம்களின் பெரும் பான்மைக் குழுவை விட்டும் தாங்கள் அப்பாற்பட்டுவிடின் தங்களை விட்டும் மதபக்தி நீங்கிவிடும். தாங்கள் நரகப் படுகுழியில் வீழவேண்டி ஏற்பட்டு விடும். அவ்விதம் ஆகாவண்ணம் இறைவன் தங்களைக் காத்தருள் புரிவானாக!') என்று கூறி எனக்குச் சில 'துஆ'க்களை (இறைஞ்சும் முறைகளை) சுற்றுத் தந்தனர்.

''அதன்பின் அவர்கள் விண்ணை நோக்கித் தம் தலையை உயர்த்தி, 'இறைவனே! இவர் என்னை உள்ளன்புடன் நேசிப்பதாகக் கூறுகிறார். அதன் காரணமாக என்னைச் சந்திக்க வந்திருப்பதாகவும் சொல்கிறார். இவரைச் சுவனம் புகச் செய்வாயாக! சுவனப் பூங்காவில் நானும் அவரும் சந்தித்து மகிழ அருள்கூர்வாயாக! குறைந்த வருவாயில் மனநிறைவுற்று, உடல் நலத்துடனும் நன்றி உணர்வுடனும் வாழ அவருக்குப் பேரருள் பாலிப்பாயாக!' என்று இறைஞ்சினர்.''

இவ்வாறு கூறி ஹரம் இப்னு ஹையான் பேச்சை முடித்ததும், ரபீ பின் கைஸம் என்பார் எழுந்து நின்று, ''கண்டேன், கண்டேன், நானும் அவர்களைக் கண் குளிரக் கண்டேன். அப்பொழுது அவர்கள் வைகறைத் தொழுகையைத் தொழுது கொண்டிருந்தார்கள். தொழுது முடித்ததும் அவர்கள் இறைவனைத் துதிப்பதில் ஈடுபட்டார்கள். ஈடுபட்ட அவர்கள் நண்பகல் வரை அவ்வாறே செய்து வந்தார்கள். பின்னர் நண்பகல் தொழுகையைத் தொழுது விட்டு மாலைத் தொழுகை வரையிலும் இறைவனைத் துதித்தார்கள். பின்னர் மாலைத் தொழுகையைத் தொழுது பொழுதடையும் நேரம் வரையில் இறைதுதியில் ஈடுபட்டிருந்தார்கள். பின்னர் பொழுதடைந்தபின் தொழுகையைத் தொழுதுவிட்டு இரவுத் தொழுகை வரையில் இறைவனைத் துதித்தபின் இரவுத் தொழுகையைத் தொழுது முடித்து வைகறை வரையிலும் இறைவனை வழுத்திக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு அவர்கள் மூன்று நாட்கள் தொடர்ச்சியாகச் செய்து கொண்டிருந்தனர். இந்த மூன்று நாட்களில் அவர்கள் உண்ணவோ, உறங்கவோ செய்யவில்லை நான்காவது நாள் சற்றுக் கண் அயர்ந்த பொழுது, அவர்கள் விரைவில் திடுக்குற்று விழித்தெழுந்து, 'இறை வனே! நான் கண் நிரம்ப உறங்குவதையும் வயிறு நிரம்ப உண்பதையும் விட்டு உன்னிடம் காவல் தேடுகின்றேன்' என்று இறைஞ்சினர். இது கண்ட நான் வியப்பு மீக்குற்று இம்மட்டும் எனக்குப் போதுமானது என்று எண்ணி அவ்விடத்தை விட்டும் அகன்றேன்'' என்று வாயார்ந்து கூறுகின்றார்.

ஆம்; அவர்களின் வணக்க முறை இவ்வாறுதான் இருந்தது. இதுமட்டுமல்லாது அவர்கள் ஓர் இரவு முழுவதும் 'கியாம்' என்னும்

நிற்கும் நிலையிலே நின்று இறைவனை வணங்கிக் கொண்டிருப்பார்கள். மற்றோர் இரவு முழுவதும் 'ருகூஉ' என்னும் குனிந்த நிலையிலே நின்று இறைவனை வணங்கிக் கொண்டிருப்பார்கள். வேறோர் இரவு தலையைத் தரையிலே வைத்து 'சுஜுது' செய்தவண்ணம் இறைவனை வணங்கிக் கொண்டிருப்பார்கள். இஃதன்றி அவர்கள் பகல் முழுவதும் நோன்பு நோற்கவும் குர்ஆனை ஓதவும் செய்வார்கள்.

ஒரு தடவை சிலர் அவர்களிடம் வந்து எவ்வாறு தொழுவது என்று வினவியபொழுது, ''நான் இரவின் துவக்கத்தில் என் தலையைத் தரையிலே வைத்து 'சுப்ஹான ரப்பியல் அஃலா' என்று கூறிக் கொண்டிருக்கும் பொழுதே வைகறையாகிவிட வேண்டும். ஏனெனில் நான் விரும்புவதெல்லாம் வானவர்களின் வணக்கம் போன்று என்னுடைய வணக்கமும் ஆக வேண்டும் என்பதேயாகும்'' என்று அவர்கள் விடை பகர்ந்தனர்.

வந்த அவர்கள் அத்துடன் அம்மாதவரை விடவில்லை ''உள்ளச்சத்துடன் தொழுவது எவ்வாறு?'' என்று அடுத்த கேள்வியை விடுத்தனர். ''ஈட்டியால் ஒருவனின் முதுகில் குத்திய போதினும் அவன் அதனை உணராத நிலையில் தொழுவதே உள்ளச்சத்துடன் தொழுவதாகும்'' என்று பதிலுரைத்தனர் அச்சான்றோர்.

பின்னர் அவர்கள் அப்பெரியாரை நோக்கி, ''தாங்கள் எவ்வாறு உள்ளீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''ஒருவன் விடிந்தெழுந்ததும் தான் பொழுதடையும் வரை உயிரோடிருப்பானா என்பதை அறியாதவனாகவும் அதே போன்று பொழுதடைந்த பின் மறுநாள் வைகறை வரையில் உயிரோடிருப்பானா என்பதை அறியாதவனாகவும் இருப்பின் அவன் எவ்வாறு இருப்பான்?'' என்று கூறி, கேள்வி கேட்டவர்களையே மடக்கினர் அவர்கள். அப்பொழுது அவர்கள், ''எல்லா மனிதர்களுடைய நிலையும் இதுதானே'' என்று கூறினர். அதுகேட்ட உவைஸ் (ரஹ்) அவர்கள் ''இதனை எத்தனை பேர்கள் உணர்கிறார்கள்?'' என்று வருத்தத்துடன் கூறினர்.

அதன்பின் அவர்கள் அம்மக்களை நோக்கி, ''செல்ல வேண்டிய தொலையோ அதிகமாக உள்ளது. அதற்குப் போதுமான தயாரிப்புகளை நான் இன்னும் செய்யவில்லையே என்றுதான் நான் வருந்திக் கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

ஒருதடவை சிலர் அவர்களிடம் வந்த பொழுது ''நீங்கள் இறைவனைக் காண விரும்புகிறீர்களா?'' என்று வினவினர்.

அதற்கு அவர்கள் 'ஆம்' என்று பதில் கூறியதும் ''அவ்விதமானால் ஏன் என்னிடம் வந்தீர்கள்?'' என்று உவைஸுல் கர்னீ (ரஹ்) அவர்கள் வினவினார்கள்.

அதற்கு, வந்தவர்கள் யாது பதில் கூறுவதென அறியாது விழித்த பொழுது ''நீங்கள் இறைவனைக் காண விரும்பவில்லையா? அவ் விதமானால் உங்களுக்கு என்னிடம் என்ன வேலை? சென்று வாருங்கள்'' என்று கூறினார்கள் அவர்கள்.

மற்றொரு நாள் சிலர் அவர்களிடம் வந்து தங்களுக்கு அறிவுரை பகருமாறு வேண்டியபொழுது அவர்கள், அவர்களுக்குப் பின்வருமாறு அறபோதம் வழங்கினர்.

''அல்லாஹ்வைத் தன் தோழனாகக் கொண்டவன் படைப்பினங் களுடன் தோழமை கொள்ளமாட்டான்.

''திருக்குர்ஆனை, உங்களை அல்லாஹ்வின் பாதையில் வழிகாட்டி அழைத்துச் செல்லும் கிள்ரு (அலை) போன்று கருதிக் கொள்ளுங்கள்.

''இரவானது வணங்குவதற்காகவே படைக்கப்பட்டிருக்கிறதே யொழிய உறங்குவதற்கல்ல என்பதை நினைவு கொள்ளுங்கள்.

''உலகைத் துறந்ததாகக் கூறிக் கொள்பவன் எதையேனும் தேடித் திரிவானாயின் துறவே அவனிடமிருந்து ஓடி விடுகிறது. துறவு என்பதன் பொருள் எதையும் தேடித் திரியாததேயாகும்.''

ஒரு நாள் அவர்களைக் காணவந்த ஒருவர் ''தாங்கள் ஏன் இவ்வளவு மெலிந்துள்ளீர்கள்? தங்களைப் பார்த்தால் நோயாளன் போன்றல்லவா தோன்றுகிறது?'' என்று கூறிய பொழுது, ''ஏன் இவ்வாறு கூறுகின்றீர்கள்? நான் நோயாளனாகக் கூடாது என்பது நியதியா, என்ன? நோயாளனுக்கும் எனக்கும் அதிகமான வேற்றுமை உண்டு. நோயாளன் உணவருந்து கின்றான். நான் உணவருந்துவதில்லை. அவன் உறங்கி ஓய்வு கொள் கின்றான். நான் உறக்கத்தையே வெறுத்து விட்டேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

நாளுக்கு நாள் அவர்களின் புகழ் கூஃபாவிலும் அதன் சூழலிலும் பரவி மக்கள் அவர்களைக் காண்பதற்காக அதிகமதிகமாக வரத் தொடுத்தார்கள். அப்பொழுது ஆஸிர் இப்னு ஜாபிர், அவர்களை நோக்கி, 'இஃதென்ன புதுமை! தங்களைப் பற்றிப் புதுப்புது செய்திகளெல்லாம் நகரில் பரவி வருகின்றனவே' என்று கூறிய பொழுது, ''அதற்கென்ன நான் செய்வது? ஒவ்வொருவருக்கும் அவரவரின் செயலுக்கான பலன் கிடைக்கும்'' என்று அவர்கள் பதிலிறுத்தனர்.

ஒரு தடவை ஆஸிர்பின் ஜாபிரும் அவர்களின் நண்பர்கள் சிலரும் அவர்களைக் காண வந்தனர். அப்பொழுது அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். தொழுது முடித்ததும் அவர்கள் வந்திருந்தவர்களை நோக்கி, ''நீங்கள் எனக்குத் தொந்தரவு செய்கின்றீர்கள். நானோ பலவீனன்; பல அலுவல்களை ஆற்ற வேண்டியவன். தாங்கள் என்னைக் காண வருவது நான் என்னுடைய அலுவல்களைச் செவ்வனே நிறைவேற்று வதற்குப் பெரிதும் இடையூறாக உள்ளது. ஆதலின் என்னை என் போக்கில் விட்டு விடுங்கள். இறைவன் உங்களுக்குப் பேரருள் பாலிப்பானாக!'' என்று கூறினார்கள். பின்னர் அவர்கள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. மீண்டும் பேசினார்கள்: ''நீங்கள் அவசியம் என்னை சந்திக்க விரும்பின் இரவுத் தொழுகைக்குப் பின் வரலாம். அப்பொழுது மூன்று விதமான மனிதர்கள் - 1) அறிவுள்ள இறை நம்பிக்கையாளர்கள், 2) அறிவற்ற இறை நம்பிக்கையாளர்கள், 3) நயவஞ்சகர்கள் ஆகியோர் என்னைக் காண வருகின்றார்கள். இவர்களை மழைக்கும் மரத்திற்கும் உவமானமாகக் கூறலாம். பசு மரத்தின் மீது மழை பெய்யின் அது தளிர்த்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் குலுங்குகின்றது; பட்ட மரமோ பாழ்பட்டு வீழ்கின்றது,'' என்று கூறி 'விசுவாசம் கொண்டோருக்கு அருளாகவும் பரிகாரமாகவும் உள்ளவற்றையே நாம் இந்தக் குர்ஆனில் இறக்கி யுள்ளோம். ஆனால் (இது) அக்கிரமக்காரர்களுக்கு இழப்பையேயன்றி (வேறொன்றையும்) அதிகரிப்பதில்லை' (17:82) என்ற இறை திருவசனத்தை எடுத்தோதினர்.

மற்றொரு தடவை சிலர் அவர்களைக் காண வந்த பொழுது, ''விண்ணகம், மண்ணகம் ஆகியவை அளவு நீங்கள் வணக்கம் நிகழ்த்திய போதினும் உங்களுக்கு இறை நம்பிக்கையில் அசைக்க முடியாத உறுதி ஏற்படாத வரையில் அவ்வணக்கம் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது'' என்று அவர்கள் கூறினர். அப்பொழுது வந்தவர்கள் அவர்களை நோக்கி, ''அந்த உள உறுதியை எவ்வாறு எய்தப் பெறுவது?'' என்று வினவிய காலை, ''அவனை வணங்கும் நேரத்தில் அவன் நினைவன்றி வேறொரு நினைவும் உங்களின் உள்ளத்தில் ஏற்பட நீங்கள் அனுமதிக்கக் கூடாது'' என்று கூறினர். மேலும் ''எவன் மூன்று பொருள்களின் மீது தன் உள்ளத்தைப் பதிய வைப்பானோ அவனுக்கு நரகம் அவனுடைய பிடரி நரம்பைவிட அண்மையிலாகிவிடும். அம்மூன்று பொருள்கள், உயரிய உணவு, உயரிய உடை, செல்வர்களின் தொடர்பு ஆகியவையாகும்'' என்று அவர்கள் எடுத்துரைத்தனர்.)

ஒருநாள் சிலர் அவர்களிடம் வந்து, ''முப்பதாண்டுகளாக ஒரு மனிதர் கஃபன் அணிந்தவராகப் புதைகுழியின் அருகே அமர்ந்து அழுது

கொண்டுள்ளார்'' என்று கூறினர். அதைக் கேட்ட அவர்கள், ''அப்படியா! நான் அவரைக் காண வேண்டும்'' என்று சொன்னார்கள். அவரிடம் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட பொழுது அவர் அலங்கோல நிலையில் அழுத வண்ணம் எலும்பும் தோலுமாய் இருப்பதைக் கண்டு, ''மனிதனே! இஃதென்ன விபரீதம்! கஃபனும் புதைகுழியும் சேர்ந்து உம்மை இறைவனை மறக்கவும் உமக்கு இறைவனை மறைக்கவும் செய்து விட்டனவே'' என்று இயம்பினர். அவர்களின் இச்சொல் அம்மனிதரின் உச்சந் தலையைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கியது. தாம் இதுகாறும் செய்த தவற்றினை அவர் அப்பொழுதுதான் உணர்ந்தார். அவருடைய உள்ளமெல்லாம் பதறியது. ''யா அல்லாஹ்'' என்று அலறிய வண்ணம் அடுத்த கணம் அப்புதை குழியின் மீது பிணமாய்க் கிடந்தார். சீர்மை மிகு அப்பெரியார் உரைத்த சில சொற்கள் அவருக்கு அறிவுத் தெளிவை நல்கி அவரை அந்நிலையில் ஆக்கிவிட்டது.

அண்ணலெம்பெருமானின் அருள் மணக்கும் திருவாயால் 'கைருத்தாபியீன் பி இஹ்ஸான்' என்று புகழ்ந்துரைக்கப்பட்ட இப் பெரியார், அண்ணலெம்' பெருமானைக் கண்ணால் காணாத போதிலும் அவர்கள் மீது அளவற்ற அன்பு செலுத்திய இம்மேதகை, அண்ணலெம் பெருமானைக் காணக் கூட மதீனமாநகர் செல்லாது, ஹஜ்ஜுக் கடனாற்றக் கூட மக்கமா நகர் போகாது* அன்னைக்குப் பணிவிடை செய்வதே அவற்றை விடப் பேரறம், பெருங் கடன் என்று கருதிய இப்பெருமகன், முராத் என்னும் கோத்திரத்துதித்த அம் என்பாரின் அருந்தவத்துத் திருமகன் உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் இறுதியாக இவ்வுலகு நீக்கும் காலமும் அண்மி வந்தது. இஸ்லாத்தில் மாபெரும் பிளவு ஏற்பட்டு, இஸ்லாமியப் பெருங்குடி மக்கள் இரண்டு பாசறைகளில் பிரிவுற்றிருந்த நேரத்தில் அதாவது ஹிஜ்ரி 48 வது ஆண்டில் ஸிப்பீன் என்ற இடத்தில் அலீ (ரலி) அவர்களுக்கும் முஆவியா (ரலி) அவர்களுக்கும் இடையே நடந்த போரில் இவர்கள் அலீ (ரலி) அவர்களின் பக்கல் சேர்ந்து வீரப்

---

* அன்னையின் இறப்பிற்குப்பின் 'ஹஜ்' செய்தனர் என்று கூறுவர். நோயுற்ற தம் அன்னையின் அனுமதி பெற்று அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் காண மதீனா வந்தனர் என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அங்கு இல்லாததனால் உடனே ஊர் திரும்பிவிட்டனர் என்றும் ஒரு வரலாறு உள்ளது.

பிற்காலத்தில் இவர்கள் மதீனா வந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கவிடத்தைத் தரிசிக்கச் சென்றக் கால், மயங்கிக் கீழே விழுந்து விட்டனர் என்றும் பின்னர் இவர்கள் உணர்வு பெற்ற பொழுது ''என்னை இங்கிருந்து அப்புறப்படுத்துங்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருமேனியைத் தன்னுள் புதைந்து கொண்ட மண்ணின் மீது இருக்க எனக்கு விருப்பமில்லை'' என்று கூறினார்கள் என்றும் இஹ்யாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் செய்து இறப்பெய்தி சுவனம் புகுந்தனர்.* இறைவனின் திருப்பெயரையே எப்பொழுதும் கூறிக் கொண்டிருந்த இவ்வான்றோர் இறை பாதையில் போர் செய்து தங்களின் இன்னுயிரை அறத்திற்காக, இறைவனுக்காகத் தியாகம் செய்தது, அவர்கள் வாழ்ந்தது போன்று இறந்தார்கள், இறந்தது போன்று வாழ்ந்தார்கள், அவர்களின் வாழ்வு போன்று இறப்பு இருந்தது, இறப்பு போன்று வாழ்வு மிளிர்ந்தது என்பதை உலகம் முழுவதும் பறை முழக்கிக் கொண்டுள்ளது.

---

* உமர் (ரலி) அவர்களின் ஆட்சியின் போது இவர்கள் ஆஸர் பைஜானில் இஸ்லாமிய அணியில் சேர்ந்து போரிட்டதாகவும் பின்னர் திரும்பி வருங்கால் நோயுற்று வழியில் இறந்ததாகவும் மற்றொரு வரலாறு கூறுகிறது. அவர்களை அடக்கி விட்டு பின்னர் அவர்களின் அடக்கவிடத்தை தரிசிக்கச் சென்ற பொழுது அதன் அடையாளமே அங்குக் காணப்படவில்லை என்று கூறப்படுகிறது.

## 3. ஹஸன் பஸரீ (ரஹ்)

''வாரும்; கானகம் சென்று வருவோம்'' என்று தமக்குப் பழக்கமான இரத்தின வணிகர் ஒருவரை அழைத்தார் ரூம் நாட்டு அமைச்சர் ஒருவர். ''எதற்காக அழைக்கின்றீர்கள்?'' என்று அவர் கேட்கவில்லை. கானகத்திற்கு வேட்டையாடத் தானே செல்வோம் என்று எண்ணிக் கொண்டார் அவர். ஆனால் அவர் அங்குச் சென்ற காலை அவர் கண்ட காட்சியோ அவரை வியப்புக் கடலில் ஆழ்த்தியது. கானகத்தின் நடுவே இருந்த ஒரு பட்டுக் கூடாரத்தை இராணுவ வீரர்கள் அணி அணியாகச் சென்று ஏதேதோ கூறியவண்ணம் வலம் சுற்றி வந்து நின்றார்கள். அவர்கள் சுற்றி முடித்ததும் நீள அங்கி அணிந்து அறிஞர்கள் போன்று தோற்றம் வழங்கிய சிலர் அவர்களைப் போன்று ஏதேதோ கூறிய வண்ணம் அப்பட்டுக் கூடாரத்தை வலம் சுற்றி வந்தார்கள். அதன் பின் இருநூறு பேரழகிகள் கைகளிலே நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட பொற்பேழைகளை ஏந்தியவாறு ஏதேதோ கூறிக் கொண்டு அதனை வலம் சுற்றி வந்தார்கள். இறுதியாக அந்நாட்டு மன்னரும் அமைச்சர்களும் அக்கூடாரத்தை வலம் சுற்றி வந்த பின்னர் அதற்குள் நுழைந்து சற்று நேரத்திற்குப்பின் வெளிப்போந்தனர்.

இவற்றையெல்லாம் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்த அந்த இரத்தின வணிகர், அமைச்சர் தம்மிடம் வந்ததும் அவரை நோக்கி, ''நான் காண்பது என்ன, கனவா, நனவா?'' என்று வினவினார். ''கன வல்ல; நனவு தான். உலக வாழ்வு ஒரு கனவு என்பதைக் காட்டக் கூடிய ஓர் உண்மை நிகழ்ச்சி'' என்று மறுமொழி பகர்ந்தார் அமைச்சர். ''இதைப் பற்றிச் சற்று விளக்கமாக எனக்கு எடுத்துரையுங்கள்'' என்று இரத்தின வணிகர் வேண்ட, அமைச்சர் கூறினார்;

''வணிகரே! சில்லாண்டுகளுக்கு முன்னர் எங்கள் நாட்டு மாமன்னரின் அன்புத் திருமகன் நோய்வாய்ப்பட்டு இதே நாளில் இறப்பெய்தினார். அவரின் அடக்க இடம் அந்தப் பட்டுக் கூடாரத்திற்குள் உள்ளது. ஆண்டுதோறும் இந்நாளில் நாங்கள் அனைவரும் எங்களின்

அன்புக் காணிக்கைகளை அவருக்குச் செலுத்துவதற்காக இங்கு வருகிறோம். முதலில் அப்பட்டுக் கூடாரத்தை வலம் சுற்றி வர வேண்டியவர்கள் இராணுவ வீரர்கள். அவர்கள் அவ்வாறு செய்ததைச் சற்றுமுன் நீர் பார்த்தீர். 'இளவரசே! தங்களின் இறப்பை எங்களின் வாளின் வலிமையால் தடுத்திருக்க இயலுமாயின் நாங்கள் அவ்வாறே செய்திருப்போம். ஆனால் தங்களுக்கு இறப்பை நல்கியவனோடு எங்களால் போராட இயலுமா?' என்று அவர்கள் கூறுவார்கள். அடுத்து அதனை வலம் வர வேண்டியவர்கள் அறிஞர்களாவர். நீண்ட அங்கியை அணிந்த அவர்கள் அதன்பின் அவ்வாறு செய்ததையும் நீர் கண்டீர். 'இளங்கோவே! தங்களின் இறப்பை எங்களின் அறிவால் தடுத்து நிறுத்த இயலுமாயின் நாங்கள் அவ்வாறே செய்திருப்போம். எனினும் அதன்முன் எங்களின் அறிவு எம்மாத்திரம்' என்று அவர்கள் இயம்பி ஆங்கிருந்தும் அகல்வர். பின்னர் அதனைப் பேரழகிகள் வலம் வந்ததையும் நீர் கண்ணுற்றீர்; அவர்களும் 'அரசிளங்குமர! தங்களின் மரணத்தைப் பொன்னாலும் மணியாலும் தடுத்து நிறுத்த இயலும் என்றிருப்பின் நாங்கள் அவ்வாறே செய்திருப்போம். மரணத்தின் முன் பொன்னும் மணியும் என் செய்யும்?'' என்று கூறிச் செல்வார்கள். இறுதியாக எங்களின் மாமன்னரும் அமைச்சர் குழாமும் அதனை வலம் வந்து கூடாரத்திற்குள் நுழைந்ததையும் நீர் பார்த்தீர். ஆங்குச் சென்ற எங்களின் மாமன்னர், 'என் அருந்தவத்து மைந்த! என் படையணி, அறிஞர் குழாம், அமைச்சர் குழு, பொன், வெள்ளி ஆகிய அனைத்தாலும் உன்னுடைய உயிரை எமனின் கையிலிருந்து மீட்க இயன்றிருக்குமாயின் அவ்வாறு செய்திருப்பேன். அவையெல்லாம் இறப்பின் முன் பயனற்றுப் போயினவே. அன்று இறைவன் எழுதியதை அழித்து எழுதுபவர் இன்று உலகில் எவர் உளார்? ஆகவே நடக்க வேண்டியது நடந்து விட்டது. நீ அமைதியாகத் துயில் கொள். நாங்கள் அடுத்த ஆண்டு வருகிறோம்'' என்று கூறிவிட்டுத் திரும்புவார்.''

இவ்வாறு அமைச்சர் கூறி முடித்ததும் அந்த இரத்தின வணிகரின் தலை சுழலத் துவங்கியது. பல கோடி எண்ணங்கள் அவரின் உள்ளக் கோட்டையை முற்றுகையிட்டன. இவ்வுலக வாழ்வு அனைத்தும் ஒரு கனவே என்பதை அவர் நன்கு விளங்கினார். இறைவனைத் தவிர உள்ள அனைத்தும் அழியக் கூடியனவே என்பதை அவர் நன்கு உணர்ந்தார். அழிவில்லா இறைவனை ஒதுக்கித் தள்ளி விட்டு அழியும் பொருள்களை விரட்டிச் செல்வது, நீரென நம்பிக் கானலை விரட்டிச் செல்வதேயாகும் என்று அவர் முடிவுக்கு வந்தார். இதன்பின் கையிலிருந்த நவமணிகளையெல்லாம் வாங்குவோர் கேட்ட விலைக்கு விற்று விட்டுப் பஸரா திரும்பிய அவர் வாணிபத்தை விட்டொழித்து இறைத் தியானத்தில்

ஈடுபடலானார்; இனி எக்காலத்திலும் உலக ஆசாபாசங்களில் உழல்வதில்லை என்று உறுதி பூண்டார். துவக்கத்தில் ஹஸன் லுஃலுவிய்யி* என்று அழைக்கப்பட்ட அவர் சிறிது காலத்தில் ஷெய்குல் மஷாயிஹ், ஸையிதுல் ஒளலியா ஹஸன் பஸரீ என்று அழைக்கப்படலானார். இந்த ஹஸன் பஸரீ என்பவர் யார்?

'அல்லாஹ்வின் வாள்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களால் புகழப்பட்ட காலித் (ரலி) அவர்கள் இராக் நாட்டில் போர் செய்து கொண்டிருந்த காலை மைஸான் என்ற இடத்தில் சிறை பிடிக்கப்பட்டு மதீனா கொணரப்பட்டவர்களில் ஹஸீப் என்பாரும் ஒருவர். ஸைத் இப்னு தாபித்தின் அடிமையாகப் பன்னெடுங் காலம் பணியாற்றிய அவர் பின்னர் விடுதலை வழங்கப்பட்டார். அவர் அடிமையாக இருந்த காலத்தில் அவருக்கும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமை மனைவியார் உம்முஸல்மாவிடம் அடிமையாகப் பணியாற்றி வந்த உம்முல் மஹ்ராவின் என்ற பெண்மணிக்கும் திருமணம் நிகழ்ந்தது. அவர்கள் இருவரும் புரிந்த அருந்தவப் பயனாக ஹிஜ்ரி 21ஆம் ஆண்டு ஷஃபான் திங்கள் 17 ஆம் நாள் வைகறையில் அவர்களுக்கு அழகே உருவெடுத்தாற் போன்று ஓர் ஆண் மகவு பிறந்தது. பெற்ற மகவைத் தம் அன்புக் கரங்களில் ஏந்தி உமர் (ரலி) அவர்களின் திருமுன் கொண்டு வந்து அவர்களின் மடிமீது வைத்தார் தந்தை ஹஸீப். குழந்தையின் அழகுத் திருமுகமும் அங்க அமைப்புகளும் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. 'ஸம்மூஹு ஹஸனன் ஃபஇன்னஹு ஹஸனுல் வஜ்ஹி' (இவரின் முகம் எழிலுடன் இலங்குவதால் இவருக்கு எழிலழகர் எனப் பெயரிடுங்கள்) என்று அவர்கள் கூறினார்கள். அக்கணத்திலிருந்து அவர்களின் திருப்பெயர் ஹஸன், ஹஸன் என ஒலிக்கத் துவங்கியது. பின்னர் அவர்கள் பஸராவில் வாழத் துவங்கிய காலத்திலிருந்து அவர்களின் அழகுசால் நற்பெயர் ஹஸன் பஸரீ என்று முழங்கத் துவங்கியது.**

இதன்பின் ஹஸன் (ரஹ்) அவர்களின் அறிவும் பண்பும் நாளொரு மேனியாக வளரத் துவங்கின. பிற்காலத்தில் இஸ்லாத்தின் மாபெரும் இமாமாக விளங்கிய இவர்களைப் பற்றி ஸுஹ்ரீ (ரஹ்) அவர்கள் கூறும் பொழுது ''இன்று இஸ்லாமிய உலகில் நான்கே நான்கு அறிஞர்களே

---

* இதன் பொருள் இரத்தின வணிகர் என்பதாகும்.

** அவர்கள் இளமையில் தம் கழுத்திலிருந்த நல்லவரைக் குடித்திருப்பதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், அதிலிருந்து அவர் எவ்வளவு அருந்தினாரோ அவ்வளவு ஞானம் பெறுவார் என வாழ்த்தியதாக ஒரு வரலாறு உள்ளது. ஆனால் அதற்குப் போதிய ஆதாரம் இல்லை.

உள்ளனர். அவர்களில் ஒருவர் மதீனாவில் வாழும் இப்னு முஸையபிப், மற்றொருவர் பஸராவில் வாழும் ஹஸன், வேறொருவர் சிரியாவில் வாழும் மக்ஹூல், பிறிதொருவர் கூஃபாவில் வாழும் ஷஃபி' என்று கூறினர். இத்தகு மாண்பின் காரணமாகவே இவர்கள் இஸ்லாத்தின் பல்வேறு பிரிவினரும் தங்களின் முழு முதல் தலைவராகக் கருதும் பெரும் பேற்றினைப் பெற்று விளங்குகிறார்கள். சூஃபிகள் இவர்களை இன்றும் தங்களின் முன்னோடியாகக் கருதிக் கௌரவிக்கின்றார்கள். சுன்னத் வல்ஜமா அத்தார்கள் இவர்களின் கருத்துக்களுக்கு இன்னும் பெருமதிப்பு அளித்து வருகின்றார்கள். முஃதஸிலாக்களும் தங்களில் ஒருவராக அவர்களைக் கருதிப் போற்றாதிருந்ததில்லை.

இவ்வாறு எல்லோராலும் மதிக்கப் பெறும் பேற்றினைப் பெற்ற இந்நல்லார் தங்களின் வாணாளில் ஒரு நூற்று முப்பது நபித் தோழர்களைச் சந்தித்து அளவளாவிய பெறற்கரிய பேற்றினையும் பெற்றுள்ளார்கள். அவர்களில் எழுபது பேர் பத்ருப் போர்க்களத்திலே கலந்து கொண்டு இறைவனுக்காக, இறைமார்க்கத்திற்காகத் தம் இன்னுயிரையும் தியாகம் செய்ய முன் வந்த சிறப்புமிகு நபித் தோழராவர். எல்லாவற்றிற்கும் மேலாக எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்பேரர் ஹஸன் (ரலி) அவர்களின் கரம் பிடித்துத் தீட்சை பெற்ற ஹஸனாகவும் இவர்கள் விளங்கினார்கள்.*

இவர்கள் தங்களின் வாணாளில் எழுபதாண்டுகளாக எப்பொழுதும் 'உளூ'வோடு இருப்பதுதான் வழக்கமாக இருந்து வந்தது. இவர்கள் தனிமையிலே இன்பம் கண்டார்கள். உலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு குறிக்கோளை எய்த முயற்சியாற்றும்பொழுது இவர்களுடைய குறிக்கோளோ இறைவனை எய்தப் பெறுவதாகவே இருந்தது. அதற்காகவே அவர்கள் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வணக்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். இரவுத் தொழுகைக்காகச் செய்யும் 'உளூ'வோடு வைகறைத் தொழுகையையும் தொழுது முடிக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்த இவர்கள், ஒவ்வோர் இரவும் 150 ரகஅத்துகள் தொழவும் 3000 ஆயவாத்துகள் ஓதவும் செய்து வந்தார்கள். இதுவே இவர்கள் எவரினும் சிறந்து விளங்குவதற்கு மூலகாரணமாய் இருந்து வந்தது.

எளிமையும், தாழ்மையும் அவர்கள் ஒருங்கே அமையப் பெற்றிருந் தனர். அவர்கள் கானகத்தின் நடுவிலோ, கடல் அலையின் மீதிலோ எங்கு அமர்ந்திருந்தபோதினும் அல்லாஹ்வின் மீது அவர்களுக்கிருந்த அச்சத்தின் காரணமாக ஒரு மாபெரும் அரசனின் முன் வீற்றிருப்பது போன்று தலை கவிழ்ந்தே வீற்றிருப்பார்கள். எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனை அவர்களின் உள்ளத்தைக் கௌவிக் கொண்டிருக்கும். அவர்களின் உள்ளத்தில் மறுமையைப் பற்றிய எண்ணம் மிகைத் திருந்ததால் அவர்கள் நாற்பதாண்டுகளாகச் சிரித்ததுமில்லை. இளமை யில் அவர்கள் செய்த ஒரு சிறு பாவச் செயல் அவர்களின் மனத்தை உறுத்திக் கொண்டேயிருந்தது. எனவே புதிதாகச் சட்டை தைக்குந்தோ றெல்லாம் அவர்கள் அத்தவற்றினை அந்தச் சட்டையின் கழுத்தோரத்தில் எழுதிவைத்து அதனை அணியும் பொழுதெல்லாம் அதைப் பார்த்து அழுவர்.

அவர்களைப் பற்றி இதோ ஒருவர் கூறுகின்றார். நாமும் கேட்போம்.

''நான் அவர்களைப் பார்த்த பொழுதெல்லாம் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவன் அமர்ந்திருப்பது போன்றே அமர்ந்திருந்தார்கள். அவர்கள் வாய் மூடி இருப்பின் நரக நெருப்பு அவர்களின்முன் நாக்கு நீட்டி எரிந்து கொண்டிருக்கிறதோ, அதன் காரணமாகத்தான் அவர்கள் இவ்வாறு கவலை தோய்ந்த முகத்துடன் வீற்றிருக்கின்றனரோ என்று தோன்றும். அவர்கள் அளவுக்கதிகமாக அஞ்சி நடுங்குவதைப் பற்றி எவரேனும் அவர்களைக் குறை கூறின் 'இறைவன் நான் செய்த பாவங்களுக்கு என்னைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ செய்யாது 'போ! உன்னை நான் மன்னித்து விட்டேன்' என்று என்னிடம் கூறிவிடுவான் என்று நீங்கள் எனக்கு உத்திரவாதம் அளிக்கின்றீர்களா?' என்று அவர்களை அவர்கள் வினவுவார்கள்.''

அவர்கள் தங்களை மாபெரும் பாவி என்றே எண்ணி வந்தார்கள். 'ஐயோ! எனைப்போலும் மாபெரும் பாவி இவ்வகிலத்தில் எங்குமில்லையே' என்பதே அவர்களின் அழுகைப் பாட்டாக இருந்து வந்தது. ஒரு தடவை பஸராவில் மழை பெய்யாது கடும் பஞ்சம் ஏற்பட்ட காலை மக்களெல்லாம் நகருக்கு வெளியிலுள்ள அகண்ட வெளிக்குச் சென்று இறைவனிடம் கண்ணீருடனும் கம்பலையுடனும் மழை வேண்டி இறைஞ்சினர். அதன்பின் மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி, மேடை மீதேறி சொற்பொழிவாற்றிய இம்மேதை ஆங்குக் குழுமி இருந்த மக்களை நோக்கி, ''மக்களே! நாம் இறைவனிடம் எவ்வளவோ அழுது கெஞ்சி மழை வேண்டி இறைஞ்சினும் இறைவன் அருள் கூர்ந்து மழையைப் பொழிய வைக்கவில்லையாயின் இங்கு எவனோ ஒரு பாவி

இருக்கிறான்; அவன் இந்த ஹஸனாகத்தான் இருப்பான் என்று எண்ணி என்னை இவ்வூரை விட்டும் வெளியேற்றி விடுங்கள்'' என்று கூறினர்.

''ஒருவன் வெளியில் செல்லுங்கால் வழியில் எவரைக் காணினும் அவர் தன்னைவிட மேலானவர் என்று எண்ணிக் கொள்வதே உண்மையான பணிவாகும்'' என்று கூறிய அவர்கள், ஒரு தடவை ஒரு நாயைப் பார்த்து, ''இறைவனே! இந்த நாயின் பொருட்டு என் இறைஞ்சுதலை ஏற்று என்னை ஆட்கொள்வாயாக!'' என்று பிரார்த்தித்தார்கள். அது கண்டு பெரிதும் வியப்புற்ற ஒரு மனிதர் அவர்களை நோக்கி, ''தாங்கள் மேலானவர்களா? அந்த நாய் மேலானதா?'' என்று வினவ, ''இறை தண்டனையிலிருந்து நான் ஈடேற்றம் பெற்றுவிடின் நானே அந்நாயினும் மேலானவன். இல்லையெனில் அல்லாஹ்வின்மீது ஆணையாகக் கூறுகிறேன். என்னைப் போன்ற நூறு ஹஸன்களைவிட அந்த நாயே மேலானது'' என்று விடையிறுத்தனர்.

மேலும் அவர்கள் நாயைப் பற்றிக் கூறும்பொழுது ''நாயிடம் பத்து நற்பண்புகள் இருக்கின்றன. அவை இறை நம்பிக்கையாளனிடம் நீங்காது இடம் பெற்றிருக்க வேண்டும். அவையாவன:

1. அது பசித்திருக்கும். பசித்திருத்தல் நல்லோர்களின் (ஸாலிஹீன்களின்) நற்பண்பாகும்.

2. அதற்குத் தங்குவதற்கென குறிப்பிட்ட ஓர் இடம் இராது. இது இறையாதரவு (தவக்குல்) வைத்தவர்களின் அடையாளமாகும்.

3. அது இரவில் சிறிது நேரமே தூங்கும். இது இறைகாதலர்களின் நற்பண்பாகும்.

4. அது செத்தால் அனந்தரம் கொள்ளும் பொருள் அதனிடம் கிடையாது. இது துறவிகளின் அடையாளமாகும்.

5. அதனுடைய எசமானன் அதனை எத்தனை தடவை அடித்த போதிலும் அது அவனை விட்டு அகலாது. இது உண்மையான முரீது (ஆன்மீக மாணவர்)களின் வழக்கமாகும்.

6. பூமியில் அது தாழ்ந்த இடத்தைப் பொருத்திக் கொண்டு அதில் படுத்துக் கொள்ளும். இது தாழ்மையுடையோரின் நல்லியல்பாகும்.

7. அதனுடைய இடத்தை வேறொன்று வந்து ஆக்கிரமித்துக் கொளின் அது வேறோர் இடத்தில் போய்ப் படுத்துக் கொள்ளும். இது இறைநாட்டத்தைப் பொருந்திக் கொள்வோரின் நற்குணமாகும்.

8. அதனை நாம் எத்தனை தடவை விரட்டியடித்த பின்னும் அதன்முன் ஒரு ரொட்டியைக் காட்டின் அது நம்பால் வருமே ஒழிய வினயத்துடன் வாராதிராது. இது பக்திமான்களின் நற்பண்பாகும்.

9. உணவைக் கண்டால் அது தொலைவில் அமர்ந்து வழி பார்த்துக் கொண்டிருக்கும். இது ஏழை (மிஸ்கீன்)களுடைய நல்லியல்பாகும்.

10. அது ஓரிடத்தை விட்டுக் கிளம்பி விட்டால் மீண்டும் அவ்விடத்தைத் திரும்பிப் பாராது. இது விசாரமுடையவர்களின் குணமாகும்'' என்று அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

பிறர் துன்பம் காணச் சகியாத அவர்கள் அத்துன்பம் நுகர்பவர் தாமாக இருக்கக் கூடாதா என்று எண்ணுவார்கள். எண்ணுவதோடு மட்டுமல்லாது வாய்விட்டுச் சொல்லவும் செய்வார்கள். ஒருநாள் ஒருவர் அழுது கொண்டிருப்பதைக் கண்ட அவர்கள் அவரை நோக்கி, ''ஏன் அழுகின்றீர்?'' என்று வினவினர். ''நான் முகம்மது கஃபுக் குறுலீ (ரஹ்) அவர்களின் சொற்பொழிவைச் சற்றுமுன் கேட்டு வந்தேன். இறை நம்பிக்கையாளர்களில் ஒருவன் தன் பவம் காரணமாகப் பல்லாண்டுகளாக நரக நெருப்பில் கிடந்து துன்புறுவான்' என்று அவர்கள் கூறினர். அதைக் கேட்டதும் அது நானாக இருக்குமோ என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டு அழுகை, அழுகையாய் வருகிறது'' என்று சொன்னார். இச்சொற்கள் ஹஸன் (ரஹ்) அவர்களின் செவிப்பட்டதும், ''இறைவனே! அது ஒருவேளை அவராகவே இருந்த போதினும் அல்லது வேறு எவராகவோ இருந்தபோதினும் அவருக்குப் பதிலாக என்னை ஆயிரம் ஆண்டுகளேயாயினும் நரகத்தில் தூக்கி எறி. நான் மனமுவந்து அதில் கிடந்து உழல்கின்றேன். அவர் மீட்சி பெறட்டும்'' என்று இறைஞ்சினார்கள்.

மற்றொரு நாள் அவர்களின் திருமுன்னர் அண்ணலெம்பெருமான் அவர்கள் அருளிச் செய்த திருவாய்மொழி ஒன்றை, அதாவது, ''என்னைப் பின்பற்றியவர்களில் பாவிகளாயுள்ள அனைவரும் நரக நெருப்பிலிருந்து மீட்சி பெற்று எண்பது ஆண்டுகள் சென்றபின் இறுதியாக ஒரு மனிதன் அதிலிருந்தும் மீட்சி பெறுவான். அவன் பெயர் ஹன்னாது ஆகும்'' என்பதை ஒருவர் சொன்ன போது, அது கேட்ட இவர்கள், ''அந்த ஹன்னாது இந்த ஹஸனாக இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்'' என்று அழுகுரலில் கூறினார்கள்.

ஓரிரவு இவர்கள் தங்களின் இல்லத்தில் அமர்ந்து அழுது கொண்டிருந்ததைக் கண்ட மக்கள் இவர்களிடம் வந்து, ''ஏன் அழுகின்றீர்கள்?'' என்று வினவியபொழுது, ''இறைவன் உன் பவம் பொறுக்க இயலாது என்று இந்த ஹஸனிடம் கூறிவிடின் இவன் என் செய்வான் என்ற எண்ணம் மிகைத்ததன் காரணமாக நான் அழுகின்றேன்'' என்று இவர்கள் பதிலுரைத்தார்கள்.

மற்றோர் இரவு இவர்கள் இவ்வாறு அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஒருவர் இதே கேள்வியை அவர்களிடம் விடுத்த பொழுது, ''நான் இன்று ஏதேனும் பாவம் செய்து விட்டேனோ? இன்று ஏதேனும் தீய சொல் என் வாயிலிருந்தும் வெளி வந்து விட்டதோ? அதன் காரணமாக இறைவன் தன் திருச் சமூகத்திலிருந்து என்னை விரட்டியடித்து விடுவானோ? என்ற உள்ளச்சத்தின் காரணமாக என் கண்கள் அழுது கண்ணீர் வடிக்கின்றன'' என்று இவர்கள் பதில் கூறினார்கள்.

இவ்வாறு அவர்கள் ஒரு தடவை தங்கள் இல்லத்தின் மேல்மாடியிலுள்ள வணக்க இடத்தில் அமர்ந்து அழுது கொண்டிருந்தக்கால் அவர்களின் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீர் தெருவில் சென்ற ஒருவரின் முகத்தில் தெறித்து விழுந்தது. அப்பொழுது அவர் அது ஏதேனும் அசுத்த நீராக இருக்குமோ என்று கூறியது இவர்களின் செவிப்பட்டதும் இவர்கள் அவரை நோக்கி, ''சகோதரரே! அது ஒரு பாவியுடைய கண்ணீர்த் துளியாதலின் அது விழுந்த இடத்தைத் தண்ணீரால் கழுவித் தூய்மைப்படுத்தி விடுங்கள்'' என்று கூறினர்.

ஒருவர் அவர்களைக் காண்பதற்காக அவர்களின் இல்லத்திற்கு வந்த பொழுது அவர்கள் ஆங்குக் காணப்படவில்லை. ஆனால் அவர்கள் அமரும் இடத்தில் ஈரமாயிருப்பதைக் கண்டு, 'இஃது என்ன ஈரம்?' என்று அவர் அவர்களின் பணிப்பெண்ணை வினவியபொழுது, ''நான் சற்று முன் அடுப்பு மூட்டினேன். அதைப் பார்த்து அவர்கள் நரக நெருப்பைப் பற்றி எண்ணிக் கொண்டார்களோ என்னவோ கண்ணீர் விட்டு அழுதார்கள். அதனால் ஏற்பட்ட ஈரம்தான் அது'' என்று பதிலிறுத்தாள் அவள். அது கேட்டு வந்தவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

ஒருநாள், இறந்த ஒருவரை மண்ணறையில் அடக்கி முடிந்தபின் மற்றவர்களெல்லாம் திரும்பிச் சென்ற காலை இவர்கள் மட்டும் அவ்வடக்க இடத்தின் அருகில் அமர்ந்து அழத்துவங்கி விட்டார்கள். அது கண்ட மக்கள் அவர்களை நோக்கி, ''ஏன் அழுகின்றீர்கள்?'' என்று வினவியபொழுது ''இம்மையின் முடிவும் இப்புதைகுழியேயாகும். மறுமையின் துவக்கமும் இப்புதை குழியேயாகும். 'புதைகுழியானது மறுமையின் தங்குமிடங்களில் ஒன்றாகும்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களும் நவின்றுள்ளார்கள். எனவே இம்மையின் முடிவு இதுவாக இருக்கும்பொழுது நீங்கள் இவ்வுலகில் எதைக்கொண்டு பெருமையுறுகிறீர்கள்? மறுமையின் துவக்கம் இதுவாக இருக்கும் பொழுது நீங்கள் எதைக்கொண்டு அச்சம் தீர்ந்தவர்களாயுள்ளீர்கள்?'' என வினவினர். அது கேட்டு ஆங்குக் குழுமி இருந்த மக்கள் அனைவரும் 'கோ'வென்று அழுதுவிட்டார்கள்.

பர்ஸத் என்பவரின் மனைவியின் மயானச் சடங்கில் அவர்கள் கலந்து கொண்ட பொழுது அவளை நல்லடக்கம் செய்து முடிந்தபின் அவர்கள் அவரை நோக்கி, ''நீர் இந்நாளுக்காக எதனைத் தயார் செய்து வைத்துள்ளீர்?'' என்று வினவினர். அதற்கு அவர், ''லாஇலாஹ இல்லல்லாஹ'' என்ற கலிமாவை எண்பது ஆண்டுகளாகத் தயார்ப்படுத்தி வைத்துள்ளேன்'' என்று பதில் கூறினார். இவ்வாறு கூறிவிட்டு அவர் அவள் மீது சில இரங்கற்பாக்களைப் பாடினார். அதுகேட்டு ஆங்குக் குழுமி இருந்த அனைவரும் அழுது கண்ணீர் வடித்தார்கள்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களிடம் வந்து தம் மகள் இரண்டாண்டுகளாக அழுது கொண்டிருப்பதாகவும், அதன் காரணமாக அவளுக்குக் கண்ணொளி மங்கிப் போகுமோ என்று தாம் கவலையுறுவதாகவும், எனவே அவளை வந்து பார்த்து அவளுக்கு அறிவுரை கூறி அவளின் அழுகையை நிறுத்த வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். அவரின் அவ்வேண்டுகோளுக்கிணங்கி அவரின் இல்லம் சென்ற அவர்கள் அவளை அணுகி அவள் அழுவதற்கான காரணத்தை வினவினர். அதற்கு அவள், ''நான் இறை காதலில் மூழ்கி அழுது கொண்டுள்ளேன். அவனுடைய திருக்காட்சியை நான் காணப்பெறின், இந்த இரு கண்களென்ன, ஓராயிரம் கண்கள் ஒளி இழந்து போனாலென்ன? இல்லையெனில், இக்கண்கள் இருந்துமென்ன? இல்லாதொழிந்துமென்ன?'' என்று கூறினாள். அவளின் இப்பதில் அவர்களுக்குப் பேரதிர்ச்சியை அளித்தது. சிறு அறிவுரை பகரச்சென்ற அவர்கள் மாபெரும் அறிவுரை பெற்றுத் திரும்பினார்கள்.

ஒருநாள் இஸ்ஹாக் இப்னு மாலிக் என்பவரின் மனைவி இவர்களை அணுகி, தான் தன் கணவர்மீது அளவற்ற அன்பு செலுத்துவதாகவும், எனினும் அவர் தன்னைப் புறக்கணித்துத் தன்மீது அநியாயம் செய்வதாகவும் கூறினாள். அப்பொழுது அவளுடைய உடல் சரியாக மூடப்படாதிருப்பதைக் கண்ட அவர்கள் உடலை ஒழுங்காக மூடிக்கொண்டு பேசுமாறு கூற, ''நான் என் கணவர் மீதுள்ள அளவற்ற அன்பின் காரணமாக, என் உடல் சரியாக மூடப்படாமல் இருப்பது கூடத் தெரியாது உணர்வற்று உள்ளேன். ஆனால் தாங்களோ இறை காதலிலே மூழ்கி இருப்பவர்கள் என்று கூறப்படுகிறது. அவ்விதமாயின் என் உடலில் சில பகுதி சரியாக மூடப்படாதிருப்பது தங்களின் கண்களுக்கு எவ்வாறு தென்பட்டது'' என்று வினவினாள். அவளின் இக்கேள்வி, அவர்களுக்கு உணர்வூட்டும் இடிமொழிகளாக அமைந்தன.

வேறொரு நாள் இவர்கள் சேறும் சகதியும் நிறைந்த பாதை வழியே சென்று கொண்டிருந்த பொழுது, குடிவெறியில் சென்ற ஒருவன் அதில்

தட்டுத் தடுமாறி நடந்து கொண்டிருப்பதைக் கண்டதும் கழியூன்றி எச்சரிக்கையுடன் அடியெடுத்து வைக்குமாறு அவனிடம் கூறினார்கள். அதுகேட்ட அவன், ''நானோ குடிகாரன். குடிவெறியில் செல்கின்றேன். எனவே நான் இதில் தட்டுத் தடுமாறிக் கீழே வீழ்ந்துவிடின் அதனால் யாதொரு பாதகமுமில்லை. நான் இம்மை இன்பங்களை வெறுக் கவுமில்லை; மறுமை இன்பங்களை விரும்பவுமில்லை. ஆனால் தாங்களோ முஸ்லிம்களின் தலைவர். ஆதலின் தாங்கள் தவறி விழுந்து விடாது மிகவும் எச்சரிக்கையுடன் அடியெடுத்து வைத்து நடங்கள்'' என்று கூறினான். அதுகேட்டு அவர்கள் பெரிதும் அதிர்ந்து போனார்கள். அவன் மூலம் தங்களுக்கு அறிவுரை நல்கிய இறைவனுக்கு ஆயிரம், ஆயிரம் முறை நன்றி செலுத்தினார்கள்.

அவர்கள் தங்களைப் பாவி என்றும் நாயினும் கடையன் என்றும் எண்ணிக் கொண்டதற்கு இதுபோன்ற மற்றொரு நிகழ்ச்சியே காரணமாக இருந்தது. ஒருநாள் அவர்கள் திஜ்லா நதியின் ஓரத்தில் நடந்து சென்றகாலை அங்கு ஒரு நீக்ரோ ஒரு பெண்ணுடன் அமர்ந்து மதுவருந்திக் கொண்டிருப்பதைக் கண்டனர். அப்பொழுது அவர்களின் உள்ளத்தில் அவரை விடத் தாம் சிறந்தவர் என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்பொழுது அவ்வாற்றில் வந்த படகு ஒன்று திடீரெனப் புயலில் அகப்பட்டு உடைந்து அதிலிருந்து எழுவர் தண்ணீரில் தத்தளித்தனர் அதுகண்ட அந்த நீக்ரோ சரேலென ஆற்றில் பாய்ந்து நீந்தி அவ்வெழுவரில் அறுவரைக் கரைத் சேர்த்தார். அதன்பின் ஆங்கு நின்று இதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஹஸன் (ரஹ்) அவர்களை நோக்கி, ''தாங்கள் என்னைவிடச் சிறந்தவர் என்று சற்று முன் எண்ணினீர்களே. அவ்விதமாயின் அந்த ஏழாமவரைக் காப்பாற்றுங்கள்'' என்று அறைகூவல் விடுத்தார். அவரின் இவ்வறை கூவல் அவர்களுக்கு அளவற்ற வியப்பை அளித்தது.

அப்பொழுது அந்த நீக்ரோ, அவர்களை நோக்கி, ''முஸ்லிம்களின் மாபெரும் தலைவ! தாங்கள் கண்ட அப்பெண்மணி என் அன்னையாவார். நான் குடித்தது மதுவல்ல, தண்ணீர். தாங்கள் அகக்கண் தெளிவைப் பெற்றவர்களா, அல்லவா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காகவே என் அன்னையை அருகமர்த்தி புட்டியிலிருந்த தண்ணீரைக் குடித்தேன். சோதனையில் தாங்கள் தோற்றீர்கள். தாங்கள் அகக் கண் குருடர் தாம் என்பதை விளங்கிக் கொண்டேன்'' என்று கூறினார்.

அதுகேட்ட ஹஸன் (ரஹ்) அவர்கள் அறிவுத் தெளிவு பெற்றவர் களாய் அவரைப் பற்றித் தவறாகத் தாம் எண்ணியதை மன்னித்தருளு மாறும், எவ்வாறு ஆற்றிலிருந்து அறுவரை அவர் கரை சேர்த்தாரோ அவ்வாறே தம்மை மருட்சி, தவறான தன் மதிப்பு என்ற கடல்களை

விட்டும் காத்து ஆன்மீகத் தெளிவு என்ற கரை சேர்க்குமாறும் தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறும் வேண்டி நின்றனர். அவரும் அவ்வாறே செய்தார். அதன் காரணமாக அவர்கள் பணிவான உள்ளமும், ஆன்மீகத் தெளிவும் பெற்றார்கள்.

ஒருநாள் அவர்கள் தெரு வழியே சென்று கொண்டிருந்த பொழுது தீயோன் என்று கருதப்பட்ட ஒருவன் தம்முன் எதிர்ப்படுவதைக் கண்டு தம் ஆடைகள் கூட அவன் மீது படாது அவற்றை ஒதுக்கிப் பிடித்துக் கொண்டு ஒதுங்கி நடந்து சென்றார்கள். அதைக் கண்ட அவன், ''ஹஸனே! ஏன் என்னை விட்டு ஒதுங்கிச் செல்கிறீர்? மனிதர்களின் அந்தரங்கம் அல்லாஹ் ஒருவனுக்கே வெளிச்சமாக உள்ளது'' என்று கூறினான். அதுகேட்டு அவர்கள் தாம் தவறிழைத்து விட்டோமோ என்று எண்ணிப் பெரிதும் அதிர்ச்சியுற்றார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் ஒரு நபுஞ்சகனின் ஆடையை வேடிக்கையாகப் பிடித்து இழுத்த பொழுது அவன் அலறித் துடித்து ''ஐயோ! என் இரகசியத்தைப் பிறர் அறியச் செய்து விடாதீர்கள்'' என்று அலறினான். அதுகேட்டு அவர்கள் திடுக்கமும் உணர்வும் பெற்றார்கள். நியாயத்தீர்ப்பு நாளில் தாம் நிர்வாணமாக்கப்பட்டு தம்முடைய பாவங்களெல்லாம் வெட்ட வெளிச்சமாக்கப்படும் பொழுது தம் நிலை எவ்வாறிருக்கும் என்பதை அவர்கள் எண்ணிய பொழுது அவர்கள் அழுதே விட்டார்கள்.

பிறிதொரு நாள் ஒரு குழந்தை விளக்கை ஏற்றிக் கொண்டு வந்த பொழுது ''எங்கிருந்து வெளிச்சம் வந்தது?'' என்று வினவினர். உடனே அக்குழந்தை விளக்கை ஊதி அணைத்து விட்டு, ''இப்பொழுது நீங்கள் வெளிச்சம் எங்கே போய்விட்டது? என்று கூறுங்கள். வெளிச்சம் எங்கிருந்து வந்தது என்று நான் கூறுகிறேன்'' என்றது. அதனுடைய இப்பதில் அவர்களைத் தூக்கி வாரிப்போட்டது. மேலே கூறப்பட்ட நான்கு நிகழ்ச்சிகளும் அவர்களுக்கு வாழ்க்கையில் பெரும்பாடத்தைக் கற்பித்தன என்று அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

ஒரு தடவை சிலர் அவர்களிடம் வந்து, ''இன்னார் இருபதாண்டுகளாக கூட்டு (ஜமாஅத்) தொழுகையில் கலந்து கொள்வதில்லை; எவருடனும் சேர்ந்திருப்பதுமில்லை'' என்று ஒருவரைப்பற்றிக் குறை கூறினர். அவரிடம் சென்று அதற்கான காரணத்தை அவர்கள் வினவிய பொழுது, ''அன்பு கூர்ந்து என்னை மன்னியுங்கள். நான் ஓர் அலுவலின் மீது முழுக்க முழுக்க கவனம் செலுத்தியவனாக உள்ளேன்'' என்று கூறினார். ''அந்த அலுவல் யாது?'' என்று அவர்கள் வினவிய காலை, ''எனக்கு இறைவன் நற்பேறு நல்காமலும் நான் பாவம் செய்யாமலும்

ஒரு கணம் கூட இல்லையாதலால் நான் என்னுடைய ஒவ்வொரு மூச்சையும் இறைவன் எனக்கு நல்கியுள்ள நற்பேறுகளுக்கு நன்றி செலுத்தியவனாகவும் நான் செய்யும் பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்டவனாகவுமே செலவழித்துக் கொண்டுள்ளேன். எனவே அவற்றிற்கெல்லாம் எனக்கு நேரமில்லை'' என்று பதில் கூறினார். அது கேட்ட ஹஸன் (ரஹ்) அவர்கள், ''நீர் அவ்விதமே செய்து வாரும். நீர் என்னைவிடச் சிறந்தவர் என்பதில் ஐயமில்லை'' என்று கூறிவிட்டு அவரிடமிருந்து விடைபெற்றனர்.

இதிலிருந்து அவர்களின் இறைஞ்சுதல், ''இறைவனே! நீ எனக்குப் பல்வேறு நற்பேறுகளை நல்கினாய். எனினும் நான் அவற்றிற்காக உனக்கு நன்றி செலுத்தவில்லை. நீ எனக்குப் பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் தந்தாய். அவற்றை நான் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளவும் இல்லை. எனினும் அதுகண்டு நீ எனக்கு நல்கிய நற்பேறுகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவுமில்லை. என்னுடைய துன்பங்களையும் துயரங்களையும் நீ என்னிடம் நீடித்து நிலைத்திருக்கச் செய்யவுமில்லை. உன்னிடமிருந்து எனக்கு நன்மைகள் ஏற்பட்டுக் கொண்டே உள்ளன'' என்பதாகவே இருந்தது.

ஒரு சமயம் இவர்கள் ஒரு கூட்டத்தினர் அங்குமிங்கும் குதித்து விளையாடிச் சிரித்துக் கும்மாளமடித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், ''இவர்கள் தங்களின் நிலையை உணராது இவ்விதம் சிரித்துக் கும்மாளமடிப்பதைக் காணும் பொழுது எனக்குப் பெருவியப்பாக இருக்கிறது'' என்று கூறினார்கள்.

வேறொரு சமயம் அவர்கள் தெருவழியே செல்லும் பொழுது ஓர் இளைஞன் அதிகமாகச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தான். அதைக்கண்டு அவன் மீது அவர்களுக்கு ஒருவித அருவருப்பும் அனுதாபமும் ஏற்பட்டது. சில நாட்களுக்குப்பின் அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் பொழுது அவன் தம்முன் வீற்றிருப்பதைக் கண்டனர். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''நீ ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தைக் கடந்திருக்கிறாயா?'' என்று வினவினர். ''இல்லை'' என்றான் அவன். அடுத்து, ''நீ சுவனம் செல்வாயா அல்லது நரகம் புகுவாயா என்று உனக்குத் தெரியுமா?'' என்று வினவினர் அவர்கள். ''தெரியாது'' என்று மறுமொழி பகர்ந்தான் அவன். ''இந்நிலையில் இருந்துகொண்டு நீ எவ்வாறு சிரித்து விளையாடுகிறாய்?'' என்று இடித்துரைத்தார்கள் அவர்கள். இதன்பின் அந்த இளைஞனை எவரும் சிரிக்கப் பார்க்கவில்லை.

மற்றொரு சமயம் ஒருவன் புதைகுழியின் அருகே அமர்ந்து ரொட்டி தின்று கொண்டிருப்பதை அவர்கள் பார்த்த பொழுது, ''இவன் ஒரு நயவஞ்சகன் (முனாஃபிக்) ஆக இருக்க வேண்டும்'' என்று கூறினர். அதுகேட்ட மக்கள், ''ஏன் அவனைப்பற்றி அவ்வாறு கூறுகின்றீர்கள்?'' என்று வினவியபொழுது, ''இறந்தோர்களின் அண்மையில் அமர்ந்து தன் உடல் இச்சைக்கு இடம் கொடுப்பவன் இறப்பைப் பற்றியும் மறுமையைப் பற்றியும் நம்பிக்கை கொள்ளாதவனேயாவான். எனவே தான் நான் அவனை நயவஞ்சகன் (முனாஃபிக்) என்று கூறினேன்'' என்று விளக்கம் பகர்ந்தார்கள்.

ஒரு தடவை இறைநேசச் செல்வர் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் இவர்களிடம் வந்து, ''மக்களுக்கு எதனால் தீமை விளைகின்றது?'' என்று வினவினர். அதற்கு இவர்கள், ''அவர்களின் உள்ளம் இறந்து விடுவதால்'' என்று விடையிறுத்தார்கள். ''உள்ளம் இறந்து விடுவதென்றால் என்ன?'' என்று அவர்கள் விளக்கம் கேட்க, ''இவ்வுலக ஆசாபாசங்களில் மூழ்கி இருப்பது'' என்று இவர்கள் பதிலிறுத்தார்கள்.

மேலும் இவர்கள் கூறுங்கால் ''மனிதன் செம்மறியாட்டிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இடையனின் சப்தத்தைக் கேட்டதும் அது மேய்வதை விட்டொழித்து அவனின் கோலாடும் திசை நோக்கிக் குதித்தோடுகின்றது. ஆனால் மனிதனோ தன் மனோ இச்சைக்கு வழிப்பட்டு இறைவனின் ஆணைக்குக் கூட மாறு செய்கிறான்'' என்று எடுத்துரைத்தார்கள்.

இவ்வாறு கூறிய அவர்கள் உலகைத் துறந்து விட்டேன் என்று கூறிக் கொண்டு அழுக்கடைந்த ஆபாச உடைகளை அணிந்து கொண்டு திரியவில்லை. அதற்கு மாறாக எப்பொழுது பார்த்தாலும் அழகிய மேலான உடைகளை அணிவதையே தங்களின் நீங்காப் பெருவழக்க மாகக் கொண்டிருந்தனர். இதைக் கண்டு பெரிதும் வியப்புற்ற ஃபர்கத் என்பார், ''தங்களைப் போன்ற சான்றோர்கள் இவ்விதம் உடையணியலாமா?'' என்று அவர்களிடம் வினவிய பொழுது, ''ஃபர்கத்தின் அன்னையின் மகனே!நரகிலுள்ளோரில் பெரும்பாலோர் கம்பளி உடை அணிந்தவர்கள் தாம் என்பது உமக்குத் தெரியாதா?'' என்று பதில் கூறினர்.

பிற்காலத்தில் இவர்கள் ஒட்டுப் போடப்பட்ட கம்பளி உடையையே அணிந்தனர். ''எனினும் அதனை அணிந்து கொள்வதில் மகிழ்ச்சியுறுவதை இவர்கள் விரும்பவில்லை. ஒரு தடவை மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் கம்பளியாலான மேலங்கியை அணிந்து வந்தபொழுது ''அதைக் கொண்டு தாங்கள் மகிழ்வுறுகிறீர்களா?'' என்று வினவினார்கள் இவர்கள். அதற்கு அவர்கள் 'ஆம்' என்று மறுமொழி பகர்ந்தபொழுது

''தங்களுக்கு முன்னர் தாங்கள் அணிந்திருக்கும் மேலங்கியை ஒரு செம்மறியாடு அணிந்திருந்தது'' என்று இவர்கள் கூறினார்கள்.

மேலும் இவர்கள் கம்பளி உடை அணிவதைப் பற்றிக் கூறும் பொழுது ''தாழ்மையின் காரணமாக அதனை அணிபவர்களுக்கு இறைவன் ஆன்மீக வெளிச்சத்தை நல்குகிறான். பெருமைக்காக அதனை அணிபவர்களை அவன் ஆழ்நரகில் வீழ்த்துகின்றான்'' என்று இவர்கள் இயம்பினர்.

அவர்கள் ஆடம்பர அலங்கார உடைகளை வெறுத்தனர். ஒருநாள் சிற்றரசர் ஒருவர் ஆடம்பர அலங்கார உடை அணிந்து கலீபாவின் பேரவைக்குச் செல்வதைக் கண்டு, ''கலீபாவின் திருமுன் செல்லுங்கால் அழுக்கடைந்த ஆடைகளை அணிந்து செல்லின் உமக்கு அங்கு மதிப் பேற்படுமா?'' என்று வினவினர். ''ஏற்படாது'' என்று அவர் மறுமொழி பகர்ந்தார். ''அவ்விதமாயின் அரசர்க்கரசனான அல்லாஹ்வின் திருமுன் செல்லுங்கால் பாவக் கறையுடன் செல்லின் உமக்கு அங்கு மதிப் பேற்படுமா?'' என்று வினவினர் அவர்கள். ஏற்படாது என்று கூறிய அவர் தம் பவம் நினைந்து நேர்வழி பெற்றார்.

மேலும் அவர்கள் எவரும் அறைகுறை உடை அணிவதையும் வெறுத்தார்கள். கச்சை கட்டிக்கொண்டு குளிப்பதைப் பற்றி அவர்கள் குறிப்பிடுங்கால், ''அது நரகவாதியின் அடையாளமாகும்'' என்று எடுத்தியம்பினர்.

ஒருதடவை இவர்கள் ஸயீது இப்னு ஜுபைர் (ரஹ்) அவர்களை நோக்கி, ''தாங்கள் மூன்று அலுவல்களை ஆற்ற வேண்டாம்'' என்று கூறினர். ''அவை யாவை?'' என்று அவர்கள் வினவிய பொழுது (1) அரசன் தங்களை எவ்வளவு தான் விரும்பிய போதினும் அவனுடைய அரண்மனைக்குள் தாங்கள் அடியெடுத்து வைக்க வேண்டாம். (2) தங்களின் உள்ளின் உள்ளே உள்ள இரகசியங்களை வேறொருவரிடம் தனித்தும் எடுத்துரைக்க வேண்டாம். அந்த வேறொருவர் தங்கள் காலத்து ராபியா பஸரீயாக இருந்தபோதினும் சரியே. (3) தாங்கள் இன்னிசையை ஒரு போதும் கேட்க வேண்டாம். தாங்கள் ஒரு வைராக்கியமுள்ள ஆண் மகனாக இருந்தபோதினும் சரியே. காரணம், அதில் அபாயம் ஒளிந் திருக்கிறது. வாய்ப்புக் கிடைப்பின் அது தங்களை வீழ்த்திவிடும்'' என்று இவர்கள் எடுத்துரைத்தார்கள்.

ஒரு தடவை இவர்கள் மார்க்க விஷயம் பற்றி ஒரு தீர்ப்பு (ஃபத்வா) வழங்கினர். அதைக் கேட்ட ஒருவர் ''தங்களின் தீர்ப்பு ஏனைய மார்க்க அறிஞர்களின் தீர்ப்புக்கு மாற்றமாக உள்ளதே'' என்று கூறினார்.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, (''தாங்கள் உண்மையான மார்க்க அறிஞர்களைப் பார்த்துள்ளீர்களா? உண்மையான மார்க்க அறிஞர்கள் உலகப்பற்றை ஒதுக்கித் தள்ளியவராக விளங்குவர்'' என்று கூறிய அவர்கள், மீண்டும் அவரை நோக்கிப் பின்வருமாறு எடுத்துரைத்தார்கள்.

''மக்களை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். முதலாவது வகையினர் மார்க்க அறிஞர்கள் (உலமாக்கள்). இவர்கள் நபிமார்களின் வாரிசு களாவர். இரண்டாது வகையினர் வணக்கவாளர் (ஆபித்). மூன்றாவது வகையினர் மார்க்கப் போர் புரிபவர் (முஜ்தஹித்). நான்காவது வகையினர் வணிகர் (தாஜிர்). ஐந்தாவது வகையினர் மக்களின் பாதுகாவலர்களான அரசர்கள் (மாலிக்).

''மார்க்க அறிஞர்கள் பேராசைக்காரர்களாகவும் பொருள் சேகரிப்பவராகவும் ஆகிவிட்டால் எவரைத்தான் பின்பற்றுவது?

''வணக்கவாளர்கள் உலக இன்பங்களில் மூழ்கி விட்டால், எவரிடம் சென்று நேர்வழியைப் பெறுவது?

''மார்க்கப் போர்வீரர்கள் போலிகளாகவும் கூலிகளாகவும் நடிப்பவர் களாகவும் பாவனை செய்பவர்களாகவும் ஆகிவிட்டால், எவர் தாம் எதிரிகளை எதிர்த்து வீரப்போர் செய்து வாகை சூடுவது?

''வணிகர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அமானிதத்தை மோசம் செய்யும் பொழுது எவரிடம் தான் அமானிதத்தை வைப்பது?

''அரசர்களே ஓநாயாக மாறி விடும் பொழுது, ஆடுகளைப் பாது காப்பவர் யார்?'

''அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகிறேன். மார்க்க அறிஞர்களே மக்களை நாசப்படுத்துகிறார்கள். அவர்களே மார்க்கத்தின் பேரால் மக்களைத் திசை திருப்புகிறார்கள். வணக்கவாளர்களோ மக்களை உலக ஆசாபாசங்களின் பக்கம் இழுக்கின்றார்கள். மார்க்கப் போர் வீரர்களோ வெறும் பாசாங்குக்காரர்களாக இருக்கிறார்கள். வணிகர்கள் மோசக் காரர்களாகவும், அரசர்கள் அநியாயக்காரர்களாகவும், உள்ளனர். தங்களின் கதி யாதாகும் என்பதை அவர்கள் இறுதியில் கண்டு கொள்வார்கள்.''

ஒரு நாள் இவர்கள் ஓர் இளைஞருடன் கடை வீதி வழியாகச் சென்று கொண்டிருந்த பொழுது, அங்கு ஓரிடத்தில் மருத்துவர் ஒருவர் அமர்ந் திருந்தார். அவரைச் சூழ மக்கள் மருந்து வாங்கிச் செல்வதற்காக புட்டிகளுடன் நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களுடன் சென்ற அந்த இளைஞர் அந்த மருத்துவரை அணுகி 'பயம் போக்கி, இதயத்தைத் தூய்மைப்படுத்தும் மருந்து தங்களிடம் உள்ளதா?'' என்று

வினவினார். ''ஆம்; உண்டு. குறித்துக் கொள்'' என்று கூறிப் பின்வருமாறு இயம்பினார்.

(''தாழ்மை என்னும் மரச் சாற்றுடன், ஏழ்மை என்னும் மரச்சாற்றை எடுத்துக் கொள். அதில் பாவ மன்னிப்பு என்னும் கடுக்காயைப் போட்டு மன நிறைவு என்னும் உரலிலிட்டு போதும் என்ற குழவியால் அரை. அதன்பின் அதனைப் பக்தி என்னும் கலயத்தில் ஊற்றி நாணம் என்ற நீரை அத்துடன் சேர்த்துக் கலக்கு. அன்பு என்னும் தீயில் அதைக் காய்ச்சி நன்றி என்ற குவளையில் அதனை ஊற்றி இறை ஆதரவு என்னும் விசிறியால் அதனை ஆற்று. பின்பு இறை புகழ் என்ற கரண்டியால் அதனைச் சிறிது சிறிதாக எடுத்து அருந்து. இவ்விதம் செய்துவரின் உன் இம்மை, மறுமை நோய்கள் அனைத்தும் நீங்கப் பெறுவதைக் காண்பாய்.'')

இதனைச் சற்று ஒதுங்கி நின்று கேட்டுக் கொண்டிருந்த இவர்கள், அவர் சாதாரண மருத்துவரல்லர் என்பதை அறிந்து அவர் கூறியதிலிருந்து பெரிதும் அறிவு பெற்றதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

ஒருநாள் இவர்கள் தங்களின் இல்லத்தில் வீற்றிருந்தக்கால் ஒருவர் இவர்களிடம் வந்து, ''இன்னார் தங்களைப் பற்றிப் புறம் பேசினார்'' என்று கூறினார். உடனே இவர்கள் ஒரு தட்டு நிறையப் பேரீத்தப் பழங்களை ஒருவர் மூலம் அவருக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்து அவர் தம் நன்மைகளைத் தமக்கு அன்பளிப்புச் செய்துவிட்டதாகக் கேள்வியுற்ற தாகவும், அதற்குப் பகரமாக இப்பேரீத்தம் பழங்களை அவருக்குக் காணிக்கையாகத் தாம் அனுப்பியுள்ளதாகவும், எனினும் இவை அந் நன்மைகளுக்கு ஒரு போதும் பகரமாக ஆகா என்றும், எனவே பொறுத் தருளுமாறு தாம் வேண்டிக் கொண்டதாகவும் அவரிடம் கூறிவிட்டு வருமாறு சொல்லி அனுப்பினர்.

மற்றொரு நாள் ஒருவன் அவர்களிடம் வந்து, ''தாங்கள் என்னைப் பற்றிப் புறம் பேசியதாகக் கேள்வியுற்றேன்'' என்று கூறிய பொழுது, ''என்னுடைய நன்மைகளில் நான் உமக்குப் பங்கு தரும் வண்ணம் உமக் கென்ன அத்தகு தகுதி ஏற்பட்டு விட்டது'' என்று அவர்கள் அவனை மடக்கினர்.

இவ்வாறு புறத்தைப் பற்றிக் கருத்துக் கொண்டிருந்த அப்பெரியார் புறம் பேசுவது ஒரு பாவச் செயல் என்றும் எனவே ஒருவன் ஒருவரைப் பற்றிப் புறம் பேசின் அவன் அதற்காக இறைவனிடம் பாவமன்னிப்புக் கோர வேண்டுமென்றும் கூறினார்கள். எனினும் பேராசைக்காரன், வெளிப்படையாகப் பாவம் செய்பவன், அநீதம் செய்யும் அரசன் அல்லது தலைவன் ஆகிய மூவரைப் பற்றிப் புறம் பேசலாமென்றும் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

( கோள் சொல்வதைப் பற்றி அவர்கள் கூறும் பொழுது, ''பிறர் கூறுவதை உன்னிடம் தூக்கிக் கொண்டு ஓடி வருபவன், நீ கூறுவதையும் பிறரிடம் தூக்கிக் கொண்டு ஓடுவான். எனவே அவனுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்ந்து கொள்வதே சிறப்புடையது'' என்று எடுத்துரைத்தார்கள். )

''இறை நம்பிக்கையாளர்கள் ஒருவர் மீது மற்றொருவர் பொறாமை கொள்வார்களா?'' என்று இவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''நீர் யஃகூப் (அலை) அவர்களின் மக்கள் பற்றிய வரலாற்றை அறிய மாட்டீரோ?'' என்று பதிலிறுத்தனர். இவ்வாறு பதிலிறுத்த அவர்கள் தம் பேச்சை முடிக்காது, ''எனினும் அப்பொறாமை, வெளியில் தன் தலையை நீட்டாது உள்ளத்தில் அமுங்கிக் கிடந்தால் அதனால் பிறருக்கு இழப்போ, தீமையோ ஏற்படா'' என்றும் எடுத்துரைத்தார்கள்.

மற்றொரு நாள் காட்டரபி ஒருவர் இவர்களிடம் வந்து ''பொறுமை (ஸப்ர்) என்றால் என்ன?'' என்று வினவினார். அதற்கு இவர்கள், ''பொறுமை இரண்டு வகைப்படும். முதலாவது, துன்பத்திலும் துயரத்திலும் பொறுமையோடிருப்பதாகும். இரண்டாவது, இறைவன் விலக்கியுள்ளதைத் தவிர்ந்து கொள்வதில் அசையாத உறுதியோடிருப்பதாகும்'' என்று பதிலிறுத்தார்கள்.

அப்பொழுது அந்தக் காட்டரபி இவர்களை நோக்கி, ''தாங்களே உண்மையான துறவி. தங்களை விட மாண்பார்ந்த துறவியை நான் பார்த்ததில்லை'' என்று புகழ்மொழி பகர்ந்தார்.

அப்பொழுது இவர்கள் அவரை நோக்கி ''அரபியே! என்னுடைய துறவு, உண்மையில் ஆசையேயன்றி வேறில்லை. என்னுடைய பொறுமை, உண்மையில் துணிவின்மையேயன்றி வேறில்லை'' என்று கூறினர்.

''தங்களின் இப்பேச்சு என்னுடைய இறை நம்பிக்கையைப் பிடித்து உலுக்கிவிட்டது. ஆதலின் தாங்கள் இதனை எனக்கு விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும்'' என்று வேண்டினார் அக்காட்டரபி.

உடனே இவர்கள், ''துன்பத்தில் நான் பொறுமையை மேற்கொள்வது நரக நெருப்பிற்கு அஞ்சியேயன்றி வேறில்லை. நான் இவ்வுலகைத் துறந்து வாழ்வது சுவன வாழ்வை ஆசை வைத்தேயன்றி வேறில்லை. இவ்விரண்டிலும் சுயநலம் இழையோடுகின்றது. இதற்கு மாறாக நான் இறைவனுக்காகவே பொறுமையை மேற்கொண்டு, இறைவனுக்காகவே துறவு பூண்டிருப்பின் அஃது எத்துணை மாண்புடைத்ததாக இருக்கும்'' என்று கூறினார்கள்.

இவ்வாறு இவர்கள் தம்மைத் தாழ்த்திக் கூறிய போதிலும், இவர்களுடைய துறவு நிலையோ ''இறைவன் தன்னுடைய நல்லடியார்கள் முழுக்க முழுக்க தன் பக்கமே முகம் திருப்பியவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக அவர்களின் குடும்பத்தினரை ஒருவர்பின் ஒருவராக மரிக்கச் செய்கிறான்'' என்று கூறும் அளவுக்கு மகத்தானதாக இருந்தது.

''இறந்து புதைகுழியில் அமைதியாக வைத்து அடக்கப்பட்டவர்கள் தாம் இறந்தவர்களன்று. உயிரோடிருக்கும் பொழுதே எவர்கள் இறந்தவர்கள் போன்று வாழ்கின்றார்களோ அவர்களும் இறந்தவர்களேயாவர்'' என்று இவர்கள் ஒரு கவிதையில் கூறுவது உண்மையான துறவு நிலையை நமக்கு நன்கு படம்பிடித்துக் காட்டுகிறது.

அவர்கள் தமக்குப் பின்னால் எவரும் நடந்து வருவதை விரும்புவதில்லை. அது தமக்குப் பெருமை உணர்வை அளித்திடுமோ என்று அவர்கள் அஞ்சினார்கள். ஒருதடவை தம் பின்னே சிலர் தொடர்ந்து வருவதை அவர்கள் கண்ட பொழுது, ''ஏன் என் பின்னே வந்து கொண்டிருக்கிறீர்கள்? என்னால் ஆக வேண்டியது ஏதேனும் இருப்பின் சரிதான். இல்லையேல் அது நல்லதல்ல, சென்று விடுங்கள்'' என்று அவர்கள் கூறினார்கள்.

தனிமையிலே இவர்களுக்கு ஒரு தனி இன்பம் இருந்து வந்தது. இவர்கள் ஹஜ்ஜுச் செய்யப் போவதைப் பற்றிக் கேள்வியுற்ற தாபித்துல் புனானி (ரஹ்) அவர்கள் தாமும் அவர்களுடன் சேர்ந்து மக்கா செல்ல விரும்புவதாக மடல் தீட்டிய பொழுது, ''இறைவனின் திரை மறைவில் நான் வாழ்ந்து வர என்னை அனுமதியுங்கள். நாம் இருவரும் ஒன்று சேர்ந்து செல்வதால் நம் ஒவ்வொருவரின் குறையும் மற்றவர்களுக்குத் தெரிய வருமாதலால் அதன் காரணமாக அவமதிப்பும் பகைமையும் ஏற்பட ஏதுவாகும். மேலும், தனிமையின் இன்பத்தையும் நம்மால் நுகர இயலாது போய்விடும்'' என்று அவர்கள் பதில் எழுதினார்கள்.

ஒருநாள் ஒருவன் அவர்களிடம் வந்து ''எனக்கு அறிவுரை பகருங்கள்'' என்று வேண்டினான். அப்பொழுது அவர்கள் ''நீ இறைவனின் கட்டளைகளைக் கௌரவிப்பாயாக! அல்லாஹ் உன்னைக் கௌரவிப்பான்'' என்று கூறினர்.

பாவங்களைச் செய்துவிட்டு இறைவனின் பேரருளில் நம்பிக்கை வைத்துப் பாவமன்னிப்புக் கோருவதைவிடப் பாவங்களைச் செய்யாது கூடுமானவரை பேணுதலுடன் நடந்து கொள்வதே மாண்புடைத்து என்று அவர்கள் கருதினார்கள். எனவே, ''பிழை பொறுக்குமாறு இறை

வனிடம் இறைஞ்சுவதைக் குறித்து இறைவனிடம் பிழை பொறுக்கத் தேட வேண்டும்'' என்று அவர்கள் இயம்பினார்கள்.

ஒருநாள் அவர்களிடம் ஒருவர் வந்து, ''தாங்கள் எவ்வாறு உள்ளீர்கள்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''கடலில் பிரயாணம் செய்யுங்கால் திடீரெனக் கப்பல் உடைந்து, அதிலிருந்த ஒவ்வொருவரும் ஒரு துண்டுப் பலகையைப் பிடித்துக் கொண்டு தத்தளிக்கும் பொழுது, அவர்களின் நிலை எவ்வாறிருக்குமோ அது போன்றே என்னுடைய நிலையும் இருக்கிறது'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

இவ்வுலக வாழ்வைப் பற்றி அவர்கள் எடுத்துரைக்குங்கால், ''மனிதன் இவ்வுலகை விட்டு நீங்கும்பொழுது மூன்றுவிதமான வருத்தங்களுடன் செல்கின்றான். அவை 1) தான் தேடியவற்றை முழுக்க முழுக்க அனுபவிக்க இயலவில்லையே என்ற வருத்தம். 2) தான் விரும்பிய அனைத்தையும் தன்னால் எய்தப்பெற இயலவில்லையே என்ற வருத்தம். 3) மறுமைக்காக யாதொன்றையும் தேடிக் கொள்ளவில்லையே என்ற வருத்தம் ஆகும்'' என்று கூறினர்.

இவ்வாறு அவர்கள் கூறி வாய் மூடுமுன் ஒருவர் அவர்களிடம் வந்து,''இன்ன மனிதர் உயிர் நீக்கும் தறுவாயில் உள்ளார்'' என்று கூறினார். அதுகேட்ட அவர்கள், ''அவர் எழுபது ஆண்டுகளாக உயிர் நீக்கும் தறுவாயில் தானே இருந்தார். இப்பொழுது அவர் உயிர் நீக்கப் போகின்றார். அவ்வளவு தான்'' என்று பதிலிறுத்தார்கள்.

மேலும் அவர்கள் பேசுங்கால், ''இவ்வுலகில் பற்றற்று வாழ்பவர்கள் ஈடேற்றம் பெறுவார்கள் ஏனையோர் அழிந்தொழிவர். இவ்வுலக வாழ்வை இறைவன் தன்னிடம் நல்கிய அடைக்கலப் பொருளெனக் கொண்டு, அதனை அவன் கேட்குங்கால், அதனை அவனிடம் மகிழ்ச்சியுடன் எவன் ஒப்படைக்கின்றானோ அவனுக்கு இறைவன் பேரருள் பாலிப்பானாக! எவன் இவ்வுலக வாழ்வைத் துச்சமெனக் கருதி இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்குங்கால் மறுமைக்கான கட்டடத்தை எழுப்புகின்றானோ அவனே அறிவார்ந்த பெருமகனாவான். இறைவனை நேசிப்பவனை இறைவனும் நேசிக்கின்றான். இவ்வுலக வாழ்வை நேசிப்பவன் இறைவனைத் தன் பகைவனாகவே காண்பான். இவ்வுலகில் வாழும் மிருகங்களில் மிகவும் கொடியது மனிதனின் பேராசையே யாகும். அதனைக் கடிவாளமிட்டு அடக்க வேண்டும். கடிவாளமிட்டு அடக்கப்பட வேண்டிய மிருகம் அதைத்தவிர வேறு இல்லை. இவ்வுலக வாழ்வு எத்தன்மையது என்பதை அறிய ஒருவன் இறந்தபின் அவனுக்கு இவ்வுலக வாழ்வு எத்தன்மையாகி விட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இறப்பானது இவ்வுலக வாழ்வை இழிவுடைத்ததாக

ஆக்கிவிட்டது. எனவே அறிவுள்ளவன் இதில் மகிழ்ச்சியுற மாட்டான்.

''நமக்கு முன் வாழ்ந்துவிட்டுச் சென்ற நல்லோர்கள் இறைவனின் திருமறையை இரவெல்லாம் ஆராய்ச்சி செய்து பகலில் அதன்படிச் செயலாற்றினார்கள். ஆனால் நாமோ அதிலுள்ள ஒவ்வோர் எழுத்தையும், புள்ளியையும், மேல் கோட்டையும் (ஸபர்), கீழ்க் கோட்டையும் (ஸேர்), மேல் கொம்பையும் (பேஷ்) அறிந்து வைத்துள்ளோமேயன்றி அத் திருமறையின்படிச் செயலாற்றுவதில்லை. அதற்கு மாறாக, 'உலகில் எவ்வாறு இன்ப வாழ்வு வாழ்வது?' என்ற நூலையே உற்று நோக்கி ஆராய்ந்த வண்ணமுள்ளோம். இவ்வுலகின் மகிழ்தற்குரிய பொருள் களான பொன், வெள்ளி ஆகியவற்றை எவன் மதிக்கவில்லையோ அவனே இறைவனிடம் மதிப்பெய்தி நிற்பான்'' என்று எடுத்துரைத்தார்கள்.

ஒருநாள் அவர்களிடம் சிலர் வந்து, ''சிலரின் சொற்பொழிவுகள் எங்களின் உள்ளத்தைத் துணுக்குறச் செய்து அதனைத் துண்டு துண்டாக உடைத்துவிடும் போல் இருக்கின்றன. அவற்றை நாங்கள் கேட்பது பற்றித் தங்களின் கருத்து யாது?'' என்று வினவியபொழுது, ''அவற்றை அவசியம் கேளுங்கள். இங்கு உங்களை மகிழ்வுபடுத்தி மறுமையில் உங்களை நரகத் துன்பத்தில் உழலச் செய்பவர்களை விட இங்கு உங்களை அச்சமுறச் செய்து மறுமையில் உங்களை சுவன இன்பங்களை நுகருமாறு செய்பவர்கள் எவ்வளவோ மேலானவர்கள்'' என்று கூறினர்.

இவர்கள் ஓர் அறிஞராகவும், ஆன்மீக ஞானியாகவும் இருந்ததோ டல்லாது சிறந்த நாவன்மை பெற்ற பேச்சாளராகவும் விளங்கினர். ஒரு தடவை அபூபக்ரு இப்னு அல் அலா என்ற பெரியார், அல்ஹஸனையும் அல்ஹஜ்ஜாஜையும் விடச் சிறந்த முறையில் தூய அரபி மொழியில் சொற்பொழிவாற்றக் கூடியவர்களைத் தாம் கண்டதில்லை என்று கூறிய பொழுது அவ்விருவரில் எவர் சிறந்த பேச்சாளர் என்று வினவப்பட்ட காலை அவர் அல்ஹஸன் என்று கூறத் தயங்கவில்லை.

''அலீ அவர்களின் அடுக்குச் சொற்கள் நிறைந்த அறிவார்ந்த பேச்சும், உமர் இப்னு அப்துல் அஸீஸ் முன் ஹஸன் பஸரீ நிகழ்த்திய மார்க்க உபன்னியாசமும், ஸியாத் இப்னு அபீஹின் இராணுவச் சொற்பொழிவும் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபின் அனல் தெறிக்கும் பிரசங்கமும் அரபி இலக்கியத்தின் கருவூலங்களாகத் திகழ்கின்றன'' என்று பேராசிரியர் ஹிட்டி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர்களின் பேச்சு வன்மையைப்பற்றி ரஃபீ இப்னு அனஸ் கூறும்பொழுது, ''நான் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் பேச்சுகளைத்

தொடர்ந்து பத்தாண்டுகளாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன். இந்த பத்தாண்டு காலத்தில் அவர்களிடமிருந்து புதிய புதிய செய்திகளையே கேட்டேன்'' என்று வாயார்ந்து கூறுகிறார்.

''ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் எப்பொழுதும் நுண்ணிய ஆத்மீகக் கருத்துக்களைச் சேகரித்து அதன்பின் அவற்றைச் சரம் தொடுத்தாற்போலச் சொல்லத் துவங்குகிறார்கள். அவர்களைப் பற்றி இமாம் பாக்கிர் (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, 'அவர்களின் பேச்சு நபிமார்களின் பேச்சுப் போன்றுள்ளது' என்று கூறினர்'' என அஃமஷ் எடுத்துரைக்கிறார்.

''ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் பேச்சு, மறுமையை எய்தியவர் அங்கிருந்து திரும்பி வந்து அங்குத் தாம் கண்டவற்றை விமர்சித்தால் எவ்விதம் இருக்குமோ அவ்விதம் இருந்தது'' என்று ஜஃபர் இப்னு ஸைத் சான்று பகர்கிறார்.

ஆம்; அவர்களின் பேச்சு உண்மையில் நபிமார்களின் பேச்சு போன்றே இருந்தது. அவர்களின் அறிவு நபித் தோழர்களின் அறிவு போன்றிருந்தது. அனஸ் (ரலி) அவர்களிடம் எவரேனும் சென்று மார்க்கம் பற்றி எதையும் வினவின், ''உங்களின் தலைவராகிய அல்ஹஸனிடம் சென்று அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்று கூறிவிடுவார்கள் அவர்கள்.

ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் பேச்சு முழுவதும் உள்ளத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் தீய உணர்வுகளையும் இச்சைகளையும் ஊசாட்டங்களையும் எடுத்துரைத்து, அவற்றைப் போக்குவது எவ்வாறு என்பதைக் கூறுவதாகவே இருந்தது. ஒருவர் அவர்களை அணுகி, ''அபூ ஸயீதே! தாங்கள் இன்ன இன்ன செய்திகளையெல்லாம் கூறினீர்களே. இதற்கு முன் நாங்கள் இவற்றை வேறு எவர் வாயிலாகவும் கேள்வியுற்றோமில்லையே. இவற்றை எவரிடமிருந்து கற்றுக் கொண்டீர்கள்?'' என்று வினவியபொழுது, அவர்கள் தாம் நபித்தோழர் ஹுதைஃபா அல் யமன் (ரலி) அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டதாக மறுமொழி பகர்ந்தார்கள்.

அலீ (ரலி) அவர்களின் கிலாபத்தின் போது பல்வேறு காரணங்களை முன்னிட்டு, எவரும் பள்ளியில் சொற்பொழிவாற்றக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒரு தடவை அலீ (ரலி) அவர்கள் பஸரா வந்த காலை அந்நகரப் பள்ளிவாயிலில் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருப்பதைக் கண்டதும் சற்று நேரம் கழித்து ஆங்கு நின்று அதனைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள், ''நீர் யார்? அறிஞரா (ஆலிமா) மாணவரா?'' என்று வினவினர். அவர்களை

எவரென அறியாத ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், 'நான் அறிஞனுமல்ல, மாணவனுமல்ல, அண்ணலெம்பெருமானின் அமுத வாக்குகளில் நான் அறிந்தவற்றை மக்களுக்கு எடுத்தோதி விளக்கம் செய்பவனேயன்றி வேறில்லை'' என்று பதிலிறுத்தார்கள்.

அவர்கள் ஆற்றிய சொற்பொழிவாலும் அவர்கள் அளித்த மறுமொழியாலும் பெரிதும் திருப்தியுற்ற அப்பெருந்தகை, ''இவ்விளவல் மக்களுக்குச் சொற்பொழிவாற்றத் தகுதி வாய்ந்தவர் தாம்'' என்று கூறி அவ்விடத்தை விட்டும் அகன்றனர்.

தம்மிடம் சற்றுமுன் பேசிச் சென்றவர் அலீ (ரலி) அவர்கள் என்பது ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களுக்குத் தெரிய வந்ததும் அவர்களின் உடலையும் உள்ளத்தையும் ஒருவிதத் திடுக்கம் ஆட்கொண்டது. திடுதிப்பென பேச்சை நிறுத்தி விட்டு, அண்ணலெம்பெருமான் அவர்களின் அருமை மருகர் அலீ (ரலி) அவர்களைச் சந்தித்து ''தாங்கள் அல்லாஹ்வுக்காக வேண்டி எனக்கு 'உளூ' செய்யும் முறையைக் கற்றுத் தரவேண்டும்'' என்று வினயமாய் வேண்டி நின்றார்கள். அவர்களின் அவ்வேண்டுகோளுக்கிணங்கி அலீ (ரலி) அவர்கள் 'தஷ்த்' என்னும் பாத்திரத்தில் தண்ணீர் கொணருமாறு செய்து அவ்விடத்திலேயே வைத்து 'உளூ' செய்யும் முறையை அவர்களுக்குக் கற்றுத் தந்தனர். அவ்விடம் இன்றும் 'பாபுத் தஷ்த்' என்ற பெயருடன் விளங்குகின்றது.

அப்பொழுது அவர்கள் மீண்டும் அலீ (ரலி) அவர்களை நோக்கி இறைவனிடமிருந்து பாவமன்னிப்புப் பெறுவதற்கான ஓர் இலகுவான முறையைத் தமக்குக் காட்டித் தரவேண்டுமென வேண்டியபொழுது, ''ஒருவன் எவ்வளவுதான் பாவம் செய்தவனாக இருந்தபோதினும் அவன் அதற்காகப் பெரிதும் வருந்தி ஷஅபான் மாதத்தில் ஒரு சனிக்கிழமையன்று குளித்து உடல் தூய்மை பெற்று ஞாயிறு, திங்கள் ஆகிய இரவுகளில் 'இஷா'த் தொழுகை தொழுதபின் இரண்டு இரண்டு ரகஅத்துகளாகப் பன்னிரண்டு 'ரகஅத்'கள் நஃப்ல் தொழுது எழுபது தடவை இஸ்திஃபார் ஓதி அழுது கெஞ்சித் தம் பாவம் பொறுத்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சின், பேரருளாளனாகிய அல்லாஹ் அவனின் பவம் பொறுத்தருளப் போதுமானவன்'' என்று திருவாய் மலர்ந்தனர் அலீ (ரலி).

இவர்கள் வாரத்திற்கு ஒருமுறை மக்களுக்குச் சொற்பொழிவாற்றுங்கால் அதனைக் கேட்பதற்கு ராபியா பஸரி அம்மையார் வரவில்லையாயின், இவர்கள் தம் சொற்பொழிவைத் துவங்க மாட்டார்கள். ''யானைகளுக்கு மத மேற்படச் செய்யும் பானத்தை நான் எறும்புகளுக்கு மட்டும் தர விரும்பவில்லை'' என்று இவர்கள் கூறிவிடுவார்கள்.

இவர்கள் சொற்பொழிவாற்றுங்கால் மக்கள் உணர்ச்சி மீக்குற்று மனங்கலங்கிக் கண்ணீர் வடிக்கும்பொழுது ஆங்கு வீற்றிருக்கும் ராபியா பஸரீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''இவர்களின் உள்ளத்தில் அலை மோதும் உணர்வு தங்களின் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வின் பிரதி பலிப்பேயாகும்'' என்று கூறுவர்.

இவர்கள் ராபியா பஸரீ (ரஹ்) அவர்கள் வராததைக் கண்டு பேசத் துவங்காததைக் கண்ட சிலர், ''நாங்கள் இவ்வளவு பேர் வந்திருக் கின்றோம். தாங்கள் மகிழ்ச்சியுறவில்லையா?'' என்று வினவியபொழுது, ''கூட்டத்தைக் கண்டு நான் மகிழ்ச்சியுறுவதில்லை. இறை காதலில் மூழ்கிய ஒருவர் வந்திருப்பின் அது கண்டுதான் நான் மகிழ்ச்சியுற்றுப் பேச்சைத் துவங்குகின்றேன்'' என்று மொழிந்தனர்.

அவர்கள் தாம் செய்து வருவதையே மற்றவர்களும் செய்து வருமாறு போதிக்கவும், தாம் வெறுத்தொதுக்கியதை அவர்களும் வெறுத்தொ துக்குமாறு அறிவுரை பகரவும் செய்து வந்தார்கள். உள்ளமும் புறமும் அவர்கள் ஒரேவிதமான ஹஸன் பஸரீயாகவே இருந்து வந்தார்கள். எனவே தான் அவர்களைப் பற்றி அப்துல் வாஹித் இப்னு ஸைத் (ரஹ்) கூறும் பொழுது, அவர்களைப் போன்று உள்ளமும் புறமும், எண்ணமும் செயலும் ஒன்றுபட்ட ஒருவரைத் தாம் காணவில்லை என்று இயம்பினர்.

எனினும் அவர்களின் சொற்பொழிவைக் கேட்க வந்த சிலர் அவர்களை நோக்கி, ''தங்களின் அறிவுரையைக் கேட்க வரும் சிலர் பின்னர் தங்களைப் பற்றியும், தாங்கள் கூறியவை பற்றியும் குறைகூறித் திரிகின்றனரே'' என்று அவர்களிடம் கூறியபொழுது,''அதற்கு நான் என் செய்வது? அவர்கள் அவ்விதம் கூறுகிறார்கள் என்பதற்காக நான் மக்களுடன் தொடர்பு கொண்டு அறிவுரை பகராது ஒதுங்கி இருக்கப் போவதில்லை. நான் விரும்புவதெல்லாம் 'பிர்தௌஸ்' என்னும் சுவனத்தையும் இறையண்மையையுமே யன்றி அவர்களின் புகழ் மொழியையல்ல. அவர்கள் தம்மைப் படைத்துப் பரிபாலிக்கும் இறைவனையே குறை கூறும்பொழுது நான் எம்மாத்திரம்?'' என்று பதிலிறுத்தனர்.

''ஒருவன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டுதான் பிறருக்கு அறிவுரை பகர வேண்டும் என்று சிலர் கூறுகின்றார்களே. அது பற்றித் தங்களின் கருத்து யாது?'' என்று அவர்கள் வினவினர்.

இக்கேள்வியின் இரகசியத்தை விளங்கிக் கொண்ட இவர்கள், ''ஆம், ஒருவன் பிறருக்கு அறிவுரை பகர்வதற்கு முன் தான் அவ்வறி வுரையின்படிச் செயலாற்ற வேண்டும். அப்பொழுதுதான் மக்கள்

அவனைப் பின்பற்றுவர். இல்லையேல், அவன் தன் முயற்சியில் தோல்வியுறுவான்'' என்று கூறிய இவர்கள், ''மக்களை நன்மைகளைச் செய்யுமாறு ஏவி, தீமைகளைத் தவிர்ந்து கொள்ளுமாறு எச்சரிக்கை செய்யும் இறைவழித் தொண்டு இவ்வுலகில் இல்லாது ஒழிய வேண்டும் என்று ஷைத்தான் விரும்புகின்றான்'' என்று சுடச் சுடப் பதில் கொடுத்தார்கள்.

எனினும் கேள்வி கேட்டவர்கள் இவர்களை விட்டார்களில்லை. ''நோயாளன் தனக்கு முதலில் மருத்துவம் செய்து கொண்டல்லவோ பிறருக்கு மருத்துவம் செய்ய வேண்டும்'' என்று அவர்கள் இடக்காகக் கூறிய பொழுது, ''நான் கூறும் அறிவுரைகளைக் கேளுங்கள். அதன்படி நீங்கள் செயலாற்றுவீர்களாயின் நிச்சயமாக உங்களுக்கு நற்பலன் ஏற்படும். அதன்படி நான் செயலாற்றவில்லை என்றால் அதனால் உங்களுக்கு யாதொரு இழப்புமில்லை'' என்று இதமாகப் பதிலுரைத்தார்கள்.

மீண்டும் அம்மனிதர்கள் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''எங்களின் இதயங்கள் உறங்கிக் கிடக்கின்றன. எனவே தங்களின் அறிவுரைகளால் எங்களுக்கு யாதொரு நன்மையும் ஏற்படவில்லை. இதற்கு நாங்கள் என் செய்வது?'' என்று கூறியபொழுது, ''உங்களின் இதயங்கள் உறங்கிக் கொண்டிருக்கவில்லை. செத்து மடிந்துவிட்டன. அதனால் தான் அவனை என்னால் உயிர்தெழச் செய்ய இயலவில்லை'' என்று இவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

மேலும் அவர்கள் அம்மனிதர்களைப் பார்த்து, ''நான் பத்ருப் போரில் கலந்து கொண்ட எழுபது பேர்களைப் பார்த்துள்ளேன். அவர்கள் எத்தகையவர்களென்றால் அவர்களுக்கு இவ்வுலகம் பற்றிய எந்தப் பேச்சும் மகிழ்ச்சியளிக்காது. உலகாயுதப் பொருட்கள் எது கிடைப்பினும் அதுபற்றி அவர்கள் மகிழ்ச்சியுற மாட்டார்கள். தாங்கள் எப்பொருளை இழப்பினும் அதுபற்றி துக்கப்படவுமாட்டார்கள். உலகமும் அதிலுள்ள பொருள்களும் அவர்களின்முன் தூசிக்கு நிகராகவே இருந்தன. அவை எவரிடம் போய் உள்ளன; எவரிடமும் போய்த் தங்கியுள்ளன என்பவை பற்றியெல்லாம் அவர்களுக்கு அணுவத்தனையும் கவலை இல்லை.

''நீங்கள் செல்வம் வந்துற்றபோது எத்துணை மகிழ்ச்சியை அடைவீர் களோ, அத்துணை மகிழ்ச்சியை அவர்கள் துன்பம் எய்தியபோது அடைவார்கள். அவர்கள் உங்களைக் காணின் இவர்கள் ஷைத்தான் களேயன்றி வேறில்லை என்று கூறுவர். ஆனால் நீங்களோ அவர்களைக் காணின் இவர்கள் பித்தர்களேயன்றி வேறில்லை என்று பகர்வீர்கள். உங்களில் நல்லோர்களை அவர்கள் காணின் இவர்களிடம் நற்பண்புகள் இல்லையே என்று கூறுவார்கள். உங்களில் தீயோர்களை அவர்கள்

காணின் இவர்கள் நியாயத் தீர்ப்பு நாளை நம்பவில்லையே என்று கூறுவர். அவர்களிடம் ஒரே ஒரு துணியே இருந்தது. அதனை உடுத்திக் கொண்டே அவர்கள் வெறும் தரையில் படுத்துறங்குவர். நீங்கள் ஆகாத (ஹராமான) பொருள்களை நுகர்வதில் எத்துணைப் பேணுதலாக இருப்பீர்களோ அதை விட அதிகமான பேணுதலுடன் அவர்கள் ஆகுமான (ஹலாலான) பொருள்களையும் அணுகுவர். அவற்றால் தம் உள்ளம் மாகண்டுவிடுமோ என்று அஞ்சி அவற்றை நுகராது ஒதுக்கித் தள்ளியும் விடுவர்.''

''பொழுது பட்டதும் அவர்கள் வணக்கத்தில் ஈடுபட்டு விடுவர். அவர்கள் இறைவனிடம் தம் பவம் பொறுத்தருளுமாறு இறைஞ்சிக் கொண்டிருப்பார்கள். தம்மால் இவ்வுலகில் ஏற்பட்ட தீமைகளுக்காக வருந்தி இறைவனிடம் மன்னிப்புக்கோரி அழுது கெஞ்சிக் கொண்டிருப்பார்கள். தமக்கு இறைவன் செய்த நன்மைகளுக்கு அவர்கள் நன்றி செலுத்திக் கொண்டிருப்பார்கள். தம்முடைய நன்றியறிதலை இறைவன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஏங்கி, ஏங்கி இறைஞ்சிக் கொண்டிருப்பார்கள்.

''அவர்கள் அனைவரும் கம்பளி உடையையே அணிந்திருந்தனர். அபூபக்ர் (ரலி) அவர்கள் உலகைத் துறந்து ஒதுங்கி 'தஜ்ரீத்' நிலையில் இருக்கும் பொழுது கம்பளி உடையையே அணிந்து கொள்வார்கள். நான் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களைப் பார்த்துள்ளேன். அவர்களும் ஒட்டுப் போடப்பட்ட கம்பளி உடையையே அணிந்திருந்தார்கள்'' என்று கூறினார்கள்.

அப்பொழுது அம்மனிதர்கள், ''நாங்கள் மனோ இச்சையுடன் பெரும் போராட்டம் நிகழ்த்தி அறவழி செல்லும் நல்லோர் சிலரைப் பார்த்துள்ளோம். மற்றவர்களின் முகத்தைவிட அவர்களின் முகம் ஒளிர்கின்றதே. அதற்குக் காரணம்என்ன?'' என்று வினவியபொழுது, ''இதில்என்ன வியப்பு உள்ளது? அவர்கள் இறைதியானத்திலும் இறை சிந்தனையிலும் ஈடுபட்டுள்ளார்கள். அதனால் இறைவனின் பேரொளி அவர்கள் முகத்தில் பிரதிபலிக்கின்றது'' எனறு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மேலும் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அம்மனிதர்களைப் பார்த்து ''ஆன்மாவிலே இரண்டு எண்ணங்கள் ஊசலாடுகின்றன. ஒன்று இறை வனிடமிருந்து, மற்றொன்று ஷைத்தானிடமிருந்து. ஆன்மா தீய இச்சைகளைப் பின்பற்றிச் செல்லின் ஷைத்தான் மிகைத்து அதனை ஆக்கிரமித்து விடுகின்றான். ஆன்மா நல்ல இயல்புகளை மேற்கொளின் அமரர்கள் அதில் அரசாட்சி செய்யத் துவங்கி விடுகின்றார்கள்.

எனவேதான் 'தம்முடன் ஷைத்தானைப் பெற்றிராத ஒருவரும் உங்களில் இல்லை' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கிக் கூறினர். அப்பொழுது தோழர்கள் அவர்களை நோக்கி, ''நாயகமே! தங்களிலுமா ஷைத்தான் வாசம் செய்கிறான்?' எனறு வினவினர். அதற்கு அவர்கள் 'ஆம்; எனினும் அவனை வெற்றிகொள்ள எனக்கு இறைவன் பேரருள் பாலித்தான். அதன் காரணமாக அவன் அடங்கிவிட்டான். அவன் நல்லதைச் செய்யுமாறேயன்றி வேறொன்றையும் செய்யுமாறு என்னைத் தூண்டமாட்டான்' என்று பதில் கூறினர்'' என எடுத்துரைத்தார்கள்.

ஒருநாள் இவர்கள் தம் இல்லத்தில் தனியே வீற்றிருக்கும் பொழுது, சிலர் அவர்களிடமிருந்து, ''ஷைத்தான் எப்பொழுதேனும் உறங்குவானா?'' என்று வினவினர். அதற்கு இவர்கள் ''அவன் உறங்கினால்தான் நல்லதாயிற்றே. நாம் சிறிது நேரமாவது நிம்மதியாக இருக்கலாமே'' என்று பதில் கூறினார்கள் நகைச்சுவையோடல்ல, அழாக் குறையாக.

கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர்கள் மக்களுக்கு எடுத்துரைக்குங்கால் ''அறிவாளிகளின் எழுதுகோல் மையையும் மார்க்கத்திற்காக உயிர்நீத்த தியாகிகளின் இரத்தத்தையும் நாம் ஒன்றாக வைத்து நிறுத்துப் பார்த்தோமானால், அறிவாளிகளின் மையே மார்க்கத்திற்காக உயிர் நீத்தவர்களின் இரத்தத்தைவிட கனமாக இருக்கும்.

இறைவன் ''ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்தன் வஃபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபந்நார்' (எங்களின் இறைவனே! எங்களுக்கு இவ்வுலகிலும் அழகானதைக் கொடு; அவ்வுலகிலும் அழகானதைக் கொடு. நரக நெருப்பிலிருந்து எங்களைக் காத்தருள் வாயாக)'' என்று இறைஞ்சுமாறு நம்மிடம் கூறுகின்றான். இவ்வுலகில் அழகானது என்பது கல்வியேயாகும். அவ்வுலகில் அழகானது என்பது சுவனமாகும்.

''உலகில் கல்விமான்களான அறிஞர்கள் தோன்றாதிருப்பின் மனிதர்கள் மிருக நிலைக்கே ஆகியிருப்பார்கள்.''

''கற்றோர், தாம் கற்றதன்படிச் செயலாற்றாதிருப்பது விசனிக்கத்தக்கதாகும். அத்தகையோரில் ஒருவராக நீங்கள் ஆகிவிட வேண்டாம்.

''பொறுமை அறிவின் அமைச்சன். அன்பு அதன் தந்தை தாழ்மை அதன் ஆபரணம்.''

''அறிஞன் எவனெனில், 'இரவு முழுவதும் வணங்கவும், பகல் முழுவதும் நோன்பு நோற்கவும் செய்து உலகைத் துறந்து வாழ்பவனே யாவான்'' என்று அவர்கள் கூறினர்.

அவர்கள் மக்களுக்கு அறிவுரை பகர்ந்து வந்தது இறைவனுக்காகவேயன்றி வேறு எவ்வித உலகாயத நன்மையையும் எதிர்பார்த்தல்ல. ஒருநாள் அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்குங்கால் அவர்களுக்கு ஒருவர் ஒரு பணப்பையையும், சில துணிமணிகளையும் அன்பளிப்புச் செய்த பொழுது, ''மக்களுக்கு அறிவுரை பகர்பவன் அதற்குப் பகரமாக இங்கு எதனையும் பெற்றுக்கொளின் மறுமையில் அவனுக்கு இறைவனிடமிருந்து யாதொரு நற்பலனும் கிடைக்காது போய்விடும்'' என்று கூறி அவற்றை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

உலகப் பற்றின்மையே மறுமையில் ஈடேற்றம் பெறுவதற்கான வழி என்பதை வலியுறுத்திக் கூறிவந்த அவர்கள் ''இலேசான சுமையுள்ளவன் தப்பித்துக் கொள்வான். அதிகமாக சுமையுள்ளவன் அழிந்து போக வேண்டியதுதான்'' என்றும் கூறினர்.

ஒருநாள் அவர்கள் மக்களுக்கு அறபோதம் நல்கிக் கொண்டிருக்குங்கால், ''நிச்சயமாக (நம்முடைய) பொறுப்பைச் சுமந்து கொள்வீர்களா?'' என்று நாம் வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றிடம் கேட்டோம். அதற்கு அவை அது பற்றி அஞ்சி, அதனைச் சுமந்து கொள்ளாது விலகிவிட்டன. அத்தகைய பொறுப்பைத்தான் மனிதன் சுமந்து கொண்டான். (எனவே) அவன் நிச்சயமாக அவன் அறியாமையால் தனக்குத் தானே தீமை இழைத்துக் கொண்டான்'' (33:72) என்ற திருவசனத்தை ஓதி அதற்குப் பின்வருமாறு விளக்கம் கூறினார்கள்.

இறைவன் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு அமரர்களிடம் கூறினான். ''நீங்கள் இந்த அமானிதத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா? ஏற்று அதனை நீங்கள் அழகுபடுத்தின், நீங்கள் அதற்கான வெகுமதிகளைப் பெறுவீர்கள். மாறாக, அதனை நீங்கள் ஆபாசப்படுத்தினால் அதற்கான தண்டனையைப் பெறுவீர்கள்'' எனறு கூறினான். அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள்.

பின்னர் அவன் அதனை மனிதர்களிடம் ஒப்படைக்க, அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். அதற்கான காரணம், அவர்கள் தங்களின் ஆன்மாக்களுக்குக் கொடுமை செய்யும் இயல்பினராய் இருந்ததும் இறை கட்டளையின் தன்மையை அவர்கள் அறியாதிருந்ததுமாகும்.

இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன். அவர்கள் இப்பொழுது அந்தப் புனிதமான அமானிதத்தைப் பணத்திற்காக விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு அழகிய மாட மாளிகைகள் கட்டுகிறார்கள். ஆனால் அதே பொழுதில் தங்களின் புதைகுழிகளை

ஒடுக்கமாகச் செய்து கொள்கிறார்கள், அதைக்கொண்டு உண்டு, தின்று தங்களின் உடலைக் கொழுக்க வைக்கிறார்கள். ஆனால் தங்களின் மார்க்கத்தையோ மெலிந்து துரும்பாகச் செய்து விடுகிறார்கள். ஒருதடவை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தொந்தி பெருத்த ஒருவரைக் கண்ட பொழுது, 'நீர் அதனை வேறு வழிகளில் செலவளித்திருந்தால் நலமாக இருந்திருக்கும்' என்று கூறினர்.

மேலும் அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பற்றிக் கூறும் பொழுது, ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கழுதை மீது இவர்ந்து செல்வது வழக்கம். அவர்கள் கரடுமுரடான கம்பளி உடையை அணிந்துள்ளனர். உணவுண்டபின் தம் கைவிரலைச் சூப்புவார்கள். தரையில் அமர்ந்தே உண்பர். அப்பொழுது அவர்கள் 'நான் ஓர் அடிமை. அடிமை உணவுண்பது போன்றே உணவுண்பேன். அடிமை அமர்வது போன்றே அமர்வேன்' என்று கூறுவர். அவர்கள் ஒரு செங்கல்லுக்கு மேல் ஒரு செங்கல்லை வைத்தோ, ஒரு மரத்திற்கு மேல் ஒரு மரத்தை வைத்தோ தங்களின் இல்லத்தை எழுப்பவில்லை. நாங்கள் அவர்களின் இல்லத்தைச் சென்று பார்த்தபொழுது அதன் கூரையை எங்களின் கைகளால் தொட இயன்றது'' என்று கூறினர்.

ஒருதடவை ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் தம் கழுதையை விற்க எண்ணி அதற்கு நானூறு திர்ஹம் விலை கூறினர். வாங்க வந்தவன் அதன் விலையில் நூறு திர்ஹம் குறைக்க வேண்டுமென்று கூற 'நல்லது; முந்நூறு திர்ஹம் தா' என்றனர் அவர்கள். மீண்டும் அவன் 'எனக்கு இன்னும் சிறிது மலிவாகத் தாருங்கள்' என்று வேண்டியபொழுது 'சரி; இன்னும் ஒரு நூறு திர்ஹம் குறைத்துக்கொள்' என்று கூறினார்கள். அவன் இருநூறு திர்ஹம் கொடுக்க அவற்றை மகிழ்வுடன் பெற்றுக்கொண்டு தம் கழுதையை அவனிடம் ஒப்படைத்தனர். இவ்வாறு அவர்கள் செய்ததற்குக் காரணம் ''கொடுக்கல்-வாங்கலை இலகுவாக்குபவன் மீது அல்லாஹ் அருட்கிருபை செய்வானாக!'' என்றும், ''கொடுக்கல் வாங்கலை இலகுவாக்குபவனின் அனைத்துச் செயல்களையும் அல்லாஹ் இலகுவாக்குவானாக!'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் செய்த இறைஞ்சுதலை அவர்கள் அறிந்திருந்ததனாலேயாகும்.

ஒருவர் அவர்களிடம் சென்று ''தாராளத் தன்மை என்றால் என்ன?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''அல்லாஹ்வின் பாதையில் உம்முடைய செல்வத்தை அறம் செய்வதாகும்'' என்று விடையிறுத்தார்கள். அதன்பின் அவர் ''உலோபத்தனம் என்றால் என்ன?'' என்று வினவினார். அதற்கு அவர்கள்'' உம்முடைய செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் அறம் செய்யாதிருப்பதாகும்'' என்று பதில் மொழிந்தார்கள்.

மீண்டும் அவர், ''பணத்தைத் துஷ்பிரயோகம் செய்வது என்றால் என்ன?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''ஒருவன் தன் தீய இச்சைகளைத் திருப்திபடுத்துவதற்காக அதனைச் செலவழிப்பதாகும்'' என்று விடை பகர்ந்தார்கள்.

அவர்கள் இல்லையென்றிரப்போர்க்கு இல்லையென்று கூறா இயல்பினராகவும் விளங்கினர். ஒரு நாள் அவர்கள் ஒரு வழியே சென்று கொண்டிருக்கும் பொழுது ஓர் ஏழை அவர்களிடம் ஏதேனும் தர வேண்டுமென்று கேட்க அடுத்த கணமே அவர்கள் தம்மீது இருந்த போர்வையை எடுத்து அவரிடம் கொடுத்துவிட்டார்கள். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர், ''அவர் கேட்டு வாய் மூடு முன் தாங்கள் அணிந்திருந்த போர்வையை எடுத்து அவரிடம் கொடுத்து விட்டீர்களே. இல்லம் சென்று வேறொரு போர்வையை எடுத்துத் தாங்கள் அணிந்துகொண்டு இதனை அவரிடம் கொடுக்கக் கூடாதா?'' என்று வினவியபொழுது ''இதற்கு முன்னர் ஓர் ஏழை ஓர் இரவு பள்ளியில் வைத்து என்னிடம் ஏதாவது உண்ண உணவு வேண்டுமென்று வேண்டினார். நான் இல்லம் சென்று அனுப்பி வைப்பதாகக் கூறிச் சென்றேன். இல்லம் சென்ற நான் அதனை அடியோடு மறந்துவிட்டேன். அடுத்த நாள் வைகறையில் நான் பள்ளி வந்தபொழுது அவர் இறந்து கிடந்தார். அப்பொழுது எனக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. அதன்பின் நான் அவரைக் கஃபன் செய்து நல்லடக்கம் செய்தேன். அதன் பின் நான் அவருக்காக வாங்கிய கஃபன் துணி மிஃராபில் இருக்கவும் அதன் மீது 'உம்முடைய கஃபனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை' என்றும் பொறிக்கப்பட்டிருக்கவும் கண்டு, வியப்பும் வியாகூலமும் அடைந்தேன். அது முதல் எவரும் என்னிடம் எதையேனும் கேட்பின் அதனை அக்கணமே கொடுத்துவிடும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளேன்'' என்று கூறினார்கள்.

நேர்மையையே தங்களின் மணிமகுடமாகக் கொண்டு வாழ்ந்த இம்மேதை, எவருக்காக வேண்டியும் உண்மையை மறைப்பதில்லை. யஸீத் கலீபாவாக ஆனதும், இவர்கள் தங்களின் வெறுப்பை எடுத்துரைக்கச் சற்றேனும் தயங்கினார்களில்லை. இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக எவர் சொல்லினும் அவரை இவர்கள் கண்டித்தார்கள்.

ஒருதடவை இவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் பொழுது இராக் மாநில ஆளுநர் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் தம் பரிவாரங்களுடன் வந்து அங்கு அமர்ந்தார். அப்பொழுது அங்கு வீற்றிருந்த சில பெரியோர்கள், இவர்கள் அவரை மகிழ்விப்பதற்காகச்

சில புகழ் மொழிகளைக் கூறுவர் என்று எதிர்பார்த்தனர். ஆனால் இவர்களோ, அவர் வந்திருப்பதைச் சிறிதேனும் பொருட்படுத்தாது அவர் வீற்றிருந்த பக்கம் திரும்பிக்கூடப் பாராது தங்களின் சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டே சென்றார்கள். அது கண்ட அப்பெரியார்கள், ''ஹஸன் என்ற அவர்களின் பெயருக்கேற்ப அவர்களின் குணமும் ஹஸன் (அழகு) ஆகவே உள்ளது'' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். அவர்கள் சொற்பொழிவாற்றி முடிந்ததும் ஹஜ்ஜாஜ் அவர்களிடம் ஓடோடி வந்து அவர்களின் கைகளை முத்தமிட்டு, 'நீங்கள் உண்மையை உரைத்தீர்கள். இதுபோன்ற அரங்கங்களை நீங்கள் எப்பொழுதும் தொடர்ந்து நடத்திவர வேண்டும். ஏனெனில், 'அறிவுப் பிரச்சாரம் செய்யும் இடம் சுவனப் பூங்காவுக்கு நிகரானது' என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாகக் கேள்வியுற்றுள்ளேன்'' என்று கூறினார். பின்னர் அவர் மக்களை நோக்கி, ''உண்மையான ஆண்மகனைப் பார்க்க விரும்புவோர் ஹஸனைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று இயம்பினார்.

அதன்பின் ஹஜ்ஜாஜும் ஒரு சொற்பொழிவாற்றினார். அதில் ''நாங்கள் அரசாங்க நிர்வாகங்களில் ஈடுபட்டு விட்டோம். இல்லையெனில் இத்தகு கூட்டங்களில் நாங்களும் வந்து அமர்ந்து செவிசாய்த்துக் கேட்டுக் கொண்டிருப்போம். காரணம், இத்தகு கூட்டங்களினால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி உங்களைவிட நாங்கள் நன்கு அறிவோம்'' என்று தேனினும் இனிய தூய அரபியில் புன்முறுவல் பூத்தவண்ணம் பேசினார். அவரின் பேச்சு வன்மையைக் கண்டு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் உட்பட அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

அவர் சென்றதும் அவர் வீற்றிருந்த இடத்தில் சிரியா நாட்டினர் ஒருவர் வந்து அமர்ந்தார். அவர் ஆங்கிருந்தோரை நோக்கி ''அல்லாஹ்வின் நல்லடியார்களே! நான் என்னுடைய இந்த முதிய வயதில் மார்க்கப் போரில் கலந்து கொள்வதற்காகச் செல்கிறேன். இஃது உங்களுக்கு வியப்பை அளிக்கலாம். அதற்குமேல் உங்களுக்கு வியப்பை அளிக்கவல்லது, திருமணம் முடித்துக் கொடுக்கப் பெற வேண்டிய ஏழு பெண்மக்கள் எனக்கு உள்ளனர்; எனினும் அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்யக் கிளம்பிவிட்டேன்; எனக்கு அதற்கான ஆயுதங்கள், வாகனம் ஆகியவற்றை வாங்க வசதியில்லை; மக்கள் அதற்காக சேர்த்துக் கொடுத்த முந்நூறு திர்ஹாங்களே என்னிடம் உள்ளன என்பதாகும்'' என்று தம்அவல நிலையை எடுத்துரைத்தார்.

அவர் பேசுவதைத் தலை குனிந்து கேட்டுக் கொண்டிருந்த ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அவர் பேசி முடிந்ததும் ஆங்குக் குழுமி இருந்தோரை நோக்கிப் பின்வருமாறு பேசினர்:

''இறைவன் ஆளவந்தார்க்கு நல்லறிவைக் கொடுப்பானாக! அவர்கள் அல்லாஹ்வின் நல்லடியார்களைத் தங்களின் அடிமைகள் போன்று கருதுகிறார்கள். இறைவன் அவர்களிடம் அமானிதமாக அளித்த பொருள்களைத் தங்களுடையதென எண்ணிக் கொள்கின்றார்கள். அவர்கள் போர் மேற்செல்லும் பொழுது விலையுயர்ந்த வாகனங்களில் இவர்ந்து செல்கின்றார்கள், பாதுகாப்பான கூடாரங்களில் தங்கிக் கொள்கின்றார்கள். ஆனால் தம் முஸ்லிம் சகோதரனை அறப்போர் செய்ய அனுப்பும் பொழுதோ வெறுங்காலோடும், பசியோடும் அனுப்பு கிறார்கள். இஃதென்ன நீதி என்றே எனக்கு விளங்கவில்லை. அவர்கள் இறைவனுக்கு அஞ்சி, அவன் தங்களிடம் அளித்த அமானிதத்தைப் பேணி நடக்க வேண்டாமா?''

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டே சென்றார்கள். அவர்கள் பேசிய இப்பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் இதனை ஹஜ்ஜாஜின் செவிக்கு எட்டி வைக்கவே அவர்களை உடனே தம்மிடம் அழைத்து வரும்படி கூறினர். அவரிடம் சென்ற அவர்கள் சற்று நேரம் கழித்துப் புன்முறுவலுடன் வந்து மீண்டும் தாம் விட்ட இடத்திலிருந்தே பேச்சைத் துவங்கினார்கள்.

''நாம் இங்கு வந்து அமர்வதில் கூட அமானிதத்தைப் பேண வேண்டும். அமானிதம் என்பது பொருள்களைப் பேணுவது மட்டும் தான் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நான் கூறுவதைக் கேட்டு நெஞ்சில் இருத்திச் செயலாற்றுவதுமாகும். நீங்கள் வந்து என் முன் அமர்ந் திருக்கிறீர்கள். நான் உங்களை நம்பிச் சில செய்திகளை எடுத்துரைக்கிறேன். அவற்றை நீங்கள் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்து விட்டு மெதுவாக நழுவி, நெருப்புப் பொறி பறக்கும் சினமுடையவர்களிடம் போய்ச் சொல்லி விடுகிறீர்கள். இது நான் உங்களிடம் அளித்த அமானிதத்திற்கு மோசம் செய்வதாகும். இது பயங்கரமான மோசடி யாகும்.

''நான் ஹஜ்ஜாஜிடம் சென்றபொழுது, 'நாங்கள் போர் மேற் செல்லும் பொழுது வசதியுடன் செல்வதாகவும் ஏனையோரைப் பசியோடும் பட்டினியோடும் வெறுங்காலோடும் அனுப்புவதாகவும் தாங்கள் கூறியதாகக் கேள்வியுற்றேன். இனிமேல் இத்தகு பேச்சைக் குறைத்துக் கொள்ளுங்கள். இதன் காரணமாக நாங்கள் தங்களின் பேச்சை குறைத்து மதிப்பிடுவதாகக் கருதிக்கொள்ள வேண்டாம்' என்று கூறினார். அல்லாஹ் என்னை அவரின் பொல்லாங்கை விட்டும் காத்தருள் புரிந்தான்'' என்று கூறித் தம் பேச்சை முடித்தனர்.

ஒரு தடவை ஹஜ்ஜாஜின் அவையில் அறிஞர்களெல்லாம் கூடி இருந்தபொழுது அலீ (ரலி) அவர்களைப் பற்றிப் பேச்சு வந்தது.

அப்பொழுது ஆங்கிருந்தோர் அடலேறு அலீ (ரலி) அவர்களைப் பற்றி இருவேறு விதமான மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டனர். அப்பொழுது ஆங்கு வீற்றிருந்த ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் யாதும் கூறாது வாய் மூடி இருந்தார்கள். அதுகண்ட ஹஜ்ஜாஜ், அவர்களை நோக்கி, ''ஏன் பேசாதிருக்கின்றீர்கள்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''இக்காலை பேசுவதைவிடப் பேசாதிருப்பதே மேலானது'' என்று பதிலுரைத்தார்கள். அதன்பின் அலீ (ரலி) அவர்களைப் பற்றி அவர்களின் கருத்தைக் கூறுமாறு ஹஜ்ஜாஜ் பெரிதும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ''இறைவன் தன் திருமறையில் அண்ணல் நபி (ஸல்) அவர்களை நோக்கி, 'நீர் (இதுவரை நோக்கித் தொழுது கொண்டு) இருந்த திசையை (மாற்றாது) நாம் விட்டு வைத்திருந்ததெல்லாம் (அதை மாற்றியபின் நம்) தூதரைப் பின்பற்றுகிறவர் எவர்? பின்பற்றாது தம் குதிங்காற் புறமாகவே திரும்பி(ச் சென்று) விடுகிறவர் எவர்? என்பதை நாம் அறி(வித்து விடு)வதற்காகத்தான்' *(2:143)* என்று குறிப்பிட்டிருப்பது அலீ (ரலி) அவர்களைப் பற்றித்தான். இறைவனால் நேர்வழிகாட்டப்பட்ட நல்லடியார்களில் அலீ (ரலி) அவர்களும் ஒருவராவர். அண்ணலெம் பெருமானின் அருமை மருகர் அவர்கள். இறைவனாலும் மக்களாலும் அவர்களுக்கு நல்கப்பட்ட சிறப்பு மகத்தானது. அதற்கு மாற்றமாகப் பேசுவது ஒருபுறம் இருக்கட்டும்; அதுபற்றி எண்ணிப் பார்க்கும் உரிமைகூட எனக்கும் இல்லை, உங்களுக்கும் இல்லை. இங்குக் குழுமி இருக்கும் எவருக்கும் இல்லை. அவர்களிடம் யாதும் தவறு இருப்பின் அதற்குரிய பொறுப்பு இறைவனுடையது. அவர்களுக்கு எதிராக யாதும் கூற எனக்கு யாதோர் உரிமையுமில்லை.''

ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் இந்த நேரிய பதில் ஹஜ்ஜாஜுக்கு அளவற்ற மனவேதனையை அளித்தது. அவருடைய முகம் சிவந்தது. பேச வாயிழந்து அவர் வெளியேறினார். அவரைப் பின்தொடர்ந்து அவரின் அடிவருடிகளான அறிஞர்களும் வெளியேறினார்கள். அப்பொழுது ஆமிர் என்பார் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''தாங்கள் ஹஜ்ஜாஜைச் சினமுறச் செய்துவிட்டீர்களே. அவரின் உள்ளத்தையும் புண்படுத்தி விட்டீர்களே'' என்று கூறியபொழுது, ''தங்களைக் கூஃபவாசிகள் சிறந்த அறிஞரெனக் கூறத் தாங்களோ மனித உருவம் படைத்த ஷைத்தானிடம் வந்து, அவருக்கு ஏற்றவாறு பேசுகின்றீர்கள். இது ஓர் அறிஞருக்கு அழகா?'' என்று சுடச்சுடப் பதில் கூறினார்கள் அவர்கள்.*

* ஒரு தடவை ஹஜ்ஜாஜ், இவர்களை நோக்கி, 'உதுமான், அலி ஆகியோர் பற்றித் தங்களின் கருத்து யாது?' என்று வினவிய போது, ''முன் சென்ற தலைமுறையினரின்

மேலும் அவர்கள் கூறும்பொழுது ''நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். இன்று அதிகாரத்தைக் கைப்பற்றி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவோர் முழுக்க, முழுக்க சுயநலமிகளாகவும், நயவஞ்சகர்களாகவுமே இருக்கிறார்கள். இந்த பஸரா நகரத்திலிருந்து முனாஃபிக்குகளான நயவஞ்சகர்கள் வெளியேறிவிட்டால் இந்நகரமே வெறிச்சோடிக் கிடக்கும். அவ்வளவு அதிகமாக அவர்கள் இங்கு வாழ்கிறார்கள்'' என்று வெறுப்போடும் வேதனையோடும் எடுத்துரைத்தார்கள்.

மற்றொரு நாள் ஹஜ்ஜாஜ், அவர்களைத் தம் இல்லம் அழைத்து வரச் செய்து 'பணத்திற்காக வேண்டி இறைவனின் நல்லடியார்களை எவர் கொன்றொழிக்கிறாரோ அவரை இறைவன் அழித்தொழிப்பான் என்று நீர் கூறுகிறீரா?'' என்று வினவினார்.

அதற்கு அவர்கள் ''ஆம்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

''ஏன் அவ்வாறு கூறுகிறீர்?'' என்று மறுவினா விடுத்தார் ஹஜ்ஜாஜ்.

உடனே அவர்கள் ''மார்க்க சட்டதிட்டங்களை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்றும் அவற்றை அவர்களிடமிருந்து ஒளித்தல் கூடாது என்றும், இறைவன் மார்க்க விற்பன்னர்களிடமிருந்து உறுதிமொழி வாங்கியுள்ளான். ஆதலின் மார்க்கம் என்ன கூறுகின்றதோ அதனை மக்களிடம் ஒளிவு மறைவின்றி எடுத்துரைக்கிறேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

அதுகேட்ட ஹஜ்ஜாஜ் வேங்கையெனச் சீறி, ''வாயை மூடும். நான் விரும்பாத செய்திகளை என்னிடம் இனிமேல் கூற வேண்டாமென்று நான் உமக்கு எச்சரிக்கை செய்கிறேன்'' என்று சப்தமிட்டு அலறினார்.

மற்றொரு தடவை இவர்கள் பள்ளிவாயிலில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தக்கால் அங்கு ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபும் வந்து அமர்ந்து அவர்களின் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது இவர்கள், ''சிலருக்கு அதிகாரம் கையில் வந்ததும் அவர்கள் மற்றவர்களை எல்லாம் கொசுக்களைவிட அற்பமானவர்கள் என்று எண்ணத் துவங்கி விடுகின்றனர். இஸ்லாத்தில் உயர்வு, தாழ்வு என்பதற்கே இடமில்லை. இறைவனின் திருமுன் எல்லோரும் சமமேயன்றி வேறல்ல. அவ்விதமிருக்க, அழிந்துபோகக் கூடிய மனிதர்களே! நீங்கள் ஏன் அழிந்து போகக் கூடிய உங்களின் ஆற்றலைக் கொண்டு பெருமை பாராட்டுகின்றீர்கள்? மக்கள் உங்களின் தலைமைத் தனத்தை வெறுக்கும் பொழுது நீங்கள் ஏன் அவர்கள் உங்களைத் தங்களின் தலைவரென அழைக்க வேண்டுமென்று விரும்புகின்றீர்கள்?'' என்று வன்மையாக முழங்கினார்கள்.

கதி யாது?'' என்று ஃபிர்அவ்ன், மூஸா (அலை) அவர்களிடம் வினவியபோது, 'இறைவனே அறிவான்' என்று கூறிய பதிலையே நான் உமக்கும் கூறுகிறேன்'' என்று இவர்கள் பதிலிறுத்ததாக மற்றொரு வரலாறு கூறுகிறது.

இதற்கு ஒரு வாரத்திற்குப் பின் ஹஜ்ஜாஜிடமிருந்து அவர்களுக்கு ஒரு மடல் வந்தது. ''அநியாயக்காரன் கைபட்ட அதனை நான் என் கையாலும் தீண்டமாட்டேன்'' என்று கூறி மற்றவரைக் கொண்டு அதனைப் பிரித்துப் படிக்குமாறு செய்த அவர்கள், அதன்பின், ''ஹஜ்ஜாஜே! ஏழைகள் நீர் படுத்தும் கொடுமை தாங்காது புழுவெனத் துடிக்கும் பொழுது, நான் உம்மைச் சந்திக்க விரும்பவில்லை'' என்று பதில் எழுதியனுப்புமாறு செய்தனர்.

அது கண்டதும் ஹஜ்ஜாஜுக்கு ஏற்பட்ட சினத்திற்கு அளவில்லை. 'அவரைச் சிறை செய்து கொணர்க!' என்று ஆங்காரத்துடன் அலறினார் அவர். அவ்வாறே அவர்கள் சிறை செய்யப்பட்டு அவரின்முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பொழுது, ''என்னைப் பற்றி நீர் என்ன கூறுகின்றீர்?'' என்று அதட்டினார் அவர்.

சிறு நரியின் ஊளையைக் கேட்டு மதகரி நடுங்குமா என்ன? ''கூறுவதற்கு என்ன இருக்கிறது? மக்கள் உம்முடைய ஆட்சியை வெறுக்கின்றார்கள். நீர் அவர்களுக்குச் சொல்லொணா இன்னல்களை விளைத்து விட்டீர். நீர் ஓர் அநியாயக்காரர். இது முக்காலும் உண்மை. முழுக்க முழுக்க உண்மை. இந்தக் கசப்பான உண்மையை நான் உம்மிடம் எவ்வித அச்சமுமின்றி எடுத்துரைக்காவிடின் நான் எனக்கும் மக்களுக்கும் இறைவனுக்கும் அநியாயம் செய்தவனாகி விடுவேன்'' என்று கூறினர்.

அவர்களின் அவ்வீர உரை ஹஜ்ஜாஜின் உச்சியைப் பிடித்து ஒரு குலுக்கு குலுக்கியது. அடுத்த கணம் அவர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார் அவர்.

பின்னர் அவர் வயிற்றில் புற்றுநோய் ஏற்பட்டு இறப்புப் படுக்கையில் கிடக்குங்கால், ''இறைவனே! நானோ பெரும்பாவி. நீயோ பேரருளாளன். உன்னுடைய மன்னிக்கும் இயல்பை, பிடி மண்ணாகிய என்மீது சொரிந்தருள். நான் உன் மன்னிப்பைப் பெறத் தகுதியற்றவனென்றும் நீ என்னைப் பாழ் நரகில் வீழ்த்துவாயென்றும் மக்கள் ஒருமித்துப் பேசி நிற்கின்றார்கள். எனவே அவர்கள் பேசிக் கொள்வதைப் பொய்யாக்கி, 'நான் நாடியதைச் செய்வேன்' என்று நீ உன் திருமறையில் கூறி இருப்பதை என்பற்றிய வரையில் உண்மையாக்குவாயாக!'' என்று கூறிக் கொண்டிருந்தார். இதனைக் கேள்வியுற்ற ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், ''தீயவன் வீணாகப் பிதற்றிக் கொண்டுள்ளான். இவ்வாறு பிதற்றி மறுமைப் பேறுகளையும் பெற்றுக் கொள்ளலாமென்று எண்ணிக் கொண்டுள்ளான்'' என்று கூறினர்.

இதன்பின் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ஹஜ்ஜாஜைக் காணச் சென்றக்கால் அவர் இவர்களை நோக்கி, ''வேதனை தாங்க இயல

வில்லை'' என்று அலறினார். அப்பொழுது அவர்கள் அவரிடம், ''இறை பக்தர்களுக்கு யாதோர் இன்னலும் இழைக்க வேண்டாமென்று நான் எவ்வளவோ எடுத்துரைத்தும் நீர் கேட்கவில்லை'' என்று மொழிந் தார்கள். அதற்கு ஹஜ்ஜாஜ், இவர்களை நோக்கி, ''ஹஸனே! என் வேதனையை நீக்க இறைவனிடம் இறைஞ்சுமாறு நான் உம்மிடம் கோரவில்லை. அதற்கு மாறாக என் உயிர் போக்கி, என் வேதனையையும் போக்க இறைவனிடம் இறைஞ்சுமாறு உம்மிடம் வேண்டிக் கொள்கிறேன். என்னால் வேதனை தாங்க இயலவில்லையே. நான் என் செய்வேன்'' என்று அலறினார். அது கேட்டு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அழுதார்கள்.

இதன்பின் சின்னாட் கழித்து ஹஜ்ஜாஜ் இறந்த செய்தியை அவர்கள் கேள்வியுற்றதும், அவர்கள் தம் தலையைத் தரையிலே வைத்து 'ஸஜ்தா' செய்து, ''இறைவனே! நீ அவனை இறந்தொழியச் செய்துவிட்டாய். அவனோடு அவனின் முன் மாதிரியையும் (பிறர் பின்பற்றாவண்ணம்) அழிந்தொழியச் செய்வாயாக!'' என்று இறைஞ்சினர்.

மனிதன் இறைவனுக்கேயன்றி வேறு எவருக்கும் அஞ்சக் கூடாது என்னும் கருத்துக் கொண்டிருந்த இவர்கள் ஹஜ்ஜாஜுக்குப் பின் இராக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்ட இப்னு ஹுபைரா, தமக்குக் கலீபா அப்துல் மலிக் இப்னு மர்வான் இட்ட ஆணை நியாயமாகத் தெரிய வில்லை என்றும், எனவே என் செய்வதென்றும் இவர்களிடம் ஆலோ சனை கலந்த பொழுது, ''அப்துல் மலிக் விஷயத்தில் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ்வின் விஷயத்தில் அப்துல் மலிக்குக்கு அஞ்ச வேண்டாம்'' என்று இவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் கலீபா பதவி ஏற்றதும் இவர்களுக்கு எழுதிய மடலில், ''மாபெரும் பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கு நான் உள்ளத் தூய்மையுடன் பணியாற்ற வேண்டுமென்று இறைவனிடம் இறைஞ்சுங்கள். என் செயல்கள் அத்தனையையும் அணுவத்தனையையும் விடாது கண் காணிக்கக் கூடிய நல்லார் ஒருவரை என்னிடம் அனுப்பி வையுங்கள். அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும் அன்பையும் பெற விழைந்தே அத்தகைய கண்காணிப்பாளரை நியமிக்க எண்ணியுள்ளேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

அதற்கு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் எழுதிய பதிலில், ''தாங்கள் கூறிய வண்ணம் தங்களின் செயல்கள் அத்தனையையும் அணுவத் தனையும் விடாது கண்காணிக்கக் கூடிய நல்லார் ஒருவர் தங்களுடன் வந்து தங்கி இருக்கமாட்டார். தங்களிடம் பணியாற்றக் கூடிய ஒருவர் தங்களை ஒருபோதும் குறை கூறவும் துணியார். ஏனெனில், தாங்களோ

மாமன்னராக உள்ளீர்கள். ஆதலின் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். அவன் பிறரின் உதவியை விட்டும் தங்களைத் தேவையறச் செய்வான். எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றனரோ அவருக்கு உலகம் அஞ்சுகின்றது. எவர் அல்லாஹ்வுக்கு நாணமுறவில்லையோ அவர்மீது அது சிங்கம் போல் பாய்கின்றது. தாங்கள் மாபெரும் பொறுப்புச் சுமையைத் தாங்கிக் கொண்டுள்ளீர்கள். இப்பொழுது மக்கள் தங்களின் உதவியைப் பெரிதும் விழைந்து நிற்பர். திக்கற்றவர்களையும் தேவையற்றவர்களையும் தங்களைப் போன்ற மனிதர்களாகக் கருதுங்கள். தங்களுக்கென எதனை விரும்புகின்றீர்களோ அதனையே அவர்களுக்கும் விரும்புங்கள்; செய்யுங்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

மற்றொரு தடவை கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் தமக்கு அறிவுரை பகருமாறு மடல் தீட்டிய பொழுது இவர்கள் பின்வருமாறு பதில் எழுதினர்:

''தங்களுக்கு நான் சொல்ல வேண்டிய அறிவுரையை விட மிகப் பயங்கரமான, முக்கியமான பிரச்சினைகள் தங்களின் முன்வந்து நிற்கின்றன. அவற்றைத் தாங்கள் கவனிக்க வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். அறிந்து கொள்ளுங்கள். எவர் தம் உள்ளத்தைக் கண்காணித்தவராக இருக்கின்றாரோ அவர் வெற்றியடைவார். அவ்விதம் செய்யாது பொடுபோக்காக உள்ளவர் தோல்வியே காண்பார். தன் மன இச்சையின்படிச் செயலாற்றுபவர் வழிகேட்டிலாவார். எவர் பொறுமை யுடன் செயலாற்றுகின்றாரோ அவருக்குச் செல்வம் வந்தெய்தும். எவர் இறைவனுக்கு அஞ்சிப் பேணுதலாக ஒழுகி வருகிறாரோ அவர் நரகத்தை விட்டும் ஈடேற்றம் பெறுவார். எவர் அமைதியை மேற்கொள்கிறாரோ அவர் நல்ல படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வார். எவர் தாம் பெற்ற படிப்பினையின்படிச் செயலாற்றுகின்றாரோ அவர் தூர நோக்குடைய வராக இருப்பார், எவர் தூர நோக்குடையவராக இருக்கிறாரோ, அவர் அறிவார்ந்த பெருமகராக விளங்குவார்.

''தாங்கள் ஒரு தடவை தவறிழைத்துவிடின் அத்தவற்றினை மீண்டும் செய்யாது தங்களைக் காத்துக் கொள்ளுங்கள். மேலும் தாங்கள் செய்த அத்தவற்றினைப் பற்றி வருந்துவதோடு அதனைத் தங்களின் வாணாளில் மீண்டும் செய்யாது தவிர்ந்து கொள்ளுங்கள். தங்களுக்குத் தெரியாததைப் பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். சினம் ஏற்படின் அதனை அடக்குங்கள்.''

அவர்களின் அறிவுரை முழுவதும் இறப்பைப் பற்றியும் மறுமையைப் பற்றியும் பேணுதலுடன் நடந்து கொள்வதைப் பற்றியுமே இருந்தது. இறப்பைப்பற்றி அவர்கள் எடுத்துரைக்கும் பொழுது

ஒருவனின் உயிர் மூன்று விதமான கவலையோடேயன்றி அவனுடைய உடலை விட்டும் பிரியாது. அவை 1. தான் அரும்பாடுபட்டுச் சேர்த்த பொருளை அனுபவிக்க இயலவில்லையே என்ற கவலை. 2. தான் எண்ணிக் கொண்டிருந்த செயல்களையெல்லாம் எய்தப் பெற இயலவில் லையே என்ற துக்கம். 3. மறுமைக்கான தயாரிப்புகளைச் செய்து கொள்ள இயலவில்லையே என்ற ஏக்கம் என்று அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

பேணுதல் என்றால் என்னவென்பதைப் பற்றி இவர்கள் எடுத்து ரைக்கும் பொழுது ''(1) கடும் சினம் ஏற்பட்ட காலையும் உண்மை யையன்றி வேறொன்றையும் கூறாதிருத்தல். (2) அல்லாஹ் எதை வெறுக்கிறானோ அதனை ஏறிபட்டும் பாராதிருத்தல். (3) அல்லாஹ் எதை உவக்கிறானோ அதனைத் தானும் உவத்தல்'' என்று கூறினர். ''இவற்றில் அனுவத்தனை பேணுதலுடன் நடந்து கொள்வது ஆயிரம் ஆண்டுகள் தொழுவதைவிட, ஆயிரம் ஆண்டுகள் நோன்பு நோற்பதைவிட மேலானதாகும்'' என்றும் கூறினர்.

ஒருநாள் அவர்களிடம் ஒருவர் வந்து தம்முடைய வறுமையைப் பற்றி முறையிட்ட பொழுது ''இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரும்'' என்று கூறினார்கள். சற்று நேரத்தில் மற்றொருவர் வந்து தமக்கு மகப்பேறு இல்லை யென்றும் தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறும் கூறியபொழுது, ''நீர் இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோரும்'' என்று மொழிந்தார்கள். சிறிது நேரம் கழித்து வேறொருவர் வந்து தம்முடைய பண்ணையில் அவ்வாண்டு மழையின்மையின் காரணமாக நன்கு விளையவில்லை என்று கூறியபொழுது, ''நீர் இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோரும்'' என்று பகர்ந்தார்கள்.

அப்பொழுது,''ஆங்கிருந்த ரபீஉப்னு சுபைஹ் என்பவர் அவர்களை நோக்கி, ''தங்களிடம் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட பிரச்சினை களைக் கொண்டு வரும்பொழுது தாங்களோ அவர்களனைவருக்கும் ஒரே பரிகாரத்தைக் கூறுகின்றீர்களே'' என்று வியப்புடன் வினவியக்கால், ''உங்கள் இறைவனிடம் மன்னிப்பைக் கோருங்கள். நிச்சயமாக அவன் மிக மன்னிப்புடையோன்'' என்று கூறினேன். (அவ்வாறு செய்வீர் களாயின் தடைப்பட்டிருக்கும்) மழையை உங்களுக்குத் தொடர்ச்சியாகப் பொழியச் செய்வான். பொருள்களையும் மக்களையும் கொடுத்து உங்களுக்கு உதவி புரிவான். உங்களுக்குத் தோட்டங்களையும் உற்பத்தி செய்து அவற்றில் ஆறுகளையும் ஓடச் செய்வான்'' என்ற திருமறை வசனங்களை (71:10, 11, 12) அவர்கள் ஓதினார்கள்.

தொழுகையைப் பற்றி எடுத்துரைக்குங்கால் ஒருவன் தொழுகையை உள்ளச்சத்துடனும் மனம் ஒன்றியும் தொழ வேண்டும் என்றும் அவ்விதம்

தொழாதவனின் தொழுகை ஒருவனுக்குத் தீமை நல்குமேயன்றி நன்மை நல்காது என்றும் கூறிய இவர்கள், உள்ளச்சத்துடனும் மனம் ஒன்றியும் தொழப்படும் தொழுகையினால் ஒருவனுக்கு மூன்று விதமான சிறப்புகள் ஏற்படுகின்றன. (1) முதல் வானத்திலிருந்து அவனுடைய உச்சிவரை அவனுக்கு நன்மை சொரியப்படும். (2) அவனுடைய இரண்டு பாதங்கள் தொடுத்து முதல் வானம் வரை அவனைச் சூழ, வானவர்கள் நின்று கொண்டிருப்பர். (3) அப்பொழுது ஒரு வானவர், ''இவ்வடியான் தன் மீது இறைவன் சொரியும் பேரருளையும் சிறப்பையும் அறியவரு வானாயின் இவன் தொழுகையை ஒரு போதும் விடவும் மாட்டான். தொழுகையை முடித்து 'ஸலாம்' கொடுக்கவும் மாட்டான்' என்று கூறுவார்'' என மொழிந்தார்கள்.

மகன், தந்தை உறவு பற்றி இவர்கள் எடுத்துரைக்குங்கால், ''தந்தை, வழிதவறிச் செல்லும் பொழுது அவருக்கு அறிவுரை நல்குங்கள். அவர் அது கேட்டுச் சினமுறுவாராயின் நீங்கள் உங்களின் அறிவுரையை அத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள்.

ஒரு மகன் தன் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமை பற்றி அவர்கள் கூறுங்கால், ''தன் பெற்றோர் உயிரோடிருக்கும் காலம் வரை ஒருவன் மண முடிக்காதிருப்பது அறிவுடைமை'' என்று எடுத்துரைத் தார்கள். ஏன் என்று வினவிய பொழுது, ''தம் மருமகள் காரணமாக அவர்கள் தம் மகன் மீது அதிருப்தியுறக் கூடுமாதலால்'' என்று அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

நட்பு பற்றி அவர்கள் கூறுங்கால், ''நம்முடைய நண்பர்கள் ஒரு வகையில் பார்த்தால் நம்முடைய மனைவி, மக்களை விட மேலானவர்களாக உள்ளனர். ஏனெனில் அவர்கள் நமக்கு மார்க்கம் பற்றியும் இறைவனைப் பற்றியும் மறுமையைப் பற்றியும் நினைவுறுத்தும் பொழுது மனைவி மக்களோ இவ்வுலக வாழ்வைப் பற்றியே நினைவுறுத்துகின்றார்கள்'' என்று எடுத்தியம்பினர்.

மேலும் அவர்கள் இதுபற்றிக் கூறுங்கால், ''உன் அன்னை பெற்றெடுத்தால்தான் சகோதரன் என்று நினைக்காதே. உன் அன்னை பெற்றேடுக்காத எத்தனையோ சகோதரர்கள் உனக்கு இருக்கிறார்கள்'' என்று தெரிவித்தார்கள்.

நட்பின் பெட்பைப் பற்றி அவர்கள் கூறும் பொழுது, ஒருவர் தம் சட்டையை இரண்டாகக் கிழித்து ஒரு பாதியைத் தமக்கு வைத்துக் கொண்டு மற்றொரு பாதியைத் தன் நண்பருக்குக் கொடுத்தார் என்று கூறினர். நல்லோர்களுடனே தாம் நட்புறவு கொள்ள வேண்டு மென்று கூறி வந்த அவர்கள் 'தீயோர்களுடன் நட்புக் கொள்வது நல்லோ ரையும் ஐயக்கண் கொண்டு நோக்குமாறு செய்கிறது' என்று கூறினார்கள்.

ஒரு தடவை முகம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்களும், மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களும் அவர்களின் இல்லம் சென்றபொழுது ஆங்கு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களைக் காணவில்லை. ஆங்கொரு நாற்காலியின்கீழ் கூடையில் இருந்த உணவை எடுத்து முகம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்கள் உண்டபொழுது மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் அவர்களைத் தடுத்தார்கள். எனினும் அவர்கள் கேட்கவில்லை. அப்பொழுது உள்ளே நுழைந்த ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் தம் நண்பர் முகம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்கள் தம் உணவை உண்டு கொண்டிருப்பதைக் கண்டதும் பெரிதும் மகிழ்ந்தார்கள். அவர்களைப் பாராட்டவும் செய்தார்கள். காரணம், உண்மையான நட்பின் அடையாளம் அதுவென்பதே அவர்களின் கருத்தாக இருந்தது.

ஒருவன் தன் உடன்பிறந்தார்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றிக் கூறும்பொழுது, ''ஒருவன் தன் பெற்றோர்களின் உணவு, உடை ஆகியவற்றிற்காகச் செலவு செய்வதைப் பற்றிக்கூட இறைவனால் கேள்வி கணக்குக் கேட்கப்படுவான். ஆனால் தன் உடன் பிறந்தாரின் உணவு, உடை ஆகியவற்றிற்காகச் செலவழிப்பது பற்றி இறைவனால் கேள்வி கணக்குக் கேட்கப்படமாட்டான், இதைக் குறித்து அவனிடம் கேட்பதற்கு இறைவன் நாணமுறுகிறான்'' என்று கூறினர்.

ஒருநாள் சிலர் அவர்களை அணுகி, ''இஸ்லாம் என்றால் என்ன? முஸ்லிம்கள் என்றால் யார்?'' என்று வினவினர்.

அதற்கு அவர்கள் ''இஸ்லாம் நூல்களில் தாம் உள்ளன. முஸ்லிம்கள் புதை குழிக்குள் தான் இருக்கிறார்கள்'' என்று வருத்தத்துடன் பதில் மொழிந்தார்கள்.

மற்றொரு நாள் சிலர் அவர்களிடம் வந்து, ''தாங்கள் ஒரு முஃமினா (இறை நம்பிக்கையாளரா)?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் ''இன்ஷா அல்லாஹ்'' (இறைவன் நாடினால்) என்று பதில் மொழிந்தனர்.

அப்பொழுது அவர், ''தாங்கள் கூறும் பதில் பொருத்தமற்ற பதிலாக உள்ளதே'' என்று கூறிய பொழுது ''நான் என்னை ஒரு முஃமின் என்று சொல்லிக் கொள்வேன். ஆனால் நான் பொய்யுரைப்பதாக இறைவன் கூறி விடுவானோ என்று நான் அஞ்சுகிறேன்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

இவர்கள் காரண மகிமை பெற்றவர்களாகவும் விளங்கினர். ஒரு வெள்ளி இரவு அப்துல்லாஹ் என்பவர் தொழுவதற்காகப் பள்ளி சென்ற பொழுது அதன் கதவுகள் தாளிடப்பட்டிருந்தன. எனினும் சாவித் துளையின் மூலம் அவர் உள்ளே உற்று நோக்கிய பொழுது ஆங்கு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் வீற்றிருந்து 'துஆ' கேட்கவும் ஏராளமான பேர் 'ஆமீன்' கூறிக் கொண்டிருக்கவும் கண்டார். அது கண்டு வியப்புற்று

இல்லம் திரும்பிய அவர் வைகறைத் தொழுகைக்குப் பள்ளி சென்று காலை தொழுது முடிந்ததும், ஆங்கு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் மட்டும் தனியாக வீற்றிருப்பதைக் கண்டு இரவில் தாம் கண்ட அதிசயத்தைப் பற்றி வினவிய பொழுது, ''ஒவ்வொரு வெள்ளி இரவும் ஜின்கள் என்னிடம் அறிவுரை கேட்க வருகின்றன. அவற்றிற்கு நான் அறிவுரை வழங்கி 'துஆ' செய்கிறேன். நீர் இதனை எவரிடமும் எடுத்துரைக்காதீர்!'' என்று கூறினார்கள்.

மற்றொரு தடவை இவர்கள் சிலருடன் சேர்ந்து மக்காவுக்கு ஹஜ்ஜுச் செய்யப் புறப்பட்டார்கள். பாலை நடுவே அவர்கள் நடந்து செல்லும் பொழுது, அவர்கள் அனைவருக்கும் பெரிதும் தாகவிடாய் ஏற்பட்டது. தண்ணீர் கிடைக்குமா என்று சுற்று முற்றும் பார்த்தார்கள். தொலைவில் ஒரு கிணறு தென்பட்டது. அதை நோக்கி அவர்கள் ஆவலோடு சென்றார்கள். ஆனால் அவர்கள் அங்குச் சென்று பார்த்த பொழுது அவர்களுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. என்ன அந்த ஏமாற்றம்? அவர்கள் கண்டது போல் அது கிணறே கிணறுதான். அதில் தண்ணீரும் இருக்கத்தான் செய்தது. ஆனால் அத்தண்ணீரைக் கிணற்றிலிருந்து வெளியே எடுப்பதற்கு அங்கு வாளியோ கயிறோ இல்லை. என் செய்வதென அறியாது அவர்கள் தத்தளித்த பொழுது ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், அவர்களை நோக்கி, ''நான் தொழச் செல்கிறேன். இறைவன் அருள்பாலிப்பான். தண்ணீர் கிணற்றிலிருந்து பொங்கி வரும். அருந்தித் தாகம் தீருங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்கள். உண்மையில் அவ்விதமே ஆனது. கிணற்றிலிருந்து நீர் பொங்கி வந்தது; அனைவரும் அதனை அள்ளி, அள்ளி அருந்தி மகிழ்ந்தார்கள். அவர்களில் ஒருவர் ஓடோடிச் சென்று தம்முடைய தண்ணீர்ப் பையை எடுத்து வந்து; அதில் தண்ணீரை நிரப்பிக் கொண்டார். அவ்வளவுதான், பொங்கி வழிந்த தண்ணீர் படமெடுத்து ஆடிய நாகம் தன் படத்தைச் சுருக்கிக் கொண்டது போன்று, கிணற்றின் அடிமட்டத்தில் போய்த் தங்கிக் கொண்டது.

இவர்கள் தொழுது முடித்துவிட்டு மீண்டதும், நடந்ததை எடுத்துரைத்தார்கள் தோழர்கள். அப்பொழுது இவர்கள், அவர்களை நோக்கி ''இறைவனை நீங்கள் முழுக்க முழுக்க நம்பி அவன் மீது நீங்கள் ஆதரவு (தவக்குல்) வைத்தபொழுது, தண்ணீர் பொங்கித் துளும்பி உங்களிடம் வந்தது. நீங்கள் தண்ணீர்ப்பை மீது ஆதரவு வைத்தபொழுது அது போய்விட்டது'' என்று கூறினார்கள்.

ஒருநாள் இவர்கள் தங்களின் இல்லத்தில் வீற்றிருக்கும் பொழுது, ''தங்களின் அண்டை வீட்டுக்காரரான ஷம்ஊன் என்ற தீ வணங்குபவர் இறப்பின் கொடும்பிடியில் கிடந்து தத்தளிக்கிறார். அவரைச் சென்று கண்டு வாருங்கள்'' என்று ஒருவர் கூறிச் சென்றார். அவ்வாறே அவரைப்

பார்த்துவர அவரின் இல்லம் சென்ற அவர்கள் அவர் இறப்புப் படுக்கையில் கிடப்பதையும் அவரருகே தீ எறிந்து கொண்டிருப்பதையும் கண்டு, ''ஷம்ஊனே! நீர் இத்தருணத்திலாவது இஸ்லாத்தைத் தழுவி இறையருள் பெறுவீராக!'' என்று கூறினர்.

அதுகேட்ட அவர், ''தாங்கள் கூறுவது சரி; ஆனால் தங்களின் இனத்தார் சொல்வது ஒன்று, செய்வது வேறாகவல்லவோ உள்ளது. (1) நீங்கள் இவ்வுலக வாழ்வை இழிந்துரைக்கின்றீர்கள். ஆனால் இவ்வுலக இன்பங்களையே அல்லும் பகலும் துரத்திச் செல்கின்றீர்கள். (2) இறப்பு தவிர்க்க முடியாதது என்று கூறுகின்றீர்கள். ஆனால் அதற்கான யாதொரு தயாரிப்பையும் நீங்கள் செய்வதில்லை. (3) இறைவனின் திருக் காட்சியைக் காண இயலும் என்று கூறுகின்றீர்கள். ஆனால் அவனின் திருவுளப் பொருத்தத்திற்கு மாற்றமான செயல்களையே செய்கின்றீர்கள்'' என்று கூறினார்.

அதற்கு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், ''நல்லது; முஸ்லிம்கள் தாம் இவ்வாறு நடந்து கொண்டார்கள் என்றால் நீர் எழுபதாண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தீர்? முஸ்லிம்களாவது உருவமற்ற ஓரிறையை வணங்கும் பொழுது நீர் நெருப்பையல்லவோ வணங்கிக் கொண்டிருந்தீர். அதற்காக அது உமக்கு ஏதாவது நன்மை செய்யுமா என்றால், இல்லை. நீர் அதில் உம் கையை நுழைப்பின் அதுஉம் கையை எரித்துச் சாம்பலாக்கி விடும். ஆனால் அதனால் எனக்கு எவ்விதத் தீங்கும் செய்ய இயலாது'' என்று கூறி, அருகே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பில் தம் கையை நுழைத்துச் சற்று நேரம் வைத்திருந்து வெளியே எடுத்தனர். நெருப்பு தன் எரிக்கும் ஆற்றலற்று நாணிக் கோணி ஆடியது. அவர்களின் கையோ அத்தீயால் யாதொரு தீமையும் செய்யப் பெறாது எப்பொழுதும் போல், இப்பொழுதும் இலங்கிக் கொண்டிருந்தது.

அதுகண்டு பெரிதும் வியப்புற்ற அவர், ''நல்லது; தங்களின் மார்க்கமே மேலானதென்றும் தங்களின் நாயனே உண்மையான இறைவன் என்றும் நான் உணர்ந்து கொண்டேன். எனினும் தங்களின் இறைவன் நான் இதுகாறும் செய்து வந்தவைகளுக்காக மறுமையில் என்னைத் தண்டிப்பானோ என்று எனக்கு ஐயமாக உள்ளதே அவன் என்னைத் தண்டிக்கமாட்டான் என்று நீங்கள் ஓர் உறுதிப்பத்திரம் எழுதித் தந்து அதில் இந்நகர்வாழ் முஸ்லிம் பெருமக்களெல்லாம் கைசாத்திட்டுத் தரின் நான் இஸ்லாத்தில் இணைகின்றேன்'' என்று கூறினார். ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அவ்விதமே செய்து கொடுக்க ஷம்ஊனும் தாம் கூறியவண்ணம் இஸ்லாத்தைத் தழுவினார்.

இதன்பின் அவரது இறப்பின் நேரம் அண்மியது. தாம் இஸ்லாத்தைத் தழுவியதற்கான ஒரு சான்றிதழாக இருக்கும் வண்ணம் அப்பத்திரத்தைத்

தம் கையில் வைத்து நல்லடக்கம் செய்யுமாறு கூறிவிட்டு அவர் இறுதியாகத் தம் கண்களை இறுக மூடிக்கொண்டார். அவரின் இறுதி வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. அவரின் நல்லடக்கத் தொழுகையில் ஏராளமான முஸ்லிம்கள் கலந்து கொண்டார்கள்.

அன்றிரவு முழுவதும் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களுக்குச் சரியாகத் தூக்கமே வரவில்லை. படுக்கையிலே கிடந்து அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தார்கள். ''நானே பெரும் பாவியாக இருக்கும் பொழுது, மற்றொருவருக்குப் பாவமன்னிப்புப் பத்திரம் எழுதிக்கொடுத்து விட்டேனே. இவ்வாறு செய்ய எனக்கு என்ன உரிமையுள்ளது? இஃது அல்லாஹ்வின் மாபெரும் உரிமையில் தலையிட்டது போல் ஆகாதா?'' என்று எண்ணி வருந்திக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது திடீரென ஓர்உறக்கம் அவர்களை ஆட்கொண்டது. ஷம்ஊன், அவர்களின் முன் மணிமுடி தரித்த மன்னர் போன்று காட்சி வழங்கினார். அவரைக் கண்டதும், ''ஷம்ஊனே! உம் நிலை யாதாயிற்று?'' என்று பதறிப் பதறி வினவினார்கள் அவர்கள். ''அதைப் பற்றிக் கேட்கவுமா வேண்டும்? அதைத்தான் தாங்கள் இப்பொழுது நேரில் காண்கின்றீர்களே'' என்று கூறிய அவர், ''இறைவன் என் பவம் பொறுத்து என்னை ஆட்கொண்டான். எனவே தாங்கள் எழுதித் தந்த பாவ மன்னிப்புப் பத்திரம் இனி எனக்குத் தேவை இல்லை. அதனை எனக்கு எழுதித் தந்தது பற்றித் தாங்கள் கொண்ட கவலையையும் இனி விட்டொழிக!'' என்று கூறிவிட்டு மறைந்தார். திடுக்குற்று விழித்தெழுந்த ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் இறைவனைப் புகழ்ந்தேத்தி, ''இறைவ எம்பெருமா! எழுபதாண்டுகளாகத் தீயை வணங்கியவரின் பவம் பொறுத்து அவரை ஆட்கொண்டாயே. எழுபதாண்டுகளாக உன்னை வணங்கி வரும் முஸ்லிமைக் கைவிடவா போகின்றாய்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்கள்.

ஆனால் இறைவன் தன்னை மன்னிப்பான் என்று கூறிக் கொண்டு, பவம் புரிந்து கொண்டிருப்பவனை இறைவன் ஒரு போதும் மன்னிக்க மாட்டான் என்று இவர்கள் கருத்துக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் ஒருவர் இவர்களிடம் வந்து இத்தகைய ஒருவனைப் பற்றிக் கூறிய பொழுது, ''இரவில் இறைவனின் முன் தலைவணங்கி கைகட்டி நின்று மறுமையைப் பற்றி அஞ்சித் தன் இறைவனின் பேரருள் கிடைக்குமென்று நம்பும் அடியான் ஒருவன் இறைவனுக்குக் கீழ்ப்படியாத ஒருவனுக்குச் சமமாக முடியுமா?'' என்ற இறை வசனத்தை இவர்கள் ஓதிக் காட்டினார்கள்.

இவர்கள் பிறவியிலேயே அழகு மிக்கவர்களாக இருந்த போதினும், இவர்கள் குதிரை மீதிருந்து கீழே விழுந்ததன் காரணமாக இவர்களின்

மூக்குமுனை உடைபட்டு இவர்களின் அழகு சற்று மாசுகண்டது. எனினும் நீங்கா வணக்கத்தின் காரணமாக இவர்களின் முகத்தில் ஒரு தெய்வீகக்களை ஒளிர்ந்து கொண்டிருந்தது. அளவற்ற இறையச்சத்தின் காரணமாக எப்போதும் துக்கம் தோய்ந்த முகத்துடன் காணப்பெற்ற இவர்களை நோக்கி, ''தாங்கள் எப்பொழுதாவது, மகிழ்ச்சியுற்றதுண்டா? என்று மக்கள் வினவியபொழுது, ''ஆம்; மகிழ்ச்சியுற்றுள்ளேன். ஒருநாள் என் அண்டை வீட்டுப் பெண்ணொருத்தி தன் கணவனை நோக்கி, ''நீ என்ன செய்த போதினும் நான் பொறுத்துக் கொண்டேன். நான் உன் அன்பைத் தவிர வேறொன்றையும் உன்னிடமிருந்து விரும்பவில்லை. ஆனால் நீ இன்று வேறொருத்தியை உற்று நோக்கியதை என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. ஒரு போதும் பொறுத்துக் கொள்ளவும் மாட்டேன்'' என்று கூறியதைக் கேட்டதும் நான் அளவற்ற மகிழ்ச்சிக் கண்ணீர் உகுத்தேன். இதற்கு ஆதரவாகத் திருமறையில் ஏதேனும் உள்ளதா என்று அதன் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும் பொழுது, 'திட்டமாக, அல்லாஹ் தனக்கு இணைவைப்பதைப் பொறுக்கமாட்டான்; அதைத் தவிர உள்ள ஏனைய பாவங்கள் அனைத்தையும் தான் நாடியவர்களுக்குப் பொறுத்தருள்வான்' என்ற திருவசனத்தைக் கண்ட பொழுது, என் மகிழ்ச்சி பன்மடங்கு அதிக மாகியது'' என்று கூறினர்.

அறிவைத் தேடுவதைத் தவிர்த்து ஏனையவற்றிலெல்லாம் மார்க்கப் போரில் ஈடுபடுவதே மாண்புடைத்து என்று கூறி வந்த அவர்கள், பல் வேறு மார்க்கப் போர்களில் ஈடுபட்டு இஸ்லாத்திற்காக, இறைவனுக் காகப் போர் செய்துள்ளார்கள். காபூலை முதன்முறையாக வெற்றி கொண்டபோரிலும் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

திருக்குர்ஆனைத் தவிர்த்து வேறோர் செல்வமும் இல்லை; திருக்குர்ஆனைத் தவிர்த்து வேறோர் தேவையும் நமக்கு இல்லை என்று கூறி வந்த அவர்கள் திருக்குர்ஆனுக்கு ஒரு விளக்கவுரையும் எழுதி யுள்ளனர். அதில் சூரா முஸம்மிலுக்கு அவர்கள் எழுதிய விளக்க வுரையில், தீயோர், பகைவர், அநியாயக்காரர்கள் ஆகியோரின் கொடும் பிடியில் சிக்கி அவதியுறுவோர், சூரா முஸம்மிலை ஓதிவரின் பேரரு ளாளனாகிய அல்லாஹ் அவர்களை அக்கொடியோர்களின் பிடியிலிருந் தும் விடுவித்துக் காத்தருள் புரிவான் என்று எடுத்துரைக்கிறார்கள்.

இறுதியாக அவர்கள் இவ்வுலகு நீக்கும் காலமும் வந்து சேர்ந்தது. கி.பி. 728-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10-ஆம் நாள் (ஹிஜ்ரி 110 ரஜப் மாதம் முதல் தேதி) அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடந்தார்கள். அப்பொழுது அவர்கள் பிரக்ஞையற்ற நிலையிலாயினர். சற்று நேரத்திற்குப் பின் அவர்களுக்கு உணர்வு ஏற்பட்டது. அப்பொழுது

அவர்கள், ''என்னைத் தோட்டங்களிலிருந்தும் நீர்ச்கனைகளிலிருந்தும் அப்புறப் படுத்தி விட்டீர்கள்'' என்ற இறைவசனத்தை (26: 57, 58) முணுமுணுத்தார்கள். அதன்பின் சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்களின் உயிர் அவர்களின் உடலை விட்டுப் பிரிந்து சென்றது.*

அவர்களின் இறப்புச் செய்தி நொடி நேரத்தில் பஸரா முழுவதும் பரவிவிட்டது. மக்கள் சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்ந்தார்கள். கதறி அழுதோர் பலர். மயங்கி விழுந்தோர் சிலர். மாதவம் பெற்ற இம்மாத வரை, மாதவம் செய்த இம்மாதவரைப் போன்று மற்றொருவரை இந்த மாநிலம் மாதக் கணக்காகவல்ல, ஆண்டுக்கணக்காகவல்ல, யுகக் கணக் காகக் காத்திருந்த போதினும் காணுமோ, காணுமோ என்று கதறி அழுதார்கள். அழுது கதறிய போதினும் என்? அலறித் துடித்த போதினும் என்? மாண்டவர் வருவரோ இம்மாநிலத்தில் என்பதை அறியாது அவர்கள் அழுது புரண்டார்கள்.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப் பின் அவர்களின் உடலம் நல்லடக்கம் செய்யப்பட்ட பொழுது அதில் பஸரா நகரம் முழுவதுமே கலந்து கொண்டது. எனவே பள்ளிவாயலில் பிற்பகல் (அஸர்) தொழுகையை நடத்த ஒருவருமே இல்லாது அது வெறிச்சோடிக் கிடந்தது. இஃது, இப்னு ஹல்லிகான் கூறுகின்றபடி, இஸ்லாமிய வரலாற்றில் என்றுமே காணாத புதுமையாகும். என்றுமே காணாத இத்தகு புதுமையை இனி இவ்வுலகம் என்று காணுமோ யாரறிவார்?

---

* பரீதுத்தீன் அத்தார் எழுதிய 'தத்கிரத்துல் அவ்லியா' என்ற நூலில் என்றுமே சிரிக்காத அவர்கள் இறப்பதற்கு முன் சிரித்தார்கள் என்றும் எந்தப் பாவம், எந்தப் பாவம் என்று கூறிக் கொண்டே உயிர் நீத்தார்கள் என்றும் அவர்கள் இறந்தபின் அவர்களை ஒருவர் கனவில் கண்டு அவர்கள் சிரித்ததற்கும் அவ்வாறு அவர்கள் கூறியதற்கும் காரணம் என்னவென்று வினவியபோது, ''இஸ்ராயீல் (அலை) அவர்கள் என்னை அணுகியபொழுது, 'அவரின் பாவங்களில் ஒன்று மீதமாயுள்ளது. ஆதலின் அவரின் உயிரைக் கடுமையாகக் கைப்பற்றும்' என்று ஓர் அசரீரீ முழங்கியது. அதுகேட்டு நான் சிரித்து, 'அது எந்தப் பாவம்?' என்று வினவினேன். அதற்குள் என் உயிர் வாங்கப்பட்டது'' என்று பதில் கூறினர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொருவர் அவர்கள் இறந்த இரவு விண்ணகத்தின் வாயல் களெல்லாம் திறக்கப்பட்டிருப்பதைக் கனவில் கண்டார். அக்கனவில் ஒருவர், 'ஹஸன் பஸரீ (ரஹ்) இறை சமூகத்தை வந்தடைந்து விட்டார்' என்று முழங்கிக் கொண்டு செல்வதையும் செவியுற்று விழித்தெழுந்தார் என்று அதே நூலில் பொறிக்கப்பட்டுள்ளது.

# 4. மாலிக் இப்னு தீனார் (ரஹ்)

ஊர்க் காவல்காரராக இருந்த அவரோ ஒரு குடிகாரர். எப்பொழுதும் மது மயக்கத்திலேயே மூழ்கித் திளைப்பவர். தம் பெண் குழந்தையுடன் விளையாடுவதே அவரின் பொழுது போக்கு. அதன் மீது அவர் அளவற்ற அன்பு வைத்திருந்தார். ஆனால் அதுவோ அவரை அழவைத்துவிட்டுத் தன் சின்னஞ் சிறு வயதிலேயே இவ்வுலகை விட்டும் பிரிந்து சென்றது.

இதன்பின் நாட்கள் பல நகர்ந்தன. அது ஒரு பராஅத் இரவு-வெள்ளி இரவாக இருந்தது. மது அருந்திவிட்டு, அந்தப் போதையில் இரவுத் தொழுகையைக் கூடத் தொழ மறந்து விட்டு அயர்ந்து உறங்கினார் அவர். அப்பொழுது அவர் ஒரு கனவு கண்டார். மஹ்ஷர் வெளியிலே மக்களெல்லாம் திரண்டு நிற்கின்றார்கள். அப்பொழுது ஒரு கரும்பாம்பு இவரைத் துரத்திக் கொண்டு வருகிறது. இவரோ வெருண்டோடுகின்றார். வழியில் வெண்ணாடை அணிந்த நல்லார் ஒருவரைக் கண்டு தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறார். அது கேட்ட அந்நல்லார், ''என்னால் உன்னைக் காப்பாற்ற இயலாதே; நானோ வலுவற்றவன், அதுவோ வலுவானது. நான் என் செய்வேன்? எனினும் விரைந்தோடு. தப்பிப் பிழைக்க ஒரு வழி ஏற்படும்'' என்று கூறுகிறார். அவ்வாறே இவர் ஓடுகிறார். ஓடுகிறார். ஓடி ஓடி நரகத்தின் விளிம்பிற்கே வந்து விடுகிறார். இன்னும் சில கணங்களில் இவர் அதில் விழுந்து விடுவார் போல் தோன்றுகிறது. அப்போது ஓர் அசரீரி பின்வருமாறு முழங்குகிறது. ''திரும்பிச் செல்லும்; நீர் இதற்காகப் படைக்கப்பட்டவரல்லர் என்று''. அது கேட்டு இவர் திரும்பிச் செல்கிறார். பாம்பும் இவரைத் துரத்திக் கொண்டு வருகிறது. வழியில் மீண்டும் வெண்ணாடை புனைந்த அந்த நல்லாரைக் காண்கிறார். ''தாங்கள் என்னைக் காப்பாற்ற மாட்டேன் என்கிறீர்களே'' என்று இவர் கண் கலங்கி அலறுகிறார். அதற்கு அவர், ''நான் என்ன செய்வது? நான் வலுவற்றவனாயிற்றே'' என்று தம் ஆற்றாமையை எடுத்துரைக்கிறார். அதன் பின் அவர் இவரை நோக்கி, ''அதோ தெரிகின்றதே ஒரு மலை. ஆங்குச் செல். அங்கு முஸ்லிம்களின் அடைக்கலப் பொருள்கள் உள்ளன. அவற்றின் மூலம் உனக்கு அடைக் கலம் கிடைக்கலாம்'' என்று கூறுகின்றார்.

அவர் கூறிய வண்ணம் இவர் அம்மலையை நோக்கி ஓடுகிறார். பாம்பு இவரை விடாது துரத்திக் கொண்டு வருகிறது. அதில் பொன்னாலும் மணியாலும் ஆன இரண்டு வாயல்கள் உள்ளன. அவற்றில் திரை தொங்கவிடப்பட்டுள்ளது. இவர் அதனை அடைந்ததும், ''திரையை அகற்றுங்கள். இந்த ஏழைக்கு இங்கு அபயம் இருக்கக் கூடும்'' என்று கூறப்படுகிறது.

உடனே திரைகள் விலகுகின்றன. உள்ளிருந்து ஒளிர் வண்ண ஓவியம் போல் குழந்தைகள் வெளியே வருகின்றன. இதற்குள் பாம்பு அவரை நெருங்கி விடுகிறது. இதோ, அவர் பாம்பின் வாயில் அகப்பட்டு அதன் வயிற்றில் அடைக்கலம் புகுந்து விடுவார் போல் தோன்றுகிறது. அப்பொழுது அக்குழந்தைகளில் ஒன்று சரேலெனப் பாய்ந்து தன் இடக்கரத்தால் அவரை அணைத்து வலக் கரத்தால் ஓர் எறி ஈட்டியை அப்பாம்பின் மீது வீசி எறிகிறது. என்ன வியப்பு! விரட்டிக் கொண்டு வந்த பாம்பு வெருண்டோடுகிறது.

அதன்பின் அவரைக் கீழே அமரச் செய்து அவரின் மடி மீதமர்ந்து அவரை நோக்கி,'அப்பா' என்று தன் பிஞ்சு வாய் திறந்து மழலை மொழியால் விளிக்கிறது. அப்பொழுது அவர் தம் கண்களை அகல விரித்து அக்குழந்தையை உற்று நோக்குகிறார். அது வேறு யாருமல்ல, அவர் ஈன்றெடுத்த அவரின் அன்புத் திருமகள் தான். அதனை அப்படியே கட்டித் தழுவி அதன் கன்னங்களில் ஆயிரம் முத்தங்களைச் சொரிகிறார். அப்பொழுது அக்குழந்தை அவரின் கன்னத்தில் தன் தளிர்க் கரத்தால் அடித்து, 'விசுவாசங் கொண்டவர்களின் இதயங்கள் அல்லாஹ்வை நினைத்தும் அவன் இறக்கி வைத்த சத்திய (வசன)ங்களைக் கவனித்தும் அஞ்சக் கூடிய நேரம் (இன்னும்) வரவில்லையா?''..... என்ற இறை திருவசனத்தை ஓதுகிறது. அதுகண்டு வியப்புற்ற அவர், ''உனக்குக் குர்ஆன் ஓதத்தெரியுமா?'' என்று வினவுகிறார். ''ஆம்; உங்களைவிட அதிகமாக நாங்கள் அதனை அறிந்துள்ளோம்'' என்று அது பதிலிறுக்கிறது. அப்பொழுது அவர் தம் அருமை மகளை நோக்கி, 'என்னைத் துரத்திக்கொண்டு வந்த பாம்பு யாது?'' என்று வினவுகிறார். ''அதுதான் நீங்கள் செய்த தீவினைகளெல்லாம் ஒருங்கு திரண்டதனாலான உரு. அதுஉங்களைப் பிடித்து நரகத்தில் தள்ள முயன்றது'' என்று அது கூறுகிறது. ''நான் வழியில் சந்தித்த வெண்ணாடை புனைந்த அந்த நல்லவர் யார்?'' என்று அடுத்து வினவுகிறார் அவர். ''அவரே நீர் செய்த நற்செயல்களின் பிரதிபிம்பம். உங்களின் தீச்செயல்களால் அவரை வலுவற்றவராக்கி விட்டீர்கள். எனவே அவரால் உங்களுக்கு யாதோர் உதவியும் செய்ய இயலாமல் போய்விட்டது'' என்று அது பதிலிறுக்கிறது.

அதன்பின் அவர் தம் அன்பு மகளை நோக்கி, ''நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று வினவுகிறார். ''முஸ்லிம்களின் குழந்தைகளாகிய நாங்கள் இங்கு உங்களை எதிர்பார்த்துக் கொண்டுள்ளோம். நீங்கள் எங்களிடம் வரும் பொழுது உங்களுக்காக நாங்கள் இறைவனிடம் பரிந்துரைப்போம்'' என்று அது கூறுகிறது.

இத்துடன் கனவு கலைகிறது. திடுக்கிட்டு விழித்தெழுந்த அவர் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருகிறார். அவரின் வாழ்விலே ஒரு மாபெரும் திருப்பம் ஏற்படுகிறது. இது முதல் ஒரு புது மனிதராக, மனிதப் புனிதராக அவர் உருவெடுக்கிறார். தாபித் என்று இயற்பெயர் தாங்கிய அவர் வரலாற்றிலே மாலிக் இப்னு தீனார் (ரஹ்) என்ற பெயருடன் உலவுகின்றார்.*

உமையாக் கிலாபத்தின் தலைமைப் பீடமாகிய திமிஷ்க் மாநகரிலே முஆவியா (ரலி) அவர்கள் அரசோச்சிக் கொண்டிருந்த காலத்தில் நிர்மாணிக்கப் பெற்ற மாபெரும் பள்ளிவாயல் வானளாவிய 'மனாரா'க்களுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அதன் உள்ளே நுழைந்த மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் அப்பள்ளிவாயலின் எடுப்பாலும் எழிலாலும் பெரிதும் ஈர்க்கப்பட்டு அங்கே பல நாட்கள் 'இஃதிகாப்' இருந்தார்கள். அப்பொழுது அவர்களின் உள்ளத்தில் ஓர் எண்ணம் குறுக்கிட்டது. ''இப்பள்ளிவாயலுக்கோ ஏராளமான வக்பு சொத்துக்கள் உள்ளன. நாம் இதன் மேலாளர் (முத்தவல்லி) ஆகிவிடின் அவையெல்லாம் நம் வசம் ஆகிவிடும்'' என்று எண்ணினார்கள். தம்மை அப்பதவிக்குத் தகுதியுள்ளவராக ஆக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் அவர்கள் வெளியே எங்கும் செல்லாது அப்பள்ளியிலேயே ஓராண்டு காலம் 'இஃதிகாப்' இருந்தார்கள். அப்பொழுது அவர்களின் மனம் அவர்களை நோக்கி, ''மாலிக்! நீ ஒரு முனாஃபிக் (நயவஞ்சகன்) ஆகிவிட்டாய்'' என்று கூறியது.

ஓராண்டு காலம், 'இஃதிகாப்' இருந்து முடிந்ததும் அவர்கள் ஒருநாள் வெளியே சென்றபொழுது ''மாலிக்! நீ ஏன் இன்னும்

* இவர் ஒரு கப்பலில் கூலி செலுத்தாது பிரயாணம் செய்தார் என்றும் நடுக்கடலில் வைத்து மாலுமி இவரிடம் கூலி கேட்டபொழுது, இவர் தம்மிடம் காசேதும் இல்லையெனக் கையை விரித்தார் என்றும் அதுகேட்டு இவரை அம்மாலுமி நையப் புடைத்தான் என்றும் அப்பொழுது கடலிலுள்ள மீன்களெல்லாம் தம் வாயிலே ஒரு தீனாரைக் கௌவிக் கொண்டு தலையை வெளியே நீட்ட இவர் ஒரு மீனின் வாயிலிருந்த தீனாரை எடுத்து மாலுமியிடம் செலுத்தி விட்டு அக்கடலிலே நடந்து சென்று மறைந்துவிட்டார் என்றும் இதிலிருந்து இவருக்கு மாலிக் இப்னு தீனார் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது.

பாவமன்னிப்புக் கோராதுள்ளாய்?'' என்று உருத்தோற்றமில்லாது ஒரு குரல் கேட்டது. அது கேட்டுத் திடுக்குற்ற அவர்கள் உடனே பள்ளிவாயல் திரும்பி, ''இறைவ எம்பெருமா! என் பவம் பொருத்தருள்வாய். நான் இப்பள்ளிவாயலின் மேலாளராக வேண்டும்; அதற்குத் தகுதியுடையவனாக மக்கள் என்னைக் காண வேண்டும் என்ற கள்ள நோக்குடன் இதுகாறும் நான் இங்கு வீற்றிருந்து வணக்கம் நிகழ்த்திக் கொண்டிருந்ததை நீ நன்கு அறிவாய். இப்பொழுது நான் அத்திய எண்ணத்தையெல்லாம் விட்டொழித்து உனக்காக, உன் அருள் பெறுவதற்காக, தூய உள்ளத்துடன் வணக்கம் நிகழ்த்தப் போகின்றேன். என் மீது அருள் கூர்வாயாக!'' என்று கூறி அழுது கண்ணீர் வடித்து இறைஞ்சிவிட்டு அன்றிரவு முழுவதும் தொழுதார்கள்.

பொழுதும் புலர்ந்தது. இரவு முழுவதும் தொழுத அவர்கள் பொழுது புலர்ந்த பின்பும் இறையருள் வேண்டித் தொழுது கொண்டே இருந்தார்கள். அப்பொழுது மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து தமக்குப் பின் அமர்வதை அறிந்த அவர்கள் யாதோ, என்னவோ என்று எண்ணியவர்களாய் தொழுகையை விரைவில் முடித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தார்கள். அப்பொழுது நகரப் பெருமக்கள் அவர்களை நோக்கி, ''நம் பள்ளி நிர்வாகத்தில் பெரிதும் ஊழல் நிறைந்திருப்பதைத் தாங்கள் அறிவீர்கள். தங்களை இதன் மேலாளராக ஆக்கி இதன் 'வக்பு' சொத்துக்கள் அனைத்தையும் தங்களிடம் ஒப்படைத்தால் தான் இது சிறந்த முறையில் செயல்படும் என்று எண்ணித் தங்களை இதன் மேலாளராக நியமிக்க நாடி வந்துள்ளோம்'' என்று கூறினர்.

இதுகேட்ட மாலிக் இப்னு தீனாருக்கு அழுகை அழுகையாக வந்தது. கிப்லாவின் பக்கல் தங்களின் முகத்தைத் திருப்பியவர்களாய், ''இறைவ எம்பெருமா! நான் ஓராண்டு காலம் பிறர் என்னை மதிக்க வேண்டும் என்ற நோக்குடன் உன்னை வணங்கிய பொழுது என்னை ஏறிட்டுப் பார்ப்பார் எவருமில்லாது போய் விட்டது. ஆனால் இப்பொழுது நான் தூய உள்ளத்துடன் தொழத் துவங்கிய பொழுது நான் ஓராண்டு காலமாக எதை விரும்பித் தொழுதேனோ அதை எனக்கு வழங்கி இத்தனை பேர்களை என்னிடம் அனுப்பி வைத்துள்ளாய். எனினும் என் இறைவ! உன் மாண்பின் மீது ஆணையாகக் கூறுகின்றேன். இனி ஒரு போதும் அப்பதவியை ஏற்றுக் கொள்ளமாட்டேன்'' என்று இறைஞ்சினர். அதன்பின் மக்களை நோக்கி, தாம் அப்பதவியை ஏற்றுக்கொள்ள இயலாமைக்கு வருந்துவதாகக் கூறிவிட்டு அவர்கள் அக்கணமே அப்பள்ளிவாயிலை விட்டு நீங்கி விட்டார்கள்.

இதன்பின் அவர்களின் வாழ்விலே மற்றொரு திருப்பம் ஏற்படுகிறது. அவர்கள் தம் ஆசாபாசங்களையெல்லாம் அவித்தொழித்து, பற்றற்ற துறவியாய் இவ்வுலகில் வாழத் துவங்கினார்கள். அவர்கள் பஸராவில் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து வந்தார்களாயினும், ஒரு நாளேனும் அவர்கள் பேரீத்தம் பழம் வாங்கித் தின்றதில்லை. அவர்கள் கடைத் தெருவுக்குச் செல்லுங்கால் ஆங்கு மக்கள் பேரீத்தம் பழங்களை வாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, ''மக்களே! நான் நாற்பது ஆண்டுகளாகப் பேரீத்தம் பழம் தின்னவில்லை. அதற்காக என் உடல் எவ்வித நலிவும் பெறவில்லை. ஆனால் நீங்கள் பேரீத்தம் பழம் தின்று வருகின்றீர்கள். அதன் காரணமாக உங்களின் உடல் எவ்விதப் பொலிவும் பெறவில்லை'' என்று கூறுவார்கள்.

ஒருநாள் அவர்களிடம் ஒருவர் பேரீத்தம் பழங்களைக் கொண்டு வந்து கொடுத்தார். அவற்றை நீண்ட நேரம் கையில் வைத்திருந்த அவர்கள் பின்னர் அவற்றை அவரிடமே திருப்பிக் கொடுத்து, ''இவற்றை நீரே உண்ணும். நான் நாற்பது ஆண்டுகளாக இவற்றை உண்பதில்லை'' என்று கூறிவிட்டார்கள்.

மற்றொரு நாள் அவர்களுக்குப் பேரீத்தம் பழம் வாங்கித்தின்ன வேண்டுமென்ற ஆசை மிகவும் அதிகமாகியது. அப்பொழுது அவர்கள் தம் மனத்தை நோக்கி, ''மனமே! திமிருகின்றாயா, என்ன? உன் திமிரை அடக்குகின்றேன், பார். எவரென நினைத்து நீ என்னுடன் விளையாடுகின்றாய்? உன் நோக்கம் ஒரு போதும் நிறைவேறாது'' என்று அதட்டினார்.

இவ்வாறு அதட்டிவிட்டு அவர்கள் படுத்துறங்குங்கால், ''நீர் உம் மனத்தை அதிகமாகத் துன்புறுத்த வேண்டாம். அதன் ஆசையைச் சற்று நிறைவு செய்யும்'' என்று கனவில் அசரீரியாக ஒரு சப்தத்தைக் கேட்டுத் திடுக்குற்று விழித்தெழுந்த அவர்கள் தம் மனத்தை நோக்கி, ''நல்லது மனமே! நீ ஏழு நாட்கள் யாதொன்றும் அருந்தாது நோன்பு நோற்பின் நான் உன் நீண்ட நாள் அவாவை நிறைவேற்றுகின்றேன்'' என்று கூறினார்கள். அதற்கு அவர்களின் மனமும் ஒருவாறு உடன்பட்டது.

அவ்வாறே ஏழு நாட்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்றார்கள் அவர்கள். இந்த ஏழு நாட்களும் அவர்களின் மனமும் அடங்கிக் கிடந்தது. ஏழாவது நாள் மாலை நேரம், நோன்பு திறக்கும் நேரம் நெருங்க, நெருங்க அவர்களின் மனம் தான் பன்னெடுங்காலமாகக் கொண்டிருந்த ஆசை இன்னும் சற்று நேரத்தில் நிறைவேறப் போகும் மகிழ்ச்சியில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. அவர்களும் கடைத்தெருவுக்குச் சென்று

பேரீத்தம் பழம் வாங்கினார்கள். அதனை ஆங்குக் குழுமி இருந்த அனைவரும் வியப்புக் கண்களுடன் பார்த்தனர். அதன் பின் தங்களின் கண்களைச் சிமிட்டி ஏதேதோ கண் மொழியால் பேசிக் கொண்டார்கள்.

பேரீத்தம் பழங்களை வாங்கிய அவர்களோ அதனைச் சற்றேனும் கவனியாது விறுவிறுவெனப் பள்ளிவாயலை நோக்கிச் சென்றார்கள். ஆங்கு ஓரிடத்தில் அமர்ந்து அவர்கள் அப்பழங்களைத் தின்பதற்காகப் பொட்டலத்தை அவிழ்த்தார்கள். அப்பொழுது, ஆங்கு வந்த சிறுவன் ஒருவன், ''அப்பா, அப்பா ஓடி வாருங்கள். இங்கு ஒரு யூதர் பேரீத்தம் பழங்களை வாங்கித் தின்ன வந்துள்ளார்'' என்று கத்தினான். அதுகேட்டு அவனுடைய தந்தை ஒரு தடியை எடுத்துக் கொண்டு ஓடி வந்தபொழுது ஆங்குத் தம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவரான மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் வீற்றிருப்பதைக் கண்டதும், அவர்களின் கால்களில் நெடுமரம் போல் விழுந்து, 'ஐய! என் பவம் பொறுத்தருள வேண்டும். இத்தெருவில் வாழும் முஸ்லிம்கள் பகலெல்லாம் நோன்பு நோற்பது வழக்கமாதலின் இரவில் தான் உணவுண்பர். பகலில் உண்பவர் யூதர்கள் மட்டும் தான். எனவே தங்களை எவரென அறியாது யூதரென என் மகன் எண்ணிக் கொண்டான். எனவே தாங்கள் பொறுத்து அருள்பாலிக்க வேண்டும்'' என்று கண்ணீரும் கம்பலையுடன் வேண்டிக் கொண்டார். அப்பொழுது அவர்களோ கண்ணீரும் கம்பலையுடன் காணப்பட்டார்கள். அவர்களின் கையிலிருந்த பேரீத்தம் பழப் பொட்டலம் தெருவிலே கிடந்தது.

அன்றிரவு முழுவதும் அவர்களுக்கு உறக்கமே வரவில்லை. ''இறைவ எம்பெரும! நாற்பதாண்டுகளாக நான் பேரீத்தம் பழம் தின்னாதிருந்து இறுதியாக அதனைச் சிறிது வாங்கித் தின்னப் போகும் சமயத்தில் எனக்கு 'யூதன்' என்ற பெயரை ஒரு சிறுவன் வாயிலாகத் தந்தாய். அதனை நான் தின்றுவிடின் என்னைக் 'காபிர்' என்று கூடக் கூறிவிடுவாய் போன்றுள்ளதே. உன் மாண்பின் மீது ஆணையாக நான் இனி ஒரு போதும் அதனை உண்ணமாட்டேன்'' என்று அறுதியிட்டு உறுதி கூறினார்கள்.

அவர்களுக்கு நாற்பது ஆண்டுகளாகப் பால் அருந்த வேண்டுமென்று ஆசையாய் இருந்து வந்தது. எனினும் அவர்கள் தம் ஆசைக்கு இடம் கொடுக்கவில்லை. ''நான் உலகை மணவிலக்குச் செய்து நாற்பதாண்டுகளாகின்றன. இனிமேல் நான் இறைவனை அடைகின்றவரை பாலருந்த மாட்டேன். எனவே நீ வீணே ஆசைப்படாதே. உன் ஆசை நிறைவேறாது'' என்று அவர்கள் தம் மனத்திற்குத் திட்டவட்டமாகக் கூறி விட்டார்கள்.

ஒரு தடவை அவர்கள் பிணி வாய்ப்பட்ட பொழுது, அவர்களுக்கு இறைச்சி உண்ண வேண்டுமென்று அடங்கா ஆவல் ஏற்பட்டது. அவர்களும் தங்களின் மனத்திற்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். எனினும் அது கேட்கவில்லை. இறுதியாக, அவர்கள் பிணி நீங்கப் பெற்று எழுந்ததும் நேராக இறைச்சிக் கடைக்குச் சென்று மூன்று இறைச்சித் துண்டுகளை வாங்கி அவற்றைத் தம் சட்டைக் கைக்குள் வைத்து மறைத்துக் கொண்டு சென்றனர்.

இதுகண்டு இறைச்சிக் கடைக்காரனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. இதுகாறும் தன் கடையை ஏறிட்டுக் கூடப் பார்க்காது சென்று கொண்டிருந்த அவர்கள் இன்று தன்னிடம் வந்து இறைச்சி வாங்கிச் செல்வதைக் கண்ட அவன் தன் பணியாள் ஒருவனை அழைத்து அவர்களின் பின்னே அவர்களறியாமல் சென்று அவர்கள் அவற்றை என்ன செய்கிறார்கள் என்று பார்த்து வருமாறு கூறினான்.

வெகு நேரத்திற்குப்பின் அழுது கொண்டு வந்த அவன், ''கண்டேன், கண்டேன். காணாத காட்சியைக் கண்டேன்'' என்று தன் பேச்சைத் துவக்கினான்.

''என்ன, அப்படிக் காணாத காட்சியைக் கண்டாய்?'' என்று இறைச்சிக் கடைக்காரன் வினவ, ''நான் அவர்கள் அறியா வண்ணம் அவர்களைப் பின் தொடர்ந்து ஒரு மலையுச்சிக்குச் சென்றேன். ஆங்கு ஓரிடத்தில் அவர்கள் அமர்ந்தார்கள். நான் அண்மையிலிருந்த பொதும்பொன்றில் மறைந்து அவர்கள் என்ன செய்கிறார்ள் என்பதை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவர்கள் தங்களின் சட்டைக் கைக்குள்ளிருந்து அந்த மூன்று இறைச்சித் துண்டுகளையும் வெளியே எடுத்தார்கள். அதன் பின் அதனை மூன்று தடவை முகர்ந்து விட்டு, ''மனமே! இவ்விறைச்சித் துண்டுகளில் உனக்குள்ள பங்கு இவ்வளவு தான். இதற்கு மேல் இல்லை'' என்று கூறினார்கள். அதன் பின் அவர்கள் அவற்றை ஆங்கு வந்த ஓர் ஏழைக்கு அறம் செய்து விட்டார்கள்.

''பின்னர் என்ன நிகழ்ந்தது?'' என்று இறைச்சிக் கடைக்காரன் வினவினான்.

''பின்னரா?'' என்று வியப்புத் தொனியுடன் கூறிய அவன், ''பின்னர் அவர்கள் தன் மனத்தை நோக்கி, 'மனமே! நான் உன் மீது ஏதோ வெறுப்புற்று உன்னை இத்துணைத் துன்பங்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் உட்படுத்துகின்றேன் என்று நீ எண்ணிக் கொள்ளாதே. பொறுமையை மேற்கொள். அந்தப் பொறுமையின் காரணமாக, நீ அழிவற்ற பேரின்ப

வாழ்வை எய்தப் பெறுவாய்' என்று தம் மனத்திற்கு ஆறுதல் மொழி கூறினர். அதுகேட்டு என்னை அறியாமல் எனக்கு அழுகை வந்து விட்டது'' என்று கூறினான்.

ஓரிரவு அவர்கள் கனவொன்று கண்டனர். அதில், ''இன்ன இடத்தில் இறைநேசச் செல்வர் ஒருவர் உள்ளார். அவரைச் சென்று காண்க!'' என்று அவரிடம் கூறப்பட்டது. எனினும் அவர்கள் அக்கனவைப் பொருட்படுத்த வில்லை. எனினும் மீண்டும் மீண்டும் பல இரவுகளாக அவர்களுக்கு அக்கனவே தோன்றிக் கொண்டிருந்தது. எனவே இது உண்மைக் கனவாக, இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட ஓர் அறிவிப்பாக இருக்குமோ என்று எண்ணி அவர்கள் கனவில் குறிப்பிடப்பட்ட அவ்விடத்திற்குச் சென்ற பொழுது ஆங்கு ஒரு பெரியவர் பாங்கு சொல்லிக் கொண்டிருந்தார். பாங்கு சொல்லி முடித்ததும் அவர்களைப் பெயர் சொல்லி அழைத்து 'ஸலாம்' கூறினார். அது கேட்டுப் பெரிதும் வியப்பெய்திய அவர்கள், ''என் பெயர் தங்களுக்கு எவ்வாறு தெரிய வந்தது?'' என்று வினவினர். அதற்கு அப்பெரியவர், ''உம்மை இங்கு அனுப்பி வைத்தவன் எனக்கு அறிவித்தான்'' என்று கூறினார். பின்னர் அவர்களைத் தம் இல்லம் அழைத்துச் சென்று இரண்டு ரொட்டிகளை அவர்களின் முன் வைத்து உண்ணுமாறு வேண்டிக் கொண்டார். ரொட்டியைத் தொட்டுண்ண சிறிது உப்பு கொணருமாறு அவர்கள் வேண்ட அவரின் பணிப்பெண் தூசு படர்ந்த உப்புக் கலயம் ஒன்றை அவர்களின் முன் கொண்டு வந்து வைத்தாள். அதிலிருந்து உப்பைச் சுரண்டி எடுத்து வைத்துக் கொண்டு அதனைத் தொட்டுக் கொண்டு ரொட்டிகளை தின்று முடித்த அவர்கள் ரொட்டிக்குத் தொட்டுக் கொள்ள உப்பு நல்கியதற்காக இறைவனுக்கு நன்றி செலுத் தினார்கள். அது கேட்ட அப்பணிப்பெண், ''நீர் இதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறீர். நாங்கள் பதினேழு ஆண்டுகளாக உப்பில்லாமலேயே ரொட்டியைத் தின்று வருகிறோம். உப்புக் கலயத்தின் மீது தூசி படர்ந்திருப்பதே அதனை உமக்குத் தெரிவிக்கும்'' என்று கூறினாள். அதுகேட்ட அவர்கள் அழுத வண்ணம் கானகம் சென்று கடும் தவம் செய்யலானார்கள்.

பின்னர் ஊர் திரும்பிய அவர்கள் செல்வமும் அழகும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்களாக இருந்த போதினும் அவை இரண்டும் அழியும் தன்மையுடையவை எனக் கண்டு அழியாப் பெரும் செல்வத்தை, அழியாப் பேரழகை அடைய அல்லும் பகலும் அயராது முயற்சியாற்றத் துவங்கி விட்டார்கள்.

இக்காலை அவர்களின் அழகால் ஈர்க்கப்பட்ட செல்வச் சீமாட்டி ஒருத்தி, தாபித்துல் புனானி (ரஹ்) அவர்களை அணுகித் தனக்கு மாலிக்

இப்னு தீனார் (ரஹ்) அவர்களை மணமுடித்து வைக்குமாறு வேண்டிக் கொண்டாள். இதனை அவர்கள் இவர்களிடம் கூறி இவர்களின் இணக் கத்தைக் கேட்ட பொழுது, ''நான் ஏற்கனவே இவ்வுலகை முத்தலாக்கு (மூன்று விடுத்தம் மணவிடுதலை) சொல்லி விட்டேன். முத்தலாக்குச் சொல்லி விட்டபின் மீண்டும் அதனை எவ்வாறு மண முடித்துக் கொள்வது?'' என்று கூறிவிட்டார்கள்.

அவர்கள் தம் முதல் மனைவி இறந்தபின் மீண்டும் மணமுடித்துக் கொள்ளவில்லை. ''தாங்கள் ஏன் மீண்டும் மணமுடித்துக் கொள்ள வில்லை?'' என்று ஒருவர் அவர்களிடம் வினவியபொழுது, ''உள்ள தொந்தரவுகளே போதும், போதும் என்றிருக்கும் பொழுது இன்னும் பல தொந்தரவுகளை இழுத்துக் கொண்டு நான் என் வணக்கத்திற்கு இடையூறு விளைவித்துக் கொள்ள விரும்பவில்லை'' என்று அவர்கள் பதிலிறுத் தார்கள்.

பற்றற்ற துறவியாக வாழ்ந்து வந்த அவர்கள் ஓரிரவு பஸராவில் பல வீடுகள் தீப்பற்றி எரியும் பொழுது தங்களின் கைத்தடியையும் காலணியையும் எடுத்துக் கொண்டு தாங்கள் வாழ்ந்து வந்த வீட்டின் மேல் முகட்டிற்குச் சென்று தீப்பற்றி எரிவதைப் பார்த்த பொழுது சிலர் தீயில் வெந்து மடிவதையும் மற்றும் சிலர் கையிலகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு வெளியே ஓடி வருவதையும் பிறிதும் சிலர் அவ்வாறு ஓடி வரும்பொழுது தீயால் சூழப்பட்டோ அல்லது சுவர் இடிந்து விழுந்தோ சாவதையும் பார்த்துக் கண்ணீர் உகுத்தார்கள். அப்பொழுது அவர்களின் திருவாயிலிருந்து, ''இவ்விதமாகவே மறுமையில் நிகழும், இலேசான சுமையுடையோர் ஈடேற்றம் பெறுவர். பளுவான சுமையுடையோர் எரி நரகில் வீழ்வர்'' என்ற சொற்கள் வெளி வந்தன.

ஒரு தடவை அவர்கள் தம்மைப் பற்றிக் கூறும் பொழுது ''என்னை மக்கள் துறவி என்று கூறுகின்றார்கள். உண்மையில் துறவியானவர் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸேயாவர். உலகச் செல்வங்களெல்லாம் அவர்களின் காலடியில் கிடந்த போதினும் அவர்கள் அவற்றை ஏறிட்டும் பார்க்கவில்லை'' என்று அவர்கள் கூறினர்.

அவர்களின் உள்ளம் இறையச்சத்தால் நிரம்பி இருந்தது. ஒரு தடவை அவர்கள் மக்காவுக்கு 'ஹஜ்ஜு'ச் செய்ய சென்றிருந்த காலை தல்பியா கூறத் துவங்கிய அவர்கள், 'லப்பைக், லப்பைக் அல்லாஹு'ம்ம லப்பைக்' என்பது வரையில் தான் கூறினார்கள். அதற்குள் அவர்களை ஒருவிதத் திடுக்கம் ஆட்கொண்டது. அவர்கள் மயங்கிக் கீழே விழுந்து விட்டார்கள். சற்று நேரம் கழித்து அவர்கள் மயக்கம் தெளிந்ததும் அவர்களை ஜஃபர் இப்னு சுலைமான் (ரஹ்) அவர்கள் அணுகி, ''தாங்கள் மயக்கமுற்றுக்

கீழே விழுந்ததற்கான காரணம் யாது?'' என்று வினவியபோது, ''நான் லப்பைக் (அடிபணிந்தேன்) என்று கூறியது இறைவனிடமிருந்து லா லப்பைக் (நீ அடி பணியவில்லை) என்று பதில் வந்து விடின் என் செய்வது என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதன்பின் எனக்கு என்ன நிகழ்ந்தது என்பதை நான் அறியேன். பின்னர் நான் கண்களைத் திறந்து பார்க்கும் பொழுது நான் கீழே வீழ்ந்து கிடப்பதைக் கண்டேன்'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

ஓர் இரவு அவர்கள் கஃபாவைச் சுற்றி வந்து கொண்டிருக்கும் பொழுது, ஒரு பெண் கஃபாவின் திரையைப் பிடித்த வண்ணம் ''இறைவனே! என் மனோ இச்சையின் இன்பங்களெல்லாம் போய் விட்டன. இப்பொழுது அவற்றிற்கான தண்டனை தான் என்னிடம் மீதமுள்ளது. உன்னிடத்தில் எனக்கு நரகத்தைத் தவிர வேறுள்ளதா? என்று திரும்பத் திரும்ப வைகறைத் தொழுகைக்கு பாங்கு சொல்லும் வரை கூறிக் கதறி அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது அவர்களுக்குத் தங்களின் முந்தையப் பாவ வாழ்வு நினைவு வரவே தம் நிலை யாதாகுமோ என்று கலங்கிப் பெரும் சப்தமிட்டுக் கதறத் துவங்கி விட்டார்கள்.

அவர்கள் சூரா பாத்திஹாவை ஓதுங்கால், ''இய்யாக்க நஃபுது வ இய்யாக்க நஸ்தயீன் (உன்னையே வணங்குகின்றோம்; உன்னிடமே உதவி தேடுகின்றோம்) என்ற திருவசனத்திற்கு வரும் பொழுது தங்களை அறியாமல் அழுது விடுவார்கள். ''ஏன் அழுகின்றீர்கள்?'' என்று கேட்கப்படின் ''நாம் நம்முடைய நப்ஸை (ஆசையை) வணங்கிக் கொண்டும் இறைவனல்லாத மற்றவர்களின் வாயலில் சென்று உதவி வேண்டிக் கொண்டும் இருக்கும்பொழுது இவ்வாறு கூறுவது நமக்கு எவ்வாறு தகும்? இத்திருவசனம் சூராபாத்திஹாவில் மட்டும் அமைந்திராவிடின் நான் இதனை ஓதவே மாட்டேன்'' என்று கூறினர்.

அவர்கள் தங்களைப் பற்றி எப்பொழுதும் தாழ்மையாகவே எண்ணிக் கொண்டார்கள். ஒருநாள் அவர்கள் பள்ளிவாயலிவ் பேருரை நிகழ்த்தியக்கால், மக்களை நோக்கி, ''ஒருவர் இப்பள்ளியின் வாயலில் நின்றுக் கொண்டு உள்ளே வீற்றிருப்பவர்களில் மிகவும் தீயவர் வெளியே வரட்டும் என்று சப்தமிடுவாரானால் நானே செல்வேன். அத்தகு தீயவன் நான்'' என்று கூறினர். இஃது அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களின் செவிப்பட்டதும், ''அவர்களின் இத்தகு தாழ்மையில்தான் அவர்களின் பெருமை உள்ளது'' என்று இயம்பினார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் தாழ்மையையும் பணிவையும் பற்றி எடுத்துரைக்கும் பொழுது இருவர் பள்ளிவாயிலுக்கு வந்தார்கள்.

அவர்களில் ஒருவர் பள்ளிவாயிலுக்குள் போய்விட்டார். மற்றொருவர் அதன் வாயிலிலே நின்று கொண்டு "என்னைப் போன்றவனா இந்த இறை இல்லத்திற்குள் நுழைவது?" என்று தம்மைத் தாழ்மைப்படுத்திக் கூறினார். அவரின் இந்தத் தாழ்வு உணர்ச்சியின் காரணமாக அவரின் பெயர் 'ஸித்தீக்குகளின் பட்டியலில் எழுதப்பட்டது' என்று கூறினர்.

அவர்கள் தாழ்மையின் திருவுருவாக மட்டுமின்றி நேர்மையின் அருள் உருவாகவும் விளங்கினார்கள். உள்ளே ஒரு மனிதனாகவும், வெளியே வேறொரு மனிதனாகவும் இருப்பதை அவர்கள் வெறுத்தனர்.

எதைச் செய்தாலும் அவர்கள் அதனை மனப்பூர்வமாகச் செய்தார்கள். அவ்விதம் செய்தால் தான் அச்செயல் முழுமை பெறுகிறது என்று அவர்கள் கருதினார்கள். "மனப்பூர்வமாகச் செய்யப்படாத செயல் உயிரற்ற உடலுக்கு நிகராகும். ஒருவன் ஒன்றை ஆயிரம் ஆண்டுகளாக மனப் பூர்வமாக விரும்பி அதனைச் செயலில் காட்டாவிட்டால், அதனால் ஒரு பயனும் ஏற்படாது. அதே போன்று ஒருவன் ஒரு செயலை ஆயிரம் ஆண்டுகள் செய்தபோதினும் அதனை அவன் மனப்பூர்வமாகச் செய்ய வில்லையாயின் அதனாலும் ஒரு பயன் ஏற்படாது. மனப்பூர்வமாக ஒன்றை விரும்புவது அந்தரங்கமான அலுவல்; செயல் வெளிப்படை யான அலுவல். பிந்தையதை முந்தையது நிறைவு செய்கிறது. முந்தையதால் பிந்தையது மதிப்பை எய்துகிறது" என்று அவர்கள் கூறினார்கள்.

ஒருநாள் ஒரு பெண் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களை நோக்கி, "பிறர் மெச்சுவதற்காக வணங்குகின்றவரே! முகஸ்துதியை விரும்பு கின்றவரே!!" என்று விளித்த பொழுது, "அம்மணீ! இருபதாண்டுகளாக எவரும் கண்டுபிடிக்காத இரகசியத்தை நீ இன்று கண்டு பிடித்து என்னை யார் என்று விளங்கிக் கொண்டாய். உனக்கு இறைவனின் நன்மாராயம் உண்டாவதாக!" என்று கூறி அவளை அவர்கள் வாழ்த்தினார்கள்.

பிறர் தம்மைப் போற்றுவதையும் தூற்றுவதையும் அவர்கள் ஒன்றாகவே கண்டார்கள். எனவே போற்றுதல் கண்டு மகிழவும், தூற்றுதல் கண்டு சிணுங்கவும் அவர்கள் செய்வதில்லை. இதற்கான காரணம் அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, "போற்றுகின்றவனும் உள்ளதை மிகைப்படுத்திக் கூறுகின்றான். தூற்றுகின்றவனும் இல்லாததை மிகைப் படுத்திக் கூறுகின்றான்; இருவருடைய பேச்சுக்களும் வரம்பு மீறியவையாகவே உள்ளன. அவற்றிற்கு நாம் ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?" என்று அவர்கள் கூறினார்கள்.

பிறரைப் பற்றி யாதொரு புறமும் அவர்களின் வாயிலிருந்தும் எப்பொழுதும் வெளிவந்ததில்லை. எனினும் ஒரு நாள் அவர்கள்

தெருவழியே சென்று கொண்டிருக்கும் பொழுது ஒருவர் அவர்களைச் சந்தித்து, ''நீர் என்னைப் பற்றி ஏதோ இழிவாகப் பேசினீராமே?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''அது உண்மையானால் நான் இதுகாறும் செய்து வந்த நன்மைகளுக்கான பலன் அனைத்தையும் அல்லாஹ் உமக்கு அளித்து விடட்டும்'' என்று கூறினார்கள்.

அறிவும் அடக்கமும் வணக்கமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்த அவர்கள் குர்ஆனை எழுதி விற்று, அதிலிருந்து கிடைத்த ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். ''தம் கையால் உழைத்து உண்பவர் இம்மையிலும் நற்பேறு பெற்றவராவார்'' என்று தாம் தௌராத்தில் பார்த்திருப்பதாக அவர்கள் கூறினார்கள்.

தமக்கு உரிமையல்லாத உணவை அவர்கள் ஒருபோதும் உண்பதில்லை. ஓரிரவு அவர்கள் கதை சொல்பவர் கூறும் கதையைக் கேட்டுக் கொண்டு கூட்டத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது கதையில் வந்த நிகழ்ச்சி ஒன்று ஆங்கு வீற்றிருந்தவர்களின் உள்ளத்தை உருக்க எல்லோரும் கண்ணீர் விட்டு அழுதனர். ஆனால் இவர்கள் மட்டும் அழாது வெறுமனே வீற்றிருந்தார்கள். அப்பொழுது ஆட்டுத் தலைக்கறி சமைத்துக் கொணரப்படவே எல்லோரும் அதனை உண்ண அமர்ந்த பொழுது இவர்களையும் உண்ண வருமாறு அழைத்தனர். அதற்கு இவர்கள், ''அழுதவர்களே அதில் பங்கு பெறலாம். நான் அழவில்லையே. நான் எவ்வாறு அதில் பங்கு பெற இயலும்?'' என்று கூறி விட்டார்கள்.

அவர்களின் தேவைகளோ அற்பமாயிருந்தன. எனவே அவர்கள் எதனையும் தம் வீட்டில் வாங்கிச் சேமித்து வைப்பதில்லை. வெளியில் செல்லும் பொழுது தங்களின் வீட்டுக் கதவுகளைக் கயிற்றினால் கட்டி வைத்து விட்டுச் செல்வர். ''இந்தப் பக்கம் நாய்கள் அதிகம். இல்லையெனில் இதுவும் தேவையில்லை'' என்று அவர்கள் கூறுவார்கள்.

அவர்களுக்கு நண்பர் ஒருவர் அன்பளிப்பு ஒன்றைக் கொடுத்தார். அதனை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்து விட்டார்கள். காரணம் வினவப்பட்ட பொழுது, ''கள்வரும் பகைவரும் இதைப் பார்த்து ஆசைப்படுவர். எனவே இதனைக் கவர முற்படுவார்கள். அக்குற்றத்திற்கு நான் பொறுப்பாளியாகிவிடக் கூடாது. இது என்னிடம் இல்லையெனில் இதனை அவர்கள் திருடமாட்டார்களல்லவா?'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

ஒரு தடவை அவர்கள் முஹம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்களை நோக்கி ''ஒருவனுக்கு அவனுடைய தேவைக்குத் தக்க வண்ணம்

இரணம் கிடைத்து, அவன் தன் உணவிற்காகப் பிறரை எதிர்பாராத நிலையில் வாழ்ந்தால் அவன் மகிழ்ச்சியுடையவனல்லவா?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''அபூயஹ்யாவே! அப்படியல்ல. காலையிலும் மாலையிலும் உணவு கிடைக்காது பட்டினியாயிருக்கும் நிலையில் இறைவன் விட்ட விதியைப் பொருந்திக் கொண்டு எவன் திருப்தியுடன் இருக்கின்றானோ, அவனே உண்மையில் மகிழ்ச்சியுடையவன்'' என்று பதில் கூறினர்.

ஒரு தடவை அவர்களுக்குக் கலீபாவிடமிருந்து பதினாயிரம் திர்ஹங்கள் அன்பளிப்பாக வந்தன. அவற்றில் ஒரு திர்ஹத்தைக் கூட அவர்கள் தங்களுக்கென வைத்துக் கொள்ளாது அனைத்தையும் அறம் செய்துவிட்டார்கள். அப்பொழுது முகம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்கள் இவர்களை அணுகி, ''கலீபா தங்களுக்கு அன்பளிப்பாகப் பதினாயிரம் திர்ஹங்களை அனுப்பி வைத்தபொழுது அவர் மீது தங்களுக்கு ஒருவித அன்பு ஏற்பட்டதல்லவா?'' என்று வினவினர். ''ஆம்'' என்று இவர்கள் பதிலிறுத்தார்கள். இதுகேட்ட அவர்கள், ''இதைத்தான் நான் அஞ்சினேன். இறுதியாக, அப்பொருள் தன் தீய குணத்தைத் தங்களிடமும் காட்டி விட்டது'' என்று கூறினர். அவர்களின் இக்கூற்று மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களை இடித்துரைத்து அறிவு புகட்டியது. அக்கிரமக்கார அரசர்களிடமிருந்து அன்பளிப்புப் பெறுவது அவர்கள் மீது தங்களையறியாமல் ஒருவித அன்பு ஏற்படச் செய்யுமாதலால் அப்பாவச் செயலிலிருந்து இனிமேல் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் திடமான முடிவுக்கு வந்தார்கள்.

ஒருவர்மீது மற்றொருவருக்கு அன்பு ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் இருவரிடமும் உள்ள ஒரேவித மன உணர்வுதான் என்று அவர்கள் கூறுவார்கள். ஒரு தடவை ஒரு காகமும், புறாவும் ஒன்று சேர்ந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். இது அவர்களுக்குப் பெரு வியப்பை நல்கியது. அவை இரண்டையும் அவர்கள் கூர்ந்து கவனித்தார்கள். இரண்டின் கால்களிலும் ஊனம் தென்பட்டது. அவை இரண்டும் நட்புடன் இருப்பதற்குக் காரணம் அந்த ஊனம் தான் என்று அவர்கள் முடிவுக்கு வந்தார்கள்.

பிறர்மீது அன்பு செலுத்துவதோ, பிறருடன் நட்புறவாக இருப்பதோ அல்லாஹ்வுக்காகவே இருக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர்களாக அவர்கள் இருந்தனர். எனவே அவர்கள் தம் மருகர் முகைரா இப்னு ஷுஃபாவை நோக்கி, ''உம்முடைய நண்பனாலோ, உடன் பிறந்தானாலோ உமக்கு மார்க்கம் பற்றி யாதொரு நலனும் ஏற்படவில்லை என்று நீர் கருதுவீரானால், அவருடன் தொடர்பு கொள்வதைத் தவிர்ந்து

கொள்வீராக! அப்பொழுது தான் நீர் காக்கப் பெறுவீர். அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவர்களில் உமக்கு மேலானவர்களுடனோ கீழானவர்களுடனோ நீர் தொடர்பு கொள்வீராக! உமக்கு மேலானவர்களுடன் நீர் தொடர்பு கொளின், அதனால் நீர் நன்மை எய்தப் பெறுவீர். உமக்குக் கீழானவர்களுடன் நீர் தொடர்பு கொளின், நீங்கள் இருவரும் நன்மை எய்தப் பெறுவீர்கள். ஒருவரிலிருந்து மற்றொருவர் அறிவைப் பெற்றுக் கொள்வீர்கள்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

மார்க்கப் போரில் (ஜிஹாத்) ஈடுபட வேண்டும். ஈடுபட்டுத் தன்னுயிரை இஸ்லாத்திற்காகத் தியாகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு நீண்ட நாட்களாக இருந்து வந்தது. இறுதியாக, அவர்கள் போரணியில் சேர்ந்தார்கள். ஆனால் படை புறப்படும் நாளன்று அவர்களுக்குத் திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டு எழுந்து கூட நிற்க இயலாது போய்விட்டது. அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கும் ஏமாற்றத்திற்கும் அளவில்லை. தாம் நற்பேறு கெட்டவன் என்றும், எனவேதான் தமக்கு மார்க்கப் போரில் ஈடுபடும் அந்த மகத்தான வாய்ப்பை இறைவன் வழங்கவில்லை என்றும் எண்ணி இதயம் நொந்து வருந்தியவர்களாய் அவர்கள் அன்றிரவு உறங்கினார்கள். அப்பொழுது அவர்களின் கனவில், ''நீர் நற்பேறு பெற்றவராவீர். நீர் அப்படையணியில் சேர்ந்து சென்றிருப்பின் நீர் எதிரிகளால் சிறை செய்யப்பட்டு பன்றி இறைச்சியை வலுக்கட்டாயமாக வாய்க்குள் திணிக்கப் பெற்றிருப்பீர். இறைவன் உமக்குக் காய்ச்சலை அளித்து அத்தீமையிலிருந்து உம்மைக் காத்தருள் புரிந்தான்'' என்று அசரீரி முழங்கியதைக் கேட்டுத் திடுக்குற்று விழித்தெழுந்தார்கள். அப்பொழுது அவர்களின் நாவும் உள்ளமும் ஒருங்கு சேர்ந்து இறைவனுக்கு ஆயிரம், ஆயிரம் முறை நன்றி செலுத்தின.

ஒரு நாள் இவர்களுக்கும் ஒரு நிரீஸ்வரனுக்கும் இடையே வாக்கு வாதம் நிகழ்ந்தது. இருவரும் தாம் கூறுவதே உண்மையென்று வாதாடினார்கள். நீண்ட நேரம் வாதாடியும் யாதொரு முடிவும் ஏற்படவில்லை. அதுகண்ட மக்கள் அவ்விருவர் கையையும் பிணைத்துத் தீயில் இடுவதென்றும் எவருடைய கையை தீ எரிக்கவில்லையோ, அவரே உண்மை கூறுகின்றார் என்றும் அவருடைய மார்க்கமே உண்மையானதென்று கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்தார்கள். ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட பொழுது இருவர் கைகளையும் நெருப்புக் கரிக்காததைக் கண்டு மாலிக் இப்னு தீனாரின் முகம் கரிபூக்கப்பட்டது போன்று ஆயிற்று. நிரீஸ்வரனுடைய முகமோ மலர்ச்சியால் மலர்ந்திருந்தது. இதைக் கண்ட மக்கள் இருவர் கூறுவதிலும் உண்மையுள்ளது என்று தீர்ப்பு வழங்கினார்கள்.

அதுகேட்டு மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. தங்களின் இல்லம் சென்ற அவர்கள் தரையில் குப்புற வீழ்ந்தவர்களாய், ''இறைவ எம்பெருமா! நீ இவ்வாறு செய்வாய் என்று நான் கனவிலும் கருதவில்லை. எழுபதாண்டுகளாக இறைவன் ஒருவன் உளான் என்று கூறி உன்னை வணங்கி வந்த ஒருவனையும் இத்தனை காலமாக, நீ இல்லை, இறைவன் என்று ஒருவன் இல்லை என்று பிதற்றித் திரிந்து உன்னை நிராகரித்து வந்த ஒருவனையும் ஊர் அறிய, உலகறிய சரிநிகர் சமானமாக்கிவிட்டாயே'' என்று கூறிக் கதறி அழுதனர். அப்பொழுது, ''மாலிக்கே! உம்முடைய கை அவனுடைய கையுடன் பிணைக்கப்பட்டிருந்ததனால் அவனுடைய கையை நெருப்புத் தீண்டவில்லை; இல்லையெனில் அது நெருப்பில் வெந்து சாம்பலாகி இருக்கும்'' என்று அசரீரி முழங்கியதைச் செவியுற்றார்கள். அதுகேட்டு அவர்களின் முகம் அப்பொழுதலர்ந்த செந்தாமரையை வென்றது.

பொறுமையின் இருப்பிடமாகத் திகழ்ந்த அவர்கள் எவர் தமக்கு எத்தீங்கு செய்த போதினும் அதனைப் பொறுத்துக் கொள்ளும் மனப்பண்பு பெற்று விளங்கினர். அவர்கள் பஸராவில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் குடி இருந்த பொழுது, அவர்களின் அண்டை வீட்டுக்காரனாகிய யூதன் அவர்களுக்குச் செய்த கொடுமைகளோ கொஞ்சமல்ல. அவன் வீட்டு அசுத்த நீர், குழாய் வழியாக அவர்களின் வீட்டிற்குள் பாய்ந்து அவர்கள் தொழுமிடத்தையெல்லாம் அசுத்தம் செய்து வந்தது. இதைப் பற்றி அவர்கள் எவரிடமும் குறை கூறாது ஒவ்வொரு நாளும் அவ்விடத்தைத் தண்ணீரால் கழுவி அதன் பின் அங்குத் தொழுது வந்தார்கள். இது கண்டு அந்த யூதனுக்கே பெரும் வியப்பாக இருந்தது. ஒருநாள் அவன் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களைச் சந்தித்து இது பற்றி அவர்களிடம் வினவியபொழுது, ''தங்கள் வீட்டிலிருந்து வரும் அசுத்த நீர் என் வீட்டில் வந்து பாய்வதால் எனக்கு நாள்தோறும் சிரமமாகத்தான் உள்ளது. எனினும் எவர் சினத்தை அடக்கி மக்களின் தவறுகளைப் பொறுத்துக் கொள்வாரோ அவரைத் தான் நேசிப்பதாக இறைவன் தன் திருமறையில் கூறியுள்ளான். இறைவனால் நேசிக்கப்படுவதான அம்மேலான நிலையை நான் அடைவதாகிய அப்பெரும் பேற்றின் முன் உம்மால் எனக்கேற்படும் இன்னல்களெல்லாம் எம்மாத்திரம்?'' என்று கூறினார்கள். இது கேட்ட அவன் அக்கணமே தான் அவர்களுக்கு இழைத்து வந்த துன்பங்களை எல்லாம் பெருமனத்துடன் பொறுத்தருளுமாறு வேண்டி இஸ்லாத்தைத் தழுவினான்.

இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பி அவர்கள் பொறுமையை மேற்கொண்டிருந்தது போன்று அவனின் திருப் பொருத்தத்தை விழைந்து இரவு முழுவதும் வணங்குபவர்களாக இருந்தார்கள். ஒரு

நள்ளிரவில் அவர்களின் அருமை மகள் அவர்களை அணுகி, ''அப்பா! சற்று நேரம் உறங்கி ஓய்வு கொள்ளுங்கள்'' என்று கூறிய பொழுது, ''மகளே; உன் தந்தை அல்லாஹ்வின் சினத்திற்கு அஞ்சுகின்றான். இறையச்சம் அவனுடைய கண்களிலிருந்து உறக்கத்தைப் பறித்துக் கொண்டு சென்று விட்டது. இறையருள் அவன் மீது படிவதற்கு வரும் பொழுது அவன் உறங்கிக் கொண்டிருப்பானாயின் அது திரும்பிப் போய்விடுமோ என்று அவனுக்கு அச்சமாக உள்ளது. எனவே தான் இவ்வாறு வணக்கத்தில் ஈடுபட்டுள்ளான்'' என்று கூறினர்.

அவர்கள் தங்களின் உடல் நலனைச் சிறிதேனும் பொருட்படுத்தாது இரவு முழுவதும் நின்று வணங்குவதைப் பற்றிக் கேள்வியுற்ற மக்கள், ''இவ்வாறு ஏன் தாங்கள் தங்களை அளவுக்கதிகமாக வருத்திக் கொள்கின்றீர்கள்?'' என்று கூறிய பொழுது, ''அல்லாஹ்வின் இரணத்தைத் தின்றுகொண்டு ஷைத்தானுக்கு வழிபாடு நிகழ்த்தல் தகுமா நமக்கு?'' என்று அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் இரவு முழுவதும் வணக்கம் நிகழ்த்தி வந்தகாலை ஓரிரவு அவர்களை உறக்கம் மிகைத்து விட்டது. அப்பொழுது ஒரு பெண் அவர்களின் கனவில் தோன்றி, ''உமக்குப் படிக்கத் தெரியுமா?'' என்று வினவினாள். அதற்கு அவர்கள் 'ஆம்' என்று பதில் கூறினர். அப்பொழுது அவள் ஒரு கடிதத்தை அவர்களிடம் கொடுத்தாள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

''தீனாருடைய மகனே! இவ்வுலக இன்பங்கள் உம்மை மறுமைப் பேரின்பங்களையும் ஆங்குள்ள கண்ணழகிகளையும் மறக்கச் செய்து விட்டனவோ? நீர் மறுமைப் பேரின்பங்களை விரும்பின் உறக்கத்தை விட்டொழித்து வணக்கத்தில் ஈடுபடுவீராக! திருக்குர்ஆனை ஓதி தஹஜ்ஜுத் தொழுவது உறக்கத்தைவிட மேலானதாகும்.''

இதைப் படித்ததும் அவர்கள் பதறி விழித்தெழுந்து 'உளூ'ச் செய்து மீண்டும் வணக்கத்தில் ஈடுபடலானார்கள்.

ஒருநாள் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் பஸராவின் அண்மையிலுள்ள கானகத்தில் தனியே நடந்து கொண்டிருக்கும் பொழுது ஸாதூன் (ரஹ்) அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர்கள் அப்பெரியாரை நோக்கி, ''நலமா?'' என்று வினவினார்கள். அதற்கு அவர்கள் ''நெடுந்தொலைப் பயணத்திற்கு ஆயத்தமாக இருக்கும் ஒருவனைப் பற்றி என்ன நலம் விசாரிக்கிறீர்கள்? அவனோ எல்லா அடியார்களுடையவும் அரசனும் நீதிபதியும் இரட்சகனுமான இறைவனை முன்னோக்கியுள்ளான்'' என்று கூறி அழுதனர்.

பொருளடக்கம்



அப்பொழுது மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் அம்மாதவரை நோக்கி, ''ஏன் அழுகிறீர்கள்?'' என்று வினவினர்.

அதற்கு அவர்கள் ''இறைவன்மீது ஆணையாக நான் உலக இச்சையின் காரணமாகவோ சோதனையின் அச்சத்தினாலோ அழவில்லை. என் வாணாளோ மறுமைக்குத் தேவையான எந்த நல்ல வணக்கமுமின்றிக் கழிந்து விட்டது. மறுமைக்கான எத்தகு தயாரிப்பும் நான் செய்து கொள்ளவில்லை. நான் சுவனம் புகுவேனா அல்லது நரகில் வீழ்வேனா என்பதையும் நான் அறியேன். இந்நிலையில் நான் அழாது என் செய்வேன்?'' என்று கூறி மீண்டும் தேம்பித் தேம்பி அழுதனர்.

அவர்களின் இந்த அறிவார்ந்த பேச்சைக் கேட்டு,''தாங்களோ மாபெரும் அறிஞராக இருக்க, தங்களை ஏன் மக்கள் மஜ்னூன் (பைத்தியக்காரர்) என்று கூறுகின்றனர்?'' என்று வினவினர் மாலிக் (ரஹ்).

அதற்கு அவர்கள், ''நீங்களுமா மக்கள் கூறுவதைக் கேட்டு ஏமாந்து விட்டீர்கள்? என்னிடம் பைத்தியத்தின் எந்த அடையாளமும் இல்லை. என் எசமானனின் மீது நான் கொண்ட அணையாக் காதல் என் உள்ளத்திலும் உதிரத்திலும், எலும்பிலும் சதையிலும் ஊடுருவி விட்டது. அதன் காரணமாக நான் என்னையே மறந்த நிலையில் உள்ளேன். இதனை உணர முடியாத பைத்தியங்கள் என்னைப் பார்த்துப் பைத்தியம் என்று கூறுகின்றன'' என்று மொழிந்தனர்.

அப்பொழுது மாலிக் (ரஹ்) அவர்கள் அப்பெரியாரை நோக்கி, ''தாங்கள் ஏன் மக்களை விட்டு ஒதுங்கிக் கானகத்தில் அலைந்து திரிகின்றீர்கள்?'' என்று வினவினர்.

அதற்கு பதில் கூறும் முறையில் அவர்கள்,

*குன்மினன் னாஸி ஜானிபா, வர்ல பில்லா ஹி சாஹிபா*

மனிதர்களைத் தவிர்ந்து கொள்ளும். அல்லாஹ்வை நண்பனாக்கிக் கொள்ளும்.

*கல்புன்னாஸி கைபஷிஹ்த்த, தஜிதுஹூ ~ம் அகாரிபா*

மனிதரின் இதயம், நீ அதனை எப்படிச் சோதித்துப் பார்ப்பினும் தேள்களுக்கு நிகராக இருப்பதையே காண்பாய் என்ற கவிதைகளைப் பாடிவிட்டு அவ்விடத்தை விட்டும் அகன்றனர்.

ஒரு தடவை அவர்கள் மக்காவுக்கு 'ஹஜ்'ஜு~ச் செய்யச் சென்ற பொழுது வழியில் ஓர் இளைஞர் எவ்விதப் பொருளுமின்றி நடந்து செல்வதைக் கண்டு, ''உமக்கு எந்த ஊர்? நீர் எங்குச் செல்கின்றீர்?'' என்று

வினவினர். அதற்கு அவர், ''நான் என் இறைவனிடமிருந்து என் இறைவன் பால் செல்கின்றேன்'' என்று பதிலிறுத்தார். உமக்கான உணவு, நீர், பயணப் பொருள்கள் ஆகியவையெல்லாம் எங்கே?'' என்று அவரிடம் அவர்கள் வினவிய பொழுது ''அவையெல்லாம் அவனிடமே உள்ளது'' என்று அவர் பதில் கூறினார். ''உம்மிடம் செலவிற்கான பணம் ஏதும் உள்ளதா?'' என்று அவர்கள் மீண்டும் வினவிய பொழுது, ''ஆம்; நான் புறப்படுங்கால் அவனிடமிருந்து காஃப், ஹா, மீம், ஐன், ஸாத் என்ற ஐந்து எழுத்துக்களை எடுத்துக் கொண்டேன்.'' என்று விடையிறுத்தார் அவர். அவற்றின் பொருள் யாது?'' என்று அவர்கள் வினவிய பொழுது, ''காஃப் என்றால் காஃபீ (போதுமானவன்) என்பதைக் குறிக்குமென்றும், 'ஹா' என்றால் ஹாதி (நேர்வழி காட்டுபவன்) என்பதை உணர்த்து மென்றும் 'மீம்' என்றால் முஅத்தீ (நிறைவேற்றி வைப்பவன்) என்று பொருள்படும் என்றும், 'ஐன்' என்றால் ஆலிம் (அவரவர் தேவையை அறிந்தவன்) என்று விரிவுபடுமென்றும், 'ஸாத்' என்றால் ஸாதிக் (உண்மையாளன்) என்பதை உரைக்குமென்றும், இறைவனை நேசித்தவனுக்கு இவ்வைந்தும் போதுமென்றும், வேறு எப்பொருளும் அவனுக்குத் தேவை இல்லை என்றும் கூறினார். அதுகேட்ட மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் தம் சட்டையைக் கழற்றி அவருக்கு அன்பளிப்பாக வழங்க, ''சட்டையுடனிருக்கும் நிலையை விடச் சட்டை யில்லாதிருக்கும் நிலையே மேலானது'' என்று கூறி, அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். அன்றிரவு முழுவதும் அவர் வானத்தை அண்ணாந்து பார்த்தவராய், ''இறைவ எம்பெருமா! உனக்கு மகிழ்ச்சி வழங்குவதை நான் செய்யுமாறு செய்வாயாக! உனக்குத் துன்பம் தருவதை நான் செய்யாது காத்தருள் புரிவாயாக!'' என்று இறைஞ்சிக் கொண்டிருந்தார்.

இதன்பின் அவரை அவர்கள் மினாவில் சந்தித்த பொழுது, ''இறைவ எம்பெருமா! இங்கு வந்துள்ள ஒவ்வொருவரும் உனக்காக ஆடு, மாடு, ஒட்டகைகளை பலி (குர்பானி) கொடுக்கிறார்கள். என்னிடம் பலி கொர்டுக்க என்னைத் தவிர, என் நப்ஸைத் தவிர வேறொன்றும் இல்லை. நான் அதனை உனக்குப் பலி கொடுத்துவிட்டேன். அதனை நீ ஏற்றுக் கொள்'' என்று அலறினார். அத்துடன் அவரின் உயிர் பிரிந்தது.

இறந்த அவரை மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் நல்லடக்கம் செய்துவிட்டு உறங்குங்கால் அன்றிரவு அவரைக் கனவில் கண்டு, ''அல்லாஹ் உம்மை என் செய்தான்?'' என்று வினவினர். அதற்கு அவர், ''நான் பகைவர்களின் கொடுவாளால் வெட்டப்படாது இறைகாவ லென்னும் ஒளி வாளால் வெட்டப்பட்டதன் காரணமாக என் இறைவன் மார்க்கத்திற்காகப் போர் செய்து உயிர் நீத்த தியாகி (ஷுஹீத்)களுக்கான

பதவியை எனக்கு வழங்கி என்னைக் கௌரவித்தான்'' என்று மகிழ்ச்சியுடன் மறுமொழி பகர்ந்தார்.

ஒருநாள் அவர்கள் பஸராவின் தெருவழியே சென்று கொண்டிருந்த பொழுது சிலர் ஒரு 'ஜனாஸா'வைச் சுமந்து செல்வதைக் கண்டனர். ஜனாஸாவுக்குப் பின் ஒருவரும் வரவில்லை. அது கண்டு பெரிதும் வியப்பில் ஆழ்ந்த அவர்கள், அந்த ஜனாஸாவைச்சுமந்து செல்பவர்களிடம் சென்று அதற்கான காரணத்தை வினவினர். அதற்கு அவர்கள் ''அவர் பெரும்பாவி. எனவே ஒருவரும் அவருடைய அடக்கச் சடங்கில் கலந்து கொள்ள விரும்பவில்லை'' என்று கூறினர். எனவே அவர்கள் அந்த ஜனாஸாவின் பின்னே சென்று தொழுவித்து அதனை நல்லடக்கம் செய்துவிட்டு ஆங்கிருந்த மரநிழலில் படுத்துறங்கினர். அப்பொழுது அவர்கள் கனவொன்று கண்டனர். விண்ணிலிருந்து இரண்டு அமரர்கள் இறங்கிவந்து அவரின் அடக்கவிடத்தைத் தோண்டினார்கள். அதன்பின் அவர்களில் ஒருவர் அடக்க இடத்திற்குள் இறங்கி மேலே நின்று கொண்டிருந்தவரை நோக்கி, ''இவரை நரகவாதி என்று எழுதும். இவரின் உறுப்புகளில் ஒன்று கூடப் பாவம் செய்யாமலில்லை'' என்று கூறினார். அதற்கு மற்றவர், ''அவசரப்படாதேயும், அவரின் இரண்டு கண்களையும் சோதித்துப் பாரும்'' என்று கூறினார். அவ்வாறே அவர் சோதித்துப் பார்த்துவிட்டு, ''அவை இரண்டும் 'ஹராம்' ஆன பார்வையால் நிரம்பி இருக்கின்றன'' என்று பதில் கூறினார். அதன்பின் மேலே நின்றவர் உள்ளே இறங்கியவரை நோக்கி, அவரின் காது, கை, கால், நாவு ஆகியவற்றைச் சோதித்துப் பார்க்குமாறு கூறினார். அவற்றை அவர் சோதித்துப் பார்த்துவிட்டு, ''அனைத்தும் பாவம் செய்துள்ளன'' என்று மறுமொழி பகர்ந்தார்.

அப்பொழுது மேலே நின்று கொண்டிருந்தவர் அவரை நோக்கி, ''சகோதரரே! சற்றுப் பொறும் நான் வந்து அவரைச் சோதித்துப் பார்க்கிறேன்'' என்று கூறி உள்ளே இறங்கி அவரின் தலைமாட்டில் சற்று நேரம் நின்று கவனித்தபின் மற்றவரை நோக்கி ''நான் அவரின் இதயத்தை நோட்டமிட்டேன். அதில் ஈமான் (இறை நம்பிக்கை) நிரம்பியுள்ளது. எனவே அவரைச் சுவனவாசி என்று எழுதும். அவரின் ஈமான் அவரின் அனைத்துப் பாவங்களையும் பொசுக்கிச் சாம்பலாக்கி விடும்'' என்று கூறினார். மற்றவரும் அவ்வாறே எழுதினார்.

அதன்பின் அவர் பின்வரும் கவிதையைப் படித்தார்.

''மக்கள் இவரின் பாவங்களைக் கண்டு தொலைவில் ஓடி ஒதுங்கிய பொழுது நானும் அவரை மன்னிக்கக் கூடாது என்று எண்ணினேன். எனினும் என்னுடைய பொறுமை பெரிது. என்னுடைய பொறுமை

வாசல் என்றும் மூடப்படுவதில்லை. என்னுடைய கட்டளைகளை எவரால் அணுவளவும் பிசகின்றி நிறைவேற்ற இயலும்?''

மற்றுமொரு முறை இவர்கள் ஹஜ்ஜுச் செய்யச் சென்ற பொழுது ஒரு காகம் தன் அலகுகளால் ஒரு ரொட்டியைக் கௌவிக் கொண்டு செல்வதைக் கண்டு அது எங்கே செல்கின்றது என்பதை அறிய அதன் பின்னே இவர்கள் சென்றார்கள். அது இறுதியாக ஒரு மரத்தை அடைந்தது. அதன் கீழே ஒரு மனிதர் கை கால்கள் வெட்டப்பட்டு முண்டமாகக் கிடந்தார். அவரின் நெஞ்சின் மீது அது அமர்ந்து தன் அலகுகளால் அந்த ரொட்டியைப் பிய்த்து அவரின் வாயில் ஊட்டியது. பின்னர் பறந்து சென்று தன் அலகுகளில் தண்ணீர் கொணர்ந்து அவரின் வாயில் சொட்டுச் சொட்டாக ஊற்றியது. இவ்வாறு பல தடவை தண்ணீர் கொணர்ந்து அவரின் வாயில் ஊற்றியபின் அது பறந்து சென்றது. இதுகண்டு பெரிதும் வியப்பெய்திய இவர்கள் அவரை அணுகி அவரின் வரலாற்றை விசாரித்தார்கள். தாம் ஹஜ்ஜுச் செய்ய வந்ததாகவும் வழியில் கொள்ளைக் கூட்டத்தினர் தம்மை மடக்கி தம் பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றதோடு தம் கை, கால்களையும் வெட்டி தம்மை முண்டமாகக் கிடத்திவிட்டுச் சென்றதாகவும் மூன்று நாட்களாக உணவின்றித் தவித்த தாம் இறைவனை நோக்கி, தமக்கு உணவளிக்கு மாறும் இல்லையேல் தம்மைக் கொன்றொழிக்குமாறும் இறைஞ்சிய தாகவும் அந்நாளிலிருந்து இக்காகம் வந்து நாளொன்றுக்கு இரண்டு தடவை இவ்வாறு செய்து வருவதாகவும் கூறினார். அதுகேட்டு இவர்கள் இறைவனின் அப்பெரும் பேரருளை எண்ணி இறும் பூதெய்தினார்கள்.

ஒருநாள் இவர்கள் ஒரு வழியே சென்று கொண்டிருந்தக்கால் ஒருவர் ஓரிடத்தில் அமர்ந்து அழுது பிரலாபித்து, ''இறைவ எம்பெரும! என் பவம் பொறுத்தருள்வாய். நான் செய்த பவத்தின் சுவை எனக்கு இப்பொழுது-அறவே இல்லாது போய்விடினும் அது பற்றிய எண்ணம் என் உள்ளத்தில் அடிக்கடி தோற்றம் வழங்கி என்னைக் கொல்லாது கொன்று கொண்டுள்ளது'' என்று முறையிட்டுக் கொண்டிருந்தார். அவரை இவர்கள் அணுகி, அவர் இவ்வாறு இறைஞ்சுவதற்கான காரணம்யாது என்று வினவியபொழுது, ''நான் துவக்கத்தில் ஒரு கிறிஸ்தவ மத குருவாக இருந்தேன். ஓரிரவு நான் படுத்துறங்குங்கால் ஒருவர் என் கனவில் தோன்றி, ''நீர் அகிலமெல்லாம் படைத்தாளும் இறைவனை வணங்குவதற்குப் பதிலாக அவனின் நல்லடியாரும் திருத்தூதருமான ஈஸாவை இறைவனென வணங்கிக் கொண்டுள்ளீர். இதனை விட்டொழித்து நேர்வழி பெறுவீராக!'' என்று கூறினார். அது கேட்டு நான், 'தாங்கள் யார்?' என்று வினவியபொழுது, 'நான் இறுதி நபியாவேன். என்னைப் பற்றி இறைவன் தௌராத்திலும் இஞ்சீலிலும்

முன்னறிவிப்புச் செய்துள்ளான்' என்று கூறி எனக்கு நேர்வழி காட்டுமாறு இறைவனிடம் இறைஞ்சினார். அத்துடன் விழித்தெழுந்த நான் அதன்பின் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமாக வாழ்ந்து வருகிறேன். எனினும் என்னுடைய முந்தையப் பவம் என் மனத்தை நோவினை செய்கிறது. எனவே அதனைப் பொறுத்து என்னை ஆட்கொள்ளுமாறு இறைவனிடம் இறைஞ்சிக் கொண்டுள்ளேன்'' என்று கூறினார்.

வேறொரு நாள் அவர்கள் பஸராவின் தெருவழியே சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது ஓர் அழகிய அடிமைப் பெண் அலங்கார உடையணிந்து பணியாளருடன் சென்று கொண்டிருந்தாள். அப்பொழுது அவர்கள் அவளை நோக்கி, ''உன் எசமான் உன்னை விற்பாரா?'' என்று வினவினர். அது கேட்ட அவள் வியப்பு மீக்குற்றவளாய் அவர்களை ஒரு முறைக்கு இருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ''ஷைகு அவர்களே! தாங்கள் என்ன கூறினீர்கள்?'' என்று வினவினாள். அப்பொழுது அவர்கள் தாம் முன்னர் கூறியதைத் திரும்பக் கூறினார்கள். உடனே அவள், ''ஷைகு அவர்களே! என்னை என் எசமான் விலைக்கு விற்பாரா மாட்டாரா என்பதை நான் அறியேன். அப்படித்தான் அவர் என்னை விலைக்கு விற்றால் கூடத் தங்களைப் போன்ற ஏழைகளால் என்னை விலைக்கு வாங்க இயலுமா?'' என்று வினவினாள்.

''நீ என்ன? உன்னையும் என்னால் விலைக்கு வாங்க இயலும். உன்னை விடப் பேரழகு வாய்ந்தவளையும் என்னால் விலைக்கு வாங்க இயலும்?'' என்று பதில் கூறினார்கள் அவர்கள்.

இது பித்துக்குளித்தனமாக அவளுக்குத் தெரிந்தது. இடி, இடி என்று சிரித்தாள் அவள். பின்னர் தன் பணியாளரை நோக்கி ''இவரை நம் இல்லம் அழைத்து வாருங்கள்'' என்று கூறினாள். அவ்வாறே அவர்கள் செய்தனர்.

இல்லம் வந்த அவள் நேரே தன் எசமானனிடம் சென்று வழியில் நடந்ததைக் கூறினாள். அதுகேட்டு அவனும் வயிறு குலுங்கச் சிரித்தான். ''யார் அவர்? அவரை அங்கே அழைத்து வாருங்கள்'' என்று அவன் கூறினான்.

அவர்களைக் கண்டதும் அவனுடைய சிரிப்பெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்து விட்டது. ஓர் இனம் தெரியாத திடுக்கம் அவனுடைய உள்ளத்தை ஆட்கொண்டது.

''தங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று தாழ்மையுடன் வினவினான் அவன்.

''இந்தப் பெண்ணை நீர் என்னிடம் விற்று விடும்'' என்றார்கள் அவர்கள்.

''அவளின் விலையைத் தங்களால் கொடுக்க இயலுமா?

''ஏன் இயலாது? அவளின் விலை இரண்டு பேரீத்தம் கொட்டைகள் தாமே'' என்றார் அவர்கள்.

அப்பொழுது 'கொல்' என்ற சிரிப்பின் ஒலி அந்த மண்டபம் முழுவதும் எதிரொலித்தது. ஆனால் அவளின் எசமானனோ சிரிக்காது அவர்களை நோக்கி, ''பெரியீர்! தாங்கள் இவளின் விலையை எவ்வாறு நிர்ணயித்தீர்கள்?'' என்று வினவினான்.

அதற்கு அவர்கள் இவளிடம் பல குறைகள் உள்ளன. குறை உள்ளவற்றின் விலையும் குறைவாகத்தானே இருக்கும். அந்த அடிப்படையில் நான் அவளின் விலையை நிர்ணயித்தேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

''என்ன அவளிடம் குறைகள் உள்ளன?'' என்றான் அவன்.

''குறைகளா? ஒன்றா? இரண்டா? கூறுகின்றேன். கேளும். இவள் குளித்து நறுமணம் பூசாவிட்டால் இவளுடைய உடல் நாற்றமெடுத்து விடும். உறங்கி எழுந்து பல் துலக்காவிட்டால் வாய் வீசத் தொடங்கி விடும். கூந்தலில் எண்ணெய் இட்டு வாரி முடிக்காவிட்டால் அது அழுக்கடைந்து அலங்கோல நிலையிலே ஈருக்கும் பேனுக்கும் இருப்பிடமாகி விடும். அவளுக்குச் சிறிது வயதாகி விட்டாலே அவளின் அழகெல்லாம் எங்கோ மாயமாய் ஓடி மறைந்து விடும். அவள் கிழவியாகி விட்டாலோ எத்தகு வேலைக்கும் அவள் தகுதியற்றவளாகி விடுகிறாள். அவளுக்கு மாதம் விடாது மாதவிடாய் வருகிறது. அவள் மலஜலம் கழிக்கிறாள். பல்வேறு விதமான அசுத்தங்கள் அவளிடமிருந்து வெளியாகின்றன. விதம்விதமான இன்னல்களுக்கும் இடுக்கண்களுக்கும் அவள் இலக்காகின்றாள். இவையெல்லாம் அவளிடம் காணப்படும் வெளிப்படையான குறைபாடுகள்.

''அவளிடம் மறைந்து கிடக்கும் குறைபாடுகளோ சொல்லும் தரத்தவையல்ல. அவளின் வாழ்வே சுயநலத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். அவள் உம்மீது அன்பு செலுத்துவதும் கூட உள் நோக்குடனேயன்றி நன்றியுணர்வோடு அல்ல. வெம்புவாள் விழுவாள் பொய்யே, மேல் விழுந்தழுவாள் பொய்யே, தம்பலம் தின்பாள் பொய்யே, சாகிறேன் என்பாள் பொய்யே. அவளின் சொல், செயல் அனைத்தும் பொய்மையே உடைத்ததாகும். உமக்குப் பின் அவள்

வேறொருவனிடம் போய்விடுவாள். எனவே அவளை நம்ப முடியாது. நம்பியபேர்கள் நாயினும் கடையராவரேயன்றி வேறில்லை.

ஆனால் என்னிடம் இவளை விடக் குறைந்த விலையில், ஆனால் இவளைவிட ஆயிரம் மடங்கு மேலான பண்புள்ள ஒரு பெண் இருக்கிறாள். அவள் குங்குமம், கஸ்தூரி, ஒளி ஆகியவற்றினால் படைக்கப் பட்டவள். அவள் கடலில் எச்சில் உமிழின் கடலின் உவர்நீர் முழுதும் தேன் இனிமை பெற்று விடும். அவள் பிணத்துடன் பேசின் பிணம் உயிர் பெற்று மறுமொழி பகரும். கதிரவனின் முன் அவளின் சாயல் படின் கதிரவன் ஒளி இழந்து கறுத்து விடுவான். இருளில் அவள் வெளிப்படின் இருள் அவளைக் கண்டு அஞ்சி ஓடி ஒளிந்து விடும். அவள் தன்னை அணிசெய்து கொண்டு உலகில் தோற்றமளிப்பின் அகில உலகமும், எழிலும் மணமும் ஒரங்கே எய்தப் பெறும். அவள் கொண்ட கணவன்மீது நீங்கா அன்புடையவள். வேறொருவனைக் கடைக்கண்ணாலும் பாராதவள். காதல் ஒருவனைக் கைபிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுப்பவள்.

''இவ்விரு அடிமைப் பெண்களில் எவர் விலை கொடுத்து வாங்கத் தகுதியானவர் என்று நீங்களே கூறுங்கள்'' என்றனர் மாலிக் (ரஹ்) அவர்கள்.

அதுகேட்ட அவளின் எசமான் ''தாங்கள் கூறும் பெண்தான்'' என்று கூறிவிட்டு ''அவள் யார்? அவளின் விலை யாது?'' என்று வினவினான்.

அதற்கு அவர்கள், 'நீர் அவளுக்காகவேண்டி அதிகமான விலை கொடுக்க வேண்டிய தேவையில்லை. சாதாரண விலை கொடுத்தாலே போதும். நள்ளிரவில் எழுந்து இரண்டு ரகஅத் 'தஹஜ்ஜுத்' தொழுகை தொழுது கொள்ளும்.

''நீர் உண்ணும் பொழுது ஓர் ஏழையையும் உம்மோடு சேர்த்துக் கொள்ளும்.''

''மனிதர்கள் நடக்கும் பாதைகளில் அசுத்தமோ துன்பம் விளைக்கும் பொருள்களோ கிடப்பின் அவற்றை அப்புறப்படுத்தும்.''

''சொற்பத்தைக் கொண்டு மனநிறைவு கொள்ளும்.

''அழிந்து போகும் இந்த உலகத்திற்கான கவலைகளை விட்டொழித்து அழியா மறு உலகம் பற்றிக் கவனம் செலுத்தும்.''

''அவ்விதம் செய்யின் இம்மையிலும் மறுமையிலும் எழில் வாழ்வு வாழ்வீர், மறுமையில் இன்பச் சுவனத்தில், சுவனத்துக் கண்ணழகி

களுடன் அல்லாஹ்வின் அண்டை வீட்டுக்காரராக வாழும் பேறு பெறுவீர்'' என்று கூறினர்.

அப்பொழுது அவளின் எசமான் அவளை நோக்கி, ''பெண்ணே! அவர் கூறுவதைக் கேட்டாயா?'' என்று வினவினார்.

அதற்கு அவர், ''ஷைகு அவர்கள் உண்மையே உரைத்தனர். அவர்கள் கூறிய அனைத்தும் உண்மையே, உண்மையே, உண்மையே'' என்று கூறினாள்.

உடனே அவர் அவளை நோக்கி, ''நான் உமக்கு உரிமை வழங்கினேன். இன்ன இன்ன சொத்துக்களையும் நான் உனக்கு அளித்தேன்'' என்று கூறினார். பின்னர் தம்முடைய ஏனைய அடிமைகளையும் நோக்கி, ''நான் உங்களுக்கும் உரிமை வழங்கினேன். இன்ன இன்ன சொத்துக்களை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய இந்த வீட்டையும் இதிலுள்ள அனைத்துச் செல்வங்களையும் நான் அல்லாஹ்வின் பாதையில் அறம் வழங்கிவிட்டேன்'' என்று கூறித் தம் விலையுயர்ந்த உடுப்புகளையெல்லாம் களைந்தெறிந்துவிட்டு வாசலில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு முரட்டுத் துணியை எடுத்து அணிந்து கொண்டு கிளம்பிவிட்டார். எங்கே? கானகம் நோக்கி.

அது கண்ட அந்த அடிமைப் பெண்ணும் ''தங்களுக்குப் பின் நான் இங்கிருந்து என் செய்வது?'' என்று கூறி, தானும் ஒரு முரட்டுத் துணியை அணிந்து கொண்டு அவரைப் பின் தொடர்ந்து நடந்து சென்றாள்.

இருவரும் கானகத்தில் பன்னெடுங்காலமாக வசித்துக் கடுந்தவம் செய்து அங்கேயே உயிர் நீத்தார்கள்.

மற்றொரு நாள் மாலிக் (ரஹ்) அவர்கள் பஸராவின் வீதி ஒன்றில் சென்று கொண்டிருந்த பொழுது ஓர் இளைஞர் பெரிய கட்டடம் ஒன்றிற்கு அடித்தளமிட்டுக் கட்டிக் கொண்டிருப்பதை கண்டனர். அதைக் கண்ட அவர்கள், ''இந்த அற்ப உலகைப் பெரிதென மதித்து அதில் இத்துணைப் பெரிய அளவு கட்டடத்தைக் கட்ட இவர் முனைந்து விட்டாரே. அவருக்கு அல்லாஹ் தான் நேர்வழி காட்ட வேண்டும்'' என்று எண்ணினர்.

அதன்பின் அவ்விளைஞரை அணுகி, ''நீர் இக் கட்டடத்தைக் கட்ட எவ்வளவு பணம் செலவழிக்கத் தீர்மானித்திருக்கிறீர்?'' என்று வினவினர்.

அவர்களை எவரென விளங்கிக் கொண்ட அவ்விளைஞர், ''ஓரிலட்சம் தீனார்கள்'' என்று பதிலிறுத்தார்.

''நல்லது; இளைஞரே! நீர் அந்த ஓரிலட்சம் தீனார்களையும் என்னிடம் தந்து விட்டால் உமக்குச் சுவனத்தில் இதைவிடப் பன்மடங்கு அழகான மாளிகையை அன்பளிப்பாகப் பெற்றுத் தரும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். உமக்குச் சம்மதமா?'' என்று வினவினர்.

அவர்களின் இவ்வினா அந்த இளைஞரைச் சிறிது நேரம் திக்பிரமை அடையச் செய்தது. அதன்பின் அவர் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''இது பற்றிச் சிந்தித்து நாளை முடிவு கூறுகிறேன்'' என்று பதிலிறுத்தார்.

அன்றிரவு முழுவதும் அவர் படுக்கையில் புரண்டு இது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். மாலிக்-இப்னு தீனார் (ரஹ்) அவர்களும் அன்றிரவு முழுவதும் தம் தொழுகை விரிப்பில் அமர்ந்து அவ் விளைஞருக்காக இறைவனிடம் இறைஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

பொழுது புலர்ந்ததும் அவர்கள் அவரை அடைந்த பொழுது, அவ்விளைஞர் தம் பணப்பையுடன் அவர்களை எதிர்பார்த்துத் தம் வீட்டு வாயிலில் காத்திருந்தார்.

''என்ன செய்தி?'' என்று வினவிய அவர்களிடம் ''இதோ அப்பணம் முழுவதும் இப்பைக்குள் உள்ளது. இதற்குப் பகரமாக எனக்குச் சுவன மாளிகையைப் பெற்றுத் தருவதாகத் தாங்கள் கூறிய வண்ணம் எழுதித் தாருங்கள்'' என்று கூறினார்.

அவ்விதமே அவர்கள் எழுதித் தங்களின் கையொப்பமிட்டுக் கொடுத்தனர். அதன்பின் அப்பணத்தை எடுத்துச் சென்று ஏழை எளியவர்களுக்கு அறம் செய்துவிட்டார்கள்.

இதன்பின் நாற்பது நாட்களே ஆயின. அந்த இளைஞரின் முடிவு காலம்நெருங்கி விட்டது. அதனை உணர்ந்த அந்த இளைஞர் அந்தப் பத்திரத்தை எடுத்துத் தம் உறவினர் ஒருவரிடம் கொடுத்து, ''நான் இறந்ததும் இதனை என்னுடன் வைத்து நல்லடக்கம் செய்யுங்கள்'' என்று கூறித் தம் கண்களை இறுக மூடிக் கொண்டார். அத்துடன் அவருடைய உயிரும் பிரிந்தது.*

---

* ஒரு நாள் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) பள்ளியில் தொழுதுவிட்டு வீடு திரும்ப எண்ணிய பொழுது மிஹ்ராபின் அருகில் ஒரு காகிதம் கிடப்பதைக் கண்டு அதனை எடுத்துப் பார்க்கும் பொழுது அது தாம் அந்த இளைஞருக்கு எழுதிக் கொடுத்த பத்திரமாக இருப்பதைக் கண்டு வியப்புற்று அதனைத் திருப்பிப் பார்க்கும் பொழுது, ''என் அடியார் மாலிக் இப்னு தீனார் வழங்கிய வாக்குறுதியை நாம் முற்றிலும் ஏற்கக் கூடமைப்பட்டு அவ்விளைஞருக்கு அவர் வாக்குறுதியளித்ததைவிட எழுபது மடங்கு அழகான மாளிகையைச் சுவனத்தில் நல்கியுள்ளோம்'' என்று எழுதியிருப்பதைக்

அவர்களின் இல்லத்தின் அருகே வாழ்ந்து வந்த ஓர் இளவல் துன்மார்க்கத்தில் உழன்று கொண்டிருந்தான். எவரேனும் அவனுக்கு அறிவுரை பகர்ந்து அவனை நேர்வழிப்படுத்துவார் என்று அவர்கள் எண்ணிப் பொறுமையோடிருந்தார்கள். எனினும் எவரும் அவ்விதம் செய்ய முன்வரவில்லை. அதற்கு மாறாக மக்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து அவர்களிடம் வந்து அவனைப்பற்றிக் குறை கூறி அவனைத் திருத்துமாறு வேண்டிக் கொண்டார்கள்.

அவ்விதமே அவர்கள் அவனிடம் சென்று அவனுக்கு இதமாக அறிவுரை பகர்ந்த பொழுது அவன் அதனைச் சிறிதேனும் பொருட் படுத்தாது ''நான் அரசரின் செல்லப்பிள்ளை. எனவே நான் என் விருப்பப்படி செய்வேன். எவரும் என்னை யாதும் செய்ய இயலாது'' என்று வீராப்புடன் கூறினான்.

''சரி; நானே அரசரிடம் சென்று உன்னுடைய ஒழுக்கவீனத்தை எடுத்துரைத்து உன்னைத் தண்டிக்குமாறு செய்வேன்'' என்று கூறினர் அவர்கள்.

அதுகேட்ட அவன் ஒரு வெடிச் சிரிப்பை உதிர்த்த வண்ணம் ''தங்களால் இயன்றதைச் செய்யுங்கள். ஆனால் ஒன்றும் நடக்காது. அரசர் என் மீது பெரிதும் அன்புள்ளவர்'' என்று கூறினான்.

''அவ்விதமானால் நீ செய்து வரும் அழிச்சாட்டியங்களைப் பற்றி உன்னையும் என்னையும் படைத்துப் பரிபாலிக்கும் இறைவனிடமே முறையிடுவேன்'' என்று கூறினார்கள் அவர்கள்.

அதற்கு அவன் ''இறைவன் அருளாளர்களிலெல்லாம் அருளா ளனல்லவா? அவன் என் பாவம் பொறுத்தருள்வான்'' என்று பதிலுரைத்தான்.

---

கண்டனர். உடனே அவர்கள் அவ்விளைஞரின் இல்லம் சென்று அவ்விளைஞரைப் பற்றி விசாரித்த பொழுது அவர் இரண்டு நாட்களுக்கு முன்னரே இறப்பெய்தியதாகக் கூறினர். அதன்பின் அவர் கூறிச் சென்ற வண்ணம் ஒரு பத்திரத்தை அவருடன் வைத்து நல்லடக்கம் செய்ததையும் எடுத்துரைத்தனர். அப்பொழுது மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் தம் கையிலிருந்த அந்தப் பத்திரத்தைக் காட்டிய பொழுது, ''இதுதான் அப்பத்திரம், இதுதான் அப்பத்திரம்'' என்று கூறி அவர்கள் வியப்புற்றார்கள். அவர்களால் தங்களின் கண்களையே நம்ப இயலவில்லை.

பிற்காலத்தில் அந்த இளைஞரைப் பற்றிய நினைவு கூருந்தோறெல்லாம் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் அழுது விடுவார்கள். அவருக்காக இறைவனிடம் இறைஞ்சவும் செய்வார்கள்.

அவனுடைய இந்த பதில் அவர்களைத் திக்குமுக்காட வைத்தது. மேற்கொண்டும் அவனிடம் யாதும் கூறாது அவர்கள் தம் இல்லம் திரும்பினார்கள்.

நாளுக்கு நாள் அவனுடைய அட்டகாசம் பொறுக்க முடியாததாகிக் கொண்டு வந்தது. மக்கள் மீண்டும் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களிடம் வந்து முறையிட்டனர்.

எனவே அவனிடம் மீண்டும் சென்று அவனைக் கண்டித்து வரலாமென்று அவனுடைய இல்லம் நோக்கி அடியெடுத்து வைத்தார்கள் அவர்கள். அப்பொழுது அசரீரி ஒன்று ''நீர் என்னுடைய நண்பனைத் தொடாதீர்'' என்று முழுங்கியது.

அது கேட்டுப் பெரிதும் அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்த அவர்கள் அவ்விளவலின் இல்லம் சென்ற பொழுது ''ஏன்என்னிடம் மீண்டும் வந்தீர்?'' என்று கேட்டான் அவன். நடந்ததை அவனிடம் அவர்கள் எடுத்துரைத்த பொழுது ''அப்படியா! அவன் என்னுடைய நண்பனாயிருப்பின் நான்என்னுடைய உடைமைகள் அனைத்தையும் அவன் வழியிலேயே செலவழித்து விடுகிறேன்'' என்று கூறித் தன் உடைமைகள் அனைத்தையும் அல்லாஹ்வின் பாதையில் செலவழித்து விட்டு பஞ்சைப் பராரியாய் ஊரைவிட்டே வெளியேறி விட்டான்.

இதன்பின் ஒருநாள் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் அவனை மக்காவில் வைத்துக் கண்டனர். அப்பொழுது அவன் அவர்களை நோக்கி ''நான் என் நண்பனைக் காண இங்கு வந்தேன்'' என்று கூறினான். அடுத்த கணம் அவனுடைய உயிர் அவனுடைய உடலைவிட்டுப் பிரிந்தது.

ஒருநாள் அவர்கள் தம் இல்லத்தில் அமர்ந்திருக்கும் பொழுது ஒருவன் அவர்களிடம் வந்து, ''தாம் சரக்குகளைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு வந்ததாகவும் கடல் சுங்க அதிகாரிகள் தம் சரக்குகளுக்கு அதிகமாக வரி விதித்ததோடு தம் கப்பலையும் பறிமுதல் செய்து கொண் டார்கள்'' என்று கூறினான். அது கேட்டு அவன் மீது அவர்களுக்குக் கழிவிரக்கம் ஏற்பட்டது. அவனுக்காகப் பரிந்துரைத்து ஆவன செய்ய அவர்கள் கப்பற்றுறை நோக்கிச் சென்றார்கள்.

அவர்களைக் கண்டதும் ஆங்கிருந்த அலுவலாளர்கள், ''அபூயஹ்யாவே! தாங்கள் ஏன் இத்துணை தொலை நடந்து இங்கு வரவேண்டும். ஏதேனும் எங்களால் ஆக வேண்டுமென்றால் ஒரு வார்த்தை சொல்லி அனுப்பினால் போதாதா?'' என்று கூறினர்.

அதற்கு அவர்கள் ''நான் இங்கு வந்ததன் நோக்கம் இந்த மனிதனின் கப்பலை நீங்கள் விடுவிக்க வேண்டுமென்பதே'' என்று கூறியதும்

''அதற்கென்ன? இதோ செய்கிறோம்!'' என்று கூறி அக்கப்பலை அவர்கள் அக்கணமே விடுதலை செய்தார்கள்.

அதன்பின் அவர்கள் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களை நோக்கி தங்களுக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டினர். அதற்கு அவர்கள் ''நீங்கள் அநியாயமாக வரி வசூலித்து நிரப்பும் அந்தப் பணப்பெட்டியை உங்களுக்காக இறைஞ்சுமாறு கூறுங்கள். ஆயிரக் கணக்கானோர் உங்களை நிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது எவ்வாறு என் இறைஞ்சுதலால் உங்களுக்குப் பலன் ஏற்படப் போகிறது? அநியாயம் செய்யப்பட்ட அவர்களின் இறைஞ்சுதல்களை யெல்லாம் இறைவன் ஏற்றுக் கொள்ளாது என்னுடைய இறைஞ்சுதலை மட்டும் ஏற்றுக் கொள்ளப் போகின்றானா என்ன?''என்று அவர்கள் கூறினர்.

அதற்கு அந்த அலுவலாளர்கள், ''நாங்கள் என் செய்வோம். எங்களின் எசமானர்களல்லவோ அவ்விதம் வரி வசூலிக்குமாறு கூறுகின்றனர்'' என்று எடுத்துரைத்த பொழுது ''அயோக்கியர்களின் நம்பிக்கைக்குரிய அலுவலனாக இருப்பவனும் அயோக்கியனேயாவான். அதற்கான பலனை அவனும் நுகரத்தான் வேண்டும்'' என்று அவர்கள் பதில் மொழிந்தார்கள்.

வேறொரு நாள் ஒருவன் நோய்வாய்ப்பட்டுக் கிடப்பதாகக் கேள்வியுற்று அவர்கள் அவனைச் சென்று பார்த்த பொழுது அவன் இறப்பின் கொடும் பிடியில் கிடந்து தத்தளிப்பதைக் கண்டு அவனுக்கு அவர்கள் 'கலிமா' சொல்லிக் கொடுத்தனர். ஆனால் அக்கலிமாவோ அவனுடைய வாயில் நுழையவில்லை. அதற்குப் பதிலாக அவனுடைய வாயிலிருந்து, பத்து, பதினொன்று என்ற சொற்களே வெளிவந்தன. அப்பொழுது அவன் அவர்களை நோக்கி,''என் முன் நெருப்பாலான இரண்டு மலைகள் உள்ளன. நான் கலிமாக் கூற முயலும் பொழுதெல்லாம் அவை என்னைச் சுட்டெரிக்க ஓடி வருகின்றன. எனவே என்னால் கலிமாச் சொல்ல இயலவில்லை'' என்று இயம்பினான். அதுகேட்ட அவர்கள் அண்மையிலிருந்தவர்களிடம் அவனைப் பற்றி விசாரித்த பொழுது, ''அவன் இரண்டு படிகளை வைத்திருந்தான். வாங்குவதற்கு ஒரு படியையும், விற்பதற்கு ஒரு படியையும் பயன்படுத்தினான்'' என்று கூறினர். உடனே அப்படிகளைக் கொணருமாறு செய்து அவற்றை அவர்கள் உடைத்தெறிந்து, ''இப்பொழுது உன் நிலைமை எவ்வாறு உள்ளது?'' என்று வினவினர். அதற்கு அவன், ''என் வேதனை தாங்க இயலவில்லையே'' என்று கூறிக்கொண்டு உயிர் நீத்தான்.

மற்றொரு நாள் அவர்கள் தம் இல்லத்தில் அமர்ந்து திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் ஓடோடி வந்து

நான்காண்டு காலமாகக் கருவுற்றிருந்த ஒரு பெண் பிரசவ வேதனையால் துன்புறுகிறாள் என்றும் அவளுக்காக இறைவனிடம் இறைஞ்ச வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். ''என்னை இவர்கள் நபி என்று எண்ணிக் கொண்டல்லவோ என்னிடம் வந்து இவ்வாறு கூறுகின்றனர்'' என்று சொல்லி அவர் மீது சீறிச் சினந்த அவர்கள் பின்னர் குர்ஆனை ஓதி முடித்து மூடிவிட்டு, தம் இரு கைகளையும் ஏந்தி, ''இறைவனே! அவளின் கருவில் இருப்பது பெண்ணாயின் அதனை ஆணாக மாற்றுவாயாக! நீ விரும்பிய வண்ணம் செய்ய உன்னால் இயலும். விதியை எழுதும் கோலும் பலகையும் உன்னிடமே உள்ளன'' என்று இறைஞ்சினர். அருகிலிருந்தோர், 'ஆமீன்' கூறினார்கள். அவர்கள் இவ்வாறு இறைஞ்சிக் கொண்டிருக்கும் பொழுது மற்றொருவர் ஓடி வந்து அவள் பிரசவிக்கும் நிலையிலுள்ளதாகக் கூறினார். அவர்கள் இறைஞ்சிக் கைகளைக் கீழே போடுமுன் வேறொருவர் சுருட்டை முடியும் பற்களும் முளைத்த நான்கு வயதுச் சிறுவனைத் தோளில் சுமந்து வந்து, ''இது தான் இப்பொழுது அவளுக்குப் பிறந்த குழந்தை'' என்று கூறினார். அப்பொழுது அக்குழந்தையின் கொப்பூழ் அறுக்கப்படாமலேயே இருந்தது. அதுகண்டு ஆங்கிருந்தோர் அனைவரும் வியப்புற்றதோடு மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களின் மகாத்மியத்தை நன்கு உணரலானார்கள்.

தனித்திருந்து இறைவனை வணங்குவதிலேயே இன்பம் கண்ட அவர்கள், ''எவன் மக்களுடன் உரையாடுவதைவிட இறைவனுடன் உரையாடுவதை அதிகமாய் நேசிக்கவில்லையோ அவன் அறிவீனன்; அகக்கண் குருடன், வாணாளை வீணாளாக்கியவன்'' என்று கூறினர். எனவே வயதாக, ஆக தனித்திருந்து இறைவணக்கத்தில் அதிகமதிகமாக ஈடுபடவும் தம் பவம் பொறுத்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சவும் செய்து வந்தார்கள். ஒருநாள் ஒருவர் அவர்களை அணுகி, ''தாங்கள் எவ்வாறு உள்ளீர்கள்?'' என்று வினவியபோது, 'எவனுக்கு வாணாள் குறைந்து கொண்டும் பாவங்கள் அதிகப்பட்டுக் கொண்டும் இருக்குமோ அவன் எவ்வாறு இருப்பான்?'' என்று அவர்கள் அவரிடம் பதில் கேள்வி கேட்டார்கள்.

மற்றொரு நாள் அவர்களைக் காண வந்த ஒருவர் தமக்கு அறிவுரை நல்குமாறு வேண்ட, ''இறைவன் உனக்கு விட்ட விதியைப் பற்றித் திருப்திகொள். இறைவனும் உன்னைப் பற்றி திருப்தி கொள்வான்'' என்று கூறினர்.

இறுதியாக, அவர்களின் இம்மை வாழ்வும் ஒரு முடிவுக்கு வரும் நாள் வந்தெய்தியது. இறந்த ஒருவரை நல்லடக்கம் செய்வதற்காகச் சென்ற அவர்கள் ஆங்கு மூர்ச்சையுற்றுக் கீழே வீழ்ந்தார்கள். சற்று மூர்ச்சை

தெளிந்ததும் அவர்களின் திருவாயிலிருந்து, ''இவ்வுலக வாழ்வைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் இக்கல்லறைக்குள் சிறுமைப்பட்டுப் புதையுண்டு கிடக்கின்றார்கள்'' என்ற சொற்கள் வெளிவந்தன. இதன்பின் அவர்கள் மீண்டும் மூர்ச்சையுற்று விட்டார்கள். மூர்ச்சையுற்ற நிலையிலேயே அவர்கள் இல்லம் தூக்கி வரப்பட்டார்கள்.

பின்னர் மூர்ச்சை தெளிந்ததும் ஆங்கு வீற்றிருந்த மக்களை நோக்கி, ''என்னை நீங்கள் பைத்தியக்காரன் என்று கேலி செய்யவும் சிறுவர்கள் கிறுக்கன் என்று கல்லாலெறியவும் செய்வார்களோ என்று நான் அஞ்ச வில்லையாயின் நான் என் உடைகளையெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு ஒரு போர்வையை மட்டும் போர்த்திக் கொண்டு தெருத் தெருவாகச் சுற்றி அலைந்து, ''நப்ஸ் (மனோ இச்சை) என்னும் ஷைத்தானால் ஏமாற்றப் பட்டு தீனையும் துன்யாவையும் பாழ்படுத்திக் கொள்ளாதீர்கள். நரக வேதனையிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். உங்களின் தலைக்கு மேல் இறப்பு என்னும் பறவை வட்டமிட்டுக் கொண்டுள்ளது. வாழ்க்கை என்பது இரவல் வாங்கப்பட்ட சில மணி நேரங்களேயாகும். இறையருளை ஒவ்வொரு நாளும் பெற்றுக் கொண்டிருக்கும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தி அவன் விதித்த வழிப்படி நடக்காது தவறான வழியில் அடியெடுத்து வைத்து நடந்து தீனையும் துன்யாவையும் இழந்து விடாதீர்கள் என்று கத்திக் கொண்டிருப்பேன்'' என்று கூறினர்.

பின்னர் தம் முடிவு நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்த அவர்கள் தம் ஊழியர்களை நோக்கி, ''நான் இறந்ததும் என் நெற்றியில் மாலிக் இப்னு தீனார் தன் எசமானனுக்கு வழிப்படாது வெருண்டோடி விட்டான் என்று எழுதுங்கள். என்னை எவரும் சவப்பெட்டியில் வைத்துத் தூக்கிச் செல்லாது, ஓடிப் போன அடிமையை எசமான் இழுத்துச் செல்வது போன்று என் கழுத்தில் கயிற்றைக் கட்டி தெருத் தெருவாக இழுத்துச் செல்லுங்கள். மூன்று இடங்களில் என் நிலையை நன்கு கவனியுங்கள். புதை குழியில் வைத்து என் முகத்தைத் திறந்து அது ஒளியுடன் இலங்கு கின்றதா அல்லது கறுத்துக் காணப்படுகின்றதா என்று பாருங்கள். மஹ்ஷர் வெளியில் வைத்து என் வலக்கரத்தில் பட்டோலை வழங்கப்படுகிறதா என்று கவனியுங்கள். என்னுடைய நன்மை, தீமைகள் நிறுக்கப்படும் பொழுது எத்தட்டு கனக்கிறது என்று உற்று நோக்குங்கள்'' என்று கூறினர்.

அதன்பின் அவர்கள், ''நான் இவ்வுலகில் பிறக்காதிருந்திருப்பின் எத்துணை நன்றாய் இருந்திருக்கும்; நான் இவ்வுலகின் தீய சூழலில் சிக்காதிருந்திருப்பேனே'' என்று கூறினர்.

இக்காலை அவர்களின் ஊழியர்களில் ஒருவர் அவர்களை அணுகி, ''எதையேனும் உண்ணத் தாங்கள் விரும்புகிறீர்களா?'' என்று வினவிய

பொழுது, ''முப்பதாண்டுகளாகப் பாலும் தேனும் கலந்து உண்ண வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது'' என்று கூறினர். உடனே அதனை அவர்களின் வாயில் வைத்து உண்ணுமாறு வேண்டிய பொழுது, ''மனமே! முப்பதாண்டுகளாகப் பொறுமையாக இருந்தாயே. இன்னும் சில கணங்களுக்குப் பொறுமையாக இரு'' என்று கூறினர். இவ்வாறு கூறிவிட்டு அதனைக் கீழே வைத்தனர்.

அடுத்த கணம் தம் 'கலிமா' விரலை உயர்த்தி கலிமா சொன்னவர்களாய், அவர்கள் உயிர் நீத்தார்கள்.

இது பஸராவில் வைத்து ஹிஜ்ரி 131-ஆம் ஆண்டில் (கி.பி. 748) நிகழ்ந்தது.

அவர்கள் இறப்பெய்தியபின் ஒருவர், அவர்களும் முகம்மது வாஸிஃ (ரஹ்) அவர்களும் சுவனம் புகுவது போன்றும் ஆனால் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் முகம்மது வாஸிஃ (ரஹ்) அவர்களைவிட முந்திச் சுவனம் புகுவதாகவும் கண்டு, முகம்மது வாஸிஃ (ரஹ்) அவர்கள், மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களை விடச் சிறப்பு மிகுந்தவர்களாயிற்றே, இஃதென்ன புதுமையாக உள்ளது' என்று எண்ணிக் கொண்டு நிற்குங்கால், ஒரு வானவர் அவரை நோக்கி, ''முகம்மது வாஸிஃ (ரஹ்) அவர்களிடம் இரண்டு காற்சட்டைகள் இருந்தன. ஆனால் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களிடமோ ஒரு காற்சட்டைதான் இருந்தது. எனவே இவர்கள் அவர்களைச் சுவனம் புகுவதில் முந்தி விட்டார்கள்'' என்று கூறுவது போன்றும் கனவு கண்டு விழித்தார்.

வேறொருவர் இவர்களைக் கனவில் கண்டு, ''தங்களுடன் இறைவன் எவ்வாறு நடந்து கொண்டான்?'' என்று வினவிய பொழுது, ''உலகில் நான் அவன் மீது திருப்தியுற்று வாழ்ந்ததன் காரணமாக அவனும் என்மீது திருப்தியுற்று என் பவமனைத்தும் பொறுத்து என்னை ஆட்கொண்டான்'' என்று இவர்கள் பதிலிறுத்தனர்.

ஆம்; அவர்கள் இவ்வுலகில் வாழுங்கால் அவர்கள் இறைவன் மீது திருப்தியுற்று வாழ்ந்தார்கள் தாம். அதன் காரணமாக இறைவனும் அவர்கள்மீது திருப்தியுற்று அவர்களின் பவம் பொறுத்து அவர்களை ஆட்கொண்டான் என்பதில் என்ன வியப்பு உள்ளது?

# 5. ஹபீப் அஜமீ (ரஹ்)

ஒரு வெள்ளிக்கிழமை, பஸரா நகரின் தெருவொன்றில் நடுவயதை எய்திய செல்வர் ஒருவர் அடியெடுத்து வைத்து நடந்து கொண்டிருக்கின்றார். அவருடைய கையிலே பையொன்று உள்ளது, அவரைக் கண்டதும் தெருவிலே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், ''இதோ வட்டி வாங்கும் ஹபீப் வருகின்றார். அவரின் கால் தூசு நம்மீது படின் நாமும் அவரே போன்று பாவியாகி விடுவோம்'' என்று கூறிக் கொண்டு தங்கள் தங்களின் இல்லங்களை நோக்கி விரைந்தோடுகின்றார்கள்.

இதைக் கண்ணுற்றதும் அச்செல்வருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. ''என்ன வாழ்வடா நாம் வாழ்கின்றோம். இதுவும் ஒரு வாழ்வா? சிறுவர், சிறுமியர் கூட நம்மை ஒரு சிறு தூசி அளவு கூட மதிக்கவில்லையே. நம் கால் தூசி அவர்கள் மீது படின் தாம் பாவியாகி விடுவோம் என்று அஞ்சியல்லவோ அவர்கள் நம்மைக் கண்டதும் வெருண்டோடுகின்றார்கள். அத்தகைய பாவியாகி விட்டோமே நாம். ஒரு சாண் வயிற்றிற்காக வேண்டி நாம் இறைவனுக்கு மாறு செய்து இம்மை, மறுமைப் பேறுகளை இழந்து விட்டோமே'' என்று எண்ணினார். அடுத்த கணம் அவருடைய கால்கள் அவரை ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் இல்லத்திற்கு இழுத்துச் சென்று அவர்களின் திருமுன் நிறுத்தியது.

''அடிகளாரே? நான் ஒரு பெரும்பாவி. நான் ஒரு பெரும்பாவி. வட்டி வாங்கி வயிறு வளர்த்து இறைவனுக்கு மாறு செய்த ஒரு மாபெரும் பாவி. இக்கணத்திலிருந்து நான் அதனை விட்டொழித்தேன். எனக்கு அறிவுரை வழங்கி, எனக்காக இறைவனிடம் இறைஞ்சுங்கள்'' என்று வேண்டி நின்றார். அவர்களும் அவ்வாறே செய்ய, இவரும் இறைவனிடம் தம் பவம் பொறுத்தருளுமாறு உள்ளமொன்றி, கண்ணீரை ஆறாகப் பெருக்கி இறைஞ்சினார். இறைவன் அவ்விருவருடைய இறைஞ்சுதல்களையும் ஏற்றுக் கொண்டானோ என்னவோ, அவர் இறைஞ்சி முடித்ததும் அவருடைய முகம் ஒரு விதத் தெய்வீகக் களையுடன் பொலிவுற்றுத் திகழ்ந்தது.

இதன்பின் அவர் இல்லம் திரும்பியக்கால் தம்மிடம் கடன் வாங்கிய ஒருவர் வழியில் தம்மைக் கண்டதும் வெருண்டோடுவதைக் கண்டு, ''தோழரே! ஓடாதீர். உம்மைக் கண்டு நான் வெருண்டோடுவதற்குப் பதிலாக என்னைக் கண்டு நீரல்லவோ வெருண்டோடுகிறீர்? நில்லும்; நான் இப்பொழுது வட்டி வாங்கும் ஹபீபல்ல. அல்லாஹ்வின் நல்லடியான் ஹபீப். நீர் எனக்குத் தர வேண்டிய கடன் தொகை அத்தனையும் நான் உமக்கு அன்பளிப்புச் செய்து விட்டேன். நீர் அதனை எனக்குத் திருப்பித் தர வேண்டியதில்லை'' என்று கூறினார். இது அவரிடம் கடன்பட்டவருக்குப் பெருவியப்பை வழங்கியது. தாம் காண்பது கனவா அல்லது நனவா என்று அவர் குழம்பினார்.

இதன்பின் சற்றுத் தொலை நடந்து சென்ற அவர் தெருக்கோடியில் தாம் முன்னர் பார்த்த சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். இவர் அவர்களை நெருங்கியதும், ''இதோ இறைவனிடம் இறைஞ்சி, பாவ மன்னிப்பு பெற்ற ஹபீப் வருகின்றார். அவர் மீது நம் கால்தூசி படின் நாம் பெரும் பாவியாகி விடுவோம். எனவே நாம் வீடு செல்வோம்'' எனக் கூறிக் கொண்டு அவர்கள் தம் வீடு நோக்கி விரைந்தோடினார்கள். இது அவரின் செவிப்பட்டதும் அவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. அருளாளனாகிய அல்லாஹ்வின் அளப்பரும் கருணையை எண்ணி, எண்ணி வியந்த வண்ணம் அவர் தம் இல்லம் திரும்பினார். அப்பொழுது அவரின் கண்களில் நீர் மல்கியது.

இல்லம் திரும்பிய அவர் உடனே பறை முழக்குபவனை அழைத்து வரச் செய்து தம்மிடம் வட்டிக்குக் கடன் வாங்கிச் சென்றவர்களெல்லாம் அக்கடனைத் திருப்பித் தர வேண்டியதில்லை என்றும், தம்மிடம் அவர்கள் ஆதாரமாகத் தந்திருந்த பத்திரங்களையெல்லாம் வாங்கிச் செல்லலாமென்றும் நகரமெங்கும் பறை முழக்குமாறு செய்தார். அது கேட்ட மக்கள் சாரிசாரியாக வந்து அவரிடம் தாங்கள் கொடுத்திருந்த பத்திரங்களையெல்லாம் பெற்றுச் சென்றார்கள். பின்னர் அவர் தாம் இது காறும் ஈட்டி வைத்திருந்த பொருள்களையெல்லாம் வாரி, வாரி, ஏழை எளியவர்களுக்கு வழங்கினார். இவரும் இவரது மனைவியும் தாங்கள் அணிந்திருந்த ஆடைகளைக் கழற்றி ஏழைகளுக்கு அறம் செய்துவிட்டு, ஏழைகளோடு சேர்ந்து ஏழைகளாகி விட்டார்கள். ஏழைகளின் பட்டியலில் அவர்களின் பெயரும் இடம் பெற்றது. பாவி ஹபீப், செல்வர் ஹபீப், ஏழை ஹபீப், இறையடியார் ஹபீப் ஆக மாறிவிட்டார்.

இவ்வாறு அவருடைய வாழ்க்கையில் மாபெரும் திருப்பம் ஏற்படுவதற்கு மூல காரணமாய் அமைந்தது, அதற்கு முந்திய நாள் வியாழனன்று நடந்த நிகழ்ச்சியாகும். வட்டியை வசூல் பண்ணுவதில்

மிகவும் கடுமையாக நடந்து கொள்ளும் அவர், அன்று ஒருவரிடத்தில் வட்டியை வசூல் பண்ணச் சென்ற பொழுது வட்டிக்குக் கடன் வாங்கியவர் வீட்டில் இல்லாதது கண்டு பெரிதும் ஏமாற்றமுற்றார். அப்பொழுது உள்ளே இருந்த அவரின் மனைவி, ''என் கணவர் வெளியே சென்று விட்டார். தங்களுக்குத் தர எங்களிடம் இப்பொழுது யாதொரு பணமும் இல்லை, ஓர் ஆட்டை அறுத்தோம். அதன் தலையைத் தவிர எங்களிடம் இப்பொழுது யாதொன்றும் இல்லை'' என்று கூறினார். ''நல்லது; இத்துணை தொலை வந்து அலைந்ததற்குக் கூலியாக அந்த ஆட்டுத் தலையையாவது கொடு'' என்று வன்னெஞ்சத்துடன் மொழிந் தார் அவர்.

அது கேட்டு அப்பெண்மணிக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. இன்று உணவிற்காக வைத்திருந்ததை இவர் எவ்வித ஈவிரக்கமுமின்றி இவ்வாறு கேட்கின்றாரே. என் செய்வது? கொடுக்கா விடினும் கெடுபிடி செய்யத் துவங்கி விடுவார். நாம் பட்டினி கிடந்தாலும் பாதகமில்லை. அவர் தம் பாழும் வயிற்றை அதைத் தின்று நிரப்பட்டும் என்று தன் மனத்திற்குள் கூறியவளாய் அதனை அவரிடம் கொண்டு வந்து கொடுத்தாள்.

அதனைப் பெற்றுத் தம் இல்லம் சென்ற அவர் தம் மனைவியிடம் அதனைக் கொடுத்துச் சமைக்குமாறு கூறிவிட்டு லெளியே சென்று ரொட்டி வாங்கிக் கொண்டு வந்தார். அச்சமயத்தில் ஓர் ஏழை அவரின் வீட்டு வாயலுக்கு வந்து தான் உணவருந்திப் பல நாட்களாகின்றன வென்றும் எனலே தனக்குப் பிடி அன்னம் தருமாறும் ஈனக்குரலில் வேண்டி நின்றான். அப்பொழுது அவர் அவனை நோக்கி, ''பக்கீரே, நீ போய் விடு. உனக்குத் தர எங்களிடம் யாதொன்றுமில்லை. இப்பொழுது எங்களிடமுள்ள உணவை நாங்கள் உனக்குத் தந்தோமென்றாலும் நீ அதன் காரணமாகச் சீமானாகப் போவதில்லை. ஆனால் நாங்களோ பக்கீராகப் போய் விடுவோம்'' என்று கூறினார். அதுகேட்டு அவன் யாதொன்றும் கூறாது அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அதன்பின் அவர் உணவு விரிப்பில் தாம் வெளியிலிருந்து வாங்கிக் கொண்டு வந்த ரொட்டிகளை வைத்துக் கொண்டு உண்பதற்குத் தயாராக இருந்த பொழுது அவரின் மனைவி அடுப்பிலிருந்த சட்டியைக் கீழே இறக்கிக் கோப்பையில் அதனை ஊற்ற முற்பட்ட காலை அது முழுவதும் இரத்த மயமாக இருப்பதைக் கண்டு பெரிதும் அதிர்ச்சியுற்று அவரிடம் ஓடோடி வந்து அதனை எடுத்துரைத்தாள். அவரும் அடுப்பண்டை சென்று சட்டியைத் திறந்து பார்த்த பொழுது, அது அவரின் மனைவி கூறிய வண்ணமே இருந்தது. அப்பொழுது அவருடைய தலை சுழன்றது.

ஒருகோடி எண்ணங்கள் அவருடைய உள்ளத்தில் ஒன்றின்பின் ஒன்றாகப் படையெடுத்து அவரைக் கொல்லாது கொன்றன. இரவு முழுவதும் உறங்காது படுக்கையில் கிடந்து புரண்டு கொண்டிருந்த அவர், அடுத்த நாள் விடிந்தெழுந்ததும் தெருவழியே சென்று கொண்டிருக்கும் பொழுது தான் நாம் முன்னர் கூறிய சம்பவம் நிகழ்ந்தது.

இப்பொழுது இறைவனின் திருவருள் அவர்கள் மீது முழுக்க முழுக்கச் சொரியத் துவங்கிவிட்டது. வட்டி வாங்கித் தின்னும் ஹபீபாக இருந்த அவர்கள், இறைவனின் நல்லடியார் ஹபீப் அஜமீ ஆகத் துவங்கிவிட்டார்கள். திருக்குர்ஆனை ஓதுங்கால் அதனைத் திருத்தமாக ஓத இயலாததன் காரணமாக அவர்கள் ஹபீப் அஜமீ என்று அழைக்கப் பெற்றார்கள். "நாங்கள் எங்களிடமுள்ள உணவை உனக்குத் தந்துவிடின் பக்கீராகி விடுவோம்" என்று தம் வீட்டு வாயலில் வந்து பிச்சை கேட்ட ஏழையிடம் கூறிய அவர்கள் பின்னர் உண்மையில் ஒரு பக்கீராகவே ஆகிவிட்டார்கள்.

தங்களின் உடைமைகள் அனைத்தையும் அல்லாஹ்வுடைய பாதையில் அவர்கள் அறம் செய்த முறையே அலாதியானதாகும். ஒரு தடவை அவர்கள் பத்தாயிரம் திர்ஹங்களை அல்லாஹ்வுடைய பாதையில் அறம் செய்துவிட்டு, "இறைவனே! நான் இதற்குப் பகரமாக என் நஃப்ஸை விலைக்கு வாங்கிவிட்டேன். இதன் காரணமாக அது என்னுடைய அடிமையாகி விட்டது" என்று கூறினார்கள். அதன்பின் அவர்கள் மற்றுமோர் பத்தாயிரம் திர்ஹங்களை எடுத்து அல்லாஹ்வின் வழியில், அறவழியில் செலவழித்து விட்டு, "இறைவனே! நான் முதலில் செய்த அறத்தை நீ ஏற்றுக் கொண்டதற்கு நன்றி செலுத்தும் முகத்தான் நான் இதனை உன் பாதையில் செலவழித்துள்ளேன்" என்று மொழிந் தார்கள். பின்னர் அவர்கள் மூன்றாவது தடவை பத்தாயிரம் திர்ஹங்களை எடுத்து அறம் செய்துவிட்டு, "இறைவனே! நான் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் செய்த அறத்தை நீ ஏற்றுக் கொள்ளவில்லையாயின் நீ இதனையாவது என் மீது இரங்கி ஏற்றுக் கொள்வாயாக!" என்று இறைஞ்சினார்கள். பின்னர் அவர்கள் நான்காவது முறை பத்தாயிரம் திர்ஹங்களை எடுத்து அறவழியில் செலவழித்து, "இறைவனே! நான் மூன்றாவது தடவை அளித்ததை நீ ஏற்றுக் கொண்டிருப்பின் அதற்குரிய நன்றிக் காணிக்கையாக இதனையும் ஏற்றுக் கொள்வாயாக!" என்று அழுது கெஞ்சி இறைஞ்சினார்கள். இதன் காரணமாக பக்கீர் அஜமீ ஹபீப் அஜமீ என்ற புகழ் பெயர் விரைவில் பஸரா முழுவதும் எதிரொலிக்கத் துவங்கி விட்டது.

புராத் நதி தீரத்திலே ஒரு சிறு குடிலை எழுப்பி அதிலே அமர்ந்து வணக்கம் நிகழ்த்தி வந்த அவர்கள் பகற்பொழுதில் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் திருமுன் சென்று அறிவுரை கேட்டு வருவார்கள். பகலெல்லாம் வட்டி வசூல் செய்வதையும் இரவெல்லாம் வட்டிக் கணக்குப் பார்ப்பதையும் தம் தொழிலாகக் கொண்டிருந்த அவர்கள், இப்பொழுது பகலெல்லாம் மார்க்க அறிவுரைகளைக் கேட்பதையும், இரவெல்லாம் நின்று வணங்குவதையும் தங்களின் நீங்காத வழக்கமாக ஆக்கிக் கொண்டார்கள்.

ஒருநாள் அவர்களின் மனைவி அவர்களை அணுகி, தம்மிடம் உண்ண உணவும் உடுத்த உடையும் இல்லையென்றும், அவற்றை வாங்கித் தருமாறும் வேண்டிக் கொண்டார். அதற்கு அவர்கள் தாம் எவரிடமாவது கூலிவேலை செய்து பொருளீட்டி அதைக் கொண்டு அவற்றை வாங்கித் தருவதாகக் கூறி வெளியே சென்றார்கள். அங்குமிங்கும் அலைந்து திரிந்து கூலி வேலை தேடியும் கிடைக்காது போகவே, அலுத்துச் சலித்துத் தம் சிறு குடிலுக்கு வந்து ஆங்கு வணக்கம் நிகழ்த்தலானார்கள். இரவில் தம் இல்லம் திரும்பியக்கால் அவர்களின் அருமை மனைவி அவர்களை அணுகி, ''நான் கேட்ட பொருள்களை வாங்கி வந்தீர்களா?'' என்று வினவ தாம் ஓர் எசமானரிடம் அன்றையத் தினம் பணிபுரிந்து வந்திருப்பதாயும், தம் எசமானர் மிகவும் மாண்பாளர் என்றும், தமக்கு அவர் எவ்வித அநீதியும் இழைக்கமாட்டார் என்றும், அவரிடம் தாம் கூலி கேட்க நாணமுறுவதாகவும், எனினும் பத்து நாட்களில் அவர் நிச்சயமாகத் தமக்குக் கூலி தந்துவிடுவார் என்று தாம் நம்புவதாகவும் அப்பொழுது அவருக்கு வேண்டிய பொருள்களைத் தாம் வாங்கித் தருவதாகவும் அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் கூறிய வண்ணம் பத்தாவது நாளும் புலர்ந்தது. தம் குடிலில் அமர்ந்து பகலெல்லாம் வணக்கம் நிகழ்த்திக் கொண்டிருந்த அவர்கள் இரவில் தம் இல்லம் திரும்பும் நேரமும் வந்தது. அப்பொழுது அவர்களின் மனம், ''எவ்வாறு இல்லம் திரும்புவது? இல்லாளிடம் என்ன பதில் கூறுவது?'' என்று எண்ணி எண்ணி வெய்துயிர்த்தது. எனினும் பேரருளாளனாகிய இறைவன் ஒருபோதும் தம்மைக் கைவிடமாட்டான் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் தம் இல்லம் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

வீட்டு வாயிலை அடைந்ததும் உள்ளே சமைக்கப்பட்டுக் கொண்டிருந்த உணவின் நறுமணம் அவர்களின் மூக்கைத் துளைத்தது. அவர்களைக் கண்டதும் அவர்களின் மனைவி ஓடோடி வந்து வரவேற்று, ''தங்களின் எசமானர் தாங்கள் கூறிய வண்ணம் தங்களுக்குரிய கூலியைப்

பத்தாவது நாள் தவறாது அனுப்பி வைத்துவிட்டார். ஒருவர் நம் இல்லம் வந்து அறுக்கப்பட்ட ஓர் ஆட்டையும் மாவையும் தேனையும் நெய்யையும் முந்நூறு திர்ஹமுள்ள பணமுடிப்பையும் கொடுத்து இவற்றைத் தங்களின் கணவரின் எசமானர் தங்களிடம் ஒப்படைத்துவிட்டு வருமாறு சொன்னார். தங்களின் கணவர் இல்லம் திரும்பியதும், அவரின் எசமானர் மிகவும் தாராளத் தன்மை வாய்ந்தவர் என்றும், அவரிடம் இல்லாததனால் தங்களின் கணவருக்குக் கூலி கொடுக்க தாமதிக்க வில்லை என்றும் கூலி கொடுப்பதில் அவர் கஞ்சத்தனம் செய்யமாட்டார் என்றும், தங்களின் கணவர் தம் கண்களைக் குளிர்ச்சியாகவும் இதயத்தை மகிழ்ச்சியாகவும் வைத்துக்கொண்டு தம்மிடம் தொடர்ந்து பணியாற்றி வருமாறும் தாமும் தொடர்ந்து அவருக்குக் கூலி கொடுத்து வருவதாகவும் அவரிடம் தங்களைக் கூறுமாறு சொன்னார் என்று இயம்பிவிட்டுச் சென்றார். அவற்றைக் கொண்டு உணவு சமைத்துள்ளேன். வாருங்கள், உண்போம்'' என்று கூறினார். அது கேட்டு ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் வியப்புமீக்குற்றார்கள். அளப்பரும் அருளாளனாகிய அல்லாஹ்வின் பேரருளை எண்ணி, எண்ணி வியந்தார்கள். சிறிதளவு வணக்கம் நிகழ்த்தியதற்கே இத்தகைய கூலியை அவன் நல்கினா னென்றாவ் பெரிதளவு வணக்கம் நிகழ்த்தின் அவன் எத்தகைய பெருங் கூலியை நல்குவானோ என்று அவர்களுடைய உள்ளம் எண்ணி எண்ணி மகிழ்ந்தது.

மற்றொரு நாள் அவர்களின் இல்லத்திற்கு ஒரு பக்கீர் வந்தார். அப்பொழுது அவர்களின் மனைவி ரொட்டி சுடுவதற்காக மாவைப் பிசைந்து வைத்துவிட்டு வெளியே சென்றிருந்தார். உடனே அவர்கள் அந்த பிசைந்த மாவை எடுத்து அந்த பக்கீருக்குக் கொடுத்து விட்டார். சற்று நேரம் கழித்து அவரின் மனைவி இல்லம் வந்த பொழுது தாம் பலகையில் பிசைந்து வைத்திருந்த மாவைக் காணாது தம் கணவரை நோக்கி, ''இங்கே மாவைப் பிசைந்து வைத்துவிட்டுச் சென்றேனே. எங்கே அதனைக் காணோம்'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''அது ரொட்டி சுடப் போயிருக்கிறது'' என்று அமைதியாகப் பதிலிறுத்தனர். பின்னர் மனைவி வற்புறுத்திக் கேட்டதன் பேரில் அவர்கள் நடந்ததை நவின்றனர். அதுகேட்டு அவர்களின் மனைவி, ''சுப்ஹானல்லாஹ்! நாம் உண்ண என்ன செய்வோம்'' என்று கூறினார். அதற்கு அவர்கள் ''கவலைப் படாதே. அல்லாஹ் தருவான்'' என்று ஆறுதல் மொழி பகர்ந்தார்கள்.

சற்று நேரம் கழிந்தது. ஒருவர் ரொட்டியும் இறைச்சியும் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்தார். அப்பொழுது அவர்கள் தம் மனைவியை நோக்கி, ''மாவு ரொட்டி சுடப் போயிருக்கிறது என்று கூறினேனல்லவா?

அது இப்பொழுது தன்னோடு இறைச்சியையும் இழுத்துக் கொண்டு வந்துள்ளது'' என்று கூறினார்கள்.

இதன்பின் அவர்கள் இறை வணக்கத்தில் அதிகமதிகமாக ஈடுபடலானார்கள். அவர்களுடன் சேர்ந்து அவர்களின் மனைவியும் அயரா வணக்கத்தில் ஈடுபடலானார். எப்பொழுதேனும் ஓர் இரவில் அவர்கள் தம்மையறியாமல் அயர்ந்து உறங்கிவிடின் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ''எழுந்திருங்கள்; இரவு கழிந்துவிட்டது. செல்ல வேண்டிய தொலைவோ நீளமாக உள்ளது. நம்மிடமோ வழிப் பயணத்திற்கான பொருள்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. நல்லோர்களின் கூட்டம் நம்மை எவ்வளவோ முந்திவிட்டது. நாம் பெரிதும் பின்தங்கிவிட்டோம்'' என்று சொல்லி அவர்களைத் தட்டி எழுப்புவார். அது கேட்டு அவர்கள் பதறிக் கொண்டு விழித்தெழு வார்கள்.

நாளாக ஆக அவ்வாறு ஈடுபட ஈடுபட, அவர்களுக்கு இறைவன் மீதும் இறைவனின் பேரருள் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது. அந்நன்னம்பிக்கையில் அவர்கள் தங்களின் ஆசான் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களைவிட மேலானவர்களாக ஆகிவிட்டார்கள். ஒரு நாள் அவர்கள் தாங்கள் எப்பொழுதும் அணிந்து வந்த தோற்சட்டையைக் கழற்றி ஓரிடத்தில் வைத்து விட்டுக் குளிக்கச் சென்றனர். அப்பொழுது அவ்வழியே வந்த ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அச்சட்டையை இலக்குக் கண்டு கொண்டு, ''இது ஹபீப் அஜமீயுடைய சட்டையாயிற்றே. அவர் இதனை இங்கே கழற்றி வைத்துவிட்டு எங்கோ சென்றுள்ளாரே. இதனை எவரேனும் எடுத்துச் செல்லினும் செல்லக் கூடுமே'' என்று எண்ணி அதற்குக் காவலாக அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்தில் குளித்து விட்டு ஆங்கு வந்த ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் தங்களின் ஞானாசிரியர் அங்கு நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் வியப்புற்று, ஏன் இங்கு நின்று கொண்டிருக்கின்றீர்கள்?'' என்று வினவியபொழுது, ''நீர் இவ்வாறு இச்சட்டையை இங்குப் போட்டு விட்டுச் சென்று விட்டீரே. அதனை எவரேனும் எடுத்துச் சென்று விட்டால் என் செய்வது? எனவேதான் அதற்குக் காவலாக நான் இங்கு நின்று கொண்டுள்ளேன். நீர் எவரை நம்பி அதனை இவ்வாறு இங்கு விட்டுச் சென்றீர்?'' என்று கூறினார்கள். அதற்கு ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள், ''தங்களை அதற்குக் காவலாக இங்கு அனுப்பி வைத்தானே அந்த இறைவனை நம்பித் தான் அதனை இங்கு விட்டுச் சென்றேன்'' என்று பதிலிறுத்தனர். அதுகேட்டு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் வியப்பிற்கும் அளவில்லை.

மற்றொரு நாள் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களின் இல்லத்திற்கு வந்த பொழுது அவர்களின் முன் ஒரு ரொட்டியையும் சிறிது உப்பையும் கொண்டு வந்து வைத்து அதனை உண்ணுமாறு வேண்டிக் கொண்டார்கள். அப்பொழுது வாயிலில் ஓர் ஏழை வந்து உணவு கேட்க, உடனே ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள், ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் முன் தாம் சற்று முன்னர் கொண்டு வந்து வைத்த ரொட்டியையும் உப்பையும் எடுத்து அந்த ஏழைக்குக் கொடுத்து விட்டார்கள். இது கண்டு பெரிதும் ஏமாற்றமுற்ற ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''நீர் நல்லவர் தாம். எனினும் உம்மிடம் சிறிது கல்வியறிவு இருந்திருப்பின் மிகவும் மேலாக இருந்திருக்கும். விருந்தினர் முன் வைக்கப்பட்ட உணவு முழுவதையும் எடுத்து வேறொருவருக்குக் கொடுப்பது பண்பல்ல என்பதை நீர் அறியவில்லை. அதில் சிறிதளவு பிய்த்து அவ்வேழைக்குக் கொடுத்திருப்பின் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்'' என்று கூறினர். அது கேட்டு ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் யாதொன்றும் கூறவில்லை.

சற்று நேரம் கழிந்தது. ஒருவன் ரொட்டி, கறி, ஹல்வா, ஐந்நூறு திர்ஹம் ஆகியவற்றைக் கொண்டு வந்து ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களின் திருமுன் வைத்து இவற்றைத் தன் எசமான் அவர்களுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்ததாகக் கூறினான். உடனே ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் அப்பணத்தை எடுத்து ஏழை எளியவர்களுக்கு அறம் செய்துவிட்டு உணவுப் பொருள்களை எடுத்து ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் திருமுன் வைத்து அவர்களுடன் சேர்ந்து தாங்களும் உண்டனர். உண்டு முடித்ததும் அவர்கள் தங்களின் ஞானாசிரியரை நோக்கி, ''ஆசிரியர் அவர்களே! தாங்கள் மிகவும் நல்லவர்கள் தாம். எனினும் இறைவனின் பேரருளில் அசைக்க முடியாத நம்பிக்கை, இறைவழியில் செலவிடப்பட்ட பொருள் பல மடங்கு அதிகமாகப் பெருகித் தங்களை வந்தெய்தும் என்ற ஆழிய நம்பிக்கை தங்களின் உள்ளத்தில் இருந்திருப்பின் மிகவும் மேலாக இருந்திருக்கும்'' என்று கூறினர். அதுகேட்டு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் மௌனமாயினர்.

இல்லாததனால் அதனையே எடுத்து அவரிடம் கொடுத்து விட்டேன். அது பண்பாட்டுக் குறைவேயாயினும் அதற்குப் பகரமாக இறைவன் நல்ல உணவைத் திருப்பி அனுப்பி வைப்பான். அதனைத் தங்களுக்கு உண்ண அளிப்பின் நன்றாக இருக்கும் என்று எண்ணியே அவ்வாறு செய்தேன். என் எண்ணம் வீண் போகவில்லை. என் நம்பிக்கை பலன் அளித்தது'' என்று கூறினர். அதுகேட்ட ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ''ஹபீபே! நிச்சயமாக நீர் பெருமகராவீர். உண்மையில் நம்பிக்கை, கல்வியை விட மேலானது தான்'' என்று மொழிந்தார்கள்.

பிறிதொரு நாள் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் வணக்கம் நிகழ்த்தி வந்த சிறு குடிலுக்கு வந்தபொழுது அங்கு அவர்கள் தொழுது கொண்டிருந்ததையும் தொழுகையில் சூரா பாத்திஹாவை ஓதும்பொழுது 'அல்ஹம்து' என்ற சொல்லை சரியாக உச்சரிக்காததையும் கண்டு அவர்களின் பின்னே நின்று தொழாது தனியாகத் தொழுதனர்.

அன்றிரவு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் படுத்துறங்குங்கால் இறைவனைக் கனவில் தரிசித்தார்கள். அப்பொழுது இறைவன் அவர்களை நோக்கி, ''நீர் நேற்று ஹபீப் அஜமீயைப் பின்தொடர்ந்து தொழுதிருப்பின் அத்தொழுகை உம்முடைய வாணாளில் நீர் தொழுத எல்லாத் தொழுகைகளையும் விட அதிக நலன் பயந்திருக்கும். ஆனால் நீர் அவரின் உச்சரிப்பைக் கவனித்தீரே யொழிய உள்ளத்தைக் கவனித்தீரில்லையே'' என்று கூறினான். அது கேட்டு ஹஸன் பஸரீ (ரஹ்) அலர்கள் அதிர்ந்து போனார்கள். தம் மாணவரின் மகாத்மியம் அவர்களுக்கு இப்பொழுதுதான் நன்கு தெரிய வந்தது.

இதன்பின் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''ஹபீபே! இத்தகு உன்னதமான ஆன்மீகப் படித்தரத்தை உம்மால் எவ்வாறு எய்தப் பெற இயன்றது?'' என்று வினவிய பொழுது, ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் தம் ஞானாசிரியரை நோக்கி, ''எழுதி எழுதித்தாளைக் கறுப்பாக்காது வணங்கி வணங்கி என் இதயத்தை வெளுப்பாக்கியதால்'' என்று பதிலிறுத்தனர். அது கேட்டு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ''என் கல்வி பிறருக்குப் பயன் அளித்ததே யொழிய எனக்குப் பயன் அளிக்கவில்லையே'' என்று வருத்தத்துடன் நவின்றனர்.

ஒருநாள் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் தம் சிறு குடிலில் அமர்ந்து வணக்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ஓடோடி வந்து, அக்குடிலுக்குள் நுழைந்தனர். அவர்களைப் பின் தொடர்ந்து ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபின் போர் வீரர்கள்

அவர்களைப் பிடிப்பதற்காக விரட்டிக் கொண்டு வந்தார்கள். உள்ளே நுழைந்த அவர்கள், ''எங்கே ஹஸன் பஸரீ?'' என்று ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களிடம் வினவிய பொழுது, ''உள்ளே தான் சென்றார்கள். சென்று தேடிப் பாருங்கள்'' என்று மறுமொழி பகர்ந்தனர். உள்ளே சென்று எங்குத் தேடியும் காணாது திரும்பி வந்த போர்வீரர்கள் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''உம்மைப் பார்த்தால் பெரும் வணக்கவாளர் போன்று தோன்றுகிறது. எனினும் பொய்யுரைக்கின்றீரே'' என்று கூறினர். அதற்கு ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் ''நான் பொய்யுரைக்கவில்லை மெய்தான் உரைத்தேன். அவர் உள்ளே தான் சென்றார். அங்குத் தான் ஒளிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் உங்கள் கண்களுக்குத் தென்படவில்லையாயின் அதற்கு நான் என் செய்வது?'' என்று கூறினர்.

அதுகேட்ட அப்போர்வீரர்கள், ''தங்களின் கண்கள் தாம் தங்களை ஏமாற்றி விட்டனவோ அல்லது தாங்கள் தாம் சரியாகத் தேடிப் பார்க்க வில்லையோ?'' என்று எண்ணி உள்ளே சென்று அங்குமிங்கும் துண்டித் துருவிப் பார்த்தார்கள். ஆனால் எங்கும் அவர்களைக் காணவில்லை. எனவே அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

சற்றுநேரம் கழிந்தது. ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் உள்ளே இருந்து வெளியே வந்தார்கள். ''ஹபீபே! நீர் இவ்வாறு செய்யலாமா? அடைக் கலம் புகுந்தோரை அவரின் எதிரிகளிடம் காட்டிக் கொடுக்கலாமா?'' என்று ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களிடம் வினவினர்.

அதுகேட்ட அவர்கள், ''நான் எங்கே தங்களைக் காட்டிக் கொடுத்தேன். உண்மையை உரைத்தேன். அதன் காரணமாகத் தாங்கள் தப்பினீர்கள். பொய்யுரைத்திருப்பின் தாங்களும் நானும் சிறைப்பட் டிருப்போம். 'உண்மையுரைப்பதில் மீட்சியுள்ளது. பொய்யுரைப்பதில் அழிவுள்ளது' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றது பொய்யா மொழியன்றோ?'' என்று பகர்ந்தனர்.

இதன்பின் சற்று நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் கிழித்துக் கொண்டு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்கள். ''ஆம்; நீர் கூறுவது முற்றிலும் உண்மை; முக்காலும் உண்மை. அதில் அணுவத்தனையும் ஐயமில்லை. எம்பெருமானாரின் திருவாய்மொழி பொய்யாமொழியே யன்றி வேறென்ன?'' என்று கூறிய பின், ''நல்லது; அவர்கள் உள்ளே வந்து உம்மைத் தேடியபொழுது, நீர் என்னவோ ஓதிக் கொண்டிருந்தீரே. அது என்ன?'' என்று வினவினர்.

அதற்கு ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள், ''நான் அப்பொழுது ஆயத்துல் குர்ஸீ இருமுறையும், சூரத் இக்லாஸ் பத்து முறையும் ஆமனர்

ரசூல் பத்து முறையும் ஓதி, ''இறைவனே! ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களைக் காத்தருள் புரிவது உன்மீது கடமையாகும். அவர்கள் உன்னிடம் அடைக்கலம் புகுந்து விட்டார்கள் என்று இறைஞ்சினேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

அவர்களின் இப்பதில் ஹஸன் பஸரீ அவர்களின் கண்களில் நீர் மல்கச் செய்தது. ''ஹபீபே! உம்முடைய இறைஞ்சுதலினால்தான் இறைவன் அவர்களின் கொடும்பிடியிலிருந்தும் என்னைக் காத்தருள் புரிந்தான். அவர்கள் என்னை இங்குத் தேடுங்கால் அவர்களின் கரங்கள் ஒரு தடவையல்ல, ஏழு தடவைகள் என்மீது பட்டன. எனினும் அவர்களால் என்னைக் கண்டுகொள்ள இயலாது இவறைவன் அவர்களின் கண்களில் திரையிட்டு விட்டான்'' என்று அவர்கள் உணர்ச்சி ததும்ப மொழிந்தார்கள்.

ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களுக்கு ஏழாண்டுகளாகப் பொறித்த கறி உண்ண வேண்டுமென்று ஆசை இருந்து வந்தது. எனினும் அவர்கள் அவ்வாசைக்கு இடம் கொடாது மறுத்து வந்தனர். இறுதியாக அவர்கள் அதற்கு ஒருவாறு இணங்கி அரை திர்ஹத்திற்கு பொறித்த கறியும் ரொட்டியும் வாங்கிக் கொண்டு தம் இல்லம் திரும்பிவந்த பொழுது வழியில் ஒரு சிறுவன் உடையில்லாது நின்று கொண்டிருப்பதைக் கண்டதும், ''நீ யார்?'' என்று அவனிடம் வினவினர். தான் இன்னாரின் மகன் என்று அவன் கூறியதும் அவன் தமக்கு அறிமுகமான ஒருவரின் மகன் என்பது அவர்களுக்கு விளங்க வந்தது. உடனே அவர்களின் உள்ளத்தில் அவனுக்கு ஏதேனும் கொடுக்க வேண்டுமே என்ற எண்ணம் ஏற்பட, தம் கையில் அந்த ரொட்டியையும் பொறித்த கறியையும் தவிர்த்து வேறொன்றும் இல்லாததன் காரணமாக அவற்றை அச்சிறுவனிடமே கொடுத்து விட்டு வெறும் கையுடன் இல்லம் திரும்பினார்கள். அப்பொழுது அவர்களின் மனம் அவர்கள் மீது கொண்ட வெறுப்பிற்கும் சினத்திற்கும் அளவே இல்லை. இருந்து, இருந்து உம்மிடம் நான் பொறித்த கறி வாங்கிக் கேட்டேனே என்று அது அவர்களை நோக்கி இழித்துரைத்தது. அது கேட்டு அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள்.

இந்த இறைநேசச் செல்வர்களின் இத்தகு போக்கும், அவர்கள் நிகழ்த்தும் கடுமையான வணக்க முறைகளும், ஆற்றும் அற்புதங்களும் மார்க்க விற்பன்னர்களுக்கு மாபெரும் வியப்பை கொடுத்து வந்தன. ஒரு நாள் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் ஒரு வழியே செல்லுங்கால் ஆங்குச் சற்றுத் தொலைவில் இமாம் ஷாபீ (ரஹ்) அவர்களும், இமாம் ஹன்பலி (ரஹ்) அவர்களும் வீற்றிருந்தார்கள். அப்பொழுது இமாம் ஹன்பலி (ரஹ்) அவர்கள் இமாம் ஷாபீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''இதோ ஹபீப் அஜமீ வருகின்றார். அவரிடம் ஏதாவது கேட்போம்' என்று கூறினர், அதற்கு

ஷாபி (ரஹ்) அவர்கள், ''இவர்களோ நூதனமான மனிதர்களாக உள்ளனர். இவர்களிடம் நாம் என்ன கேட்க உள்ளது? இவர்களிடம் நாம் கேட்பதை விடக் கேளாதிருப்பதே மேல்'' என்று மொழிந்தார்கள்.

அப்பொழுது ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் அவ்விருவரையும் அணுகிவிட்டார்கள். அணுகியதும் இமாம் ஹன்பலி (ரஹ்) அவர்கள் தங்களையும் அறியாமல் உணர்ச்சி மீக்குற்று, ''ஹபீபே! ஒருவனுக்கு ஒரு நேர (வக்து)த் தொழுகை தவறிவிட்டது. அது எந்த நேரத் தொழுகை என்று அவனுக்கு நினைவில்லை. அப்பொழுது என் செய்வது?'' என்று வினவினர். அதற்கு ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள், ''அவன் அல்லாஹ்வை உரிய காலத்தில் தொழ மறந்துவிட்டதனால் அவன் இனிமேல் அவ்விதம் செய்யாவண்ணம் அவனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும். எனவே அவன் ஐந்து நேரத்தொழுகைகளையும் 'களா'வாகத் தொழவேண்டும் என விதி வகுக்க வேண்டும்'' என்று கூறிச் சென்றார்கள்.

அவர்களின் இப்பதில் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களுக்குப் பெரும் வியப்பை கொடுத்தது. அப்பொழுது ஷாபீ (ரஹ்) அவர்கள், இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்களை நோக்கி, ''நான் முன்பே அவர்களைப் பற்றிக் கூறவில்லையா? நீர் ஏன் அவரிடம் வினவினீர்'' என்று கூறினார்கள்.

ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களின் முன் திருக்குர்ஆன் ஓதப்பெறின் அவர்கள் அது கேட்டு உணர்ச்சி மீக்குற்று அழுவார்கள். அப்பொழுது மக்கள் அவர்களை நோக்கி, ''தாங்களோ அஜமீ, குர்ஆனோ அரபி மொழியிலுள்ளது. தங்களுக்கு அம்மொழி தெரியாது. அவ்விதமிருக்க தாங்கள் ஏன் அது ஓதப்படுவதைக் கேட்டு அழுகின்றீர்கள்?'' என்று வினவின், ''என் நாவுதான் அஜமீ. என் இதயம் அரபியாகவல்லவோ உள்ளது'' என்று அவர்கள் பதிலிறுப்பார்கள்.

அவர்கள் எப்பொழுதும் அழுது சலித்தவர்களாயிருப்பார்கள். எவனுக்கு ''லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் ரசூலுல்லாஹி'' என்ற திருக்கலிமாவினால் முத்திரையிடப்படுகிறதோ, அவன் சுவனம் புகுவான். எனக்கு அதனால் முத்திரையிட்டு உதவுபவர் யார்?'' என்று வினவிக் கொண்டே அவர்கள் அழுவார்கள்.

அவர்களின் இறைஞ்சுதல் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவ தாயிருந்தது. அவர்களின் இறைஞ்சுதலின் காரணமாகப் பலர் பல்வேறு நற்பேறுகளை எய்தியுள்ளனர்.

ஒருநாள் ஒரு பெண் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அவர் களிடம் வந்து தான் அருமை பெருமையாக வளர்த்து வந்த ஒரே மகன்

திடீரெனக் காணாமல் போய்விட்டதாகவும் அவன் விரைவில் நலமே இல்லம் திரும்பிவர வேண்டுமென்று இறைவனிடம் இறைஞ்சுமாறும் வேண்டிக் கொண்டாள். அவ்விதமே இறைஞ்சிய அவர்கள் அவளை நோக்கி, ''நீ இல்லம் செல்வாயாக! உன் மகன் இல்லம் திரும்பி விட்டான்'' என்று கூறினர். அவள் தன் இல்லம் திரும்பிய பொழுது தன் மகன் அங்கு வந்திருப்பதைக் கண்டதும் அவளுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

மற்றொரு நாள் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அக்கரை செல்லப் படகை எதிர்பார்த்து திஜ்லா நதிக்கரையில் காத்திருந்தபொழுது, ஆங்கு வந்த ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்கள் அல்லாஹ்வின் பெயர் சொல்லி ஆற்றில் இறங்கி தண்ணீரின் மீது மடமடவென்று நடந்து அக்கரை சேர்ந்துவிட்டார்கள். இதைக் கண்டு பெரிதும் வியப்புற்ற ஹஸன் பஸரீ (ரஹ்)''இஃது எவ்வாறு உம்மால் இயன்றது?'' என்று வினவிய பொழுது, ''பொறாமையை உள்ளத்திலிருந்து கிள்ளி எறியுங்கள். உலக ஆசாபாசங் களை உள்ளத்திலிருந்து வேரறப் பிடுங்கி வீசி எறியுங்கள். துன்பத்தை விலை மதிக்க முடியாத பொருள் என்று கருதுங்கள். எல்லாம் இறை நாட்டப்படி நடக்கிறது என்று எண்ணி அமைதியாய் இருங்கள். அதன்பின் நீங்கள் நீரின் மீது நடந்து செல்லலாம்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

கொலை செய்த ஒருவர் தூக்கு மரத்தில் ஏற்றப்பட்டுக் கொன்றொ ழிக்கப்பட்டார், அவரை ஒருவர் கனவில் கண்ட பொழுது, சுவனப் பூங்காவில் பட்டாடை புனைந்து பவிசாக உலவிக் கொண்டிருப்பதைக் கண்டு பெரிதும் வியப்புற்று, ''கொலைகாரராகிய உமக்கு இத்தகுதி எவ்வாறு வாய்க்கப் பெற்றது?'' என்று வினவிய பொழுது, ''நான் தூக்கு மரத்தில் ஏற்றப்பட்ட காலை அவ்வழியே சென்ற ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களின் கடைக்கண் பார்வை என் மீது பட்டது. அவர்கள் எனக்காக இறைவனிடம் இறைஞ்சி விட்டுச் சென்றார்கள். அதன் காரணமாக எனக்கு இத்தகுதி கிடைத்தது'' என்று கூறினார் அவர்.

இவர்கள் பற்பல அற்புதங்களை நிகழ்த்தினர் என்றும் ஓர் ஆண்டு துல்ஹஜ் திங்கள் 8-ஆம் நாள் பஸராவில் இருந்த இவர்கள் அடுத்த நாள் அரபாத் வெளியில் இஹ்ராம் அணிந்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் கி.பி. 738 ஆம் ஆண்டில் பஸராவில் இறப்பெய்தி அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டனர்.

# 6. ராபியா பஸரீ (ரஹ்)

குவா, குவா என்று குழந்தை அழும் சப்தத்தைக் கேட்டதும், ''பிள்ளை பிறந்து விட்டதா?'' என்று வினவினார் ஒருவர் தம் மனைவியை நோக்கி. ''ஆம்'' என்று மறுமொழி பகர்ந்த அம்மையார், ''குழந்தையை வைக்க ஒரு கிழிந்த துணியும் இல்லையே; குளிரோ அதிகமாயுள்ளது; தாங்கள் அன்பு கூர்ந்து அண்டை வீடு சென்று சிறிது எண்ணெய் வாங்கி வாருங்கள். விளக்கேற்றலாம்'' என்று கூறினார்.

இப்பொழுது அந்நல்லாருக்கு என் செய்வதென்று விளங்கவில்லை. இறைவனிடமேயன்றி வேறு எவரிடமும் யாதொன்றும் கேட்கக் கூடாது என்று உறுதி பூண்டவர் அவர், எனினும் இப்பரிதாப நிலையில் தம் மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்காது இருந்து விட்டாலும் நன்றாயில்லை. எனவே வேண்டாவெறுப்பாக அண்டை வீட்டு வாயிலை நோக்கி அடியெடுத்து வைத்தார். அதற்கு மேல் அவரால் யாதொன்றும் செய்ய இயலவில்லை. அவரின் தன்மான உணர்வு அவரின் கைகளுக்கு விலங்கிட்டு கதவைத் தட்டாது செய்தது. எனவே சற்று நேரம் அங்கு நின்று விட்டு வெறுமனே வீடு திரும்பினார் அவர்.

அந்த நள்ளிரவில், அந்தக் கும்மிருளில் எவரோ தம் இல்லம் நுழையும் அரவத்தைக் கேட்டதும் அது தம் கணவராகத் தான் இருக்க வேண்டுமென்று விளங்கிக் கொண்ட அவரின் துணைவியார், ''என்ன, எண்ணெய் கிடைத்ததா?'' என்று வினவினார்.

''இல்லை; அண்டை வீட்டார் கதவுகளைத் தாளிட்டு விட்டனர்; என்னிடமும் எண்ணெய் வாங்கக் காசில்லை. என் செய்வது? இறைவன் விட்டவிதிப்படி நடக்கட்டும்'' என்று கூறி வெறுந்தரையில் படுத்தார் அவர். விரைவில் அவரை உறக்கம் ஆட்கொண்டது;

''கவலற்க! உமக்கு இறைநேசச் செல்வியார் பிறந்திருக்கிறார். அவரின் பரிவுரை காரணமாக எழுபதாயிரம் பேர் ஈடேற்றம் பெறுவர். பொழுது புலர்ந்ததும் இந்த பஸரா மாநில ஆளுநர் ஈஸா ஸாதானிடம் சென்று அவர் ஒவ்வொரு நாளும் பகலில் நூறு ஸலவாத்துகளும் இரவில்

நானூறு ஸலவாத்துகளும் ஓதும் வழக்கப்படி சென்ற வெள்ளிக்கிழமைப் பகல் நானூறு ஸலவாத்துகள் ஓத மறந்துவிட்டதை நான் நினைவுறுத்திய தாகக் கூறி அதற்குப் பகரமாக நானூறு திர்ஹங்களை அவரிடமிருந்து பெற்று உம் வறுமை போக்குக!''

இவ்வாறு அருளே உருவெடுத்தாற் போன்ற ஆன்றோர் ஒருவர் அவரின் முன் புன்முறுவல் பூத்த வண்ணம் புகன்று நின்றார்.

''ஐயன்மீர்! தாங்கள் யார்?'' என்று வியப்புடன் வினவினார் அந்நல்லார்.

'முகம்மதுர் ரசூலுல்லாஹ்' என்ற மறுமொழி கேட்டதும் அவரின் உள்ளமும் உடலும் ஒருங்கு சேர்ந்து சிலிர்த்தன. திடுக்கிட்டு விழித்தெழுந்தார் அவர்.

இவை அனைத்தும் கனவா அல்லது நனவா என்று அவருக்குச் சற்று நேரம் விளங்கவில்லை. இறுதியாக,கனவு தான் என்று உறுதிப் படுத்திக்கொண்டு அண்ணலெம்பெருமானின் அளப்பரும் கருணையை எண்ணி எண்ணி வியந்த வண்ணம் அங்குமிங்கும் படுத்து உருண்டு கொண்டிருந்தார் அவர்.

பொழுது புலர்ந்ததும் அவர் தாம் கண்ட கனவை ஒரு தாளில் எழுதித் தம் நண்பர் மூலமாக அம்மாநகர ஆளுநருக்கு அனுப்பி வைத்தார். அதைப் படித்துப் பார்த்ததும் அவ்வாளுநருக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் மட்டில்லை. தாம் நாள்தோறும் ஓதிவரும் ஸலவாத்து களை எம்பெருமானார் ஏற்றுக் கொள்வதையும் தாம் ஓத மறந்து விட்டதைத் தமக்கு நினைவுறுத்தியதையும், எண்ணி, எண்ணி மகிழ்ச்சிக் கண்ணீர் உகுத்தார் அவர். அதற்கு நன்றி செலுத்தும் முகத்தான் பதினாயிரம் திர்ஹங்களை ஏழை, எளியவர்களுக்கு வாரி வழங்கினார். அந் நல்லாருக்கும் நாயகப் பெருமானின் நல்லுரைக்கேற்ப நானூறு பொற்காச களை அனுப்பி வைத்து, தம் அரண்மனைக்கு எழுந்தருள வேண்டு மென்று அவர்களை வேண்டிக் கொண்டதாகவும் சொல்லி அனுப்பினார்.

அப்பொற்கிழியைப் பெற்றுக்கொண்டு அந்நல்லாரின் நண்பர் அடியெடுத்து வைத்ததுதான் தாமதம். ''சற்று நில்லுங்கள். அண்ணலெம் பெருமானின் அன்பிற்குரிய அப்பெரியாரை இங்கு வரச் சொல்வது ஏற்றமன்று. நானே அவர்களைக் காண வந்து அவர்கள் வீட்டு வாயிலின் தூசிகளை என்னுடைய தாடியினால் துப்புரவு செய்கின்றேன். அவர்களுக்கு ஏதேனும் தேவைப்படின் எனக்குத் தெரியப்படுத்தின் இமைக்கும் நேரத்தில் அதனை நிறைவு செய்யத் தயாராயுள்ளேன் என்று அவர்களிடம் எடுத்துரையுங்கள்'' என்று கூறினார்.

இதன்பின் என்ன? அந்நல்லாரின் இல்லத்தை இத்துணை காலம் பிடித்திருந்த வறுமை தொலைந்து வளம் கொழிக்கலாயிற்று. நான்காவது பெண்மகவை ஈன்றெடுத்ததன் காரணமாக, அதற்கு நான்காமவள் என்று பொருள்படும் ராபியா என்ற அழகுசால் திருப்பெயரிட்டு அன்புடன் அழைத்து வரலாயினர் பெற்றோர்கள். குழந்தை ராபியாவும் எவ்விதக் குறையுமின்றி நாளொரு மேனியாக வளர்ந்து வந்தது.

ஆனால் ராபியாவின் பெற்றோர்கள் ஒருவர் பின் ஒருவராக இறப்பெய்தினர். அதன்பின் கடுமையான பஞ்சம் பஸராவில் ஏற்பட்டு மக்களை நலிய வைத்தது. ராபியாவின் உடன்பிறந்தோர் பஞ்சத்தின் கொடுமை தாங்க இயலாது பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து சென்றனர். எனவே இப்பரந்த உலகில், சின்னஞ்சிறு வயதில் ஏறிட்டுப் பார்ப்பார் எவருமின்றி, எவரு மற்ற அநாதையாக விடப்பட்டார்கள் ராபியா. ஆனால் அவர்களை ஏறிட்டுப் பார்த்தான் ஒருவன். எதற்காக? ஆதரிப்பதற்காகவா? இல்லை, இல்லை. அவர்களைப் பிடித்து அடிமைச் சந்தையில் விற்றுப் பணம் சம்பாதிப்பதற்காக. ஆம்; அவன் அவர்களைப் பிடித்து அடிமைச் சந்தையில் ஆறு திர்ஹம்களுக்கு விற்று விட்டான். அந்தோ! அநாதை ராபியா இப்பொழுது ஓர் அடிமையாகிவிட்டார்கள்.

ராபியாவின் எசமான் அவர்களைப் படுத்திய பாடோ கொஞ்சமல்ல. கடினமான வேலைகளைக் கொடுத்து கணநேரத்தில் முடிக்க வேண்டு மென்று கூறுவார் அவர். அவற்றை இன்முகத்துடன் ஏற்று இனிதே முடிப்பார்கள் அவர்கள். ஒரு நாள் தம் எசமானர் பணித்த அலுவலை முடித்து வருவதற்காக வெளியே சென்றார்கள் ராபியா. அப்பொழுது தீயோன் ஒருவன் அவர்களை எதிர் நோக்கி வருவதைக் கண்டதும் வெருண்டோடி வீடு நோக்கி வந்த அவர்களை ஒரு கல் தடுக்கி கீழே விழச் செய்தது. அதன் கரணமாக அவர்களின் கையொன்று முறிந்தது; அப்பொழுது அவர்கள் தங்களின் முகத்தை மண்ணிலே புதைந்து அழுதவண்ணம், ''இறைவனே! நானோ எவருமற்ற அனாதை; திக்கற்ற ஏழை; ஒருவரின் கீழ்ப்பணியாற்றும் அடிமை,பற்றாக்குறைக்கு கையொடிந்தவள். எனினும் இவற்றிற்காக நான் துயருறவில்லை. நீ என்னை ஏற்றுக் கொண்டாயா அல்லவா என்ற எண்ணமே எனக்கு அளவற்ற மனவேதனையை கொடுத்து வருகிறது'' என்று கூறி இறைஞ்சினார்கள்.

அப்பொழுது, ''ராபியா! கவலற்க! மறுமையில் நீர் எய்தப் பெற்றிருக்கும் உச்ச நிலையைக் கண்டு இறை அண்மையிலுள்ளவர்களும் பொறாமையுறுவர்'' என்று உருத்தோற்றமின்றி ஓர் ஒலி முழங்கியது.

இதன்பின் இல்லம் வந்தடைந்த ராபியா தன் எசமானரின் மனம் கோணாதபடி அவர் இட்ட பணிகள் அனைத்தையும் அணுவத்தனையும்

விடாது செய்துவந்தார்கள். அத்துடன் பகலெல்லாம் நோன்பு நோற்று இரவெல்லாம் நின்று வணங்கி வந்தார்கள்.

ஒரு நள்ளிரவு ஈனக்குரலில் எவரோ முனகுவது போன்றிருந்தது. படுக்கையை விட்டெழுந்த ராபியாவின் எசமான் முனகல் வரும் திசை நோக்கிச் சென்றார். ஆங்கு அவர் கண்ட காட்சி அவரை மெய்சிலிர்க்கச் செய்தது. வீட்டு மேல் மாடியில் ராபியா தனியாக அமர்ந்து, ''இறைவனே! நானோ ஓர் அடிமை. எசமானின் வீட்டு அலுவல்களையெல்லாம் முடித்து உன் திருமுன் வருவதற்கு இத்துணை நேரமாகிவிட்டது. நான் மட்டும் சுதந்திரமுள்ளவளாயிருப்பின் என்னுடைய ஒவ்வொரு மூச்சையும் உன்னுடைய வணக்கத்திலேயே செலவழித்திருப்பேன் என்பதை நீ நன்கு அறிவாய். எனினும் நான் என் செய்வது? என்னைத்தான் ஒருவருக்கு அடிமையாக்கி விட்டாயே, எனவே நான் தாமதித்து வருவதற்காக நீ என்னை மன்னித்து அருள்பாலிப்பாயாக'' என்று இறைஞ்சிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் தலைக்கு மேல்ஒரு பேரொளி இலங்கிக் கொண்டிருந்தது. அதனை கண்சிமிட்டாது பார்த்துக் கொண்டிருந்தார் அவர்களின் எசமான். அப்பொழுது அவரின் உள்ளத்தை ஒரு மாபெரும் திடுக்கம் ஆட்கொண்டது.

பொழுது புலர்ந்தது. ராபியாவின் எசமான் ராபியாவைத் தம்முன் அழைத்தார். ராபியா என்று அவர்களை அழைப்பதற்கு மாறாக ''அம்மையே'' என்று விளித்தார். ''அம்மையே! நான் இதுகாறும் தங்களுக்கு இழைத்து வந்த கொடுமைகளை மன்னித்தருள்வீராக! நான் இக்கணத்திலிருந்து தங்களுக்கு விடுதலை வழங்கிவிட்டேன். தாங்கள் எங்களின் இல்லத்திலேயே தங்கியிருப்பின் தங்களுக்கு ஊழியம் செய்து தங்களை ஆதரிக்க நாங்கள் என்றென்றும் தயாராயுள்ளோம். இல்லையெனில் தாங்கள் தங்களின் விருப்பம் போல் செய்யலாம்'' என்று கூறினார்.

அது கேட்டு ராபியா (ரஹ்) அவர்கள் மகிழ்ச்சி பூத்தவர்களாய் தாம் தனித்தொதுங்கி இறை வணக்கத்தில் ஈடுபட விரும்புவதாகக் கூறி நன்றியுடன் விடைபெற்று அவ்வில்லம் நீங்கினர். இதன்பின் பல்லாண்டுகள் வனாந்திரங்களில் தங்கி வணக்கத்தில் ஈடுபட்டு பஸரா திரும்பிய அவர்கள் ஆங்கு ஒரு சிறுகுடில் அமைத்து அதில் அமர்ந்து ஒவ்வோர் இரவும் பகலும் ஆயிரம் ரகஅத்துகள் தொழுது வந்தார்கள். சில பொழுது ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் திருமுன் சென்று அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டும் வந்தார்கள்.

இதுமுதல் அவர்களுக்குப் பற்பல பெயர்கள் ஏற்பட்டன. கைஸ்பின் அதீ என்ற குடும்பத்தில் தோன்றியதன் காரணமாக ராபியத்துல்

அதவிய்யா என்றும், ராபியத்துல் கைஸிய்யா என்றும், பஸராவில் வாழ்ந்து வந்ததன் காரணமாக ராபியத்துல் பஸரிய்யா என்றும், மர்யம் (அலை) போன்று அதிகமான வணக்கத்தில் ஈடுபட்டதன் காரணமாக இரண்டாவது மர்யம் சித்தீகா என்றும் அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.*

இக்காலை அவர்களின் உள்ளத்தில் 'ஹஜ்'ஜுக் கடனை ஆற்ற வேண்டுமென்ற வேணவா கனன்றெழுந்தது. அடுத்த கணம் அவர்கள் மக்காவை நோக்கிக் கிளம்பிவிட்டார்கள். மக்காவை அவர்கள் அண்மிய பொழுது அவர்களின் கண்கள் குளமாயின. அவர்களின் உள்ளத்தை மாபெரும் துன்பப்படலம் கௌவிக் கொண்டது. ''இறைவனே! நான் எதற்காக இங்கு வந்தேன் என்று எனக்கே விளங்கவில்லை. நானோ மண்ணால் படைக்கப்பட்டவள். கஃபாவோ கற்களால் கட்டப்பட்டது. மண்ணும் கல்லும் சந்தித்துக் கொள்வதில் என்ன மகிமையுள்ளது? நான் ஆசைப்படுவதெல்லாம் உன்னைத் தான். உன்னையன்றி வேறொன்றையும் அல்ல. உன்னைக் காண்பதையே நான் விரும்புகிறேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கதறினார்கள்.

அப்பொழுது அவர்களின் உள்ளின் உள்ளிருந்து ''ராபியா! மூஸா (அலை) அவர்களின் வரலாற்றை நீர் மறந்து விட்டீரா, என்ன? அவர்கள் இறைவனைக் காண விரும்பிய பொழுது சினாய் மலையில் அவனுடைய பேரொளி அணுவினும் அணுவாகத் தோன்றியகாலை, அப்பெருமலை உடைந்து சுக்கு நூறாகி விட்டதை நீர் அறியமாட்டீரா, என்ன? எனவே

---

* ராபியா என்ற பெயருடன் மற்றொரு பெண்மணி இவர்களுக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன் சிரியாவில் வாழ்ந்து வந்தனர். அவர்களின் தந்தையின் பெயர் இஸ்மாயீல் என்பதாகும். அவர்களும் சிறந்த சூபியாக விளங்கி வந்தனர். முதலில் ஒருவரை மணமுடித்து வாழ்ந்த அவர்களுக்கு அவர் இறந்துவிடவே மூன்று லட்சம் தீனார்கள் கிடைத்தன. பின்னர் அவர்கள் அஹ்மத் என்ற சூபியை மணமுடித்து வாழ்ந்தனர். எனினும் அவரிடம், ''நான் தங்களுடன் மனைவியென்ற முறையில்லாது சகோதரி என்ற முறையிலேயே நடந்து கொள்ள விரும்புகிறேன். தங்களை மணமுடிப்பதன் நோக்கம் தங்களுக்கு ஊழியம் புரிவதேயாகும்'' என்று கூறினார்கள். அவர்களின் கண்களுக்கு ஜின்களும் ஹூருல் ஈன்களும் தென்பட்டனவென்றும் தம்மைக் கண்டதும் ஹூருல் ஈன்கள் முக்காடிட்டுத்தம் முகத்தை மறைத்துக் கொண்டனரென்றும் அவர்கள் கூறினர். அவர்கள் பல அற்புதங்களை நிகழ்த்தினர் என்றும் ஒருநாள் அவர்கள் தம்முன் இருந்த பாத்திரத்தை எடுத்துச் செல்லுமாறும் அதில் கலீபா இறந்துவிட்டதாக எழுதப்பட்டிருப்பதைத் தாம் காண்பதாகவும் கூறினர். பின்னர் விசாரித்ததில் அதே நாளில் கலீபா இறந்ததாகத் தெரிய வந்தது. இவர்கள் ஹிஜ்ரி 135 ஆம் ஆண்டில் இறப்பெய்தி பைத்துல் முகத்தஸின் அண்மையிலுள்ள தூர் மலையில் நல்லடக்கம் செய்யப்பட்டனர். அவர்களின் அடக்க இடத்தைத் தரிசிப்பதற்காக மக்கள் அங்கு சென்று வந்ததாக இப்னு ஹல்லிகான் கூறுகிறார்.

அவனைப் புறக்கண்களால் காணும் எண்ணத்தை விட்டு விடும்'' என்று ஓர் அசரீரி முழங்கியது.

இதன்பின் மக்கா சென்று 'ஹஜ்'ஜுக் கடனை ஆற்றிவிட்டுப் பஸரா திரும்பிய அவர்கள் அல்லும் பகலும் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந் தார்கள். பின்னர் இரண்டாவது முறை 'ஹஜ்'ஜுச் செய்யப் புறப்பட்டு விட்டார்கள்.

அவர்கள் மக்காவை நோக்கி வந்து கொண்டிருந்த காலை, பாலை நடுவே கஃபா அவர்களின் முன் திருக்காட்சி நல்கியதைக் கண்டதும் அவர்களுக்கு அவர்களின் கண்களையே நம்ப இயலவில்லை. ''என்ன! நாம் அதற்குள் மக்கா வந்து விட்டோமா?'' என்று அவர்கள் ஒரு கணம் எண்ணினார்கள். ''இல்லை, இல்லை. கஃபாவே நம்மை எதிர் கொண்டழைக்க இங்கு வந்தது போன்றுள்ளது'' என்று தமக்குள்ளே கூறிக் கொண்டார்கள்.

''ஆம்; கஃபாவேதான் இறை கட்டளைப்படி அவர்களை எதிர்கொண்டழைக்க அவர்களின் முன் தோன்றியது. அதைக் கண்டதும் அவர்கள் மகிழ்வு பூப்பதற்குப் பதிலாக அழுது பிரலாபித்த வண்ணம், ''இறைவனே! நான் இந்தக் கஃபாவை வைத்துக் கொண்டு என் செய்வது? இஃது எனக்கு எவ்வித மகிழ்ச்சியையும் நல்கவில்லையே. கஃபாவின் இறைவனாகிய உன்னையே நான் விரும்புகின்றேன். உன் பேரெழிலைக் காணவே நான் விழைகின்றேன்'' என்று கூறினார்கள்.

இக்காலை அரசு துறந்த ஆத்மஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் ஹஜ்ஜுக் கடனை ஆற்றுவான் வேண்டி மக்கா நோக்கிப் புறப்பட்டனர். ''எல்லாரும் காலில் நடந்து மக்கா செல்கின்றனர். நான் கண்ணால் நடந்து மக்கா செல்வேன்'' என்று கூறி, தாம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் இரண்டு 'ரகஅத்' தொழுத வண்ணம், பதினான்கு ஆண்டு களுக்குப் பின் அத்திரு மாநகரம் வந்து சேர்ந்தார்கள். ஆனால், அங்கு அவர்கள் அதன் இதயம் போன்று விளங்கும் கஃபாவைக் காணாத பொழுது தம் கண்கள் தாம்தம்மை மிரட்டுகின்றனவோ என்று ஒரு கணம் எண்ணினார்கள். கண்களைத் துடைத்து விட்டு மீண்டும் அவற்றை அகல விரித்துப் பார்க்கும் பொழுது, இறைவன் அதனை மீண்டும் அவர்களின் கண்களுக்குத் தென்படாது செய்து விட்டான். அப்பொழுது அல்லாஹ் வின் அருள் நேசர் ராபியாவை அழைத்துவரக் கஃபா அவர்களின் முன் திருத்தோற்றம் வழங்கி இருப்பதாக அசரீரி முழங்கியது.

அதைக் கேட்டதும் அளவற்ற வியப்பில் மூழ்கியவர்களாய் அல்லாஹ்வின் அத்தகு நல்லடியாரைக் காணப் புறப்பட்டனர் இப்ராஹீம்

இப்னு அத்ஹம். கானகத்தின் நடுவே அவர்களைக் கண்டதும், ''அம்மையே! என்ன, இத்துணை விளம்பரம் செய்து விட்டீர்கள்?'' என்று வினவினர் அவர்கள்.

''நான் ஒன்றும் செய்யவில்லையே, இறைவனின் செயலல்லவோ அது! தாங்களல்லவோ மற்றவர்கள் போன்று மக்கா வராது ஒவ்வோர் அடிக்கும் இரண்டு ரகஅத் வீதம் தொழுது பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் அம்மாநகர் வந்தெய்தி தங்களுக்கே தாங்கள் பெரிய விளம்பரம் தேடிக் கொண்டீர்கள். தாங்கள் தொழுது, தொழுது இங்கு வந்த காலை நான் தாழ்மையுடன் இறைஞ்சுதலுடனும் என் இறைவனைக் காண வேண்டுமென்ற அளவற்ற ஆசையுடனும் இங்கு வந்தேன் அவ்வளவுதான்'' என்று மறுமொழி பகர்ந்தனர் அம்மையார்.

இதன் பின் ராபியா (ரஹ்) அவர்கள் மக்கா வந்து, ஹஜ்ஜுக் கடனை ஆற்றியபின் பஸரா மீண்டு, வழக்கம் போல் வணக்கத்தில் ஈடுபட்டிருந் தார்கள்.

அடுத்த ஆண்டு அவர்கள் மூன்றாவது முறையாக 'ஹஜ்'ஜுச் செய்ய மக்கா புறப்பட்டு விட்டார்கள். இப்பொழுது அவர்கள் காலால் நடந்து மக்கா செல்லவில்லை. இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் செய்தது போன்று கண்ணால் நடந்தும் மக்கா செல்லவில்லை. அதற்கு மாறாக உடலால் நடந்து மக்கா சென்றார்கள். அதாவது தரையிலே உருண்டு உருண்டு மக்கா சென்றார்கள். இவ்வாறு வழி நெடுக உருண்டு, உருண்டு ஏழு ஆண்டுகள் கழித்து துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் நாள் அவர்கள் அரபாத் வெளியை அடைந்த பொழுது அவர்களின் வாயிலிருந்து ''இறைவனே! உன்னுடைய திருக்காட்சியை எனக்கு வழங்குவாயாக!'' என்ற இறைஞ்சுதல் வெளிவந்தது.

அப்பொழுது அசரீரி முழங்கியது.

''ராபியா எச்சரிக்கை! நாம் நம்முடைய பரிபூரணப் பொலிவுடன் உன் முன் காட்சி வழங்குவோமாயின் நீ எரிந்து சாம்பலாகி விடுவாய்''

அது கேட்ட ராபியா, ''இறைவ எம்பெரும! அவ்விதமாயின் நீ மிகவும் விரும்பும் ஃபக்ர் என்னும் துறவு நிலையையாவது எனக்கு வழங்கியருள்வாயாக!'' என்று தாழ்மையுடன் இறைஞ்சினர்.

அப்பொழுது இறைவன் பேசினான்:

''ராபியா! நீ அதற்குத் தகுதியற்றவள். அது எனக்காக வேண்டி தங்களையே அழித்துக் கொண்ட ஆண்மக்களுக்கான கௌரவமாகும். அவர்களுக்கும் எனக்கும் இடையே உரோமத்தின் அளவு கூட இடை

வெளி இருக்காது. நாம் இத்துணை நெருக்கமாக அவர்களைக் கொண்டு வந்துவிட்டு, பின்னர் தொலைவில் தூக்கி எறிந்து விடுகிறோம். அங்கிருந்து நம்மை மீண்டும் அடைய அவர்கள் முயலுகின்றனர். ஆனால் ராபியா! உனக்கும் நமக்கும் இடையே எழுபது திரைகள் உள்ளனவே. அவற்றையெல்லாம் கடந்து நீ உண்மையான மனநிலையுடன் நம்மைத் தேடி அடையும் வரை நீ நம்மிடமிருந்து ஃபக்ர் (துறவு) நிலையை எதிர்பார்ப்பது பயனற்றதாகவே முடியும்''

இதன்பின் இறைவன் ராபியாவை நோக்கி ''ராபியா! வானத்தை அண்ணாந்து பார்'' என்று கூறினான்.

அவ்விதமே அவர்கள் அண்ணாந்து பார்த்தார்கள். என்ன வியப்பு! வானிலே ஓர் இரத்தக் கடல் அலைமோதிக் கொண்டிருந்தது.

அப்பொழுது இறைவன் பேசினான்:

''ராபியா! நம்மை விட்டுப் பிரிந்ததன் காரணமாக நம் காதலர்கள் சொரிந்த இரத்தக் கண்ணீரே இது. அவர்களுக்கு எத்தனையோ துன்பங்களும் துயரங்களும் ஏற்பட்ட போதினும், அவர்கள் நேர் வழியிலிருந்து அணுவத்தனையும் புரளவில்லை. நம்மிடமிருந்து அவர்கள் யாதொன் றையும் விரும்பவுமில்லை. அவர்கள் தம் பாதையில் முதல் அடி எடுத்து வைத்ததுமே இம்மை, மறுமை பற்றிய அனைத்து ஆசைகளையும் துறந்து உலகை விட்டும் ஒதுங்கி விட்டார்கள். ஆனால் அவர்களைப் பற்றி மக்கள் அறிய மாட்டார்கள். உலகில் தம் பெயர் பிரபலமாவதை அவர்கள் அத்துணை அளவு வெறுத்தார்கள்''

அதுகேட்ட ராபியா (ரஹ்) அவர்கள் ''இறைவ எம்பெரும! அவ்விதமாயின் நான் கஃபாவிலேயே ஒதுங்கி வாழ்ந்து விடுகிறேன்'' என்று கூறினர்.

அதற்கு இறைவன் ''இல்லை; நீ பஸரா மீள்க!'' என்று பதிலுரைத்தான்.

அவ்விதமே ஹஜ்ஜுக் கடன்களை முடித்தபின் அவர்கள் பஸரா மீண்டு முன்புபோல் வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களின் மகாத்மியத்தையும் துறவு நிலையையும் சரியாக அறியாத ஒருவர் அவர்களை அணுகித் தாம் இருவரும் மணமுடித்து மகிழலாம் என்று கூறினார். அப்பொழுது அம்மையார் அவரை நோக்கி, ''இவ்வுலக இன்பங்களை விரும்புவோர் ஆணுமல்ல; பெண்ணுமல்ல. அலியாவார். அவ்வுலக இன்பங்களை விரும்புவோர் பெண்ணாவார். இறை இன் பத்தில் மூழ்கித் திளைப்போர் ஆணாவார். நீர் இவ்வுலக இன்பங்களை

விரும்பின் ஓர் அலியாவீர். அலியுடன் நான் எவ்வாறு மணம் புரிந்து வாழ்வது? அல்லது நீர் இவ்வுலக இன்பங்களை விரும்பின் பெண்ணாவீர். பெண்ணுடன் பெண் எவ்வாறு மணம் புரிதல் சாலும்? நீர் இறை காதலில் மூழ்கித் திளைப்பின் நீர் ஓர் ஆணாவீர். நானும் இறை காதலில் மூழ்கித் திளைக்கும் ஆணாவேன். அவ்விதமாயின் ஆணும் ஆணும் எவ்வாறு மணமுடித்து வாழ்வது?'' என்று வினவினார். அதுகேட்ட அம்மனிதர் யாது கூறவதென அறியாது வாயடைத்து வெளியே சென்றார்.

மற்றொரு தடவை அவர்களின் ஞானாசிரியரான ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், அவர்களை நோக்கி, ''தாங்கள் மணமுடித்து வாழ்ந்தால் என்ன?'' என்று வினவியபொழுது, ''நான் இறைவனின் அடிமை. என் மீதோ, என் வாழ்வின் மீதோ எவ்வித ஆதிக்கமும் இல்லாதவள். என் உடல், உயிர் அனைத்துமே அவனுக்கு உரியவை. எனவே அது பற்றி என் எசமானனிடம் கேட்டுக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டார்கள். அது கேட்டுப் பெரிதும் வியப்படைந்த ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், ''ராபியா! தாங்கள் இப்பதவியை எவ்வாறு எய்தப் பெற்றீர்கள்?'' என்று வினவியபொழுது, ''நான் என்னை அவனளவில் அழித்துக் கொண்டேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். ''நல்லது; தாங்கள் அவனை எவ்வாறு அறிந்தீர்கள்?'' என்று ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் மீண்டும் வினா விடுத்த பொழுது, ''தாங்களோ அவனை அறியும் முறையை அறிவீர்கள். நானோ அவனை எவ்வாறு அறியாமல் இல்லாதிருப்பது என்பதை அறிவேன்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

அறமும் ஒழுக்கமும் ஒருங்கே வாய்க்கப் பெற்று நன்னெறியில் வாழ்ந்து வந்த அப்துல் வாஹித் இப்னு ஸைத் என்பார் இவர்களை மணமுடிக்க விழைந்தபொழுது, ''சிற்றின்பத்தை விரும்புபவரே! உம்மைப் போன்று சிற்றின்பத்தை விரும்பக் கூடிய வேறொருவரைத் தேடிக் கொள்ளும். என்னிடம் அதைப் பற்றி ஏன் பேசுகின்றீர்? என்னிடம் அதன் அடையாளம் எதையேனும் கண்டீரா, என்ன?'' என்று இவர்கள் சொல்லி அனுப்பினர்.

பஸராவின் ஆளுநரான முகம்மது பின் சுலைமான் அல்ஹாஷிமி இவர்களை மணமுடிக்க விரும்பி இவர்கள் தம்மை மணப்பின் தமக்கு மாதம் தோறும் கிடைக்கும் ஊதியமாகிய பதினாயிரம் தீனார்களையும் அவர்களிடமே ஒப்படைத்து விடுவதாகக் கடிதம் எழுதிய பொழுது, ''தாங்கள் என்னுடைய அடிமையாக இருப்பதிலோ, தங்களுடைய உடைமைகளுக்கெல்லாம் உரியவளாக நான் இருப்பதிலோ, ஒரு கணமேனும் என் கவனம் அல்லாஹ்வை விட்டும் வேறு பக்கம் திரும்பி

இருப்பதிலோ, எனக்கு அணுவத்தனையும் மகிழ்ச்சி இல்லை'' என்று இவர்கள் பதில் எழுதி அனுப்பினார்கள்.*

வேறொரு நாள் சிலர் அவர்களிடம் வந்து,''தாங்கள் ஏன் திருமணம் முடித்துக் கொள்ளவில்லை'' என்று வினவினர். அது கேட்ட அம்மையார், ''நான் நான்கு விஷயங்கள் பற்றித் துயரப்பட்டுக் கொண்டுள்ளேன். அவற்றை நீங்கள் நீக்கிவிடின் நான் திருமணம் செய்து கொள்வதற்கு எவ்விதத் தடையுமில்லை'' என்று கூறினார்கள். ''அவற்றைக் கூறுங்கள். நிச்சயமாக அவற்றை நாங்கள் நிவர்த்தி பண்ணுகின்றோம்'' என்று பதிலிறுத்தனர் அவர்கள்.

அப்பொழுது ராபியா (ரஹ்) அவர்கள் அவர்களை நோக்கி, ''நான் இறை நம்பிக்கையுடன் இறப்பெய்துவேனா, மாட்டேனா என்று கூறுங்கள்'' என்று வினவினர். 'நாங்கள் அறியோம்' என அவர்கள் பதிலிறுத்தார்கள், ''நல்லது; நான் மண்ணறையில் வைக்கப்பட்டபின் முன்கர், நக்கிரு என்ற வானவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நான் சரியாகப் பதிலிறுப்பேனா, மாட்டேனா?'' என்று கூறுங்கள்'' என்று வினவினர் ராபியா. ''எங்களுக்குத் தெரியாது'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள். ''சரி; மறுமையில் என்னுடைய பட்டோலை என் வலது கையில் கொடுக்கப்படுமா? இடது கையில் கொடுக்கப்படுமா? என்று கூறுங்கள்'' என்று வினவினர் ராபியா. 'நாங்கள் அறிய மாட்டோம்' என்று விடையிறுத்தார்கள் அவர்கள். ''நல்லது நான் மறுமையில் வலப்பக்கமாகச் சுவனம் செல்லுமாறு கூறப்படுவேனா? இடப்பக்கமாக நரகம் செல்லுமாறு கூறப்படுவேனா?'' என்று வினவினர் ராபியா. அதற்கும் அவர்கள், 'நாங்கள் அறிந்தோமில்லை' என்று மறுமொழி

---

* தமக்கு வாழ்க்கைத் துணைவியாரைத் தேர்ந்தெடுத்துத் தருமாறு பஸராவின் ஆளுநர் பஸரா மக்களுக்கு மடல் தீட்டியபொழுது அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களின் பெயரை குறிப்பிட்டனர். அதன் பின் அவர் ராபியா (ரஹ்) அவர்களுக்கு திருமணம் பற்றிக் கடிதம் எழுதியபொழுது பின்வருமாறு பதில் எழுதி அனுப்பினர் ராபியா.

''இவ்வுலகைத் துறப்பதே அமைதி நல்க வல்லது. உலக ஆசை துன்பத்திற்கே வழிகோலுமேயன்றி வேறில்லை, தங்களின் ஆசையைத் தாங்களே அடக்குங்கள். மற்றவர்கள் அதனை அடக்க அனுமதிக்காதீர்கள். ஆனால் அவர்கள் தங்களின் சொத்துக்களிலும், தங்களின் துன்பங்களிலும் பங்கு கொள்ளட்டும். தாங்களோ தங்களின் இறப்பைப் பற்றிக் கவனம் செலுத்துங்கள். தாங்கள் எனக்குத் தருவதாகக் கூறும் அத்தனையையும் இறைவன் கொடுக்கப் போதுமானவன். அதைவிட இரட்டிப்பாகவும் கொடுக்கப் போதுமானவன். அவனை மறந்து ஒரு கணமும் இருப்பது எனக்கு மகிழ்ச்சி நல்கக் கூடியதல்ல.''

இவ்வாறு மற்றொரு வரலாறு கூறுகிறது.

பகர்ந்தார்கள். அதுகேட்ட ராபியா (ரஹ்) அவர்கள், ''இந்நான்கையும் நானும் அறியவில்லை. இந்நிலையில் நான் எவ்வாறு துயர் நீத்துத் திருமணம் புரிந்து கொள்வது?'' என்று கூறிவிட்டனர்.*

வேறொரு தடவை ஒருவர் அவர்களை அணுகித் தாம் அவர்களை மணமுடித்து வாழ விரும்புவதாகக் கூறிய பொழுது, அவரையும் இவ்வாறே கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு மடக்கி வெருண்டோடச் செய்தார்கள் அவர்கள்.

அவர்கள் அயராது இறை வணக்கத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்ட சிலர் அவர்களிடம் வந்து, ''தாங்கள் எப்பொழுது பார்த்தாலும் இறை வணக்கத்தில் ஈடுபட்டுள்ளீர்களே. தாங்கள் இறைவனைப் பார்க்கின்றீர்களா?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''நான் இறைவனைப் பார்க்கவில்லையாயின் எவ்வாறு அவனை நான் வணங்குவேன்'' என்று விடையிறுத்தனர்.

மேலும் அவர்கள் தம்மிடம் கேள்வி கேட்டவர்களை நோக்கி, ''அல்லும் பகலும் இறை வணக்கத்தில் ஈடுபட்டிருக்கும் பெண் உண்மையில் பெண்ணல்ல. அவளே உண்மையான ஆண்மகன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அவர்கள் எப்பொழுதும் அழுது கொண்டிருப்பதைக் கண்ட சிலர், ''தாங்கள் ஏன் எப்பொழுதும் அழுது கொண்டுள்ளீர்கள்?'' என்று வினவியபொழுது, ''நான் இறைவன் மீது அளவற்ற அன்பு செலுத்துகின்றேன். எனினும் அவன் நான் இறக்கும் தருணத்தில், ''நான் உன்னைப் பொருந்திக் கொள்ளவில்லை என்று கூறிவிடக் கூடாதே, என்று எண்ணி

* ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களுக்கும் ராபியா பஸரீ (ரஹ்) அவர்களுக்குமே இந்த உரையாடல் நிகழ்ந்ததென்றும் இறுதியாக ராபியா பஸரீ (ரஹ்) ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''அல்லாஹ் அறிவை எவ்வாறு படைத்துள்ளான்?'' என்று வினவினர் என்றும் அதற்கு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ''அதனை பத்துப் பங்குகளாக்கி அதில் ஒன்பது பங்கை ஆண்களுக்கும் ஒரு பங்கைப் பெண்களுக்கும் கொடுத்தான்'' என்று விடையிறுத்ததாகவும், இச்சையை அவன் எவ்வாறு படைத்தான்'' என்று ராபியா பஸரீ (ரஹ்) அவர்கள் வினவியதற்கு ''அதனைப் பத்துப் பங்குகளாக்கி அவற்றில் ஒன்பது பங்கை பெண்களுக்கும் ஒரு பங்கை ஆண்களுக்கும் அவன் கொடுத்தான்'' என்று ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் பதிலிறுத்ததாகவும் அதுகேட்ட ராபியா பஸரீ (ரஹ்) அவர்கள், ''ஒரு பங்கு அறிவைக் கொண்டு ஒன்பது பங்கு இச்சையை நான் அடக்கியாளும் பொழுது ஒன்பது பங்கு அறிவைக் கொண்டு ஒரு பங்கு இச்னசயைத் தங்களால் அடக்கியாள இயலவில்லையா?'' என்று வினவியதாகவும், அதற்கு யாதும் பதில் கூற இயலாது ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கண்ணீர் விட்டு அழுத வண்ணம் அவ்விடத்தை விட்டும் அகன்றனர் என்றும் மற்றொரு வரலாறு கூறுகிறது.

அஞ்சி நடுங்கியவண்ணம் அழுது கொண்டுள்ளேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

''அவ்விதமாயின் ஓர் அடியான் இறைவனுக்கு எப்பொழுது பொருத்தமாவான்?'' என்று வினவினர் அவர்கள். அதற்கு ராபியா (ரஹ்) பதிலிறுக்குங்கால், ''அவன் இறைவன் தனக்கு நல்கிய நற்பேறுகளுக்கு நன்றி செலுத்துவது போன்று, தனக்கு அவன் நல்கும் சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் எப்பொழுது நன்றி செலுத்துகின்றானோ, அப் பொழுதே இறைவன் அவனைப் பொருந்திக் கொள்வான்'' என்று கூறினார்கள்.

பின்னர் அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களை நோக்கி, ''ஒரு பாவியானவன் பாவமன்னிப்புக் கோரின் அது இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுமா?'' என்று வினவியபொழுது, ''அவன் இறைவனின் நாட்டம் இருந்தால் தானே பாவமன்னிப்புக் கோருவான். இல்லை யெனில் அவன் ஒரு போதும் பாவமன்னிப்புக் கோரமாட்டான். எனவே அவன் இறைவனின் நாட்டப்படி பாவமன்னிப்புக் கோரின் இறைவன் அவனுடைய பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்ளத்தானே செய்வான். இறைவன் அவன் பக்கல் திரும்பின் அவனும் இறைவன் பக்கல் திரும்பத்தானே செய்வான்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

ஒருநாள் ஒருவர் அவர்களைக் காணச் சென்றபொழுது தலையைத் தரையிலே வைத்து இறைவனைத் துதித்துக் கொண்டிருந்த அவர்கள், தம்மைக் காண ஒருவர் வந்திருப்பதை உணர்ந்ததும் தலையை மேலே உயர்த்தினர். அப்பொழுது தரை அவர்களின் கண்ணீரினால் நனைந்து ஈரமாகி இருந்தது. வந்தவர் கூறிய சலாமுக்கு பதிலுரைத்த அவர்கள், அவரை நோக்கி, ''மகளே! உனக்குஎன்ன வேண்டும்?'' என்று வினவினர். ''எனக்கு ஒன்றும் வேண்டாம் .தங்களைக் கண்டு, தங்களுக்கு ஸலாம் உரைத்துவிட்டுச் செல்லத்தான் வந்தேன்'' என்று அவர் கூறியபொழுது, ''இறைவன் உனக்குப் பேரருள் பாலிப்பானாக!'' என்று கூறிய அவர்கள் மீண்டும் தொழ எழுந்து நின்றார்கள். அப்பொழுது அவர்கள், ''இறைவனே; என் பவம் பொறுத்தருள்வாயாக! இவ்வாறு நான் இறைஞ்சும் பொழுது நான் மனப்பூர்வமாக இதனைக் கூறாததற்காக என்னை மன்னித்தருள்வாயாக!'' என்று இறைஞ்சினர்.

பாவமன்னிப்புக் கோருவது இறைவன்- ஒருவனுக்கு வழங்கிய பேரருள் என்று அவர்கள் கருதினார்கள். பாவம் செய்வது மறுமையில் தம்மை இறை தண்டனைக்குள்ளாக்குமே என்பதற்காக அவர்கள் அதனை வெறுக்கவில்லை. இம்மையிலும் மறுமையிலும் தம்மை இறைவனிட

பிருந்து பிரித்துவிடுமே என்றுதான் அவர்கள் அதனை வெறுத்தனர். அப்பிரிவு அவர்களால் எண்ணிப் பார்க்கக் கூட இயலாததாக இருந்தது.

வேறொரு தடவை அவர்களைக் காணவந்த சிலர், ''தங்களிடம் நாங்கள் யாதொரு நோய் நொம்பலங்களையும் காணோம். அவ்வித மிருக்க தாங்கள் ஏன் எப்பொழுது பார்த்தாலும் அழுது கொண்டுள் ளீர்கள்?'' என்று வினவியபொழுது ''என் உள்ளம் பெரிதும் பிணிவாய்ப் பட்டுள்ளது. அதற்கு உலகிலுள்ள எந்த மருத்துவனாலும் நிவாரணம் அளிக்க இயலாது. அதற்கு இறைவன் ஒருவனால் தான் நிவாரணம் அளிக்க இயலும். எனவே அவனுடைய பேரருளைப் பெறுவதற்காக என்னை இவ்விதம் துன்பத்திற்காளாக்கிக் கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

மற்றொரு நாள் அவர்களைக் காணவந்த ஒருவர், ''தாங்கள் ஏன் எப்பொழுதும் அழுது கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவியபொழுது என் துன்பத்திற்கான நிவாரணம் இறைவன் பால் என்னை அழித்துக் கொள்வதில் தான் உள்ளது. எனவே தான் நான் எப்பொழுதும் அழுது கொண்டே உள்ளேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

இறப்பைப் பற்றி அவர்களிடம் எவரேனும் எடுத்துரைப்பின் அவர்களின் உடலெல்லாம் நடுங்கும். நெருப்பைப் பற்றி அவர்களிடம் எவரேனும் எடுத்துரைப்பின் அவர்கள் மயங்கிக் கீழே விழுந்து விடுவார்கள். அப்பொழுது அவர்களின் கண்களிலிருந்து வடியும் கண்ணீர் பாத்திரத்தில் சொட்டுவது போன்ற சப்தத்துடன் தரையில் விழும்.

அவர்கள் இறையச்சத்தின் காரணமாக நாற்பதாண்டுகளாகத் தம் தலையை மேலே உயர்த்திப் பார்க்கவில்லை. பாங்கின் ஒலியைச் செவியுற்றதும் தமக்கு மறுமையில் 'சூர்' ஊதப்படுவது தான் நினைவிற்கு வந்ததென்றும், வைகறையில் தரையிலே பனி படர்ந்திருப்பதைக் கண்டதும், நியாயத்தீர்ப்பு நாளில் மனிதர்களின் கைகளில் வழங்கப்படும் பட்டோலை தான் தமக்கு நினைவு வந்ததென்றும் அவர்கள் கூறினார்கள்.

இறை வணக்கத்தில் அயராது ஈடுபட்டிருந்த அவர்கள் ஒரு தடவை கடுமையான நோய்வாய்ப்பட்ட பொழுது, இரவில் அவர்கள் வழக்க மாகத் தொழுது வந்த தொழுகையைத் தொழ இயலாது போய்விட்டது. எனவே அவர்கள் அவற்றைப் பகலில் தொழுது வந்தார்கள். பின்னர் அவர்கள் நலம் பெற்ற பொழுது அவர்களின் உடல் பெரிதும் பலவீனமா யிருந்ததால் சில காலம் தொடர்ந்து அவ்விதமே செய்து வந்தார்கள். அக்காலை அவர்கள் கனவொன்று கண்டனர். தாம் ஓர் அழகிய பூங்காவில் இருப்பது போன்றும், அதில் ஓர் ஆரணங்கு அழகிய பறவையொன்றைப்

பிடிப்பதற்காக விரட்டிச் செல்வதையும் 'அதனை விட்டு விடு; அதைவிட அழகிய பறவையொன்றை நான் கண்டதில்லை' என்று தாம் கூறிய பொழுது, 'அதைவிட அழகான ஒன்றை நான் உனக்குக் காட்டுகின்றேன்' என்று கூறி ஒளிமயமாக இலங்கிக் கொண்டிருந்த ஓர் அரண்மனைக்கு தம்மை அவள் அழைத்து சென்றதாகவும், அங்கு முத்து நிகர் முகத்து ஊழியர்கள் கையிலே வாசனைப் புகைச் சட்டியுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு தம்மைச் சுட்டிகாட்டி, ''இப்பெண்ணுக்கும் நறுமணப் புகையிட மாட்டீர்களா'' என்று அவள் வினவியபொழுது, ''அவருக்கும் இதில் பங்கு இருக்கத்தான் செய்தது. எனினும் அவர் இதனை விட்டொழித்து விட்டாரே'' என்று அவர்கள் கூறியதாகவும், உடனே அவள் தம் கையை வெடுக்கென உதறித் தள்ளி, ''உம் உறக்கமே வணக்கத்திற்குப் பகையாக ஆகிவிட்டது. உம் வாழ்க்கையை நீர் புறக்கணித்தீர். அது உம் கையை விட்டும் நழுவிக் கொண்டுள்ளது'' என்று கூறி மறைந்தது போன்றும் கனவு கண்டு விழித்தனர். பின்னர் அவர்கள் இக்கனவைத் தம் பணிப் பெண்ணிடம் எடுத்துரைத்தபொழுது அவர்கள் மயக்க முற்றுக் கீழே சாய்ந்து விட்டனர். இதன்பின் அவர்கள் முன்பு போல் இரவில் இறைவனை இடைவிடாது தொழத் துவங்கிவிட்டார்கள்.

நாட்கள் ஓடின. ராபியா (ரஹ்) அவர்கள் மீண்டும் ஓரிரவு கனவொன்று கண்டனர். அதில் அவர்கள் அழகிய மரமொன்றைக் கண்டனர். அம்மரத்தில் அவர்கள் என்றுமே கண்டிராத வெள்ளை, சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களில் ஒளிமயமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த அற்புதமான பழங்கள் பழுத்துக் குலுங்குவதை வியப்புமிகு கண்களுடன் சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றனர். அதன்பின் ஆங்கு நின்று கொண்டிருந்த ஒருவரை நோக்கி, ''இது எவருடையது?'' என்று அவர்கள் வினவினர். ''இது தங்களுடையது தான். தாங்கள் இறைவனை இடைவிடாது துதித்துக் கொண்டிருப்பதன் காரணமாக இது தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது'' என்று கூறினார் அவர். இதன்பின் ராபியா (ரஹ்) அவர்கள் அம்மரத்தைச் சுற்றிப் பார்த்து வரும்பொழுது, அதன்அடியில் பதினெட்டுப் பொன்மயமான பழங்கள் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, இவை கீழே விழாது மரத்திலே பழுத்துக் குலுங்கினால் எத்துணை அழகாயிருந்திருக்கும்'' என்று கூறினர். அப்பொழுது அம்மனிதர் அவர்களை நோக்கி, ''ஆம்; அவை மரத்தில் தான் பழுத்துக் குலுங்கின. ஆனால் ஒரு தடவை தாங்கள் இறைவனைத் தொழுது கொண்டிருந்த பொழுது, 'மாவைப் பிசைந்து வைத்தோமா அல்லவா?' என்ற எண்ணம் தங்களின் உள்ளத்தில் உதித்தது. அதன் காரணமாக அப்பழங்கள் கீழே விழுந்து விட்டன'' என்று கூறினார். இதிலிருந்து ராபியா (ரஹ்) அவர்கள் தம் தவற்றை உணர்ந்து மன ஒருமையுடன் இறைவனைத் தொழுது வந்தார்கள்.

ஒருநாள் அவர்களின் சிறு குடிலுக்கு ஆன்றோர் பலர் வந்திருந்தனர். அப்பொழுது உண்மையான இறைபக்தி என்றால் என்னவென்பது பற்றிப் பேச்செழுந்தது. ''ஓர் அடிமை தன் எசமான் அடித்த அடியைப் பொறுமை யுடன் ஏற்றுக் கொள்ளவில்லையாயின் அவன் உண்மையான இறை பக்தியுள்ளவன் என்று இயம்ப இயலாது'' எனக் கூறினர் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள். அது கேட்ட ராபியா (ரஹ்) அவர்கள், ''அதில் தான் அகங்கார வாடை அடிக்கின்றதே'' என்று கூறினர். அதன் பின் ஷகீகுல் பல்கீ (ரஹ்) அவர்கள் ''எவன் தன் எசமான் அடித்த அடிக்கு நன்றி செலுத்தவில்லையோ, அவன் உண்மையான இறை பக்தியுள்ளவன் அல்ல'' என்று கூறினார்கள். அது கேட்ட ராபியா (ரஹ்) அவர்கள், ''இதைவிடச் சிறந்த விளக்கம் வேண்டும்'' என்று கூறினர். அப்பொழுது மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள், ''எவன் தன் எசமான் தன்னை அடித்ததன் காரணமாக ஏற்பட்ட காயத்தைக் கண்டு மகிழ்ச்சியடைய வில்லையோ அவன் உண்மையான இறை பக்தியுள்ளவன் அல்ல'' என்று கூறினர். அது கேட்ட ராபியா (ரஹ்) அவர்கள், ''இதைவிடச் சிறந்த விளக்கம் வேண்டும்'' என்று கூற, 'தாங்கள் தாம் அதனைக் கூற வேண்டும்'' என்று அம்மூவரும் அவர்களை வேண்டிக் கொண்டனர். அப்பொழுது ராபியா (ரஹ்) அவர்கள் அம்மூவரையும் நோக்கி, ''எவன் தன் எசமானன் அடித்த அடியினால் ஏற்பட்ட காயத்தின் வேதனையைத் தன் எசமானனின் முன்னிலையில் நிற்குங்கால் மறந்து விடவில்லையோ அவன் உண்மையான இறை பக்தியுடையவனல்ல. இதனை எய்தப் பெறுவதும் இயலாததல்ல. யூசுப் (அலை) அவர்களை எகிப்து நாட்டுப் பெண்கள் கண்டதும் தங்களின் கைகளைத் தாங்களே அறியாமல் அறுத்துக் கொண்டார்கள். எனினும் அதனால் ஏற்பட்ட வேதனை அவர்களுக்குத் தெரியவில்லை'' என்று கூறினர்.

இவ்வாறு கூறிய ராபியா (ரஹ்) அவர்கள் உண்மையில் அவ்விதமே செயலாற்றி வந்தார்கள். ஒரு தடவை அவர்களின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் கசிந்தபொழுது அதனை மற்றொருவர் அவர்களுக்கு எடுத்துரைக்கும் வரை அது அவர்களுக்குத் தெரியவில்லை. அளவுக் கதிகமான வணக்கம் நிகழ்த்தியதன் காரணமாக அயர்வுற்று அவர்கள் கீழே சாய்ந்தக்கால் அவர்களின் கண்களில் ஒரு குச்சு குத்தி இரத்தம் கசிந்தது. எனினும் அதைப் பற்றி வேறொருவர் அவர்களிடம் எடுத் துரைத்த பொழுதுதான் அது அவர்களுக்குத் தெரிய வந்தது. இது கண்டு வியப்புற்ற அவர், ''அது குத்தியதனால் ஏற்பட்ட வேதனை கூடத் தங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று வினவியபொழுது, ''என் கவலையெல்லாம் இறைவனின் விருப்பத்திற்கிணங்க செயலாற்ற வேண்டும் என்பதாகவே இருக்கிறது. எனவே அக்கவலையில் நான்

மூழ்கி இருக்குங்கால் எனக்கு அவ்வேதனையே தெரியவில்லை'' என்று பதிலுரைத்தார்கள்.

மேலும் அவர்கள் ''இறை காதல் என்றால் ஒருவன் இறைவனைக் காணும் பேரவாவில் தன்னையே மறந்து நிற்கும் தவநிலையேயாகும். அப்பொழுது அவனுக்கு தன் உடலில் ஏற்படும் சுகமும் தெரியாது போய்விடும்; வேதனையும் தெரியாது போய்விடும்'' என்று எடுத்துரைத்தார்கள்.

இவ்வாறு அவர்கள் இறை சிந்தனையில் தம் இன்ப துன்பங்களை மறந்திருந்த போதினும், அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவனே! என்னுடைய தொழுகையில் என் மனத்தை ஒருமைப்படுத்தி வைப்பாயாக! மன ஒருமையின்றி நான் தொழும் தொழுகையையும் என் மீது இரக்கமுற்று ஏற்றுக் கொள்வாயாக!'' என்று இறைஞ்சும் இயல்புடையவர்களாயிருந்து வந்தனர்.

இறை வணக்கத்தில் அவர்கள் தங்கள் மீது இரக்கமே காட்டுவ தில்லை. இரவு முழுவதும் வணங்கி விட்டுப் பொழுது புலரும் வேளையில் சற்று உறங்கும் அவர்கள் விரைவில் திடுக்குற்று விழித் தெழுந்து, ''நீ எவ்வளவு நேரம் தான் உறங்குவாய் என்று எனக்கு விளங்க வில்லையே. விரைவில் உன்னை ஓர் உறக்கம் ஆட்கொள்ளப் போகிறது. அதன் பின் நீ மறுமையில் தான் விழித்தெழுவாய்'' என்று ஆத்திரத்துடன் தம் ஆன்மாவை நோக்கிக் கூறுவார்கள்.

அவர்கள் சில பொழுது தம்முணர்வற்று அயர்ந்து உறங்கி விட்டபோதினும் அவர்களின் தோழிகள் அவர்களை எழுப்பிவிடத் தவறுவதில்லை. அவர்களின் தோழியான ஹய்யூனா என்ற மாதவத்து நல்லார், ''பகல் முழுவதும் இரவாக இருக்கக் கூடாதா? நான் இறைவனின் அண்மையில் எப்பொழுதும் இருந்து எத்துணை மகிழ்ச்சி யுற்றுக் கொண்டிருப்பேன்'' என்று கூறும் வழக்கமுடையவராயிருந்தார். ஓரிரவு அவர் ராபியா (ரஹ்) அவர்களைக் காணவந்த பொழுது, அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, தம் பாதத்தைத்தட்டி, ''எழுந் திருங்கள். நேர்வழி செல்பவரின் மணாளர் வந்துள்ளார். மணமகளின் ஆபரணங்கள் அவள் இரவில் நிகழ்த்தும் வணக்கத்தின் பேரொளியால் தான் பளிச்சிடுகின்றன'' என்று கூறினார்.

இறைவனை அல்லும் பகலும் வணங்கிக் கொண்டிருந்த அவர்கள் இறைவன் தமக்கு நல்கிவரும் நற்பேறுகளுக்காக அவனுக்கு அனவரதமும் நன்றி செலுத்திக் கொண்டிருந்தார்கள். ''இறைவனே! நீ எனக்கு ஒரு வாழ்க்கையை நல்கி, இரணமும் அளித்து வருகிறாய்.

உனக்கே எல்லாப் புகழும் உரித்தாகுக! நீ எனக்கு எத்தனை வெகுமதிகள், எத்துணை உதவிகள், எத்தனை அருட்பேறுகள் ஆகியவைகளை எல்லாம் வழங்கியுள்ளாய். உனக்கே எல்லாப் புகழும் உரித்தாகுக!'' என்று கூறி அவனைப் புகழ்ந்துரைப்பதைத் தங்களின் நீங்கா நல்லியல்பாகக் கொண்டிருந்தனர்.

ஒரு தடவை ஒருவன் தலைவலிக்காக தலையில் ஒரு துணியைக் கட்டிய வண்ணம் அவர்களின் முன் வந்தபொழுது, ''உனக்கு வயது என்ன?'' என்று வினவினர் அவர்கள். ''முப்பது'' என்று அவன் பதிலுரைத்த பொழுது, ''இந்த முப்பதாண்டுகளில் எப்பொழுதாவது உனக்குத் தலைவலி வந்ததுண்டா?'' என்று வினவினர் அவர்கள். இல்லை என்று அவன் மறுமொழி கூறவே, ''இந்த முப்பதாண்டுகளாக உனக்கு யாதொரு தலைவலியும் வராததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கு மாறாக சற்றுத் தலைவலி வந்ததும், அவன் மீது குறைப்படும் முறையில் தலையில் துணியைக் கட்டிக் கொண்டு திரிகின்றாயே. இது நேர்மையா?'' என்று எடுத்துரைத்தார்கள்.

ஒருநாள் ஒருவன், ''ஆ! என் துக்கமே! என் துயரமே!! என்று அலறித் துடித்த பொழுது அவர்கள் அவனை நோக்கி ''நீ அவ்வாறு கூறி அலறாதே. அதற்கு மாறாக, ''என் துக்கமின்மையே!!''? என்று கூறு. காரணம், துக்கம் என்பது மாபெரும் பக்தர்களின் தனிப்பெரும் உரிமையாகும். அதனை அவர்கள் மகிழ்ச்சியுடன் நுகர்கின்றார்கள். உண்மையில் துக்கம் உனக்கு ஏற்பட்டிருக்குமாயின் உன்னால் பேசவும் கதறவுமா முடியும்? மூச்சை வெளியே விடுவதும் உள்ளே இழுப்பதும் கூட உனக்குச் சிரமமாக ஆகிவிடுமே'' என்று அவர்கள் கூறினார்கள்.

இறை நேசமே அவர்களின் வாழ்வின் முழு மூச்சாக இருந்து வந்தது. அவர்கள் இரவில் தம் வீட்டின் மேல் முகட்டுக்குச் சென்று பின்வருமாறு இறைஞ்சுவார்கள்: ''இறைவனே! விண்மீன்கள் ஒளிந்து கொண்டுவிட்டன. மனிதர்களின் கண்கள் மூடித்துயில் புரிகின்றன. அரசர்கள் தங்களின் அரண்மனைக் கதவுகளையெல்லாம் மூடிவிட்டார்கள். ஒவ்வொரு காதலனும் தன் காதலியுடன் உள்ளான். நானோ இங்கு உன்னோடு உள்ளேன்'' என்று கூறிவிட்டுப் பின்னர் தொழத் துவங்குவார்கள். தொழுது முடிக்குங்கால் வைகறையாகி விடும். அப்பொழுது அவர்கள், ''இறைவனே! இரவு கடந்து விட்டது. பொழுது புலரப் போகின்றது. என்னுடைய வணக்கத்தை நீ ஏற்றுக் கொண்டாயா, அல்லவா என்பதை அறிய நான் பெரிதும் ஆவலாயுள்ளேன். எனவே எனக்கு நல் ஆறுதலை வழங்குவாயாக! இவ்வித நிலையில் எனக்கு நல் ஆறுதலை வழங்குவதற்கு உன்னைத் தவிர வேறு எவருமே இல்லை. நீ எனக்கு வாழ்வு வழங்கி என்னைப் பராமரித்து வருகின்றாய். உனக்கே எல்லாப் புகழும்

# பொருளடக்கம்



உரித்தாகுக! நீ உன்னுடைய வாயிலை விட்டும் என்னை விரட்டி யடிப்பினும் நான் அதை விட்டும் வெருண்டோடுவேனா, என்ன? என் இதயம் முழுவதும் உன் காதலினால் நிரம்பி இருக்கும் பொழுது என்னால் அவ்விதம் எவ்வாறு செய்ய இயலும்?''

இவ்வாறு கூறி இறைஞ்சிய பின் பேரின்பப் போதையில் மூழ்கியவர் களாய், ''என் மகிழ்ச்சியே! என் ஆசையின் கனியே!! என் அடைக்கல பூமியே!!! என் நண்பனே! என் போஷகனே!! என் லட்சியமே!!! நீ தான் என் ஆருயிர் நண்பன். உன் மீது நான் கொண்ட அணையாக் காதலின் காரணமாகவே நான் உயிர் வாழ்ந்து கொண்டுள்ளேன். என் உயிரே! என் நண்பனே!! நீ மட்டும் இல்லையேல் நான் இவ்வுலகில் இங்குமங்கும் அலைக்கழிக்கப்பட்டிருப்பேன் .நீ என் மீது எத்துணை நன்மைகளைச் சொரிந்துள்ளாய். நீ என் மீது எத்துணை பேரருள் பாலித்துள்ளாய். அவை அருட்கொடைகளாகவும், அருட்கிருபையாகவும், அருளுதவியாகவு மல்லவோ பரிணமித்துள்ளன. நீ என்னை நேசிக்க வேண்டுமென்பதே என்னுடைய ஆசை, மகிழ்ச்சி எல்லாம் ஆகும். உன் ஆசையால் என் உள்ளமெல்லாம் தகித்துக் கொண்டுள்ளது. வரண்ட பாலைவனத்தை வளம் கொழிக்கச் செய்ய உன்னைத் தவிர வேறு எவரும் இல்லை. என் மகிழ்ச்சியெல்லாம் நீ தான். நீ என் மீது திருப்தியுறுவாயாயின் என் ஆசையின் கனியே! என் மகிழ்ச்சி முழுமை பெற்று விடும்'' என்று பாடுவார்கள்.

அவர்கள் தம் உள்ளத்தில் இறை காதலைத் தவிர வேறொன்றையும் இடம் பெறச் செய்யவில்லை.

ஒரு தடவை அவர்களைக் காண வந்த ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், தாங்கள் ஆன்மீகத்தில் இத்துணை உயர்வு பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன என்று வினவியபொழுது ''நான் இறை நினைவில் இலயித்து என்னையே மறந்ததனால்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

பிறிதொரு தடவை தாங்கள் இத்துணை ஆன்மீக உச்சத்தை எய்தக் காரணம் என்னவென்று ஒருவர் வினவியபொழுது, ''இறைவா! உன்னை விட்டும் என் கவனத்தைத் திருப்பும் ஒவ்வொரு பொருளை விட்டும், உன்னை அடையத் தடைக்கல்லாக நிற்கும் ஒவ்வொரு பொருளை விட்டும் நான் உன்னிடம் காவல் தேடுகிறேன் என்று இவை விட்டு ஒதுங்கிக் கொண்டிருப்பதாகும்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

[illegible] நான் ஒரு தடவை [illegible] ஒரு குறுந்தொகையை [illegible] ராபியா, 'நீ அக்குறுந்தொகை மீது அன்பு [illegible]'' என்று வினவினார்கள். 'ஆம்' என்று அவர் பதில்

கூறவே, ''இறைவனைத் தவிர்த்து வேறொன்றின் மீது அன்பு செலுத்து வதற்கு உம் இதயத்தில் இடமிருப்பதாக நான் எண்ணவில்லை'' என்று கூறினர் ராபியா. அது கேட்டதும் உணர்ச்சி மிக்குற்ற ரபாஹ் பெரும் சப்தமிட்டு அலறிய வண்ணம் மயங்கிக் கீழே சாய்ந்தார். அவரின் உடல் முழுவதும் வியர்வை கொப்பளித்தது. மயக்கம் தெளிந்ததும் அவரின் வாயிலிருந்து, ''அன்பு என்பது இறைவனிடமிருந்து வருகிறது. அவன் அதனைப் பச்சிளம் குழவிகளிடம் செலுத்துவதற்காகத் தன் அடியார் களின் இதயங்களில் வைத்துள்ளான்'' என்ற சொற்கள் வெளிவந்தன.

ஒரு தடவை அவர்கள் துன்னூன் மிஸ்ரியின் இல்லத்திற்கு வந்த பொழுது அவர்களை ஓடோடிச் சென்று வரவேற்று, ''தங்களின் சகோதரரான துன்னூன் தான் இங்கு உள்ளேன். வேறு ஒருவரும் இல்லை'' என்று கூறி அவர்களை உள்ளே அழைத்துச் சென்ற துன்னூன் மிஸ்ரி, அவர்களை ஆங்கு அமரவைத்து, ''தாங்கள் இங்கு வந்த அலுவல் யாதோ?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''இறைவனின் திருவசனம் ஒன்று தான் என்னை இங்கே அழைத்து வந்தது. 'இறைவனின் பூமி விசாலமானது. எனவே அதில் பிரயாணம் செய்யுங்கள்' என்று அவன் கூறியுள்ளானல்லவா?'' என்று மொழிந்தனர். அதன்பின் துன்னூன் மிஸ்ரி அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களை நோக்கி, இறைகாதலைப் பற்றி எடுத்துரைக்குமாறு வேண்டிய பொழுது, ''எல்லாப் புகழும் இறைவனுக்கே. தாங்கள் அறிவின் நாவால் உரையாடுகின்றீர்கள். எனினும் அது பற்றி என்னிடம் வினவுகின்றீர்கள்'' என்று விடை யிறுத்தனர் ராபியா. அதற்கு துன்னூன் மிஸ்ரி ''கேள்வி கேட்பவருக்கு பதிலைப் பெற உரிமையுண்டு'' என்று மறுமொழி பகர்ந்தனர். அதுகேட்ட ராபியா (ரஹ்) அவர்கள், இருவகையான இறைகாதலைப் பற்றித் தாம் இயற்றியுள்ள பின்வரும் செய்யுளைக் கூறினர்: ''நான் உன்னை இருவிதமாக நேசிக்கின்றேன். அதில் ஒன்று எனக்காக, என் சுயநலத்திற் காக. மற்றொன்று உனக்காக, உன் தகுதியை உணர்ந்து. எனக்காக, என் சுயநலத்திற்காக, நான் உன்னை நேசிப்பதில் நான் உலகிலுள்ள அனைத்தையும் மறந்து உன் நினைவிலேயே திளைக்கிறேன். உனக்காக, உன் தகுதியை உணர்ந்து நான் உன்னை நேசிக்குங்கால் நான் உன் பேரெழிலைத் தரிசிப்பதற்காக நீ உன் திரையைச் சிறிது நீக்குகின்றாய். இதிலோ அதிலோ எனக்கு எவ்விதப் பெருமையுமில்லை. இதிலும் சரி, அதிலும் சரி புகழனைத்தும் உனக்கே உரியவைகளாகும்.''

ஒரு நாள் சில பெண்கள் அவர்களை அணுகி, தங்களை ஆசீர்வதிக்கு மாறு வேண்டியபொழுது, ''இறைவன் தன்னிடமிருந்து உங்களைப் பிரித்திருந்த பிரிவினைக்கான காரணங்கள் அனைத்தையும் உங்களிட மிருந்து பிரித்தருள்வானாக!'' என்று கூறி அவர்களை வாழ்த்தினார்கள்.

ராபியா (ரஹ்) அவர்களைத் தரிசிக்க ஏங்கிக் கொண்டிருந்தவர்கள் எத்தனையோ பேர். அவர்களைத் தரிசித்து அறிவுரை பெற்று நற்பயன் பெற்றோர் எத்தனையோ பேர். ஒரு பெரியார் கூறுகிறார். ''நான் ராபியா (ரஹ்) அவர்களைச் சென்று தரிசித்து வரவேண்டுமென்று நெடுநாட்களாக எண்ணிக் கொண்டிருந்தேன். அதற்கான வாய்ப்புத்தான் கிடைக்க வில்லை. ஒரு நாள் என் இல்லத்திற்குப் பல ஏழைப் பெண்கள் வந்தனர். அவர்களின் முகம் முழு நிலாவென ஒளிர்ந்தது. அவர்களின் உடலி லிருந்து கஸ்தூரி வாடை கமழ்ந்தது. அவர்கள் எனக்கு 'ஸலாம்' உரைத்தனர். நான் பதில் கூறினேன். அதன்பின் அவர்களை நோக்கி, 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று வினவினேன். அதற்கு அவர்கள் நேரடியாகப் பதில் கூறாது 'எங்களின் கதை மிகவும் வியப்பிற்குரியது' என்று கூறினர். 'என்ன அது?' என்று வினவினேன்.

அப்பொழுது அவர்கள் தங்களின் கதையைப் பின்வருமாறு கூறத் தொடுத்தார்கள்.

''நாங்கள் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர்களாவோம். எங்களின் தந்தையார் பெரிய வணிகர்களாவர். உல்லாச சுகபோகங்களில் மூழ்கித் திளைத்த நாங்கள் ராபியா (ரஹ்) அவர்களின் அழகையும் இனிய குரலையும் பற்றிக் கேள்வியுற்று அவர்களைக் காணச் சென்றோம். மக்கள் எங்களுக்கு அவர்களின் வீட்டைக் காட்டினர். 'அவர்கள் முன்னர் சிறந்த பாடகியாக இருந்தார்கள் தாம். ஆனால் அவர்கள் இப்பொழுது பாடுவதில்லை. அதைச் செய்வதை விட்டும் அவர்கள் இறைவனிடம் 'தௌபா' (பாவமன்னிப்பு)ச் செய்து விட்டார்கள்' என்று அவர்கள் எடுத்துரைத்தனர். அப்பொழுது எங்களில் ஒருவர் 'நல்லது; நாம் அவர்களின் பாட்டைக் கேட்க இயலாவிட்டாலும் அவர்களின் அழகையாவது பார்த்துவிட்டு வருவோம்' என்று கூறினார்.

''எனவே நாங்கள் எங்களின் உடைகளை மாற்றிக் கொண்டு ஏழைகள் போன்று உடையணிந்து அவர்களின் இல்லம் சென்று கதவைத் தட்டினோம். அவர்களே வந்து கதவைத் திறந்தார்கள். அதன்பின் அவர்கள், 'நீங்கள் உங்களுடைய வரவால் என்னை நல்ல விதி (நஸீப்) உடையவளாக ஆக்கிவிட்டீர்கள்' என்று அகமலர, முகமலரக் கூறினார்கள்.

''என்ன அது?' என்று நாங்கள் வியப்புடன் வினவினோம். அவர்கள் கூறினார்கள்; என்னிடம் ஒரு பெண் நாற்பது ஆண்டுகளாகக் கண் தெரியாதவளாக இருந்தாள். நீங்கள் வந்து கதவைத் தட்டிய பொழுது, 'கதவைத் தட்டும் ஏழையின் பொருட்டால் எனக்குப் பார்வை நல்குவாயாக!' என்று இறைஞ்சினாள். அடுத்த கணம் அவளின் கண் ஒளி பெற்றது.''

''ராபியா (ரஹ்) அவர்களின் இச்சொல் எங்களின் வாழ்வையே மாற்றியமைத்துவிட்டது. இறைவன் எங்கள் மீது கொண்டுள்ள அளப்பரும் அன்பை எண்ணி வியந்தோம். எங்களின் பொருட்டு ஓர் ஏழைக்கு கண்ணொளி நல்கிய இறைவனின் விந்தையை எண்ணி இறும்பூதெய்தினோம். அக்கணமே உல்லாச சுகபோக வாழ்க்கையை இனிமேல் ஏறிட்டும் பார்ப்பதில்லை என்று உறுதிபூண்டு ராபியா (ரஹ்) அவர்களின் கரம் பற்றி 'தெளபா'ச் செய்து பக்கீர்களாகிவிட்டோம்'' என்று கூறினர்.

ஒரு நாள் ராபியா (ரஹ்) அவர்கள் இறைவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சிய பொழுது, ''இறைவனே! உன்னை நேசிக்கும் ஓர் இதயத்தை நீ நெருப்பிலிட்டுப் பொசுக்குவாயா?'' என்று இயம்பியக்கால், ''ராபியா! நாம் அவ்விதம் செய்வோமா, என்ன? நம்மைப் பற்றித் தவறாக எண்ணாதீர்'' என்று மெல்லிய குரலில் அவர்களின் உள்ளின் உள்ளிலிருந்து ஓர் அசரீரி முழங்கியது.

தம்மை நேசித்த அந்த மாது சிரோன்மணியை இறைவனும் நேசித்தான். ஓரிரவு அவர்கள் வெகுநேரம் வணங்கிவிட்டுச் சற்றுக் கண்ணயர்ந்தார்கள். அப்பொழுது அவர்களின் இல்லத்தில் ஒரு கள்வன் புகுந்து அவர்களின் போர்வையைத் திருடிச் சென்றான். அவன் வாயிலை அடைந்ததும், அவனுடைய கண்ணொளி மங்கியது. இது கண்டு அஞ்சி அவன் அப்போர்வையைக் கீழே வைத்ததும் மீண்டும் அவனுடைய கண்கள் ஒளி பெற்றன. மீண்டும் அவன் போர்வையை எடுத்ததும் அவனுடைய கண்ணொளி மங்கியது. இவ்வாறு பல தடவைகள் நிகழ்ந்தன. அப்பொழுது உருத் தோற்றமின்றி ஓர் ஒலி முழங்கியது. ''வீணே நீ துன்பத்திற்காளாகாதே. இவர் பல்லாண்டுகளாகத் தம்மை எம்மிடம் ஒப்படைத்துள்ளார். நாம் அவருக்குப் பாதுகாவல் வழங்கு கின்றோம். எனவே அவரின் இச்சிறு குடிலுக்கு ஷைத்தான் கூட வர இயலாது. அவ்விதமாயின் உன்னால் அவருக்கு என்ன தீமை செய்ய இயலும்? ஒரு தோழன் உறங்குங்கால் மற்றொரு தோழன் விழித்துக் கொண்டிருக்கும் பொழுது, அவன் எவ்வாறு உன்னை அப்போர்வையை எடுத்துச் செல்ல அனுமதிப்பான்?''

இதனைச் செவியுற்றதும் அக்கள்வனின் உள்ளத்தை அச்சம் கௌவிக் கொள்ள, அவனுடைய கால்கள் அவனைக் காற்றினும் கடிதாக வெளியே இழுத்துச் சென்றன.

மற்றொரு நாள் அவர்களின் சிறுகுடிலில் நுழைந்த கள்வன் ஒருவன் அங்குச் சிறு குவளை ஒன்றைத் தவிர்த்து வேறொன்றையும் காணாது வெறுப்போடு வெளியேறினான். அது கண்ட ராபியா (ரஹ்) அவர்கள்

அவனை நோக்கி, ''நீ உண்மையில் களவாட வந்திருப்பின் வெறுங்கையுடன் திரும்பாதே'' என்று கூறினர். அது கேட்ட அவன், ''நான் இங்கு வேறு என்ன செய்வது?'' என்று வினவினான். அதற்கு ராபியா (ரஹ்) அவர்கள், ''அந்த குவளையில் தண்ணீர் எடுத்து 'உளூ' செய்து தொழு'' என்று கூறினர். அவ்வாறே அவனும் செய்தான். அப்பொழுது ராபியா (ரஹ்) அவர்கள், ''இறைவனே! அவன் எனது இல்லத்திற்கு வந்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. எனவே அவனை உன்னுடைய இல்லத்திற்கு அழைத்து வந்துள்ளேன். அவன் மீது உன் அருள்மழையைச் சொரிவாயாக!'' என்று இறைஞ்சினர். அதன் காரணமாக அவ்விரவு முழுவதும் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த அவன் வைகறையில் புதியதோர் மனிதனாக, இறைவனின் நல்லடியானாக மாறி அக்குடிலை விட்டும் வெளியேறினான்.

இறை காவலில் மூழ்கித் திளைத்த இவ்வம்மையார் இறைவன் விட்ட விதியை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்ளும் இயல்புடையவர்களாயிருந்தனர். இறைவனைத் தான் நேசிப்பதாகக் கூறிக்கொண்டு அவன் விட்ட விதியை ஏற்றுக் கொள்ளாதிருக்கும் சிலரைப் பற்றி அவர்கள் கூறும்பொழுது, ''நீங்கள் இறைவனை எதிர்த்துப் புரட்சி செய்கிறீர்கள். எனினும் அவனை நேசிப்பது போல் வெளித் தோற்றத்தில் காணப் பெறுகிறீர்கள். இது விநோதமாக உள்ளதே. நீங்கள் இறைவனை உளப்பூர்வமாக நேசிப்பின், நீங்கள் அவன் மகிழும் வண்ணம் அவனுக்கு அடி பணிந்தல்லவோ ஒழுகுவீர்கள். நண்பன் ஒருவன் தன் நண்பனின் விருப்பத்திற்கு அடிபணிந்து தானே ஒழுகுகின்றான். அவ்விதம் ஒழுகி அவனுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள விரும்புகின்றான்'' என்று இயம்பினர். அதன்பின் அவர்கள், ''இறைவனே! நான் உன்னை என் இதயத்தின் நேசனாக ஆக்கியுள்ளேன். எனினும் என் உடலம் என் நட்பை விரும்புபவர்களுக்காக உள்ளது. என் உடலம் தன்னுடைய விருந்தினருடன் நட்பாக உள்ளது. ஆனால் என் உள்ளம் கவர்ந்த காதலன் என் ஆன்மாவின் விருந்தினனாக உள்ளான்'' என்ற கருத்தமைந்த கவிதையைப் பாடினர்.

இவ்வாறு பாடிய அவர்கள், ''என் மது, மதுக்கிண்ணம், என் காதலன் ஆகிய மூன்றுடன் காதல் வெறி தலைக்கேறிய நான் நான்காவதாக உள்ளேன்'' என்று கூறினர்.

இவ்விதம் அவர்கள் பல ஞானக் கருத்துக்களை வெளிப்படையாக எடுத்துரைத்ததன் காரணமாக அவர்களைச் சிலர் ஸிந்தீக் என்று கூறவும் தயங்கவில்லை.

அவர்கள் எவ்வளவுதான் வறுமையில் உழன்ற போதினும், இறைவனிடமேயன்றி வேறு எவரிடமும் அவர்கள் யாதொன்றும்

கேட்டதில்லை. ஒரு நாள் அவர்களின் இல்லத்தில் கறி சமைக்க வெங்காயம் இல்லை என்றும், எனவே அண்டை வீடு சென்று அதனை வாங்கி வரவா என்றும் அவர்களின் பணிப்பெண் அவர்களிடம் கேட்ட பொழுது, ''வேண்டாம்; நான் இறைவனிடமேயன்றி வேறு எவரிடமும் யாதொன்றும் கேட்பதில்லை. என்று உறுதி பூண்டு நாற்பதாண்டுகளா கின்றன'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அப்பொழுது ஒரு பறவை சில வெங்காயங்களைத் தன் அலகுகளில் கௌவி வந்து அவர்களின் வீட்டு முற்றத்தில் போட்டது. இது ஷைத்தானின் கபட நாடகமாக இருக்குமோ என்று ஐயுற்ற அவர்கள் ''ஷைத்தானே! நீ என்னுடன் விளையாடுகின்றாயா என்ன? என் இறைவன் வெங்காய மண்டி வைத்திருக்கிறானா என்ன?'' என்று சினத்துடன் கூறிவிட்டு அவற்றை ஏறிட்டும் பார்க்காது வெறும் ரொட்டியை மட்டும் உண்டு பசி தீர்ந்தனர்.

ஒரு நாள் அவர்களைக் காணவந்த செல்வ இளவல் ஒருவர் அவர்கள் கிழிந்த ஆடைகளை அணிந்திருப்பதைக் கண்டு, ''அன்னையே தாங்கள் அனுமதியளிப்பின் தங்களின் தேவைகளை நிறைவேற்ற எத்தனையோ பேர் காத்திருக்கிறோமே. இந்நிலையில் தாங்கள் ஏன் அழுக்கடைந்த கிழிந்த ஆடைகளை அணிந்துள்ளீர்கள்?'' என்று வினவியபொழுது, ''மகனே! நான் என்னுடைய தேவைகளைப் பிறரிடம் எடுத்துரைக்க நாண முறுகிறேன். அண்ட கோளங்களும் அல்லாஹ்வுக்கே உரியவையாகும். எனவே எனக்கு ஏதேனும் தேவைப்படின் அதனை அவனிடமே கேட்பேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

நாளாக, ஆக, அவர்களின் தகுதி அதிகப்பட்டுக் கொண்டு வந்தது. எனவே அவர்கள் பிற்காலத்தில் இறைவனிடமும் யாதொன்றும் கேட்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். ''தாங்கள் ஏன் தங்களின் நண்பர்களிடமிருந்து யாதொரு உதவியும் வேண்டுகின்றீர்களில்லை'' என்று ஒருவர் அவர்களிடம் வினவியபொழுது, ''எவனுக்கு இவ்வுல கத்தின் உடைமைகளெல்லாம் சொந்தமோ அவனிடமே நான் யாதொன் றையும் கேட்காத பொழுது எவர்களுக்கு அவை சொந்தமில்லையோ அவர்களிடம் நான் எவ்வாறு அவற்றில் யாதொன்றையும் கேட்பேன்'' என்று கூறிவிட்டார்கள்.

ஒரு நாள் அவர்களின் இல்லம் வந்த மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களின் ஏழ்மை நிலையைக் கண்டு பெரிதும் மனம் உருகி, ''அம்மையே! தாங்கள் அனுமதி வழங்கின் சில செல்வந்தவர்களிடமிருந்து தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கி வருகின்றேன்'' என்று கூறினர். அது கேட்ட ராபியா (ரஹ்) அவர்கள்,

''எனக்கும் அந்த செல்வந்தர்களுக்கும் உணவளிப்பவன் இறைவன் அல்லவா? ஏழைகள் என்பதற்காக இறைவன் அவர்களை மறந்து விடவும், செல்வந்தர் என்பதற்காக இறைவன் அவர்களை நினைவு கொள்ளவும் செய்கின்றான் என்று எண்ணிக் கொண்டீர்களா, என்ன? என் நிலைமை அனைத்தும் அவனுக்குத் தெரியும்பொழுது, அவனுக்கு நான் நினைவு படுத்த என்ன அவசியம் உள்ளது? அவனுடைய விருப்பமே என் விருப்பமாகும்'' என்று கூறிவிட்டார்கள்.

ஒரு தடவை அவர்களிடம் ஒருவர் வந்து, ''அரண்மனையிலிருந்து விழும் எச்சில் சோற்றை உண்டு ஒரு துறவி உயிர் வாழ்ந்து கொண்டிருப்ப தாகவும், அவர் இறைவனின் நல்லடியாராயின் இறைவனிடம் தமக்கு இஃதல்லாத வேறொரு வழியில் உணவளிக்குமாறு இறைஞ்சினால் தான் என்ன?'' என்றும் கூறி அவரை இழித்துரைத்தபொழுது, ''ஒன்றுக்கும் உதவாதவரே! வாயை மூடிக் கொண்டிரும். இறைவனின் நல்லடியார்கள் இறைவன் எது செய்யினும் அதனை இன்முகத்துடன் பொருந்திக் கொள்கின்றார்கள். இறைவன் அவர்கள் வாழ்வதற்கான வழியை அவர்களை விட்டு நீக்கிவிட்ட போதினும் அவ்விதம் செய்வது அவனுக்குத் திருப்தியை நல்கின் அதனை அவர்கள் திருப்தியுடன் ஏற்றுக் கொள்கிறார்கள்'' என்று உணர்ச்சியுடன் இயம்பினர்.

இறைவனின் விருப்பமே தம் விருப்பம் என்று எண்ணி வாழ்ந்த அம்மூதாட்டியார் தாம் முப்பதாண்டுகளாக அவனிடமிருந்து அவனைத் தவிர வேறொன்றையும் விரும்பவில்லை என்றும், அவன் தன்னை ஏமாற்றமுறச் செய்யவில்லை என்றும் கூறினர். அவர்களின் முழு நோக்கமும் தாம் இறைவனைப் பற்றித் திருப்திகொள்ள வேண்டும்; இறைவன் தம்மைப்பற்றி திருப்தி கொள்ள வேண்டும் என்பதாகவே இருந்தது.

எளிமையின் திருவுருவாக விளங்கிய அவர்களிடம் தண்ணீர் எடுக்க ஓர் உடைந்த கலயமும் படுக்க ஒரு பழம் பாயும் தலையணைக்காக ஒரு செங்கல்லும், துணி போடுவதற்காக ஒரு மரச் சட்டமும் - அதில் அவர் களுக்கான கஃபன் துணி தொங்கிக் கொண்டு கிடந்தது - அவர்களின் வீட்டு வாயிலை மறைப்பதற்காக ஒரு கிடுகுத் தடுப்பும் ஒரு மண் பானையும் தாம் இருந்தன.

ஒரு தடவை அவர்கள் கந்தல் துணியை அணிந்திருப்பதைக் கண்ட ஒருவர் ''தாங்கள் அனுமதி வழங்கின் தங்களுக்குப் புத்தாடை ஒன்று வாங்கி வருகிறேன்'' என்று கூறியபொழுது, ''வேண்டாம்; உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வதே உயரிய பண்பாகும்'' என்று அவர்கள் மொழிந்தனர்.

அவர்களைக் காண வந்த ஒருவர் அவர்கள் இருந்த அவல நிலையைக் கண்டு வருந்தி அவர்களுக்கு நாற்பது தீனார்களை அன்பளிப்பாக வழங்கிய பொழுது, ''உலகம் முழுவதையும் பெற்றுள்ள அவனிடமிருந்தே நான் ஒன்றைக் கேட்க வெட்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது தங்களிடமிருந்து நான் அவற்றை எவ்வாறு ஏற்றுக் கொள்வேன்'' என்று கூறி அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள்.

மற்றொரு தடவை ராபியா (ரஹ்) அவர்கள் நோய்வாய்ப்பட்ட பொழுது, அவர்களைக் காண ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் சென்றக்கால் அவர்களின் குடிலின் வாயிலில் செல்வர் ஒருவர் வீற்றிருந்து அழுது கொண்டிருப்பதைக் கண்டனர். அவரிடம் அவர் அழுவதற்கான காரணத்தை ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் வினவியக்கால், ''ராபியா (ரஹ்) அவர்கள் போன்ற இறைநேசச் செல்விகள் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருப்பதனால் தான் இவ்வுலகம் வாழ்ந்து கொண்டுள்ளது. அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கிவிடின் இவ்வுலகமும் அழிந்து விடுமே என்று எனக்கு அச்சமாக உள்ளது. எனவே அவர்களுக்கு நல்ல மருத்துவச் சிகிச்சை வழங்கி அவர்களை நலமுறச் செய்ய வேண்டும் என்ற நன்நோக்கத்துடன் அவர்களுக்கு காணிக்கையாகப் பணம் கொண்டு வந்துள்ளேன். ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்களோ, மாட்டார்களோ என்று எனக்கு ஐயமாக உள்ளது. எனவே அதன் காரணமாக நான் அழுது கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

உள்ளே சென்ற ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் அந்தச் செல்வருக்காக ராபியா (ரஹ்) அவர்களிடம் பரிந்துரைத்து அவர் கொண்டு வந்துள்ள காணிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு கூறிய பொழுது, ''தன்னை நிராகரிப்பவர்களுக்கும் இரணம் அளிக்கவும் தன்னை நேசிப்பவர்களை உணவு, பணம் ஆகியவை இன்றி உயிர் வாழச் செய்யவும் ஆற்றல் பெற்ற இறைவனின் மாபெரும் வல்லமையை நான் எக்கணத்தில் விளங்கிக் கொண்டேனோ அக்கணத்திலிருந்து நான் மனிதர்களிடமிருந்து உதவி பெறுவதை விட்டும் என் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். இஃது ஒருபுறமிருக்க, அவர் கொணர்ந்துள்ள பணம் அனுமதிக்கப்பட்ட வழியில் ஈட்டப்பட்டதா அல்லவா என்பதை நான் அறியாதிருக்குங்கால் நான் எவ்வாறு அதனை ஏற்றுக் கொள்வது?*

* அவர்களைக் காண வந்த செல்வர் ஒருவர் அவர்களின் வறிய நிலையைக் கண்டு இரங்கி அவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகளையும் புதுவீடு ஒன்றையும் அன்பளிப்பாக நல்கிய பொழுது அவற்றை ஏற்று அவ்வீட்டில் குடிபுகுந்த ராபியா (ரஹ்) அவர்கள் அதன் சுவர்களில் வர்ணம் தீட்டி இருப்பது தம் உள்ளத்தைக் கவரவே அதை விட்டும் வெளியேறி அச்செல்வர் தந்த ஆயிரம் தீனார்களையும் அவரிடமே திருப்பி அனுப்பி, ''இவ்வீடு மறுமை பற்றிய எண்ணத்தை மறக்கச் செய்வதால் எனக்கு வேண்டாம்,

''நான் ஓரிரவு அரசருடைய வெளிச்சத்தில் என்னுடைய கிழிந்த காற்சட்டையைத் தைத்ததன் காரணமாக, என் உள்ளத்தை இருள் மூடிக் கொண்டது. பின்னர் அக்காற்சட்டையைக் கிழித்து முன்பு போல் ஆக்கிய பின்னரே என் உள்ளம் முன்பிருந்த நிலையை எய்தியது. இதன்பின் நான் இத்தகு பாவத்தை எக்காலும் செய்வதில்லை என்றும் எனவே என் பவம் பொறுத்தருளுமாறும் இறைவனிடம் இறைஞ்சினேன்'' என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்களின் இல்லத்தில் ஒரு கத்தி கூட இல்லாதிருந்தது. ஒரு தடவை அவர்கள் ரொட்டியைப் பற்களால் கடித்துத் தின்று கொண்டிருப்பதைக் கண்ட ஒருவர் அவற்றை வெட்டித் தின்பதற்குத் தங்களிடம் கத்தி இல்லையா என்று வினவியபொழுது, ''இல்லை; அதனை வைத்துக் கொண்டால் இறைவனுக்கும் எனக்கும் உள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்ள ஏதுவாகுமோ என்று அஞ்சி நான் அதனை வைத்துக் கொள்வதே இல்லை'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

எளிமை வாழ்வில் இன்பம் கண்ட அவர்கள் ஆடம்பர வாழ்வைப் பெரிதும் வெறுத்தனர். ஒரு விருந்திற்குச் சென்று திரும்பிய அவர்களிடம் அவ்விருந்து பற்றி வினவப்பட்ட பொழுது, ''நபி வழியை (சுன்னத்தை) பின்பற்றுவதாகக் கூறப்படும் இவ்விருந்துகளில் ஆடம்பரங்கள் தலையிட்டு முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் இழிவையல்லவோ கொணர்கின்றன'' என்று கூறி வருத்தப்பட்டார்கள்.

ஒரு நாள் அவர்களின் சிறு குடிலுக்கு ஒன்பது பேர் வந்து தாங்கள் ஹலால் ஆன உணவருந்த விரும்பி ஆங்கு வந்துள்ளதாக கூறினர். அப்பொழுது அவர்களின் இல்லத்தில் இரண்டே இரண்டு ரொட்டிகள் தாம் இருந்தன. அவற்றை அவர்கள் அவர்களின் முன் கொண்டு வந்து வைத்தபொழுது, அவர்களின் வீட்டு வாயிலில் ஓர் ஏழை வந்து நின்று தமக்கு உண்ண ஏதேனும் தருமாறு வேண்ட அவர்கள் அவ்விரண்டு ரொட்டிகளையும் எடுத்து அவரிடம் கொடுத்து விட்டனர். இது வந்திருந்த விருந்தினர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் வியப்பையும் வழங்கியது.

சற்று நேரத்தில் ஒரு பணிப்பெண் பதினெட்டு ரொட்டிகளைக் கொண்டு வந்து, தன் எசமானி அவற்றை அவர்களுக்கு அன்பளிப்பாக

என் ஒரே நோக்கம் இறைவனுக்கு ஊழியம் புரிவதில் என்னை அர்ப்பணித்துக் கொள்வதேயாகும்'' என்று சொல்லி அனுப்பினார்கள். ''ஏன் அவ்வீட்டைத் துறந்து விட்டீர்கள்?'' என்று ஒருவர் வினவியபொழுது, ''என்றென்றும் நிலையான இறைவனுடன் தொடர்பு கொள்வதற்காக எனக்குத் தேவையில்லாததை விட்டொழித்து விட்டேன்'' என்று அவர்கள் விடை யிறுத்தார்கள். இவ்வாறு மற்றொரு வரலாறு கூறுகிறது.

அனுப்பி வைத்ததாகக் கூறினாள். அவற்றை எண்ணிப் பார்த்த ராபியா (ரஹ்) அவர்கள், ''இவை எனக்கு அனுப்பப் பெறவில்லை. எனவே எடுத்துச் செல்'' என்று கூறி விட்டார்கள். சற்று நேரத்தில் அவள் மீண்டும் ரொட்டித் தட்டுடன் வந்து அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டி நின்றாள். அவற்றை அவர்கள் எண்ணிப் பார்த்ததும் இருபது ரொட்டிகள் இருப்பதைக் கண்டு அவை தமக்குத் தான் அனுப்பப்பட்டன என்று கூறி அவற்றை ஏற்றுக் கொண்டார்கள்.

இது கண்டு, வந்திருந்த விருந்தினர்களுக்கு அளவற்ற வியப்பேற் பட்டது. அது பற்றி அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களை வினவினர். அதற்கு அவர்கள், ''நாம் ஒன்றை அறவழியில் செலவழிப்பின் அதற்குப் பகரமாகப் பத்து மடங்கு வழங்குவதாக இறைவன் வாக்களித்துள்ளான். நான் வாயிலில் வந்து நின்ற ஏழைக்கு அறம் வழங்கியது இரண்டு ரொட்டிகள். அவற்றிற்கு பகரமாக எனக்கு இறைவன் இருபது ரொட்டிகள் தர வேண்டும். எனவே தான் முதலில் பதினெட்டு ரொட்டிகள் வந்ததும், அவை எனக்கல்லவென்று கூறி அவற்றைத் திருப்பி அனுப்பிவிட்டேன். பின்னர் இருபது ரொட்டிகள் வந்ததும், அவற்றை எனக்காக வந்தவை என்று ஏற்றுக் கொண்டேன். ஏனெனில் ஒரு போதும் இறைவனின் சொல் பொய்யாவதில்லையல்லவா?'' என்று கூறி அவற்றை உண்ணுமாறு அவர்களை வேண்டிக் கொண்டனர் அம்மையார்.

ஒரு தடவை அவர்கள் தொடர்ச்சியாக ஏழு நாட்கள் நோன்பு நோற்று இரவெல்லாம் இறை வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஏழாவது நாள் நோன்பு திறப்பதற்கு அவர்களுக்கு ஒரு தட்டில் ரொட்டி வந்தது. அதனைக் கீழே வைத்து விட்டு விளக்கை எடுக்கச் சென்ற பொழுது பூனை ஒன்று வந்து அதனைத் தின்று விட்டது. அதன்பின் தண்ணீர் எடுப்பதற்காக மண் கலயத்தை எடுத்துச் சென்றபொழுது விளக்கணைந்து விட்டது. பின்னர் இருளில் தண்ணீர் அருந்த முற்பட்ட பொழுது மண் கலயம் கைதவறி வீழ்ந்து உடைந்து விட்டது. அப்பொழுது ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கிய அவர்கள், ''இறைவனே! இந்த ஏழையை ஏன் இவ்வாறு சோதிக்கின்றாய்?'' என்று கண்ணீர் விட்டுக் கதறினார்கள். அப்பொழுது அவர்களின் செவிகளில் பின்வருமாறு அசரீரி முழங்கியது. ''ராபியா! நீ விரும்பியது வேண்டின் அது மட்டுமல்லாது இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் நாம் உனக்கு வழங்குவோம். ஆனால் அவ்விதமாயின் நீ எம்மை நினைவு கூர்வதை அடியோடு மறந்து விடு. ராபியா! உனக்கு ஓர் ஆசை உண்டென்றால் எமக்கும் ஓர் ஆசை உண்டு. ஆனால் அவ்விரண்டு ஆசைகளும் ஒரே இதயத்தில் இடம் பெற இயலாது''

இறைவனின் இவ்வசரீரி மொழிகளைக் கேட்டதும் ராபியா (ரஹ்) அவர்கள் அதிர்ந்து போய் விட்டார்கள். இது முதல் அவர்கள் தங்களின் எண்ணம் முழுவதையும் இறைவன் பக்கலிலேயே முற்றிலும் திருப்பி இறைவனை வழிபட்டு வந்தனர். இதன்பின் முப்பது ஆண்டுகளாகத் தாங்கள் தொழும் ஒவ்வொரு தொழுகையையும், அது தான் தம் இறுதித் தொழுகை என எண்ணித் தொழுது வந்தார்கள். பொழுது புலர்ந்ததும் மக்கள் தம்மைக் காண வந்து தம் வணக்கத்திற்கு இடையூறு விளை விப்பார்கள் என்று அஞ்சிய அவர்கள், ''இறைவனே! அவர்கள் என்னை, உன்னை வணங்குவதை விட்டும் கவனத்தை திருப்பா வண்ணம் காத்தருள் புரிவாயாக!'' என்று இறைஞ்சினார்கள்.

ஒரு நாள் சுப்யான் தெளரீ, அபூஜஃபர் பின் சுலைமானை நோக்கி, ''வாருங்கள்; நாம் அந்த ஆசிரியையிடம் செல்வோம். அவரிடம் சென்று சற்று நேரம் உரையாடி விட்டு வந்தால் தான் எனக்கு மனச் சாந்தி ஏற்படுகிறது'' எனறு கூறினார். அவர்கள் இருவரும் ராபியா (ரஹ்) அவர்களின் சிறு குடிலுக்கு வந்ததும் சுப்யான் தெளரீ தம் கைகளை உயர்த்தி, ''இறைவனே!நான் இவ்வுலக மாயைகளை விட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன்'' என்று கூறினார். அது கேட்ட ராபியா (ரஹ்) அவர்கள் அழுதுவிட்டார்கள். அழுவதற்கான காரணத்தை சுப்யான் தெளரீ வினவியபொழுது, ''தாங்கள் தாம் நான் அழுவதற்கான காரண மாகும்'' என்று விடையிறுத்தனர் ராபியா. 'எவ்வாறு?' என்று சுப்யான் தெளரீ வினவிய பொழுது, ''உலக மாயைகளை விட்டும் விடுதலை பெறுவதென்பது உலகிலுள்ள பொருள்களை 'தூ' வெனத் தூக்கி எறிவதாகும். ஆனால் தாங்கள் அவற்றால் தங்களையே தாங்கள் மாசுறச் செய்து கொண்டிருக்கும் பொழுது எவ்வாறு தாங்கள் உலக மாயைகளை விட்டும் விடுதலை பெறுவது?'' என்று வினவினர் ராபியா. அதன் பின் அவர்கள் சுப்யான் தெளரீ அவர்களை நோக்கி, ''தங்களுக்கோ அதிக வாணாள் உள்ளது. அது சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்து இறுதியாக ஒன்றுமே இல்லாது போய்விடும். தாங்களோ அறிஞர். இதனை விளங்கிக் கொள்ளுங்கள்'' என்று கூறினர்.

மற்றொரு நாள் அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''இவ் வுலகைத் துச்சமாகக் கருதுங்கள். அவ்விதம் கருதுவதே மிகவும் இன்பம் பயப்பதாகும்'' என்று கூறினர்.

வேறொரு நாள் சுப்யான் (ரஹ்) அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களை நோக்கி, ''இறை அண்மையை விரும்பும் இறைவனின் நல்லடியார் ஆற்ற வேண்டிய நற்செயல் யாது?'' என்று வினவியபொழுது, ''அவர் இம்மையிலோ மறுமையிலோ அல்லாஹ்வையன்றி வேறொன்றையும் விரும்பாதிருப்பது தான்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் கூறும் பொழுது, ''ஒரு மனிதன் முழு உலகையும் பெற்றிருந்த போதினும் அவனை அதன் காரணமாக செல்வந்தன் என்று கூற இயலாது'' என்று எடுத்துரைத்தனர்.

பிறிதொரு நாள் ஒருவர் அவர்களிடம் வந்து ''அம்மையீர்! நான் பல பாவங்களைச் செய்துள்ளேன். நான் பாவமன்னிப்புக் கோரி இறைவன்பால் திரும்பின் அவன் என்பால் தன் கிருபைக் கண்களைத் திருப்புவானா?'' என்று வினவினார்.

அதற்கு அவர்கள், 'மாட்டான். அதற்கு மாறாக அவன் தன் கிருபைக் கண்களை உம்பால் திருப்பினால் தான் நீர் பாவமன்னிப்புக் கோரி அவன் பால் திரும்புவீர்' என்று பதில் கூறினார்கள்.

ஒரு நாள் அவர்களைக் காணவந்த ஒருவர் இவ்வுலக வாழ்வைப் பற்றிப் பெரிதும் இழித்துரைத்துக் கொண்டிருந்தார். அவர் கூறுவதை யெல்லாம் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள், அவரை நோக்கி, ''நீர் உண்மையில் இவ்வுலக வாழ்வை விரும்புபவரே யன்றி அதனை வெறுப்பவரல்ல. ஒன்றை அதிகமதிகமாக விரும்புபவனே அதைப் பற்றி அதிகமதிகமாகப் பேசுவானே யொழிய, அதை வெறுப்பவன் அதைப் பற்றி வாயெடுத்தும் பேசவே மாட்டான். ஒருவன் ஒரு பொருளை விரும்பி அதனை வாங்க நாடின் அதனை விலை குறைத்து வாங்குவதற்காக அதைப் பற்றிக் குறைவாகவே விற்பனையாளரிடம் கூறுவான். ஒரு பொருளுக்கு உரிமையாளன், தானே அதனை வேண்டு மென்றே கீழே போட்டு உடைப்பான்'' என்று கூறிய அவர்கள், ''ஒருவன் இறைவனைத் துதிப்பதைவிட அதிகமாக ஒன்றின் மீது ஆசை கொள்ளின் அவ்வாசை அவனை வழி கெடுத்துவிடும்'' என்ற கருத்துப் பொதிந்த நபிமொழி ஒன்றைக் கூறினர்.

வேறொரு நாள் ஒருவர், ''என் துக்கமே! என் துக்கமே!!'' என்று பிறர் அறிய அலறிக் கொண்டிருப்பதைக் கண்ட அவர்கள், ''நீர் அவ்விதம் கூறாதீர். அதற்கு மாறாக, ''என் துக்கமின்மையே! என் துக்கமின்மையே!! என்று கூறும். ஏனெனில் அளவற்ற துக்கம் உன் உள்ளத்தைக் கௌவிப் பிடித்திருப்பின் பேச்சுமா வெளிவரும்? மூச்சு கூட வெளிவரத் தயங்குமே'' என்று கூறினார்கள். மேலும் அவர்கள் கூறும்பொழுது, ''என்னை துன்புறச் செய்பவைகளைப் பற்றி நான் வருத்தமுறவில்லை. என்னைத் துன்புறச் செய்யாதவைகளைப் பற்றியே நான் வருந்திக் கொண்டுள்ளேன்'' என்று இயம்பினர்.

ஒரு நாள் அவர்களைக் காணவந்த சிலர் அவர்களின் அபார வணக்கங்களைக் கேள்வியுற்றுப் பெரிதும் வியப்பில் மூழ்கியவர்களாய்,

''தாங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''அவ்வுலகத்திலிருந்து'' என்று விடையிறுத்தார்கள். ''தாங்கள் எங்கு மீள்வீர்கள்?'' என்று மீண்டும் வினா எழுப்பினர் அவர்கள். ''அவ்வுலகத்திற்கு'' என்று பதிலிறுத்தார்கள். அதுகேட்ட அம்மக்கள், ''இவ்வுலகில் தாங்கள் என்ன செய்கிறீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அம்மையார், ''நான் இவ்வுலகின் உணவைத் துன்பத்துடன் தின்றுகொண்டு அவ்வுலகத்திற்கான அலுவல்களை இன்பத்துடன் ஆற்றிக்கொண்டுள்ளேன்'' என்று கூறினர். அது கேட்ட அம்மக்கள், ''இத்துணை வாக்கு சாதுரியம் பெற்ற தாங்கள் ஒரு விடுதி வைத்திருந்தால் பெரிதும் நலமாயிருக்குமே'' என்று கூறினர். அதற்கு அம்மையார், ''ஆம்; நான் ஒரு விடுதி தானே வைத்துக் கொண்டுள்ளேன். அதில் உள்ளே உள்ளதை நான் வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. அதற்கு வெளியே உள்ளதை நான் அதன் உள்ளே வர அனுமதிப்பதில்லை. எவரேனும் அதன் உள்ளே நுழைந்து வெளியேறின் அவர்களைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. நான் என் இதயத்தையே பேணிப் பாதுகாத்துக் கொண்டுள்ளேன். மண்ணாங் கட்டியையல்ல'' என்று கூறினர். இவ்விதம் கூறியதன் மூலம் தங்களின் முழுக் கவனமும் இறைவனைப் பற்றியதாக உள்ளதேயன்றி உலகியல் விஷயங்களைப் பற்றியதாய் இல்லை என்பதை எடுத்துரைத்தார்கள்.

அதுகேட்டு அம்மக்கள் பெரிதும் வியப்புற்றவர்களாய் ''தாங்கள் இத்தகு பதவியை எவ்வாறு எய்தப் பெற்றீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''எனக்குச் சம்பந்தப்படாதவற்றைப் பற்றி அக்கரை செலுத்தாமலும், அல்லாஹ்வுடன் ஒன்றி இருப்பதையே அல்லும் பகலும் விரும்பிக் கொண்டிருப்பதாலுமேயாகும்'' என்று பதிலிறுத்தனர் அம்மையார். ''அவ்விதமாயின் தாங்கள் ஷைத்தானைப் பகைக்கின்றீர்களல்லவா?'' என்று வந்தவர்கள் வினவினர். அதற்கு அம்மையார், ''நான் இறை சந்நிதானத்திலேயே தஞ்சமாகக் கிடக்கும் பொழுது அதைப் பற்றி எண்ணிப் பார்ப்பதற்கே எனக்கு நேரமேது?'' என்று விடையிறுத்தனர்.

தம்மை மறந்து, தம் சூழலை மறந்து இறைவன் ஒருவனையே நினைந்து, அவனையே அல்லும் பகலும் அனவரதமும் வணங்கிக் கொண்டிருந்த ராபியா (ரஹ்) அவர்களின் கனவில் அண்ணலெம் பெருமான் முகம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் திருக்காட்சி வழங்கி, ''ராபியா! என்மீது நேசம் வைத்துள்ளாயா?'' என்று வினவிய பொழுது, ''எம் பெருமானே! தங்கள் மீது எவன் நேசம் கொள்ளாதிருக்க இயலும்? எனினும் என் செய்வது? இறைவன் மீது நான் கொண்டுள்ள அளப்பரும் நேசமானது வேறு எவர் மீதும் நேசமோ பகையோ கொள்ள எனக்கு நேரம் வழங்கவில்லையே'' என்று பதிலிறுத்தார்கள்.

அவர்களின் அயராப் பெருவணக்கத்தைக் கண்ட ஒருவர், ''தாங்கள் இவ்வணக்கத்தின் மூலம் எதனை எய்தப் பெற விரும்புகின்றீர்கள்?'' என்று அவர்களை வினவிய பொழுது, ''நான் என் வணக்கத்தின் மூலம் இறைமன்னிப்பைப் பெற விரும்பவில்லை. மறுமையில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மற்ற நபிமார்களிடம் என்னையும் என் வணக்கங்களையும் சுட்டிக்காட்டிப் பெருமிதமுற வேண்டும் என்று விரும்புகிறேன். அதன் காரணமாக இவ்வாறு வணங்கிக் கொண்டுள்ளேன்'' என்று விடையிறுத்தார்கள்.

ஒரு நாள் அவர்கள் ஒருவரிடம் பணம் கொடுத்துக் கம்பளி வாங்கி வருமாறு கூறினர். அவர், ''வெள்ளைக் கம்பளியா? கறுப்புக் கம்பளியா?'' என்று வினவினார். அடுத்த கணமே அம்மையார் அப்பணத்தை அவரிடமிருந்து பெற்று தஜ்லா நதியிலே எறிந்துவிட்டு ''இன்னும் கம்பளி வாங்கவில்லை. அதற்குள் வெள்ளையா, கறுப்பா என்ற பிரச்சினை எழுந்து விட்டது'' என்று கூறினர். நிறம் என்பது கட்புலனுக்கு உரியதாயிருப்பதால் அது உலகியலைச் சேர்ந்ததென்றும், எனவே தம் உடை கூட இறைவனை மறக்கடிக்க வழிகோலக் கூடாதென்றும் அவர்கள் விரும்பினார்கள்.

வசந்த ருதுவில் ஒரு நாள் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கிக் கண்களுக்குப் பெருவிருந்து வழங்கிக் கொண்டிருந்த காலை, அவர்களின் பணிப்பெண் ஒருவர்,* இல்லத்தில் வணக்கம் நிகழ்த்திக் கொண்டிருந்த ராபியா அவர்களிடம் ஓடோடி வந்து அந்த எழிலைக் கண்டு களிக்கச் சற்று வெளியே வருமாறு வேண்டிய பொழுது ''நான் படைப்பினங்களின் அழகைப் பார்க்க விரும்பவில்லை. அவற்றைப் படைத்தவனின் பேரழகைத் தான் பார்க்க விரும்புகிறேன்'' என்று பதில் கூறினர் அம்மையார். அவர்கள் இவ்வாறு கூறியதன் மூலம் ''இறைவனின் படைப்புகளிலே இறைவனின் பேரழகைப் பார்க்கிறோம்'' என்று கூறும் சூபிகளுக்கு மாறான கருத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள் என்பது நன்கு பெறப்படுகிறது.

---

* அவர்களின் பணிப்பெண்களும் சிறந்த சூபிகளாக விளங்கினர். அவர்களில் ஒருவரான மர்யம் பஸரீ என்பவர் ''உங்களுடைய இரணமும் உங்களுக்கு வாக்களிக்கப்பட்டதும் வானத்திலுள்ளன'' எனற திருவசனத்தைச் செவியுற்ற நாளிலிருந்து தாம் தம் உணவைத் தேட முயற்சியோ, கவலையோ கொள்ளவில்லை என்று கூறினார். இவர் இனற காதல் பற்றிச் சில சூபிகளுடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது உணர்ச்சி மீக்குற்று மூர்ச்சையுற்று இறப்பெய்தினார். மற்றொருவரான அப்தா எனபவரும் சிறந்த சூபியாவார். ராபியா (ரஹ்) அவர்களின் இறப்புத் தருணத்தில் அவர்களுடன் இருந்தவர் இவரே யாவார்.

அவர்களைச் சோதனைச் செய்யும் நோக்கத்துடன் சிலர் அவர்களை அணுகி, ''தாங்கள் எவ்வளவுதான் சிரமப்பட்டு வணக்கம் நிகழ்த்திய போதினும், தாங்கள் ஒரு பெண் தானே. ஆண்கள் அடையும் சாயுட்ச பதவியைப் பெண்களால் அடைய இயலுமா? அற்புதங்களைஆற்றும் ஆற்றலும் பெண்களுக்கு உண்டா? பெண்களில் எவரேனும் நபியாக வந்ததுண்டா? எனவே ஏன் தாங்கள் தங்களையே அதிகமான வணக்கங் களின் மூலம் வீணே சிரமத்திற்காளாக்கிக் கொள்கின்றீர்கள்?'' என்று வினவினர்.

அது கேட்ட அம்மையார், ''உண்மைதான். எனினும் எந்தப் பெண்ணாவது திமிர் பிடித்து 'அனா ரப்புகுமுல் அஃலா (நானே உங்களின் மேலான இறைவன் என்று ஃபிர்ஔன் சொன்னது போன்று) சொன்னதுண்டா? இல்லையே; ஆண்கள் தாமே அவ்விதம் கூறினர். எந்தப் பெண்ணாவது (ஆணோ, பெண்ணோ அல்லாத) அலியாகத் தோன்றியதுண்டா? இல்லையே; ஆண்கள் தாமே அவ்விதம் தோன்று கின்றனர்'' எனறு அவர்களுக்கு வாயாப்புக் கொடுத்தனர்.

இறைவனின் பேரருளில் அவர்கள் ஒரு போதும் அணுவத்தனையும் ஐயம் கொண்டதில்லை. ''ஒரு வாயிலை ஒருவன் இரவு பகலாகத் தட்டிக் கொண்டிருப்பின் அது எப்பொழுதாவது ஒரு நாள் திறக்கப்படும்'' என்று ஸாலிஹுல் மரிய்யி (ரஹ்) அவர்கள் கூறியதைக் கேட்ட ராபியா (ரஹ்) அவர்கள், ''அவ்விதம் தாங்கள் ஏன் கூறுகிறீர்கள்? அது எப்பொழுது மூடப்பட்டுள்ளது? பின்னர் திறப்பதற்காக அதனை முன்னர் எவன் மூடினான் என்று எனக்கு விளங்கவில்லையே. அது எப்பொழுதும் திறந்து தானே உள்ளது'' என்று கூறினர். அது கேட்ட ஸாலிஹுல் மரிய்யி (ரஹ்) அவர்கள், ''இத்தகு பெண் மேதையின் பேரறிவின் முன் என்போன்ற ஆண் பேதைகளின் அறிவு எம்மாத்திரம்'' என்று கூறி வாயார்ந்தார்கள்.

ஒருவர் அவர்களிடம் வந்து தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டிய பொழுது, ''உமக்காக இறைவனிடம் இறைஞ்சுவதற்கு நான் யார்? இறைவனுக்கு அடிபணிந்து ஒழுகுவீராக! அடியார்களின் இறைஞ்சுதலை ஏற்று அருள்பாலிக்க அவன் போதுமானவன்'' என்று அவர்கள் மொழிந்தார்கள்.

அவர்களின் இறைஞ்சுதலோ இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவ தாயிருந்தது. ஒரு தடவை அவர்கள் தானியம் விதைத்தார்கள். அது வளர்ந்து கதிர்விட்ட பொழுது வெட்டுக் கிளிகள் படையெடுத்து வந்து அவற்றை அழிக்க முற்பட்டன. அப்பொழுது அவர்கள், ''இறைவனே! என் உணவைப் பெறுவதற்காகப் பணத்தைச் செலவிட்டு இதனை விளைத்துள்ளேன். நீ விரும்பின் நான் இதனை உன் எதிரிகளுக்கோ

நண்பர்களுக்கோ உணவாக நல்கி விடுகின்றேன்'' என்று இறைஞ்சினர். அவர்கள் இறைஞ்சி முடிந்தது தான் தாமதம். அந்த வெட்டுக் கிளிகளெல்லாம் அவ்விடத்தை விட்டும் அகன்று விட்டன.

தங்களின் இம்மை வாழ்வுக்காக வேண்டி அவர்கள் இறைவனிடம் இறைஞ்சியதாக இது ஒன்றே வரலாற்றில் காணப்படுகிறது. வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. ஒரு தடவை அவர்கள் நோய்வாய்ப்பட்ட காலை ஹதீதுக்கலை விற்பன்னரான சுப்யான் அத்தௌரீ (ரஹ்) அவர்கள், அவர்களைக் காணச் சென்றபொழுது அவர்கள் நோயால்படும் துன்பத்தைக் கண்டு பொறாதவர்களாய், ''தாங்கள் தங்களுக்கு நலன் நல்குமாறு இறைவனிடம் இறைஞ்சுங்கள். அவன் தங்களுக்குப் பிணி நீக்கப் போதுமானவன்'' என்று கூறிய பொழுது, ''இது இறை கட்டளைப்படி எனக்கு ஏற்பட்டுள்ளது என்பதைத் தாங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களல்லவா?'' என்று வினவினர் அம்மையார். 'ஆம்' என்று சுப்யான் (ரஹ்) அவர்கள் விடையிறுத்ததும், இறைஞ்சுவது அவனுடைய கட்டளைக்கு மாறு செய்வதாகாதா? நண்பனுடைய விருப்பத்திற்கு மாறு செய்வது நண்பனுக்கு அழகாகுமா?'' என்று கூறினர் ராபியா.

இதன்பின் சுப்யான் அத்தௌரீ (ரஹ்) அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களை நோக்கி, ''தங்களுக்கு எப்பொருளின் மீதாவது ஆசை யுண்டா?'' என்று வினவினர். அதற்கு ராபியா (ரஹ்) அவர்கள், ''தாங்கள் அறிஞராக இருந்தும் இத்தகு கேள்வியை என்னிடம் கேட்கிறீர்கள். நல்லது; பதில் கூறுகிறேன். எனக்குப் பன்னிரண்டு ஆண்டு காலமாகப் புத்தம் புதிய பேரீத்தம் பழம் தின்ன வேண்டுமென்று ஆசையாக இருந்தது. எனினும் நான் அதனை அதற்கு வாங்கிக் கொடுக்கவில்லை. நானோ இறைவனுடைய அடிமை. அடிமைகள் தாமே ஒரு செயலை எண் ணவோ, விரும்பவோ அவர்களுக்கு என்ன உரிமையுள்ளது? எந்த ஒன்றை இறைவன் விரும்பவில்லையோ அந்த ஒன்றை நான் விரும்புவது இறைவனுக்கு மாறு செய்வதாகாதா? ஒருவன் இறைவனின் உண்மை யான அடியானாக இருப்பின் அவன் விரும்புவதைத் தானே இவனும் விரும்ப வேண்டும். இறைவனாகப் பார்த்து அவனுக்கு எதையேனும் கொடுப்பின் அது வேறு விஷயம்'' என்று பதிலுரைத்தனர்.

அது கேட்டுப் பெரிதும் வியப்புற்ற சுப்யான் (ரஹ்) அவர்கள் தமக்கு அறிவுரை நல்குமாறு வேண்ட ''தாங்கள் இவ்வுலகை மட்டும் ஆசைப்படாதிருப்பின் சிறந்த ஆண் மகனாக விளங்குவீர்கள்'' என்று கூறினர் ராபியா. அதனைத் தமக்கு விளக்கிக் கூறுமாறு சுப்யான் (ரஹ்) அவர்கள் வேண்ட, ''தாங்கள் நபிமொழிகளைப் பிறருக்கு எடுத்துரைக்க விரும்புகின்றீர்கள். அதுதான் தங்களின் உலக ஆசையாக உள்ளது'' என்று

கூறினர் ராபியா.* அதுகேட்ட சுப்யான் (ரஹ்) அவர்களுக்கு அழுகை, அழுகையாக வந்தது. ''இறைவனே! என் பவம் பொறுத்து என்னைப் பொருந்திக் கொள்'' என்று அவர்கள் இறைஞ்சினர். அப்பொழுது ராபியா (ரஹ்) அவர்கள், ''தாங்கள், எவன் தங்களைப் பொருந்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றீர்களோ, அவனை தாங்கள் தாமே பொருந்திக் கொள்ளாதிருக்கின்றீர்கள். அது தங்களுக்கு வெட்கமாக இல்லையா?'' என்று இடித்துரைத்தார்கள். அது கேட்ட சுப்யான் (ரஹ்) அவர்கள், ''இறைவனே! என்னை மன்னித்தருள்வாயாக'' என்று இறைஞ்சினார்கள்.

அப்பொழுது அங்கிருந்த ஜாபிர் இப்னு சுலைமான் என்பவர், ''ஒரு மனிதன் எப்பொழுது இறை திருப்தி கொண்டவனாகிறான்? அதற்கு அறிகுறி ஏதும் உண்டா?'' என்று வினவினார். அதற்கு அம்மையார், ''மனிதன் நல்லது நிகழ்ந்தால் மகிழவும், தீயது நிகழ்ந்தால் வருந்தவும் செய்வது இயல்பாக உள்ளது. அவன் நல்லது நிகழ்ந்தால் மகிழ்வது போன்று, தீயது நிகழ்ந்தாலும் மகிழ்ந்தால் தான் அவன் இறை திருப்தி கொண்டவன். ஏனெனில் இரண்டும் இறை தீர்ப்புகளேயாகும்'' என்று விடையிறுத்தார்கள்.

வேறொரு நாள் அவர்களின் சிறு குடிலுக்குச் சான்றோர் சிலர் வந்தனர். அப்பொழுது, ''இறைவனை நாம் எதற்காக வணங்குகின்றோம்'' என்பது பற்றி அவர்களிடையே பேச்சு எழுந்தது. அப்பொழுது ஒருவர், ஏழு நரகங்களிலுள்ள வேதனைகளைக் கேட்டு அஞ்சி, தாம் இறைவனை வணங்குவதாகக் கூற, மற்றொருவரோ தாம் எட்டு சுவனங்களிலுள்ள இன்பங்களைக் கேட்டு மகிழ்வுற்று அவற்றை எய்தப் பெறுவதற்காக இறைவனை வணங்குவதாக எடுத்துரைத்தார். அது கேட்ட ராபியா (ரஹ்) அவர்கள், ''நரக வேதனைகளுக்கு அஞ்சியோ, சுவன இன்பங்களுக்கு அவாவுற்றோ இறைவனை வணங்குவது இழிவுடைத்ததாகும்'' என்று கூறினர். அது கேட்டுத் திடுக்குற்ற அச்சான்றோர்கள், ''அவ்விதமாயின் தாங்கள் எதற்காக இறைவனை

* நபி மொழிகளை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்ற ஆசை, பொருள் ஆசை, பிள்ளை ஆசை ஆகியவற்றை விட அதிக வன்மையுடையதாக இருக்கிறதென்றும், அது இறைவனை நினைவு கூர்வதை விட மக்களுக்கு அதிகக் கவர்ச்சியை வழங்குகின்றதென்றும் மக்கள் தம்மைச் சூழ்ந்து நின்று நபிமொழிகளைக் கேட்க வேண்டுமென்று சுப்யான் (ரஹ்) அவர்கள் விரும்பா திருப்பின் அது எத்துணை நன்மையாக அவர்களுக்கு இருந்திருக்கும் என்று அவர்கள் கூறியதாகவும் மற்றொரு வரலாறு எடுத்துரைக்கிறது.

வணங்குகின்றீர்கள்?'' என்று வினவிய பொழுது, 'அல்ஜார் தும்மவ் தார்'* (முதலில் அயல் வீட்டுக்காரன், பின்னர் வீடு) என்று கூறப்படுவதாவ் நரகமும் சுவனமும் இருப்பதும் இல்லாதிருப்பதும் எனக்கு ஒன்றேயாம். இறைவனை வணங்குவது படைப்புகள் மீது கடமையாகும். அக்கடமையை, நரகமோ சுவனமோ இல்லாதிருப்பினும் உண்மையான அடியான் நிறைவேற்றியே தீர்வான்'' என்று கூறினர். அதன் பின் அவர்கள் தம்முடைய ஒரு கையில் நெருப்பையும், மற்றொரு கையில் தண்ணீரையும் எடுத்துக் கொண்டு தாம் சுவனத்தைத் தம் கையிலுள்ள நெருப்பால் சுட்டெரிக்கப் போவதாகவும் நரகத்தைத் தம் கையிலுள்ள தண்ணீரால் அவித்தொழிக்கப் போவதாகவும் அவ்விதம் செய்தால் தான் மக்கள் நரகத்திற்கு அஞ்சியோ சுவனத்தை விரும்பியோ இறைவனைத் தொழாமல் இறைவனுக்காக வேண்டியே, அவனை எய்தப் பெறுவ தற்காக வேண்டியே அவனைத் தொழுவர் என்றும் கூறினர்.

இவ்வாறு ஆண்டவனைப் பற்றியும் ஆன்மீக விஷயங்கள் பற்றியும் தங்களுக்கு ஏற்படும் ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறுவதற்காக ஆன்றோர்களும் சான்றோர்களும் அவர்களின் இல்லத்திற்கு வந்த வண்ணமிருந்தனர். ஒரு நாள் ரபாஹ் என்பவர் அவர்களை அணுகி, ''அல் அப்ராத் என்பவர் என்னிடம் வந்து, ''இறைவனைச் சந்திப்பதைப் பற்றிப் பேராவலுடன் உள்ளீரே. உமக்கு இரவும் பகலும் ஓடாது நீளமாக தோன்றுகின்றனவா என்று வினவினார்'' எனக் கூறினார். ''அதற்கு நீர் என்ன பதில் கூறினீர்?'' என்று கேட்டனர் ராபியா. ''நான் ஒன்றும் பதில் கூறவில்லை. 'ஆம்' என்றால் பொய்யாகி விடும். அல்ல என்று கூறினால் அது என் ஆன்மாவைத் தாழ்மைப்படுத்தியதாகி விடும்'' என்று கூறினார் ரபாஹ். அது கேட்ட ராபியா, ''அதற்கு என் பதில் 'ஆம்' என்பதுதான் என்று திடமாக மறுமொழி பகர்ந்தனர்.

---

* இதற்கு இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் இஹ்யாவில் விளக்கம் கூறுங்கால், ''எவன் இவ்வுலகில் இறைவனை அறியவில்லையோ அவன் அவ்வுலகில் இறைவனைக் காண மாட்டான் என்றும் எவன் இவ்வுலகில் இறைவனை நேசிக்கவில்லையோ அவன் அவ்வுலகில் இறைவனின் நேசத்தைப் பெற மாட்டான் என்றும் இங்கு அவன் விதைக்காததை அங்கு அவன் அறுவடை செய்ய மாட்டான் என்றும் சுவனத்தைத் தாம் விரும்பவில்லை என்றும், சுவனத்தின் எசமானனையே தாம் விரும்புவதாகவும் அவர்கள் இதன் மூலம் கூறியதாக எடுத்துரைக்கின்றார்கள்.

இதைப் பற்றிப் பிற்காலத்தில் ஒருவர் விளக்கம் கூறுங்கால், ''இறைவனே! நான் உன்னோடிருக்க சுவனத்தில் ஓர் இல்லம் அமைத்துத் தா'' என்று ஃபிர்அவ்னின் மனைவி ஆசியா அம்மையார் இறைஞ்சியதையும், ''உன்னுடைய திருப்பொருத் தத்தையும், சுவனத்தையும் நான் வேண்டுகின்றேன்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதையும் சான்று காட்டி எனவேதான் வீட்டுக்கு முன் அயல் வீட்டுக் காரன் என்று ராபியா (ரஹ்) அவர்கள் கூறியதாக இயம்புகின்றார்.

ஓர் இரவு சுப்யான் அத் தௌரீ (ரஹ்) அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களைக் காணச் சென்ற பொழுது, அவர்கள் தொழுது கொண்டிருந் தார்கள். தொழுது முடித்ததும் அவர்கள் தம் பக்கல் திரும்புவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த சுப்யான் (ரஹ்) அவர்களுக்குப் பெரிதும் ஏமாற்றம் ஏற்பட்டது; காரணம், ராபியா (ரஹ்) அவர்கள் வைகறை வரைத் தொழுது கொண்டிருந்தார்கள். பின்னர் இரவு முழுவதும் தாம் நின்று தொழுவதற்குப் பேரருள் புரிந்தானே, அந்த இறைவனுக்குத் தாம் எவ்வாறு கைம்மாறு செய்வது என்று கூறிய அவர்கள் அன்று முழுவதும் நோன்பு நோற்கலாயினர். அப்பொழுது அவர்கள், ''இறைவனே! நீ எனக்கு இவ்வுலகில் என்னென்ன நன்மைகள் வழங்க வேண்டுமென்று விரும்புகின்றாயோ அவை அனைத்தையும் உன் எதிரிகளுக்கு வழங்கு. அவ்வுலகில் எனக்கு என்னென்ன நன்மைகள் வழங்க வேண்டுமென்று விரும்புகின்றாயோ அவை அனைத்தையும் உன் நண்பர்களுக்கு வழங்கிவிடு. எனக்கோ நீ மட்டும் போதுமானவனாவாய்.

''இறைவனே! இவ்வுலகில் என்னுடைய கவலை, விருப்பம் ஆகியவை அத்தனையும் இவ்வுலகப் பொருள்கள் அனைத்தையும் விட உன்னை அதிகமாக மதிக்க வேண்டும் என்பதும், அவ்வுலகில், அவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் மேலாக உன்னைத் தனித்துச் சந்திக்க வேண்டும் என்பதுமேயாகும். என் விருப்பத்தை நான் எடுத் துரைத்து விட்டேன். இனிமேல் உன் விருப்பம் எதுவோ அதனைச் செய்.

''இறைவனே! என்னுடைய உள்ளத்தில் நான் பேணிப் பாதுகாக்கும் எண்ணம் உன்னைப் பற்றிய நினைவேயாகும். என் நாவிற்கு இனிமை வழங்கும் சொற்கள் உன் புகழ்மொழிகளேயாகும். நான் விரும்பும் நேரம் உன்னோடு தனித்திருக்கும் நேரமேயாகும்.

''இறைவனே! இவ்வுலகில் உன்னை நினையாது ஒரு கணமும் என்னால் உயிர் வாழ இயலாது என்றால் அவ்வுலகில் உன்னுடைய திருக்காட்சியைக் காணப் பெறாது எவ்வாறு என்னால் பொறுமையுடன் இருக்க இயலும்? நானோ உன்னுடைய நாட்டில் ஓர் அந்நியன்; உன்னை வணங்குபவரில் தனித்தவன்.

''இறைவனே! என்னை வெற்றி வீரரின் கைவாளாக ஆக்காதே. அதற்குப் பதிலாகக் குருடர்களுக்கு வழி காட்டும் கைக்கோலாக என்னை ஆக்குவாயாக! வீரர்கள் தங்களின் அதிகார முத்திரைக் கோலைச் செய்யும் பெருமரமாக என்னை ஆக்காதே. அதற்குப் பதிலாக ஏழை வழிப் போக் கருக்கு வழியில் நிழல் வழங்கும் சாதாரண மரமாக என்னை ஆக்குவாயாக!

''இறைவனே! நான் நரக நெருப்பிற்கு அஞ்சி உன்னை வணங்கு வேனாயின் என்னை என்றென்றும் நரக நெருப்பில் வேகுமாறு செய்.

நான் சுவன இன்பங்களை விரும்பி உன்னை வணங்குவேனாயின் சுவனத்தின் வாயில்களையே நீ எனக்கு என்றென்றும் மூடிவிடு. ஆனால் நான் உன்னை உனக்காக வேண்டியே வணங்கின் உன்னுடைய அழகுத் திருக்காட்சியை எனக்குக் காட்டுவதற்கு மறுத்து விடாதே'' என்று இறைஞ்சினர்.

அவர்கள் இறைவனை இறைவனுக்காக வேண்டியே வணங்கினார்கள். வேறு எக்காரணத்தை முன்னிட்டும் வணங்கவில்லை. எனவே தான் ஒரு தடவை அவர்கள் நோய்வாய்ப்பட்ட பொழுது அதற்கான காரணம் யாது என்று ஒருவர் அவர்களிடம் வினவியக்கால், ''நான் வைகறைத் தொழுகையின் போது சுவன இன்பத்தை விரும்பினேன். அது கண்டு என் நண்பன் என் மீது சினமுற்று இந்நோயை எனக்கு அனுப்பி வைத்துள்ளான்'' என்று அவர்கள் பதிலிறுத்தனர்.

ஒரு தடவை அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெரும! நான் இவ்வுலகையும், இவ்வுலகிலுள்ள பொருள்களையும் விட்டு வெருண்டோடினேன். என்னுடைய குறிக்கோளெல்லாம் உன்னுடன் ஒன்றுபட்டுவிட வேண்டுமென்பதேயன்றி வேறில்லை'' என்று இறைஞ்சினார்கள்.

மேலும் அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவனே! நீ அனைத்து ரகசியங்களையும் நன்கு அறிவாய். என்னுடைய விரோதிகளின் உலக ஆசைகளையும் நீ நிறைவேற்றுகிறாய். என்னுடைய நண்பர்களுக்கு நிரந்தரமான மறுமைப் பெருவாழ்வையும் வழங்கினாய். என்பற்றிய வரையில் நான் அவ்விரண்டையும் விரும்பவில்லை. நான் இம்மையின் இன்ப சுகங்களையோ மறுமையின் பேரின்பப் பெருவாழ்வையோ விரும்பவில்லை. நான் உன் அருகில் இருப்பதோடு அவற்றை ஒப்பு நோக்கின் அவை அணுவத்தனையேயாகும். எனவே நான் உன்னையே விரும்புகிறேன். எனக்கு நீ தான் வேண்டும். நான் இம்மையையோ மறுமையையோ கடைக் கண்ணால் பார்த்தால் கூட, உன்னைத் தவிர வேறொன்றை நான் அவாவுற்றால் கூட, நான் ஒரு நிராகரிப்பவனே (காஃபிரே) அன்றி வேறில்லை.

மற்றொரு தடவை அவர்கள் இறைஞ்சுங்கால், ''இறைவனே! உன்னை இத்துனை உத்தண்டமாகக் காதலிக்கும் என் இதயத்தை நெருப்பால் சுட்டெரிந்து விடு'' என்று கூறினர். அப்பொழுது அசரீரி ஒன்று, ''நாம் அவ்விதம் செய்ய மாட்டோம், எம்மை இழிவாகக் கருதாதே'' என்று முழங்கியதை அவர்கள் செவியுற்றார்கள்.

ஒரு நாள் ராபியா (ரஹ்) அவர்களைக் காணச் சென்ற ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், ராபியா (ரஹ்) அவர்களை நோக்கி, ''தாங்கள் படித்தோ,

கேட்டோ அறியாது உள்ளுணர்வால் அறிந்த செய்தி ஏதேனும் ஒன்றைக் கூறுவீர்களாக'' என்று கூறினார். அப்பொழுது ராபியா (ரஹ்) அவர்கள், ''நான் நூற்ற சில நூற்கண்டிகளை ஒருவனிடம் விற்றேன். அவன் அவற்றைப் பெற்றுக் கொண்டு என்னிடம் இரண்டு திர்ஹங்கள் கொடுத்தான். அவற்றை ஒரே கையினால் வாங்கினால் அவை சோடியாகி விடும்; அவ்விதம் வாங்குவது இறைவனுக்கு இணை வைப்பது போன்றாகிவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக ஒரு திர்ஹத்தை வலக்கரத்திலும், மறு திர்ஹத்தை என் இடக்கரத்திலும் தருமாறு அவனிடம் கூறினேன். அவனும் அவ்விதமே தந்தான். அஃது எனக்கு இதுவரையிலும் மனத்திற்குப் பீதியை அளித்துக் கொண்டுள்ளது'' என்று கூறினர்.

அவர்கள் அற்புதம் நிகழ்த்துவதை அற்பமாகக் கருதினார்கள். ஒரு நாள் மக்கள் அவர்களை அணுகி, மனிதன் நீர் மேல் நடப்பதும், விண் மீது பறப்பதும் இறையண்மையை எய்தி விட்டதன் அடையாள மல்லவா?'' என்று வினவிய பொழுது, ''அல்ல; அல்ல. அவை அற்பமான மீனும் ஈயும் செய்யக் கூடியவையாகும். ஆனால் உண்மையான ஆன்மீக உச்சம் இவ்விரண்டுக்கும் அப்பாற்பட்டதாகும்'' என்று விடையிறுத்தனர்.

பிறர் தம்மைக் காண வருவது தம்முடைய இறைவணக்கத்தில் குறுக்கிடுவதேயாகும் என்று அவர்கள் கருதினர். ஓரிரவு சுஃப்யான் தௌரீ (ரஹ்) அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களைக் காண்பதற்காக அவர்களின் இல்லம் வந்தனர். இரவு முழுவதும் அவர்கள் பற்பல இறைஞான இரகசியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். வைகறைக்கு பாங்கு சொன்ன பொழுது பள்ளி செல்ல எழுந்த சுப்யான் தௌரீ அவர்கள், ''இன்றிரவு நல்லவிதமாகக் கழிந்தது'' என்று ராபியா (ரஹ்) அவர்களை நோக்கிக் கூறினர். அப்பொழுது அவர்கள், ''இல்லை, தாங்களோ எனக்கு விருப்பமான செய்திகளைக் கூற முயன்று கொண்டிருந்தீர்கள். நானோ தங்களுக்கு விருப்பமான செய்திகளைக் கூற முயன்று கொண்டிருந்தேன். இறை தியானத்தில் ஈடுபடாது நாம் இருவரும் இவ்விதம் நேரத்தைக் கழித்தோம். அதற்கு மாறாக நான் மட்டும் தனித்து இறை தியானத்தில் ஈடுபட்டிருந்தால் எவ்வளவோ நன்மையாக இருந்திருக்கும்'' என்று இயம்பினர்.

ஒரு நாள் ஸுல்ஃபா, அவர்களை நோக்கி, ''அத்தையே தாங்கள் ஏன் மக்கள் தங்களைச் சந்திக்க அனுமதிக்கின்றீர்களில்லை'' என்று வினவிய பொழுது, ''நான் இறந்ததும் மக்கள் நான் செய்யாததையும் சொல்லாததையும் நான் சொன்னதாகவும் செய்ததாகவும் கூறுவார்களோ என்று நான் அஞ்சுகின்றேன். என்னுடைய தொழுகை விரிப்பின் கீழிருந்து எனக்குப் பணம் அற்புதமாகக் கிடைக்கிறது என்றும், மக்கள் பேசிக் கொள்வதாக இப்பொழுதே கேள்விப்படுகின்றேனே. நான் இறந்த பின்

என்னென்ன என்னைப் பற்றிப் பேசிக் கொள்வார்களோ அறியேன்'' என்று அவர்கள் கூறினார்கள்.

அதற்கு ஸுல்ஃபா, ''ஆம்; தங்களின் இல்லத்தில் அற்புதமாக உணவும் தண்ணீரும் கிடைக்கின்றனவென்று மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது என் காதிலும் விழுந்தது'' என்று கூறிய பொழுது ''என் சகோதரரின் மகளே! என் இல்லத்தில் அவை தாமாகவே கிடைக்கப் பெறின் அவற்றை நான் தீண்டியும் பார்த்திருக்க மாட்டேன். உண்மையில் நான் எனக்குத் தேவையான பொருட்களை விலை கொடுத்து வாங்கியே பயன்படுத்துகின்றேன்'' என்று அவர்கள் கூறினர்.

தம்மை மக்கள் ஒரு வலி (இறைநேசச் செல்வி) என்று எண்ணிக் கொள்வதையே அவர்கள் விரும்பவில்லை. அதில் தாங்கள் திருப்தியுற்று விடின் தங்களின் இறைத் தொண்டு பாழாகி விடுமே என்று அவர்கள் அஞ்சினார்கள். ''தங்களை மக்கள் வலி என்று ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஏதேனும் அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளீர்களா?'' என்று ஒருவர் அவர்களிடம் வினவிய பொழுது, ''ஏதேனும் அற்புதம் தானாகவே நிகழ்ந்திருப்பின் அதனால் எனக்குப் பெரும் புகழும் பெருமதிப்பும் ஏற்பட வழிகோலுமோ எனறு நான் அஞ்சுகின்றேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தனர்.

இவ்வித மனோநிலையுடன் வாழ்ந்த அவர்களிடம் ஒருவர் வந்து தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டிய பொழுது, ''உம்முடைய தீச் செயல்களை எவ்வாறு பிறரின் கண்களிலிருந்து மறைப்பீரோ, அவ்வாறே உம்முடைய நற்செயல்களையும் பிறரின் கண்களிலிருந்து மறைப்பீராக!'' எனறு அவர்கள் நவின்றார்கள்.

ஒரு நாள் ராபியா (ரஹ்) அவர்கள் மலை மீது ஏறி அங்கு ஓரிடத்தில் அமர்ந்த பொழுது வன வாழ் விலங்குகள் அவர்களின் அருகே வந்தமர்ந்து அவர்களின் பாதங்களைத் தம் நாவால் நக்கி தம் அன்பைத் தெரிவித்தன. அப்பொழுது ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ராபியா (ரஹ்) அவர்களைத் தேடி அங்கு வந்த பொழுது, அவர்களைச் சூழ வீற்றிருந்து மௌன மொழிகளால் உரையாடிக் கொண்டிருந்த மிருகங்களெல்லாம் ஓடி விட்டன. அப்பொழுது ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ராபியா பஸரீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''ஏன் அவை அனைத்தும் என்னைக் கண்டதும் ஓடி விட்டன?'' என்று வியப்புடன் வினவிய பொழுது, ''தாங்கள் இன்று என்ன உண்டீர்கள்?'' என்று வினவினார்கள் ராபியா. அதற்கு ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் ''இறைச்சி'' என்று ஒரு சொல்லில் மறுமொழி பகர்ந்ததும், ''தாங்கள் அவற்றின் இறைச்சியை உண்பதால் அவை தங்களுக்குப் பயந்து ஓடி விட்டன. நான் காய்ந்த ரொட்டியையும் காய்கறிகளையுமே

உண்பதால் அவை என்னை நேசித்து என் அருகில் வந்து அமர்ந்திருந்தன' என்று தம்முடைய மாண்பினை மறைத்துக் கூறினர் அம்மையார்.

இவ்வாறு கூறியதோடல்லாது தம்முடைய மகாத்மியத்தையும் மக்களின் கண்களிலிருந்து மறைத்து, எளியார்க்கு எளியாராய் இலை மறை காய்போல் வாழ்ந்து வந்த அவர்கள் இறை திருவசனங்களைத் தவிர்த்து வேறொன்றையும் தம்முடைய நாவில் இடம் பெறச் செய்வ தில்லை என உறுதி பூண்டு அவ்விதமே தாம் இறக்கும்வரை - நாற்பதாண்டு காலம் - அவ்வுறுதி காத்து வந்தனர்.

ஒரு தடவை அவர்கள் ஹஜ்ஜுச் செய்துவிட்டு மதினா செல்லும் வழியில் ஒரு வெளியில் அமர்ந்திருக்குங்கால், அவர்களை அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் சந்தித்தனர். அப்பொழுது அவர் களிடையே பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது.

அப்துல்லாஹ் : அஸ்ஸலாமு அலைக்கும்.

ராபியா : ஸலாமுன் கௌலுன் மின்ரப்பிர் ரஹீம் (நிகரற்ற அன்புடைய இறைவனால் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!)

அப்துல்லாஹ் : இறைவன் தங்கள் மீது பேரருள் பாலிப்பானாக! தாங்கள் இவ்விடத்தில் அமர்ந்து என்ன செய்கின்றீர்கள்?

ராபியா : 'இறைவன் எவனை வழிதவறச் செய்து விடுகின் றானோ அவனுக்கு வழி காட்டுவோர் எவருமிலர்' என்ற திருக்குர்ஆன் வசனத்தை ஓதினர்.

அப்துல்லாஹ் : (அவர்கள் வழி தவறி வந்துவிட்டார்கள் என்று எண்ணிக் கொண்டு) 'தாங்கள் எங்குச் செல்கிறீர் கள்?'

ராபியா : சுப்ஹானல்லதீ அஸ் ரா பி அப்திஹீ லய் லன் மினல் மஸ்ஜிதில் ஹராமி இலல் மஸ்ஜிதில் அக்ஸா (தன் அடியாரை மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு ஓர் இரவில் கொண்டு சென்ற இறைவன் தூய்மையானவன்.'

அப்துல்லாஹ் : (அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவுக்குச் செல்கின் றார்கள் என்பதை விளங்கிக் கொண்டு), 'தாங்கள் எத்தனை நாட்களாக இங்கு வீற்றிருக்கிறீர்கள்?'

ராபியா : தவாத லயாலின் ஸவிய்யா (மூன்று முழு இரவு களாக)

அப்துல்லாஹ் : தங்களிடம் உணவொன்றையும் காணோமே. தாங்கள் என்ன உணவருந்துகின்றீர்கள்?

ராபியா : ஹுவ யுத்இமுனீ வ யஸ்கீன் (அவனே எனக்கு உணவும் நீரும் வழங்குகிறான்.)

அப்துல்லாஹ் : தாங்கள் உளூச் செய்து தொழ இங்குத் தண்ணீர் கிடைத்ததா?

ராபியா : பலம் தஜிதூ மா அன்ப தயம்மமூ ஸயீ தன்தையிபன் (இன்னும் உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிடின் தூய மண்ணினால் தயம்மம் செய்து கொள்ளுங்கள். இத் திருவசனத்தைக் கூறித் தாம் தயம்மம் செய்து தொழுது வருவதாக அவர்கள் உணர்த்தினர்.)

அப்துல்லாஹ் : "என்னிடம் உணவுள்ளது. உண்கின்றீர்களா?"

ராபியா : தும்ம அதிம் முஸ்ஸியாம இலல்லைலி (பின்னர் இரவு வரை நோன்பை நிறைவு செய்யுங்கள்.)

அப்துல்லாஹ் : இது ரமலான் திங்களல்லவே.

ராபியா : பமன் தததவ்வ அ கைரன் ப இன்னல் லாஹ ஷாகிருன் அலீம். (நபிலாக எவர் நற்செயலை ஆற்றிய போதினும் இறைவன் அதனை ஏற்றுக் கொள்கிறான்; தெரிந்து கொள்கிறான்.)

அப்துல்லாஹ் : பயணத்தில் நோன்பு நோற்க வேண்டியதில்லையே.

ராபியா : வஅன் தஸூமூ கைருல் லகும் இன்குன் தும் தஃலமூன் (நீங்கள் அறிவீர்களாயின் நோன்பு நோற்றல் உங்களுக்கு நன்மையேயாகும்.)

அப்துல்லாஹ் : நான் தங்களை என் ஒட்டகையின் மீது ஏற்றிச் செல்கிறேன், வருகிறீர்களா?

ராபியா : வமா தப்அலூ மின் கைரின் யஃலம் ஹுல்லாஹு (மேலும் நீங்கள் நற்செயல் ஆற்றின் அதனை அல்லாஹ் அறிகிறான்.)

அப்துல்லாஹ் : "வாருங்கள்; என் ஒட்டகத்தை அமரச் செய்துவிட்டேன்."

ராபியா : குல் லில் முஃமினீன யகுல்லூர மின் அப்ஸாரிஹிம் (உங்களின் கண்களை மூடிக் கொள்ளுங்கள் என்று இறை நம்பிக்கையாளரிடம் கூறும்.)

அது கேட்ட அப்துல்லாஹ் இப்னு முபாரக் கண்களை மூடிக் கொண்டு, "ஏறிக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அவ்வாறே

ஒட்டகையின் மீது ராபியா ஏறிக் கொண்டதும் ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்துக் கொண்டு வேகமாகச் செல்லவும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யவும் செய்தனர் அப்துல்லாஹ். அது கண்ட ராபியா, 'வக்ரவூ மாதயஸ்ஸர மினல் குர்ஆன்' (குர்ஆனிலிருந்து வேண்டுமளவு ஓதுங்கள்) என்ற இறைவசனத்தைக் கூறினர். அவ்விதமே திருக்குர்ஆனை இனிய குரலெடுத்து ஓதிய அப்துல்லாஹ், ''தங்களுக்கு இறைவன் மேலான தகுதியை வழங்கியுள்ளான்'' என்று ராபியா (ரஹ்) அவர்களிடம் கூற அது கேட்ட அவர்கள், 'வமாயத் தக்கரு இல்லா உலுல் அல்பாப்' (அறிவுள்ளோரையன்றி வேறு எவரும் அதனை அறிவதில்லை) என்ற திரு மறையின் திருவசனத்தை அதற்கு விடையாகப் பகர்ந்தனர்.

ஆம். அவர்களின் மாண்பினைப் பலர் அறியவில்லை தான். எனினும் அல்லாஹ் அறிந்தான். அறிந்து அவர்கள் மீது தன் அருள் மழையைச் சொரிந்தான்.

ஹிஜ்ரி 95-ஆம் ஆண்டில் பிறந்த ராபியா தொண்ணூறு வயது வரையில் இவ்வுலகில் வாழ்ந்து இறைவனைத் தொழுது, தொழுது தம் வாழ்வைப் பொன் வாழ்வாக ஆக்கிப் பொலிவுறச் செய்தார்கள். அதன் பின் அவர்கள் பொன்னுலகை அடையும் காலமும் அண்மியது. வயதேற, ஏற உடலம் மெலிய மெலிய நோயின் கொடும்பிடியில் அகப்பட்டுத் தத்தளித்த அவர்கள், ஒரு நாள் (அது ஹிஜ்ரி 185-ஆம் ஆண்டில் ஒரு நாளாக இருந்தது) தம்மைச் சூழ வீற்றிருந்தவர்களை நோக்கி, ''இறை தூதுவர்களான வானவர்கள் வருவதால் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே போகுமாறு கூறினர். அவர்களும் அவ்வாறே செய்தனர். அப்பொழுது ராபியா (ரஹ்) அவர்கள் இஸ்லாத்தின் திருக்கலிமாவை முழங்கியது அவர்களின் செவிப்பட்டது. அதன் பின், ''யா அய்யுஹன் னப்ஸு முத்ம இன்ன துர்ஜியீ இலா ரப்பிக ராழியத்தன் மர்ழிய்யா. ஃபத்ஹுலீ ஃபீஇபாதீ வத்ஹுலீ ஜன்னத்தீ (திருப்தியடைந்த ஆன்மாவே! நீ உன் இறைவன் பால் செல். அவனைக் கொண்டு நீ திருப்தியுறு. உன்னைக் கொண்டு அவன் திருப்தி கொண்டுள்ளான். நீ என்னுடைய நல்லடியார்களில் சேர்ந்து என்னுடைய சுவனபதியிலும் நுழைந்து விடு'' என்ற குரல் முழங்குவதையும் அவர்கள் செவியுற்றார்கள். சற்று நேரம் கழித்து அவர்கள் கதவைத்திறந்து கொண்டு உள்ளே சென்று பார்த்த பொழுது இறைநேசச் செல்வி ராபியா (ரஹ்) அவர்கள் தம் மண்ணுலக வாழ்வின் கதவைச் சாத்திக் கொண்டு விண்ணுலகு எய்திவிட்டது தெரிய வந்தது.*

---

* அவர்களின் கஃபன் துணி அவர்களின் வணக்க இடத்தில் எப்பொழுதும் அவர்களின் கண்களில் படும் வண்ணம் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்ததென்று ஒருவர் கூறுகிறார். அவர்களின் இறப்பு நேரம் அண்மியதும் அவர்கள் தம் பணிப்

பின்னர் ஒரு நாள் அவர்களைக் கனவில் ஒருவர் கண்டு, ''தங்களிடம் முன்கர், நக்கீர் வந்து, 'உம்முடைய இறைவன் யார்?' என்று வினவிய பொழுது தாங்கள் என்ன மறுமொழி பகர்ந்தீர்கள்?'' என்று கேட்ட பொழுது, ''நீங்கள் இறைவனிடம் திரும்பிப் போய் 'நீ ஆயிரக்கணக்கான படைப்பினங்களைப் படைத்திருந்த போதினும் இந்தப் பலவீனமான கிழவியை மறக்கவில்லை. நான் உலகம் அனைத்தையும் விட உன்னையே நேசித்தேன். அவ்விதமிருக்க, நான் உன்னை எவ்வாறு மறப்பேன். ஆனால் நீயோ என் இறைவன் யார் என்று என்னிடம் கேட்க எவரையோ அனுப்பியிருக்கிறாய். இதற்குக் காரணம் என்னவென்று எனக்கு விளங்கவில்லையே' என்று நான் கேட்டதாக அவனிடம் கூறுங்கள் என்று அந்தப் பையன்களிடம் சொன்னேன். அவர்களும் என்னிடம் யாதொன்றும் வினவாது சென்று விட்டனர்'' என்று பதிலிறுத்தார்கள்.

ஆம்; இறைகாதலில் மூழ்கித் திளைத்த அவ்வம்மையாரிடம் ''உம் இறைவன் யார்?'' என்று மீண்டும் வினவ அந்த வானவர்களுக்குத் திறனும் ஏது? திராணியும் ஏது?

---

பெண் அப்தாவை நோக்கி, "அப்தா! நான் இறந்ததும் என் இறப்புச் செய்தியை எவரிடமும் கூறாது என்னை என்னுடைய கம்பளியுடையுடனும் துண்டுடனும் வைத்து நல்லடக்கம் செய்து விடு'' என்று கூறிய வண்ணம் அவர் செய்தார் என்றும் பின்னர் ஓராண்டு கழித்து அவரைக் கனவில் கண்ட பொழுது அவர்கள் தங்கச் சரிகையாலான பச்சைப் பட்டு உடுத்தி இருப்பதைக் கண்டு வியப்புற்று, ''தாங்கள் அடக்கம் செய்யப்பட்ட பொழுது அணிந்திருந்த உடைகள் எங்கே'' என்று வினவியபொழுது, ''அவை கழற்றப்பட்டு வானவர்களால் முத்திரையிடப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன' 'என்று அவர்கள் பதிலிறுத்தனர். "இதற்காகவா தாங்கள் இவ்வுலகில் இத்துணை வணக்கம் நிகழ்த்தினீர்கள்?'' எனறு அப்தா வினவிய பொழுது, "இறைவன் தன் நல்லடியார்களுக்கு நல்கி இருக்கும் அருட்பேறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இது எம்மாத்திரம்?'' என்று அவர்கள் விடையிறுத்தனர். அதன் பின் அப்தா, அவர்களை நோக்கி, ''உபைதாவின் நிலை எவ்வாறு உள்ளது?'' என்று வினவிய பொழுது, ''அவர் எங்களையெல்லம் விட மிகவும் உச்ச நிலையை எய்திவிட்டார்'' என்று மறுமொழி பகர்ந்தனர். அது கேட்ட அப்தா, ''இவ்வுலகில் தாங்கள் தாமே அவரைவிடச் சிறந்தவராகக் கருதப்பட்டீர்கள்?'' அவ்விதமிருக்க, அவர் அத்தகு பதவியை எவ்வாறு எய்தப் பெற்றார்? என்று வினவிய பொழுது, "அவர் உலகில் இரவென்றும், பகலென்றும் தெரியா நிலையில் இருந்து வணக்கம் நிகழ்த்தினார். அதன் காரணமாக அவர் அந்நிலையை எய்தப் பெற்றார்'' என்றனர் ராபியா. இறையண்மையை எய்தப் பெறுவதற்குத் தமக்கு ஒரு வழியைக் காட்டித் தருமாறு அப்தா வேண்ட, 'இறைவனை இடைவிடாது தியானித்துக் கொண்டிரு' என்றனர் ராபியா. இவ்வாறு வேறொரு வரலாறு கூறுகிறது.

ராபியாவின் ஆன்ம நலனிற்காக இறைஞ்சி வந்த ஒருவர் அவர்களைக் கனவில் கண்ட பொழுது, அவரின் இறைஞ்சுதல் ஒளிமயமான தட்டுகளில் வைக்கப்பட்டு ஒளிமயமான மூடிகளால் மூடப்பட்டுத் தம்முன் கொணரப்படுவதாக அவர்கள் கூறியதாக மற்றொரு வரலாறு எடுத்துரைக்கிறது.

# 7. அப்துல் வாஹித் இப்னு ஸைத் (ரஹ்)

ஒரு நாள் நானும் ஐயூப் ஸஹ்த்தியானியும் ஒரு வழியே சென்று கொண்டிருந்தோம். ஒரு நீக்ரோ அடிமை தலையிலே விறகுக் கட்டு ஒன்றைச் சுமந்த வண்ணம் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தார். நான் அவரை நோக்கி, ''உம் இறைவன் யார்?'' என்று வினவினேன். அது கேட்ட அவர், ''என்னிடமா இக்கேள்வியைக் கேட்கிறீர்?'' என்று வியப்பு மொழி பகர்ந்தவராகத் தம் தலையிலிருந்த விறகுக் கட்டைக் கீழே இறக்கி வைத்து, விண்ணை நோக்கித் தம் கண்களை உயர்த்திய வண்ணம் ''படைப்பவனே! (காலிகே!) இந்த விறகுக் கட்டுகளைப் பொன்னாக ஆக்கியருள்வாயாக!'' என்று இறைஞ்சினார். அடுத்த கணம் அது பொன்னாக ஆகி விட்டது.

அப்பொழுது அவர் எங்களை நோக்கி, ''இதனை நீங்கள் பார்க்கிறீர்களா?'' என்ற வினவினார். அதற்கு நாங்கள் ''ஆம்'' என்றோம்.

உடனே அவர் மீண்டும் தம் கண்களை விண்ணை நோக்கி உயர்த்திய வண்ணம் ''படைப்பவனே! (காலிகே!) இந்தப் பொன்னை நீ மீண்டும் விறகாக்கியருள்வாயாக!'' என்று இறைஞ்சினார். நொடியில் அது விறகாகி விட்டது.

பின்னர் அவர் எங்களை நோக்கி, ''அல்லாஹ்வின் நல்லடியார்களிடம் எதையாவது கேட்டுக் கொண்டே இருங்கள். அவர்களின் அற்புதங்களுக்குக் குறைவில்லை'' என்று கூறினார்.

இப்பொழுது எங்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் வெட்கத்திற்கும் அளவில்லை.

நாங்கள் அவரை நோக்கி, ''எங்களுக்குப் பசியாக இருக்கிறது. தங்களிடம் ஏதாவது உணவிருக்கிறதா?'' என்று வினவினோம்.

உடனே அவர் தம் கையால் சமிக்ஞை செய்தார். ஒரு தட்டு எங்களின் முன் வந்து அமர்ந்தது. அதில் தேன் இருந்தது. அந்தத் தேன் பனிக் கட்டியை விட வெண்மையாகவும், கஸ்தூரியை விட மணமுள்ளதாகவும் இருந்தது.

அப்பொழுது அவர் எங்களை நோக்கி, ''இதனை நீங்கள் உண்ணுங்கள். இது ஈக்களின் வயிற்றிலிருந்து கிடைக்கும் தேனல்ல'' என்று கூறினார்.

நாங்கள் அதனை உண்டோம். அதைப் போன்று இனிமையான ஒன்றை நாங்கள் இதற்கு முன் உண்டதே இல்லை. அதனை உண்டு எங்களின் நாவும் உளமும் ஒருங்கு சேர்ந்து இனித்தன. எங்களின் வியப்பை எங்களின் முகக்குறியால் விளங்கிக் கொண்ட அவர், ''இத்தகு அற்புதச் செயல்களைக் கண்டு வியப்புறுவோர் மெய்ஞ்ஞானிகளாக மாட்டார்கள். ஒருவர் இவற்றைக் கண்டு வியப்புற்றால், அவர் இறைவனை விட்டும் தொலைவிலாகி விடுவார். ஒருவர் இவற்றைக் கண்டு இறைவனை வணங்கின் அவர் அறிவீனராகி விடுவார்'' என்று கூறினார்.

''விறகுக் கட்டைகளை ஒரு கணத்தில் பொற் பாளங்களாக ஆக்கவல்ல பெரியாரை, வானமுதையும் ஒரு நொடியில் வரவழைக்கும் அடியார்க்கு நல்லாரை நாங்கள் காணும் பேறு பெற்றதற்காக நாங்கள் பெரிதும் மகிழ்ந்தோம். வானமுதினும் உழைத்துண்ணும் உணவே மாண்புடைத்து என்று கருதி காடு சென்று விறகு வெட்டி அதனைத் தலையிலே சுமந்து வந்து நகரிலே விற்று அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு உணவு வாங்கி உண்டு உயிர் வாழ்ந்து வந்த அந்த ஆன்றோரின் மாண்பினை எண்ணி, எண்ணி வியந்த வண்ணம் அவரை விட்டும் பிரிந்தோம்'' இவ்வாறு கூறுகின்றார்கள் அப்துல் வாஹிது இப்னு ஸைத் (ரஹ்) அவர்கள். இந்த அப்துல் வாஹிது இப்னு ஸைத் (ரஹ்) என்பவர்கள் யார்?

பஸராவிலே ஸைத் என்னும் நல்லார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரின் குலம் தழைக்க வந்த கோமகனாக அப்துல் வாஹிது (ரஹ்) அவர்கள் பிறந்தனர். இளமையில் அலீ (ரலி) அவர்களிடமும் அவர்களின் அருமந்த முதல் மகனார் ஹஸன் (ரலி) அவர்களிடமும் மார்க்கக் கல்வியையும் ஆன்மீகக் கல்வியையும் ஒருங்கு சேர்ந்து பயின்ற அவர்கள் பின்னர் நாற்பது ஆண்டுகளாகத் தவ வாழ்க்கையை மேற்கொண்டனர். அக்காலை அவர்கள் நாள்தோறும் நோன்பு நோற்றதுடன் மூன்று நாட்களுக்கு ஒரு தடவையே ஒரு கவளம் உணவுண்டு வந்தனர்.

இதன் பின் பஸராவில் ஆன்மீகச் செங்கோல் ஓச்சி வந்த ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களின் திருமுன் சென்று அவர்களின் கரம் பற்றி 'பைஅத்' பெற்ற அவர்கள் அக்கணத்திலிருந்து காசைக் கண்ணாலும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. கையாலும் தொடவில்லை. சில பொழுது

ஏழைகளுக்கு அறம் வழங்க அவர்கள் அதனைக் கையால் தொட்டாலும் பின்னர் கையைத் தண்ணீரால் கழுவி விடுவர்.

ஒரு நாள் இதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் அவர்களை அணுகி, ''ஷைகு அவர்களே! உலக மக்கள் அனைவரும் காசைக் கையாலல்ல, இதயத்தால் கௌவிக் கண்களில் ஒற்றிக் கொள்கின் றார்களே! தாங்கள் என்ன காசைத் தொட்ட கையைத் தண்ணீரால் கழுவுகிறீர்கள்?'' என்று வியப்புடன் வினவிய பொழுது ''உலகாயுத மக்களுக்கு அது சரியாக இருக்கலாம். ஆனால் என் போன்ற துறவிகளுக்கு அது சரியல்ல. இது தான் சரியாகும். துறவியின் கையும், வயிறும், சட்டைப் பையும் காலியாகத்தான் இருக்க வேண்டும். இல்லையெனில் அவன் துறவியல்ல, பலவீனன். அவனைத் துறவிகளின் பட்டியலில் சேர்க்கக் கூடாது'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

பின்னர் ஹபீப் அஜமீ (ரஹ்) அவர்களிடமும் ஹுமைல் இப்னு ஸியாத் (ரஹ்) அவர்களிடமும் 'பைஅத்' பெற்ற அவர்கள் துறவியாகப் பல்வேறு நாடுகளிலும் சுற்றித் திரிந்தார்கள். ஒரு தடவை அவர்கள் காட்டின் நடுவே உள்ள ஒரு கிறிஸ்தவ மடத்தில் பாதிரியார் ஒருவர் தனித்திருப்பதைக் கண்டு அவரை அணுகி, ''தாங்கள் இந்த மடத்தில் எத்தனை ஆண்டுகளாய் இருக்கிறீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர் ''இருபத்து நான்கு ஆண்டுகளாய்'' என்று பதிலுரைத்தார்.

''தாங்களுக்கு இங்குத் துணையாக எவருள்ளார்?''

''எங்கும் நிறைந்த தனியவன்''

''அது சரிதான்; படைப்புகளில் இங்குத் தங்களுக்குத் துணையாக எவருளார்?''

''வன விலங்குகள்''

''தங்களின் உணவு?''

''இறை துதி''

''அது சரிதான்; உலகப் பொருள்களில் எதனை உண்டு உயிர் வாழ்கின்றீர்கள்?''

''கனி, கிழங்குகள்''

''எவரைத் தாங்கள் நேசிக்கின்றீர்கள்?''

''மெய்ஞ்ஞானிகளின் இதயத்தில் வாழ்பவனை''

''அது சரிதான். இறைவனின் படைப்புகளில் எவரை நேசிக்கிறீர்கள்?''

''இறைவனை நேசிப்பவன் வேறு எவனையும் எவ்வாறு நேசிப்பான்?''

''தாங்கள் ஏன் ஏனையோரை விட்டும் ஒதுங்கித் தனித்து, இந்தப் பாழ் மண்டபத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்?''

''அவர்கள் அறிவைக் களவு செய்யும் கள்வர்கள்; நேர் வழியில் நின்று வழிப்பறி செய்யும் கொள்ளைக் கூட்டத்தினர்''

''ஓர் அடிமை நேரிய வழியை எப்பொழுது அறிய வருவான்''

''இறைவனைத் தவிர உள்ள அனைத்தையும் விட்டும் வெருண்டோடி அவனுடைய நினைவையன்றி வேறு எந்த நினைவையும் தன்னுடைய உள்ளத்தில் இல்லாது ஆக்கும் பொழுது தான் அவன் நேர்வழியை அறிய வருவான்.''

இவ்வாறு அந்தப் பாதிரியாரிடமிருந்து அறிவுரை பெற்று அவர்கள் செல்லும்பொழுது ஒருவர் தனித்து அமர்ந்து தியானம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு அவரை அணுகி, ''இங்கே தாங்கள் தனித்து அமர்ந்து தியானம் செய்து கொண்டிருக்கிறீர்களே. தங்களுக்கு உணவு எவ்வாறு கிடைக்கிறது?'' என்று வினவினர். அதற்கு அவர் ''உணவை அரைக்கும் இயந்திரத்தை என்னில் வைத்தவன் அதனைத் தருகிறான்!'' என்று கூறித் தம் பற்களைச் சுட்டிக் காட்டினார்.

இதன் பின் அவர்கள் அவரிடமிருந்து விடைபெற்றுத் தம் பயணத்தை மேற்கொண்டார்கள். வழியில் ஒரு தவமடத்தில் ஒரு பாதிரியார் இருப்பதாகக் கேள்விப்பட்டு தம்முடன் வந்தவர்களை, ''நீங்கள் இங்கே இருங்கள். நான் அவரிடம் சென்று சற்று உரையாடிவிட்டு வருகிறேன்'' என்று கூறி அவரைக் காணத் தனித்துச் சென்றனர். அந்தத் தவமடத்தை அவர்கள் அடைந்ததும் வெளியே நின்று கொண்டே ''பாதிரியாரே'' என்று அழைத்தனர். அவ்வொலி கேட்டு பாதிரியார் தம் மடத்தின் வாசலில் தொங்க விடப்பட்டிருந்த திரையை நீக்கினார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''பாதிரியாரே! இல்முல் யகீன் என்றால் யாது?'' என்று வினவினர். அதற்கு அவர், அவர்களை முன்னர் அறிந்தவர் போன்று அவர்களை அப்துல் வாஹிது எனப் பெயர் சொல்லி அழைத்து, ''நீர் இல்முல் யகீனைஅறிய விரும்பின், உமக்கும் உலக ஆசாபாசங்களுக்கும் இடையே இரும்பினால் சுவர் எடுத்துக் கொள்ளும்'' என்று கூறிவிட்டு மீண்டும் திரையைப் போட்டுக் கொண்டார்.

இவ்வாறு பற்பல நல்லார்களைச் சந்தித்துக் கொண்டு பற்பல நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்த அவர்கள் சீனாவிலும் பயணம் செய்திருக்கிறார்கள். ஒரு தடவை அங்கு அவர்கள் ஒரு துறவியைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைக் காண்பதற்காக அவரின் தவமடம் சென்றனர். தவமடத்தின் வாயில் மூடப்பட்டிருந்தது. எனவே அவர்கள் வெளியே நின்று ''துறவியே! கதவைத் திறவுங்கள்'' என்று சப்தமிட்டுக் கூறினர். கதவு திறக்கப்படவில்லை. இரண்டாவது தடவையும் அவர்கள் அவ்விதமே சப்தமிட்டார்கள். உள்ளிருந்து யாதொரு பதிலும் வரவில்லை. மூன்றாவது தடவை அவர்கள் மீண்டும் கதவைத் திறக்குமாறு சப்தமிட வயோதிகர் ஒருவர் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து, ''சகோதரரே! நீர் என்னைத் துறவி என்று அழைத்தீர். ஆனால் நான் துறவியல்ல. துறவி என்பவன் இறைவனுக்கு அஞ்சுவான். அவனின் மாண்பினை உணர்ந்து அவனை அவன் கண்ணியப்படுத்து வான். அவன் தனக்கு அளிக்கும் சோதனைகளைப் பொருந்திக் கொள்வான். அவன் விட்ட விதியைப் பொருந்திக் கொள்வான். அவன் தனக்கு அளித்த நற்பேறுகளுக்கு நன்றி செலுத்தி அவனைப் புகழ்வான். அவனுடைய மாண்பிற்கும் வல்லபத்திற்கும் முன்னர் தன்னைத் தாழ்த்தி, தலைவணங்கி நிற்பான். அவனுடைய தண்டனையையும் கேள்வி கணக்கையும் நினைத்துக் கவலைப்படுவான். பகற்காலத்தை நோன்பிலும் இரவு காலத்தை வணக்கத்திலும் கழிப்பான். அவனுடைய கேள்வி கணக்கை நினைத்து அஞ்சுவதன் காரணமாக அவனுக்கு உறக்கம் கூட வராது. இத்தகு அருமைசால் பண்புகள் வாய்க்கப் பெற்றவனே துறவி என்ற பெயருக்கு அருகதை உள்ளவன். அவனே உலகை முற்றும் துறந்த முனிவன். நானோ மலையளவு உணவை உண்ணும் நாய். என்னை நானே இந்த மடத்திற்குள் சிறைப்படுத்திக் கொண்டிருப்பதற்குக் காரணம், பிறரை என் நாவால் கிழித்து உண்ணாதிருக்கவேயாம்'' என்று கூறினார்.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''எது மக்களை இறைவனை விட்டும் தொலைவிலாக்குகிறது?'' என்று வினவினர். அதற்கு அவர், ''உலக ஆசையும் உலகப் பற்றுமே மக்களை இறைவனை விட்டும் தொலைவிலாக்குகிறது. அதுவே அனைத்துப் பாவங்களுக்கும் ஆணி வேராகும். உலகமோ பாவங்களின் உறைவிடமாகும். அறிஞன் எவனெனில் தன் உள்ளத்திலிருந்து உலக ஆசையை வேரறக் கிள்ளி யெறிந்து இறைவனிடமிருந்து பாவ மன்னிப்புக் கோரி, அவனை அணுகும் அலுவல்களை அயராது மேற்கொள்பவனேயாவான்'' என்று விடையிறுத்தனர்.

இதன்பின் அவர்களுக்கு மற்றொரு துறவியை ஒரு தவ மடத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி,

''துறவியே! தாங்கள் தனிமையைப் பற்றிப் பிடித்து அத்துடன் வெகு விரைவில் ஒட்டிக் கொண்டீர்களே'' என்று கூறினர். அதற்கு அவர் ''இளைஞரே! நீர் தனிமையின் இனிமையை நுகர்ந்திருப்பின் நீரும் என் போன்றே செய்திருப்பீர். தனிமை தான் வணக்கத்தின் முக்கிய அம்சமாகும்'' என்று கூறினார்.

''நல்லது; துறவியே தனிமையில் ஒருவன் அடையும் கடைசி பட்ச நன்மை என்ன?''

''மக்களின் சூழ்ச்சிகளிலிருந்து அமைதியும் அவர்களின் பொல்லாங்குகளிலிருந்து பாதுகாப்பும் ஆகும்''

''துறவியே! இறைநேசத்தின் இனிமையை ஓர் அடியான் எப்பொழுது நுகர்கிறான்?''

''அவனுடைய இறைக் காதல் தூய்மையாகவும், அவனுடைய செயல் ஒருமனப்பட்டதாகவும் அமையும் பொழுது''

''இறைக் காதல் எப்பொழுது தூய்மையாக அமையும்?''

''அவன் தன் முழுக் கவனத்தையும் இறைவன்பால் ஒன்று செலுத்தி வணங்கும் பொழுது''

இவ்வாறு பதில் கூறினார் அத்துறவி. அவரின் இப்பதில் அவர்களின் அறிவிற்கு விளக்கமாகவும் ஆன்மீகப் பாதைக்கு வழிகாட்டியாகவும் அமைந்தது.

அவர்கள் தரைப் பயணத்தை மட்டுமின்றி கடற் பயணத்தையும் மேற்கொண்டுள்ளார்கள். ஒரு தடவை அவர்கள் தன் தோழர்களுடன் கப்பலில் சென்று கொண்டிருந்த பொழுது நடுக் கடலில் ஒரு தீவை அடைந்தனர். அதில் ஒருவர் தொழு உருவம் ஒன்றை வணங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவரை அணுகி, ''நீர் எவரை வணங்கு கின்றீர்?'' என்று வினவினர். அது கேட்ட அவர் தாம் தொழுது கொண்டிருந்த தொழு உருவத்தைச் சுட்டிக் காட்டினார்.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நீர் வணங்கும் இத்தொழு உருவம் மனிதனால் செய்யப்பட்டதாகும். ஆனால் நாங்கள் வணங்கும் இறைவனோ அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கும் வல்லோனா வான்'' என்று கூறினர்.

உடனே அவர் ''அப்படியா! நீங்கள் எவரை வணங்குகிறீர்கள்?'' என்று வியப்போடு வினவினார்.

''நாங்கள் உருவமற்ற ஓரிறைவனை வணங்குகின்றோம். அவனை நாங்கள் அல்லாஹ் என்று அழைக்கிறோம். அவனுடைய ஆட்சி அகிலமெங்கணும் பற்றிப் படர்ந்து சுற்றிச் சூழ்ந்து ஊடுருவிப் பாய்ந்து ஒளிர்ந்து நிற்கிறது. அவனுடைய மாண்பு அளப்பரியதாகும்''

''இஃது உங்களுக்கு எவ்வாறு தெரியும்?''

''நாங்கள் வணங்கும் இறைவனாகிய அல்லாஹ் எங்களிடம் ஒரு திருத்தூதரை அனுப்பி வைத்தான். அவர் இதை எங்களுக்கு எடுத்துரைத்து, எங்களுக்கு நேர்வழியைக் காட்டினார்.''

''அந்தத் தூதர் இப்பொழுது எங்குள்ளார்?''

''எந்த அலுவலை நிறைவேற்றுவதற்காக இறைவன் அவரை இந்த அவனிக்கு அனுப்பினானோ, அந்த அலுவல் நிறைவுற்றதும் அவரைத் தன்பால் அழைத்துக் கொண்டான்''

''அவர் உங்களிடம் ஏதேனும் அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளாரா?''

''ஆம்; ஒரு திருமறையை விட்டுச் சென்றுள்ளார்''

''அப்படியா! அதனை எனக்குக் காட்டுங்கள்''

இவ்வாறு அவர் கூறியதும், நாங்கள் எங்களிடமிருந்த திருக்குர்ஆன் பிரதியை அவரிடம் காட்டினோம். அதைப் பார்த்ததும் ''அதனை எனக்குப் படித்து காட்டுங்கள்'' என்று கூறினார்.

அவ்வாறே அவர்கள் திருக்குர்ஆனின் ஓர் அத்தியாயத்தை ஓதி அதன் பொருளை அவருக்கு விரித்தோதினர். அது கேட்டு அவரின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வழிந்தோடியது. ''நிச்சயமாக இது இறைவனின் திருமறையேயன்றி வேறில்லை. இதில் கூறப்பட்டிருக்கும் இறை ஆணையை ஒருவன் சிரமேற்றாங்கிச் செயலாற்ற வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் அவனுக்கு மாறு செய்யக்கூடாது'' என்று கூறி கலிமாச் சொல்லி இஸ்லாத்தைத் தழுவினார். அவருக்கு அவர்கள் இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் திருக்குர்ஆனின் சில வசனங்களையும் கற்றுக் கொடுத்தார்கள்.

பொழுதுபட்டது, கரையிறங்கிய அனைவரும் படுக்கச் சென்றனர். அப்பொழுது இஸ்லாத்தைத் தழுவிய அவர், அப்துல் வாஹிது (ரஹ்) அவர்களை நோக்கி, ''சகோதரரே! எந்த இறைவனைப் பற்றி நீங்கள் எனக்கு அறிவித்துத் தந்தீர்களோ அவன் உறங்குவானா?'' என்று வினவினார்.

''இல்லை; அவன் உறங்கமாட்டான். அவன் உறக்கத்தை விட்டும் தூய்மையானவன். என்றென்றும் உயிரோடு உள்ளவன்'' என்று அவர்கள் பதில் கூறினர்.

அப்பொழுது அவர்,''அவ்விதமாயின் நீங்கள் எத்துணைக் கீழான அடியார்களாக உள்ளீர்கள். உங்களின் இறைவன் உறங்காத பொழுது, நீங்கள் உறங்கச் செல்கிறீர்களே. இது உங்களுக்கு இழிவல்லவோ?'' என்று கூறினார்.

அது கேட்டு அவர்கள் அனைவரும் வியப்பிலாழ்ந்தனர்.

பொழுது புலர்ந்தது. பயணக்குழு அங்கிருந்தும் புறப்படத் தயாராகியது. அப்பொழுது அவர் அவர்களை நோக்கித் தம்மையும் அவர்களுடன் அழைத்துச் செல்லுமாறு கூறினார். அவ்விதமே அவர்கள் அவரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டு பஸராவின் அண்மையிலுள்ள அபதான் என்ற இடத்திற்கு வந்து அங்குத் தங்கலானார்கள்.

அப்துல் வாஹிது (ரஹ்) அவர்கள் அங்குள்ள மக்களிடம் அவரைத் தாங்கள் ஒரு தீவில் கண்டு தீனுல் இஸ்லாத்தை எடுத்துரைத்ததையும், அவர் கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் இணைந்ததையும் கூறி, அவருக்கு ஏதாவது உதவி செய்யுமாறு வேண்டிக் கொண்டனர். அதற்கிணங்கி அவர்கள் சிறிது பொருள் சேகரித்து அவரிடம் கொடுத்து, ''இதனை உங்களின் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்' 'என்று கூறினர்.

அப்பொழுது அவர், ''தாங்கள் என்ன விநோதமான மனிதர்களாக இருக்கின்றீர்கள்! லா இலாஹ இல்லல் லாஹு என்ற கலிமாவை எனக்குக் கற்றுக் கொடுத்தபின் என்னை வழி கெடுக்க நினைக்கின்றீர் களே. நான் உருவத் தொழும்பனாக இருந்தேன். அப்பொழுது நான் அல்லாஹ்வையே அறியவில்லை. அப்பொழுது கூட அல்லாஹ் எனக்கு யாதொரு துன்பமும் தரவில்லை. இப்பொழுது நான் அல்லாஹ்வை அறிந்தபொழுது அவன் என்னைத் துன்பத்தில் உழலச் செய்வானா என்ன?'' என்று கூறி அவர்கள் அளித்த பணத்தை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்துவிட்டார்.

இதன் பின் மூன்று நாட்களாயின. அப்துல் வாஹிது (ரஹ்) அவர்கள் ஓரிடத்தில் தனிமையாக வீற்றிருந்தனர். அப்பொழுது அவர்களிடம் ஒருவர் ஓடோடி வந்து, ''புதியதாக இஸ்லாத்தைத் தழுவியவர் இறக்கும் தறுவாயில் உள்ளார்'' என்று கூறினார்.

அப்பொழுது அவர்கள் அவரிடம் விரைந்து சென்று அவரின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றி வைக்கலாம் என்ற எண்ணத்துடன்,

''தங்களுக்கு ஏதேனும் தேவையா?'' என்று வினவினர். அதற்கு அவர், ''எந்த இறைவன் தங்களை நான் வாழ்ந்து கொண்டிருந்த தீவிற்கு அனுப்பிவைத்து என்னை இஸ்லாத்தில் இணைக்குமாறு செய்தானோ, அவன் என் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டான்'' என்று கூறினார்.

அப்பொழுது அவர்களை ஓர் உறக்கம் ஆட்கொண்டது. அதில் அவர்கள் கனவொன்று கண்டனர். அக்கனவில் ஓர் அழகிய மணி மண்டபம் காட்டப்பட்டது. அதில் அழகெலாம் ஒருங்கமைந்த ஆரணங்கு ஒருத்தி பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட அரியாசனத்தின் மீது வீற்றிருந்தாள். அவள் அவர்களை நோக்கி, ''அல்லாஹ்வுக்காக நீங்கள் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய அந்த முஸ்லிமை விரைவில் என்னிடம் அனுப்பி வையுங்கள். இனி ஒரு கணமேனும் அவரை விட்டும் பிரிந்திருக்க என்னால் இயலாது'' என்று கூறினாள்.

திடுக்கிட்டு விழித்த அவர்கள் அந்த முஸ்லிமைப் பார்த்தார்கள். அவருடைய உயிர் அவருடைய உடலை விட்டும் பிரிந்திருந்தது. அதன்பின் அவர்கள் அவரை நல்லடக்கம் செய்தனர்.

அன்றிரவு அவர்கள் ஓர் அழகிய பூங்காவையும் அதிலே ஒரு பொற் கொலுவையும், அதன் மீது அந்த முஸ்லிமும், அந்த அழகிய ஆரணங்கும் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்து, ''வானவர்கள் ஒவ்வொரு வாயிலின் பக்கமும் 'உங்களுக்கு ஸலாம் உண்டாவதாக! உங்களின் பொறுமையின் காரணமாக உங்களுக்கு அழகிய பிரதிபலன் கிடைத்துவிட்டது' என்று உரைத்த வண்ணம் வருவர்'' என்ற கருத்தமைந்த திருக்குர்ஆனின் திருவசனத்தை ஓதிக் கொண்டிருப்பது போன்று கனவு கண்டார்கள்.

இதன்பின் அபதானில் ஒரு தவமடத்தை நிறுவி மக்களுக்கு அறபோதம் செய்து வந்த அவர்களுக்கு ஒரு நாள் முழங்காலில் வலி ஏற்பட்டது. அதன் காரணமாக காலை நீட்டவும் மடக்கவும் அவர் களுக்குப் பெரிதும் சிரமமாக இருந்தது. நள்ளிரவில் அவர்கள் வழக்கம் போல் விழித்தெழுந்து 'தஹஜ்ஜுத்' தொழ எண்ணிய பொழுது தொழா திருந்தால் நல்லது என்று கருதும் அளவுக்கு வேதனை கடுமையாக இருந்தது. எனினும் அதனைப் பொருட்படுத்தாது அவர்கள் தொழு தார்கள். தொழுத பின், தொழுகை விரிப்பிலேயே அவர்கள் படுத்துறங் கினார்கள்.

அப்பொழுது அவர்கள் கனவொன்று கண்டார்கள். ஒரு பேரழகி தன் தோழிமார்களுடன் அவர்களின் அருகே வந்து தன் தோழிமார்களை நோக்கி, ''இவரை உறக்கம் கலையாமல் தூக்குங்கள்'' என்று கூறினாள்.

அவ்வாறே அவர்கள் செய்தனர். அதன்பின் அவள் மற்றும் சில தோழிமார்களை நோக்கி, ''ஓடோடிச் சென்று அவருக்காக மெல்லிய விரிப்புகளை விரியுங்கள். அதன் மீது தலையணைகளை வையுங்கள்'' என்று கூறினாள். அவ்வாறே அவர்கள் ஒன்றின் மேலொன்றாக ஏழு விரிப்புகளை விரித்துத் தலையணைகளையும் வைத்து, அதன் மீது அவர்களைப் படுக்க வைத்தனர். அத்துணை மென்மையான விரிப்பின் மீது அவர்கள் முன்னர் எப்பொழுதுமே படுத்ததில்லை. அதன்பின் அப்படுக்கையின் நாற்புறமும் நறுமணம் கமழும் மலர்களை வைக்கு மாறு கூறினாள் அவள். அவ்வாறே அவர்கள் செய்தார்கள்.

பின்னர் அப்பேரழகி தன் தோழிமார்களை நோக்கி அவர்களின் முழங்காலை மென்மையாக வருடுமாறு பணித்தாள். அவ்விதமே அவர்கள் தம் தளிர்க்கரங்களால் சிறிது நேரம் அவர்களின் முழங்காலை வருடிய பின் அவர்களை நோக்கி, ''பேரருளாளனாகிய அல்லாஹ் தங்களின் முழங்காலிலுள்ள வேதனையை நீக்கி விட்டான். எழுங்கள்; தொழுங்கள்'' என்று கூறினர். விழித்தெழுந்த பொழுது அவர்களின் முழங்காலிலிருந்து வேதனை எங்கோ ஓடி மறைந்துவிட்டது. அதன்பின் அவ்வேதனை அவர்களுக்கு எப்பொழுதுமே வரவில்லை.

ஒரு நாள் அவர்கள் தம் தவமடத்தில் வீற்றிருக்கும் பொழுது ஒருவர் அவர்களிடம் வந்து ''இன்ன இடத்தில் ஒரு மனிதர் ஐம்பது ஆண்டு காலமாக வீற்றிருந்து இறைவனை வணங்கிக் கொண்டிருக்கிறார்'' என்று கூறினார். அது கேட்ட அவர்கள், அவரைப் பார்த்து வர அவரிடம் சென்றனர். அவரைச் சந்தித்து ''நண்பரே! தாங்கள் இறைவனுடன் திருப்தியாக இருக்கின்றீர்களா?'' என்று வினவினர். அதற்கு அவர் ''இல்லை'' என்று பதில் கூறினார். மீண்டும் அவர்கள் இதே கேள்வியை அவரிடம் கேட்க, அவர் முன் கூறிய பதிலையே கூறினார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''அவ்விதமாயின் அவனோடு தாங்கள் திருப்தியற்ற நிலையில் இருக்கின்றீர்களா?'' என்று வினவினார்கள். அதற்கு அவர் ''நான் அவனோடு திருப்தியுடன் இல்லை'' என்று மறுமொழி பகர்ந்தார். ''தாங்கள் தொழுவதையும், நோன்பு நோற்பதையும் தவிர்த்து வேறொன்றையும் செய்வதில்லையா?'' என்று அவர்கள் அவரை வினவினர். அதற்கு அவர் 'இல்லை' என்று ஒரே சொல்லில் மறுமொழி பகர்ந்தார். மீண்டும் அவரிடம் யாதொன்றும் கேட்காது அவர்கள் அவரை விட்டும் பிரிந்தார்கள். அப்பொழுது அவர்கள் தம் மனத்திற்குள் அவர் ஐம்பதாண்டுகளாகச் செய்த வணக்கங்கள் அனைத்தும் வீண் என்று கூறிக் கொண்டார்கள்.

இவ்வாறு அவர்கள் எண்ணியதற்குக் காரணம் 'இறைவன் விட்ட விதியைப் பொருந்திக் கொள்வதில் தான் இறைவனின் பொருத்தமும் இருக்கிறது. இறைவன் விட்ட விதியைப் பொருந்திக் கொள்ளாதவன் இறைவனுடன் போர் தொடுத்தவன் போலாவான். அவனுக்கு உய்வென்பதே இல்லை' என்று அவர்கள் கருதியதேயாகும். எனவே தான் அவர்கள் இறை விதியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்கள். இறைவனின் பொருத்தத்தைப் பெறுவதற்காகவே அவர்கள் தொழுதார்கள், நோன்பு நோற்றார்கள். இறைவனுக்காக அவர்கள் வறுமையைப் புன்முறுவலுடன் ஏற்றுப் பட்டினியும் பசியுமாக இருந்தார்கள். ''அருளாளனாகிய அல்லாஹ் பசித்திருப்பவன் மீது அன்பு செலுத்துகிறான். பசித்திருக்கும் ஒருவனுக்கு நீரின் மீது நடக்கும் ஆற்றலையும் நல்குகிறான்'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஒரு நாள் அவர்கள் கடுமையான பனியில் ஒருவர் வெறுமேனியுடன் படுத்திருப்பதைக் கண்டு ''என்ன! உம்மால் இந்தப் பனியின் கடுமையை உணர இயலவில்லையா? குளிரோ எங்களை வாட்டி வதைக்கிறது. நீரோ திறந்த மேனியுடன் இங்குப் படுத்துறங்குகின்றீரே'' என்று வினவிய பொழுது ''இறை காதலில் மூழ்கி இருக்கும் ஒருவனுக்குக் குளிருமா தோன்றும்?'' என்று அவர் அமைதியாகப் பதில் கூறினார்.

மற்றொரு நாள் அவர்களை ஒருவர் அணுகி ''இறை சிந்தனையில் மூழ்கியிருப்பதன் காரணமாக தம் சூழலையும் சுற்றுப் புறங்களையும் அறியாதவராக இருக்கும் ஒருவரைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்களா?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''அத்தகு மனிதர் ஒருவரை நான் அறிவேன். சற்று நேரத்தில் அவர் இங்கு வருவார், பொறுத்திரும்'' என்று கூறினர்.

அவ்வாறே சற்று நேரத்தில் உத்பத்துல் குலாம் (ரஹ்) அவர்கள் அங்கு வந்ததும், அவர்கள் அப்பெரியாரை நோக்கி, ''தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று வினவினர். ''இன்ன இடத்திலிருந்து வருகிறேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். ''சரி; வரும் வழியில் எவரையேனும் சந்தித்தீர்களா?'' என்று மீண்டும் வினவினார்கள் அவர்கள். அதற்கு அப்பெரியார் ''இல்லையே! ஒருவர் கூட எதிர்ப்படவில்லையே'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

அது கேட்டு ஆங்கிருந்த அனைவருக்கும் வியப்பால் புருவங்கள் மேலேறின. அப்பெரியார் அங்கு வரும் பொழுது வழிநெடுக நூற்றுக் கணக்கான மக்கள் போகவும் வரவும் செய்து கொண்டிருந்தது அவர்களின் கண்களுக்குத் தென்படாமல் போய்விட்டது; இறை சிந்தனையில் மூழ்கிய

வண்ணம் நடந்து வந்து கொண்டிருந்த அவர்களின் கண்களுக்கு இறைவனைத் தவிர்த்துள்ள அனைத்தும் மறைந்துவிட்டன என்பதை உணர்ந்து அவர்கள் இறும்பூதெய்தினார்கள்.

ஒரு நாள் அவர்களிடம் சில ஏழைகள் வந்து தங்களின் வறுமையை நீர் மல்கும் கண்களுடன் எடுத்துரைத்த பொழுது ''நீங்கள் இல்லம் செல்லுங்கள். உங்களுக்கு வளம் ஏற்படும்'' என்று கூறினார்கள். அவ்வாறே அவர்கள் தம் இல்லம் சென்ற பொழுது அங்கு ஏராளமான பொருள்களைக் கண்ணுற்றதும் ''இவை ஏது'' என்று வீட்டிலுள்ளோரிடம் விசாரித்தனர். அதற்கு அவர்கள் ''ஒரு துறவி வந்து இவற்றைத் தந்துவிட்டுச் சென்றார். 'தாங்கள் யார்?' என்று நாங்கள் அவரிடம் கேட்டோம். 'ஷைகு அப்துல் வாஹிது (ரஹ்) அவர்களின் தோழர்' என்று கூறிவிட்டு விறுவிறுவெனச் சென்றுவிட்டார்'' என்று கூறினர்.

அவர்கள் அடுத்த நாள் இச்செய்தியை அப்துல் வாஹிது (ரஹ்) அவர்களிடம் எடுத்துரைப்பதற்காக அவர்களின் இல்லம் வந்தபொழுது அவர்கள் வீட்டில் இல்லை. எனவே, இதனை அவர்கள் அவர்களின் துணைவியாரிடம் எடுத்துரைத்துத் தங்களின் நன்றியைத் தெரிவித்த பொழுது ''நான் உங்களின் மீது பெரிதும் இரங்குகிறேன். இத்தகு காமிலான வலீயிடம் நிலையான செல்வத்தைக் கேட்பதற்குப் பதிலாக அழியக்கூடிய உலகாயுதச் செல்வத்தைக் கேட்டீர்களே'' என்று கூறிப் பெரிதும் வருத்தப்பட்டார் அவர்.

ஆம்; அப்துல் வாஹிது (ரஹ்) அவர்கள் ஒரு காமிலான வலீயாக இருந்தனர். அவர்களின் இறைஞ்சுதல்களை இறைவன் உடனுக்குடன் நிறைவேற்றியருளினான். அத்துடன் அவர்கள் மூலமாகப் பற்பல அற்புதங்களை வெளியாக்கவும் செய்தான். இதைப் பற்றிச் சிலர் அவர்களிடம் வியப்புமொழி பகர்ந்தபொழுது, அவர்கள் கூறிய அமைதியான பதில், ''இதில் வியப்புறுவதற்கு என்ன உள்ளது? ஓர் அடியான் தன்னை இறைவனுக்குச் சொந்தமாக்கி விடும்பொழுது இறைவனும் அவனுக்குச் சொந்தமாகிவிடுகிறான்'' என்பதாக இருந்தது.

அவர்களின் கரம்பற்றி தீட்சை பெற்றோர் பலர். அவர்களில் முக்கியமானோர் புலைல் இப்னு இயால் (ரஹ்), அபுல்ஃபஸல் இப்னுஸீரீன் (ரஹ்), காஜா அபூஇஸ்ஹாக் ஆஸி (ரஹ்) ஆகியோர் ஆவர்.

அவர்கள் வயோதிகத்தில் பக்கவாதத்தால் தாக்குண்டு படுத்த படுக்கையாய்க் கிடந்தனர். அப்பொழுது அவர்களின் ஊழியர் ஒருவரே அவர்களைத் தூக்கவும் 'உளு'ச் செய்ய வைக்கவும் உதவி வந்தார். ஒரு நாள் அவர் ஊரிலில்லாத பொழுது, அவர்களுக்கு தொழுவதற்கு

உதவுவார் எவருமில்லாமல் போய்விட்டது. அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. நேரமோ ஓடிக் கொண்டிருந்தது. தொழுகை 'களா'வாகப் போய்விடுமோ என்று அவர்கள் பெரிதும் அஞ்சினார்கள். எனவே அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவ எம்பெருமா! நான் தொழுது முடிக்கும் வரையிலாவது எனக்கு உடல் நலன் நல்கி அதன்பின் என்னை உன்பால் அழைத்துக் கொள்வாயாக!'' என்ற இறைஞ்சினர். அவர்களின் இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொண்டான்.

அடுத்த கணம் அவர்கள் நலன் பெற்றார்கள். படுக்கையில் கிடந்த அவர்கள் எழுந்து சென்று தண்ணீர் எடுத்து 'உளூ' செய்து தொழுது 'ஸலாம்' கொடுத்தார்கள். மறுநொடியில் அவர்களின் உயிர் அவர்களின் உடலை விட்டும் பிரிந்தது. இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 177 ஸபர் திங்கள் 27ஆம் நாளிலாகும். அவர்களின் அடக்கவிடம் அவர்களின் பிறந்த ஊரான பஸராவில் உள்ளது.

# 8. அபூசுலைமான் தாரானி (ரஹ்)

இரு தோழர்கள் ஹஜ்ஜுச் செய்வதற்காக மக்காவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். வழியில் ஒருவரின் தண்ணீர்ப்பை அவர் அறியாமல் கீழே விழுந்துவிட்டது. சற்றுத் தொலை சென்றபின் தான் அது கீழே விழுந்த செய்தி அவருக்குத் தெரிய வந்தது. தம் தோழரிடம் அவர் அதனை எடுத்துரைத்தார். அப்பொழுது அவரின் தோழர் தம் இருகரம் ஏந்தி, ''காணாமற் போன பொருளை மீண்டும் கிடைக்குமாறு செய்பவனே! எங்களின் தண்ணீர்ப்பை எங்கோ விழுந்து விட்டது. அதனை எங்களுக்கு மீளச் செய்வாயாக!'' என்று இறைஞ்சினார். சற்று நேரத்தில் ஒருவர் ஒரு தண்ணீர்ப் பையுடன் வந்து, ''இது இன்ன இடத்தில் கிடந்தது. இது எவருடையது?'' என்று வினவினார். ''அது எங்களுடையது தான்'' என்று கூறி அவர்கள் அதனை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

அதன்பின் அவர்களிருவரும் அங்குச் சற்றுநேரம் வீற்றிருந்து களைப்பாறிவிட்டு, மீண்டும் தம் பயணத்தைத் துவங்கினர். அன்று குளிர் கடுமையாக இருந்தது. அவர்களோ சாதாரண உடைகளையே அணிந்திருந்தார்கள். எனவே குளிர் தாங்க இயலாது அவர்கள் பெரிதும் அவதியுற்றனர். வழியில் அவர்கள் ஒரு மனிதரைச் சந்தித்தனர். அவரோ இரண்டு பழைய போர்வைகளை ஒன்றின் மேலொன்றாகத் தம் உடலில் போர்த்தி இருந்தார். அதன் காரணமாக அவருக்கு வியர்த்து வடிந்து கொண்டிருந்தது. அப்பொழுது அவர்களில் ஒருவர் அவரை அணுகி, ''எங்களுக்கோ குளிர் தாங்க முடியவில்லை, தங்களுக்கோ இக்கடுங் குளிரிலும் வியர்த்து வடிகின்றது. ஆதலின் தாங்கள் போர்த்திக் கொண்டிருக்கும் போர்வைகள் தங்களுக்குத் தேவையில்லை. ஆதலின் அவற்றை எங்களுக்குத் தந்துதவினால் பெரிதும் நலமாயிருக்கும்'' என்று கூறினார்.

அது கேட்ட அந்த மனிதர் அவரை ஒரு முறைக்கு இருமுறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, ''சூடும் குளிரும் அல்லாஹ்வின் இரண்டு படைப்புகளாகும். அவன் ஆணையிடின் அவை என்னை வந்தடையவும்

என்னைவிட்டு நீங்கவும் செய்கின்றன. நான் முப்பது ஆண்டுகளாக இதே காட்டில் இதே நிலையில் சுற்றி அலைந்து கொண்டுள்ளேன். நான் குளிரால் நடுங்குவதுமில்லை. வெயிலால் துன்புறுவதுமில்லை. குளிரில் அல்லாஹ் தன் நேசத்தின் சூட்டால் என்னை அரவணைக்கிறான். வெயிலில் அல்லாஹ் தன் நேசத்தின் குளிரால் என்னை ஆரத் தழுவு கின்றான். அபூ சுலைமான் தாரானியே! நீர் என்னுடைய போர்வையைக் கேட்டதன் மூலம் இறைவன் மீது உங்களுக்குள்ள தவக்குலில் மாசை உண்டுபண்ணிக் கொண்டீர். உமக்கும் உம் தோழருக்கும் குளிர் துன்பம் நல்குகிறது. அதனைத் தாள இயலாது நீங்கள் நடுங்குகிறீர்'' என்று கூறினார்.

இதன்பின் அவ்விருவரும் - அபூசுலைமான் தாரானி (ரஹ்) அவர் களும் அவர்களின் சீடர் அஹ்மது இப்னு ஹவாரியும் அப்பெரியாரிடம் விடைபெற்று அவ்விடத்தை விட்டும் அகன்றார்கள். தம் இறைஞ்சுதலின் காரணமாகத் தோல்பை கிடைத்ததால் தமக்கு அகந்தை ஏற்பட்டுவிடக் கூடாதென்று வழியில் ஓர் இறைநேசச் செல்வரின் மூலமாகத் தம் குறையை எடுத்துரைக்கச் செய்து தமக்கு நேர்வழி காட்டிய இறைவனைப் புகழ்ந்த வண்ணம் அபூசுலைமான் தாரானி (ரஹ்) அவர்கள் மக்கமாநகர் நோக்கிச் சென்றார்கள்.

வழியில் அவர்கள் இராக் நாட்டு இளவல் ஒருவரைச் சந்தித்தனர். அவரோ அழகே உருவெடுத்தாற் போன்று காட்சி வழங்கினார், அவர் வழி நெடுக குர்ஆனை ஓதிக்கொண்டே வந்தார். தங்குமிடங்களில் தொழுது கொண்டார். பகலெல்லாம் நோன்பு நோற்பார். நள்ளிரவில் 'தஹஜ்ஜுத்' தொழுவார். அவரின் அபார வணக்கத்தைக் கண்டு அவர்களுக்குப் பெருவியப்பாக இருந்தது.

மக்காவை வந்தடைந்ததும் அவர் அபூசுலைமான் தாரானி (ரஹ்) அவர்களை விட்டும் பிரிய விரும்பி விடைபெற வந்த பொழுது, அவர்கள், அவரை நோக்கி, ''மகனே! இத்துணை அபார வணக்கத்தில் அல்லும் பகலும் ஈடுபட்டிருக்கிறீரே. இதற்கான காரணம் யாது?'' என்று வினவினர். அதற்கு அவர் ''அபூசுலைமான் அவர்களே! நான் கனவில் சுவன மாளிகையைக் கண்டேன். அது பொன்னாலும் வெள்ளியாலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதில் பல சுவனத்துக் கண்ணழகிகள் பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட தவிசுகளில் ஒய்யாரமாக வீற்றிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள். அவளின் முத்துப் பற்களிலிருந்து வெளிப்போந்த பேரொளி சுவன முழுவதையும் ஒளிரச் செய்தது. அவள் என்னை நோக்கி, 'நீர் அல்லாஹ்வின் பாதையில் முயற்சி செய்தவராக இரும். நான்

உமக்குரியவளாக ஆகிவிடுவேன்' என்று கூறினாள். நான் விழித்தெழுந்தேன். அதன்பின் என் நிலையே மாறிவிட்டது. நான் இப்பொழுது செய்து வரும் வணக்கங்களெல்லாம் அந்தச் சுவனத்துக் கண்ணழகியைப் பெற வேண்டுமென்ற பேரவாவின் காரணமாகவே யன்றி வேறில்லை'' என்று கூறினார். அதன்பின் அவர்கள் அவருக்காக இறைவனிடம் இறைஞ்சினார்கள். அவரும் அவர்களுக்காக இறைவனிடம் இறைஞ்சினார். பின்னர் இருவரும் பிரியா விடை பெற்றுப் பிரிந்தார்கள்.

இந்நிகழ்ச்சிகள் அபூசுலைமான் தாரானி (ரஹ்) அவர்களின் வாழ்க்கையிலும் பெரிய மாறுதலை உண்டு பண்ணின. அவர்கள் தம்மையே நோக்கி, ''தாரானியே! நீ விழிப்புணர்ச்சி கொள்வாயாக! அவர் கூறியது உனக்கு ஒரு நன்மாராயமாக அமையட்டும். அவர் சுவனத்துக் கண்ணழகி ஒருத்தியை அடையப் பெறுவதற்காக இத்துணை முயற்சியாற்றுகின்றாரென்றால் நீ இறைவனை எய்தப் பெறுவதற்கு எத்துணை முயற்சியாற்ற வேண்டும் என்பதை எண்ணிப் பார்'' என்று கூறினார்கள்.

மாபெரும் ஆன்மீக மேதையான அபூசுலைமான் தாரானி (ரஹ்) அவர்களின் இயற்பெயர் அப்துர் ரஹ்மான் என்பதாகும். திமிஷ்கின் அருகிலுள்ள தாரியா என்ற சிற்றூரில் பிறந்ததன் காரணமாக அவர்கள் தாரானி என்று அழைக்கப்பட்டார்கள். தம் மனோ இச்சையை அவர்கள் எதிர்த்து நின்று போராடியதன் காரணமாகவும் அதன் பல்வேறு தன்மைகளைப் பற்றியும் அவர்கள் நன்கு ஆய்ந்து தெளிந்திருந்ததன் காரணமாகவும், அவர்கள் 'ரைஹானுல் தில்ஹா' என்று சிறப்புப் பெயர் பெற்றிருந்தனர்.

இளம் வயதில் பெரும் இசை வல்லுனராக இருந்த அலர்கள் வயதேறப் பெற்றதும் தாம் மேற்கொண்ட தொழில் இஸ்லாத்திற்கு மாற்றமாக இருப்பதை உணர்ந்து அதனை விட்டொழித்தனர். இதன்பின் அவர்கள் இஸ்லாமிய அறநெறியின்படி இறைவனுக்குகந்த நல்வாழ்வு வாழ்ந்து இறைவனைத் துதித்து வணங்கி வந்தார்கள்.

• ஓரிரவு கடுங்குளிராக இருந்த பொழுது அவர்கள் தம்முடைய ஒரு கையைப் போர்வையில் மறைத்து வைத்துக் கொண்டு ஒரு கையை மட்டும் ஏந்தி 'துஆ' இறைஞ்சி விட்டுத் தூங்கினர். அப்பொழுது கனவொன்று கண்டனர். அதிலே அசரீரி ஒன்று முழங்கியது. ''அபூசுலைமானே! நீர் நீட்டிய கைக்குக் கூலி கொடுத்து விட்டோம். மற்றொரு கையையும் நீர் நீட்டி இருப்பின் அதற்கான கூலியையும் கொடுத்திருப்போம்'' என்றது அந்த அசரீரக் குரல். அது கேட்டு திடுக்குற்று விழித்தெழுந்த அவர்கள் தம் இருகைகளையும் ஏந்தி இறைலனிடம் பாவ

மன்னிப்புக் கோரி இனி எக்காலும் அவ்விதம் செய்வதில்லை என்று உறுதி கூறித் தம் இறுதி வரை அவ்வுறுதியைக் காத்தனர்.

ஓரிரவு அவர்கள் தொழுது கொண்டிருந்த பொழுது, அவர்கள் அறியாமல் உறக்கம் அவர்களை ஆட்கொண்டது. அப்பொழுது அவர்கள் கனவொன்று கண்டனர். அப்பொழுது சுவனத்து மங்கை ஒருத்தி அவர்களின் முன் தோன்றி ''நீரோ உறங்குகின்றீர். ஆனால் நானோ உமக்காக ஐந்நூறு ஆண்டுகளாகத் திரைக்குப் பின்னால் வளர்க்கப்பட்டு வருகிறேன்'' என்று கூறினாள்.

அப்பொழுது மற்றொரு சுவனத்துக் கண்ணழகி அவர்களைப் பார்த்துச் சிரித்தாள். அவளின் சிரிப்பின் பேரொளி விவரிக்க முடியாத அத்துணைப் பிரகாசமாக இருந்தது. ''இத்தகு பேரொளி உனக்கு எவ்வாறு கிடைத்தது?'' என்று அவர்கள் அவளை வியப்புடன் வினவினர். அதற்கு அவள், ''ஓரிரவு தாங்கள் இறைவனை நினைத்து அழுத கண்ணீரைக் கொண்டு நான் என் முகத்தைக் கழுவினேன். அதன் காரணமாக என் முகம் இத்துணைப் பேரொளியை எய்தப் பெற்றது. தங்களைப் போன்ற நல்லடியார்கள் உகுக்கும் கண்ணீரால் சுவனத்துக் கண்ணழகிகள் தம் முகத்தைக் கழுவாத வரையில் அவர்களின் முகம் ஒளிராது'' என்று அவள் பதிலளித்தாள்.

இதன்பின் அவர்கள் தம்முடைய வணக்கத்தினூடே உறக்கம் குறுக்கிடா வண்ணம் இருக்க உணவைக் குறைத்துக் கொண்டார்கள். ''நான் இரவு முழுவதும் விடியும் வரைத் தொழுவதற்காக ஒரு கவளம் அன்னத்தைக் குறைவாக உண்ண விரும்புகிறேன். பசி என்பது இறைவனின் கருவூலங்களில் ஒன்றாகும். அதனை அவன் தான் நேசிப்பவர்களுக்கே அருள்கின்றான்'' என்று கூறினார்கள்.

மேலும் அவர்கள் தம் மாணவர்களை நோக்கி ''பசியோடிருங்கள். அது தீய உணர்வுகளைத் தலை தூக்காது தடுப்பதுடன் இதயத்தையும் இதமாக்கி இறைஞான இரகசியங்களை அறிய உங்களுக்கு வழிகோலு கிறது. வணக்கத்தின் இரகசியம் பசியோடிருப்பதுதான்'' என்று அவர்கள் அருள் போதம் செய்தார்கள்.

மேலும் அவர்கள் கூறும் பொழுது ''வயிறு நிரம்ப உண்பவனிடம் சில தீய பண்புகள் குடிகொள்ளத் துவங்கி விடும். 1) நினைவாற்றல் குறைந்துவிடும். 2) இரக்க இயல்பு அவனுடைய உள்ளத்திலிருந்து நீங்கிவிடும். காரணம், தன்னைப் போன்றே ஏனையோரும் நன்கு உண்டு மனநிறைவுடன் இருப்பர் என்று அவன் எண்ணிக் கொள்வதேயாகும். 3) வணக்கம் நிகழ்த்துவது அவனுக்குச் சிரமமாகத் தோன்றும். 4) அவனின்

மனோ இச்சைகள் அதிகரிக்கும். 5) மற்றவர்களெல்லாம் தொழப் பள்ளிவாயிலுக்குச் செல்லும்பொழுது அவன் மலம் கழிக்கச் சென்று கொண்டிருப்பான்'' என்று அவர்கள் எடுத்துரைத்தனர்.

அவர்கள் 'ஹலால்' ஆன நேரிய உணவை உண்பதில் பெரிதும் அக்கரை எடுத்துக் கொண்டார்கள். ''எனக்கு நேரிய (ஹலாலான) உணவு இரவில் கிடைப்பின் பகலெல்லாம் வணங்குவதைவிட அதனையே மேலாக நான் கருதுவேன்'' என்று அவர்கள் ஒரு முறை கூறினர்.

மற்றொரு முறை அவர்கள், ''இறை நம்பிக்கையாளரின் இதயம் திருப்தியுற்று நன்முறையில் மறுமைக்காக வணங்குவதற்கு அவருடைய வயிற்றில் நேரிய வழியில் ஈட்டப்பட்ட உணவு இருப்பது இன்றியமை யாததாகும்'' என்று எடுத்துரைத்தார்கள்.

ஒரு நாள் அவர்கள் ரொட்டிக்கு உப்பைத் தொட்டுக் கொண்டு உண்ணும் பொழுது, அந்த உப்பில் அவர்களுக்கு உரிமையல்லாத ஓர் எள்ளும் இருந்தது. அதையும் சேர்த்து அவர்கள் தின்றுவிட்டார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு ஓராண்டு வரையில் இரவில் வணங்குவது தவறிப் போய்விட்டது'' என்று அவர்கள் கூறினார்கள்.

நீண்ட நாட்களாக அவர்களுக்கு உப்புப் போட்டுச் சுடப்பட்ட ரொட்டியைத் தின்ன வேண்டுமென்று ஆசையாக இருந்தது. ஒரு நாள் அவர்களின் முன் உப்புப் போட்டுச் சுடப்பட்ட சூடான ரொட்டி கொண்டு வந்து வைக்கப்பட்டது. அதை எடுத்து ஒரு பல்லால் கடித்து விட்டுக் கீழே வைத்து விட்டனர். அப்பொழுது அவர்களுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. ''இறைவனே! நான் பல்லாண்டுகளாக உப்புப் போட்டுச் சுடப்பட்ட ரொட்டி உண்ண வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். அதனை நீ இன்று நிறைவேற்றினாய். நான் இப்பொழுது அதற்காக உன்னிடம் பாவ மன்னிப்புக் கோருகிறேன். என்னை மன்னித்து ஆட்கொள்வாயாக!'' என்று அவர்கள் அழுது கொண்டே இறைஞ்சினார்கள். இதன்பின் அவர்கள் தம் வாணாள் முழுவதும் உப்பையோ, உப்புப் போடப்பட்ட உணவையோ உண்ண வில்லை.

''மனிதனின் மேலான செயல் அவன் தன் ஆசையை எதிர்த்து நிற்பது தான்'' என்று அவர்கள் கூறினர். மேலும் அவர்கள் அதைப் பற்றிக் கூறும் பொழுது ''ஒருவன் தன் உள்ளத்திலிருந்து ஆசையை அகற்ற மனப்பூர்வமாக விரும்பின், இறைவன் அவனுடைய உள்ளத்திலிருந்து அதனை அகற்றுகின்றான். ஆனால், அவனே எவனுடைய உள்ளத்தில் ஆசையை வைத்தானோ, அவன் அவ்வாசையைப் பெற்றிருந்ததற்காகத்

தண்டித்து அநியாயம் செய்யமாட்டான்'' என்று தமக்குத் தாம் ஆறுதல் கூறிக் கொண்டார்கள். }

( அவர்கள் உடைகளை மூன்று விதமாகப் பிரித்தார்கள். 1) முற்றிலும் இறைவனுக்காகவே அணியப்படும் உடை. அது ஒருவன் தன் மறைவான உறுப்புகளை மறைப்பதற்காக அணிந்து கொள்ளும் உடையாகும். 2) ஆசைக்காக அணியப்படும் உடை. மென்மையான உடைகளை அணிய மனம் ஆசைப்படுகிறது. அந்த ஆசையைத் திருப்திப்படுத்து வதற்காக ஒருவன் மென்மையான உடைகளை அணிந்து கொள்கிறான். 3) அழகுக்காக அணியப்படும் உடை. நவநவமானவண்ணங்களில் கண்ணைப் பறிக்கும் அழகுடன் காட்சியளிக்கும் உடைகளை அணிந்து கொண்டு ஒருவன் உல்லாசமாக அங்குமிங்கும் திரிகிறான்'' என்று அவர்கள் கூறினார்கள். )

இவற்றில் முதலாவதாக உள்ள உடையையே விரும்பி அணிந்த அவர்கள் ஒருவன் தன்னை சூஃபி என்று காட்டிக் கொள்வதற்காக கம்பளி உடை அணிந்து திரிவதைக்கூட வெறுத்தனர். ஒருவர் அத்தகு முறையில் கம்பளி உடை அணிந்து கொண்டு திரிவதைக் கண்ட அவர்கள், ''நீர் துறவிகளின் உடையைப் பகட்டுக்காக அணிந்து கொண்டு திரிகின்றீரா, என்ன? கம்பளி உடை அணிந்தால் மட்டும் உமக்கு மதிப்பு வந்து சேர்ந்து விடுமா, என்ன? என்று கோபித்துக் கொண்டார்கள்.

அவர் யாதும் பதிலுரைக்காது மௌனமாயிருப்பதைக் கண்ட அவர்கள்,அவரைக் கழிவிரக்கத்துடன் நோக்கி ''இனி மேல் உம்முடைய வெளிப்புறம் பருத்தி நூல் உடையாகவும் உட்புறம் கம்பளி உடையாகவும் இருக்கட்டும்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

''ஒரு துறவி (பக்கீர்)உடைய உடையின் தூய்மை அவரின் உள்ளத் தூய்மையை விட அதிகமாக இருக்கக் கூடாது. அவரின் வெளிக்கோலம் அவரின் உள்ளத்தின் கோலம் போன்றே இருக்க வேண்டும்'' என்று அவர்கள் கூறினர்.

ஒரு நாள் அவர்கள் வெண்மையான ஆடை ஒன்றை அணிந்தனர். அப்பொழுது அவர்கள் தம்மை நோக்கி, ''என் இதயமும் இவ்வாறிருந் தால் எத்துணை நலமாயிருக்கும்'' என்று கூறினர்.

\ துறவு பற்றி அவர்கள் கூறும் பொழுது ''நான் பல பெரியார்கள் வாயிலாகத் துறவு பற்றிய விளக்கத்தைக் கேட்டுள்ளேன். ஆனால் துறவு பற்றிய என்னுடைய கருத்து யாதெனில் ''ஒருவன் தன்னை அல்லாஹ்வை விட்டும் அப்புறப்படுத்தும் அனைத்தையும் விட்டொழிப்பதேயாகும்'' என்று கூறினர். இவ்வாறு கூறிவிட்டுத் தாம் கூறுவதற்கு ஆதாரமாக

இல்லா மன் அ(த்) தல்லாஹ பிகல்பின் ஸலீம்'' (தூய உள்ளத்துடன் அல்லாஹ்விடம் வருபவன்தான் மோட்சமடைவான்) என்ற திரு வசனத்தை ஓதி இங்குத் தூய உள்ளம் என்பது இறைவனைத் தவிர உள்ள வேறு யாதொரு எண்ணத்தையும் பெற்றிராத உள்ளம்'' என்று அவர்கள் விளக்கம் பகர்ந்தார்கள்.)

''துறவைக் கடமையானது, விருப்பத்தைப் பொறுத்தது, எளிதானது என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்'' என்று கூறிய அவர்கள், ''ஒருவனின் உள்ளத்தை இறை நினைவிலிருந்து திருப்பும் அனைத்தும் - அவனுடைய உடைமைகளும் மனைவி, மக்களும் கூட அவனுக்குத் துன்பம் பயப்பனவேயாகும்'' என்று கூறினார்கள்.

உடைமைகளும் மனைவி மக்களும் என்ன, சுவனத்தையும் அதிலுள்ள இன்ப சுகங்களையும் வெறுத்துத் தள்ளியவர்களும்கூட, மனிதர்களில் இருந்தார்கள், அத்தகையோரை இவ்வுலகத்தாலும், இதிலுள்ள இன்ப சுகங்களாலும் என்ன கவர்ச்சி செய்ய இயலும்?'' என்று அவர்கள் கூறினார்கள்.

திருமணம் செய்து கொள்வதில் கூட ஒருவன் துறவு மனோ நிலையை மேற்கொள்ளலாம். அது என்னவெனில் செல்வர் மகளையோ அழகு மங்கையையோ தேடித்திரியாது அழகற்ற பெண்களையோ அநாதைப் பெண்களையோ மணமுடித்துக் கொள்வதேயாகும்'' என்று அவர்கள் கூறினர்.

ஒரு நாள் அவர்கள்தம் மாணவர்களை நோக்கி, ''மாண்புமிகு அல்லாஹ், தன் அடிமைகளில் எவன் தன்பால் திருப்தியுடன் உள்ளானோ அவன்பால் அவனும் திருப்தியுடன் உள்ளான்'' என்று கூறினர். அப்பொழுது மாணவர்களில் ஒருவர் அவர்களை நோக்கி ''அது எவ்வாறு?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''ஓர் அடிமை தன் எசமானன் தன் மீது திருப்தியுடன் இருக்க வேண்டுமென்று விரும்புவ தில்லையா?'' என்று வினவினர். ''ஆம்'' என்றார் அவர். ''அதே போன்று இறைவனும் உம்மீது திருப்தியுறும் வண்ணம் நீரும் இறைவன் விட்ட விதியை மனநிறைவுடன் ஏற்று அவன் இட்ட கட்டளைகளைச் சிரமேற்றுச் செயலாற்றி வருவீராக! அதுவே நீர் அவனுடன் திருப்தி யுற்றிருப்பதற்கு அடையாளமாகும். அவ்விதம் நீர் செய்யின் இறைவனும் உம்மீது திருப்தியுறுவான்'' என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்.

மற்றொருவர் அவர்களிடம் வந்து அறிவுரை வேண்டிய பொழுது ''உமக்கு என்னதான் ஏற்படினும் அது இறைவனின் நாட்டப்படி நடந்தது என்று எண்ணிப் பொறுமையாய் இரும். இறைவனாலன்றி வேறு

எவராலும் உமக்கு எத்தகு தீங்கும் செய்ய இயலாது என்பதை உணரும்'' என்று அவர்கள் கூறினர்.

இறைவன் விட்ட விதியை மனநிறைவுடன் ஏற்றுக் கொள்வது போன்ற மாண்பாரும் பண்பு வேறொன்றுமில்லை என்பது அவர்களின் கருத்தாகும். எனவேதான் ''இறைவன் அனைத்து மக்களையும் சுவனம் புகச் செய்துவிட்டு என்னை மட்டும் நரகப் படுகுழியில் தூக்கிஎறிந்தாலும் நான் மனநிறைவோடிருப்பேன்'' என்று அவர்கள் ஒரு தடவை கூறினார்கள்.

ஒரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''என்னுடைய நப்ஸை நான் கேவலமாக ஆக்கியது போன்று உலகத்தார் என்னை அத்துணைக் கேவலமாக ஆக்க இயலாது'' என்று கூறினர்.

அவர்கள் ஷரீஅத்தை அணுவத்தனையும் பிசகாது பின்பற்றி வந்தார்கள். எனவே ஒரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''சூஃபிகளுடைய வார்த்தைகளை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன் - அவற்றிற்கு இரண்டு சாட்சிகள் இருக்கும் வரை, அந்த சாட்சிகளில் ஒன்று, இறைவனின் திருமறையாகிய அல்குர் ஆன். மற்றொன்று இறுதி நபியின் சொல்லும் செயலுமாகிய அல்ஹதீஸ்'' என்று அவர்கள் கூறினர்.

''மெய்ஞ்ஞானிகளுக்கு அகக்கண் திறந்ததும் வெளிக்கண் பார்வை இழந்து விடுகிறது. எனவே அவர்களுடைய கண்களுக்கு இறைவனைத் தவிரவுள்ள வேறு யாதொன்றும் தென்படுவதில்லை'' என்று அவர்கள் கூறினார்கள்.

''இறையன்மையை எய்தப் பெறுவதற்குச் சிறந்த வழி யாது? என்று அவர்களிடம் வினவப்பட்டதற்கு ''இறைவன் ஒருவனின் உள்ளத்தை நோட்டமிடும் பொழுது அதில் அவன் இம்மையிலும் மறுமையிலும் விரும்புவது இறைவனைத் தவிர வேறொன்றுமில்லை என்று இருக்க வேண்டும். இது தான் இறையன்மையை எய்த விரும்பும் உண்மையான இறைநேசர்களின் அடையாளமாகும். அவர்கள் செய்வது அனைத்தும் இறைவனுக்காகவே இருக்கும்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

''ஓர் ஏழை ஒரு பொருளைப் பெரிதும் விரும்பி அதனை அவனால் அடைய முடியாதபொழுது, அவன் ஏக்கத்தாலும் துன்பத்தாலும் விடுகிற ஒரு பெருமூச்சானது, செல்வந்தனின் ஆயிரம் ஆண்டு வணக்கத்தைவிட மேலானதாகும்'' என்றும் அவர்கள் கூறினர்.

''ஒருவன் தன் வயதை வீணாகச் செலவழித்து விட்டதற்காக அழுவானாயின், அந்த அழுகை அவன் இறக்கும் வரையில் அவனுக்குப் போதுமானதாயிருக்கும்'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஒருவர் அவர்களிடம் வந்து தமக்கு அறிவுரை பகருமாறு வேண்டினார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நீ ஒரு பாவச் செயலைத் தனித்ததோர் இடத்தில் செய்ய விரும்பிய போதினும், அங்கும் அல்லாஹ் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று எண்ணு வாயாக! நீ ஒரு பெரும்பாவச் செயலைச் செய்துகொண்டு அல்லாஹ்வுக்கு அது தெரியாமல் போய்விடும் என்று எண்ணுவாயாயின் நீ காஃபிராகி விடுவாய்'' என்று அறபோதம் நல்கினார்கள்.

பாவங்களைத் தவிர்த்து நற்செயல்களை ஆற்றி வருமாறு மக்களுக்கு அடிக்கடி அறிவுரை பகர்ந்து வந்த அவர்கள், ''பகலில் நற்செயல்களை ஆற்றுபவர்கள் இரவில் இறைகாவலில் இருக்கின்றனர். இரவில் நற்செயல்களை ஆற்றுபவர்கள் பகலில் இறைகாவலில் இருக்கின்றனர்'' என்றும் எடுத்துரைத்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் இம்மையையும் மறுமையையும் பற்றி எடுத்துரைக்குங்கால் ''ஒருவனின் உள்ளத்தில் மறுமை பற்றிய எண்ணமே மிகைத்திருப்பின் இம்மை அவன் முன் வந்து நிற்கிறது. அதற்கு மாறாக, அவனுடைய உள்ளத்தில் இம்மை பற்றிய எண்ணமே மிகைத்திருப்பின் மறுமை அவன் முன் வந்து நிற்பதில்லை. ஏனெனில் மறுமை கண்ணிய மிகுந்ததாகும். இம்மை இழிவுடைத்ததாகும்'' என்று கூறினார்கள்.

அவர்கள் அல்லும் பகலும் இறைவனை அயராது தொழுது வந்தார்கள். நான்கு அல்லது ஐந்து இரவு தொடர்ச்சியாக ஒரே ஒரு திருவசனத்தையே ஓதி அதிலே இலயித்து நின்று அவர்கள் இறைவனைத் தொழுதார்கள். அவர்கள் இறைவனை கௌஃபோடும் (அச்சத்தோடும்) ரஜாவோடும் (நம்பிக்கையோடும்) வணங்கி வந்தார்கள். இறைவழியில் செல்வோருக்கு, இறைவனைத் தேடுபவர்களுக்கு அவை இரண்டும் அமைந்திருப்பது இன்றியமையாததாகும் என்று அவர்கள் கருதினர்.

அவர்கள் ஹஜ்ஜுக்காகவோ, உம்ராவுக்காகவோ அல்லது இரண்டுக்கும் சேர்த்தோ 'இஹ்ராம்' அணிந்த பொழுது தல்பிய்யா கூற அஞ்சினர் என்று அஹ்மத் இப்னு ஹவாரி கூறுகிறார். காரணம், மூஸா (அலை) அவர்களுக்கு இறைவன் அனுப்பிய செய்தியில் ''உம்மைப் பின்பற்றியவர்களில், அநியாயக்காரராய் உள்ளோர் என்னை நினைக்க வேண்டாம். அவர் என்னை நினைப்பின் நான் அவரைச் சபிப்பேன்'' என்று கூறியுள்ளதேயாகும். மேலும் அவர்கள் ''ஐயத்திற்கு இடமான பொருளைக் கொண்டு 'ஹஜ்'ஜுச் செய்யும் ஒருவன் 'லப்பைக்' (அடி பணிந்தேன்) என்று தல்பிய்யா கூறின் இறைவன் 'லா லப்பைக்' (அடி பணியவில்லை) என்று கூறி விடுவான்'' என்று அவர்கள் அச்சத்துடன் கூறினர்.

ஹுஸைல் அயால் என்பவரின் மகன் திருக்குர்ஆனிலுள்ள தண்டனைகள் பற்றிய திருவசனங்களைக் கேட்டு அஞ்சி நடுங்குவார் என்பதைக் கேள்வியுற்ற ஒருவர், அதுபற்றி ஹுஸைல் அயாலிடம் வினவிய பொழுது, ''ஆம்; உண்மைதான். அவன் செய்த சிறிதளவு பாவத்தால், அவனுக்கு அத்துணை அச்சமும் நடுக்கமும் ஏற்படுகின்றன'' என்று கூறினார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொருவர் இதனை அபூசுலைமான் தாரானி (ரஹ்) அவர்களிடம் வந்து கூறிய பொழுது ''அவன் பாவம் அதிகமாக செய்திருந்தால் தான் அவனுக்கு அத்துணை அதிகமான அச்சமும் நடுக்கமும் ஏற்பட்டிருக்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

வேறொருவர் அவர்களிடம் வந்து கௌஃபை (இறையச்சத்தை) விட ரஸா (இறையருளில் நம்பிக்கை) தான் மேலானது என்று ஸாலிஹ் இப்னு அப்துல் கரீம் கூறியதை எடுத்துரைத்த பொழுது ''ரஸாவை விட கௌஃப்தான் மேலானது. கௌஃபினால் தான் மனிதன் தொழவும் வணங்கவும் நோன்பு நோற்கவும் செய்கிறான். ரஸா மிகைத்துவிடின் அவனுடைய உளம் தடித்து விடும். அதன் காரணமாக அவன் யாதொரு நற்செயலும் ஆற்றமாட்டான். கௌஃப் இல்லையெனில் இதயம் கெட்டு விடும். ஆதலில் ரஸாவின் மீது செயலாற்றின் நீங்கள் கௌஃபின் மீதும் செயலாற்றுங்கள், உய்வீர்கள்'' என்று எடுத்துரைத்தார்கள்.

''சுவனத்திற்கு வேட்கையுற்றோ நரகத்திற்கு அஞ்சியோ நீர் இறைவனை வணங்க வேண்டாம். இறைவனின் அடிமை என்ற முறையில் நீர் அவனை வணங்கி வருவீராக!'' என்று அவர்கள் தம்மிடம் அறிவுரை வேண்டிய ஒருவரிடம் கூறினார்கள்.

ஒரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி ''நான் கலீபாவிடம் நேரில் சென்று அவர் செய்யும் தவறுகளை எடுத்துரைத்து அவரைக் கண்டித்து விட்டு வரலாமென்று எண்ணினேன். அவ்விதம் செய்யின் அவர் என்னைக் கொன்றாலும் கொன்று விடலாமென்பதும் எனக்குத் தெரியும். அதற்காக நான் சிறிதும் அஞ்சவில்லை. ஆனால் மக்கள் அதனைப் பார்ப்பின் என் மனத்திற்குள் ஒருவித மகிழ்வேற்படும். அது நான் அல்லாஹ்வுக்காகத் தூய உள்ளத்துடன் செய்யும் அச்செயலை மாசுறச் செய்து என்னைக் கொன்றுவிடுமே என்று அஞ்சினேன்'' என்று எடுத்துரைத்தார்கள்.

பிறர் மெச்ச வணக்கம் நிகழ்த்துவது போன்று தன்னையே தான் மெச்சிக் கொள்ளும் வண்ணம் வணக்கம் நிகழ்த்துவதும் தவறுஎன்று அவர்கள் கருத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அவர்களின் சீடர் அஹ்மது இப்னு ஹவாரி, அவர்களை அணுகி தாம் சென்ற இரவு தனித்து

பொருளடக்கம்



நின்று வணங்கியதாகவும் அதன் காரணமாகத் தமக்கு பெருமகிழ்வு ஏற்பட்டதாகவும் கூறிய பொழுது "நீர் இன்னும் பலவீனராகவல்லவோ உள்ளீர். மனிதர்களை மனத்தில் எண்ணிக் கொண்டல்லவோ நீர் வணங்குகின்றீர் போல் தோன்றுகிறது. இறைவனைத் தவிர வேறொன்றும் உள்ளத்தில் இல்லாத பொழுது வெளியில் தொழுதபோதினும் மறைவில் தொழுதபோதினும் மகிழ்வதற்கு என்ன இடம்பாடு உள்ளது?'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஒரு தடவை அவர்கள் ஒரு கழுதையின் மீது இவர்ந்து சென்றார்கள். அப்பொழுது அது மெதுவாகச் சென்றதற்காகவோ அல்லது வேறு எக்காரணத்திற்காகவோ அதனை இரண்டு அல்லது மூன்று தடவை சவுக்கால் அடித்தனர். அப்பொழுது அது தன் தலையை உயர்த்தி அவர்களை முறைத்துப் பார்த்தது. அதனுடைய பார்வை "அபூசுலைமானே! பழிக்குப் பழி வாங்குவதெல்லாம் மறுமையில் தான் என்பதை நீர் மறந்து விடாதீர். எனவே நீர் என்னை அதிகமாக அடிக்க விரும்பின் அடித்துக் கொள்ளும்; குறைக்க விரும்பின் குறைத்துக் கொள்ளும்'' என்று அவர்களைப் பார்த்துக் கூறியது போன்றிருந்தது. அது கண்டு அவர்கள் அதிர்ந்து போனார்கள். இதன்பின் ஓர் ஈ, எறும்புக்குக் கூட துன்பம் இழைக்காது அருள் வாழ்வை அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர்கள் அடைந்த ஆன்மீக உச்சமோ அளப்பரியதாகும். அதனைப் பாமர மக்கள் சரியாக விளங்கிக் கொள்ள இயலாது அவர்களைத் தவறாகக் கருதினர். ஒரு தடவை அவர்கள் தம்முடைய ஆன்மீகப் பயணத்தில் நுகர்ந்த அனுபவம் ஒன்றைத் தாம் வானவர்களைச் சந்தித்ததாகவும் அவர்கள் தம்முடன் உரையாடியதாகவும் கூறிய பொழுது மக்கள் அவர்களைத் திமிஷ்கிலிருந்து விரட்டியடித்தார்கள். எனினும் அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. இறைவன் ஒருவனையே நம்பி அவன் ஒருவனுக்கே அஞ்சி வாழ்ந்த அவர்கள் மக்களின் வெறுப்பையோ, விரோதத்தையோ பொருட்படுத்தாததில் எவ்வித வியப்புமில்லை.

அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடக்கும் பொழுது, அவர்களின் மாணவர்கள் அவர்களை அணுகி, "தாங்கள் மன்னித்தருளும் மாபெரும் அல்லாஹ்விடம் செல்லப் போகிறீர்கள். அதற்கு முன் எங்களுக்கு அறிவுரை நல்கி விட்டுச்செல்லுங்கள்'' என்று வேண்டிய பொழுது "சிறு பாவங்களுக்குக் கணக்குக் கேட்கவும், பெரும்பாவங்களுக்கு தண்டனை அளிக்கவும் வல்ல அல்லாஹ்விடம் செல்கிறீர்கள் என்று நீங்கள் ஏன் கூறவில்லை'' என்று அவர்கள் கேட்டார்கள்.

பொருளடக்கம்



இவ்வாறு இறைவனுக்கு அஞ்சி, இறை தண்டனைக்கு அஞ்சி அருள் வாழ்வு வாழ்ந்து வந்த அவர்கள், ''இறைவனின் நல்லடியார்களுக்கு இவ்வுலகம் ஒரு சிறைச்சாலை; இறப்பு அவர்களுக்கு விடுதலை'' என்று அடிக்கடி கூறி வந்தனர். ஓரிரவு சிலர் அவர்களைப் பறந்து கொண்டிருப்பது போன்று கனவு கண்டு, அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவிய பொழுது ''நான் இப்பொழுது தான் சிறையிலிருந்து விடுதலையாகியுள்ளேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். விடிந்ததும் அவர்களைப் பற்றி விசாரிப்பதற்காக அவர்கள் அவர்களின் இல்லம் வந்த பொழுது அவர்கள் அன்றிரவு இறப்பெய்தி விட்டதாகத் தெரிய வந்தது. இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 205 ஆம் ஆண்டிலாகும்.

# 9. புலைல் இப்னு இயால் (ரஹ்)

**கா**னகத்தின் நடுவே ஒரு கூடாரம். அதிலே ஒருவர் அழுக்கடைந்த முரட்டுத் துணியை அணிந்து கொண்டு தலையில் ஒரு பழைய தொப்பி யுடனும் கழுத்திலே ஒரு பெரிய ஜபமாலையுடனும் காணப்படுகின்றார். மற்றொரு ஜபமாலை அவரின் விரல்களுக்கிடையே விளையாடிக் கொண்டுள்ளது. அவருடைய வாய் ஏதேதோ முணுமுணுத்த வண்ண முள்ளது. அப்பொழுது ஒருவர் அவரை அணுகி, ''பெரியீர், தங்களை நான் இக்கானகத்தின் நடுவே கண்டது கடவுளையே கண்டது போன்றுள்ளது. வணிகக் குழுவினருடன் சேர்ந்து நானும் வருங்கால் இக்கானகத்தில் கொள்ளைக் கூட்டத்தினர் அதிகமென்றும் அவர்கள் இவ் வழியே வரும் வணிகக் குழுவினரை வழிப்பறி செய்து வாழ்வதையே தங்களின் வாழ்வின் தொழிலாகக் கொண்டுள்ளனர் என்றும் கேள்வியுற்றேன். அதனைக் கேள்வியுற்ற அக்கணத்திலிருந்து எனக்கு அமைதியே இல்லை. 'இறைவனே! நான் என் செய்வேன். என்னிடமோ அதிகப் பணம் உள்ளதே. அதனை நான் எவ்வாறு காப்பேன்' என்று எண்ணி ஏங்கிய வண்ணம் வருங்கால் தங்களை இக்கூடாரத்திற்குள் அருளே உருவெடுத்தாற் போன்று அமர்ந்திருப்பதைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை. இறைவனின் திருவருளை எண்ணி, எண்ணி வியந்தவண்ணம் அவ்வணிகக் குழுவை விட்டுப் பிரிந்து தங்களிடம் வந்துள்ளேன். இதோ என் பணப்பை உள்ளது. இதனைத் தங்களிடம் அடைக்கலமாக ஒப்படைக்கின்றேன்'' என்று கூறினார். அது கேட்டு அக்கூடாரத்தில் அமர்ந்திருந்த அப்பெரியார் அப்பொருளை ஒரு பொருட்டாகக் கருதாது ஜபமாலையை உருட்டிய வண்ணம், ''அதோ, அம்மூலையில் அதனை வைத்துவிட்டுச் செல்லும்'' என்று சாடை செய்தார். அவரும் அவ்வாறே செய்துவிட்டுப் பின்னர் வந்து பெற்றுக் கொள்வதாகக் கூறிச் சென்றார். கூடாரத்தில் அமர்ந்திருந்த பெரியாரும் அதற்குச் சரி கண்டது போன்று தலையை அசைத்தார்.

திரும்பிச் சென்ற அவர் தாம் சேர்ந்து வந்த வணிகக் குழுவினரை அடைந்த பொழுது அவர்கள் அங்குமிங்கும் சிதறுண்டு சின்னாபின்னப்

பட்டுக் கிடந்ததைக் கண்டதும், அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. தாம் எண்ணியது நிகழ்ந்து விட்டதை எண்ணி அவர் வருந்தினார். தாம் அவர்களை விட்டுப் பிரிந்து சென்ற நேரத்தில் கொள்ளைக் கூட்டத்தினர் அவர்களைத் தாக்கி அவர்களின் உடைமைகளையெல்லாம் கொள்ளை யிட்டுச் சென்று விட்டார்கள். அவர்கள் விட்டுச் சென்ற பொருள்களில் அங்குமிங்கும் சிதறிக் கிடந்த தம்முடைய பொருள்களில் சிலவற்றை ஒருங்கு சேர்த்து மூட்டைக் கட்டிக் கொண்டு தம்முடைய பணத்தை அப்பெரியவரிடமிருந்து வாங்கிச் செல்லலாமென்று திரும்பி அக் கூடாரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார் அவர். அப்பொழுது அவருடைய உள்ளம் தமக்குத் தக்க சமயத்தில் நல்லறிவைத் தந்து தம் பணத்தைத் தமக்குக் காப்பாற்றித் தந்த இறைவனுக்கு ஆயிரம் ஆயிரம் முறை நன்றி செலுத்தியது.

இப்பொழுது கூடாரத்தை நெருங்கிவிட்டார் அவர். கூடாரத்தில் அவர் கண்ட காட்சியோ அவரைப் பெரிதும் அதிர்ச்சியடையச் செய்தது. அப்படி அவர் கூடாரத்தில் என்ன கண்டார்? தாம் சேர்ந்து வந்த அவ்வணிகக் குழுவைக் கொள்ளையிட்டுச் சென்ற அக்கொள்ளைக் கூட்டத்தினர் அக்கூடாரத்தில் அமர்ந்து தாங்கள் கொள்ளையிட்டு வந்த பொருள்களையெல்லாம் தங்களுக்கிடையே பங்கு வைத்துக் கொண் டிருந்தார்கள். அதைக் கண்டதும் அவருடைய இதயம் துன்பம் தாள இயலாது சுக்கு நூறாகத் தெறித்துவிடும் போன்று அத்துணை வேகமாகத் துடித்தது. அளவுக்கதிகமான இரத்த அழுத்தத்தின் காரணமாக அவர் மயங்கிக் கீழே விழும் நிலையிலானார்.

அப்பொழுது கூடாரத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது. 'இங்கே வாரும்' என்று அது கம்பீரமாக முழங்கியது. கண்களை விரித்துப் பார்த்தார் அவர். அவ்வாறு முழங்கியவர் வேறு எவருமல்ல. தாம் எவரிடம் அடைக்கலமாகத் தம் பொருளை விட்டுச் சென்றாரோ, அப்பெரியவர்தாம்.

தம்மை எதற்காக அவர் அழைக்கின்றார்? தம் பணத்தைத் தம்மிடம் திருப்பித் தரவா? அல்லது தம் பணத்தோடு தம் உயிரையும் வாங்கிக் கொள்ளவா? என்று ஒருகணம் அவர் எண்ணினார். அதன்பின் என்ன நிகழ்ந்தாலும் நிகழட்டும் என்று எண்ணியவராய் மெது மெதுவாக அடியெடுத்து வைத்து கூடாரத்திற்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும், அக்கூடாரத்தில் அமர்ந்து தாம் கொள்ளையிட்டு வந்திருந்த பொருள்களைப் பங்கு வைத்துக் கொண்டிருந்த கொள்ளைக் கூட்டத்தினர் அனைவரும் அவரை வெறிக்க வெறிக்கப் பார்த்தனர்.

ஆனால் அப்பெரியவரோ அவரைக் கனிவோடு நோக்கி, 'எதற்காக வந்தீர்?' என்று வினவினார். 'என் பணத்தைப் பெற்றுச் செல்வதற்காக' என்று மறுமொழி பகர்ந்தார் அவர். அதுகேட்ட அப்பெரியார், 'அதோ நீர் வைத்த இடத்தில் அது உள்ளது. எடுத்துச் செல்லும்' என்று கூறினார். அப்பொழுது தான் அவருக்கு உயிர் வந்ததுபோல் இருந்தது. தம் பணத்தை எடுத்துக் கொண்டு அப்பெரியவருக்கு நன்றி செலுத்திவிட்டு விறுவிறுவென வெளியே சென்றார் அவர். இதனை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தனர் அக்கள்வர்கள்.

அவர் சென்று மறைந்தபின் அவர்கள் அப்பெரியவரை அணுகி, ''நாம் நடத்திய இக்கொள்ளையில் நமக்குப் பொருள்கள் கிடைத்தனவே யொழிய, யாதொரு பணமும் கிடைக்கவில்லையே. அப்படி இருக்க, இறைவனே நமக்குத் தந்தாற் போன்று கிடைத்த பணத்தை ஏன் தாங்கள் அவரிடம் திருப்பிக் கொடுத்தீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அப்பெரியார், ''அம்மனிதர் என்மீது நன்னம்பிக்கை கொண்டு அதனை என்னிடம் அடைக்கலமாக ஒப்படைத்து விட்டுச் சென்றார். அதற்கு நான் மாறு செய்ய விரும்பவில்லை'' என்று பதில் கூறினர். கேட்ட கள்வர்கள் வாயடைத்து வீற்றிருந்தார்கள்.

மற்றொரு நாள் அவ்வழியே வந்த வேறொரு வணிகக் குழுவினரைக் கொள்ளையிட்டனர் அக்கள்வர்கள். அப்பொழுது அவர்கள் அனைவரும் அங்கு உணவுண்ண அமர்ந்த காலை, அவர்களுக்குத் தலைவராக ஒருவரும் இல்லாததைக் கண்ட அவ்வணிகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் 'தங்களுக்குத் தலைவர் இல்லையா?' என்று வினவினார். 'ஏன் இல்லை?' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள். 'அவ்விதமாயின் அவர் எங்கே?' என்று வினவினார் அவர். 'கடலோரத்தில் அமர்ந்து அவர் தொழுது கொண்டுள்ளார்' என்று அவர்கள் பதில் கூறினார்கள். அதுகேட்டு அவ்வணிகருக்குப் பெரும் வியப்பேற்பட்டது. 'இது தொழும் நேரமல்லவே' என்று வியப்பு மொழி பகர்ந்தார் அவர். 'ஆம்; அதனாலென்ன? நஃபில் தொழவுமா கூடாது. அவர் நஃபில் தொழுது கொண்டுள்ளார்' என்று பதிலிறுத்தனர் அவர்கள். 'அவர் உங்களுடன் சேர்ந்து உணவுண்ண வரவில்லையா?' என்று வணிகர் மீண்டும் வினவினார். 'அவர் நோன்பு நோற்றுள்ளார்' என்று பதிலிறுத்தனர் கள்வர்கள். 'என்ன! இது ரமலான் மாதமல்லவே' என்று வணிகர் வினவ, 'ஆம்; அதனாலென்ன, நஃபில் நோன்புமா நோற்கக் கூடாது? அவர் நஃபில் நோன்பு நோற்றுள்ளார்' என்று மறுமொழி பகர்ந்தார்கள் கள்வர்கள்.

கள்வர்களின் இப்பதில்கள் அவ்வணிகரின் வியப்பைக் கணத்திற்குக் கணம் அதிகமாக்கியது. இவர்களோ கொள்ளைக் கூட்டத்தினர். இறைவனுடைய திருமறைக்கும் இறை தூதருடைய திருவாக்குக்கும் மாறாகச் செயலாற்றுபவர்கள். இவர்களின் தலைவருடைய செயல்களைப் பார்த்தால் இறைநேசச் செல்வர்களுடைய செயல்கள் போன்றுள்ளனவே. இஃதென்ன புதுமை! கொள்ளையடிப்பதற்கும் தொழுவதற்கும் நோன்பு நோற்பதற்கும் என்ன தொடர்போ தெரியவில்லையே. அவரை நேரில் பார்த்து அவரிடமே இக்கேள்வியைக் கேட்க வேண்டும் என்று அவருடைய உள்ளத்தில் அடங்கா ஆவல் ஏற்பட்டது. அவர்களின் தலைவரைத் தாம் காண விரும்புவதாகவும் அவரிடம் தம்மை அழைத்துச் செல்லுமாறும் அவர் அவர்களை வேண்டினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

அவர்கள் கூறியவண்ணம் ஒரு பெரியார் அலைவாய்க் கரையின் அழகிய வெண்மணற் பரப்பிலே நின்று இறைவனைத் தொழுது கொண்டிருந்தார். இவர்கள் வந்திருப்பதை உணர்ந்ததும் தொழுகையை விரைவில் முடித்துக் கொண்டு இவர்களுக்கு 'ஸலாம்' உரைத்த அவர் ஆங்கு வேற்று மனிதர் ஒருவரைக் கண்டதும் அவரை நோக்கி ''வந்த அலுவல் யாதோ?'' என்று வினவினார். ''ஐய! தங்களிடம் நான் ஓர் ஐயம் வினவ வந்துள்ளேன்'' என்று கூறிப் பேச்சைத் துவங்கிய அவ்வணிகர், ''தாங்களோ சிறந்த வணக்கவாளராக உள்ளீர்கள். தங்களின் கூட்டத்தினரோ மக்களைக் கொள்ளையடித்து வாழும் மாபாதகச் செயலைச் செய்கின்றனர். இரண்டிற்கும் என்ன ஒற்றுமை என்று எனக்கு விளங்கவில்லை. இதனைத் தாங்கள் எனக்குத் தெளிவுபடுத்த வேண்டும்'' என்று விநயத்துடன் வேண்டி நின்றார். அதற்கு அக்கொள்ளைக் கூட்டத்தின் தலைவர், ''பவம் பொறுத்தருளுமாறு இறைஞ்சும் சிலர் நற்செயல்களோடு தீய செயல்களையும் கலந்து செய்கின்றார்கள்'' என்ற கருத்துப்பட உள்ள இறை திருவசனத்தை நீர் ஓதவில்லையா? எம் போன்ற பாவிகளின் பவம் பொறுக்கும் பேரருளாளன் அவனல்லவா? அவனிடம் நாம் செய்யும் பாவங்களை மன்னிக்குமாறு முறையிடின் அவன் அவற்றை மன்னிக்கப் போதுமானவன். அவனுடைய பேரருளில் நாம் ஏன் அவநம்பிக்கை கொள்ள வேண்டும்?'' என்று வினவினார். அது கேட்டு அவ்வணிகருக்கு யாது பதிலுரைப்பதென்றே விளங்கவில்லை.

இவ்வாறு அவ்வணிகரை மடக்கி அவரை வாயடைக்குமாறு செய்த அக்கொள்ளைக் கூட்டத்தின் தலைவர் தாம் பிற்காலத்தில் மாபெரும் இறை நேசச் செல்வராக ஆன புலைல் இப்னு இயால் (ரஹ்) அவர்களாவார்கள். தலகான் என்ற இடத்தில் வாழ்ந்து வந்த தமீம் கிளையில் தோன்றிய இவர்கள் துவக்கத்தில் ஒரு கொள்ளைக் கூட்டத்தின்

தலைவராக இருந்த போதினும் அதிலும் ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்றி வந்தார்கள். ஒரு வணிகக் குழுவில் பெண்கள் காணப்படின் அக்குழுவை அவர்கள் ஏறிட்டும் பார்ப்பதில்லை. சிறிதளவு முதலைப் பெற்றுள்ள வணிகர்களை அவர்கள் சிறிதளவும் தீண்டுவதுமில்லை. பெரும் அளவில் முதலைப் பெற்றுள்ள வணிகர்களிடமிருந்து அவர்களின் முதலில் பெரும் அளவைப் பறித்துக் கொண்டு அவர்கள் பின்னர் தொழில் துவங்குவதற்குத் தோதாக அவர்களிடம் சிறிதளவு முதலை விட்டுச் செல்வார்கள். கிடைத்த கொள்ளைப் பொருள்களில் சிலவற்றைத் தங்களிடையே பங்கு வைத்துக் கொண்டு, ஏனையவற்றை ஏழை எளியவர்களுக்கு அறம் செய்து விடுவார்கள். எப்பொழுதும் கூட்டு (ஜமாஅத்) தொழுகையே தொழும் வழக்கத்தை மேற்கொண்டிருந்த அவர்கள், தம் குழுவில் எவரேனும் தொழாதவர் இருப்பின் அவரைத் தம் குழுவிலிருந்தே நீக்கி விடுவார்கள்.

ஒருநாள் ஒரு வணிகர் தம் சரக்குகளுடன் மெர்விலிருந்து புறப் பட்டார். அப்பொழுது அவரின் நண்பர்கள் ''வழியில் கொள்ளைக் காரர்கள் இருக்கின்றனர். ஆதலின் பாதுகாப்புக்காக ஆயுதம் தாங்கிய சிலரை அழைத்துச் செல்லும்'' என்று அவரிடம் கூறினர். அதற்கு அவர், ''கொள்ளைக் கூட்டத் தலைவரான புலைல் இறையச்சமுள்ளவர் என்று கேள்வியுற்றுள்ளேன். ஆதலின் அவரால் எனக்கு எத்தகைய தீங்கும் ஏற்படாதென்று கருதுகின்றேன்'' என்று கூறினார். நண்பர்கள் மறுவார்த்தை பேசவில்லை. அவருடைய விதி போல் நடந்து விட்டுப் போகட்டும் என்று எண்ணிக் கொண்டு தம் இல்லம் சென்றனர்.

அந்த வணிகரோ குர்ஆனை இனிய குரலெடுத்து ஓதும் ஒரு *'காரி'*யைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அவருக்கு அவர் இட்ட பணி வழிநெடுக குர்ஆனை இனிய குரலுடன் இரைந்து ஓதிக் கொண்டு வரவேண்டும் என்பதாகும். அவ்வாறே அவர் செய்து வந்தார்.

ஓரிரவு புலைல் (ரஹ்) அவர்கள் தாம் காதலித்து வந்த ஒரு பெண்ணைப் பார்ப்பதற்காக மதிலின் மீது ஏறியபொழுது அவ்வழியே சென்ற அந்த வணிகக் குழுவிலுள்ள காரி, ''விசுவாசங் கொண்டவர்களின் இதயங்கள் அல்லாஹ்வை நினைத்தும் அவன் இறக்கி வைத்த சத்தியங் களை கவனித்தும் பயப்படக் கூடிய நேரம் (இன்னும்) வரவில்லையா?'' (57:15) என்ற இறைவசனத்தை ஓதிக் கொண்டு சென்றது அவர்களின் உச்சியைப்பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கியது போன்றிருந்தது. அது கேட்டதும் அவர்கள் தங்களையறியாமல், ''இறைவனே! அந்நேரம் வந்து விட்டது. இறைவனே! அந்நேரம் வந்து விட்டது'' என்றுஅலறினார்கள். அதன்பின் அவ்விடத்தை விட்டும் வெருண்டோடி, கானகத்தின் நடுவே

உள்ள ஒரு பாழ்மண்டபத்தில் அவ்விரவைக் கண்ணீருடனும் கம்பலை யுடனும் கழித்தார்கள்.

நள்ளிரவுக்குச் சற்று முன் அப்பாழ் மண்டபத்தின் அண்மையில் மற்றொரு வணிகக் குழு வந்து சேர்ந்தது. அப்பொழுது அவ்வணிகக் குழுவின் தலைவர் மற்றவர்களை நோக்கி, ''நாம் இங்கு இராத் தரித்துவிட்டுச் செல்வோம். இல்லையெனில் வழியில் நம்மை புலைல் மறித்துக் கொள்ளையிட்டாலும் கொள்ளையிடலாம்'' என்று கூறினார். இதைக் கேட்டதும் புலைல் (ரஹ்) அவர்களுக்கு ஆற்றொணா அழுகை வந்தது. விக்கி, விக்கி அழுதவண்ணம் அவர்கள் வெளியே வந்து, ''அந்தப் பாவி புலைல் நான் தான். அவன் தன் பாவச் செயலுக்காக வருந்தி இறைவனிடம் பாவ மன்னிப்புக் கேட்டு நேர்வழியில் மீண்டான். இனிமேல் அவன் தீய வழியை ஏறிட்டும் பாரான். எனவே நீங்கள் இனிமேல் அவனைப் பற்றி அணுவத்தனையும் அஞ்ச வேண்டாம். நலமாகச் சென்று வாருங்கள்'' என்று கூறினார்கள். அதுகேட்ட அவ்வணிகக் குழுவினர் அனைவரும் வியப்புக் கடலில் மூழ்கி நின்றனர்.

இது முதல் அவர்களின் வாழ்விலே ஒரு மாபெரும் திருப்பம், மகோன்னத மாறுதல் ஏற்பட்டது. நரகப் படுகுழியை நோக்கி, வேகமாக நடந்து கொண்டிருந்த அவர்கள் திடீரெனத் தம் போக்கை மாற்றிச் சுவனப் பூங்காவை நோக்கி விறுவிறென நடந்து செல்லத் துவங்கினார்கள். தம்மால் தீங்கிழைக்கப்பட்டவர் ஒவ்வொருவரையும் தேடிக் கண்டு பிடித்து அவர்களிடம் தம் பவம் பொறுத்தருளுமாறு வேண்டினார்கள். அவர்களும் அவர்கள் மீது இரங்கி அவ்வாறே செய்தார்கள். ஆனால் அபிவர்த் என்னும் ஊரிலுள்ள யூதன் ஒருவன் மட்டும் அவர்கள் தமக்குச் செய்த பொல்லாங்கைத் தம்மால் ஒரு போதும் மறக்க இயலாதென்று கூறினான். பின்னர் ஒருவாறு மனம் இளகி,''அதோ காணப்படுகின்றதே ஒரு மணல் மேடு, அதனை நீர் வெட்டிச் சமதரையாக ஆக்கிவிடின் நீர் எனக்குச் செய்த பொல்லாங்கைப் பொறுக்கவும் மறக்கவும் செய்து விடுகின்றேன்'' என்று இயம்பினான் அவன். அதற்கு அவர்கள் இணங்கி அம்மணல் மேட்டை வெட்டத் துவங்கினார்கள்.

வெட்டினார்கள்; வெட்டினார்கள். வெட்ட வெட்ட அம்மணல் மேட்டில் ஏற்பட்ட பள்ளம் காற்றினால் அடித்து வரப்பட்ட மணலால் நிரப்பப்பட்டுக் கொண்டு வந்தது. எனினும் அவர்கள் சளைக்கவில்லை. இறையருளில் நம்பிக்கை வைத்து அவர்கள் அம்மணல் மேட்டைப் பல நாட்களாக வெட்டி வந்தார்கள். காற்று, அவர்களுடன் போட்ட போட்டியோ கடுமையாக இருந்தது. ஆனால் என்ன வியப்பு! அடுத்த நாள் காலையில் அவர்கள் மண் வெட்டியுடன் அங்கு வந்தபொழுது

அன்றிரவு அடித்த கடும் காற்றின் காரணமாக அம்மணல் மேடு முழுவதும் சமதரையாக ஆக்கப்பட்டிருந்தது.

இறுதியாக, இறைவன் அவர்கள் மீது இரங்கி, காற்றை அவர்களுக்குச் சாதகமாக அடிக்கச் செய்ததை இறைவன் அவர்களின் பவம் பொறுத்து அவர்களை ஆட்கொண்டதற்கான ஒரு நல்ல அறிகுறியாகக் கண்டான் அந்த யூதன். எனினும் தான் முன்னர் செய்திருந்த ஆணைக்கு எவ்வாறு மாறு செய்வது? தம்மிடம் கொள்ளையிட்ட பொருளை அவர் திருப்பித் தந்தாலொழிய அவர்களைத் தாம் மன்னிப்பதில்லை என்றல்லவோ அவன் ஆணையிட்டிருந்தான். ஆனால் இப்பொழுது அவர்களிடம் அரைக்காசேனும் இல்லையே. இந்நிலையில் என் செய்வது? என்று சிந்தித்தான். அவனுடைய சிந்தனையில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. உடனே அவர்களைத் தம் இல்லம் அழைத்துவரச் செய்து அவர்களிடம் தாம் செய்த ஆணையையும் எடுத்துரைத்து, ''அதற்காகத் தாங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். அதோ என் தலையணைக்குக் கீழே பணப்பை ஒன்றை வைத்துள்ளேன். அதனை எடுத்து வந்து என்னிடம் தந்து விடுங்கள். அப்பொழுது என்னுடைய ஆணையும் நிறைவேறிவிடும். நானும் தங்களை மன்னித்து விடுகிறேன்'' என்று கூறினான். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். ஆனால் அவனோ அவர்களின் முந்தைய நிலையையும் தற்போதைய நிலையையும் கண்டு இஸ்லாம் அவர்களின் வாழ்விலே நிகழ்த்தியுள்ள மகோன்னத அற்புதத்தையும் உணர்ந்து அடுத்த கணமே இஸ்லாத்தைத் தழுவினான்.*

எனினும் புலைல் (ரஹ்) அவர்களின் உள்ளம் தாம் முன்னர் செய்து வந்த பழிபாவங்களை எண்ணி, எண்ணி வருந்திக் கொண்டிருந்தது. ''நான் ஒரு பாவி; நான் ஒரு பாவி'' என்று அவர்கள் அல்லும் பகலும் அலறிக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் தெருவில் சென்ற ஒருவனை நோக்கி, தாம் இறைவனுக்கும் மக்களுக்கும் எதிராக மாபெரும் பாதகச் செயலைச் செய்து விட்டதாகவும், எனவே தம்மை மாநில ஆளுநரிடம் அழைத்துச் சென்று தகுந்த தண்டனை வாங்கித் தருமாறும் கூறினார்கள்.

* 'எவனுடைய பாவமன்னிப்புக் கோரல் உண்மையாக உள்ளதோ, அவன் கைப்படின் மண்ணும் பொன்னாக மாறிவிடும்' என்று தௌராத்தில் தாம் பார்த்துள்ளதாகவும் எனவே அதனைச் சோதிக்கத் தன் தலையணையின் கீழ் களிமண்ணை வைத்திருந்ததாகவும் அவர்கள் அதனைத் தன்னிடம் எடுத்து வந்து தந்தபொழுது அது பொன்னாக இருந்ததைக் கண்டதாகவும் அதன் மூலம் அவர்கள் உண்மையான இறை பக்தர் தாம்; அவர்களின் மார்க்கம் உண்மையான மார்க்கம் தான் என்பதை உணர்ந்து தான் இஸ்லாத்தைத் தழுவியதாகவும் அந்த யூதன் கூறினானென 'தக்கிரத்துல் ஔலியா' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவனும் அவ்வாறே அழைத்துச் சென்றான். அப்பொழுது அவர்கள் அவ்வாளுநரை நோக்கி, தாம் முன்னாளில் செய்த பாவச் செயல்களுக்குத் தகுந்த தண்டனை விதிக்குமாறு அழுது புலம்பி வேண்டிக் கொண்டார்கள். அது கேட்டு அவ்வாளுநருக்கு அழுகை வந்துவிடும் போல் இருந்தது. அவர்களை மரியாதையுடன் அழைத்துச் சென்று, அவர்களின் இல்லத்தில் விட்டு வருமாறு தம் ஏவலாளர்களுக்குப் பணித்தார் அவர். அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

இல்லம் அடைந்த புலைல் (ரஹ்) அவர்கள் வெறுமனே உள்ளே நுழையவில்லை. பயங்கரமான சப்தமிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தார்கள். அதுகேட்டு அவர்களின் வீட்டிலுள்ளோர் பெரிதும் அதிர்ந்து போய், ''எவரும் தங்களை அடித்து விட்டார்களா? பெரும் காயம் ஏற்பட்டு விட்டதா?'' என்று பதற்றத்துடன் வினவினர். இது புலைல் (ரஹ்) அவர்களின் செவிப்பட்டதும், ''ஆம்; பெரும் காயம் ஏற்பட்டுள்ளதுதான். அது என் உயிர் நிலையில் பட்டுள்ளது'' என்று கூறினர்.

அதன்பின் அவர்கள் தங்களின் அருமை மனைவியை அருகழைத்துத் தாம் 'ஹஜ்'ஜுச் செய்யப் போவதாகவும் அவர் விரும்பின் அவருக்கு மண விடுதலை வழங்கி விடுவதாகவும் கூறினர். அது கேட்டு அவரின் மனைவி 'கோ'வென்று அலறிய வண்ணம், ''நான் தங்களைவிட்டு ஒரு கணமும் பிரிந்திரேன். நானும் 'ஹஜ்ஜு'ச் செய்ய தங்களுக்கு முன் பயணமாய் உள்ளேன்'' என்று கூறினார். அது கேட்டு மகிழ்ந்த அவர்கள் தம் மனைவியுடன் மக்கா சென்று 'ஹஜ்'ஜுச் செய்து அதன்பின் அங்கேயே தங்கிவிட்டார்கள்.

இக்காலை மக்கா வந்த இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களை இவர்கள் சந்தித்து அவர்களிடமிருந்து மார்க்கக் கல்வி பயின்றனர். பயின்றதோடு மட்டுமல்லாது தான் பயின்ற கல்வியை மற்றவர்களுக்கு எடுத்துரைத்து அறபோதம் செய்யவும் துவங்கிவிட்டார்கள். மக்கா வாழ் மக்கள் அவர்களின் மாண்பினை உணர்ந்து அவர்களை ஈயென மொய்த்து நின்று அவர்களின் திருவாயிலிருந்து வெளியாகும் அமுத மொழிகளில் தெவிட்டாப் பேரின்ப ரசத்தை உண்டு மகிழ்ந்து வந்தார்கள்.

இவர்களின் புகழ் நாடெங்கணும் பரவவே இவர்களின் ஊரிலுள்ள இவர்களின் உற்றாரும் உறவினரும் இவர்களைக் காண்பதற்காக மக்கா வந்தார்கள். எனினும் அப்பெரியார் தம்மைக் காண்பதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கினார்களில்லை. அதுகண்டு அவர்கள் பெரிதும் வருந்தவே இவர்கள் தாம் வாழ்ந்து வந்த இல்லத்தின் மேல் மாடியில் ஏறி அவர்களைத் திரும்பிச் செல்லுமாறும், தம்மைப் பற்றிப்

பொருட்படுத்தாது இறை வணக்கத்தில் ஈடுபட்டிருக்குமாறும், அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அது கேட்டு அவர்களும் ஆறாத் துயரத்துடன் அவ்விதமே செய்தனர். புலைல் (ரஹ்) அவர்களும் தம் பவம் குறித்து ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கி அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர்.

இதன்பின் மக்காவிலேயே தங்கி அல்லும் பகலும் அனவரதமும் வணங்கிக் கொண்டிருந்த அவர்கள் ஒருநாள் 'உளூ'ச் செய்யும் பொழுது கையைக் கழுவுங்கால் மறதியாக அவற்றை ஒரு தடவை கழுவாது விட்டு விட்டனர். அன்றிரவு அண்ணலெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள், அவர்களின் கனவில் திருக்காட்சி வழங்கி, ''புலைலே! நீர் என்னுடைய வழி முறையை விட்டு விட்டீரே'' என்று கூறி மறைந்தனர். அது கேட்டுத் திடுக்குற்று விழித்தெழுந்த அவர்கள் தாம் செய்த தவற்றினை நினைவு கூர்ந்து அதற்குப் பரிகாரமாக அன்றிருந்து ஓராண்டு காலம் வரை நாளொன்றுக்கு ஐநூறு 'ரகஅத்'கள் வீதம் தொழுது வந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் அபார வணக்கம் நிகழ்த்தி வந்த போதினும், தாம் ஒரு பாவி என்ற எண்ணம் அவர்களின் உள்ளத்தில் எப்பொழுதும் இழையோடிக் கொண்டிருந்தது. ஒரு தடவை அவர்கள் 'ஹஜ்'ஜுச் செய்த பொழுது அரபாத் வெளியில் மக்கள் அவர்களை அணுகி, ''இறைவனின் படைப்புகள் பற்றித் தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?'' என்று அவர்களிடம் வினவியபொழுது, ''அவனின் படைப்புகளில் புலைலும் சேர்ந்திராவிடின் அவர்கள் அனைவரும் பவம் பொறுக்கப் பெற்றிருப்பார்கள். அந்தப் பாவியின் பாவத்தால் தான் இறையருள் அவர்கள் மீது இன்னும் இறங்காமல் உள்ளது'' என்று கூறினர்.

அவர்கள் இவ்வாறு கூறியபோதினும் இறைவனின் பேரருளில் அவர்கள் அவநம்பிக்கை கொள்ளவில்லை. வேறோர் ஆண்டு அவர்கள், 'ஹஜ்'ஜுச் செய்த பொழுது 'அரபாத்' வெளியிலுள்ள 'ஜபலெ ரஹ்மத்'தின் மீது நின்றுகொண்டு மக்கள் கதறியழுது இறைவனிடம் தம் பவம் பொறுத்தருளுமாறு இறைஞ்சிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றனர். அப்பொழுது அவர்களின் உள்ளம் செந்நீர் வடித்தது. கண்கள் கண்ணீரை உமிழ்ந்தன. அப்பொழுது அவர்கள் ''இறைவனே! இவ்வாறு மக்கள் கன்னெஞ்சக் காதகன் ஒருவனிடம் சென்று கதறியழுது முறையிட்ட போதினும் அவனுடைய கல்நெஞ்சமும் இளகி விடுமே. நீயோ அருளாளரில் எல்லாம் அருளாளன். கொடையாளரில் எல்லாம் கொடையாளன். எனவே நிச்சயமாக, நீ எங்களின் பவம் பொறுத்து எங்களை ஆட்கொள்வாய் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

அந்நன்னம்பிக்கைக்கு மாறு செய்யமாட்டாய்என்பதையும் நாங்கள் உணர்வோம்'' என்று கல்லும் கரைந்துருகும் வண்ணம் கதறியழுது இறைஞ்சினார்கள்.

அன்று பொழுது படும் வரையில் அவ்வெளியில் அமர்ந்து இறைவனை வணங்கியும் வழுத்தியும் அவனிடம் 'துஆ' இறைஞ்சியும் கொண்டிருந்த அவர்கள் பொழுதடையும் நேரத்தில் தம் தாடியைப் பிடித்து உயர்த்தி, விண்ணை நோக்கித் தம் பார்வையைச் செலுத்தியவர் களாய், ''இறைவனே! நீ என்னை மன்னித்து விட்டால் கூட உன்னிடம் வர எனக்கு நாணமாக உள்ளது'' என்று கூறி அழுது விட்டு பின்னர் மக்களுடன் சேர்ந்து முஸ்தலிஃபாவுக்குப் புறப்பட்டார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் ஹஜ்ஜு~ச் செய்யச் சென்றிருந்த பொழுது அரபாத் வெளியில் ஓர் இளைஞரைக் கண்டனர். மற்றவர் களெல்லாம் உரத்து சப்தமிட்டு இறைவனிடம் இறைஞ்சிக் கொண்டிருந்த பொழுது அவர் மட்டும் தலையைக் குனிந்த வண்ணம் அமைதியாக நின்று கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நீர் ஏன் அவர்கள் போன்று இரைந்து இறைஞ்சாது வெறுமனே நின்று கொண்டிருக்கிறீர்?'' என்று வினவினர். அதற்கு அவர் ''எனக்கு முன்னர் இருந்த ஆன்மீகப் பரிபக்குவம் இப்பொழுது இல்லாமல் போய்விட்டது. அது எனக்கு இப்பொழுது பெரிதும் கவலையை நல்குகிறது. எனவே யாது செய்வதென அறியாது திகைத்து நின்று கொண்டுள்ளேன்'' என்று பதில் மொழிந்தார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி ''அதற்காகக் கவலையுறாதீர். அளப்பரும் அருளாளனாகிய அல்லாஹ் இங்குக் குழுமி இருக்கும் லட்சோப லட்சம் மக்களின் பொருட்டால் உம்முடைய வேணவாவை நிறைவு செய்யப் போதுமானவன். ஆதலின் அவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சுவீராக!'' என்று கூறினர். அவ்வாறே அவர் இறைஞ்சுவதற்காகத் தம் கைகளை உயர்த்தினாரோ இல்லையோ அடுத்த கணம் அவர் பெரும் சப்தமிட்டுக் கொண்டு கீழே சாய்ந்தார். அவருடைய உயிர் அவருடைய உடலை விட்டும் பிரிந்துவிட்டது.

சிறந்த ஆத்ம ஞானியாகிய ஷஃவானா என்ற மங்கை நல்லாரைச் சந்தித்து அளவளாவி வந்த அவர்கள் ஒருநாள் அவரை நோக்கி தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டினர். அதற்கு அவர் ''புலைலே! நீர் இறைவனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு என்ன தடை யுள்ளது? நான் உங்களிருவரிடையே புகுந்து பரிந்துரைக்க வேண்டிய அவசியம் தான் என்ன?'' என்று பதிலிறுத்தார். இப்பதில் புலைல் (ரஹ்) அவர்களின் சென்னியைப் பிடித்துக் குலுக்கவே, அவர்கள் அலறித் துடித்த வண்ணம் மயங்கிக் கீழே வீழ்ந்தார்கள்.

மூன்று பேர் சினமுறின் அவர்கள்மீது நாம் வருத்தமுறக் கூடாது. அவர்கள் (1) நோயாளர் (2) பிரயாணி (3) நோன்பாளர் ஆவார் என்று கூறிய இவர்கள், தம்முடைய மாண்பினை அறியாது தம்மீது கொடுமை பல இழைத்த புல்லர்கள் மீது கூட யாதொரு வருத்தமும் கொள்ள வில்லை. அதற்கு மாறாக, அவர்கள் மீது இரக்கமுற்று வருந்தினார்கள். ஒரு தடவை அவர்கள் அழுது கொண்டிருப்பதைக் கண்ட மக்கள், ''ஏன் அழுகின்றீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''என் மீது கொடுமை இழைத்த அந்த நிர்ப்பாக்கிய முஸ்லிம்களை எண்ணித்தான் அழுது கொண்டுள்ளேன். மறுமையில் இறைவன் அவர்களை நோக்கி, ''நீங்கள் எக்காரணத்தைக் கொண்டு அவருக்குத் துன்பம் இழைத்தீர்கள்'' என்று வினவின் அவர்கள் மறுமொழி கூற இயலாது இறைவனின் திருமுன் வெட்கித் தலைகுனிய வேண்டி இருக்குமே என்று எண்ணித்தான் அழுது கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

மேலும் அவர்கள் பேசுங்கால், ''இறைவனுக்கு அஞ்சுகின்றவனைக் கண்டு எல்லாம் அஞ்சுகின்றன. இறைவனுக்கு அஞ்சாதவன் எல்லா வற்றையும் கண்டு அஞ்சுகிறான்'' என்று கூறினர்.

ஒருநாள் அவர்கள் தங்களின் மகன் அலீ அழுது கொண்டிருப்பதைக் கண்டு 'ஏன் அழுகிறாய்?' என்று வினவினார்கள். தம் பொருளைத் திருடர்கள் களவாடிச் சென்று விட்டனர் என்று அவர் பதில் கூறினார். அது கேட்ட அவர்கள், ''இதற்காகவா அழுகிறாய்?'' என்று கூறி அழத் துவங்கி விட்டார்கள். அது கண்ட அவர்களின் மகன், ''தாங்களும் ஏன் அழுகிறீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''அப்பொருள் களவு போய்விட்டதற்காக நான் அழவில்லை. மறுமையில் அவன் இறைவனின் திருமுன் தான் களவு செய்வதற்கு என்ன சமாதானம் கூறுவான் என்பதை எண்ணியே அழுகிறேன்'' என்று கூறிக் கொண்டே அவர்கள் மீண்டும் தேம்பித் தேம்பி அழுதார்கள்.*

இக்காலை ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவர்களின் மாணவர்களில் ஒருவர் இறப்புப் படுக்கையில் கிடந்தார். அவருக்கு அவர்கள் இஸ்லாமியத் திருக்கலிமாவை எவ்வளவோ பிரயாசையுடன் எடுத்துரைத்தும் அவர் அதனைக் கூறமாட்டேன் என்று சொல்லி இறந்து விட்டார். பின்னர் அவர்கள் அவரை நரகத்தின் வெந்தழலில் உழல்வதாகக் கனவு கண்டு அவரின் நிலை அவ்வாறு ஆனதற்கான காரணத்தை

* இவர்கள் கஃபாவை இடம் சுற்றி வரும்பொழுது பணத்தைப் பறி கொடுத்தவர் ஒருவர் அழுது கொண்டிருப்பதைக் கண்டு காரணம் வினவிய பொழுது அவர் இதே போன்று பதில் நல்கியதாக 'கீமியாயெ ஸஆதத்'தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வினவினர். அதற்கு அவர் தமக்கு ஒரு நோய் இருந்ததென்றும், அது நீக்கப் பெறுவதற்காக ஆண்டிற்கு ஒருமுறை தாம் மதுவருந்தி வந்ததாகவும், அதன் காரணமாகத் தமக்கு இறக்கும் தருவாயில் கலிமாச் சொல்ல இயலாத நிலை ஏற்பட்டதாகவும், எனவே தாம் நரகில் கிடந்து உழல்வ தாகவும் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கி எடுத்துரைத்தார். அதுகேட்டு திடுக்குற்று விழித்தெழுந்த அவர்கள், ''இறைவனே! ஆண்டுக்கு ஒரு தடவை மதுவருந்தியதன் காரணமாக இந்நிலையை அவர் எய்தப் பெற்றாரெனில் ஆண்டாண்டு காலமாகக் கொள்ளையடித்து வந்த என்னுடைய நிலைமை மறுமையில் என்ன ஆகுமோ, யாதாகுமோ'' என்று கூறிய வண்ணம் ஏங்கி, ஏங்கி அழத் துவங்கினார்கள்.

ஓரிரவு அவர்கள் சூரா முஹம்மதை ஓதிக் கொண்டிருந்த பொழுது அதில் 'வலநப்லுவன்னகும் ஹத்தா நஃலமல் முஜாஹிதீன மின்கும் வஸ்ஸாபிரீன வ நப்லுவஃ அக்பா ரக்கும்' (உங்களில் மனமொப்பி யுத்தம் புரிவோர் எவர் என்பதையும் யுத்தத்தில் ஏற்படும் துன்பங்களைச் சகித்திருப்போர் எவரென்பதையும் நாம் அறிந்து வெளிப்படுத்தும் வரையில் உங்களையும் உங்களைப் பற்றிய விஷயங்களையும் நாம் சோதனைக்குள்ளாக்கியே வருவோம்) என்ற திருவசனம் வந்ததும் அதனைத் திரும்பத்திரும்ப ஓதி''இறைவனே! எங்களுடைய செயல்களைச் சோதிப்பாயா? சோதிப்பாயா?'' என்று திரும்பத் திரும்ப அழுது கொண்டே கூறி, ''நீ அவ்விதம் செய்யின் எங்களை இழிவடையச் செய்து விடுவாயே. எங்களின் இரகசியங்களையெல்லாம் கிழித்தெறிந்து விடுவாயே. எங்களை வேதனை செய்வாயே. எங்களை அழித்தொழித்து விடுவாயே'' என்று பிரலாபித்துப் புலம்பினார்கள். அதன்பின் அவர்கள் தங்களை நோக்கி, ''புலைலே! நீ முகஸ்துதியை விரும்புகிறாய். அதன் காரணமாக நீ உன்னை மக்களின் கண்களுக்குப் பகட்டாய் காட்டிக் கொள்கின்றாய். இதுவே உன்னுடைய தொழிலாக உள்ளது. உன்னை விடக் கெட்டவன் ஒருவனுமில்லை. உனக்கே பேர் கேடு'' என்று சொல்லி அவர்கள் அழுதார்கள்; அழுதார்கள்; அழுது கொண்டே இருந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் தம் தோழர்களை நோக்கி, ''பேரீத்தம் பழங்களை மலக் குழியில் ஒன்றின்பின் ஒன்றாக வீசிக்கொண்டிருப்பவனைப் பற்றித் தாங்கள் என்ன கூறுவீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''அவனை நாங்கள் ஒரு பைத்தியக்காரன் என்று கூறுவோம்'' எனப் பதிலிறுத்தனர். அது கேட்ட அவர்கள், ''ஆம்; அவற்றைத் தன் வயிற்றில் போட்டு நிரப்பிக் கொண்டிருப்பவன், அவனைவிடப் பெரிய பைத்தியக் காரனாவான். ஏனெனில் வயிறு ஒரு மலக்குழியேயன்றி வேறென்ன?'' என்று இயம்பினார்கள்.

பசித்திருப்பதைத் தங்களின் நீங்கா வழக்கமாகக் கொண்டிருநத அவர்கள் ஒரு தடவை தம் மனத்தை நோக்கி, ''மனமே! நீ ஏன் பசித்திருக்கப் பயப்படுகின்றாய்? இறைவன் தன் அருள் நேசர் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் அருமைத் தோழர்களுக்கும் பசியை நல்கிச் சோதித்திருக்க உமக்கு மட்டும் நல்காமலும் உம்மைப் பசியால் சோதிக்காமலும் இருப்பானா?'' என்று கூறினார்கள்.

அவர்கள் ஒருபோதும் தம்முடைய துன்பங்களைப் பிறரிடம் எடுத்துரைக்கவில்லை. ஒரு தடவை ஒருவர் அத்துன்பங்களைப் பிறரிடம் எடுத்துரைத்துப் பிரலாபித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, அவரைத் தனியே அழைத்துச் சென்று, தம் கண்களைச் சுட்டிக் காட்டி, ''எனக்குப் பத்தாண்டுகளாகக் கண்ணொளி மங்கியிருந்த போதினும் நான் இன்றுதான் உம்மிடம் கூறுகிறேன், வேறு எவரிடமும் கூறிக் குறைபட்டுக் கொள்ளவில்லை'' என்று அவர்கள் கூறினர்.

அவர்கள் இவ்வுலகையும், இவ்வுலக இன்பங்களையும் வெறுத்தார்கள். மறுமை இன்பத்தை விரும்புபவன் எவ்வாறு இவ்வுலக இன்பங்களை விரும்புவான் என்றும் அவர்கள் தங்களையே தாங்கள் வினவிக் கொண்டார்கள். இவ்வுலகம் முழுவதையும் இறைவன் தமக்கு ஆகுமானதாகச் செய்து தந்தபோதினும் உங்களுக்கு நாற்றமெடுத்த பிணத்தை ஒருவன் தந்தால் எவ்வாறு நீங்கள் நாணமுறுவீர்களோ, அதுபோன்று தாம் அதனை ஏற்றுக் கொள்ள நாணமுறுவதாகவும் அவர்கள் எடுத்துரைத்தார்கள். இவ்வுலக இன்பங்களை நுகர்வது எளிதென்றும், எனினும் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டு பற்றற்று இருப்பதே ஈடேற்றம் நல்கக் கூடியது என்றும் அதுவே மிகவும் சிரமமானது என்றும் அவர்கள் எடுத்தியம்பினார்கள். இவ்வுலகம் ஒரு மருத்துவமனை போன்றுள்ளதென்றும் அதில் படைப்புகள் அனைத்தும் பைத்தியக்காரன் போன்று கட்டுண்டு கிடக்கின்றன என்றும் அவர்கள் கூறினார்கள்.

''சுவனத்தில் அழ இயலாது போன்று புவனத்தில் சிரிப்பதற்கு இடமில்லை. ஆனால் மனிதன் இங்குச் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு தான் எனக்குப் பெரு வியப்பாக உள்ளது'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் ஒரு தடவை மக்களை நோக்கி, ''இறப்பு தவிர்க்க முடியாத ஒன்று என்பதை அறிந்தும் உல்லாசமாகச் சுற்றித் திரியும் ஒருவனைக் கண்டு எனக்கு வியப்பாகவே உள்ளது. நரகம் ஒன்று உண்டு என்பதை அறிந்தும் சிரித்துக் கொண்டிருப்பவனைக் கண்டு எனக்கு வியப்பாகவே உள்ளது. உலகம் அநித்தியமானது என்பதை உணர்ந்தும் உலகைக்

கொண்டு மன நிறைவு கொள்பவனைக் கண்டு எனக்கு வியப்பாகவே உள்ளது. விதி என்பது உண்மை என்பதை அறிந்தும் பொருள் சேர்ப்பதிலேயே அல்லும் பகலும் ஈடுபட்டிருப்பவனைக் கண்டு எனக்கு வியப்பாகவே உள்ளது. வீடுகளைக் கட்டி அவற்றை விட்டுவிட்டுப் போகின்றவனைக் கண்டு நான் வியப்புறவில்லை. அவ்விதம் போவதைக் கண்டும் அறிவு பெறாத ஏனையோரைக் கண்டே எனக்கு வியப்பாக உள்ளது'' என்று கூறினர்.

''இம்மையானது அழிந்து போகும் பொன்னாகவும் மறுமையானது நிலையான மண்ணாகவும் இருந்த போதினும், மனிதன் அந்த நிலையான மண்ணைப் பெற விரும்புவதே அறிவுடைமையாகும். ஆனால் மறுமையோ அழிவில்லாத பொன்னாக இருக்கும்பொழுது, அதனைப் பெற முயல்வதற்குப் பதிலாக மனிதன் அழிந்து போகும் மண்ணைப் பெற முயன்று கொண்டிருப்பதே தமக்கு விந்தையாகத் தோன்றுகின்ற தென்றும், இவ்வுலக இன்பங்களில் ஒன்று ஒரு மனிதனுக்குக் கொடுக்கப்படின் அதுபோன்று நூறு மடங்கு இன்பங்கள் அவனுக்கு மறுமையில் குறைக்கப்படும்'' என்றும் அவர்கள் மொழிந்தார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள்:

''எவர் இறைவனுக்கு அஞ்சாமல் வெறும் நேசத்தைக் கொண்டு அவனை அறியவும் அணுகவும் செய்கின்றார்களோ அவர்கள், அழிந்து விட்டார்கள். எவர் அவன் மீது நேசம் கொள்ளாது அவனை அஞ்சிக் கொண்டு மட்டும் இருக்கிறார்களோ அவர்கள் அவனை விட்டும் தொலைவிலாகி அந்த அச்சத்திலேயே மூழ்கி விடுகிறார்கள். ஆனால் எவர் அவனை அஞ்சவும் நேசிக்கவும் செய்கிறார்களோ அவர்களை இறைவனும் நேசிக்கிறான்; கண்ணியப்படுத்துகிறான். அவர்களைத் தன் அண்மையில் ஆக்கிக் கொள்கிறான்.''

இவ்வாறு கூறி இறையச்சமும் இறையன்பும் ஒருவனிடம் ஒன்று சேர்ந்திருந்தால்தான் அவன் உய்வான். ஒன்று மட்டும் இருந்து மற்றொன்று இல்லையாயின் பயனில்லை என்று கூறாமல் கூறினார்கள்.

ஒருநாள் அவர்கள் தம் சின்னஞ்சிறு மகனைத் தம் மடிமீது வைத்துக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தபொழுது அக்குழந்தை தம் பிஞ்சுவாய் திறந்து, ''அப்பா! தாங்கள் என்மீது அன்பு செலுத்து கின்றீர்களா?'' என்று வினவியது. அதற்கு அவர்கள் 'ஆம்' என்று பதிலுரைக்கவே தாங்கள் ''இறைவனையும் நேசிக்கின்றீர்களோ?'' என்று அக்குழந்தை மறுவினா விடுத்தது. அதற்கும் அவர்கள் 'ஆம்' என்று மறுமொழி பகர்ந்தார்கள். அப்பொழுது அக்குழந்தை அவர்களை நோக்கி

''அப்பா! தாங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லையே. ஒரே இதயத்தில் எவ்வாறு இரண்டு நேசங்கள் இடம் பெற இயலும்?'' என்று வினவியது. தம் சின்னஞ்சிறு மகனின் இக்கேள்வி அவர்களின் மூளையைச் சுழலச் செய்தது. இறைவனே தமக்கு அக்குழந்தையின் மூலம் அறிவு எச்சரிக்கை வழங்கி இருப்பதாக எண்ணிய அவர்கள் அக்கணமே தம் மகனை மடியிலிருந்தும் கீழே இறக்கிவிட்டு இறைநேசம் ஒன்றையே தம் இதய நேசமாகக் கொள்ளத் துவங்கிவிட்டார்கள்.

இதன்பின் இவர்கள் பிறர் தம்மைப் பாராமலும் தாம் பிறரைப் பாராமலும் தனித்திருந்து இறைவணக்கத்தில் ஈடுபட்டு இறையின்பத்தில் மூழ்கித் திளைப்பதையே தங்களின் மேலான பண்பாகக் கொள்ள லாயினர். ''என்னிடம் வந்து எனக்கு 'ஸலாம்' உரைக்காமலும் நான் நோய் வாய்ப்படின் என்னிடம் வந்து என் நலன் விசாரிக்காமலும் எவன் உள்ளானோ அவனே எனக்கு மாபெரும் உதவி நல்கியவனாவான்'' என்றும் கூறினார்கள். ''கூட்டுத் தொழுகையில் சேர இயலாமலும் பிறர் தம்மைப் பார்க்க இயலாமலும் ஆகும் வண்ணம் தமக்கு நோய் வரக்கூடாதா?'' என்றும் அவர்கள் ஒரு தடவை கூறினார்கள்.

ஒருநாள் அவர்கள் தம்முடன் உரையாடுவதற்காக அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் வருவதைக் கண்டு ''தாங்கள் எவ்விடத்திலிருந்து வருகின்றீர்களோ அவ்விடத்திற்கே திரும்பிச் சென்று விடுங்கள். இல்லையெனில் நான் திரும்பிச் சென்று விடுகிறேன். தாங்கள் விரும்புவது, என்னுடன் தாங்கள் உரையாடுவதையும் தங்களுடன் நான் உரையாடுவதையுமேயாகும். அதைவிட மேலானது தனித்து இறை வணக்கத்தில் ஈடுபடுவதாகும்'' என்று கூறிவிட்டார்கள்.

வேறொரு நாள் அவர்களின் உறவினர்கள் அவர்களைக் காண வந்தபொழுது, அவர்கள் மாடியில் ஏறி நின்று ''என்னைக் காண வந்து என்னுடைய நேரத்தையும் உங்களுடைய நேரத்தையும் வீணாக்குவதை விட உங்களுக்கு வேறு வேலையில்லையா?'' என்று அவர்களைக் கடிந்து கொண்டார்கள். அவர்களுக்கு உள்ளே வரக் கதவைத் திறக்கவே இல்லை.

அவர்கள் மற்றொரு தடவை மக்களை நோக்கி, ''பொழுது பட்டதும் தனிமையாய் இருக்கும் வாய்ப்பு எனக்கு வாய்க்கப் பெறுவதற்காக நான் பெருமகிழ்வடைகிறேன். பொழுது புலர்ந்ததும் மக்கள் என்னிடம் வந்து என்னைச் சூழ்ந்து கொள்வார்களே என்று நான் துயருறுகிறேன். தனித்திருப்பதை விட்டொழித்து மக்களுடன் சேர்ந்து உரையாடிக் கொண்டிருப்பவன் சாந்தி நிலையை விட்டும் அப்பாற்பட்டவன் என்று நான் கருதுகின்றேன்'' என்று கூறினர்.

அவர்கள் ஒரு தடவை "தீய பண்புகள் நிறைந்த அறிஞர் (ஆலிம்) உடன் நட்புறவு கொள்வதைவிட நற்பண்புகள் நிறைந்த பெரும்பாவி (பாஸிக்) யுடன் நட்புறவு கொள்வதைத் தாம் பெரிதும் விரும்புவதாக எடுத்துரைத்தார்கள்.

ஒருநாள் பிஷ்ர் ஹாஃபீ (ரஹ்) அவர்கள் புலைல் (ரஹ்) அவர்களை நோக்கி, "ஸுஹ்து என்னும் துறவு மேலானதா? ரிலா என்னும் பொருத்தம் மேலானதா?" என்று வினவினர். அதற்கு அவர்கள் "இறைவன் விட்ட விதியைப் பொருந்திக் கொள்வதுதான் துறவைவிட மேலானதாகும். ஏனெனில் இறை விதியைப் பொருந்திக் கொண்டவன் மேற்கொண்டும் எதையும் விரும்ப மாட்டான். அதற்குமேல் ஒரு படித்தரமும் இல்லை. ஆனால் துறவு பூண்டவனுடைய நிலையோ வேறு. துறவுக்கு மேல் ஒரு படித்தரம் உள்ளது. அதை அடைய அவன் விரும்புவான்" என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

ஒருவர் அவர்களிடம், 'பொறுமை என்றால் என்ன?' என்று வினவியபொழுது, 'இறைவனின் தீர்ப்புகளை அப்படியே ஏற்றுக் கொள்வதுதான் பொறுமை' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

துறவைப் பற்றி அவர்கள் கூறுங்கால், "திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை ஓதி அதன்படிச் செயலாற்றுவது பத்து லட்சம் தடவைகள் திருக்குர்ஆனை ஓதி முடிப்பதைவிட எனக்கு அதிக இன்பம் பயக்க வல்லது. இறை நம்பிக்கையாளர்களை மகிழ்ச்சியுறச் செய்வதும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதும் வாணாள் முழுவதும் வணக்கம் நிகழ்த்துவதைவிட எனக்கு அதிக இன்பம் பயக்கவல்லது" என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் தாழ்மையைப் பற்றி எடுத்துரைக்கும் பொழுது, இறைவன் மலைகளை நோக்கி "மலைகளே! உங்களில் ஒன்றின் பேரில் நான் ஒரு நபியுடன் உரையாடுவேன்" என்று கூறினான். அதுகேட்டு தூர்சினாய் என்ற மலையைத் தவிர உள்ள அனைத்து மலைகளும் தங்களுக்கே அந்தப் பேறு கிடைக்கும் என எண்ணிப் பெருமையடித்துக் கொண்டன. அவற்றின் பெருமைக்கு தாழ்வு ஏற்பட்டது. தாழ்ந்து நின்ற தூர்ஸினாய் பேரில் அல்லாஹ், 'தஜல்லி'யானான். அதன் காரணமாக அது மாண்புற்றது என்று கூறினர்.

மேலும் அவர்கள் தாழ்மையைப் பற்றிக் கூறும்பொழுது, "இறைவனால் விதிக்கப்பட்டதை ஏற்று நடந்து, அவனால் விலக்கப் பட்டதைத் தவிர்ந்து கொள்வதே தாழ்மையின் அடையாளமாகும்" என்று எடுத்துரைத்தனர்.

பொதுவாக, உலக நிலையைப் பற்றி அவர்கள் கூறுங்கால் ''மூன்றை நாம் எங்குத் தேடினும் கிடைக்கப் பெற மாட்டோம். 1) நற்செயல்களாலும் வணக்க வழிபாடுகளாலும் தம்முடைய தராசை நிரப்ப வல்ல ஆலிம் 2)இக்லாஸ் (கலப்பற்ற தூய உணர்வு) உடன் வணங்கும் வணக்கவாளர் (ஆபித்) 3) குறைபாடு இல்லாத சகோதரர்கள். ஆதலின் இந்தக் குறை பாடுகள் உள்ளவர்களைக் கொண்டே நாம் உலகில் வாழ வேண்டி யுள்ளது'' என்று இயம்பினர்.

ஒருநாள் அவர்களை ஒருவர் அணுகி, ''தங்களைப் பற்றி இன்னார் புறம் பேசினார்'' எனக் கூறினார். அதுகேட்ட அவர்கள், ''அவரை அவ்வாறு என்னைப் பற்றிப் புறம் பேசச் சொன்னவன் மீது எனக்கு ஆத்திரம், ஆத்திரமாக வருகிறது'' என்று கூறினர். ''யார் அவன்?'' என்று வியப்புடன் வினவினார் அவர். ''அவன்தான் ஷைத்தான்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

அதன்பின் அவர்கள் இருகரம் ஏந்தி ''இறைவனே! என்னைப் பற்றிப் புறம் கூறியவரை நீ மன்னித்தருள்வாயாக! நான் இன்னும் பல நற்செயல்களை ஆற்றி, ஷைத்தானை ஏமாற்றமுறவும் அதன் காரணமாக அவன் அந்த மனிதரை அணுகாதிருக்கவும் செய்வேன்'' என்று கூறி இறைஞ்சினார்கள்.

அவர்கள் உளத்தூய்மையைப் பற்றிக் கூறுங்கால், ''மக்களுக்காக ஒரு செயலைச் செய்வது இணை வைப்பதாகும். மக்களுக்காக ஒரு செயலை விடுவது முகஸ்துதியாகும். இவ்விரு தன்மைகளை விட்டும் இறைவன் உன்னைக் காப்பாற்றி விட்டால், நீயே மன ஒருமை கொண்டவன்! உளத்தூய்மை கொண்டவன்'' என்று தமக்கே தாம் அறிவுரை இயம்பினர்.

''தான் லப்பைக் (அடிபணிந்தேன்) என்று கூறும்பொழுது இறைவன் நீ லா லப்பைக் (அடிபணியவில்லை) என்று கூறிவிட்டால் என் செய்வது என்ற அச்சத்தின் காரணமாக ஒருவன் லப்பைக் என்று கூறவே அஞ்சுகின்றான். அவனைப் பற்றித் தங்களின் கருத்து யாது?'' என்று ஒருவன் வினவிய பொழுது ''அவ்விதம் அஞ்சுபவன் 'லப்பைக்' என்று கூறுபவனைவிட அல்லாஹ்வை மிகவும் அண்மியவனாவான்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

'மனிதர்கள் அனைவரும் நேரிய வழியில் பொருளீட்டி நேரிய வழியில் அல்லாஹ்வுக்கு அஞ்சி வாழ வேண்டும்' என்று அவர்கள் விரும்பினார்கள். ஒருநாள் அவர்களின் மகன் ஒரு பொற்காசை நிறுத்துக் கொடுக்குமுன் அதன்மீது படிந்திருந்த அழுக்கைத் துடைத்துக் கொண்டிருப்பதைக் கண்ட அவர்கள், 'மகனே! நீ மேற்கொண்டிருக்கும்

இச்செயல் பத்து ஹஜ், உம்ராக்கள் செய்வதைவிட மேலானதாகும்'' என்று கூறினர்.

அவர்கள் மக்களை நோக்கி,''நேர்மையாகப் பொருளீட்டுமாறும் தான் ஈட்டும் பொருள் எப்பக்கம் வருகிறது (அதாவது நேரிய வழியிலா அல்லது தவறான வழியிலா) என்பதைப் பற்றி அக்கரை கொள்ளாதவன் எப்பக்கத்திலிருந்து நரகத்தில் புகுத்தப்படுகிறான் என்பது பற்றி இறைவனும் அக்கரை கொள்ளமாட்டான்'' என்று கூறினர்.

''தன் வயிற்றிற்குள் எத்தகு உணவு செல்கிறது என்பது பற்றி அக்கரை கொள்பவனை அல்லாஹ் 'ஸித்தீக்' என்று குறித்துக் கொள்கிறான்'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

இறைவனுக்கு நன்றி செலுத்துவதைப் பற்றி அவர்கள் எடுத்துரைக்கும் பொழுது, ''உங்களுக்கு அளிக்கப் பெறும் அருட்கொடை களுக்கு நிச்சயமாக இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் எந்தச் சமுதாயத்திடமிருந்தும் அதற்கு அளிக்கப்பட்ட அருட்கொடைகள் பிடுங்கப்படின், பின்னர் அவை மீண்டும் அதற்குக் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது'' என்று கூறினர்.

ஒருவர் அவர்களிடம் வந்து ஓர் ஊரிலுள்ள ஒரு நீர் ஊற்றில் பகலில் நீர் சுரக்காது வரண்டு விடுவதாகவும் இரவில் நீர் சுரப்பதாகவும் கூறி அதற்கான விளக்கம் வேண்டினார். அப்பொழுது அவர்கள் சற்று நேரம் கண்களை மூடி இருந்துவிட்டு, ''அந்த ஊரில் ஓர் ஏழைக் குமரிப் பெண் பல்லாண்டுகளாக மணமுடிக்க வசதியில்லாது இருக்கிறாள். அவள் தன் நிலையை நினைந்து பகலெல்லாம் கண்ணீர் உகுப்பதன் காரணமாக அந்த ஊற்றில் நீர் சுரக்காது வரண்டு விடுகிறது. இரவில் அவள் தன் கவலை மறந்து உறங்கும் பொழுது அந்த ஊற்றில் நீர் சுரந்து விடுகிறது'' என்று அவர்கள் விளக்கம் பகர்ந்தார்கள்.

ஒருநாள் மக்கள் அவர்களிடம் வந்து 'மார்க்கத்தின் அடிப்படை என்ன'வென்று வினவினர். அதற்கு அவர்கள் 'அறிவு (அக்ல்)' என்று கூறினர். மீண்டும் அவர்கள், அவர்களை நோக்கி 'அறிவின் அடிப்படை யாது?' என்று வினவினர். அதற்கு அவர்கள் 'அமைதியான இயல்பு (ஹில்ம்)' என்று பதிலிறுத்தார்கள். அதுகேட்ட அவர்கள் அமைதியான இயல்பின் அடிப்படை யாது?' என்று வினவினர். அதற்கு அவர்கள் பொறுமை (ஸப்ர்) என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

''எவன் உலகில் தலைமைத்தனத்தை விரும்புகின்றானோ அவன் தாழ்ந்து விட்டான்'' என்று அவர்கள் அடிக்கடி கூறிக் கொண்டிருப்பதாகக் கேள்வியுற்ற இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் ஒருநாள்

அவர்களைச் சந்தித்த பொழுது தமக்கு அறிவுரை பகருமாறு வேண்டிக் கொண்டனர். அதற்கு அவர்கள் ''நீர் பிறரைத் தொடருகிறவராய் இரும்; பிறரால் தொடரப்படுபவராக இருக்க வேண்டாம். தொடருகிறவராய் இருப்பதில் தான் மகிழ்ச்சியுள்ளது'' என்று கூறினார்கள்.

திக்ரைப் பற்றி அவர்கள் கூறுங்கால், ''ஒருவன் வைகறைத் தொழுகைக்குப் பின் ஒரு மணி நேரமும், சாயுங்கால (அஸர்) தொழுகைக்குப் பின் ஒரு மணி நேரமும் இறைவனைத் திக்ரு செய்யின் அவனின் அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்படும்'' என்று கூறினர்.

மேலும் ''ஒருவன் சூரா ஹஷ்ரின் இறுதிப் பகுதியைக் காலையில் ஓதி அன்று பகல் அவன் இறந்துவிடின், அவன் 'ஷஹீது'களின் பதவியை எய்தப் பெறுவான். ஒருவன் அதனை மாலையில் ஓதி அன்று இரவு அவன் இறந்துவிடின் அவன் 'ஷஹீது'களின் பதவியை எய்தப் பெறுவான்'' என்று எடுத்துரைத்தார்கள்.

அவர்கள் அல்லாஹ்வின் சமூகத்தையன்றி வேறு எவர் சமூகத்தையும் அணுகாது வாழ்ந்து வந்தனர். ''ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு அரச சமூகத்தை அணுகுகின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு இறை சமூகத்தை விட்டும் தூரமாகின்றான்'' என்று அவர்கள் கூறி வந்தார்கள்.

இக்காலை அப்பாஸியக் கிலாபத்தின் அரியணை மீது விண்முட்டும் புகழுடன் வீற்றிருந்து அரசோச்சிக் கொண்டிருந்த கலீபா ஹாரூன் அல் ரஷீத் மக்காவுக்கு ஹஜ்ஜுச் செய்ய வந்திருந்த பொழுது ஓரிரவு தம் அமைச்சர் அபுல் பஸல் இப்னு அல் ராபியை நோக்கித் தம் மனம் பெரிதும் துன்பத்தில் உழன்று கொண்டிருப்பதாகவும், எனவே தம்மை ஓர் ஆன்மீக குருவிடம் அழைத்துச் செல்லுமாறும் கூறினார்.

உடனே அவரை பஸல், அப்துர் ரஸ்ஸாக் ஸன்ஆனியிடம் அழைத்துச் சென்றார். அவருடன் கலீபா சிறிது நேரம் உரையாடிய பின் தங்களுக்கு ஏதேனும் கடன்கள் இருப்பின் கூறுங்கள். அவற்றைத் தீர்க்க வழி செய்கிறேன் என்று கூறினார். உடனே அவர் தமக்குள்ள கடன்கள் பற்றிய விவரத்தைக் கூற கலீபா அவருக்கு ஒரு பணமுடிப்பை வழங்கிவிட்டு அவரிடமிருந்து விடைபெற்றார்.

பின்னர் கலீபா தம் அமைச்சரை நோக்கி, ''பஸல்! இவரைவிட மாண்பார்ந்த ஒருவரைச் சந்தித்து அளவளாவ என் மனம் அவாவுறுகிறது. அத்தகையோரிடம் என்னை அழைத்துச் செல்லும்'' என்று கூறினார்.

உடனே பஸல் அவரை சுப்யான் இப்னு உயைனா தங்கி இருந்த இல்லம் அழைத்துச் சென்று கதவைத் தட்டினார். உள்ளே இருந்து யார்

அது என்று குரல் எழுப்பிய சுப்யானிடம் கலீபா அவர்கள் வந்திருப்பதாக பஸல் கூறியதும், அவர் சடாரெனக் கதவைத் திறந்து வெளியே வந்து அவர்கள் இருவருக்கும் 'சலாம்' உரைத்து, ''தாங்கள் ஏன் இத்துணைச் சிரமம் எடுத்து இங்கே வரவேண்டும்? ஒரு வார்த்தை சொல்லி அனுப்பின் நானே தங்களிடம் ஓடோடி வந்திருக்க மாட்டேனா?'' என்று வினயமாகக் கூறி நின்றார். அது கேட்ட கலீபா தம் அமைச்சரை நோக்கி, ''நான் காண விழைந்தவர் இவரல்லர்'' என்று கூறவே அது சுப்யான் இப்னு உயைனா அவர்களின் காதிலும் விழுந்தது. உடனே அவர்கள், ''தங்களுக்கு உவந்த ஞானகுரு புலைல் (ரஹ்) அவர்களே யாம்'' என்று தாமே முந்திக் கொண்டு கூறினார்.

இதன்பின் கலீபா அவர்களும், அமைச்சர் அபுல் பஸலும் புலைல் (ரஹ்) அவர்களின் இல்லம் நோக்கி விரைந்து நடைபோட்டார்கள். அவ்வில்லம் அடைந்ததும் ஆங்கிருந்து 'தீச்செயல் புரிந்தோர் அவர்களை நாம் நற்செயல் புரிவோருக்குச் சமமாக ஆக்கிவிடுவோமென்று எண்ணுகின்றார்களா, என்ன? அவ்விதம் அவர்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம்'' என்ற கருத்தமைந்த இறை திருவசனத்தின் ஒலி காற்றிலே மிதந்து வந்து கலீபா அவர்களின் செவிப் புகுந்தது. அதுகேட்ட கலீபா அவர்கள், ''எனக்கு நேர்வழி காட்ட இத்திருவசனம் ஒன்றே போது மானது'' என்று உணர்ச்சி மீக்குற்றுக் கூறியவராய் அவ்வில்லத்தின் கதவைத் தட்டினார். அப்பொழுது உள்ளிருந்து, 'யார் அது?' என்ற குரல் ஒலித்தது. கலீபா அவர்கள் வந்திருப்பதாக அபுல் பஸல் மறுமொழி பகர்ந்தார். அப்பொழுது உள்ளே இருந்து, ''எனக்கும் அவருக்கும் என்ன தொடர்பு உள்ளது? என் வணக்கத்தில் வீணே குறுக்கிடாதீர்கள்'' என்று மறுகுரல் முழங்கியது.

அப்பொழுது அபுல் பஸல், ''கலீபாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது தங்கள்மீது கடமையல்லவா?'' என்று வினவ, ''என்னை வீணே துன்புறுத்தாதீர்கள்'' என்று மறுபதில் வந்தது.

அதுகேட்ட அபுல் பஸல் ''நாங்கள் உள்ளே நுழைய அனுமதி வழங்குங்கள். இல்லையெனில் நாங்கள் வன்முறை மூலம்உள்ளே நுழைவோம்'' என்று கூறினார்.

''அது உங்களின் விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால் நான் உங்களை உள்ளே அனுமதிக்க முடியாது'' என்று உள்ளே இருந்து மீண்டும் குரல் ஒலித்தது.

எனினும் அதனைச் சிறிதேனும் பொருட்படுத்தாது கதவை வன்முறையில் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தனர் அவ்விருவரும்.

அதுகண்ட புலைல் (ரஹ்) அவர்கள் உடனே தம்முன் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டார்கள். வீடு முழுவதும் இருள் மண்டியது.

அந்தக் கும்மிருளில் புலைல் (ரஹ்) அவர்களுடன் கைலாகு கொடுக்க கலீபா தம் கைகளை நீட்ட அவை புலைல் (ரஹ்) அவர்களின் கையைத் தொட்டுவிட்டன. அப்பொழுது புலைல் (ரஹ்) அவர்கள், 'ஆ! எத்துணை மென்மையான கை!! இது நரக நெருப்பிலிருந்து மீட்சி பெற வேண்டுமே' என்று கூறிவிட்டு தக்பீர் சொல்லித் தொழத் துவங்கி விட்டார்கள்.

இது கலீபாவின் செவிப்பட்டதும் அவரின் உள்ளமும் உடலும் ஒருங்கு சேர்ந்து அதிர்ந்தன. கண்களில் நீர் கசிந்தது.

புலைல் (ரஹ்) அவர்கள் தொழுது முடிந்ததும், கலீபா ஹாரூன் அல்ரஷீத், அவர்களை நீர் மல்கும் கண்களுடன் அணுகி, ''அடிகளாரே! என்னுடைய ஆன்மீக நலனுக்காக எனக்கு ஏதேனும் அறிவுரை பகருங்கள்'' என்று வேண்டி நின்றார்.

அப்பொழுது அவர்கள் கலீபாவுக்கு சலாம் உரைத்துப் பின்வருமாறு பேசினார்கள்:

''இறை நம்பிக்கையாளரின் தலைவ! தங்களின் பாட்டனார் அப்பாஸ் (ரலி) அவர்கள் முஹம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். அவர்கள் ஒருநாள் அண்ணலெம் பெருமானை நோக்கி, ''என்னை ஒரு கூட்டத்திற்குத் தலைவராக நியமியுங்கள்'' என்று வேண்டிக் கொண்டபொழுது, ''நான் தங்களைத் தங்களின் மனோ இச்சைக்கு (நஃப்ஸுக்கு) தலைவராக நியமித்துள்ளேன். மனோ இச்சையை அடக்கி ஆள்வது. ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள் மக்களை அடக்கி ஆள்வதிலும் மாண்புடைத்ததாகும். மனோ இச்சையை அடக்கி ஆள்வது மறுமையில் மாண்பு நல்கும்பொழுது, மக்களை அடக்கி ஆள்வது மறுமையில் துன்பத்தை வழங்கும் என்று அண்ணல் அவர்கள் இயம்பினர்.''

இவ்வாறு புலைல் (ரஹ்) அவர்கள் கூறியதைக் கேட்டதும் உணர்ச்சி வசப்பட்டுக் கண்ணீர் உகுத்த கலீபா ஹாரூன் அல்ரஷீத், புலைல் (ரஹ்) அவர்களை நோக்கி, ''அடிகளாரே! இன்னும் எனக்கு அறிவுரை நல்குங்கள்'' என்று வேண்டி நின்றார்.

அது கேட்டு புலைல் (ரஹ்) அவர்கள் மீண்டும் பேசத் தொடுத் தார்கள்.

''இறை நம்பிக்கையாளரின் தலைவ! எனக்கு இப்பொழுது கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸின் நினைவு வருகிறது. அவர்களுக்குக் கலீபாப் பதவி வழங்கப்பட்ட காலை அவர்கள் ஸாலிம் பின் அப்துல்லா, ரஜா இப்னு ஹயாத், முகம்மது இப்னு கஃபு ஆகிய பெரியோர்களை அழைத்து வரச்செய்து, ''நான் இச்சோதனையில் அகப்பட்டுள்ளேன். நான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று எனக்கு அறிவுரை வழங்குங்கள்'' என்று வேண்டிக் கொண்டனர். அப்பொழுது அவர்கள் மூவரும் கலீபா அவர்களை நோக்கி, ''தாங்கள் முதியவர்களைத் தந்தை போன்றும், இளைஞர்களை உடன்பிறந்தார் போன்றும் சிறுவர் சிறுமியரை உம் மக்கள் போன்றும், வயதான பெண்ணை உம் அன்னை போன்றும் இளம் பெண்களை உம் சகோதரிகள் போன்றும் கருதிப் பேணுதலுடன் நடப்பீர்களாயின் மறுமையில் தாங்கள் இறைத் தண்டனைக்கு ஆளாக மாட்டீர்கள்'' என்று இயம்பினர்.

அதுகேட்ட கலீபா ஹாரூன் அல்ரஷீத், ''அடிகளாரே! இன்னும் எனக்கு அறிவுரை வழங்குங்கள்'' என்று வேண்டினார்.

அப்பொழுது புலைல் (ரஹ்) அவர்கள், ''இறை நம்பிக்கையாளரின் தலைவ! பிறரின் மனை தங்களின் அரண்மனை போன்று சிறப்புடையது என்றும் அதில் வாழ்வோர் தங்களின் உறவின் முறையினர் என்றும் எண்ணிக் கொள்ளுங்கள். தங்களின் தந்தை போன்றுள்ளவர்களைச் சென்று காணுங்கள். சகோதரர் போன்றுள்ளவர்களைக் கௌரவியுங்கள். மக்கள் போன்றுள்ளவர்களுக்கு நன்மை செய்யுங்கள்'' என்று கூறி விட்டு, ''தங்களின் முகம் அழகாக உள்ளதே. இத்தகைய அழகிய முகம் நரக நெருப்பால் சோதிக்கப்படக் கூடாதே என்று நான் அஞ்சுகின்றேன். எத்தனையோ அழகிய முகங்கள் நரக நெருப்பில் கருகிச் சாம்பலாகும். எத்தனையோ அரசர்கள் அதில் சிறைப்பட்டு உழல்வார்கள்'' என்று கூறினர்.

இவ்வாறு அவர்கள் கூறி முடித்ததும் கலீபா ஹாரூன் அல்ரஷீத் வாய்விட்டு அலறியவண்ணம், ''அடிகளாரே! இன்னும் எனக்கு அறிவுரை பகருங்கள். இன்னும் எனக்கு அறிவுரை பகருங்கள்'' என்று வேண்டினார்.

எனவே மீண்டும் புலைல் (ரஹ்) அவர்கள் பேச்சைத் துவங்கினார்கள்.

''இறை நம்பிக்கையாளரின் தலைவ! இறைவனுக்கு அஞ்சி நடவுங்கள். மறுமையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு இப்பொழுதே தயாராகிக் கொள்ளுங்கள். தங்களின் ஆட்சியின் கீழுள்ள தன்னுடைய

அடியார் ஒவ்வொருவரின் குறைகள் பற்றியும் இறைவன் தங்களிடம் கேள்வி கேட்டபான் என்பதை தாங்கள் ஒருபோதும் மறந்து விடவேண்டாம். ஓர் இரவில் ஒரு கிழவி தன் ஒட்டிய வயிற்றிற்கு ஒரு பிடி அன்னம் இல்லாது பட்டினியுடன் உறங்கி விடுவாளாயின் அதற்கு இறைவன் தங்களையே பொறுப்பாளியாக்கிக் குற்றம் சாட்டுவான்!''

அவர்களின் இவ்வருள் எச்சரிக்கையைச் செவியுற்றதும் கலீபாவின் உடல் நடுங்கியது. உள்ளம் பதறியது. அலறித் துடித்த வண்ணம் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார்.

அதுகண்டு திடுக்குற்ற அமைச்சர் அபுல் பஸல் ''அடிகளாரே! போதும் உங்களுடைய பேச்சு. நிறுத்துங்கள் அதனை. அநியாயமாகக் கலீபா அவர்களைக் கொன்று விட்டீர்களே'' என்று கூக்குரலிட்டார்.

உடனே புலைல் (ரஹ்) அவர்கள் அவரை நோக்கி, ''ஹாமானே! பேச்சை நிறுத்தும். அத்துடன் நான் ஒரு பக்கீர். குற்றவாளியல்ல. நீரும் உம்முடைய கூட்டத்தினரும் தாம் அவரைக் கொன்று விட்டீர்கள். நான் கொல்லவில்லை'' என்று கூறினர்.

இதற்குள் மயக்கம் தெளிந்து எழுந்த கலீபா, தம் அமைச்சர் அபுல் பஸலை நோக்கி, ''உம்மை அவர்கள் ஹாமான் என்று அழைத்ததன் காரணமாக அவர்கள் என்னை ஃபிர் அவ்ன் என்று கருதியிருக்க வேண்டும் என்று நான் எண்ணுகிறேன்'' என்று கூறினார்.

அதன்பின் அவர் புலைல் (ரஹ்) அவர்களை நோக்கி, ''அடிகளாரே! தாங்கள் எவருக்கேனும் கடன் பட்டிருப்பின் கூறுங்கள். நான் அதனைத் தீர்த்து விடுகின்றேன்'' என்று வேண்டினார்.

''ஆம்! நான் கடன்பட்டுள்ளேன் தான். எனினும் என் வாணாள் முழுவதும் நான் அதனைத் தீர்க்க முயன்றபோதினும் அது என்னால் இயலாதே என்றுதான் நான் வருந்திக் கொண்டுள்ளேன்.''

''அப்படியா! அதனைக் கூறுங்கள். நான் செலுத்தி விடுகிறேன்.''

தங்களால் அதனைச் செலுத்த இயலாது. அதனை நானே செலுத்த வேண்டும். இல்லையெனில் அது எனக்கு மறுமையில் மாபெரும் தீமை பயக்கும். அதுவே நான் இறைவனுக்குச் செலுத்த வேண்டிய வழிபாட்டுக் கடன்.''

''அதையா கூறுகின்றீர்கள்? தாங்கள் மக்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் ஏதேனும் உள்ளதா? கூறுங்கள். நான் அதனை செலுத்தி விடுகின்றேன்.''

''இல்லை; அல்லாஹ் எனக்கு அளவற்ற நற்பேறுகளை வழங்கியுள்ளான். அதற்காக நான் இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டுள்ளேன். எனக்கு எவ்விதக் குறையுமில்லை.''

இப்பொழுது கலீபா, புலைல் (ரஹ்) அவர்களின் முன் ஆயிரம் பொன் நாணயங்கள் நிரம்பிய ஒரு பையை வைத்து, 'இது நேரிய முறையில் எனக்குக் கிடைத்த பணமாகும். என் அன்னை விட்டுச் சென்ற சொத்திலிருந்து எனக்குக் கிடைத்த பங்காகும். இதனைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று வினயமாக வேண்டினார்.

அதுகண்ட புலைல் (ரஹ்) அவர்கள் கலீபாவை நோக்கி, ''நான் தங்களுக்கு சற்றுமுன் வழங்கிய அறிவுரைகளெல்லாம் பயனற்றுப் போயின. நான் தங்களை மீட்சியின்பால் அழைக்க, தாங்களோ என்னை அழிவின்பால் அழைத்துச் செல்ல விரும்புகிறீர்கள். இது அநியாயமல்லவா? தங்களிடம் உள்ளதை அதற்கு உரியவர்களிடம் ஒப்படையுங்கள். அது எவருக்குத் தேவையில்லையோ அவரிடம் அதனை ஒப்படைக்க முயல வேண்டாம்'' என்று கூறிவிட்டு எழும்பித் தம் வணக்க அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டார்கள்.

அப்பொழுது கலீபாவின் வாய் ''பெயருக்கேற்ற பெரியார் இவர்தாம்.* மனிதர்களின் மாமன்னர் இவர்தாம். இவரின் முன் இவ்வுலகம் முழுவதும் ஒரு துரும்புக்கு நேர்'' என்று முணுமுணுத்தது.

மற்றொரு நாள் இவர்களும் சுப்யான் இப்னு உயைனாவும் கலீபாவின் அழைப்பின்மீது அவரைக் காணச் சென்றபொழுது இவர்கள் முக்காடிட்டு முகத்தை மூடியவண்ணம் சென்றனர். கலீபாவின் இருப்பிடத்தை அடைந்த இவர்கள் கலீபாவை இலக்குக் கேட்டு அறிந்து கொண்டு அவர் வீற்றிருந்த திசையை நோக்கிய வண்ணம், ''அழகிய முகத்தினரே! தம் தோள்மீது அரசபாரத்தைச் சுமந்து கொண்டிருப்பவர்கள் தாங்கள் தாமா?'' என்று வினவினர். 'ஆம்' என்று அவர் பதில் கூறவே, ''தாங்கள் மகத்தான பளுவைச் சுமந்து கொண்டுள்ளீர்கள்'' என்று அவர்கள் கூறினர். இதனைச் செவியுற்றதும் கலீபாவின் கண்களிலிருந்து நீர் கசிந்தது.

இதன்பின் அவர் அவ்விருவருக்கும் ஒவ்வொரு பண முடிப்பை அன்பளிப்பாக வழங்க, இவர்கள் மட்டும் அதனை ஏற்றுக் கொண்டார்களில்லை. அதுகண்ட கலீபா, 'தாங்கள் அதனை ஏற்றுக் கொள்வது ஆகுமானது (ஹலால்) அல்ல என்று தாங்கள் கருதின், அதனைப் பெற்று

* புலைல் என்றால் மேன்மை வாய்ந்தவர் என்று பொருள்.

ஏழைகளுக்கு விநியோகித்து விடுங்கள்'' என்று கூற இவர்கள் அதுபற்றித் தம்மை வற்புறுத்த வேண்டாமென்று கூறி அப்பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள்.

பின்னர் வெளியே வந்தபொழுது சுப்யான் இப்னு உயைனா இவர்களை நோக்கி, ''தாங்கள் தாம் அதனைப் பெற்றுப் பயன்படுத்தாத போதினும், அதனை வாங்கி ஏழைகளுக்காவது அறம் செய்திருக் கலாமே'' என்று கூறியபொழுது இவர்கள் அவரின் தாடியைப் பிடித்துக் கொண்டு ''காஜிப் பதவி வகிக்கும் நீர் தாமா இவ்வாறு கூறுகிறீர்? அது கலீபாவாலும் அவரின் அலுவலாளர்களாலும் நேரிய முறையில் ஈட்டப்பட்டிருந்தாலல்லவோ நான் அதனை ஏற்றுக் கொள்வது எனக்கு ஆகுமானது (ஹலால்) ஆகும்'' என்று கூறினார்கள்.

வேறொரு நாள் கலீபா மார்க்க விற்பன்னர்களுக்கெல்லாம் அவரவர் தகுதிக்குத் தக்கவண்ணம் பணமுடிப்புகளைத் தம்முடைய அன்பளிப்பாக அனுப்பிவைத்தார். அவ்வாறே புலைல் (ரஹ்) அவர்களுக்கும் பத்தாயிரம் திர்ஹங்கள் நிரம்பிய ஒரு பண முடிப்பை அனுப்பி வைத்தார். ஆனால் அவர்களோ அதனை ஏற்றுக் கொள்ளாது திருப்பி அனுப்பி வைத்துவிட்டார்கள்.

அப்பொழுது அவர்களின் மக்கள் அவர்களை நோக்கி, ''அப்பா! மற்றவர்களெல்லாம் தங்களுக்கு அனுப்பப் பெற்ற பண முடிப்பை மனமகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட பொழுது தாங்களோ நம் குடும்பத்தின் வறிய நிலையைச் சிறிதேனும் எண்ணிப் பாராது அதனைத் திருப்பி அனுப்பிவிட்டீர்களே!'' என்று வருத்தத்துடன் கூறினர்.

அதுகேட்ட அவர்கள் ''மக்களே! உங்களுக்கும் எனக்கும் இடையே உள்ள நிலைக்கு ஓர் உதாரணம் கூறுகிறேன். கேளுங்கள். ஒரு குடும்பத்தாரிடம் ஒரு மாடு இருந்தது. அதைக் கொண்டு அவர்கள் உழுது பயிரிடவும், பயிர்களுக்குத் தண்ணீர் இறைக்கவும், களத்தில் பயிர் விளைந்ததும் அதனை அறுத்து அடித்து மூட்டை கட்டி மாட்டின் மீது ஏற்றி வீடு கொண்டு வந்து சேர்க்கவும் செய்து வந்தார்கள். அது கிழடாகி விட்ட பொழுது இனிமேல் அதைக் கொண்டு தங்களுக்குப் பயனில்லை என்பதை அறிந்த அவர்கள் அதனை அறுத்துக் கறி சமைத்து உண்டு விட்டார்கள். அதுபோன்றுதான் நீங்களும் நான் கிழவனாகி விட்டேனென்று அறுத்துவிட எண்ணுகின்றீர்கள். இவ்வாறு நீங்கள் என்னைத் தாழ்வாகக் கருதி என்னை அறுத்து உண்டு பசி தீர்வதை விட நீங்கள் பசியோடிருப்பதே மேலானதாகும்'' என்று கூறினர்.

மற்றொரு நாள் கலீபா ஹாரூன் அல்ரஷீத் இவர்களை நோக்கி, 'தங்களின் துறவு நிலை மேலானது' என்று கூறிய பொழுது, 'தங்களுடைய துறவுநிலை அதைவிட மேலானதாயிற்றே' என்று பதிலிறுத்தனர் இவர்கள். 'எவ்வாறு?' என்று வியப்புடன் அவர் வினவியக்கால், "நானோ அற்பமான இவ்வுலகையே துறந்தேன். ஆனால் தாங்களோ அவ்வுலகையே துறந்துவிட்டீர்கள்" என்று மறுமொழி பகர்ந்தார்கள் இவர்கள். அதுகேட்டு கலீபா அதிர்ந்து போனார்.

இவ்வாறு மன்னர் மன்னர்களையும் இடித்துரைக்கும் மாபெரும் இறைநேசச் செல்வராக விளங்கிய அவர்கள் இறைவனை இறைஞ்சுதல் மூலம் அதிகமதிகமாக நெருங்க நெருங்க, அவர்களின் இறைஞ்சுதல் இறைவனால் அதிகமதிகமாக ஏற்றுக் கொள்ளப்படுவதாயிருந்தது. ஒரு தடவை அவர்களின் மகனுக்கு நீரடைப்பு நோய் ஏற்பட்டபொழுது அவர்கள் தம் இரு கரங்களையும் உயர்த்தி, "இறைவனே! நான் உன்மீது அன்பு செலுத்துவதன்மீது ஆணையாக நான் உன்னிடம் வேண்டி நிற்கின்றேன். நீ என் மகனின் பிணி நீக்கி நலன் வழங்குவாயாக!" என்று இறைஞ்சினர். அவர்களின் இவ்விறைஞ்சுதலை இறைவன் அக்கணமே ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக அவர்கள் அவ்வாறு இறைஞ்சிக் கைகளைக் கீழே போடுமுன் அவர்களின் மகனுக்கு நலன் ஏற்பட்டது.

அவர்கள் அடிக்கடி இறைவனை நோக்கி, "இறைவனே! நீ என்னையும் என் மக்களையும் பட்டினி போடுகின்றாய். எங்களுக்குச் சிலபொழுது உடுத்த உடைகூட இல்லாது செய்கின்றாய். எங்களின் இல்லத்தில் சிலபொழுது விளக்குகள்கூட எரியாமல் செய்கின்றாய். நீ இவ்வாறு செய்வது உன்னுடைய அன்பின் அடையாளம் என்பதையும், உன்னுடைய அன்பிற்குரிய அடியார்களிடமே நீ இவ்வாறு நடந்து கொள்கின்றாய் என்பதையும் நான் நன்கறிவேன். ஆனால் உன்னுடைய அன்பை நான் எவ்வாறு பெற்றுக்கொண்டேன்? அதற்கான தகுதி என்னிடம் என்ன உள்ளது? என்பதை எண்ணி எண்ணியே எனக்குப் பெருவியப்பாக உள்ளது" என்று இறைஞ்சுவார்கள்.

மேலும் அவர்கள் இறைவனை நோக்கி, "இறைவ எம்பெரும! நீ என்னையும் நன்கறிவாய். என் நிலையையும் நன்கறிவாய். என் ஆற்றலையும் நன்கறிவாய். எனவே என்மீது துன்பங்களைச் சுமத்திவிடாதே" என்று பிரார்த்திப்பார்கள்.

ஒருநாள் இவர்களின் முன் ஒரு காரீ வந்து மிகவும் இனிமையாகக் குர்ஆனை ஓதினார். அது கேட்டுப் பெரிதும் மகிழ்ந்த இவர்கள் அவரைத் தம் மகனிடம் அழைத்துச் சென்று ஓதச் செய்யுமாறும், ஆனால் அவரின் முன் சூரத்துல் காரிஆவை மட்டும் ஓதச் சொல்ல வேண்டாமென்றும்,

காரணம், தம் மகன் இளகிய மனமுடையவரென்றும், மறுமையின் துயரங்களைப் பற்றிக் கேட்க அவருடைய மனம் தாளாது என்றும் ஒருவரிடம் கூறினார்கள். அவ்விதமே அந்தக் காரீ அவர்களின் மகனிடம் அழைத்துச் செல்லப்பட்ட பொழுது அவர், அவரின் முன் பல இறை திருவசனங்களை ஓதி வருங்கால் தம்மையறியாமல் சூரத்துல் காரி ஆவையும் ஓதி விட்டார். அதுகேட்டு அவர்களின் மகனின் உள்ளம் நிலை குலைந்தது. 'ஆ' என்று பதறிய அவரின் உயிர் அக்கணமே அவரின் உடலை விட்டும் பிரிந்தது.

இச்செய்தி புலைல் (ரஹ்) அவர்களுக்குத் தெரிய வந்ததும் அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள். அதுகண்டு வியப்படைந்த மக்கள், "நாங்கள் தங்களுடன் முப்பதாண்டுகளாகத் தொடர்பு கொண்டுள்ளோம். இந்த முப்பதாண்டு காலத்தில் தாங்கள் ஒரு தடவையேனும் புன்முறுவல் பூத்ததை நாங்கள் காணவில்லையே. தாங்கள் இப்பொழுது புன்முறுவல் பூக்கின்றீர்களே. இது புன்முறுவல் பூக்க வேண்டிய நேரமா?" என்று அவர்களை வினவியபொழுது, "இறைவனுக்கு மகிழ்வை வழங்கியது எனக்கும் மகிழ்வை வழங்கியது. அவன் விட்ட விதியை நானும் பொருந்திக் கொண்டேன். எனவே புன்முறுவல் பூத்தேன்" என்று பதில் கூறினார்கள்.

இவ்வாறு கூறிய அவர்கள், "எனக்கு நபிமார்கள் மீதும் பொறாமையில்லை. அவர்களும் மறுமையில் தங்களுக்கு என்ன நேரிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக நப்ஸீ, நப்ஸீ (என்னுடைய ஆன்மாவே! என்னுடைய ஆன்மாவே!!) என்று கூறிக் கொண்டிருப் பார்கள். எனக்கு வானவர்கள் மீதும் பொறாமை இல்லை. அவர்களும் மறுமையில் தங்களுக்கு என்ன நேரிடுமோ என்று மனிதர்களைவிட அதிகமாக அஞ்சிக் கொண்டிருப்பார்கள். ஆனால் எவன் இவ்வுலகில் இதுவரையில் பிறக்கவில்லையோ, இனி எக்காலும் பிறக்கவும் மாட்டானோ அவனைப் பற்றித்தான் நான் பொறாமையுறுகிறேன்" என்றும் எடுத்துரைத்தார்கள்.

இறுதியாக ஹிஜ்ரி 187 ஆம் ஆண்டும் பிறந்தது. அப்பொழுது அவர்கள் தங்கள் வாணாளின் கடைசி விளிம்பில் வந்து நின்றார்கள். தாங்கள் இவ்வுலகு நீத்து இறையண்மையை எய்தும் நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்ததும், தங்களின் துணைவியாரை அருகழைத்து "என் வாணாளின் முடிவு துவங்கிவிட்டது. நான் இறந்ததும் என்னை நல்லடக்கம் செய்து விட்டு என் இரண்டு பெண் மக்களையும் அபுல் குபைஸ் மலைக்கு அழைத்துச் சென்று, நான் உயிரோடிருந்த வரை அவர்களைப் பேணி வளர்த்துக் காப்பாற்றி வந்ததாகவும், அவன் என்னை

மண்ணறைக்குள் சிறைவைத்து விட்டதால் இனிமேல் அவர்களைப் பேணி வளர்த்துக் காத்தருள் புரிவது அவனுடைய கடமை என்று நான் கூறிச் சென்றதாகவும், இறைவனிடம் எடுத்துரைத்துவிடு'' என்று இறுதி உரை (வஸிய்யத்) வழங்கினார்கள். அதன்பின் 'கலிமா' முழக்கத்துடன் கண்களை இறுக மூடிக் கொண்டார்கள். ஞான சூரியன் புலைல் இறப்பு என்னும் திரைக்குள் மறைந்து விட்டது. அதன் காரணமாக, மக்க மாநகர் முழுவதும் துன்ப இருள் மண்டியது.

தம் கணவரின் இறுதி உரைப்படி, அவர்களை மக்காவிலுள்ள ஜன்னத்துல் முஅல்லாவில் நல்லடக்கம் செய்து விட்டு, தம் இரு பெண் மக்களையும் அபுல் குபைஸ் மலைக்கு அழைத்துச் சென்று அவர்கள் கூறிச் சென்றவண்ணம் இறைவனிடம் அழுது மன்றாடினர் அம்மையார். அப்பொழுது ஆங்கு வந்த எமன் நாட்டு அரசர், அவர்களை எவரென வினவி, அவர்கள் அழுவதற்கான காரணத்தையும் விசாரித்தார். இறைவனின் நல்லடியார் புலைல் (ரஹ்) அவர்களின் அன்புத் துணைவியாரும், அவர்களின் அருமைப் பெண் மக்களும் அவர்களாவர் என்பதையும், அவர்கள் திக்கற்ற நிலையில் தெய்வமே துணை என்று இருப்பதையும் கண்டு அவருடைய கண்களில் நீர் மல்கியது. ''அம்மையே! கவலற்க!! தாங்கள் அனுமதி வழங்கின் தங்களின் இரு பெண்மக்களையும் ஒவ்வொருவருக்கும் பதினாயிரம் தீனார் மஹர் வழங்கி என் இரு ஆண் மக்களுக்கும் மண முடித்து மகிழ்கிறேன்'' என்று கூறினார் மன்னர். அது கேட்டு ஒப்புதல் வழங்கினர் அம்மையார். விரைவில் எமன் நாடு அழைத்துச் செல்லப்பட்ட அவ்விரு பெண் மக்களும் அந்நாட்டு இளவரசர்களுக்கு மண முடித்து வைக்கப்பட்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்கள்.

## 10. இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்)

**மா**லை நேரம். மென்காற்று மெல்லென வீசிக் கொண்டிருந்தது. அது ஏதோ இரகசியம் பேசுவது போன்று அரச வீதியிலே சுமந்து செல்லப்பட்ட தங்கப் பல்லக்கின் பட்டுத் திரைகளைச் சற்று விலக்கியது. அடுத்த கணம் பூரண மதியமும் வெட்கித் தலைகுனியும் வண்ணம் பேரழகு வாய்க்கப் பெற்ற அரசிளங்குமரியின் அழகுத் திருமுகத்தை ஆங்கு வந்து கொண்டிருந்த ஒருவரின் கண்கள் கண்டுவிட்டன. அவ்வளவுதான். அவருடைய நிலை குலைந்தது. உடல் தகித்தது. அவரை அறியாமல் அவருடைய கால்கள் அவரை அப்பல்லக்கின் பின்னே இழுத்துச் செல்லத் துவங்கிவிட்டன.

இறுதியாக, பல்லக்கு அரண்மனைக்குள்ளே நுழைந்தது. ஆனால் அதனைப் பின் தொடர்ந்து சென்றவரின் நிலையோ பரிதாபத்திற்கு இடமாகியது. ஆசைமீக்குற்று உள்ளே நுழைய முற்பட்ட அவரை வாயிற்காப்போரின் இரும்புக் கரங்கள் வெளியே பிடித்துத் தள்ளின.

வெளியே வந்து குப்புற வீழ்ந்த அவர் மீண்டும் அரண்மனை வாயிலை அணுகி உள்ளே நுழைய முற்பட்டார். மீண்டும் அடியும் உதையும் அவருக்குக் கிடைத்தன. அப்பொழுது அவர் வாயிற்காப் போரை நோக்கி, ''நீங்கள் என்னை உள்ளே புக அனுமதி மறுக்கின்றீர்கள். நல்லது. நீங்கள் அருள் கூர்ந்து அப்பொற் பல்லக்கில் சென்ற அரசிளங்குமரியின் அழகுத் திருப்பெயரையாவது கூறுங்கள். நான் அத்திருப்பெயரை உச்சரித்துக் கொண்டாவது என் உயிரை விடுகின்றேன்'' என்று கூறினார். அதுகேட்டு வாயிற்காப்போருக்கு வந்த வெஞ்சினத்திற்கு அளவில்லை. அவரை நையப்புடைத்து வெளியே வீசி எறிந்தார்கள்.

வெளியே வந்து 'தொப்'பென வீழ்ந்த அவர் அவளின் நினைவின்றி வேறொன்றும் நினையாதவராய்,

*உன்றன் அழகை அன்றிஒரு*
*அழகை என்கண் பாராதே*
*உன்றன் நினைவை அன்றிஒரு*
*நினைவும் என்னுள் நுழையாதே*

***உன்னைக் காண்பதற் கோயான்***
***உயிரோ டுலகில் வாழ்ந்தேனோ***
***உன்னைக் காணாவிடி லோயான்***
***உயிர்நீத் துலகில் ஒழிவேனே***

என்று பாடிப் புலம்பி அழுது கொண்டிருந்தார். அழுது, அழுது அவருடைய கண்கள் கொவ்வையங்கனி போல் சிவந்தன.

பன்னாட்களாக அரண்மனைச் சுவரருகே அரசிளங்குமரியின் நினைவாக அழுது புலம்பிக் கொண்டிருந்த அவர், அரசர் குடிகளின் குறை விசாரிக்கும் நாள் அன்று அரண்மனைக்குள் நுழைந்தார். யாது உன் குறை என்று விசாரித்த அரசரிடம், ''அரச எம்பெருமு! நானோ நாடுகளிலும் காடுகளிலும் அலைந்து திரிபவன். ஒருநாள் நான் அரச வீதியிலே நடந்து வந்து கொண்டிருந்த பொழுது தங்களின் அழகுத் திருமகள் அவ்வழியே பல்லக்கில் இவர்ந்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது மென்காற்று அப்பல்லக்கின் பட்டுத் திரையை நீக்க, தங்களின் அன்புத்திருமகளின் பேரழகை ஒரு கணமே காணும் பேறு பெற்றேன். அக்கணத்திலிருந்து என் நிலை குலைந்தது. அவரே நினைவாகப் பல்லக்கைப் பின் தொடர்ந்து வந்தேன். பல்லக்கு அரண்மனைக்குள் நுழைந்ததும் நானும் உள்ளே நுழைய முற்பட்டகாலை வாயிற் காவலர் என்னைத் தடுத்து நிறுத்தி அடித்து விரட்டி விட்டனர். நான் எங்கும் செல்லாது தங்களின் அழகுத்திருமகளின் நினைவாக அழுது சலித்து அரண்மனைச் சுவரருகே இத்தனை நாட்களாகப் படுத்திருந்தேன். இன்று குறை விசாரிக்கும் நாளாதலின் இங்கு வந்தேன். என் குறை நீக்கி என் மனம் நிறைவுறச் செய்ய வேண்டுமாறு வேண்டுகின்றேன்'' என்று கூறினார்.

அது கேட்டதும் அரசரின் கண்கள் செக்கச் செவேலெனச் சிவந்தன. மீசை படபடத்தது. ''என்ன உத்தண்டம் இவனுக்கு? அடித்து விரட்டுங்கள் இவனை'' என்ற ஆணை அவரின் வாயிலிருந்தும் அனற் பொறி தெறிக்க வெளிவந்தது. அடுத்த கணம் அவர் மீது குத்து மழை சொரியப்பட்டது. தெருத்தெருவாக, வீதி வீதியாக அவர் அடித்து விரட்டப்பட்டார்.

இது நடந்து சின்னாட்கள் ஆயின. ஒருநாள் அரசிளங்குமரி திடீரென மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார். அடுத்த கணம் அவருடைய உயிர் அவருடைய உடலை விட்டும் பிரிந்தது. அதுகேட்டு நகரமே துன்பப் பெரும் கடலில் மூழ்கியது.

இளவரசியின் இறப்புச் செய்தி கேள்வியுற்றதும் அவர் மீது அணையாக் காதலுற்ற அக்காடு வாழ் மனிதரின் உயிரே நின்றுவிடும் போல் இருந்தது. அழுது சலித்த வண்ணம் அவர் அவளின் அடக்க இடம்

நோக்கி நடந்து வந்தார். அவர் அங்கு வந்து சேர்ந்தபொழுது நன்கு இருட்டிவிட்டது. ஒருவரேனும் அங்கு இல்லை. இதுதான் தக்க தருணம் என்று எண்ணிய அவர் விறுவிறென அவ்வடக்க இடத்தைத் தோண்டினார். கையில் அவளுடைய வெற்றுடன் கிட்டியது. அதனை வெளியே எடுத்து ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, தோண்டிய மண்ணை விறுவிறெனத் தள்ளி அவ்வடக்க இடத்தை ஒழுங்குபடுத்தினார். அதன்பின் அவ்வெற்றுடலைத் தம் தோளில் சுமந்த வண்ணம் கானகத்தில் தாம் வாழ்ந்து வந்த சிறுகுடில் நோக்கி நடந்து சென்றார்.

தன் குடிலை அடைந்ததும் ஆங்கு ஒரு மூலையில் அவளுடைய வெற்றுடலை வைத்து அதன் அருகே விளக்கேற்றி வைத்தார். அதன்பின் அவ்வெற்றுடலின் அருகே அமர்ந்து பலவாறு அழுது புலம்பிக் கொண்டிருந்தார்.

அந்நள்ளிரவில் அவ்வழியே வந்த வழிப்போக்கர் சிலர் வழி தவறி ஆங்கு விளக்கு வெளிச்சம் தெரிவதைக் கண்டு ஆங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களைச் சற்றுத் தொலைவில் கண்டதும் அரச ஊழியர்கள் தாமோ அவர்கள் என்று அஞ்சிய அக்காடு வாழ் மனிதர் அருகே இருந்த செடி ஒன்றில் போய் மறைந்து கொண்டார்.

வந்த அவர்கள் உள்ளே நுழைந்து பார்க்கும் பொழுது அங்கே ஒரு பெண்ணின் வெற்றுடல் நீட்டி நிமிர்த்தி வைக்கப்பட்டிருப்பதையும் அதன் அருகே ஒரு விளக்கு மினுக், மினுக்கென்று எரிந்து கொண்டிருப்பதையும் கண்டார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. அவர்களில் ஒரு மருத்துவரும் இருந்தார். அவர் முன் சென்று அவ்வெற்றுடலின் நாடியைப் பிடித்துப் பார்த்த பொழுது அதில் மெல்லிய துடிப்பு இருப்பதைக் கண்டார். மூச்சடைப் பால் தான் அம்மெல்லியள் இறந்தவள் போன்று காணப்படுகின்றாள் என்று எண்ணிய அவர் அதற்கான மருந்தைக் கரைத்து அவளின் வாயில் ஊற்றினார். என்ன வியப்பு! இறந்ததுபோன்று காணப்பட்ட அம்மங்கை நல்லாள் சற்று நேரத்தில் கண்களை மெதுவாகத் திறந்தாள். தன்முன் அந்நிய ஆடவர்கள் இருப்பதையும் தான் அலங்கோல நிலையில் கிடப்பதையும் கண்டு அவளுக்கு நாணம், நாணமாக வந்தது. தன் மீதிருந்த துணியை ஒழுங்கு செய்து கொண்டு, ''ஐயன்மீர்! தாங்கள் யார்? நான் எங்கு உள்ளேன்?'' என்று அவர்களை நோக்கி வினவினாள். அவர்கள் தாங்கள் அங்கு வந்ததையும் அதன்பின் ஆங்கு நிகழ்வுற்றதையும் எடுத்துரைத்தனர்.

இதனைச் செடி மறைவில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த அக்காடு வாழ் மனிதர் உணர்ச்சி மேலீட்டால் சரேலென உள்ளே பாய அவரால்

தம் கண்களையே தம்மால் நம்ப இயலவில்லை. தம் ஆசையின் கனியை உயிரோடு அடையப் பெற்ற பெருமகிழ்ச்சியில் அவர் ஆடினார், பாடினார், ஆர்ப்பரித்தார். அவர்கள் அவரை நோக்கி, ''நீர் யார்? இங்கு வந்துற்ற காரணம் யாது?'' என்று வினவ நடந்தவற்றை நடந்தவாறு நவின்றார் அவர். அதுகேட்ட இளவரசி, புன்முறுவல் பூத்த வண்ணம். ''எல்லாப் புகழும் இறைவனுக்கே! இதுகாறும் மண்ணோடு மண்ணாக மக்கிப் போயிருக்க வேண்டிய என்னை இவர் மூலமாகவும் உங்கள் மூலமாகவும் காத்தருளிய இறைவனுக்கே எல்லாப் புகழும்'' என்று கூறினாள்.

இதன்பின் தம்மை அம்மங்கை நல்லாளுக்கு மணமுடித்து வைக்குமாறு அவர் அவர்களை வேண்ட அம்மங்கை நல்லாளும் அதற்கு இணங்க அக்கணமே அவர்கள் இருவருக்கும் ஆங்கு வைத்துத் திருமணம் நிகழ்த்தி, ''இன்றுபோல் என்றும் இருங்கள்'' என்று வாழ்த்தி விட்டுத் தம் வழியே சென்றார்கள் அவர்கள்.

அக்குடிலிலே அத்ஹம் இப்னு மன்சூர் என்று பெயர் தாங்கிய அவரும் அரசிளங்குமரியும் இல்லறத்தை நல்லறமாகச் செய்து வந்தார்கள். அவர்களின் இல்வாழ்வு அன்பும் அறனும் ஒருங்கே வாய்க்கப் பெற்றதாக விளங்கியது. இதன் பின் அவர்கள் இருவரும் ஹஜ்ஜுச் செய்வதற்காக மக்க மாநகர் சென்ற பொழுது ஆங்கு வைத்து அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்கு இப்ராஹீம் (அலை) அவர்களின் நினைவாக இப்ராஹீம் என்னும் அழகு சால் திருப்பெயரிட்டு இறை இல்லமாகிய கஃபாவிற்கு எடுத்துச் சென்று ஆங்குக் குழுமி இருந்தவர்களை நோக்கி தம் அருமை மகனுக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டிக் கொண்டார்கள். அவர்களும் அவ்வாறே செய்தனர்.

ஹஜ்ஜுக் கடமைகளை ஆற்றிவிட்டு கானகத்தின் நடுவிலுள்ள தம் குடிலுக்கு மீண்ட அந்த இன்பத் தம்பதிகள் தம் அருமை மகவைத் தம் உயிரினும் மேலாகப் பேணி வளர்த்து வந்தனர். சிறுவர் இப்ராஹீம் ஆறு வயதை எய்தப் பெற்றதும் அவரை அண்மையிலுள்ள பல்க் நகரத்திற்கு அழைத்துச் சென்று அங்குள்ள பள்ளி ஒன்றில் குர்ஆன் ஓத வைத்தார் அத்ஹம். அவரை ஒவ்வொரு நாள் காலையிலும் பள்ளிக்கு அழைத்துச் செல்வதும் மாலையில் சென்று இல்லம் அழைத்து வருவதும் அவருடைய வழக்கமாக அமைந்திருந்தது.

ஒருநாள் அந்நாட்டு மன்னர் அப்பள்ளியின் அருகே பவனி வந்தபொழுது அவரைப் பார்ப்பதற்காக வெளியே வந்த சிறுவர்களில் இப்ராஹீமும் இருந்தார். அவரின்மீது மன்னரின் செவ்வரியோடிய கண்கள் பாய்ந்தன. இறந்து போன தம் மகளையே உரித்து வைத்தாற்

போன்று அச்சிறுவர் இருப்பதைக் கண்டதும் அவர்மீது ஒரு தனி அன்பு அம்மன்னருக்கு ஏற்பட அவரைப் பற்றி ஆசிரியரிடம் வினவினார் மன்னர். ''எவரோ கானகம் வாழும் ஒருவர் காலையில் அவரைப் பள்ளி கொண்டு வந்து விடுவதும் மாலையில் அழைத்துச் செல்வதும் வழக்கமாக உள்ளது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்'' என்று கூறினார் ஆசிரியர். அதுகேட்ட மன்னர், அச்சிறுவரைத்தாம் அரண்மனைக்கு அழைத்துச் செல்தாகவும், அக்கானகம் வாழ் மனிதர் வரின் அவரை அரண்மனைக்கு வரச்சொல்லுமாறும் கூறி விட்டு, சிறுவர் இப்ராஹீமைத் தம் பல்லக்கில் ஏற்றி வைத்துக் கொண்டு இவர்ந்து சென்றார்.

அரண்மனை வந்தடைந்த அவர், உடனே இப்ராஹீமை அந்தப்புரம் அழைத்துச் சென்று தம் மனைவியிடம் காட்டி, ''பார்த்தாயா? இச்சிறுவரை! நம் அருமை மகளின் அழகெலாம் திரண்டு உருக் கொண்டது போன்று அமைந்துள்ளார்'' என்று கூற, 'ஆம்' என்று கூறித் தம் மூக்கின்மேல் விரலை வைத்தனர் அரசியார். இதன்பின் இப்ரா ஹீமைப் பன்னீரில் குளிக்கச் செய்து பொன்னாடை அணிவித்துப் பூரித்தார் அவர்.

மாலையில் இப்ராஹீமின் தந்தை அரண்மனையின் வாயிலை அடைந்து தம் அருமந்த மைந்தனை அழைத்து வருமாறு அரச ஊழியனிடம் கூற, அவரை உள்ளே அழைத்து வருமாறு ஆணையிட்டார் அரசர். அவ்வாறே அவர் உள்ளே சென்றதும், ''உம்மை எங்கேயோ கண்டது போன்றுள்ளதே, நீர் யார்? இவர் உம்மகனா?'' என்று தம் அருகே வீற்றிருந்த இப்ராஹீமைச் சுட்டிக் காட்டி வினவினார் அவர்.

அதற்கு அக்காடு வாழ் மனிதர், ''என் பெயர் அத்ஹம் என்பதாகும். அண்ணலெம்பெருமான் முகம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் அன்புத் தோழர் உமர் (ரலி) அவர்களின் வழி வந்தவன் நான். இப்ராஹீம் என் மகன் தான். தாங்கள் முன்பொரு தடவை என்னை இங்கு வைத்துத்தான் கண்டிருப்பீர்கள்'' என்று கூறினார். அப்பொழுதுதான் அரசருக்குத் தாம் முன்பொரு தடவை அவரை அடித்து விரட்டுமாறு ஆணையிட்டது நினைவுக்கு வந்தது.

அதன்பின் அரசர் அவரை நோக்கி, ''உம் இளமகன் இறந்து போன என் அருமை மகளின் அழகுடன் திகழ்கிறார். எனவேதான் அன்பு மீக்குற்று அரண்மனை அழைத்து வந்தேன்'' என்று கூறினார்.

''ஆம்; அவர் தங்களின் அழகு மகளின் அன்பு மகன்தான்'' என்று அவர் கூறியதும், அரசருக்குத் தூக்கி வாரிப் போட்டது போல் இருந்தது.

''என்ன, என்ன?'' என்று வியப்புடன் வினவினார்.

அத்ஹம் நடந்த வரலாற்றை ஒன்றுகூட விடாது எடுத்துரைத்தார். அரசருக்குத் தம் காதுகளையே தம்மால் நம்ப இயலவில்லை.

அதன்பின் என்ன? அரசரும் அரசியும் தம் பரிவாரம் புடைசூழத் தம் அருந்தவத்தால் ஈன்றெடுத்த தம் அன்புத் திருமகளைக் காண்பதற்காகக் கானகம் சென்றனர். அங்குச் சிறுகுடில் ஒன்றில் ஒட்டுப் போடப்பட்ட அழுக்குத்துணி ஒன்றை அணிந்து தம் அழகுத்திருமகள் காட்சி வழங்கியதைக் கண்டதும் அரசருடையவும் அரசியுடையவும் கண்களிலிருந்தும் நீர் தாரை தாரையாக வழிந்தோடியது.

அதன்பின் அவரையும் அவரின் கணவர் அத்ஹமையும் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு தம் அரண்மனை அழைத்து வந்த அரசர், அத்ஹமை நோக்கி, ''மருகரே! இங்குநீங்கள் இருவரும் தங்களின் அன்பு மகன் இப்ராஹீமுடன் எல்லாவித இன்பங்களையும் நுகர்ந்து கொண்டு இனிதே வாழ்ந்து வருவீர்களாக!'' என்று கூறினர்.

அதுகேட்ட அவர் பற்றற்று வாழ்ந்து வரும் தமக்குக் காட்டிலுள்ள அச்சிறு குடிலே போதுமென்றும் அவரின் மகளும் பேரனும் வேண்டுமானால் அப்பளிங்கு மாளிகையில் வாழ்ந்து வரட்டும் என்றும் வாய்ப்புக் கிடைக்குந்தோறும் தாம் அவர்களை வந்து பார்த்துவிட்டுச் செல்வதாகவும் கூறினார். அரசர் எவ்வளவோ எடுத்துரைத்தும் அவர் கேட்டாரில்லை.

❖ ❖ ❖

பார் புகழும் பல்க் நாட்டின் அரியாசனத்திலே தம் பாட்டனாருக்குப் பின் சுல்தான் இப்ராஹீம் இப்னுஅத்ஹம் அவர்கள் அடலேறு போன்று அமர்ந்து அரசோச்சிக் கொண்டிருக்கின்றார்கள். அரசவையில் அமைச்சர்களும் அறிஞர்களும் வணிகர்களும் வீரர்களும் அணியணியாக அமர்ந்திருப்பது முழு மதியைச் சூழ விண்மீன்கள் நிறைந்திருப்பது போன்று காட்சி வழங்கிக் கொண்டுள்ளது. அப்பொழுது ஆங்குத் திடீரென ஒருவர் நுழைந்து எதையோ அங்குத் தேடுவது போன்று சுற்றும் முற்றும் பார்க்கிறார். அப்பொழுது சுல்தான் அவர்கள் அவரை நோக்கி, 'யார் நீ? எங்கே வந்தாய்?' என்று அதிகாரக் குரலில் வினவினார்கள்.

''இந்தச் சத்திரத்தில் ஒருநாள் தங்கிவிட்டுச் செல்லலாமென்று வந்தேன்'' என்று கூறினார் வந்தவர்.

அவரின் இம்மறுமொழி ஆங்குக் கூடி இருந்த அனைவருடைய உச்சியையும் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கியது. அனைவருடைய

கண்களும் கோபத்தால் சிவந்தன. வீரர்களின் வாட்கள் சரேலென உறையிலிருந்தும் வெளிப் போந்தன.

''என்ன! சத்திரமா இது? இஃது என் அரண்மனை. தெரியாதா உனக்கு?'' என்று ஆங்காரத்துடன் வினவினர் சுல்தான்.

ஆனால் வந்தவரோ சுல்தான் அவர்களின் ஆங்காரத்தை அணுவேனும் பொருட்படுத்தாதவராய், ''என்ன இது! சத்திரமில்லையா? அவ்விதமாயின் இங்கு உமக்கு முன் எவர் வாழ்ந்து வந்தார்?' 'என்று மறுவினா வினவினார்.

சுல்தான் அவர்களின் மூளை சுழன்றது.

''என் பாட்டனார்'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

''அவருக்கு முன்'' என்று அடுத்த வினா எழுப்பினார் வந்தவர்.

''என் பாட்டனாரின் தந்தை'' என்று மெல்லிய குரலில் விடையிறுத்தனர் சுல்தான்.

''அவருக்கு முன் எவர்?'' என்று அடுத்த வினாவை அதிகாரத்துடன் வினவினார் வந்தவர்.

சுல்தான் அவர்களின் மூளை சக்கரவாகனமாகச் சுழலத் துவங்கி விட்டது. தட்டுத் தடுமாறிய வண்ணம் அவர்கள் தம் மூதாதையின் பெயரைக் கூறினர்.

அதுகேட்ட அம்மனிதர், 'அவ்விதமாயின் இது சத்திரமில்லையா? நீரே கூறும்' என்று சொன்ன வண்ணம் அவ்விடத்தை விட்டும் அகன்றார்.

அப்பொழுது சுல்தான் அவர்களின் மூளை சுழற் சுழிபோல் சுழலத் துவங்கி விட்டது. அவர்களால் அதற்குமேல் அரியாசனத்தின்மீது அமர்ந்திருக்க இயலவில்லை. மெதுமெதுவாக அடியெடுத்து வைத்து அவர்கள் தங்களின் அந்தப்புரம் சென்றார்கள். அத்துடன் அவை கலைந்தது.

அவை கலைந்ததேயொழிய சுல்தான் அவர்களின் மூளையைக் கௌவிப் பிடித்த மயக்கம் கலையவில்லை. நாளுக்கு நாள் அது அதிகரித்துக் கொண்டே வந்தது.

அந்த மனிதரைத் தேடி அவர்கள் பல நாட்கள் அலைந்தார்கள். இறுதியாக அவரை ஓரிடத்தில் கண்டு அவரின் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டு ''தாங்கள் யார்?'' என்று வினவினர். அதற்கு அவர் ''என் பெயர் கிள்று'' என்று கூறினார். அது கேட்டு அவர்களின் மயக்கம் குறைவதற்குப் பதிலாக அதிகரிக்கலாயிற்று.

நாட்கள் சில உருண்டோடின. அன்று அரச அலுவல்களை எல்லாம் முடிக்க இரவு வெகு நேரமாகிவிட்டது. பெரிதும் அயர்ச்சியுற்ற சுல்தான் அவர்கள் தூக்க வெருட்சியுடன் தம் மஞ்சம் சேர்ந்தார்கள். ஆனால் மஞ்சத்தில் அவர்கள் கண்ட காட்சி அவர்களை நிலைகுலையச் செய்தது. அப்படி அவர்கள் அங்கு என்ன கண்டார்கள்? மஞ்சத்தை விரித்து அதன்மீது மலர் தூவி வைத்த பணிப்பெண் அதன் மீது ஒய்யாரமாகத் தூங்கிக் கொண்டிருந்ததை.

அன்றிரவு அவளுக்கு ஒரு பொல்லாத ஆசை ஏற்பட்டது. 'இத்தனை ஆண்டு காலமாக இதனை விரித்து மலர் தூவி வைக்கின்றோமே. ஆஹா! இஃது எத்துணை மெத்தென்று இருக்கின்றது!! இதில் எத்துணை மென்மணம் கமழ்கின்றது!!! சுல்தான் அவர்கள் வருவதற்கோ நேரமிருக்கின்றதே. நாம் சற்று நேரம் இதில் படுத்துறங்கிப் பார்ப்போமே' என்று ஒரு கணம் எண்ணினாள். அடுத்த கணம் அதில் படுத்து விட்டாள். அதற்கு அடுத்த கணம் அவளை உறக்கம் ஆட்கொண்டு விட்டது.

தாம் படுத்துறங்கும் மஞ்சத்தின் மீது தம் பணிப்பெண் படுத்துறங்குவதைக் கண்ட சுல்தான் அவர்களுக்கு அடங்காச் சினம் ஏற்பட்டது. சுவரில் மாட்டப்பட்டிருந்த சவுக்கைஎடுத்து 'சுளீர், சுளீர்' என்று பணிப்பெண் மீது அடித்தார்கள். அவள் அலறிக் கொண்டு துயில் எழுந்தாள். 'என் மஞ்சத்தின் மீது துயில உனக்கு என்ன தைரியம்?' என்று கூறிய வண்ணம் அவள்மீது தம் சவுக்கைச் சுழற்றிச் சுழற்றி வீசி அடித்தார்கள். அடித்து அடித்து அவர்களின் கை ஓய்ந்தது.

அப்பொழுது பணிப்பெண் அழுது கண்ணீர் வடித்தவளாய் சுல்தான் அவர்களை நோக்கி, ''அரசர் பெரும! இம்மலர் மஞ்சத்தின் மீது நான் சிறிது நேரமே படுத்துறங்கியதற்கு எனக்கு இத்துணை பெரிய தண்டனை வழங்கப்பட்டதென்றால் ஆண்டுக்கணக்காக இதில் படுத்துறங்கும் தங்களுக்கு இறைவன் எத்துணை பெரிய தண்டனையை வழங்குவானோ தெரியவில்லையே'' என்று தன் ஐயத்தை வெளிப்படுத்தினாள்.*

★ வெள்ளியன்று இவர்கள் ஜும்ஆ தொழப் பள்ளி சென்ற பொழுது ஆங்கு இவர்களுக்கென விரிக்கப்பட்ட தொழுகை விரிப்பில் ஒரு பக்கீர் தொழுததைக் கண்டு அவருக்கு இருநூறு சவுக்கடிகள் கொடுக்குமாறு இவர்கள் ஆணையிட்டனர் என்றும் அடிகளைப் பெற்ற அந்த பக்கீர், ''இங்கு இரண்டு ரகஅத்துகள் தொழுததற்கான பலன் எனக்கும், இருநூறு அடிகள் தந்ததற்கான பலன் உமக்கும் மறுமையில் கிடைக்கும். மறுமையில் இதுபற்றி உம்மிடம் இறைவன் வினவின் நீர் என்ன மறுமொழி பகர்வீரோ? என்று வினவியதும் இவர்கள் தம் தவற்றை உணர்ந்து

இச்சொற்கள் அவளின் வாயிலிருந்து வெளிவந்ததுதான் தாமதம். சுல்தான் அவர்கள் அப்படியே கீழே அமர்ந்து விட்டார்கள். அவர்களின் மூளை கிறுகிறுக்கத் துவங்கிவிட்டது. அவர்களால் மேற்கொண்டும் நிற்கவே இயலவில்லை.

இரவு முழுவதும் அவர்கள் தம் மஞ்சத்திலே புரண்டு எண்ணாததை யெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உள்ளம் எதை எதையோ எண்ணி அலுத்தது. இதன்பின் அவர்களை உறக்கம் ஆட்கொண்டது.

இதன்பின் நாட்கள் பல நகர்ந்தன. ஓரிரவு சுல்தான் அவர்கள்தம் மஞ்சத்தின் மீது படுத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென அவர்களின் உறக்கம் கலைந்தது. அவர்களின் உப்பரிகையின் மேல் முகட்டில் எவரோ தடதடவென்று நடமாடும் ஒலி கேட்டது.

''யார் அது?'' என்று அதிகாரத்துடன் வினவினார்கள் சுல்தான்.

''உமக்கு அறிமுகமானவர் தாம். வேறு எவருமில்லை'' என்று பதில் வந்தது.

அறிமுகமானவரானாலும் அறிமுகமில்லாதவரானாலும் அர்த்த ராத்திரியில் அங்கு என்ன வேலை?'' என்று ஆங்காரத்துடன் வினவினார்கள் சுல்தான்.

''என் ஒட்டகம் காணாமற் போய்விட்டது. அதனை இங்குத் தேடிக் கொண்டுள்ளேன்'' என்று மீண்டும் பதில் வந்தது.

அதுகேட்டு சுல்தான் அவர்களுக்கு ஏற்பட்ட வெஞ்சினத்திற்கு அளவில்லை. ''காணாமற்போன உன் ஒட்டகம் என் உப்பரிகையின் மேல் முகட்டிலா மேய வந்தது, நீர் இங்கு வந்து தேடுவதற்கு'' என்று கடு கடுப்புடன் வினவினார்கள் அவர்கள்.

அப்பொழுது, ''மறதியாளரே! நீர் என்ன உம்மையும் உம் நிலையையும் மறந்துவிட்டுப் பேசுகின்றீர். நீர் பொற் கட்டிலின்மேல் விரிக்கப்பட்ட மலர் மஞ்சத்தின்மீது படுத்துக் கொண்டு இறைவனைத் தேடிக் கொண்டிருக்கும் பொழுது நான் மட்டும் என் காணாமற்போன ஒட்டகையை இங்கு வந்து தேடக் கூடாதோ?'' என்று பதில் வந்தது.

---

அவரிடம் மன்னிப்புக் கோரி அவருக்கு அன்பளிப்புகள் வழங்கி அனுப்பி வைத்தனர் என்றும் இது முதல் இவர்களின் எண்ணத்தில் ஒருவிதத் திருப்பம் ஏற்பட்டது என்றும் மற்றொரு வரலாறு இயம்புகின்றது.

அதுகேட்ட சுல்தான் அவர்கள் என்ன பதில் கூறுவது என விழித்தார்கள். அவர்களின் நா பேசும் ஆற்றலை இழந்தது. அவர்களின் உள்ளத்தை ஒருவித மயக்கம் ஆட்கொண்டது. அம்மயக்க நிலயையிலேயே அவர்கள் உறங்கி விட்டார்கள்.

விடிந்து எழுந்தபொழுது இரவு நிகழ்ந்த நிகழ்ச்சி கனவா, நனவா என்று அறிய இயலாவண்ணம் அவர்கள் தவித்தார்கள்.

'இவ்வுலக வாழ்வு நீர்க்குமிழி போன்றது. இதில் இன்ப சுகங்களை நுகர்ந்துகொண்டு இறைவனைத் தேடமுயல்வது கானலை நீரெனத் துரத்திச் செல்வதற்கு ஒப்பேயாகும் என்ற எண்ணம் அவர்களின் உள்ளத்தை ஆட்கொள்ளத் துவங்கியது.

இக்காலை அவர்கள் ஒரு பெரியாரின் சொற்பொழிவைக் கேட்கச் சென்ற பொழுது அப்பெரியார் கூட்டத்தினரை நோக்கி 'இவ்வுலக வாழ்வும் மறுமை வாழ்வும் ஒன்று சேரா என்றும், ஒன்றை விரும்பின் மற்றொன்றைத் துறக்க நேரிடும்' என்றும் கூறியது அவர்களின் உள்ளத்தில் முள்ளெனத் தைத்தது. இதன் பின் அரண்மனை திரும்பிய அவர்கள் தம் அமைச்சர், பிரதானிகளை அழைத்துத் தாம் அரசு துறக்க எண்ணி யுள்ளதாகக் கூற அவர்கள் எல்லாம் வேண்டாம், வேண்டாம் என்று கூறி அதற்கான பல்வேறு காரணங்களையும் எடுத்துரைத்து அவர்களின் மூளையைக் குழப்பினர். ''மீறி, தாங்கள் அரசு துறப்பின் நாங்களும் தங்களுடன் அடியெடுத்து வைத்து நடந்து வருவோம். எங்களைத் தாங்கள் அடித்து விரட்டிய போதினும் நாங்கள் தங்களை ஒருகணமும் விட்டுப் பிரியோம்'' என்று ஆணையிட்டுக் கூறினர். இது கேட்டு சுல்தான் அவர்களுக்கு என் செய்வதென்றே விளங்கவில்லை.

ஒருநாள் அவர்கள் வேட்டையாடக் கானகம் சென்றபொழுது ஒரு பாழடைந்த கோட்டையைக் கண்டு அங்குப் போய் சற்று இளைப்பாறினர். அப்பொழுது அவர்களின் முன் செங்கற்கள் குவிந்து கிடப்பதைக் கண்டு அவற்றைக் கிளறிப் பார்த்தார்கள். என்ன வியப்பு! செங்கற்பாளங்களுக்குக் கீழே செம்பொற்பாளங்கள் வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் கண்டதும் ''நான் இவற்றை முதலில் காணும் ஏழை ஒருவருக்குக் கொடுப்பேன்'' என்று கூறிக் கொண்டு வெளியே வந்து அங்குமிங்கும் பார்த்தார்கள். சற்றுத் தொலைவில் ஒருவர் விறகு வெட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு அவரை அணுகி ''என்னுடன் வாரும்; நான் உமக்கு மாபெரும் கருவூலத்தைக் காட்டித் தருகின்றேன். அதைக்கொண்டு நீர் வளவாழ்வு வாழலாம்'' என்று கூறினர்.

அப்பொழுது அந்த ஏழை விறகு வெட்டி அவர்களை நோக்கி, ''நீரே அதனை எடுத்துக் கொள்ளும். உமக்குத்தான் அது தேவைப்படும். எனக்கு அது தேவையில்லை. நான் அந்தக் கருவூலம் இருக்கும் இடத்தை சிறுவயது முதற் கொண்டே அறிவேன்'' என்று கூறினார்.

அவரின் இப்பதில் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. ''இந்த விறகு வெட்டியல்லவோ அரசராக இருக்கத் தகுதியானவர். நானல்லவே. நான் பேராசையின் அடிமையாகவல்லவோ இருக்கிறேன்'' என்று கூறித் தம்மையே தாம் அவர்கள் நொந்து கொண்டார்கள். அவர்களின் மூளை கிறுகிறுத்தது.

இதன்பின் சில நாட்கள் ஓடி மறைந்தன. ஒருநாள் அவர்கள் தம் உப்பரிகையின்மீது வீற்றிருக்குங்கால் வெளியே ஓர் எளியோன் தன் அழுக்கு மூட்டையை அருகே வைத்து விட்டு இரண்டு ரகஅத் மனமொன்றிய நிலையில் தொழுது கொண்டிருப்பது அவர்களின் கண்களில் தென்பட்டது. பின்னர் அவன் தன் அழுக்கு மூட்டையை அவிழ்த்து அதிலிருந்து இரண்டு காய்ந்த ரொட்டிகளை எடுத்து அதனை நீரில் நனைத்து உப்பைத் தொட்டுக் கொண்டு சுவைத்துச் சுவைத்து உண்டதையும் அவர்கள் கண்டார்கள். அதன்பின் அவன் அமைதியாகக் கீழே படுத்து உறங்குவதையும் அவர்கள் கண்ணுற்றார்கள்.

அவன் உறங்கி எழுந்ததும் அவனைத் தம் முன் அழைத்து வரச் செய்து, ''இறைவனைத் தொழுது, இரண்டு காய்ந்த ரொட்டிகளை நீரில் நனைத்து உப்பைத் தொட்டு உண்டு அயர்ந்து உறங்கினாயே. இந்த வாழ்வில் நீ மனநிறைவு பெறுகின்றாயா?'' என்று அவனை நோக்கி வினவினார்கள் சுல்தான்.

''மனநிறைவு பெற்றிராவிடின் இறைவனை மனமொன்றித் தொழுவேனா?'' என்று மறு வினா விடுத்தான் அவன்.

அவனுடைய இம்மறுமொழி சுல்தான் அவர்களின் மூளையை மீண்டும் கிறுகிறுக்க வைத்தது. அவர்களுக்கு உலக வாழ்வே புரியாத புதிராக இருந்தது. அவர்களை அளவிட முடியாக் கவலை ஆட்கொள்ளத் துவங்கிவிட்டது. சோகமே உருவாக அவர்கள் காட்சி வழங்கினார்கள்.

கவலை மறக்க, அவர்கள் தம் ஏவலாளர் சிலருடன் கானகம் சென்று வேட்டையாடக் கிளம்பி விட்டார்கள். ஒரு நாள் கானகம் சென்ற அவர்களின் முன் ஒரு மான் தென்பட்டது. அதனை விரட்டிக் கொண்டு சென்றார்கள். ஆனால் அதுவோ அவர்களை விட்டும் தப்பி மின்னெனப் பாய்ந்தோடியது. அதனை எவ்வாற்றானும் அடித்து வீழ்த்துவதென்ற உறுதியுடன் கானகத்தினுள்ளே நெடுந்தொலை அவர்கள் தனியாக

வந்துவிட்டார்கள். அப்பொழுது ஓர் ஒலி எங்கிருந்தோ முழங்கியது. 'உறக்கத்தை விட்டு விழித்தெழும்' என்று அந்த ஒலி அவர்களுக்கு உத்திரவிட்டது.

எவருமில்லாக் கானகத்தில் எவர் தமக்கு உத்தரவிடுகின்றார் என்று அறியாதவர்களாய் அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தார்கள். ஒருவருமில்லை.

மீண்டும் அவ்வொலி முழங்கியது. 'இறப்பு உம்மை அணுகு முன் விழித்தெழும்' என்று மீண்டும் அது அவர்களுக்கு ஆணையிட்டது.

எனினும் அவர்கள் அவ்வாணையைப் பொருட்படுத்தாது அந்த மானைத் துரத்திக் கொண்டு சென்றார்கள். அப்பொழுது அந்தமான் அவர்களைத் திரும்பிப் பார்த்து ''உம்மால் என்னை வேட்டையாட இயலாது. அதற்கு மாறாக உம்மை வேட்டையாடவே நான் அனுப்பி வைக்கப்பட்டுள்ளேன். உம்மை இதற்காகவா இறைவன் படைத்துள்ளான்? உமக்கு வேறு வேலை இல்லையா?'' என்று வினவியது.

அடுத்த கணம் அதே கேள்வி அவர்களின் குதிரையின் சேணத்திலிருந்து வெளிப்பட்டது. மறுகணம் அதே கேள்வி அவர்களின் சட்டையின் கழுத்துப்பட்டியிலிருந்து வெளிப்போந்து அவர்களைத் திக்குமுக்காட வைத்தது.

அவ்வளவுதான். அடுத்த கணம் அவர்கள் அந்த மானைத் துரத்துவதை விட்டு தம் புரவியிலிருந்து கீழே இறங்கினார்கள். இல்லை, இல்லை. அவர்கள் தம் அரியாசனத்திலிருந்து கீழே இறங்கினார்கள். அவர்களின் வாழ்விலே ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டது. ஒரு புது சகாப்தம் துவங்கியது.

குதிரையை அவ்விடத்திலேயே விட்டு விட்டு அவர்கள் கானகத்தின் நடுவே நடந்து சென்றார்கள். வழியில் ஓர் ஆடு மேய்ப்பவனைச் சந்தித்து அவனிடம் தம் அரச உடுப்புகளை யெல்லாம் கழற்றிக் கொடுத்துவிட்டு அவன் அணிந்திருந்த கம்பளி உடையை வாங்கி அணிந்து கொண்டு அவர்கள் தம் ஆன்மீகப் பயணத்தைத் துவக்கினார்கள். இப்பொழுது அவர்கள் ஓர் அரசரல்ல; ஆத்மீக ஞானி.

கம்பளி உடை அணிந்து கானகத்தின் நடுவே அவர்கள் நடந்து வருங்கால் அவர்களுக்குப்பல்வேறு வகையான மனப் போராட்டங்கள் நிகழ்ந்தன. தாம் அரசு துறந்து வருவது சரியா, தவறா என்ற ஐயம் அவர்களின் உள்ளத்தில் அலைமோதி அவர்களின் கால்களைப் பின்னச் செய்தன. எனினும் தாம் செய்தது சரியே, சரியே என்று கூறிக் கொண்டு,

அவர்கள் திடமாக அடியெடுத்து வைத்துத் தம் கால்கள் செல்லும் வழியே நடந்து கொண்டிருந்தார்கள்.

இக்காலை அழகிய உருவினர் ஒருவர் அவர்களின் முன் எதிர்ப்பட்டு அவர்களை ஆரத் தழுவி, ''நீர் எங்குச் செல்கின்றீர்?'' என்று வினவினார். 'உலகைத் துறந்து இறைவனிடம் செல்கின்றேன்' என்று அவர்கள் விடையிறுத்தார்கள். 'உண்மையாகவா?' என்று அவர் மீண்டும் வினவ 'ஆம்' என்று திடமாக அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். அதன்பின் அவர் தொழுது இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களையும் தொழுமாறு கூறினார். பின்னர் அவர்களுக்கு உணவு வழங்கி, உண்ணுமாறு செய்து அவர்கள் உண்டு முடித்தபின் அவர்களுக்கு இறைவனின் மேலான பெயராகிய இஸ்முல் அஃலத்தைப் போதித்து, ''உமக்குப் பசி ஏற்படுங்கால் இதனை ஓதி இறைவனிடம் இறைஞ்சின் உம் பசி தீரும்' என்று கூறி ''பிறப்பிறப்பில்லா இறைவனிடம் உம்மை ஒப்படைத்து விட்டுச் செல்கின்றேன்'' என்று இயம்பிச் சென்றார்.

அத்திருமந்திரத்தை உச்சரித்த வண்ணம் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் பதைபதைக்கும் பாலையின் நடுவே நடந்து சென்றக்கால் மற்றோர் எழில் உருவினர் ஒருவர் அவர்களின் முன் எதிர்ப்பட்டு, ''இப்ராஹீமே! உம்மை வழியில் சந்தித்து உமக்கு இஸ்முல் அஃலத்தைப் போதித்தது எவர் என்று உமக்குத் தெரியுமா?'' என்று வினவினார்.

''தெரியாதே'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம்.

''அவர்கள் தாம் என் சகோதரர் இல்யாஸ் (அலை) அவர்களாவார்கள்'' என்று அவர் கூற, ''அவ்விதமாயின் தாங்கள் யார்?'' என்று வினவினர் இப்ராஹீம்.

''நான் கிள்ரு ஆவேன்'' என்று கூறி அவர்களுக்குப் பல்வேறு செய்திகளையும் எடுத்துரைத்து, தாம் அவர்களுடன் இருந்து நட்புறவாட வந்திருப்பதாக இயம்பினர் கிள்ரு (அலை).

அதுகேட்ட இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள், ''நான் அல்லாஹ்வுடனேயன்றி வேறு எவருடனும் நட்புறவாட விரும்பவில்லை'' என்று கூறிவிட்டார்கள். *

இதன்பின் கால் நோவ கானகத்தின் நடுவே நடந்து வந்த இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் இறுதியாக நைஷாப்பூரின் அண்மையை

* ஆனால் அவர்கள் அப்பொழுது கிள்ரு (அலை) அவர்களிடம் 'பைஅத்' பெற்றதாக ஒரு வரலாறு கூறுகிறது.

வந்தடைந்து ஆங்குள்ள குகையொன்றில் அமர்ந்து ஓராண்டல்ல, ஒன்பது ஆண்டுகள் கடும் தவம் செய்தார்கள். இந்த ஒன்பது ஆண்டுகளும் வியாழக்கிழமை தோறும் வெளியே வந்து ஆங்கு கிடக்கும் சுள்ளிகளைப் பொறுக்கி வந்து நகரில் விற்று நகரிலுள்ள பள்ளியில் ஜும்ஆ தொழுதபின் கையிலிருக்கும் காசுக்கு ரொட்டிகள் வாங்கி அதில் ஒரு பாதியை ஏழைகளுக்கு அறம் செய்துவிட்டு மறுபாதியைத் தாம் தவம் கிடக்கும் குகைக்கு எடுத்துச் சென்று அதனையே மறுவாரம் வரை உண்டு மன நிறைவடைவது அவர்களின் நீங்காத வழக்கமாக ஆகியது.

அவர்கள் அக்குகையில் வசித்து வருங்கால் ஓரிரவு கடுமையான குளிராக இருந்தது. எனினும் பனிக்கட்டியை உடைத்து நீருண்டாக்கி அந்நீரினால் 'உலூச்' செய்து தொழுதார்கள். குளிரின் கொடுமை தாங்காது அவர்களின் உடலெல்லாம் நடுங்கியது. உயிர் தம் உடலைவிட்டுப் பிரிந்து விடுமோ என்று அஞ்சினார்கள். அப்பொழுது கும்மிருளில் யாதோ ஒரு கம்பளி அருகில் கிடப்பது போன்று தோன்றியது. அதனை எடுத்துத் தம் உடலிலே சுற்றிக் கொண்டு அவர்கள் அயர்ந்து உறங்கினர். விடிந்தெழுந்து பார்த்தபொழுது தாம் கம்பளியென உடலிலே சுற்றிக் கொண்டிருப்பது ஒரு மலைப்பாம்பாக இருப்பதைக் கண்டு அவர்கள் அயர்ந்து போய்விட்டார்கள். உடனே அதனை உதறித் தள்ளிவிட்டு, ''இறைவனே! என் குளிர் போக்க எனக்கு மென்மையான கம்பளியை வழங்கினாய் என்று எண்ணினேன். ஆனால் அதுவோ பயங்கரமான மலைப்பாம்பாக வல்லவோ உள்ளது'' என்று கூறினார்கள். உடனே அப்பாம்பு தன் தலையைத் தரையிலே தாழ்த்தி மூன்றுமுறை வணக்கம் செலுத்திவிட்டு அவ்விடத்தை விட்டும் அகன்றது.

அப்பொழுது அசரீரி ஒன்று 'நஜ்ஜய்னாக மினத்தல்ஃபி பித்தில்ஃபி' (நாம் உம்மை அழிக்க வந்த அபாயத்திலிருந்து மற்றொரு பயங்கரமான அபாயத்தைக் கொண்டு காத்தருள் புரிந்தோம். அதாவது கடுங்குளிரி லிருந்து மலைப்பாம்பைக் கொண்டு காப்பாற்றினோம்) என்று முழங்கியது. அதுகேட்டு அவர்கள் இறைவனுக்கு ஆயிரம், ஆயிரம் நன்றி செலுத்தினார்கள். பிற்காலத்தில் ஸூஃபி மகான் அபூஸயீத் அபுல் கைர் (ரஹ்) அவர்கள் அக்குகைக்குள் சென்றபொழுது அங்குக் கஸ்தூரி மணம் கமகமவெனக் கமழ்ந்ததைக் கண்டு அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

பல்க் நாட்டு மன்னர் சுல்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் பக்கீராக நைஷாப்பூர் வந்து ஆங்குள்ள குகையொன்றில் கடும் தவம் செய்வது நாளடைவில் மக்களுக்கு எப்படியோ தெரிய வந்தது. அவ்வளவுதான். மக்கள் சாரி சாரியாக அங்குவரத் துவங்கிவிட்டார்கள்.

அது கண்டு இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. அடுத்த கணம் அவர்கள் அவ்விடத்தை விட்டும் கிளம்பி விட்டார்கள். அவர்களின் கால்கள் அவர்களை பக்தாது மாநகரை நோக்கி இழுத்துச் சென்றன.

பக்தாது மாநகரை அடைந்த அவர்கள் நேரே புலைல் இப்னு இயால் (ரஹ்) அவர்களின் தவமடம் சென்று அவர்களைச் சந்தித்துத் தமக்கு 'பைஅத்' நல்கியருளுமாறு வேண்டினர். அதற்கு அவர்கள்,''நல்லது; நீர் நம்முடைய தவ மடத்திலுள்ள சமையல் அறையில் மூன்று ஆண்டுகள் வெங்காயம் நறுக்கும் பணியைச் செய்து வருவீராக!'' என்று கூறினர்.

அவ்விதமே அப்பணியை மூன்றாண்டுகள் செய்த அவர்கள் ஒருநாள் புலைல் (ரஹ்) அவர்களிடம் சென்று, ''நான் இங்கு வந்து மூன்றாண்டுகள் கழிந்துவிட்டன. தாங்கள் இட்ட பணியை இந்த மூன்றாண்டுகளாகச் செய்து வந்தேன். அன்பு கூர்ந்து எனக்கு 'பைஅத்' நல்குங்கள்'' என்று கூறினர்.

அதுகேட்ட புலைல் (ரஹ்) அவர்கள், ''நல்லது; இன்னுமோர் மூன்றாண்டு காலம் தவமடத்திற்குத் தண்ணீர் சுமந்து வரும் பணியை நீர் மேற் கொள்வீராக!'' என்று பணித்தார்கள்.

அவ்வாறே அவர்கள் தண்ணீர் சுமக்கும் பணியை மூன்றாண்டு காலம் செய்தார்கள். இறுதி நாள் அன்று அவர்கள் சுமந்து வந்த தண்ணீர்ப்பை கிழிந்து, அதிலிருந்து தண்ணீர் முழுதும் கீழே சிந்தித் தரையை நனைத்து விட்டது. அதுகண்ட தவமட ஊழியன் ஒருவன் அவர்களின் கன்னத்தில் 'பளார்' என்று அறைந்துவிட்டான். அப்பொழுது சினமீக்குற்ற அவர்கள், ''நான் மட்டும் பல்கின் அரசாதிபத்தியத்தைத் துறந்து வராதிருப்பின் உன்னைப் பழிக்குப்பழி வாங்கியிருப்பேன்'' என்று கூறினர்.

அடுத்த நாள் அவர்கள் மீண்டும் புலைல் (ரஹ்) அவர்களின் முன் சென்று அவர்களிட்ட பணியை மூன்றாண்டுகள் செய்து விட்டதாகவும் தமக்கு 'பைஅத்' தரவேண்டுமென்றும் வேண்டி நின்றனர்.

அப்பொழுது புலைல் (ரஹ்) அவர்கள், அவர்களை நோக்கி ''நீர் இன்னும் சினத்தையும் அகந்தையையும் விட்டொழிக்கவில்லை. எனவே இன்னும் மூன்றாண்டுகள் தவமடத்திற்கு விறகு சுமந்து வரும் பணியை மேற்கொள்வீராக!'' என்று கூறினர்.

அவ்வாறே அவர்கள் மூன்றாண்டுகள் விறகு சுமக்கும் பணியை மேற்கொண்டார்கள். இறுதிநாள் அன்று அவர்கள் விறகு சுமந்து வரும்பொழுது விறகுக்கட்டு அவிழ்ந்து கீழே விழ சமையற்காரன் சினமுற்று அவர்களின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தான்.

இப்பொழுது அவர்கள் முன்புபோல் சினமுறவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் அந்தச் சமயற்காரனை நோக்கி, ''தவறுக்காக வருந்து கிறேன். என்னை அறைந்ததன் காரணமாகத் தங்களின் கை நோவுமே என்று எனக்கு வருத்தமாக உள்ளது'' என்று கூறினர்.

அவர்கள் இவ்வாறு கூறியது புலைல் (ரஹ்) அவர்களின் செவியிலும் விழுந்தது. உடனே அவர்கள் இவர்களை அழைத்துவரச் செய்து 'பைஅத்' வழங்கிப் பற்பல ஆன்மீக இரகசியங்களை அவர்களுக்கு எடுத்தோதினர்.

அதன்பின் அவர்களிடம் பிரியா விடை பெற்று மாநிலத்தின் மார்பிடமாம் மக்கமாநகர் நோக்கி புறப்பட்டார்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள்.

பாலை நடுவே பதை பதைக்கும் வெயிலில் அவர்கள் மூன்று நாட்கள் பட்டினியாக நடந்து சென்றார்கள். அப்பொழுது அவர்களின் மனம் ''எத்துணை இன்பகரமாக இப்பயணத்தை மேற்கொண் டிருக்கலாம். இத்துணைத் துன்பத்தை வீணே வாங்கிக் கொண்டாயே'' என்று அவர்களிடம் கூறிச் சபலத்தை உண்டு பண்ணியது. அப்பொழுது அவர்கள் விண்ணை ஏறிட்டுப் பார்த்தவர்களாய், ''இறைவனே! உன் நண்பனைத் துன்புறுத்த உன் எதிரியாகிய ஷைத்தானை ஏவி விட்டுள்ளாயே. உன் துணையாலன்றி நான் எவ்வாறு இப்பாலையைக் கடப்பேன்'' என்று அலறினார்கள். உடனே அசரீரியாக, ''இப்ராஹீமே! உன் சட்டைப் பையிலுள்ளதை எடுத்து வெளியே எறிந்துவிடும். என் உதவி உமக்குக் கிட்டும்'' என்று ஓர் ஒலி முழங்கியது. உடனே அவர்கள் தம் சட்டைப் பையில் கையை விட்டுத்துளாவினார்கள். அதிலே நான்கு வெள்ளிக் காசுகள் கிடந்தன. அவற்றை எடுத்து அவர்கள் வெளியே வீசி எறிந்தார்கள்; அடுத்த கணம் அவர்களின் மனத்தை கௌவிப் பிடித்திருந்த தீய எண்ணம் மறைந்தது. அவர்கள் அறியாவிதத்தில் அவர்களுக்கு உணவும் இறைவனருளால் கிடைத்தது.

இக்காலை அவர்கள் கானகத்தின் நடுவே சென்று கொண்டிருந்த பொழுது அவர்களுக்கு தாகவிடாய் ஏற்பட்டது. வெகுதொலைவில் ஒருவர் ஆடு மேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவரை அணுகி, ''உம்மிடம் அருந்த நீரோ பாலோ இருக்கிறதா?'' என்று வினவினர்.

அதற்கு அவர் ''ஆம்; ஆனால் அவற்றில் உமக்கு மிகவும் உவப்பானது எது? கூறும்; தருகிறேன்'' என்றார்.

''நீர்'' என்று அவர்கள் கூறினார்கள்.

உடனே அவர் தம் கைத் தடியால் அருகிலிருந்த பாறையில் அடித்தார். பாறை பிளந்து தண்ணீர் பீரிட்டு வெளி வந்தது. அதனைக் கையால் அள்ளி அவர்கள் பருகினர். ஆஹா! அது பனிக்கட்டியிலும் குளிர்ச்சியாகவும், தேனினும் இனிமையாகவும் இருந்தது. அதுகண்டு அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, ''என்ன! இஃது உமக்கு வியப்பாக உள்ளதா? இதில் வியப்புறுவதற்கு ஒன்றுமே இல்லை. ஓர் அடியாள், தன்னைப் படைத்துப் பரிபாலிக்கும் இறைவனுக்கு வழிப்பட்டால் உலகிலுள்ள அனைத்தும் அவனுக்கு வழிப்படும்'' என்று கூறினார்.

அவர்கள் மக்கமா நகருக்கு, 'ஹஜ்'ஜுச் செய்யச் சென்றது இது முதல் தடவையல்ல. இரண்டாவது தடவையாகும். முதல் தடவை அவர்கள் பல்க் நாட்டின் அரசரென்ற முறையில் பரிவாரங்களுடன் ஹஜ்ஜுச் செய்யச் சென்ற பொழுது ஓரிடத்தில் அவர்கள் கூடாரமடித்துத் தங்கி இருந்தார்கள். அவ்விடத்தை அவர்கள் வந்தடைந்ததும் அப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று இப்பொழுது அவர்களின் மனக் கண் முன் நிழலாடியது. பொன் முளைகளில் கட்டப்பட்ட பட்டுக் கூடாரத்தில் அவர்கள் அரசரேறென வீற்றிருப்பதை ஆங்கு வந்த துறவியொருவர் கண்ணுற்றதும் அவர் அவர்களை அணுகி, ''அரசர் பெரும! இஸ்லாம் இத்தகைய ஆடம்பரத்தையும் வீண் செலவையும் அனுமதிக்கின்றதா, என்ன?'' என்று ஆங்காரத்துடன் வினவினார். அது கேட்டு இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள்.

இதன்பின் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் அவ்விடத்தை விட்டுக் கிளம்பிய பொழுது அப்பட்டுக் கூடாரத்தை அவ்விடத்திலேயே விட்டு வைத்துவிடுமாறு தம் அலுவலாளர்களுக்குப் பணித்தனர். பின்னர் அத்துறவியையும் உடன் அழைத்துக் கொண்டு மக்கமா நகர் நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் சிறிது தொலைதான் சென்றிருப்பர். துறவியோ பெரிதும் பரபரப்படைந்து எதனையோ அங்குமிங்கும் தேடினார். ''எதைத் தேடுகின்றீர்?'' என்று இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் அவரை நோக்கி வினவ, ''என் தகரக்குவளையைக் கூடாரம் அடித்திருந்த இடத்தில் வைத்து விட்டேன். சற்றுப் பொறுங்கள். அதனை எடுத்து வந்துவிடுகிறேன்'' என்று கூறி அவ்விடத்தை நோக்கி ஓட முற்பட்டார்.

அப்பொழுது இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் அவரைக் கையைப் பிடித்து நிறுத்தி, ''பக்கீரே! சற்றுப் பொறும். நீர் இடித்துரைத்தீர்

என்பதற்காக பொன் முளைகளுள்ள பட்டுக் கூடாரத்தையே விட்டுத் தொலைத்து விட்டு வந்தேன். நீர் என்னவோ பற்றற்ற பக்கீர் என்று கூறிக் கொண்டு கேவலம் ஒரு தகரக் குவளையை விட்டுவர மனமில்லாது அதனை எடுக்க ஓடுகின்றீர்'' என்று கூறினர். அதுகேட்டு நாணித் தலைகுனிந்தார் பக்கீர். ''நான் துறவி வேடம் புனைந்திருக்கின்றேனே அன்றி துறவு மனப்பான்மை பெறவில்லையே'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார் அவர். இதனை நினைவு கூர்ந்ததும் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களின் இதழ்களில் இளநகை அரும்பியது.

இதன்பின் அவர்கள் மெதுமெதுவாக நடந்து 'தாத்துல் இர்க்' என்ற இடத்தை வந்தடைந்தார்கள். ஆங்கு அவர்கள் கண்ட காட்சி அவர்களின் குலையை நடுங்க வைத்து. அப்படி அவர்கள் ஆங்கு என்ன கண்டார்கள்?

எழுபதின்மர் வரிசை வரிசையாக இறந்து கிடந்த கோரக் காட்சியைத் தான். அந்த எழுபதின்மரின் மூக்கிலிருந்தும் காதுகளிலிருந்தும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அந்த எழுபதின்மரிலே ஓர் இளைஞர் மட்டும் குற்றுயிராய்க் கிடந்தார். அவரை இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் அணுகி, ''இளைஞரே! ஈங்கு யாது நிகழ்வுற்றது?'' என்று மூச்சுத் திணற வினவினார்கள்.

''அத்ஹமுடைய மகனே! 'உளூ'ச் செய்யத் தண்ணீருடன் தொழும் இடத்தின் அருகே எப்பொழுதும் அமர்ந்திருப்பீராக! அதை விட்டும் சற்று விலகி அப்பாற்பட்டுவிடின் நீர் புறக்கணிக்கப்பட்டு விடுவீர். அதன் அருகே மிகவும் நெருங்கிவிடின் நீர் துன்பத்திற்காளாகி விடுவீர். இறைவனின் முன் அதிகத் துணிவுடன் இருந்து விடாதீர். நண்பன் தானே என்று அச்சமற்று அவனருகில் சென்று விடாதீர். அவ்விதம் சென்றுவிடின் கிரேக்க நாட்டு உழுவத் தொழும்பரை வெட்டி வீழ்த்துவது போன்று நீர் ஹஜ்ஜுப் பிரயாணி என்றும் பாராது அவன் உம்மீது போர் தொடுத்து உம்மை வெட்டி வீழ்த்தி விடுவான்.

''கேளுமையா! எங்களுடைய வரலாற்றை, நாங்களோ சூபிகள். இறைவனின் திருப்பெயரை யன்றி வேறொன்றையும் உச்சரிப்பதில்லை, என்றும் அவனையே நம்பி அவனளவிலே வாழ்ந்து, அவனுக்காகவே வாழ்ந்து அவன் சொற்களுக்கு அன்றி வேறு எதற்கும் செவி சாய்க்கக் கூடாது என்றும் இறைவனின் திருமுன் உறுதிப் பிரமாணம் செய்தவர் களாய் ஹஜ்ஜுக் கடமையை ஆற்ற மக்கமா நகர் நோக்கிப் புறப்பட்டோம். இறுதியாக நாங்கள் இஹ்ராம் அணியும் இடத்தை வந்தடைந்ததும் கிள்ரு (அலை) அவர்களைச் சந்தித்தோம். அப்பொழுது எங்களுக்கு ஏற்பட்ட

மகிழ்ச்சிக்கு அளவில்லை. எல்லாப் புகழும் இறைவனுக்கே. நம் பயணம் புனிதம் பெற்றது. தேடப்படும் பொருள் தேடுபவருக்குக் கிடைத்து விட்டது. இத்துணை மாமனிதரைச் சந்திக்கும் பேறு நமக்குக் கிடைத்தது, பெறுதற்கரிய நற்பேறேயாகும் என்று நாங்கள் ஒருமித்து மகிழ்ச்சிக்குரல் எழுப்பினோம். அப்பொழுது அசரீரி ஒன்று முழங்கியது: 'பொய்யர்களே! போலி வேடதாரிகளே!! நீங்கள் எனக்களித்த உறுதிப் பிரமாணம் எங்கே போய்விட்டது. என்னை மறந்துவிட்டு வேறு எவரையோ கண்டு மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றீர்களே. என்னை விட்டும் அகன்று செல்லுங்கள். நீங்கள் செய்த தவற்றிற்குப் பரிகாரமாக உங்களுடைய ஆன்மாவை, உங்களுடைய இரத்தத்தை உங்களின் உடலிலிருந்து ஓட்டும் வரை நான் மனநிறைவடையப் போவதில்லை' என்று அந்த அசரீரி கூறியது. இறைவன் பழி வாங்கியதன் காரணமாக இறந்தவர்கள் தாம் இவர்கள். ஆதலின் இப்ராஹீமே! நீரும் எச்சரிக்கையோடிரும்'' என்று அவர் கூறினார்.

''அவ்விதமாயின் நீர் மட்டும் எவ்வாறு உயிரோடுள்ளீர்?'' என்று வினவினர் இப்ராஹீம் இப்னு அத்ஹம்.

அதுகேட்ட அவ்விளைஞர், ''அவர்கள் என்னை நோக்கி, 'நீயோ பசுங்காய். நாங்களோ பழுத்த பழங்கள். இன்னும் சற்று நேரத்தில் நீரும் பழுத்துவிடுவீர். அதன்பின் எங்களை வந்தடைவீர்' என்று கூறினர்'' என இயம்பினார். அடுத்தகணம் அவருடைய உயிர் அவருடைய உடலை விட்டும் பிரிந்தது.

இதன்பின் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் அவ்விடத்தை விட்டும் நீங்கி, ''மற்றவர்களெல்லாம் காலால் நடந்தும் வாகனங்களில் இவர்ந்தும் மக்கமா நகர் செல்கின்றனர். நானோ என் கண்களாலும் தலையாலும் நடந்து சென்று இறை இல்லத்தைத் தரிசிப்பேன்'' என்று கூறியவர்களாய் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் இரண்டு ரகஅத்கள் வீதம் தொழுது இறைவனிடம் அழுது கெஞ்சி, 'துஆ' இரந்தவர்களாய் மக்கமா நகர் நோக்கிப் புறப்பட்டார்கள். இவ்வாறு அவர்கள் செய்து வந்ததன் காரணமாக அவர்கள் மக்கமா நகரின் அண்மையை வந்தடைய ஏழாண்டுகள் ஆயின.

இதற்குள் அரசு துறந்த ஆத்மஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் மக்கமா நகர் வருவது, மக்கமா நகர் வாழும் மக்கள் அனைவருக்கும் எப்படியோ தெரிய வந்தது. அவர்களை வரவேற்க செல்வர்களும் ஏழைகளும் பண்டிதர்களும் பாமரர்களும் ஒருவரோ டொருவர் போட்டியிட்டுக் கொண்டு ஊருக்கு வெளியே ஓடோடி வந்தார்கள். ஆனால் அப்பெருந்தகையோ மக்கள் எவரும் தம்மை

இலக்குக் கண்டு கொள்ளக் கூடாது என்ற எண்ணத்துடன் வணிகக் குழு ஒன்றுடன் இணைந்து அடியெடுத்து வைத்து நடந்து வந்தார்கள்.

அப்பொழுது ஒருவர் அவர்களை அணுகி, ''இப்ராஹீம் இப்னு அத்ஹம் வழியில் வந்து கொண்டிருப்பதாகக் கேள்வியுற்றோமே. நாங்கள் எல்லாம் அவர்களை வரவேற்பதற்காக வந்துள்ளோம். நீர் அவர்களை எங்கேனும் வழியில் பார்த்தீரோ?'' என்று வினவினர்.

அவர்கள் இவ்வாறு வினவி வாய் மூடுமுன், ''அந்த வழி கேடனையா வரவேற்க வந்துள்ளீர்? வீண் வேலை'' என்று கூறினர் இப்ராஹீம் இப்னு அத்ஹம்.

அடுத்த கணம், ''எவரை வழி கேடன் என்று கூறினாய்?'' என்று ஆவேசத்துடன் மொழிந்த வண்ணம் அவர்கள்மீது குத்து மழையைப் பொழிந்தார் அவர்.

''நீங்கள் என்னை என்ன செய்தபோதிலும் சரியே. அவர் ஒரு வழி கேடன், வழிகேடன் தான்'' என்று குத்துகளையும் வாங்கிக் கொண்டு உரத்து சப்தமிட்டுக் கூறினார்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம்.

''நீ தான் வழிகேடன். நீ தான் வழி கேடன்'' என்று கூறிக் கொண்டு அவர்களை நையப் புடைத்தார்கள் அவர்கள்.

''ஆம்; நான் தான் வழிகேடன். நான்தான் வழிகேடன்'' என்று கூறிக் கொண்டு கத்தினார்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம்.

அவர்கள் தம் தவற்றை உணர்ந்து கொண்டார்கள் என்று எண்ணி அவர்களை 'ஓடிப்போ' என்று கூறி விரட்டியடித்தார்கள் அம்மக்கள்.

பெற்ற அடிகளின் காரணமாக அடிகளாரின் உடல் நலிவுற்றது. தள்ளாடித் தள்ளாடி அவர்கள் அடியெடுத்து வைத்து நடந்து சென்றார்கள். அப்பொழுது அவர்கள் தம் மனத்தை நோக்கி, ''மனமே! உம்மை வரவேற்க மக்கள் வருகின்றார்கள் என்பதை உணர்ந்ததும் உனக்குப் பெருமை ஏற்பட்டதல்லவா? அந்தப் பெருமைக்கு ஏற்ற சிறுமை உனக்கு இப்பொழுது கிடைத்ததா?'' என்று வினவினர்.

அவர்கள் இவ்வாறு தம் மனத்திற்குத் தாமே கூறியது கூட்டத்திலுள்ள ஒருவரின் செவிப்பட்டதும் அவர்களை ஏறிட்டுப் பார்த்தார் அவர். அவர்களின் உள்ளே ஆத்மீக ஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் ஒளிந்து கொண்டிருப்பது அவருடைய கண்களுக்குப் பளிச்சிட்டது. ''ஆ! என்ன தவறு செய்து விட்டோம்! என்ன தவறு செய்து விட்டோம்'' என்று அலறினார் அவர்.

''ஏன் இவ்வாறு அலறுகின்றீர்? நாம் என்ன தவறு செய்து விட்டோம்?'' என்று வினவினர் மக்கள்.

அதற்கு அவர், ''நாம் எவரை அடித்தோமோ அவர்கள் தாம் இப்ராஹீம் இப்னு அத்ஹம்'' என்று நா தழதழக்கக் கூறினார். அப்பொழுது அவருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் அருவியெனப் பாய்ந்தோடியது.

அப்பொழுது மக்களுக்கு ஏற்பட்ட மன உணர்ச்சிக்கு அளவில்லை. அம்மேதகையை அடித்த கைகளைத் தங்களின் மார்பிலும் முகத்திலும் அடித்த வண்ணம் அவர்கள், ''ஆ! என்ன தவறு செய்துவிட்டோம். என்ன தவறு செய்து விட்டோம்'' என்று கூறி அழுது பிரலாபித்தார்கள்.

அதன்பின் அவர்கள் அனைவரும் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களை அணுகி, தாம் அறியாது செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினர். அதனைப் பிழையெனக் கருதாத பெருந்தகை இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் அதுகேட்டுப் புன்முறுவல் பூத்தார்கள்.

இதன்பின் மக்கமா நகர் வந்தடைந்த இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் காடுகளுக்குச் சென்று விறகு சேகரித்து விற்றும் தோட்டக்காவல் பணி செய்தும் பொருளீட்டி அதைக் கொண்டு தங்களின் வாணாளைக் கழித்து வந்தார்கள். இக்காலை அவர்கள் ஒருவேளை கூடக் கூட்டுத் தொழுகையைத் தவற விட்டதில்லை. பன்னிரண்டாண்டு காலம் இரவுத் தொழுகைக்காகச் செய்யும் 'உளூ'வுடன் வைகறைத் தொழுகையையும் தொழுது வந்தார்கள்.

இஞ்ஞான்று ஹஜ்ஜுச் செய்வதற்காக மக்கா வந்த கலிபா ஹாரூன் அல்ரஷீத், அரசு துறந்த ஆத்ம ஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களைச் சந்தித்து 'தாங்கள் உலகை எவ்வாறு கண்டீர்கள்?' என்று வினவினர்.

அதற்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள், ''உலகம் என்ற துணியில் நான் ஒட்டுப் போட்டேன். அதன் காரணமாக மார்க்கம் என்ற துணியை இழக்க நேரிட்டது. உலகம் என்ற துணியாவது நிலைத்திருந்ததா என்றால் அதுவும் இல்லை. இறைவனை எய்தப் பெறுவதற்காக எவர் உலகைத் 'தூ'வெனத் தூக்கி எறிகின்றாரோ அவரே நற்பேறு பெற்ற வனாவார்'' என்று கருத்தமைந்த கவியொன்றைப் பாடினர். அதுகேட்டு ஹாரூன் அல் ரஷீதின் கண்கள் பனித்தன.

⁂ ⁂ ⁂

சுல்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் அரசு துறந்து வெளியே பொழுது அவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்திருந்தது. அதற்கு இஸ்ஹாக் என்று பெயர் சூட்டினர். அம்மகன் பெரியவரான பொழுது அவர் ஒரு நாள் தம் அன்னையை நோக்கி, 'அம்மா! அப்பா எங்கே?' என்று வினவினார். அப்பொழுது அன்னை அவரை நோக்கி, ''மகனே! நீ பால்குடிமாறாப் பாலகனாயிருந்த காலை உன் தந்தை உன்னையும் என்னையும் விட்டும் பிரிந்தார். இப்பொழுது அவர் மக்கா நகரில் இருப்பதாகக் கேள்வியுறுகிறேன்'' என்று பதிலிறுத்தனர்.

இதன்பின் தனயரின் மூளை வேகமாக வேலை செய்யத் துவங்கியது. மக்கமா நகர் சென்று ஹஜ்ஜுக் கடனை ஆற்றி வருவதுடன் தம் தந்தையையும் கண்டு வரவேண்டுமென்ற வேணவா அவருடைய உள்ளத்தை ஆட்கொண்டது. தாம் இவ்வாண்டு ஹஜ்ஜுச் செய்யச் செல்வதாகவும் எவர், எவர் தம்முடன் வர விரும்புகின்றார்களோ அவர்களெல்லாம் தம்முடன் வரலாமென்றும் பிரயாணச் செலவுகள் அனைத்தையும் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் நாடெங்கணும் பறை முழக்குமாறு ஆணையிட்டார் அவர். அவ்விதமே செய்யப்பட நாலாயிரவர் அவருடன் ஹஜ்ஜுச் செய்ய முன் வந்தார்கள்.

அந்த நாலாயிரவருடன் தம் அன்னையையும் அழைத்துக் கொண்டு மக்கமா நகர் நோக்கிப் புறப்பட்ட அவ்விளவல், பாலையெலாம் கடந்து இறுதியாக மக்கமா நகரின் தலை வாயிலை வந்தடைந்தார். அப்பொழுது ஆங்குக் கம்பளி உடையணிந்து வீற்றிருந்த துறவிகளை அண்மி, ''இப்ராஹீம் இப்னு அத்ஹம் என்று இங்கு ஒருவர் இருக்கின்றாராமே. அவரை உங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினார்.

''ஆம்; தெரியும். அவர் எங்களின் தோழர். அவர் தாம் எங்களுக்கு உணவு வழங்குகின்றார். அவர் இப்பொழுது விறகு சேகரிக்கக் கானகம் சென்றுள்ளார். அதனைவிற்று எங்களுக்கு உணவு வாங்கித் தருவார்'' என்று பதிலிறுத்தார்கள் அவர்கள்.

''நான் உங்களுடன் வருகிறேன். அவரை எனக்குக் காட்டுகின்றீர்களா?'' என்று ஆவலுடன் வினவினார் இளவல்.

''நல்லது; வாரும். காட்டுகின்றோம்'' என்று கூறி அவரை அழைத்துச் சென்றார்கள் துறவிகள்.

சற்றுத் தொலை சென்றதும் ஒருவர் தலையில் விறகுக் கட்டுடன் வந்து கொண்டிருந்தார். அவரை அத்துறவிகள் கட்டிக் காட்டி, 'இவர்தாம் இப்ராஹீம் இப்னு அத்ஹம்'' என்று கூறிவிட்டுத் தம் வழியே சென்றனர்.

தந்தையின் அவல நிலையைக் கண்டதும் தனயருக்கு ஆற்றொணத் துக்கம் ஏற்பட்டு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. எனினும் அதனை அடக்கிக் கொண்டு தம் தந்தையார் என்ன செய்கின்றார்கள் என்பதைப் பார்க்க அவர்களின் பின்னே மெதுவாக அடியெடுத்து வைத்து நடந்து சென்றார் அவர்.

அவரின் ஆருயிரனைய தந்தையார் கடைத் தெரு சென்று, ''நேரிய வழியில் சேகரித்து வந்த பொருளுக்கு நேரிய வழியில் ஈட்டிய பொருளைக் கொடுத்து வாங்குவார் எவருமுண்டோ? வாங்குவார் எவருமுண்டோ?'' என்று கூவிக் கொண்டு சென்றார்கள். அப்பொழுது ரொட்டிக் கடைக்காரன் ஒருவன் அவர்களை அழைத்து அவர்களின் தலையிலிருந்த விறகை இறக்கி அதற்கு பகரமாகப் பல ரொட்டிகளைக் கொடுத்தார். அவற்றைப் பெற்றுத் தம் இருப்பிடம் சென்று அவற்றைத் தம் தோழர்களின் முன் வைத்து உண்ணுமாறு கூறிவிட்டுத் தொழத் துவங்கினார்கள் அவர்கள்.

இவை அனைத்தையும் இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த தனயர் தம்மை எவர் என்று அவர்களிடம் காட்டிவிடின் அவர்கள் எங்கேனும் ஓடினும் ஓடிவிடுவர் என்று அஞ்சியவராய் தம் அன்னையை வந்தடைந்து தாம் கண்ட காட்சியை ஒன்றுவிடாது எடுத்துரைத்தார். அப்பொழுது அன்னை மகனை நோக்கி, ''மகனே! பொறுமையாய் இரு. ஹஜ்ஜுக் கடனை ஆற்றிய பின் ஆவன செய்வோம்'' என்று அறிவுரை பகர்ந்தனர்.

அன்று இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்குங்கால், ''இவ்வாண்டு ஹஜ்ஜுச் செய்யப் பெண்களும் சிறுவர்களும் ஏராளமாக வந்திருப்பதுபோல் தோன்றுகின்றது. நீங்கள் உங்களின் கண்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினர்.

அன்று மாலை அவர்கள் தம் தோழர்களுடன் கஃபாவைச் சுற்றி வரும்போது அவர்களின் தனயர் அவர்களின் முன் எதிர்ப்பட்டனர். அவரை அவர்கள் கூர்ந்து கவனித்தனர். அவ்வாறு அவரைக் கூர்ந்து கவனித்ததை அவர்களின் தோழர்களின் கண்களும் கண்டு கொண்டன. அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

இடம் சுற்றி முடிந்து தொழுது அவர்கள் அனைவரும் ஓரிடத்தில் வந்து அமர்ந்ததும் அவர்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களை நோக்கி, ''ஷெய்கு அவர்களே! தங்கள் மீது இறைவன் அருள் பாலிப்பானாக! தாங்கள் எங்களிடம் காலையில் பெண்களையும்

சிறுவர்களையும் விட்டுக் கண்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அறிவுரை பகர்ந்தீர்கள். நாங்களும் அதற்கு ஒப்பினோம். ஆனால் சற்றுமுன் தாங்கள் கஃபாவை இடம் சுற்றி வரும்பொழுது தங்களின் முன் எதிர்ப்பட்ட ஓர் இளவலைத் தாங்கள் கூர்ந்து நோக்கினீர்களே. அதற்கான காரணம் யாது?'' என்று வினவினர்.

அதற்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள், ''நான் அரசு துறந்து வெளியேறிய பொழுது எனக்குப் பால்குடிமகவு ஒன்று இருந்தது. அம்மகன் தான் இவ்விளவல் என்று எனக்கு உள்ளுணர்வு ஏற்பட்டது. எனவே அவனைக் கூர்ந்து நோக்கினேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அடுத்த நாள் அவர்களின் தோழர்களில் ஒருவர் பல்க் நாட்டிலிருந்து வந்துள்ள 'ஹஜ்' யாத்திரிகர்களைச் சந்தித்து வருவதற்காகக் கிளம்பினார். பட்டாலான கூடாரம் ஒன்றில் பகம்பொன்னாலான அரசுக் கட்டிலில் அமர்ந்து ஓர் இளவல் அழுத வண்ணம் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பதைக் கண்டார். கண்டதும், 'உள்ளே வரலாமா?'' என்று வினவினார்.

''நன்றாக வாருங்கள்; தங்கள் வரவு நல்வரவாகுக!'' என்று கூறினார் இளவல்.

''தாங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள்?'' என்று வினவினார் வந்தவர்.

''பல்க்கிலிருந்து'' என்று மறுமொழி பகர்ந்தார் இளவல்.

''தங்களின் தந்தையின் பெயர் என்ன?'' என்று மீண்டும் வினவினார் வந்தவர்.

இச்சொல் எரியீட்டியென அவ்விளவலின் உள்ளத்தில் பாயவே அவர் தம் கண்களைத் தம் கைகளில் புதைத்த வண்ணம் தேம்பித் தேம்பி அழலானார்.

அதன்பின் தாம் ஓதிக் கொண்டிருந்த திருக்குர்ஆனை ஒரு பக்கல் வைத்துவிட்டு, ''நான் என் தந்தையைப் பார்த்தறியேன். நேற்று நான் ஒருவரைப் பார்த்தேன். அவர் என் தந்தையாக இருப்பாரா, அல்லவா என்பது பற்றி எனக்கு இன்னும் ஐயமாக உள்ளது. நான் அவருடன் உரையாடின் அவர் முன்னொருகால் எங்களை விட்டும் வெருண்டோடியது போன்று இப்பொழுதும் வெருண்டோடி விடுவாரோ என்று எனக்கு அச்சமாகவும் உள்ளது. என் தந்தையின் பெயர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் என்பதாகும். அவர் பல்க் நாட்டின் மன்னர்'' என்று பதிலிறுத்தார் அவ்விளவல்.

அதுகேட்ட அம்மனிதர் அவ்விளவலை அழைத்துக் கொண்டு இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் இருக்குமிடம் நோக்கி அழைத்துச் சென்றார். அவ்விளவலுடன் அவரின் அன்னையும் சென்றார்கள்.

இப்பொழுது இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் எங்கே? கஃபாவில் ருக்னெ எமனிக்கு முன்னர் தம் தோழர்களுடன் வீற்றிருந்தார்கள். தம் தோழர் ஒருவருடன் தம் மகனும், மனைவியும் வருவது வெகு தொலைவிலேயே அவர்களின் கண்களுக்குத் தென் பட்டது. அவர்களின் மனைவி அவர்களை நெருங்கியதும் அவர்களிருந்த அலங்கோல நிலையைக் கண்டு துன்பம் தாள இயலாது 'கோ'வென்று அலறி விட்டார்கள். அதன்பின் தன் மகனை நோக்கி, ''என் மகனே! இவர் தானடா உன் தந்தை'' என்று கண்ணீரும் கம்பலையுமாகக் கதறியழுது கூறினார்ள். அது கண்டு ஆங்குக் கூடி இருந்த அனைவரும் உணர்ச்சி மீக்குற்று அழுதனர்.

அழுகை ஒருவாறு ஓய்ந்ததும் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களின் அருந்தவத்துத் திருமகன் தம் தந்தையாரை அணுகி அவர்களுக்குப் பணிவுடன் சலாம் உரைத்து நின்றார். சலாத்திற்கு மறுமொழி பகர்ந்த அவர்கள் புத்திர பாசம் மேலிடத் தம் அருமந்த மகனை மார்போடு அணைத்து, ''மகனே! நீ எந்த மார்க்கத்தில் இருக்கின்றாய்?'' என்று வினவினர்.

''இஸ்லாமிய மார்க்கத்தில்'' என்று மறுமொழி பகர்ந்தார் தனயர்.

''எல்லாப் புகழும் இறைவனுக்கே'' என்று கூறிய தந்தையார் மீண்டும் தம் மகனை நோக்கி, ''குர்ஆன் ஓதியுள்ளாயா?'' என்று வினவினர்.

''ஓதியுள்ளேன்'' என்று மறுமொழி பகர்ந்தார் தனயர்.

''எல்லாப் புகழும் இறைவனுக்கே'' என்று மீண்டும் மொழிந்தனர் தந்தை.

அதன்பின் தம் தனயரை நோக்கி, ''மார்க்கக் கல்வி பயின்றுள் ளாயா?'' என்று வினவினர்.

''ஆம்'' என்றார் தனயர்.

இதன்பின் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் தம் தனயரை விட்டுப் பிரிய முற்பட்ட பொழுது தனயர் அவர்களை இறுகப் பிடித்துக் கொண்டு, ''அப்பா! அப்பா!! தாங்கள் எங்களை விட்டுப் பிரிய முற்படுகின்றீர்களே. இனிமேல் நாங்கள் தங்களை எங்கு சந்திப்போம்''

என்று வினவினர். 'மறுமையில்' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

''அப்பொழுது பெருங்கூட்டமாய் இருக்குமே. தங்களை எங்குத் தேடுவது? என்று தனயர் வினவ, ''சிராத்தல் முஸ்தகீம் பாலத்தின் அருகில் தேடு'' என்று விடையிறுத்தார்கள் தந்தை.

''அங்கும் தங்களைக் காணாவிட்டால் என் செய்வது?'' என்று தனயர் வினவ, ''நன்மை, தீமைகளை நிறுக்கும் தராசின் அருகில் தேடு' 'என்றனர் தந்தை.

''அங்கும் தங்களைக் காணாவிட்டால் என் செய்வது?'' என்று தனயர் கேட்க, ''மஹ்ஷர் வெளியில் தேடு'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் தந்தை.

''அங்கு இறைவனுக்கு வழிப்பட்டோர் ஓர் அணியாகவும் மாறு செய்தோர் மற்றோர் அணியாகவும் நிற்பரே. அவற்றில் எந்த அணியில் தங்களைத் தேடுவது?'' என்று தனயர் கேட்க, ''இறைவனுக்கு மாறு செய்தோரின் அணியில் தேடு'' என்று கூறினர் தந்தை.

''அங்கும் தங்களைக் காணாவிட்டால் என் செய்வது?'' என்று தனயர் வினவ, ''நரகத்தின் அதிபதியாகிய மாலிக்கைச் சந்தித்து பொல்லான் இப்ராஹீம் இதில் உள்ளானா என்று வினவு'' என்று கூறினர்.

''அவர் தாங்கள் அங்கு இல்லையென்று கூறிவிடின் என் செய்வது?'' என்று தனயர் கேட்க, ''அவ்விதமாயின் சுவனம் சென்று ஆங்கு என்னைத் தேடு. ஒருவேளை பேரருளாளனாகிய இறைவன் என் பிழை பொறுத்து என்னைச் சுவனம் புகச் செய்திருந்தாலும் இருக்கலாம்'' என்று பதிலிறுத்தார்கள். இது கேட்டு ஆங்கிருந்த அனைவரும் 'கோ' என்று அழுதனர்.

இக்காலை இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் தம் மகனின் பிடியிலிருந்து மீண்டும் விலக முற்பட்டபொழுது மகன் அவர்களை இறுகப் பிடிக்க அவர்களின் நிலை இருகொள்ளி இடை அகப்பட்ட எறும்பு போல் ஆனது. இறை காதல் ஒரு பக்கல் இழுக்க, புத்திர வாஞ்சை மறுபக்கல் இழுக்க, யாது செய்வதென அறியாது ஒரு கணம் திகைத்தார்கள். மறுகணம் விண்ணை நோக்கியவண்ணம் ''இறைவனே! என்னைக் காப்பாற்று! இறைவனே என்னைக் காப்பாற்று!'' என்று அலறினார்கள்.

அதன்பின் என்ன? அவர்களின் மார்பில் தம் தலையை வைத்திருந்த அவர்களின் மைந்தர் அக்கணமே உயிர் நீத்தார். அப்பொழுது ஆங்குக்

கூடியிருந்த அனைவருக்கும் ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. என்ன நேர்ந்தது? யாது செய்தீர்கள்?'' என்று ஏக்கத்துடன் வினவினார்கள் அவர்கள்.

அதற்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம், அவர்களை நோக்கி, ''நான் என் மகனை மார்போடணைத்துப் புல்லினேனல்லவா? அப்பொழுது 'இப்ராஹீமே! நீர் என் மீது அன்பு செலுத்துவதாகக் கூறுகின்றீர். ஆனால் என்னுடன் சேர்த்து மற்றொருவர் மீதும் அன்பு செலுத்துகின்றீர். நீர் பெண்களையும் சிறுவர்களையும் கூர்ந்து நோக்க வேண்டாமென்று உம் தோழர்களுக்கு அறிவுரை பகர்கின்றீர். ஆனால் நீரோ உம் உள்ளத்தை அப்பெண்ணின் மீதும் சிறுவர் மீதும் பறிகொடுத்துத் திரிகின்றீர்' என்று அசரீரி முழங்கியது. அப்பொழுது நான் இறைவனை நோக்கி, 'மாண்புசால் எம் இறைவ! என்னைக் காப்பாற்று. அவன் மீதுள்ள ஆசை உன்னை மறந்துவிடச் செய்யுமோ என்று நான் அஞ்சுகின்றேன். ஆதலின் இப்பொழுதே என் உயிரை வாங்கிக் கொள். அல்லது அவனுடைய உயிரை வாங்கிவிடு' என்று இறைஞ்சினேன். இறைவன் என்னுடைய இறைஞ்சுதலை ஏற்று அவனுடைய உயிரை வாங்கிவிட்டான்'' என்று அமைதியாகப் பதிலிறுத்தார்கள்.

பின்னர் தம்முடைய மகனின் ஜனாஸா தொழுகையைத் தாமே முன் நின்று நிறைவேற்றி நல்லடக்கம் செய்து விட்டு, அவர்கள் திரும்பிய பொழுது அவர்களுடைய மனைவியும் புத்திர சோகத்தால் உயிர் நீத்தார் என்ற செய்தி அவர்களின் செவியை வந்தடைந்தது.

இதன்பின் ஒருநாள் சிலர் அவர்களிடம் வந்து, ''தாங்கள் அரசு துறக்க யாது காரணம்?'' என்று வினவினர்.

அதற்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள், ''ஒரு நாள் நான் அரியணை மீது அமர்ந்திருந்தபோது வழக்கம்போல் என்முன் கண்ணாடி ஒன்று கொண்டு வந்து வைக்கப்பட்டது. அதனை நான் உற்று நோக்கியகாலை அதிலே ஒரு புதைகுழி காணப்பட்டது. ஆங்கு எனக்குத் தெரிந்த நண்பர்கள் எவரும் இல்லை. எனக்கு முன்னால் நீண்ட தொலைப் பயணம் இருப்பதைக் கண்டேன். அதனை மேற்கொள்ளுங்கால் உண்பதற்கான உணவுப் பொருள் யாதும் என்னிடம் இல்லாததையும் கண்டேன். ஆங்கு நெறி நீதி தவறா நீதிபதி ஒருவர் வீற்றிருப்பதையும், எனினும் எனக்கு ஆதரவாக அவரிடம் எடுத்துரைக்க யாதொரு நற்சான்றும் இல்லாததையும் கண்டேன். அது கண்டுஎனக்கு அரசபாரமே வெறுத்துப் போய்விட்டது. எனவே நான் அதனைத் துறக்க முடிவு செய்தேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

''அரச பாரத்தைத் துறந்தது சரி. ஆனால் தாங்கள் ஏன் பல்க் நாட்டையே விட்டு வெருண்டோடிவிட வேண்டும்'' என்று அவர்கள் மறு வினா விடுத்தனர்.

அதற்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள், ''அங்கு வாழ்ந்து வந்த மக்கள் என்னிடம் ஒவ்வொரு நாளும் வந்து என் நலன் விசாரித்து வந்தார்கள். எனக்கு இது பெரும் தொந்தரவாக இருந்தது. என் வணக்கத்திற்குப் பெரும் இடையூறாக இருந்தது. எனவே பல்க் நாட்டையும் துறந்தேன்'' என்று அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

அதன்பின் அவர்கள், ''தாங்கள் ஏன் மீண்டும் மணமுடித்துக் கொள்ளவில்லை'' என்று வினவினர்.

''ஒரு பெண் தன்னை ஓர்ஆடவன் மணமுடித்துத் தனக்குஉண்ண உணவும், உடுத்த உடையும் தராமலிருப்பதை ஏற்றுக் கொள்வாளா?'' என்று அவர்கள் வினவினர்.

''மாட்டாள்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

''எனவேதான் நான் மீண்டும் மண முடித்துக்கொள்ளவில்லை. என்னை மண முடித்துக்கொள்ளும் எப்பெண்ணும், ஏன் உண்ண உணவின்றியும் உடுத்த உடையின்றியும் துன்புற வேண்டும்? ஏன் நான் அவளை அவ்வாறு துன்புறச் செய்ய வேண்டும்? ஏன் அவளை என் தலையில் கட்டிச் சுமக்க வேண்டும்? நான் என்னையே வல்லவோ இவ்வுலக பாசங்களிலிருந்தும் விடுதலை (தலாக்) செய்ய முயன்று கொண்டுள்ளேன்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

இதன்பின் அவர்கள் ஆங்கு வீற்றிருந்த ஒரு பக்கீரை நோக்கி, ''உமக்கு மனைவி மக்களுண்டா?'' என்று வினவினர். இல்லை என்று மறுமொழி பகர்ந்தார் அவர்.

''சபாஷ்! நீர் நல்ல காரியம் செய்தீர்'' என்று கூறினார்கள் அவர்கள்.

''ஏன் இவ்வாறு கூறுகிறீர்கள்?'' என்று வினவினார் பக்கீர்.

''ஆம்; பக்கீர் ஒருவன் மணமுடித்துக் கொண்டால் அவன் கப்பலில் ஏறுகிறான் என்று பொருள். அவன் குழந்தைகளைப் பெற்றுவிட்டான் என்றால் அவன் கடலில் மூழ்கி விட்டான் என்று பொருள்'' என அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மற்றொரு நாள் பக்கீர் ஒருவர் அவர்களின் முன்னிலையில் வைத்துத் தம் அவல நிலையைக் கூறி வருந்திக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நீர் இந்தத் துறவு நிலையை இலவசமாக எய்தப் பெற்றீரோ?'' என்று வினவினர்.

அதுகேட்ட அவர், ''துறவு நிலை என்பது விலை கொடுத்து வாங்கக் கூடியதா?'' என்று திருப்பிக் கேட்டார்.

அதற்கு அவர்கள், ''ஆம்; அதனை பல்க் நாட்டு அரசுக்குப் பகரமாக நானே வாங்கியுள்ளேன். ஆனால் அவ்வரசைவிட இந்தத் துறவு நிலைதான் மேலானது. எனவே நான் இலாபத்தில் தான் உள்ளேன்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

அவர்களின் துறவு நிலையினை அறியாத சிலர் அவர்களுக்குப் பொருளுதவி செய்ய முன் வந்தனர். ஆனால் அவர்களோ அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். காரணம், அவர்கள் பார்க்காத பணமா அது? அரசையே உதறித் தள்ளி வெளிப்போந்த அவர்களுக்குப் பிறர் கொணரும் அற்பப் பணம் எம்மாத்திரம்? மேலும் அவர்கள் கொணரும் அப்பணம் தூய்மையானது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஒருநாள் அவர்களை ஒருவர் அணுகி, ''ஷெய்கு அவர்களே! இதோ ஆயிரம் தீனார்களைக் கொண்டு வந்துள்ளேன். இதனைத் தாங்கள் என்னுடைய அன்புக் காணிக்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்?'' என்று வேண்டி நின்றார்.

'வேண்டேன்; வேண்டேன்' நான் பக்கீர்களிடமிருந்து எதனையும் வேண்டேன்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

''நான் பக்கீரல்ல; செல்வன்'' என்று கூறினார் அவர்.

அதுகேட்ட அவர்கள், ''அவ்விதமாயின் நீர் உம்மிடம் தற்போதுள்ள பொருளை விட அதிகமாக ஈட்ட வேண்டுமென்று விரும்புகின்றீரல் லவா?'' என்று வினவினர்.

''ஆம்'' என்றார் அவர்.

''அவ்விதமாயின் பக்கீர்களுக்கெல்லாம் பெரிய பக்கீர் நீர் தாம். உம் நிலையை பக்கீர்த்தனம் என்று கூறுவதை விடப் பிச்சைக்காரத்தனம் என்று கூறினும் பொருந்தும். எனவே எனக்குத் தருவதற்காக நீர் கொண்டு வந்ததை நீரே வைத்துக் கொள்ளும்'' என்று அவர்கள் கூறி விட்டார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் தம் தோழர் ஒருவருடன் ஓரிடத்தில் அமர்ந்திருப்பதைக் கண்ட சிற்றரசன் ஒருவன் அவர்களுக்குத் தம் ஊழியன் மூலம் பதினாயிரம் திர்ஹங்களை அன்பளிப்பாக அனுப்பி வைத்த பொழுது அவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்ளாது, ''இவற்றை உன் அரசனிடமே கொண்டு போய்க் கொடுத்துவிடு. இவை அவரிடம் இல்லையெனில் அவரின் கூட்டத்தினர் ஒருவரும் அவரோடு அண்டி இருக்கமாட்டார்கள். அவை என்னிடம் இருப்பின் என்னுடைய

கூட்டத்ினர் ஒருவரும் என்னோடு அண்டி இருக்க மாட்டார்கள்'' என்று கூறித் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

வேறொரு நாள் அவர்களிடம் ஒருவர் வந்து பதினாயிரம் திர்ஹங்களை அன்பளிப்பாக வழங்கினார். அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளாது, ''இந்த அற்பப் பணத்திற்காக நீர் என்னுடைய பெயரை பக்கீர்களின் பட்டியலிலிருந்து அழித்துவிடவா பார்க்கிறீர்'' என்று அவரிடம் கூறினர்.

தம் பெயர் பக்கீர்களின் பட்டியலில் பொறிக்கப்பட்டிருப்பதைப் பற்றிப் பெருமையுற்ற அவர்கள் ஒரு தடவை பக்கீர்களைப் பற்றிக் கூறும்பொழுது, ''நாங்கள் வறுமையை அணைத்தோம். செல்வம் எங்களைத் தழுவ முன் வந்தது. ஆனால் மக்களோ செல்வத்தைத் தேடி அலைகின்றார்கள். ஆனால் அவர்களையோ வறுமை தழுவ முன் வருகின்றது. உண்மையான அரசாங்கம் எங்களுடையதுதான் என்பதை மக்கள் உணர்வார்களாயின் எங்கள்மீது பொறாமையுற்று எங்களைக் கொன்றொழிக்கவும் முற்பட்டு விடுவார்கள்'' என்று எடுத்துரைத்தார்கள்.

அவர்கள் முற்றும் துறந்த முனிவராக வாழ்ந்து வந்த போதினும் சில பக்கீர்களைச் சந்தித்த பொழுது அவர்களின் மாண்பினை உணர்ந்து அவர்களுடன் நட்புறவாட முயன்ற காலை, ''உம்மிடம் அரசாங்கத் துடைய வாடை வீசுகின்றது'' என்று கூறி அவர்களைத் தம்முடன் சேர்த்துக் கொள்ளாது புறக்கணித்துவிட்டார்கள் அந்த பக்கீர்கள்!

பின்னர் ஒரு தடவை அவர்கள் பைத்துல் முகத்தஸுக்குச் சென்றிருந்தபொழுது அங்கு பக்கீர்கள் எழுவரைக் கண்டு தமக்கு அறிவுரை நல்குமாறு வேண்ட, ''இறைவனிடத்திலன்றி வேறு எதனிடத்திலும் ஆதரவு வையாதே. இறைவனுக்கே யன்றி வேறு எவனுக்கும் பயப்படாதே'' என்று அவர்கள் கூறினார்கள். மேலும் தமக்கு அறிவுரை நல்குமாறு இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் வேண்ட, ''தனித்திருந்து அழுது சலித்து இறைவனிடம் உம்பவம் பொறுத்தருளு மாறு இறைஞ்சுவீராக!'' என்று அவர்கள் இயம்பினார்கள். மேலும் தமக்கு அறிவுரை நல்குமாறு அவர்கள் வேண்ட, ''இறைவனே! இவருக்கும் எங்களுக்கும் இடையில் திரையை நல்கு. இவர் எங்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பி விடுவார் போல் தோன்றுகிறது'' என்று அலறினர் அந்த பக்கீர்கள். அடுத்த கணம் அவர்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களின் பார்வையை விட்டும் மறைந்து விட்டார்கள்.

அவர்களிடமிருந்து நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்ட இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் உலகப் பற்றை அணுவத்தனையும் இல்லாது

விட்டொழித்து மனிதர்களுடன் உறவாடுவதையும் துறந்து இறைவனுடன் உறவாடுவதிலேயே இன்பம் கண்டார்கள். எனவே அவர்கள் மனிதர்களுடன் வாழ்வதை விட்டும் வெருண்டோடிப் பிறர் கண்களில் தென்படா வண்ணம் மறைந்து வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் அவர்களைக் காண்பதற்காக வேற்றூரிலிருந்து வந்த சிலர் அவர்கள் ஒரு தோட்டத்திலிருப்பதாகக் கேள்வியுற்று ஆங்குச் சென்று ஆங்கு ஓரிடத்தில் அமர்ந்திருந்த அவர்களை நோக்கி, ''இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் எங்கேயுள்ளார்கள்?'' என்று வினவிய பொழுது, ''அப்படியா! அவர்கள் எங்கேயுள்ளார்கள்?'' என்று அவர்களிடமே மறுவினா விடுத்தனர் அம்மேதகை. பின்னர் அவர்களுடன் சேர்ந்து இப்ராஹீம் இப்னு அத்ஹமை அந்தத் தோட்டம் முழுவதும் தேடித் திரிந்தார்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம்.

ஒரு தடவை சிலர் அவர்களை இலக்குக் கண்டு கொண்டு அவர்களை அணுகி, ''தாங்கள் ஏன் எவருடனும் நட்புறவாடாது ஒதுங்கியுள்ளீர்கள்?'' என்று வினவியபொழுது, ''நான் என்னை விடத் தாழ்ந்தவர்களுடன் நட்புறவாடினால் அவர்கள் என்மீது பொறாமை யுறுவார்கள். என்னை விட உயர்ந்தவர்களுடன் நட்புறவாடினால் அவர்கள் என்னை இழிவுக் கண்களுடன் நோக்குவார்கள். எனவே தான் மனிதர்களுடன் நட்புறவாடுவதை விட்டொழித்து இறைவனுடன் நட்புறவாடுவதில் என் நேரத்தைக் கழித்துக் கொண்டுள்ளேன். அதிலே எனக்கு இன்பமேயன்றி அயர்வோ துன்பமோ ஏற்படுவதில்லை'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

மற்றொரு தடவை சிலர் அவர்களை அணுகித் தங்களுக்கு அறிவுரை நல்குமாறு வேண்டியபொழுது, ''பாவ மன்னிப்பு என்னும் கண்ணாடியில் உங்களையே நீங்கள் கூர்ந்து கவனிப்பீர்களாயின் நீங்கள் எந்தெந்த வழியில் இறைவனுக்கு மாறு செய்துள்ளீர்கள் என்பது நன்கு தெரியவரும். மற்றவர்கள் உங்களை அறிந்து கொள்வதைக் குறைத்துக் கொள்ளுங்கள். உங்களை அறியாதவர்களிடம் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளாதீர்கள். உங்களை அறிந்தவர்களை விட்டும் கொடிய வனவிலங்குகளை விட்டும் நீங்கள் வெருண்டோடுவது போன்று வெருண்டோடுங்கள். 'ஜும்ஆத்' தொழுகையைத் தவறவிடாதீர்கள்'' என்று இயம்பினர்.

அவர்கள் எப்பொழுதும் தனித்திருந்து இறைவனை அழுது சலித்து வணங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட சிலர், அவர்களை அணுகி, ''தாங்கள் இறைவழியில் திரும்பிய பின்னர் எப்பொழுதேனும் மகிழ்ச்சியுற்றிருக்கின்றீர்களா?'' என்று வினவினர்.

''ஆம்'' என்று புன்முறுவலுடன் விடையிறுத்த அவர்கள் தாம் கவலை மறந்து இன்புற்ற நிகழ்ச்சிகள் சிலவற்றை எடுத்துரைத்தார்கள்.

''ஒரு தடவை நான் கப்பல் ஒன்றில் பிரயாணம் செய்தேன். என்னுடைய அலங்கோல நிலையைக் கண்ட பிரயாணிகள் என்னைக் கேலி செய்தார்கள். ஒருவன் அடிக்கடி என் அருகே வந்து என் தலை முடியைப் பிடித்து இழுக்கவும், என் கழுத்தில் குத்தவும் செய்தான். அதுகண்டு அவர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள். என்னை அவன் அவ்வாறு பலர் முன்னிலையில் வைத்து இழிவுபடுத்துவதைக் கண்டு நானும் உள்ளுக்குள் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தேன்.

''அப்பொழுது திடீரெனக் கடும் புயல் வீசியதன் காரணமாக நாங்கள் சென்ற கப்பல் அலைகடலில் அல்லோல கல்லோலப்பட்டது. அப்பொழுது கப்பலில் உள்ள ஒருவனைக் கீழே தள்ளினால் தான் கப்பலில் பாரம் குறைந்து அது நிலைக் கொள்ளும் என்று மீகாமன் கூறினான். அப்பொழுது எல்லோருடைய கண்களும் என் மீதே பாய்ந்தன. அவர்கள் என்னைப் பிடித்துக் கடலில் தள்ள முற்பட்டார்கள். அக்கணம் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னென்பேன். ஆனால் அவ்வேளை புயல் திடீரெனத் தணிந்ததன் காரணமாக அவர்கள் என்னைக் கடலில் தள்ளாது விட்டு விட்டார்கள்.

''மற்றொரு தடவை நான் பசியாலும் பட்டினியாலும் பெரிதும் அயர்வுற்றுப் படுத்துறங்குவதற்காகப் பள்ளி சென்றேன். அப்பொழுது ஆங்கிருந்த இமாமும் முஅஸ்ஸினும் நான் அங்குப் படுத்துறங்கக் கூடாது என்று ஆணையிட்டார்கள். யாது செய்வதென அறியாது நான் தயங்கி நின்றபொழுது அவர்கள் என்னைப் பிடித்து வெளியே தள்ளினார்கள். நான் படியில் உருண்டு கொண்டு வந்தேன். அப்பொழுது எனக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அக்கணம் ஒவ்வொரு படிக்கும் உமக்கு ஓராயிரம் நன்மைகள் தரப்படும் என்று எனக்கு உள்ளுணர்வு (இல்ஹாம்) ஏற்பட்டது. அதனை அறிந்த நான் அதிகமாக உருண்டு வர அதிகமான படிகள் இல்லையே என்று வருந்தினேன். எனினும் இந்நன்மைகளை அடைய எனக்குப் பேருதவி செய்த அவ்விருவருக்கும் எனக்குக் கிடைத்த நன்மைகளில் பாதியைக் கொடுத்துவிட வேண்டுமென்ற எண்ணம் எனக்கேற்பட்டது. எனவே படிகளில் உருண்டு கொண்டு வரும் பொழுதே, 'நிஸ்ஃபுல் லீ, நிஸ்ஃபுல் லகும்' (எனக்குப் பாதி உங்களுக்குப் பாதி) என்று கூறிக் கொண்டு வந்தேன். இறுதியாக நான் கீழே வந்ததும் அவர்கள் என்னிடம் வந்து நான் அவ்விதம் கூறியதற்கான காரணத்தை வினவினர். அவர்கள் என்னைப் பிடித்துத் தள்ளியதும் எனக்கேற்பட்ட உள்ளுணர்வை அவர்களிடம் எடுத்துரைத்து, நான் அந்நன்மையைப் பெற

மூலகாரணமாயிருந்த அவ்விருவருக்கும் அந்நன்மையில் பாதியைத் தர விரும்பி அவ்வாறு கூறிக் கொண்டு வந்ததாக எடுத்துரைத்தேன்.

''வேறொரு தடவை, ஓரிரவு நான் ஒருருக்குச் சென்ற பொழுது கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது. அதன் காரணமாக நான் நனைந்து தொப்பலாடி விட்டேன். என் உடல் முழுவதும் குளிர் தாங்க இயலாது நடுங்கியது. ஒரு பள்ளியில் ஒதுங்கினேன். பள்ளி நிர்வாகிகள் என்னை வெளியே தள்ளிக் கதவைத் தாளிட்டு விட்டார்கள். இதன்பின் மற்றும் மூன்று பள்ளிகளுக்குச் சென்றேன். அங்கும் எனக்கு அதே கதியே ஏற்பட்டது. யாது செய்வதென அறியாது வெளியே வந்த எனக்கு ஒரு குளியலறை தென்பட்டது. அங்குச் சென்று அடுப்பின் ஓரத்தில் அமர்ந்து குளிர் காய்ந்ததோடு என் உடைகளையும் உலரச் செய்தேன். அப்பொழுது அடுப்பிலிருந்து வந்த கரிப்புகை என் உடலையும் உடையையும் கறுப்பு நிறமாக்கி விட்டது. அதுகண்டு நான் மகிழ்ச்சி மீக்குற்றேன்.

''பிறிதொரு தடவை நான் என்னை அறியாத மக்களின் நடுவே அகப்பட்டுக் கொண்டேன். என் கை, கால்களில் விலங்கிடப்பட்டது. அப்பொழுது ஒருவன் வந்து என் தோள் மீது அமர்ந்து சிறுநீர் பெய்தான். அப்பொழுதும் பெருமகிழ்வெய்தினேன்.

''வேறொரு தடவை நான் ஒரு கம்பளி உடையை அணிந்து கொண்டேன். அதிலிருந்த பேன்கள் என்னைக் கொல்லாது கொன்றன. அப்பொழுது நான் முன்னொரு கால் அணிந்திருந்த பட்டாடையின் நினைவு எனக்கு வந்தது. பேன் கடிதாங்க இயலாது என் உடலெல்லாம் அதிர்ந்தது. 'என்ன துன்பம் இது! என்ன துன்பம் இது!!' என்று என் ஆன்மா அலறியது. அப்பொழுது எனக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை.''

இவ்வாறு கூறிய இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், மக்கள் தம்மை எவரென அறிந்து மதிக்கும் இடத்தில் தங்கி இராது, தம்மை எவரென அறியாது இழிவு செய்யும் இடத்தையே தங்களின் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அதிகமாகத் தங்கி உழைத்தும் ஊழியம் செய்தும் வாழ்ந்து வந்தது வளமார்ந்த சிரியா நாட்டில்தான்.

ஒரு தடவை அவர்களை சிரியா நாட்டில் வைத்துச் சந்தித்த அப்துல்லா இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் ''ஏன் தாங்கள் குராஸானை விட்டு வந்து விட்டீர்கள்?'' என்று வினவியபொழுது, ''நான் இங்கிருப்பது தான் எனக்கு மகிழ்ச்சி வழங்கியது. இங்கு நான் சிகரத்திற்குச் சிகரம் மலைக்கு மலை ஓடிக் கொண்டிருப்பதைக் காணும் மக்கள் என்னை ஒரு பைத்தியக்காரன் என்றோ ஓர் ஒட்டகம் ஓட்டி என்றோ

கருதிக் கொள்கிறார்கள். இதுவே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது'' என்று கூறினர்.

வேறொரு தடவை ஷகீக் பல்கீ (ரஹ்) அவர்கள், இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களை நோக்கி, ''தாங்கள் ஏன் ஓரிடத்தில் தரிப்பட்டிராது ஓடிக்கொண்டே இருக்கிறீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் ''என்னைக் காண்போர் என்னை ஒரு கூலியாள் என்று எண்ணிக் கொள்ளட்டுமென்று, என்னுடைய மார்க்கத்தை என்னுடைய கட்கத்திலே மறைத்துக் கொண்டு ஊரை விட்டு ஊர், மலையைவிட்டு மலை ஓடிக் கொண்டுள்ளேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

இக்காலை அவர்கள் ஒருவனின் தோட்டத்தில் காவற்காரராகப் பணியாற்றி வந்தனர். ஒரு நாள் தம் தோட்டத்தைப் பார்வையிட வந்த எசமானன் அவர்களை நோக்கி, ''தாகமாயிருக்கிறது. இனிப்பு மாதளம் பழம் பறித்து வா'' என்று கூறினான். அவ்விதமே அவர்கள் மாதளம் பழம் பறித்துவர அது புளிப்பாக இருந்தது. மீண்டும் அவர்கள் மற்றொரு மாதளம் பழம் பறித்துவர அதுவும் புளித்தது. இவ்வாறு அவர்கள் பல தடவை மாதளம் பழம் பறித்து வர அவை அனைத்தும் புளித்தன. அது கண்ட எசமானன், ''நீ இந்தத் தோட்டத்தின் காவற்காரனாக எத்தனை மாதங்களாகக் காவல் காத்து வருகிறாய்? எது புளி மாதளை? எது இனிப்பு மாதளை என்பது கூட உனக்கு இதுகாறும் தெரியவில்லையே?'' என்று எரிச்சலுடன் கூறினான். அதற்கு அவர்கள் அமைதியாக ''என்னைத் தாங்கள் நியமித்திருப்பது தோட்டத்தைக் காவற் காக்கவேயன்றி இங்குப் பழுக்கும் பழங்களை ஒவ்வொன்றாகப் பறித்துத் தின்று ருசி பார்க்க இல்லையே'' என்று கூறினர். அவர்களின் இப்பதில் அவனை உணர்வு பெறச் செய்தது. ''என்ன! நீர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் போன்றல்லவோ பேசுகிறீர்'' என்று கூறினான் அவன். அவர்கள் மறுவார்த்தை பேசவில்லை.

இனிமேல் தாம் அங்கிருந்தால் தம்மை எவரென விளங்கிக் கொள்ள ஏதுவாகும் என்று எண்ணிய அவர்கள் தாம் வேலையிலிருந்து விலகிக் கொள்ள விரும்புவதாகக் கூறினர். ''இல்லை; நீரே இவ்வேலையில் தொடர்ந்து இருந்து வாரும். உமக்குச் சம்பள உயர்வும் வழங்குகிறேன்'' என்றான் அவன்.

''எதற்காகச் சம்பள உயர்வு?'' என்று வினவினர் அவர்கள்.

''உம்முடைய நேர்மைக்காக'' என்றான் அவன்.

''உழைப்புக்கு ஊதியம் பெறுவதே நியாயம். நேர்மைக்காக ஊதியம் பெறுவது நியாயமன்று'' என்று அவர்கள் கூறிவிட்டு அக்கணமே அவனை விட்டும் பிரிந்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் சிரியா நாட்டின் தோட்டக் காவலனாகப் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது அரசாங்க அலுவலாளன் ஒருவன் ஆங்கு வந்து தனக்குச் சிறிது கொடிமுந்திரிப் பழம் பறித்துத் தருமாறு கேட்ட பொழுது, ''நானோ இத்தோட்டத்தின் காவலன். என்னை நம்பி எசமான் இதனை என்னிடம் ஒப்படைத்துள்ளார். எனவே அவரிடம் சென்று நீர் அனுமதி பெற்றுவரின் தருகிறேன்'' என்று கூறினர். அதுகேட்ட அவன் வெஞ்சினமுற்றுத் தம் கையில் இருந்த சவுக்கால் அவர்களை அடித்தான். அப்பொழுது இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் ''இறைவனுக்கு மாறு செய்வதில் தலையாக இருக்கும் இத்தலையை நன்கு அடியும்; நன்கு அடியும்'' என்று கூறித் தம் தலையை நன்கு குனிந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அது கண்ட அவன் அவர்களின் மாண்பினை உணர்ந்து வெய்துயிர்த்துத் தம் பிழை பொறுத்தருளுமாறு வேண்டி நின்றான். அதுகேட்ட அவர்கள், ''பிறர் என்னிடம் வந்து பிழை பொறுத்தருளுமாறு வேண்டுவதை விரும்பும் தலையை பல்கு நாட்டிலேயே விட்டுத் தொலைத்து வந்து விட்டேன். பெருமை, மடமை ஆகிய நூற்களால் நெய்யப்பட்ட உடுப்பை அங்கேயே களைந்தெறிந்து வந்துவிட்டேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

ஒரு நாள் அவர்கள் கானகத்தின் நடுவே சென்று கொண்டிருந்த பொழுது, எதிரே வந்து கொண்டிருந்த ஒருவன், 'நீ யார்' என்று வினவினான். 'நான் ஓர் அடிமை' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அதன் பின், 'இந்தப் பக்கம் மக்கள் நிறைந்த ஊர் ஏதேனும் உள்ளதா?' என்று வினவினான். 'ஆம்' என்று கூறி அவனை அழைத்துச் சென்று மக்களைப் புதைக்கும் (கப்ருஸ்தான்) இடத்தைக் காட்டினர். அதுகண்ட அவன் 'என்னைக் கேலியா செய்கின்றாய்?' என்று கூறி அவர்களை நையப்புடைத்து அவர்களின் மண்டையை உடைத்து கழுத்தைக் கட்டி அவர்களை இழுத்துச் சென்றான்.*

அவர்களிருவரும் நகரை நெருங்கியதும் அவர்களின் பரிதாப நிலையைக் கண்டு மக்கள் பதறிப் போய்விட்டார்கள். 'அடபாவி! இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களையா இவ்வாறு கழுத்தில் கயிறு கட்டி இழுத்து வருகின்றாய்' என்று அவனை வெஞ்சினத்துடன்

---

* பெரியார் ஒருவர் கனவில் சுவனவாசிகள் தம் கைகளிலும் முன்தானைகளிலும் முத்துக்களை வைத்திருப்பதைக் கண்டு காரணம் வினவ, ''ஒருவன் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களை அடித்து சிரசை உடைத்து விட்டான். அதற்குப் பகரமாக அவர்கள் சுவனம் புகும்பொழுது அவர்களின் சிரசின் மீது முத்துக்களைச் சொரியுமாறு இறைவன் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான்'' என்று கூறினர் என ஒரு வரலாறு உள்ளது.

வினவினர். அவர்கள் அரசு துறந்த ஆத்மீக ஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் என்பதை உணர்ந்ததும் அவன் நடுநடுங்கிப் போய்விட்டான். தன்னை மன்னித்தருளுமாறு வேண்டினான். அதற்கு அவர்கள் "நான் உனக்காக இறைவனிடம் இறைஞ்சி விட்டேன். ஏனெனில் உன் செயலால் எனக்குச் சுவனமும் உனக்கு நரகமும் கிடைக்கும். ஆனால் உனக்கு நரகம் கிடைக்கக் கூடாது என்பதற்காகவே நான் அவ்வாறு செய்தேன்" என்று கூறினர்.

அதுகேட்டுச் சற்று மன அமைதியுற்ற அவன், "நான் தங்களை யார் என்று வினவியபொழுது தாங்கள் ஏன் அடிமை என்று கூறினீர்கள்?" என வினவினான். அதற்கு அவர்கள், "இறைவனின் அடிமையாயில்லாதவர் எவரேனும் உண்டோ?" என்று கேட்டார்கள். மீண்டும் அவன் அவர்களை நோக்கி, "மக்கள் நிறைந்த ஊர் ஏதேனும் இங்கு உள்ளதா? என்று நான் வினவியபொழுது தாங்கள் ஏன் புதை குழியை (கப்ருஸ்தானை)க் காட்டினீர்கள்?" என்று வினவினான். அதற்கு அவர்கள், "மக்கள் நிறைந்த இடம் அதுதான். அதுதான் நாள்தோறும் வளர்ந்து கொண்டே வருகிறது" என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அவர்கள் இவ்வுலகில் இலைமறை காய்போல் வாழ்ந்து வந்தபோதினும், ஒரு பொழுது தங்களை எவரென அறிமுகப்படுத்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டது. ஓர் இரவு அவர்கள் ஓர் ஊர் அடைந்து ஆங்குள்ள பள்ளி சென்று தொழுதபின் அங்கேயே படுத்துறங்க முற்பட்ட பொழுது, அப்பள்ளியின் இமாம் அவர்களை அங்குத் தூங்கக் கூடாதென்று கூறி வெளியே விரட்டினார்.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, "நான் வெளியூர்க்காரன். இன்றிரவு மட்டும் என்னை இங்கே படுத்து விட்டுச் செல்ல அனுமதியுங்கள்" என்று வேண்டினர். அதற்கு அவர் "முடியாது! வெளியூர்க்காரர்கள்தாம் பாய்களையும் விளக்குகளையும் திருடிக் கொண்டு செல்கின்றார்கள்" என்று கூறினார்.

அப்பொழுது அவர்கள் தம்மை எவரென அவரிடம் கூறினாலாவது தம்மை அங்குப் படுக்க அனுமதிப்பார் என்ற எண்ணத்துடன், "நான்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம்" என்று கூறினர்.

அதுகேட்ட அவர் ஒரு வெடி சிரிப்பை உதிர்த்து, "மூஞ்சியைப் பார் மூஞ்சியை. இவர்தாம் இப்ராஹீம் இப்னு அத்ஹமாம்" என்று கூறி அவர்களைக் காலைப் பிடித்து வெளியே இழுத்துக் கொண்டு சென்று விட்டார்.

# பொருளடக்கம்

அப்பொழுது குளிரோ கடுமையாக இருந்தது. படுப்பதற்கு யாது செய்வதென அறியாது அவர்கள் தெருவழியே நடந்து சென்றபொழுது சற்றுத் தொலைவில் ஒரு வெளிச்சத்தைக் கண்டு அங்குச் சென்று பார்க்கும் பொழுது அங்கு ஒரு மனிதர் அடுப்பில் ஒரு நீர்ப் பொறையை வைத்துத் தண்ணீர் சுட வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவருக்கு அவர்கள் 'ஸலாம்' உரைத்த பொழுது அவர் அதற்கு மறுமொழி கூறாது அமருமாறு சாடை செய்துவிட்டு அங்குமிங்கும் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் சற்று நேரங்கழித்து அவர்களின் ஸலாத்திற்கு பதிலுரைத்தார். அப்பொழுது அவர்கள் அளவற்ற வியப்படைந்தவர் களாய் ''நான் ஸலாம் உரைத்து இத்துணை நேரம் கழித்து பதில் கூறுகின்றீர்களே, அதற்கான காரணம் யாது?'' என்று வினவினர். அதற்கு அவர், ''நான் ஓர் ஊழியன். என் அலுவலில் கவனம் செலுத்தாது உமக்கு 'ஸலாம்' செய்வதில் கவனம் செலுத்தினேனாயின் நான் என் எசமானனுக்குத் துரோகம் செய்தவனாவேன். எனவே என் அலுவல் முடிந்த பின் நான் உமக்குப் பதிலுரைத்தேன்'' என்று கூறினார்.

அதன்பின் அவர்கள் அவரை நோக்கி, ''தாங்கள் என்னவோ அச்சத்துடன் அங்குமிங்கும் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தீர்களே, எதுபற்றி அஞ்சித் தாங்கள் அவ்வாறு செய்து கொண்டிருந்தீர்கள்?'' என்று வினவினர். ''இறப்பை எண்ணி அஞ்சி அது எப்பக்கம் இருந்து வருமோ என்று ஐயுற்று அப்பக்கமும் இப்பக்கமும் திரும்பிப் பார்த்துக் கொண் டிருந்தேன்'' என்று கூறினார் அவர்.

''நல்லது; தங்களுக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு கூலி கிடைக்கின்றது? அதில் தாங்கள் எவ்வளவு செலவழிக்கின்றீர்கள்?'' என்று அவர்கள் வினவினார்கள்.

''ஒரு நாளைக்கு எனக்கு இரண்டு திர்ஹங்கள் கூலியாகக் கிடைக்கின்றன. அவற்றில் ஒரு திர்ஹத்தை எனக்கு வைத்துக் கொண்டு மற்றொரு திர்ஹத்தை இறந்து போன சகோதரரின் மக்களுக்காகச் செலவழிக்கின்றேன்'' என்றார் அவர்.

''சகோதரர் என்றால் உடன் பிறந்த சகோதரரா?'' என்று அவர்கள் வினவினார்கள்.

''இல்லை; அல்லாஹ்வுக்காக நாங்கள் ஒருவரையொருவர் சகோதரர் போன்று நேசித்தோம். அவர் இறந்துவிட்டார். நான் அவரின் மனைவி, மக்களை ஆதரித்து வருகிறேன்'' என்றார்.

அதுகேட்ட அவர்கள், ''தாங்கள் இறைவனிடம் எதனையும் வேண்டின், இறைவன் அதனை நிச்சயம் நிறைவேற்றித் தருவான்'' என்று கூறினர்.

''என்ன இவ்வாறு கூறுகின்றீர்? நான் இருபது ஆண்டுகளாக இறைவனிடம் ஒன்றைக் கேட்டுக் கொண்டுள்ளேன். எனினும் அவன் அதனை நிறைவேற்றித் தரவில்லையே'' என்று கூறி அவர் சலித்துக் கொண்டார்.

''என்ன அவ்வாறு வேண்டினீர்கள்?'' என்று அவர்கள் வினவினார்கள்.

அதற்கு அவர், ''அரசு துறந்த ஆத்மஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று அவர்களைக் காணும் பேறு பெற்ற பின் தான் நான் இறக்க வேண்டும் என்று நான் இறைவனிடம் இருபதாண்டுகளாய் இறைஞ்சிக் கொண்டுள்ளேன். எனினும் இறைவன் என்னுடைய இறைஞ்சுதலை ஏற்றுக் கொள்ள வில்லை'' என்று கூறினார்.

அப்பொழுது அவர்கள் ''என் உடன் பிறந்தாரே! உம் இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொண்டு விட்டான். இவ்வெளியேன் தான் அவர்'' என்று கூறியதும் அவர் ஒரு முறைக்கு இருமுறை அவர்களை ஏறிட்டுப் பார்த்து விட்டு, அவர்களை அன்புடன் தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, ''இறைவனே! என் இறைஞ்சுதலை நீ நிறைவேற்றித் தந்தாய். நான் இனிமேல் இவ்வுலகில் உயிர் வாழ விரும்பவில்லை. என் உயிரை எடுத்துக் கொள்'' என்று இறைஞ்சினார். அக்கணமே அவர்கள் உயிர் பிரிந்தது.

''ஒருவன் அல்லாஹ்வை நெருங்குவதற்குச் சிறந்த வழி நேரிய வழியில் பொருளீட்டி உண்பதுதான். தன் வயிற்றிற்குள் செல்வது எத்தகையது என்று ஆழ்ந்து ஆராய்ந்தவன் உயர்ந்த நிலையை அடைந்தவனாவான்'' என்று அவர்கள் கூறினார்கள். எனவே அவர்கள் தங்களின் உணவை நேரிய வழியில் பெறுவதற்காகக் காடு சென்று விறகு வெட்டிக் கொணர்ந்து கடைத் தெருவில் விற்று வந்தார்கள். ''தாங்கள் இவ்வாறு செய்ய வேண்டாம். தங்களுக்கான உணவைத் தர எத்தனையோ பேர் தயாராயுள்ளனர்'' என்று இமாம் அவுசாயி (ரஹ்) கூறிய பொழுது, ''ஒருவன் நேரிய (ஹலாலான) வழியில் தம் உணவைத் தேடுவதில் தம்மையே தாழ்மைப்படுத்திக் கொண்டால் அவன் சுவனப் பேற்றினை எய்தப் பெறுவான்'' என்ற நபிமொழியைத் தாங்கள் கேள்வியுறவில்லையா? அவ்விதமாயின் நான் எவ்வாறு வெறுமனே வீற்றிருப்பது?'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மற்றொருவர் அவர்களை நோக்கி, ''தாங்கள் எத்தனை ஆண்டுகளாக சிரியா நாட்டில் உள்ளீர்கள்'' என்று வினவிய பொழுது, ''இருபத்து நான்கு ஆண்டுகளாக'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள். ''ஏன் இத்தனை ஆண்டுகளாக இங்கு உள்ளீர்கள்?'' என்று அவர் வினவிய பொழுது, ''நேரிய வழியில் பொருளீட்டி உண்பதற்காக'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

ஒருநாள் அவர்களிடம் சிலர் வந்து, ''நேரிய முறையில் வாணிபம் செய்யும் வணிகர் மேலானவரா? வணக்கவாளர் மேலானவரா?'' என்று வினவியபொழுது ''நேரிய முறையில் வாணிபம் செய்யும் வணிகர் தாம் மேலானவர். ஏனெனில் அவர் 'ஜிஹாத்' (அறப்போர்) செய்பவருக்கு நிகராக உள்ளார். ஷைத்தான் வந்து அளவையிலும் நிறுவையிலும், கொடுக்கலிலும் வாங்கலிலும் மோசம் செய்யுமாறு தூண்டிக் கொண்டே உள்ளான். அவர் அவனை எதிர்த்து ஜிஹாத் (அறப்போர்) செய்கின்றார்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

ஒரு தடவை அவர்கள் பஸரா சென்றிருந்த பொழுது அங்குள்ள கடையொன்றில் பணம் கொடுத்துச் சிறிதளவு பேரீத்தம் பழங்களை வாங்கினார்கள். பின்னர் அவர்கள் பைத்துல் முகத்தஸ் வந்து ஆங்குள்ள புனித மிகு பள்ளியில் ஓரிரவைக் கழிக்க எண்ணினர். எனினும் அப்பள்ளி நிர்வாகிகள் ஆங்கு எவரையும் இரவில் தங்க அனுமதியாததால் அவர்கள் இரவானதும் பாய்ச் சுருளுக்குள் புகுந்து தங்களை மறைத்துக் கொண்டார்கள்.

நள்ளிரவானது. அப்பொழுது திடீரெனப் பள்ளியின் கதவு திறந்தது. அப்பொழுது ஒரு ஷெய்கும் அவரின் மாணவர் நாற்பதின்மரும் உள்ளே நுழைந்தனர். அவர்கள் ஆங்குத் தொழுதபின் ஷெய்கு தம் மாணவர்களை நோக்கி, ''இங்கு இன்றிரவு வேற்று மனிதர் ஒருவர் உள்ளார். அவரின் பெயர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் என்பதாகும். அவருடைய தகுதி, அவர் செய்த ஒரு தவற்றின் காரணமாகத் தாழ்ந்து விட்டது'' என்று கூறினார்.

உடனே இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள் பதற்றத்துடன் அந்த ஷெய்கை நோக்கி ஓடிச் சென்று தாம் செய்த அத்தவறு யாது என்று வினவிய பொழுது, ''நீர் ஒரு தடவை பஸராவில் பேரீத்தம் பழம் வாங்கிய பொழுது கடைக்காரன் உமக்கான பேரீத்தம் பழங்களை நிறுக்குங்கால் ஒரு பழம் கீழே விழ அதனை உமக்கு உரியதென எடுத்து உண்டீர். அதன் காரணமாக உம் தகுதி தாழ்ந்து விட்டது'' என்று கூறினார் அவர்.

அவர்கள் அவ்விரவே பஸரா நோக்கிப் புறப்பட்டு பல காதம் நடந்து சென்று இறுதியாக பஸரா வந்தடைந்தார்கள். அக்கடைக்காரனை அணுகி

அவனிடம் செய்தியை எடுத்துரைத்து ஒரு திர்ஹம் கொடுத்து மீண்டும் பழம் வாங்கினார்கள். அவற்றில் ஒரு பெரிய பழத்தை எடுத்து அவனிடம் கொடுத்து, ''நீ இதனைப் பெற்றுக் கொண்டு நான் தவறாக எடுத்துத் தின்ற அப்பழத்தை எனக்கு அன்பளிப்பாகத் தந்ததாகக் கூறிவிடு'' என்று வேண்டினர். அவனும் அவ்வாறே செய்தான். அதன்பின் தான் அவர்களின் மனம் அமைதியுற்றது.

ஆனால் அக்கடைக்காரரின் மனமோ அமைதி இழந்தது. பணம் ஈட்ட கடை வைத்து பாவத்தை ஈட்டுவதாகவல்லவோ உள்ளது. இந்த வாணிபம் தமக்கு வேண்டாமென்று எண்ணிக் கடையை விற்று விட்டு துறவு பூண்டு வணக்கத்தில் ஈடுபட்டு 'அப்தால்'களில் ஒருவராக ஆகிவிட்டார்.

ஒருநாள் சிலர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களை அணுகி, ''இன்ன இடத்தில் ஓர் இளவல் உள்ளார். அவரின் வணக்கமும் பேரின்ப நிலையும் வியப்பிற்குரியனவாய் உள்ளன'' என்று கூறினர். ''அவ் விதமாயின் அவரைப் பார்த்து வரலாமே'' என்று இயம்பினர் அவர்கள். அவ்வாறே அவர்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களை அவ்விளவல் பால் அழைத்துச் சென்றனர். அவ்விளவல் அவர்களை அன்போடு வரவேற்றுத் தம் விருந்தினராகத் தம்முடன் மூன்று நாட்கள் தங்குமாறு வேண்டிக் கொண்டார், அவர்களும் அதற்கு இணங் கினார்கள்.

அவர்கள் அவருடன் தங்கிய அந்த மூன்று நாட்களிலும் அவரின் அனுவத்தனை நடவடிக்கையையும் இமை கொட்டாது கவனித்து வந்தார்கள். அவரைப் பற்றிச் சிலர் தம்மிடம் கூறியதைவிடப் பன்மடங்கு அதிகமாக அவரின் வணக்கமும் தியானமும் இருப்பதைக் கண்டு அவர்களுக்கே தம்மை அறியாமல் அவர்மீது ஒருவிதப் பொறாமை உணர்வு ஏற்பட்டது.

இரவில் ஒரு நிமிடமும் ஓய்வோ, உறக்கமோ இன்றி அவர் வணக்கத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு இது உண்மையான தவநிலையா அல்லது ஷைத்தானின் திருவிளையாடலா என்று அவர்களுக்கு ஐயம் ஏற்பட்டது. எல்லாவற்றிற்கும் மூலம் ஒரு மனிதன் உண்ணும் உணவே என்று முடிவுக்கு வந்த அவர்கள் அவ்விளவல் உண்ணும் உணவைப் பற்றி ஆராயத் துவங்கினார்கள். சில கணங்களில் அவர்களுக்கு உண்மை விளங்கிவிட்டது. அவ்விளவல் தூய்மையற்ற உணவை உண்டு வருகிறார் என்பதையும் எனவே ஷைத்தானின் ஊசாட்டத்தால் இவ்விதச் சித்துகளைச் செய்கிறார் என்பதையும் அவர்கள் விளங்கிக் கொண்டார்கள்.

மூன்றாம் நாள் முடிந்தது. அவர்கள் அவரை நோக்கி, ''நான் மூன்று நாட்கள் உம்முடைய விருந்தாளியாக இருந்தேன். நீர் என்னுடன் வந்து நாற்பது நாட்கள் என்னுடைய விருந்தாளியாக இருக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். அவரும் அதற்கு இணங்கினார்.

தம் விருந்தினருக்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் தாம் கானகம் சென்று விறகு வெட்டி ஈட்டிய தூய பொருளைக் கொண்டு உணவு வாங்கி விருந்து நல்கி வந்தார்கள். என்ன வியப்பு! அவரின் வணக்கமும் பரவசமும் உறக்கமின்மையும் எங்கேயோ ஓடி மறைந்து விட்டன.

இது அவ்விளவலுக்கே பெருவியப்பை நல்கியது. ''தாங்கள் எனக்கு என்ன செய்தீர்கள்?'' என்று ஏக்கத்துடன் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களை நோக்கி வினவினார் அவ்விளவல்.

''ஒன்றும் செய்யவில்லை. தூய உணவளித்தேன், அவ்வளவுதான். இதுகாறும் நீர் தூய்மையற்ற உணவை உண்டு வந்ததனால் ஷைத்தான் உம்மீது ஊசாடித் திருவிளையாடல் நிகழ்த்தினான். வெளிப்பகட்டுக்காக அபார வணக்கம் புரிந்தீர். இப்பொழுது நீர் தூய உணவை உண்டதன் காரணமாக அவன் உம்மை விட்டும் வெருண்டோடி விட்டான்'' என்று அவர்கள் விளக்கம் பகர்ந்தார்கள்.

மேலும் அவர்கள் அவ்விளவலை நோக்கி ''இறைஞான வழியில் ஒருவன் உயரிய படித்தரத்தை எய்த விரும்பின் அவன் ஹலாலான உணவை உண்ண வேண்டும். அத்தகு உணவே அவனுக்கு ஹலாலான உணர்வை நல்கி அவனை உயரிய நிலையில் ஆக்குவிக்கும். ஹலாலான உணவில்லையேல் ஹலாலான உணர்வும் இல்லை. உயரிய நிலையும் இல்லை'' என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தனர்.

மேலும் அவர்கள் ஒருவரிடம் ஹலாலான உணவைத் தேடுவது பற்றி எடுத்துரைக்கும் பொழுது, ''ஒருவன் அறிவைத் தேடுவதற்கோ, ஹஜ்ஜுச் செய்வதற்கோ, மார்க்கப் போர் செய்யவோ, அதிகமான வணக்கம் நிகழ்த்துவதற்கோ அந்நிய நாடு செல்வது அல்லாஹ்வுக்கும் அவனுடைய திருத்தூதருக்கும் பொருத்தமான 'ஹிஜ்ரத்' ஆக இருக்கும். அவன் வழியில் இறந்துவிடின் அவனுக்கு அதற்கான நற்கூலி கிடைக்கும்'' என்று இயம்பினர்.

ஒரு தடவை ஒருவர் அவர்களை அணுகித் தமக்கு அறிவுரை நல்குமாறு வேண்டியபொழுது, ''மார்க்கத்தில் விலக்கப்பட்டதைத் தவிர்ந்து கொள்வது உம்மீது கடமை (பர்ல்) ஆகும். ஐயத்திற்குரியவற்றைத் தவிர்ந்து கொள்வது ஸலாமத் ஆகும். மார்க்கத்தில்

அனுமதிக்கப்பட்டதிலும் கடப்புச் செய்யாது பேணுதலாக நடந்து கொள்வது சிறப்பாகும்'' என்று கூறினர். கூறியதோடல்லாது அவர்களும் அவ்வாறே செயலாற்றியும் வந்தார்கள்.

அவர்கள் மக்காவில் வாழ்ந்து வந்தபொழுது அவர்கள் ஜம்ஜம் கிணற்றுத் தண்ணீரை உண்பதற்கோ, 'உளூ'ச் செய்வதற்கோ பயன்படுத்த வில்லை. அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''அக்கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப் பயன்படுத்தப்பட்ட வாளியும், கயிறும் அரசனுக்கு உரியவையாய் இருந்தன. என்னிடம் வாளியும் கயிறும் இருந்திருப்பின் நான் அப்புனிதமிகு தண்ணீரை எடுத்துப் பயன்படுத்தி இருப்பேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

தாம் மக்காவில் உற்பத்தியான பழங்களை நாற்பதாண்டுகளாகத் தின்னவில்லை என்றும் அரசாங்க அலுவலாளன் ஒருவன் வேற்றூரில் உற்பத்தியான பழங்களை மக்காவில் உற்பத்தியாகும் பழங்களோடு சேர்த்து விற்று வந்ததனால் தாம் அவற்றை வாங்கி உண்ணவில்லை என்றும், தமக்கு முடிவு நெருங்கி இராவிடில் தாம் இச்செய்தியை எவரிடமும் கூறி இருக்கப் போவதில்லை என்றும் அவர்கள் தம் இறப்புப் படுக்கையில் வைத்துக் கூறினார்கள்.

தாம் ஓர் அரசாங்க ஊழியன் 'உளூ'ச் செய்யப் பயன்படுத்தி வந்த கலயத்தில் தண்ணீர் அருந்தியதாகவும் அதன் காரணமாகத் தம் உள்ளத்தை நாற்பதாண்டுகளாக இருள் மூடிக் கொண்டதாகவும் அவர்கள் ஒரு தடவை கூறினார்கள்.

நேரிய முறையில் தம் உணவைத் தேடுவதில் அவர்கள் எத்தொழிலையும் இழிவாகக் கருதியதில்லை. அவர்கள் மலச்சட்டி தூக்கும் பணியைக் கூடச் செய்திருக்கிறார்கள். அவர்கள் இழிவாகக் கருதியதெல்லாம் பிறரிடம் கையேந்தி இரப்பதைத் தான். ஒருநாள் அவர்கள் மலச்சட்டியைத் தூக்கி வரும் பொழுது அவர்களின் முந்தைய அரச நிலையையும் தற்போதைய அவல நிலையையும் எண்ணி வருந்தியது அவர்களின் மனம். அப்பொழுது அவர்கள் தம் மனத்தை நோக்கி, ''மனமே! அகங்காரம் கொள்ளாதே. நான் உன்னைப் பிறரிடம் கையேந்தி பிச்சை எடுக்க வைத்து விடுவேன். எச்சரிக்கையாய் இரு'' என்று வெகுண்டுரைத்தார்கள்.

அவர்கள் மார்க்கப் போரிலும் பல தடவை ஈடுபட்டுள்ளார்கள். எனினும் அவற்றில் கிடைத்த கொள்ளைப் பொருள்களை அவர்கள் ஏறிட்டுப் பார்த்ததில்லை. காரணம், அதற்கான பலனை அவர்கள் மறுமையிலேயே முழுக்க, முழுக்க நுகர விரும்பினார்கள்.

ஒருநாள் ஒருவர் அவர்களிடம் வந்து தமக்கு இஸ்முல் அஃலத்தைப் படித்துத் தருமாறு வேண்டினார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி ''உம்முடைய வயிற்றை ஹராமான உணவுகளை விட்டும் உம்முடைய உள்ளத்தை உலக ஆசாபாசங்களை விட்டும் பேணிப் பாதுகாத்துக் கொள்வீராக! அப்பொழுது இறைவனின் திருப்பெயராகிய ஒவ்வொரு 'இஸ்மு'ம் உமக்கு இஸ்முல் அஃலமாகவே இருக்கும்'' என்று பதில் கூறினார்கள்.

உடல் உழைப்பால் கிடைத்த சொற்ப வருவாயைக் கொண்டு அவர்கள் மனநிறைவுற்றார்கள். வறுமையை அவர்கள் விரும்பினார்கள். ''வறுமை என்பது சுவனக் கருவூலங்களில் ஒன்றாகும். இறைவன் அதனைத் தாம் நேசிப்பவர்களுக்கு மட்டுமே நல்குகிறான்'' என்று அவர்கள் இயம்பினார்கள்.

அவர்கள் இறைவனின் பேரருளில் அளவற்ற ஆதரவு (தவக்கல்) வைத்திருந்தார்கள். ஒரு தடவை அவர்கள் உண்பதற்கு யாதொரு உணவுமின்றி அலைந்து திரிந்த பொழுது அவர்களின் மனம் சற்று அலைவுற்றது. அப்பொழுது தமக்குத் தெரிந்த ஒரு பெண்ணின் நினைவு வரவே அவளைத் தேடி அவர்கள் சென்றார்கள். ஆனால் நெடுந்தொலை நடந்து வந்த பின் அவர்களுக்குத் தாம் செய்வது தவறெனப்பட்டது. உடனே அண்மையிலுள்ள பள்ளி சென்று ''இறப்பில்லாது என்றென்றும் உயிரோடு நிலைத்து நிற்கும் இறைவன்மீது ஆதரவு வைத்தேன்'' என்று கூறி அமர்ந்தனர். அப்பொழுது, ''இறைவனின் பேரருளில் அவநம்பிக்கை கொண்டு நண்பனின் ஆதரவில் நம்பிக்கை வைத்து இத்தனை தொலை நடந்து வந்தானே அவன் உண்மையில் இறைவனளவில் ஆதரவு (தவக்கல்) வைத்தவனல்ல'' என்று அசரீரி முழங்கியதைக் கேட்டு அவர்கள் அதிர்ந்து போனார்கள்.

ஒருதடவை ஒரு கிறிஸ்துவ சந்நியாசியிடம், ''நீர் எங்கிருந்து உண்ணுகிறீர்'' என்று வினவினர். அதற்கு அவர், ''அது எனக்குத் தெரியாது. உணவளிப்பவனிடம் அவன் எங்கிருந்து உணவளிக்கிறான் என்று கேள்'' எனக் கூறினார். அவரின் இப்பதில் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களின் உச்சியைப் பிடித்துக் குலுக்கியது போன்றிருந்தது. அவரின் மாண்பினை அறியாது தவறாக அவரிடம் இவ்வாறு கேட்டு விட்டோமே என்று எண்ணி அவர்கள் பின்னர் வருந்தினார்கள்.

இதன் பின்னர் அவர்களுக்கு இறைவனின் பேரருளில் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது. ஒரு தடவை அவர்களும் சுப்யானுத் தௌரீ (ரஹ்) அவர்களும் நோன்பு நோற்ற நிலையில் ஒரு பிரயாணத்தை

மேற்கொண்டார்கள். அப்பொழுது அவர்களுக்குக் காணிக்கையாக உணவு வந்தது. அதனை ஓர் ஏழை வந்து கேட்க அவருக்கு இல்லையென்னாது எடுத்துக் கொடுத்துவிட்டார்கள் அவர்கள். இது கண்ட சுப்யானுத் தௌரீ (ரஹ்) அவர்கள் ''வந்த உணவை எவனுக்கோ எடுத்துக் கொடுத்து விட்டீர்களே! நாம் நோன்பு திறக்க என் செய்வோம்'' என்று வினவினர். அதற்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் யாதொரு மறுமொழியும் கூறவில்லை. சற்று நேரம் கழித்து முன்பு வந்ததை விட அதிகமான உணவு அவர்களுக்கு அன்பளிப்பாக வந்தது. அப்பொழுது அவர்கள் சுப்யானுத் தௌரீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''இதோ முன்பைவிட அதிகமான உணவு வந்துள்ளது. பெற்றுக் கொள்ளுங்கள். இறைவனுடைய பேரருளில் தாங்கள் முழு நம்பிக்கை வைத்திருப்பின் தாங்கள் முன்னர் மொழிந்த சொற்களை மொழிந்திருக்க மாட்டீர்கள்'' என்று கூறினர். அதுகேட்ட சுப்யானுத் தௌரீ (ரஹ்) அவர்கள் தம் தவற்றினை உணர்ந்து பொறுத்தருளுமாறு வேண்டினார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் ஏழு நாட்கள் வரை யாதொரு உணவும் அருந்தாது இறை வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். எட்டாவது நாள் புலர்ந்ததும் அவர்கள் இரு கரம் ஏந்தி 'இறைவனே! இப்பொழுது எனக்கு ஏதேனும் வழங்கின் நலமாயிருக்கும்' என்று இறைஞ்சினர்.

அவர்கள் அவ்வாறு இறைஞ்சிச் சில கணங்கள் தாம் ஆகி இருக்கும். அதற்குள் ஓர் இளைஞன் அவர்களை அண்மி அவர்களை உணவுண்ணத் தன் இல்லம் அழைத்துச் சென்றான். சென்ற அவன் உணவுத் தட்டை அவர்களின் முன் கொண்டு வந்து வைத்து 'உண்ணுக' என்று வேண்டி நின்றான். அக்கணம் தான் அவர்கள் எவரென அவனுக்குத் தெரிய வந்தது. 'நான் தங்களின் அடிமை. என்னிடம் இருப்பவை அனைத்தும் தங்களின் உடைமை' என்று அவன் அலறினான்.

இப்பொழுது அவர்களுக்கு என் செய்வதென்றே விளங்கவில்லை. ஒட்டிய வயிற்றுடன் உணவுண்ண வந்த தமக்கு ஓர் அடிமையும் உடைமையும் கிடைத்து விட்டனவே'' என்று மகிழ்ச்சியுற்றார்கள் - இல்லை, இல்லை, துயருற்றார்கள். அக்கணமே அவ்விளைஞனை நோக்கி, ''உனக்கு விடுதலை வழங்கினேன். உன் உடைமைகள் அனைத்தையும் உனக்கே திருப்பி வழங்கினேன்'' என்று கூறி யாதொன்றும் அருந்தாது அவ்விடத்தை விட்டும் வெளியேறி விட்டார்கள். அப்பொழுது அவர்களின் நா, ''இறைவனே! உன்னிடம் ரொட்டித் துண்டைத்தான் கேட்டேன். கேட்ட எனக்கு உலகையே தந்து விட்டாயே. இறைவனே! இனி மேல் நான் உன்னைத் தவிர வேறொன்றையும் விரும்பமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்'' என்று திரும்பத் திரும்ப இயம்பிக் கொண்டிருந்தது.

பசித்திருப்பது அவர்களின் நீங்காத வழக்கமாக இருந்து வந்தது. ஒரு தடவை அவர்களும் சுப்யானுத் தௌரீ (ரஹ்) அவர்களும் ஏழு நாட்கள் வரை யாதொன்றும் உண்ணாது பட்டினி கிடந்தனர். அப்பொழுது ஒரு நாள் பக்கீர் ஒருவர் அவர்களிடம் வந்து உண்ண ஏதாவது வேண்டிய பொழுது அவர்களிடம் அவருக்குக் கொடுக்க யாதொன்றும் இல்லாத தனால் 'ஒரு நாளைக்கேனும் பசித்திருக்கலாகாதா?' என்று கூறினர். 'இரண்டு நாட்கள் பசித்திருந்தும் யாதொன்றும் உண்ணக் கிடைக்காவிடின் என் செய்வது?' என்று அவர் வினவினார். 'பொறுமையை மேற் கொள்ளும்' என்று விடையிறுத்தார்கள் அவர்கள். 'மூன்று நாட்கள் பட்டினி கிடந்தால் என் செய்வது?' என்று கேட்டார் அவர். 'அப்பொழுதும் பொறுமையை மேற்கொள்ளும்' என்று கூறினார்கள் அவர்கள். அதுகேட்ட பக்கீர், 'மூன்று நாட்கள் பசித்திருப்பின் என் உயிர் போய்விடுமே' என்றார். அதற்கு அவர்கள், ''ஒருவனுக்கு உயிர் போகும்வரை இறைவன் அவனுக்கு இரணம் அளிக்காதிருப்பதில்லை. அவ்விதம் அவன் அளிக்காதிருப்பின் அவனை மடியச் செய்ய இறைவன் முடிவு செய்துவிட்டான் என்றுதான் பொருள்'' எனப் பதிலிறுத்தார்கள்.

அவர்கள் கடின உழைப்பில் இன்பம் கண்டார்கள். பகலெல்லாம் கானகம் சென்று விறகு சேகரித்து வந்து அதனைக் கடைத் தெருவில் விற்று அதிலிருந்து கிடைக்கும் பணத்திற்கு ரொட்டி வாங்கித் தம் தோழர்களுக்கு வழங்கித் தாமும் உண்பார்கள்.

ஆனால் ரமலான் மாதத்திலோ அவர்கள் தாம் பகலில் கானகத்தில் விறகு சேகரித்து விற்று வந்த பணத்தை ஏழைகளுக்கு அறம் செய்து விட்டு இரவு முழுவதும் தொழுதுகொண்டிருப்பர் என்றும், அவர்கள் அம்மாதம் முழுவதும் உண்டதையோ உறங்கியதையோ எவரும் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஓரிரவு அவர்கள் கானகத்திலிருந்து திரும்புவதற்கு வெகுநேரமாகி விட்டது. அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்த அவர்களின் தோழர்கள் அவர்கள் இனிமேல் மற்றைய நாட்களிலும் இவ்வாறு தாமதித்து வராமல் இருப்பதற்காக கையிலிருந்த உணவுப் பொருள்களையெல்லாம் உண்டுவிட்டுப் படுத்துறங்கிவிட்டார்கள். சற்று நேரம் கழித்து ஆங்கு வந்த இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் தம் தோழர்கள் பசியோடு படுத்துறங்கி இருப்பர் என்று எண்ணித் தாம் விறகு விற்று வாங்கிவந்த மாவைப் பிசைந்து அடுப்பு மூட்டித் தம் தாடியால் அதனை வீறி எரியச் செய்து ரொட்டி சுட்டுக் கொண்டிருந்தனர். வெளிச்சம் தெரிந்ததும் விழித்தெழுந்த அவர்களின் நண்பர்கள், ''யாது செய்கின்றீர்கள்?'' என்று வினவ, ''நீங்கள் பசியோடு உறங்குகின்றீர்களல்லவா? நீங்கள்

விழித்தெழுந்ததும் உண்பதற்காக ரொட்டி தயாரித்துக் கொண்டுள்ளேன்'' என்று கூறினர். அதுகேட்டு அவர்களின் தோழர்கள், ''நாம் என்ன நினைத்து என்ன செய்தோம். அவர்கள் என்ன நினைத்து என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்'' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு வெட்கித் தலை குனிந்தனர்.*

ஒரு தடவை அவர்கள் தங்களின் தோழர் சுப்யானுத் தௌரீ (ரஹ்) அவர்களுக்கு விருந்து நல்கிய பொழுது, அதிகமான உணவுகளைக் கொண்டு வந்து அவர்களின் முன் வைத்தனர். அது கண்ட சுப்யானுத் தௌரீ (ரஹ்) அவர்கள், ''தங்களுக்குக் கடப்பை (இஸ்ராஃபை)ப் பற்றி பயமில்லையா?'' என்று வினவிய பொழுது, ''விருந்தில் கடப்பு இல்லை. கடப்பு என்பது உடைகளிலும் வீட்டிற்கான பொருள்களிலும் தாம் உள்ளன'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். இதிலிருந்து விருந்தினர் முன் சிறிதளவு உணவைக் கொண்டுவந்து வைப்பது இழிதன்மை என்றும், விருந்தினர் குறைவாக உண்பவராயினும் சரி, அவரின் முன் அதிகமான உணவைக் கொண்டு வந்து வைப்பதே பெருந்தன்மை என்றும அவர்கள் கூறாது கூறினர்.

ஒருநாள் அவர்கள் கடைத்தெருவில் வெண்ணெய், தேன், மென்மையான ரொட்டி ஆகியவற்றை வாங்கினார்கள். அதைக் கண்ட ஒருவர், ''தாங்கள் அவை அனைத்தையும் உண்ணவா வாங்குகிறீர்கள்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''ஆம்; கிடைக்கும் பொழுது நாங்கள் மனிதர்கள் போன்று உண்ணுகிறோம். கிடைக்காத பொழுது நாங்கள் மனிதர்கள் போன்று பொறுமையை மேற்கொள்கிறோம்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

எவரேனும் அவர்களை அணுகி, ''நான் தங்களுடன் இருக்க விரும்புகிறேன்'' என்று கூறின், ''நல்லது; ஆனால் மூன்று நிபந்தனைகள் 1) எல்லாருக்கும் நான் தான் ஊழியம் புரிவேன். 2) நான்தான்பாங்கு சொல்வேன். 3) ஏதேனும் ஒரு பொருளைப் பங்கு வைத்துக் கொடுப்பின் எல்லாருக்கும் சமமாகவே பங்கு வைத்துக் கொடுப்பேன். இந்த நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொளின் என்னோடு தாராளமாக இருக்கலாம்'' என்று கூறுவர். இவ்வாறு அவர்கள் ஒருவரிடம் கூறிய

* தம் தோழர்கள் நோன்பு நோற்றதன் காரணமாக அயர்ந்து உறங்குங்கால் அவர்கள் ரொட்டி சுட்டுத் தம் தோழர்களை உண்ண எழுப்புவர் என்றும் ''நாங்களும் தாமே நோன்பாளர். எங்களையும் எழுப்பிவிடக் கூடாதா. நாங்களும் அவ்வேளையில் உங்களுடன் பங்கு கொண்டிருப்போமே'' என்று கூறித் தோழர்கள் வருத்தப்படுவர் என்றும் மற்றொரு வரலாறு எடுத்துரைக்கின்றது.

பொழுது தம்மால் அந்த நிபந்தனைகளைத் தாங்கிக் கொள்ள இயலாது என்று அவர் கூறிய காலை ''அவ்விதமாயின் நான் என் செய்வது? எனினும் நீர் உண்மை உரைத்தது பற்றி மகிழ்ச்சியுறுகிறேன்'' என்று அவர்கள் கூறிவிட்டார்கள்.

மற்றொரு தடவை அவுசாயீ (ரஹ்) அவர்கள் தாமும் அவர்களோடு சேர்ந்து வாழ விரும்புவதாக மடல் தீட்டிய பொழுது ''இனம், இனத்தோடு சேர்ந்து வாழும். ஒரு பறவை தன் இனமல்லாத பறவையுடன் சேர்ந்து பறப்பின், விரைவில் அவை பிரிய ஏற்பட்டு விடுமே'' என்று அவர்கள் பதில் எழுதினார்கள்.

ஒருதடவை அவர்கள் தம் தோழர்களுடன் பிரயாணத்தில் ஈடுபட்ட பொழுது அவர்களின் தோழர்கள் அவர்களை நோக்கி, ''தாங்கள் பல்க் நாட்டின் அமீர் (தலைவர்) ஆக இருந்தவர்கள். இப்பொழுதும் தாங்கள் எங்களுக்கு அமீராக இருந்து எங்களை வழி நடத்திச் செல்ல வேண்டும்'' என்று கூறினர். அவர்கள் எவ்வளவோ மறுத்துரைத்தும் தோழர்கள் கேட்கவில்லை.

அப்பொழுது அவர்கள் தம் தோழர்களை நோக்கி, ''நல்லது; தங்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இப்பிரயாணத்தில் தங்களின் அமீராக இருக்க ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் அனைவரும் எனக்கு வழிப்பட்டு நடக்க வேண்டும். நான் கூறுவதற்கு அணுவத்தனையும் மாறுபட்டு நடக்கக் கூடாது'' என்று கூறினர். அவ்விதமே செய்வதாகத் தோழர்கள் கூறினார்கள். உடனே இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் அனைவரையும் நோக்கி, ''நீங்கள் அனைவரும் உங்களின் மூட்டை முடிச்சுகளைக் கொண்டு வாருங்கள்'' என்று கூறினர். அவர்கள் அவ்வாறு செய்யவே அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்துக் கட்டித் தம் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு கிளம்பி விட்டார்கள், அப்பெருந்தகை. அது கண்டு அவர்களின் தோழர்கள் அனைவரும் யாது செய்வதென அறியாது அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

ஓரிரவு அவர்கள் தம் தோழர்கள் மூவருடன் ஓர் உடைந்த பள்ளியில் தங்கியபொழுது களைப்பின் மிகுதியால் அவர்களின் தோழர்கள் உறங்கி விட்டனர். ஆனால் வாயல் வழியாகச் சில்லெனக் குளிர்காற்று வீசிக்கொண்டிருப்பதை அறிந்த இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் அதனால் தம் நண்பர்களின் உடல் நலன் கெட்டுவிடக் கூடாது என்று எண்ணி அவ்விரவு முழுவதும் அவ்வாயலில் நின்று தம் முதுகால் அக்குளிர்காற்று உள்ளே நுழையாது தடுத்து நின்றனர். அதன் காரணமாக அன்றிரவு அவர்கள் வழக்கமாகத் தொழுது வரும் தஹஜ்ஜுத் தொழுகை தொழ இயலாது போய்விட்டது.

சிலநாள் கழித்து அவர்கள் கனவொன்று கண்டனர். அதில் வானவர் ஒருவர் அவர்களிடம் வந்து இறைவன் அவர்களின் ஒருநாள் தொழுகையை மட்டும் ஏற்றுக் கொண்டான் என்று கூறினார். அதுகேட்டு அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. எந்த நாள் தொழுகை என்று அவர்கள் வினவிய பொழுது, ''நீர் உம் தோழர்களுக்காக தஹஜ்ஜுத் தொழுகையைத் தொழத் தவறிய இரவில் நிறைவேற்றிய தொழுகை'' என்று கூறி, ''ஒரு தோழருக்கு உதவி செய்வது ஆயிரம் முறை நஃபில் தொழுவதைவிடச் சிறந்தது'' என்று இயம்பினார் அவ்வானவர்.

மற்றொரு தடவை அவர்கள் தம் தோழர் ஒருவருடன் பிரயாணம் செய்தபொழுது அவர்களின் தோழர் நோய்வாய்ப்பட்டார். உடனே அவர்கள் தம்மிடமிருந்த பொருளைக் கொண்டு அவருக்கு வேண்டிய மருத்துவம் செய்தனர். தம்மிடம் இருந்த பொருள்களெல்லாம் தீர்ந்தும் அவருக்கு நோய் தீராததைக் கண்ட அவர்கள், தாம் ஏறி வந்த கழுதையை விற்று அவருக்கு மருத்துவம் செய்தார்கள். அவர் உடல் நலன் பெற்றதும் பிரயாணம் செய்ய அவருக்கு வலுவில்லாமல் போகவே, அவர் கழுதை எங்கே என்று வினவினார். அப்பொழுது அவர்கள், ''நான் தான் கழுதை'' என்று கூறி அவரைத் தம் தோள்கள் மீது சுமந்து அவரின் இருப்பிடம் கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் தாழ்மையின் திருவுருவமாக விளங்கினர். தாழ்மையே அவர்களுக்கு மேன்மை நல்கியது. ''தாழ்மையுடைய அடியானின் இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொள்வான்'' என்று அவர்கள் கூறினர்.

ஒருநாள் மக்கள் அவர்களை அணுகி, ''தாங்கள் தங்களை அடிமை என்று கூறிக் கொள்கிறீர்களே, தாங்கள் எவருடைய அடிமை?'' என்று வினவினர். அதுகேட்ட அவர்கள் சற்று நேரம் தயக்கமுற்றுப் பின்னர் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தனர். சற்று நேரம் கழித்து மயக்கம் தெளிந்தபின், ''இன்குல்லு மன்ஃபிஸ்ஸமாவாத்தி வல் அர்ளி இல்லா ஆத்திர் ரஹ்மானி அப்தன் (வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அருளாளனாகிய அல்லாஹ்வின் அடிமைகளே யாகும்) என்ற மறை திருவசனத்தை ஓதினர்.

அப்பொழுது மக்கள் அவர்களை நோக்கி, ''அவ்விதமாயின் தாங்கள் ஏன் நாங்கள் கேட்டவுடனே பதில் சொல்லவில்லை'' என்று வினவினர்.

அதற்கு அவர்கள் ''நான் இறைவனுடைய அடிமை என்று கூறுவேனாயின் நான் உண்மையில் இறைவனுடைய அடிமைதானா? அல்லது பெயரளவில் இறைவனுடைய அடிமை என்று கூறிக்

கொள்கின்றேனா? உண்மையில் இறைவனுடைய அடிமையாயிருப்பின் நான் அதற்கேற்ற வண்ணம் ஒழுகுகின்றேனா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. எனவே நான் அவ்வாறு கூறத் தயங்கினேன். அதற்குமாறாக நான் இறைவனுடைய அடிமை அல்ல என்றும் என்னால் கூற இயலாது. இந்நிலையில் யாது செய்வதென அறியாது தடுமாறிய என்னை ஒரு வித அச்சம் ஆட்கொண்டது. நான் உணர்வற்றுக் கீழே சாய்ந்துவிட்டேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

உண்மையில் அவர்கள் அடிமை போன்றே நடந்து கொண்டார்கள். காரணம், அவர்கள் பதினைந்து ஆண்டுகள் கடும் தவம் செய்தபின் ஒருநாள், ''நீ அடிமையாய் இருந்து கொள். நலம் பெறுவாய். உனக்கு ஏவப்பட்டதை ஒழுங்காகச் செய்து வருவாயாக!'' என்று அசரீரி முழங்கியதை அவர்கள் செவியுற்றதேயாகும்.

ஒரு காலத்தில் அரசு கட்டிலில் கால் மேல் கால் போட்டு அமர்ந் திருந்த அவர்கள் அரசு துறந்த பின் சம்மணம் போட்டுக் கூட அமர்ந்த தில்லை. இது கண்ட ஒருவர், ''தாங்கள் ஏன் சம்மணம் போட்டு அமர்வதில்லை'' என்று வினவியபொழுது ''ஒருநாள் சம்மணம் போட்டு அமர்ந்திருந்தேன். அப்பொழுது, ''அத்ஹமுடைய மகனே! எசமானுக்கு முன்னால் இப்படித் தானா அமர்வது?'' என்று ஒரு குரல் முழங்கியது. அது முதல் நான் முழங்காலிலேயே அமரத் துவங்கினேன்'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

ஒரு தடவை அவர்கள் ஓரிடத்திற்குச் சென்றபொழுது அங்குப் பலரின் மத்தியில் ஓர் ஆலிம் (படிப்பாளர்) கட்டிலின் மீது ஆடம்பரத் துடன் வீற்றிருப்பதையும் அவரைச் சூழத் தரையில் பலர் அமர்ந்திருப் பதையும் கண்டனர். அப்பொழுது அவர்கள் திருக்குர்ஆனிலுள்ள 67-ஆம் அத்தியாயத்தை ஓதத் துவங்கி, ''தபாரக்கல்லதீ பியதி ஹில் முல்க் வஹு¬வ அலா குல்லி ஷைஇன்கதீர். அல்லதீ ஹலக் கஸ்ஸரீர்'' (யாவற்றுடையவும் ஆட்சி எவன் கையில் இருக்கின்றதோ அவன் மிகப் பாக்கியமுடையவன். யாவற்றின் மீதும் ஆற்றலுடையவன். உங்களில் நல்ல நடத்தையுடையோர் எவரென்றும் சோதிக்கும் பொருட்டே அவன் கட்டிலைப் படைத்தான்) என்று ஓதினர். அதுகேட்ட அந்த ஆலிம், ''நீர் தவறாக ஓதுகின்றீர்'' என்றார். உடனே இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் மீண்டும் அதனை, 'கதீர்' வரை ஓதி, ''அல்லதீ கலக்கல் கஸ்ர் (அவன் மாளிகையைப் படைத்தான்) என்று ஓதினர். மீண்டும் அந்த ஆலிம் அவர்களை நோக்கி, ''நீர் தவறாக ஓதுகின்றீர்'' என்று கூற மீண்டும் அதனைக் 'கதீர்' வரை ஓதி, ''அல்லதீ ஹலக்கல் பரக வல்லுஜாம்'' (அவன் குதிரையையும் கடிவாளத்தையும் படைத்தான்)

என்று ஓதினர். அப்பொழுதும் அந்த ஆலிம், ''தவறாக ஓதுகின்றீர்'' என்று கூறினார். அதுகேட்ட இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், ''அதனைச் சரியாக எவ்விதம் ஓதுவது என்பதைக் கற்றுத் தாருங்கள்'' என்று வினயமாக இயம்பினர். உடனே அந்த ஆலிம் ''அல்லதீ ஹலக்கல் மௌத்த வல்ஹயாத்த (அவன் இறப்பையும் பிறப்பையும் படைத்தான்) என்று கூறினார். அதுகேட்ட இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் ''அவன் மனிதர்களைச் சோதித்தறியும் பொருட்டு இறப்பையும், பிறப்பையும் படைத்தான் என்பது உண்மை. எனினும் இறப்பு தங்களுக்கு ஒரு நாள் வரும் என்று உறுதியாக நம்பி இருப்பின் தாங்கள் இவ்வாறு மற்றவர்களைக் கீழே அமரச் செய்து தாங்கள் மட்டும் கட்டிலின் மீது ஆடம்பரத்துடன் அமர்ந்திருப்பீர்களோ என்று இடித்துரைத்தனர். உடனே அந்த ஆலிம் தாம் அமர்ந்திருந்த கட்டிலிலிருந்து கீழே இறங்கி அழுது கண்ணீர் வடித்து இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி, இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களின் ஆன்மீக மாணவர்களில் ஒருவராக ஆகிவிட்டார்.

அவர்கள் தாழ்மையின் திருவுருவாக அமைந்திருந்ததோடு மட்டுமல்லாது, நேர்மையே உன் பெயர்தான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் என்று கூறுமாப் போன்று அவர்களின் ஒவ்வொரு செயலும் அமைந்திருந்தது. ஒரு தடவை அவர்கள் வாடகைக்குக் குதிரை ஒன்றை அமர்த்தி அதன் மீது இவர்ந்தவர்களாய் வேற்றூர் ஒன்றிற்குச் சென்றார்கள். சற்றுத் தொலை சென்றதும் சவுக்கு வழியில் எங்கேயோ தவறி விட்டது அவர்களுக்குத் தெரிய வந்தது. உடனே குதிரையை அங்கேயே விட்டுவிட்டு கால் நடையாக அச்சவுக்கினைத் தேடி வந்து அதனை எடுத்துக் கொண்டு மீண்டும் குதிரையின்மீது ஏறிச் சென்றனர். ''குதிரையின்மீது இவர்ந்தே அச்சவுக்கைத் தேடிச் செல்லக் கூடாதா? இறங்கி நடந்தா செல்ல வேண்டும்?'' என்று ஒருவர் அவர்களிடம் வினவியபொழுது, ''ஆம்; அவ்விதமே செய்ய வேண்டும். நான் அக் குதிரையை வாடகைக்கு அமர்த்தியது அவ்வூருக்குச் செல்லவேயன்றி குதிரையிலே இவர்ந்து சவுக்கைத் தேடித் திரிவதற்குமல்லவே'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

பிறரிடம் குறை காணாப் பெருந்தன்மை அவர்களிடம் இயற்கை யாகவே குடிகொண்டிருந்தது. அவர் கண்களுக்குத் தென்பட்ட தெல்லாம் நன்மை. நன்மையேயன்றி வேறொன்றில்லை. ஒருநாள் ஒருவர் அவர்களை அணுகி, ''தாங்கள் என்னிடம் ஏதேனும் குறை கண்டிருப்பின் அதனை எனக்குத் தெரிவிக்க வேண்டும்'' என்று வேண்டியபொழுது, ''என் அன்புச் சகோதரரே! உம்மை நான் அன்புக் கண்களால் பார்ப்பதால் உம்மிடம் எனக்கு யாதொரு குறையும்

தென்படவில்லை. ஆதலின் உம் தவற்றைத் தெரிந்து கொள்ள விரும்பின் வேறொருவரிடம் சென்று கேளும்'' எனறு கூறி விட்டார்கள்.

நல்லவர்களுக்கு நல்லவன்தான் நல்லவன் என்று அவர்கள் நம்பினார்கள். ஒருநாள் ஒருவர் அவர்களை அணுகி, ''என்னைச் சிலர் பண்பாளர் (சாலிஹானவர்) என்று கூறுகின்றனர். ஆனால் நான் உண்மையில் பண்பாளனா என்று எனக்கு விளங்கவில்லை. அதனை நான் எவ்வாறு அறிவது?'' என்று வினவியபொழுது, ''நீர் பண்பாளர் (ஸாலிஹானவர்) என்று கருதும் ஒருவரைத் தனிமையில் சந்தித்து உம் பண்புகள் அனைத்தையும் ஒளிவு மறைவின்றி எடுத்துரையும் அவர் உம்மைப் பண்பாளர் என்றுரைப்பின் நீர் பண்பாளரே யாவீர். இல்லையெனில் இல்லை'' என்று அவர்கள் எடுத்தியம்பினர்.

ஒருவர் மற்றவரைப் பற்றிப் புறம் பேசுவதை அவர்கள் பெரிதும் வெறுத்தனர். ஒருதடவை அவர்கள் ஒரு விருந்துக்குச் சென்ற பொழுது, ஆங்குள்ளோர் ஒருவரை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ''அவரோ தடியராயிற்றே, நடந்து வர இயலாதே. எனவே அவருக்காக ஏன் வீணே காத்துக் கொண்டிருக்கிறீர்கள். உண்ணுங்கள்'' என்று விருந்தளிப்பவர் கூறிய பொழுது, ''எல்லோரும் ரொட்டிக்குப் பின் இறைச்சியைத் தின்பார்கள். தாங்களோ ரொட்டிக்கு முன் இறைச்சியைத் தின்கிறீர்கள். ஒரு முஸ்லிமைப் பற்றிப் புறம் பேசப்படும் இடத்திற்கு நான் வர நேர்ந்ததற்காக வருந்துகிறேன்'' என்று கூறி அவர்கள் அவ்விடத்தை விட்டும் அகன்றுவிட்டார்கள். இவ்விடத்தில் அவர்கள் இவ்வாறு கூறியது ''ஒருவன் மற்றொருவனைப் பற்றிப் புறம் பேசுவது அவனுடைய உடலிலுள்ள இறைச்சியைத் தின்பதற்கு ஒப்பாகும்'' என்ற நபிமொழியை ஆதாரமாக வைத்துத்தான்.

புறம் பேசுவதைப் பற்றி மட்டுமல்ல, ஒருவரை மற்றவர் முகஸ்துதி செய்வதையும் அவர்கள் விரும்பவில்லை. ஒரு தடவை ஒருவர் அவர்களை முகஸ்துதி செய்ய விரும்பி ''நான் தங்களைத் தங்களின் பெயர் சொண்டு அழைக்கவா? அல்லது தங்களின் கௌரவப் பெயரைக் கொண்டு அழைக்கவா?'' என்று வினவியபொழுது, ''நீர் என்னை என் கௌரவப் பெயரைக் கொண்டு அழைக்கவேண்டாம். அழைப்பின் நீர் என்னைக் கொன்று விடுவீர். என் பெற்றோர் எனக்குச் சூட்டிய பெயரைக் சொண்டே அழையும். அதனால் நான் மகிழ்ச்சி யுறுவேன்'' என்று கூறினர். அதன்பின் அவர் அவர்களை நோக்கித் தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்ட ''நீர் தலைமைத் தனத்தை விரும்ப வேண்டாம். ஏனெனில் ஒரு பொருளின் தலையாய்

இருப்பதைவிட வாலாக இருப்பது மேலாகும். தலைக்குத் தாழ்வுண்டு. வாலுக்கு அப்படி இல்லை. அது எப்பொழுதும் போல் இருந்து கொண்டிருக்கும்'' என்று அவர்கள் கூறினர்.

ஒருநாள் அவர்கள் கவலையற்று அமைதியுடன் வீற்றிருந்தனர். அப்பொழுது அவ்வழியே வந்த ஒருவர், ''உம் மீது எனக்குப் பொறாமையாக உள்ளது. நீர் எவ்விதக் கவலையுமில்லாது எத்துணை அமைதியாக வீற்றிருக்கின்றீர்? நானோ துன்பத்தில் கிடந்து புழுவெனத் துடிக்கின்றேன்'' என்று அழாக் குறையாகக் கூறினார். அதுகேட்டு அவர்களின் உள்ளம் பாகாய் உருகிவிட்டது. ''ஈந்தேன், ஈந்தேன். நான் நிகழ்த்திய வணக்கம், செய்த தர்மம் ஆகியவற்றின் பலனை உமக்கு ஈந்தேன். நீர் உம் துன்பத்தில் ஒரு பகுதியை எனக்கு வழங்கும்'' என்று கூறினார்கள்.

வேறொரு நாள் அவர்கள் ஒரு தெருவழியே சென்ற பொழுது, ஒருவன் குடிவெறியில் மயங்கிக் கிடப்பதைக் கண்டதும், அவனை அணுகி அவனுடைய வாயைக் கழுவினர். சற்று நேரத்திற்குப் பின் அவன் மயக்கம் தெளிந்ததும் அவர்கள் அவனுக்கு அறிவுரை வழங்கினார்கள். அதுகேட்டு அவன் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி ''இனிமேல் மதுவை ஏறிட்டும் பார்ப்பதில்லை'' என்று அறுதியிட்டு உறுதி கூறினான்.

அன்றிரவு அவர்கள் கனவொன்று கண்டார்கள். அதிலே ஒருவர் அவர்களை அணுகி, ''நீர் இறைவனுக்காக வேண்டி அவனுடைய வாயைக் கழுவித் தூய்மைப்படுத்தியதன் காரணமாக இறைவன் உம்முடைய இதயத்தை இணை வைத்தல் என்ற தீமையை விட்டும் தூய்மைப்படுத்தினான்'' என்று கூறினார். அதுகேட்டு அவர்கள் மகிழ்ச்சியுடன் விழித்தெழுந்தனர்.

அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்ற செல்வர் ஒருவர் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து தமக்கு ஏதேனும் அறிவுரை வழங்குமாறு வேண்டி நின்றார். அப்பொழுது அவர்கள், ''படைத்தவனை நினைவு கொள்ளும். படைக்கப்பட்டவைகளை மறந்து விடும்'' என்று கூறினர். ''மேலும் அறிவுரை வழங்குங்கள்'' என்று அவர் வேண்ட ''மூடியதைத் திறந்து விடும், திறந்ததை மூடி விடும்'' என்று அவர்கள் கூறினர். ''அதனைச் சற்று விளக்கமாக எடுத்துரையுங்கள்'' என்று அவர் அவர்களிடம் மீண்டும் வேண்டிய பொழுது, ''மூடி இருக்கும் உம் பணப்பையைத் திறந்துவிடும். திறந்திருக்கும் உம் வாயை மூடிக் கொள்ளும்'' என்று கூறினர்.

பிறரிடமிருந்து எவ்வித உதவியையும் எதிர்பாராத பெருமிதம் அவர்களிடம் குடி கொண்டிருந்தது. ஒரு தடவை அவர்கள் கடலில் பிரயாணம் செய்த பொழுது அகோரப் புயல் வீசி அவர்கள் ஏறிச் சென்ற கப்பலை அலைக்கழித்த பொழுது, ''என்ன கடினம்! எத்துணைத் துன்பமாக உள்ளது இப்புயலால்'' என்று கப்பலில் இருந்தவர் களெல்லாம் அலறிய காலை, ''இஃதென்ன கடினம், ஒரு மனிதன் பிறரின் உதவியை எதிர்பார்ப்பதை விட இது கடினமானதல்ல'' என்று அவர்கள் கூறினர்.

ஒருநாள் சிலர் அவர்களிடம் வந்து 'தாங்கள் எவ்வாறு தங்களின் நேரத்தைக் கழித்துக் கொண்டுள்ளீர்கள்?' என்று வினவிய பொழுது, 'என்னிடம் மூன்று வாகனங்கள் உள்ளன. அவற்றை என்முன் எப்பொழுதும் தயாராக வைத்துள்ளேன். எனக்கு ஏதாவது இறையருள் கிட்டுமாயின் நன்றி என்னும் வாகனத்தில் ஏறிக்கொள்கிறேன். ஏதாவது நோய், நொம்பலங்கள் ஏற்படின் பொறுமை என்னும் வாகனத்திலும் ஏதாவது பாவம் செய்துவிடின் பாவமன்னிப்பு என்னும் வாகனத்திலும் ஏறிக் கொள்கிறேன்' என்று பதிலிறுத்தார்கள் அவர்கள்.

மற்றொருநாள் சிலர் அவர்களிடம் வந்து ''நாங்கள் இறைவனிடம் கைகடுக்க, நா உலர இறைஞ்சிய போதினும் அவன் அதனை ஏற்றுக் கொள்வதில்லையே, ஏன்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''நீங்கள் இறைவனை அறிந்திருக்கிறீர்கள். எனினும் அவனுக்கு அடி பணிவதில்லை. அவனுடைய திருத்தூதரை அறிந்திருக்கிறீர்கள். எனினும் அவர்களின் வழிமுறையைப் பின்பற்றுவதில்லை. நீங்கள் குர்ஆனை ஓதுகின்றீர்கள். எனினும் அது கூறுகின்றபடி செயலாற்றுவ தில்லை. நீங்கள் இறைவனுடைய அருளால் உணவை அருந்து கின்றீர்கள். எனினும் அதற்காக அவனுக்கு நன்றி செலுத்துவதில்லை. இறைவனை வழிபட்டவர்களுக்கு சுவனம் நிச்சயம் கிடைக்கும் என அறிந்திருக்கிறீர்கள். எனினும் அந்தச் சுவனத்தை நீங்கள் தேடுவ தில்லை. இறைவனுக்கு மாறு செய்பவர்களுக்கு நரகம் நிச்சயம் கிடைக்கும் என அறிந்திருக்கிறீர்கள். எனினும் அவ்வெந்நரகை விட்டும் நீங்கள் வெருண்டோடுவதில்லை. ஷைத்தான் உங்களின் பகைவன் என அறிந்திருக்கிறீர்கள். ஆனால் அந்த ஷைத்தானை நீங்கள் பகைப்பதில்லை. இறப்பு நிச்சயம் எனத் தெரிந்திருக்கிறீர்கள். எனினும் இறப்பதற்கு நீங்கள் ஆயத்தமாவதில்லை. பெற்றோர்களை அடக்கம் செய்வதற்குப் புதைகுழியில் இறக்குகிறீர்கள். ஆனால் அதிலிருந்து நீங்கள் அறிவு பெறுகின்றீர்களில்லை. பிறருடைய தவற்றைக் கவனிக்கின்றீர்கள். ஆனால் உங்களின் தவற்றை நீக்குவதில்லை. இவ்வாறு நீங்கள் இருப்பின் எவ்வாறு உங்களின் இறைஞ்சுதல்

இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

வேறொரு நாள் ஒருவன் அவர்களிடம் வந்து தனக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டினான். அதற்கு அவர்கள், ''இறைவனுக்கு எதிராக நீ பாவம் செய்யின் நீ அவனுடைய உணவை உண்ணாதே'' என்று கூறினர். அதற்கு அவன், ''உணவளிப்பவன் அவனாயிருக்கும் பொழுது நான் எங்கிருந்து உண்பேன்'' என்றான். ''அவ்வாறாயின் அவனின் உணவை உண்டு கொண்டு அவனுக்கு மாறு செய்வது நல்லதல்ல'' என்று கூறினார்கள் அவர்கள்.

மேலும் அவர்கள் அவனை நோக்கி, ''நீ பாவம் செய்ய விரும்பின் இறைவனுடைய அரசை விட்டும் அகன்றுவிட்டு அதைச் செய்'' என்று கூறினர். கிழக்கிலிருந்து மேற்கு வரை அவனுடைய அரசாக இருக்கும் பொழுது நான் பாவம் செய்ய எங்கே போவேன்'' என்று அவன் வியப்புடன் வினவியபொழுது, ''அவ்விதமாயின் அவனுடைய அரசிலிருந்து கொண்டு அவனுக்கு மாறு செய்வது நல்லதல்ல'' என்று அவர்கள் எடுத்தியம்பினார்கள்.

''நீ பாவம் செய்ய விரும்பினால் அவன் காணாத இடத்திற்குப் போய்ச் செய்'' என்று அவர்கள் கூறியதும், ''மறைவாயுள்ள இரகசியங்களை யெல்லாம் அறிந்தவனாகவும் மனத்திலுள்ள மர்மங்களை யெல்லாம் தெரிந்தவனாகவும் இறைவன் இருக்கும் பொழுது நான் மறைவான இடத்திற்கு எங்குப் போவேன்'' என்று அவன் வினவினான். அவ்வாறாயின் அவனின் உணவை அவனுடைய அரசாங்கத்தில் இருந்து உண்டு கொண்டு அவனுடைய முன்னிலையில் நின்று பாவம் செய்வது நல்லதல்ல'' என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்.

உயிரைக் கவர்ந்து செல்லும் அமரர் உன் உயிரைக் கவர்ந்து செல்ல உன்னிடம் வரும்பொழுது நீ அவரிடம் ''நான் பாவ மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அதுவரை சற்றுப் பொறுங்கள் என்று சொல்லும்'' என்று இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் கூற அவன், ''நான் அவ்விதம் கூறினால் அவர் ஒருபோதும் என் சொல்லை ஏற்கமாட்டாரே'' என்றான். ''அவ்வாறாயின் இப்பொழுதே இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரிப் பரிசுத்தமாவது நல்லதல்லவா?'' என்று அவர்கள் இயம்பினார்கள்.

''நீ இறந்து புதைகுழியில் வைத்துப் புதைக்கப்பட்ட பின் உன்னிடம் கேள்வி கணக்குக் கேட்க முன்கர், நக்கீர் என்ற அமரர்கள் வரின் அவர்களை நோக்கி, ''நீங்கள் என்னிடம் வராதீர்கள் என்று

அவர்களுக்கு ஆணையிடும்'' என்றார்கள் அவர்கள். 'என் ஆணை ஒன்றும் அவர்களிடம் செல்லாதே' என்று அவன் பதிலிறுத்தான். அதுகேட்ட அவர்கள்,'அவ்விதமாயின் அவர்களுக்கு அளிக்கத்தக்க பதிலை இப்பொழுதே தயார் செய்து கொள்வது நல்லதல்லவா?' என்று அவனிடம் வினவினார்கள்.

''மறுமையில் பாவிகளை நரகிற்குக் கொண்டு செல்லுங்கள் என்னும் ஆணை பிறப்பிக்கப்படும் பொழுது நீ மட்டும் 'போக மாட்டேன்' என்று சொல்'' என அவர்கள் கூறினார்கள். அதுகேட்ட அவன் ''அது எவ்வாறு சாலும்'' என்று வினவினான். ''அவ்விதமாயின் பாவம் செய்யாதிருப்பது நல்லதல்லவா?'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களை அணுகித் தமக்கு அறிவுரை நல்குமாறு வேண்டினார். அதற்கு அவர்கள் ''மார்க்கத்தில் விலக்கப் பட்டதைத் தவிர்ந்து கொள்வது உம்மீது கடமை (பர்ல்) ஆகும். ஐயத்துக்குரியவற்றைத் தவிர்ந்து கொள்வது நலம் (ஸலாமத்) ஆகும். மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதிலும் கூடக் கடப்புச் செய்யாது பேணுதலாக நடந்து கொள்வது சிறப்பாகும்'' என்று கூறினர்.

''வருத்தம் இரண்டு வகைப்படும். அவற்றில் மறுமையை எண்ணி அதற்காக வருத்தமுறுவது மேலானதாகும். இவ்வுலகின் பொருள் களை எண்ணி அவற்றிற்காக வருத்தமுறுவது இழிந்ததாகும்'' என்றும் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

ஒரு தடவை அவர்கள் கஃபாவை இடம் சுற்றிவரும் பொழுது ஒரு மனிதனைப் பார்த்து, ''நீர் ஆறு கட்டங்களைத் தாண்டுகிறவரை நல்லோர்களின் தகுதியை எய்தப் பெறமாட்டீர். அவையாவன: (1) நீர் இன்ப சுகங்களின் வாசலை அடைந்து கடின வாழ்வின் வாசலைத் திறந்துகொள்ள வேண்டும் (2) பெருமையின் வாசலை அடைத்துத் தாழ்மையின் வாசலைத் திறந்து கொள்ள வேண்டும் (3) சோம்பல் என்ற வாசலை அடைத்து உழைப்பு என்ற வாசலைத் திறந்து கொள்ள வேண்டும் (4) உறக்கம் என்ற வாசலை அடைத்து விழிப்பு என்ற வாசலைத் திறந்து கொள்ள வேண்டும் (5) வளம் என்ற வாசலை அடைத்து வறுமை என்ற வாசலைத் திறந்து கொள்ள வேண்டும். (6) உலக ஆசை என்ற வாசலை அடைத்து மறுமைக்காக ஆயத்தப்படுத்தும் வாசலைத் திறந்து கொள்ள வேண்டும்'' என்று கூறினார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் தம் தோழர்களுடன் இறைவனை மனமொன்றித் தொழுவதன் அவசியத்தைப் பற்றி உரையாடிக்

கொண்டிருக்குங்கால், ''எவன் தன் உள்ளத்தை மூன்று இடங்களில் இருக்கக் காணவில்லையோ அவன் தனக்கு இறையருளின் வாயல் அடைக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ளட்டும். அவை (1) குர்ஆன் ஓதும் நேரம். (2) இறைவனைத் தியானிக்கும் நேரம். (3) தொழும் நேரம்'' என்று எடுத்துரைத்தார்கள்.

வேறொரு தடவை அவர்கள் இறைநேசச் செல்வர்களைப் பற்றிக் கூறும் பொழுது ''அவர்களின் உள்ளம் எப்பொழுதும் இறை சிந்தனையில் மூழ்கியும் இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டும் இறைவனின் பேராற்றலைப் பற்றி நினைவு கூர்ந்து கொண்டும் இருக்கும்'' என்று எடுத்தியம்பினார்கள்.

அவர்கள் மஃரிஃபா என்ற இறை ஞானத்தை ஒரு கிறிஸ்துவத் துறவியிடமிருந்து எய்தப் பெற்றதாகக் கூறினார்கள். அதனை அவர்கள் இதோ கூறுகிறார்கள். நாமும் கேட்போம்.

''நான் மஃரிஃபாவை ஸம்அன் என்ற கிறிஸ்தவத் துறவியிட மிருந்து கற்றுக் கொண்டேன். அவரின் தவமடம் சென்ற நான் 'இங்கு எவ்வளவு காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று வினவினேன் 'எழுபது ஆண்டு காலமாக' என்று அவர் பதில் மொழிந்தார். 'என்ன உணவு உண்கிறீர்கள்?' என்று அடுத்து அவரை வினவினேன். அதுகேட்ட அவர் 'ஹனீஃபே! (உருவமற்ற ஓரிறை வணக்கவாளரே!) ஏன் அதைப்பற்றி வினவுகிறீர்?' என்று வினவினார். அதற்கு நான் 'அதைப் பற்றி அறிய நான் ஆவலாயுள்ளேன்' என்று கூறினேன். 'நான் ஓரிரவிற்கு ஒரு பட்டாணிக் கடலை வீதம் உண்டு வருகிறேன்' என்று அவர் பதில் கூறினார். 'அது தங்களுக்குப் போதுமா?'' என்று வியப்புடன் வினவினேன் நான். அதற்கு அவர் 'கீழே உள்ள மக்களைப் பார்த்தீரா?' என்று கேட்டார். 'பார்த்தேன்' என்று கூறினேன்.

அவர் கூறினார், ''அவர்கள் என்னைத் தரிசிப்பதற்காக ஆண்டுக்கு ஒரு தடவை இங்கு வந்து என்னுடைய இந்தத் தவ அறையை அலங்கரித்து இதனைச் சுற்றிப் பலமுறை வந்து என்னைக் கௌரவிக் கிறார்கள். எனக்கு இறை வணக்கத்தில் சிலபொழுது அலுப்பு ஏற்படின் அவர்கள் எனக்குச் செய்யும் கௌரவத்தை எண்ணிப் பார்த்து மகிழ்ச்சியுறுகிறேன். ஆண்டுக்கு ஒரு நாளைக்குக் கௌரவம் பெறு வதற்காக ஓராண்டு காலம் முழுவதும் வணக்கத்தில் ஈடுபட்டுள்ளேன். அவ்விதமாயின், 'ஹனீஃபே! நான் என்றென்றும் கௌரவம் பெற விரும்பின் நான் எத்துணைக் கடுமையான வணக்கத்தில் ஈடுபட வேண்டும் என்பதை நீர் நினைத்துப் பாரும்' என்று அவர் கூறினார்.

அவருடைய இப்பேச்சு எனக்கு மாபெரும் அறிவு விளக்கத்தை வழங்கியது.

மேலும் ஏதாவது அறிவுரை பகருமாறு அவரை வேண்டினேன்.

அதுகேட்டு அவர், ''கீழே இறங்கும்'' என்று கூறினார்.

அவ்வாறே நான் கீழே இறங்கியதும் அவர் ஒரு வாளியைக் கீழே இறக்கினார். அதில் இருபது பட்டாணிக் கடலைகள் இருந்தன. ''நீர் ஆங்குள்ள மாதா கோவிலுக்குச் சென்று ஆங்கு வீற்றிருக்கும் மக்களுக்கு நான் உமக்கு அளித்ததைக் காட்டும். அதன்பின் மேலே ஏறி என்னிடம் வாரும்'' என்று அப்பொழுது அவர் கூறினார்.

அவர் வாளியை இறக்கியதைக் கண்ட மக்கள் என்னிடம் ஓடோடி வந்து, ''ஹனீஃபே! துறவி உமக்கு வாளியில் என்ன அனுப்பி வைத்தார்?'' என்று வினவினர்.

''அவர் உண்ணும் உணவில் சிறிதை எனக்கு அனுப்பி வைத்தார்'' என்று நான் பதிலிறுத்தேன்.

''அப்படியா! அதைக் கொண்டு நீர் என்ன செய்யப் போகிறீர்? அதனைப் பெற நாங்களல்லவோ அதிகம் உரிமையுள்ளவர்கள். எனவே அதற்கு ஒரு விலையைக் கேளும். நாங்கள் தருகிறோம்'' என்று கூறினர்.

நான் ''அதன் விலை இருபது தீனார்'' என்று கூறினேன்.

அவர்கள் மறுபேச்சின்றி அப்பணத்தை என்னிடம் தந்து அந்த இருபது பட்டாணிக் கடலைகளையும் என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

நான் மீண்டும் துறவியிடம் சென்று நடந்ததைக் கூறினேன்.

அதுகேட்ட அவர் ''நீர் தவறு செய்து விட்டீர். நீர் அவர்களிடம் ஒவ்வொரு பட்டாணிக் கடலைக்கும் ஆயிரம் தீனார் (பொற்காசு) வீதம் இருபது பட்டாணி கடலைகளுக்கும் இருபதாயிரம் தீனார்கள் கேட்டிருப்பினும் அவர்கள் தந்திருப்பார்கள். இவற்றை விரும்பாத, இவற்றை வணங்காத ஒருவனுக்கு அளிக்கப்படும் கௌரவம் இதுவென்றால் ஹனீஃபே! இறைவனை வணங்கக் கூடிய ஒருவனுக்கு எத்துணைக் கௌரவம் கிடைக்கும் என்பதை எண்ணிப்பாரும்! ஆதலின் ஹனீபே! இனி நீர் எதனையும் ஏறிட்டுப் பார்க்காது இறைவனையே முன்னோக்கினவனாக இரும்'' என்று கூறினார்.

வேறொரு தடவை அவர்கள் ஒரு நாவிதனிடமிருந்தும் அறிவு கற்றுக் கொண்டதாகக் கூறினார்கள். ஒரு நாள் அவர்கள் ஒரு நாவிதன் கடைக்குச் சென்று தம் தாடி, மீசையை ஒழுங்குபடுத்திக் கொண் டிருந்தார்கள். அப்பொழுது ஆங்கு வந்த அவர்களின் சீடர்களில் ஒருவர், ''தங்களிடம் ஏதேனும் இருந்தால் இந்த நாவிதனுக்குக் கொடுங்கள்'' என்று கூறினார். அடுத்த கணமே அவர்கள் தங்களிட மிருந்த ஒரு பையை எடுத்து அவனிடம் கொடுத்தனர். அச்சமயம் ஓர் ஏழை வந்து அந்த நாவிதனிடம் பிச்சை கேட்க அவன் அந்தப் பையைச் சுட்டிக்காட்டி, அதனை எடுத்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு, அவர்களின் மீசையைத் கத்தரித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவர்கள் அந்த நாவிதனை நோக்கி பதற்றத்துடன் ''அதில் திரவியம் உள்ளது'' என்று கூறினர். அதுகேட்ட அவன், ''உலோபியே! அது எனக்குத் தெரியும் தான். செல்வன் என்பவன் மனவளம் உள்ளவனேயன்றி பொருள் வளம் உள்ளவன் அல்ல என்பதை நீர் அறியமாட்டீரோ?'' என்று கூறினான். அப்பொழுது அவர்கள் மீண்டும் அவனை நோக்கி, ''அந்தப் பை நிறையப் பொற்காசுகள் இருக்கின்றன'' என்று கூறினர். அதற்கு அவன் ''பொய்யரே! நான் எவருக்கு அதனைக் கொடுக்கிறேனோ, அவர் யார் என்பதை நான் அறிந்தே கொடுக்கிறேன். நான் அவருக்குக் கொடுப்ப தாக நீர் எண்ணிக் கொண்டு இவ்வாறு கூறுகிறீர். நான் உண்மையில் அதனை அல்லாஹ்வுக்காகவே கொடுக்கிறேன் என்பதை நீர் அறியமாட்டீர்'' என்று கூறினான். அதுகேட்டு அவர்களுக்கு ஏற்பட்ட நாணத்திற்கு அளவில்லை.

ஒருநாள் அவர்கள் ஒரு வழியே நடந்து செல்லுங்கால் வழியில் ஒரு கல் கிடந்தது, அவர்களின் கண்களுக்குத் தென்பட்டது. அதன்மீது, ''என்னைப் புரட்டிப்பார்'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அவர்கள் அதனைப் புரட்டிப் பார்த்தபொழுது ''நீ அறிந்த ஒன்றைச் செயலாற்றாத பொழுது நீ அறியாத ஒன்றை ஏன் தேடித் திரிகின்றாய்'' என்று அதில் பொறிக்கப்பட்டிருந்தது, அவர்களின் அறிவுக் கண்களுக்கு வெளிச்சம் நல்கியது.

மற்றொரு நாள் அவர்கள் சிரியா நாட்டில் பிரயாணம் செய்த பொழுது வேறொரு கல்லின் மீது ''வயதாகிய தண்ணீர் இறைக்கப் பட்டு முடியும் முன் நீ மறுமைக்கானவற்றைத் தேடிக்கொள்'' என்று எழுதியிருப்பதைக் கண்டு அவர்கள் கண்ணீர் விட்டு அழுது கொண்டு நின்றனர். அப்பொழுது கம்பளி உடையணிந்த ஒருவர் தலைவிரி கோலமாக வந்து அழுவதற்கான காரணத்தை வினவினார். அவர்கள் அக்கல்லைச் சுட்டிக் காட்டியதும் உடனே அவர் அவர்களைச் சற்றுத் தொலை அழைத்துச் சென்று, மற்றொரு கல்லைக் காட்டினார். அதில்

''நீ தலைமைத் தனத்தை விரும்பாதே. இறைவன் உன் தலைமைத் தனத்தைத் தலைகுப்புற வீழச் செய்துவிடுவான். நீ விதியை நம்பாத பொழுது துன்பத்தையும், துயரத்தையும் நுகர வேண்டி இருக்கும். இறையச்சத்தைப் போன்று மேலானது ஒன்றுமில்லை. மலத்தை விடத் தாழ்ந்ததும் ஒன்றுமில்லை. அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தாலன்றி வாழ்வில் வெற்றி பெறுவது இயலாது'' என்ற வாசகங்கள் பொறிக்கப் பட்டிருந்தன.

இதன்பின் அவர்கள் லெபனானுக்குச் சென்ற பொழுது அங்குள்ள மலைக்குகை ஒன்றில் சில பக்கீர்களைச் சந்தித்தார்கள். அவர்கள் இவர்களை நோக்கி, ''இப்ராஹீமே! நீர் உலக மக்களிடம் செல்வீராயின் அவர்களுக்கு நான்கு அறிவுரைகளை நல்குவீராக! அவையாவன: (1) ஒருவன் உண்பதை அதிகமாக்கின் அவன் வணங்குவதில் இன்பத்தைப் பெறான். (2) ஒருவன் உறங்குவதை அதிகமாக்கின் அவன் வாழ்வில் வளத்தைக் காணான். (3) ஒருவன் மனிதர்களுடன் கலந்து உறவாடுவதை அதிகமாக்கின் அவன் மறுமைக்கான வழியை இழந்த வனாவான். (4) ஒருவன் வீண் பேச்சை அதிகமாக்கின் அவன் காபிராக இறப்பெய்துவான்'' என்று கூறினர்.

இச்செய்தியை அவர்கள் மக்களிடம் வந்து கூறிய பொழுது, ''தாங்கள் ஏன் அறிவார்ந்த செய்திகளை எழுதி வைத்துக் கொள்ள வில்லை'' என்று வினவியக்கால் ''இறைவனுக்கு நன்றி செலுத்தவும், மறுமைக்கானவற்றைத் தேடிக் கொள்ளவுமே எனக்கு நேரம் பற்றாத போது நான் அவற்றை எழுதி வைத்துக் கொள்ள எனக்கு நேரமேது?'' என்று கூறிவிட்டார்கள்.

அரசு துறக்குமுன் நூல்களைப் படிப்பதில் இன்பம் கண்ட தாம், துறவுக்குப் பின் தம் தோழர்கள், தாம் நூல்களைப் படிப்பதைத் தடுத்துவிட்டதனால் தமக்கு அதனால் பெரும் துயர் ஏற்பட்டதென்றும் அவர்கள் இயம்பினர்.

ஒருமுறை சிலர் அவர்களை அணுகித் தங்களின் மத்தியில் அமர்ந்து தங்களுக்கு அறிவுரை நல்குமாறு வேண்டிக் கொண்டார்கள். அதற்கு அவர்கள், ''நானே நான்கு விஷயங்களை அறியாதிருக்கிறேன். அவற்றைத் தெரிந்து கொண்டால் நான் உங்களின் மத்தியில் அமர முடியும்'' என்று கூறினர்.

''அவை யாவை?'' என்று வினவினர் வந்தவர்கள்.

அதற்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், ''இந்தக் குழுவினர் சுவனம் செல்வர். அதனை நான் பொருட்படுத்தமாட்டேன்.

அந்தக் குழுவினர் நரகம் புகுவர். அதனையும் நான் பொருட்படுத்தப் போவதில்லை' என இறைவன் ஆதம் (அலை) அவர்களிடம் கூறியதை நினைவு கூர்ந்தேன். அவ்விரு குழுக்களில் நான் எந்தக் குழுவில் இருப்பேன் என்பதை நான் அறியவில்லை.

''அன்னையின் வயிற்றிலுள்ள கருவின்மீது இறைவன் உயிரை ஊதும்பொழுது, அந்தக் குழந்தையின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அமரர், 'இறைவனே இது நல்லதா, கெட்டதா' என்று வினவுகிறார். என் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அமரர் அக்காலை என்ன கூறினார் என்பதை நான் அறியேன்.

''உயிரைக் கவர்ந்து செல்லும் அமரர், ஒருவரின் உயிரைக் கவருமுன் இறைவனிடம் 'இஸ்லாத்துடன் அவரின் ஆன்மாவைக் கவர்ந்து வரவா, இறை மறுப்புடன் கவர்ந்து வரவா?' என்று வினவுகிறார். அக்காலை என் பற்றி இறைவன் என்ன பதில் கூறுவான் என்பதை நான் தெரிந்திருக்கவில்லை.

''குற்றவாளிகளே! இன்று நீங்கள் விலகிச் செல்லுங்கள் என மறுமை நாளில் இறைவன் கூறுவான் எனத் திருமறை இயம்புகின்றது. இதில் நான் எந்தக் குழுவைச் சேர்ந்தவன் என்பதும் நான் அறியாத ஒன்றாகும்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

இவ்வாறு கூறி அவர்கள் அடக்கத்துடன் அறிவுரை நல்க மறுத்த போதினும் அதிலேயே நல்ல அறிவுரையையும் நல்கி விட்டார்கள்.

அவர்கள் இறை ஆதரவில் கொண்ட நம்பிக்கையோ அளப்பரிய தாக இருந்தது. ஒரு நாள் அவர்களின் ஊழியர் ஹுதைபாவிடம் ஒருவர் வந்து ''நீர் கண்டவற்றில் அதிசயமான ஒன்றைக் கூறும்'' என்று கூறினார். அதற்கு ஹுதைபா, ''நான் கண்டவை அனைத்துமே எனக்கு அதிசயங்களாகவே தோன்றுகின்றன. நானும் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களும் ஒரு சமயம் மக்காவுக்குச் செல்லும் வழியில் ஓரிடத்தில் தங்கினோம். அப்பொழுது எங்களிடம் உணவுப் பொருள் சிறிதளவும் கிடையாது. என் முகத்தில் பசியின் களைப்பைக் கண்ட அவர்கள் என்னை நோக்கி, ''ஹுதைபா! பேனாவையும் காகிதத்தையும் கொண்டு வாரும்'' என்று கூறினர். அவ்வாறே நான் செய்தேன். அவர்கள் அதில் பின்வருமாறு எழுதினார்கள்:

''அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் துவங்குகின்றேன். இறைவனே! நீதான் எல்லோருக்கும் குறிக்கோள். நான் உன்னைப் பாராட்டுகிறேன். உன் அன்பிற்கு நன்றி செலுத்துகிறேன். உன்னை எப்போதும் எண்ணு

கிறேன். இந்த மூன்றுக்கும் நான் பொறுப்பாளி. இவற்றை நான் முறைப்படி நிறைவேற்றி வருகிறேன். நான் பசியுடனிருக்கிறேன். நேரத்தை வீணாக்குகிறேன். துணியின்றி அவதிப்படுகிறேன். இந்த மூன்றுக்கும் நீ பொறுப்பாளியாகும். உன் உதவியை நான் எதிர் பார்க்கிறேன். உன்னைத் தவிர்த்து வேறு எவரையும் என்னால் பாராட்ட முடியாது.''

அதன்பின் அக்கடிதத்தை மடித்து என்னிடம் கொடுத்து, ''இதைக் கொண்டுபோய் வழியில் எதிர்ப்படும் முதல் மனிதரிடம் கொடுத்துவிடு'' என்றனர்.

அவ்விதமே நான் அதனை எடுத்துச் சென்றக்கால், வழியில் எதிர்ப்பட்ட ஒருவரிடம் அதனைக் கொடுத்தேன். அதனைப் பெற்று அவர் படித்தார். அவருடைய கண்கள் கண்ணீரைச் சிந்தின. அதன்பின் அவர் என்னை நோக்கி, ''இதை எழுதியவர் எங்கே உள்ளார்?'' என்று வினவினார். ''அண்மையிலுள்ள பாழடைந்த பள்ளிவாசலில் உள்ளார்'' என்று நான் கூறினேன். உடனே அவர் என்னிடம் ஒரு பணப்பையைத் தந்து, ''இதனை அவரிடம் கொடும்'' என்றார். அதில் 1,500 வெள்ளிக்காசுகள் இருந்தன.

அதனைப் பெற்று நான் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களிடம் வந்து நடந்தவற்றைக் கூறினேன். அப்பணப்பையை அப்படியே வையும். அதனைத் தந்தவர் இங்கு விரைவில் வந்து சேர்வார்'' என்று கூறினர்.

அவ்வாறே அவர் சற்று நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார். தாம் ஒரு கிறிஸ்தவர் என்று கூறி, தாம் இஸ்லாத்தைத் தழுவ வந்திருப்ப தாகவும் எடுத்துரைத்து, அக்கணமே அவர்களின் கரம்பற்றி இஸ்லாத்தைத் தழுவினார்.

மற்றொரு தடவை அவர்கள் தம் தோழர்கள் சிலருடன் பயணத்தை மேற்கொண்ட பொழுது கடலோரத்தில் ஓரிடத்தை அடைந்து, அங்கேயே இரவைக் கழிக்க எண்ணினர். அங்குமிங்கும் கிடந்த சுள்ளி களைப் பொறுக்கி வந்து நெருப்பு மூட்டி அதில் ரொட்டி சுட்டார்கள். அப்பொழுது அவர்களில் ஒருவர் ''ரொட்டி சுட்டாகி விட்டது. இத்துடன் இறைச்சியும் இருந்தால் நன்றாயிருக்கும்'' என்று கூறினர். அப்பொழுது இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் ''இறைவன் அதையும் அளிக்கப் போதுமானவன்'' என்று கூறினர்.

அவர்கள் இவ்வாறு கூறி வாய் மூடு முன் ஒரு சிங்கம் ஓர் ஒட்டகத்தைத் துரத்திக் கொண்டு வந்தது. ஒட்டகம் அப்பயணக்

குழுவினரின் அருகில் வந்ததும் சிங்கம் அந்த ஒட்டகத்தின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அதனை வீழ்த்தி அதன் கழுத்தை நெறித்தது.

அப்பொழுது இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் தம் பயணக் கூட்டாளிகளை நோக்கி, ''இறைவன் அந்த ஒட்டகத்தை உங்களுக்காகவே அனுப்பியுள்ளான். அதனை அறுத்து உண்ணுங்கள்'' என்றனர். அவ்விதமே அவர்கள் செய்தார்கள். அவர்கள் உண்பதை அந்தச் சிங்கம் சற்றுத் தொலைவில் நின்று இமை கொட்டாது பார்த்துக் கொண்டு நின்றது.

வேறொரு நாள் அவர்கள் ஒரு நதியோரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களை நோக்கி ஒரு சிங்கம் வந்து கொண்டிருந்தது. அவர்கள் ஒரு மரத்தின் அடியில் ஒதுங்கினார்கள். ஆனால் அச்சிங்கமோ நொண்டிக் கொண்டும், முனகிக் கொண்டும் அவர்களின் அருகே வந்து தன் முன்னங் கால்களில் ஒன்றை அவர்களின் மடி மீது வைத்தது. அது வீங்கி இருந்தது. அதில் சலமும் சீழும் நிரம்பி இருந்தன. அவர்கள் தம்மிடமிருந்த கத்தரியால் அதிலிருந்த சீழை வெளிப்படுத்தி அதன் மீது தம்மிடமிருந்த துணியால் ஒரு கட்டுப் போட்டார்கள். அதன்பின் அந்தச் சிங்கம் சென்று விட்டது. சற்று நேரம் கழித்து அந்தச் சிங்கம் மீண்டும் வந்தது. அதன் பின்னே அதன் குட்டிகளும் துள்ளி விளையாடிக் கொண்டு வந்தன. அந்தக் குட்டிகளிடம் இரண்டு ரொட்டித் துண்டுகள் இருந்தன. அவை அவற்றை அவர்களின் முன் கொண்டு வந்து வைத்தன. சிங்கத்தின் நன்றியுணர்வைக் கண்டு அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

இதோ கப்யான் இப்னு இப்ராஹீம் (ரஹ்) அவர்கள் தாம் கண்ட மற்றோர் அதிசயம் ஒன்றைக் கூறுகிறார்கள்.

''நான் ஒரு நள்ளிரவில் மக்காவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பிறந்த வீட்டின் பக்கல் சென்று கொண்டிருந்தேன். அங்கு ஒரு மனிதர் வீற்றிருந்து அழுது கொண்டிருந்தார். அவரை உற்று நோக்கினேன். அவர் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களைத் தவிர்த்து வேறு எவருமாக இல்லை. அவர்கள் என்னைக் கண்டதும் அங்கிருந்து எழுந்து ஒரு முடுக்கில் பதுங்கினார்கள். நான் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று 'ஸலாம்' கூறினேன். அதற்கு அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். அப்பொழுது நான் அவர்களை நோக்கி 'அபூ இஸ்ஹாக்கே! தாங்கள் ஏன் இந்த நள்ளிரவில் இந்தப் புனிதமான இடத்தில் அமர்ந்து அழுது கொண்டிருக்கிறீர்கள்?' என்று வினவினேன். அவர்கள் அதற்குச் சரியான பதில் கூறவில்லை. அந்த இடத்தை நான் மூன்று தடவை சுற்றி வந்த பொழுதும் அவர்கள் அழுது கொண்டே இருந்தார்கள். அப்பொழுது நான்

அவர்கள் அழுவதற்கான காரணத்தை மீண்டும் வினவினேன். அதற்கு அவர்கள், 'சுப்யானே!நான் உம்மிடம் ஒன்றைக் கூறுகிறேன். அதனை நீர் பிறரிடம் கூறினாலும் சரி, கூறாவிட்டாலும் சரி' என்று சொன்னார்கள். 'நல்லது; அதனைக் கூறுங்கள்' என்றேன் நான்.

அவர்கள் கூறினர்:

'சுப்யானே! எனக்கு முப்பது ஆண்டுகளாக 'ஹரீரா' அருந்த வேண்டுமென்று ஆவலாக இருந்தது. எனினும் நான் அதனை அருந்தாது தவிர்ந்து வந்தேன். நேற்றிரவு கனவொன்று கண்டேன். அதில் ஓர் அழகிய இளவல் தம் கையில் பசுமையான பளிங்குப் பாத்திரம் ஒன்றை ஏந்தி வந்தார். அதிலிருந்து ஆவி வெளிவந்து கொண்டிருந்தது. அத்துடன் ஹரீராவின் மணம் வெளிவந்து என் நாசியைத் துளைத்தது. நான் என் மனத்தை அடக்கிக் கொண்டேன்.

அந்த இளவல் என்னிடம் வந்து, 'இதனை அருந்தும்' என்று கூறினார்.

அப்பொழுது நான் 'இறைவனுக்காக நான் எதனை விட்டு விட்டேனோ அதனை நான் அருந்த மாட்டேன்' என்று கூறினேன்.

'இறைவன் அருந்தச் சொன்னாலுமா நீர் அருந்த மாட்டீர்' என்று வினவினார் அவர்.

நான் யாது பதில் கூறுவதென அறியாது விழித்தேன். எனக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

மீண்டும் அவர் என்னை நோக்கி, 'இதனை அருந்துக! இறைவன் உம் மீது அருள் பாலிப்பானாக!' என்று கூறினார்.

நான் மீண்டும் தயங்கினேன்.

அப்பொழுது அவர் என்னை நோக்கி, 'நீர் இதனை அருந்தும், அல்லாஹ் அதற்காக உம் மீது குறை காணமாட்டான். மாறாக, உம் மீது மகிழ்ச்சியுறுவான். சுவனத்தின் பாதுகாவலர் ரிள்வான் இதனை என்னிடம் தந்து 'கிள்ரே! இதனை எடுத்துச் சென்று இப்ராஹீமுக்கு அருந்தக் கொடுப்பீராக! இஃது அல்லாஹ்வின் கட்டளையாகும். அல்லாஹ் அவர் மீது பெரிதும் அன்பு கொண்டுள்ளான். அவர் மிகவும் பொறுமையாளர். தம் இச்சைகளைப் பெரிதும் கட்டுப்படுத்தியுள்ளார்' என்று கூறினார் என மொழிந்தார்.

மேலும் அவர் கூறினார். 'இப்ராஹீமே! கண்ணியமிக்க இறைவனே ஒன்றைத் தரும் பொழுது நீர் அதனை வாங்கிக் கொள்ள மறுக்கக் கூடாது.

ஒருவனுக்கு ஒரு பொருள் அவன் நாடாமலேயே வரும்பொழுது, அவன் அதனை ஏற்றுக் கொள்ள மறுப்பானாயின் பின்னர் அவன் விரும்புகின்ற பொருள் அவனுக்குக் கிடைக்காமலேயே போய்விடும் என்று வானவர்கள் பேசிக் கொள்வதை நான் கேட்டுள்ளேன்.'

அதுகேட்ட நான், 'நல்லது; தாங்கள் கூறுகின்ற வண்ணம் செய்கிறேன். என் வாணாளில் நான் இதுவரைச் செய்த எந்தப் பிரதிக் ஞையையும் முறித்ததில்லை' என்று கூறினேன்.

இதற்குள் மற்றோர் இளவல் அங்கு வந்து கிள்ருவின் கையில் ஏதோ ஒன்றைக் கொடுத்து 'இதனை இப்ராஹீமுக்கு அருந்தக் கொடுங்கள்' என்று கூறிச் சென்றார். அவ்வாறே கிள்ரு என் வாயில் அதனை வைத்து ஊட்டினார்கள். இத்துடன் கனவு கலைந்தது. நான் விழித்து விட்டேன்.

நான் உண்ட உணவின் சுவை என் நாவிலும் அதன் குங்கும நிறம் என் உதட்டிலும் இருந்தது. நான் ஜம்ஜம் கிணற்றிற்குச் சென்று நீர் எடுத்து வாயைக் கொப்பளித்து முகத்தையும் கழுவினேன். எனினும் அதன் சுவையும் நிறமும் அகலவில்லை.''

இவ்வாறு இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் கூறி முடித்ததும் நான், அவர்களை நோக்கி, ''எங்கே, தங்களின் உதடுகளைக் காட்டுங்கள். நானும் பார்க்கிறேன்'' என்று கூறினேன். அவ்விதமே அவர்கள் காட்ட அவற்றில் குங்குமத்தின் அடையாளம் இருந்தது.

அதுகண்டு பெரிதும் வியப்புற்ற நான் உணர்ச்சி மீக்குற்றவனாய் அவர்களின் இருகரங்களையும் பிடித்து உயர்த்தி ''இறைவ எம்பெரும! இந்தக் கரங்களின் பொருட்டால் நீ என் மீது பேரருள் பாலிப்பாயாக!'' என்று இறைஞ்சினேன்.

ஒருநாள் அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவனே! எனக்கு மறுமையில் உறுதுணையாக இருப்பவரை இப்பொழுதே அறிவித்துத் தா'' என்று இறைஞ்சினார்கள். அப்பொழுது அவர்களுக்குக் கனவில், ''இன்ன இடத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் ஸலாமத்துஸ் ஸௌதா என்ற பெண்ணே உனக்குச் சுவனத்தில் துணைவியாக இருப்பார்'' என்று அறிவிக்கப்பட்டது. விழித்தெழுந்ததும் அப் பெண்ணின் வரலாற்றை அறிய விரும்பி அவரைத் தேடிச் சென்றனர். இறுதியாக அவரைக் கண்டுபிடித்து அவருக்கு 'ஸலாம்' உரைத்தார்கள். 'வஅலைக்கு முஸ்ஸலாம் யா இப்ராஹீம்' என்று அவர் மறுமொழி பகர்ந்தார். அது கேட்டுத் பெரிதும் வியப்படைந்த அவர்கள் ''என் பெயர் தங்களுக்கு எவ்வாறு தெரியும்?'' என்று வினவ, ''நான் தங்களுக்குச் சுவனத்தில் துணைவியாயிருப்பேன் என்று எவன் தங்களுக்கு

அறிவித்தானோ அவன் தெரிவித்தான்'' என்று அவர் பதிலுரைத்தார். உடனே அவர்கள் அவரை நோக்கி, ''ஸலாம்துஸ் ஸெளதாவே! எனக்கு அறிவுரை நல்குவீர்களாக!'' என்று கூறினர். அதற்கு அவர், ''தாங்கள் இரவில் விழித்திருந்து இறைவனை வணங்கி வருவீர்களாக! தாங்கள் இறைவனின் அன்பைப் பெற விரும்பின் உறக்கத்தைத் தங்களுக்கு ஹராமாக்கிக் கொள்வீர்களாக!'' என மொழிந்தார்.

ஆம்; அவர்கள் அவ்வாறே செய்து வந்தார்கள். அவர்கள் இரவெல்லாம் விழித்திருந்து இறைவனை வணங்கிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட ஒருவர், ''தங்களால் இவ்வாறு வணக்கம் நிகழ்த்த எவ்வாறு இயலுகின்றது'' என்று வினவிய பொழுது, ''என் கண்கள் அழுது கண்ணீர் வடிக்கும்பொழுது எவ்வாறு எனக்கு உறக்கம் வரும்'' என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்.

மற்றோர் இரவு அவர்கள் போர்வையைப் போர்த்திக் கொண்டு வைகறை வரை படுத்திருந்தனர். வைகறைத் தொழுகைக்கான அழைப்பொலி செவிப்பட்டதும் அவர்கள் விருட்டென எழுந்து தொழத் துவங்கினார்கள். அது கண்டு அவர்களின் தோழர்களில் ஒருவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. அவர்கள் தொழுது முடிந்ததும், அவர்களை அணுகி, ''இரவு முழுவதும் படுத்துறங்கிய தாங்கள் 'உளூ'ச் செய்யாமல் தொழுதீர்களே. அது எவ்வாறு சரியாகும்'' என்று வினவினர்.

அதுகேட்ட அவர்கள் ''யார் தூங்கியது? நானா தூங்கினேன். சற்று நேரம் சுவன இன்பத்தில் திளைத்துக் கொண்டும், சற்று நேரம் நரகத் துன்பத்தில் உழன்று கொண்டுமல்லவோ இருந்தேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

ஒரு தடவை அவர்கள் மலைமீது சென்று தனித்திருந்து இறைவனை வணங்கி, வழுத்திவிட்டுக் கீழே இறங்கி வரும் பொழுது அவர்களைச் சந்தித்த ஒருவர் ''எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''இறைநேசத்திலிருந்து வருகிறேன்'' என்று பதில் மொழிந்தார்கள்.

அவர்களின் நெடுநாள் அவா கஃபாவைத் தாம் மட்டும் தனியாக இடம் சுற்றி வந்து இறைவனிடம் இறைஞ்ச வேண்டும் என்பதாக இருந்தது. அத்தகைய வாய்ப்பினைப் பெறுவதற்காக அவர்கள் மக்காவில் நெடுநாட்கள் காத்திருந்தனர். ஓரிரவு கடுமையான மழை பெய்தபொழுது, கஃபாவில் எவருமில்லாததைக் கண்ட அவர்கள் ஓடோடிச் சென்று அதனை இடம் சுற்றி வருங்கால், ''இறைவனே! நான் என்றைக்கும் உனக்கு மாறு செய்யக் கூடாது. அத்தகைய மனப்பக்குவத்தை எனக்கு அருள்வாயாக!'' என்று இறைஞ்சினர்.

அப்பொழுது, ''இப்ராஹீமே! நீர் மட்டுமா இவ்வாறு இறைஞ்சுகின்றீர். உண்மையான முஸ்லிம்கள் அனைவரும் இவ்வாறுதான் இறைஞ்சுகின்றார்கள். இந்தத் தன்மையை நான் எல்லோருக்கும் நல்கிவிடின் நான் என் அருட்கொடைகளை எவருக்கு நல்குவது? எவரை நான் மன்னிப்பது? குற்றம் செய்தவர்களைத் தாமே மன்னிக்க இயலும்'' என்று அசரீரி ஒன்று முழங்கியது. அதுகேட்ட அவர்கள் ''இறைவனே! என் பவம் பொருத்தருள்வாயாக!'' என்று இறைஞ்சினர். அப்பொழுது ''இப்ராஹீமே!நீர் உம்மைத் தவிர்த்து ஏனையோருக்காக என்னிடம் இறைஞ்சும். நீரே உம்மைப் பற்றி என்னிடம் இறைஞ்சுவதை விட பிறர் உமக்காக என்னிடம் இறைஞ்சும் வண்ணம் நீர் அவர்களுடன் நடந்துகொள்வீராக!'' என்று மீண்டும் அசரீரி முழங்கியதைக் கேட்டதும் அவர்கள் அதிர்ந்து போய்விட்டார்கள்.

இதுமுதல் பிறர் தமக்காக இறைஞ்சும் வண்ணம் அறவாழ்வு வாழ்ந்து, மறுமைக்கான ஆயத்தங்களை அவர்கள் செய்து கொண்டிருந்த பொழுது ஒருவர் அவர்களிடம் வந்த காலை,''உமக்குக் கனவில் ஒரு வெள்ளி நாணயம் கிடைக்கிறது. நனவில் ஒரு பொன் நாணயம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளும். இவற்றில் நீர் எதனை அதிகம் விரும்புவீர்'' என்று வினவினர். ''நனவில் கிடைக்கும் பொன் நாணயத்தையே'' என்று அவர் பதிலுரைத்தார். அது கேட்ட அவர்கள், ''நீர் பொய் சொல்கின்றீர். ஏனெனில் உலக வாழ்வே கனவாகும். மறுமை வாழ்வே நனவாகும். ஆனால் நீர் உலக வாழ்வில் கிடைப்பதையே அதிகம் விரும்புகின்றீர்'' என்று கூறினர்.

ஒருநாள் அவர்கள் தம் தோழர்களை நோக்கி, ''இன்று உங்களுக்கு எச்செயல் புரிவது மிகவும் வருத்தம் தருகின்றதோ அதுவே மறுமை நாளில் நிறுக்கப்படும் பொழுது எல்லாச் செயல்களையும் விடக் கனமானதாக இருக்கும். உலகில் கூட எளிய செயல் புரிபவனை விட, அரிய செயல் புரிபவனே பெரும் பரிசு பெறுவான்'' என்று அருளுரை பகர்ந்தார்கள்.

அவர்களின் ஒரே அச்சம் இறைவன் தம்முடைய வணக்கத்தை ஏற்றுக் கொள்ளாதிருக்கக் கூடாது என்பதாகவே இருந்தது. எனவே அவர்கள் தொழுது முடிந்ததும் தங்களின் கைகளால் தங்களின் முகத்தை மூடிக் கொள்வார்கள். இதைப் பல நாட்களாகக் கவனித்துக் கொண்டிருந்த ஒருவர் ஒருநாள் அவர்களை அணுகி, அதற்கான காரணத்தை வினவிய பொழுது, ''என் தொழுகையை இறைவன் ஏற்றுக் கொள்ளாது என் முகத்திலேயே திரும்ப அடித்துவிடக் கூடாது என்று அஞ்சி அவ்விதம் செய்கிறேன்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

ஒருநாள் முஃதஸிம் என்பவர் அவர்களிடம் வந்து, ''தங்களுடைய தொழில் யாது?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், நான் இம்மை

வாழ்வை அதனைத் தேடுபவர்களுக்கு விட்டு விட்டேன். மறுமை வாழ்வை அதனைத் தேடுபவர்களுக்கு விட்டு விட்டேன். நானோ இவ்வுலக வாழ்வில் அல்லாஹ்வைத் தியானிப்பதையே என் தொழிலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். மறுமை வாழ்வில் அல்லாஹ்வின் 'லிகா' என்னும் தரிசனத்தையே நான் எனக்கெனத் தேர்ந்தெடுத்துள்ளேன்'' என்று கூறினர்.

சற்று நேரம் கழித்து மற்றொருவர் வந்து இதே கேள்வியை அவர்களிடம் கேட்ட பொழுது ''அல்லாஹ்வுடைய ஊழியர்களுக்கு எத்தொழிலும் விருப்பமிருக்காது என்பதை நீர் அறிய மாட்டீரோ?'' என்று பதிலுரைத்தார்கள்.

அவர்கள் ஆன்மீகத் துறையில் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விரைவில் ஆன்மீக உச்சத்தை எய்தி நின்றார்கள். இப்பொழுது அவர்கள் இம்மையையும் விரும்பவில்லை; மறுமையையும் விரும்பவில்லை. அவர்கள் விரும்பியதெல்லாம் இறைவனையே, இறைவனையே அன்றி வேறில்லை.

ஒருநாள் அவர்கள் தம் தோழர்களை நோக்கி, ''இறையருளின் வாயல் உங்களுக்குத் திறக்கப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், (1) இம்மை, மறுமை ஆகியவற்றின் அரசாதிபத்தியம் உங்களுக்கு அளிக்கப்பட்ட போதினும் நீங்கள் அது கண்டு மகிழ்ச்சியுறக் கூடாது. (2) இம்மை, மறுமை ஆகியவற்றின் அரசாதிபத்தியம் உங்களுக்கு இருந்து அது உங்களிடமிருந்து பறிக்கப்பட்ட போதினும் நீங்கள் அதற்காக அணு வளவும் வருந்தக்கூடாது (3) உங்களை எவரேனும் புகழ்ந்துரைப்பினும் அல்லது உங்களுக்கு எவரேனும் அன்பளிப்பு வழங்கினும் நீங்கள் மகிழ்ச்சியுறக் கூடாது'' என்று அறிவுரை பகர்ந்தனர்.

மேலும் அவர்கள் கூறினர்: ''நீங்கள் பெற்றிருப்பவை பற்றி மகிழ்ச்சியுறின் நீங்கள் இன்னும் அதிகமாக ஈட்ட வேண்டுமென்று பேராசையுடையவர்களாகி விடுவீர்கள். நீங்கள் இழந்தவை பற்றி வருத்தமுறின் அது இறைவன் உங்களுக்கு விட்ட விதியைப் பற்றி அதிருப்தியுறுவதாகும். அதற்காக நீங்கள் தண்டிக்கப் பெறுவீர்கள். புகழுரை கேட்டு நீங்கள் பூரிப்படையின் அது உங்களின் இறை வணக்கத்தைப் பாழாக்கி விடும்.''

மற்றொரு நாள் அவர்கள் ஒருவரை நோக்கி, ''நீர் இறைநேசர் குழுவில் சேர்கின்றீரா?'' என்று வினவினர். அவர் 'சரி' என்றார். ''அவ்விதமாயின் நீர் இவ்வுலகத்தின் மீதும் அவ்வுலகத்தின் மீதும் ஆசையுறாதீர். இறைவனையே முன்னோக்கியவனாய் இரும். அல்லாஹ் அல்லாத எதிலும் உம் கவனம் செல்ல வேண்டாம். நேரிய வழியில் ஈட்டப் பெற்ற உணவையே உண்ணும். நீர் இரவில் நின்று வணங்காதிருப்பினும்,

பகலில் பசித்திருந்து நோன்பு நோற்காதிருப்பினும் சரியே நீர் இறை நேசருடன் சேரத் தகுதிபெற்று விடுவீர்'' என்று கூறினர்.

''மறுமையில் மனிதன் அடையும் மகத்தான பேறு சுவன வாழ்வு தான்'' என்று சில ஆத்மீக ஞானிகள் கூறியதைச் செவியுற்ற அவர்கள், ''இல்லை, இல்லை. இறைவனின் திருக்காட்சியைக் கணமேனும் தவறாது கண்டுகளிக்கும் பேரின்ப நிலைதான்'' என்று மறுத்துரைத் தார்கள். ''அதனை எய்தப் பெறவே ஒவ்வொரு மனிதனும் முயல வேண்டும். அதுவே அவனின் இறுதிப் பெரும் லட்சியமாக இருக்க வேண்டும்'' என்று அவர்கள் விளக்கம் பகர்ந்தார்கள்.

அவர்களின் வேணவா இறைவன் தம்மைத் தன்னுடைய அன்பிற்குரிய நல்லடியானாக ஏற்று ஆட்கொள்ள வேண்டும் என்ப தாகவே இருந்தது. ஒரு நாள் அவர்கள் குளிப்பதற்காகக் குளியலறை ஒன்றிற்குச் சென்ற பொழுது, அக்குளியலறைக் காவலன் அவர்களின் கிழிந்த ஆடையைக் கண்டு அவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்து விட்டான். அப்பொழுது அவர்கள் ''ஷைத்தானுடைய வீட்டிற்குள்ளேயே கூலி கொடாமல் செல்ல இயலாதெனின் ரஹ்மானாகிய இறைவனின் இல்லத்திற்குள் எவ்வாறு நற்செயல் இல்லாமல் செல்ல இயலும்?'' என்று தமக்குள் கூறிக் கொண்டார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் ஓர் அடிமையை விலைக்கு வாங்கினார்கள். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''உன் பெயர் என்ன?'' என்று வினவினார்கள். அதற்கு அவன் ''உங்களுக்கு விருப்பமான பெயரைக் கொண்டு என்னை அழையுங்கள்'' என்றான். பின்னர் ''நீ என்ன உணவு உண்பாய்?'' என்று அவர்கள் வினவினார்கள். ''தாங்கள் தரும் உணவை உண்பேன்'' என்றான் அவன். ''என்ன உடை அணிவாய்?'' என்று மறுவினா விடுத்தார்கள் அவர்கள். ''தாங்கள் தரும் உடையை அணிந்து கொள்வேன்'' என்றான் அவன். அதுகேட்ட அவர்கள் ''என்ன வேலை செய்வாய்'' என்று வினவினர். ''தாங்கள் இட்ட பணியைச் செய்வேன்'' என்று விடையிறுத்தான் அவன். ''என்னிடமிருந்து ஏதேனும் விரும்பு கின்றாயா?'' என்று அவர்கள் மறுவினா விடுத்தார்கள். ''ஓர் அடிமைக்குத் தன் எசமானனிடமிருந்து என்ன விருப்பம் உள்ளது? எசமானனின் விருப்பமே என் விருப்பம்' என்று பதில் கூறினான் அவன். அதுகேட்ட அவர்கள் கண்ணீர் வடித்தவர்களாய் தம்மை நோக்கி, ''அல்லாஹ்வுடைய அடிமையாகிய நீ ஒரு கணமேனும் இவன் போன்று இறைவன் முன்னிலையில் நின்றதுண்டா?'' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதார்கள். அதன் காரணமாக அவர்கள் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தனர். மயக்கம் தெளிந்து அவர்கள் எழுந்ததும் அவர்கள் அவ்வடிமையை விடுதலை செய்து விட்டார்கள்.

இக்காலை அவர்கள் ஒரு கனவு கண்டனர். ஒளி உருவினர் ஒருவர் ஏதோ ஒன்றை எழுதிக் கொண்டிருப்பதைக் கண்டு, ''நீர் என்ன எழுதுகின்றீர்?'' என்று வினவினர். அதற்கு 'அவ்வானவர் ''இறைவனின் நண்பர்களின் பெயர்களை எழுதிக் கொண்டுள்ளேன்'' என்று விடையிறுத்தார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''அதில் என் பெயரும் இடம் பெற்றிருக்கிறதா?'' என்று வினவினர். அதற்கு அவர் 'இல்லை' என்று பதில் கூறினார்.

''நான் இறைவனின் நண்பன் ஆகாவிடினும் அவனுடைய நண்பர்களுக்கு நண்பன் ஆயிற்றே'' என்று ஏக்கத்துடன் அவர்கள் கூறினர். அதற்கு அவ்வமரர் யாதொரு பதிலும் கூறவில்லை.

அடுத்த நாள் இரவு மீண்டும் அதே கனவை அவர்கள் கண்டார்கள். அவ்வானவர் எழுதிக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவரிடம் ஓடோடிச்சென்று ''அதில் என் பெயரும் இடம் பெற்றிருக்கிறதா?'' என்று ஏக்கத்துடன் வினவினர். ''ஆம்; இதில் உம் பெயரை முதலில் பொறிக்குமாறு இறை ஆணை வந்துள்ளது. அவ்விதமே செய்துவிட்டேன்'' என்று கூறினார். அதுகேட்டு அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியுற்றார்கள். ''இறைவனே! நீ எனக்களித்திருக்கும் நேசத்திற்கும், உன்னை தியானிப்பதில் நான் அடையும் மகிழ்ச்சிக்கும் எதிரில் சுவனம் ஒரு கொசுவின் இறக்கைக்குச் சமமாகக் கூட எனக்குத் தென்படவில்லை'' எறு கூறி ஆனந்தப் பரவசமுற்றார்கள்.

இத்தகைய மாண்பாளரை, இத்தகைய மாண்பாளரின் மாண்பினை மாண்பாளர்களேயன்றி மற்றவர்கள் அறியவில்லை. ஒரு தடவை இவர்கள் இமாமுல் அஃலம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களைக் காணச் சென்ற பொழுது, அவர்கள் இவர்களை எழுந்து நின்று வரவேற்று, ''நம் தலைவர் வந்திருக்கிறார்கள். நம் மார்க்கத்தின் மகத்தான சின்னம் வந்திருக்கிறார்கள்'' என்று கூறித் தம் மாணவர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

இதனை உணராத அவர்களின் மாணவர்கள் ''இமாம் அவர்களே! அவர்களுக்கு இத்தகு மாண்பு எவ்வாறு கிடைத்தது?'' என்று வினவிய பொழுது, ''ஓயா வணக்கத்தினாலாகும். நாம் எல்லாம் நம்முடைய அலுவல்களில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களோ எப்பொழுது பார்த்தாலும் இறைவணக்கத்திலேயே, இறை ஊழியத்திலேயே ஈடுபட்டிருப்பார்கள்'' என்று மறுமொழி பகர்ந்தனர் இமாமுல் அஃலம்.

உண்மையில் இமாமும் அஃலம் அவர்கள் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களுக்குச் சிறப்புச் செய்ததற்கான முக்கிய காரணம்,

அவர்களின் மாபெரும் வணக்கம் மட்டுமின்றி அவர்களின் மாபெரும் துறவுமாகும்.

ஆனால் அவர்களின் மாண்பினை அறியாது, பாமர மக்கள் அவர்களை இழிவுக் கண்களுடன் நோக்கிய பொழுது, அவர்களை மேன்மைப்படுத்த அவர்கள் மூலம் இறைவன் சில அற்புதங்களை வெளிப்படுத்தினான். ஒருநாள் அவர்கள் காட்டிலிருந்து விறகு சேகரித்து வந்து ஓரிடத்தில் வைத்து விற்றுக் கொண்டிருந்த பொழுது, ''பல்க் நாட்டு அரசாதிபத்தியத்தை உதறித் தள்ளி வந்ததற்குக் கண்ட பலன் இதுதானோ?'' என்று ஒருவர் அவர்களை எள்ளி நகையாடிய பொழுது, அவர்கள் ''இதோ பாரும்!'' என்று கூறித் தம்முன் இருந்த விறகுகளைத் தம் கரங்களால் தடவினர். என்ன வியப்பு! அவை அனைத்தும் தங்கப் பாளங்களாக மாறித் தகதகவென்று மின்னின.

மற்றொரு தடவை அவர்கள் திஜ்லா நதி ஓரத்தில் அமர்ந்து தங்களின் கிழிந்த உடையொன்றைத் தைத்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஒருவர், முன்னவர் போன்று அதே வினாவை அவர்களிடம் நையாண்டியாக வினவிய பொழுது, அவர்கள் தம் கையிலிருந்த ஊசியை அந்நதியில் வீசி எறிந்து விட்டு தம் கையால் சைக்கினை செய்தனர். அடுத்த கணம் ஆயிரக் கணக்கான மீன்கள் தம் வாயிலே தங்க ஊசியுடன் வந்து ''என் வாயிலுள்ளதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறுமாப் போன்று, தங்களின் தலையைத் தண்ணீருக்குமேல் நீட்டின. அப்பொழுது அவர்கள் ''இவையெல்லாம் எனக்கு வேண்டாம். நான் வீசி எறிந்த ஊசிதான் எனக்கு வேண்டும்'' என்று கூற அடுத்த கணம் ஒரு சிறுமீன் அதனைத் தேடி எடுத்துத் தன் வாயிலே கௌவிக் கொண்டு வந்து அவர்களின் முன் போட்டது. இதன்பின் அவர்கள் சைக்கினை செய்ய அம்மீன்கள் அனைத்தும் திரும்பி விட்டன. அப்பொழுது அவர்கள் தம்மை நையாண்டி பண்ணியவரை நோக்கி, 'பல்கின் அரசைத் துறந்து வந்த பின் இறைவன் எனக்கு அருளிய அளவற்ற பெருநற்பேறுகளில் இது ஒரு சின்னஞ்சிறு நற்பேறு' என்று கூறினர்.

வேறொரு தடவை அவர்கள் ஒரு கிணற்றின் அருகே சென்று தண்ணீர் எடுக்க வாளியைக் கிணற்றிலே விட்ட பொழுது, வாளி நிறையப் பொன்னாக வந்தது. அவற்றை எடுத்துக் கிணற்றிலேயே எறிந்து விட்டு, ''இறைவனே! உன்னுடைய அளப்பரும் கருவூலத்தை நீ என்னிடம் காட்டுகின்றாய். அவற்றால் எல்லாம் நான் மயங்கிவிட மாட்டேன். எனக்கு இப்பொழுது 'உளூ'ச் செய்ய தண்ணீர்தான் வேண்டும். அதைத் தா'' என்று இறைஞ்சி வாளியைக் கிணற்றிலே மீண்டும் விட்டார்கள். இப்பொழுது வாளி நிறையத் தண்ணீர் வந்தது.

ஒரு தடவை அவர்களும் மற்றொரு பெரியாரும் ஒரு மலை மீதமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த பொழுது ''அல்லாஹ் உவந்த ஆண்களின் அடையாளம் யாது?'' என்று அப்பெரியார் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களை வினவினார். அதற்கு அவர்கள் ''அவர்கள் ஒரு மலையை நோக்கி, நட என்று கூறின் அது நடக்கும்'' என்று கூறினர். அவர்கள் இவ்வாறு கூறி வாய் மூடு முன் அம்மலை நடக்கத் துவங்கியது. அப்பொழுது அவர்கள் அந்த மலையை நோக்கி, ''நான் உன்னை நடக்குமாறு கூறவில்லையே. ஓர் உவமானத்திற்காகத்தானே அவ்விதம் கூறினேன்'' என்று சொன்ன பொழுது அம்மலை நின்றது.

மற்றொரு தடவை அவர்கள் ஒரு படகில் சென்று கொண்டிருக்கும் பொழுது, பெரும் புயல் ஏற்பட்டு படகு கவிழ்ந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்டு மக்கள் கதி கலங்கிக் கதறியழுத காலை, அவர்கள் திருக்குர்ஆனைக் கையிலேந்தி ''இறைவனே! உன்னுடைய திருமறை எங்களின் கையில் இருக்கும் பொழுது எங்களைக் கடலில் மூழ்கடித்து விடுவாயா?'' என்று கூறினர். அடுத்த கணம் கடலின் அமளி அடங்கி அனைவரும் நலமாகக் கரை சேர்ந்தார்கள்.

மற்றொரு தடவை இதே போன்ற நிலை ஏற்பட்ட பொழுது ''மக்களே! அஞ்சற்க! உங்களுடன் இப்ராஹீம் இப்னு அத்ஹம் இருக்கிறார்'' என்று அசரீரி முழங்கியது. மறுகணம் புயல் ஓய்ந்தது.

ஒரு தடவை அவர்கள் ஒரு துறவியைச் சந்தித்தார்கள். அவர் தம் தவ வலிமையைக் காட்ட விண்ணை நோக்கி ஒரு சாடை செய்தார். அவரின் முன் ஓர் உணவுத் தட்டு வந்து இறங்கியது. அவர் மற்றொரு சாடை செய்ய இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களின் முன் மற்றோர் உணவுத் தட்டு வந்து இறங்கியது. ஆனால் அதில் தம் முன் வந்த உணவை விட மேலான உணவு இருப்பதைக் கண்டதும் அத்துறவிக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கும் திடுக்கத்திற்கும் அளவில்லை. அப்பொழுது அசரீரி ஒன்று, ''எவர் எவர் நம் பாதையில் எதை எதைத் தியாகம் செய்துவிட்டு வந்துள்ளார்களோ, அதற்குத் தக்கபடி நாம் அவர்களுக்கு அன்பளிப்பு வழங்குவோம். அவர் பல்க் நாட்டின் அரசாதிபத்தியத்தையே துறந்து வந்தவராயிற்றே'' என்று முழங்கியது.

ஆம்; அதன் காரணமாகவும் அவர்களின் மதிப்பு மற்றவரை விடச் சிறப்புற்று விளங்கியது.

எனவேதான், ''தங்களின் காலத்தில் மார்க்கத்தில் மிகவும் பேணுதலாக இருந்தவர்கள் யார்?'' என்று ஜுனைத் (ரஹ்) அவர்கள், ஸரீ அஸ்ஸகதீ (ரஹ்) அவர்களிடம் வினவிய பொழுது ''குதைபத்துல்

மருஸியீ, யூசுப் இப்னு ஸபாத், சல்மானுல் கவாஸ், இப்ராஹீம் இப்னு அத்ஹம் ஆகிய நால்வரேயாவர்'' என்று பதிலுரைத்தார்கள் அவர்கள்.

இனிமையாகப் பேசுவதில் அவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு நிகரானவர்கள் என்றும் அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களின் காலத்தில் அவர்கள் வாழ்ந்திருப்பின், அவர்கள் சிறப்புமிகு ஸஹாபாக்களில் ஒருவராகத் திகழ்ந்திருப்பர் என்றும் அவர்கள் மீது புகழ்மாலை தொடுத்தார்கள் ஸுஃப்யான் தௌரீ.

ஒருநாள் அவர்களை இப்னு ஜிலான் அவர்கள் கண்டதும் இறைவனுக்குச் சிரம் தாழ்த்தி வணங்கி நன்றி செலுத்தினார்கள். ''ஏன் என்னைக் கண்டதும் இவ்வாறு செய்தீர்கள்?'' என்று இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் அவர்களை வினவியபோது, ''தங்களைப் போன்ற ஒரு மாண்பாளரை இறைவன் படைத்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்தினேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

இவ்வாறு மாண்பாளர்களால் மதிக்கப்பட்ட மாண்பாளர் எப்பொழுது எங்கு இறப்பெய்தினார் என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. மார்க்கப் போரில் கலந்து கொண்ட அவர்கள் கிரேக்க நாடு புறப்பட்ட கப்பற்படையில் சேர்ந்தார்களென்றும் அப்பொழுதுதான் அவர்களுக்கு இறப்பு அண்மியதென்றும் அவர்கள் கான்ஸ்டாண்டிநோப்பிளிலிருந்த ஆக்கின் என்ற கோட்டையில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் என்று சிலரும், சிரியாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் என்று வேறு சிலரும், லூத் (அலை) அவர்களின் அடக்கவிடத்தின் அண்மையில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள் என்று வேறு சிலரும், ஒரு கடற்கரையில் அடங்கப் பெற்றிருக்கிறார்கள் என்று மற்றும் சிலரும் கூறுகின்றனர்.

அவர்கள் இறந்த காலம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஹிஜ்ரி 152 ஆம் ஆண்டு என்று சிலரும், 161 ஆம் ஆண்டு என்று மற்றும் சிலரும், 162 ஆம் ஆண்டு என்று வேறு சிலரும் கூறுகிறார்கள்.

அவர்கள் இறந்ததன்பின் அவர்களை ஒருவர் கனவில் கண்டு அவர்களின் நிலைமை பற்றி விசாரித்த பொழுது, ''தம்மை இறைவன் 'பாபுஷ் ஷம்ஸ்' என்ற இடத்தில் குடியேற்றி வைத்திருப்பதாகவும் அங்குக் குடிவாழும் இறைநேசச் செல்வரின் ஆன்மாக்கள் இறைவனை நாளொன்றுக்கு எழுபது தடவை காணும் பேற்றினைப் பெற்றுள்ளன'' என்றும் அவர்கள் பதிலிறுத்ததாகக் கூறப்படுகிறது.

## 11. தாவூத் தாயீ (ரஹ்)

**கன்னத்தின் அழகதுவும் அழியலாச்சு**
**கண்களுடை ஒளியதுவும் ஒழியலாச்சு**

என்று ஒப்பாரி வைத்துப் பாடிய வண்ணம் கூஃபா நகரின் தெருக்களிலே ஒரு பெண் சென்று கொண்டிருந்தாள். அவளின் இந்த ஒப்பாரிப் பாட்டு, இல்லத்தில் வீற்றிருந்த ஒருவரின் செவிப்பட்டதும் அவரின் உள்ளம் முழுவதையும் ஓர் இனம் தெரியாத கவலை ஆட்கொள்ளத் துவங்கியது. 'என்ன உலகம் இது! இதிலே எது நிலைத்து நிற்கப் போகின்றது? இந்த அநித்திய உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டு, இது அழியாதது என்று எண்ணிக் கொண்டுள்ளோமே. இது எத்துணை அறிவீனம்!' என்று எண்ணினார். எண்ணிய அடுத்த கணம் அவர் தம் ஆசிரியப் பெருந்தகை அபூஹனீஃபா (ரஹ்) அவர்களின் இல்லத்திற்குத் தலைவிரி கோலமாய் வந்து சேர்ந்தார்.

அவரைக் கண்டதும் அபூஹனீஃபா (ரஹ்) அவர்கள், ''தாவூத் தாயீ! ஏன் இவ்வித அலங்கோல நிலை? தங்களுக்கு யாது நிகழ்வுற்றது?'' எனறு கனிவோடும் பரிவோடும் வினவினார்கள்.

அப்பொழுது தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள், நடந்த செய்தியை அபூஹனீஃபா (ரஹ்) அவர்களிடம் எடுத்துரைத்து, ''எனக்கு உலகமே கசந்து விட்டது. ஏதோ இனம் தெரியாத ஒன்று என் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. அதற்கான காரணமும் எனக்கு விளங்கவில்லை'' என்று கூறினார்.

அது கேட்ட இமாம் அவர்கள், ''தாவூத் தாயீ! சிறிது காலம் மனிதத் தொடர்பை விட்டு விலகி இரும்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

அவ்விதமே தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் மனிதர்களுடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளாது தம் இல்லத்தின் ஓர் அறையில் கதவைத் தாளிட்டுக் கொண்டு நெடுங்காலம் இருந்து வந்தார்கள்.

இதைப் பற்றிக் கேள்வியுற்ற இமாம் அவர்கள் ஒரு நாள் தாவூத் தயீ (ரஹ்) அவர்களைக் காண்பதற்காக அவர்களின் இல்லம் சென்றனர்.

அப்பொழுது அவர்கள் தாவூத் தாயீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''தாவூத் தாயீ! தாங்கள் வீட்டில் அடைபட்டு எவருடனும் உரையாடாது இருப்பதால் தங்களின் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண இயலாது. தாங்கள் இப்பொழுது செய்ய வேண்டிய வேலை அறிஞர்களின் காலடியில் அமர்ந்து, அவர்கள் கூறும் கருத்துக்களை எவ்வித மறுப்பும் கூறாது அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்பது தான். அப்பொழுது அப்பிரச்சினைகளை அவர்களைவிட நன்முறையில் நீர் விளங்கிக் கொள்ள ஏதுவாகும்.'' என்று மொழிந்தனர்.

அடுத்த நாளிலிருந்து அவ்விதமே செய்யத் துவங்கிய தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் பற்பல அறிஞர்களின் தர்க்க சபைகளுக்கும் சென்று அவர்கள் கூறுவது அனைத்தையும் எவ்வித மறுப்போ ஐயமோ தெரிவிக்காது மௌனமாக வீற்றிருந்து பொறுமையுடன் கேட்டுக் கொண் டிருந்தார்கள். இவ்வாறு ஓராண்டு உருண்டோடியது. ''இந்த ஓராண்டு காலத்தில் தாம் மேற்கொண்ட பொறுமையானது முப்பதாண்டுகள் கடின உழைப்புச் செய்ததற்கு நிகராக இருந்தது'' என்று அவ்வோராண்டின் முடிவில் எடுத்துரைத்தனர்.

இதன் பின்னர் அவர்கள் மார்க்க விற்பன்னர்களை அணுகி அவர்களிடம் மார்க்கக் கல்வியைப் பயின்ற பின் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களிடம் வந்து ''இனி நான் செய்ய வேண்டியது யாது?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''நீர் கற்றவற்றைச் செயலாற்றுவீராக! ஏனெனில் கற்ற வண்ணம் செயலாற்றாதிருப்பது உயிரில்லா உடல் போன்றதேயாகும்'' என்று விடையிறுத்தார்கள்.

இதன் பின் அவர்கள் ஹபீப் ராய் என்ற பெரியாரை அணுகி அவர்களிடம் ஆன்மீகக் கல்வியை, அல்லாஹ்வை அறியும் கல்வியைப் பயின்றனர். அவ்வின்பச் சுனையில் மூழ்கித் திளைத்த அவர்களுக்குத் தாங்கள் இதுகாறும் பயின்ற நூல்களெல்லாம் எட்டுச் சுரைக்காய் போன்றிருந்தன. எனவே அவற்றையெல்லாம் எடுத்து புராத் நதியிலே வீசி எறிந்துவிட்டு அல்லும் பகலும் தனித்திருந்து இறைவனை வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

இக்காலை அவர்களுக்கு வாரிசுப் பாத்தியதை மூலம் இருபது தீனார்கள் கிடைத்தன. அவற்றில் ஆண்டிற்கு ஒரு தீனார் வீதம் செலவழித்து அவர்கள் இருபது ஆண்டுகளைக் கழித்தனர். இதைக் கண்ட ஒருவர், ''தாங்கள் தங்களுக்கேயன்றி வேறு எவருக்கும் யாதொன்றும் செலவழிக்காது வாழ்ந்து வருவது தவறு. பிறருக்கும் வழங்கி, தாமும் வாழுமாறு தான் மார்க்கம் கூறுகிறது'' என்று அவர்களிடம் எடுத்துரைத்த பொழுது ''அதற்கு நான் என் செய்வது? நான் மன அமைதியுடன்

வாழ்வதற்காக இவற்றைப் பேணுதலுடன் வைத்துச் செலவழித்து வருகிறேன். நான் சாகும் வரை இது எனக்குப் போதும் என்று கருதுகிறேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அவர்கள் தங்களுக்கே தாங்கள் விதித்துக் கொண்ட கட்டுப்பாடோ கடுமையானதாக இருந்தது. அவர்கள் மாவைக் கொண்டு ரொட்டி சுட்டுத் தின்னாது அதனைத் தண்ணீரில் கலக்கிக் குடிப்பதைக் கண்ட ஒருவர், ''ரொட்டி சுட்டு உண்ணக் கூடாதா?'' என்று வினவிய பொழுது ''ரொட்டி சுட்டு அதனைப் பிய்த்துப் பிய்த்து உண்பதற்குள்ளாக திருக்குர்ஆனின் ஐம்பது திருவசனங்களை ஓதிவிடலாமே'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

ஒரு தடவை அவர்கள் உப்பைத் தொட்டுக் கொள்ளாது ரொட்டியை மட்டும் பிய்த்துத் தின்று நோன்பு திறப்பதைக் கண்ட ஒருவர், ''உப்பைத் தொட்டுக் கொண்டு ரொட்டியைத் தின்றால் என்ன?'' என்று வினவிய பொழுது ''ஓராண்டு காலமாக என் மனமும் என்னிடம் இவ்வாறே கூறிக் கொண்டுள்ளது. அதற்கு மாறு செய்வதற்காகவே நான் இவ்வாறு செய்து கொண்டுள்ளேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். இவ்வாறு கூறிய அவர்கள் இறக்கும் வரையில் உப்பையே பயன்படுத்தியதில்லை.

ஒரு நாள் ஒருவர் அவர்களைக் காணச் சென்றபொழுது கையிலே ஒரு ரொட்டித் துண்டை வைத்துக் கொண்டு அவர்கள் அழுது கொண்டிருப்பதைக் கண்டதும் ''தங்களுக்கு யாது நிகழ்ந்துவிட்டது? ஏன் அழுது கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவினார் அவர். அதற்கு அவர்கள், ''நான் இந்த ரொட்டித் துண்டை உண்ண எண்ணினேன். ஆனால் அது 'ஹலால்' ஆனதா, அல்லவா என்று எனக்கு விளங்கவில்லை. எனவே எனக்கு அழுகை வந்துவிட்டது'' என்று அவர்கள் கூறினார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் கடைத்தெரு சென்று உயர்தரமான ரொட்டியும் காடியும் வாங்கி வந்தனர். அவற்றை அவர்கள் தம் முன் வைத்துக் கொண்டு ''நஃப்ஸே! நீ இவற்றை உண்பாயாயின் இறுதித் தீர்ப்பு நாளின் போது இறைவனின் திருமுன் இவற்றிற்கான கணக்கைக் கொடுக்க வேண்டும்'' என்று கூறி அவற்றை ஒதுக்கி வைத்து விட்டுத் தம்மிடமிருந்த உப்புப் போடாது சுடப்பட்ட வரட்டு ரொட்டியை எடுத்து உண்டு பசி தீர்ந்தனர்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களின் இல்லம் வந்த பொழுது, நீர்க்குடம் ஒன்று வெயிலில் இருப்பதைக் கண்டதும் ''அதனை ஏன் வெயிலில் வைத்துள்ளீர்கள்? அதனை எடுத்து நிழலில் வைக்கக் கூடாதா?'' என்று வினவிய பொழுது ''நான் அதனை அங்கு வைத்த பொழுது நிழலாகத்தான் இருந்தது. இப்பொழுது அங்கு வெயில் வந்து

விட்டது. குளிர்ந்த நீரைக் குடிக்க வேண்டும் என்பதற்காக அதனை நிழலில் எடுத்து வைப்பதற்கு இறைவன் முன்னிலையில் எனக்கு நாணமாக உள்ளது'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

வேறொரு நாள் அவர்கள் நோய்க்காக மருந்துண்டார்கள். அப்பொழுது அவர்களிடம் ''வீட்டிற்குள் சென்று சற்று ஓய்வு கொள்ளுங்கள். அப்பொழுது தான் மருந்து நற்பயனளிக்கும்'' என்று கூறப்பட்ட பொழுது ''மறுமை நாளில் இறைவன் என்னை நோக்கி, ''நீ ஏன் உன் சுய நலத்திற்காக வேண்டி அடியெடுத்து வைத்து நடந்தாய்?'' என்று என்னிடம் கேட்பானோ என்று எனக்கு வெட்கமாக உள்ளது. எனவே உள்ளே போய் ஓய்வு கொள்ள மாட்டேன்'' என்று அவர்கள் கூறி விட்டார்கள்.

ஒரு நாள் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களின் அருமைத் திருமகனார் ஹம்மாது அவர்கள் தாவூத் தாயீ (ரஹ்) அவர்களின் இல்லத்தின் அருகே நடந்து சென்ற பொழுது, ''நீ ஒரு தடவை முள்ளங்கி வாங்கிக் கேட்டாய். வாங்கித் தந்தேன். இப்பொழுது பேரீத்தம் பழம் வாங்கித் தின்ன ஆசைப்பட்டு அதனை வாங்கிக் கேட்கிறாய். அதனை நான் ஒரு போதும் வாங்கித் தர மாட்டேன்'' என்று அவர்கள் தமக்கே தாம் கூறிக் கொண்டிருப்பது அவர்களின் செவிப்பட்டதும் ஹம்மாது அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

அவர்கள் இறுதிவரை மணமுடிக்காது துறவறத்தையே மேற்கொண்டிருந்தனர். ''தாங்கள் ஏன் மணமுடிக்கவில்லை'' என்று ஒருவர் அவர்களிடம் வினவியபொழுது, ''என்னை நம்பிவரும் ஒருத்தியை நான் ஏமாற்ற விரும்பவில்லை'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். 'எவ்வாறு' என்று அவர் மீண்டும் வினவியபொழுது, ''நான் ஒரு பெண்ணை மணமுடித்துக் கொள்ள விரும்பி மணம் பேசினாலே நான் உன் அலுவல்களைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்று கூறுவதேயாகும். நான் என்னுடைய மதக் கடமைகளையும் உலகக் கடமைகளையும் ஒன்று சேர்த்துச் செய்ய இயலாதிருக்கும் நிலையில் நான் ஒருத்தியை மண முடித்துக் கொள்வதென்பது அவளை ஏமாற்றுவது, ஏமாற்றமுறச் செய்வது என்று பொருள்படுமேயன்றி வேறில்லை'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

''நல்லது; தாங்கள் தங்களின் தாடியையாவது சிக்கறுத்துச் சீப்பால் சீவி விடக்கூடாதா?'' என்று அவர் மீண்டும் அவர்களை வினவிய பொழுது, ''அவ்விதம் செய்வது, அதனைச் செய்வதற்கு நான் ஓய்வைப் பெற்றிருக்கின்றேன் என்றல்லவோ பொருள்படும். அதன் மறு பொருள் நான் வேலையற்ற மனிதன் என்றல்லவோ ஆகும்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

ஒரு நாள் ஒருவர் அவர்களை அணுகித் தனக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டியபொழுது, ''நீ மேன்மையுற வேண்டுமானால் உலகிற்கு (இன்ப சுகத்திற்கு) விடை கொடுத்துவிடு'' என்று அவர்கள் கூறினார்கள்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களிடம் இறையச்சத்தைப் பற்றி வினவியபொழுது, ''இறையச்ச உணர்வே மிகவும் மேலானதாகும். ஒருவன் உலக ஆதாயங்களுக்காகவே செயலாற்றுவதாயிருந்தாலும், என்றாவது ஒரு நாள் அவனுடைய இறையச்ச உணர்வு அவனை நல்லவனாக்கி விடும். நல்லெண்ணத்தின் காரணமாக மூடன் அறிஞனாகவும் ஆகி விடுவான்'' என்று கூறினர்.

ஒரு தடவை புலைல் (ரஹ்) அவர்கள் அவர்களைச் சந்தித்துத் தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டியபொழுது, ''நீர் இவ்வுலகை விட்டொழித்து நோன்பு நோற்பீராக! சிங்கத்தைக் கண்டு வெருண்டோடுவது போன்று மக்களைக் கண்டு வெருண்டோடுவீராக?'' என்று இயம்பினர்.

இவ்வாறு இயம்பியதோடு மட்டுமல்லாது அவர்களும் அவ்வாறே செய்தனர். அவர்கள் மக்களோடு சேராது தனித்து ஒதுங்கியே வாழ்ந்து வந்தார்கள். இதைக் கண்ட ஒருவர், ''தாங்கள் ஏன் மக்களுடன் சேராது ஒதுங்கியே வாழ்கின்றீர்கள்?'' என்று வினவியபொழுது, ''நான் என்னை விடச் சிறியவர்களுடன் உறவாடின் அவர்கள் மார்க்க விஷயங்களில் பேணுதலாக இருக்குமாறு எனக்கு அறிவுறுத்த மாட்டார்கள். என்னைவிடப் பெரியவர்களுடன் உறவாடின் என் குறைகளை எனக்கு எடுத்துக்காட்டி என்னை இடித்துரைக்க மாட்டார்கள். எனவே அவர்களுடன் உறவாடி நான் என்ன பலன் பெறப்போகிறேன்'' என்று சலிப்போடு கூறினார்கள்.

அவர்களைப் பற்றி மஃரூபுல் கர்கி (ரஹ்) அவர்கள் கூறும் பொழுது, ''அவர்களைவிட உலகை வெறுத்த ஒருவரை நான் கண்டறியேன். உலகத்தின் கவர்ச்சிகள் அவர்களின் கண்களைக் கவரவில்லை. அவை அவர்களின் கண்களுக்கு இழிவாகத் தோற்றம் வழங்கின. எனவே மக்கள் ஆசாபாசங்களில் உழல்வதைக் கண்டு இறைவனிடம் முறையிட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களைப் பார்த்த பின், ஏன் அவர்களைப் பார்த்தோம் என்று எண்ணி வருந்துவர்'' எனக் கூறினர்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களை அணுகித் தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டியபொழுது ''பிணங்கள் உம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன'' என்று அவர்கள் கூறினர். மேலும் தமக்கு அறிவுரை கூறுமாறு அவர் வேண்ட, ''பாவ மன்னிப்புக் கோருமாறும்

பேணுதலுடன் ஒழுகுமாறும் மற்றவருக்கு அறிவுரை கூறிவிட்டுத் தாம் மட்டும் அவ்விதம் செய்யாதவன் மானை வேட்டையாடி அதன் இறைச்சியை மற்றவர்கள் சுபளீகரம் செய்து கொண்டு போக அனுமதித்தவன் போலாவான்'' என்றும் மொழிந்தனர்.

வேறொருவர் அவர்களிடம் வந்து தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டியபொழுது, ''இம்மையில் உனக்கு நன்மை ஏற்பட நீ எத்துணை அளவு பாடுபடுவாயோ, அதே போன்று மறுமையில் நற்பலன் ஏற்படப் பாடுபடுவாயாக!'' என்று கூறினர்.

பிறிதொருவர் அவர்களிடம் வந்து தமக்கு அறிவுரை வழங்கியருளு மாறு வேண்டியபொழுது ''நீர் நன்மையை நாடின் இவ்வுலகிற்கு விடை கொடுத்துவிடும். நீர் கராமாத்தை (அருளை) நாடின் அவ்வுலகிற்கு தக்பீர் கூறி விடும்.'' என்று கூறினார்கள். இங்கு அவர்கள் 'தக்பீர்' என்று கூறியது ஜனாஸா தொழுகையில் தக்பீர் சொல்லிக் கையைக் கட்டுவதையே யாகும். அதாவது அவ்வுலக ஆசையையும் விட்டொழியும் என்று அவர்கள் கூறினர். காரணம், இரண்டு ஆசைகளுமே இறைவனைக் காணவிடாது மனிதனைத் தடுக்கும் திரைகளாக இருக்கின்றன என்று அவர்கள் கருத்துக் கொண்டிருந்தார்கள்.

மற்றொருவர் அவர்களிடம் வந்து அறிவுரை வேண்டிய பொழுது, ''மனிதன் இறைவனை வணங்குவதையும் இறைவனிடம் அழுது கெஞ்சிப் பாவமன்னிப்புக் கோருவதையும், நாளைக்குச் செய்து கொள்ளலாம், நாளைக்குச் செய்து கொள்ளலாம் என்று கூறி ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு வாக்கு மாறு செய்து கொண்டு வருகிறான். அவ்வித மனிதர்களில் ஒருவனாக நீ ஆகாதே'' என்று கூறினர்.

ஒரு நாள் அவர்கள் தொழுவதற்காகப் பள்ளி நோக்கி விரைந்தோடிக் கொண்டிருப்பதைக் கண்ட ஒருவர், ''என்ன அவசரம்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''நகர வாயிலில் ஒரு பெரும் படை எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. எனவே தான் தொழுகையை விரைவில் முடித்து வர ஓடிக் கொண்டுள்ளேன்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். 'எந்தப் படை?' என்று அவர் வினவியபொழுது ''புதைகுழியிலுள்ள மக்கட் படை'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

பூரண மதியம் பொலிவுற்றுத் திகழ்ந்து கொண்டிருந்த ஓர் இரவில், அவர்கள் தங்களின் இல்லத்தின் மேல் முகட்டிற்குச் சென்று இறைவனின் அற்புதப் படைப்புகளை வெறிக்க வெறிக்கப் பார்த்த வண்ணம் அழுது கொண்டிருந்தார்கள். இவ்வாறு இருக்குங்கால் அவர்கள் தன்னுணர்வற்று அண்டை வீட்டுக்காரனின் வீட்டு முகட்டில் போய் வீழ்ந்து விட்டார்கள். தன் வீட்டு முகட்டில் ஏதோ சப்தத்தைக் கேட்டதும் திருடன் தான் என்று

எண்ணிக் கொண்டு அண்டை வீட்டுக்காரன் தன் வாளை எடுத்தவண்ணம் ஓடி வந்தபொழுது அங்கு தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் வீழ்ந்து கிடப்பதைக் கண்டதும் வியப்பு மேலிட்டவனாய், ''தங்களை இங்கு எவன் தூக்கி எறிந்தான்'' என்று வினவியபொழுது ''நான் என்னுடைய வீட்டு மேல் மாடியில் தன்னுணர்வற்ற நிலையில் வீற்றிருந்தேன். என்ன நிகழ்ந்தது என்று எனக்குத் தெரியவில்லை'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் ஓரிடத்திற்குச் சென்றபொழுது, மயக்க முற்றுக் கீழே வீழ்ந்து விட்டார்கள். உடனே அவர்கள் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அவர்களுக்கு மயக்கம் தெளிந்த பொழுது, அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டதற்கான காரணத்தை வினவப்பட்ட காலை, ''நான் முன்பு ஒரு தடவை அவ்விடத்தில் வைத்து ஒருவன் மீது புறம் பேசினேன். இன்று நான் அங்குச் சென்ற பொழுது அது என் நினைவுக்கு வந்தது. அது பற்றி இறைவன் என்னிடம் மறுமையில் விசாரிக்கும் பொழுது நான் என்ன பதிலுரைப்பேன் என்று எண்ணினேன். உடனே ஒரு திடுக்கம் என்னை ஆட்கொண்டது. நான் மயங்கிக் கீழே வீழ்ந்து விட்டேன்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் ஓர் அடக்க இடத்தின் அருகே சென்ற பொழுது அங்கு ஒரு பெண்மணி வீற்றிருந்து ''என் கண்மணி மகனே! உன் கன்னங்களில் எந்தக் கன்னத்தை புழு தின்றது என்பதை நான் அறியமாட்டேனடா'' என்று கூறிக் கதறி அழுது கொண்டிருந்தாள். அது கேட்ட அவர்கள் திடுக்குற்று அக்கணமே மயங்கிக் கீழே வீழ்ந்து விட்டார்கள்.

அவர்கள் தம்முடைய துணிகளைத் துவைக்கும் பொழுது தம் உள்ளத்தையும் இவ்வாறே அடித்து அடித்துத் துவைத்து மாசறச் செய்யக் கூடாதா என்று எண்ணி, எண்ணி ஏங்குவார்கள்.

உண்மையில் அவர்கள் தங்களின் உள்ளத்தை அவ்வாறு அடித்துத் துவைத்து மாசறச் செய்து வந்தார்கள். அதன் காரணமாக அவர்களிடம் மாண்பு குடி கொண்டிருந்தது. ஒரு நாள் அவர்கள் ஒரு நாவிதனிடம் சவரம் செய்து கொண்ட பொழுது அவனுக்கு ஒரு தீனார் கூலியாகக் கொடுத்தார்கள். அதைப்பார்த்த ஒருவர், ''என்ன இவ்வாறு பெரும் தொகையை அவனிடம் கொடுத்துக் கடப்புச் செய்து விட்டீர்கள்?'' என்று கூறிய பொழுது, ''இது மனிதத் தன்மையாகும். கடப்பல்ல. எவனிடம் மனிதத் தன்மை இல்லையோ, அவனுடைய வணக்கம் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எவனிடம் ரோஷம் இல்லையோ அவனிடம் தீன் (மார்க்கம்) இல்லை'' என்று இயம்பினார்கள்.

அவர்களின் உள்ளம் தூய்மை பெற்றிருந்ததனால், அவர்களுக்குச் சிறந்த கனவுகள் காட்சி வழங்கிக் கொண்டிருந்தன. ரமலான் திங்களில் ஓர் இரவு அவர்கள் துயிலுறுங்கால் அவர்கள் சுவனத்தைக் காணும் பேறு பெற்றனர். அழகிய ஆற்றின் ஓரத்தில் எழிலாரும் ஆரணங்குகளைக் கண்டு அவர்கள் திருக்கலிமாவை ஓதினர். அதனை அப்பெண்களும் திரும்பக் கூறினர். அப்பொழுது தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் அப்பெண் மணிகளை நோக்கி, 'தாங்கள் யார்?' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''நாங்கள் ரமலான் மாதம் நோன்பு நோற்றுத் தொழுதவர்களுக்குரிய நன்மனைவியராவோம்'' என்று பதிலிறுத்தார்கள்.

அவர்கள் ஒரு பெரிய வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். அதில் பல அறைகள் இருந்தன. அதனை அவர்கள் பழுது பார்ப்பதே இல்லை. எனவே அது சிறிது சிறிதாகப் பழுதுற்றுக் கீழே வீழ்ந்து கொண்டிருந்தது. ஓர் அறை பழுதுற்றுக் கீழே வீழ்ந்ததும், அவர்கள் மற்றோர் அறைக்கு மாறுவார்கள். அதுவும் கீழே வீழ்ந்ததும், அவர்கள் வேறோர் அறைக்கு இடம் பெயர்வார்கள். இவ்வாறு அவர்கள் அவ்வீட்டில் வசித்து வந்தார்கள். ஒரு நாள் அவர்களைக் காண அவர்களின் இல்லம் வந்த ஒருவர் அது பழுதுற்று இருக்கும் நிலையைக் கண்டதும் 'தாங்கள் இதனைப் பழுது பார்க்கக் கூடாதா?' என்று வினவிய பொழுது, ''நான் இந்த உலகத்தைப் பழுது பார்ப்பதில்லை என இறைவனோடு உடன் பாடு செய்துள்ளேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அவர்களைக் காண வந்த வேறொருவர் அவர்களை நோக்கி, ''என்ன! மேல் கூரை விழும் நிலையிலிருக்கிறதே. அதனைத் தாங்கள் பார்க்கவில்லையா?'' என்று கூறிய பொழுது, ''நான் மேல் கூரையை அண்ணாந்து பார்த்து இருபது ஆண்டுகளாகின்றன. அவசியமின்றி எதனையும் பார்ப்பது, அவசியமின்றி எதனையும் பேசுவது போன்று தவறுடைத்து'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

ஒருவன் இறைவனுக்காக வேண்டி மக்களைச் சீர்திருத்த விரும்பின், அவன் எல்லாவித இன்னல்களையும் சகித்துக் கொள்ளும் தகுதி பெற்றவனாக இருக்க வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். ஒரு நாள் ஒருவர் அவர்களை அணுகி, ''துணிவுள்ள ஒருவன் வேண்டும். அவன் அரசவைக்குச் சென்று அரசர் முதல் அனைவரையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும். அத்தகைய ஒருவனைத் தங்களுக்குத் தெரியுமா?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், 'அத்தகைய ஒருவன் இருப்பின் அவன் சாட்டையடிக்குத் துணிந்திருக்க வேண்டும். அவ்விதம் அவன் துணிந்து விட்டால் அவன் வாளுக்கும் அஞ்சக் கூடாது. இந்த இரண்டையும் அவன் கடந்துவிடின் மூன்றாவது ஆபத்து ஒன்று ஏற்படும். தற்பெருமை ஏற்பட்டு விடாதபடி அவன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

அவர்கள் இறைநேசச் செல்வராக இருந்ததோடல்லாது சிறந்த மார்க்க அறிஞராகவும் விளங்கினர். இருபது ஆண்டுகளாக இமாமுல் அஃலம் அபூஹனீபா (ரஹ்) அவர்களிடம் கல்வி பயின்றதன் காரணமாக, அவர்களிடம் சிறந்த மார்க்க ஞானம் குடி கொண்டிருந்தது. இமாம் அபூயூசுப் (ரஹ்) அவர்களுக்கும், இமாம் முகம்மது (ரஹ்) அவர்களுக்கும் ஒரு பிரச்சினை பற்றி கருத்து வேறுபாடு ஏற்படின், அதற்குத் தீர்ப்புக் கூறுமாறு அவர்கள் இருவரும் இவர்களையே அணுகுவர். இமாம் முகம்மது (ரஹ்) அவர்களுடன் முகம் கொடுத்துப் பேசும் அவர்கள், இமாம் அபூ யூசுப் (ரஹ்) அவர்களை ஏறிட்டும் பார்க்காது முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள். இமாம் அபூ யூசுப் (ரஹ்) அவர்களின் பெயரை அவர்கள் வாயாலும் உச்சரிக்க மாட்டார்கள். ''இருவரும் ஒரே தகுதியுடைய மார்க்க விற்பன்னர்கள் தாமே. தாங்கள் ஏன் இவ்வாறு வேறுபாடு செய்கிறீர்கள்?'' என்று மக்கள் அவர்களிடம் வினவிய பொழுது, ''இமாம் முகம்மது தம் செல்வத்தை உதறித் தள்ளிக் கல்வியையே தம் கருந்தனமாக கருதி வருகிறார். ஆனால் அவரோ தம் கல்வியைக் கொண்டு செல்வத்தையும் அதிகாரத்தையும் அடையப் பெறுவதற்காகத் தம் ஆசான் செய்யாததைச் செய்து விட்டாரே. சித்திரவதை, சிறைத் துன்பம் ஆகியவற்றையும் பொருட்படுத்தாது தம் ஆசான் இமாமுல் அஃலம் அவர்கள் உதறித் தள்ளிய நீதிபதிப் பதவியைத் தம் ஆசானுக்கு மாற்றமாக அவர் ஏற்றுக் கொண்டாரே. அவருடன் நான் எவ்வாறு உரையாடுவது?'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

அவர்கள்தம்முடைய பாழடைந்த வீட்டில் கதவுகளைச் சாத்திக் கொண்டு வாழ்ந்து வந்த போதினும் அவர்களின் மகாத்மியம் நாளடைவில் நாடெங்கணும் பரவி இறுதியாக கலீபா ஹாரூன் அல் ரஷீதின் செவியிலும் பட்டது. ஒரு நாள் அவர் இமாம் அபூ யூசுப் (ரஹ்) அவர்களை நோக்கி, ''தாங்கள் என்னை தாவூத் தாயீ (ரஹ்) அவர்களின் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்'' என்று கூறினார். அவ்வாறே அவர்கள் ஓரிரவு கலீபா அவர்களுடன் தாவூத் தாயீ (ரஹ்) அவர்களைக் காணச் சென்று கலீபா அவர்கள் வந்திருப்பதாக வெளியிலிருந்து கூறியதும் அவர்கள் தங்களின் அறைக் கதவைப் 'படார்' என்று சாத்தித் தாளிட்டுக் கொண்டார்கள். அது கண்ட இமாம் அபூ யூசுப் (ரஹ்) அவர்களின் முகம் வாடியது. ''தங்களைக் காண ஒருவர் வரின் அவரின் முகத்திற்கெதிராகவே சடாரெனக் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொள்ள வேண்டும் என்று தாங்கள் கற்ற கல்வியில் உளதா?'' என்று வருத்தத்துடன் வெளியில் நின்ற வண்ணம் வினவினார்கள் அவர்கள். அதற்கு தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள், ''ஆம்; நான் இப்பொழுது கற்று வரும் கல்வி யானது உலக ஆசாபாசங்களில் உழல்பவர்களுடன் நட்புக் கொள்ளாது

ஒதுங்கி இறைவனுடன் ஒன்றி இருப்பதையே ஊக்குவிக்கின்றது'' என்று உள்ளிருந்து கொண்டே பதில் கூறினர் இவர்கள்.

அது கேட்ட இமாம் அபூ யூசுப் (ரஹ்) அவர்கள் பக்கத்து அறையி லிருந்த அவர்களின் அன்னையாரிடம் சென்று கலீபாவுக்காகத் தம் மகனிடம் பரிந்துரைக்குமாறு வேண்டினர். உடனே அம்மூதாட்டியார் தள்ளாடித் தள்ளாடி வெளியே வந்து தம் மகன் இருக்கும் அறையின் கதவைத் தம் தளர்வுற்ற கைகளால் தட்டி, ''மகனே! தாவூத் தாயீ!! கலீபா வந்துள்ளார். கதவைத் திற'' என்று கூறிய பொழுது, ''இந்த உலகியல் வாதிகளுடனும் தீயவர்களுடனும் எனக்கு என்ன அலுவல் உள்ளது?'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அதுகேட்ட அன்னை பெரிதும் ஏமற்றமுற்று, ''மகனே, தாவூத் தாயீ! நான் உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்று பாலூட்டி வளர்த்தேனல்லவா? அதற்காக வேண்டியாவது கதவைத் திற'' என்று கூறினார்.

அன்னையின் இச்சொற்கள் தாவூத் தாயீ (ரஹ்) அவர்களின் உடலை ஒரு குலுக்குக் குலுக்கியது. ''இறைவனே!நான் என் செய்வேன். அன்னையின் மகிழ்ச்சியிலே தான் உன்னுடைய மகிழ்ச்சி இருப்பதாகவும், எனவே அன்னைக்கு ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றுமாறும் நீ கூறியுள்ளாய். எனவே அன்னையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கலீபாவைச் சந்திக்கக் கதவைத் திறக்கின்றேன். இல்லையெனில் கலீபாவுக்கும் எனக்கும் இடையே என்ன அலுவல் உள்ளது?'' என்று கூறிக் கதவைத் திறந்தனர்.

உள்ளே நுழைந்த அபூயூசுப் (ரஹ்) அவர்களையும் கலீபா ஹாரூன் அல் ரஷீதையும் ஸலாம் உரைத்து வரவேற்று இருக்கையில் அமர்த்தி அவ்விருவருக்கும் அறிவுரை வழங்கத் துவங்கினர் அடிகளார். அதனைக் கலீபா ஹாரூன் அல்ரஷீத் அழுத கண்களுடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

இறுதியாக, கலீபா ஹாரூன் அல் ரஷீத் தாவூத் தாயீ (ரஹ்) அவர்களை நோக்கி,''அடிகளாரே! தங்களுக்கு ஏதேனும் தேவைப்படின் கூறுங்கள். இக்கணமே முடித்து வைக்கிறேன்'' என்று வினயமாக வேண்டி நின்றார்.

அது கேட்ட தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள், ''சரி,எனக்கு ஒரு மூட்டை மாவு தேவைப்படுகிறது'' என்று கூறினர்.

''அதற்கென்ன? இன்னும் சற்று நேரத்தில் அதனை இங்கு அனுப்பிவைக்கச் செய்கின்றேன். ஒரு மூட்டை போதுமா?''

''ஒரு மூட்டை போதும். ஆனால் அதனை இங்கு அனுப்பி வைப்பது என்ற பேச்சே வேண்டாம்.''

''அப்படி என்றால்?''

''நீர் தாம் அதனைத் தலைமீது சுமந்துகொண்டு வந்து இங்குச் சேர்க்க வேண்டும்''

தாவூத் தாயீ (ரஹ்) அவர்களின் இக்கூற்று கலீபாவின் தலையை ஒரு குலுக்குக் குலுக்கியது. எனினும் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, ''நல்லது; அவ்விதமே செய்கிறேன். ஆனால் இரவில் அதனை சுமந்து கொண்டு வருகிறேன்'' என்று கூறினார்.

''கூடவே கூடாது. பட்டப் பகலில் பதை பதைக்கும் வெயிலில், உச்சி வேர்வை நிலத்தில் விழ நீர் அதனைத் தலையிலே சுமந்து வர வேண்டும்.''

''நல்லது; அதனைக் காட்டு வழியே சுமந்து வந்து தங்களின் காலடியில் காணிக்கையாக வைக்கிறேன்.''

''அவ்விதம் செய்வதை நான் வேண்டேன். நீர் ஊரின் நடுவே, ஊரார் அறிய, உலகோர் அறிய பட்டப் பகலில் பதை பதைக்கும் வெயிலில் தான் அதனைக் கொணர வேண்டும்.''

தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் இவ்வாறு கண்டிப்பாகக் கூறுவதைக் கேட்டு யாது பதில் கூறுவதென அறியாது மௌனமாக வீற்றிருந்தார் கலீபா.

அப்பொழுது தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள், ''எனக்கு மாவும் தேவையில்லை. மாவு மூட்டையும் தேவையில்லை. உம்மைச் சோதிப்பதற்காகவே இவ்வாறு கூறினேன். ஒரு மூட்டை மாவைச் சுமந்து வர அஞ்சும் நீர் உலகத்தின் அரச பாரத்தையே சுமக்கத் தயாராகி விட்டீரே. அது எத்துணை கடினமானது, ஆபத்துக்கள் நிறைந்தது என்பதை நீர் அறிவீரா?'' என்று கூறினர்.

இச்சொற்கள் கலீபாவின் இதயத்தில் வேலெனப் பாய்ந்து அவரின் கண்களிலிருந்து கண்ணீர் மழையைப் பொழியச் செய்தது.

இறுதியாக, அவர் அவர்களிமிருந்து விடை பெற்றுச் செல்லும் முன் பொற்காசுகள் நிரம்பிய ஒரு பையை அவர்களின் முன் வைத்து, ''இது தூய வழியில் ஈட்டிய பொருளாகும். இதனைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று வேண்டி நின்றார்.

அது கேட்ட தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள், ''எடுத்துச் செல்லும் அதனை, அது எனக்குத் தேவையில்லை. நேர்மையான முறையில் எனக்கு வாரிசு பாத்தியமாக வந்த வீட்டை விற்று வந்த பணத்திலிருந்து நான் என்

வாணாளைக் கழித்துக் கொண்டுள்ளேன். அது முடிந்ததும் என் வாணாளை முடித்து விடுமாறும் நான் இறைவனிடம் இறைஞ்சி வேண்டிக் கொண்டுள்ளேன். அவன் என்னுடைய இறைஞ்சுதலை ஏற்றுக் கொள்வான் என்று நம்புகிறேன்'' என்று கூறினர்.

இதன் பின் இமாம் அபூயூசுப் (ரஹ்) அவர்களும் கலீபா ஹாரூன் அல் ரஷீதும் தாவூத் தாயீ (ரஹ்) அவர்களிடமிருந்து விடை பெற்று இல்லம் மீண்டனர்.

அடுத்த நாள் இமாம் அபூ யூசுப் (ரஹ்) அவர்கள், தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் தம் பணத்தைக் கொடுத்து வைத்திருந்தவரிடம் சென்று, ''இன்னும் அவர்களின் பணத்தில் எவ்வளவு எஞ்சியுள்ளது'' என்று வினவினர். இன்னும் இரண்டு திர்ஹங்கள் எஞ்சி இருப்பதாகவும் அவர்கள் நாளொன்றுக்கு ஒரு வெள்ளிக் காசு வீதம் செலவழித்து வருவதாகவும் அவர் பதில் கூறினார்.

நாட்கள் பல ஓடின. ஒரு நாள் பள்ளி வாயலில் மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்த இமாம் அபூ யூசுப் (ரஹ்) அவர்கள், மக்களை நோக்கி, ''இன்று தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் இறந்துவிட்டார்கள்'' எனத் திடுதிப்பென்று கூறினார்கள். அது கேட்டு மக்கள் பெரிதும் அதிர்ச்சியுற்றனர். பின்னர் விசாரித்ததில் உண்மை அவ்விதமே இருந்தது. தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் காலமெல்லாம் வாழும் வண்ணம் காலமாகிவிட்டார்கள்.

''அவர்கள் காலமாகிய செய்தி தங்களுக்கு எவ்வாறு தெரிய வந்தது?'' என்று மக்கள் இமாம் அவர்களிடம் வினவிய பொழுது, ''அவர்களிடம் எஞ்சி இருந்த பணத்தையும் அவர்களின் அன்றாடச் செலவையும் கணக்கிட்டுப் பார்த்ததில் இன்று அவர்களிடம் ஒன்றும் எஞ்சியில்லாததைக் கண்டேன். அவர்களின் இறைஞ்சுதல் இறைவனால் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நான் நன்கு உணர்வேனா தலின், அவர்கள் இன்று இறப்பெய்துவார்கள் என்ற முடிவுக்கு வந்து அவ்வாறு கூறினேன்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் சில நாட்களாகவே நோயுற்ற நிலையில் இருந்தார்கள். தலைக்கு ஒரு கல்லை வைத்துக் கொண்டு அவர்கள் தம் அறையின் வாசலில் படுத்துக்கொண்டு திருக்குர்ஆனை ஓதிக் கொண் டிருந்தார்கள். அப்பொழுது கடுமையான சூடாக இருந்ததனால் ஒருவர் அவர்களை அணுகி, ''தங்களை ஒரு நல்ல இடத்திற்கு எடுத்துச் செல்லவா?'' என்று கூறினார். அதற்கு அவர்கள், ''வேண்டாம். வேண்டாம். என் மனோ இச்சையை (நப்ஸை) திருப்திபடுத்துவதற்காக நான் ஒன்றைப் பிறரிடமிருந்து வேண்ட நாணமுறுகிறேன். நான் என்றுமே

என் மனோ இச்சைக்கு அடிபணிந்தவனல்ல. இந்த நிலையில் நான் அதற்கு அடிபணியாதிருப்பதே மாண்புடைத்ததாகும்'' என்று கூறினர்.

ஓரிரவு வணக்கத்தில் ஈடுபட்ட அவர்கள் தலையைத் தரையிலே தாழ்த்திய வண்ணம் (சஜ்தாவில்) நெடு நேரம் இருந்தனர். வைகறைத் தொழுகைக்கான நேரம் வந்ததும் ''மகனே, தாவூத் தாயீ! எழுந்திரு. தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது'' என்று அன்னை கூற அவர்கள் எழுந்திருக்கவில்லை. பின்னர் பார்க்கும் பொழுது அந்நிலையிலேயே அவர்கள் இறந்துவிட்டார்கள்.

அன்றிரவு ஒருவர் அவர்களைக் காற்றிலே பறந்து கொண்டு, ''நான் உயிரோடுள்ளவர்களிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டேன்'' என்று கூறிச் செல்வது போன்று கனவு கண்டு, இதுபற்றி அவர்களிடம் விளக்கம் கேட்க அவர்களின் இல்லம் வந்த பொழுது அவர்கள் இறப்பெய்தி விட்டார்கள் என்ற செய்தியே அவர் முன் எதிர் வந்தது.

அவர்களின் இறப்புச் செய்தியைக் கேள்வியுற்றதும், அவர்களின் இல்லத்திற்கு ஓடோடி வந்த அவர்களின் நண்பர் இப்னு ஸம்மாக் (ரஹ்) அவர்கள், தாவூத் தாயீ (ரஹ்) அவர்களின் வெற்றுடலை அணுகி, ''தாவூத்! இவ்வுலகில் சிறைத் தண்டனையை நுகர்ந்தீர். உம்மை எவரும் சிறைப் படுத்தவில்லை. எனினும் நீராக வலிய வந்து சிறைத் தண்டனையை ஏற்றுக் கொண்டீர். இறைவன் உமக்குத் தண்டனை அளிப்பதற்கு முன் உமக்கு நீராக தண்டனையளித்துக் கொண்டீர்'' என்று கூறி அழுது புலம்பினர். அவர்களின் இப்புலம்பல் தாவூத் தாயீ (ரஹ்) அவர்கள் எவ்வாறு இவ்வுலகில் வாழ்ந்து வந்தனர் என்பதை நமக்கு நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றது.

அவர்கள் தங்களின் இல்லத்தைப் பழுது பார்க்காது அதில் ஓர் அறை இடிந்து விழுந்ததும் மற்றோர் அறையில் வசித்து வந்தார்கள். இவ்வாறு ஒன்று இடிய, இடிய மற்றொன்றில் இடம் மாற்றி வசித்து வந்தார்கள். இறுதியாக எல்லாம் இடிந்துவிட்ட பொழுது அவர்கள் எஞ்சி இருந்த அவ்வீட்டு முகப்பில் வசித்து வந்தனர். அவர்கள் இறந்த அன்று அதுவும் கீழே விழுந்து விட்டது.

எவரும் தம்மைக் கடந்து செல்வதைத் தாம் விரும்பவில்லை என்றும், எனவே தம்மைச் சுவருக்குக் கீழே நல்லடக்கம் செய்யுமாறும் அவர்கள் இறுதியாகக் கூறிச் சென்ற வண்ணம் அவர்கள் சுவருக்குக் கீழே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

❁

# 12. ஷகீக் பல்கி (ரஹ்)

வணிகர் ஒருவர் வாணிபத்தின் பொருட்டு துருக்கிஸ்தான் சென்றார். ஆங்கு ஓர் ஆலயத்தில் உருவத் தொழும்பன் ஒருவன் தான் வழிபடும் உருவச் சிலையின் முன் நின்று வழிபாடு நிகழ்த்திக் கொண்டிருந்தான். அதைக் கண்டதும் அவருக்குக் கோபம், கோபமாக வந்தது. ''மனிதனே! எல்லாம் வல்ல உருவமற்ற ஓர் இறைவனை வணங்குவதற்கு மாறாக, எவ்வித ஆற்றலுமற்ற இக்கல்லுருவின் முன் கும்பிட்டு வீழ்கின்றாயே. உனக்கு அறிவில்லையா? நாணமில்லையா?'' என்று வினவினர். அது கேட்டு அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''போதும் ஐயா பேசியது. உம் பேச்சை நிறுத்தும். உம்முடைய இறைவன் எல்லாம் வல்லவனாக இருப்பின், உம்மை ஏன் இங்கு வாணிபம் செய்து பொருளீட்டுவதற்காக அனுப்பி வைத்துள்ளான். உம்முடைய ஊரிலேயே உமக்கு வேண்டியவை அனைத்தையும் தரலாம் தானே! இத்துணைத் தொலை நீர் வரவேண்டிய தேவை இல்லையே'' என்று சுடச்சுடப் பதில் கொடுத்தான். அவனுடைய இச்சூடான பதில் அவ்வணிகரின் அறிவுக் கண்களைத் திறந்து விட்டது. ''ஆம்; ஆம். அவன் கூறுவதிலும் உண்மை இல்லாமல் இல்லை'' என்று அவரின் உள் மனம் இடித்துரைத்தது. அடுத்த கணம் அவருடைய கால்கள் அவரை, அவருடைய பிறந்த ஊரான பல்கை நோக்கி இழுத்துச் சென்றன.

பல்க் நோக்கிச் செல்லும் பாட்டையிலே அவர் சென்று கொண்டிருந்தார். அவருக்கு வழித்துணை போன்று நெருப்பை வணங்கும் ஒருவனும் அப்பாட்டையிலே வந்து சேர்ந்தான். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டே சென்றார்கள். அப்பொழுது நெருப்பு வணங்குபவன் அவரை நோக்கி, ''தாங்கள் என்ன செய்து கொண்டுள்ளீர்கள்?'' என்று வினவினான். ''வாணிபம் செய்து கொண்டுள்ளேன்'' என்று அவர் பதிலிறுத்தார். அதற்கு அவன், ''தாங்கள் தங்களுக்கென விதிக்கப்படாத இரணத்தைத் தேடி அலைந்தீர்களானால், உலக முடிவு நாள் வரையில் தேடினும் அது தங்களுக்குக் கிடைக்காது. தங்களுக்கு விதிக்கப்பட்ட இரணத்தைப் பெறத் தாங்கள் விரும்பின், தாங்கள் அங்குமிங்கும்

அலைந்து திரிய வேண்டியதில்லை. அதுவே தங்களைத் தேடி வந்தடையும்'' என்று கூறினான். அவனின் இச்சொல் முன்னர் உருவத் தொழும்பன் கூறிய சொல்லுக்கு பக்கவாத்தியம் வாசிப்பது போன்றிருந்தது. உருவத் தொழும்பனுக்கும் தீ வணங்குபவனுக்கும் தெரிந்த உண்மை, இதுவரை தமக்குத் தெரியாமல் போய்விட்டதே என்று கூறித் தம்மையே தாம் நொந்து கொண்டார் அவர். இக்கணத்திலிருந்து உலக ஆசாபாசங்கள் அவருடைய உள்ளத்தை விட்டும் அகலத் துவங்கின.

அவர் ஒரு வணிகராக மட்டுமல்ல; வள்ளலாகவும் விளங்கி வந்தார். எனவே அவர் வாணிபம் செய்து விட்டு பல்க் திரும்பும் செய்தி நொடி நேரத்தில் பல்க் நகரம் முழுவதும் பரவிவிட்டது. எனவே மக்கள் ஒருங்கு திரண்டு அவருக்கு மாபெரும் வரவேற்பு வழங்கி அவரைக் கௌரவித்தனர்.

அவர் பல்க் திரும்பிய சின்னாட்களில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பல்கின் ஆளுநரான அலீ இப்னு ஈஸாவின் வேட்டை நாய்களில் ஒன்று காணாமற் போய்விட்டது. ஆனால், அதனை அவரின் அண்டை வீட்டுக்காரர் பிடித்து ஒளித்து வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு நையப் புடைக்கப்பட்டார். அவர் இவரிடம் ஓடோடி வந்து, தாம் நிரபராதி என்றும், தம்மைக் காத்தருள் புரிய வேண்டும் என்றும் வேண்டி நின்றார். உடனே இவர் அந்நகர ஆளுநரிடம் சென்று தம் அண்டை வீட்டுக்காரர் நிரபராதி என்றும் எனவே அவரை அநீதியாகச் சிறையிலிடக் கூடாதென்றும், இன்னும் மூன்று நாட்களில் தாம் அந்நாயை எங்கேனும் தேடிக் கண்டுபிடித்துக் கொணர்வதாகவும் கூறினார். அதற்கு அவ்வாளுநரும் இணங்கினார்.

மூன்றாவது நாளும் பிறந்தது. எங்குத் தேடினும் நாய் கிடைக்கவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தார் அவ்வணிகர். அப்பொழுது தெருவிலே சென்று கொண்டிருந்த ஒருவன், அது அங்குமிங்கும் அலைந்து கொண்டிருப்பதைக் கண்டு அதனை எட்டிப் பிடித்தான். அதனை அவ்வணிகப் பெருமகரிடம் கொண்டு போய்க் கொடுத்தால் அவர் தமக்கு நல்ல அன்பளிப்பு வழங்குவார் என்று கருதிய அவன், அதனை அவரிடம் கொண்டுவந்து கொடுத்தான். அதனைக் கண்டதும் அவரின் கவலையெல்லாம் ஒழிந்தது. முகம் மலர்ந்தது. அதனை ஆளுநரின் அரண்மனைக்கு எடுத்துச் சென்று தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி அமைதியுற்றார் அவர்.

இதன்பின் அவரின் எண்ணம் முழுவதும் உலகைத் துறந்து பற்றற்ற பாங்கினராய் விளங்க வேண்டும் என்பதாகவே இருந்தது. அப்பாட்டையிலே அவர் ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக அடியெடுத்து வைத்து நடந்து கொண்டிருந்தார்.

இக்காலை பல்க் நாட்டிலே கடுமையான பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அதன் காரணமாக மக்கள் பசியாலும் பட்டினியாலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கடைத் தெருவிலே ஓர் இளம் அடிமை மகிழ்ச்சியுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்ட அவர், "அடிமையே! நீ என்ன இத்துணை மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண் டுள்ளாய்? மகிழ்ச்சியுடன் சிரிப்பதற்கான நேரமா இது? மக்கள் பசியாலும் பட்டினியாலும் படும் துயர் கண்களுக்குத் தெரியவில்லையா?" என்று கூறினார்.

அது கேட்ட அவன், "நான் ஏன் அதுபற்றிக் கவலையுற வேண்டும்? என் எசமானருக்கு ஒரு கிராமமே சொந்தமாயுள்ளது. அவருடைய நெற்களஞ்சியம் நிரம்பி வழிகிறது. அவ்விதம் இருக்கும் பொழுது நான் ஏன் கவலையுற வேண்டும்? அவர் ஒரு போதும் என்னைப் பட்டினி போட மாட்டார்" என்று பதில் கூறினான்.

அவனின் இப்பதில் அவருக்குப் பேருணர்வை உண்டு பண்ணியது "இறைவனே! அவனோ தன் எசமானர் களஞ்சியம் நிறையத் தானியங் களைக் குவித்து வைத்திருப்பதன் காரணமாகத் தன்னை ஒரு போதும் பட்டினி போடமாட்டார் என்று எண்ணி மகிழ்ச்சியுடன் உள்ளான். ஆனால் நீயோ மன்னர் மன்னன். அண்ட சராசரங்களுக்கும் இரணம் அளிக்கும் பொறுப்பை மேற்கொண்டவன். அவ்விதமிருக்க நான் ஏன் உணவு பற்றிக் கவலையுற வேண்டும்?" என்று கூறினார். இதன்பின் அவர் உலகை முற்றும் துறந்தார். தமக்கு யாதும் தேவையில்லை என்றும், இறைவனே போதுமென்றும் கூறினார். "நான் அந்த அடிமை யின் மாணவன், அவனே என் குரு. அவனே எனக்கு மகத்தான பாடத்தைக் கற்பித்தான்" என்று அவர் அடிக்கடி கூறினார்.

இக்காலை அவர் ஓரிரவு அயர்ந்து உறங்குங்கால் கனவொன்று கண்டார். அதிலே, "எவன் தன் இரணத்தைப் பற்றி அல்லாஹ்வின் மீது நன்னம்பிக்கை வைத்துள்ளானோ, அந்நன்னம்பிக்கையை அல்லாஹ் அதிகப்படுத்துகிறான். அவனுடைய உள்ளத்தில் ஐயத்தை அவன் ஏற்படுத்துவதில்லை" என்று அறிவிக்கப்பட்டது.

இதன்பின் ஒருநாள் ஒருவர் அவரிடம் வந்து தாம் அவ்வாண்டு மக்கா சென்று 'ஹஜ்'ஜுச் செய்து விட்டு வர எண்ணியுள்ளதாகக் கூறினார். அப்பொழுது அவர் அவரை நோக்கி, "உம்மிடம் அதற்கான சாதனங்கள் உள்ளனவா?" என்று வினவினார். அதற்கு அவர், 'ஆம்! என்னிடம் அதற்கான நான்கு சாதனங்கள் உள்ளன. (1) இறைவனைவிட விரைவாக இரணம் அளிப்பவன் எவனையும் நான் காணவில்லை. (2) இறைவனை விட இரணம் அளிப்பவன் எவனையும் நான் காணவில்லை. (3) நான்

எங்குள்ளேனோ அங்கு அவனும் உள்ளான் என்பதையும் நான் உணர்கிறேன். (4) நான் எந்நிலையில் இருந்தாலும் என்னை விட என் நிலையை அல்லாஹ் நன்கு உணர்ந்துள்ளான் என்பதையும் நான் உணர்கிறேன்' என்று கூறினார். அது கேட்டு அவர் மகிழ்ச்சி மீக்குற்று அவருக்கு நன்மாராயம் மொழிந்தார்.

இதன்பின் அவரின் வாழ்விலே மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. அவர் அல்லாஹ்வின் பாதையில், ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைக்கத் துவங்கினார். பல்வேறு நாடுகளுக்கும் சென்று, ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் தாளடியில் தாள் மடித்து அமர்ந்து அவர் ஆன்மீகக் கல்வி பயின்றார். அவர் பயின்ற நூல்கள் மட்டும் பல ஒட்டகைச் சுமையுள்ளதாக இருந்தன. அவரின் முழுப் பெயர் அபூ அலி ஷகீகு இப்னு இப்ராஹீம் அல்அஸ்தி பல்கி என்பதாகும். சுருக்கமாக அவர், வரலாற்றில் ஷகீக் பல்கி என்ற பெயருடன் இடம் பெறுகிறார்.

ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் உலகைத் துறந்த முனிவராக விளங்கியதுடன், இஸ்லாமிய நெறி முறைகளையும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறைகளையும் அணுவேனும் கைவிடாது ஒழுகும் சிறப்புப் பெற்று விளங்கினர். ஒருநாள் அவர்கள் சமர்க்கந்தில் மக்களின் முன் உரையாற்றுங்கால், ''மக்களே! நீங்கள் உயிரற்ற வெற்றுடலாக மட்டும் இருப்பின் புதை குழிக்குள் சென்று வசியுங்கள். அதுவே உங்களுக்குரிய இடமாகும். நீங்கள் சின்னஞ்சிறு குழந்தைகளாக இருப்பின் பள்ளி சென்று கல்வி பயிலுங்கள். நீங்கள் பைத்தியக்காரர் களாய் இருப்பின் மருத்துவ மனைக்குச் சென்று மருத்துவம் செய்து கொள்ளுங்கள். நீங்கள் இறை மறுப்பவர் (காபிர்)களாக இருப்பின் இறை மறுப்பவர் வாழும் நாடுகளுக்குக் குடிபெயர்ந்து விடுங்கள்.நீங்கள் முஸ்லிம்களாயிருப்பின் இஸ்லாமிய அறநெறிகளையும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறைகளையும் கற்று அவற்றின்படி ஒழுகி வாருங்கள்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

மற்றொரு நாள் ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தக்கால், இறைமறுப்பவன் ஒருவன் ஆங்கு வந்து ''நீங்கள் உருவமற்ற ஒரிறைவனை வணங்குவதாகக் கூறுகின்றீர்கள். ஆனால் உண்மையில் பார்ப்போமானால் நீங்கள் உணவையே வணங்கிக் கொண்டுள்ளீர்கள்'' என்று கூறினான். அதுகேட்ட ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் சற்றேனும் சினமுறாது தம் மாணவர்களை நோக்கி, ''இது நல்லதொரு அறிவுரையாக உள்ளது. இதனை எழுதிக் கொள்ளுங்கள்'' என்று கூறினர். அவர்களும் அவ்வாறே செய்தனர்.

பொருளடக்கம்



அது கண்ட அவன், இவர்கள் உண்மையில் பெரியாரேயன்றி வேறில்லை என்பதை உணர்ந்தவனாய், ''ஐய! தாங்கள் உண்மைக்கு உயரிய இடம் கொடுத்து அதனை இறை மறுப்பவனாகிய நான் கூறிய போதினும், ஏற்றுக் கொண்டதோடு தங்களின் மாணவர்களையும் எழுதிக் கொள்ளுமாறு பணித்தீர்கள். தங்களின் மார்க்கத்தின் மேன்மையை நான் உணர்ந்து கொண்டேன். அந்த மேதகு மார்க்கத்தில் நானும் இணைந்து விட விரும்புகின்றேன்'' என்று கூறினான்.

அதுகேட்ட ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் அவனுக்கு இஸ்லாமியத் திருக் 'கலிமா' வைப் போதித்து, அவனை இஸ்லாத்தில் இணைத்தபின் அவனை நோக்கி, ''உண்மை எங்குக் கிடைப்பினும் அதனை ஏற்றுச் செயலாற்ற வேண்டும் என்பதே இஸ்லாம் கற்பிக்கும் பாடமாகும். எம்பெருமானார் (ஸல்) அவர்களும், 'அறிவு என்பது இறை நம்பிக்கை யாளரின் மேலான பொருளாகும். அது ஓர் இறை மறுப்பவனிடமிருந்து கிடைத்த போதினும் அதனை ஒரு முஸ்லிம் ஏற்றுக்கொள்ளத் தயங்கக் கூடாது' என்று இயம்பியுள்ளனர்'' எனக் கூறினார்கள்.

ஒரு தடவை வயோதிகர் ஒருவர் அவர்களிடம் வந்து தாம் பாவ மன்னிப்புக் கோர விரும்புவதாகக் கூறிய பொழுது, ''அதற்கு நீர் இத்துணை தாமதித்து வந்துள்ளீரே'' என்ற அவர்கள் கூறினார்கள். அதற்கு அவர், ''இல்லை; நான் விரைவாகவே வந்துள்ளேன். இறப்பதற்கு முன் பாவமன்னிப்புக் கோர விரும்புபவனை விரைவாக வந்தவன் என்றுதான் கருத வேண்டும்'' என்று கூறினார். அதுகேட்ட அவர்கள், ''நன்கு வந்தீர். நன்கு மொழிந்தீர்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்கள்.

அவர்களின் அழகுத் திருவாயிலிருந்து அமுதனைய சொற்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அவர்கள் ஒருதடவை தம் மாணவர்களை நோக்கி, ''அல்லாஹ்வின் திருபொருத்தம் நான்கு விஷயங்கள் மீது இருக்கிறது. அவை: (1) அல்லாஹ் தந்த இரணத்தின் மீது திருப்தியுறுவது (2) எந்த அலுவலையும் தூய உளத்துடன் செய்வது (3) ஷைத்தானைப் பகைப்பது (4) இறப்பிற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்வது'' என்று அவர்கள் இயம்பினர்.

மற்றொரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''வழிபாட்டின் அடிப்படை இறையச்சமாகும். மேலும் இறைவன்மீது ஆதரவும் அன்பும் கொள்வதாகும். இறையச்சத்திற்கு அடையாளம் வீண் பேச்சை விட்டொழிப்பதாகும். இறையருளின்மீது ஆதரவு வைத்திருப்ப தற்கு அடையாளம் நிரந்தரமான வழிபாடாகும். இறையன்பின் அடையாளம் விருப்பமும் பொறுப்புணர்ச்சியுமாகும்.

''துன்பம் வாய்ப்பட்ட ஒருவன் பொறுமையை மேற்கொள்ளாது இறைவனைக் குறைகூறிப் புலம்பின் அவன் அம்பை எடுத்துக் கொண்டு இறைவனைப் போருக்கு அழைப்பது போலாகும்.''

''ஒருவனுக்குத் துன்பம் ஏற்படுவது உண்மையில் அவனுக்கு ஏற்படும் நன்மையேயாகும். துன்பத்தில் அவதிப்படுகிறவனுக்குக் கிடைக்கும் நற்கூலியை ஒருவன் எண்ணிப் பார்த்தால், துன்பம் தொலைய வேண்டும் என்ற தன்னுடைய ஆவலையே அவன் விட்டுவிடுவான்.

''இறப்பிற்கு ஒவ்வொருவனும் தயாராயிருக்க வேண்டும். அது வந்துவிடின் திரும்பிப் போகாது'' என்று அவர்கள் கூறினர்.

''வணக்கம் என்பது ஒரு தொழில். அதற்கான தொழிலகம் தனிமை. அதற்கான ஆயுதம் பசி'' என்று அவர்கள் கூறினார்கள்.

''திருக்குர்ஆனின் வெளிப்படையானவும், அந்தரங்கமானவுமான கருத்துக்களையும் லௌகீக, ஆன்மீகக் கருத்துக்களையும் பிரித்து அறிய நான் இருபது ஆண்டுகள் பாடுபட்டேன். அதன் பின்தான் அவை இரண்டும் எனக்கு நன்கு தெளிவாகத் தெரிய வந்தன'' என்று அவர்கள் கூறினர்.

மக்களின் அவலநிலை கண்டு அவர்களின் உள்ளம் பெரிதும் வருந்தியது. ''ஆலிம்களே பண ஆசை பிடித்து அலையும் பொழுது, பாமர மக்கள் எவரைப் பின்பற்றுவது? பக்கிரே உலகாயுதச் செல்வங்கள்மீது ஆசையுறவும் மெல்லிய ஆடை பூணவும், திருமண ஆசை கொள்ளவும் செய்யின் பேராசைக்காரன் தம் பேராசையிலிருந்து மீட்சி பெற எவரைப் பின்பற்றுவது? ஆடு மேய்ப்பவரே ஓநாய்களாக மாறிவிடும் பொழுது, ஆடுகளைப் பாதுகாப்பவர் யார்?'' என்று அவர்கள் வருத்தத்துடன் கூறினர்.

ஒருநாள் அவர்கள் அபுல்காசிம் (ரஹ்) அவர்களைக் காண வந்த பொழுது, அவர்களின் போர்வையில் யாதோ முடிந்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு ''என்ன அது?'' என்று வினவினர் அபுல்காசிம் (ரஹ்) அவர்கள். ''ஒருவர் சில பருப்புகளைத் தந்து அவற்றை என் காலை உணவுக்காக வைத்துக் கொள்ளுமாறு கூறினார். அவற்றை வாங்கி முடிந்து வைத்துள்ளேன்'' என்று பதில் கூறினார்கள் அவர்கள்.

அப்பொழுது அபுல் காசிம் (ரஹ்) அவர்கள் ஷைகீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''நீர் நாளை வரை உயிரோடிருப்பீர் என்று எண்ணிக் கொண்டீரா? நான் இனிமேல் உம்முடன் பேசமாட்டேன்'' என்று கூறிக் கதவைப் 'படார்' என்று சாத்திவிட்டு உள்ளே சென்று விட்டார்கள்.

அவர்களின் இச்செயல் ஷகீக் (ரஹ்) அவர்களுக்குச் சிறந்த அறிவுரையாக அமைந்தது.

ஒருநாள் அவர்கள் தம் மாணவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது ''நான் இறைவன் பேரில் 'தவக்கல்' வைத்து ஹஜ்ஜுச் செய்யக் கிளம்பினேன். அப்பொழுது என் சட்டைப் பையில் ஒரு சிறு நாணயம் மட்டும் இருந்தது. நான் ஹஜ்ஜுச் செய்துவிட்டுத் திரும்பிய பொழுதும் அந்த நாணயம் என் சட்டைப் பையிலேயே இருந்தது. இப்பொழும் அது என் சட்டைப் பையிலேயே உள்ளது'' என்று கூறினர். அப்பொழுது ஓர் இளவல் எழுந்து நின்று ''ஷைகு அவர்களே! தங்களின் சட்டைப் பையில் ஒரு சிறு நாணயம் இருக்கும்பொழுது தாங்கள் எவ்வாறு இறைவன் மீது ஆதரவு (தவக்கல்) வைத்து ஹஜ்ஜுப் பயணத்தை மேற்கொண்டதாகக் கூற இயலும்?'' என்று வினவினார்.

அதுகேட்ட அவர்கள் ''நீர் கூறுவது நிரம்பச் சரி. ஒருவன் இறைவன் மீது முழு ஆதரவு வைக்கும்பொழுது சட்டைப் பையில் ஒரு சிறு நாணயத்தையும் தன் உணவுச் செலவுக்காக வைத்து கொள்வதற்கு இடமில்லை தான்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

அவர்கள் மிகவும் பேணுதலும் இறையச்சமும் உள்ளவர்களாக விளங்கினர். ஒருநாள் அவர்கள் தக்வா என்றால் என்னவென்பது பற்றித் தம் மாணவர்களிடம் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, ''தக்வாவை மூன்று விதங்களால் அறிந்து கொள்ளலாம். அவை : (1) மார்க்க சட்டதிட்டங்களைப் பேணுதலுடன் பின்பற்றுவது, (2) மார்க்கத்தில் தடுக்கப்பட்டவைகளை விட்டொழிப்பது, (3) இம்மை, மறுமை பற்றிப் பேசுவது ஆகும். ஒருவனின் பேச்சைக் கொண்டு, அவன் இம்மையை விரும்புகின்றானா அல்லது மறுமையை விரும்புகின்றானா என்பதை அறிந்து கொள்ளலாம்'' என்று கூறினர்.

மற்றொரு நாள் அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''நான் எழுநூறு மார்க்க விற்பன்னர்களைச் சந்தித்து அவர்களிடம் ஐந்து விஷயங்களைப் பற்றி வினவினேன். அவர்கள் அனைவரும் ஒருமித்து அவற்றிற்கு ஒரே பதிலையே கூறினர். அவர்களிடம் நான் ''அறிஞன் யார்?'' என்று வினவினேன்? ''உலகை நேசிக்காதவனே அறிஞன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அதன்பின் நான் அவர்களை நோக்கி, ''அறிவாளன் யார்?'' என்று வினவினேன். ''எவனை உலகம் ஏமாற்ற முடியாதோ அவனே அறிவாளன்'' என்று அவர்கள் விடை பகர்ந்தார்கள். அதன்பின் நான் அவர்களை நோக்கி, ''செல்வன் யார்?'' என்று வினவினேன். ''அல்லாஹ்வின் பங்கீட்டை ஏற்றுக் கொள்பவன்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். அதன்பின் நான் அவர்களை நோக்கி,

'துறவி யார்?' என்று வினவினேன். ''எவனுடைய உள்ளத்தில் ஆசை இல்லையோ அவன்'' என்று அவர்கள் விளக்கம் பகர்ந்தார்கள். அதன்பின் நான் அவர்களை நோக்கி, ''உலோபன் யார்?'' என்று வினவினேன். ''தன் சொத்தில் அல்லாஹ்வின் பங்கைச் செலுத்தாதவன்'' என்று அவர்கள் பதிலுரைத்தார்கள் என ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் எடுத்துரைத்தனர்.

வேறொரு நாள் அவர்களின் மாணவர் ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள் தமக்கு அறிவுரை நல்குமாறு அவர்களை வேண்டிய பொழுது, ''நாவைப் பேணிக் கொள்ளும். ஒன்றைப் பற்றி நீர் உம் அறிவுத் தராசில் நிறுத்துப் பார்க்காத வரையில் அதுபற்றி நீர் யாதொன்றும் கருத்துக் கூற வேண்டாம்'' என்று மொழிந்தார்கள்.

பிறிதொரு நாள் அவர்கள் மக்களுக்கு அறிவுரை நல்கும் பொழுது, ''நாங்கள் ஐந்து பலன்களைப் பெற விரும்பினோம். அவை ஐந்தும் வெவ்வேறு ஐந்து விஷயங்களில் இருக்கக் கண்டோம். புதை குழியின் (கப்ரின்) வெளிச்சத்தை இரவில் நின்று வணங்குவதிலும், முன்கர், நகிருக்குச் சரியாகப் பதிலுரைப்பதைக் குர்ஆன் ஓதுவதிலும், ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தைக் கடப்பதை 'ஸதகா' செய்வதிலும், மஹ்ஷர் வெளியில் தாகம் தணிக்கப் பெறுவதை நோன்பு நோற்பதிலும், இரண அதிகரிப்பை 'ளுஹா' தொழுவதிலும், நாங்கள் கண்டோம்'' என்று அவர்கள் எடுத்துரைத்தனர்.

அவர்கள் தாம் வாணாளில் பல இறைநேசச் செல்வர்களைச் சந்திக்கும் பேறும் பெற்றுள்ளார்கள். அவர்கள் சந்தித்த ஓர் இறைநேர் பற்றிய விவரத்தை அவர்கள் இதோ தம் மாணவர்களிடம் எடுத்துரைக்கிறார்கள். நாமும் கேட்போம்.

''ஒரு தடவை நான் ஹஜ்ஜுச் செய்ய மக்கமா நகர் நோக்கிச் செல்லும் பொழுது, காதிஸிய்யா என்ற இடத்தில் ஓர் ஆணழகரைக் கண்டேன். அவர் தூய்மையான வெண்ணாடை அணிந்திருந்தார். போர்வையைப் போர்த்திய வண்ணம் அவர் ஓரிடத்தில் அமர்ந்திருந்தார். அவர் ஒரு சூஃபியாக இருப்பாரோ என்று எண்ணிய நான் அவரைப் பார்க்க அவரின் அருகில் சென்றேன். அவர் என்னைப் பார்த்ததும், 'ஷகீகே! ஒருவரைப் பற்றி வீணே ஐயம் கொள்வதை விட்டும், தங்களைக் காத்துக் கொள்ளுங்கள். சில வீண் ஐயங்களே பாவங்களாகின்றன' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டும் அகன்று விட்டார்.

''முன்பின் அறியாத அவர் என் பெயரை உரைத்ததனாலும் உள்ளத்திலுள்ளதைக் கூறியதனாலும், அவர் இறையருள் பெற்ற நல்லடியாராகத்தான் இருப்பார் என்று எண்ணி, அவரிடம் கேட்டுச் சில ஐயங்களைத்

தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பி, அவரின் பின்னே சென்றேன். ஆனால் அவரோ விறுவிறுவென நடந்து என் பார்வையை விட்டே மறைந்து விட்டார்.

"நான் வாக்ஸாவை அடைந்த பொழுது அவர் அங்குத் தொழுது கொண்டிருப்பதைக் கண்டேன். அப்பொழுது அவருடைய உறுப்புகள் அனைத்தும் நடுங்கிக் கொண்டிருந்தன! அவரின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வழிந்தோடிக் கொண்டிருந்தது. அவர் தொழுது முடிக்கும் வரை நான் அங்கேயே காத்திருந்தேன்.

"தொழுது முடித்ததும் அவர் என்னை நோக்கி, 'ஷகீகே! வ இன்னீ ல கஃப்பாருன் லிமன் தஅப' (எவர் தௌபா - பாவமன்னிப்பு செய்து திரும்பி விடுகிறாரோ அவரின் பாவத்தை நான் மன்னித்து விடுகிறேன்) என்ற திருவசனத்தை ஓதுவீராக!' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டும் புறப்பட்டு விட்டார்.

"அது கண்ட நான் 'நிச்சயமாக இவர் ஓர் இறை நேசச் செல்வரே (அப்தாலே) யாவார். என் மனத்திலுள்ளதை இவர் இருமுறை கூறி விட்டார்' என்று எண்ணினேன்.

"இதன்பின் நான் மினாவை அடைந்த பொழுது அங்கே அவரை மீண்டும் கண்டேன். அவர் தம் கையிலே கூஜா ஒன்றை வைத்துக் கொண்டு கிணற்றருகே நின்று கொண்டிருந்தார். அவருடைய கையிலிருந்த கூஜா தவறி கிணற்றிலே வீழ்ந்துவிட்டது. அப்பொழுது அவர் விண்ணை நோக்கிய வண்ணம் 'இறைவனே! என்னிடம் அந்தக் கூஜாவைத் தவிர்த்து வேறொன்றுமில்லை என்பதை நீ நன்கு அறிவாய். எனவே அதனை என்னை விட்டும் பிரித்து விடாதே' என்று இறைஞ்சினார். அடுத்த கணம் கிணற்றின் நீர் பொங்கியது. அதன் மீது மிதந்து கொண்டு அந்தக் கூஜா வந்தது. அதனை எடுத்துத் தண்ணீர் மொண்டு அவர் 'உளூ'ச் செய்து தொழுதார். அதன் பின் ஒரு மணல் மேட்டை நோக்கிச் சென்று சிறிது மணல் அள்ளி அந்தக் கூஜாவில் போட்டு அதனைக் கலக்கிக் குடித்தார்.

"அப்பொழுது நான் அவரை அணுகி அவருக்கு 'ஸலாம்' உரைத்து, 'தாங்கள் அருந்தியதில் எனக்கும் சிறிது தாருங்கள்' என்று கூறினேன். 'ஷகீகே! இறைவனின் அருட்கொடை வெளிப்படையாகவும் அந்தரங்க மாகவும் உள்ளது. எப்பொழுதும் இறைவன் மீது நன்னம்பிக்கையே கொள்வீராக!' என்று கூறிவிட்டு அதில் சிறிது எனக்குத் தந்தார். இறைவனின் மீது ஆணையாக, நான் அதற்கு முன் அது போன்ற ஒரு பானத்தை அருந்தியதில்லை. அது அத்துணை மணமாகவும் ருசியாகவும்

இருந்தது. அதனை அருந்திய பின் எனக்குப் பசியே ஏற்படவில்லை. பின்னர் அவர் அங்கிருந்தும் அகன்றார். அவரை நான் காணவில்லை.

''இறுதியாக, நான் மக்கமா நகர் போய்ச் சேர்ந்தேன். ஒரு நள்ளிரவில் கஃபாவின் அருகில் ஓர் இளைஞர் தொழுது கொண்டிருப்பதைக் கண்டு அவர், தாம் முன்னர் பார்த்த அந்த இளவலாக இருப்பாரோ என்று எண்ணி அவரை நெருங்கி உற்று நோக்கினேன். ஆம்; அவர், அவரே தான். அந்த இளவலே தான். அவர் மிகவும் தாழ்மையுடன் தொழுது கொண் டிருந்தார். அவர் தொழுது முடித்ததும் அவருடன் உரையாடலாம் என்று எண்ணி நானும் காத்திருந்தேன்; காத்திருந்தேன்; வைகறை வரைக் காத்திருந்தேன். அதன்பின் வைகறைத் தொழுகை தொழச் சென்றேன். அவரும் வைகறைத் தொழுகை தொழுதார். தொழுது முடிந்ததும் கஃபாவை 'தவாப்' செய்யத் துவங்கி விட்டார். தவாப் செய்து முடிந்ததும் வெளியே வந்தார். அப்பொழுது மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு அவருக்கு 'ஸலாம்' உரைத்தார்கள். நான் அவர்களில் ஒருவரை நோக்கி அவர் எவரென விசாரித்தேன். 'அவர்கள் நபி திருப்பெயரர் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்களாவர்' என்று அவர் பதிலுரைத்தார். அது கேட்டு எனக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை'' என்று கூறி முடித்தார்கள் அவர்கள்.

மற்றொரு தடவை அவர்கள் 'ஹஜ்'ஜுச் செய்ய மக்கா சென்ற பொழுது வழியில் ஒரு சப்பாணி தவழ்ந்துகொண்டு செல்வதைக் கண்டு ''நீர் எங்கிருந்து வருகிறீர்?'' என்று வினவினர். ''சமர்க்கந்திலிருந்து வருகிறேன்'' என்று அவர் பதில் கூறினார். ''எத்தனை ஆண்டுகளாக இவ்வாறு வருகிறீர்?'' என்று அவர்கள் மீண்டும் அவரை வினவினார்கள். ஓர் ஆண்டைக் குறிப்பிட்டு ''இந்த ஆண்டிலிருந்து'' என்று அவர் பதிலுரைத்தார். அவர்கள் அவர் குறிப்பிட்ட ஆண்டிலிருந்து அப்போதைய ஆண்டுவரை எண்ணிப் பார்த்தனர். அவர் புறப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு அதிகமாக இருந்தது. அது கண்டு அவர்களின் புருவங்கள் மேலேறின. வியப்புடன் அவர்கள் அவரை ஏறிட்டுப் பார்த்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, ''ஷகீகே! நீர் ஏன் என்னை வியப்புக் கண்களுடன் பார்க்கிறீர்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''இத்துணை இயலாத மனிதரான நீர் இத்துணை பார தூரமான பயணத்தை மேற்கொண்டது எனக்கு வியப்பை அளிக்காது என் செய்யும்'' என்று பதில் கூறினர். அப்பொழுது அவர், ''ஷகீகே! நான் ஆசை காரணமாக இப்பயணத்தை மேற்கொண்டேன். அதனை எளிதாக்குவது இறைவனின் பொறுப்பாகும். அப்பொறுப்பை அவன் கமந்துகொள்ளும் பொழுது நீர் வியப்புறுவதற்கு என்ன நியாயமுள்ளது?'' என்று கூறினார். அதன்பின் அவர் பின்வரும் கவிதைகளை உரத்துச் சப்தமிட்டுப் பாடினார்.

*அஸஉருக்கும் வல்ஹவா ஸஹ்புன் மஸாலிக்குஹா*

*வஷ் ஷவ்க்க யஹ்மலுமன் லமால யுஸ்யிதுஹா*

*(என் நேசர்களே! ஆசையின் காரணமாகத் தொலை தூரமான பயணத்தின் துன்பத்தையும் பொருட்படுத்தாது உங்களைத் தரிசிக்க வருகிறேன். பண வசதியில்லாதவனை ஆசைதான் சுமந்து செல்கிறது.)*

*லைஸல் முஹிப்புலதீ யஹ்ஷா மஹாலிக்கஹா*

*கல்லா வலா ஷித்தத்துல் அஸ்ஃபாரி துக்யிதுஹா*

*(இறப்பிற்கு அஞ்சுபவனும் பயணத்தின் துன்பத்தை நினைத்துச் சோர்ந்து விடுபவனும் ஆசைக்காரனல்ல)*

ஷகீக் பல்கி (ரஹ்) அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று அரசு துறந்த ஆத்மஞானி இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் அவர்களைக் காணவந்த பொழுது, ''தாங்கள் அரசு துறந்து வெளியேறும் பொழுது பல்க் நாட்டின் பக்கீர்கள் எந்நிலையில் இருந்தார்கள்?'' என்று வினவினர் அவர்கள். அதற்கு இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், ''அவர்கள் தங்களுக்கு ஏதேனும் கிடைப்பின் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவார்கள். கிடைக்காவிடின் பொறுமையை மேற்கொள்வார்கள். இந்நிலையில்தான் நான் அவர்களை விட்டுப் பிரிந்தேன்'' என்று கூறினர். அது கேட்ட ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள், ''நானும் பல்கின் நாய்களை இதே நிலையில்தான் பார்த்து வந்தேன்'' என்று கூறினர், அவர்களின் இக்கூற்று இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்களைத் தூக்கிவாரிப் போட்டது. ''நல்லது; தங்களின் கருத்துப்படி பக்கீர்கள் எப்படி இருக்க வேண்டும்?'' என்று வினவினர் இப்ராஹீம் இப்னு அத்ஹம். அதற்கு ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் மறுமொழி பகருங்கால், ''பக்கீர்கள் என்போர் தங்களுக்கு யாதும் கிடைக்காமற் போயின் பொறுமையை மேற்கொள்பவர்களாகவும், கிடைப்பின் அதைக் கொண்டு தங்களின் தேவையை நிறைவேற்றுமுன் பிறரின் தேவையை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும்'' என்று இயம்பினர். அவர்களின் இப்பதில் இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களைப் பெரிதும் பரவசப்படுத்தவே அவர்கள் ஷகீக் பல்கி (ரஹ்) அவர்களின் நெற்றியில் முத்தமிட்டு ''தாங்கள் கூறுவது தான் சரி; தாங்கள் கூறுவது தான் சரி'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்கள்.

இவ்வாறு அரசு துறந்த ஆத்ம ஞானியிடமிருந்து பாராட்டுப் பெற்ற ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் இஸ்லாத்திற்காக, இறைவனுக்காக ஆற்றப் பெற்ற மார்க்கப் போர்களிலும் கலந்து வீரப் போர் செய்துள்ளார்கள். ஒரு

தடவை அவர்கள் தம் மாணவர் ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்களுடன் மார்க்கப் போரில் கலந்துகொண்ட பொழுது, எதிரிகளின் அம்புகளும் ஈட்டி முனைகளும் அவர்களை நோக்கி நாலாபக்கங்களிலிருந்தும் வந்து கொண்டிருந்தன. அக்காலை அவர்கள் தம் மாணவர் ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்களை நோக்கி, ''நீர் சென்ற இரவு உம் மனைவியுடன் பஞ்சணையில் படுத்துறங்கியதைப் போன்ற உணர்வை இப்பொழுது நீர் பெறுகின்றீரா, என்ன?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் இல்லையே என்று மறுமொழி பகர்ந்த பொழுது, ''ஏன் நீர் அவ்வித உணர்வை இப்பொழுது பெறவில்லை? நான் அவ்வித உணர்வையே இப்பொழுது பெறுகின்றேன்'' என்று கூறினர் ஷகீக் பல்கி.

இரவானதும் ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் தாம் கூறியதற்கேற்பவே செயலாற்றினர். தங்களின் நீண்ட போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு பஞ்சணையில் படுத்துறங்குவது போன்று அவர்கள் நம்பிக்கை அணுவளவும் அசைக்க இயலாவண்ணம் போர்க்களத்தின் நடுவே அமைதியாகப் படுத்துறங்கினார்கள். இறைவன் தம்மைக் காத்தருள் புரிவான் என்ற அவர்களின் நம்பிக்கை அணுவளவும் அசைக்க இயலா வண்ணம் அனைவரும் கண்டு வியக்கத்தக்கவாறு அத்துணை வன்மையாக அமைந்திருந்தது.

ஒருநாள் அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந் தார்கள். அப்பொழுது எதிரிகள் நகரின் தலைவாசலுக்கு வந்து விட்டார்கள் என்ற செய்தி நகரெங்கணும் காட்டுத் தீ போலப் பரவியது. உடனே வாளை எடுத்துக் கொண்டு வெளியே பாய்ந்த ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் எதிரிகளை விரட்டியடித்துச் சின்னாபின்னப்படுத்தி விட்டு இல்லம் திரும்பினர். அப்பொழுது அவர்களின் மாணவர் ஒருவர் அவர்களின் தொழுகை விரிப்பின் அருகில் மலர்களை வைத்திருப்பதைக் கண்டு அவற்றை ஆவலுடன் எடுத்து முகர்ந்தார்கள். இதைப் பார்த்த ஒருவன், ''இறை மறுப்பாளர்களான எதிரிகள் நகரின் தலைவாசலுக்கு வந்து விட்டார்கள். ஆனால் முஸ்லிம்களின் இமாமோ பூக்களைத் தம் மூக்கோடு அணைத்து முகர்ந்து கொண்டுள்ளார்'' என்று கூறினான். அதுகேட்ட அவர்கள், ''நயவஞ்சகனாகிய அவன் நான் மலர்களை முகர்வதைக் காண்கின்றானேயன்றி இறைவனின் எதிரிகளை நான் விரட்டியடித்து வந்ததைக் கண்டானில்லையே'' என்று வருத்தத்துடன் கூறினர்.

ஒரு தடவை இவர்கள் 'ஹஜ்ஜு'ச் செய்துவிட்டுப் பகுதாது திரும்பிய பொழுது கலீபா ஹாரூன் அல்ரஷீது இவர்களை அரண்மனைக்கு அழைத்துவரச் செய்தார். இவர்கள் கலீபாவின் திருமுன் வந்த பொழுது கலீபா இவர்களை நோக்கி, ''தாங்கள் தாமா துறவி ஷகீக்?'' என்று

வினவினர். ''ஆம்; நான் தான் ஷகீக். ஆனால் நான் துறவியல்ல'' என்று பதில் கூறினார்கள் அவர்கள். அதன்பின் தமக்கு அறிவுரை வழங்குமாறு ஹாரூன் அல்ரஷீத் வேண்ட, ''அப்படியா! அறிவுரை வழங்குகின்றேன். கேளுங்கள்! இறைவன் தங்களை அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் இடத்தில் அமரச் செய்து தாங்கள் அவர்களே போன்று ஓர் உண்மையாள ராக நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றான். மேலும் அவன் தங்களை உமர் பாரூக் (ரலி) அவர்களின் இடத்தில் அமரச் செய்து, தாங்கள் அவர்களே போன்று பொய்மையையும், மெய்மையையும் பிரித்தறியக் கூடியவராக விளங்க வேண்டுமென்று விரும்புகின்றான். மேலும் அவன் தங்களை இரண்டு பிரகாசங்களையுடைய உதுமான் (ரலி) அவர்களின் இடத்தில் அமர்த்தி, அவர்களே போன்று தாங்களும் கண்ணியமும் தாழ்மையும் உடையவர்களாய் விளங்க வேண்டுமென்று விரும்பு கின்றான். மேலும் அவன் தங்களை அலீ (ரலி) அவர்களின் இடத்தில் அமர்த்தி அவர்களே போன்று தாங்கள் அறிவும் நீதியும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்களாக விளங்க வேண்டுமென்று விரும்புகின்றான்'' என்று கூறினர்.

அதுகேட்ட கலீபா அவர்கள் மேற்கொண்டும் தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்ட, ''இறைவன் நரகம் என்ற தங்குமிடம் ஒன்றை உண்டுபண்ணி அதன் வாயிற் காப்போனாகத் தங்களை நியமித்து, தங்களிடம் மூன்று பொருள்களை, அதாவது, செல்வம், வாள், சவுக்கு ஆகியவற்றை வழங்கியுள்ளான். இந்த மூன்றினாலும் மக்களை நரகத்தை விட்டும் அப்புறப்படுத்து. வறுமையுற்றவன் எவனும் உன்னிடம் வரின் அவனுக்குப் பணம் உதவி வழங்கி, அவனின் வறுமையை நீக்கு. இறை கட்டளைக்கு எவனும் மாறு செய்யின் அவனை இந்தச் சவுக்கால் அடித்து அறிவு புகட்டு. எவனேனும் ஒருவன் மற்றொருவனைக் கொலை செய்துவிடின் அவனை இவ்வாளினால் பழி வாங்கு'' என்று தங்களுக்குக் கட்டளை பிறப்பித்து, 'நீ இவற்றைச் செய்யவில்லையாயின், நீயே நரகவாசிகளின் தலைவனாவாய்' என்று அருள் எச்சரிக்கையும் செய்துள்ளான்'' என்று இயம்பினர்.

அதுகேட்ட கலீபா அவர்கள் மேற்கொண்டும் தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்ட, ''தாங்கள் நீரூற்று. தங்களின் செயலாளர்கள் நீரோடை. நீரூற்று பிரகாசமாகவும் தெளிவாகவும் இருப்பின் நீரோடை இருளடைந்திருப்பினும் பாதகமில்லை. ஆனால் நீரூற்று கலங்கியும், இருளடைந்தும் இருப்பின், நீரோடை பிரகாசமாகவும் இருக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க இயலும்?'' என்று அவர்கள் மொழிந்தனர்.

''இன்னும் கூறுங்கள்'' என்று கலீபா அவர்கள், வேண்ட ''தாங்கள் பாலையின் நடுவே தாகவிடாயால் துன்புற்று இறக்கும் நிலையில் ஆகிவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது தங்களுக்கு ஒரு முடக்குத் தண்ணீர் கிடைப்பின் அதற்குத் தாங்கள் எவ்வளவு பணம் வழங்குவீர்கள்'' என்று வினவினர்.

''அம்முடக்குத் தண்ணீரை எனக்கு வழங்கும் மனிதன் என்னிடம் என்ன கேட்கிறானோ அதனை நான் அவனுக்கு வழங்குவேன்'' என்று பதிலிறுத்தனர் கலீபா.

''அவன் அதற்குப் பகரமாகத் தங்களின் அரசாங்கத்தில் பாதியை வேண்டின் தாங்கள் என்ன செய்வீர்கள்?''

''அதனை நான் அவனுக்கு வழங்குவேன்''

''நல்லது; தாங்கள் அத்தண்ணீரை அருந்துகின்றீர்கள். அது தங்களுக்கு ஒத்துக் கொள்ளாததால் தங்களுக்குச் சிறுநீர் வருவது நின்றுவிடுகிறது. எனவே தாங்கள் இறக்கும் நிலையில் ஆகி விட்டீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது ஒருவன் தங்களிடம் வந்து, 'நான் தங்களுக்குச் சிகிச்சை அளிக்கின்றேன். அதற்குப் பகரமாகத் தாங்கள் எனக்குத் தங்களின் அரசாங்கத்தில் பாதியைத் தரவேண்டும்' என்று கூறின் தாங்கள் என்ன செய்வீர்கள்?''

''அதனை நான் அவனுக்கு வழங்குவேன்''

''அவ்விதமாயின் தாங்கள் அருந்தும் ஒரு முடக்குத் தண்ணீருக்கு நிகராகவும், சிறுநீராக வெளிவராத ஒரு முடக்குத் தண்ணீருக்கு நிகராகவும் உள்ள தங்களின் மாபெரும் அரசாங்கத்தைப் பற்றித் தாங்கள் ஏன் பெருமையுறுகிறீர்கள்?''

இவ்வாறு ஷகீக் பல்கி (றஹ்) அவர்கள் கூறியதும் கலீபாவின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வழிந்தோடியது. அவ்வான்றோருக்கு அளவற்ற மரியாதை செய்து அவர்களை அன்போடு அனுப்பி வைத்தனர் கலீபா.

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த இம்மேதகை, இறுதியாக ஹிஜ்ரி 194 ஆம் ஆண்டில் நடைபெற்ற மார்க்கப் போர் ஒன்றில் ஈடுபட்டுத் தங்களின் இன்னுயிரை இறைவனின் பாதையில் அர்ப்பணித்தார்கள்.

❁

# 13. சுப்யான் அத்தௌரீ (ரஹ்)

**ப**ள்ளிவாயலிலே கலீபா அவர்கள் தொழுது கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னே மக்கள் அணியணியாய் நின்று வணக்கம் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர். இறைவனின் திருமுன் கை கட்டி நிற்கும் கலீபாவின் கரம் ஒன்று மெதுவாக நீங்கி மீசையின் பக்கல் செல்கின்றது. அதனைத் தடவிக் கொடுத்து, அது சற்று நேரம் அதனைப் பிடித்து முறுக்குகிறது. இதனை ஆங்கு வீற்றிருந்த ஒரு பெரியாரின் கண்கள் கண்டுவிட்டன. கலீபா அவர்கள் தொழுது முடிந்ததும், அப்பெரியார் கலீபா அவர்களை நோக்கி, ''கலீபா அவர்களே! தாங்கள் தொழுதது சரியான தொழுகை அல்ல; மறுமையில் இறைவன் அதனைத் தங்களின் முகத்திலே கந்தல் துணியைத் தூக்கி எறிவதுபோன்று தூக்கி எறிவான்'' என்று கூறினார்.

அதுகேட்ட கலீபாவின் முகம் சிவந்தது. கண்கள் சிவந்தன. மீசை படபடத்தது. பள்ளியிலே பல்லாயிரக்கணக்கான மக்களின் மத்தியிலே வைத்து இவர் தம்மை இவ்வாறு அவமதித்து விட்டாரே என்று அடங்காச் சினம் கொண்டார் அவர். எனினும் அதனைச் சற்று அடக்கிக் கொண்டு, ''சிறிது மென்மையாகக் கூறக் கூடாதா?'' என்று இயம்பினார்.

''நான் இதனைத் தங்களிடம் கண்டிப்போடு எடுத்துரைக்கத் தவறி இருப்பின் என்னுடைய சிறுநீர் செந்நீராக மாறி இருக்குமே'' என்று துடுக்காக மறுமொழி பகர்ந்தார் அப்பெரியார்.

அப்பெரியாரின் இம்மறுமொழி கலீபாவின் வெஞ்சினத்தை அவிப்பதற்கு மாறாகக் கிளறிவிட்டது. ''இத்துடுக்கனைத் தூக்குமரத்தில் ஏற்றிக் கொன்றொழியுங்கள்'' என்ற ஆணை கலீபாவின் வாயிலிருந்தும் அனற்குண்டு போல் வெளி வந்தது.

ஆனால் அவ்வாணை கேட்டதும் அப்பெரியார் துணுக்குறவில்லை. இயல்பிலே இனியவராய், இறைவனுக்காகத் துடுக்கை மேற்கொண்டவராய் விளங்கிய அப்பெரியார், அது கேட்டுப் புன்முறுவல் பூத்தார். அப்பொழுது அவருடைய முகம், அப்பொழுது மலர்ந்த செந்தாமரையையும் வென்று ஒளிர்ந்தது.

கலீபாவின் ஆணை நகரமெங்கும் ஒரு நொடியில் காட்டுத் தீ போல் பரவிவிட்டது. அதுகேட்டு நகரமே அல்லோலகல்லோலப்பட்டது. 'தாயைக் கொன்றவனுக்கு ஊரில் பாதி' என்ற பழமொழிக்கேற்ப சிலர் கலீபாவுக்குச் சாதகமாகவும் சிலர் அப்பெரியாருக்கு ஆதரவாகவும் பேசினார்கள். 'எப்படி இருந்தாலும் அவர் கலீபாவல்லவா? அவரை ஊரறிய, உலகறிய இவ்வாறு அவமானப்படுத்தலாமா?'' என்று கூறினர் சிலர். ''கலீபாவாக இருந்தாலென்ன, வேறு எவராக இருந்தாலென்ன? இஸ்லாத்தில் அரசன், ஆண்டி என்ற பாகுபாடு ஏது? குற்றம் செய்தவர் எவராயினும் அவர் கண்டிக்கத்தக்கவர் தாம். மறுமையில் அவர் இறைவன் முன்னிலையில் அவமானமுறுவதை விடவா இது பெரிய அவமானமாகப் போய்விட்டது?'' என்று மறுத்துரைத்தனர் சிலர். சின்னாட்களாக நாட்டு மக்கள் ஒவ்வொருவர் வாயிலும் இதே பேச்சாகவே இருந்தது.

அப்பெரியாரைத் தூக்கு மேடையில் ஏற்றுவதற்கான நாள் நெருங்க, நெருங்க மக்களின் இதயங்கள் உணர்ச்சி மீக்குற்று வேகமாகத் துடிக்கலாயின. அத்துடன் போட்டியிட்டுக் கொண்டு அவர்களின் உதடுகளும் துடித்தன. அப்பொழுது அவர்களின் உள்ள உணர்ச்சிகளை அவர்களின் நாவுகள் சொல் வடிவில் ஆக்கி வெளியே தள்ளிக் கொண்டிருந்தன.

இவையொன்றும் அப்பெரியாருக்குத் தெரியாது. அவர்கள் அமைதியாகத் தம் தியான அறையில் அமர்ந்து இறைவனைத் தியானித்துக் கொண்டிருந்தார்கள். திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்ற வண்ணம் அவர்களுக்கு இக்காலை இறைவனேயன்றி வேறு எவரும் துணை இல்லை.

அவர்களைத் தூக்குமேடையில் ஏற்றுவதற்கான நாளும் புலர்ந்தது. ஆனால் அந்நாள் தான், தம்மைத் தூக்குமேடையில் ஏற்றுவதற்கான நாள் என்பது அவர்களுக்குத் தெரியாது. தம் தலையை இறைநேசச் செல்வர் ஒருவரின் நெஞ்சிலேயும் தம் பாதங்களை மற்றோர் இறைநேசச் செல்வரான சுப்யான் இப்னு உயைனாவின் மடியிலேயும் வைத்த வண்ணம் அவர்கள் அமர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். தூக்குமேடை தயாராகிக் கொண்டிருப்பதை அவ்விரு இறைநேசச் செல்வர்களும் அறிய வந்ததும் நாம் இதுபற்றி அவர்களிடம் கூறக்கூடாது என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். இது அப்பெரியாரின் செவிப்பட்டதும், கண் மலர்ந்த அவர்கள், ''எது பற்றி என்னிடம் கூறக்கூடாது என்கிறீர்கள்?'' என்று திருவாய் மலர்ந்தனர். ''இனிமேல் அதனை அவர்களிடம் மறைத்தல் கூடாது என்பதை நன்கு உணர்ந்து கொண்ட அவ்விருவரும்,

நிலைமையைப் பற்றி அவர்களிடம் பெரிதும் வருத்தத்துடன் எடுத்துரைத்தார்கள். அதுகேட்ட அப்பெரியார், ''எனக்கு உலகப்பற்றும் இல்லை. உலகில் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று ஆசையும் இல்லை. எனினும் ஒருவன் இவ்வுலகில் உயிரோடு வாழும் வரையில் அவன் தன் கடமையை ஆற்றித் தான் தீரவேண்டும்'' என்று கூறினர். இதன்பின் அவர்கள் தம் கையை விண்ணை நோக்கி உயர்த்திய வண்ணம், ''இறைவனே! அவர்களைப் பலமான பிடியாகப் பிடிப்பாயாக!'' என்று இறைஞ்சினர். அப்பொழுது அவர்களின் கண்களில் ஊறிய கண்ணீர் வெள்ளம் அவர்களின் கன்னங்களில் கரை புரண்டோடியது.

அவர்கள் இவ்வாறு இறைஞ்சித் தங்களின் கைகளைக் கீழே போட்டார்கள். அடுத்த கணம் அதிர்ச்சி தரும் பேரொலி ஒன்று முழங்கியது. ''எங்கேயோ இடி விழுந்து விட்டது. எங்கேயோ இடி விழுந்து விட்டது'' என்று மக்கள் தெருவிலே பேசிக்கொண்டு செல்வதும் அவர்களின் செவிப்பட்டது. ஆனால் அது எங்கே விழுந்தது என்பதுதான் ஆங்குள்ளோர் எவருக்கும் தெரியாததாக இருந்தது. அது தூக்கு மேடையில் வீழ்ந்திருக்குமோ என்று தெருவிலே செல்லும் ஒருவர் கூறியதும் அவர்களின் செவிப்பட்டது. ''இல்லை; அப்படியெல்லாம் இருக்காது'' என்று மற்றொருவர் கூறியதும் அவர்களின் செவியில் வீழ்ந்தது. ''விழ வேண்டிய இடத்தில் வீழ்ந்திருக்கும்'' என்று மற்றொருவர் கூறி வாய் மூடுமுன், ''கலீபாவின் தலையிலே இடி விழுந்து விட்டது. கலீபாவும் அவரின் குடும்பத்தினரும் அழிந்தொழிந்தனர். அரண்மனையே அழிந்து நாசமாகிவிட்டது'' என்ற பெரும் கூச்சல் தெருவிலே கேட்டது. அப்பெரும் கூச்சல் வெறும் கூச்சலல்ல. உண்மையான கூச்சல். உண்மையில் அவ்விதமே நிகழ்ந்துவிட்டது. கலீபாவும் அவரின் குடும்பத்தினரும் அழிந்தொழிந்து விட்டார்கள்.

இத்தகு அற்புதம் நிகழ்த்திய அறவாளர், இறைவனால் தம் இறைஞ்சுதல் ஏற்றக் கொள்ளப்படும் அரும் பேறு பெற்ற நெறியாளர் அபூ அப்துல்லா சுப்யான் இப்னு ஸைத் அத்தௌரீ கூஃபாவில் ஹிஜ்ரி 97 (கி.பி. 715) ஆம் ஆண்டில் பிறந்தார்கள். இவர்கள் அன்னையின் வயிற்றில் இருக்கும் பொழுதே அற்புதம் நிகழ்த்தினார்களென்றும் இவர்களைக் கருவுற்றிருக்குங்கால் தம் இல்லத்தின் மேல் முகட்டிற்குச் சென்ற இவர்களின் அன்னை பக்கத்து வீட்டு மேல் முகட்டில் காய வைக்கப்பட்டிருந்த ஊறுகாயைக் கண்டு வாய் ஊறப்பெற்று அதனை எடுத்து வாயில் போடப் போகுங்கால் வயிற்றிலிருந்த இவர்கள் ஓங்கித் தம் கால்களால் ஓர் உதை விட்டதாகவும் அதன் காரணமாக அன்னையின் கையிலிருந்த ஊறுகாய் நழுவிக் கீழே வீழ்ந்து விட்டதாகவும் ஒரு வரலாறு எடுத்துரைக்கின்றது.

இளமையில் தம் தந்தையாரிடம் கல்வி பயின்ற இவர்கள் பின்னர் பற்பல ஆசிரியர்களையும் அணுகிக் கல்வி பயின்றனர். ஒருநாள் ஓர் ஆசிரியரிடம் சென்று கல்வி பயின்று இல்லம் திரும்புங்கால், வழியில் ஒரு வீட்டு அருகில் நிழல் இருப்பதைக் கண்டு அங்கு வீற்றிருந்து தாம் ஆசிரியரிடம் பயின்ற பாடங்களைத் திரும்பப் படித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது எவனோ ஒருவன் அவ்வீட்டினுள் நுழைந்து ஆங்கிருந்த சில பொருள்களைக் களவாடிச் சென்று விட்டான். வீட்டுக்காரன் அவனைப் பிடிப்பதற்காக வெளியே வந்த பொழுது, ஆங்கு இவர்கள் வீற்றிருப்பதைக் கண்டு இவர்கள் தாம் திருடியிருக்க வேண்டும் என்று எண்ணி இவர்கள் மீது திருட்டுக் குற்றம் சாட்டிப் பிடித்துக் கொண்டான். அப்பொழுது இவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக, ''இறைவனே! நான் நிரபராதி என்பதை நீ நன்கு அறிவாய். ஆனால் இவரோ என்னைத் திருடன் என்று கூறுகிறார். எனக்கு உன்னைத் தவிர யாதோர் உறுதுணையு மில்லை. எனக்கு உன்னைத் தவிர யாதொரு சாட்சியுமில்லை'' என்று கூறி இறைஞ்சினர்.

இவ்வாறு அவர்கள் இறைஞ்சிக் கையைக் கீழே போடுமுன், ''நான் தான் திருடன், நான் தான் திருடன். கப்யானை விட்டுவிடும். இதோ நான் திருடிச் சென்ற பொருள்கள். எடுத்துக் கொள்ளும்'' என்று கூறிக்கொண்டு அங்கு ஒருவன் ஓடோடி வந்தான்.

''என்ன இது! ஏன் இவ்வாறு அலறிக் கொண்டு ஓடி வருகிறாய்?'' என்று வீட்டுக்காரன் அவனை வினவிய பொழுது, ''அதை ஏன் கேட்கிறீர் ஐயா! நான் திருடியதும் போதும்; பட்டபாடும் போதும் என்றாகி விட்டது. உம் வீட்டில் நுழைந்து அங்கிருந்த பொருள்கள் சிலவற்றைத் திருடிக் கொண்டு சற்றுத் தொலைதான் சென்றிருப்பேன். அப்பொழுது ஓர் அசரீரி திருடிய பொருளைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, கப்யானை விடுவி. இல்லையெனில் நீ இக்கணமே அழிந்தொழிவாய் என்று முழங்கியது. அதுகேட்டு அதிர்ந்து போய் இங்கு ஓடோடி வந்தேன்'' என்று மூச்சுத் திணறக் கூறினான் அவன்.

இவ்வாறு இளமையிலேயே அற்புதம் நிகழ்த்திய இப்பெருந்தகை, அபூ இஸ்ஹாக், அஸ்ஸாபி, அல் அஃமஷ் ஆகிய பற்பல அறிஞர்களை அணுகி அவர்களின் காலடியில் அமர்ந்து ஹதீதுக் கலையையும், பிக்ஹுக் கலையையும் பயின்றனர். ஹதீதுக் கலையைப் பயின்ற இவர்கள், அவற்றைப் பயின்றதோடு தம் அலுவல் முடிந்துவிட்டது என்று எண்ணாது அவற்றைத் தம் வாழ்விலும் தம் அன்றாட அலுவலிலும் செயலாற்றத் துவங்கினர். இதைப் பற்றி இவர்கள் ஒரு தடவை கூறிய பொழுது, ''நான் பயின்ற எந்த ஹதீதையும் நான் செயலாற்றாதிருந்த தில்லை'' என்று அடக்கத்துடன் எடுத்துரைத்தார்கள்.

மற்றொரு தடவை இவர்கள் ஹதீதுக் கலை விற்பன்னர்களை நோக்கி, ''ஹதீதுக் கலை விற்பன்னர்களே! ஹதீதுகளுக்கு 'ஜகாத்' கொடுங்கள்'' என்று கூறினர். அதன் உட்பொருளை விளங்காத அவர்கள் அதனை விளக்கிக் கூறுமாறு வேண்ட, ''நீங்கள் பயின்ற இரு நூறு ஹதீதுகளில் ஐந்து ஹதீதுகளையாவது நீங்கள் செயலாற்றுங்கள்'' என்று அவர்கள் விளக்கம் பகர்ந்தார்கள், மேலும் அவர்கள் கூறும்பொழுது, ''பெரியோர்கள் நற்செயல்களைக் கற்றுக் கொண்டது போன்று, அவற்றைச் செயல்படுத்த வேண்டிய நல்லெண்ணத்தையும் கற்றுக் கொண்டார்கள்'' என்று எடுத்துரைத்தார்கள்.

இவர்களின் இயற்பெயர் சுப்யான் என்பதாக இருந்த போதினும், இவர்கள் வரலாற்றில் சுப்யான் அத்தௌரீ என்றே இடம் பெறுகிறார்கள். இவர்களின் இயற் பெயரோடு 'தௌரீ' என்ற அடைமொழி சேர்க்கப் பட்டதே ஓர் அற்புத வரலாறாகும். ஒரு தடவை இவர்கள், பள்ளிவாயலில் நுழையும் பொழுது தங்களின் இடது காலை மறதியாக முதலில் முன் வைத்து விட்டார்கள். அப்பொழுது 'தௌர்' (மாடே) என்று அசரீரி ஒலி கேட்டதும் திடுக்குற்ற இவர்கள் அக்கணமே உணர்ச்சியற்ற நிலையில் கீழே வீழ்ந்து விட்டனர். பின்னர் மயக்கம் தெளிந்து எழுந்தபொழுது தம் தாடியை ஒரு கையால் பிடித்துக் கொண்டு ''யா தௌர்' யா தௌர்!! என்ன தவறு செய்தாய்? என்ன தவறு செய்தாய்?'' என்று கூறி மற்றொரு கையால் தம் கன்னத்தில் அறைந்து கொண்டார்கள். இதன் பின் இவர்கள் தங்களைப் பற்றிக் கூறும் பொழுதெல்லாம் தௌர், தௌர் என்றே கூறினார்கள். இதுவே, இறைவனால் இவர்களுக்குச் சூட்டப் பெற்ற இத்திருப் பெயரே இவர்களின் இயற்பெயரை விடச் சிறப்புற்று விளங்கலாயிற்று.*

இவர்கள் தங்களை மாடு என்று பொருள்படும் 'தௌர்' என்று அழைத்துக் கொண்ட போதினும் மக்கள் இவர்களின் அறிவு மேதையையும் சான்றாண்மையையும் நன்கு உணர்ந்து, இவர்களை 'அமீருல் மூமினீன்' என்று அழைத்துக் கௌரவித்தனர். இவர்கள் 'முஜ்தஹித்' களில் ஒருவராகவும் கருதப்படுகின்றனர். தம் காலத்தில் மேலானவராக உமர் (ரலி) அவர்கள் இருந்தனர் என்றும், அவர்களுக்குப் பின்னுள்ள காலத்தில் அப்துல்லா இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மேலானவராக இருந்தனர் என்றும் அவர்களுக்குப் பின்னுள்ள காலத்தில் அஸ்ஸாபி, அல் அஃமஷ் ஆகியோர் மேலானவராக இருந்தனர் என்றும்,

★ இவர்களின் மூதாதையான தௌர் பின் அப்து மனாத்தின் பெயரால் இவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டதென்றும் ஒரு வரலாறு உள்ளது.

அவர்களுக்குப் பின்னுள்ள காலத்தில் சுப்யான் அத்தௌரியே மேலானவராக இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களின் மாண்பினைப்பற்றி கேள்வியுற்ற இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள், இவர்களைத் தாம் சந்திக்க விரும்புவதாகச் சொல்லி ஆள் அனுப்ப, ''சரி, வரச் சொல்லுங்கள்' 'என்று கூறாது, ''இதோ வந்து விட்டேன்'' என்று கூறி அவர்களைக் காணச் சென்றுவிட்டனர். தாம் காணச் செல்ல விரும்பிய அப்புனிதர் தம்மைக்காண்பதற்காகத் தம்முன் வந்து நிற்பதைக் கண்டதும், இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. ''தாங்கள் தங்களின் அன்னையின் வயிற்றிலிருக்கும் பொழுதே பேணுதலுடையவர்கள் என்று நான் கேள்வியுற்றிருந்தேன். அதனைச் சோதித்துப் பார்ப்பதற்காகவே நான் ஆள் அனுப்பினேன். அச்சோதனையில் தாங்கள் வெற்றி பெற்றீர்கள்'' என்று இவர்களை நோக்கி மகிழ்ச்சி மொழி பகர்ந்தனர் இப்ராஹீம் இப்னு அத்ஹம்.

இவர்களைப் பற்றி சுப்யான் இப்னு உயைனா கூறும் பொழுது, ''மார்க்கத்தில் விதிக்கப்பட்டதையும் விலக்கப்பட்டதையும் இவர்களை விட மேலாக அறிந்த ஒருவரைத் தாம் கண்டதில்லை'' என்று இவர்கள் மீது புகழ்மாலை தொடுக்கின்றார்கள்.

ஆம்; இவர்கள் அத்தகு புகழ்மாலையைப் பெறுவதற்கு முழுக்க முழுக்க உரிமையாளர்களேயன்றி வேறில்லை. ஒரு நாள் இவர்கள் தம் தோழர் ஒருவருடன் தெருவில் நடந்து சென்றக்கால் செல்வர் ஒருவரின் மாளிகையை இவர்களின் தோழர் வியப்புக் கண்களுடன் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டு நின்ற பொழுது அது கண்டு வெகுண்டு சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்கள் ''நீங்களும் உங்களைப் போன்றோரும் இத்தகைய மாளிகைகளை ஏறிட்டும் பார்க்காதிருப்பின் அவர்கள் இத்தகைய வீண் ஆடம்பரங்களில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். அவற்றை நீங்கள் ஏறிட்டுப் பார்த்து வியப்புறுவதன் மூலம் நீங்களும் அவர்களின் இந்தக் கடப்பான வீண் ஆடம்பரச் செயலுக்கு உடந்தையாகின்றீர்கள்'' என்று இடித்துரைத்தார்கள்.

மார்க்கமறியா மூடர்களின் செயல்களை மட்டுமல்ல, அத்தகைய மூடர்களை ஏறிட்டுப் பார்ப்பதும் தவறு என்பது அவர்களின் கருத்தாக இருந்தது.

பேணுதலே உன் மறுபெயர்தான் சுப்யான் அத்தௌரீ என்று கூறுமாப் போன்று அவர்களின் ஒவ்வொரு செயலும் அமைந்திருந்தது. ஒருநாள் தையற்காரன் ஒருவன் அவர்களை அணுகி, ''நான் அரசருக்கு உடை

தைக்கிறேன். அவ்விதம் செய்வதன் காரணமாக நான் அநியாயக்காரனுக்கு உதவி செய்தவன் ஆவேனா?'' என்று வினவிய பொழுது அதற்கு அவர்கள் அளித்த பதில், ''நீ அநியாயக்காரனுக்கு உதவி செய்தவனல்ல. உனக்கு ஊசியும் நூலும் விற்றானே, அவன் தான் அநியாயக்காரனுக்கு உதவி செய்தவனாவான்'' என்று கூறி, ''நீயும் ஓர் அநியாயக்காரன் தான். காரணம், நீ அநியாயக்கார அரசனுக்கு உதவி செய்தாய்'' என்று கூறாமல் கூறினர்.

எறும்புக்கும் அநியாயம் செய்வதை அஞ்சிய அவர்கள் அநியாயக் காரர்களுக்கு உதவுவதும் பெரும்பாவம் என்று கருதினார்கள். ''அநியாயக் காரன் ஒருவன் ஆபத்தான நிலையில் இருக்கிறான். தண்ணீராவது அவன் குடித்தாக வேண்டும். இல்லையெனில் அவன் இறந்துவிடுவான் போல் தோன்றுகிறது. இந்நிலையில் அவனுக்குத் தண்ணீர் கொடுக்கலாமா?'' என்று அவர்களிடம் வினவப்பட்ட பொழுது அவர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி ''அவனை அப்படியே விட்டுவிடுங்கள். அவன் செத்துத் தொலையட்டும்'' என்று பதிலிறுத்தார்கள்.

இறைவனின் திருப்தியிலேயே அவர்களின் திருப்தியும் அமைந் திருந்தது. ஒருநாள் அவர்கள் தங்களின் சட்டையை உட்புறம் வெளியில் இருக்கும் வண்ணம் மாற்றி அணிந்திருந்தார்கள். இதனை ஒருவர் அவர்களிடம் எடுத்துரைத்த பொழுது அதனைக் கழற்றி ஒழுங்காக அணிய முற்பட்டார்கள் அவர்கள். ஆனால் அம்முயற்சியை அவர்கள் திடீரென விட்டொழித்தனர். அப்பொழுது அவர்களின் வாய், ''நான் இதனை இறைவனுக்காகவே அணிந்துள்ளேன். எனவே நான் இதனை மக்களுக்காக மாற்றி அணிய விரும்பவில்லை'' என்று முணுமுணுத்தது.

இறைவன் விட்ட விதியை அவர்கள் இனிய முகத்துடனும் இன்ப உள்ளத்துடனும் ஏற்றுக் கொள்ளும் இயல்பினராக இருந்தனர். அவர்களின் மகவு ஒன்று இறந்து விட்ட பொழுது, அவர்கள் அழுது கண்ணீர் வடிக்கவும் இல்லை. ஆறாப் பெரும் துயரில் ஆழவுமில்லை. அதற்கு மாறாக, அவர்கள் ''இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்'' (இறைவனிடமிருந்தே வந்தோம். இறைவனிடமே மீள்வோம்) என்று கூறிப் பொறுமையை மேற்கொண்டதோடு, எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று கூறி இறைவனைத் துதி செய்தார்கள். மேலும் அவர்கள் 'சுப்ர்' என்பது ''துன்ப வேளையில் இறைவன் மீது குறை கூறாதிருப்பதோடு, அத்துன்பத்தை இன்பமாகக் கருதி அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவதுமாகும்'' என்று கூறினார்கள்.

அவர்கள் பிரபல்யத்தை விரும்பவில்லை. மாறாக, அதனை வெறுத்தார்கள். இழிவாகவும் கருதினார்கள். ''தற்போதைய மனிதர்களைப்

பார்த்தால் அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தால் நல்லது போன்று தோன்றுகிறது. அவர்கள் பாவம் செய்யாமலாவது இருப்பர்'' என்று அவர்கள் கூறினர்.

மேலும் அவர்கள் இது பற்றிக் கூறுங்கால், ''இது மிகவும் கெட்ட காலம். பிரபலமில்லாதவர்களுக்கே இக்காலத்தில் பல ஆபத்துக்கள் இருக்கும்பொழுது பிரபலமானவர்களைப் பற்றிக் கூற வேண்டியதே இல்லை. எனவே ஒருவன் தன்னைப் பிறர் அறிந்திருக்கும் இடத்தி லிருந்து, தன்னை எவரும் அறியாத இடத்திற்கு ஓடிச் சென்று விடுவதே இக்காலத்தில் சாலச் சிறந்த செயலாகும்'' என்று கூறினர்.

பிரபலத்தை விரும்பாத அவர்கள் தங்களின் பெரும்பாலான வணக்கங்களை மறைவாகவே செய்து வந்தார்கள். ''நான் வெளிப்படை யாகச் செய்யும் எந்தச் செயலையும் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை'' என்று தம்மைப் பற்றி அடிக்கடி கூறிக் கொள்ளும் அவர்கள், பிறர் மெச்சச் செய்யப்படும் எந்த வணக்கத்தையும் வெறுக்கவும் கண்டிக்கவும் செய்தார்கள். அவர்களின் நண்பர் ஒருவர் நஃபிலான தொழுகைகளைப் பிறர் முன்னிலையில் தொழுது கொண்டிருப்பதைக் கண்ட அவர்கள், ''மறைவாகத் தொழ வேண்டிய தொழுகைகளைப் பிறர் காணும் வண்ணம் தொழ உமக்கு என்ன உத்தண்டம், என்ன உத்தண்டம்?'' என்று அலறினார்கள்.

''ஒருவன் மறைவாக ஒரு நற்செயலை ஆற்றின், அதனை அவன் வெளியே சொல்லும் வரை ஷைத்தான் அவனை விட மாட்டான். அதனை மறைவான பேரேட்டிலிருந்து அப்புறப்படுத்தி, அது பகிரங்கப் பேரேட்டில் எழுதப்படும் வரை ஷைத்தான் ஓய்வு கொள்ள மாட்டான்'' என்று அவர்கள் கூறினர்.

அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் இரகசியமான முறையில் அபார வணக்கத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்ட அவர்களின் நெருங்கிய தோழர்கள், ''தாங்கள் சிறிது குறைவாக வணக்கம் நிகழ்த்திய போதிலும், தாங்கள் விரும்பும் இறை திருப்தி தங்களுக்குக் கிடைக்கத்தானே செய்யும்?'' என்று கூறினர். அப்பொழுது அவர்கள் தம் தோழர்களை நோக்கி, ''நான், என்னால் இயன்ற வரையில் தானே வணக்கம் நிகழ்த்து கிறேன். நான் சில பெரியோர்கள் சொல்லக் கேள்வியுற்றுள்ளேன். சுவனவாசிகள் தங்களின் இருப்பிடங்களில் அமர்ந்து இறைவனை வழுத்திக் கொண்டிருப்பராம். அப்பொழுது அவர்களின் முன் ஒரு பேரொளி ஒளிருமாம். அதன் காரணமாக எட்டுச் சுவனங்களும் தேசோ மயமாகக் காட்சி வழங்குமாம். அஃது அல்லாஹ்வின் பேரொளியாகத் தான் இருக்க வேண்டுமென்று எண்ணி அவர்கள் அனைவரும்

தலைகுப்புற 'ஸஜ்தா' வில் விழுந்து விடுவராம். அப்பொழுது 'நீங்கள் அனைவரும் உங்களின் தலையை உயர்த்துங்கள். இது அல்லாஹ்வின் பேரொளியன்று. சுவனத்துக் கண்ணழகி ஒருத்தி தன் கணவனை நோக்கித் தன் முத்துப் பற்களைக் காட்டிப் புன்முறுவல் பூத்ததனால் ஏற்பட்ட பேரொளியாகும்' என்று அசரீரி முழங்குமாம். அதற்காக அவர்கள் குறை கூறப்படமாட்டார்களாம். நிலைமை இவ்வாறிருக்க, நான் இறைவனின் திருப்பொருத்தத்தைப் பெறுவதற்காக அவனை வணங்குவதை நீங்கள் குறை கூறுகிறீர்களே'' என்று இயம்பினார்கள்.

அவர்களுக்கு இறைவன் மீதுள்ள காதலோ அளப்பரியதாக இருந்தது. ''அவன் நம் குழந்தைகளையெல்லாம் கொன்றொழித்து நம் உடைமைகளையெல்லாம் அழித்தொழித்த போதினும் சரி, நமக்கு அவன் மீதுள்ள காதல் அணுவத்தனையும் குறையாது. அவனை நாம் போற்றிப் புகழ்ந்து வணங்கிக் கொண்டே இருப்போம்'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஒருநாள் அவர்கள் தண்ணீர்ப் பையைத் தோளில் சுமந்த வண்ணம் தெருவழியே நடந்து செல்வதைக் கண்ட ஒருவர், ''தாங்கள் எங்குச் செல்கின்றீர்கள்'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''இன்ன ஊரில் கோதுமை மலிவாகக் கிடைப்பதால் அங்குச் செல்கிறேன்'' என்று விடையிறுத்தார்கள். ''இதன் காரணமாக அங்குச் செல்வது சரியா?'' என்று மீண்டும் அவர் வினவிய பொழுது, ''எங்கு உணவுப் பொருள் சிரமமின்றிக் கிடைக்கிறதோ, அங்கு ஒருவனுக்கு மார்க்கத்தின் மீதுள்ள பற்று உறுதியாவதுடன், அவன் மன ஒருமையுடன் வணக்கத்தில் ஈடுபடவும் வழி ஏற்படுகிறது'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

அவர்கள் தங்களை ஷைத்தானின் ஊசாட்டங்களை விட்டுப் பெரிதும் காத்துக் கொண்டனர். ஒரு நாள் அவர்கள் குளியலறையில் நிற்குங்கால், பருவம் எய்தா அழகிய இளவல் ஒருவன் ஆங்கு வந்ததும் திடுக்குற்றுவிட்ட அவர்கள் அவனை அங்கிருந்தும் வெளியேற்றி விடுமாறு அலறினார்கள். காரணம் வினவப்பட்ட பொழுது, ''ஒரு பெண்ணுடன் ஒரு ஷைத்தான் தான் உள்ளான். ஆனால் பருவமெய்தா இளவலுடனோ பதினெட்டு ஷைத்தான்கள் உள்ளனர். அவர்கள் அவனை மனிதர்களின் கண்களுக்கு அழகாகக் காட்டுகின்றார்கள்'' என்று பதில் கூறினார்கள்.

அவர்கள் எவரிடமிருந்தும் எத்தகைய அன்பளிப்புகளையும் பெறுவதில்லை. ஒருவன் அன்பளிப்பாக அவர்களிடம் சில பொருள்களைக் கொண்டு வந்த பொழுது, அவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். அப்பொழுது அவர், ''நான் தங்களிடமிருந்து ஒரு

போதேனும் ஹதீதுகளைப் பயிலவில்லையே'' என்று கூறிய பொழுது, ''நீர் பயிலாத போதினும், உம் உடன் பிறந்தோர் பயின்றுள்ளனர். எனவே நான் இவற்றை உம்மிடமிருந்து பெறுவேனாயின் மற்றவர்கள் மீது நான் கொண்டுள்ள அன்பை விட உம் உடன் பிறந்தார் மீது நான் அதிக அன்பு கொள்ள ஏதுவாகும் என்று அஞ்சுகிறேன்'' என்று அவர்கள் பதிலுரைத் தார்கள்.

மற்றொரு நாள் ஒருவர் இரண்டு பணப்பைகளை அவர்களிடம் கொண்டு வந்து, ''காலம் சென்ற என் தந்தையார் தங்களின் உற்ற நண்பர். அவர் நேரிய முறையில் ஈட்டிய பொருள்களிலிருந்து எனக்குக் கிடைத்தவையாகும் இவை. இவற்றைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று வேண்டி நின்றார். அவர்களும் அவற்றை ஏற்றுக் கொண்டார்கள். அவர் சென்றதும் அவரின் தந்தையைத் தாம் அல்லாஹ்வுக்காகவே அன்றி வேறு எதற்காகவும் நேசிக்கவில்லை என்பது நினைவிற்கு வரவே, உடனே அவற்றைத் தன் மகன் கையில் கொடுத்து அவற்றைத் தந்தவரிடம் திருப்பி அளித்து விட்டு வருமாறு பணித்தனர். அவ்விதமே செய்து விட்டுத் திரும்பிய அவர்களின் மைந்தர் ஆறாத் துயருடன் தம் தந்தையை நோக்கி, ''நான் கையில் அரைக்காசு மின்றி வறுமையில் உழல்வதைத் தாங்கள் நேரில் பார்த்துக் கொண் டிருக்கும் தாங்கள் இவ்வாறு செய்து விட்டீர்களே. தங்களின் மனம் கல்லாய் விட்டதா?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''மகனே! அவற்றைக் கொண்டு நீ வசதியுடன் வாழ்ந்திருக்கலாமே என்று எண்ணுகிறாய். மறுமையில் அவற்றைப் பற்றி இறைவன் என்னிடம் தான் கேள்வி கேட்பான். அப்பொழுது நான் என்ன பதில் கூறுவது'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

அவர்கள் உண்மையான துறவியாக விளங்கி வந்தனர். ''எவருடைய துறவு வாயளவில் நின்று விடுகின்றதோ அது துறவல்ல. உண்மைத் துறவு என்பது உலக ஆசாபாசங்களில் உழலாதிருப்பதும், பேராசை கொள்ளா திருப்பதுமாகும்'' என்று அவர்கள் கூறினர். அவர்கள் செல்வர்களுக்கு மதிப்பு கொடுக்கவில்லை. செல்வத்திற்கும் மதிப்பு கொடுக்கவில்லை. அவர்கள் செல்வர்களைத் தங்களின் சபையில் எல்லோருக்கும் இறுதியாகவே நுழைய அனுமதித்தனர். செல்வர்கள் அவர்களின் சபையில் கடைசி அணியிலேயே அமர்ந்திருந்தார்கள். தாங்களும் ஏழைகளாக இருக்கக் கூடாதா என்று செல்வர்கள் எண்ணும் அளவுக்கு அவர்கள் ஏழைகளுக்கு தம் சபையில் மதிப்புக் கொடுத்தார்கள்.

அவர்கள் கலீபாவின் அரண்மனைக்குச் செல்வதை வெறுத்தனர். அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவப்பட்ட பொழுது 'கலீபா

என்னை அங்கு அவமானப்படுத்தி விடுவாரோ என்று நான் அஞ்ச வில்லை. அதற்கு மாறாக அவர் எனக்கு மதிப்பளித்துக் கௌரவிப்பாரோ, அதனால் எனக்கு அவர் மீது ஒரு தனிப்பட்ட அன்பும் வாஞ்சையும் ஏற்பட்டு விடுமோ என்று தான் நான் அஞ்சுகிறேன்'' என்று அவர்கள் கூறினார்கள்.

மேலும் அவர்கள் கூறும் பொழுது ''ஒரு தர்வேஷ், செல்வர் களுடையவோ அதிகாரிகளுடையவோ நட்புறவை விரும்புவானாயின், அவன் ஒரு நயவஞ்சகனேயன்றி வேறில்லை. அவன் அரசவைக்குப் போக வர இருப்பின் அவன் ஒரு திருடனேயன்றி வேறில்லை'' என மொழிந்தார்கள்.

அவர்கள் நல்லோர்களின் நட்பை நாடி, அவர்களைச் சென்று கண்டு வருவதைத் தங்களின் நீங்காத வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒரு நாள் அவர்கள் தம் நண்பர் முஹம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்களை நோக்கி, ''நான் அல்லாஹ்வின் அருள் நேசர் ஒருவரைச் சந்திக்கப் போகிறேன். தாங்களும் என்னுடன் வருகிறீர்களா?'' என்று வினவினர். அதற்கு அவர்களும் இணங்கித் தம் இல்லம் சென்று ஒரு ரொட்டியை எடுத்து வந்தனர். அதன் பின் இருவரும் நடந்து சென்று பஸராவிலிருந்து சற்றுத் தொலைவில் மக்கள் நடமாட்டமில்லாத ஒரு பகுதியில் இருந்த ஒரு சிறு இல்லத்தை அடைந்தார்கள். அப்பொழுது வீட்டிற்குள் அப்பெரியாரின் குழந்தைகள் உணவு வேண்டி அவருடன் சண்டையிடுகிற சப்தமும் அதற்கு அவர் ''எந்த இறைவன் உங்களுக்கு வயிற்றையும் பற்களையும் தந்தானோ, அவன் உங்களுக்கு உணவளிக்கப் போது மானவன்'' என்று ஆறுதல் கூறும் ஒலியும் அவர்களின் செவியை வந்தடைந்தன.

இருவரும் கதவைத் தட்டினார்கள்.

''யார் அது?'' என்று உள்ளிருந்து சப்தம் வந்தது.

''முஹம்மதும் ஸுஃப்யானும் வந்துள்ளோம்'' என்று பதிலுரைத் தார்கள்.

கதவைத் திறந்த அவர், 'வாருங்கள்' என்று வரவேற்று 'வந்த அலுவல் யாதோ?' என்று விசாரித்தார்.

அதற்கு முஹம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்கள், ''குழந்தைகளுக்காக ரொட்டி கொணர்ந்தோம்'' என்று கூறினர்.

''கொடுங்கள்; சரியான நேரத்தில் கொண்டு வந்தீர்கள்'' என்று அவர் கூறினார்.

நாங்கள் அதனை அவரிடம் கொடுக்க, அதனை அவர் எடுத்துச் சென்று தம் மக்களிடம் பங்கிட்டுக் கொடுத்தார்.

சற்று நேரத்தில் மீண்டும் கதவு தட்டும் சப்தம் கேட்டது.

''யார் அது?'' என்று வினவினார் அவர்.

''மாலிக் இப்னு தீனார்'' என்று வெளியிலிருந்து மறுமொழி வந்தது.

உடனே சென்று கதவைத் திறந்த அவர், அவர்களை வரவேற்று ''வந்த அலுவல் யாது?'' என்று வினவினார்.

''தங்களின் மக்களுக்காக இரண்டு திர்ஹங்களைக் கொண்டு வந்தேன்'' என்றார்கள் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள்.

அதற்கு அவர், ''முஹம்மது, அவர்களின் இன்றையத் தேவையை நிறைவேற்றி விட்டார். எனவே அவை தேவை இல்லை'' என்று கூறினார்.

''வைத்துக் கொள்ளுங்கள்; அவை நாளைக்குப் பயன்படும்'' என்று கூறி அந்தத் திர்ஹங்களை அவரிடம் நீட்டினர் மாலிக் (ரஹ்).

அப்பொழுது அவர், ''என்ன மாலிக்! நீர் என்னை வறுமையைப் பற்றிப் பயமுறுத்துகின்றீரா, என்ன? இறைவன் மீது ஆணையாக! நீர் என்னிடம் இனிமேல் வரவேண்டியதில்லை'' என்று கூறினார். அதுகேட்டு மாலிக் (ரஹ்) அவர்கள் திரும்பிவிட்டனர்.

சற்று நேரம் அவருடன் உரையாடி விட்டு முஹம்மது இப்னு வாஸிஃ (ரஹ்) அவர்களும் ஸுஃப்யான் (ரஹ்) அவர்களும் தம் இல்லம் திரும்பினர். அப்பொழுது முஹம்மது (ரஹ்) அவர்கள் ஸுஃப்யான் (ரஹ்) அவர்களை நோக்கி, ''இத்துணை வறுமையிலும் அவர் எத்துணைத் திண்மையுடன் இருக்கிறார் என்பதைப் பார்த்தீர்களா?'' என்று வினவினர்.

''ஆம்; அவர் மாண்பாளர்'' என்றனர் ஸுஃப்யான் (ரஹ்)

''அவர் பற்றற்ற துறவி'' என்றனர் முஹம்மது (ரஹ்)

''அவர் ஓர் ஆபிது (வணக்கவாளர்)'' என்றனர் ஸுஃப்யான் (ரஹ்).

இவ்வாறு அவர்கள் இருவரும் அவர் மீது மாறி, மாறிப் புகழ்மாரி சொரிந்து கொண்டே வீடு வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் எளிய ஆடைகளையே அணிந்திருந்தனர். அவர்கள் வைத்திருந்த உடையும் செருப்பும் ஒன்றே கால் திர்ஹத்துக்கும் அதிகப் படவில்லை. அதற்காக அவர்கள் அழுக்கடைந்த கிழிந்த ஆடைகளை

அணிதிருக்கவுமில்லை. அவசியமான ஆடம்பரமற்ற உடைகளையே அவர்கள் அணிந்திருந்தார்கள்.

உடை பற்றி அவர்கள் கூறும் பொழுது, ''ஒருவன் அணிந்திருக்கும் உடை, அது பற்றி மக்கள் யாதொன்றும் பேசிக் கொள்ளா வண்ணம் இருக்க வேண்டும்.''

''முற்காலத்தில் வாழ்ந்த நல்லோர்கள் மிகவும் விலை உயர்ந்த உடைகைளயும் அணியார்கள். மிகவும் பழைய கிழிந்த உடைகளையும் அணியார்கள். ஏனெனில் மனிதர்களின் கவனத்தை இரண்டும் ஒரே விதமாக ஈர்க்கின்றன'' என்று கூறினார்கள்.

அவர்கள் எப்பொழுதும் தனிமையில் இனிமை கண்டார்கள். ''மறுமைப் பேற்றினை எய்தப் பெறுவதற்காக மனிதன் தன் நாவை அடக்கித் தனித்தொதுங்கி வாழ வேண்டும்'' என்று அவர்கள் கூறினர். அது கேட்ட ஒருவர், ''அவ்விதமாயின் ஒருவன் இம்மைப் பேற்றினை எய்தப் பெறுவதற்குப் பணம் வேண்டுமே. அதற்கு என் செய்வது?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''நீர் இறைவனுக்கு அஞ்சிக் கொள்ளும். இறைவனுக்கு அஞ்சும் எவரையும் சம்பாதிப்பதற்குத் தேவையுள்ளவராக நான் காணவில்லை. அவர்கள் பசியினால் மரித்ததையும் நான் பார்க்கவில்லை'' என்று கூறினர்.

''பசியோடுள்ள ஒருவன் பிறரிடம் உணவு கேட்டு உண்ண மறுத்து, அதன் காரணமாக இறந்து விடுவானாயின் அவன் நரகம் சேர்வான்'' என்றும் அவர்கள் கூறினர்.

ஒரு தடவை அவர்கள் ஒரு ரொட்டித் துண்டை வைத்துப் பிய்த்து உண்டு கொண்டிருந்த பொழுது ஒரு நாயைக் கண்டதும் அதன் முன் அந்த ரொட்டித் துண்டைப் பிய்த்துப் பிய்த்துப் போட்டார்கள். அது அத்துண்டுகளை வாலை ஆட்டிக் கொண்டு வெகு ஆவலுடன் தின்றது. அது கண்ட ஒருவர், ''தாங்கள் ஏன் ரொட்டியை இல்லம் எடுத்துச் சென்று தங்களின் மனைவி மக்களுடன் சேர்ந்து உண்ணாது இவ்வாறு செய்கின்றீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''நான் இதனை இந்நாய்க்குத் தின்னக் கொடுப்பதால் அது நன்றி உணர்வுடன் எனக்கு இரவு முழுவதும் பாதுகாவல் வழங்கிக் கொண்டிருக்கும். அதன் காரணமாக நான் அமைதியுடன் வீற்றிருந்து வணங்கிக் கொண்டிருப்பேன். அதற்கு மாறாக நான் இதனை என் மனைவி மக்களுக்கு உண்ணக் கொடுப்பின் அவர்கள் என்னை அமைதியாக வீற்றிருந்து வணங்கவிடாது தொந்தரவல்லவோ கொடுக்கத் துவங்கி விடுவார்கள்'' என்று கூறினர்.

அவர்கள் ஓரிரவு வயிறு நிரம்ப உணவருந்தி விட்டார்கள். பின்னர் அவர்கள் தாம் தவறு செய்து விட்டதாக உணர்ந்தார்கள். எனவே அவர்கள் தம்மை நோக்கி, ''கழுதைக்கு அதிகத் தீனி போட்டால் அதனிடமிருந்து அதிகமான வேலை வாங்க வேண்டும்'' என்று கூறிவிட்டு அன்றிரவு முழுவதும் அயராது தொழுதனர்.

அவர்களின் தொழுகையில் பணிவும் அடக்கமும் பரிணமித்தன. அவ்விரண்டும் இல்லாத தொழுகை, தொழுகையே அல்ல என்பது அவர்களின் மணிவாசகமாக இருந்தது.

ஒருதடவை அவர்கள் மற்றொருவருடன் சேர்ந்து ஹஜ்ஜுப் பயணத்தை மேற்கொண்டனர். வழிநெடுக அவர்கள் அழுதுகொண்டு வருவதைக் கண்ட அவர்கள், ''தாங்கள் இழைத்த பாவங்களுக்கு வருந்தியா அழுகின்றீர்கள்?'' என்று வினவிய பொழுது அவர்கள் ஆங்கிருந்த புதர்க்கற்றை ஒன்றை இழுத்து, ''என் பாவங்கள் அதிகமாக இருப்பினும் அவை எனக்கு இந்தப் புதர்க்கற்றை போன்றுதான். எனினும் நான் செலுத்தும் பக்தி உண்மைதானா, அல்லவா என்று எனக்கு அச்சத்தை அளிக்கிறது'' என்று கூறினர்.

அவர்கள் என்ன எண்ணினார்களோ, அதைக் கூறினார்கள். எதைக் கூறினார்களோ அதை எண்ணினார்கள். அவர்கள் ஒரு போதும் மனத்தில் ஒன்றை மறைத்து வைத்துக் கொண்டு வாயில் ஒன்றை வெளியிட வில்லை. ஒரு தடவை அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்த பொழுது ஒருவர் அவர்களைக் காணவந்தார். அவர்கள் உணவருந்தித் தம் விரல் களைச் சூப்பி முடிக்கும் வரை, அவர்கள் அவரிடம் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. பின்னர் அவர்கள் அவரை நோக்கி, ''நான் இந்த உணவைக் கடனாக வாங்கி இராவிடின் நீரும் என்னோடு அமர்ந்து உணவருந்துவதை நான் விரும்பி இருப்பேன்'' என்று கூறினர்.

மீண்டும் அவர்கள் அவரை நோக்கி, வாயளவில் ஒருவன் மற்றவனை உணவுண்ண அழைக்கும் பொழுது, அந்த அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டால், அவன் மீது இரண்டு குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. ஒன்று நயவஞ்சகத்தனம், மற்றொன்று அவனை வீணே உண்ண அழைத்து வஞ்சித்தல் ஆகியவையால், அழைக்கப்பட்டவன் அந்த அழைப்புக்கு இணங்காவிடின் அழைத்தவன் மீது ஒரே குற்றம் தான் உண்டு'' என்று எடுத்தியம்பினர்.

ஒரு தடவை சில வணக்கவாளர்கள் அவர்களின் இல்லம் சென்று, அங்கிருந்த உணவை எடுத்து உண்டு கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்கள் வெளியிலிருந்து வந்ததும்,

அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை. ''நல்ல காரியம் செய்தீர்கள். முற்காலத்துப் பெரியோர்கள் இத்தகைய பண்பாடுள்ள வர்களாகவே இருந்தனர்'' என்று அந்த வணக்கவாளர்களை நோக்கி மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்கள்.

''எவரேனும் நம்மைப் பார்க்க வந்தால், 'உண்கிறீர்களா?' என்று கேட்காது ஏதேனும் உண்ணக் கொண்டு வந்து வைப்பதே பண்பாகும்'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

கூபாவைச் சேர்ந்த அறிஞர்களில் ஒருவரான ஹம்மாத் பின் சுலைமான் இறந்து விட்ட பொழுது அவர்கள் அவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளவில்லை. அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவப் பட்ட பொழுது, ''என் மனத்தில் நல்லெண்ணம் தோன்றியிருந்தால் நான் அதில் கலந்து கொண்டிருப்பேன். தோன்றவில்லையே. நான் என் செய்வேன்'' என்று அவர்கள் மறுமொழி கூறி விட்டார்கள்.

ஒரு தடவை அவர்கள் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிய பொழுது, ஒவ்வொருவரும் அவரை நல்லவர், நல்லவர் என்று கூறியதைக் கேட்ட அவர்கள், ''இவர் பற்றி மக்கள் இவ்வாறு கூறுவார்கள் என்று நான் முன்பே அறிந்திருப்பின், இவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டிருக்கவே மாட்டேன். இவர் உண்மை உரைப்பவராக இருந்திருப்பின் இவரை மக்கள் இவ்வாறு புகழ்ந்துரைத்திருக்கமாட்டார்கள். பலர் இவரைத் தூற்றி இருப்பர். இவர் எதற்கும் 'ஆம்' கூறுபவராக இருந்ததால் தான் மக்கள் இவரை நல்லவர், நல்லவர் என்று கூறுகின்றார்களோ என்று நான் ஐயுறுகிறேன்'' என்று மொழிந்தனர்.

புகழையோ இகழையோ அவர்கள் பொருட்படுத்துவதில்லை. புகழ் கேட்டு மகிழவோ, இகழ் கேட்டு வருந்தவோ அவர்கள் ஒரு போதும் செய்வதில்லை. ''உன்னைப் பார்த்து, 'நீ ஓர் அயோக்கியன்' என்று கூறியவனை விட, 'நீ நல்லவன்' என்று கூறியவனிடம் நீ அதிக அன்பு செலுத்தின் நீ இன்னும் கெட்டவனாகவே இருக்கின்றாய் என்றே பொருள்படும்'' என்று அவர்கள் ஒருவரிடம் கூறினார்கள்.

ஒருவர் இறந்து போன ஒரு சூஃபியைக் கனவில் கண்டு ''அல்லாஹ் உம்மை எவ்வாறு நடத்தினான்?'' என்று வினவினார். அதற்கு அந்த சூஃபி ''ஒரு நாள் நான் தெரு வழியே சென்ற பொழுது பழத்தோல் ஒன்று கிடந்தது. அதனால் எவரேனும் வழுக்கி விழக் கூடுமென்று அஞ்சிய நான் அதனை அப்புறப்படுத்தினேன். அதன் காரணமாக இறைவன் என்னைச் சுவனம் புகச் செய்தான்'' என்று கூறினார். தாம் கண்ட

இக்கனவை அவர் சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்களிடம் வந்து கூறிய பொழுது, ''ஒரு நன்மை செய்து விட்டு, அதற்காக அவர் மகிழ்ந்ததற்காக அவர் தண்டிக்கப் படாதது அவரின் நல்லூழேயாகும்'' என்று கூறினர்.

ஒரு நாள் அவர்களைக் காணவந்த ஒருவர், தமக்கு அவ்வாண்டு ஹஜ்ஜுச் செய்யச் செல்லும் பேறு கிடைக்கவில்லை என்று கூறிப் பெருமூச்சு விட்டார். அது கேட்ட அவர்கள் அவரை நோக்கி, ''நான் நாற்பது ஹஜ்ஜுக்கள் செய்துள்ளேன். அவற்றின் நன்மை அனைத்தையும் நான் உமக்கு வழங்கி விடுகின்றேன். அதற்குப் பகரமாக நீர் சற்று முன் விட்ட பெருமூச்சின் நன்மையை எனக்குத் தந்து விடுகின்றீரா?'' என்று வினவினர். அதற்கு அவர் சரி என்று கூறி ஒப்புதல் மொழிந்தார். இவர்களும், ''நான் உம் பெருமூச்சின் நன்மையை ஏற்றுக் கொண்டு, என் நாற்பது ஹஜ்ஜுகளின் நன்மையை இறைவனறிய உமக்கு வழங்கி விட்டேன்'' என்று கூறினார்கள்.

அன்றிரவு அவர்கள் அயர்ந்து உறங்குங்கால், ''நீர் இன்று நல்ல வாணிபம் செய்தீர். அதில் உமக்குக் கிடைத்த ஆதாயத்தை இவ்வாண்டு அரபாத்தில் குழுமி இருந்த அத்தனை ஹாஜிகளுக்கும் பங்கு வைத்துக் கொடுப்பின் அவர்கள் மிகப் பெரும் பலன் பெற்றவர்களாகி இருப் பார்கள்'' என்று அசரீரி முழங்குவதைச் செவியுற்றார்கள்.

அது கேட்டு அவர்கள் திடுக்குற்று விழித்தெழுந்து, சுற்று முற்றும் பார்த்தனர். ஒருவரையும் காணவில்லை. இது ஷைத்தானின் ஊசாட் டமாக இருக்குமோ என்று எண்ணிய அவர்கள் 'உளூ'ச் செய்து கொண்டு மீண்டும் படுத்து உறங்கினர். மீண்டும் அதே கனவு தோற்றமளித்தது. மீண்டும் விழித்தெழுந்து மீண்டும் 'உளூ'ச் செய்து விட்டு அவர்கள் உறங்கினர். மீண்டும் அதே கனவு தோற்றமளிக்கவே அது ஷைத்தானின் ஊசாட்டமல்ல. இறைவனின் அறிவிப்பு என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டார்கள்.

அவர்கள் மக்காவில் இருக்குங்கால், ஒருவர் ஒவ்வொரு நாளும் கஃபாவை இடம் சுற்றி வந்துவிட்டு, அவர்களுக்கு சலாம் கூறிவிட்டுச் செல்லும் வழக்கமுடையவராக இருந்தார். ஒரு நாள் அவர் கஃபாவிற்கு வராத பொழுது அவரைக் காண்பதற்காகச் சென்ற அவர்கள், அவரை இறப்புப் படுக்கையில் கிடப்பதைக் கண்டு திடுக்குற்றனர், அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, ''எனக்கு இறப்பு அண்மிவிட்டது. நான் புதைகுழியில் முன்கர், நகீர் ஆகிய இருவருக்கும் சரியாக மறுமொழி கூறும் வண்ணம் எனக்குக் கலிமாச் சொல்லித் தாருங்கள். நான் இறந்ததன்பின் தாங்களே என்னைக் குளிப்பாட்டி நல்லடக்கம் செய்யுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார். அவ்விதமே அவர்கள்

கலிமாச் சொல்லிக் கொடுக்க அதனை அவர் மொழிந்த வண்ணம் உயிர் நீத்தார். பின்னர் அவரைக் குளிப்பாட்டி நல்லடக்கம் செய்துவிட்டு, அவ்விடத்திலேயே அவர்கள் அமர்ந்திருக்குங்கால் அவர்களை ஒருவித உறக்கம் ஆட்கொண்டது. அப்பொழுது கனவில் அசரீரியாக, ''சுப்யானே! நாம் அவருக்கு அனைத்தையும் கற்றுக் கொடுத்துள்ளோம். எனவே அவருக்கு உம்முடைய கலிமாவும் காவலும் தேவை இல்லை'' என்று ஒரு சப்தம் முழங்கியது. அதுகேட்ட அவர்கள் திடுக்குற்று, அதற்கு யாது காரணம் என்று வினவிய பொழுது, ''அவர் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்றபின் ஆறு நோன்புகளையும் நோற்று வரும் வழக்கமுடையவராக இருந்தார். அதன் காரணமாக அவர் ஈடேற்றம் பெற்றார்'' என்று மறுமொழி வந்தது.

ஒரு தடவை அவர்கள் கஃபாவைச் சுற்றி வந்து கொண்டிருந்த பொழுது, ஒருவர் தாம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் 'ஸலவாத்'துக் கூறிய வண்ணம் அதனைச் சுற்றி வருவதைக் கண்டு வியப்புற்று ''நீர் தஸ்பீஹ், தஹ்லீலு, தம்ஜீது ஆகியற்றைக் கூறாது, ஸலவாத்து மட்டும் கூறிய வண்ணம் கஃபாவைச் சுற்றி வருகிறீரே. அவையெல்லாம் உமக்குத் தெரியாதா?'' என்று வினவினர். அதற்கு அவர், ''தெரியும்; எனினும் ஸலவாத்தை மட்டும் தான் அதிகமாக ஓதி வருகிறேன். அதற்கான காரணமும் உண்டு'' என்று கூறினார். ''என்ன காரணம்?'' என்று அவர்கள் வினவிய பொழுது அவர் பின்வருமாறு கூறினார்.

''நானும் என் தந்தையும் 'ஹஜ்'ஜுச் செய்யப் புறப்பட்டு வந்த பொழுது வழியில் என் தந்தை இறந்துவிட்டார். அப்பொழுது அவரின் முகம் கறுத்து விட்டது கண்டு எனக்கேற்பட்ட கவலைக்கு அளவில்லை. அப்பொழுது என்னை உறக்கம் ஆட்கொண்டது. கனவொன்று கண்டேன். அதில் அழகு வதனத்து மனிதர் ஒருவர் என்னை நோக்கி வந்தார். அவர் போன்ற அழகரை நான் அதற்கு முன் கண்டதில்லை. அவருடைய உடலிலிருந்து நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. அவர் என் தந்தையின் வெற்றுடலை அணுகித் தம் கைகளால் அவரின் முகத்தைத் தடவினார். அடுத்த கணம் என் தந்தையின் முகம் வெண்ணிறம் பெற்றுப் பொலிவுற்று ஒளிர்ந்தது. அப்பொழுது நான் அவரை வியப்புக் கண்களுடன் நோக்கி, 'தாங்கள் யார்?' என்று வினவினேன்.

''முஹம்மது இப்னு அப்துல்லாஹ், ஸாஹிபுல் குர்ஆன்'' என்று அவர்கள் மொழிந்தார்கள்.

அது கேட்டு என் உடலெல்லாம் சிலிர்த்தது.

மேலும் அவர்கள் என்னை நோக்கி, 'உம் தந்தை என் மீது அதிகமாக ஸலவாத்து ஓதும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்' என்று கூறி விட்டு மறைந்தனர். நான் விழித்தெழுந்தேன்.''

இவ்வாறு அவர் கூறியதைக் கேட்டதும் அவர்கள் இறும்பூதெய் தினார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தக் கால், இஹ்ராம் அணிந்தவர்களாய் அரபாத் வெளியில் அமர்ந்து இறைவனை வணங்கிக் கொண்டிருந்த பொழுது தமக்கு இதுதான் இறுதி ஹஜ் என்றும், தாம் இனிமேல் அரபாத் வெளிக்கு வரப்போவது சாத்தியமில்லை என்றும் எண்ணினர். அப்பொழுது ஆங்கு வந்த கிழவர் ஒருவர் அவர்களுக்கு ஸலாம் உரைத்து, ''நீர் உம்முடைய தவறான எண்ணத்தை விட்டொழிப்பீராக!'' என்று கூறினார். அது கேட்ட அவர்கள், ''நான் எண்ணியது உமக்கு எவ்வாறு தெரிய வந்தது?'' என்று வினவிய பொழுது, ''அல்லாஹ் அறிவித்தான்'' என்று மறுமொழி பகர்ந்தார் அவர். அதன் பின் அவர் அவர்களை நோக்கி, ''இறைவன் மீது ஆணையாகக் கூறுகின்றேன். நான் சில ஆண்டுகளுக்கு முன் இவ்விடத்தில் வீற்றிருந்து இறைவனை வணங்கிக் கொண்டிருந்தக் கால் என்னை ஒருவித உறக்கம் ஆட்கொண்டது. அப்பொழுது நான் ஒரு கனவு கண்டேன். அதில் மறுமை நாளையும், நன்மை, தீமைகளை நிறுக்கும் தராசையும், ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தையும், சுவனம், நரகம் ஆகியவற்றையும் கண்டேன். அப்பொழுது நரகம் இறைவனை நோக்கி, 'இறைவ எம்பெரும! ஹாஜிகளையும் என் சூட்டையும் குளிரையும் நுகருமாறு செய்வாயாக' என்று கூறியது. அதற்கு இறைவன், 'அவர்களைப் பற்றி மட்டும் கூறாதே. ஏனையோரைப் பற்றிக் கூறு, கேட்கின்றேன். ஏனெனில் ஹாஜிகள் பாலைவனத்தின் தாகத்தையும் அரபாத்தின் சூட்டையும் நுகர்ந்துள் ளார்கள்' என்று மறுமொழி பகர்ந்தான். அப்பொழுது என்னுடைய கையில் 'கஃபாவைத் தரிசித்து அரபாத்தில் தங்கி இருந்து வழிபட்டோ ருக்கும் அவர்களின் உற்றார், உறவினர் எழுபது பேர்களுக்கும் நாம் ஈடேற்றம் வழங்குவோம்' என்று பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டு கண் மலர்ந்தேன். அத்தகு பேற்றினை நீர் ஏன் மீண்டும் பெற ஆவலுறாது இத்துடன் முடித்துக் கொள்ள விரும்புகிறீர்?'' என்று இயம்பினர்.

ஒரு நாள் அவர்களுக்கு மக்கமா நகரில் வைத்து, கலீபா மன்சூரிட மிருந்து அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்று அவர்கள் கலீபாவின் திருமுன் சென்றக்கால், கலீபா மன்சூர் அவர்களை அன்புடன் வரவேற்று, ''தங்களுக்கு ஏதேனும் தேவை இருக்கிறதா? சொல்லுங்கள். நிறை வேற்றித் தருகிறேன்'' என்று கூறினார். அது கேட்ட அவர்கள் கலீபாவை

நோக்கி, ''நீங்கள் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். இறைவன் படைத்த மண்ணகத்தில் நீங்கள் அநீதியையும் அட்டூழியத்தையும் பரப்பி விட்டீர்களே'' என்று கூறினர். அவர்களின் இவ்விடி மொழி கலீபாவை நாணத்தால் தலைகுனியுமாறு செய்தது. சற்று நேரம் தலை குனிந்து வீற்றிருந்த அவர் மீண்டும் அவர்களை ஏறிட்டுப் பார்த்து, ''தங்களுக்கு ஏதேனும் தேவை இருக்கிறதா கூறுங்கள்?'' என்று மீண்டும் வேண்டினார்.

அது கேட்டுச் சற்று வெகுண்ட சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்கள், ''நீங்கள் மக்களை ஆட்சி செய்யும் பொறுப்பை வகிக்கின்றீர்கள். இந்தப் பொறுப்பும் பெருமையும் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன என்று நீங்கள் எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? மக்கமா நகர் மக்களும், மதீனமா நகர்வாசிகளும், அவர்களின் வீரக்குமாரர்களும் இந்தப் பதவியை உங்களுக்கு வாங்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் பெரிதும் கடன் பட்டிருக்கிறீர்கள். அவர்கள் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், தெரியுமா? பசியால் மடிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சேர வேண்டியதை முறைப்படி நிறைவேற்றுங்கள். எல்லாம் வல்ல இறைவனைச் சிறிது நினைவு கூருங்கள்'' எனறு இடித்துரைத்தனர்.

கலீபாவின் தலை இரண்டாவது தடவையாகத் தாழ்ந்தது. சற்று நேரம் கழித்துத் தலையை மேலேஉயர்த்தி சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்களை நோக்கிய அவர் ''தங்களுக்கு ஏதேனும் தேவை இருக்கிறதா கூறுங்கள்?'' என்று மீண்டும் வேண்டினார்.

அதுகேட்டு முறுவலித்த சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்கள், ''நீங்கள் மிகவும் ஆடம்பரத்துடன் மக்கமா நகரத்திற்கு வந்துள்ளீர்கள். ஒரு தடவை கலீபா உமர் (ரலி) அவர்கள் இங்கு வந்த பொழுது, அரசாங்கப் பொருளாளரை நோக்கி, 'எவ்வளவு செலவு செய்துள்ளீர்கள்?' என்று வினவினர். அதற்கு அவர், 'பத்து வெள்ளிக் காசுகளிலிருந்து இருபது வெள்ளிக்காசுகள் வரைச் செலவாகியுள்ளது' என்று பதிலளித்தார். ஆனால் தாங்களோ என்று பேச்சைத் துவங்கினர் சுப்யான் அத்தௌரி. கலீபா மன்சூர் வாயடைத்து வீற்றிருந்தார். சொல்ல வேண்டியவை அனைத்தையும் எவ்வித அச்சமுமின்றி அவர்கள் மளமளவென்று சொல்லித் தீர்த்து விட்டார்கள். கலீபாவுக்கோ அவர்கள் தம்மை விட்டால் போதும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது.

மற்றொரு தடவை அவர்கள் அரண்மனை சென்ற பொழுது பட்டுக் கம்பளத்தின் மீது பவிசாக அமர்ந்திருந்த கலீபா மன்சூர் அவர்களையும் அதன் மீது அமருமாறு கூற, அவர்கள் மறுத்து, ''மண்ணிலிருந்தே நாம்

உங்களைப் படைத்தோம். அதிலேயே நாம் மீண்டும் உங்களைச் சேர்ப்போம். பின்னர் ஒரு தடவை அதிலிருந்தே உங்களை வெளிப் படுத்துவோம்'' என்ற திருக்குர்ஆனின் திருவசனத்தை ஓதிய வண்ணம் கீழே அமர்ந்தனர். பின்னர் அவர்கள் ஆடம்பர வாழ்வைக் கண்டித்து கலீபாவின் முன் ஒரு சிறு சொற்பொழிவாற்றிவிட்டு வெளியேறி விட்டனர். அப்பொழுது கலீபாவின் மெய்ப்பாதுகாவலன் அவர்களைக் கொன்றொழிக்க கலீபாவின் உத்தரவை வேண்டிய பொழுது, ''மூடு வாயை! சுப்யான் அத்தௌரியையும் மாலிக் இப்னு அனஸையும் தவிர்த்து மரியாதைக்குரியவர் உலகில் எவருளார்?'' என்று கூறினார் கலீபா.

இதன் பின் கலீபா மன்சூர், சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்களின் மாண்பினை நன்கு உணர்ந்து, அவர்களுக்கு அளவற்ற மரியாதை செய்ய லானார். ஒரு தடவை அவர்கள் கடுமையான நோய்வாய்ப்பட்ட பொழுது, அவர்களுக்கு மருத்துவம் செய்யத் தம் கிறிஸ்தவ மருத்துவரையே அவர்களிடம் அனுப்பி வைத்தார் அல்மன்சூர். மருத்துவர், அடிகளாரின் சிறு நீரைச் சோதித்துப் பார்த்தபோது ''அளவற்ற இறையச்சத்தின் காரணமாக அவர்களின் ஈரல் இரத்தமயமாகி விட்டது. அவ்விரத்தம் சிறிது சிறிதாக அவர்களின் சிறு நீரோடு கலந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இத்தகைய மனிதர் மேற்கொண்டுள்ள மார்க்கம் தவறுடைத்தாய் இராது'' என்று கூறி இஸ்லாத்தைத் தழுவினார். இதைக் கேள்வியுற்ற கலீபா அல்மன்சூர், ''மருத்துவரை நோயாளரிடம் அனுப்பி வைத்ததாக எண்ணினேன். ஆனால் உண்மையில் பார்க்கப் போனால் நோயாளரையல்லவோ மருத்துவரிடம் அனுப்பி வைத்துள்ளேன்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்.

உண்மையில் சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்கள் அளவற்ற இறையச்சம் உள்ளவர்களாக இருந்தனர். ''நரகத்தில் ஓர் இடம் இருக் கிறது. அதிகாரிகளைப் போய்ப் பார்க்கும் அறிஞர்களுக்கென்று அது ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தாம் அங்கு இருப்பர்'' என்று கூறிய அவர்கள் தாமும் அவ்விடத்தை அடையக் கூடாதே என்ற அச்சத்தின் காரணமாக அரசர்களையோ அதிகாரிகளையோ சந்திப்பதைப் பெரும் பாலும் தவிர்த்து கொண்டார்கள்.

ஒரு தடவை அவர்கள் இமாமாக நின்று தொழ வைத்த பொழுது, ''உன்னையே வணங்குகின்றோம். உன்னிடத்திலே உதவி தேடுகின் றோம்'' என்ற இறை திருவசனத்தை ஓதிய பொழுது அவர்கள் மயங்கிக் கீழே விழுந்து விட்டனர். பின்னர் காரணம் வினவப்பட்ட பொழுது, ''உன்னிடத்திலே உதவி தேடுகின்றோம்'' என்று நான் உரைத்த பொழுது, 'பின்னர் ஏன் அரசர்களிடமும் அதிகாரிகளிடமும் செல்கின்றீர்?' என்று

இறைவன் கேட்பின் என்ன மறுமொழி பகர்வது என்று எண்ணினேன். உடனே ஒரு திடுக்கம் என்னை ஆட்கொண்டது. மயங்கிக் கீழே வீழ்ந்து விட்டேன்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் மக்காவுக்குச் சென்ற பொழுது, வழி முழுவதும் அழுதுகொண்டே சென்றார்கள். அப்பொழுது அவர்களுடன் சென்ற ஒருவர் அவர்களை நோக்கி, ''ஏன் அழுகிறீர்கள்? தாங்கள் அதிகமாகப் பாவம் செய்திருப்பின் அல்லாஹ்வின் பேரருளின் மீது நம்பிக்கை கொண்டு அவன் அவற்றைப் பொறுத்தருளப் போதுமானவன் என்று அமைதியாய் இருங்கள்'' என்று கூறினார். அப்பொழுது அவர்கள் ஆங்குக் குவிக்கப்பட்டிருந்த உமியை அள்ளி, ''என்னுடைய பாவங்கள் இவை போன்று அதிகமாயுள்ளன. எனினும் நான் அவற்றை, இந்த உமிக்குச் சமமாகவே கருதுகின்றேன். ஆனால் நான் அஞ்சுவதெல்லாம் நான் ஏகத்துவத்தின் மீதும், இறை நம்பிக்கை மீதும் இறப்பெய்துவேனா என்பதேயாகும். இது பற்றி நான் உறுதியாக அறிந்திருப்பின் மிகப் பெரும் மலைகளுக்கு நிகரான பாவங்களை நான் செய்திருந்த போதிலும் நான் அவற்றைப் பொருட்படுத்தவும் மாட்டேன். ஏகத்துவத்தின் மீதும் இறை நம்பிக்கையின் மீதும் நான் இறப்பெய்துவேனா, அல்லவா என்பதை நான் அறியாததன் காரணமாகவே எனக்கு அழுகை, அழுகையாக வருகிறது'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அவர்கள் இறைவனை நினைத்து அழுதார்கள். இறப்பை நினைத்து அழுதார்கள். அழுகையில் ஒன்பது வகைகள் உள்ளன. அவற்றில் ஒன்று மட்டும் அல்லாஹ்வுக்காக உரியது. அல்லாஹ்வுக்காக வேண்டி ஆண்டில் ஒரு துளி கண்ணீர் சிந்தினாலே போதும். அது பெரும் செயலாகும்'' என்று அவர்கள் கூறினர்.

மேலும் அவர்கள் மக்கட் திரளை நோக்கி, ''உங்களில் எவரேனும் மாலை வரை உயிரோடிருப்பீர்கள் என்று திட்டமாகக் கூற இயலின், அவர் எழுந்து நிற்கலாம் என்று கூறப்படின், ஒருவரும் எழுந்து நிற்கமாட்டீர்கள். மறுமைக்கான பொருள்களைச் சேகரித்து வைத்திருப்போர், உங்களில் எவரேனும் இருப்பின் எழுந்து நில்லுங்கள் என்று கூறப்படினும் எவரும் எழுந்து நிற்க மாட்டீர்கள்'' என்றும் எடுத்துரைத்தார்கள்.

''ஒருவர் தம் புதைகுழியை (கப்ரை) நினைத்து வருந்துவாராயின், அது சுவனப் பூங்காவில் ஒன்றாகிவிடும்'' என்று கூறிய அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் இறப்பை நினைத்து வருந்திக் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக அவர்களின் இடுப்பும் வளைந்து விட்டது. இளமையிலேயே அவர்களின் இடுப்பு வளைந்து விட்டதைக் கண்ட சிலர் அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவிய பொழுது, முதலில்

அதற்கு அவர்கள் யாதொரு பதிலும் கூறவில்லை. பின்னர் திரும்பத் திரும்ப அவர்களிடம் அதுபற்றி வினவப்பட்ட பொழுது, ''எனக்கு மூன்று ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு நான் பணிவிடை செய்து வந்தேன். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக இறப்பெய்தியதைக் கண்டு என் இதயம் உடைந்தது. அதன் காரணமாக என் இடுப்பும் உடைந்து விட்டது'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

இறப்பை நினைந்து எப்பொழுதும் வருந்திக் கொண்டிருந்த அவர்கள் தம் மாணவர்களில் எவரும் வெளியூர் செல்ல விரும்பித் தம்மிடம் விடைபெற வருங்கால் ''எங்கேனும் இறப்புக் கிடைப்பின் அதனை எனக்காக வாங்கி வாருங்கள்'' என்று கூறுவர். அவர்கள் எப்பொழு தேனும் இறப்பைப் பற்றியும் அதன் கடுமையைப் பற்றியும் கேள்வியுறு வார்களாயின் அவர்கள் திடுக்குற்றுப் பல நாட்கள் வரை நினைவிழந்த நிலையிலேயே இருப்பர். எவரிடம் சென்றபோதினும், '''இறப்பு வருமுன் அதற்குத் தயாராகிக் கொள்ளுங்கள்'' என்று கூறுவர்.

அவர்கள் இறப்பைப் பற்றி அஞ்சிக் கொண்டிருந்த போதினும், அதனை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் நண்பர் ஒருவர் சுவர்க்கத்தைக் கொண்டு அவர் களுக்கு நன்மாராயம் கூறிய பொழுது, ''நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? சுவர்க்கம் புக நான் தகுதியுடையவனா, என்ன? சுவர்க்கம் வாழ் மக்கள் என்போன்ற இழிந்தவர்களாகவா இருப்பார்கள்? மாண்பாளர்களாக வல்லவோ இருப்பார்கள்'' என்று அவர்கள் தம்மையே தாம் இழித்துரைத்துக் கூறினர்.

மேலும் அவர்கள் பேசும் பொழுது, ''என் ஆசிரியர்களில் ஒருவர் இறப்புப் படுக்கையில் கிடக்கும் பொழுது நான் அவர்களைச் சந்திக்கச் சென்ற காலை அவர்கள் என்னை நோக்கி, 'சுப்யானே! 'என் இறைவன் என்னுடன் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதைப் பார்த்தீரா? நான் ஐம்பது ஆண்டுகளாக மக்களைத் தீமையிலிருந்து தடுத்து நேர்வழியில் செலுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது நான் இறைவனின் திருமுன் செல்லத் தகுதியற்றவன் என்று செய்தி வந்துள்ளது. அது கேட்டு என் உளம் உடைந்தது. நான் உணர்விழந்தேன். என் இடுப்பும் உடைந்து விட்டது' என்று கூறினர். மாண்பாளராகிய அவர்களின் நிலையே இப்படி என்றால் மற்றவர்களின் நிலை எவ்வாறிருக்கும் என்பதை அல்லாஹ்வே நன்கறிந்தவன்'' என எடுத்துரைத்தார்கள்.

எனினும் அவர்கள் இறையருளில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ''ஒருவன் ஒரு பாவத்தைச் செய்து, அது அல்லாஹ்வின் கற்பனையின் பேரில் நடந்தது என்று எண்ணி அதனை, அல்லாஹ் மன்னித்தருள்வான்

என்று ஆதரவு வைத்தால், அல்லாஹ் அவனுடைய பாவத்தை மன்னித்தருளப் போதுமானவன்'' என்றும் கூறினர்.

இப்பொழுது அப்பாஸியக் கலீபா அல் மன்சூரின் ஆட்சி முடிந்து, அவரின் மகன் அல் மஹதீயின் ஆட்சி துவங்கியது. ஹிஜ்ரி 166ஆம் ஆண்டில் கலீபா மஹ்தி ஹஜ்ஜு செய்யச் சென்ற பொழுது, மினாவில் ஜும்ரத்துல் உக்பா என்ற கல்லெறியும் இடத்தில் பெரும் கூட்டம் திரண்டு விட்டது. எனவே அரசாங்க அலுவலர்கள் அவர்களைக் கழியால் அடித்து விரட்டி கலீபா கல்லெறிய வழி வகுத்தனர். அப்பொழுது ஆங்கு நின்று கொண்டிருந்த அவர்கள், கலீபாவை நோக்கி, ''அழகிய முகத்து மனிதரே! அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்விடத்திற்குக் கல்லெறிய வந்த பொழுது எவரும் கூட்டத்தினரைக் கழியால் தள்ளவும், அடித்து விரட்டவும் செய்யவில்லை என்று நாம் ஹதீதுகளில் பார்த்துள்ளோம். ஆனால் தாங்களோ மக்களை முன்னாலும் பின்னாலும் வலப்புறமும் இடப்புறமும் விரட்டியடிப்பதைக் காண்கிறேன். இது நியாயமா?'' என்று துணிச்சலுடன் வினவினர்.

''யார் அவர்?'' என்று தம் அருகில் நின்று கொண்டிருந்தவர்களிடம் அகங்காரத்துடன் வினவினார் அவர்.

''ஸுஃப்யான் அத்தௌரி'' என்று அவரிடம் கூறப்பட்டது.

அப்பொழுது கலீபா மஹ்தி, அவர்களை நோக்கி, ''கலீபா மன்சூர் இங்கு வந்திருக்கும் பொழுது உம்மால் இவ்வாறு கூறத் துணிவேற்பட் டிருக்குமா? ஒரு போதும் ஏற்பட்டிருக்காது'' என்று கூறினார்.

அது கேட்ட அவர்கள் ''கலீபா மன்சூருக்கு ஏற்பட்ட இன்னல்களை நீர் பார்த்திருப்பின் நீர் இவ்வாறு ஒரு போதும் கூறியிருக்க மாட்டீர். உம்முடைய நிலை வேறு விதமாக இருந்திருக்கும்'' என்று சுடச்சுடப் பதில் கூறினார்கள்.

கலீபா மறுவார்த்தை பேசவில்லை.

ஒரு தடவை சுப்யான் அத்தௌரீ (ரஹ்) அவர்கள் பக்தாது மாநகரம் வந்திருந்த பொழுது கலீபா அல் மஹ்தீயின் அரசவைக்குள் நுழைந் தனர். நுழைந்த அவர்கள் விறுவிறுவெனக் கலீபாவின் முன் சென்று, ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குக் கூறும் சாதாரண சலாத்தையே அவருக்கும் கூறினர். அது கண்டு வெகுண்ட கலீபா அல் மஹ்தீ, ''நீர் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளீர். என்னால் உமக்கு யாதொரு தீங்கும் செய்ய இயலாதென எண்ணிக் கொண்டுள்ளீர். இப்பொழுது நீர் என் கைப்பிடியில் உள்ளீர். உமக்கு நான் விரும்பும் தண்டனையை

அளிக்க இயலாதா, என்ன? கூறும்'' என்று இளமைத் துடுக்குடன் வினவினார். அதற்கு அவர்கள், ''நீர் எனக்குத் தண்டனை அளிப்பின் எது நியாயமானது, எது நியாயமற்றது என்பதை நன்கு உணர்ந்த அந்த மாபெரும் மன்னன் உம்மை நிச்சயமாகத் தண்டிப்பான்'' என்று பதிலிறுத்தனர். அப்பொழுது அருகில் உருவிய வாளுடன் நின்று கொண்டிருந்த ராபிஉ என்ற அமைச்சர் சுப்யான் அத்தௌரீ (ரஹ்) அவர்களின் தலையைத் துணிக்கத் தமக்கு அனுமதி வழங்குமாறு கலீபாவை வேண்டினார். அப்பொழுது கலீபா அவரை நோக்கி, ''வாயை மூடிக் கொண்டிரும். இவரும் இவரைப் போன்றவர் களும் நம் கையால் வெட்டுண்டு மாள்வதையே பெரிதும் விரும்பிக் கொண்டுள்ளார்கள். அவ்விதம் இறந்து நம்மை மறுமையில் இழிவடையச் செய்யவும், தாங்கள் மறுமையில் நிலையான இன்ப சுகங்களை நுகர்ந்து கொண்டிருக்கவும் எண்ணிக் கொண்டுள்ளார்கள். அதற்கு நாம் ஒரு போதும் இடம் கொடுக்கக் கூடாது. எனவே அவரை கூஃபாவின் காஜியாக நியமித்து, அவருடைய தீர்ப்பை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரகடனப்படுத்துவீராக!'' என்று ஆணையிட்டார். அடுத்த கணம் அவ்வாறே அவர்களுக்கு நியமனப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது.

ஆனால் அதனைப் பெற்று வெளியே வந்த அவர்களோ அதனைத் திஜ்லா நதியிலே எறிந்து விட்டு ஓட்டம் பிடித்தார்கள். அவர்களை எங்குத் தேடினும் அவர்கள் காணப் பெறவில்லை. பின்னர் அப்பதவி ஷரீக் இப்னு அப்துல்லாஹ் என்பவருக்கு வழங்கப்பட்டது. இதைப் பற்றி ஒரு கவிஞர் கூறும் பொழுது, ''சுப்யான் மாய்கையிலிருந்து தப்பி ஓடித் தம்முடைய இறை பக்தியைக் காத்துக் கொண்டார். ஷரீக்கோ திர்ஹங்களைப் பிடிப்பதற்காகக் காத்துக் கிடந்தார்'' என்று பண்ணிசைத்தார்.

அரச ஆணைக்கு அஞ்சி ஊர் ஊராக அலைந்து திரிந்த அடிகளார், எமனுக்கு ஓடி அங்கு வாணிபம் செய்து இருநூறு தீனார் ஈட்டினார். பின்னர் சில காலம் தலைமறைவாக மக்கமா நகரில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களைப் பிடித்துக் கொன்றொழிக்குமாறு மக்காவின் ஆளுநருக்கு ஆணை வந்தது. எனினும் அவர் அதனை நிறைவேற்ற வில்லை. அங்குத் தமக்கு நிலைமை சாதகமில்லாததை உணர்ந்த அவர்கள் பஸராவுக்குச் சென்றார்கள். அங்கும் அவர்கள் அரசாங் கத்துக்கு அஞ்சிப் பல இடங்களில் வசிக்க வேண்டியதாயிற்று. பின்னர் ஹம்மாது இப்னு ஸைதின் ஆலோசனையின்படி கலீபாவுடன் சமாதானமாகப் போக அவருடன் கடிதத் தொடர்பு கொண்டார்கள். சுமுகமான முடிவு ஏற்பட்டது.

எனினும் இக்காலை அவர்களை இறப்பு அண்மியது. அப்பொழுது அவர்கள் சலித்து, ''நான் எப்பொழுதும் இறப்பை விரும்பிக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதோ நான் அதனைக் கடினமாகக் காண்கிறேன். நான் இறப்பை எக்காலத்தும் தழுவிக் கொள்ளாதவனாய் எப்பொழுதுமே தடியை ஊன்றி, ஊன்றி நடப்பவனாக இருந்துவிடக் கூடாதா? அல்லாஹ்வின் திருமுன் செல்வது எளிதானதல்லவே'' என்று கூறினார்கள்.

அப்பொழுது அவர்கள் தம்மைக் காண வந்த ஹம்மாது இப்னு ஸலாமாவை நோக்கி, ''என்னைப் போன்ற ஒரு பாவியை அல்லாஹ் மன்னிப்பான் என்று நீர் எண்ணுகின்றீரா?'' என்று ஏக்கத்துடனும் துயரத்துடனும் வினவினர்.

அவர்களுக்கு இறப்பு நெருங்க, நெருங்கக் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. எனினும் அதனைப் பொருட்படுத்தாது இரவு முழுவதும் வணக்கத்தில் ஈடுபட்டார்கள். அன்று அவர்களுக்கு அபார வயிற்றுப் போக்காக இருந்ததன் காரணமாக அன்று மட்டும் அவர்கள் அறுபது தடவைகளுக்கு மேல் 'உளூ'ச் செய்து தொழுதார்கள். மக்கள் அவர்களின் நிலையைக் கண்டு அவர்களை 'உளூ'ச் செய்ய வேண்டாமென்று கூற, ''இஸ்ராயீல் (அலை) எப்பொழுது வருகின்றார்களோ, அப்பொழுது நான் தூய்மையுடன் இருக்க விரும்புகின்றேன். தூய்மையற்றவன் இறைவனின் திருமுன் செல்ல அருகதையற்றவன்'' என்று கூறினர்.

இவ்வாறு கூறிவிட்டு அவர்கள் தேம்பித் தேம்பி அழுதார்கள். அப்பொழுது அவர்களின் அருகிலிருந்தோர் அவர்களை அழவேண்டாமென்றும், அல்லாஹ்வின் மன்னிப்பு அவர்களின் பாவத்தைவிட மிகப் பெரிதாக உள்ளதென்றும் கூறிய பொழுது, ''என் பாவங்கள் மலையளவு பெரிதாக இருப்பினும் நான் இறை நம்பிக்கை (ஈமான்) உடன் இறப்பெய்துவேன் என்று நான் நிச்சயமாக அறியவரின் நான் இறப்பிற்கு அஞ்சி அழமாட்டேன்'' என்று கூறினர்.

பின்னர் அவர்கள் மார்க்க விற்பன்னர்களைத் தம் இல்லம் வரவழைத்துத் தம் பாவங்களைப் பொறுத்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டிக் கொண்டார்கள். அவர்களும் அவ்விதமே செய்தனர்.

இதன் பின் அவர்கள் தம் அருகே அமர்ந்திருந்த அப்துல்லாஹ் மஹ்தீ என்பவரை நோக்கி, ''எனக்கு இறப்பு அண்மிவிட்டது. எனவே என் உடலை மண்ணில் படும் வண்ணம் வைத்துவிடும்'' என்று

கூறினர். அவ்வாறே செய்த அப்துல்லாஹ் மஹ்தீ நிலைமையை மக்களிடம் எடுத்துரைப்பதற்காக வெளியே சென்றார். அவர் திரும்பி வந்த பொழுது மக்கள் அங்குக் குழுமி இருப்பதைக் கண்டதும் அவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. ''தங்களுக்கு எவ்வாறு நிலைமை தெரிய வந்தது'' என்று அவர்களிடம் அவர் வினவிய பொழுது, ''அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளுமாறு நாங்கள் கனவின் மூலம் அறிவுறுத்தப்பட்டோம்'' என்று அவர்கள் பதில் கூறினர்.

அடிகளாரின் இறப்பு வேளை அண்ம, அண்ம அவர்களின் இருப்பிடம் நோக்கி மக்கள் சாரி சாரியாக வரத் துவங்கினார்கள். தங்களின் முடிவு நெருங்கிவிட்டது என்பதை நன்கு உணர்ந்த அவர்கள், தங்களின் தலையணையின் கீழிருந்து ஆயிரம் தீனார்களை எடுத்து அவற்றை நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் கொடுத்து அறம் செய்து விடுமாறு கூறினர். வாழ்நாள் முழுவதும் துறவி போன்று வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த அவர்கள் இத்துணை அளவு பணம் சேர்த்து வைத்திருப்பதைக் கண்ட மக்கள் தங்களின் கண்களை அகல விரித்தார்கள். ''உலகப் பொருள்களைத் தேடுவதில் வீணே காலத்தைச் செலவிட வேண்டாமென்று வாணாள் முழுவதும் கூறிக் கொண்டிருந்த தாங்கள் இத்துணை அளவு பணம் வைத்துள்ளீர்களே'' என்று வியப்புடன் அவர்களை வினவினார்கள். அப்பொழுது அவர்கள் அம்மக்களை நோக்கி ''இந்தப் பணம் என்னுடைய மார்க்கத்திற்குப் பாதுகாவலாக அமைந்திருந்தது. இதன் காரணமாக ஷைத்தான் என்னிடம் தோற்றோடினான். ஒரு நாள் அவன் என்னிடம், 'நீ, இன்று என்ன தின்பாய்?' என்ற ஊசாட்டத்தை எழுப்புவான். அதற்கு நான், 'இதோ என்னிடம் பணம் உள்ளது. நான் எதை வேண்டினும் வாங்கி உண்பேன்' என்று துடுக்காகக் கூறுவேன். அத்துடன் அவன் அடங்கி விடுவான். மற்றொரு நாள் அவன் என்னிடம் 'நீ இறந்துவிடின், உன் வெற்றுடலைப் போர்த்தி நல்லடக்கம் செய்ய உன்னிடம் கஃபன் கூட இல்லையே' என்ற ஊசாட்டத்தை உண்டு பண்ணுவான். நான் அதற்கு, 'என்னிடம் பணம் உள்ளது. வாங்கிக் கொள்வேன்' என்று கூறுவேன். இவ்வாறு நான் அப்பணத்தால் ஷைத்தானுடைய ஊசாட்டத்தை விட்டும் என்னைத் தற்காத்துக் கொண்டிருந்தேனேயன்றி உண்மையில் எனக்கு அப்பணம் தேவையில்லாமலேயே இருந்தது'' என்று கூறிய அவர்கள் அடுத்த கணம், இஸ்லாத்தின் திருக கலிமாவை ஓதியவர்களாய்த் தங்களின் கண்களை இறுக மூடிக் கொண்டார்கள். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 164 (கி.பி. 778) ஆம் ஆண்டிலாகும். கூஃபாவில் ஹிஜ்ரி 96 ஆம் ஆண்டில் பிறந்த அவர்கள் தம் 64ஆவது வயதில் பஸராவில் இறந்தார்கள்.

அவர்களுக்கு அப்பணம் எவ்வாறு கிடைத்தது? அவர்கள் பதினெட்டு வயதினராய் இருந்த பொழுது, புகாராவில் வாழ்ந்து வந்த அவர்களின் உறவினர் ஒருவர் அவர்களுக்கு இப்பணத்தை எழுதி வைத்துவிட்டு உயிர் நீத்தார். அப்பணத்தை புகாரா வாழ் மார்க்க விற்பன்னர்கள் நன்முறையில் பாதுகாத்து, இவர்களை புகாரா வந்து பெற்றுச் செல்லுமாறு தகவல் கொடுக்க, இவர்கள் புகாரா சென்றனர். புகாரா வந்தடைந்த இவர்களை அதன் தலைவாயிலிலேயே வந்து வரவேற்று ஊருக்குள் அழைத்துச் சென்ற அந்த மார்க்க விற்பன்னர்கள், தாங்கள் பாதுகாத்து வைத்திருந்த இவர்களுக்குரிய சொத்தை இவர்களிடம் ஒப்படைத்து மகிழ்ந்தனர். அதனையே இவர்கள் இத்துணை காலம் பேணுதலாகப் பாதுகாத்து வைத்திருந்தார்கள். தாம் இறக்கும் வரை பிறரின் தேவையை எதிர்பாராதிருப்பதற்காகவே இவர்கள் இவ்வாறு செய்தனர். இறப்பு அண்மி விட்டது என இவர்களுக்கு உறுதியாகத் தெரிந்த பொழுது இவர்கள் அதனை அறம் செய்யுமாறு பணித்துவிட்டு உலகிற்கு எந்நிலையில் வந்தார்களோ அந்நிலையிலேயே இவ்வுலகை விட்டும் பிரிந்தனர்.*

சிறந்த ஹதீதுக் கலை வல்லுனராகவும், முதன் முதலாக ஹதீதுகளை எழுதி வைக்கத் துவங்கியவர்களில் ஒருவராகவும் இருந்த இவர்கள் தம் இறப்புப் படுக்கையில் கிடக்கும் பொழுது, தாம் சேகரித்து வைத்திருந்த ஹதீதுகளை எல்லாம் எரித்துவிடச் செய்தனர். காரணம், அவற்றில் பலவீனமான ஹதீதுகளும் புகுந்திருக்கலாம் என்று இவர்கள் ஐயுற்றதேயாகும்.

அவர்கள் உயிரோடிருந்தக்கால், அவர்கள் கடைத்தெருவுக்குச் சென்ற பொழுது கூட்டில் அடைக்கப்பட்ட பறவை ஒன்று கீச்சுக் கீச்சென்று அலறிக்கொண்டிருப்பதைக் கண்டு அதன் மீது இரக்கமுற்று, அதனை விலைக்கு வாங்கி அதற்கு விடுதலை வழங்கினர் என்றும், அதன் பின் அது ஒவ்வோர் இரவும் அவர்களின் இல்லம் வந்து அவர்கள் தொழுவதை உற்று நோக்கவும், அவர்கள் மீது ஏறி விளையாடவும் செய்து வந்ததென்றும், அவர்கள் இறந்த பொழுது அது பெரும் குரலெடுத்து அலறி அவர்களின் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டு அவர்களின் வெற்றுடலைப் புதைகுழியில் வைத்த பொழுது

---

* அவர்கள் இறக்கும் பொழுது அவர்களிடமிருந்த உடைமைகளின் மதிப்பு 150 தீனார் இருக்கும் என்றும் அவர்களின் மகன் அவர்களுக்கு முன்பே இறந்து விட்டதால் அவர்களின் உடைமைகள் அவர்களின் சகோதரிக்கும் அவளுடைய மகனுக்கும் கிடைத்தன என்றும் அவர்களின் சகோதரர் அல்முபாராக்குக்கு அவற்றில் யாதொரு பங்கும் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதுவும் அப்புதை குழியில் வீழ்ந்து செத்து மடிந்ததென்றும் அவர்களோடு சேர்த்து அதனையும் அப்புதை குழியிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

அவர்கள் இறந்ததன் பின் அவர்களை ஒருவர் கனவில் கண்டு, ''கப்ரின் (புதை குழியின்) தனிமையையும் திடுக்கத்தையும் தாங்கள் எவ்வாறு சகித்துக் கொண்டீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''நான் கப்ரை சுவனப் பூங்காக்களில் ஒன்றாகக் கண்டேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மற்றொருவர் அவர்களைக் கனவில் கண்டு, ''அல்லாஹ் தங்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான்'' என்று வினவிய பொழுது, ''என்னுடைய ஒரு பாதம் ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தில் இருக்கும் பொழுது மற்றொரு பாதம் சுவனத்தில் இருந்தது'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

வேறொருவர் அவர்களை ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குப் பறவைகள் போன்று பறந்து கொண்டிருப்பதைக் கண்டு, ''தாங்கள் இந்நிலையை எவ்வாறு எய்தப் பெற்றீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''பேணுதலின் காரணமாக'' என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்.

பிறிதொருவர் அவர்களைக் கனவில் கண்டு, ''இறப்பைத் தாங்கள் எவ்வாறு நுகர்ந்தீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''அதனுடைய துன்பத்தைப்பற்றி வினவாதீர்'' என்று அவர்கள் கூறினர். அதன் பின் அவர் அவர்களை நோக்கி, ''தங்களின் எச்செயல் மறுமையில் தங்களுக்குப் பயனளித்தது?'' என்று கேட்டபொழுது, ''எல்லாச் செயல்களும் எனக்குப் பயனளிக்கத் தான் செய்தன. எனினும் என் அன்பு மகவு ஒன்று இறந்த பொழுது நான், 'இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்' என்று கூறிப் பொறுமையை மேற்கொண்டு இறைவனைப் புகழ்ந்தேன். அதனை இறைவன் எனக்கு நினைவுப்படுத்தி, அதன் காரணமாக என்னுடைய பதவியை உயர்த்தியதாகக் கூறினான்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

மற்றொருவர் அவர்களைக் கனவில் கண்டு, ''அல்லாஹ் தங்களை எப்படி நடத்தினான்?'' என்று வினவிய பொழுது ''சிறிது விசாரணைக்குப்பின் அவன் என்னைச் சுவனம் அனுப்பி வைத்தான். என் மீது முத்துக்கள் சொரியப்பட்டன'' என்று அவர்கள் பதிலிறுத்தனர், ''எக்காரணத்தால் இத்தகு பதவி தங்களுக்குக் கிடைத்தது?'' என்று அவர் மீண்டும் அவர்களை வினவிய பொழுது ''என் உயிரினும்

பொருளடக்கம்



மேலாக நான் இறைவனை நேசித்ததன் காரணமாக'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

இத்தகு சீர்மைசால் அடிகளார் இவ்வுலகில் வாழும் பொழுது ஒரு மத்ஹபையே தோற்றுவித்தார். அது அவர்களுக்குப் பின் இருநூறு ஆண்டுகள் வரை நிலைத்திருந்து மறைந்து விட்டது. அல்ஜாமி உல் கபீர், அல்ஜாமி உல் ஸகீர், கிதாபுல் பராயித் முதலிய நூல்களும், திருக்குர்ஆனுக்கு விரிவுரை ஒன்றும் அவர்கள் எழுதினர், அவை ஒன்றும் இப்பொழுது கிடைத்தில.

ஸூஃபிகளுக்கெல்லாம் முன்னோடியாயிருந்த இவர்களைப் பற்றி அபூசாலிஹ் ஷுஐப் இப்னு ஹர்ப் அல்மதனி கூறும் பொழுது, ''மறுமையில் இறைவன் மக்களை நோக்கி, 'நீங்கள் உலகில் அண்ணல் நபியைக் காணாத போதிலும், சுப்யான் அத்தௌரியைப் பார்த்துள்ளீர் களல்லவா? அவ்விதமாயின் அவரை ஏன் உங்களின் முன்மாதிரியாக ஆக்கிக் கொண்டிருக்கக் கூடாது?'' என்று வினவுவான் எனத் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினர். அவரின் இம்மணிவாசகம் சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்களின் மாண்பினையும் மகாத்மியத்தையும் தெளிவாக எடுத்துரைக்கும் திருவாசகமாக விளங்குகிறது.

# 14. அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்)

**வெ**யிலோ கொளுத்திக் கொண்டிருந்தது. மர்வ் நகரிலுள்ள வணிகர் ஒருவர் தம் தோட்டத்துக்குச் சென்றார். சென்ற அவர் உடனே அத்தோட்டக் காவற்காரரை அழைத்துத் தமக்கு மிகவும் தாகமாயிருக்கிற தென்றும் எனவே மாதுளம் பழம் பறித்து வருமாறும் கூறினார். அவ்விதமே காவற்காரரும் செய்தார். அவர் பறித்துக் கொணர்ந்த மாதுளம் பழத்தை உடைத்துச் சுளைகளை எடுத்து வாயில் போட்டதும் முகத்தைச் சுளித்தார் அவ்வணிகர். அது அத்துணைப் புளிப்பாக இருந்தது. அப்பொழுது அவர் வெஞ்சினத்துடன் காவற்காரரை நோக்கி, ''நீர் இத்தனை ஆண்டுகளாக இத்தோட்டத்தில் இருக்கிறீர். எது இனிப்பு மாதுளை, எது புளிப்பு மாதுளை என்று கூடத் தெரியவில்லையா?'' என்று வினவினார். அதற்கு அக்காவற்காரர், ''நான் இத்தோட்டத்தைக் காவல் செய்ய நியமிக்கப்பட்டவனே யொழிய, இங்கு காய்க்கும் பழங்களைத் தின்று ருசி பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டவனல்லவே'' என்று அடக்கத்துடன் இயம்பினார். அவரின் இவ்வறிவார்ந்த மறுமொழி அவ்வணிகரின் புருவங்களை மேலேறச் செய்தன. அக்காவலாளரின் நேர்மை அவர் மீது மட்டற்ற மதிப்பை அவருக்கு ஏற்படுத்தியது.

சற்று நேரம் ஆங்கிருந்து களைப்பாறியபின் அவர் தம் இல்லம் திரும்புங்கால், ''நீர் இனிமேல் இங்கு இருக்க வேண்டியதில்லை. என்னுடன் இல்லம் வந்து அங்கேயே வாழ்ந்திரும்'' என்று கூறினார். அதற்கு அவரும் இணங்கினார். இதன் பின் தோட்டக்காரர் முபாரக், நண்பர் முபாரக், ஆலோசகர் முபாரக்காக ஆகிவிட்டார்.

ஒரு நாள் வணிகர் தம் இல்லத்தில் துன்பமே உருவாக வீற்றிருப் பதைக் கண்ட முபாரக் அவரை அணுகி, ''ஐய! தாங்கள் இன்று ஏன் என்றுமில்லா வண்ணம் வருத்தத்தோடு உள்ளீர்கள்?'' என்று வினவினார். அப்பொழுது அவ்வணிகர், முபாரக்கை நோக்கி, ''என் அழகுத் திரு மகளுக்கு மணமுடித்து மகிழத் தகுந்த மணாளர்கள் கிடைக்கவில்லையே என்ற கவலைதான் என் உள்ளத்தைப் பல்லாண்டுகளாக அரித்துக் கொண்டுள்ளது. எத்தனையோ இளவல்கள் மண முடித்துக் கொள்ள முன்

வந்தார்கள் தாம். ஆனால் அவர்களில் ஒருவர் கூட எனக்கு பிடித்த மாயில்லை. இந்நிலையில் என் செய்வதென்றே எனக்கு விளங்க வில்லை'' என்று கூறித் தம் உள்ளத்தைத் திறந்து காட்டினார் அவர்.

அப்பொழுது முபாரக் அவ்வணிகரை நோக்கி, ''தாங்கள் இதற்காக ஏன் இத்துணைக் கவலை கொள்ள வேண்டும்? அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி நமக்கு உள்ளது. யூதர்கள் பணத்திற்காகவும் கிறிஸ்தவர்கள் அழகுக்காகவும் மணமுடித்தார்கள். ஆனால் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களோ நற்பண்புகளுக்கும் மார்க்கப் பற்றிற்குமே முதலிடம் கொடுத்தார்கள்'' என்று கூறினார்.

அது கேட்டு அவ்வணிகர் புன்முறுவல் பூத்தார். உள்ளே சென்று தம் மனைவியிடம் யாதோ பேசிவிட்டுத் திரும்பிய அவர் முபாரக்கை நோக்கி ''முபாரக்! இக்கணமே என் கவலையெல்லாம் ஒழிந்தது. உம்மையே என் அழகுத் திருமகளுக்கேற்ற, அறிவும் பண்பும் மார்க்கப் பற்றும் ஒருங்கே அமையப் பெற்ற நன் மணவாளனாகக் காண்கிறேன்'' என்று கூறி அவருக்குத் தம் அழகு மகளை மணமுடித்தார் அவர். அவ்வின்ப மணமக்கள் செய்த அருந்தவப் பயனாக ஹிஜ்ரி 118 (கி.பி. 736) ஆம் ஆண்டில் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் பிறந்தார்கள்.

இதன் பின் சில ஆண்டுகள் கழித்து அவ்வணிகர் இறக்கவே, அவருடைய சொத்து முழுவதும் முபாரக்குக்கும் அவருடைய மனைவிக்கும் வந்து சேர்ந்தது. அதனைக் கொண்டு அவர்கள் தங்களின் இல்லறத்தை நல்லறமாகச் செய்து வந்தார்கள்.

தம் அருமை மகன் அப்துல்லாஹ் வளர்ந்து பெரியவரானதும், அவருக்குக் கல்வி பயிற்றுவித்து அவரை ஒரு சிறந்த வணிகராக ஆக்க வேண்டுமென்று தாய், தந்தையர் பெரிதும் கனவு கண்டு கொண் டிருந்தார்கள். ஆனால் அவரோ வயதாக ஆக அவர்கள் கண்டு வந்ததற்கு நேர் மாற்றமாக நடக்கத் துவங்கினார். எப்பொழுது பார்த்தாலும் வீண் விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்த அவர், வயதேறப் பெற்றதும் பாட்டு, கூத்து ஆகியவற்றில் மூழ்கித் திளைத்தார். கூடா நட்புக் கொண்டு குடியிலும் கும்மாளத்திலும் தம் முழு நேரத்தையும் கழித்தார். இது கண்டு பெற்றோர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கும் ஏமாற்றத்திற்கும் அளவில்லை.

அவர்கள் அவருக்கு எவ்வளவோ அறிவுரைகள் கூறியும் அவர் கேட்டாரில்லை. பெற்றோர்களுக்கோ என் செய்வதென்றே தெரிய வில்லை. இறைவனின் முன் தாள் பணிந்து, ''இறைவ எம்பெரும! நீ

எங்களுக்குத் தந்ததோ ஒரு மகன். அவனையும் ஒரு தறுதலையாக ஆக்கிவிட்டாய். நாங்கள் என் செய்வது? அவனை ஒரு நன்மகனாக, எம் குலம் தழைக்க வந்த பெருமகனாக ஆக்குவாயாக!'' என்று கண்ணீரும் கம்பலையுமாக இறைஞ்சினார்கள். இது நடந்து சின்னாட்களே ஆயின.

கடும் குளிரான இரவொன்றில் அவர்களின் மகன் அப்துல்லாஹ் தம் காதலியைக் காண்பதற்காக அவளின் இல்லத்தின் சுவரோரத்தில் இரவு முழுவதும் காத்து நின்றார். தொழுகைக்கான அழைப்பொலி கேட்டதும் அது இரவுத் தொழுகைக்கான அழைப்பொலி போலும் என்று அவர் எண்ணினார். பின்னர் தான் அது வைகறைத் தொழுகைக்கான அழைப் பொலி என்று தெரிய வந்தது. அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. ''இப்னு முபாரக்! உனக்கு வெட்கம் இல்லையா? உன் காதற்கிழத்தியைக் காண்பதற்காக நீ கடுங்குளிரில் காத்து நிற்கும் பொழுது உனக்கு இரவு கழிந்தது கூடத் தெரியவில்லையே. தொழுகையில் இமாம் சற்றுப் பெரிய அத்தியாயத்தை ஓதத் துவங்கியதும் உனக்கு எரிச்சலாக வருகிறதே'' என்று கூறித் தம்மையே தாம் ஏசிக் கொண்டார்.

இதன் பின் ஓர் இரவு அவர் தம் நண்பர்களுடன் மதுவருந்தி விட்டு அம்மது மயக்கத்தில் படுத்துறங்கினார். அப்பொழுது அவர் ஒரு கனவை, ஓர் இன்பக் கனவை, அவரின் வாழ்வையே மாற்றியமைக்க வல்ல ஓர் அற்புதக் கனவைக் கண்டார். எழிலாரும் பூங்கா ஒன்று அவரின் கனவில் தோற்றம் வழங்கியது. அதில் ஒரு மரக்கிளையில் பறவையொன்று அமர்ந்து, ''அலம் யஃனீலில்லதீன ஆமனூ அன் தஹ்ஷஅ குலூபுஹும் லி திக்ரில்லாஹ் (இறை நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ்வை நினைத்து உள்ளம் நடுங்கக் கூடிய நேரம் இன்னும் நெருங்கவில்லையா?'') என்ற இறை திருவசனத்தை ஓதியது. அது கேட்டுத் திடுக்குற்று விழித் தெழுந்தார் அப்துல்லாஹ். அவருடைய உள்ளமெல்லாம் நடுங்கியது. உடலெல்லாம் அதிர்ந்தது. இறைவன் தமக்கு வழங்கிய அருள் எச்சரிக்கையாக அவர் அதனை உணர்ந்தார். அவ்வருள் எச்சரிக்கைக்கு மாறாகத் தாம் நடப்பின் தாம் அழிந்தொழிவது நிச்சயம் என்பதையும் அறிந்தார். அடுத்த கணம் அவருடைய வாய், ''பேரருளாளனாகிய இறைவனே! இதோ அந்த நேரம் வந்து விட்டது. இதோ அந்த நேரம் வந்துவிட்டது'' என்று அலறியது. இதன் பின் அவருடைய கைகள் தாமாகவே வேலை செய்யத் துவங்கி விட்டன. ஆங்குக் கிடந்த மதுப்புட்டிகளையும், இசைக் கருவிகளையும் எடுத்தெறிந்து வீசி உடைத்தன. அவர் அணிந்திருந்த அழகு வண்ணப் பட்டாடைகளைக் கிழித்தெறிந்து வீசின.

இதன் பின் இல்லம் மீண்ட அவர் குளித்து 'உளூ'ச் செய்து எளிய ஆடை அணிந்தவராய் இறை இல்லம் சென்று இறைவனை வணங்கி, வழுத்தி, ''இறைவ எம்பெருமா! இனி நான் உனக்கு மாறு செய்வதில்லை. இனி நான் உனக்கு மாறு செய்வதில்லை. என் பவம் பொறுத்தருள். என் பவம் பொறுத்தருள்'' என்று அழுது கெஞ்சி வேண்டினார். அதன் பின் தாம் இனிமேல் நெறி வாழ்வு வாழ்வதாக இறைவனின் திருமுன் உறுதிப் பிரமாணம் செய்தார்.

இதன் பின் அப்துல்லாஹ் இப்னு முபாரக்கின் வாழ்க்கையிலே ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டது. அது கண்டு அவரின் பெற்றோர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். தம் இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொண்டதற்காக அவனுக்கு ஆயிரம், ஆயிரம் நன்றிகளை அன்புக் காணிக்கையாக வழங்கினர்.

வணக்கத்திலும் வழிபாட்டிலும் ஈடுபட்டிருந்த தனயர் ஒரு நாள், தம் தோட்டத்தில் அயர்ந்து உறங்கிவிட்டார்கள். அப்பொழுது அவர்களின் அன்னை அவர்களைக் காண வந்த பொழுது, ஒரு பாம்பு படமெடுத்து நின்று அவர்கள் மீது ஈக்கள் ஒட்டாது விரட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு பெருவியப்பெய்தினார். அது முதல் தம் மகன் இறையருள் பெற்றவர் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

ஒரு நாள் தந்தை முபாரக் தம் அருமை மகன் அப்துல்லாஹ்வை அருகழைத்து, ''மகனே! உனக்கோ வயதாகி விட்டது. இனி பொருளீட்டாது இவ்வுலகில் வாழ்வது இழிவுடைத்ததாகும். உனக்கு மூலதனமாக ஐம்பதாயிரம் திர்ஹங்கள் தருகிறேன். வெளியூர் சென்று வாணிபம் செய்து பொருளீட்டிவா'' என்று கூறினார்.

அவ்வாறே செய்வதாகக் கூறி, ஐம்பதாயிரம் திர்ஹங்களுடன் வெளியூர் சென்ற அவரின் மைந்தர், ஆங்கு வாணிபம் செய்தாரா என்றால் இல்லை.

சில ஆண்டுகள் ஓடி மறைந்தன. வாணிபத்தின் பொருட்டு வேற்று நாடு சென்ற தம் இளம் மகன் அப்துல்லாஹ் இல்லம் திரும்புகின்றார் என்பதைக் கேள்வியுற்றதும், தந்தை முபாரக்கின் உள்ளம் துள்ளி விளையாடியது. அன்று வைகறையிலேயே தம் அருமை மகனை எதிர்பார்த்துக் காத்திருந்தார் முபாரக். நண்பகலில் தம் குலம் தழைக்க வந்த கோமகன் இல்லம் திரும்பியதும் தந்தை முபாரக் அவரை ஆரத் தழுவி இருக்கையில் அமரச் செய்தார். அதன் பின் அவரின் உடல் நலன், அவர் சென்ற நாடுகள் ஆகியவை பற்றிய விவரங்களையெல்லாம் வினவினார். பின்னர் அவரைத் தனியாக அறைக்கு அழைத்துச் சென்று,

''மகனே! எவ்வளவு பொருள் ஈட்டி வந்துள்ளாய்?'' என்று வினவினார். மகன் யாதொரு பதிலும் கூறவில்லை. இது முபாரக்கிற்கு அளவற்ற ஏமாற்றத்தை வழங்கியது.

சற்று நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். அதன் பின் அப்துல்லாஹ் தம் பெட்டிகளைத் திறந்தார். அவற்றை முபாரக்கின் கண்கள் ஆவலோடு பார்த்தன. அவற்றில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருள்களை - இல்லை, இல்லை நூல்களை ஒன்றின் பின் ஒன்றாக எடுத்துத் தம் தந்தையிடம் காட்டி, ''அப்பா! இவ்வுலகத்திற்குப் போதிய பொருளை மட்டுமல்ல, ஈருலகத்திற்கும் போதிய பொருளை ஈட்டி வந்துள்ளேன்'' என்று பெருமிதத்துடன் கூறினார். அது கேட்டு தந்தைக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு - இல்லை, இல்லை, மகிழ்ச்சிக்கு மட்டில்லை. ''நன்று செய்தாய், நன்று செய்தாய்'' என்று உவகை பொங்கக் கூறி, ''எங்கு, எங்குச் சென்று எவர், எவரிடமெல்லாம் கல்வி கற்றாய்?'' என்று விசாரித்தறிந்தார் அவர். சில தினங்கள் உருண்டோடிய பின் முப்பதாயிரம் திர்ஹங்களை அவரிடம் கொடுத்து, ''இவற்றை எடுத்துச் சென்று இன்னும் படிக்க வேண்டிய கல்விகளையெல்லாம் படித்து வா'' என்று கூறினார்.

இதன் பின் ஹதீதுகளைப் பயில்வதற்காகவும், அவற்றைச் சேகரிப்பதற்காகவும் நாடு, நாடாக நகரம், நகரமாக ஊர், ஊராகச் சுற்றித் திரிந்தார்கள் அவர்கள். சிரியா, எகிப்து, ஹிஜாஸ், எமன் ஆகிய நாடுகளி லெல்லாம் அவர்களின் கால்கள் அலைந்து திரிந்தன. இப்பிரயாணங்களின் போது அவர்கள் அனுபவித்த துன்பங்களும் துயரங்களும் சிறிதல்ல. அவர்களைப் பற்றி இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறும் பொழுது, ''அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களை விட மார்க்கக் கல்வியைப் பெறுவதற்காகப் பிரயாணம் செய்தவர்களை நான் கண்டும் அறியேன். கேட்டும் அறியேன்'' என்று வாயார்ந்து கூறினார்கள்.

அவர்கள் கல்வி பயின்றதோ ஓர் ஆசிரியரிடம், இரண்டு ஆசிரியர் களிடமல்ல. நாலாயிரம் ஆசிரியர்களிடம் சென்று தாம் கல்வி பயின்றதாக அவர்களே பின்பொரு தடவை கூறினார்கள். எனினும், தாம் ஆயிரம் ஆசிரியர்களிடம் பயின்ற ஹதீதுகளையே வெளியிட்டிருப்பதாக அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவர்கள் வாயிலாக 21,000 ஹதீதுகள் வெளிவந்துள்ளன.

அவர்களின் ஆசிரியர்களில் தலை சிறந்து விளங்குபவர்கள் இமாம் அபூஹனீஃபா (ரஹ்), இமாம் மாலிக் (ரஹ்), சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்களாவார்கள். இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களின் மீது, அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களுக்கு அளவற்ற அன்பும் மதிப்பும் இருந்தன. ''நான் இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களிட

பொருளடக்கம்



மிருந்து கல்வி கற்றிராவிடின் சாமான்யனாகவே இருந்திருப்பேன்'' என்று அவர்கள் கூறினர்.

இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களின் மறைவுக்குப் பின், இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் சென்று கல்வி பயின்ற அவர்கள், இமாம் மாலிக் (ரஹ்) அவர்களைப் பெரிதும் மதித்தார்கள். இமாம் மாலிக் (ரஹ்) அவர்களும் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களைப் பெரிதும் மதித்து வந்தார்கள்.

ஒரு தடவை இமாம் மாலிக் (ரஹ்) அவர்களைச் சந்திப்பதற்காக இவர்கள் மதீன மாநகருக்குச் சென்ற பொழுது, இவர்களைக் கண்டதும் எழுந்து நின்று வரவேற்றுத் தம் ஆசனத்தில் அமரச் செய்தனர் இமாம் மாலிக் (ரஹ்). இத்தகு மரியாதையை வேறு எவருக்கும் செய்யாத இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், இவர்களுக்கு மட்டும் அதனைச் செய்ததைக் கண்ட அவர்களின் மாணவர்கள் வியப்புக் கண்களுடன் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களை நோக்கிய பொழுது, ''இவர்கள் குராஸான் நாட்டு பகீஹ்'' என்று கூறி அவர்களின் பண்புகளைப் புகழ்ந்துரைத்தனர் இமாம்.

அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், இந்த இருபெரும் இமாம்களிடமும் கல்வி கற்றதனால் ஹனபீகள் இவர்களைத் தங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் மாலிக்கிகள் இவர்களைத் தங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறிப் பெருமையுற்றார்கள்.

தம் மாணவர் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் மீது சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்கள் கொண்டிருந்த மதிப்போ அளவிடற்பாலதாய் இருந்தது. ஒருவர் சுப்யான் அத்தௌரீ (ரஹ்) அவர்களின் முன்னிலையில் வைத்து அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களைக் கீழை நாட்டு அறிஞர் (மஷ்ரிக்குடைய ஆலிம்) என்று கூறிய பொழுது, அவர்கள் சினமுற்று, ''அவர்களைக் கீழை நாடு, மேலை நாடு ஆகியவற்றின் அறிஞர் (மஷ்ரிகுக்கும் மஃரிபுக்கும் ஆலிம்) என்று கூறுங்கள். இதைக் கூட விளங்காது பேசுகின்றீர்களே'' என்று கூறினர்.

மற்றொரு தடவை குராஸான் நாட்டினர் ஒருவர் அவர்களிடம் வந்து, மார்க்கம் பற்றிய ஐய விளக்கம் ஒன்றைக் கேட்ட பொழுது, ''இத்துணை தொலைவந்து என்னிடம் ஏன் இதனைக் கேட்கின்றீர்கள்? உங்களிடமே கீழை நாடு, மேலை நாடு ஆகியவற்றின் பேரறிஞர் உள்ளாரே, அவரிடம் சென்று கேளுங்கள். அவர் அங்கு இருக்கும் பொழுது, என்னிடம் இங்கு வந்து இதனைக் கேட்க வேண்டிய தேவை என்ன உள்ளது?'' என்று கூறினர் சுப்யான் அத்தௌரி.

ஆம்; உண்மையில் அவர்கள் அத்தகு மாண்பாளராகவே விளங்கினர். அவர்களின் அறிவின் ஆழத்தையும், கல்வியின் விசாலத்தையும், வணக்கத்தின் மேம்பாட்டினையும் கண்ட மார்க்க விற்பன்னர்கள் அவர்களைத் தம் தலைவராக, ஹதீதின் இமாமாகத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்தார்கள். ஹதீதுக் கலையில் அவர்கள் அமீருல் முஃமினீன் என்றும் இமாமுல் முஸ்லிமீன் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

மார்க்க விற்பன்னர்களிடம் ஹதீதுகள் பற்றி ஐயம் ஏற்படின், "நடங்கள். ஹதீதுகளின் நாடியைப் பிடித்துப் பார்க்கக் கூடிய மருத்துவர் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களிடம் செல்வோம்" என்று அவர்கள் கூறுவர்.

உண்மையான ஆறு நபிமொழித் தொகுப்பின் ஆசிரியர்களுக்கே ஆசிரியராக இருந்த ஹுதைபா இப்னு ஸயீத் பஹ்லானி (ரஹ்) அவர்களே, இவர்களைப் பற்றிக் கூறும் பொழுது, "எங்களின் காலத்தில் சிறந்து விளங்கிய பெரியார்கள் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களும், அவர்களுக்குப் பின்னர் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களுமாவர்" என்று கூறி இருப்பதிலிருந்து இவர்களின் மாண்பினை ஒருவாறு அறிய வரலாம்.

அவர்கள் தங்களின் இறுதி வரை அறிவைத் தேடுவதில் அல்லும் பகலும் அயராது ஈடுபட்டிருந்தார்கள். இதைக் கண்ட ஒருவர், "தாங்கள் எத்துணை காலம் இவ்வாறு அறிவைத் தேடுவதில் ஈடுபட்டிருப்பீர்கள்?" என்று வினவிய பொழுது, "இறக்கும்வரை" என்று அவர்கள் சடாரென மறுமொழி பகர்ந்தார்கள். அதன் பின், "எனக்குத் தெரியாமல் எத்தனையோ பயன்மிகு செய்திகள் இருக்கலாமல்லவா?" என்று அவர்கள் அடக்கமாகப் பதிலுரைத்தார்கள்.

ஹதீதுகளைப் பயில்வதிலும் அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலுமே தங்களுடைய முழு நேரத்தையும் அவர்கள் கழித்ததன் காரணமாக, அவர்கள் தொடர்ச்சியாகப் பல நாட்கள் வீட்டை விட்டு வெளியே செல்வதில்லை. "எப்பொழுது பார்த்தாலும் தனித்து வீட்டிலேயே இருக்கின்றீர்களே, தங்களுக்கு அலுப்போ, சலிப்போ, அச்சமோ ஏற்படாதா?" என்று ஒருவர் அவர்களை வினவிய பொழுது, "இஃதென்ன வியப்பாக உள்ளது. என் இல்லத்தில் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களுடையவும், அவர்களின் அருமைத் தோழர்களுடையவும் தொடர்பு எனக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, எனக்கு எவ்வாறு அலுப்போ, சலிப்போ, அச்சமோ ஏற்படும்? நான் அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களுடையவும், அவர்களின் அருமைத் தோழர்களுடையவும் பேரவையில் அமர்ந்துள்ளேன். அவர்களைப் பார்த்த என் கண்கள் குளிர்ச்சியடைகின்றன. அவர்களுடன் உரையாடி என் மனம் மகிழ்ச்சியுறுகிறது" என்று அவர்கள் கூறினார்கள்.

இரவில் ஹதீது பற்றி அவர்களுக்கு ஏதேனும் நினைவுவரின் அதுபற்றிச் சிந்தித்து அவர்கள் இரவு முழுவதையும் கழித்து விடுவார்கள்.

ஹதீது பற்றி அவர்களுக்கு அளவற்ற ஞானம் இருந்து வந்தது. ஒரு தடவை அவர்கள் இரவுத் தொழுகை தொழுது விட்டு வெளியில் வரும் பொழுது பள்ளியின் வாசற்படியில் அலீ இப்னு ஹஸன் என்பவர் அவர்களைச் சந்தித்து ஒரு ஹதீது பற்றி வினவிய பொழுது, அதற்கு அவர்கள் மளமளவென்று பல்வேறு விளக்கங்களை வழங்கிக் கொண் டிருந்தனர். வைகறைத் தொழுகைக்கு அழைப்பொலி எழுப்பப்பட்ட பொழுது தான் அவர்களுக்கு வைகறையாகி விட்டது என்பது தெரிய வந்தது.

ஹதீதுகளின் மீது அவர்கள் அளவற்ற அன்பு செலுத்தியதோடு அவற்றிற்கு மரியாதையும் செலுத்தி வந்தார்கள். எவரும் அவற்றைப் பற்றி அவமதிப்பாகப் பேசின், அவர்களின் முகம் செக்கர் வானம் போல் சிவந்து விடும்.

ஒரு தடவை அவர்கள் தெருவழியே வந்து கொண்டிருக்கும் பொழுது ஒருவர் அவர்களை அணுகி ஒரு ஹதீது பற்றி விளக்கம் வேண்டினார். அது கேட்டு வெகுண்ட அவர்கள், ''இது அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அருண் மொழிகளுக்கு விளக்கம் கேட்கக் கூடிய இடமா?'' என்று கூறிக் கொண்டே அவ்விடத்தை விட்டும் அகன்றார்கள்.

ஒரு தடவை அவர்கள் ஹதீதுகளைப் பற்றிக் கூறும் பொழுது, ''நான் நாலாயிரம் ஹதீதுகளைக் கொண்டு நான்கு விஷயங்களைத் தேர்ந் தெடுத்துக் கொண்டேன். அவை (1) உலகச் செல்வத்தின் மீது பெருமை யுறக் கூடாது. (2) ஒருவன் தன் வயிற்றில் தான் சுமத்த இயலாத ஒன்றைப் புகுத்த முயலக் கூடாது (3) ஒருவன் பயன் வழங்கும் கல்வியையே பயில வேண்டும். (4) எதிலும் பெண்கள் மீது நம்பிக்கை கொள்ளாதிருத்தல் வேண்டும் என்பவையாகும்'' என்றும் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

நாளடைவில் அவர்களின் புகழ் குராஸான் நாட்டில் மட்டுமன்றி, அரபு அவனி முழுவதும் பரவலாயிற்று. ஒரு தடவை அவர்கள் இராக் நாடு சென்ற பொழுது, அந்நாட்டின் பெரிய ஷைகான ஹம்மாது இப்னு ஸயீதைக் காண்பதற்காகச் சென்றனர். அப்பொழுது அவர் இவர்களை நோக்கி, ''நீர் எங்கிருந்து வருகிறீர்?'' என்று வினவ, ''குராஸானிலிருந்து'' என்று பதிலிறுத்தார்கள். ''குராஸான், பெரிய நாடாயிற்றே. அதில் எந்த ஊரிலிருந்து வருகிறீர்?'' என்று அவர் வினவ, ''மர்விலிருந்து'' என்று விடையிறுத்தார்கள். அப்பொழுது அவர், இவர்களை நோக்கி,

''அப்துல்லாஹ் இப்னு முபாரக்கை அறிந்துள்ளீரா?'' என்று வினவினார். அதற்கு இவர்கள், ''அவர் தாம் தங்களின் திருமுன் வந்துள்ளார்'' என்று அடக்கத்துடன் மறுமொழி பகர்ந்தார்கள். அது கேட்ட அவர் நாணத்துடன் தலைகுனிந்து பின்னர் எழுந்து அவர்களை மார்போடு அணைத்து வரவேற்று மரியாதை செய்தார்.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புப் போன்று, இவர்களுக்கு எங்கணும் சிறப்பாகவே இருந்தது. ''இறை அச்சமுள்ள அரசனைவிட மேலானவன் ஒருவனுமில்லை. அரசன் மக்களைக் கட்டாயப்படுத்தித் தன் பக்கல் இழுக்கும் பொழுது, இறையச்சமுள்ளவர்களோ மக்களின் கண்களை விட்டும் வெருண்டோடுகின்றனர். ஆனால் மக்களோ அவர்களைக் காண்பதற்காக அவர்களை விரட்டிக் கொண்டே செல்கின்றனர்'' என்று அவர்கள் ஒரு தடவை கூறியது, அவர்கள் பற்றிய வரையில் முழுக்க முழுக்க உண்மையாகவே இருந்தது.

ஒரு தடவை அவர்கள் ரிக்கா நகருக்கு வருகை தந்த பொழுது அவர்களை வரவேற்க ரிக்கா நகரமே திரண்டு வந்தது. அவர்களுக்கு ரிக்கா நகர மக்கள் அளித்த மாபெரும் வரவேற்பைக் கண்ட கலீபா ஹாரூன் அல் ரஷீதின் மனைவி சுபைதாவின் புருவங்கள் மேலேறின. ''அப்துல்லாஹ் இப்னு முபாரக்கின் ஆட்சியே ஆட்சி! என் கணவருக்கு இத்துணை வரவேற்பில்லையே. படை பலத்தைக் கொண்டுதானே மக்கள் அவர்பால் ஈர்க்கப்படுகின்றனர். ஆனால் அன்பால், பக்தியால் ஈர்க்கப்பட்டு இந்தப் பிரம்மாண்டமான மக்கட் திரள் இவர்களை வரவேற்க வந்துள்ளதே'' என்று வாயார்ந்து கூறினார்.

மற்றொரு தடவை காசிம் இப்னு முகம்மது என்பவர் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களுடன் பிரயாணம் செய்த பொழுது, அவர்களுக்குக் கிடைத்த அளப்பரும் மரியாதையைக் கண்டு அவருக்கு பெரிதும் வியப்பேற்பட்டது. ''நானும் அவர்களே போன்றுதானே வணக்கம் நிகழ்த்துகின்றேன். அவர்களுக்கு மட்டும் இத்துணை மதிப்பு ஏற்படக் காரணம் என்ன?'' என்று தம்மையே தாம் கேட்டுக் கொண்டார்.

ஒரு நாள் அவர்கள் உண்ண அமர்ந்திருந்த பொழுது விளக்கு திடீரென அணைந்துவிட்டது. சற்று நேரத்தில் விளக்கு ஏற்றப்பட்ட காலை அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களின் தாடியில் வெண்முத்தனைய கண்ணீர்த் துளிகள் மின்னுவதைக் கண்டதும் காசிம் இப்னு முகம்மதின் அறிவுக் கண்கள் தெளிவு பெற்றன. அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், அவ்விருளில் புதைகுழியின் இருளை நினைத்து அச்சமுற்றுக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள். இதன் பின்னரே அவர்களுக்கு எங்குப் பார்த்தாலும் வழங்கப்பட்டு வந்த மரியாதைக்கான காரணம் அவருக்கு நன்கு தெரிய வந்தது.

ஆம்; அவர்கள் மிகவும் இறையச்சம் உள்ளவர்களாக இருந்தனர். அந்த இறையச்சத்தின் காரணமாகவே அவர்களுக்கு இத்துணை மதிப்பு ஏற்பட்டது என்று இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்களே சான்று பகர்கின்றார்கள்.

ஒரு நாள் அவர்களிடம் ஒருவன் வந்து தமக்கு அறிவுரை வழங்கு மாறு வேண்டிய பொழுது, ''இறைவனை உன்முன் வைத்துக் கொள்'' என்று சுருக்கமாக மொழிந்தனர். அப்பொழுது அருகிலிருந்த ஒருவர் அதற்கு விளக்கம் வேண்டிய பொழுது,''இறைவன் உம்முன் எப் பொழுதும் இருப்பது போன்றும், நீர் அவன் முன் எப்பொழுதும் இருப்பது போன்றும் கருதி அஞ்சிப் பேணுதலுடன் நடந்து கொள் வீராக!'' எனறு விரித்துரைத்தார்கள்.

அவர்கள் சிரியா சென்றிருந்த பொழுது, ஆங்கு ஒருவரிடம் எழுதுவதற்குப் பேனாவை இரவல் வாங்கினர். அவர்கள் மர்வ் வந்த பிறகு தான் தாம் அவரிடம் அதனைத் திருப்பிக் கொடுக்காது கொண்டு வந்து விட்டது தெரிய வந்தது. அடுத்த கணமே அவர்கள் சிரியா புறப்பட்டுச் சென்று அவரிடம் அப்பேனாவை ஒப்படைத்த பின் தான் அவர்கள் மனம் அமைதி பெற்றார்கள். அவர்களின் நேர்மையைக் கண்டு வியந்த அந்த சிரியா நாட்டினரிடம், ''ஐய! ஐயத்திற்குரிய ஒரு திர்ஹம் ஒருவனிடம் இருப்பின், அவன் அதனை அதற்குரியவர் எவரென அறிந்து அவரிடம் திருப்பிக் கொடுப்பது ஓர் இலட்சம் திர்ஹங்களை அறம் செய்வதை விட மேலானதாகும்'' என்று கூறினர்.

பற்று நீங்கிய பான்மையினராய் எவ்வாறு வாழ்வது என்பது பற்றி அவர்கள், ''கிதாபுஸ் ஸுஹ்து'' என்ற பெயருடன் ஒரு நூல் எழுதி யுள்ளனர். அதனை அவர்கள் மாணவர்களுக்குப் போதிக்குங்கால், அழுது கொண்டே தழதழத்த குரலில் போதிப்பார்கள்.

அவர்களின் வாழ்வு நபித் தோழர்களின் புனித வாழ்வுக்கு இணக்க மாக இருந்தது. அவர்களைப் பற்றி மக்காவின் பிரபல மார்க்க விற்பன்ன ரான சுப்யான் இப்னு உயைனா கூறும் பொழுது, ''அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், நபித் தோழர்களுக்கு எந்த வகையிலும் குறைந்தவரல்ல. நபித் தோழர்கள் இரவில் தொழவும், பகலில் மார்க்க யுத்தத்தில் ஈடுபடவும் செய்தது போன்று, இவர்களும் செய்து வந்தார்கள். ஆனால் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களுடன் வாழக் கூடிய பேறு மட்டும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை'' என்று எடுத்துரைத் தனர்.

இவர்கள் ஓர் ஆண்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் ஹதீதுக் கலையைப் போதிக்கவும் மற்றொரு பகுதியில் மார்க்கப் போரில்

ஈடபடவும், வேறொரு பகுதியில் 'ஹஜ்'ஜுச் செய்யவும் செலவழித்து வந்தார்கள்.

இவர்கள் இவ்வாறு அறவாழ்வு வாழ்வதைக் கண்டு இவர்களின் ஆசிரியர் சுப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்கள் பெரு வியப்பெய்தி னார்கள். ''என் வாணாள் முழுவதும் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களின் மூன்று நாள் வாழ்க்கைக்குச் சமமாக இருக்கக் கூடாதா?'' என்று அவர்கள் வருத்தத்துடன் கூறினார்கள்.

அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், அல்லாஹ்வின் நல்லடியாராக இருப்பதிலேயே பெருமையுற்றார்கள். எனவே அவர்கள் செல்வர்களையோ, அரசர்களையோ அணுகுவதில்லை. ''மார்க்க விற்பன்னர்கள் அரசர்களிடம் செல்வது, அவர்கள் பயின்ற கல்வியை இழிவு படுத்துவதாகும்'' என்று அவர்கள் கூறி வந்தனர். செல்வர் களையும், பெருமையுள்ள அதிகாரிகளையும், அரசர்களையும் காணச் செல்வதைத் தவிர்ந்து கொள்ளுமாறு தம் தோழர்களுக்கும், மாணவர் களுக்கும் அறிவுரை வழங்கி வந்தார்கள்.

கலீபா ஹாரூன் அல்ரஷீத், இவர்களை சந்திக்கப் பல தடவை விரும்பிய பொழுது அவர்கள் பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறி அவரைச் சந்திப்பதைத் தவிர்ந்து கொண்டனர்.

இவர்களின் நண்பரும் பங்காளருமான இஸ்மாயீல் இப்னு அலிய்யா என்பவர் ஜகாத் வசூல் பண்ணும் அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட பொழுது இவர்கள் அவரை ஏறிட்டும் பார்க்கவில்லை. அது கண்டு பெரிதும் வருத்தமுற்ற அவர், தம் இல்லம் சென்றதும், தம் வருத்தத்தை நீண்ட கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தினார். உடனே அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், 'மார்க்கக் கல்வியின் மூலம் நீர் உலகப் பொருள் களைச் சுருட்டுவதில் ஈடுபட்டுவிட்டீர். உலக இன்பங்களுக்குப் பின்னால் நீர் சென்று கொண்டே இருக்கிறீர். அவை உம் மார்க்கத்தை உம்மிடமிருந்து பறந்தோடச் செய்து விடும். அதிகாரிகளின் தொடர்பைப் பற்றி மக்களை அச்சுறுத்தும்.

அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களின் ஹதீதுகளை எடுத்துரைத்துக் கொண்டிருந்துவிட்டு,

நீர் இவ்வாறு அரசர்களை அணுகி நிற்கும்
அதிகாரத்தை ஏற்றுக் கொண்டுவிட்டீரே.
பாதிரிகளைப் போன்று மதத்தை வைத்துக் கொண்டு
உலகச் செல்வங்களைச் சம்பாதிக்க
எண்ணிக் கொண்டீரோ?''

என்ற கருத்தமைந்த கவிதையொன்றை எழுதி அனுப்பினார்கள்.

அதைக் கண்டதும் இஸ்மாயில் அழுதார்; அழுதார். கண்கள் சிவக்கும் வரை அழுதார். முகம் வீங்கும் வரை அழுதார். அதன் பின் தம் பதவியைத் துரும்பெனக் கருதித் தூக்கி எறிந்து விட்டு, அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களை அணுகினார். அப்பொழுது அவர்கள் அவரைப் புன்முறுவலுடன் வரவேற்று, ''நன்று செய்தீர்; நன்று செய்தீர்'' என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்கள்.

அவர்களின் செயலர் பஸராவிலிருந்து எழுதிய மடலில் தாம் அரசாங்க அலுவலாளர்களுடன் வணிகத் தொடர்பு கொண்டுள்ளவர் களுடன் வணிகத் தொடர்பு கொண்டுள்ளதாக எழுதிய பொழுது, ''அவர்கள் மற்றவர்களுடனும் வணிகத் தொடர்பு கொண்டிராது, அரசாங்க அலுவலாளர்களுடன் மட்டும் வணிகத் தொடர்பு கொண்டிருப்பின், அவர்களுடன் நீர் வணிகத் தொடர்பு கொள்ள வேண்டாம். மற்றவர் களுடனும் அவர்கள் வணிகத் தொடர்பு கொண்டிருப்பின் நீர் அவர்களுடன் வணிகத் தொடர்பு கொள்ளலாம்'' என்று எழுதினர்.

அவர்கள் வாணிபத்தின் பொருட்டு ஓர் ஊர் சென்றக்கால் ஒரு விடுதியில் தங்கினர். அப்பொழுது அவர்கள் தொழச் சென்ற பொழுது அவர்களின் குதிரை அண்மையில் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்த பண்ணையில் போய் மேயத் துவங்கியது. அது கண்ட அவர்கள் அரசாங்கத்திற்கு உரிய பொருளைத் தின்ற அக்குதிரை மீது ஏறி அமர்ந்து செல்வது தமக்குத் தகாது என்று கூறி நடந்தே ஊர் திரும்பினார்கள்.

அவர்களுக்கு பக்தாது நகரையே பிடிக்காது. ''நான் உலகம் முழுவதும் சுற்றி இருக்கிறேன். ஆனால் பக்தாதை விடக் கொடியதொரு நகரத்தை நான் கண்டதில்லை'' என்று அவர்கள் ஒரு தடவை கூறினர். ''ஏன் இவ்வாறு கூறுகிறீர்கள்?'' என்று ஒருவர் அவர்களை வினவிய பொழுது, ''அதில் வசிக்கும் மக்கள் இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதில்லை. தீய செயல்களைச் செய்யத் தயங்குவதில்லை. அங்கு சினம் கொண்ட சேவகர்கள், பேராசை பிடித்த வணிகர்கள், உணர்ச்சியில்லாது திருக்குர்ஆனை ஓதும் அறிவாளிகள் - இவர்களைத் தவிர வேறு ஒருவரையும் நான் காணவில்லை'' என்று அவர்கள் பதில் கூறினர்.

ஒரு தடவை அவர்கள் ஒரு குழுவினருடன் மக்கா செல்லும் வழியில் பக்தாதில் பதினாறு நாட்கள் தங்க வேண்டியதேற்பட்டது. தீமைகள் சூழ்ந்த அவ்வூரில் தங்குவதே குற்றம் என அவர்கள் கருதினார்க்ள. எனினும் குழுவை விட்டும் எவ்வாறு பிரிந்து செல்வது?

எனவே அவர்கள் ஆங்குத் தங்கி இருந்த ஒவ்வொரு நாளைக்கும் ஒரு பொற்காசு வீதம் அறம் செய்தார்கள்.

ஒரு தடவை மக்கள் அவர்களை அணுகி, ''தன்னடக்கம் என்றால் என்ன?'' என்று வினவிய பொழுது, ''உங்களின் தன்மான உணர்வு செல்வர்களை விட்டும் உங்களைத் தூரமாக்கி வைப்பது தான்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

ஒருவன் எவ்வாறு செல்வர்களிடமும், ஏழைகளிடமும் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அவர்கள் ஒரு தடவை குறிப்பிடுங் கால், ''எவன் உன் செல்வத்தை விடக் குறைந்த செல்வமுடையவனா யிருக்கின்றானோ அவனை மேன்மைப்படுத்துவதே பணிவு என்றும் அவ்விதம் செய்வதன் மூலம் நீ உன் செல்வப் பெருக்கைக் கொண்டு உன்னைப் பெருமையாகக் கருதவில்லை என்பதை அவனுக்குக் காட்டி விட்டாய் என்றும் உன்னைவிடச் செல்வமுள்ளவனிடத்தில் நீ உன்னை மேன்மைப்படுத்துவதே பெருமிதம் என்றும், அவ்விதம் செய்வதன் மூலம் நீ அவனுடைய செல்வத்திற்கு யாதொரு மதிப்பும் அளிக்கவில்லை என்பதை அவனுக்குக் காட்டிக் கொண்டதாக ஆகும் என்றும் அவர்கள் கூறினர்.

அவர்கள் ஒரு கவிஞராக இருந்ததனால் கவிதை அவர்களின் நாவில் எப்பொழுதும் திருநடனம் செய்து கொண்டிருந்தது

**''மார்க்கக் கடமைகளைக் குறைவாக ஆற்றுவதைக்கூட**
**மக்கள் அதிகமெனக் கருதுகிறார்கள்.**

**ஆனால் உலக இயல்களில் குறைந்ததை அவர்கள் ஒரு**
**போதும் மனநிறைவுடன் ஏற்றுக்கொள்வதில்லை''**

என்ற கருத்தமைந்த கண்ணிகளை அவர்களின் வாய் எப்பொழுதும் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அவர்கள் தம்மைப் பற்றி ஒருபோதும் பெருமையாக, யாதொன்றும் கூறுவதில்லை. விளம்பரத்தைத் தவிர்ந்து கொள்ளுங்கள். பிறருக்குத் தெரியாமல் இலைமறை காய்போல் இருப்பதில் தான் நன்மை இருக்கிறது. ஆனால் பிறருக்கு உங்களைக் காட்டிக் கொள்ளாமல் இருப்பதைக் கூட, வெளியில் காட்டிக் கொள்ளாதீர்கள். அதன் காரண மாகக் கூட உங்களுக்குப் பெருமை உணர்வு ஏற்பட்டு விடும்'' என்று அவர்கள் கூறினர்.

ஒரு தடவை அவர்களும் அவர்களின் தோழர் ஒருவரும் நீர் அருந்துவதற்காகத் தண்ணீர்ப் பந்தலுக்குச் சென்ற பொழுது, நெரிசலில்

அங்குமிங்கும் தள்ளப்பட்டு இறுதியாக ஓரிடத்தில் போய் விழ்ந்தார்கள். பின்னர் அவர்கள் திரும்புங்கால், அவர்கள் தம் தோழரை நோக்கி, ''வாழ்க்கை இவ்வாறுதான் இருக்க வேண்டும். மக்கள் நம்மை இலக்குக் கண்டு கொள்ளாமலும், நம்மை எவரும் பெரிதாகக் கருதாமலும் இருக்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

மர்வ் நகரத்தில் அவர்களுக்குப் பெரிய வீடு ஒன்று இருந்தது. அதில் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து குழுமிக் கொண்டிருந்தார்கள். நாளுக்கு நாள் அவர்களின் எண்ணிக்கை அதிகப்படவே அவர்கள் அந்நகரை விட்டு வெருண்டோடி கூஃபா நகர் சென்று அங்கு ஒரு சிறு இருட்டறையில் அடைக்கலம் புகுந்தனர்.

''தாங்கள் எப்பொழுது பார்த்தாலும் அந்த இருட்டறையில் முடங்கிக் கிடக்கின்றீர்களே, ஆங்குக் கும்மிருளில் தாங்கள் திகிலுறுவதில்லையா?'' என்று சிலர் அவர்களிடம் வினவிய பொழுது, அவர்கள் சற்றுநேரம் வாய் மூடி இருந்து விட்டு, ''மக்கள் தங்களின் ஆதரவாளர்களின் நடுவே வீற்றிருப்பதை விரும்புவார்கள். ஆனால் நானோ தனிமையில் இன்பம் காண்பவன். எனவேதான் நான் இங்கு ஓடி வந்தேன்'' என்று கூறினர்.

அறிவு எங்கு, எவனிடமிருந்து கிடைத்தபோதினும், அதனை அன்போடு ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் அவர்களிடம் அமைந்திருந்தது. ஒரு தடவை அவர்கள் பெரிதும் துன்பத்துடன் வீற்றிருப்பதைக் கண்ட நெருப்பு வணங்கும் ஒருவன் அவர்களிடம் வந்து ஆறுதல் கூறும் முகத்தான் பற்பல செய்திகளைக் கூறிவரும் பொழுது ''அறிவாளி எவரெனில் அறிவற்றவன் மூன்று நாட்களுக்குப் பின் செய்வதை முதல் நாளிலேயே செய்து முடிப்பவன் தான்'' என்றான். அது கேட்ட அவர்கள், ''இதனைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இது அறிவார்ந்த சொல்லாகும்'' என்று தம் மாணவர்களை நோக்கிக் கூறினர்.

மற்றொரு தடவை மக்கள் அவர்களை நோக்கி, ''எது மனிதனுக்கு அதிகமான பயன் வழங்கக் கூடியது?'' என்று வினவிய பொழுது, 'அதிக அறிவு' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

''அதிக அறிவு இல்லை யென்றால்''
''நல்லொழுக்கம்''
''அதுவும் இல்லை என்றால்''
''அனுபவமிக்க ஆலோசனை வழங்கும்
சகோதரனைப் பெற்றிருப்பது''
''அதுவும் இல்லை என்றால்''
''எப்பொழுதும் வாய் மூடி இருப்பது?''

பொருளடக்கம்



''அதுவும் இல்லை என்றால்''

''திடீர் மரணம்'' என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்.

பிறிதொரு தடவை அவர்கள் நல்லொழுக்கத்தைப் பற்றிக் கூறும் பொழுது, ''நல்லொழுக்கத்தைச் சாதாரணமாகக் கருதும் ஒருவனுக்கு நபி வழியை (சுன்னத்தை)ப் பின்பற்ற இயலாநிலை ஏற்படும். அப்பொழுது அவன் கடமைகளைச் சரியாகச் செய்யாததனால் மெய்ஞ்ஞான நிலையை (மஃரிபத்தை) அடைய இயலாது'' என்று கூறினர்.

ஒரு தடவை அவர்கள் தீய ஒழுக்கத்தினன் ஒருவனுடன் பிரயாணம் செய்ய நேரிட்டது. ஓரிடத்தை அடைந்ததும் அவன் அவர்களை விட்டும் பிரிந்து சென்ற பொழுது, அவர்கள் அழுதார்கள். காரணம் வினவப்பட்ட பொழுது, ''அவன் என்னை விட்டுப் பிரிந்துவிட்ட போதினும், அவனுடைய தீய ஒழுக்கம் அவனை விட்டுப் பிரியவில்லையே என்று எனக்கு வருத்தமாக உள்ளது'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

நல்லொழுக்கத்தின் சிகரம், பிறரைப் பற்றி நல்லன கூறுதல் என்றே அவர்கள் கருதினர். ஒரு நாள் ஓர் இளைஞன் அவர்களை அணுகி அழுது கண்ணீர் வடித்துத் தாம் பெரும்பாவம் செய்துவிட்டதாகக் கூறினான். ''என்ன பாவம் செய்தாய்? என்று அவர்கள் வினவிய பொழுது ''விபச்சாரம் செய்து விட்டேன்'' என்று அவன் விடையிறுத்தான். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''நீ எவர் மீதேனும் புறம் கூறி இருப்பாயோ என்று நான் பயந்து விட்டேன்'' என்று மொழிந்தனர்.

மேலும் அவர்கள் புறம் பேசுவதைப் பற்றிக் கூறும் பொழுது, ''நான் புறம் பேசுவதாயிருந்தால், என் பெற்றோர்களைப் பற்றித் தான் பேசுவேன். ஏனெனில், அவர்கள் தாம் என் நன்மையை எடுத்துக் கொள்ள அதிக உரிமையுள்ளவர்கள்'' என்று கூறினர்.

புறம் பேசுவதை அவர்கள் வெறுத்தது போன்று புகழ் மொழி களையும் அவர்கள் வெறுத்தனர். ஒருவர் அவர்களை, 'ஜாஹிது' (உலகப்பற்றற்றவர்) என்று விளித்த பொழுது, ''நான் ஜாஹிதல்ல, உமர் இப்னு அப்துல் அஸீஸ் தாம் ஜாஹிதாயுள்ளார். உலகத்தின் செல்வம் அவரின் கையிலிருந்த போதினும், அவர் அதனைப் பயன்படுத்தாது விட்டொழித்ததனால், அவரே ஜாஹிதாவார். என்னிடம் யாதொன்றும் இல்லாத பொழுது என்னை எவ்வாறு ஜாஹிது என்று அழைத்தல் தகும்'' என்று அவர்கள் கூறினர்.

ஒருநாள் ஒருவர் அவர்களை அணுகி, ''மனிதர்கள் என்றால் யார்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''மார்க்க விற்பன்னர்கள்'' என்று மறுமொழி பகர்ந்தனர். ''பேரரசர் என்றால் யார்?'' என்று அவர் மீண்டும்

வினவினார். அதற்கு அவர்கள், ''உலகப் பற்றற்றவர்கள்'' என்று பதிலிறுத்தார்கள். மீண்டும் அவர், ''முட்டாள்கள் என்றால் யார்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''மார்க்கத்தைக் காட்டி உலகைச் சம்பாதிப்பவர்கள்'' என்று விடையிறுத்தார்கள்.

மார்க்கத்தை விற்று வயிறு வளர்ப்பவர்களையோ புகழ் தேடுபவர் களையோ அவர்கள் பெரிதும் வெறுத்தனர். உண்மையான பக்திமான்கள் தங்களின் நல்லியல்புகளை வெளியே காட்டின் அதனால் தங்களுக்குப் பேரும் புகழும் ஏற்படுமோ என்று அஞ்சி, அவற்றிற்கு மாற்றமான இயல்புகளையே வெளியே காட்டிக் கொள்வர் என்று கூறி, அதற்கு உதார ணமாக வஹ்ப் இப்னு முனப்பி கூறிய ஒரு நிகழ்ச்சியை அவர்கள் எடுத்துரைத்தனர்.

காட்டின் நடுவே ஒரு தர்வேஷ் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பல மாணவர்கள் இருந்தனர். அவர்களுக்கு அவர் நாள்தோறும் அரிய பெரிய அறிவுரைகளையெல்லாம் நல்கி வந்தார். இச்செய்தி அரசரின் செவிக்கு எட்டியது. அவரைக் கண்டு அறிவுரை பெறுவதற்காக அவர்தம் அமைச்சர், பிரதானிகளுடனும், படைகளுடனும் அக்காட்டிற்கு வந்தார். அது கண்ட அந்தத் தர்வேஷ், ''எதற்காக இத்துணைப் பெரும் கூட்டம் இங்கு வந்துள்ளது?'' என்று தம் மாணவர்களிடம் வினவினார். ''அரசர் தங்களைக் காண்பதற்காக வந்துள்ளார்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

உடனே அந்தத் தர்வேஷ் தம் மாணவர்களை நோக்கி, ''எனக்கு விரைவில் உணவு கொண்டு வாருங்கள்'' என்று கூறினார். அவ்விதமே கீரை, ஜைத்தூன் எண்ணெய், இறைச்சி ஆகியவை அவர் முன் கொண்டு வந்து வைக்கப்பட்டதும், அவை அனைத்தையும் தம் உணவுத் தட்டில் எடுத்து நிரப்பி வைத்துக் கொண்டு பெரும் பெரும் கவளமாக எடுத்து வாய்க்குள் வீசி எறிந்து கொண்டிருந்தார் அவர். தம் ஆசானின் இச்செயல் மாணவர்களுக்கு வியப்பை நல்கியது.

சற்று நேரத்தில் அரசர் தம் அமைச்சர் பிரதானிகளுடன் அங்கு வந்தார். அங்கு நின்று கொண்டிருந்த அவரின் மாணவர்களை நோக்கி, ''தர்வேஷ் எங்கே இருக்கிறார்?'' என்று வினவினார். அவர்கள் ஆங்கு உணவுண்டு கொண்டிருந்த தம் ஆசானைக் காட்டினார்கள்.

அரசர் அவரை அணுகி, ''எப்படி இருக்கிறீர்?'' என்று வினவினார்.

''நன்றாக இருக்கிறேன்'' என்று பதில் கூறினார் அவர்.

இவ்வாறு கூறிவிட்டு சோற்றைப் பெரும் பெரும் கவளம், கவளமாக எடுத்துத் தம் வாய்க்குள் வீசவும், இறைச்சியைக் கண்டம் கண்டமாக எடுத்து மெல்லாமல் கடிக்காமல் விழுங்கவும் செய்தார்.

இது கண்டு அரசருக்கு ஏற்பட்ட வெறுப்புக்கும் அருவருப்புக்கும் அளவில்லை, ''இவரிடம் யாதொரு நல்லியல்பும் இல்லை'' என்று அந்த தர்வேஷின் செவியில் விழும் வண்ணம் கூறி விட்டு, அவ்விடத்தை விட்டும் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி விட்டார்.

அது கண்டு அந்த தர்வேஷின் வாயிலிருந்தும் ''என்னைப் பெரும் புகழிலிருந்தும் அரசரின் தொடர்பிலிருந்தும் காத்தருளிய இறைவனுக்கே எல்லாப் புகழும்'' என்ற சொற்கள் ஆறுதல் பெருமூச்சுடன் வெளிவந்தன.

மேலும் அவர்கள் மற்றொரு தர்வேஷைப் பற்றிக் கூறும் பொழுது, அவர் தம் மாணவர்களை நோக்கி, ''நாம் இவ்வுலக வாழ்வில் உழன்று கொண்டிருந்தால் இறைவனுக்கு மாறு செய்ய ஏதுவாகி விடுமோ என்று அஞ்சிப் பொருள் ஈட்டுவதையும், மனைவி, மக்களையும் விட்டொழித்தோம். ஆனால் எனக்கு இப்பொழுதுள்ள பயமெல்லாம், செல்வர்களுக்கு அவர்களின் செல்வத்தைக் கொண்டு ஏற்படும் தீமைகளை விட அதிக மான தீமை நமக்கு நம்முடைய சன்மார்க்கத்தைக் கொண்டு ஏற்பட்டு விடக் கூடாதே என்பதேயாகும். நாம் ஒருவரைச் சந்தித்தால், அவர் நம்மை நம்முடைய சன்மார்க்க நெறிமுறைகளுக்காக மதிக்க வேண்டும். நாம் இடும் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். நாம் ஒரு பொருளை அவரிடம் வாங்கினால், அவர் நமக்கு நல்ல பொருளா கவும் அதே சமயத்தில் விலை மலிவாகவும் தர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்'' என்று கூறியதாக அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களை அணுகி, ''தாங்கள், தங்களின் சுற்றுப் பயணங்களில் கண்ட அதிசயம் ஒன்றைக் கூறுங்கள்'' என்று வேண்டிக் கொண்ட பொழுது, ''நான் கிறிஸ்தவத் துறவி ஒருவரைச் சந்தித்தேன். அவரோ தாம் மேற்கொண்ட கடுமையான துறவின் காரண மாகவும் இறையச்சத்தின் காரணமாகவும் மெலிந்து கூனிக்குருகி இருந்தார். அவரிடம் நான், ''இறைவனை அடைவதற்கான வழியாது?'' என்று வினவினேன். அதற்கு அவர், ''நீர் இறைவனை அறிந்தால், அவனை அடைவதற்கான வழியும் உமக்குத் தெரியவரும்'' என்று கூறினார்.

இவ்வாறு அவர் கூறிவிட்டு, மீண்டும் என்னை நோக்கி, ''நான் அவனை அறியாவிட்டாலும், நான் அவனை வணங்குகிறேன். ஆனால் நீரோ அவனை அறிந்த போதினும், அவனுக்கு அடிபணியாது மாறு

செய்து கொண்டிருக்கிறீர். இறையறிவு, இறையச்சத்தை உண்டு பண்ண வேண்டும். ஆனால் உம்மிடமோ இறையச்சமின்மையை, ஒரு விதத் துணிச்சலைக் காண்கிறேன். அஞ்ஞானம் என்னை அறியாமையில் ஆழ்த்தியுள்ளது. எனினும் நான் இறையச்சத்தால் நடுங்கிக் கொண் டிருக்கிறேன்'' என்று கூறினார். அவரின் இப்பேச்சு என் உள்ளத்தில் நீங்கா முத்திரையைப் பதித்து என்னைப் பல தீய செயல்களை விட்டும் காத்து நின்றது'' என்று அவர்கள் கூறினர்.

மற்றொரு நாள் அவர்கள் மக்களை நோக்கித் தாம் இளமையில் சந்தித்த ஒரு பெண் துறவியைப் பற்றி எடுத்துரைத்தார்கள். ''ஒரு பெண் துறவி தனியே ஓரிடத்தில் அமர்ந்து, இறைவனைத் தொழுது கொண்டிருந்தார். அவரின் உடலில் நாற்பது இடங்களில் தேள் கொட்டிக் கொண்டிருந்தது. ஆனால் அவரோ ஆடாது, அசையாது அமைதியாக இறைவனைத் தொழுது கொண்டிருந்தார். அவரின் முகத்தில் யாதொரு சுளிப்போ, வேதனை உணர்வோ தென்படவில்லை.

''அவர் தொழுது முடிந்ததும் நான் அவரை அணுகி, 'அன்னையே! தாங்கள் ஏன் அந்தத் தேளைப் பிடித்து வீசி எறியாதிருந்தீர்கள்?'' என்று வினவினேன்.

''அதற்கு அவர் 'மடப்பயலே! நான் இறைவனின் அலுவலை நிகழ்த்திக் கொண்டிருக்கும் பொழுது அதனூடே என்னுடைய அலுவலைக் கவனிப்பது சரி என்று நீ கருதுகின்றாயா?' என்று வினவினார்.

''அவருக்கு பதிலுரைக்க எனக்கு நாவில்லை. அவரின் அப்பதில் எனக்குச் சிறந்த அறிவுரையாக அமைந்தது'' என்று அவர்கள் கூறினார்கள்.

அண்டை வீட்டுக்காரனுடன் அன்போடு நடந்து கொள்ளுமாறு அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்கள் கூறிய அருள் மொழிக்கேற்ப அவர்கள் செயலாற்றி வந்தார்கள். மனிதர்களில் மேலானவன் தன் அண்டை வீட்டுக்காரனை நோவினை செய்யமாட்டான் என்று அவர்கள் கூறினார்கள். ஒருநாள் ஒருவர் அவர்களிடம் வந்து, ''என் அண்டை வீட்டுக்காரன் என் அடிமை மீது குற்றம் சுமத்துகிறான். அதற்குச் சாட்சி யின்றி நான் என் அடிமையைத் தண்டிப்பின் நான் குற்றவாளியாவேனோ என்று அஞ்சுகின்றேன். அதே பொழுதில் நான் என் அண்டை வீட்டுக்காரனைத் திருப்தி படுத்தாமலும் இருக்க விரும்பவில்லை. இந்நிலையில் நான் என் செய்வது?'' என்று வினவிய பொழுது, 'உன் அடிமை குற்றம் செய்யும் வரைப் பொறுத்திரு. அவன் குற்றம் செய்யின், அப்பொழுது அவனைத் தண்டிக்காது, உன் அண்டை வீட்டுக்காரன்

அவன் மீது குற்றம் சுமத்தும் பொழுது அவனைத் தண்டி. அப்படிச் செய்யின் நீ இருவருக்கும் நீதி செய்ததாகும்'' என்று கூறினார்கள்.

அவர்கள் தங்களின் ஒவ்வொரு செயலிலும், அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அருள்மொழிகளை நினைவு கூரத் தவறுவதில்லை. ஒரு தடவை அவர்கள் ஜம் ஜம் தண்ணீரைக் குடிக்குங்கால், ''ஜம் ஜம் தண்ணீர் எதற்கென்று அருந்தப் பெறுமோ அது நிறைவேறும்'' என்று அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். நானோ மறுமை நாளின் தாகம் தணிக்கப் பெறுவதற்காக இதனை அருந்துகிறேன்'' என்று கூறி அதனை அருந்தினர்.

ஒருநாள் அவர்கள் பள்ளிவாயிலிலிருந்து வெளியே வந்த பொழுது ஒருவர் அவர்களை நோக்கி, ''நான் நபியின் வழித்தோன்றல் (சையிது) ஆக இருந்த போதினும், என் உணவைப் பெறுவதற்குப் பெரிதும் சிரமப்பட வேண்டியுள்ளது. நீரோ உம்முடைய உணவை எவ்விதச் சிரமுமின்றிப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்து வருகிறீர்'' என்று கூறினார். அதற்கு அவர்கள், ''என் தந்தையோ வழி கேட்டிலிருந்தார். உம் தந்தையோ உலகிற்கெல்லாம் நல்வழிகாட்டும் உத்தமராக இருந்தார். நான் உம் தந்தையின் வழி முறையைப் பின்பற்றியதால் இந்நிலையை அடைந்தேன். ஆனால் நீரோ என் தந்தையின் வழிமுறையைப் பின்பற்றியதால் இந்நிலையிலுள்ளீர்'' என்று பதிலிறுத்தார்கள். அந்த 'சையித்' அதற்கு யாதொரு மறுமொழியும் கூறவில்லை.

அன்றிரவு அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களின் கனவில் தோன்றினர். அருளுருவாகிய அண்ணல் அவர்களின் அழகுத் திருமுகம் சினத்தால் சிவந்திருப்பதைக் கண்ட அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், அதற்கான காரணத்தை வினவிய பொழுது, 'நீர் என் மகனை இழித்துரைக்கின்றீரா?'' என்று கூறிவிட்டு மறைந்தனர் அண்ணல்.

திடுக்குற்று விழித்தெழுந்த அவர்கள் தாம் செய்த தவற்றினை எண்ணி, எண்ணி விடியும் வரை அழுது கண்ணீர் வடித்தார்கள். பொழுது புலர்ந்ததும் அந்த நபி திருப்பேரரைக் கண்டு அவரிடம் மன்னிப்புக் கோருவதற்காக வெளியே புறப்பட்டுச் சென்றனர்.

அன்றிரவு அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்கள் தம் பேரரின் கனவில் தோன்றி, ''நீர் அந்நிலையில் இருப்பதால் தான் அவர் அவ்வாறு உம்மை இழித்துரைத்தார். இல்லையெனில் இழித்துரைத்திருக்க மாட்டார்'' என்று கூறி மறைந்தனர்.

பதறி விழித்தெழுந்த அவரும் தம் தவற்றினை உணர்ந்து கண்ணீர் வடித்து அழுது சலித்தவராய் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களைக் கண்டு மன்னிப்புக் கோருவதற்காக வந்த பொழுது, இருவரும் வழி நடுவில் சந்தித்துக் கொண்டு தாம் கண்ட கனவை விண்டு, ஒருவர் மற்றொருவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

இதிலிருந்து இவர்கள் அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களின் வழித் தோன்றல்களிடம் மட்டுமின்றி அவர்களின் தோழர்கள் மீதும் அளவற்ற மதிப்பு வைக்கலாயினர். ஒருவர் அவர்களை அணுகி, ''முஆவியா (ரலி) சிறந்தவரா? உமர் இப்னு அப்துல் அஸீஸ் சிறந்தவரா? என்று வினவிய பொழுது ''முஆவியா (ரலி) தாம். காரணம், அவர் அண்ணல் அவர்களுடன் பழகியவர். அண்ணல் அவர்கள் ருகூவிலிருந்து நிமிரும் பொழுது, 'ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா' என்று கூறியதும், 'ரப்பனாலகல் ஹம்து' என்று மறுமொழி கூறிய நற்பேறு பெற்றவர் அல்லவா அவர்?'' என்று விடையிறுத்தார்கள்.

அடுத்து அவர்கள் மீண்டும் ஒரு முறை அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களைக் கனவில் காணும் பேறு பெற்றார்கள். அவர்களிடம் அடிமை ஒருவர் இருந்தார். அவர் தமக்கு ஒரு நூறு தீனார் தரின், தாம் அவரை உரிமை விடுவதாக அவர்கள் அவரிடம் வாக்களித்திருந்தார்கள். அவ்வாறே அவர் ஒவ்வொரு நாளும் சில தீனார்களை அவர்களிடம் கொடுத்து வந்தார். ஒருநாள் அவர்களின் அண்டை வீட்டுக்காரர் ஒருவர் அவர்களிடம் வந்து, அவர்களின் அடிமை ஒவ்வோர் இரவும் முஸ்லிம்களின் அடக்கவிடத்திற்குச் சென்று கஃபனைத் திருடி வந்து விற்று அவர்களுக்குப் பணம் கொடுத்து வருவதாகக் கூறினார்.

ஓரிரவு அவர்கள் இதனைச் சோதித்துப் பார்க்கும் நோக்கத்துடன், அவர் பின்னே அவரறியாமல் சென்றார்கள். அவர் முஸ்லிம்களின் அடக்கவிடத்தை அடைந்து தம் உடைகளைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு கோணித் துணியை அணிந்து கொண்டார். கழுத்தில் ஓர் இரும்பு வளையத்தைப் போட்டுக் கொண்டார். பின்னர் ஓர் அடக்கவிடத்திற்குள் இறங்கி வைகறை வரை அழுது சலித்து வணங்கிக் கொண்டிருந்தார்.

பின்னர் அண்மையிலிருந்த பள்ளிக்கு வந்து வைகறைத் தொழுகையைத் தொழுது விட்டு ''இறைவனே! இன்னும் விடியச் சிறிது நேரமே உள்ளது. விடிந்ததும் நான் என் உடலின் எசமானனுக்கு இன்றையக் கூலியைக் கொடுக்க வேண்டும். அதனை எனக்கு ஈந்தருள்'' என்று இறைஞ்சினார். அடுத்த கணம் ஓர் ஒளி மின்னென மின்னி அவரின் ஏந்திய கைகளில் விழுந்தது. மறுகணம் அது தீனார்களாகப் பளிச்சிட்டது.

அவற்றை எடுத்துக் கொண்டு அவர் அங்கிருந்து புறப்பட்ட பொழுது, அவர்கள் அவரின் முன் பாய்ந்து, ''இன்றிருந்து நீ தான் என் எசமானர்; நான் உம்முடைய அடிமை'' என்று உணர்ச்சி மீக்குற்றுக் கூறினார்கள். அவர்களை ஏறிட்டுப் பார்த்த அவர், தம்முன் நிற்பது தம் எசமானர் என்பதை உணர்ந்ததும், தம் இருகரம் ஏந்தி, ''இறைவனே! என் இரகசியம் அம்பலமாகிவிட்டது. இனிமேல் நான் உயிர் வாழ விரும்பவில்லை. என் உயிரை எடுத்துக் கொள்வாயாக!'' என்று இறைஞ்சினார். அடுத்த கணம் அவரின் உயிர் அவரின் உடலை விட்டும் பிரிந்தது. அவரை அவர் அணிந்திருந்த கோணித் துணியாலேயே கஃபனிட்டு நல்லடக்கம் செய்து விட்டுத் தம் இல்லம் திரும்பினார்கள் அவர்கள்.

அன்றிரவு அவர்கள் கனவொன்று கண்டார்கள். அதிலே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் திருத்தோழர்களுடன் காட்சி வழங்கி ''நம் அன்பரை அவர் அணிந்திருந்த கோணித் துணியாலேயே கஃபனிட்டு அடக்கிவிட்டீரே'' என்று கூறி விட்டு மறைந்தனர்.

ஒரு தடவை அவர்கள் 'ஹஜ்'ஜுச் செய்ய மக்கா வந்திருந்த பொழுது கனவொன்று கண்டார்கள். அதிலே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ''நீர் பக்தாது செல்லின், அங்கு வாழ்ந்து வரும் தீவணங்குபவரான பஹ்ராம் என்பவரைச் சந்தித்து, அவருக்கு என் 'ஸலாம்' உரைத்து அவரை அல்லாஹ் பொருந்திக் கொண்டானென்று கூறும்'' என்று திருவாய் மலர்ந்துவிட்டு மறைந்தனர்.

அவ்விதமே அவர்கள் ஹஜ்ஜுக் கடமைகளையெல்லாம் ஆற்றி முடிந்த பின் பக்தாது வந்து பஹ்ராம் என்ற தீ வணங்குபவரை விசாரித்தறிந்து அவரின் இல்லம் சென்று ''நீர் ஏதேனும் நன்மைகள் செய்ததுண்டா?'' என்று வினவினர்.

அதற்கு அவர் 'நான் என் மகளை என் மகனுக்கு மணமுடித்து வைத்தேன். அதற்கு மக்களை விருந்துண்ண அழைத்தேன்'' என்றார்.

''இது இஸ்லாத்தில் விலக்கப்பட்ட செயலாயிற்றே. இதைத் தவிர நீர் வேறு யாதேனும் செய்ததுண்டா?'' என்று வினவினார்கள்.

அதற்கு அவர் ''என்னுடைய மற்றொரு மகளை நானே மணமுடித்துக் கொண்டேன். அத்திருமண விழாவிற்கு எல்லாரையும் அழைத்து விருந்தளித்தேன்'' என்று பதிலிறுத்தார்.

''இதுவும் இஸ்லாத்தில் விலக்கப்பட்ட செயலாகும். சரி; இதைத் தவிர நீர் வேறு யாதேனும் செய்தீரா?'' என்று வினவினார்கள் அவர்கள்.

அப்பொழுது அவர் ''ஒரு முஸ்லிம் பெண் என் இல்லம் வந்து, அங்கு எப்பொழுதும் அணையாது எரிந்து கொண்டிருக்கும் எங்களின் வணக்கத்திற்குரிய தீக்குண்டத்திலிருந்து தான் கொண்டு வந்த விளக்கை ஏற்றிக் கொண்டு சென்றாள். வாயலிற் சென்றதும், அதை அணைத்து விட்டு மீண்டும் வந்து அதனை ஏற்றிக் கொண்டு சென்றாள். மீண்டும் வாயலில் வைத்து அதனை அணைத்து விட்டு, மீண்டும் வந்து அதனை ஏற்றிக் கொண்டு சென்றாள். மறுபடியும் அணைத்து விட்டு நான்காவது தடவை ஏற்றிக் கொண்டு தன் இல்லம் சென்றாள்.

அவளின் நடவடிக்கை பற்றி ஐயுற்ற நான், அவள் பின்னே சென்றேன். அப்பொழுது அவளின் குழந்தைகள் அவளை மொய்த்து நின்று ''அம்மா! ஏதாவது வாங்கி வந்தாயா? எங்களைப் பசி கொல்கிறதே. உண்ண ஏதாவது வாங்கித்தா'' என்று கூறி அழுதன.

அது கேட்ட அவள் ''என் கண்மணி மக்களே! நான் அல்லாஹ்வைத் தவிர வேறொருவனிடம் கேட்க வெட்கப்படுகிறேன். எனவே அந்தத் தீ வணங்குபவரிடம் யாதும் கேட்காது வெறுமனே வந்து விட்டேன்'' என்று கூறினாள்.

இதனை மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த நான் உடனே என் இல்லம் சென்று அவர்களுக்கான உணவுப் பொருள்களை ஒரு மூட்டை கட்டிச் சுமந்து வந்து, அவர்களின் இல்லம் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்து உண்ணுமாறு வேண்டினேன். இதுதான் நான் செய்த நன்மையான செயல்'' என்று கூறினார்.

அது கேட்ட அவர்கள் உணர்ச்சி மீக்குற்றவர்களாய் அவரை நோக்கி ''பஹ்ராமே! உமக்கு சுபசோபனம்! சுபசோபனம்!!'' என்று கூறித் தாம் கண்ட கனவை அவரிடம் எடுத்தோதினர். அது கேட்ட பஹ்ராம் அடுத்த கணம் இஸ்லாத்தைத் தழுவினார்.

இவர்கள் பெரிய வணக்கவாளராக இருந்ததோடல்லாது பெரிய வீராதி வீரராகவும் விளங்கினர். ரோமானிய நாட்டின் மீது முஸ்லிம்கள் போர் மேற் சென்றபொழுது இவர்களும் அப்படை அணியில் சேர்ந்து வீரப்போர் செய்தார்கள்.

ஒருநாள் போர் உச்சக்கட்டத்தை எய்திக் கொண்டிருந்தது. அப்போது முகமூடி அணிந்த ஒருவர் முஸ்லிம் அணியிலிருந்து வெளிவந்து, 'எவரேனும் என்னுடன் பொருத வருகின்றீர்களா?' என்று ரோமானிய அணியை நோக்கி அறைகூவல் விடுத்தார். அப்பொழுது ரோமானிய வீரன் ஒருவன் சரேலென முன் பாய்ந்தான். அவனை ஒரே வாள் வீச்சில் வெட்டி மாய்த்தார் அம்முஸ்லிம். பின்னர் வேறொருவன் முன்வர

அவனையும் தம் வாளுக்கு இரையாக்கினார் அவர். இதன் பின் பலர் அவருடன் பொருத முன்வர, அவர்களையெல்லாம் தம் வீர பராக்கிரமத்தினால் வெந்நரகிற்கு அனுப்பிக் கொண்டிருந்தார் அவர். அது கண்டு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் வியப்பிற்கும் அளவில்லை. யார் அவர், யார் அவர் என்பதே அப்பொழுது எல்லோரின் வாயிலும் நடமாடிய சொற்களாக இருந்தன. யார் அவர் என்பதை அறிந்து கொள்வதற்காக அவரை அப்துல்லாஹ் இப்னு சுலைமான் என்பவர் அணுகி அவரின் முகத்திரையை அகற்றிய பொழுது அதற்குள்ளே அப்துல்லாஹ் இப்னு முபாரக் அவர்கள் ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''அபூ அம்ரே! நீர் கூடவா என் முகத்திரையைக் கிழித்து என்னை இழிவுபடுத்துகிறீர்'' என்று கூறினார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் மார்க்கப் போரில் ஈடுபட்ட பொழுது ஓர் உருவத் தொழும்பனுடன் அவர்கள் பொருதினர். தொழுகைக்கான நேரம் வந்த பொழுது அவனிடம் அனுமதி பெற்றுத் தொழுதனர். பின்பு இருவரும் மீண்டும் போரிட்டார்கள். அப்பொழுது அவனுக்குத் தொழுவதற்கான நேரம் வந்த பொழுது அவனும் தனக்குத் தொழுவதற்கு அனுமதி வழங்குமாறு வேண்டினான். அவர்களும் அவ்விதமே செய்தார்கள். அவன் தன் தொழு உருவத்தின் முன் குப்புற வீழ்ந்து வணங்கிய பொழுது அவர்கள், ''நான் இவனை வென்று விடுவேன்'' என்று கூறி வாளை உருவிக் கொண்டு அவனை வெட்ட முயன்றார்கள். அப்பொழுது ''இப்னு முபாரக்கே வாக்குறுதியை நிறைவேற்றும். நிச்சயமாக வாக்குறுதியை நிறைவேற்றுவது பற்றி மறுமையில் கேள்வி கணக்குக் கேட்கப்படும் என்பதை மறந்து விடாதீர்'' என்று அசரீரி முழங்கியது. அது கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டார்கள். அவர்களின் உடலெல்லாம் நடுங்கியது. அவர்களின் கண்களிலிருந்தும் நீர் 'பொல, பொல' வென்று வழிந்தோடியது.

குப்புற வீழ்ந்து கிடந்த உருவத் தொழும்பன் தன் தலையை உயர்த்திய பொழுது அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் உருவிய வாளுடன் அழுது கொண்டு நிற்பதைக் கண்டு காரணம் வினவ, ''உன் பொருட்டு என் மீது இறைவனின் சினம் ஏற்பட்டுள்ளது'' என்று கூறி நடந்த செய்தியை நவின்றனர். அது கேட்டு அவ்வுருவத் தொழும்பன் அளவற்ற வியப்பெய்தினான். ''தன் எதிரிக்காகத் தன் நண்பன் மீது சினமுறக் கூடிய உம் இறைவனே மாண்பாளன். அவனுக்கு நான் மாறு செய்து கொண்டிருப்பது எத்துணை மடமை'' என்று கூறிய வண்ணம் அக்கணமே அவன் இஸ்லாத்தைத் தழுவினான்.

இவர்கள் பெரிய வணிகராகவும் இருந்தார்கள். குராஸானிலிருந்து பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்து ஹிஜாஸில் விற்பனை செய்து வந்தார்கள். இவ்வாறு இவர்கள் பெரும் வாணிபம் செய்து பெரும் பொருள் ஈட்டுவதைக் கண்ட புலைல் இப்னு இயால் (ரஹ்) அவர்கள், இவர்களை நோக்கி, ''தாங்களோ 'மறுமைக்கானவற்றைத் தேடுவதில் ஈடுபட்டு, உலக ஆசாபாசங்களை விட்டும் அப்பாற்பட்டிருங்கள்' என்று மக்களை நோக்கிக் கூறுகிறீர்கள். ஆனால் தாங்களோ பெரும் வாணிபம் செய்து பெரும் பொருள் ஈட்டுகின்றீர்களே. தாங்கள், சொல்வது ஒன்று, செய்வது வேறாகவல்லவோ இருக்கிறது'' என்று கூறிய பொழுது, ''நான் வாணிபத்தைத் துன்பத்திலிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், என்னுடைய தன்மானத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்துக் கொள்ளவும், பிறருக்கு நான் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றவும், அல்லாஹ்வை அமைதியுடன் தொழுவதற்குமான ஒரு சாதனமாகவே கருதிச் செய்து வருகின்றேன்'' என்று அவர்கள் பதில் கூறினர்.

அவர்கள் ஈட்டிய ஒவ்வொருவெள்ளி நாணயமும், தூய்மை யானதாக இருந்தது. ஐயத்திற்குரிய பொருளை அவர்கள் தம் பணப் பெட்டியில் போடுவதே இல்லை. அது தூய்மையற்றதென்றும், அதன் காரணமாகத் தம் தொழிலே மாசுண்டு நசிந்து விடும் என்றும் அவர்கள் அஞ்சினார்கள். மறுமையிலும் அதற்கான கேள்வி கணக்கு உண்டு என்றும் அவர்கள் பயந்தார்கள்.

வாணிபத்தின் மூலம் பொருளை ஈட்டி அதை வைத்துக் கொண்டு அவர்கள் இன்பம் நுகர்ந்து கொண்டிருக்கவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் ஆண்டொன்றிற்கு ஓரிலட்சம் தீனார்கள் ஏழைகளுக்கு அறம் செய்து வந்தார்கள்.

ஒவ்வொருவனும் தன்னிடமுள்ள பொருளுக்கு 'ஜகாத்' கொடுப்பது, அப்பொருளைப் பேணிப் பாதுகாப்பதற்கான வழியாகும் என்று அவர்கள் கருதினார்கள். 'ஜகாத்' கொடுப்பதனால் பொருள் வளருமே அன்றிக் குறையாது என்றும் அவர்கள் கருத்துக் கொண்டிருந்தார்கள். ''என்னிடம் உஹத் மலையளவு தங்கம் இருந்து, அதற்கு நான் 'ஜகாத்'தையும் கொடுத்துக் கொண்டிருப்பின், என்னுடைய அப்பொருளுக்கு யாதொரு தீங்கும் ஏற்பட்டு விடாது'' என்று அவர்கள் கூறினர்.

இவர்கள் ஒவ்வோராண்டும் ஹஜ்ஜுக்குச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்களுடன் சேர்ந்து சென்று ஏராளமானோர் 'ஹஜ்'ஜுக்கடனை ஆற்றி வந்தார்கள். ஓராண்டு இவர்கள் ஹஜ்ஜுச் செய்ய மக்கா புறப்பட்ட பொழுது இவர்களுடன் ஏழை பக்கீர் ஒருவரும் சேர்ந்து கொண்டார். அப்பொழுது இவர்கள் அவரை நோக்கி, ''எங்களுக்குத் தான்

ஹஜ்ஜுச் செய்வது கடமையாக உள்ளது. உமக்கு ஹஜ்ஜுச் செய்யக் கடமை இல்லையே. அவ்விதமிருக்க,நீர் ஏன் எங்களுடன் சேர்ந்து ஹஜ்ஜுச் செய்ய வருகின்றீர்?'' என்று வினவினர்.

அதற்கு அந்த பக்கீர், ''விருந்தளிப்பவன் சிறப்புடையவனா யிருப்பின், விருந்தினருடன் செல்லும் ஒருவனுக்கும், விருந்தினரை விட அதிகச் சிறப்பளிப்பான். தங்களையெல்லாம் அவன் தன் இல்லத்திற்கு அழைத்தது போன்று, அவன் என்னையும் தன் இல்லத்திற்கு அழைத் துள்ளான்'' என்று கூறினார்.

அதற்கு அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், ''செல்வந்தர்களிடம் அல்லாஹ் கடன் கேட்கிறானே. ஏழைகளிடம் கேட்கவில்லையே'' என்று கூறினர்.

அது கேட்ட அந்தப் பக்கீர், ''அவன் எதற்காக உங்களைப் போன்ற செல்வர்களிடம் கடன் கேட்கிறான் என்பதையும் தாங்கள் அறிவீர்கள். எங்களைப் போன்ற பக்கீர்களுக்காகத் தான்'' என்று பதிலிறுத்தார்.

அவரின் இப்பதில் கேட்டுப் பெரிதும் வியப்புற்ற அவர்கள் அந்த பக்கீரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு அவரை மனமுவந்து தங்களுடன் மக்காவுக்கும் அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு ஹஜ்ஜுச் செய்யப் புறப்படுங்கால் தம் உணவிற்காக மட்டும் ஏற்பாடு செய்யாது தம்முடன் வரும் நண்பர்களின் உணவிற்காகவும் ஏற்பாடு செய்து கொண்டு தான் 'ஹஜ்'ஜுக்குப் புறப்படுவார்கள்.

ஓராண்டு அவர்கள் 'ஹஜ்'ஜுக்குப் புறப்பட்ட பொழுது பொரித்த கோழிகள் மட்டும் இரண்டு ஒட்டகங்களின் மீது ஏற்றிச் செல்லப்பட்டதை மக்கள் கண்டனர்.

ஹஜ்ஜுக்குப் புறப்படுமுன் தம் நண்பர்களை நோக்கி, ''உங்களின் பிரயாணச் செலவிற்கான பணத்தைக் கொண்டு வந்து என்னிடம் தந்து விடுங்கள்'' என்று கூறி, அப்பணத்தைப் பெற்று அதன் மீது அவரவர் பெயர் எழுதித் தனித்தனியாக வைத்திருப்பார்கள். வழியில் நல்ல முறையில் செலவு செய்து அவர்களுக்கு உணவளிப்பார்கள்.

புனித ஹஜ்ஜை முடித்துக் கொண்டு அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் அடங்கப் பெற்றிருக்கும் மதீன மாநகரை அடைந்ததும், அவர்கள் தங்களின் நண்பர்களை நோக்கி, ''உங்களின் குடும்பத்தினருக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கூறுவர்.

அதன் பின் அவர்கள் அனைவரும் தங்களின் பிறந்தகம் மீண்டதும், அவர்களுக்கு ஒரு விருந்து வழங்கி, அவர்கள் தந்த பண முடிப்பை அப்படியே அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுவார்கள் அப்பெருந்தகை.

அது கண்டு வியப்பெய்திய அவர்களின் நண்பர்கள், ''வழி நெடுக எங்களுக்காகத் தங்களின் பணத்தைச் செலவு செய்வதைத் தாங்கள் அணுவத்தனையும் காட்டிக் கொள்ளவில்லையே'' என்று கூறுங்கால், ''வழி நெடுக உங்களில் எவரேனும் என் பணத்திலிருந்து உண்ணவும், என் பணத்திலிருந்து உங்களின் மனைவி, மக்கள், உற்றார், உறவினர் ஆகியோருக்கான பொருட்களை வாங்கவும் முன் வருவீர்களா? எனவே தான், இவ்வாறு செய்தேன். இதற்கான பிரதிபலனை இறைவனிட மிருந்தே எதிர்பார்க்கிறேன்'' என்று கூறிவிடுவார்கள்.

இவர்கள் தங்களின் இல்லத்தில் உணவருந்துங்கால், எப்பொழுதும் விருந்தினர்களுடன் அமர்ந்தே உணவருந்துவர். தம் இல்லத்தில் பக்கீர்களுக்கு பேரீச்சம் பழத்தால் விருந்து நல்குவார்கள். அப்பொழுது அவர்கள் அந்த பக்கீர்களை நோக்கி, ''எவர் அதிகமாக இப்பழங்களைத் தின்கிறாரோ அவர் மற்றவரினும் அதிகமாகத் தின்ற ஒவ்வொரு பழத்திற்கும் ஒரு திர்ஹம் வீதம் அவருக்கு அன்பளிப்புச் செய்வேன்'' என்று கூறி அவ்விதமே செய்வார்கள்.

அவர்கள் எவரையும் அல்லாஹ்வுக்காகவே நேசித்தார்கள். ''இக்காலத்தில் அல்லாஹ்வுக்காக நேசிக்கக் கூடிய நண்பர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. அல்லாஹ்வுக்காக நம்மை நேசிப்பவனே உண்மையான நண்பனாவான்'' என்று அவர்கள் கூறினர்.

அவர்களின் கை எப்பொழுதும் ஏழை எளியவர்களுக்கு வாரி வாரி வழங்கிச் சிவந்தது. அவர்களின் பணப்பெட்டி கடன் பட்டோருக்கு உதவுவதற்காக எப்பொழுதும் திறந்தே கிடந்தது.

அவர்கள் வாணிபத்தின் பொருட்டும் வேறு பல அலுவல்களின் நிமித்தமாகவும் அடிக்கடி சிரியா பயணத்தை மேற்கொண்டிருந்தார்கள். அக்காலை அவர்கள் ரிக்கா நகரை அடையும் பொழுது ஆங்குள்ள விடுதி ஒன்றில் தங்குவர். ஆங்கு ஓர் இளவல் இருந்தார். அவர் அவர்களுக்கு உள்ளன்புடன் ஊழியம் செய்து, ஹதீஸ்களை அவரிடமிருந்து கேட்டறிவார். இவர்களும் அளவற்ற அன்போடு அவற்றை அவருக்குக் கற்றுக் கொடுப்பார்கள்.

ஒரு தடவை அவர்கள் ஆங்கு வந்த பொழுது அவரைக் காண வில்லை. கடனுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கேள்வி

யுற்றனர். உடனே அவருக்குக் கடன் கொடுத்தவரை அணுகி அக்கடனைத் தீர்த்து அவரை விடுதலை செய்யுமாறு கூறி, இச்செய்தியை எவரிடமும் கூறக் கூடாதென்று இறைவன் மீது ஆணையிட்டுக் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டும் அகன்றார்கள்.

விடுதலையாகி அவ்விளவல் வெளியே வந்ததும் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் வந்து சென்ற செய்தியைக் கேள்வியுற்றார். கேள்வியுற்றதுதான் தாமதம், அவர்களைக் காண வேண்டுமென்ற பேரவா உந்த அவர்களைக் காண்பதற்காக அவர்களைத் தேடிச் சென்றார். இறுதியாக, வழியில் ஓர் இடத்தில் அவர்களைக் கண்டு பெருமகிழ்வு பூத்தார். அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், அவரை அன்போடு உபசரித்து அவரின் நலன் விசாரித்தார்கள். அப்பொழுது அவர் தம் அவல நிலையை எடுத்துரைத்து, விடுதியில் வந்துதங்கிய நல்லார் ஒருவர் தம் கடனை தீர்த்துத் தமக்கு விடுதலை வழங்குமாறு செய்து விட்டு, தம்மை எவரெனக் காட்டிக் கொள்ளாது மறைவாகச் சென்று விட்டாரென்றும் அவருக்காகத் தாம் இறைவனிடம் ஒவ்வொரு கணமும் இறைஞ்சி வருவதாகவும் கூறினார். அது கேட்ட அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள், ''அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் உம்மைத் துன்பத்திலிருந்து காத்தருள் புரிந்தான்'' என்று மொழிந்தார்கள்.

அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் இறப்பெய்திய பின்தான் அவ்விளவலை விடுவிக்க மூல காரணமாயிருந்தவர்கள் அப்பெருந்தகை என்பதை வெளியிட்டார் கடன் கொடுத்தவர். அப்பொழுது அவ்விளவலும் ஏனையோரும் வியப்புக் கடலில் மூழ்கித் திளைத்தார்கள்.

மற்றொரு தடவை ஒருவர் அவர்களை அணுகி, தாம் ஒருவருக்கு எழுநூறு திர்ஹங்கள் கடன் பட்டிருப்பதாகவும் தமக்குக் கடன் தந்தவர், அக்கடனைத் திருப்பித் தருமாறு கேட்டுத் தம்மை பெரிதும் துன்புறுத்துவ தாகவும் அழாக் குறையாகக் கூறினார். உடனே அப்துல்லாஹ் இப்னு முபாக் (ரஹ்) அவர்கள் ஒரு காகிதத்தை எடுத்துத் தம் செயலருக்கு ஒரு கடிதம் எழுதினர். அதிலே அக்கடிதம் கொண்டு வரும் நபருக்கு ஏழாயிரம் திர்ஹங்கள் கொடுக்குமாறு பொறிக்கப்பட்டிருந்தது.

செயலர் அக்கடிதத்தைப் படித்ததும் அதனைக் கொண்டு வந்தவரை நோக்கி, ''நீர் எத்தனை திர்ஹங்கள் கடன்பட்டுள்ளீர்?'' என்று வினவினர். ''எழுநூறு திர்ஹங்கள்'' என்று அவர் பதில் கூறியதும், அவர் ஒரு காகிதத்தை எடுத்து, ''இவர் கொடுக்க வேண்டிய கடன் எழுநூறு திர்ஹங்கள் தாமே. ஏழாயிரம் திர்ஹங்கள் இவருக்குக் கொடுக்குமாறு எழுதியுள்ளீர்களே. என் செய்ய?'' என்று எழுதிக் கேட்ட பொழுது,

அவர்கள் அக்கடிதத்தின் அடியிலேயே, ''அவருக்குப் பதினாலாயிரம் திர்ஹங்கள் கொடும்'' என்று எழுதிக் கைச்சாத்திட்டு அனுப்பினர்.

அது கண்ட அவர்களின் செயலர், ''இவ்வாறு தாங்கள் ஊதாரித்தனம் செய்து கொண்டே சென்றால் தங்களின் சொத்து முழுவதும் விரைவில் அழிந்து விடும் என்று நான் அஞ்சுகிறேன்'' என்று எழுதியனுப்பினார்.

அதனைப் படித்துப் பார்த்ததும் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களுக்கு அளவற்ற வருத்தம் ஏற்பட்டது. உடனே அவர்கள் ஒரு காகிதத்தை எடுத்து, ''உலகச் செல்வத்தை அழிப்பதன் மூலம் மறுமைச் செல்வத்தைக் கபளீகரம் செய்ய நான் விரும்புகின்றேன். எவன் தன் முஸ்லிம் சகோதரனை, அவன் எதிர்பார்த்திராத தன் திடீர்ச் செயலால் மகிழ்வித்து விடுவானோ, அவனுக்கு அல்லாஹ் மன்னிப்பளித்து விடுகிறான் என்ற நபிமொழி உமக்குத் தெரியாதா? நான் இப்பொழுது செய்யும் இந்தப் பதினாலாயிரம் திர்ஹங்களாலான இவ்வாணிபம் எனக்கு இழப்பு வழங்கக் கூடியதா, ஆதாயம் தரக் கூடியதா என்பதை நீரே கூறுவீராக!'' என்று எழுதியனுப்பினார்கள்.

அவருக்கு இப்பொழுது ஏழாயிரம் திர்ஹங்களைக் கொடுக்குமாறு எழுதினால் அவர் எதிர்பார்த்தது தான் கிடைக்கும்; அதனால் அவர் மகிழ்ச்சியுறமாட்டார் என்று எண்ணி, அவர் எதிர்பாராத ஒன்றைச் செய்து அவரை மகிழ்விப்பதற்காக அவருக்குப் பதினாலாயிரம் திர்ஹங்கள் வழங்குமாறு பணித்தார்கள் அவர்கள். இதன் மூலம் அவர்கள் விரும்பியதெல்லாம் தங்களின் பாவங்கள் இறைவனால் பொறுக்கப் பெற வேண்டும் என்பதேயன்றி வேறில்லை.

அவர்கள் தாம் பொருளீட்டுவது அல்லாஹ்வின் மார்க்கத்திற்காகச் செலவழிப்பதற்காகவே என்று கருதினர். அல்லாஹ்வின் மார்க்கத்தை மக்கள் கற்றுக் கொள்வதைக் காணும் பொழுது, அவர்கள் அளவற்ற மகிழ்ச்சியுறுவார்கள். மார்க்கக் கல்வி பயிலும் மாணவர்களைத் தேடித் தேடிச் சென்று, அவர்களுக்கு அவர்கள் உதவுவர். மார்க்கக் கல்வி பயில்வோர் வறுமையால் துன்புறின், இவர்கள் அவர்களுக்கு உதவியாக ஆயிரக்கணக்கான தீனார்களை அனுப்பி வைப்பர். அப்பொழுது அவர்கள், ''இதைவிடப் பணத்தைச் செலவு செய்ய நல்லதொரு வழி வேறொன்றுமில்லை. அவர்கள் தம் குடும்பத்தைக் கூடப் பொருட் படுத்தாது, மார்க்கக் கல்வி பயில்வதில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களும் தம் குடும்பத்தினருக்காகப் பொருள் தேடுவதில் ஈடுபட்டுவிடின் மார்க்கமே அழிந்து விடுமல்லவா? எனவே மார்க்கத்தைப் பரப்புவதற் காகவே நான் அவர்களுக்கு உதவுகின்றேன். நபித்துவம் முற்றுப் பெற்ற பின் உள்ள மிகப் பெரும் நன்மையான செயல் மார்க்கத்தைப் பரப்புவது

தான்'' என்று கூறினர். இதன் பொருட்டு அவர்கள் பல்வேறு நாடுகளில் சுற்றுப் பயணம் நிகழ்த்தினர். அம்மட்டோடல்லாது, அவர்கள் தம் பிறந்தகத்திலும் இரண்டு கல்லூரிகளை நிறுவி நடத்தி வந்தனர். அவற்றில் ஒன்றில் ஹதீதும் மற்றொன்றில் மார்க்கச் சட்ட திட்டங்களும் போதிக்கப்பட்டு வந்தன.

மேலும் அவர்கள் கூறினார்கள்; சமுதாயத்தின் மக்களை ஐந்து பிரிவினராகப் பிரிக்கலாம். அவர்கள் சீர்கெட்டுவிடின், சமுதாயமே சீர்கெட்டு விடும். அவர்கள், வருமாறு:

*(1)* **மார்க்க அறிஞர்கள்:-** இவர்கள் நபிமார்களின் வாரிசுகளாவர். நபிமார்கள் கொண்டு வந்த கல்வி இவர்களிடம் உள்ளது. இவர்கள் உலக ஆசாபாசங்களில் உழலின் மற்றவர்கள் எவரிடமிருந்து அறிவைக் கற்றுக் கொள்வார்கள்? எவரைத் தம் முன்மாதிரியாக ஆக்கிக் கொள்வார்கள்?

*(2)* **வணிகர்:-** இவர்கள் மோசம் செய்ய முற்படின், பிறகு மக்கள் எவரைத் தாம் நாணயஸ்தராகக் கருதுவர்?

*(3)* பற்றற்றவர்:- இவர்களை முன் மாதிரியாகக் கொண்டு மக்கள் செயலாற்றுவர். இவர்கள் சீர்கெட்டுவிடின் பின்னர் மக்கள் எவரைத் தாம் தங்களின் முன் மாதிரியாகக் கொள்வர்.

*(4)* **மார்க்கப் போர் செய்பவர்:-** இவர்கள் போரில் கிடைக்கும் கொள்ளைப் பொருள்களைச் சேகரிப்பதையே தங்களின் குறிக்கோளாகக் கொண்டால் பின்னர் மார்க்கம் எவ்வாறு பரவும்?

*(5)* **ஆட்சியாளர்:-** இவர்களுக்கு உதாரணமாக ஆடு மேய்ப்பவனையே கூறலாம். அவனுடைய அலுவல் ஆடுகளைக் கண்காணித்து, அவற்றை ஆபத்துகளிலிருந்து காப்பாற்றுவதாகும். ஆடு மேய்ப்பவனே ஓநாயாக மாறிவிடின், பின்னர் ஓநாயிடமிருந்து மக்களைக் காப்பாற்றுபவர் எவர்?

இவ்வாறு கூறிய அவர்கள் தம் கடன் மக்களுக்கும், மார்க்கத்திற்கும் தம்மாலியன்ற அத்தனை உதவிகளும் செய்வது என்பதாகவே இருந்தது. எனவே தாம் திரட்டிய பெரும் பொருளை வாரி வாரி வழங்கும் வள்ளலாக அவர்கள் விளங்கினர். தமக்கு வாணிபத்தின் மூலம் கிடைக்கும் வருவாயைத் தம் மாணவர்களுக்கும் பங்கு வைத்துக் கொடுக்கும் பெருமகராக அவர்கள் திகழ்ந்தனர்.

ஒருநாள் அவர்களின் இல்லத்திற்கு விருந்தினர் ஒருவர் வந்தார். அப்பொழுது அவருக்கு வழங்குவதற்கு அவர்களின் இல்லத்தில் அதிகமான உணவு இல்லை. வருத்தத்துடன் உள்ளே சென்ற அவர்கள்

தம் மனைவியை நோக்கி, ''விருந்தினர் ஒருவர் வந்துள்ளார். அவரை உபசரிப்பது நம் கடமை'' என்று கூறினர். அது கேட்டு அவர்கள் மீது சீறிச் சினந்தாள் அவர்களின் மனைவி. உடனே அவர்கள் அவளை நோக்கி, ''என் மீது சீறிச் சினந்து பாயும் ஒருத்தி எனக்கு மனைவியாக இருக்கத் தகுதியற்றவள்'' என்று கூறி அவளுக்குரிய 'மஹர்' தொகையைக் கொடுத்து அவளை மணவிடுதலை செய்து விட்டார்கள்.

இதன் பின் ஒருநாள் அவர்கள் மக்களுக்குச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்குங்கால் அவர்களின் சொற்பொழிவைக் கேட்க வந்திருந்த அவ்வூர்த் தலைவர் ஒருவரின் அழகுத் திருமகள் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டுச் சொக்கிவிட்டாள். இல்லம் திரும்பியதும் தம் தந்தையை அணுகி அவர்களைத் தமக்கு மணமுடித்து வைக்குமாறு வேண்டினாள். அவ்வாறே அவளின் தந்தையும் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களுக்கு ஐம்பதாயிரம் தீனார்களை அன்பளிப்பாக வழங்கித் தம் மகளை மணமுடித்து வைத்து மகிழ்ந்தார்.

இதன் பின் அவர்கள் ஓரிரவு அயர்ந்து உறங்குங்கால், இறைவனைக் கனவில் தரிசிக்கும் பேறு பெற்றனர். அப்பொழுது இறைவன் அவர்களை நோக்கி, ''நீர் எனக்காக ஒரு பெண்ணை மண விடுதலை செய்தீர். அதற்காக இப்பெண்ணை நாம் உமக்கு மனைவியாக்கினோம். உமக்கு என் காரணமாக எவ்வித இழப்பும் ஏற்படக்கூடாது என்று கருதி அவ்விதம் செய்தோம்'' என்று கூறினான்.

அவர்களுக்கு வயதாக, ஆக அவர்கள் தம் பொருள்களை அதிகமதிகமாக அறவழியில் செலவிடத் துவங்கினார்கள். அப்பொழுது ஒருவர் அவர்களை நோக்கி, ''தங்களுக்கு மூன்று பெண் மக்கள் உள்ளனரே. அவர்களுக்கு ஏதேனும் விட்டு வைக்கக் கூடாதா?'' என்று கூறிய பொழுது, ''நல்லோர்களுக்கு அவன் துணைபுரியக் கூடியவனா யுள்ளான்'' என்று கருத்துப் பொதிந்த இறை திருவசனத்தை ஓதி, ''அல்லாஹ்வே ஒருவருக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளும்பொழுது அப்துல்லாஹ்வுக்கு (அல்லாஹ்வின் அடியானுக்கு) என்ன அலுவல் உள்ளது?'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

இம்மையிலேயே மறுமைக்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டார்கள். ''இவ்வுலகை விட்டுச் செல்லும் பொழுது, இறை நம்பிக்கையாளனும் சரி, இறை மறுப்பாளனும் சரி, துயரத்துடன் இராமல் இரார். இறை மறுப்பாளன் தனக்குக் கிடைக்க இருக்கும் தண்டனை பற்றித் துயருறுவான். இறை நம்பிக்கையாளனோ தாம் தம் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றவில்லையே! விலக்கப்பட்டவற்றை ஒழுங்காக விட்டொழிக்கவில்லையே'' என்று ஏங்குவான் என்று அவர்கள் ஒரு தடவை

கூறினர். அவ்வித ஏக்கம் தம்மைத் தம் வாழ்வின் இறுதியில் ஆட்கொள்ளக் கூடாது என்பதே அவர்களின் ஒரே குறிக்கோளாக இருந்தது.

''அறிவுள்ளவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வயதை (அதாவது 63 வயதை) எய்தின், தன் கஃபனைத் தயார் செய்து கொள்வான்'' என்று கூறிய அவர்கள் அவ்விதமே செய்யவும் செய்தார்கள்.

''இறை நேசர்களுக்கு இதய அமைதி என்பது விலக்கப்பட்ட ஒன்றாகும். இவ்வுலகில் அவர்களின் உள்ளம் இறைவனைத் தேடி அமைதியற்ற நிலையில் பரபரப்படைகிறது. அவ்வுலகில் இறை காட்சியைக் கண்டு அமைதி இழந்து பரபரப்படைகிறது'' என்று அவர்கள் கூறினர். அதற்கேற்ப அவர்கள் இறுதிவரை இறைவனைத் தேடி அமைதியற்ற நிலையிலேயே இருந்து வந்தார்.

இறுதியாக அவர்களின் வாழ்வின் இறுதியும் நெருங்கியது. துருக்கியத் தந்தைக்கும் பாரசீக அன்னைக்கும் அருமைத் திருமகனாக ஹிஜ்ரி 118 ஆம் ஆண்டில் பிறந்த அவர்கள், ஹிஜ்ரி 181-ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் தங்களின் 63 ஆவது வயதில் மார்க்கப் போரில் ஈடுபட்டு விட்டுத் திரும்புங்கால் மோசூலுக்கு அண்மையிலுள்ள ஹைஅத் என்ற சிற்றூரை அடைந்ததும் தம்முடைய இறுதி நெருங்கி விட்டதை உணர்ந்தார்கள். உடனே அவர்கள் தங்களின் அடிமை நஸ்ரை நோக்கி, ''என்னை விரிப்பிலிருந்து தூக்கித்தரை மீது போட்டு விடு'' என்று கூறினர். அவர் அவ்வாறே செய்து விட்டுக் கண்ணீர் விட்டு அழுத பொழுது, ''ஏன் அழுகிறாய்?'' என்று வினவினார்கள் அவர்கள். அதற்கு அவர், ''ஒரு காலத்தில் செல்வத்தில் புரண்ட தாங்கள் இப்பொழுது திக்கற்ற நிலையில் வெறுந்தரையில் கிடத்தப்பட்டிருப்பதைக் கண்டு எனக்கு அழுகை, அழுகையாக வருகிறது'' என்று கூறினார். அது கேட்ட அவர்கள், ''நஸ்ரே! வருந்தாதே. நான் இறைவனிடம் பல்லாண்டு காலமாக, 'இறைவனே! நீ என்னைப் பிறருடைய உதவியை எதிர் பார்த்திராது, பிறருக்கு உதவும் செல்வனாக ஆக்கிப் பின்னர் எனக்கு வறிஞர்கள், நலிவுற்றவர்கள் ஆகியவர்களின் இறப்பை வழங்குவாயாக! நீ என் மீது இரங்கி உன் பேரருளைப் பொழியும் பொருட்டு, நான் உன் திருமுன் வருங்கால் திக்கற்ற நிலையில் வருமாறு அருள் பாலிப்பாயாக!' என்று இறைஞ்சிக் கொண்டிருந்தேன். என்னுடைய இறைஞ்சுதலை இறைவன் ஏற்றுக் கொண்டான். அதற்காக நான் அவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

இதன் பின் அவர்கள் கண்களை அகல விரித்துப் புன்முறுவல் பூத்தவண்ணம், ''லிமித்லி ஹாதா ஃபல் யஃமலில் ஆமிலூன்'' (ஏதும் நன்மை செய்யக் கூடியவர்களெல்லோரும் இது போன்ற பாக்கியத்தைப்

பெறப் பாடுபடவும்) (37: 61) என்ற இறை திருவசனத்தை ஓதிக் கண்களை இறுக மூடிக் கொண்டனர்.

அவர்களின் இறுதிச் சடங்கில் எண்ணற்றோர் கலந்து கொண்டனர். அதைக் கண்டு ஹைஅத்தின் அதிகாரியே மலைத்துப் போய்விட்டார்.

அவர்களின் இறப்புச் செய்தியைக் கேள்வியுற்ற புலைல் இப்னு இயால் (ரஹ்) அவர்கள், கண்ணீர் வடித்தவர்களாய் ''கஃபாவின் மீது ஆணையாக, என் கண்கள் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களை விட மேலான ஒருவரைக் காணவில்லை'' என்று கூறினர்.

இவ்வாறு நல்லோர் போற்றும் நல்லாராய், நானிலம் போற்றும் நல்லாராய் விளங்கிய அவர்களை, அவர்கள் இறந்ததன் பின் ஒருவர் கனவில் கண்டு, ''அல்லாஹ் தங்களை என்ன செய்தான்?'' என்று வினவிய பொழுது, ''நான் ஒரு 'பித்அத்' துக்காரனை அன்போடு நோக்கினேன் என்பதற்காக இறைவன் என்னை மூன்று ஆண்டுகள் நிற்க வைத்து நீ ஏன் என் பகைவனைப் பகைக்கவில்லை என்று வினவினான்'' என்று கூறினர்.

வேறொருவர் அவர்களைக் கனவில் கண்டு, ''அல்லாஹ் தங்களை எவ்வாறு நடத்தினான்?'' என்று வினவிய பொழுது ''அறிவைத் தேடி நான் செய்த பயணங்களின் பொருட்டு, அவன் என் பவம் பொறுத்து சுவனம் தந்தான்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

பிறிதொருவர் அவர்களைக் கனவில் கண்டு ''தாங்கள் உலகில் செய்த எச்செயல் தங்களுக்கு மறுமையில் நன்மை பயத்தது?'' என்று வினவியபொழுது ''நான் செய்த மார்க்கப் போரும், இஸ்லாமிய அரசாங்கத்தின் எல்லையைக் காத்து நின்றதும்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

மற்றொருவர் கப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்களைக் கனவில் கண்டு, ''தங்களின் நிலை யாது?'' என்று வினவிய பொழுது, ''இறைவன் என்னை மன்னித்தருளினான்'' என்று கூறினர். அதன் பின் அவர் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களைப் பற்றி வினவிய பொழுது, ''அவர்கள் அல்லாஹ்வின் அண்மையில் உள்ளவர்களில் ஒருவராக உள்ளனர்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

ஆம்; அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) அவர்களைப் போன்ற நல்லோர்கள் இறை அண்மையை எய்தாது வேறு எவர் தாம் இறை அண்மையை எய்தப் பெறுவார்கள்?

# 15. மஃரூபுல் கர்கீ (ரஹ்)

கிறிஸ்தவப் பள்ளி ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அதிலே பாதிரியார் ஒருவர் தம்முன் வீற்றிருக்கும் மாணவர்களுக்குத் திரியேகத்துவக் கொள்கையைப் போதித்துக் கொண்டுள்ளார். போதித்து முடிந்ததும் அவர் தம்முன் வீற்றிருந்த சிறுவர் ஒருவரை நோக்கி, ''நான் கூறியதைக் கூறு'' என்று சொல்கிறார். அதுகேட்ட அச்சிறுவர், ''நான் அதனை ஒருபோதும் கூறமாட்டேன். இறைவன் ஒருவன். அவன் மூவரில் ஒருவனல்ல'' என்று கூறுகிறார். இதைக் கேட்டதும் பாதிரியாருக்கு அளவற்ற வெஞ்சினம் ஏற்படுகிறது. அடிபட்ட வேங்கையென அச்சிறுவர் மீது பாய்ந்து அவரை அடி, அடி என்று அடிக்கிறார். தன் கை ஓயும்வரை அடிக்கிறார். தம் உடல் அலுக்கும்வரை அடிக்கிறார். எனினும் அச்சிறுவர் அசையவில்லை. அவரின் உடலம் அசையவில்லை. ஆனால் அவரின் உதடுகள் அசைந்து கொண்டுள்ளன. அவருடைய நா அசைந்து கொண்டுள்ளது. அசைய மட்டும் செய்யவில்லை - கிறிஸ்தவ மதத்தின் ஆணிவேரைப் பிடித்து அசைத்துக் கொண்டுள்ளது. ''இறைவன் ஒருவன். அவன் மூவரில் ஒருவனல்ல'' என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டுள்ளது.

இதுகண்டு பாதிரியாருக்கு அடங்காச் சினம் பொங்கி எழுகின்றது. ''ஓட்டா பயலே! இங்கு நிற்காதே. இனி இப்பக்கம் திரும்பியும் பாராதே!'' என்று கூறி அச்சிறுவரை எட்டி உதைக்கிறார். எட்டி உதைத்த காலை முத்தமிட்டு விட்டு, ''இனி நான் இப்பக்கம் திரும்பியும் பாரேன்'' என்று கூறிய வண்ணம் அவ்விடத்தை விட்டும் அச்சிறுவர் வெருண் டோடுகிறார். அவருடைய கால்கள் அவரை இமாம் அலீ இப்னு மூஸா அல் ரஸாவின் இல்லம் நோக்கி இழுத்துச் செல்கின்றன.

இமாம் அவர்களின் அருள் தவழும் முகத்தைக் கண்டதும், சிறுவருக்கு அழுகை பொத்துக் கொண்டு வருகிறது. தாம் இதுகாறும் அடக்கி வைத்திருந்த அழுகையையெல்லாம் அழுது அவர்களின் பாதகாணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றார் அச்சிறுவர். ''ஏன் அழுகிறாய்? என்ன நிகழ்ந்தது, சொல்'' என்று கனிவோடு வினவுகின்றனர் இமாம்.

நடந்ததைக் கூறி, தாம் இனிமேல் இல்லம் திரும்ப விரும்பவில்லை என்றும், அங்குச் செல்லின் தமக்குப் பள்ளியில் கிடைத்தது போன்று அடியும் உதையும் தான் கிடைக்குமென்றும், எனவே தம்மை ஆதரித்து ஆட்கொள்ள வேண்டும் என்றும், தம்மை இஸ்லாத்தில் இணைத்து அருள்பாலிக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறார் அவர். அடுத்த கணம் இமாம் அவர்களின் திருவாயிலிருந்தும் ''அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்' என்ற திருக்கலிமா வெளிவருகிறது. அதனைத் திரும்பக் கூறுகிறார் அச்சிறுவர். அக்கணத்திலிருந்து அவரின் வாழ்விலே மாபெரும் திருப்பம் ஏற்படுகிறது. சாதாரணக் கிறிஸ்தவச் சிறுவராக இருந்த அவர், மஃரூபுல் கர்கீ* என்ற பெயருடைய மாபெரும் இறைநேசச் செல்வராக மாறுகிறார். இஸ்லாம் அவருடைய வாழ்விலே அத்துணை மாற்றத்தை ஒரு நொடியில் ஏற்படுத்தி விடுகிறது.

பள்ளி சென்ற தங்களின் அருமந்த மைந்தன் இரவு வெகு நேரம் சென்றும் இல்லம் திரும்பாதது கண்டு, பெற்றோர்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. என்ன காரணமோ, யாது காரணமோ என்பதை அறியாதவர்களாய் அங்குமிங்கும் சென்று தம் மகனைத் தேடினர். அதன் பின் வழியில் எதிர்ப்பட்ட அவரின் பள்ளித்தோழன் ஒருவனைச் சந்தித்துத் தம் மகனைப் பற்றி விசாரித்தனர். அவனோ பள்ளியில் நடந்த விவரங்களை ஒன்றுகூட விடாது எடுத்துரைத்தான். அதுகேட்டுப் பெற்றோர்கள் இருவரும் பெருமூச்சு விட்டார்கள்.

இல்லம் திரும்பிய அவர்கள், ''இறைவனே! எங்களின் அன்பு மகனை எங்களிடம் திரும்பக் கொண்டு வந்து சேர்ப்பாயாக! அவன் விரும்பும் மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கு நாங்கள் ஒரு போதும் அவனுக்குத் தடைக்கல்லாக அமையப் போவதில்லை. அதற்கு மாறாக, அவனுக்கு உறுதுணையாக இருப்பதற்காக, அவன் தழுவிய மார்க்கத்தை நாங்களும் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம்'' என்று இறைஞ்சினார்கள். இவ்வாறு அன்றிரவு மட்டும் இறைஞ்சவில்லை. இதுவே சின்னாட்களாக அவர்களின் மனத்துடிப்பாக, இதயக் கீதமாக இருந்தது.

---

★ அவர்களின் முழுப் பெயர் அபூமஹ்பூஸ் மஃரூப்இப்னு ஃபிரோஸுல் கர்கீஎன்பதாகும். இராக்கிலுள்ள கர்க் பாஜுத்தா என்ற இடத்தின் நினைவாகவோ, பக்தாதிலுள்ள கர்க் பகுதியின் நினைவாகவோ, அவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டதென்றும், கர்க் என்ற பெயருடன் ஒன்பது ஊர்கள் உள்ளனவாயினும் பக்தாதிலுள்ள கர்க் என்ற பகுதியிலேயே அவர்கள் பிறந்தார்கள் என்றும், அதன் காரணமாகவே அவர்களுக்கு இப்பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர்.

ஒருநாள் அவர்களின் வீட்டுக் கதவில் 'டக், டக்' என்ற சப்தம் கேட்டது. 'யார் அது?' என்று வினவினார் அன்னை உள்ளே இருந்து கொண்டே.

''நான்தான் மஃரூப்; கதவைத் திறங்களம்மா'' என்று கனீரென்று பதில் வந்தது, வெளியில் நின்று கொண்டிருந்த மகனின் மணி வாயிலிருந்து.

''வாடா என் கண்மணி மகனே! வந்தாயாடா என் கண்மணி மகனே'' என்று அலறிக் கொண்டு ஓடோடி வந்து கதவைத் திறந்தார் அன்னை. அவரின் அலறல் கேட்டு, படுத்திருந்த தந்தையும் வீரிட்டெழுந்து வாயிலை நோக்கி ஓடி வந்தார்.

தம் மணி வயிறு உதித்த மாமகனைக் கட்டித் தழுவி மகிழ்ச்சிக் கண்ணீர் உகுத்த அன்னை, ''அடே என் மகனே! நீ இது காறும் எங்கு சென்றாயடா. உன்னைத் தேடி அலைந்து எங்களின் கால்களும் தேய்ந்துவிட்டனவே. ஓய்ந்து விட்டனவே. எங்களை இவ்வாறா தவிக்க விட்டுச் செல்வது?'' என்று வினவினார்.

''அம்மா! அப்படியெல்லாம் கூறாதீர்கள். நான் இப்பொழுது உங்களை வாழ்விக்க வந்துள்ளேன்'' என்றார் மைந்தர்.

''எவ்வாறு?'' என்று வினவினார் அன்னை.

''நான் இஸ்லாத்தைத் தழுவி விட்டேன். அதிலே தான் என்னுடையவும் உங்களுடையவும் இம்மை, மறுமை வாழ்வு உள்ளது. எனவே என்போன்று நீங்களும் அப்பாவும் இஸ்லாத்தைத் தழுவி விடுங்கள்'' என்று கூறினார் மகன்.

''நீ காணாமற்போன அன்றிரவே நாங்கள் இருவரும் நீ பின்பற்றும் மார்க்கத்தைப் பின்பற்றுவதாக இறைவனின் திருமுன் ஆணையிட்டுக் கூறிவிட்டோமே'' என்று இயம்பினார் அன்னை.

அக்கணத்திலிருந்து, ''லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்'' என்ற இஸ்லாமிய திருக்கலிமா அவ்வில்லம் முழுவதும் முழங்கலாயிற்று.

இதன்பின் இமாம் அலீ இப்னு அல்ரஸாவின் தாளமர்ந்து மார்க்கக் கல்விகளைக் கற்றுத் தேர்ந்த மஃரூபுல் கர்கி (ரஹ்) அவர்கள் ஒருநாள் கூஃபாவின் தெருவழியே சென்று கொண்டிருந்தக்கால் மாபெரும் பேச்சாளரான இப்னு ஸம்மாக்கின் பேச்சைக் கேட்பதற்காக மக்கள் திரள் திரளாக நின்று கொண்டிருப்பதைக் கண்டார்கள். என்ன பேசுகிறார் என்பதைக் கேட்க அவர்கள் சற்று ஆங்கு நின்றபொழுது, ''எவன்

அல்லாஹ்வை விட்டும் தன் முகத்தைத் திருப்பிக் கொள்கின்றானோ, அவனை விட்டும் அல்லாஹ் தன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறான். எவன் அல்லாஹ்வை நெருங்குகின்றானோ, அவனை அல்லாஹ்வும் நெருங்கி அவன்மீது தன் அருண்மாரியைப் பொழிகின்றான்'' என்று அவர் பேசிய பேச்சு அவர்களின் செவிப்புகுந்து, அவர்களின் உள்ளத்திலும் ஊடுருவிப் பாய்ந்தது. அக்கணமே அவர்கள் தம்மை முற்றிலும் இறைவழியில் ஈடுபடுத்தி, இறைவனின் பேரருளுக்கும் பேரன்புக்கும் உரியவராக்கிக் கொள்ள உறுதி பூண்டார்கள்.

இதன்பின் அவர்கள் தாவூத் தாயீ (ரஹ்) அவர்களை அணுகி, அவர்களின் அடி அமர்ந்து, அவர்கள் இட்ட பணியைச் சிரமேற்றாங்கிச் செயலாற்றி வந்தார்கள். தாவூத் தாயீ (ரஹ்) அவர்களும் தம் மாணவரின் மாண்பினை உணர்ந்து அவர்களை ஆன்மீக உச்சத்திற்கு அழைத்துச் செல்வதற்கான பயிற்சிகளையெல்லாம் அவர்களுக்கு வழங்கி வந்தனர். நாளாக, ஆக மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்களின் புகழ் நாடெங்கணும் பரவலாயிற்று.

''ஒரு மகானை மூன்று விஷயங்களால் அறியலாம். அவர்களின் கவலையெல்லாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கும். அவர்களின் அலுவல்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்காகவே இருக்கும். அவர்கள் வெருண்டோடுவதும் அல்லாஹ்விடமே இருக்கும்'' என்பது அவர்களின் வாழ்வின் வழிகாட்டும் திருவசனமாக அமைந்திருந்தது.

ஒரு தடவை அவர்களின் நண்பர் ஒருவர் அவர்களை நோக்கி, ''தாங்கள் மக்களை விட்டு ஒதுங்கி இறைவனை அல்லும் பகலும் வணங்கிக் கொண்டிருப்பதற்கான காரணம் தான் யாது? மரண பயமா? புதை குழியின் வேதனை பற்றிய அச்சமா? நரக பயமா? சுவனத்தின் மீதுள்ள ஆசையா?'' என்று வினவிய பொழுது, ''இறைவனின் நட்பும் பேரருளும் ஒருவனுக்கு வாய்க்கப் பெறின், இவையெல்லாம் எம்மாத்திரம்? இவை எல்லாம் மறந்து போய்விடுமே. இவற்றைப் பற்றிக் கேட்பதற்குக்கூட அவனுக்கு நாணம் ஏற்பட்டு விடுமே'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

வேறொரு தடவை அவர்கள் பயணத்தில் இருக்கும் பொழுது, தொழுகை நேரம் வந்தது. அப்பொழுது பயணி ஒருவர் திசை தெரியாது 'கிப்லா'வைத் தம் முதுகுப் புறமாக வைத்துத் தொழுது கொண்டிருந்தார். தொழுது முடித்துத் திரும்பிப் பார்த்த பொழுது மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள் வேறொரு பக்கம் நோக்கித் தொழுது கொண்டிருப்பதைக் கண்டு தம் தவற்றை உணர்ந்தார். அவர்கள் தொழுது முடிந்ததும் அவர்களை அணுகி, 'ஷைகு அவர்களே! நான் தவறான திசைநோக்கித் தொழுத பொழுது என்னைத் திருத்தாது வெறுமனே இருந்து

விட்டீர்களே. என்னைத் திருத்தக் கூடாதா?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''ஒரு தர்வேஷ் இறைவனுடைய வணக்கத்திலிருந்து ஓய்வு பெறும் பொழுதே அவன் பிறரைத் திருத்துவதற்கான உரிமையைப் பெறுகிறான். நானோ ஒரு தர்வேஷ். எனக்கு இறை வணக்கத்திலிருந்து ஓய்வும் இல்லை; ஒழிச்சலும் இல்லை. அவ்விதம் இருக்கும் பொழுது, மற்றவர்களின் ஆன்மீக, உலகாயுத விஷயங்களில் தலையிட எனக்கு உரிமை ஏது? நேரம் ஏது?'' என்று பதிலிறுத்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் தங்களைப் பற்றிக் கூறும் பொழுது, ''நான் முப்பது ஆண்டுகளாக அல்லாஹ்வின் திருச்சந்நிதானத்தை விட்டு ஒருகணமும் அகலாது அவனுடன் உரையாடிய வண்ணம் உள்ளேன். ஆனால் மக்களோ நான் அவர்களுடன் உரையாடுவதாக எண்ணிக் கொண்டுள்ளார்கள்'' என்று கூறினர்.

பிறிதொரு தடவை அவர்கள் தம்மை இறைவனளவில் அழித்துக் கொண்ட ஃபனா நிலையிலானார்கள். அப்பொழுது அவர்களின் வாயிலிருந்தும், ''அன ரப்புகும் ஃபஃபுதூனீ (நானே உங்களின் இறைவன். என்னையே வணங்குங்கள்)'' என்ற சொற்கள் வெளிவந்தன.

ஒருநாள் அவர்கள் பக்தாதின் தெருவழியே சென்று கொண்டிருந்த பொழுது தண்ணீர் சுமந்து சென்ற ஒருவர், ''இத்தண்ணீரை அருந்துபவர் மீது இறையருள் பொழியுமாக!'' என்று கூவிக் கொண்டு போவதைக் கண்டதும் அவரிடம் ஓடோடிச் சென்று தண்ணீர் வாங்கி அருந்தினார்கள். அதுகண்ட அவர்களின் நண்பர் ஒருவர், ''தாங்கள் இன்று நஃப்ல் நோன்பு நோற்றிருந்தீர்களே, என்ன இவ்வாறு ஒரு நொடியில் அதனை முறித்து விட்டீர்கள்'' என்று அவர்களிடம் வினவியபொழுது, ''ஆம்; நான் அவரின் இறைஞ்சுதல் நிறைவேறப் பெறுவதற்காக, நிறைவேறி இறையருள் என்மீது பொழியப் பெறுவற்காக வேண்டுமென்றே நோன்பினை முறித்தேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

வேறொரு நாள் அவர்களுக்கு 'உளூ' முறிந்து விட்டது. உடனே அவர்கள் மணலால் 'தயம்மம்' செய்து கொண்டனர். அதுகண்ட ஒருவர், ''என்ன! தஜ்லா நதி சிறிது தொலைவில் தானே உள்ளது. அங்குச் சென்று தாங்கள் 'உளூ'ச் செய்து வரலாமே'' என்று கூறியபொழுது, ''ஆம்; தாங்கள் கூறுவது உண்மைதான். ஆனால் நான் அங்குச் செல்லும் வரையில் உயிரோடிருப்பேன் என்பதற்கு என்ன உத்தரவாதம்?'' என்று வினவினர். அதுகேட்டு அவர் மறு வார்த்தை பேசவில்லை.

மற்றொரு நாள் அவர்கள் தங்களின் குர்ஆன் பிரதியையும் தொழுகை விரிப்பையும் பள்ளியில் வைத்துவிட்டு 'உளூ'ச் செய்வதற்காக தஜ்லா

நதிக்குச் சென்று திரும்பிய பொழுது ஒரு பெண் அவற்றை எடுத்துக் கொண்டு ஓடுவதைக் கண்டதும் அவளைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள் அவர்கள். இறுதியாக, அவளை நெருங்கியதும் ''அம்மா! தங்களுக்கு மகன் இருக்கின்றானா? அவனுக்குக் குர்ஆன் ஓதத் தெரியுமா?'' என்று கனிவோடு வினவினார்கள். ''ஆம்; இருக்கின்றான். ஆனால் அவனுக்குக் குர்ஆன் ஓதத் தெரியாது'' என்று விடை பகர்ந்தாள் அவள். ''அப்படியா! அப்படியாயின் குர்ஆனை என்னிடம் தந்து விடுங்கள். தொழுகை விரிப்பை மட்டும் தாங்கள் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினர் அம்மேதகை. அவர்களின் அன்புள்ளம் கண்டு வியப்புற்ற அப்பெண் குர்ஆனையும் தொழுகை விரிப்பையும் அவர்களின் முன் வைக்க, ''குர்ஆனை நான் எடுத்துக் கொள்கிறேன். தொழுகை விரிப்பைத் தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அதனைத் தங்களுக்கு நான் 'ஹலால்' சொல்லிவிட்டேன். அது இனிமேல் சட்டப்படி உங்களுக்கு உரியதுதான்'' என்று கூறினர் அவர்கள். அதுகேட்டு வெட்கத்துடனும், குழப்பத்துடனும் வெருண்டோடினாள் அவள்.

இத்தகு அன்புள்ளம் கொண்டிருந்த அவர்களின் இறைஞ்சுதல், இறைவனால் உடனுக்குடன் ஏற்றுக் கொள்ளப்படுவதாய் இருந்தது. ஒரு தடவை அவர்கள் தம் மாணவர்களுடன் தஜ்லா நதியின் ஓரத்திலே நடந்து கொண்டிருந்த பொழுது, ஆங்குக் குடித்துவிட்டுக் கும்மாளமடித்துக் கொண்டிருந் சில இளைஞர்களைக் கண்டதும், ''ஷைகே! இவர்களைத் தஜ்லா நதி பெருக்கெடுத்து வந்து மூழ்கடித்துவிடுமாறு இறைஞ்சுங்கள். இவர்கள் உயிரோடிருப்பதைவிட இல்லாதொழிவதே மேல்'' என்று கூறினர் அவர்களின் மாணவர்கள்.

''அப்படியா! கையை உயர்த்துங்கள். நான் இறைஞ்சுகின்றேன்'' என்று கூறினர் மஃரூபுல் கர்கி.

அவர்களும் அவ்வாறே செய்ய, மகான் அவர்களும் பின்வருமாறு இறைஞ்சினார்கள்:

''இறைவனே! அவர்களின் வாழ்வை இவ்வுலகில் மகிழ்வுடைய தாக ஆக்கியது போன்று அவ்வுலகிலும் மகிழ்ச்சியுடையதாக ஆக்குவாயாக!''

அவர்கள் இவ்வாறு இறைஞ்சியதைக் கண்டு அவர்களின் மாணவர்கள் வியப்புக் கடலில் மூழ்கியவர்களாய், ''ஷைகு அவர்களே! நாங்கள் ஒன்று கூறத் தாங்கள் வேறொன்றல்லவோ இறைஞ்சி விட்டீர்கள். தங்களின் இறைஞ்சுதலின் மறை பொருள் எங்களுக்கு யாதொன்றும் விளங்கவில்லையே'' என்று கூறினர்.

''நான் எவனிடம் இறைஞ்சினேனோ அவன் அதன் மறைபொருளை உணர்வான். சற்றுப் பொறுத்திருங்கள். உங்களுக்கு அது விரைவில் தெரியவரும்'' என்று கூறினர்.

''என்ன வியப்பு! சில கணங்களில், குடித்துக் கும்மாள மடித்துக் கொண்டிருந்த அவ்விளவல்கள் தங்களின் மதுக்கலயங்களை எல்லாம் உடைத்தெறிந்து விட்டு, அவர்களின் முன் நடுங்கிய வண்ணம் வந்து தங்களை மன்னித்தருளுமாறும் இனிமேல் தாங்கள் இறைவழி நடப்பதாகவும் உறுதி கூறி, அவர்களின் மாணவர் குழாத்தில் சேர்ந்தனர். அப்பொழுது மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள் தங்களின் மாணவர்களை நோக்கி, ''எவருக்கும் எத்தகைய துன்பமும் இல்லாமல், எவரும் கடலில் மூழ்கிச் சாகாமல், உங்களின் இறைஞ்சுதல் நிறைவேறி விட்டதைப் பார்த்தீர்களா?'' என்று கூறினர்.

ஒருநாள் திருடன் ஒருவன் தூக்கிலிடப்பட்ட பொழுது அவ்வழியே சென்ற மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள், ''இறைவனே! இவன் இவ்வுலகில் செய்த குற்றத்திற்குத் தகுந்த தண்டனையைப் பெற்று விட்டான். மறுமையிலாவது அவனுக்கு நல்வாழ்வு வழங்குவாயாக!'' என்று இறைஞ்சினர். அத்திருடனை ஒருவர் அவ்விரவில் கனவில் கண்ட பொழுது அவன் சுவனத்தில் நல்ல நிலையில் இருப்பதைக் கண்டு அவன் அந்நிலையை எய்தக் காரணம் யாது என்று வினவிய பொழுது, ''மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள் எனக்காக இறைவனிடம் இறைஞ்சியது தான்'' என்று அவன் மறுமொழி பகர்ந்தான்.

பெருநாளன்று அவர்கள் பக்தாது மாநகரின் தெருவொன்றில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிறுவன் ஒருவன் தெருக் கோடியில் அழுது கொண்டிருப்பதைக் கண்டு, ''மகனே! ஏன் இங்கு நின்று அழுது கொண்டுள்ளாய்?'' என்று வினவினர். அதற்கு அவன், ''நானோ ஓர் அநாதை. பெற்றோரோ, உற்றாரோ எனக்கு ஒருவரும் கிடையாது. இன்றோ பெருநாள். மற்றச் சிறுவர்களெல்லாம் புத்தாடை புனைந்துள்ளார்கள். என்னிடமோ நான் அணிந்திருக்கும் இக்கிழிசல் துணியைத் தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் அக்ரோட் பருப்பு வாங்கித் தின்று கொண்டுள்ளார்கள். என்னிடம் அதனை வாங்கித் தின்னக் காசில்லை. என் செய்வேன்'' என்று அழுது கொண்டே கூறினான்.

அதுகண்டு அவர்களின் அன்புள்ளம் இரங்கியது. இரங்கி என் செய்வது? அவர்களின் கையிலும் யாதொரு காசும் இல்லை. எனவே தெருவில் கிடக்கும் பேரீத்தம் கொட்டைகளைப் பொறுக்கி எடுத்து விற்றாவது அவனுக்கு அக்ரோட் பருப்பு வாங்கிக் கொடுக்கலாம் என்ற எண்ணத்துடன் அவர்கள் அவற்றைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள்.

இதனைக் கண்ணுற்ற அவர்களின் மாணவர் ஸர்ரீ அஸ்ஸகதீ, அவர்களின் இச்செயலுக்கான காரணத்தை வினவ அவர்கள் அதனை அவரிடம் எடுத்துரைத்தனர். ''இதற்குத் தானா தாங்கள் இவ்வாறு தங்களையே தாங்கள் துன்புறுத்திக் கொள்கின்றீர்கள். விடுங்கள் அவ்வேலையை. நான் அச்சிறுவனுக்குப் புத்தாடையும் அக்ரோட்டுப் பருப்பும் வாங்கிக் கொடுக்கிறேன்'' என்று கூறினார் அவர். அது கேட்டு மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்களின் முகம் மலர்ந்தது. ''நீர் அக்குழந்தையின் உள்ளத்தை மகிழ்விப்பின் பேரருளாளனாகிய இறைவன் உம் உள்ளத்தை இறை நம்பிக்கையால் நிரப்பமாக்கி வைப்பானாக'' என்று இறைஞ்சினர்.

இதன்பின் அச்சிறுவனைத் தம் இல்லம் அழைத்துச் சென்று, அவனுக்குப் புத்தாடை அணிவித்து, உணவளித்து அக்ரோட்டுப் பருப்பும் வாங்கி வழங்கினர் ஸர்ரீ அஸ் ஸகதீ. அவன் மகிழ்ந்தான். அக்கணத்தி லிருந்து ஸர்ரீ அஸ் ஸகதீ அவர்களின் உள்ளத்தில் ஆன்மீகப் பேரொளி இலங்கலாயிற்று. அவர்கள் இறையருள் பெற்ற புதுமாமனிதராகப் பொலிவுற்றார்கள்.

ஒரு தடவை அவர்கள் தம் மாணவர் ஸர்ரீ அஸ் ஸகதீ (ரஹ்) அவர்களை நோக்கி, ''நீர் இரு செயல்களைப் பற்றிப் பிடித்து ஒழுகிவரின் நீர் இறையண்மையை எய்தப் பெறுவீர்'' என்று கூறினர். ''அவை யாவை?'' என்று ஸர்ரீ அஸ் ஸகதீ (ரஹ்) அவர்கள் ஆவலுடன் வினவிய பொழுது, ''எப்பொழுதும் இறை ஆணைக்கு அடிபணிந்து ஒழுகுவதும் முஸ்லிம்களுக்கு அறிவுரை பகர்வதுமாகும்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

ஒருநாள் மஃரூபுல் கர்கி (ரஹ்) அவர்கள் கானகத்தில் அமர்ந்து கடும் தவம் செய்து கொண்டிருந்த பொழுது அழகிய உடையணிந்த எழிலாரும் இளவல் ஒருவர் தம் முன்வந்து நிற்பதைக் கண்டு வியப்புற்று, ''நீர் யார்? இக்கானகத்திற்கு ஏன் வந்தீர்?'' என்று வினவினர். அதற்கு அவர், ''நான் திமிஷ்கைச் சேர்ந்தவன்'' என்று விடையிறுத்தார். ''எப்பொழுது அங்கிருந்து புறப்பட்டீர்?'' என்று அவர்கள் வினவிய பொழுது ''இன்று காலையில்'' என்று அவர் மறுமொழி பகர்ந்தார். அம்மறுமொழியைக் கேட்ட மஃரூபுல் கர்கி (ரஹ்) அவர்கள், ''இத்துணைத் தொலைவை இத்துணை விரைவில் இவர் கடந்து வந்திருப்பின் இவர் இறைவனின் அருள் பெற்ற இறைநேசச் செல்வரேயன்றி வேறில்லை என்று எண்ணியவர்களாய், 'நீர் எங்குச் செல்கின்றீர்?' என்று மறு கேள்வி விடுத்தனர். ''மக்காவுக்குச் செல்கின்றேன்'' என்று மறுமொழி பகர்ந்தார். இதன்பின் அவரை அவர்கள் நன்முறையில் பயணம் அனுப்பி வைத்தார்கள்.

மூன்றாண்டுகள் கழிந்தன. ஒருநாள் மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள் தம் இல்லத்தில் வீற்றிருக்குங்கால் தலைவிரிகோலமாகக் காலில் செருப்பின்றி தம் முன் ஒருவர் வந்து நிற்பதைக் கண்டதும், அவரை அவர்கள் ஏறிட்டுப் பார்த்தார்கள். தாம் மூன்றாண்டுகளுக்கு முன் கானகத்தின் நடுவே வைத்துப் பார்த்த அதே இளவல் தாம் அவர் என்பதை உணர்ந்ததும் அவரை வரவேற்று உபசரித்து அவரின் அவ்வித அலங் கோல நிலைக்குக் காரணம் யாது என்று வினவினர். அதுகேட்ட அவ்விளவல், ''நான் எதைச் சொல்வது? எதைச் சொல்லாமல் விடுவது? இறைவன் ஒருநாள் என்னைத் துன்புறச் செய்கிறான். மற்றொருநாள் என்னை மகிழ்வுறச் செய்கிறான். ஒரு தடவை என்னைப் பட்டினி போடு கின்றான். மற்றொரு தடவை எனக்கு உணவு வழங்குகின்றான். இவ்விதமாக அவன் என்னை மாறி மாறிச் சோதித்து வருகிறான். நான் என் செய்வது? அவன் செய்வதைச் செய்யட்டும் என்று எண்ணிக் கொண் டுள்ளேன்'' என்று கூறினார்.

அது கேட்ட மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர் களுக்கு அழுகை, அழு கையாக வந்தது. ''இவ்விதம் நீ வருந்தும் வண்ணம் உமக்கு என்ன நேர்ந்தது?'' என்று வினவினர். ''அவற்றை எல்லாம் வெளியில் எடுத் துரைப்பது நல்லதல்ல'' என்று கூறினார் அவர். ''பாதகமில்லை. கூறும்'' என்று அவர்கள் வற்புறுத்திக் கேட்க, ''நான் முப்பது நாட்களாகப் பட்டினி கிடந்தேன். அதன்பின் ஒருநாள் ஒரு வெள்ளரித் தோட்டத்திற்குச் சென்று, அங்குள்ள வெள்ளரிக் கொடியில் பழத்தையோ, காயையோ பிஞ்சி யையோயல்ல, இலைகளைப் பறித்து ஓரிடத்தில் அமர்ந்து உண்ணத் துவங்கிய பொழுது, அத்தோட்டத்தின் உரிமையாளன் என்னைக் கண்டு கொண்டான். ''அடே கள்ளப் பயலே! இத்தனை நாட்களாய் என் வெள்ளரிக்காய்களைத் திருடிக் கொண்டு சென்ற நீ, இன்று என்னிடம் அகப்பட்டுக் கொண்டாய். இன்று நான் உம்மை வெறுமனே விடப் போவதில்லை'' என்று கூறித் தன் கையிலிருந்த சாட்டையால் ஓங்கி, ஓங்கி என்மீது அடித்தான்.

அப்பொழுது ஒருவர் குதிரைமீது இவர்ந்து வந்து, அவனிடமிருந்த சாட்டையைப் பிடுங்கி அவனுடைய முகத்தில் அடித்து ''அடே பாவிப்பயலே! இறைவனின் அருள் நேசச் செல்வர்மீது நீ இவ்வாறு வீண் அபவாதம் சுமத்தி அடிக்கலாமா? அவர் உன் தோட்டத்திலுள்ள இலைகளைத் தாமே உண்பதற்காகப் பறித்தார்'' என்று கூறிச் சென்றார். அதுகேட்ட தோட்டக்காரன் திடுக்குற்று என் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டு என்னைத் தன் இல்லம் அழைத்துச் சென்று எனக்குப் பெரிதும் உபசாரம் செய்து என்னைக் கௌரவித்தான். அப்பொழுது நான் தங்களின் அன்பிற்குரியவன் என்று அவனிடம் எடுத்துரைத்த பொழுது, அவன்

பெரிதும் மகிழ்ந்து தங்களின் உருவ அமைப்பு, பண்பாடு ஆகியவற்றை பற்றியெல்லாம் ஆவலுடன் கேட்டறிந்தான்'' என்று கூறினார்.

அவர் இவ்வாறு கூறி முடித்ததும், அத்தோட்டக்காரரும் தம் சொத்து முழுவதையும் இறைபாதையில் ஏழைகளுக்கு அறம் செய்துவிட்டு அங்கு வந்து சேர்ந்தார். பின்னர் அவரும் அந்த இளவலுமாக மக்கா சென்று ஹஜ்ஜுக் கடமைகளையாற்றி அங்கேயே இறப்பெய்தினர்.

மற்றொரு நாள் மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள் ஒரு வெளியில் அமர்ந்து, அருகே நின்று கொண்டிருந்த ஒரு நாயின் வாயில் ஒரு ரொட்டித் துண்டும், தம் வாயில் ஒரு ரொட்டித் துண்டுமாக வைத்து உண்டு கொண்டிருந்தனர். இதனை அவ்வழியே குதிரைமீது இவர்ந்து வந்த அவர்களின் மாமாவான அந்நகர ஆளுநரின் கண்கள் கண்டதும், அவருக்கு அடங்காச் சினம் ஏற்பட்டது. ''நான்கு பேர் நடமாடக்கூடிய இடத்தில் இவ்வாறு நீர் வீற்றிருந்து நாயுடன் உணவருந்திக் கொண்டுள்ளீரே. இது உமக்கு நாணமாக இல்லையா?'' என்று அவர்களை நோக்கி ஆத்திரத் துடன் வினவினார் அவர். அதுகேட்ட மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள், ''ஆம்; மாமா. நாணத்தின் காரணமாகவே நான் உணவின்றி வாடுகின்ற வைகளுக்கு உணவளித்துக் கொண்டு வருகிறேன்'' என்று பதிலிறுத்தனர். இதன்பின் தம் தலையை உயர்த்தி விண்ணிலே பறந்து சென்ற பறவை ஒன்றை அவர்கள் அழைத்தார்கள். அது அவர்களின் கையிலே வந்தமர்ந்து தன் தலையையும் கண்களையும் தன் இறக்கை களால் மூடிக் கொண்டு நாணிக்கோணிக் கொண்டு அமர்ந்திருந்தது. அப்பொழுது மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள், தம் மாமாவை நோக்கி, ''பார்த்தீர்களா; மாமா இறைவனுக்கு முன் எல்லாப் பொருள்களும் நாணமுறுவதை'' என்று கூறினார்கள். அதுகண்ட அவர் யாது கூறுவதென அறியாது திக்பிரமை யுற்று அவ்விடத்தை விட்டும் அகன்றார்.

அவர்கள் தங்களையே தாங்கள் சவுக்கால் அடித்துக் கொள்வர். அப்பொழுது அவர்கள், ''நப்ஸே! நீ தூய்மையுடன் செயலாற்றுவாயாக! அவ்விதம் செய்தால்தான் நீ ஈடேற்றம் பெறுவாய்'' என்று கூறுவார்கள்.

அவர்களை எவரேனும் அடித்தாலும் ஏசினாலும், அவர்கள் சினமுறாது அவை இறைவனால் தமக்கு நிகழ்ந்ததென எண்ணி அவற்றைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒருநாள் அவர்கள் ஏதோ ஒரு பொருளை அளவற்ற மகிழ்ச்சியுடன் உண்டு கொண்டிருப்பதைக் கண்ட மக்கள் அதற்கான காரணத்தை வினவினர். அதற்கு அவர்கள், ''நான் இன்று இறைவனுடைய விருந்தினன். எனக்கு அவன் தந்ததை மனநிறைவுடன் ஏற்று உண்டு

மகிழ்ச்சியுறுகிறேன். மேலும் என் நப்ஸை நோக்கி ஒவ்வொரு நாளும், ''நப்ஸே! நீ என்னை விடுதலை செய்துவிடு. நான் உன்னை விடுதலை செய்து விடுகிறேன் என்று கூறிக் கொண்டுள்ளேன்'' என்று சொன்னார்கள். பின்னர் அவர்கள் மக்களை நோக்கி, ''மக்களே! நீங்களும் இறைவன் மீது பொறுப்பைச் சாட்டி விட்டு அமைதியாக இருங்கள். அவன் தந்ததைக் கொண்டு மனநிறைவுறுங்கள்'' என்று கூறினர்.

மற்றொரு நாள் ஒரு மனிதன் அவர்களிடம் வந்து, தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டியபொழுது, ''இறையருள் மீது நம்பிக்கை (தவக்குல்)வை. இறைவன் உன் வசமாகிவிடுவான். அவன் பக்கம் திரும்பு. உன் தேவையை அவனிடம் கேள். ஏனெனில் எவரும் உனக்கு நன்மையோ தீமையோ செய்ய இயலாது. உனக்கு ஏற்படும் எல்லாத் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் நிவாரணம், அவற்றை இறைவனிடம் எடுத்துரைத்துவிட்டுப் பிறர் கண்களிலிருந்தும் அவற்றை மறைப்பதில் தான் உள்ளது'' என்று கூறினர்.

பிறிதொரு நாள் ஒருவர் அவர்களை அணுகி, ''நான் தங்களைப் பற்றி மக்களிடம் எடுத்துரைத்து வருகிறேன். யூதர்களோ தங்களைத் தம் இனத்தவர் என்று கூறுகின்றார்கள். கிறிஸ்தவர்களோ தங்களைத் தம் இனத்து மாதவர் என்று புகழ்ந்துரைக்கிறார்கள். முஸ்லிம்களோ தங்களை தங்களைச் சேர்ந்த மகான் என்று வியந்துரைக்கிறார்கள்'' என்று கூறினார்.

அதுகேட்ட அவர்கள், ''பக்தாதிலுள்ள மக்கள் தாம் என்னை இவ்வாறு கூறுகிறார்கள். ஆனால் நான் பைத்துல் முகத்தஸில் இருந்த பொழுது யூதர்கள் என்னை இழித்துரைத்தார்கள். கிறிஸ்தவர்களோ என்னை ஒரு முஸ்லிம் என்று இயம்பினார்கள்'' என்று கூறினார்கள்.

அவ்விதமாயின் ''நாங்கள் தங்களை எவ்வாறு கருதுவது?'' என்று அவர் வினவினார்.

அதற்கு அவர்கள் ''என்னை அறியாதவர்கள் என்னை மதித்து மரியாதை செய்கிறார்கள். என்னை அறியவோ, என்னை மதிக்கவோ செய்யாதவர்கள் என்னை இழித்துரைத்துத் தூற்றித் திரிகிறார்கள். இதனைக் கூறிய என்னை நீரே எடைபோட்டு அறிந்து கொள்ளும்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

வேறொரு நாள் அவர்கள் இமாம் அலீ இப்னு மூஸா அல்ரஸாவின் இல்லத்தில் இருக்குங்கால் அதைச் சூழ நின்று கலகம் செய்த ஷீயாக்கள், இவர்களை ஆங்குக் கண்டதும், இவர்களைப் பிடித்து நையப்புடைத் தார்கள். அதன் காரணமாகப் பெரிதும் நோய்வாய்ப்பட்ட இவர்கள்

இறப்புப் படுக்கையில் கிடந்தனர். அப்பொழுது இவர்களின் மாணவர் ஸர்ரீ அஸ்ஸகதீ (ரஹ்) அவர்கள், இவர்களை அணுகித் தங்களின் இறுதி உரையை (வஸியத்தை)க் கூறுமாறு வேண்ட, ''நான் இறந்ததும், நான் அணிந்திருக்கும் சட்டையைக் கழற்றி அறம் செய்துவிடுங்கள். நான் என் அன்னையின கருப்பையிலிருந்து எவ்வாறு இவ்வுலகிற்கு வந்தேனோ அவ்வாறே இவ்வுலகை விட்டும் அகல விரும்புகிறேன்'' என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் இறப்பெய்தியதும், அவர்கள் தங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் எனவே அவர்களின் உடலைத் தங்களின் அடக்க இடத்திலேயே நல்லடக்கம் செய்ய வேண்டும் என்றும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் சர்ச்சையிட்டார்கள். சர்ச்சை, சண்டையாக முற்றுமுன் மஃரூபுல் கர்கி (ரஹ்) அவர்களின் பணியாளர் ஆங்கு வந்து எவர்களால் தம் பிரேதப் பெட்டியைத் தூக்க இயலுகின்றதோ அவர்களுக்கே தாம் உரியவர் என்று அவர்கள் இறப்பதற்கு முன் கூறியதாக மொழிந்தார். அவர்கள் கூறிச் சென்றதற்கேற்ப, யூதர்களும் கிறிஸ்தவர்களும் தனித்தனியே அதனைத் தூக்க முயன்ற பொழுது, அவர்களால் அது இயலாது போய்விட்டது. பின்னர் முஸ்லிம்கள் அதனைத் தூக்க முயன்றபொழுது அது இலகுவாக அவர்களின் கையில் வந்தது. பின்னர் அவர்களுக்கு 'ஜனாஸா' தொழுகை தொழுவித்து அவர்கள் இறந்த இடத்திலேயே அவர்களை நல்லடக்கம் செய்தார்கள் முஸ்லிம்கள்.

அவர்கள் இறந்ததன் பின் அவர்களின் மாணவர் ஸர்ரீ அஸ் ஸகதி, அவர்களைக் கனவில் கண்டனர். அப்பொழுது அவர்கள் அர்ஷின் கீழே திக்பிரமை பிடித்தவர் போன்று கண்களை அகல விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அக்காலை 'யார் இவர்?' என்று இறைவன் வானவர்களை நோக்கி வினவ, ''இறைவ எம்பெரும! நீயே எல்லாம் அறிந்தவன்'' என்று பதிலிறுத்தார்கள் வானவர்கள். அதுகேட்ட இறைவன், ''இவர் தாம் மஃரூப் ஆவார். என்மீது அடங்காக் காதலுற்று திக்பிரமை பிடித்தவர் போன்றுள்ளார். என்னைத் தரிசித்த பின் தான் அவருடைய மயக்கமே நீங்கும். அவர் தெளிவு பெறுவார்'' என்று அருள் மொழி பகர்ந்தான். இவ்வாறு அவர்கள் கனவு கண்டு விழித்தார்கள்.

முகம்மது பின் ஹுஸீன் என்பவர் மஃரூபுல் கர்கி (ரஹ்) அவர்களைக் கனவில் கண்டு, ''அல்லாஹ் தங்களை என்ன செய்தான்?'' என்று வினவிய பொழுது, ''அல்லாஹ் என் பவம் பொறுத்து என்னை ஆட்கொண்டான்'' என்று கூறினர். ''தங்களின் பக்தியையும் பற்றற்ற தன்மையையும் காரணமாகக் கொண்டா'' என்று வினவியபொழுது, ''இல்லை; இல்லை. இப்னு ஸம்மாக் கூஃபாவில் கூறிய வார்த்தைகளின்படி செயலாற்றிய

பொருளடக்கம்



தனாலும் நான் வறுமையை மேற்கொண்டதனாலும்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அலீ இப்னு முவப்பிஃ (ரஹ்) அவர்கள் கனவில் ஒருவரை கதீரத்துல் குதுஸி என்னும் தூய்மை மிகு தலத்தில் கண் இமைக்காமல் கீழே பார்த்த வண்ணம் மயக்கமுற்ற நிலையில் நிற்பதைக் கண்டு யார் இவர்? என்று சுவனத்தின் அதிபதியான ரிள்வானை நோக்கி வினவிய பொழுது, ''இவர் தாம் நரக பயத்தாலும், சுவன ஆசையாலும் அன்றி அல்லாஹ்வுக்காகவே அவனை வணங்கி வந்த மஃரூபுல் கர்கீ யாவார். இவருக்கு இறைவன் தன்னுடைய திருக்காட்சியை வழங்கி, இவரை மேன்மையுறச் செய்துள்ளான்'' என்று கூறினார்.

மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்களின் அடக்க இடம், பக்தாதில் திஜ்லா நதியின் மேற்குக் கரையில் உள்ளது. அவர்கள் ஒருநாள் தம் மாணவர் ஸர்ரி அஸ் ஸகதீயை நோக்கி, ''உமக்கு இறை உதவி தேவைப்படின், என் பொருட்டுத் தருமாறு இறைவனிடம் கேளும். இறைவன் தந்தருளுவான்'' என்று கூறியதற்கேற்ப, எவரும் அவர்களின் பொருட்டு கேட்கும் இறைஞ்சுதல்கள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன. மழை வேண்டி மக்கள் அங்குச் சென்று பிரார்த்தனை புரிகின்றார்கள். அங்குச் செய்யப்படும் வேண்டுதல்களுக்குக் கைமேல் பலன் கிடைக்கிறது என்று குஷைரீ கூறுகின்றார்.

அவர்கள் பிறந்த ஆண்டு தெரியவில்லை. இறந்த ஆண்டு ஹிஜ்ரி 200 ஆகும்.

❁

# 16. பிஷ்ர் இப்னுல் ஹாரித் (ரஹ்)

மர்வ் நகரத்திலே பிறந்த ஒருவர் பக்தாது மாநகரம் வந்து குடிப்பதிலும் கும்மாளமடிப்பதிலும் தம் நேரத்தைக் கழித்து வந்தார். ஒருநாள் அவர் குடித்துக் கும்மாளமடித்து விட்டுத் தெரு வழியே தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தார். ''அருளாளனும், அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்'' என்று பொறிக்கப்பட்ட தாள் ஒன்று ஆங்குக் கீழே கிடப்பதைக் கண்டதும் அதை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு, தம் இல்லம் கொணர்ந்து அதன் மீது நறுமணம் பூசித் தம் பெட்டியிலே பத்திரமாகப் பேணுதலுடன் வைத்தார்.

இஃது நிகழ்ந்தது பக்தாது மாநகரின் ஒரு பகுதியில். அதன் மற்றொரு மருங்கில் வாழ்ந்து வந்த நல்லார் ஒருவர் அவ்விரவு அயர்ந்து உறங்குங்கால் கனவொன்று கண்டார். அக்கனவில் அசரீரி ஒன்று பின்வருமாறு முழங்கியது: ''நீர் பிஷ்ரிடம் சென்று இச்செய்தியைக் கூறும். நீர் என் பெயரை நறுமணமாக்கினீர். நான் உன் பெயரை நறுமண மாக்குவேன். நீர் என் பெயரை உயர்த்தி வைத்தீர். நான் உம் பெயரை உயர்த்தி வைப்பேன். நீர் என் பெயரைப் புனிதமுறச் செய்தீர். நான் உம் பெயரைப் புனிதமுறச் செய்வேன். என் மாண்பின்மீது ஆணையாக, நான் உம் பெயரை இம்மையிலும் மறுமையிலும் நறுமணம் கமழச் செய்வேன்.''

இக்கனவைக் கண்டதும் திடுக்குற்று விழித்தெழுந்த அந்த நல்லாரின் மூளை சக்கரவாகனமாகச் சுற்றிச் சுழலத் துவங்கியது. பிஷ்ரா? அவர் ஒரு குடிகாரரல்லவா? அவரைப் பற்றியா இக்கனவில் அறிவுறுத்தப் பட்டிருக்கும். ஒருவேளை இது ஷைத்தானின் திருவிளையாடலாக இருக்குமோ? இருக்கலாம்.''

இவ்வாறு எண்ணிய அவர் எழுந்து சென்று 'உளூ'ச் செய்து இரண்டு 'ரகஅத்'கள் தொழுது, ''இறைவனே! எடுத்தெறியப்பட்ட ஷைத்தானை விட்டும் உன்னிடம் காவல் தேடுகின்றேன்'' என்று இறைஞ்சினார்.

அதன்பின் படுத்துறங்கிய அவரின் கனவில் மீண்டும் அதே கனவு திருத்தோற்றம் வழங்கியது. அதே அசரீரி முழங்கியது.

திடுக்குற்று விழித்தெழுந்த அவர், ''என்ன இது விநோதமாக உள்ளது? பிஷ்ர் என்ற குடிகாரரைப் பற்றியா இக்கனவில் கூறப்பட்டது. அவருக்கும் மதுவுக்கும் உள்ள தொடர்பு தான் ஊரறிந்த செய்தி. அவருக்கும் இறைவனுக்கும் என்ன தொடர்போ தெரியவில்லையே. சீ! அது இறைவனிடமிருந்து வந்த அசரீரியாக ஒருபோதும் இருக்காது. ஷைத்தான் தான் இவ்வாறு நம்முடன் விளையாடுகின்றான். அடே ஷைத்தானே! நீ என்னுடன் விளையாடாதே. உன்னுடைய மாய வலையில் நான் ஒருபோதும் விழமாட்டேன்'' என்று ஆங்காரத்துடன் கூறிவிட்டு, மீண்டும் உளுச் செய்து தொழுது இறைகாவல் தேடிவிட்டுப் படுத்துறங்கினார்.

உறக்கம் அவரை ஆட்கொண்டது தான் தாமதம். அதே கனவு மீண்டும் தோற்றம் வழங்கியது. ''என் தூது பிஷ்ரிடம் தான். அவரிடம் சென்று அதைக் கூறிவிடும்'' என்று அசரீரி முழங்கவும் செய்தது. பதறி எழுந்த அவர், ''ஐயோ! தவறாக வல்லவோ இக்கனவை எண்ணிக் கொண்டேன் போலுள்ளது. இது உண்மைக் கனவாக, இறைவனிட மிருந்து வரும் தெய்வீக அறிவிப்பாகத்தான் இருக்கும் போலுள்ளது. இல்லையெனில் இறைவனிடம் இருகரம் ஏந்தி ஷைத்தானை விட்டும் காவல் தேடிய பின்பும் இது தோற்றம் வழங்குமா, என்ன? இறைவனே நான் தவறாக ஏதேதோ உளறி இருப்பின், அது அறியாமையினாலேயன்றி, ஆணவத்தாலல்ல. எனவே நான் அறியாது பிழை செய்திருப்பின் அதனைப் பொறுத்தருள்வாயாக!'' என்று இறைஞ்சினார்.

அதன்பின் எப்பொழுது பொழுது புலரும் என்று ஏங்கிக் கொண்டிருந்த அவர், பொழுது புலர்ந்ததும் பிஷ்ரைத் தேடிப் புறப்பட்டார். பிஷ்ரோ இரவு முழுவதும் குடித்துக் கும்மாள மடித்து விட்டு குடிபோதையில் மயங்கிக் கிடந்தார். அவர் இருந்த இடத்தை அடைந்த அந்நல்லார், ''பிஷ்ர் இங்கு இருக்கின்றாரா?'' என்று வினவ, வாயலில் நின்றுகொண்டிருந்த சிலர், ''ஆம்; அவர் உள்ளே உள்ளார். குடி போதையில் மூழ்கிக் களைத்துப் போயுள்ளார்'' என்று கூறினர். ''நல்லது; அவரிடம் சென்று நான் அவருக்கு ஒரு செய்தி கொணர்ந்திருப்பதாகக் கூறுங்கள்'' என்று அந்நல்லார் அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே சென்று பிஷ்ரிடம் கூற, ''எவரிடமிருந்து செய்தி கொணர்ந் துள்ளார் என்று கேட்டு வாருங்கள்'' என்று கூறினார் பிஷ்ர். ''இறைவனிட மிருந்து' என்று அந்நல்லார் மறுமொழி கூறி அனுப்பினார். அது கேட்டதும் பிஷ்ரின் உள்ளமும் உடலும் ஒருங்கு சேர்ந்து அதிர்ந்தன.

அவரின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடியது. ''இறைவனிடமிருந்தா? எனக்கா? என்னைக் கண்டித்தா?'' என்று அலறிய அவர், ''சற்றுப் பொறுங்கள். என் நண்பர்களிடம் கூறிவிட்டு வருகிறேன்'' என்று மொழிந்து விட்டு, ''நண்பர்களே'' என்று தம் நண்பர்களைக் கூவி அழைத்தார். அது கேட்டதும் அவரின் குடிகார நண்பர்கள் ஓடோடி வந்தார்கள். ''நண்பர்களே!எனக்கு அழைப்பு வந்துவிட்டது. நான் போகிறேன். இனிமேல் நீங்கள் என்னை இங்குக் காணமாட்டீர்கள்'' என்று கூறிவிட்டு, விறுவிறு என்று அவ்விடத்தை விட்டும் வெளியேறினார்.

இதிலிருந்து அவருடைய வாழ்க்கையிலே ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டது.*

குடிகாரர் பிஷ்ர் இறைநேசர் பிஷ்ராக மாறினார். குடிப்பதும் கும்மாள மடிப்பதுமே தம் வாழ்வின் அலுவலாகக் கொண்டிருந்த அவர் தவ வாழ்வு வாழ்ந்து வந்த தம் மாமா அலீ இப்னு கஷ்ரம் (ரஹ்) அவர்களின் இல்லம் சென்று அவர்களின் கரம் பிடித்து 'பைஅத்' பெற்றார். அதன்பின் அவர்களின் அறிவுரையின்படி, ''எவர் இம்மையிலும் மறுமையிலும்

---

★ அவர்களின் வாழ்வில் திருப்பம் ஏற்பட்டதற்கு வேறொரு காரணம் கூறப்படுகிறது. ஒருநாள் அவர்கள் தம் இல்லத்தில் தம் நண்பர்களுடன் குடித்துக் கும்மாளமடித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வழியே சென்ற ஒரு பெரியார் அவ்வீட்டின் கதவைத் தட்டினார். அடிமைப்பெண் வந்து கதவைத் திறந்தாள். அப்பொழுது அவர் அவளை நோக்கி ''இந்த வீட்டில் குடியிருப்பவர் அடிமையா? சுதந்திர புருடரா?'' என்று வினவினார். 'சுதந்திர புருடர்' என்று அவள் பதிலுரைத்தாள். அதுகேட்ட அவர் ''அதனால் தான் இத்துணைக் கேளிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். அடிமையாய் இருந்தால், அடிமை போன்று நடந்து கொள்வார். வீண் விளையாட்டுகளில் ஈடுபடாது தம் கடமையான வணக்கங்களில் ஈடுபட்டிருப்பார்'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

இதனை உள்ளே இருந்து கேட்டுக் கொண்டிருந்த பிஷ்ர் உணர்ச்சி மீக்குற்று காலில் செருப்பைக்கூட அணிந்து கொள்ளாது வெளியே ஓடோடி வந்தார். அதற்குள் அப்பெரியார் போய்விட்டார். அடிமைப் பெண்ணிடம் அவரைப் பற்றியும், அவர் கூறியதைப் பற்றியும் விசாரித்தார். அவள் அனைத்தையும் கூறினாள். அவரைத் தேடி அவர் சென்ற திசை நோக்கி ஓடிய அவர் அவரைக் கண்டு ''தாங்கள் தாமே என் அடிமைப் பெண்ணிடம் யாதோ கூறியவர்?'' என்றார்.

''ஆம்'' என்றார் அவர். ''அதனைத் தாங்கள் மீண்டும் ஒரு தடவை என்னிடம் கூறுங்கள்'' எனறு அவர் வேண்ட அவ்வாறே அப்பெரியாரும் கூறினார். அதுகேட்ட பிஷ்ர் கீழே விழுந்து தரையிலே உருண்டு புரண்டு ''நான் அடிமை! நான் அடிமை!! நான் அடிமை!!!'' என்று கூறியவண்ணம் தலைவிரிகோலமாக அல்லாஹ்வின் பாதையில் அடியெடுத்து நடக்கத் துவங்கிவிட்டார்.

உன்னதப் பதவியை எய்த விரும்புகிறாரோ அவர் மூன்றைத் தவிர்ந்து கொள்ளவும். 1. எவரிடமும் எதையும் கேட்க வேண்டாம். 2. எவரைப் பற்றியும் இழித்துரைக்க வேண்டாம். 3. எவர் பாலும் விருந்துண்ணச் செல்ல வேண்டாம்'' என்று அவர்கள் கூறினர். இறைவனைத் தொழுவதும், அவனை நினைந்து அழுவதுமே தம் வாழ்வின் அலுவலாகக் கொள்ளத் துவங்கினார். தம் பொருள்களை எல்லாம் வாரி, வாரி ஏழை, எளியவர்களுக்கு வழங்கித் தாமும் ஓர் ஏழையாகி விட்டார். இக்காலை அவரின் செருப்பின் வார் அருந்துவிடவே அதனைத் தைப்பதற்காகச் செருப்புத் தைப்பவனிடம் எடுத்துச் சென்ற பொழுது, ''உலகப் பற்று உமக்கு இவ்வளவு இருக்கின்றதா?'' என்று வினவினான் அவன். அது அவரின் உள்ளத்தில் முள்ளெனத் தைக்கவே, அவர் தம் கையிலிருந்த செருப்பைத் தூக்கி எறிந்து, காலில் இருந்த செருப்பை உதறித் தள்ளி, ''இனி எக்காலத்திலும் செருப்பு அணிவதில்லை'' என்று சூளுரைத்தார். இக்கணத்திலிருந்து அவர் செருப்பு அணியவில்லை. இதன் காரணமாக, ''காலில் செருப்பின்றி நடப்பவர்'' என்று பொருள்படும் ''அல்ஹாஃபி'' என்ற பட்டப் பெயரும் அவருக்கு ஏற்பட்டது.

ஒருநாள் மக்கள் அவரை நோக்கி, ''தாங்கள் ஏன் காலில் செருப்பு அணிவதில்லை?'' என்று வினவிய பொழுது, ''துன் மார்க்கத்தில் சென்று கொண்டிருந்த நான், எக்கணத்திலிருந்து நேரிய வழியில் நடக்கத் துவங்கினேனோ அக்கணத்திலிருந்து செருப்பு அணிய நாணமுற்றேன். மேலும் இறைவன் தன் திருமறையில், ''நான் பூமியை உங்களுக்கு ஒரு கம்பளமாக ஆக்கியுள்ளேன்'' என்று கூறியுள்ளான். அவ்விதமிருக்க இறைவன் விரித்திருக்கும் கம்பளத்தின்மீது செருப்புடன் நடமாடுவது என் போன்ற அவனின் அடிமைகளுக்குத் தகுமா?'' என்று தாழ்மையுடன் அவர்கள் பதிலிறுத்தார்கள்.

இதே கேள்வியைக் கேட்ட மற்றொருவரிடம் ''பூமி முழுவதும் இறைவன் விரித்த கம்பளமாக உள்ளது. அவன் விரித்துள்ள கம்பளத் திற்கும் என் பாதங்களுக்கும் இடையே யாதொன்றும் இருக்க நான் விரும்பவில்லை'' என்று கூறினர். இதற்கு ஹுஜ்வீரி (ரஹ்) அவர்கள் விளக்கம் கூறுங்கால், இறைவனை ஒருமித்த மனோநிலையுடன் தியானிக்கும் பொழுது, காலணி போன்ற ஒருதிரை தமக்கும் இறைவனுக்கும் இடையே குறுக்கிடுவதை அவர்கள் விரும்பவில்லை என்று அவர்கள் சூசகமாகக் கூறியதாக இயம்பினர்.

இதே கேள்வியைக் கேட்ட வேறொருவரிடம் ''நான் நேர்வழி பெற்ற நேரத்தில், நான் செருப்பு அணியாதிருந்தேன். அப்பொழுது இறையச்சம் என்னை ஆட்கொண்டது. அந்த இறையச்சத்துடனே நான்

இறக்கும் வரை இருக்க விரும்புகிறேன்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

உலகமெங்கணும், கல்லிலும் மலையிலும், கானகத்தின் நடுவிலும் புல்லிலும் புதரிலும், பூமி முழுவதிலும் அவர்கள் அல்லாஹ்வின் பேரொளியைக் கண்டதனால் அவர்கள் பூமியின் மீது எச்சில்கூடத் துப்புவதில்லை.

இத்தகு மாண்பாளரான அவர்களின் முழுப்பெயர் அபூநஸ்ர் பிஷ்ர் இப்னு அல்ஹாரித் என்பதாகும். அவர்களின் மூதாதையான அப்துல்லா, அலீ (ரலி) அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவினார் என்று கூறப்படுகிறது. அவர்களின் திருப்பெயர், காலில் செருப்பின்றி நடந்து வந்ததனால் அவர்களுக்கு ஏற்பட்ட அல்ஹாஃபீ என்ற பட்டப்பெயர், அவர்களுக்கு இழிபெயராக அமையாமல் அவர்கள் மேற்கொண்ட துறவு நிலையில் மாண்பினை எடுத்துரைக்கும் சிறப்புப் பெயராக அமைந்தது. அதனை அவர்களும் உணர்ந்தார்கள். எனினும் தமக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டு விடக் கூடாதே என்றும், அவர்கள் அஞ்சினார்கள். எனவே அவர்களின் இறைஞ்சுதல் ''இறைவனே எனக்குக் கெட்ட பெயரைத் தந்து இவ்வுலகிலும் அவ்வுலகிலும் என்னை இழிவுபடுத்தி விடாதே'' என்பதாக இருந்தது.

பிஷ்ர் (ரஹ்) அவர்களின் அபார வணக்கமும் அயரா இறைஞ்சுதலும் வியக்கத்தக்கனவாய் அமைந்திருந்தன. அவர்கள் நாற்பது ஹஜ்ஜுச் செய்யவும் நாற்பது முறை மார்க்கப் போர்களில் ஈடுபடவும் செய்தார்கள். அவர்களே போன்று அவர்களின் மூன்று சகோதரிகளும் இறைநேசச் செல்விகளாக விளங்கி வந்தனர். ஒருநாள் அவர்களின் சகோதரி ஒருவரின் உள்ளத்தில் தம் உடன் பிறந்தார் அன்று தம் இல்லம் வருவார் என்ற உதிப்பு ஏற்பட்டது. எனவே அவர் தம் இல்லத்தைப் பெருக்கித் தூய்மைப்படுத்தி அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தார்.

வந்த பிஷ்ர் (ரஹ்) அவர்களோ, இறை காதலில் மூழ்கித் தம்மையே மறந்த நிலையில் வந்தார்கள். வந்ததுதான் தாமதம் ''தங்கையே! நான் மேல்மாடிக்குச் செல்கின்றேன்'' என்று கூறிவிட்டு மாடிப் படிகளின் மீது ஏறினார்கள். மாடிப் படிகளில் சிலவற்றின் மீதுதான் அவர்கள் ஏறி இருப்பார்கள். அங்கேயே, மாடிப்படியின் மீதே அவர்கள் அன்றிரவு முழுவதும் நின்று கொண்டிருந்தார்கள். வைகறையானதும் அவர்கள் தொழுவதற்காகக் கீழே இறங்கி வந்தார்கள். அதைக் கண்ட அவர்களின் தங்கை, ''ஏன் அண்ணே! இரவு முழுவதும் மாடிப்படியின் மீதே நின்று கொண்டிருந்தீர்கள்?'' என்று வினவினார். அதற்கு பிஷ்ர் (ரஹ்) அவர்கள், ''நான் மாடிப்படியின் மீது ஏறும் பொழுது, ''பக்தாதில் நான் மட்டும் பிஷ்ர்

அல்ல;பிஷ்ர் என்ற பெயருடன் ஒரு யூதர் உள்ளார்; ஒரு கிறிஸ்தவர் உள்ளார்; ஒரு நெருப்பு வணங்குபவர் உள்ளார். நானோ ஒரு முஸ்லிம். ஆனால் நான் ஆன்மீக வெளிச்சம் பெற்றிருக்கும் பொழுது, அவர்கள் ஆன்மீக இருளில் மூழ்கி இருக்கக் காரணம் என்னவென்று எண்ணினேன். இந்த எண்ணம் எனக்கு மயக்கத்தை வழங்கியது. அந்த மயக்கத்தில் நான் தன்னுணர்வற்று அங்கேயே நின்றுவிட்டேன்'' என்று பதிலிறுத்தார்கள்.

அவர்களின் சகோதரிகளில் மூத்தவரான முத்கா என்பவர் இறந்ததும், அவர்கள் பெரிதும் வருந்திக் கண்ணீர் விட்டு அழுதார்கள். அப்பொழுது ஒருவர் அவர்களை நோக்கி, ''உலகைத் துறந்த தாங்கள் இவ்வாறு செய்யலாமா?'' என்று வினவிய பொழுது, ''தன் படைப்புகளில் ஒன்று தனக்குப் பணிபுரிவதில் தவறிழைத்துவிடின், இறைவன் அதன் நண்பர்களில் ஒருவரை அவரிடமிருந்து பறித்து விடுகிறான்'' என்று நான் ஒரு நூலில் படித்துள்ளேன். உண்மையில் முத்கா என் நண்பர்களில் ஒருவர்.எனவே அவரை என்னிடமிருந்து பறித்துவிடும் வண்ணம் நான் இறைவனுக்கு என்ன குற்றமிழைத்தேனோ என்று எண்ணி அழுகின்றேனேயன்றி, என் தங்கை இறந்ததற்காக அழவில்லை'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

வறுமையும் துறவும் ஒருங்கு சேர்ந்து அவர்களின் வாழ்வை மாசுற - இல்லை, இல்லை - மாண்புறச் செய்து வந்தன.

'அஃப்ஸலுல் மகாமாத் இஃத்திகாத்துல் ஸப்ர் அலல் ஃபக்ர் இலல் கப்ர்' (மனிதனின் மாண்பார்ந்த தகுதி யாதெனில், வறுமையைத் தொடர்ந்து நுகர்வதில் அவன் கொள்ளும் திடமான உறுதியேயாகும்) என்று கூறினார்கள் அவர்கள்.

நாற்பது ஆண்டுகளாக அவர்களுக்குப் பொரித்த இறைச்சி வாங்கி உண்ண வேண்டுமென்று ஆசையாக இருந்தது. எனினும் அதனை வாங்கி உண்ண அவர்களின் கையில் காசில்லை. அத்துணை வறுமை நிலை! பல ஆண்டுகளாக அவர்களுக்கு மொச்சைப் பயிறு வாங்கித் தின்ன வேண்டுமென்று ஆவலாக இருந்தது. எனினும் அவர்கள் அதனை வாங்கித் தின்னாது வாளா இருந்தனர். அத்துணைத் துறவு நிலை! அவர்களுக்கு ஐம்பது ஆண்டுகளாக ஹாரியா என்னும் தின்பண்டம் வாங்கி உண்ண வேண்டுமென்று ஆசையாக இருந்தது. ஒருநாள் அவர்களுக்கு நேரிய வழியில் ஒரு திர்ஹம் கிடைத்த பொழுது அவர்கள் நோன்பு நோற்றிருந்ததையும் மறந்து அதனை வாங்கி உண்ணமுற்பட்ட காலை, ''நோன்பு நோற்றவருக்கு மறதி ஏற்படக் காரணம் என்ன?'' என்று அசரீரியாக ஒரு சப்தம் வரவே, அவர்கள் திடுக்குற்று அழுதவர்களாய் அதனை வாங்கி உண்ணாது திரும்பிவிட்டனர். பின்னர் பல்லாண்டுகளாக

அதனை வாங்கி உண்ணவேண்டுமென்ற ஆசை ஏற்படவே, அதனை அவர்கள் வாங்கச் சென்ற பொழுது, ''இன்னும் அதனை வாங்கி உண்ண வேண்டுமென்ற ஆசை பாக்கியுள்ளதோ'' என்று மீண்டும் அசரீரி வர, அவர்கள் மெய்பதறி அழுது பிரலாபித்து, ''இறைவனே! இனி உன்மீது ஆணையாக, நான் அதனை ஒருபோதும் உண்பதில்லை'' என்று அவர்கள் சூளுரைத்தார்கள்.

அவர்களின் மருகர் உமர் என்பார், தம் மாமாவைப் பற்றிய ஒரு செய்தியை இதோ கூறுகின்றார். நாமும் கேட்போம்.

''மாமா அவர்கள் என் அன்னையிடம் 'சகோதரியே! பசியின் கடுமையால் என் வயிறும் விலா எலும்புகளும் வீழ்ந்துவிடும் போல இருக்கின்றனவே' என்று கூறுவர். அதற்கு என் அன்னை 'அண்ணே! தாங்கள் விரும்பின் கையளவு மாவைக் கலக்கித் தருகிறேன். அருந்துங்கள். உடல் தென்புறும்' என்று கூறுவார்.

''அதற்கு மாமா அவர்கள், 'அந்த மாவு எங்கிருந்து வந்தது என்று இறைவன் என்னிடம் கேட்டு விடுவானோ என்று எனக்கு அச்சமாக உள்ளதே' என்று கூறுவர்.

அதுகேட்டு அன்னை அழுவார். மாமாவும் அழுவர். நானும் அழுவேன்.

மாமாவுக்கு பசியின் கொடுமையால் மூச்சு விடக் கூடச் சிரமம் ஏற்பட்ட பொழுது, அதனை என் அன்னையால் பார்த்துக் கொண்டிருக்க இயலவில்லை.

'அண்ணே! என் தாய் வயிற்றில் நான் தங்களின் சகோதரியாகப் பிறக்காதிருப்பின் அஃது எத்துணை நன்மையாக இருந்திருக்கும். தங்களின் நிலையைப் பார்த்து என் இதயம் வெடித்து விடும் போலிருக்கிறதே' என்று கூறுவார் அவர்.

அதற்கு மாமா, 'நானும் அதனையே கூறுகிறேன். என் அன்னை என்னைக் கருவுற்றிராவிடில், எத்துணை நன்மையாக இருந்திருக்கும்' என்று பதில் மொழிவார்கள். என் அன்னை அதுகேட்டு அழுவார். அவர்களின் நிலையை எண்ணி, எண்ணி அல்லும் பகலும் கண்ணீர் சிந்துவார்.

ஒரு தடவை அவர்கள் தாகத்துடன் இருக்குங்கால் ஓர் ஆற்றில் ஓலித்தோடிய தண்ணீரை அள்ளி அருந்த மறுத்து விட்டார்கள். காரணம் வினவப்பட்ட பொழுது, ''அது அநியாயக்காரர்களால் வெட்டப் பட்டது'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

ஓரிரவு கடுமையான குளிராக இருந்தது. அப்பொழுது அவர்கள் எவ்விதப் போர்வையுமின்றி தம் கைகளையே போர்வையாகப் பயன்படுத்தி முழங்காலைக் கட்டிக் கொண்டிருப்பதைக் கண்ட ஒருவர், ''என்ன! தாங்கள் எவ்விதப் போர்வையுமின்றி வெறுமனே வீற்றிருக்கின்றீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''ஆம்; நான் ஏழைகளை நினைத்துக் கொண்டேன். அவர்கள் உடையின்றி இக்குளிரில் படும் துயர் என் உள்ளத்தை வருத்தியது. எனினும் நான் என் செய்வது? அவர்களுக்கு உதவ என்னிடம் யாதொன்றும் இல்லை. எனவே அவர்களின் துயரில் பங்கு கொள்ள விரும்பி நானும் அவர்களே போன்று வெறுமனே வீற்றுக் குளிரில் நடுங்கிக் கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

அவர்களிடம் ஏழு பெட்டிகள் நிறைய ஹதீது நூல்கள் இருந்தன. அவற்றிலுள்ள ஹதீதுகளை அவர்கள் எவருக்கும் போதிக்கவில்லை. அதற்கு மாறாக அவற்றை எல்லாம் குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள். அதுகண்டு வியப்புற்ற மக்கள், ''ஏன் இவ்வாறு செய்தீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''எனக்கு ஹதீதுகளைப் போதித்துப் புகழ் பெற வேண்டுமென்ற ஆசை மிகைத்தது. அவ்வாசையை அழித்தொழிக்கவே அவ்வாறு செய்தேன். அவ்வாசை என்னிடம் இல்லாதிருப்பின் நான் அவற்றைப் பிறருக்குப் போதித்திருப்பேன்'' என்று அவர்கள் பதிலிறுத் தார்கள்.

இதன்பின் ஒருநாள் பிஷ்ர் (ரஹ்) அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார்கள். எவ்வாறு, உள்ளதைக் கொண்டு மன நிறைவுடன் வாழ்வது என்பது பற்றிப் பேச்சுத் தொடர்ந்து கொண் டிருந்தது. அப்பொழுது கூட்டத்தின் நடுவிலிருந்து ஒருவர் எழுந்து நின்று, ''அபூ நஸ்ர் ஓர் ஐயம் கேட்க விரும்புகின்றேன். அன்பு கூர்ந்து மன்னிக்க வேண்டும். தாங்கள் மேலான பதவியை அடைவான் வேண்டி எவரிட மிருந்தும் யாதொன்றும் பெறாதுள்ளீர்கள். தங்களின் தன்னல மறுப்பு உளப்பூர்வமானதாயிருப்பின் அது போற்றத் தகுந்ததேயாகும். ஆனால் தாங்கள் பிறருக்காக வேண்டி மக்களிடமிருந்து யாதேனும் பெறின், அதனால் மக்களின் கண்களில் தங்களின் மதிப்புக் குறையும். மாறாக, இறைவனின் கண்களில் அதிகப்படும். அதனைப் பெற்று மற்றவர்களின் கண் களுக்குத் தெரியா வண்ணம் அறம் செய்து விடுங்கள். அதன்பின் இறை யருளில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துத் தங்களின் இரணத்தை இறைவனிடமிருந்தே பெற்றுக் கொள்ளுங்கள். இறைவன் தங்களுக்கு எதிர்பாராவண்ணம் இரணம் அளிக்கப் போதுமானவன்'' என்று கூறினார்.

அது கேட்டுக் கூட்டம் முழுவதும் நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு பிஷ்ர் (ரஹ்) அவர்கள் பேசினார்கள்:

''மக்களே! நான் கூறுவதைச் செவி தாழ்த்திக் கேளுங்கள். பொதுவாக, ஏழைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவர்களில் ஒரு வகையினர் எவரிடமும் எதையும் கேட்கமாட்டார்கள். நாம் அவர்களுக்கு என்ன வழங்கிய போதினும் அவற்றை ஏற்றுக் கொள்ள மறுப்பார்கள். இவர்கள் ஆத்மீக ஞானிகளாவர். இவர்கள் இறைவனிடம் எது கேட்பினும், அதனை இறைவன் அவர்களுக்கு வழங்குவான். இவர்களின் இறைஞ்சுதலை இறைவன் நிறைவு செய்வான். இவர்கள் இல்லியூன் என்ற சுவர்க்கத்தில் இருப்பார்கள். இரண்டாவது வகையினர், மற்றவர்களிடமிருந்து யாதொன்றும் கேட்க மாட்டார்கள். ஆனால் அவர்களுக்கு எவரேனும் எதையேனும் வழங்கின், அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். இறைவனின் பேரருளில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கும் இவர்கள் மறுமையில் ஃபிர்தௌஸ் என்னும் சுவனத்தின் உரிமையாளராக இருப்பார்கள். மூன்றாவது வகையினர், உலக மாய்கைகளின் வசப்படாது அவற்றை வெறுத்தொதுக்கி, அமைதி யோடும் பொறுமையோடும் இருப்பார்கள். அவர்கள் தேவைப்படும் பொழுது மட்டும் பிறரிடம் கேட்பார்கள். அவர்கள், ''அஸ்ஹாபுல் யமீன்'' என்ற சுவனவாசிகளைச் சேர்ந்தவராவர்.''

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டே வந்தார்கள். அப்பொழுது முன்னர் வினா விடுத்தவர் மீண்டும் குறுக்கிட்டு, ''போதும்; தங்களின் பதில் எனக்குத் திருப்தி வழங்கி விட்டது. இறைவனும் தங்கள்மீது திருப்தியுறுவானாக!'' என்று கூறினார்.

மற்றொரு நாள் பிஷ்ர் (ரஹ்) அவர்கள் தங்களின் இல்லத்தில் வீற்றிருந்தார்கள். அப்பொழுது சிரியாவிலிருந்து மக்காவுக்கு 'ஹஜ்'ஜுச் செய்யச் செல்லும் குழு ஒன்று அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று, அவர்களைக் காண வந்தது. அவர்கள் பிஷ்ர் (ரஹ்) அவர் களைச் சந்தித்ததும், ''நாங்கள் சிரியாவிலிருந்து மக்காவுக்கு 'ஹஜ்'ஜுச் செய்யச் செல்கிறோம். தாங்களும் எங்களுடன் சேர்ந்து வருகின்றீர்களா?'' என்று வினவினர். அதற்கு பிஷ்ர் (ரஹ்) அவர்கள், ''நல்லது; மூன்று நிபந்தனைகளின்மீது நான் உங்களுடன் வர ஒப்புகிறேன். முதலாவது, நாம் நம்முடன் யாதொன்றும் எடுத்துச் செல்லக்கூடாது. நாமாக எவரிடமும் சென்று யாதொனறும் கேட்கவும் கூடாது. நமக்கு எவரேனும் யாதும் தரின் நாம் அதனை ஏற்றுக் கொள்ளவும் கூடாது'' என்று கூறினர். அதற்கு அவர்கள், ''நாங்கள் முதல் இரண்டு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மூன்றாவது நிபந்தனையை எங்களால் ஏற்றுக் கொள்ள இயலாது. எவரேனும் தாமாகவே வந்து யாதும் நமக்கு வழங்கின் நாம் அதனை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்'' என்று கூறினர். அது கேட்ட பிஷ்ர் (ரஹ்) அவர்கள், ''நீங்கள் இறைவனின்

பேரருளின் மீது நம்பிக்கை வைக்கவில்லை. அதற்கு மாறாக உங்களின் பிரயாணப் பொருளின் மீதே நம்பிக்கை வைத்துள்ளீர்கள். இவ்விதமுள்ள உங்களுடன் நான் எவ்வாறு கூட்டாளியாகச் சேர்ந்து வருவது? சென்று வாருங்கள்'' என்று கூறிவிட்டனர்.

அவர்கள் மிகவும் பேணுதலுள்ளவர்களாக இருந்தனர். ஹலாலான உணவையன்றி, ஹராமான உணவை அவர்கள் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. ஹலாலான உணவைக்கூட அவர்கள் சிறிதளவே உண்டு, இறைவனை வணங்கி, அழுது, அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு தடவை அவர்களிடம் ஒருவர் வந்து, 'தாங்கள் எங்கிருந்து உண்கின்றீர்கள்?'' என்று வினவினார்கள். ''எல்லோரும், எங்கிருந்து உண்கின்றீர்களோ, அங்கிருந்தே நான் உண்கின்றேன்.எனினும் உண்டு அஞ்சி உருகி, அழுபவருக்கும், தின்று மறந்து மகிழ்ந்து சிரிப்பவருக்கும் இடையே பெரிதும் வேற்றுமை உள்ளது. கை குறுகியும் உணவு சிறுத்தும் போவதால் யாதும் குறைந்து போகாது'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

எவரேனும் அவர்களுக்கு உணவு கொண்டுபோய்க் கொடுப்பின், அவர்கள் அதனை ஏற்று உண்பதில்லை. ஆனால் மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்களோ அது, 'ஆகுமான' உணவாயிருப்பின் அதனை ஏற்று உண்பார்கள். இதைப்பற்றி மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''என் சகோதரரான பிஷ்ருல் ஹாபி பேணுதல் காரணமாக அவ்விதம் செய்கிறார். நான் என் எசமானனின் விருந்தினனாயுள்ளேன். அவன் தரும்பொழுது உண்கிறேன். தராத பொழுது பொறுமையை மேற்கொள்கிறேன். என் பற்றிய வரையில் எனக்கு எவ்வித அதிகாரமுமில்லை'' என்று பதிலிறுத்தார்கள்.

எவரிடமும் யாதொன்றையும் கேட்காது எவர் கொடுப்பினும் யாதொன்றையும் வாங்காது பேணுதலுடன் வாழ்ந்து வந்த பிஷ்ர் ஹாபி (ரஹ்) அவர்கள், தாம் விரும்பும் எதனையும் ஸரிய்யுஸ் ஸகதி (ரஹ்) அவர்களிடம் மட்டும் கேட்பதுண்டு. இதுபற்றி அவர்கள் கூறும் பொழுது, ''அவர்கள் இறைவணக்கததில் தம்மை மூழ்கடித்துக் கொண்டவர்கள். ஒரு பொருள் தம் கையை விட்டுப் பிரிவதைப் பற்றி மற்றவர்கள் வருத்தமுறும் பொழுது, அவர்களோ மகிழ்ச்சியுறுவார்கள். அத்தகு சீராளர் அவர்கள். எனவே அவர்களிடம் எதையேனும் கேட்டுப் பெறுவதன் மூலம், அவர்களுக்கு நான் மகிழ்ச்சியளிக்கின்றேனேயன்றி வேறில்லை'' என்று கூறினர்.

ஒருநாள் பிஷ்ர் (ரஹ்) அவர்களிடம் ஒருவர் வந்து, ''நான் ஹலாலான முறையில் இரண்டாயிரம் திர்ஹங்கள் ஈட்டி வைத்துள்ளேன். அவற்றைக்

கொண்டு நான் ஹஜ்ஜுச் செய்ய விழைகின்றேன்'' என்று கூறினார். அது கேட்ட பிஷ்ர் (ரஹ்) அவர்கள், ''நீர் உம்மை மகிழ்விப்பதற்காக வேண்டி 'ஹஜ்'ஜுப் பயணத்தை மேற்கொள்ளப் போகின்றீரா அல்லது அல்லாஹ்வை மகிழ்விப்பதற்காக 'ஹஜ்'ஜுப் பயணத்தை மேற்கொள்ளப் போகின்றீரா?'' என்று வினவினர். ''அல்லாஹ்வை மகிழ்விப்பதற்காக'' என்று அவர் பதில் கூறினார். அதற்கு அவர்கள், ''உண்மையில் நீர் அல்லாஹ்வை மகிழ்விக்க விரும்பின் அப்பணத்தை எடுத்துச் சென்று கடன்பட்ட நல்லோரின் கடனைத் தீர்க்கவோ, அநாதைகளுக்கு ஆதரவு வழங்கவோ, ஏழை எளியவர்களுக்குஉதவிபுரியவோ பயன்படுத்து வீராக! இவ்வாறு செய்து நீர் முஸ்லிம்களின் துயர் போக்குவது ஒரு நூறு 'ஹஜ்'ஜுச் செய்வதைவிட மேலானதாகும்'' என்று கூறினர்.

அதுக்கேட்ட அவர், ''அவையெல்லாம் சரிதான். எனினும் 'ஹஜ்'ஜுச் செய்ய வேண்டுமென்ற ஆசை என்னிடம் மிகைத்துள்ளது. எனவே அதனையே நான் முதலில் நிறைவேற்ற விரும்புகிறேன்'' என்று கூறினார்.

அதற்கு பிஷ்ர் (ரஹ்) அவர்கள், ''இதிலிருந்து நீர் தவறான வழியில் அப்பணத்தை ஈட்டியுள்ளீர் என்று நன்கு தெரியவருகிறது. எனவே அதனைத் தவறான வழியில் செலவழிக்கும் வரையில் நீர் ஒய்வு கொள்ளமாட்டீர்'' என்று இயம்பினார்கள். இவ்விதம் கூறியதன் மூலம் பெயருக்காகவும் புகழுக்காகவும், அவற்றின் காரணமாகத் தமக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்காகவும் 'ஹஜ்'ஜுச் செய்வதினும், மறைமுகமாக அறம் செய்வதே மாண்புடைத்து என்பதை அவர்கள் கூறாமல் கூறினர்.

ஓர் இரவு பிஷ்ர் (ரஹ்) அவர்கள் அயர்ந்து உறங்குங்கால் அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்களைக் கனவில் தரிசித்தனர். அப்பொழுது அண்ணலார், அவர்களை நோக்கி, ''பிஷ்ர்! இறைவன் உம்மை ஏனையோரைவிட மாண்புறச் செய்திருப்பதற்கான காரணத்தை அறிவீரா?'' என்று வினவினர். ''தெரியாது நாயகமே!'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அதற்கு அண்ணலார், ''நீர் என்னுடைய வழி முறையைப் பின்பற்றினீர். உம்முடைய சகோதரர்களுக்கு அறிவுரை வழங்கினீர். என்னையும் என் குடும்பத்தினரையும் என் வழித் தோன்றல்களையும் நேசித்தீர். அதன் காரணமாக இறைவன் உம்மை மாண்புறச் செய்தான்'' என்று திருவாய் மலர்ந்தனர்.

மற்றோர் இரவில் அவர்கள் அலீ (ரலி) அவர்களைக் கனவில் தரிசித்துத் தமக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டிய பொழுது, ''அளப் பரும் அருளாளனாகிய அல்லாஹ்வின் பேரருளைப் பெறுவதற்காக, செல்வர்கள் ஏழைகள் மீது இரக்கம் காட்டுவது எத்துணைச் சிறந்த பண்பு!

ஏழைகள் இறைவனின் பேரருளின் மீது அளவற்ற நம்பிக்கை வைத்து செல்வர்களை ஏறிட்டும் பாராதிருப்பது அதைவிட எத்துணைச் சிறந்த பண்பு!'' என்று கூறினர் அப்பெருமகனார்.

பிஷ்ர் (ரஹ்) அவர்களின் மகாத்மியத்தைத் துவக்கத்தில் பெரும் பாலோர் உணரவில்லை. ஆனால் அதனை இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் நன்கு உணர்ந்தார்கள். எனவே அவர்களின் இருப்பிடம் சென்று, அவர்களை அடிக்கடி சந்திக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட இமாம் ஹன்பல் அவர்களின் மாணவர்கள், அவர்களை நோக்கி, ''தாங்களோ ஹதீது, பிக்ஹு முதலான கலைகளில் ஈடு இணையற்ற பேரறிஞராக இருக்கும்பொழுது, எவரோ ஒருவரைப் போய்ச் சந்தித்து அளவளாவி வருவது தங்களுடைய தகுதிக்கு உவந்ததாக எங்களுக்குத் தெரியவில்லையே'' என்று கூறியபொழுது, ''தாங்கள் கூறிய கலைகளிலெல்லாம் நான் அவரைவிட அதிகம் அறிந்தவன்தான். அதில் ஐயமில்லை. ஆனால் அவரோ, இறைவனை என்னைவிட அதிகம் அறிந்துள்ளாரே. இஃது உங்களுக்குத் தெரிய வில்லையே'' என்று பதிலிறுத்தார்கள் அவர்கள். இமாம் ஹன்பல் அவர்கள் பிஷ்ர் (ரஹ்) அவர்களைப் பின் தொடர்ந்து செல்லும் பொழு தெல்லாம் ''என்னுடைய இறைவனைப் பற்றி எனக்குக் கூறுங்கள்,'' என்று அவர்களை வேண்டிக் கொண்டே செல்வார்கள்.

அது மட்டுமல்லாது, இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களிடம் எவரேனும் ஃபிக்ஹ் பற்றிய ஐயங்களைக் கேட்பின் அவற்றைத் தெளிவுபடுத்தும் அவர்கள், ஆன்மீக விஷயங்கள் (ஹகாயிக்) பற்றிய ஐயங்களை வினவின், அவரை பிஷ்ர் (ரஹ்) அவர்களிடமே செல்லுமாறு கூறி விடுவார்கள்.

நாளாக, ஆக மக்கள் அவர்களின் மாண்பினை அறியலானார்கள். பக்தாதில் உல்லாசத்தில் மூழ்கித் திளைத்த பத்து இளவல்கள் இருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரிடமும் ஒரு சிறுவன் ஊழியத்தில் இருந்தான். ஒருநாள் அவர்களில் ஒருவர் தம் ஊழியனை ஓர் அலுவலின் நிமித்தம் வெளியே அனுப்பினார். அவன் வெகுநேரம் கழித்துத் திரும்பி வந்தான். அவனோ புன்னகை பூத்த வண்ணம் உள்ளே நுழைந்தான். அவனுடைய கையில் ஒரு வெள்ளரிப் பழம் இருந்தது. அது கண்டு அனைவரும் அவன் மீது சீறி விழுந்தார்கள். ''நேரம் கழித்து வந்ததுமல்லாமல் சிரித்துக் கொண்டும் வருகின்றாயா?'' என்று அவனைக் கண்டித்தார் அவனுடைய எசமானர்.

அப்பொழுது அவன் தன் எசமானரை நோக்கி, ''ஐயா! நான் ஒரு வியத்தகு பொருளைக் கொண்டு வந்துள்ளேன்'' என்று கூறினான்.

''என்ன அது?'' என்று வியப்போடு வினவினார் எசமானர்.

''அதுதான் இந்த வெள்ளரிப்பழம். பிஷ்ர் (ரஹ்) அவர்கள் இதன்மீது தம் திருக்கரங்களை வைத்தனர். அதன் காரணமாக நான் அதனை இருபது திர்ஹம் விலை கொடுத்து வாங்கினேன்.''

அதுகேட்டு ஆங்கிருந்த இளவல்கள் அனைவரும் அதனை ஒருவர் பின் ஒருவராக வாங்கித் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

அப்பொழுது, அவர்களில் ஒருவர் மற்றொருவரை நோக்கி, ''பிஷ்ர் (ரஹ்) அவர்களுக்கு இத்துணைத் தகுதி எதன் காரணமாக ஏற்பட்டது'' என்று வினவினார்.

''தக்வா (இறையச்சம்) காரணமாக ஏற்பட்டது'' என்று பதில் கூறினார் அவர்.

'தக்வா' என்ற சொல் அவரின் வாயிலிருந்து வெளிவந்ததும் அவர்கள் அனைவருடைய உள்ளங்களையும் ஒருவிதத் திடுக்கம் ஆட்கொண்டது. அவர்கள் இறைவனிடம் தம்முடைய பாவச் செயல்களுக்காகப் பாவமன்னிப்பு (தௌபா)ச் செய்து அவற்றிற்குப் பிராயச்சித்தம் செய்யும் முறையில் மார்க்கப் போர் செய்யக் கிளம்பிவிட்டார்கள்.

பக்தாதில் வணிகர் ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுது பார்த்தாலும் சூஃபிகளைக் குறை சொல்லிக் கொண்டே இருப்பார். ஒருநாள் அவரை சூஃபிகளின் கூட்டத்தில் பார்த்த ஒருவர், பெரிதும் வியப்புற்று ''நீர் காலமெல்லாம் சூஃபிகளைக் குறை கூறிக் கொண்டு வந்தீரே. இப்பொழுது என்ன அவர்களின் கூட்டத்தில், அவர்களே போன்று கம்பளி உடையணிந்து வந்து வீற்றிருக்கின்றீர்?'' என்று வினவினார். அதற்கு அவர் பின்வருமாறு கூறினார்:

''துவக்கத்தில் நான் சூஃபிகள் மீது வெறுப்பும் விரோதமும் கொண்டிருந்தேன். அதன் காரணமாக அவர்கள் மீது இல்லாததும் பொல்லாததும் கூறி வந்தேன். ஒரு வெள்ளியன்று நான் 'ஜும்ஆ'த் தொழப் பள்ளிவாயல் சென்றேன். அங்கே நான் பிஷ்ர் (ரஹ்) அவர்களைக் கண்டேன். தொழுகை முடிந்ததும், அவர்கள் விரைவில் பள்ளியை விட்டும் வெளியேறினார்கள். அது எனக்குப் பெரிதும் வியப்பை அளித்தது. இவர் புகழ்பெற்ற சூஃபியாக இருந்தும் தொழுகை முடிந்ததும் இத்துணை வேகமாகப் பள்ளியை விட்டுச் செல்கின்றாரே என்று எண்ணினேன். அவர்கள் எங்கே போகிறார்கள் என்பதைக் காண அவர்களின் பின்னே நானும் சென்றேன். அவர்கள் ரொட்டிக் கடைக்குச் சென்று மிருதுவான உயரிய ரொட்டிகளை வாங்கினர். 'இஃதென்ன

புதுமையாக உள்ளது. இவர் பெரிய சூஃபியாக இருந்தும் உண்பதற்கு உயரிய ரொட்டிகளை வாங்குகிறாரே' என்று என் மனத்திற்குள் எண்ணிக் கொண்டேன். அதன் பின் அவர்கள் பொரித்த இறைச்சிக் கடைக்குச் சென்று பொரித்த இறைச்சித்துண்டுகளை வாங்கினார்கள். பின்னர் மிட்டாய்க் கடைக்குச் சென்று 'ஃபாலூதா' வாங்கினார்கள். இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நான் 'அவர் அவற்றை உண்பதற்கு ஓரிடத்தில் அமரட்டும். அவரின் முன் சென்று அவரை வாயில் வந்தபடியெல்லாம் திட்டி விட்டுத் தான் மறுவேலை பார்ப்பேன்' என்று என் மனத்திற்குள் கூறிக் கொண்டேன்.

''ஆனால் அவர்களோ, அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து முதுகிலே சுமந்து கொண்டு காட்டிற்குள் சென்றார்கள். ஸப்ஜா (கசகசா) விதைகளைச் சேகரிப்பதற்கு அவர்கள் அங்குச் செல்கின்றார்களோ என்று எண்ணி நானும் அவர்கள் பின்னே சென்று கொண்டிருந்தேன். 'அஸர்' நேரம் வரை அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். இறுதியாக அவர்கள் ஒரு சிற்றூரிலுள்ள பள்ளியை அடைந்து, அங்குப் படுத்த படுக்கையாய்க் கிடந்த ஒரு நோயாளியின் தலை மாட்டில் அமர்ந்து, தாம் கொண்டு வந்த பொருள்களை அவருக்கு, அவர்கள் தம் கையால் எடுத்துப் புகட்ட லானார்கள். நான் அந்த ஊரைச் சுற்றிப் பார்த்து வர வெளியே சென்றேன். மீண்டும் நான் அங்கு வந்தபொழுது அவர்களை நான் காணவில்லை.

''உடனே நான் அந்த நோயாளியை அணுகி, 'பிஷ்ர் எங்கே?'' என்று வினவினேன். 'அவர் பக்தாது சென்று விட்டார்'' என்று பதிலுரைத்தார் அவர். 'சரி; பக்தாது இங்கிருந்து எவ்வளவு தொலை' என்று நான் அவரை மீண்டும் வினவினேன். 'நாற்பது ஃபர்ஸங்' என்று விடையிறுத்தார்.

''அதுகேட்டு நான் பெரிதும் வியப்புற்றவனாய் 'அப்படியா! என்னிடம் அங்குச் செல்ல வாகனமும் இல்லை. நடந்து செல்லத் தெம்பும் இல்லையே. என் செய்வேன்?' என்று கூறினேன்.

''அப்பொழுது அந்த நோயாளி என்னைப் பரிவுடன் நோக்கி, 'கவலைப்படாதீர். அவர் மீண்டும் இங்கு அடுத்த வெள்ளியன்று வருவார். அதுவரை நீர் இங்கேயே இரும்' என்று கூறினார். அவ்வாறே நான் ஒரு வாரகாலம் அங்கேயே இருந்தேன்.

''வெள்ளியும் புலர்ந்தது. கதிரவன் உச்சி வானை அடைந்து பின்னர் குடதிசைபால் இறங்கி, அஸர் நேரமும் வந்தது. அந்த நோயாளர் கூறிய வண்ணம் பிஷ்ர் (ரஹ்) அவர்கள் உணவுச் சுமையுடன் அங்கே வந்து அந்த நோயாளிக்கு அதனை ஊட்டினார்கள்.

''உணவுண்டு முடிந்ததும் அந்த நோயாளி, அவர்களை நோக்கி, 'அபூ நஸ்ரே! இந்த மனிதர் சென்ற வெள்ளியன்று உம்முடன் வந்தார். இங்கேயே தங்கிவிட்டார். அவரைப் பக்தாது கொண்டு போய்ச் சேர்த்து விடும்' என்று கூறினார்.

''அப்பொழுது நான் மறைவிலிருந்து வெளியே வந்தேன். பிஷ்ர் (ரஹ்) அவர்கள் என்னைச் சினத்தோடு நோக்கி 'ஏன் என்னுடன் வந்தீர்? சரி; என்னோடு வாரும்' என்று கூறினர். அவர்களுடன் நான் மஃரிப் நேரம் வரை நடந்தேன்.

''மஃரிப் தொழுகைக்கான 'பாங்கு' ஒலி பல்வேறு பள்ளிகளின் மனாராக்களிலிருந்தும் காற்றிலே மிதந்து எங்களின் காதுகளை அடைந்த பொழுது நாங்கள் பக்தாது வந்து சேர்ந்தோம்.

அப்பொழுது அவர்கள் என்னை நோக்கி, 'நீர் எந்த மஹல்லாவில் வசிக்கிறீர்?' என்று வினவினர். நான் வசிக்கும் மஹல்லாவின் பெயரைக் கூறினேன்.

'சரி போம். இனிமேல் நீர் இத்தவற்றினை மீண்டும் செய்ய வேண்டாம்' என்று கூறினர்.

''அன்றிருந்து நான் முன்னர் செய்த பாவச் செயல்களுக்கெல்லாம் இறைவனிடம் 'தௌபா'ச் செய்து அவர்களின் தொடர்பை மேற்கொண்டு நேர்வழி பெற்றேன்.

தங்களைச் சிலர் அதிகமாக மதிப்பது கண்டு, அது இறைவனின் பேரருள் என்று எண்ணி அவர்கள் அவனுக்கு நன்றி செலுத்தினார்கள். ஒருநாள் அவர்கள் தெருவழியே சென்று கொண்டிருக்கும் பொழுது, அவர்களைப் பார்த்துச் சிலர், ''இரவு முழுவதும் விழித்திருந்து வணங்கக் கூடியவரும் மூன்று நாட்களுக்கு ஒரு தடவையே உணவுண்ணக் கூடியவருமான பிஷ்ர் (ரஹ்) அவர்கள் இதோ போகின்றார்கள்'' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டது அவர்களின் செவிப்பட்டது. அப்பொழுது அவர்கள் ''இறைவனே! நான் இரவு முழுவதும் எப்பொழுது விழித்திருந்து வணங்கினேன் என்பது எனக்கு நினைவில்லையே. ஒவ்வொரு நாளும் நோன்பு திறக்கும் பொழுது உண்டல்லவோ வருகிறேன். தொடர்ச்சியாக நான் மூன்று நாட்கள் உண்ணாதிருந்த தில்லை. மக்கள் என்னை இவ்வாறு புகழ்ந்துரைக்கிறார்களே. என் தகுதிக்குமேல் அவர்கள் என்னைப் புகழ்ந்துரைப்பது நீ என் மீது காட்டும் அளப்பரும் பேரருளேயன்றி வேறில்லை'' என்று அழுது கொண்டே கூறினார்கள்.

ஒருநாள் ஒரு பெண் இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்களிடம் வந்து, ''நான் விளக்கு வெளிச்சத்தில் நூல் நூற்கிறேன். விளக்கில் எண்ணெய் இல்லாதபொழுது, நிலா வெளிச்சத்திலும் நூல் நூற்கிறேன். இரண்டு வெளிச்சத்தில் நூல் நூற்றதையும் கலந்து விடாது வெவ்வேறாக வைத்திருக்க வேண்டுமா?'' என்று வினவினார். அதற்கு இமாம் அவர்கள், ''இரண்டுக்கும் இடையே வேற்றுமை உள்ளது என்று நீர் கருதின், இரண்டையும் வெவ்வேறாகத்தான் வைத்திருக்க வேண்டும்'' என்று விடையிறுத்தார்கள். அதன்பின் அப்பெண் ''நோயாளரின் முனகல் இறைவிதியைக் குறை கூறுவதாக ஆகுமா?'' என்று வினவினார். அதற்கு இமாம் அவர்கள், ''நான் அவ்விதம் எண்ணவில்லை. அது அவர்கள் இறைவனிடம் தம் குறைகளை எடுத்துரைப்பதேயாகும்'' என்று பதிலுரைத்தார்கள். இதன்பின் அப்பெண் சென்று விட்டார்.

அவர் சென்றதும் இமாம் அவர்களின் மகன் அப்துல்லாஹ் அவர் யார் என்பதை அறிய அவரின் பின்னே சென்ற பொழுது, அவர் பிஷ்ர் (ரஹ்) அவர்களின் இல்லத்தில் நுழைவதைக் கண்டதும் தம் தந்தையிடம் ஓடோடி வந்து, ''தங்களிடம் சற்று முன் வந்து சென்றவர் பிஷ்ர் (ரஹ்) அவர்களின் சகோதரியாவார்'' என்று கூறித் தாம் கண்டதை எடுத்துரைத்தார். அதுகேட்ட இமாம் அவர்கள், ''நீ கூறுவது சரியாக இருக்க வேண்டும். பிஷ்ரின் சகோதரியைத் தவிர வேறு எவராகவும் அவர் இருக்க இயலாது'' என்று இயம்பினார்கள். பிஷ்ர் (ரஹ்) அவர் களின் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மீதும், அத்துணை நல்லெண்ணம் அவர்களுக்கு இருந்து வந்தது.

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் மீதும், பிஷ்ர் (ரஹ்) அவர்களுக்கு அளவற்ற மதிப்பு இருந்து வந்தது. ஒரு தடவை அவர்களைப் பற்றி பிஷ்ர் (ரஹ்) அவர்கள் கூறும்பொழுது, ''இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களிடம் மூன்று சிறப்புக்கள் உள்ளன. அவை என்னிடம் இல்லை. அவற்றில் ஒன்று, அவர்கள் தமக்காகவும் தம் மனைவி மக்களுக்காகவும் ஹலாலான தொழிலைச் செய்கிறார்கள். நானோ எனக்காக மட்டுமே தொழில் செய்கிறேன். திருமண விஷயத்தில் அவர்கள் ஆழமாகப் போய்விட்டார்கள். நானோ அவ்விஷயத்தில் பின் தங்கிவிட்டேன். மக்களுக்குத் தலைவராயிருந்து பணிபுரியும் மகத்தான பொறுப்பு அவர்களுக்கு உண்டு. ஆனால் அது எனக்குக் கிடைக்கவில்லை'' என்று கூறினார்கள்.

பிஷ்ர் (ரஹ்) அவர்கள் இறுதிவரை மணமுடித்துக் கொள்ளவில்லை. இதைப் பற்றி அவர்களிடம் ஒருவர், ''தாங்கள் திருமணம் முடித்துக் கொள்ளாததால், நபியின் வழிமுறையை விட்டொழித்து விட்டீர்கள்

என்று மக்கள் பேசிக் கொள்கிறார்களே'' என்று கூறிய பொழுது, ''ஆம்;நான் மணமுடிக்காததன் காரணமாக, அவ்விஷயத்தில் நபியின் ஒரு வழிமுறையைக் கைவிட்டபோதினும், அதைவிட மேலான செயல்களில் ஈபட்டுள்ளேன். இதனை அவர்களிடம் கூறிவிடும்'' என்று மொழிந்தனர். எனினும் மக்கள் அவர்களின் இப்பதிலால் திருப்தியுறவில்லை. எனவே மீண்டும் அவ்வினா எழுப்பப்பட்டது. அப்பொழுது பிஷ்ர் (ரஹ்) அவர்கள், ''நான் திருமணத்தை வெறுக்கவில்லை. 'கணவர்களின் உரிமை மனைவி மார்கள் மீது இருப்பது போன்று, மனைவிமார்களின் உரிமை கணவர்கள் மீது உண்டு' என்ற கருத்தமைந்த இறை திருவசனத்தின் காரணமாக நான் மணமுடிக்க அஞ்சிக் கொண்டுள்ளேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

இதே கேள்வியைக் கேட்ட மற்றொருவரிடம், ''நான் ஷரீஅத்தைத் தவிர்த்துள்ள சில அலுவல்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ளேன். படைப்பின் தீமைகளிலிருந்து என் உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள விரும்புகின்றேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அல்லாஹ்வின் பாதையில் பிரயாணம் செய்வதை அவர்கள் பெரிதும் விரும்பினார்கள். எனவே அவர்கள் மார்க்க அறிஞர்களை நோக்கி, ''நீங்கள் பிரயாணம் செய்யுங்கள். அதன் காரணமாக, நீங்கள் தூய்மை பெறுவீர்கள். தண்ணீர் ஒரே இடத்தில் தேங்கி கிடப்பின் அது துர்நாற்றம் எய்திவிடும். அதேபோன்று நீங்களும் ஒரே இடத்தில் முடங்கிக் கிடப்பின், அதே போன்று ஆகிவிடுவீர்கள்'' என்று கூறினார்கள்.

ஒருநாள் ஒருவர் அவர்களை அணுகி, ''நான் மனைவி மக்கள் உள்ளவன். என் கையில் யாதொரு பொருளுமில்லை. எனக்காக இறைவனிடம் இறைஞ்சுங்கள்'' என்று வேண்டிய பொழுது, ''உன் மனைவி, மக்கள் உண்பதற்கு யாதொன்றுமில்லை என்று கூறும்பொழுது, உன்னிடமும் அவர்களுக்குக் கொடுக்க யாதொன்றும் இல்லாது நீ வருந்தும் பொழுது, நீ எனக்காக இறைஞ்சு. அப்பொழுது நீ இறைஞ்சும் இறைஞ்சுதல், நான் இப்பொழுது உனக்காக இறைஞ்சப் போகும் இறைஞ்சுதலைவிட எவ்வளவோ மாண்புடைத்ததாகும்'' என்று கூறி அவருக்காக இறைஞ்சினார்கள்.

அவர்களுக்கும், அவர்களின் அன்னையாருக்கும் இருந்த உறவு இறுதிவரை வியக்கற்பாலதாய் அமைந்திருந்தது. ஒரு தடவை அவர்களின் அன்னையார், அவர்களிடம் ஒரு தின்பண்டத்தைக் கொடுத்து, ''நீ இதனை உண்ணத்தான் வேண்டும்'' என்று வற்புறுத்தினார். அதனை அவர்கள் விரும்பாத போதினும் தம் வெறுப்பை வெளியே காட்டிக் கொள்ளாது அன்னையின் வற்புறுத்தலுக்கு இணங்க அதனை உண்டார்கள். பின்னர் வெளியே வந்து அதனை வாந்தி எடுத்து விட்டார்கள். எனினும்

அன்னையைத் திருப்திபடுத்திய மகிழ்ச்சி அவர்களின் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

ஒருநாள் அவர்கள் தங்களின் இல்லத்தில் நுழைந்தக்கால் ஒருவர் அங்கு வீற்றிருப்பதைக் கண்டு, ''என் உத்திரவின்றி எவ்வாறு என் இல்லம் புகுந்தீர்?'' என்று வினவினர். அதற்கு அவர் ''நான் கிள்ர்'' என்று கூறினார். உடனே அவர்கள் கிள்ர் (அலை) அவர்களுக்கு மரியாதை செய்து தமக்காக இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டினர். அதற்கிணங்கி கிள்ர் (அலை) அவர்களும், ''இறைவனே! இவர் உனக்கு வழிப்பட்டு நடப்பதை இவருக்கு எளிதாக்கி வைப்பாயாக!'' என்று இறைஞ்சினார்கள். ''இன்னும் இறைஞ்சுங்கள்'' என்று மீண்டும் இவர்கள் வேண்ட, ''இறைவனே! இவர் உனக்கு வழிப்பட்டு நடப்பதை இவருக்கே தெரியாமல் மறைத்து வைப்பாயாக!'' என்று இறைஞ்சினர் கிள்ர். அதுகேட்டு அவர்கள் மகிழ்வு பூத்தார்கள்.

மற்றொருநாள் அவர்கள், 'கப்ரஸ்தான்' பக்கல் சென்ற பொழுது அங்கு அடங்கப் பெற்றிருப்பவர்களுக்கு யாரோ ஒருவர் எதையோ பங்கிடுவது போன்றும், அதனைப் பெறுவதற்காக அவர்கள் முண்டியடித்துக் கொண்டிருப்பது போன்றும் தெரிந்தது. உடனே அவர்கள் அது பற்றித் தமக்கு விளக்கம் வழங்குமாறு இறைவனிடம் வேண்ட, ''நீர் அவர்களிடமே அதைப்பற்றிக் கேளும்'' என்று அசரீரி முழங்கியது. அவ்வாறே அவர்கள், ''ஆங்கு அடங்கப் பெற்றிருப்பவர்களிடம் அது பற்றி வினவியபொழுது, ''ஒரு வாரத்திற்கு முன்பு ஒருவர் இவ்வழியே சென்றார். அவர் சூரத்து இக்லாஸை மூன்ற தடவை ஓதி, எங்களுக்கு அன்பளிப்புச் செய்தார். அவற்றை அன்றிலிருந்து இதுவரை எங்களிடையே பங்கிட்டுக் கொண்டிருக்கிறோம். எனினும் அவ்வலுவல் இன்னும் முடியவில்லை'' என்று கூறினர்.

வேறொரு நாள் அவர்கள் தெருவழியே சென்று கொண்டிருந்த பொழுது, ஓர் ஆடவன் உருவிய வாளுடன் ஒரு பெண்ணைத் துன்புறுத்திக் கொண்டிருப்பதையும், அவள் அழுது துடித்துக் கொண்டிருப்பதையும் கண்டு அவனருகே போய் யாதோ கூறினார்கள். அடுத்த கணம் அவன் மயக்கமுற்றுக் கீழே வீழ்ந்தான். அப்பெண் அவன் பிடியிலிருந்தும் தப்பி ஓடினாள். அவனுக்கு மூர்ச்சை தெளிந்ததும், ''உனக்கு யாது நிகழ்ந்தது?'' என்று மக்கள் கேட்க, ''எவரோ ஒருவர் என் அருகே வந்து, 'அல்லாஹ் வுக்கு அஞ்சிக்கொள். அநியாயம் செய்யாதே. அவன் உன்னைப் பார்த்துக் கொண்டுள்ளான்' என்று கூறினார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அதன் பின் பிரக்ஞை இழந்தேன்'' என்று கூறினான். அவர்கள் பிஷ்ர் ஹாபி (ரஹ்) அவர்கள்

என்று அவனிடம் கூறப்பட்ட பொழுது, ''ஆ! இனி நான் அவர்களின் கண்களில் எவ்வாறு விழிப்பேன்'' என்று மூர்ச்சித்து வீழ்ந்தான். அத்துடன் அவனின் உயிர் பிரிந்து விட்டது.

அவர்கள் இறைவனின் பேரருளில் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்ததன் காரணமாக, எதையும் நாளைக்கெனச் சேமித்து வைப்பதில்லை. ஒருநாள் அவர்களின் இருப்பிடத்திற்கு நடுத்தர வயதினர் ஒருவர் வந்தபொழுது, தம் மாணவர் ஹுஸைன் மஹாஸிலியிடம் பணம் கொடுத்து உயர்தரமான இனிய தின்பண்டங்களை வாங்கி வருமாறு அவர்கள் கூறினார்கள். அவர் அவற்றை வாங்கி வந்ததும், வந்திருந்த விருந்தினருடன் அமர்ந்து அவர்கள் உண்டார்கள். என்றுமில்லா வண்ணம் அவர்கள் அன்று அவ்வாறு செய்ததைக் கண்டு, அவர்களின் மாணவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. உண்டு முடிந்ததும், அதிகமாக எஞ்சியிருந்த தின்பண்டங்களையெல்லாம் ஒரு மூட்டைக் கட்டி எடுத்துச் சென்றார் விருந்தினர். இது முன்னைவிடப் பன்மடங்கு வியப்பை மாணவருக்கு வழங்கியது. இதனை அவர்களின் முகக்குறியால் விளங்கிக் கொண்ட பிஷ்ர் (ரஹ்) அவர்கள், ''வந்த விருந்தினர் எவர் என்று உனக்குத் தெரியுமா? அவர்கள் தாம் பத்ஹுல் மவுஸூலி (ரஹ்) அவர்களாவர். என்னைக் காண்பதற்காக மவுஸூல் என்னும் ஊரிலிருந்து இங்கு வந்தார்கள். இறைவனின் பேரருளில் அசைக்க முடியாத உறுதி ஏற்பட்டுவிடின் சேமித்து வைத்தல் தவறாக ஆகாது என்பதை எனக்கு உணர்த்துவதற்காகவே அவர்கள் எஞ்சி இருந்த உணவுப் பொருள்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றார்கள்'' என்று கூறினர்.

இறையருளில் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்ததன் காரணமாக, அவர்கள் தங்களுக்கு நோய், நொம்பலங்கள் ஏற்பட்ட போதினும், அதனை வெளியே எடுத்துரைக்காமல் இருந்து வந்தனர். எவரும் தாம் நோயுற்றிருப்பதை அறிந்து, உடல் நலம் விசாரிக்க வருவதை விரும்பாத அவர்கள், எவரும் வராமல் இருக்கும் வண்ணம் தங்களின் இல்லத்தின் கதவைத் தாளிட்டு அடைத்து வந்தார்கள்.

இறைவனுக்குத் தாங்கள் தெரிந்தவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்பினார்களே யொழிய, உலகத்தினருக்குத் தெரிந்தவர்களாக இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. ''தம்மை மக்கள் தெரிந்திருக்க வேண்டுமென்றும் தமக்குப் பேரும் புகழும் ஏற்பட வேண்டும் என்றும் விரும் பும் எவரிடமும், மார்க்கம் கெடாமல் இருந்ததையும் அவர் அவமா னப்படாமல் இருந்ததையும் நான் காணவில்லை'' என்று அவர்கள் கூறினர்.

இறை காதல் மேலிட்ட இரு பெரியார்களை அவர்கள் சந்தித்தது அவர்களின் வாழ்வில் நீங்காத முத்திரையைப் பதிப்பித்தது. பகுதாதின்

தெருவொன்றில் அவர்கள் சென்று கொண்டிருந்தக்கால் ஒருவரைக் கழி கொண்டு சிலர், ஆயிரம் அடிகள் அடிக்க, அவரோ அவற்றை எவ்வித முனகலோ, சப்தமோ இன்றிப் பொறுமையுடன் சகித்துக் கொண் டிருப்பதைக் கண்ட இவர்கள், பெரிதும் வியப்புற்று, ''நீர் ஏன் உம்மை அடிக்குங்கால் சிறிதளவு கூடச் சப்தம் செய்யவில்லை'' என்று வினவினர். அதற்கு அவர், ''என் அன்பிற்குரிய காதலி என்னைப் பார்த்துக் கொண் டிருந்ததனால் நான் சப்தம் செய்யவில்லை'' என்று பதில் கூறினார். ''அவ்விதமாயின் நீ அக்காலை மாபெரும் காதலியைக் காணின் என் செய்வாய்?'' என்று அவர்கள் அவரை வினவிய பொழுது இறை காதல் மேலிட்ட அவர் பெரும் கூச்சலிட்டு மயங்கிக் கீழே வீழ்ந்து அக்கணமே உயிர் நீத்தார்.

மற்றொரு தடவை அவர்கள் உப்பாதானுக்குப் போய்க் கொண் டிருந்த பொழுது கண்ணில்லா, பைத்தியக்காரத் தொழுநோயாளர் ஒருவர் மயக்க நிலையில் கீழே வீழ்ந்து கிடப்பதையும் கறையான் அவரின் உடலை அரித்துத் தின்று கொண்டிருப்பதையும் கண்டு, அவர்மீது இரக்கமுற்று அவரின் தலையைத் தூக்கித் தம் தொடைமீது வைத்து அவருக்காக இறைஞ்சிய பொழுது சற்று மூர்ச்சை தெளிந்த அவர் ''எனக்கும் என் இறைவனுக்கும் இடையே குறுக்கிட்ட இந்த வீணப்பயல் யார்? அல்லாஹ்மீது ஆணையாக, அவன் என்னைத் துண்டு துண்டாக நறுக்கிய போதினும், நான் அவனை உவப்பேனேயன்றி வேறில்லை'' என்று கூறினார். அது கேட்டு அவர்கள் நடுங்கிவிட்டார்கள்.

இறைவனையே நேசித்து இறை நேசத்தையே விரும்பி, இறை நேசச் செல்வராய் வாழ்ந்து வந்த அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடக்குங்கால், ஒருவர் அவர்களிடம் வந்து தம் வறிய நிலையை எடுத்துரைத்த பொழுது, அவருக்கு வழங்க, தாம் அணிந்திருந்த சட்டையைத் தவிர்த்து வேறொன்றுமில்லாததைக் கண்ட அவர்கள் அச்சட்டையைக் கழற்றி அவரிடம் கொடுத்து, தாம் இரவல் சட்டை வாங்கி அணிந்து கொண்டு அந்நிலையிலேயே உயிர் நீத்தார்கள். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 227 ஆம் ஆண்டிலாகும். அப்பொழுது அவர்களுக்கு வயது 77.

அவர்கள் உயிரோடிருந்த வரையில், அவர்களின் பாதங்கள் அசுத்தப்படக் கூடாதென்று கருதி மிருகங்கள் கூட பகுதாதின் தெருக்களில் சாணமிடவில்லை என்றும் ஓரிரவு ஒருவன் தன் கோவேறு கழுதையை அந்நகர வீதி ஒன்றில் நடத்திச் சென்ற பொழுது அது சாணமிட்டதைக் கண்டு இன்று பிஷ்ர் ஹாபி (ரஹ்) அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று அவன் கூறியதாகவும், பின்னர் விசாரித்துப் பார்க்கும் பொழுது உண்மையில் அவ்விதமே இருந்ததென்றும் கூறுவர்.

அவர்கள் இறந்ததன் பின் ஒருவர் அவர்களைக் கனவில் கண்டு, ''தங்களின் நிலை யாதாயிற்று?'' என்று வினவியபொழுது, ''அருளாளனாகிய அல்லாஹ் என்னுடைய மாளிகையைத் திருமண முடித்தவர்களின் மாளிகைக்குக் கீழாக ஆக்கி வைத்துள்ளான்'' என்று கூறினர்.

வேறொருவர் அவர்களைக் கனவில் கண்டு, ''அபூ நஸ்ரு ஸிமாரும் அப்துல் வஹ்ஹாபில் உர்ராகும் எவ்விதமுள்ளனர்?'' என்று வினவியபொழுது, ''நான் இப்பொழுது தான் அவர்களைச் சுவனப் பூங்காவில் கண்டு வந்தேன். அவர்கள் சுவனத்து இன் சுவை உணவுகளை உண்டு கொண்டிருந்தார்கள்'' என்று அவர்கள் பதில் கூறினர். ''தாங்கள் எவ்வாறு உள்ளீர்கள்?'' என்று மீண்டும் வினவப்பட்ட பொழுது, ''எனக்கு உணவின் மீது ஆசையில்லாததை எம்மிறைவன் அறிவானாதலின் அவன் என்மீது அருள் மிக்குற்று தன்னுடைய திவ்விய தரிசனத்தை எனக்கு வழங்கினான்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

மற்றொருவர் அவர்களைக் கனவில் கண்டு, ''இறைவன் தங்களை எவ்வாறு நடத்தினான்?'' என்று வினவியபொழுது, ''நீர் இத்தனை நாட்களாக அளவற்ற துன்பங்களை நுகர்ந்து வந்தபோதினும், என் அளப்பரும் கருணையை எண்ணிப்பாராது எனக்கு அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தீரே. அது இப்பொழுது உமக்கு நாணத்தை வழங்க வில்லையா?'' என்று வினவினான். அதன்பின் அவன் என்னை நோக்கி, ''நீ என் பொருட்டு இனிய உணவுகளையும், இன்சுவைப் பானங் களையும் ஒதுக்கித் தள்ளினீர். அவற்றை அருந்துவதன் காரணமாக, உம் நேரம் வீணாகும் என்றும் உம் வணக்கம் பாழாகும் என்றும் நீர் கருதினீர். இப்பொழுது அவற்றை நன்றாக உண்ணும், அருந்தும் என்று கூறி ஆரமுதமனைய உணவுகளும் பானங்களும் வழங்கினான்'' என்று கூறினர்.

பிறிதொருவர் அவர்களைக் கனவில் கண்டு அதே கேள்வியைக் கேட்ட பொழுது, ''இறைவன் என்னை நோக்கி, ''பிஷ்ரே! உம் பவம் பொறுத்தேன். உம் அடக்கச் சடங்கில் கலந்து கொண்டவர்களின் பவங் களையும் பொறுத்தருளினேன்'' என்று கூறினான். அப்பொழுது நான் அவனை நோக்கி, 'என்னை உவந்தவனுடைய வெம்பாவங்களையும் பொறுத்தருள்வாயாக என்று வேண்டினேன். அதுகேட்ட எம்மிறைவன், 'நல்லது; உலக முடிவு நாள்வரை உம்மை உவந்தவனுடைய வெம்பாவங் களையும் பொறுத்தருளினேன்' என்று கூறினான்'' என மறுமெழி பகர்ந்தார்கள்.

# 17. ஹாத்திம் அஸம் (ரஹ்)

அவர்களோ ஒரு மகான். இறைவனின் நல்லடியார். தம் காலத்தின் ஸித்தீக் (உண்மையாளர்) என்று ஜுனைத் (ரஹ்) அவர்களால் புகழப்பட்டவர்கள். அவர்களைக் காண்பதற்காக, கண்டு தங்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்து மன ஆறுதல் பெறுவதற்காக மக்கள் அவர்களிடம் சாரி, சாரியாக வந்து கொண்டிருந்தார்கள்.

மாண்பாரும் மார்க்க விற்பன்னராக விளங்கிய இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூட, அவர்களை அடிக்கடி சந்தித்துப் பல்வேறு ஐயங்களைப் பற்றியும் அவர்களிடம் வினவி, தெளிவு பெற்றுச் செல்வார்கள்.

ஒருநாள் அவர்கள் தங்களின் இல்லத்தில் அமர்ந்திருந்தக்கால் ஒரு பெண்மணி அவர்களைக் காண்பதற்காக வந்தார். அவர்களிடம் ஏதோ ஒன்றைப் பற்றி அவர் வினவிய பொழுது, அவருக்கு அவரையறியாமல் காற்றுப் பறிந்துவிட்டது. அப்பொழுது அப்பெண்மணியின் முகம் நாணத்தால் வெளுத்தது. உடலெல்லாம் 'குப்'பென்று வியர்த்தது. இதைக் கவனித்த அம்மகான், தாம் ஒரு செவிடர் போன்றும் தம் காதில் யாதும் இலகுவில் விழாதது போன்றும் பாவனை செய்து கொண்டு, ''உரத்துப் பேசுங்கள், அம்மா; எனக்குக் காது சரியாகக் கேட்காது'' என்று கூறினார். இப்பொழுதுதான் அப்பெண்மணிக்கு உயிர் வந்தது போன்றிருந்தது. ''நல்ல வேளையாக, அது அவரின் காதில் விழுந்திருக்காது. பெரும் அவமானத்திலிருந்து இறைவன் நம்மைக் காத்தருள் புரிந்தான்'' என்று தம் மனத்தில் கூறிக் கொண்டு, தாம் கேட்க வந்த செய்தியை உரத்துக் கேட்டார் அவர். அதற்குத் தக்க பதில் கூறி அவரைத் திருப்தியுடன் அனுப்பி வைத்தனர் அவர்கள்.

இதன்பின் பதினைந்து ஆண்டுகள் வரை அப்பெண்மணி உயிரோடிருந்தார். இந்தப் பதினைந்து ஆண்டுகளும், எவரும் தாம் ஒரு செவிடரல்ல என்று அப்பெண்மணியிடம் கூறி அவருக்கு அவமானத்தையும் மனத்துயரையும் வழங்கி விடக்கூடாது என்பதற்காக அவர்கள், ஒரு

செவிடர் போன்றே பாவனை செய்து வந்தார்கள். எவரும் அவர்களிடம் வந்து யாதேனும் கூறின், ''உரத்துப் பேசுங்கள்'' என்று கூறுவர். இதன் காரணமாக அவர்களின் இயற்பெயர் ஹாத்திம் என்பதோடு, செவிடர் என்று பொருள்படும் அஸம் என்பதும் இணையலாயிற்று. எனவே மக்கள் செவிட்டு ஹாத்திம் (ஹாத்திம் அஸம்) என்று அவர்களை அழைக்கலாயினர். அப்பட்டப் பெயர் அவர்களுக்கு மனத்துயரை வழங்கவில்லை. மாறாக, மனநிறைவை, மனமகிழ்வை வழங்கி வந்தது. அப்பெண்மணி இறந்ததன் பின்னரே அவர்கள் தங்களின் பாவனையை விட்டொழித்துத் தம்மிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில்கூறி வந்தார்கள். எனினும் அப்பட்டப் பெயர் இல்லை, இல்லை - அவர்களின் பண்பாட்டின் மாண்பினை எடுத்துரைக்கும் அச்சிறப்புப் பெயர் அவர்களின் பெயரை விட்டும் அகலவில்லை.

அபூ அப்துர் ரஹ்மான் ஹாத்திம் இப்னு உன்வானுல் அஸம் என்ற இப்பெரியார் பல்க் நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அக்காலை பல்க் நாட்டில் சிறப்புற்று விளங்கிய இறைநேசச் செல்வர் ஷகீக் பல்கி (ரஹ்) அவர்களை அணுகி, அவர்களிடம் ஆன்மீகக் கல்வி பயிலலாயினர். ஒருநாள் ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள், தம் ஆன்மீக மாணவர் ஹாத்திமை நோக்கி, ''நீர் எத்தனை காலமாக என்னிடம் கல்வி பயின்று வருகின்றீர்?'' என்று வினவினர். ''ஓராண்டு காலமாக'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். ''ஓராண்டு காலத்தில் நீர் என்னிடமிருந்து எதனைத் தெரிந்து கொண்டீர்?'' என்று வினவினர் ஷகீக். ''எட்டு விஷயங்களை'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் ஹாத்திம். இதைக் கேட்டு ஆசானின் புருவங்கள் மேலேறின. ''என்ன! எட்டு விஷயங்களைத்தாமா?'' என்று வியப்புடன் வினவினார்கள். அதன்பின் அவரை நோக்கி, ''நல்லது; அவற்றைக் கூறும்'' என்று ஆணையிட்டார்கள்.

மாணவர் பேசத் தொடுத்தார். ''அடிகளாரே! நான் தெரிந்து கொண்ட முதல் விஷயம் இதுதான். மனிதன் இவ்வுலகை விட்டுப் பிரியும் பொழுது, அவன் அனைத்தையும் விட்டுச் செல்ல வேண்டியுள்ளது. எனினும் அவனுடன் ஒன்றே ஒன்று மட்டும் செல்கிறது. அதுவே அவன் இவ்வுலகில் வாழும் பொழுது ஆற்றிய நற்செயல்கள். எனவே, நானும் இவ்வுலகில் வாழும் பொழுதே நற்செயல்கள் ஆற்ற வேண்டும். அதுவே மறுமைக்கான தயாரிப்பாகும் என்பதை உணர்ந்து நற்செயல்கள் ஆற்றுவதை என்னுடைய நீங்காத வழக்கமாக ஆக்கிக் கொண்டேன்.''

அதுகேட்டு, 'சபாஷ்' என்று கூறிய ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் 'அடுத்து' என்று வினவினார்கள்.

''அடுத்து, 'இறைவனுக்கு அஞ்சி, தீய எண்ணங்களை விட்டும் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பவர்களுக்கு சுவன வாழ்வு உண்டு' என்ற இறை கருத்தை மனத்திற் கொண்டு என் உள்ளத்தில் எள்ளளவும் தீய எண்ணங்கள் புகாவண்ணம் காக்கப் பெற முயற்சி செய்தேன். அம்முயற்சியில் ஓரளவு வெற்றியும் கண்டேன். அதன் காரணமாக என் உள்ளம் அமைதியுற்று இறைவழிபாட்டில் ஈடுபடலாயிற்று.''

''மூன்றாவதாக, 'உங்களிடமுள்ளது அழிந்து போகும், இறைவனிட முள்ளது என்றென்றும் நிலைத்து நிற்கும்' என்ற இறை கருத்தைச் சிந்தித்தேன். உலகச் செல்வங்கள் அனைத்தும் என்றாவது ஒருநாள் அழியக் கூடியவைதாம் என்பது எனக்கு நன்கு தெரிய வந்தது. எனவே என்னிடமிருந்தவற்றையெல்லாம் அல்லாஹ்வுடைய பாதையில் அறம் செய்து விட்டேன்.

''நான்காவதாக, 'இறையச்சமுள்ளவர்களே உங்களில் சிறந்தோ ராவர்' என்ற கருத்தமைந்த இறை திருவசனம் என் கண்களைத் திறக்க வைத்தன. எனவே பணப்பெருமை, குலப்பெருமை ஆகியவை எல்லாம் வீண் பெருமை என்பதை உணர்ந்து, இறையச்சத்தால் என் உள்ளத்தை நிரப்பி, இறைவனின் திருமுன் சிறப்புற்று விளங்குவதை என் குறிக்கோளாகக் கொண்டேன்.

''ஐந்தாவதாக, 'உலக வாழ்வில் அவரவருக்குரியவற்றை நாம் பங்கிட்டுக் கொடுத்துள்ளோம்' என்ற பொருள் பொதிந்த இறை வசனத்தை உற்று நோக்கினேன். அதன் காரணமாக, என் உள்ளத்தில் பொறாமைக்கே இடமில்லாமல் ஆகிவிட்டது. அவரவருக்கு இறைவன் அளித்தது கிடைக்கும். இதில் பொறாமைப்படுவதற்கே இடமில்லை; பொறாமைப்படுவதால் பயனுமில்லை என்பதை உணர்ந்தேன்.

''ஆறாவதாக, பொறாமை உணர்வை என் உள்ளத்தை விட்டும் நீக்கி விட்டதால், எவர் மீதும் எனக்குப் பகைமை இல்லாமல் போய்விட்டது. அதன் காரணமாக எல்லார் மீதும் அன்பு செலுத்தத் துவங்கினேன்.

''ஏழாவதாக, உயிரினங்கள் அனைத்திற்கும் தான் உணவளிப்பதாக இறைவன் கூறி இருக்க, மனிதன் பொய்யும் புரட்டும் கூறி, தவறான வழியில் பொருளீட்டித் தன் வயிறு வளர்க்க முற்படுவதைக் கண்டு என் உள்ளம் வருந்தியது. எனவே எனக்கு உணவளிக்க ஒருவன் உள்ளான் என்பதை உணர்ந்து தவறான வழியில் பொருளீட்டி, வயிறு வளர்க்க முற்படாது அமைதியாக அமர்ந்து இறைவழியில் ஈடுபடலானேன்.

''எட்டாவதாக, 'இறை நம்பிக்கையாளர்களுக்கு அவன் போது மானவன்' என்ற இறைவசனத்தை மனத்தில் கொண்டு, மனிதர்களின்

உதவியை நம்பாது இறையாதரவையே நம்பிச் செயலாற்றி வருகிறேன். நம்பிய பேர்களை அவன் கைவிடுவதில்லை என்பதை நான் கண்கூடாகக் கண்டு வருகிறேன்.''

இவ்வாறு தம் மாணவர் ஹாத்திம் கூறி முடித்ததும் ஆசானின் முகத்தில் புன்னகை படர்ந்தது. ''ஹாத்திம்! நீர் கூறி வந்தது அனைத்தும் உண்மையாகும். திருமறையை நான் நன்கு ஆராய்ந்துள்ளேன். மனிதனுக்கு ஏற்படும் நன்மைகள் அனைத்தும் இந்த எட்டு நற்பண்பு களாலேயே விளைகின்றன'' என்று கூறி ஹாத்திமை வாழ்த்தினர் ஷகீக் பல்கி.

ஷகீக் பல்கி (ரஹ்) அவர்களின் வாழ்த்தைப் பெற்றுப் பள்ளியை விட்டு நீங்கிய ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள், பிற்காலத்தில் மாபெரும் இறைநேசச் செல்வர்களில் ஒருவராக விளங்கினர். இவர்களின் இறைஞ்சுதல் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதாய் இருந்தது. ஒருநாள் அவர்கள் பல்கில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த பொழுது, ''இறைவனே! இக்கூட்டத்தில் வந்தமர்ந்திருப்பவரில் எவர் மிகப்பெரும் பாவியாக உள்ளாரோ அவரை மன்னித்தருள்வாயாக'' என்று இறைஞ்சினர். அக்கூட்டத்தில் கஃபன் திருடும் ஒருவனும் வந்தமர்ந்திருந்தான். அவன் பல அடக்க இடங்களைத் தோண்டி, பிரேதங்களைப் போர்த்தி இருக்கும் கஃபன் துணிகளைக் களவு செய்து விற்று வயிறு வளர்க்கும் தொழிலையே நீங்காத வழக்கமாகக் கொண்டிருந்தவன். அன்றிரவு அவன் தன் வழக்கப்படி கஃபன் துணியைத் திருடுவதற்காக ஓர் அடக்க இடத்தைத் தோண்டிய பொழுது, ''உனக்கு வெட்கமில்லையா? இன்று காலை நீ ஹாத்திமுடைய சொற்பொழிவைக் கேட்கச் சென்றிருந்த பொழுது, ஆங்கு வைத்து அவர் செய்த இறைஞ்சுதலின் காரணமாக நீ உன்பவம் அனைத்தும் பொறுக்கப்பட்டாயே. இப்பொழுது மீண்டும் உன் வழக்கப்படி இப்பாவத் தொழிலைச் செய்யத் துவங்கிவிட்டாயே. உனக்கு வெட்கமில்லையா?'' என்று அசரீரி முழங்கியது. அது கேட்டுத் திடுக்குற்ற அவன் ஆங்கிருந்தும் வெருண்டோடி ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்களை அணுகி நடந்தவற்றை எடுத்துரைத்து, தம் பவம் பொறுத்துத் தம்மை ஆட்கொள்ள வேண்டுமென்று, கண்ணீரும் கம்பலையுடன் வேண்டிக் கொண்டான். அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

பின்னர் அவர்கள் அவனை நோக்கி, ''நீ எத்தனை ஆண்டுகளாய் இத்தொழிலைச் செய்தாய்?'' என்று வினவினர். ''இருபதாண்டுகளாக'' என்று அவன் பதில் கூறினான். ''இந்த இருபது ஆண்டுகளில் எத்தனை புதை குழிகளைத் தோண்டியுள்ளாய்?'' என்று வினவினர். ''ஏழாயிரம் புதை குழிகளை'' என்று அவன் பதிலிறுத்தான். ''அவை முஸ்லிம்

களுடைய புதை குழியா? இறை மறுப்பாளர்களின் புதை குழியா?'' என்று அடுத்து வினவினர். ''முஸ்லிம்களுடைய புதை குழிகள்'' என்று அவன் மறுமொழி பகர்ந்தான்.'' அவற்றில் எத்தனை பேர்களின் முகங்கள் கிப்லாவை நோக்கி இருந்தன?'' என்று அவர்கள் கேட்டார்கள். ''மூன்றே மூன்று பேர்களுடைய முகங்கள் தாம் கிப்லாவை நோக்கி இருந்தன. மற்றவையெல்லாம் திசை மாற்றப்பட்டிருந்தன'' என்று அவன் கூறினான். அதுகேட்டு அவர்கள் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்து விட்டார்கள்.

அவர்கள் உலகைத் துறந்த உத்தமத் துறவியாக விளங்கினர். அவர்களின் கண்களில் செம்மண்ணும் செம்பொன்னும் ஒன்றாகவே காட்சி வழங்கின. இறைவனிடமிருந்தே அன்றி, வேறு எவரிடமும் அவர்கள் யாதொரு உதவியும் பெற விரும்பவில்லை. ஒருநாள் ஒருவர் அவர்களை அணுகி, ''என்னிடம் அதிகமான செல்வம் உள்ளது. அவற்றில் ஒரு பகுதியை நான் தங்களுக்கும், தங்களின் தோழர்களுக்கும் பங்கு வைத்துத் தர விரும்புகின்றேன். தாங்கள் யாதும் கூறாது அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று வேண்டி நின்றபொழுது, ''நல்லது; ஆனால் நீர் இறந்துவிடின், 'இறைவனே! உலகில் எனக்கு இரணம் அளித்துக் கொண்டிருந்த தர்ம வள்ளல் இறந்துவிட்டார். எனவே இனிமேல் நீ தான் எனக்கு இரணம் அளிக்க வேண்டும்' என்று இறைவனிடமல்லவோ நான் மீண்டும் சென்று பல்லைக் காட்ட வேண்டியிருக்கும் என்று தான் நாணமுறுகிறேன். வருந்தற்க'' என்று பதில் கூறிவிட்டார்கள்.

எளிமையும் இனிமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்த அவர்களைத் தாம் ஒரு தடவையிலே யன்றி வேறு ஒரு போதும் சினமுறக் கண்டதில்லை என்று எடுத்துரைக்கின்றார் ஸஃது இப்னு முஹம்மது அல்ராஸி.

மாபெரும் மகானாக விளங்கிய அவர்கள், இறையருள் பெறுவதற் காக இறைவனை வணங்கியதோடு மட்டுமல்லாது, இறைவனுக்காகச் செய்யப்பட்ட மார்க்கப் போர்களிலும் கலந்து வீரத்துடன் போர் செய்துள்ளார்கள். ஒரு தடவை அவர்கள் மார்க்கப் போரில் கலந்து கொண்டபொழுது, ஒரு துருக்கியன் அவர்களைப் பிடித்துக் கீழே தள்ளி, அவர்களின் நெஞ்சின் மீதமர்ந்து அவர்களைக் கொல்வதற்காகத் தம் வாளை உருவினான். அப்பொழுது அவர்கள் அணுவளவும் துணுக்குறாது அவன் என்ன செய்கின்றான் என்பதை அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது எதிர்பாராவண்ணம் ஓர் அம்பு அவருடைய நெஞ்சின் மீது வீற்றிருந்த அவனைக் கொன்றொழித்துக் கீழே தள்ளியது. அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''நீ என்னைக் கொன்றாயா? அல்லது நான் உன்னைக் கொன்றேனா?'' என்று இழித்துரைத்துவிட்டு எழுந்து சென்றனர்.

ஒருதடவை அவர்கள் பகுதாதுக்கு வந்தபொழுது அவர்களின் வருகை பற்றிய செய்தி ஒரு நொடியில் அம்மாநகரம் முழுவதும் காட்டுத்தீ போல் பரவலாயிற்று. எவர் வாயில் பார்த்தாலும், ''குராஸான் நாட்டுத் துறவி வந்துள்ளார்; குராஸான் நாட்டுத் துறவி வந்துள்ளார்'' என்ற வார்த்தைகளே அடிபடத் துவங்கின. இது கலீபாவின் செவிப்பட்டதும், அவருக்கும் அவர்களைக் காண வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. அவ்களைத் தம் அரண்மனைக்கு அழைத்து வருமாறு ஆள் அனுப்பினார் அவர். அவ்வாறே அவர்களும் வந்தார்கள். கலீபாவைக் கண்டதும், ''துறவியாகிய கலீபாவே!'' என்று அவரை அழைத்துப் பேச்சைத் துவங்கினார்கள். அப்பொழுது கலீபா இடைமறித்து ''நான் துறவி அல்லவே. உலகம் முழுவதும் என் ஆட்சியின் கீழ் இருக்கும் பொழுது, நான் எவ்வாறு துறவியாவேன். தாங்களன்றோ துறவி'' என்று கூறினார். அப்பொழுது அவர்கள் கலீபாவை நோக்கி, ''நான் துறவியல்ல; 'இறைவன் தன் திருமறையில் 'உலக வாழ்வு மிகவும் அற்பமானது' *(4:77)* என்று கூறுகின்றான். தாங்களோ அந்த அற்பமானதைக் கொண்டு மன நிறைவுடன் உள்ளீர்கள். ஆதலின் தாங்கள் தாம் ஒரு துறவியேயன்றி நானல்ல. நானோ இவ்வுலகைத் தந்த போதினும், வாங்கிக்கொள்ளாது பேராசை பிடித்தவனாயுள்ளேன். அவ்விதமிருக்க நான் எவ்வாறு துறவியாவேன்'' என்று கூறினர்.

'இனிது, இனிது ஏகாந்தம் இனிது' என்பதையே அவர்கள் தங்களின் தாரக மந்திரமாகக் கொண்டிருந்தனர். எனவே, எப்பொழுதும் இறை சிந்தனையில் மூழ்கித் தனித்திருப்பதையே பெரிதும் விரும்பி வந்தனர். ஒருநாள் ஓர் அமீர் அவர்களைக் காண வந்தார். அவர்களுடன் சற்று நேரம் உரையாடிவிட்டு விடை பெறுங்கால் அவர், அவர்களை நோக்கி, ''தங்களுக்கு, ஏதேனும் விருப்பமிருப்பின், கூறுங்கள். நிறைவேற்றித் தருகிறேன்'' என்று கூறினார். அதற்கு அவர்கள் ''நீர் என்னைப் பார்க்காமலும் நான் உம்மைப் பார்க்காமலும் தனித்து இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். இதனை நீர் எனக்கு நிறைவேற்றித் தந்தால் போதும்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

மற்றொரு நாள் ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள் ஹாமிது லப்பாப் (ரஹ்) அவர்களைச் சந்தித்த பொழுது, ''தாங்கள் எவ்வாறு உள்ளீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் ''அமைதியாகவும் (சலாமத்தாகவும்) நலமாகவும் உள்ளேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள். அதுகேட்ட ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள் ''அமைதி என்பது சிராத்தல் முஸ்தகீம் பாலத்தைக் கடந்த பின்பும் நலம் என்பது சுவனம் போய்ச் சேர்ந்த பின்புமல்லவோ ஏற்படும். அதற்குள் இவ்வாறு கூறுகின்றீர்களே'' என்று இயம்பினர்.

அவர்கள் தொழுகையை மிகவும் பேணுதலுடனும் உள்ளச்சத்துடனும் தொழுது வந்தார்கள். ஒருதடவை ஆஸிம் இப்னு யூசுப் (ரஹ்) அவர்கள், அவர்களிடம் சென்ற பொழுது, ''தாங்கள் எவ்வாறு தொழுகின்றீர்கள்?'' என்று வினவியபொழுது, ''நான் தொழுவதற்குமுன் இரண்டு விதமான 'உளூ'ச் செய்கிறேன். ஒன்று, வெளிப்படையானது. மற்றொன்று அந்தரங்கமானது. வெளிப்படையான 'உளூ'வைத் தண்ணீராலும், அந்தரங்கமான 'உளூ'வை தௌபா (பாவ மன்னிப்பு) வாலும் செய்கிறேன். அதன்பின் தொழும் இடம் வந்து என்னுடைய ஒவ்வோர் அணுவும் அமைதி கொள்ளும் வரை அவ்விடத்தில் வீற்றிருப்பேன். பின்னர் எழுந்து கஃபாவை என் இரு புருவங்களுக்கிடையிலும், ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தை என் காலுக்குக் கீழாகவும், சுவனத்தை வலப்புறத்திலும், நரகத்தை இடப்புறத்திலும் உயிர் வாங்கும் வானவரை என் பின்னாலும் இருப்பதாக எண்ணிக்கொண்டு இதுதான் என் இறுதித் தொழுகை என்று கருதிப் பயம் (கௌஃப்) என்பதற்கும் ஆதரவு (ரஜா) என்பதற்கும் இடையில் நின்று, 'அல்லாஹு அக்பர்' என்று கூறித் தக்பீர் கட்டி மன ஓர்மையுடனும், உள்ளச்சத்துடனும் தொழுது முடிப்பேன். இவ்வாறு தொழுது முடித்தபின், என் தொழுகை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுமோ, மாட்டாதோ என்று எண்ணிக் கவலுறுவேன்'' என்று கூறினர்.

''இவ்விதம் தானா தாங்கள் எப்பொழுதும் தொழுது வருகிறீர்கள்?'' என்று அவர்கள் வினவியபொழுது, ''ஆம்; இவ்விதம்தான் நான் முப்பதாண்டுகளாகத் தொழுது வருகின்றேன்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அதுகேட்ட ஆஸிம் இப்னு யூசுப் (ரஹ்) அவர்கள் அழுது கண்ணீர் வடித்தவர்களாய், ''நான் இவ்விதம் இத்தனை காலமாக ஒரு வேளை கூடத் தொழவில்லையே. எனவே, இனிமேல் நான் என்னுடைய முப்பதாண்டுத் தொழுகையையும், 'களா'ச் செய்யப் போகிறேன்'' என்று கூறினர்.

எப்பொழுதும் பள்ளி சென்று கூட்டுத் தொழுகையில் சேர்ந்து தொழுவதைத் தங்களின் நீங்காத வழக்கமாகக் கொண்டிருந்த அவர்களுக்கு ஒரு தடவை அது தவறிவிட்ட பொழுது ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. அழுது அழுது கண்ணீர் வடித்தார்கள். இதனையறிந்த அபூ இஸ்ஹாக்குல் புகாரீ (ரஹ்) அவர்கள், அவர்களின் இல்லம் சென்று அவர்களுக்குக் கை கொடுத்து, பொறுமையை மேற்கொள்ளுமாறு ஆறுதல் கூறினர். அதற்கு அவர்கள் ''என் குழந்தை இறந்துவிடின் இவ்வூரிலுள்ள மக்களெல்லாம் வந்து எனக்குக் கை கொடுத்து ஆறுதல் மொழிவார்கள். ஆனால் இன்று இதற்காக எனக்கு ஆறுதல் கூற எவரும் வரவில்லை. என் குழந்தை இறந்துவிடின் அதற்காக நான் வருத்தப்பட

மாட்டேன். இன்று ஒரு வேளை கூட்டுத் தொழுகை தவறிவிட்டது தான் எனக்குப் பெரிய வருத்தத்தைத் தருகிறது'' என்று கூறினார்கள்.

சிலர் அவர்களை அணுகி, ''நீங்கள் உங்களின் வயதை எவ்வாறு கழித்தீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் ''நான்கு வழிகளில்'' என்று பதிலுரைத்தார்கள். ''அவை யாவை?'' என்று அவர்கள் மீண்டும் வினவிய பொழுது, அவர்கள் பின்வருமாறு கூறினர்:

1) ''அல்லாஹ் என்னை எப்பொழுதும் பார்த்துக் கொண்டுள்ளான் என்பதை அறிந்தேன். அக்கணத்திலிருந்து அவனுக்கு மாறு செய்ய நாணமுற்று அதனைத் தவிர்ந்து கொண்டேன்.

2) எனக்கு இரணம் அளிக்கும் பொறுப்பை இறைவன் ஏற்றுக் கொண்டுள்ளான். எனவே என் இரணம் என்னைவிட்டும் ஒரு போதும் தப்பாது என்பதை உணர்ந்தேன். அக்கணத்திலிருந்து அதுபற்றிய தேட்டத்தை விட்டொழித்தேன்.

3) நான், இறைவன் என் மீது சில கடமைகளை விதித்துள்ளான். அவற்றை என்னைத் தவிர வேறு எவராலும் நிறைவேற்ற இயலாது என்பதை உணர்ந்தேன். அக்கணத்திலிருந்து அவற்றை நிறைவேற்றுவதில் என் கவனத்தைச் செலுத்தினேன்.

4) என் முடிவு என்னை நோக்கி விரைந்து வந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன். அக்கணத்திலிருந்து முடிவில்லா மறுமைக்கான தயாரிப்புகளைச் செய்வதில் ஈடுபட்டேன். நான் இப்போது இறைவனிட மிருந்து எனக்குக் கிடைப்பதை எதிர்பார்த்த வண்ணமுள்ளேன்.''

ஒருநாள் அவர்கள் தம்மையே தாம் நோக்கி, ''மனமே! நீ உயரிய இடத்தில் அமர்ந்திருப்பதை எண்ணி மருளாதே. ஆதம் (அலை) அவர்கள் சுவனத்தில் தான் இருந்தார்கள். அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைச் சிந்தித்துப் பார். நீ உன்னுடைய வணக்கத்தைப் பற்றிப் பெருமையுறாதே. இபுலீஸ் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள் வணக்கம் நிகழ்த்தியவன் தான். எனினும் அவனுடைய கதியாதாயிற்று என்பதை நினைத்துப் பார். நீ அளவற்ற கல்விகளைப் பயின்றிருப்பதாகக் கர்வம் கொள்ளாதே. பல்கம் இப்னு பாகூர் கற்ற கல்விகளை விடவா நீ அதிகம் கற்று விட்டாய். அவன் தானாகவே இஸ்முல் அஃலத்தைக் கூட அறிந்து கொண்டானே. அவனைப் பற்றித் தானே, 'அவனுக்கு உவமையாக ஓர் ஒநாயைக் கூறலாம். அதன்மீது பாரத்தை ஏற்றினாலும் அது இளைக்கும். ஏற்றா விடினும் அது இளைக்கும்' என்ற திருவசனம் இறங்கியது. மேலும் நீ சான்றோர் பலரைச் சந்தித்திருப்பதை எண்ணிப் பெருமையுறாதே. அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் உறவினர்களில் சிலர், அண்ணல் அவர்களைச் சந்தித்துக் கொண்டும் அவர்களுடன் உரையாடிக்

கொண்டும்தான் இருந்தார்கள். எனினும் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவி நேர்வழி பெறவில்லையே'' என்று கூறினர்.

மற்றொரு நாள் அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கும் பொழுது, ''தாமதிப்பது நன்மையாகவும் அவசரப்படுவது ஷைத்தானுடைய செயலாகவும் இருந்தபோதிலும், விருந்தினருக்கு உணவளிப்பதிலும், இறந்தவர்களை நல்லடக்கம் செய்வதிலும், பருவமெய்திய பெண்களை மணமுடித்துக் கொடுப்பதிலும், கடனைத் திருப்பிக் கொடுப்பதிலும், பாவமன்னிப்புக் கோருவதிலும், துரிதப்படுவது சிறப்புடையதாகும்'' என்று கூறினர்.

வெளியூர் செல்ல விரும்பிய ஒருவன் அவர்களிடம் வந்து அறிவுரை வேண்டியபொழுது, ''உமக்கு நண்பன் வேண்டுமென்றால் அல்லாஹ் போதும். கூட்டாளி வேண்டுமென்றால் கிராமன் காத்திபீன் போதும். அன்பு செலுத்துபவனை நாடினால் குர்ஆன் போதும். வேலை அவசியமென்றால் வணக்கம் போதும். அறிவுரை சொல்பவன் தேவை என்றால் இறப்புப் போதும். நான் கூறும் இவை உம் மனத்திற்குப் பிடித்தமில்லையென்றால் உமக்கு நரகம் போதும்'' என்று கூறினர்.

ஒருதடவை அவர்கள் மார்க்க அறிஞர்களைச் சந்தித்த பொழுது, அவர்களை நோக்கி, ''உங்களிடையே மூன்று விஷயங்கள் இருப்பின் நல்லது; இல்லையெனில் உங்களுக்கு நரகம் ஒதுங்கும் தலமாகிவிடும்'' என்று கூறினர். அந்த மூன்று விஷங்கள் யாவை என்று அவர்கள் வினவியபொழுது, ''(1) நீங்கள் வீணே கழித்த நாட்களை எண்ணி வருந்த முறுங்கள். (2) இன்றையத் தினத்தை நன்கு பேணிப் பயன்படுத்துங்கள். உங்களின் பெரும்பாலான நேரத்தை வணக்கத்தில் ஈடுபடுத்தி இறைவனை மகிழ்வியுங்கள். (3) நாளை நிகழ்வதைப் பற்றி அதாவது மறுமையில் உங்களுக்கு மீட்சி கிடைக்குமா? அல்லவா என்பதைப் பற்றி அஞ்சிக் கொள்ளுங்கள்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் மக்களை நோக்கி, ''ஒருவன் புதை குழிகளைக் கண்டும் தன் பெருமையை விடாமலும், அதில் அடங்கப் பெற்றிருப்பவர்களுக்காக துஆ இரக்காமலும், செல்வனாயின், அவன் தனக்காக மட்டுமல்லாது அதில் அடங்கப் பெற்றிருப்பவர்களுக்கும் வஞ்சகம் செய்தவனாவான்'' என்று கூறினர்.

புறம் பேசுகிறவனும், கோள் சொல்கிறவனும் நரகவாசிகளின் இரண்டு நாய்களாவர் .பொய்யனும் அவ்வாறேயாவான், பொறாமைக் காரன் நரகவாசிகளின் பன்றியாவான்'' என்று அவர்கள் இயம்பினர்.

மற்றொரு தடவை அவர்கள் மக்களை நோக்கி ''நீங்கள் ஒருவரிடம் ... குறையைக் காணின், அதனை அவரிடமே எடுத்துரைத்து, அவரைத்

திருத்தாமலிருந்தால், நீங்கள் அவருக்குத் துரோகம் இழைத்தவர்களாவீர்கள். அக்குறையை நீங்கள் பிறரிடம் எடுத்துரைப்பின், நீங்கள் கோளுரைத்தவர்களாவீர்கள். அதனை எவரிடமும் கூறாதிருப்பின், மனிதத் தன்மையை இழந்தவர்களாவீர்கள். அவரிடமே நீங்கள் அதனை எடுத்துரைப்பின், நீங்கள் அவரின் சினேகிதற்கு ஆனாவீர்கள்'' என்று கூறினார்கள்.

''அவ்விதமாயின் நாங்கள் என் செய்வது?'' என்று மக்கள் வினவினர்.

''நீங்கள் அவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுதே, அக்குறையைச் சாடையாக அவரிடம் எடுத்துரைக்க வேண்டும்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

மனத்தை அவர்கள் ஐந்துவிதமாகப் பிரித்தனர். அவற்றில் செத்துவிட்ட மனம் இறை மறுப்பாளர்களுக்குரியது என்றும், நோயுற்ற மனம் பாவிகளுடையது என்றும், அசட்டையான மனம் வயிறு புடைக்கத் தின்பவர்களுடையது என்றும், திரையிடப்பட்ட மனம் அல்லாஹ்வால் முத்திரையிடப்பட்டது என்றும், ஒழுங்கான மனம் இறை நம்பிக்கையாளர்களுடையது என்றும், அதில் இறையச்சம் எப்பொழுதும் குடி கொண்டிருக்கும் என்றும் அவர்கள் கூறினர்.

எவரும் அவர்களிடம் 'பைஅத்' பெற்று அவர்களின் ஆன்மீக மாணவராக விரும்பின், அவர்கள் அவரை நோக்கி, ''நீர் இறப்பதற்கு முன் நான்கு இறப்புகளை உம்மீது நீர் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

''அவற்றில் முதலாவது இறப்பின் நிறம் வெண்மை. அதாவது நீர் பசியோடும் பட்டினியோடும் இருக்க வேண்டும்.''

''இரண்டவது இறப்பின் நிறம் கறுப்பு. அதாவது நீர் படைப் பினங்கள் தரும் தொல்லைகளை இனிய உள்ளத்துடன் பொறுத்துக் கொள்ள வேண்டும்.''

''மூன்றாவது இறப்பின் நிறம் சிவப்பு. அதாவது நீர் உம் நஃப்ஸுக்கு மாற்றம் செய்ய வேண்டும்.''

''நான்காவது இறப்பின் நிறம் பச்சை. அதாவது நீர் தைத்த உடைகளை அணியாது, தைக்காத முரட்டுக் கம்பளித் துணிகளையே அணிந்து கொள்ள வேண்டும்'' என்று கூறுவர்.

அவர்கள் எவரிடமிருந்தும் எதனையும் ஏற்றுக் கொள்வதில்லை. இதற்கான காரணத்தை அவர்களிடம் ஒருவர் வினவியபொழுது, 'ஒருவனிடமிருந்து ஒன்றை நான் ஏற்றுக்கொளின் அவனுக்குப் பெருமை உணர்வு ஏற்படுவதை நான் காண்கிறேன். எனவே நான் அதனைத் தவிர்ந்து கொண்டேன்'' என்று பதிலிறுத்தனர். இவ்வாறு கூறிய அவர்கள் ஒரு

தடவை ஒருவரிடமிருந்து அன்பளிப்பாக ஒரு பொருளை ஏற்றுக் கொண்டனர். இதைக் கண்டு அவர்களின் தோழர்கள் தங்களின் வியப்பைத் தெரிவித்த பொழுது, ''அவருடைய கௌரவத்தை என்னுடைய கௌரவத்தைவிட மேலாகக் கருதினேன். எனவே அதனை அவரிடமிருந்து ஏற்றுக்கொண்டேன்'' என்று இயம்பினர்.

ஒருநாள் அவர்கள் தம் இல்லத்தில் அமர்ந்திருக்கும் பொழுது, அவ்வழியே ஒரு செல்வர் தம் நண்பர் குழாம் புடைசூழச் சென்று கொண்டிருந்தார். திடீரென அவர் அவர்களின் வீட்டு வாசலில் நின்று, ''தாகமாயுள்ளது. அருந்தத் தண்ணீர் தாருங்கள்'' என்று கூறினார். உடனே அவர்கள் உள்ளே சென்று அவர் அருந்தத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதனை அருந்திய பின் அவர் சில வெள்ளி நாணயங்களை எடுத்து அவர்களின் முன் காணிக்கையாக வைத்துவிட்டுச் சென்றார். அவரைப் பின்பற்றி அவர்களின் நண்பர்களும் அவ்விதமே செய்தார்கள். ஒரு கணத்தில் குவியல் பணம் சேர்ந்துவிட்டது. அது கண்டு அவர்களின் வீட்டிலுள்ளோர் மகிழ்ந்தார்கள். ஆனால் அவர்களின் சின்னஞ்சிறு மகள், மகிழ்வதற்குப் பதிலாக அழுதது. அப்பொழுது அவர்கள் அச்சிறுமியை நோக்கி, ''ஏன் அம்மா அழுகிறாய்?'' என்று வினவினர். அதற்கு அக்குழந்தை, அல்லாஹ்வின் படைப்பினங்களில் ஒருவர் நம்மை அன்புக் கண்களுடன் பார்க்கும் பொழுது நாம் செல்வம் படைத்தவர்களாகி விடுகிறோம். படைத்தவனே அருட் கண்களுடன் பார்க்கும் பொழுது நம் நிலையாதாகும் என்று எண்ணினேன். என்னை அறியாமல் எனக்கு அழுகை வந்து விட்டது'' என்று கூறி மீண்டும் அழுதது. அது கண்டு அவர்களும் அழுதார்கள்.

இறைவனின் பேரருளில் அவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை இருந்து வந்தது. ஒருநாள் ஒருவர் அவர்களிடம் வந்து, ''உங்களுக்கு உணவு எவ்வாறு கிடைக்கிறது'' என்று வினவிய பொழுது, ''வானம், பூமி ஆகியவற்றின் கருவூலங்கள் இறைவனுக்கே உரியவையாகும்'' என்ற கருத்தமைந்த இறை வசனத்தை அவர்கள் ஓதினர்.

இதுபற்றி அவர்கள் வேறொரு தடவை பேசுங்கால் ''ஒவ்வொரு வைகறையிலும் இப்லீஸ் தம்மிடம் ஊசாட்டத்தை உண்டுபண்ணுவதாகவும் முதலில் தம்மை நோக்கி, ''இன்று என்ன உண்ணுவீர்?'' என்ற ஊசாட்டத்தை உண்டுபண்ணுவதாகவும் அதற்குத் தாம் இறப்பை உண்பதாகப் பதில் கூறுவதாகவும், அதன்பின் அவன் தம்மை நோக்கி, ''நீர் இன்று என்ன உடை உடுத்துவீர்?'' என்ற ஊசாட்டத்தை உண்டு பண்ணுவதாகவும், அதற்குத் தாம் கஃபனை உடுத்துவதாக விடையிறுப்பதாகவும், பின்னரும் அவன் தம்மை நோக்கி, ''நீர் இன்று எங்குத்

தங்குவாய்?'' என்ற ஊசாட்டத்தை உண்டுபண்ணுவதாகவும் அதற்குத் தாம் புதைகுழியில் தங்குவதாகப் பதிலுரைப்பதாகவும், அதுகேட்டு அவன், நீ மகிழ்ச்சியற்றவன்'' என்று தம்மை இழிந்துரைத்துவிட்டு அகன்று விடுவதாகவும் கூறினர்.

அவர்கள் இறையருளில் கொண்ட அளவற்ற நம்பிக்கை பற்றிய நிகழ்ச்சி ஒன்றை இப்னு ஹதீக் இதோ கூறுகிறார். நாமும் கேட்போம்.

''நாங்கள் ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்களுடன் சேர்ந்து மஸ்ஸிஸா என்ற ஊரை அடைந்தோம். அவ்வூரை அடைந்ததும் அவர்கள், 'இவ்வூரைச் சேர்ந்த ஒருவர் வந்து என் வாயைப் பிளந்து அதில் அன்னத்தை ஊட்டும் வரையில் நான் உணவுண்ணப் போவதில்லை' என்று கூறி ஓரிடத்தில் அமர்ந்து எங்களையெல்லாம் போய்விடுமாறு கூறினார்கள். அதன் பின் அவ்விடத்திலேயே அவர்கள் உண்ணாது ஒருநாளல்ல, இருநாட்களல்ல, ஒன்பது நாட்கள் வீற்றிருந்தார்கள். இந்த ஒன்பது நாட்களும் அவர்களை ஒரு குஞ்சு குருவி கூட வந்து ஏறிட்டுப் பார்க்க வில்லை.

''பத்தாவது நாள் புலர்ந்தது. அவ்வூரிலுள்ள ஒரு மனிதர் அவர்களை நோக்கி வந்தார். அவர் என்ன செய்கிறார் என்பதை நாங்கள் பதுங்கி இருந்து பார்த்துக் கொண்டிருந்தோம். அவர் அவர்களை அணுகித் தம் கையிலிருந்த உணவுப் பொட்டலத்தை அவர்களின் முன் வைத்து 'உண்ணும்' என்று கூறினார். அவர்கள் அதனை உண்ணவும் இல்லை. யாதொரு பதிலும் கூறவும் இல்லை. இவ்வாறு அவர் மூன்று முறை கூறினார்.

''மூன்று முறை கூறியும் அவர்கள் உண்ணாதிருப்பதைக் கண்ட அவர், 'இவர் ஒரு பைத்தியம் போல் தோன்றுகிறது' என்று கூறிய வராய்த் தாம் கொண்டு வந்த உணவில் ஒரு பிடி எடுத்து அவர்களின் வாயருகில் கொண்டு சென்றார். ஆனால் அவர்கள், அதனை உண்ணுவதற் காகவோ அன்றி பேசுவதற்காகவோ வாயைத் திறந்தார்களில்லை. அப்பொழுது அவர் தம்மிடமிருந்த ஒரு திறவு கோலை எடுத்து அவர் களின் வாயைப் பிளந்து தாம் கொண்டு வந்த உணவில் ஒரு கவளத்தை எடுத்து ஊட்டினார். அப்பொழுது தான் அவர்கள் அதனை உண்டார்கள். அப்பொழுது நாங்கள் அவர்களை அணுகினோம். அவர்கள் எங்களை அவரிடம் கட்டிக்காட்டி, 'இறைவன் உமக்குப் பேரருள் பாலிக்க விரும்பின் இவர்களுக்கும் உணவளிப்பீராக!' என்று கூறினர்.''

மற்றொரு நாள் நாஸ்திகன் ஒருவன் அவர்களிடம் வந்து, அவர்களை வாயில் வந்தபடியெல்லாம் திட்டி வம்புச் சண்டைக்கு இழுத்தான்.

அப்பொழுது அவனுக்கும் அவர்களுக்கும் இடையில் பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது.

நாஸ்திகன் : எவரேனும் பிச்சை தந்தால் அதனை வாங்கித் தின்பவன் நீ. மனிதர்களின் சொத்தைத் தூக்கி விழுங்கி ஏப்பமிடுபவன் நீ.

ஹாத்திம் : உன் சொத்திலிருந்து நான் ஏதேனும் தின்றேனா?

நாஸ்திகன் : இல்லை.

ஹாத்திம் : அவ்விதமாயின் நீ மனிதனல்ல என்று பெறப்படுகிற தல்லவா?

நாஸ்திகன் : நீ யுக்தி (ஹுஜ்ஜத்) யாகப் பேசுகின்றாய்.

ஹாத்திம் : அதில் என்ன தவறு உள்ளது? மறுமையில் இறைவன் தன் அடியார்களுடன் யுக்தியாக உரையாடுவான் என்று கூறப்பட்டுள்ளதே.

நாஸ்திகன் : நீ வீண் பேச்சுப் பேசுகின்றாய்.

ஹாத்திம் : இறைவன் மனிதர்களுக்குப் பேச்சை அனுப்பி வைத்தான். அப்பேச்சினால் தான் உன் அன்னை உன் தந்தைக்கு 'ஹலால்' ஆக்கப்பட்டாள். இல்லையெனில் நீ ஹராத்தில் தான் பிறந்திருப்பாய்.

நாஸ்திகன் : உனக்கு இரணம் விண்ணிலிருந்தா வருகிறது?

ஹாத்திம் : எனக்கு மட்டுமென்ன? அனைவருக்கும் இரணம் விண்ணிலிருந்துதான் வருகிறது.

நாஸ்திகன் : அப்படியா? நன்கு குறட்டைவிட்டுத் தூங்கு, உன் இறைவன் உன் வாயில் உன் இரணத்தை இறக்கி வைப்பான்.

ஹாத்திம் : இரண்டு ஆண்டுகள் நான் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த பொழுது என் இரணம் என் வாயில் தான் வந்து தானாகவே இறங்கியது.

நாஸ்திகன் : விதைக்காமல் அறுவடை செய்யப்படுவதைப் பார்த்தாயா?

ஹாத்திம் : ஆம்! பார்த்துள்ளேன். உன் தலை மயிர் விதைக்காமல் தான் அறுக்கப்படுகிறது.

நாஸ்திகன் : வானத்தைப் பார்த்துக் கொண்டிரு. உனக்கு இரணம் கிடைக்கும்.

ஹாத்திம் : நான் பறவையாக இருந்திருப்பின் விண்ணிலே பறந்து சென்றுதான் உணவு தேடி வந்திருப்பேன்.

நாஸ்திகன் : அவ்விதம் பூமியின் கீழே செல்லும். அங்கு உனக்கு இரணம் கிடைக்கும்.

ஹாத்திம் : ஆம்; நான் எறும்பாய் இருந்திருப்பின் எனக்குப் பூமியின் கீழேதான் இரணம் கிடைத்திருக்கும்.

இவ்வாறு அந்த நாஸ்திகன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சுடச்சுட வாயாப்புக் கொடுத்தனர் ஹாத்திம். அது கேட்டு உணர்வு பெற்ற அவன் அக்கணமே தன் பிழைபொறுத்தருளுமாறு வேண்டி, அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தைத் தழுவினான்.

ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள் மட்டுமல்லாது, அவர்களின் மனைவியும் இறைவனின் பேரருளில் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஒரு தடவை அவர்கள் வெளியூர் செல்ல விரும்பிய பொழுது, தம் மனைவியை அணுகி, ''நான் வெளியூர் செல்கிறேன். திரும்பிவர நான்கு மாதங்கள் ஆகலாம். உனக்குச் செலவுக்கு எவ்வளவு பணம் தேவைப்படுமோ அதனைக் கூறு. தந்துவிட்டுச் செல்கிறேன்'' என்று இயம்பினர். அதற்கு அவர்களின் மனைவி, ''தாங்கள் எனக்கு எவ்வளவு செலவாகுமென்று கருதுகின்றீர்களோ அதனைத் தாருங்கள்'' என்று கூறினர். அதுகேட்ட அவர்கள், ''உன் வாணாள் என் கையில் இல்லையே'' என்று சொன்னார்கள். ''ஆம்; என் இரணம் கூடத் தங்கள் கையில் இல்லை'' என்று அவ்வம்மையார் மறுமொழி பகர்ந்தனர். ''உண்மை உரைத்தாய்'' என்று கூறிவிட்டு, மறுவார்த்தை பேசாது அவ்விடத்தைவிட்டும் அகன்றனர் ஹாத்திம்.

அவர்கள் ஊரைவிட்டுப் புறப்பட்ட பின், ஒரு கிழவி ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்களின் மனைவியிடம் வந்து, ''ஹாத்திம் உமக்கு எவ்வளவு உணவுப் பொருள் தந்துவிட்டு சென்றார்'' என்று வினவினாள். அதற்கு அவர்களின் மனைவி ''உணவைத் தின்பவர் போய்விட்டார். உணவளிப்பவன் என்னுடன் உள்ளான்'' என்று பதிலிறுத்தனர்.

மனிதன் பொருளீட்டுவதில் பேயெனத் திரிவதை அவர்கள் விரும்ப வில்லை. ஒருநாள் ஒருவன் அவர்களிடம் வந்து, ''இன்னார் பொருள் அதிகமாகச் சேர்த்து வைத்துள்ளார்'' என்று கூறிய பொழுது, ''அத்துடன் அவர் தம் வாணாளையும் சேர்த்து வைத்துள்ளாரா?'' என்று வினவினர். 'இல்லையே' என்று அவன் பதில் கூறவே ''அவ்விதமாயின் அவன் விரைவில் இறக்கப் போகின்றான். இறந்தபின் அவனுக்கு அப்பணத்தால் என்ன பயன் விளையப் போகிறது?'' என்று கூறினார்கள்.

ஒரு தடவை அவர்கள் முந்நூற்று இருபது பேர்களுடன் ஹஜ்ஜுக்குச் சென்ற பொழுது, மக்காவில் ஒரு செல்வர் அவர்கள் அனைவருக்கும் விருந்து வழங்கி உபசரித்தார். பின்னர் அவர்களை நோக்கி, ''நான் நோய் வாய்ப்பட்டுள்ள மார்க்க அறிஞர் ஒருவரைக் காணச் செல்கிறேன். தங்களுக்கு ஏதேனும் தேவை இருப்பின் கூறுங்கள். ஆவன செய்துவிட்டுச் செல்கிறேன்'' என்று கூறினர். அதுகேட்ட அவர்கள், ''எனக்கு ஒன்றும் தேவையில்லை. எனினும் தங்களுடன் நானும் அவரைக் காண வருகின்றேன்'' என்று கூறினர். அதற்கு அவரும் இசையவே இருவரும் முஹம்மது இப்னு முகத்தில் என்ற அந்த மார்க்க அறிஞரைக் காணப் புறப்பட்டார்கள். அந்நகர நீதிபதியாகிய அம்மார்க்க அறிஞர், ஆடம்பரமான மாளிகை ஒன்றில் பட்டு மெத்தையின் மீது படுத்திருப்பதைக் கண்டதும், ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்களுக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது. அவர், இவர்களை வரவேற்று அமருமாறு கூற, ''நான் அமரமாட்டேன்'' என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள். அதுகேட்ட அந்த நோயாளரின் முகம் வெளிறியது. ''என்னிடம் தங்களுக்கு ஏதேனும் ஆக வேண்டியுள்ளதா?'' என்று அவர் வினயமாக வேண்ட, 'ஆம்' என்று அவர்கள் விடையிறுத்தார்கள். ''என்ன அது?'' என்று அவர் கேட்க, ''எழுந்து அமருங்கள் கூறுகின்றேன்'' என்று அவர்கள் பதில் மொழிந்தார்கள். அவரும் அவ்வாறே சிரமப்பட்டு எழுந்து அமர்ந்தார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''தங்களிடம் அறிவு உள்ளதா? அதனைத் தாங்கள் எவரிடமிருந்து பெற்றீர்கள்?'' என்று வினவினர். ''நம்பத் தகுந்த பெரிய மனிதர்களிடமிருந்து'' என்று விடையளித்தார். ''அவர்கள் எவரிடமிருந்து அவ்வறிவைப் பெற்றனர்?'' என்று அடுத்து வினவினர் ஹாத்திம். ''நபித் தோழரிடமிருந்து'' என்று அவர் பதிலிறுத்தார். ''நபித் தோழர்கள் எவரிடமிருந்து அவ்வறிவைப் பெற்றனர்?'' என்று வினவினர் ஹாத்திம். ''நபி பெருமான் (ஸல்) அவர்களிடமிருந்து'' என்று பதில் கூறினார். ''நபிபெருமான் (ஸல்) அவர்களுக்கு எவரிடமிருந்து அவ்வறிவு கிடைத்தது?'' என்று வினவினர் ஹாத்திம். ''ஜிப்ரீல் (அலை) அவர்களிடமிருந்து'' என்று மறுமொழி பகர்ந்தார் அவர்.

அப்பொழுது ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள் அவரை நோக்கி, ''ஒருவன் தன் வீட்டைத் தேவைக்குமேல் விரிவுபடுத்தின் அவனுக்கு இறைவனிடமிருந்து கண்ணியம் கிடைக்காது என்பது தங்களுக்குத் தெரியாதா? இதைப்பற்றி தாங்கள் ஏதேனும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்று வினவினர்.

''ஆம்'' என்று அவர் மறுமொழி பகரவே, ''என்ன கேள்விப்பட்டிருக்கிறீர்கள்?'' என்று அடுத்து வினா விடுத்தனர் ஹாத்திம். ''உலகில் பற்றில்லாமல் வாழ வேண்டும் என்று நான் பெரிதும் கேள்விப்பட்

டுள்ளேன். இம்மையை வெறுத்து துறவறத்தை மேற்கொண்டு நடக்கும் ஒருவன் மறுமையில் ஆர்வம் கொண்டால், ஏழைகள் மீது அன்பு செலுத்தினால், அவனுக்கு இறைவனிடத்தில் கிடைக்கும் பேறு மகத்தானது என்று கேள்விப்பட்டுள்ளேன்'' என்று அவர் விடையிறுத்தார்.

அப்பொழுது ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள் அவரை நோக்கி, ''தாங்கள் எவரைப் பின்பற்றுகிறீர்கள்? இம்மை வாழ்வைத் துரும்பெனக் கருதித் தூக்கி எறிந்த எம்பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுகின்றீர்களா? அல்லது இவ்வுலகில் என்றென்றும் வாழ்ந் திருக்கப் போவதாக எண்ணி மாட மாளிகைகள் எழுப்பிய பிர்ஔனையும் நம்ரூதையும் பின்பற்றுகின்றீர்களா?'' என்று வினவினர்.

அந்த நீதிபதி யாது கூறுவதென அறியாது வாயடைத்து வீற்றிருந்தார். அப்பொழுது ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள் அவரை நோக்கி, 'தங்களைப் போன்றவர்கள் தாம் கெட்ட அறிஞர்கள். தங்களைப் போன்றவர்களால் தான் பாமரர்கள் அநியாயமாகக் கெட்டுப் போகின்றார்கள்' என்று கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டும் விறுவிறு வென்று வெளியேறிவிட்டார்கள்.

அப்பொழுது அவர்களிடம் மக்கள் முஹம்மது இப்னு முகத்திலை விட மிக ஆடம்பரமாக முஹம்மது இப்னு உபைதுல் தனாஃபிஸி என்பவர் வாழ்கிறார் என்று கூறியபொழுது ''அப்படியா! அவரையும் போய்ப் பார்த்து வருவோமே'' என்று கூறி அவரின் இல்லத்தை அடைந்தார்கள் அவர்கள். அப்பொழுது அவர் தம் நண்பர்களுடன் ஒய்யாரமாக அமர்ந்து உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தார்.

அவருக்கு 'ஸலாம்' உரைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த அவர்கள் அவரை நோக்கி, ''உபைதுல் தனாஃபிஸியே! நான் ஒரு பரதேசி. நான் இங்கு வந்த நோக்கம் உம்மிடமிருந்து மார்க்கத்தின் அடிப்படை சட்ட திட்டங்களையும் தொழுகைக்கான செயல் முறைகளையும் அறிந்து செல்வதற்காகவேயாம். தொழுவதற்கு முன் எவ்வாறு 'உளூ'ச் செய்வது என்பதை எனக்குக் கற்றுத் தருகிறீரா?'' என்று வினவினர்.

''அதற்கென்ன! நிச்சயமாகக் கற்றுத் தருகிறேன்'' என்று கூறி ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொணருமாறு தம் அடிமையிடம் கூறினார். உடனே தண்ணீர் கொணரப்பட்டது. அதைக் கொண்டு தம்முடைய உடல் உறுப்புகளை மும் மூன்று தடவைக் கழுவி, ''இதுதான் 'உளூ'ச் செய்யும் முறை. இவ்வாறுதான் 'உளூ'ச் செய்ய வேண்டும்'' என்று கூறினார் உபைதுல் தனாஃபிஸீ.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி ''நீர் செய்த வண்ணம் நானும் 'உளூ'ச் செய்கிறேன். அதனை நான் ஒழுங்காக வரிசை தப்பாது செய்கிறேனா என்பதை நீர் பாரும்'' என்று கூறினார்.

உபைதுல் தனாஃபிஸீ தாம் 'உளூ'ச் செய்த இடத்திலிருந்து எழுந்தார். அவ்விடத்தில் அவர்கள் போய் அமர்ந்து 'உளூ'ச் செய்தார்கள். முகத்தை மூன்று தடவை தண்ணீரால் கழுவிய அவர்கள் தம் முன்னங்கையை நான்கு தடவை தண்ணீரால் கழுவினார்கள்.

உடனே உபைதுல் தனாஃபிஸீ குறுக்கிட்டு, ''நீர் கடப்புச் செய்கிறீர். மூன்று தடவைதான் ஒவ்வொரு உறுப்பையும் கழுவ வேண்டும். நீர் நான்கு தடவை உம் முன்னங்கையைக் கழுவியது கடப்பாகும்'' என்று கூறினார்.

தமக்கு அவரை மடக்க இப்பொழுது சரியான வாய்ப்புக் கிடைத்தது என்பதை உணர்ந்த அவர்கள் அவரை நோக்கி, ''நான் சிரங்கையளவு தண்ணீரை எடுத்து அதிகப்படியாகச் செலவழித்தது தான் கடப்பாகி விட்டதா என்ன? நீர் இத்துணைப் பிரம்மாண்டமான மாளிகை கட்டி இத்துணை ஆடம்பரங்களுடன் வாழ்வது கடப்பு இல்லையா?'' என்று வினவினர்.

யாது பதில் கூறுவதென அறியாது நாணத்துடன் உள்ளே நுழைந்த அவர் இதன்பின் நாற்பது நாட்கள் வரை வெளியே தலை காட்டவே இல்லை.

இதன்பின் மக்கா சென்று 'ஹஜ்ஜு'ச் செய்து விட்டு மதீனா சென்ற அவர்கள் அது குபேரபுரி போன்று காட்சி வழங்கியதைக் கண்டதும் அங்கிருந்த மக்களை நோக்கி, ''இது எந்த ஊர்?'' என்று வினவினர்.

''நபியின் திருநகர்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

''அப்படியா? அப்படியானால் நபி (ஸல்) அவர்களின் அரண்மனை எங்கே உள்ளது? காட்டுங்கள். நான் அங்குச் சென்று தொழ விரும்புகிறேன்'' என்று கூறினார்கள் அவர்கள்.

அதுகேட்ட மக்கள் ''நபி (ஸல்) அவர்கள் அரண்மனையில் வாழவில்லையே. அவர்கள் சிறு குடிலிலன்றோ வாழ்ந்தார்கள்'' என்று கூறினார்கள்.

''அப்படியா? அப்படியானால், அவர்களின் அன்புத் தோழர்கள் வாழ்ந்த மாளிகைகளையாவது காட்டுங்கள். அங்குச் சென்று நான் தொழுது விட்டு வர எண்ணுகிறேன்'' என்று கூறினார்கள் ஹாத்திம்.

''அவர்களும் சிறு குடிலில்தான் வாழ்ந்தார்கள்'' என்று பதில் கூறினார்கள் மக்கள்.

''அப்படியானால் இது நபியின் பட்டணமாகத் தோன்றவில்லையே. ஃபிர்அவ்னின் பட்டணம் போன்றல்லவோ தோன்றுகின்றது'' என்றனர் ஹாத்திம்.

அதுகேட்ட மக்கள் அவர்களை வாயில் வந்தபடி எல்லாம் ஏசி, ''எங்கேயோ இருந்து வந்த பரதேசிப் பயல் இதனை ஃபிர்அவ்னின் பட்டணம் என்று கூறுகிறான்'' என்று எங்கணும் புரளியைக் கிளப்பி விட்டார்கள்.

இது அந்நகர் ஆளுநரின் செவிப்போந்ததும், அவர் அவர்களைத் தம்முன் அழைத்து வருமாறு செய்து ''நீர் யார்? யாது கூறினீர்?'' என்று வினவினார்.

அதற்கு அவர்கள், ''ஆளுநர் அவர்களே! நானோ ஒரு பரதேசி. 'ஹஜ்'ஜுக் கடமையை முடித்துவிட்டு, அண்ணல் எங்கள் ஆருயிரின் அடக்கவிடத்தை தரிசிப்பதற்காக இங்கு வந்தபொழுது, இங்கு வானளாவ உயர்ந்து நிற்கும் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் கண்டு, ''இது எந்த ஊர்?'' என்று வியப்புடன் வினவினேன். 'நபியின் பட்டணம்' என்று மக்கள் பதில் கூறினர். 'அவ்விதமாயின் அவர்கள் வாழ்ந்த அரண்மனை எங்கே? அவர்களின் அன்புத் தோழர்களான ஸஹாபாப் பெருமக்கள் வாழ்ந்த மாளிகைகள் எங்கே?' என்று அவர்களை வினவினேன்; அதற்கு மக்கள் 'அவர்கள் எல்லாம் சிறு குடில்களிலல்லவோ வாழ்ந்தனர்' என்று பதில் கூறினார்கள்.

''அப்பொழுது என் மனத்திரையில் 'எவர்கள், அல்லாஹ்வையும் இறுதி நாளையும் உறுதியாக நம்புகிறார்களோ அவர்கள் பின்பற்றி நடக்க வேண்டிய அழகான உதாரணம், நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே உள்ளது' என்ற 33:21- ஆவது திருவசனம் பளிச்சிட்டது.

''அவ்விதமாயின் இந்நகர மக்கள் எவரைப் பின்பற்றுகிறார்கள்? அண்ணல் நபி (ஸல்) அவர்களையா? ஃபிர்அவ்னையா என்ற ஐயம் எனக்கு ஏற்பட, இது நபியின் பட்டணமாக எனக்குத் தோன்றவில்லையே. ஃபிர்அவ்னின் பட்டணம் போன்றல்லவோ தோன்றுகின்றது என்று கூறினேன். அவ்வளவுதான்'' என்று கூறினார்கள்.

ஆளுநரின் முகம் நாணத்தால் வெளுத்தது.

# பொருளடக்கம்



மனிதன் எந்நிலையிலும் அல்லாஹ்வுக்கு அஞ்சியவனாகவும், அடி பணிந்தவனாகவும் இருக்க வேண்டுமென்று கூறிய அவர்கள், ''மறுமையில் இறைவன் நான்கு கூட்டத்தினருக்கு நான்கு பேர்களைச் சான்றாகக் காட்டுவான். செல்வர்களுக்கு சுலைமான் (அலை) அவர்களையும் ஏழைகளுக்கு ஈஸா (அலை) அவர்களையும், அடிமைகளுக்கு யூசுபு (அலை) அவர்களையும் துன்புற்றோர்களுக்கு ஐயூபு (அலை) அவர்களையும் காட்டுவான்'' என்று கூறிய அவர்கள் எந்நிலையிலும் அல்லாஹ்வுக்கு அஞ்சி அடிபணிந்து ஒழுகிய நல்லவராக வாழ்ந்து அறிஞர் முதல் பாமரர் வரைக்கும் அறபோதம் வழங்கிவிட்டு ஹிஜ்ரி 237-ஆம் ஆண்டில் திர்மிதியின் அண்மையிலுள்ள வாஷ்ஜர்த் என்ற இடத்தில் இறந்து அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

## 18. துன்னூன் மிஸ்ரீ (ரஹ்)

"ஓரிடத்தில் ஒரு துறவி வாழ்ந்து கொண்டிருப்பதாகக் கேள்வியுற்றேன். நான் அங்கு சென்று அவரைப் பார்த்த பொழுது, அவர் ஒரு மரத்தில் தலை கீழாகத் தொங்கிக் கொண்டு, 'என் உடலே! இறைவனை வழிபட எனக்கு உதவி செய். இல்லையெனில் நீ பட்டினி யால் சாகும் வரையில் உன்னை நான் இம்மரத்தில் இப்படியே தொங்கப் போட்டு விடுவேன்' என்று கூறிக் கொண்டிருந்தார். அவரின் இப்பரிதாப நிலையைக் கண்டு எனக்கு அழுகை, அழுகையாக வந்தது. நான் விக்கி, விக்கி அழுவதைக் கண்ட அவர், என்னை நோக்கி, 'நாணம் சிறிதுமின்றி பாவம் அதிகம் செய்த ஒரு மா பாதகன் மீது இரக்கமுற்று அழும் நீ யார்?' என்று வினவினார். நான் அவரை அணுகி, அவருக்கு ஸலாம் உரைத்து, 'ஏன் இவ்வாறு செய்து கொண்டுள்ளீர்கள்?' என்று அனுதாபத்துடன் கேட்டேன். அதற்கு அவர் 'இந்த உடல் என்னை இறைவனை வணங்க விடாது தடுக்கிறது. மற்ற மனிதர்களுடன் சேர்ந்து உறவாட விரும்பு கிறது' என்று கூறினார். 'அவர் என்ன பாவம் செய்திருப்பாரோ, தெரிய வில்லையே, எந்த முஸ்லிமையேனும் கொன்றிருப்பாரோ, என்னவோ தெரியவில்லையே' என்று நான் எண்ணினேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி, 'ஒருவன் மற்றவர்களுடன் சேர்ந்து உறவாடும் பொழுது, அதைத் தொடர்ந்து எல்லாப் பாவங்களும் வந்து சேர்கின்றன என்பது உமக்குத் தெரியாதா என்ன?' என்று வினவினார். அதுகேட்டுப் பெரிதும் வியப்புற்ற நான் அவரை நோக்கி, 'தாங்கள் எத்துணை மாபெரும் துறவியாக உள்ளீர்கள்' என்று கூறினேன். அதற்கு அவர், 'நான் என்ன மாபெரும் துறவியா! என்னைவிட மிகப் பெரும் துறவிகளும், இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றார்களே. அவர்களில் ஒருவரை நீர் பார்க்க விரும்புகின்றீரா, என்ன?' என்று வினவினார். அதற்கு நான் 'ஆம்' என்றேன். அப்பொழுது அவர் என்னை நோக்கி, 'அதோ ஒரு மலை தெரிகின்றதே அங்கு செல்லும். அங்கு ஒரு மாபெரும் துறவியைக் காண்பீர்' என்று கூறினார்.

''அடுத்த கணம் என்னுடைய கால்கள் என்னை அம்மலை நோக்கி இழுத்துச் சென்றன. அங்கு சிறுகுடில் ஒன்றில் இளவல் ஒருவர் அமர்ந்திருந்தார். அவருடைய கால்களில் ஒன்று துண்டிக்கப்பட்டு வெளியே கிடந்தது. அதனைப் புழுக்கள் தின்று கொண்டிருந்தன. நான் அவரை அணுகி, அவருக்கு 'ஸலாம்' உரைத்து, அவரின் கால் துண்டிக்கப்பட்டதற்கான காரணத்தை வினவினேன்.

''அவர் தம் கதையைக் கூறத் தொடங்கினார். 'நான் ஒருநாள் இந்தக் குடிசையில் வீற்றிருந்தேன். அப்பொழுது அழகிய மங்கை ஒருத்தி இவ்வழியே நடந்து சென்றாள். அவளைக் கண்டதும், அவள்மீது எனக்கு ஓர் ஆசை ஏற்பட்டது. அவளைப் பின்தொடர்ந்து நான் செல்ல விரும்பினேன். ஆசை மீக்குற நான் என்னை அறியாமல் எழுந்து அவள் பின்னே செல்ல விரும்பி ஒரு காலை எடுத்து இக்குடிசையின் வெளியே வைத்தேன். அப்பொழுது அசரீரி ஒன்று முழங்கியது. 'நீ முப்பதாண்டு களாக இறைவனை வழிப்பட்டு விட்டு, இப்பொழுது ஷைத்தானின் தூண்டுதலுக்கு இணங்கி அப்பரத்தையின் பின்னே செல்ல விரும்பு கின்றாயா?' என்று அது வினவியது. அதுகேட்டு எனக்கேற்பட்ட திடுக்கத்திற்கும் நாணத்திற்கும் அளவில்லை. உடனே ஓர் அரிவாளை எடுத்து, வெளியே எடுத்து வைத்த காலை வெட்டி வெளியே வீசி எறிந்தேன். அதன்பின் எனக்குத் தண்டனையாக இன்னும் என்ன பொல்லாங்கு நிகழ்கின்றதோ என்று ஏங்கிய வண்ணம் இங்கேயே வீற்றிருக்கின்றேன். என்னைப் போன்ற பாவிகளைக் காண நீர் ஏன் இங்கு வந்தீர்? அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவரைக் காண விரும்பின் இந்த மலையின் உச்சிக்குச் செல்லும். அங்கு நீர் அவரைக் காண்பீர்' என்று கூறினார்.

''மலையின் உச்சிக்குச் செல்வது சிரமமாக இருந்பதடியால் நான் அவரை நோக்கி, 'அப்படியா? அவர் எத்தகைய மனிதர்?' என்று வினவினேன். அதற்கு அவர், 'பன்னெடுங்காலமாக அங்குள்ள குகை ஒன்றில் அம்மனிதர் தவம் செய்து கொண்டிருக்கிறார். ஒருநாள் ஒருவர் அவரிடம் சென்று உழைத்துத்தான் உண்ண வேண்டுமென்று வாதாடினார். அவரோ அதனை மறுத்துரைத்ததோடு, உலகாயுதப் பொருளால் வாங்கப்படும் எதனையும் தாம் இனிமேல் உண்பதில்லை என்று உறுதி பூண்டார். இவ்வாறு உறுதி பூண்ட அவர் பல நாட்களாகப் பட்டினி கிடந்தார். அப்பொழுது இறைவன் அவர்மீது இரங்கி, தேனீக்களை அவரிடம் அனுப்பி அவரைக் கொத்துமாறு, இல்லை, இல்லை. அவருக்குத் தேன் வழங்குமாறு செய்தான்' என்று கூறினார்.

''இதைக் கேட்டதும் என் உள்ளத்தை ஒருவித விவரம் தெரியாத கவலை ஆட்கொண்டது. இறைவன்மீது அசைக்க முடியாத தவக்குல் (நம்பிக்கை) வைப்பவர்களை, இறைவன் ஒருபோதும் கைவிடுவதில்லை என்பதை நான் உணர்ந்தேன். இவ்வாறு எண்ணிய வண்ணம் நான் அவ்விடத்தை விட்டு அகன்று நடந்து சென்று கொண்டிருந்தக்கால், குருட்டுக் குருவி ஒன்று மரக்கிளையிலிருந்து கீழே தாவி அமர்ந்ததைக் கண்டேன். 'இதற்கு உணவும் தண்ணீரும் யார் அளிப்பது?' என்ற எண்ணம் என் உள்ளத்தில் அப்பொழுது ஏற்பட்டது.

''நான் அவ்வாறு ஒருகணம் தான் எண்ணியிருப்பேன். அடுத்த கணம் அக்குருட்டுக் குருவி தன் அலகால் மண்ணைத் தோண்டியதையும், மண்ணில் நெளிந்த புழுவையுண்டு அருகிலிருந்த குட்டையில் தண்ணீர் அருந்தி மரக்கிளைக்குப் பறந்து சென்றதையும் கண்டேன். அதுகண்டு எனக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

''நான் பல்லாண்டுகளாகக் காடுகளிலும் வனாந்தரங்களிலும் சுற்றித் திரிந்தேன். அக்காலை நான் ஒரே ஒரு தடவைதான் இறைவன் மீது பரிபூரண ஆதரவு (தவக்குல்) வைத்தேன் என்று கூற வேண்டும். நான் ஒரு தடவை கடற் பிரயாணம் செய்த பொழுது, நான் சென்ற கப்பல் நடுக்கடலில் உடைந்து விட்டது. நான் அதன் பலகை ஒன்றைப் பிடித்துக் கொண்டு கடலில் மிதந்தேன். அப்பொழுது நான் என்னையே நோக்கி, 'நான் இப்பொழுது கடலில் மூழ்கிச் சாக வேண்டுமென்று இறைவிதி இருக்குமாயின் இந்தப் பலகையால் என்னைக் காப்பாற்ற முடியாது' என்று கூறிக் கொண்டேன். அடுத்த கணம் நான் அந்தப் பலகையை உதறித் தள்ளினேன். அதன்பின் என்ன? அலைகள் என்னைத் தாங்கிக் கரையிலே சேர்த்துவிட்டன.''

இவ்வாறு தம் வரலாற்றைக் கூறுகின்றார்கள் எகிப்து நாடு ஈன்றெடுத்த நன்மணி அபுல் பைஃஸ் தெளபான் இப்னு இப்ராஹீம் அல்மிஸ்ரீ. இவர்களுக்கு இயற்பெயர் தெளபான் என்பதாக இருந்த போதினும் இவர்கள் வரலாற்றிலே துன்னூன் மிஸ்ரீ என்ற புகழ்ப் பெயராலேயே சிறப்புற்று விளங்குகின்றார்கள். மேற்கு எகிப்தில் எக்மீம் என்ற இடத்தில் பிறந்த இவர்கள், பல்வேறு ஆசிரியர்களிடம் பல்வேறு கல்விகளையும் பயின்றதோடு அரேபியா, சிரியா ஆகிய நாடுகளில் அலைந்து திரிந்து பற்பல மகான்களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து ஆன்மீகக் கல்வியும் பயின்றார்கள்.

உண்மையிலேயே அவர்கள் கூரிய மதி வாய்ந்தவர்களாக இருந்தனர். எகிப்தில் புராதனமான சிலை ஒன்று இருந்தது. அதன் விரல் ஒன்று நீட்டப்பட்டு எதையோ கட்டிக்காட்டுவது போன்று அமைக்கப்

பெற்றிருந்தது. அந்த விரல் மீது, ''இதன் மீது அடியுங்கள். மாபெரும் கருவூலத்தைப் பெறுவீர்கள்'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. அந்தச் சிலை சுட்டிக் காட்டும் இடத்தை பல நூறு ஆண்டுகளாகப் பலர் சுத்தியலால் அடித்தும், அவர்களின் கை நோவியதே ஒழிய கல் அணுவளவும் உடையவில்லை.

ஒரு தடவை அவர்கள் அவ்வழியே சென்ற பொழுது அச்சிலையையும் அதன் மீது எழுதப்பட்டுள்ள வாசகத்தையும் கண்டார்கள். அந்தக் கருவூலத்தைக் கண்டு பிடிப்பதற்காகப் பன்னூறு ஆண்டுகளாகச் செய்யப்பட்ட முயற்சிகள் பயனற்றுப் போன செய்தியையும் அறிந்தார்கள். அவர்களின் மூளை வேகமாக வேலை செய்யலாயிற்று. அந்தச் சிலையையே உற்று நோக்கிக் கொண்டிருந்த அவர்கள், நண்பகல் ஆனபொழுது அந்தச் சிலையின் நீட்டப்பட்ட விரலின் நிழல் அந்தச் சிலையின் அடிப்பாகத்தை நோக்கிச் செல்வதைக் கண்டனர். உடனே ஒரு சுத்தியால் அவ்விடத்தில் அடிக்க ஒருவழி திறந்தது. அது சுரங்கப் பாதைக்கான வழியாக இருந்தது. அவ்வழியே சென்று பார்த்தபொழுது, அங்கு ஏராளமான கலைச் சின்னங்களும், நூதனமான பொருள்களும் வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்று மக்களுக்கு அதனை அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

பல்வேறு பயிற்சிகள் மூலம், ஆத்மீகத் துறையிலும் பல்வேறு படித்தரங்களை எய்தப் பெற்ற இவர்கள், தம் நண்பர்களுடன் ஓரிரவு பாலைவனத்தில் அலைந்து திரிந்தபொழுது, புதையல் ஒன்றைக் கண்டெடுத்தனர். அதன் உள்ளே விலைமதிக்க இயலா நவமணிகளும் நகைகளும் இருந்தன. அப்புதையல் கலசத்தின் மீது வைக்கப்பட்டிருந்த பலகையில் அல்லாஹ்வின் திருப்பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அவர்களின் நண்பர்கள் பொன்னையும் நவமணிகளையும் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள். ஆனால் அவர்களோ, ''எனக்குப் பொன்னும் வேண்டாம்; மணியும் வேண்டாம். அல்லாஹ்வின் திருப்பெயர் பொறிக்கப்பட்டிருந்த பலகையை மட்டும் தாருங்கள். அது எனக்குப் போதும்'' என்று கூறினார்கள்.

அவ்வாறே அவர்கள் அதனை அவர்களிடம் கொடுக்க, அதனை எடுத்துச் சென்ற அவர்கள், அதனை அவ்விரவு முழுவதும் முத்தமிட்ட வண்ணம் இருந்தனர். அப்பொழுது ஓர் அசரீரி பின்வருமாறு முழங்கியது: ''அவர்கள் எல்லாம் பொன்னையும் மணியையும் எடுத்துக் கொண்ட பொழுது, நீரோ அவற்றை விட மிக மிக மேலான என்னுடைய திருப் பெயர் பொறிக்கப்பட்டிருந்த பலகையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர். எனவே நாம் உமக்கு மெய்ஞ்ஞானத் திருவாசலைத் திறந்து விட்டோம்.''

இது கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சியுற்ற துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் பக்தி பரவசமுற்ற நிலையில் தம் இல்லம் திரும்பினார்கள். இறைவன் தமக்கு வழங்கிய அருட்பெரும் பேற்றினை எண்ணி, எண்ணி வியந்தவண்ணம் தம் இல்லம் திரும்பினார்கள். ''இறைவா, இறைவா! எனக்கு இன்னும் இன்னும் பல்வேறு நற்பேறுகளை வழங்குவாயாக'' என்ற இறைஞ்சிய வண்ணம் இல்லம் திரும்பினார்கள்.

இதன்பின் அவர்கள் தங்களின் வரலாற்றை மீண்டும் தாங்களே எடுத்துரைக்கின்றார்கள். நாமும் கேட்போம்.

''ஒருநாள் நான் நடந்தேன்; நடந்தேன். நடந்து கொண்டே இருந்தேன். இறுதியாக, ஓர் ஆற்றின் கரையை வந்தடைந்தேன். அங்கு அழகிய மாளிகை ஒன்று இருநதது. ஆற்றை அடைந்த நான், அதில் இறங்கி 'உளூ'ச் செய்தேன். உளூச் செய்து திரும்பும் பொழுது, என் கண் அம்மாளிகையின் மேல் மாடியில் வீழ்ந்தது. அங்கு ஆரணங்கு ஒருத்தி அழகிய ஆடை ஆபரணங்கள் அணிந்து ஒய்யாரமாக நின்று கொண் டிருந்தாள். அப்பொழுது நான் அவளை நோக்கி, 'மங்கையே நீ யார்?' என்று வினவினேன்.

''அதற்கு அவள், ''துன்னூனே! நான் உம்மைத் தொலைவில் வைத்துப் பார்த்த பொழுது உம்மை ஒரு பைத்தியக்காரன் என்று எண்ணினேன். அதன்பின் நீர் அண்மையில் வர, வர உம்மை ஓர் அறிஞன் என்று கருதினேன். பின்னர் நீர் அதிக அண்மையில் வந்ததும், உம்மை ஒரு மெய்ஞ்ஞானி என்று நிதானித்தேன். ஆனால் நீர் மிகவும் அண்மையில் வந்து விட்டபொழுது, நீர் நான் எண்ணியது போன்று ஒரு பைத்தியக் காரனாகவும் இல்லை; அறிஞனாகவும் இல்லை; மெய்ஞ் ஞானியாகவும் இல்லையே'' என்று கூறினாள்.

'ஏன் அவ்வாறு கூறுகின்றாய்?' என்று நான் வினவினேன்.

''அதற்கு அவள், 'நீர் ஒரு பைத்தியக்காரனாயிருந்திருப்பின் நீர் 'உளூ'ச் செய்திருக்க மாட்டீர். நீர் ஓர் அறிஞனாய் இருந்திருப்பின் அந்நியப் பெண்ணை ஏறிட்டும் பார்த்திருக்க மாட்டீர். நீர் ஒரு மெய்ஞ்ஞானியாய் இருந்திருப்பின், உம்முடைய கண் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றின்மீதும் விழுந்திராது.'

''இவ்வாறு கூறிவிட்டு அவள் அக்கணமே மறைந்து விட்டாள். அப்பொழுது தான் அவள் ஒரு சாதாரணப் பெண்ணல்ல; எனக்கு எச்சரிக்கை செய்வதற்காக இறைவனால் அனுப்பி வைக்கப்பட்டவள் என்ற உண்மை எனக்குத் தெரியவந்தது.

''திடுக்கமும் திகிலும் அடைந்தவனாய் கடற்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது கப்பல் ஒன்று புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது. அதில் பலர் ஏறிக்கொண்டிருந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து அதில் ஏறிக் கொண்டேன்.

''அலைகடலின் நடுவே கப்பல் போய்க் கொண்டிருந்தது. திடீரெனக் கப்பலில் அமளி துமளி ஏற்பட்டது. கப்பலில் இருந்த ஒரு வணிகரிட மிருந்த நன்மணி ஒன்று காணாமற் போய்விட்டது. கண்டெடுத்தவர் எவரேனும் கொடுத்து விடுங்கள் என்று கப்பலின் மீகாமன் கத்தினான். ஆனால் ஒருவரேனும் 'அங்கு கிடந்தது; இங்கு கிடந்தது. எடுத்து வந்தேன்' என்று கூறிக் கொடுத்தார்களில்லை.

''இதன் பின் என்ன? கப்பலிலிருந்த ஒவ்வொரு பிரயாணியும் சோதிக் கப்பட்டான். அவனுடைய மூட்டை முடிச்சுகளும் சோதிக்கப் பட்டன. எனினும் என்? காணாமற் போன நன்மணிதான் காணப் பெறவில்லை.

''இப்பொழுது எல்லோருடைய கண்களும் என்மீது விழுந்தன. என் அலங்கோல நிலையைக் கண்டு நானே கள்வன்; நானே அதனைக் களவாடி இருக்க வேண்டும் என்ற ஒருமித்த முடிவுக்கு அவர்கள் அனைவரும் வந்தார்கள். 'அடே கள்ளப்பயலே! நீதான் அதனை எடுத்திருக்க வேண்டுமென்று நாங்கள் அனைவரும் ஐயுறுகின்றோம். மரியாதையாக அதைக் கொடுத்துவிடு. இல்லையேல் உதை விழும்' என்று அவர்கள் முதலில் அருள் எச்சரிக்கை விடுத்தார்கள். 'என் மீது நீங்கள் வீணே ஐயுற வேண்டாம். நான் ஒரு நிரபராதி' என்று நான் எவ்வளவோ எடுத்துரைத்தும் அவர்கள் கேட்டார்களில்லை. 'களவாடி விட்டுப் பத்தினி வேஷமா போடுகின்றாய்?' என்று கூறி என் கன்னத்தில் அறைந்தான் ஒருவன். அதைத் தொடர்ந்து அடியும் உதையும் என்மீது சரமாரியாகப் பொழியப்பட்டன. நான் திக்குமுக்காடினேன். 'இறைவா! எல்லாம் அறிந்தவன் நீ. எல்லாம் அறிந்திருந்தும் இவ்வாறு ஏன் என்னைச் சோதிக்கின்றாய்?' என்று நான் அலறினேன். அபயம் தேடி நான் அலறிய அலறல் இறைவனின் அர்ஷை எட்டியதோ என்னவோ, அடுத்த கணம் ஆயிரக்கணக்கான மீன்கள் தம் வாயிலே ஒரு நன்மணியைக் கௌவிய வண்ணம் தண்ணீருக்குமேல் தம் தலைகளை நீட்டின. அவற்றை ஆங்கிருந்த பயணிகள் அனைவரும் கண்ணுற்றனர். அம்மீன்களின் ஒன்றின் வாயிலிருந்த நன்மணியை எடுத்து அந்த வணிகரிடம் கொடுத்தேன். அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் திடுக்கத்திற்கும் அளவில்லை. அவர்கள் அனைவரும் என் காலில் வீழ்ந்து என்னிடம் மன்னிப்புக் கோரினர். இதிலிருந்து தான் எனக்கு மீனின் மனிதர் (துன்னூன்) என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

''இதன்பின் வனங்களிலும் வனாந்தரங்களிலும் மலைகளிலும் குன்றுகளிலும் அலைந்து திரிந்தேன். அப்பொழுது நோயாளர் சிலர் ஓரிடத்தில் வீற்றிருப்பதைக் கண்டு அவர்களை அணுகி, 'நீங்கள் யார்? நீங்கள் ஏன் இங்கு வீற்றிருக்கின்றீர்கள்?' என்று வினவினேன். அதற்கு அவர்கள், 'இங்குள்ள குகை ஒன்றில் மாதவர் ஒருவர் வசித்து வருகின்றார். ஆண்டுக்கு ஒருமுறை அவர் வெளியே வந்து நோயாளர் மீது ஏதோ ஓதி ஊதுகின்றார். உடனே அவர்கள் நலன் பெறுகின்றனர். அவருக்காக நாங்கள் இங்குக் காத்துக் கொண்டுள்ளோம்' என்று கூறினர்.

''அதுகேட்டு வியப்படைந்த நான், அத்தகு மாதவரை நானும் காண வேண்டுமென்ற எண்ணத்துடன் அங்கேயே பல நாட்கள் காத்திருந்தேன். இறுதியாக அவரும் வெளியே வந்தார். மெலிந்து துரும்பு போன்று விளங்கிய அவர் மெதுவாக நடந்து வந்தார். அவரைக் கண்டதும் எனக்கு ஒருவித நடுக்கமும் திடுக்கமும் ஏற்பட்டன. அவர் எங்களை அணுகி, அருளொழுகும் கண்களுடன் எங்களை நோக்கிவிட்டுப் பின்னர் விண்ணை நோக்கிப் பார்த்தார். அதன்பின் நோயாளர்மீது பல தடவை ஓதி ஊதினார். அனைவரும் அக்கணமே அவ்விடத்திலேயே நலன் பெற்றார்கள்.

''அதன்பின் அவர் தம் இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றார். அப்பொழுது நான் அவரின் மேலங்கியின் நுனியைப் பிடித்துக் கொண்டு, 'தாங்கள் மக்களின் உடல் நோயைக் குணப்படுத்தினீர்கள். இறைவனுக்காகத் தாங்கள் அவர்களின் ஆன்மீக நோயையும் குணப்படுத்தி விட்டுச் செல்லுங்கள்' என்று கூறினேன்.

அப்பொழுது அவர் என்னை ஏறிட்டுப் பார்த்து, 'துன்னூனே! உம்முடைய கையை எடும். நண்பன் தன்னுடைய மாட்சிமிகு அரியணைமீது அமர்ந்து இதனைக் கவனித்துக் கொண்டுள்ளான். நீர் அவனைத் தவிர வேறொருவனைப் பற்றிப் பிடித்ததை அவன் பார்ப்பானாயின் உம்மை என்னிடமும், என்னை உம்மிடமும் ஒப்படைத்துவிட்டு விலகி விடுவான். பின்னர் நாம் இருவரும் ஒருவர் மற்றொருவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழிந்து போக வேண்டியதுதான்' என்று கூறினார். இவ்வாறு கூறிவிட்டு அவர் தம் குகைக்குள் புகுந்து விட்டார்.

''இதன் பின் நான் முப்பது ஆண்டுகளாக ஊர், ஊராக அலைந்து திரிந்து மக்களுக்கு அறவழியை, ஆன்மீக வழியை ஆண்டவனின் வழியைக் காட்டி வந்தேன். ஆனால், அவர்களில் ஒருவர் கூட அதில் அடி எடுத்துவைக்க ஏன், அதனை ஏறிட்டுப் பார்க்கக்கூட இல்லை. ஒரு நாள் நான், பள்ளியில் அமர்ந்து மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்த பொழுது அரசிளங்குமரன் ஒருவன் தன் பரிவாரங்களுடன்

அவ்வழியே சென்றான். அப்பொழுது நான், 'வலுவற்ற நோஞ்சான் ஒருவன் மாமல்லன் ஒருவனுடன் பொருதுவது எத்தனை மடத்தனம்! எத்தனை மடத்தனம்!!' என்று கூறியது அவனின் செவிப்பட்டது. உடனே அவன் என் முன் வந்தமர்ந்து என்னை நோக்கி, 'தாங்கள் என்ன கூறினீர்கள்?' என்று வினவினான். அதற்கு நான், 'பலஹீனனான மனிதன் இறைவனைப் போருக்கு அழைப்பதையே நான் இவ்வாறு குறிப் பிடுகிறேன்' என்று எடுத்துரைத்தேன். அதுகேட்டதும் அவனின் முகம் வெளிறியது. அவன் யாதொன்றும் மறுமொழி கூறாது அவ்விடத்தை விட்டும் எழுந்து சென்று விட்டான்.

''அடுத்த நாள் நான் தனியாக அமர்ந்திருக்கும் பொழுது அவன் தனித்து என்னிடம் வந்து, 'இறைவனை எய்தப் பெறுவதற்கான வழி யாது?' என்று வினவினான். அதற்கு நான், 'இறைவனை எய்தப் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று சிறியது. மற்றொன்று பெரியது. சிறியதை நீர் தேர்ந்தெடுப்பின், உலக இன்பங்களைத் துறந்து, உடல் இன்பங்களை மறந்து, பாவங்களைச் செய்யாது பேணுதலுடன் நடந்து கொள்வீராக! பெரியதை நீர் தேர்ந்தெடுப்பின் இறைவனைத் தவிர உள்ள அனைத்தையும் துறந்து உம் உள்ளத்தில் இறைவனையன்றி வேறொன்றும் இல்லாது செய்து கொள்வீராக!' என்று கூறினேன்.

''அதுகேட்ட அவன், 'நான் பின்னையதையே, பெரியதையே தேர்ந்தெடுப்பேன்' என்று கூறினான். அடுத்த நாள் கம்பளியுடையணிந்து என்முன் வந்தமர்ந்தான். பின்னர் சிறிது காலம் சென்றபின், அவன் ஒரு மகானாக விளங்கினான். இவனே என் முதல் மாணவன்.

''நான் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்தபொழுது நான் அந்தாக்கியா மலையில் வைத்து ஒரு மங்கையைக் கண்டேன். அவள் என்னைப் பெயர்கூறி விளித்தாள். அது கேட்டு எனக்கேற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. 'என் பெயர் உனக்கு எவ்வாறு தெரிய வந்தது?' என்று வினவினேன். 'என் நண்பன் எனக்கு அறிவித்தான்' என்று கூறினாள். அதன்பின் அவள் என்னை நோக்கி, 'அறம் என்றால் என்ன?' என்று வினவினாள். 'பிறருக்கு அளித்தல்' என்று பதில் கூறினேன். 'அது உலகத்தின் அறமல்லவோ? நான் கேட்பது நன்மார்க்கத்தின் அறம் பற்றி' என்று கூறினாள். 'நன்மார்க்கத்தின் அறம் இறைவனை வணங்குவது' என்று நான் கூறினேன். 'அவ்விதமாயின் அவனை வணங்கிவிட்டு அவனிடம் ஏதேனும் கேட்கின்றீரா?' என்று வினவினாள். 'ஆம்' என்றேன். 'அவ்விதமாயின் அதில் என்ன அறம்உள்ளது? செய்த அலுவலுக்குக் கூலியைக் கேட்டுவிடுகின்றீரே' என்று அவள் கூறினாள். அதன்பின் அவள் என்னை நோக்கி, 'நான் இருபது ஆண்டு காலமாக

இறைவனிடம் ஒன்றைக் கேட்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டுள்ளேன். ஆனால் கேட்டு விட்டால் இதற்காகத்தான் தன்னை நான் இவ்வளவு காலமாக வணங்கினேனோ என்று அவன் கருதிக் கொள்வானோ என்று நாணமுற்று வெறுமனே வணங்கிக் கொண்டுள்ளேன்' என்று கூறினாள். அதுகேட்டு நான் நாணமுற்றேன்.

''பின்னர் நான் கன்ஆன் பகுதியில் சென்று கொண்டிருந்தேன். எதிரில் ஓர் உருவம் வருவதைக் கண்டேன். 'அவர்கள் எண்ணியும் பார்த்திராதவை அவர்களுக்கு இறைவனிடமிருந்து வெளிப்பட்டன' என்ற இறை வசனத்தை அந்த உருவம் உரத்த குரலில் ஓதியவண்ணம் அழுது கொண்டே வந்தது. உருவம் என்னை அண்மியபொழுது நான் அதனை ஊன்றிக் கவனித்தேன். அது ஒரு பெண்ணாக இருந்தது. உரோமத்தாலான மேலங்கியை அவள் அணிந்திருந்தாள். அவளின் கையில் ஒரு தண்ணீர்ப்பை இருந்தது.

என்னைப் பார்த்ததும், 'நீர் யார்?' என்று அதட்டினாள் அவள்.

''நானோ ஒரு வழிப்போக்கன். ஏழை. எவ்விதத் துணையுமின்றித் தனியே பிரயாணம் செய்கிறேன்' என்று நான் பதிலுரைத்தேன்.

அதுகேட்ட அவள் ஓர் ஏளனப் புன்னகையை உதிர்த்த வண்ணம், 'அல்லாஹ் உம்முடன் இல்லையா? அவன் உமக்குப் போதுமானவனில்லையா? அவன் உம்முடன் இருக்கும்போது உமக்கு வேறு துணை எதற்கு?' என்று கடாவினாள்.

அவளின் இவ்வினா என் உள்ளத்தை உருக்கி என் கண்களிலிருந்து நீரை வழிந்தோடச் செய்தது.

அதுகண்டு, 'ஏன் அழுகிறீர்?' என்று அவள் வினவினாள்.

'உம் கேள்வி என மனோ வியாதியை அகற்றிவிட்டது. நான் அறிவுத் தெளிவு பெற்றுவிட்டேன்' என்று நான் விடையிறுத்தேன்.

'அவ்விதமாயின் நீர் மகிழவல்லவோ வேண்டும்? அதற்கு மாறாக நீர் ஏன் அழுகிறீர்?' என்று வினவினாள் அவள்.

'ஆம்; நீர் கூறுவது சரி. நான் அழுவது தவறு' என்றேன் நான்.

'அல்ல; அல்ல. நீர் நினைப்பது தவறு' என்றாள் அவள்.

'எவ்வாறு?' என்று வினவினேன் நான். அதற்கு அவள், 'நீர் மகிழத்தான் செய்தீர். அதுவே உம் கண்களில் கண்ணீரைப் பீறிட்டு வருமாறு செய்தது. அழுகை என்பது மனத்திற்கு ஆறுதல் வழங்குகிறது. எனவே அழுவதில் தவறு கிடையாது' என்று கூறினாள்.

அவளின் அறிவின் ஆழத்தைக் கண்டு நான் வியப்பில் ஆழ்ந்தேன்.

''இதன்பின் நான் சிரியா சென்றேன். அங்கு வனாந்தரத்தின் நடுவில் தன்னந்தனியாக ஓர் அழகிய இளவல் ஒரு மரத்தின் கீழே நின்று தொழுது கொண்டிருந்தார். அவர் அருகே போய் அமர்ந்த நான், அவர் தொழுது முடிந்ததும் அவருக்கு 'ஸலாம்' உரைத்து, 'நீர் யார்? மனித நடமாட்டமே இல்லாத இவ்வெளியில் தன்னந்தனியாக நின்று தொழுது கொண்டுள்ளீரே?' என்று வினவினேன். அதற்கு அவர் யாதொரு மறுமொழியும் கூறாது தம் விரலால் மணலில்.

*துன்பம் நிறைந்த இடமாகும் துன்யா என்னும் வீடதனில்*
*ஒன்றும் வீணே பேசாது ஒருவன் தனையே துதிப்பீரே*
*எந்த நிலையை எய்திடினும் இறைவன் தனையே மறக்காது*
*அந்த மில்லா அவன் புகழை அயரா தென்றும் மொழிவீரே!*

என்ற கண்ணிகளை எழுதினார்.

அதைப் படித்த நான்,

*எழுதுவோரைச் சோதனை தான் இறைவன் செய்ய விரும்பினனே*
*எழுத்திவ் வுலகில் அழிந்திடினும் கருத்தோ என்றும் அழியாதே*
*எழுத நீரும் விரும்பிடிலோ இம்மை, மறுமை இரண்டினிலும்*
*பழுது நேரா வண்ணம் நீர் பாங்காய் எழுதி வருவீரே!*

என்ற கவிதையை மணலின் மீது எழுதினேன்.

அவர் அதைப் படித்ததுதான் தாமதம். பெரும் சப்தமிட்டு அலறிக் கீழே துடித்து விழுந்தார். அடுத்தக் கணம் அவருடைய உயிர் உடலை விட்டும் பிரிந்தது. அதுகண்டு திடுக்குற்ற நான், அவரை நல்லடக்கம் செய்ய யாது செய்வதென அறியாது விழித்துக் கொண்டிருந்த பொழுது, 'நீர் அதைப்பற்றி வருந்த வேண்டாம், நாம் வானவரைக் கொண்டு அவ்வலுவலை ஆற்றுவோம்' என்று அசரீரி முழங்கியது. நான் சற்று விலகி இருந்து பின்னர் திரும்பிப் பார்க்கும் பொழுது அவருடைய வெற்றுடலைக் காணவில்லை.

ஒருநாள் நான் கஃபாவை இடம் சுற்றி வரும்பொழுது ஓர் அழகிய ஆரணங்கு கஃபாவின் திரையைப் பிடித்த வண்ணம்,

*'நண்பா! நீயே நன்கறிவாய் உன்றன் நண்பன் எவரெனவே*
*'நண்பா! உன்றன் நட்பதனை நானும் மறைத்தேன், மறைத்தேனால்*
*மறைக்க மறைக்கஎன்னுள்ளம் மிகவும் வலுவாய் ஆனதுவே*
*மறைக்க இயலா வண்ணம் அது வெடித்து விடும்போல் ஆனதுவே*

என்று பாடி அழுது, அழுது கண்ணீர் வடித்துப் பாடிக் கொண்டிருந்தாள். பின்னர்,

**என்றன் இறைவா! என்மீது இரங்கி என்னை ஆட்கொள்வாய்**
**என்றன் மீது உனக்குள்ள அன்பின் பொருட்டால் மன்னிப்பாய்**

என்று பாடி 'துஆ' இறைஞ்சினாள்.

''அப்பொழுது நான் அவளை நோக்கி, 'இறைவனுடைய அடிமையே! அவ்வாறு கூறாதே 'நான் உன் மீது கொண்டுள்ள அன்பின் பொருட்டு இறைவனே! என்னை மன்னி' என்று கூறு. அதுவே சால்புடைத்ததாகும். இறைவன் உன் மீது அன்பு கொண்டுள்ளான் என்று கூறுகின்றாயே. அது உனக்கு எவ்வாறு தெரியும்' என்று கூறினேன். அதற்கு அவள், 'துன்னூன்! நீர் குர்ஆனிலுள்ள 'ஃபஸவ்ஃப யஹ்ஃபியல்லாஹு பிகௌமின் யுஹிப்புஹு முல்லாஹு' என்ற இறைவசனத்தைப் படிக்கவில்லையா? எவன் இறைவன் மீது அன்பு செலுத்துகின்றானோ, அவன் மீது அவனுக்கு முன்னர் இறைவன் அன்பு செலுத்துகின்றான்' என்று அவன் கூற வில்லையா? இதனை நீர் அறிய மாட்டீரா' என்று இடித்துரைத்தாள்.

நான் பதில் கூற வாயற்று, 'நல்லது; நீ என் பெயரை எவ்வாறு அறிவாய்?' என்று வினவினேன். அவள், 'இறைவனை அறிந்தவர் களுக்கு அவனின் படைப்புகளின் பெயரை அறிவது சிரமமா?' என்று கூறிவிட்டு, 'முகத்தை அப்பக்கம் திருப்பும்' என்று கூறினாள். அவ்வாறே திருப்பி விட்டுப் பின்னர் திரும்பிப் பார்த்தேன். அவள் மறைந்து விட்டாள்.

''நான் லெபனான் மலைக்குகை ஒன்றில் பெரியார் ஒருவரைக் கண்டேன். அவரின் தாடியும் தலைமுடியும் மிகவும் வெண்மையாக இருந்தன. அவருடைய தலை முடியில் புழுதி படிந்திருந்தது. அமைதியாக அவர் தொழுகையில் ஈடுபட்டிருந்தார். அவர் தொழுது முடிந்ததும் நான் அவரை அணுகி அவருக்கு 'ஸலாம்' உரைத்தேன். என் ஸலாத்திற்கு அவர் பதில் கூறிவிட்டு, மீண்டும் தொழுகையில் ஈடுபட்டார். அஸர் நேரம் வரையில் தொழுது கொண்டிருந்தார். அஸர் தொழுது முடிந்ததும் ஆங்கிருந்த கற்பாறை மீது அமர்ந்து, 'தஸ்பீஹ்' செய்து கொண்டிருந்தார். என்னிடம் அவர் யாதொன்றும் வினவ வில்லை. நான் மெதுவாக அவரை அணுகி, 'பெரியீர்! எனக்காக அல்லாஹ்விடம் 'துஆ'ச் செய்யுங்கள்' என்று வினயமாக

வேண்டினேன். அதுகேட்ட அவர் 'அல்லாஹ் உம்மைத் தம்முடைய நெருங்கிய அடியார்களின் கூட்டத்தில் சேர்த்தருள்வானாக!' என்று இறைஞ்சினார்.

மீண்டும் நான் அவரை நோக்கி, 'ஏதேனும் எனக்கு அறிவுரை பகருங்கள்' என்று வேண்டினேன்.

அவர் கூறினார்: 'மகனே! எவரை அல்லாஹ் தன் அண்மையில் ஆக்கிக் கொள்கின்றானோ, அவருக்கு அவன் நான்கு விதப் பண்புகளை அளிக்கின்றான்.'

1. குடும்பமில்லாமலேயே - கண்ணியம்
2. தேடாமலேயே - கல்வி
3. செல்வமில்லாமலேயே - வளம்
4. கூட்டமில்லாமலேயே - அன்பு

''இவ்வாறு அவர் கூறிவிட்டுப் பெரும் சப்தமிட்டு மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார். மூன்று நாட்களுக்குப் பின்னரே மயக்கம் தெளிந்து எழுந்தார். என்னிடம் தாம் மயக்க நிலையில் இருந்தது, எத்தனை நாட்கள் என்பதைக் கேட்டறிந்து, விட்டுப் போன தொழுகைகளைக் 'களா'வாகத் தொழுதார். தொழுது முடித்ததும், அவர் என்னை விட்டும் பிரியத் துவங்கினார்.

''அப்பொழுது நான் அவரை நோக்கி, 'பெரியீர்! நான் மூன்று நாட்களாகத் தாங்கள் எனக்கு ஏதேனும் அறிவுரை பகர்வீர்கள் என்ற எண்ணத்துடன் இங்குக் காத்துள்ளேன். எனக்கு ஏதேனும் அறிவுரை பகருங்கள்' என்று வேண்டினேன்.

''அதற்கு அவர், 'மகனே! இறைவனையே நீ உன்னுடைய நண்பனாக ஆக்கிக் கொள்வாயாக! வேறு எவரையும் ஆக்கிக் கொள்ள வேண்டாம். ஏனெனில் அல்லாஹ்வை நண்பனாக ஆக்கிக் கொண்டவர்களே ஏனையோரிலும் சிறந்து விளங்குகிறார்கள். அவனுக்குச் சொந்தமான அடியார்களாகவும் ஆகிறார்கள்' என்று கூறிவிட்டுப் பெரும் சப்தமிட்டுக் கீழே சாய்ந்தார். அவரின் உயிர் பொன்றியது.

''சற்று நேரம் கழித்து வணக்கவாளரின் கூட்டம் ஒன்று அண்மையிலிருந்த மலையிலிருந்து கீழே இறங்கி வந்து, அவரைக் குளிப்பாட்டிக் கஃபனிட்டு நல்லடக்கம் செய்தது. அப்பொழுது நான் அவர்களை நோக்கி, 'அவர் யார்?' என்று வினவினேன். 'ஷைபான் முஸாப்' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

''ஒரு தடவை நான் பைத்துல் முகத்தஸ் மலைச்சாரலில் அலைந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சப்தத்தைக் கேட்டேன். ஒருவர், 'அடிமைகளின் உடலிலிருந்து வேதனைகள் நீங்கிவிட்டன. அவர்கள் இறைவனின் வணக்கத்தில் மூழ்கி, உண்பதையும் உறங்குவதையும் மறந்து விட்டார்கள். அவர்களின் உடல் உண்மையான அரசனாகிய அல்லாஹ்வின் திருமுன் நிற்கப் பழக்கப்பட்டுவிட்டன' என்று சப்தமிட்டுக் கூறிய வண்ணம் நடந்து கொண்டிருந்தார். அந்த சப்தத்தைப் பின்தொடர்ந்து நடந்து சென்றேன். அந்த சப்தத்தை மிழற்றியவர் ஓர் இளவல் என்பதை அறியலானேன். அவரை நெருங்கினேன். அவருடைய உடல் இளைத்திருந்தது. முகம் வெளுத்திருந்தது. காற்றில் இலைகள் அசைவது போன்று, அவருடைய உடல் நடுங்கிக் கொண் டிருந்தது. அவர் மீது இரு போர்வைகள் இருந்தன. ஒன்றை இடுப்பிலும், மற்றொன்றைத் தோளிலும் அணிந்திருந்தார். என்னைக் கண்டதும் அவர் மரத்தின் பின்னே ஒளியலானார்.

அப்பொழுது நான் அவரை நோக்கி, 'ஏன் என்னைக் கண்டு மிரள்கிறீர்? இஃது முஃமின்களுக்கு அழகல்லவே' என்று கூறினேன்.

அதுகேட்டு அவர் எனக்குச் சில அறவுரைகள் வழங்கினார். பின்னர் சஜ்தாவில் விழுந்து, 'இறைவனே! இந்த இடம் எவன் உன்னோடு தனித்து இருக்க விரும்புகிறானோ அவனுடைய இடமாகும். அவன் உன்னுடைய மன்னிப்பைக் கொண்டு உன்னிடம் பாதுகாவல் தேடுகிறான். உன் அருள் நேசத்தை அவன் பெரிதும் அவாவுறுகிறான். கண்ணியமும் கீர்த்தியும் மிக்க இதயங்களின் அரசனே! எவர் உன்னை விட்டும் என்னைப் பிரிக்க விரும்புகிறார்களோ அவர்களை விட்டும் என்னை மறைத்துவிடு' என்று இறைஞ்சினார். அடுத்தகணம் அவர் என் கண்களிலிருந்தும் மறைந்து விட்டார்.

''யமன் நாட்டில் வாழ்ந்து வந்த ஓர் இறைநேசச் செல்வரைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தேன். எனவே ஒரு தடவை 'ஹஜ்'ஜுச் செய்து முடிந்ததும் யமன் நாடு சென்று அவரைத் தரிசித்துவர நாடினேன். என்னுடன் சிலரும் சேர்ந்து கொண்டார்கள். அவர்களில் ஓர் இளைஞரும் இருந்தார். அவருடைய இன்முகம் அவருடைய நற்பண்புகளையும், இறை பக்தியையும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அவருக்கு, யாதொரு நோயும் இல்லாதிருந்த போதினும் அவருடைய முகம் மஞ்சள் நிறமாக இருந்தது. அவருக்கு யாதொரு கண்ணோய் இல்லாத போதினும் அவருடைய கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது. எப்பொழுதும் தனித்திருப்பார். யாதோ சோதனையில் அகப்பட்டவர் போன்று தோற்ற மளிப்பார். அவர் இவ்வாறு இருப்பதற்காக அவரைச் செல்லமாகக்

கோபித்துக் கொண்டோம். தன் ஆத்மாவுக்குச் சில வசதிகள் அளிப்பது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும் என்று கூறினோம். நாங்கள் கூறுவதை அவர் மறுத்தோ, ஆதரித்தோ யாதும் கூறாது வாய்மூடி மௌனம் சாதிப்பார். நாளுக்கு நாள் அவருடைய வணக்கங்கள் அதிகரித்துக் கொண்டே வந்தன.

''இறுதியாக நாங்கள் யமன் நாட்டினை அடைந்து அந்த இறைநேசச் செல்வரின் இல்லத்தைக் கண்டுபிடித்து, அதன் கதவைத் தட்டினோம். அந்த இறைநேசச் செல்வர் வந்து கதவைத் திறந்தார். அப்பொழுது தான் அவர் தம் அடக்கவிடத்திலிருந்து வந்தவர் போன்று காட்சி வழங்கினார். அவரைக் கண்டதும் எங்கள் அனைவருக்கும் முன்பாக இவரே அவருக்கு 'ஸலாம்' உரைத்தார். அதன்பின் நாங்கள் அவருக்கு 'ஸலாம்' உரைத்து அங்கு அமர்ந்தோம். முதலாவது அந்த இளைஞரே அவருடன் பேசத் துவங்கினார்;

'ஷைகு அவர்களே! தங்களைப் போன்ற நல்லாரைக் கொண்டு அல்லாஹ் மக்களின் இதயங்களிலுள்ள நோவை அகற்றியருள்கிறான்.என் இதயத்தில் பெரிய ஆழமான வடு ஒன்று பதிந்துள்ளது. அது நீங்கத் தாங்கள் ஏதேனும் பரிகாரம் செய்யின் நான் தங்களுக்குப் பெரிதும் நன்றியுடையவனாக இருப்பேன்.'

'நல்லது; தாங்கள் கேட்க விரும்பியதைக் கேளுங்கள்' என்றார் அந்த இறைநேச் செல்வர்.

இளைஞர் கேட்டார்: 'ஷைகு அவர்களே! இறையச்சத்தின் அடையாளம் யாது?'

'இறையச்சம் ஏற்படும் பொழுது எல்லா அச்சங்களும் உள்ளத்தை விட்டு அகன்று விடுகின்றன. அப்பொழுது இறையச்சமே ஆகமெங்கும் பரவி இருக்கின்றது' என்று பதிலிறுத்தார் அவர்.

அதுகேட்ட அந்த இளைஞர் மயங்கிக் கீழே விழுந்தார். பின்னர் மயக்கம் தெளிந்ததும், அவர் அந்தப் பெரியாரை நோக்கி, 'அடியான் இறையச்சத்துடன் உள்ளான் என்பது எப்பொழுது உறுதியாகிறது?' என்று வினவினார்.

அதற்கு அவர் 'நோயுற்றவன் பத்தியம் காத்து, கசப்பான மருந்து களை உட்கொள்ளும் போது எவ்வாறு தன் நலன் கருதி, தான் ஆசையுடன் உண்டு வந்த அத்தனை பொருள்களையும் உண்ணாது விட்டொழிக்கின் றானோ அதே போன்று, அவன் உலக இன்பங்களை விட்டொழிப்பின் அவன் இறையச்சம் உள்ளவன் என்பது உறுதியாகிறது' என்று பதில் கூறினார்.

இவ்வாறு அப்பெரியார் சொல்லி முடித்ததும் அந்த இளைஞர் பெரும் சப்தமிட்டு மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார். சற்று நேரத்திற்குப் பின் உணர்வுபெற்று அவர் வினவினார். 'ஷைகு அவர்களே! இறைவன் ஒருவன்மீது நேசம் கொண்டுள்ளான் என்பதற்கு அடையாளம் யாது?' என்று.

அதற்கு அப்பெரியார், 'அதற்கு அடையாளம் அவன் மிகப் பெரும் பதவியை அடைவதுதான்' என்று கூறினார்.

'அதனைச் சற்று விளக்கமாகக் கூறுங்கள்' என்று வேண்டினார் அவ்விளைஞர் வினயமாக.

பெரியார் கூறினார்: 'நண்பரே! ஒருவனை இறைவன் நேசிப்பானாயின், அவனுடைய இதயத்திலிருந்து திரை நீக்கப்படுகிறது. அவன் தன் இதயக் கண்களால் இறைவனின் திருக்காட்சியைக் காண்கிறான். அவனுடைய ஆன்மாவும், இதயமும் அறிவும் உயர்ந்து ஒளிர்கின்றன. அவன் வானவர்களின் கூட்டத்தில் சேர்ந்து விடுகிறான். அவர்கள் காணும் காட்சிகளை அவனும் காண்கிறான்; இறை வணக்கத்தில் தன் முழு ஆற்றலையும் பயன்படுத்துகிறான். அவனுக்குச் சுவனத்தைப் பற்றிய ஆசையோ நரகத்தைப்பற்றிய அச்சமோ இல்லாது போய்விடுகிறது.'

''இவ்வாறு அவர் கூறி முடித்தது தான் தாமதம். அந்த இளைஞர் பெரும் சப்தமிட்டுக் கொண்டு கீழே சாய்ந்தார். அத்துடன் அவருடைய உயிர் அவருடைய உடலை விட்டும் பிரிந்தது.

அப்பெரியார் அவ்விளவலை முத்தமிட்டு எங்களை நோக்கி, 'பாருங்கள்! இறைநேசர்களின் நிலை இதுவேயாகும்' என்று கூறினார்.

''மற்றொரு தடவை நான் ஒரு பள்ளி வாயிலில் தங்கியிருந்தேன். அப்பள்ளியில் என் போன்ற ஒரு குராஸானி இளைஞரும் தங்கி இருந்தார். அவர் ஒரு வாரமாக யாதொன்றும் உண்ணவில்லை. அவருக்கு எவரேனும் உண்ணக் கொடுப்பின், அதனை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார்.

''ஒருநாள் ஏழை ஒருவர் அவரிடம் வந்து தமக்கு ஏதேனும் தருமாறு வேண்டினார். அப்பொழுது அந்தக் குராஸானி இளைஞர் அவரை நோக்கி, 'நீர் இறைவனிடமே உம்முடைய தேவைகளைக் கேட்பின், அவன் உம்முடைய தேவைகளை நிறைவேற்றி வைத்து உம்மை மற்றவர்களை விட்டும் தேவையற்றவனாக ஆக்கிவிடுவானே' என்று கூறினார்.

அதற்கு அந்த வறிஞர், 'அத்தகு பக்குவப்பட்ட நிலை என்னிடம் எங்கே உள்ளது?' என்று பதிலிறுத்தார்.

உடனே அந்தக் குராஸானி இளைஞர் 'உமக்கு என்ன வேண்டும்?' எனறு வினவினார்.

''யிர் வாழும் அளவுக்கு உணவும், பொருளும் வேண்டும்' என்றார் அவர்.

''இதன்பின் அந்தக் குராஸானி இளைஞர் இரண்டு ரகஅத் தொழுதார். தொழுதுவிட்டு ஒரு புதிய துணியையும் ஒரு தட்டு நிறையக் காசு களையும் கொண்டு வந்து, அந்த யாசகரிடம் கொடுத்தார். அவற்றைப் புன்முறுவலுடன் பெற்றுக் கொண்டு சென்று விட்டார் அவர்.

''இதனை வியப்புக் கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்த நான், அந்தக் குராஸானி இளைஞரை அணுகி, 'அப்துல்லாஹ்வே! உமக்கு இறைவனிடம் இத்துணை அளவு நெருக்கம் இருக்க நீர் ஏன் ஒருவார காலமாக யாதொன்றும் உண்ணவில்லை' என்று வினவினேன்.

''அதற்கு அவர், 'அபுல் பைஸே! ஒருவருடைய இதயம் இறை பொருத்தம் என்ற ஒளியால் நிரம்பி இருக்கும் பொழுது, அவருடைய வாய் எவ்வாறு பிறரிடம் யாசிக்கத் திறக்கும்?' என்று கூறினார்.

''அதற்கு நான், 'இறைப் பொருத்தத்தை நாடுகின்றவர்கள் இறைவனிடம் கூடவா தமக்காக யாதொன்றும் கேட்கமாட்டார்கள்?' என்று வினவினேன்.

''அதற்கு அவர் தான் கேட்கக் கூடியவர்கள் பல்வேறு விதமாகக் கேட்கிறார்கள். 'சிலர் இறைவன் விரும்பும் நற்செயல்கள் மூலம் கேட்கிறார்கள்; சிலர் இறைவனின் தனிப்பெரும் கருணையை மட்டும் குறிப்பிட்டுக் கேட்கிறார்கள்; வேறுசிலர் பிறரின் பொருட்டுக் கேட்கிறார்கள்' என்று கூறினார்.

''அதன்பின் பாங்கு சொல்லப்பட்டது. அவர் என்னுடன் தொழுதார். தொழுதபின் குவளையை எடுத்துக் கொண்டு மல, ஜலம் கழிக்கச் செல்வது போன்று வெளியே சென்றார். சென்றவர் சென்றவர்தாம். அவர் திரும்பி வரவே இல்லை. பின்னர் நான் அவரை எங்குத் தேடியும் காணவுமில்லை.

''நான் பற்பல இடங்களில் சுற்றித் திரியும் பொழுது ஒரு பெண்மணியைப் பார்த்தேன். அவர் கம்பளிச் சட்டையும், போர்வையும் அணிந்திருந்தார். நான் அவரை நோக்கி, 'இறைவன் தங்கள் மீது பேரருள்

பாலிப்பானாக! ஊர், ஊராகச் சுற்றித் திரிவது பெண்களுக்கு அழகல்லவே' என்று கூறினேன். அதற்கு அவர், 'பெருமைக்காரரே! என்னை விட்டு ஒதுங்கிப் போம்' என்று கூறிவிட்டு 'நீர் திருக்குர்ஆனை ஓதவில்லையா?' என்று வினவினார்.

'ஓதியிருக்கிறேன்' என்று நான் பதில் மொழிந்தேன்.

'என்ன ஓதியிருக்கிறீர்? அலன் தகுன் அர்ளுல்லாஹி வாஸி அத்தன் ஃபத்துஹா ஜீரு ஃபீஹா (இறைவனுடைய பூமி விசாலமாக இல்லையா? அதில் நீங்கள் பிரயாணம் செய்யுங்கள்) என்ற திருவசனத்தை நீர் ஓதவில்லையா? எனக்குத் தெரிந்தவரை பூமியின் எல்லாப் பகுதிகளும் கல்வியால் நிரம்பியுள்ளது. எனவே நான் கல்விக்காகப் பயணம் செய்து கொண்டிருக்கிறேனேயன்றி வேறில்லை' என்று கூறினார்.

'நல்லது; தாங்கள் எதைக் கொண்டு அல்லாஹ்வை அறிந்தீர்கள்?' என்று வினவினேன்.

அதற்கு அவர், 'அல்லாஹ்வை அல்லாஹ்வைக் கொண்டே அறிந்தேன். அவனுடைய படைப்பினங்களை, அவனுடைய பேரொளியைக் கொண்டு அறிந்தேன்' என்று விடை பகர்ந்தார்.

பின்னர் நான் அவரை நோக்கி, 'இஸ்முல் அஃலம் யாது?' என்று வினவினேன்.

மறுகணம் அவர், 'அல்லாஹ் என்ற அல்லாஹ்வின் திருப்பெயரே இஸ்முல் அஃலமாகும். அதுவே அவனுடைய பெயர்களில் மாண்புடைத்ததாகும்' என்று கூறினார்.

பின்னர் நான் என் பிரயாணத்தில் ஒரு பெரியாரைச் சந்தித்தேன். அவருடைய முகத்தோற்றத்திலிருந்து அவர் ஒரு மகான் என எனக்குத் தெரிய வந்தது.

நான் அவரை அணுகி, 'இறைவனை அடைய வழி யாது?' என்று வினவினேன்.

'உன்னுடைய உள்ளத்தில் அவனை அடைந்து கொள்ளும் ஞானம் ஏற்பட்டு விடின் அவனை அடையும் வழியும் உனக்குக் கிடைத்து விடும்' என்று அவர் விடையிறுத்தார்.

இவ்வாறு கூறிவிட்டு, 'நீர் உம்மிடமுள்ள கருத்து வேற்றுமைகளை விட்டு விடும்' என்று கூறினார்.

'மார்க்க விற்பன்னர்களிடையேஉள்ள கருத்து வேறுபாடு ஓர் அருட்பேறு (ரஹ்மத்) அல்லவோ?' என்று நான் கூறினேன்.

'ஆமாம்! ஆனால் படைப்பினங்கள் மீது ஒருவன் கொள்ளும் பற்று விஷயத்திலும் இறைவனின் ஏகத்துவத்தின் மீதும் கருத்து வேறுபாடு கூடாது' என்று அவர் கூறினார்.

பின்னர் நான் 'இறைஞானி மகிழ்ச்சியுறுவாரா?' என்று வினவினேன்.

அதற்கு அவர், 'இறைஞானி துக்கமுறுவாரா, என்ன? இறைவனை அறிந்தவருக்குத் துக்கமெல்லாம் போய் விடுமே' என்றார்.

'இவ்வுலகம் இறைஞானியின் உள்ளத்தை மாற்றுமா?' என்றேன்.

'இவ்வுலகத்தால் என்ன, மறு உலகத்தால் கூட அவருடைய இதயத்தை மாற்ற முடியாது' என்றார் அவர்.

நான் வினவினேன்: 'இறைவனை அறிந்தவர்கள் மக்களை விட்டு ஓடுவார்களா?' என்று.

அதற்கு அவர், 'அப்படியல்ல; அவர்கள் மக்களை விட்டு ஒதுங்கி இருப்பார்கள்' என்று மறுமொழி பகர்ந்தார்.

'இறைஞானி இறைவனைத் தவிரவுள்ள ஏனையவற்றை இழப்பதால் வருத்த முறுவாரோ?' என்று கேட்டேன்.

'வருத்தமுறுவாராவா? அவர் இறைவனைத் தவிர உள்ள ஏனையவற்றை அறிய மாட்டாரே' என்று பதில் கூறினார்.

'இறை ஞானி இறைவனைத் தேடுவாரா?' என்று வினவினேன்.

'அவர் இறைவனை விட்டு ஒரு கணம் கூட எங்கே மறைந் திருப்பார்?' என்று அவர் மறுமொழி பகர்ந்தார்.

இதன் பின் நான் அவரிடம் 'இஸ்முல் அஃலம் என்றால் யாது?' என்று வினவினேன்.

அதற்கு அவர் 'இறைவனுடைய பயத்திற்கும், கண்ணியத்திற்கும் தக்க வண்ணம் அல்லாஹ் என்று மொழிவதாகும்' என்று அவர் கூறினார்.

'நான் அல்லாஹ் என்று அதிகமதிகமாகக் கூறுகிறேன் தான். எனினும் அல்லாஹ்வுடைய பயத்திற்கும் கண்ணியத்திற்கும் தக்க வண்ணம் என்னிடம் மரியாதை உணர்வு ஏற்படவில்லையே' என்று நான் கூறினேன்.

அதற்கு அவர், 'நீர் உம்முடைய நிலையில் இருந்து கொண்டு இவ்வாறு கூறுகிறீர். அவனுடைய மகோன்னத நிலைக்குத் தக்க வண்ணம்

கூறுகின்றீரில்லை' என்று இயம்பி விட்டு, 'அவன் உம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று அறிந்து செயலாற்றினால் போதும்' என்று கூறினார்.

நான் எழுந்து நின்று 'தாங்கள் எனக்கு என்ன பணிக்கின்றீர்கள்?' என்று வினவினேன்.

'உம்முடைய எல்லா நிலைகளிலும் இறைவன் உம்மைப் பார்த்துக் கொண்டுள்ளான். நீரும் அவனை ஒரு போதும் மறவாதீர். உம்முடைய எல்லா நிலைகளிலும் அவனை நினைவு கூரும்' என்று பதில் மொழிந்தார்.

''நான் மினாவில் ஓர் இளவலைச் சந்தித்தேன். மக்கள் எல்லாம் ஆடு, மாடு, ஒட்டகங்களைப் பலி கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது, அவர் ஓரிடத்தில் அமைதியாக வீற்றிருந்தார். அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை அறிய நான் அவரை அணுகினேன். அவர் அப்பொழுது 'இறைவனே! எல்லாரும் தங்களால் இயன்ற பலிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நானோ என் நஃப்ஸை(தீய இச்சைகளை)யே பலி கொடுக்க விரும்புகிறேன். நீ என்னுடைய பலியை ஏற்றுக் கொள்வாயாக!' என்று கூறித் தம் சுண்டு விரலைத் தம் தொண்டையை நோக்கிக் காட்டினார். அடுத்தக் கணம் அவரின் உயிர் அவரின் உடலை விட்டும் பிரிந்தது.

''ஒரு தடவை நான் பைத்துல் முகத்தஸிலிருந்து எகிப்துக்குச் சென்று கொண்டிருக்கும் பொழுது என்னை நோக்கி ஒருவர் வந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அவர் என்னை நெருங்கிய பொழுது, அவர் ஒரு கிழவி என்று தெரியவந்தது. அவர் கம்பளிச் சட்டை அணிந்திருந்தார். அவருடைய கையில் ஒரு கழி இருந்தது. நான் அவரை நோக்கி, 'எங்கிருந்து வருகிறீர்?' என்று வினவினேன். 'இறைவனிடமிருந்து' என்று பதில் கூறினார். 'எங்குச் செல்கிறீர்?' என்று மீண்டும் வினவினேன். 'இறைவனிடம்' என்று மறுமொழி பகர்ந்தார்.

''நான் என்னிடமிருந்த தங்க நாணயம் ஒன்றை எடுத்து அவரிடம் நீட்டினேன். அவர் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து 'துன்னூனே! உம்முடைய பலவீனமான அறிவின் காரணமாக என்னைத் தவறாக மதிப்பிட்டு விட்டீர்; நான் அல்லாஹ்வுக்காகவே அலுவலாற்றுகிறேன். அவனிடமிந்தேயன்றிப் பிறிதொருவரிடம் யாதொன்றையும் பெற மாட்டேன். அவனையே வணங்குகின்றேன். அவனிடமேயே கேட்டுப் பெறுகிறேன்'' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டும் அகன்று விட்டார்.

''இதன்பின் நான் 'லகான்' மலையடிவாரத்தில் சுற்றிக் கொண் டிருந்தேன். அப்பொழுது ஒருவர் ஆங்கு ஓர் இடத்தில் தொழுது கொண்டிருப்பதைக் கண்டேன். அவரைச் சூழ வனவிலங்குகள் வீற்றிருந்து, அவர் தொழுவதைக் கண் இமைக்காது பார்த்துக் கொண் டிருந்தன. நான் அவரை அணுகிய பொழுது அவைகள் ஓடி விட்டன. அவரும் தம் தொழுகையைச் சுருக்கி முடித்தபின் என்னை நோக்கினார். நான் அவருக்கு 'ஸலாம்' உரைத்தேன். அவர் பதில் கூறிவிட்டு,'அபுல் ஃபைஸே! நீர் இதயத் தூய்மைப் பெற்றவராக இருப்பின், இந்த வனவிலங்குகள் உம்மைக் கண்டதும் ஓடி இரா. மாறாக, உம்மைத் தேடி வந்திருக்கும்' என்று கூறினார்.

அதுகேட்ட நான் 'இதயத்தை எவ்வாறு தூய்மைப்படுத்துவது?' என்று வினவினேன்.

அதற்கு அவர், 'நீர் இறைவன்பால் உம்மை முற்றிலும் அர்ப்பணித்து விடின், அவன் தன் அருள்நேசத்தை உம்மீது சொரிவான்' என்று கூறினார்.

'அத்தகு உயரிய படித்தரத்தை நான் எவ்வாறு எய்தப் பெறுவது?' என்று நான் அவரிடம் வினயமாக வினவினேன்.

அதற்கு அவர், 'நீர் எதுவரை படைப்புகளின் மீது அன்பு வைத்துள்ளீரோ அதுவரை உம்மால் அத்தகு படித்தரத்தை எய்த இயலாது. எவ்வாறு நாம் இறைவனுக்கு இணை வைப்பதை (ஷிர்க்கை) உள்ளத்தி லிருந்து நீக்கி விட்டோமோ, அவ்விதமே படைப்புகளின் மீதுள்ள அன்பையும் நான் நம் உள்ளத்திலிருந்து நீக்கிவிட வேண்டும்' என்று கூறினார்.

அப்பொழுது நான் 'இது எனக்கு மிகவும் கடினமான செயலாயிற்றே' என்று கூறினேன்.

'உமக்கு அது கடினமாக இருக்கலாம். ஆனால் அது மெய்ஞ்ஞானி களுக்கு மிகவும் எளிதானது' என்று அவர் கூறினார்.

''மற்றொரு தடவை நான் ஒரு மனிதர் பறந்து கொண்டிருப்பதைக் கண்டேன். நான் அவரை நோக்கி, 'இத்தகு படித்தரத்தை நீர் எவ்வாறு எய்தப் பெற்றீர்?' என்று வினவினேன். 'நான் ஹவாவில் (காற்றில்) பறக்கவிரும்பி, என் ஹவாவை (தீய இச்சைகளை) காலால் மிதித்து நசுக்கினேன்' என்று சிலேடைப்படக் கூறினார். அவருடைய அப்பதில் எனக்கு பெரும் அறிவு விளக்கத்தை வழங்கியது.''

இவ்வாறு தம் வரலாற்றைக் கூறிச் செல்கின்றார்கள் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள்.

துவக்கத்தில் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களின் மகாத்மியத்தை எகிப்து மக்கள் உணரவே இல்லை. அவர்களை ஒரு காஃபிர் என்றே அவர்கள் கருதினார்கள். அவ்வாறு கருதியதோடு நில்லாது தங்களின் கருத்தை கலீபா முதவக்கிலுக்கும் தெரியப்படுத்தி தங்களிடையே ஒருவர் தோன்றி, மக்களை வழி கெடுத்து வருகின்றார் என்றும், அவருடைய நடவடிக்கைகளை இத்துடன் அடக்கி ஒடுக்காவிடின், அவர் நாட்டையே சீர்குலையச் செய்து விடுவார் என்று தாங்கள் அஞ்சுவதாகவும் எடுத்துரைத்தார்கள். அதுகேட்டுக் கலீபாவின் புருவங்கள் நெளிந்தன. ''அந்தக் காஃபிரைப் பிடித்துக் கையில் விலங்கிட்டுப் பக்தாது மாநகரம் கொணர்க!'' என்ற ஆணை கலீபாவின் வாயிலிருந்தும் அதிக உக்கிரத்துடன் வெளி வந்தது.

சின்னாட்களில் கையில் விலங்கிடப்பட்ட வண்ணம் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் கலீபாவின் அரண்மனையில் நுழைவதை நாம் காண்கிறோம். அவர்கள் கலீபாவின் முன்னிலையில் கொணரப்பட்டதும், ஆங்கிருந்த அனைவரையும் நோக்கி, ''இப்பொழுதுதான் நான் உண்மையான இஸ்லாம் என்னவென்பதை ஒரு கிழவியிடமிருந்தும், உண்மையான வீரம் என்னவென்பதை ஒரு நீர் சுமப்பவனிடமிருந்தும் கற்றுக் கொண்டேன்'' என்று கூறினார்கள்.

''எவ்வாறு'' என்று ஆங்கிருந்தோர் அவர்களை வினவிய பொழுது, ''நான் கலீபாவின் இந்த அரண்மனையை நெருங்கியதும், இதனுடைய ஆடம்பர அலங்காரங்களையும், இங்கு விதம் விதமான உடையணிந்து வீற்றிருக்கின்ற பெரு மக்களையும் பார்த்துவிட்டு, நானும் இதற்கு ஏற்ற வண்ணம் என்னை வண்ண உடைகளால் அலங்கரித்துக் கொண்டு செல்வது நல்லதல்லவா என்று எண்ணினேன். அப்பொழுது கழியூன்றி நடந்து வந்த கிழவி ஒருத்தி என்னை நோக்கி,'இங்குள்ள ஆடம்பரங்களையும் ஆடம்பர உடையணிந்து இங்கு வீற்றிருக்கின்ற மக்களையும் பார்த்து மிரளாதீர். அவர்களும் இறைவனின் அடிமைகள் தாம். இறைவன் நாடினாலன்றி அவர்களால் உமக்கு யாதொரு தீங்கும் செய்ய இயலாது' என்று கூறினாள்.

''நான் வரும் வழியில் தண்ணீர் சுமந்து வந்த ஒருவன் எனக்குத் தண்ணீர் வழங்கினான். தண்ணீர் அருந்தியபின் என்னுடன் வந்த ஒருவரை நோக்கி அதற்கான விலையை என்னிடம் கொடுத்து விடுமாறு சாடை செய்தேன். அவர் அதனை அவனிடம் கொடுக்க முற்பட்டபொழுது, அவன் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து, 'நீரோ ஒரு கைதியாக உள்ளீர். கைதியிடமிருந்து எதனையும் பெறுவது பெருந்தன்மையாகாது' என்று கூறிவிட்டான். இவ்வாறு இவ்விருவரிடமிருந்தும் நான் சிறந்த அறிவு பெற்றேன்'' என்று கூறினார்.

இதன்பின் அவர்களைச் சிறைச்சாலையில் அடைக்குமாறு கலீபாவின் ஆணை பிறந்தது. நாற்பது நாட்கள் அவர்கள் சிறையில் அடைப்பட்டுக் கிடந்தார்கள். இந்த நாற்பது நாட்களும், பிஷ்ர் ஹாஃபியின் சகோதரி, தாம் நூல் நூற்று ஈட்டிய பொருளிலிருந்து செய்த ரொட்டி ஒன்றை அவருக்கு உண்பதற்காகக் கொண்டு வந்து கொடுத்து வந்தார். ஆனால் அவர்கள் அதனை உண்டார்களா என்றால் இல்லை. நாற்பது நாட்கள் சென்றபின் அவர்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு வெளியே வருங்கால், அந்த நாற்பது ரொட்டிகளும் ஒன்றின் மேல் ஒன்றாக அந்தச் சிறைக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இதனை பிஷ்ர் ஹாஃபியின் சகோதரி கேள்வியுற்றதும், அவருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. தாம் அளித்த ரொட்டியை அவர்கள் உண்ண வில்லையே என்று ஒரு பக்கல் வருத்தம். அவர்கள் நாற்பது நாட்களாக யாதும் உண்ணாது பட்டினி கிடந்துள்ளார்களே என்று மற்றொரு பக்கல் ஆற்றொணாத்துயர்.

மிகுந்த மனவேதனையுடன் அவர்கள் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களிடம் வந்து, ''அடிகளாரே! நான் நேரிய முறையில் பொருளீட்டி, அவற்றைத் தயாரித்து வந்தேன் என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர் களல்லவா? அவ்விதமாயின் அவற்றை ஏன் தாங்கள் உண்ணவில்லை'' என்று வினவினர்.

அதற்கு அவர்கள் அளித்த பதில் : ''அம்மையே! நான் என் செய்வது? அது கொணரப்பட்ட பாத்திரம் தூய்மையாயில்லையே.''

இவ்வாறு பதில் கூறியதன் மூலம் அந்தப் பாத்திரத்தைச் சிறைக் காவலன் வாங்கி வந்ததனால், அவன் கைபட்டு அதுவும் அதிலிருந்த ரொட்டியும் அசுத்தமாகி விட்டது என்று கூறாமல் கூறினர் அம்மேதகை.

இதன்பின் அவர்கள் மீது பல்வேறு குற்றங்கள் சாட்டப்படுகின்றன. அவற்றிற்கெல்லாம் அவர்கள் ஆணித்தரமாக, ஆதாரத்துடன் மறுப்புக் கூறுகிறார்கள். அவர்கள் கூறும் விளக்கங்கள் கலீபாவின் இருளடைந்த கண்களை ஒளி பெறச் செய்கின்றன. கலீபாவின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடுகிறது. அவர்களின் அமைச்சர்கள் வியப்பு மேலீட்டால் வாயடைத்து வீற்றிருக்கின்றார்கள். கலீபா தம் அரியணை யிலிருந்து கீழே இறங்கி அவர்களின் கரம் தழுவி அவர்களின் ஆன்மீக மாணவராகிறார். இத்துடன் அவை கலைகிறது.

துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களுக்கு ஆன்மீக மாணவராக ஒருவர் இருந்தார். அவர் நாற்பது சில்லாக்கள் (அதாவது ஒவ்வொரு சில்லாவும் நாற்பது நாட்களைக் கொண்டது) இருந்து துறவு மேற்கொண்டிருந்தார்.

நாற்பது தடவை ஹஜ்ஜுச் செய்திருந்தார். நாற்பது ஆண்டுகள் இரவு முழுவதும் விழித்திருந்து வணங்கி இருந்தார். நாற்பது ஆண்டுகளாகத் தம் உள்ளத்தில் தீய எண்ணம் யாதொன்றும் புகாது அறம் காத்திருந்தார்.

இத்தகு மாதவரான அவர், ஒரு நாள் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களை அணுகி, ''நான் நாற்பதாண்டுகளாக அறம் பேணித் தவவாழ்வு வாழ்ந்து வந்த போதினும் நண்பன் என்னோடு ஒரு சொல்லேனும் உரையாடவும் இல்லை. கடைக்கண்ணால் கூட என்னைப் பார்க்கவும் இல்லை. என்னைத் துரும்பாக, தூசியாக கூடக் கருதவுமில்லை. மறைவான விஷயங்களில் இம்மியளவேனும் எனக்கு வெளிப்படுத்தவுமில்லையே. நான் செய்த வணக்கங்கள், நோற்ற நோன்புகள், ஆற்றிய தவங்கள் ஆகியவற்றையெல்லாம் தங்களிடம் கூறினேனென்றால் பெருமைக்காகக் கூறவில்லை. உள்ளதை எடுத்துரைத்து, ஏதேனும் நிவாரணம் பெறவேண்டுமே என்ற எண்ணத்தின் பேரில் கூறினேனே அன்றி வேறில்லை. நான் அதற்காக இறைவன் மீது குறைபட்டுக் கொள்ளவுமில்லை. அவன் மீது குறை கூற நான் யார்? என் அவல நிலையையும், என் துர்பாக்கியத்தையும் எண்ணி, எண்ணித்தான் என் மனம் வருந்துகிறது. நான் நாற்பது ஆண்டுகளாக இறைவனின் அருட்கதவுகளை ஓயாது தட்டிய போதினும், எனக்கு அக்கதவுகள் திறக்கப்படவில்லை. கதவுகள் திறக்கப்படுவது ஒரு புறமிருக்கட்டும். உள்ளிருந்து 'யார் அது?' என்று ஒரு சப்தம் கூட வெளிப்படவில்லை. நான் என் செய்வேன். இறுதி வரை இவ்வாறு தட்டிக்கொண்டே நான் சாக வேண்டியது தானா என் தலை எழுத்து? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே. என்னால் என் துன்பத்தைத் தாங்க இயலவில்லையே. நான் என் செய்வேன்? தாங்கள் தாம் என் ஆன்ம நோய்க்கு மருந்து வழங்க வேண்டும்'' என்று கண்ணீரும் கம்பலையுடனும் கூறினார்.

அது கேட்ட துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் புன்முறுவல் பூத்தவர்களய், ''இன்று நீர் வயிறு புடைக்க உண்டு விட்டு தொழுது, வணங்காது படுத்துறங்கி விடும். பொழுது புலரும் வரை இரவைக் கண்விழித்தும் பாராதீர். உம்மீது இதுகாறும் இரங்கி உமக்குத் தரிசனம் வழங்காத இறைவன் உம்மீது இன்று சினமுற்றாவது உம்மைக் கண்டிக்க உமக்குத் தரிசனம் வழங்கினாலும் வழங்கலாம்'' என்று கூறினர்.

அன்றிரவு அவரும் வயிறு புடைக்க உண்டார். எனினும் தொழாது உறங்க அவரின் மனம் இடம் தராததால் கடமைத் தொழுகையை மட்டும் தொழுதுவிட்டுப் படுத்துறங்கினார். அன்றிரவு அவரின் கனவில் அண்ணலெம் பெருமான் முகம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, ''உம்முடைய நண்பன் உமக்கு 'ஸலாம்'

உரைக்குமாறு என்னை அனுப்பி வைத்தான். இழிஞன் தான் தன்னிட மிருந்து விரைவில் வெகுமதியை எதிர்பார்ப்பானேயன்றி உண்மையான மனிதன் அவ்விதம் எதிர்பார்க்க மாட்டான் என்றும், நாற்பது ஆண்டு களாக உமக்கு ஓர் ஆசையை வழங்கி, அதனை நிறைவேற்றாதிருந்தது உம்மைப் பரிபக்குவப் படுத்துவதற்கேயன்றி வேறில்லை என்றும், கூறச் சொன்னான். மேலும் அந்தக் கள்வனும் பாசாங்குக்காரனுமான துன்னூனிடம் என் சலாத்தைக் கூறி 'பாசாங்குக்காரனே! பொய்யனே!! உன்னை நடுச்சந்தியில் வைத்து, உன் பாசாங்குத் திரையைக் கிழித்து உன்னை அவமானப்படுத்தாவிட்டால் நான் உன்னுடைய இறைவனல்ல' என்று கூறச் சொன்னான். மேலும் என்னுடைய நல்லடியார்களை வழி கெடுத்து, இனிமேல் என்னை விட்டும் விரட்டி விடாது இருக்குமாறும் அவரை எச்சரிக்கக் கூறினான்'' என்று மொழிந்தனர்.

இக்கனவு கண்டு திடுக்கிட்டு விழித்தெழுந்ததும் அவருக்கு அழுகை, அழுகையாக வந்தது. உடனே துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர் களிடம் ஓடோடிச் சென்று தாம் கண்ட கனவை நவின்றார். ''இறைவன் தங்களுக்கு 'ஸலாம்' உரைத்தான். தங்களைப் பொய்யனென்றும், பாசாங்குக்காரன் என்றும் கூறினான் என அவர் கூறியதும், துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை. அவர்களின் கன்னங்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் வழிந்தோடியது.

மற்றொரு நாள் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் தங்களின் இருப்பிடத்தில் அமர்ந்து அழுது கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் நண்பர்கள் அவர்களை நோக்கி, ''ஏன் அழுது கொண் டுள்ளீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''சென்ற இரவு நான், குப்புற (சுஜூதில்) வீழ்ந்து வணங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே உறங்கிவிட்டேன். அப்பொழுது நான் இறைவனைக் கனவில் கண்டேன். அவன் என்னை நோக்கி, 'அபுல் பைஸே! நான் எல்லாப் படைப்பு களையும் படைத்தேன். அவை பத்துப் பிரிவுகளாகப் பிரிந்தன. அவற்றில் ஒன்பது பிரிவுகள் உலகாயுதத்தை ஏற்றுக் கொண்டன. ஒன்றே ஒன்று மட்டும் அதனை ஏற்றுக் கொள்ளதிருந்தது. அந்த ஒன்று பத்துப் பிரிவு களாகப் பிரிந்தது. அவற்றிற்கு நான் சுவனத்தை அன்பளிப்புச் செய்தேன். ஆனால் அவற்றில் ஒன்பது பிரிவுகள் அதனை ஏற்றுக் கொண்டன. ஒன்றே ஒன்று மட்டும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த ஒன்று பத்துப் பிரிவுகளாகப் பிரிந்தது. அவற்றின் முன் நான் நரகத்தைக் கொண்டு வந்தேன். அது கண்டு அவற்றில் ஒன்பது பிரிவுகள் வெருண்டோடின. ஒன்று மட்டும் வெருண்டோடாது நின்ற இடத்திலேயே நின்றது. அது உலகாயுதத்தையும் விரும்பவில்லை; சுவனத்தையும் விரும்பவில்லை. நரகத்தைக் கண்டும் அஞ்சவில்லை. நான் அப்பிரிவினரை நோக்கி,

'என்னுடைய அடியார்களே! நீங்கள் உலக வாழ்வையும் விரும்ப வில்லை. சுவன வாழ்வையும் விரும்பவில்லை. நரகத்தைக் கண்டும் அஞ்சவில்லை. அவ்விதமாயின் நீங்கள் எதைத் தான் விரும்புகின்றீர்கள்?' என்று வினவினேன். அதற்கு அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில், ''இறைவ எம்பெரும! எல்லாம் அறிந்தவன் நீ. எங்களின் விருப்பம் யாதென்பதை நீ நன்கறிவாய்' என்று கூறிவிட்டார்கள் என மொழிந்தான்'' என எடுத்துரைத்தார்கள். இதனைக் கூறும்பொழுது அவர்களின் கண்கள் கண்ணீர் மழையைக் கரை புரண்டோடச் செய்து கொண்டிருந்தன.

மற்றொரு நாள் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் தங்களின் தவச் சாலையில் வீற்றிருந்தார்கள். அப்பொழுது ஒரு சிறுவன் அவர்களை அணுகி, ''என்னிடம் ஓரிலட்சம் தீனார்கள் உள்ளன. அவை அனைத்தையும் தங்களின் தவச்சாலையில் உள்ள மாதவர்களுக்கு அறம் செய்துவிட விரும்புகிறேன்'' என்று கூறினான். அது கேட்ட அவர்கள் அச்சிறுவனை ஒரு முறைக்கு இருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''நீ பருவம் எய்தி விட்டாயா?'' என்று வினவினர். 'இல்லை' என்று அவன் மறுமொழி பகர்ந்தான். ''அவ்விதமாயின் அதனை நீ விரும்பிய வண்ணம் செலவழிக்க உனக்கு உரிமை இல்லை. நீ பருவம் எய்துகின்ற வரையில் காத்திருக்க வேண்டியது தான்'' என்று கூறினர் அடிகளார்.

அவன் பருவம் எய்தியதும் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களை அணுகி, அவர்களின் கரம் பற்றி தீட்சை பெற்றதுடன், அவர்களின் காலடியில் தன்னுடைய ஓரிலட்சம் தீனார்களையும் கொண்டு வந்து குவித்து ஆங்கிருந்த மாதவர்கள் அனைவருக்கும் அவற்றைப் பங்கு வைத்துக் கொடுத்து விட்டான்.

இதன் பின் சில காலம் உருண்டோடியது. அந்த இளவலும் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களின் தவச் சாலையிலேயே தங்கித் தவ வாழ்வு வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அந்தத் தவச்சாலையில் பெரியதொரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. ஆங்கிருந்த மாதவர்களிடம் ஒரு காசேனும் இல்லை. அப்பொழுது அந்த இளவல் அவர்களை நோக்கி, ''நான் என் செய்வேன்? எனக்குப் பெரிதும் வருத்தமாக உள்ளதே. என்னிடம் இன்னும் ஓரிலட்சம் தீனார்கள் இருப்பின் அவற்றையெல்லாம் வாரி, வாரி வழங்கி உங்களின் நெருக்கடியைத் தீர்த்திருப்பேனே''என்று கூறினான்.

இது துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் செவிப்பட்டதும், ''இன்னும் இவன் ஆன்மீக வாழ்வின் இன்பத்தை நுகரவில்லை. உலகாயுதப் பொருள் தான் இவனுக்கு இன்னும் முக்கியமாகத் தென்படுகிறது'' என்று தம்

மனத்திற்குள் எண்ணியவர்களாய், ''நீ இன்ன மருந்துக் கடைக்குச் சென்று, மூன்று திர்ஹத்திற்கு இன்ன மருந்தை வாங்கி வா'' என்று கூறினர்.

அவனும் அவ்வாறே செய்தான்.

அதன் பின் அவர்கள் அவனை நோக்கி, ''இதனை இடித்துப் பொடி பண்ணி, எண்ணெய்யில் வைத்துக் குழப்பி மூன்று வில்லைகள் செய்து, அவற்றை நிழலில் காயவைத்து அவை காய்ந்ததும் என்னிடம் எடுத்து வா'' என்று கூறினர். அவனும் அவ்வாறே செய்தான்.

அவர்கள் அவற்றை வாங்கியதும், அவற்றைக் கையில் வைத்துத் தேய்த்து அவற்றின் மீது ஓதி ஊதினார்கள். அடுத்தக் கணம் அவை மாணிக்கங்களாக ஒளிர்ந்தன.

அவர்கள் அவற்றை அந்த இளவலிடம் கொடுத்து, ''இவற்றைக் கடைத் தெருவுக்கு எடுத்துச் சென்று விலை பேசிவா. ஆனால் விற்று விடாதே'' என்று கூறி அனுப்பினர்.

அவனும் அவ்வாறே சென்று மணி வணிகர்களிடம் அவற்றை மதிப்பிடுமாறு கூறியபொழுது அவை ஒவ்வொன்றும் ஆயிரம் தீனார் விலை பெறும் என்று கூறினர்.

இதனை அவ்விளவல் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களிடம் வந்து கூறியதும் அவற்றை இடித்துப் பொடியாக்கித் தண்ணீரில் கரைத்து விடுமாறு கூறினர். அவனும் அவ்வாறே செய்து முடித்தபொழுது, அவர்கள் அவனை நோக்கி, ''மகனே! இங்குள்ள துறவிகள் ரொட்டி இல்லையே என்று பட்டினி கிடப்பதில்லை. தாங்களாக விரும்பியே அவர்கள் பட்டினியையும் பசியையும் தங்கள்பால் அணைத்துக் கொள்கின்றனர்'' என்று கூறினர்.

இதன் பின்னரே அவ்விளவலின் அறிவுக் கண்கள் தெளிவு பெற்றன. உலகாயுதப் பொருள்கள் அவனின் உள்ளத்தை அணுவத்தனையும் ஈர்த்து நிற்கவில்லை. மண்ணும் பொன்னும், மணியும் மண்ணாங்கட்டியும் அவனுடைய கண்களுக்கு ஒன்றுபோலத் தென்படலாயின.

ஓர் இளைஞர் சூபிகளைப் பற்றி எப்பொழுது பார்த்தாலும் குறை கூறிக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களைக் காண வந்தபொழுது, அவர்கள் அவரிடம், தாம் அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்து, இதனை எடுத்துச் சென்று மளிகைக் கடைக்காரனிடம் கொடுத்து ஒரு தீனாருக்கு ஈடு வைத்து, ''இன்ன பொருள்களை வாங்கி வா'' என்று கூறினர். அவரும் அவ்வாறே கொண்டு சென்றபொழுது, ''இதற்கு ஒரு தீனார் தர இயலுமா?'' ஒரு திர்ஹம் தான் தர இயலும்?'' என்று கூறிவிட்டான் கடைக்காரன்.

இதனை அவர் வந்து துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களிடம் கூறிய பொழுது, ''நல்லது; அதனை மணி வணிகரிடம் சென்று விலை பேசி வா'' என்று கூறினர். அவரும் அவ்வாறே அதனை மணி வணிகரிடம் எடுத்துச் சென்று, அதனை மதிப்பிடுமாறு கூறியபொழுது, ''அது ஆயிரம் தீனார் விலை பெறும்'' என்று கூறினர்.

இதனை அவ்விளைஞர் வந்து துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களிடம் கூறியபொழுது, ''இந்த மோதிரத்தைப் பற்றி மளிகைக் கடைக்காரனுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவு தான் உனக்கும் சூபிகளைப் பற்றித் தெரியும்'' என்று கூறினர். அது கேட்டு அவ்விளைஞர் தம் பிழை பொறுத்தருளுமாறு வேண்ட, அவர்களும் அவ்வாறே செய்தனர்.

இறைவன் தன்னுடைய அளப்பரும் பேரருளின் பெருமையை அவர்களுக்கு உணர்த்த விரும்பினானோ என்னவோ, அவர்கள் ஒரு நாள் ஆற்றோரத்தில் வருத்தத்துடன் நின்று கொண்டிருந்த பொழுது அற்புதமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ஒரு தேள் ஆற்றோரத்தில் ஓடியது. திடீரென ஆற்றிலிருந்து தவளை வந்தது. தேள் அதன்மீது ஏறி இவர்ந்து சென்றது. இதைக் கண்ட அவர்கள் பெரிதும் வியப்புற்றவர் களாய், அவை என்ன செய்கின்றன என்பதைப் பார்க்க அவற்றின் பின்னே ஆற்றில் இறங்கி நடந்தும் நீந்தியும் சென்றார்கள். தவளை, அத்தேளைச் சுமந்து கொண்டு அக்கரை சேர்ந்தது. கரையை அடைந்ததும் தேள் தவளையின் முதுகிலிருந்து கீழே இறங்கி ஒரு மர நிழலை நோக்கி ஓடியது. அம்மர நிழலில் ஒருவன் குடித்துவிட்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனின் நெஞ்சின் மீது ஒரு பாம்பு ஏறியது. அதனைப் போய் இத்தேள் கொட்டியது. அடுத்த கணம் பாம்பு செத்தது. அவன் பிழைத்தான். இதன் பின் அத்தேள் தான் வந்த வண்ணமே திரும்பிச் சென்று விட்டது.

இப்பொழுது துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) வியப்புக் கடலில் மூழ்கியவர் களாய் நின்று கொண்டிருந்தார்கள். இவர் இறைநேசச் செல்வராக இருக்கலாம். எனவே தான் இறைவன் தன் அருள்நேசரை, 'தீயவனைக் கொண்டு தீயவனை அடக்கிக் காத்தருள் புரிந்தான்' என்று எண்ணினர். சற்று நேரத்தில் அவர் விழித்தெழுந்தார். அதன் பின் தான் அவர் குடி வெறியில் படுத்துறங்கியது அவர்களுக்குத் தெரிய வந்தது. அப்பொழுது அவர்களின் வியப்பு முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகியது. ''இத்தகு துன்மார்க்கனை இறைவன் பாம்பாலோ, தேளாலோ கொன்றொழிக்காது காத்தருள் புரிந்தானே, இஃதென்ன வேடிக்கையாக உள்ளது'' என்று அவர்கள் எண்ணினர். அப்பொழுது அசரீரி ஒன்று முழங்கியது. ''துன்னூனே! ஏன் மயங்குகின்றீர்? அவன் துன்மார்க்கன் தான். தீயவன்

தான். அதனாலென்ன? நல்லோர்களைக் காப்பது போன்று, தீயோர் களையும் நாம் காத்தருள் புரிந்து வருகின்றோம் என்பது உமக்குத் தெரியாதா, என்ன?'' என்று அவ்வசரீரி அவர்களை இடித்துரைத்தது. அவர்கள் மயக்கம் தெளியப் பெற்றார்கள்.

துயிலெழுந்த அவர் தம் அருகே பாம்பு ஒன்று செத்துக் கிடப்பதையும், அதற்கப்பால் இவர்கள் நின்று கொண்டிருப்பதையும் கண்டார். ''என்ன செய்தி? தாங்கள் ஏன் இங்கு வந்து நிற்கின்றீர்கள் இந்தப் பாம்பு ஏன் இங்கு செத்துக் கிடக்கின்றது?'' என்று வினவினார். அவர்கள் நடந்ததை நடந்தவாறு எடுத்துரைத்தார்கள். அது கேட்டு அவர் பெரும் கூச்சலிட்டுக் கொண்டு, தம் தலையில் மண்ணை வாரிப் போட்டு தம் துணிகளைக் கிழித்துக் கொண்டு, அங்கிருந்தும் வெருண்டோடினார். அதன் பின் அவர் நேர்வழி பெற்று, ஓர் இறைநேசச் செல்வராக ஆனார் என்று கூறப்படுகிறது.

மற்றொரு நாள் அவர்கள் உருவத் தொழும்பியான கிழவி ஒருத்தி பறவைகளுக்கு தானியங்களைப் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, ''இறை மறுப்பவளான உன்னிடமிருந்தெல்லாம் இறைவன் யாதொரு நன்மையையும் ஏற்றுக் கொள்ளமாட்டான்'' என்று கூறினர். அப்பொழுது அவள் யாதொரு மறுமொழியும் கூறவில்லை. பின்னர் அவர்கள் அவளைக் கஃபாவில் வைத்துச் சந்தித்த பொழுது, அவர்களால் தங்களின் கண்களையே நம்ப இயலவில்லை. ''உருவத் தொழும்பியாகிய இவள் இங்கு எவ்வாறு வந்தாள்?'' என்று எண்ணினர். அப்பொழுது அவள் அவர்களை நோக்கி, ''துன்னூனே! என்ன, என்னை ஒருவிதமான வியப்புக் கண்களுடன் பார்க்கிறீர்? பறவைகளுக்கு நான் அறமாக வழங்கிய ஒரு பிடி தானியத்தின் காரணமாக, இறைவன் எனக்கு இஸ்லாத்தைத் தழுவும் பேற்றினை வழங்கினான்'' என்று கூறினாள். அது கேட்டு அவர்கள் இறைவனின் அளப்பரும் பேரருளை எண்ணி, எண்ணி வியந்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் கஃபாவில் இருக்கும் பொழுது, நீக்ரோ ஒருவர் அல்லாஹ்வைத் துதித்துப் பல்வேறு பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரின் முகம் ஒளிர்வதையும், அவர் பாடுவதை நிறுத்தியதும் அது முன்பு போல் ஆகிவிடுவதையும் கண்டனர். அப்பொழுது அவர்கள் அவரை அணுகி, தாம் அவரிடம் கண்டதை எடுத்துரைத்தபொழுது, ''ஆம்; அல்லாஹ்வின் நினைவு என் முகத்தை மட்டுமல்ல. என் ஒவ்வொரு மயிர்க் காம்புகளையும் ஒளிமயமாக ஆக்குகின்றது. அது என் இதயத்தையும், மூளையையும் நறுமணத்தால் நிரப்புகிறது'' என்று கூறினார்.

அவரின் இப்பதில் அவர்களின் உள்ளத்தைப் பெரிதும் ஆட் கொண்டது. எனவே அவர்கள் தொழ நிற்பார்களானால் ''இறைவனே! உன் திருமுன் நான் எந்தக் காலினால் நடந்து வருவேன். உன் 'கிப்லா'வை நான் எந்தக் கண்களைக் கொண்டு காண்பேன். உன் மறைவான இரகசியங்களை நான் எந்த நாவைக் கொண்டு வெளிப்படுத்துவேன். உன்னுடைய புகழை நான் எந்தப் பெயரைக்கொண்டு எடுத்துரைப்பேன். ஒன்று மற்றவனாக நான் உன் முன்வந்து நிற்கின்றேன். எனினும் முக்கிய அலுவல் காரணமாக, வெட்கமின்றி நான் உன் முன் வந்து நிற்கின்றேன்'' என்று கூறிவிட்டே அவர்கள் 'தக்பீர்' கட்டித் தொழுவார்கள்.

ஒரு தடவை அவர்கள் தொழ நின்று 'அல்லாஹு அக்பர்' என்று தக்பீர் சொல்லிக் கையைக் கட்டியதும் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்து விட்டார்கள்.

ஒரு சமயம் அவர்கள் எகிப்து நாட்டில் சுற்றி அலைந்து கொண் டிருக்கும்பொழுது சில சிறுவர்கள் ஒருங்கு சேர்ந்து ஓர் இளவலைக் கல்லால் எறிந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் அச்சிறுவர்களை அணுகி ''ஏன் அவரைக் கல்லால் எறிகிறீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் ''அவர் ஒரு பைத்தியம்'' என்று கூறினர். ''எவ்வாறு அவர் ஒரு பைத்தியம் என்று உங்களுக்குத் தெரிய வந்தது?'' என்று அவர்கள் வினவினர், அதற்கு அவர்கள் ''அவர் தாம் இறைவனைக் கண்டதாக உளறுகிறார்'' என்று பதிலிறுத்தார்கள். அப்பொழுது அவர்கள் அந்த இளவலிடம் ''நீர் அவ்வாறு கூறியதுண்டா?'' என்று வினவினர். அதற்கு அவர் ''நான் இறைவனை ஒரு கணமேனும் காணாதிருப்பின் அவனை விட்டும் திரையிடப்பட்டவனாகவும் அவனுக்கு அடி பணியாத வனாகவுமல்லவோ இருப்பேன்'' என்று கூறினார். அவர் கூறியது அவர்களைத் தூக்கிவாரிப் போட்டது. அவரின் மாண்பினை உணர்ந்து அவர்கள் மெய்சிலிர்த்தார்கள். அவரின் பதில் அவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து விட்டதென்றே கூறலாம்.

இதன் பின்னர் அல்லும் பகலும் இறை நினைவிலே திளைத்திருக்கும் பயிற்சியை மேற்கொண்ட அவர்களை ஒருவர் அணுகி, ''தெளபா (பாவமன்னிப்புச் செய்தல்) என்றால் என்ன?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''பொது மக்களின் தெளபா தம் பாவங்களை நினைந்து வருந்தி அழுது இறைவனிடம் மன்னிப்புக் கோருவதாகும். ஆனால் இறைநேசர் களின் தெளபாவோ இறைவனைக் கண நேரம் மறந்திருக்கும் (கஃப்லா) நிலைக்காக இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோருவதாகும்'' என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்.

அவர்கள் மாபெரும் நெறி வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். ''எல்லாப் பாவங்களும் இச்சையினால் ஏற்படுகின்றன. எல்லா இச்சைகளும், உள்ளம் திருப்தியடைந்தபொழுது தம் தலையைக்காட்டுகின்றன. எனவே தான் திருப்தியடைந்த ஒருவன் பாவம் செய்யாமலோ, பாவத்தை நாடாமலோ இருப்பதில்லை'' என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் தம் வாணாளில் ஒருபோதும் வயிறு நிறைய உண்டதில்லை. இது பற்றி அவர்கள் ஒரு தடவை கூறும் பொழுது, ''வயிறு நிரம்ப நான் உண்டதுமில்லை. நான் பாவம் செய்யவுமில்லை'' என்று கூறினார்கள். இவ்வாறு கூறி வயிறு நிரம்ப உண்பது தான் பாவத்திற்கு மூல காரணம் என்று கூறாது கூறினர்.

அவர்களுக்குப் பத்தாண்டு காலமாகப் பால் கஞ்சி குடிக்க வேண்டுமென்று ஆசையாக இருந்து வந்தது. எனினும் அவர்கள் அந்த ஆசைக்கு இடம் கொடுக்கவே இல்லை. ஒரு நாள், பெருநாளைக்கு முன் தினம் அவர்களின் உள் மனம் அவர்களை நோக்கி, ''நானும் பத்தாண்டுகளாக உம்மிடம் பால் கஞ்சி வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளேன். நீரும் தருவதாக இல்லை. நாளை பெருநாள் வருகிறது. இந்தப் பெருநாளைக் காவது என்மீது இரங்கி, பால் கஞ்சி தரக் கூடாதா?'' என்று அழாக் குறையாகக் கேட்டது. அதற்கு அவர்கள், ''நல்லது; தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. பெருநாள் இரவு முழுவதும் இரண்டு ரகஅத்துகளில் குர்ஆனின் முப்பது அத்தியாயங்களையும் ஓதித் தொழ நீ என்னுடன் உடன்பட வேண்டும்'' என்று கூறினர். அதற்கு அவர்களின் உள் மனமும் இணங்கியது.

பொழுது பட்டதும் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் தொழத் துவங்கினார்கள். தொழுதார்கள், தொழுதார்கள் இரவு முழுவதும் திருக்குர்ஆன் முழுவதையும் ஓதித் தொழுதார்கள். அவ்வாறு ஓதித் தொழுது அவர்கள் 'சலாம்' கொடுக்கும் நேரத்தில் அவர்களின் உள் மனம் தாம் பத்தாண்டுகளாக எண்ணிவந்த எண்ணம் நிறைவேறப் போவதை எண்ணித் துள்ளி விளையாடியது. அப்பொழுது அவர்கள் தம் உள் மனத்தை நோக்கி, ''என்ன உள் மனமே! நீ துள்ளி விளையாடவா செய்கின்றாய்? என்னைப் பத்தாண்டுகளுக்குப் பின் வென்று விட்டதாக எண்ணிக் களியாட்டம் ஆடுகின்றாயா, என்ன? இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன், என்னை வெற்றி கொள்ள நான் உன்னை ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன். உன் ஆசை இனி ஒருபோதும் நிறைவேறாது'' என்று கூறினர்.

இவ்வாறு தம் உள் மனத்திற்குக் கூறிவிட்டு அவர்கள் தொழுது முடித்து வெறுமனே வீற்றிருந்தார்கள். அப்பொழுது ஒருவர், 'அஸ்ஸ

லாமு அலைக்கும் யா ஷைகு!' என்று கூறிய வண்ணம் உள்ளே நுழைந்தார். வந்தவர், அவர்களின் முன் மூடப்பட்ட பாத்திரம் ஒன்றை வைத்தார். அதன் பின் அவர் அவர்களை நோக்கி, ''ஷைகு அவர்களே! நான் நானாக இங்கு வரவில்லை. நான் இங்கு ஒருவரால் அனுப்பி வைக்கப்பட்டேன். நான் ஓர் ஏழைத் தொழிலாளி. பிள்ளை குட்டிக்காரன். என் குழந்தைகள், ''அப்பா, பால் கஞ்சி காய்ச்சித் தா'' என்று பல காலமாகக் கேட்டுக் கொண்டிருந்தன. என்னிடமோ அதற்கான வசதி இல்லை. எனினும் என்னுடைய அற்ப வருவாயில் நாள்தோறும் சிறிது சிறிதாகச் சேமித்து இந்தப் பெருநாளைக்காவது அந்தப் பிஞ்சு உள்ளங்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணினேன். அவ்விதமே செய்து, நேற்றிரவு பால் கஞ்சி தயாரித்து வைத்துவிட்டுப் படுத்துறங்கினேன். அப்பொழுது அவனிக்கோர் அருட்கொடையாக வந்த அண்ணலெம்பெருமான் (ஸல்) அவர்கள் என் கனவில் திருத்தோற்றம் வழங்கி, ''நீ மறுமையில் என்னைச் சந்திக்க விரும்பினால், நீ காய்ச்சி வைத்திருக்கும் பால் கஞ்சியில் சிறிதளவு எடுத்துச் சென்று துன்னூன் மிஸ்ரீயிடம் கொடுத்து, அதனை உண்டு அவரின் ஆன்மாவோடு அவர் சிறிது நேரத்திற்காவது, சமாதானமாக இருக்குமாறு முஹம்மது இப்னு அப்துல்லா கூறியதாகச் சொல்லும் என்று திருவாய் மலர்ந்தனர்'' என்று கூறினார்.

அது கேட்டு துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் உணர்ச்சி மீக்குற்று அழுது விட்டார்கள். அண்ணலெம்பெருமான் தம் மீது அன்பு கூர்ந்து அனுப்பி வைத்த கஞ்சியை அவர்கள், அடுத்த கணம் உண்ணத் தொடுத்தார்கள்.

இப்பொழுது நாம் துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களை அரபாத் வெளியிலே காண்கிறோம். அங்குத் தங்கி இருந்து இறைவனைத் தொழுது வழுத்தித் தங்களின் குறை இரந்து கொண்டிருந்தபொழுது, ஹாஜிகள் அனைவரும் பொழுது படுவதற்குச் சற்று முன்னும் பின்னுமாக அவ்விடத்தை விட்டும் அகன்றுவிட்டார்கள். எங்கும் நிசப்தம் நிலவிய அவ்வெளியிலே துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் மட்டும் தனித்திருந்து இறைவனைத் தியானித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் மனக் கண்முன் திமிஷ்கில் வாழ்ந்து வந்த செருப்புத் தொழிலாளர் அஹ்மது அஷ்ஹாக்கின் திருவுருவம் காட்சி வழங்கியது. அதைத் தொடர்ந்தாற் போன்று, ''இவ்வாண்டு ஹஜ்ஜுச் செய்தவர்களில் திமிஷ்கைச் சேர்ந்த அஹ்மது அஷ்ஹாக்கின் ஹஜ்ஜே எல்லோருக்கும் முதலாக இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் அவர் இவ்வாண்டு ஹஜ்ஜுச் செய்ய இங்கு வரவில்லை'' என்ற அசரீரி முழங்கியது. அது கேட்டு துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் அளவற்ற வியப்பெய்தினார்கள்.

''அல் அரபா ஹஜ்' (அரபாவில் தங்குவது தான் ஹஜ்) என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்களே. ஒருவன் நெடுந் தொலைவிலிருந்து வந்து மக்கா, மதீனா, மினா முதலிய இடங்களுக் கெல்லாம் சென்றபோதினும் துல்ஹஜ் மாதம் ஒன்பதாவது நாள் நண்பகலுக்குப் பின் சிறிது நேரம் அரபா வெளியில் தங்கவில்லை யாயின் அவனுடைய ஹஜ் நிறைவேறாதே. உண்மை இவ்வாறிருக்க, எவ்வாறு ஒருவர் திமிஷ்கில் இருந்தவண்ணமே இவ்வாண்டு ஹஜ்ஜை நிறைவேற்றினார்? அதுவும் எல்லோருக்கும் முதலாவதாக அவருடைய 'ஹஜ்' தானே இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாமே. இஃதென்ன புதுமையாக உள்ளது?'' என்று ஒரு கணம் எண்ணினார்கள் அவர்கள். 'ஒருவேளை அந்த அசரீரி ஷைத்தானுடைய குரலாக இருக்குமோ? ஷைத்தான் என்னை வழி கெடுக்க எண்ணுகின்றானா, என்ன? ஒன்றுமே விளங்கவில்லையே' என்று மறுகணம் எண்ணினார்கள் அவர்கள். எவ்வாற்றானும் நான் இதன் உண்மையை அறிய வேண்டும்'' என்று அவர்கள் தமக்கு தாம் பேசிக் கொண்டார்கள்.

இதன் பின் என்ன? வனங்களிலும், வனாந்தரங்களிலும் அவர்களின் கால்கள் நடக்கத் துவங்கின. இறுதியாக அவை அவர்களை இழுத்து வந்து திமிஷ்க் நகரின் சேரி ஒன்றில் வாழ்ந்து வந்த அஹ்மது அஷ்ஹாக்கின் சிறு குடிலின் முன் கொண்டு வந்து நிறுத்தியது.

எவரும் ஏறிட்டுப் பாராத ஏழையாகிய தம்மை எவரோ தொலைவி லிருந்து பார்க்க வந்திருக்கிறார் என்பதை அஹ்மது அஷ்ஹாக் அறிந்ததும், அவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை. ஆடினார், ஓடினார். 'அன்பரே வருக! அடிகளாரே வருக!!' என்று கூறி அவர்களை வரவேற்று உபசரித்தார்.

இரவு உணவுண்டு முடிந்ததும், துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் அஹ்மது அஷ்ஹாக்கை நோக்கி, ''சகோதரரே! தாங்கள் இவ்வாண்டு ஹஜ்ஜுச் செய்யச் சென்றீர்களோ?'' என்று வினவினர். அதற்கு அஹ்மது அஷ்ஹாக் 'இல்லை' என்று மறுமொழி பகர்ந்ததும், துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களின் முகத்தில் புன்னகை மிளிர்ந்தது, 'ஏன்' என்று அடுத்த வினாவை விடுத்தார்கள்.

அது கேட்டு அஹ்மது அஷ்ஹாக் நீண்ட பெரு மூச்சை விட்டார். ''அது ஒரு நீண்ட சோகக் கதை. அதை ஏன் கேட்கிறீர்கள்?'' என்று கூறிய வண்ணம் தம் பேச்சைத் தொடர்ந்தார்.

''நானோ ஓர் ஏழைச் செருப்புத் தொழிலாளி. மக்கா சென்று ஹஜ்ஜுச் செய்ய வேண்டும் என்ற பேரவாவின் உந்துதலினால் நாற்பதாண்டுகளாகச் சிறிது சிறிதாகப் பணம் சேமித்து வந்தேன். நாற்பதாண்டுகளுக்குப் பின்

இவ்வாண்டு தான், அந்நெடுந்தொலைப் பயணத்தை மேற்கொள்வதற்குப் போதுமான பணம் என் கையில் சேர்ந்தது. எனவே, இவ்வாண்டு என் நாற்பதாண்டுக் கனவு நிறைவேறுமென்று எண்ணி இருந்தேன்.

''இதற்கிடையே ஒன்று நிகழ்ந்தது. பக்கத்து குடிலுக்குச் சென்ற என் சின்னஞ்சிறு மகன் அழுதுகொண்டு வந்தான். 'ஏன் மகனே அழுகிறாய்?' என்று வினவினேன். 'அங்கு கறி சமைத்து உண்கிறார்கள். நானும் கேட்டேன். எனக்குத் தரமாட்டோம் என்கிறார்கள்' என்று கூறினான். அது கேட்டுப் பெரிதும் வருத்தமாக இருந்தது. 'இவர்கள் என்ன ஜென்மங் களடா! சிறு பிள்ளை கேட்கிறது என்று கூட இரக்கப்படாது அவனை விரட்டி விட்டார்களே' என்று கூறினேன். நான் கூறிய இச்சொல் அண்டை வீட்டுக்காரரின் செவியில் விழுந்தது. அவர் என்னிடம் வந்து, 'நாங்கள் கடந்த ஐந்து நாட்களாக உண்ண உணவின்றிப் பட்டினியாக் கிடந்தோம். இன்று நான் தெருவழியே சென்றபொழுது ஓர் ஆடு செத்துக் கிடந்ததைக் கண்டேன். அதனை எடுத்து வந்து வெட்டி வெந்நீரில் வேக வைத்து உண்டு கொண்டிருந்தோம். அப்பொழுது தான் தங்களின் சின்னஞ்சிறு மகன் வந்து தனக்கும் அது வேண்டும் என்று கூறினான். ஐந்து நாட்கள் பட்டினயாகக் கிடந்த நாங்கள், எங்களின் உயிர் எங்களின் உடலை விட்டும் பிரிந்து விடாது காக்க, அதனை உண்பது எங்களுக்கு ஆகும் (ஹலால்), ஆனால் தங்களுடைய மகனுக்கு அதனை உண்பது ஆகாது (ஹராம்) இந்நிலையில் நாங்கள் செய்தது சரியா, தவறா என்று தாங்களே கூறுங்கள் சகோதரரே!' என்று கூறினார்.

''அதுகேட்டு என்னுடைய உள்ளம் உருகியது. கண்கள் பனித்தன. 'மன்னியுங்கள், மன்னியுங்கள். நான் அறியாது கூறிவிட்டேன்' என்று நான் அலறினேன். அவரும் தன் சிறு குடிலுக்குச் சென்று விட்டார். அவருடைய நிழல் போன்று அவருடைய வறுமையும் அவரின் பின்னால் சென்றது.

''அன்றிரவு முழுவதும் எனக்கு உறக்கமே வரவில்லை. அண்டை வீட்டுக்காரன் பட்டினியால் பரிதவிக்கும்பொழுது, நான் அவனைப் பற்றிச் சிறிதளவேனும் அக்கரை செலுத்தாது மக்காவுக்கு ஹஜ்ஜு செய்யச் செல்வது சரியா என்று என் உள் மனம் என்னோடு வாதாடியது.

பொழுது புலர்ந்தது. நான் ஹஜ்ஜு செய்வதற்காக நாற்பதாண்டு களாகச் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு அவரின் சிறு குடிலுக்குச் சென்று, அதனை அவரிடம் கொடுத்து, 'சகோதரரே! இதனைக் கொண்டு உம் வறுமை போக்குக! உம் சிறுகுடில் தான் என் கஃபா என்று கூறினேன்'' என்று தாம் ஹஜ்ஜுச் செய்யப் பணம் சேர்த்த கதையைச் சொல்லி முடித்தார் அவர்.

அவ்வளவு தான். துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள், நீர் மல்கும் கண்களுடன் அவரை ஆரத் தழுவி, ''சகோதரரே! நீர் தாம் ஹஜ்ஜின் உண்மைத் தத்துவத்தைக் கண்டு பிடித்தவராவீர்'' என்று கூறித் தாம் அங்கு வந்த வரலாற்றை எடுத்தோதினார்கள். அப்பொழுது அஹ்மத் அஷ்ஹாக்கின் கன்னங்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் வழிந்தோடியது.

மகானுக்கு மகானாகவும் மாதவர்க்கு மாதவராகவும் விளங்கிய துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள், பல்லாண்டுகள் பாரினிலே ஆன்மீக அரசாட்சி செய்த பின் தங்களின் 66- ஆவது வயதில் (ஹிஜ்ரி 246 கி.பி. 861) இறைவனின் திருச்சமுகத்தை எய்த ஆயத்தமாயினர். அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடக்குங்கால், ''தங்கள் விருப்பம் யாது? கூறுங்கள். நிறைவேற்றித் தருகிறோம்'' என்று அவர்களின் நண்பர்கள் வேண்டினர். அப்பொழுது அவர்கள் தங்களின் வெளிறிய இதழ்களை விரித்து, ''நான் இறப்பதற்கு முன் ஒரு கணமேனும் அவனை அறிய விரும்புகிறேன்'' என்று கூறினர். அதன் பின், ''அச்சம் என்னை வீணாக்கி விட்டது. ஆசை என்னை எரித்துவிட்டது. காதல் என்னை வழிகெடுத்து விட்டது. இறைவன் எனக்குப் புத்துயிர் அளித்தான்'' என்று அடிகளைக் கூறினர்.

இவ்வாறு கூறிய ஒரு நாளைக்குப் பின் அவர்கள் நினைவிழந் தார்கள். இந்நிலையிலேயே அவர்கள் இறப்பெய்தினர். அப்பொழுது அவர்களின் நெற்றியில் ''இவர் அல்லாஹ்வின் அருள் நேசர்; அல்லாஹ் வின் நேசத்தாலேயே உயிர் நீத்தார். அந்த இறை நேசம் என்ற வாளே அவரைக் கொன்றொழித்தது,'' என்ற வாசகங்கள், ஒளி எழுத்தால் பொறிக்கப்பட்டிருந்தன என்றும் அவர்களின் 'ஜனாஸா' அடக்கவிடத் திற்கு எடுத்துச் செல்லப்பட்டபொழுது பறவைகள் வானில் பறந்து நிழலிட்டன என்றும் கூறப்படுகிறது. அது கண்டு எகிப்து மக்கள் தாங்கள் இதுகாறும் அவர்களின் மாண்பினை உணராது அவர்களுக்குப் பொல்லாங்கு சூழ்ந்ததை எண்ணிப் பெரிதும் வருந்தினார்கள்.

அவர்கள் இறப்பெய்திய இரவு, எழுபது பேர் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டனர். அப்பொழுது அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள், அவர்கள் ஒவ்வொரு வரிடமும், ''இறைவனின் நண்பர் வருகிறார். அவரை வரவேற்க வந்துள்ளேன்'' என்று திருவாய் மலர்ந்து விட்டு மறைந்தனர்.

மறைந்த மாமேதை துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்களின் மாண்பினை உணர்த்த இதைவிட நற்சான்று வேறு என்ன உள்ளது?

# 19. ஸரீ அஸ் ஸகதி (ரஹ்)

''தீ, தீ என்று அலறினார்கள் மக்கள். எங்கே, எங்கே என்று வினவினார்கள் சிலர். அதோ, அதோ பாருங்கள். கடைத் தெரு பற்றி எரிகின்றது'' என்று கூறினார்கள் வேறு சிலர். ''ஐயோ, ஐயோ நான் என் செய்வேன். என் கடை எரிகின்றதே'' என்று அலறிக்கொண்டே, நெடுமரம் போலக் கீழே சாய்ந்தார் வணிகர் ஒருவர். இப்பொழுது தீ நாலாப் பக்கங்களிலும் பற்றிப் படர்ந்தது. அதற்கு ஆதரவு வழங்குவது போன்று காற்றும் சுழன்று சுழன்று வீசியது. அது கண்டு சிலர் மகிழ்வுற்றார்கள். ''மக்கள் வயிறெறிய அடா விலை பகர்ந்து அநியாயம் செய்த பகற் கொள்ளைக்காரர்கள் அழிந்தொழியட்டும்'' என்று சபித்துக் கொண்டு நின்றார்கள் வேறு சிலர்.

இவ்வாறு ஒரு நாள் பகுதாது மாநகரின் கடைவீதி ஒன்றில் நிகழ்ந்தது. இக்காலை வணிகர் ஒருவர் தம் இல்லத்தில் அமைதியாக வீற்றிருந்தார். அவர் தம் வாணாளில் ஒரு போதேனும் எப்பொருளுக்கும் அடாவிலை பகரவும் இல்லை. எப்பொருளையும் அநியாய விலைக்கு விற்கவும் இல்லை. அவர் தம் வாணாளில் ஒரு போதேனும் எப் பொருளுக்கும் ஐந்து சதவிகிதத்திற்கு மேல் ஆதாயம் வைத்து விற்றதுமில்லை. ஒரு தடவை பாதாம் பருப்பின் விலை தொண்ணூறு பொற்காசுகளாக உயர்ந்து விட்ட பொழுது, தாம் அதனை அறுபது பொற்காசுகளுக்கே வாங்கியதாகவும், எனவே அறுபத்து மூன்று பொற்காசுகளுக்கே அதனைத் தாம் விற்க முடியும் என்றும் கூறினார் அவர். ''என்ன இவ்வாறு கூறுகின்றீர்கள்? அதன் விலை இப்பொழுது தொண்ணூறு பொற்காசுகளாகவல்லவோ உயர்ந்துள்ளது. தங்களிட முள்ள பாதாம் பருப்புகள் அனைத்தையும் தொண்ணூறு பொற் காசுகளுக்கே வாங்க வந்துள்ளேன். நிறுத்துப் போடுங்கள்'' என்று வாங்க வந்தவர் கூறியபொழுது, ''உயர்ந்தால் உயர்ந்து விட்டுப் போகிறது. நான்அதன் விலையை உயர்த்த மாட்டேன். எனக்கு ஐந்து சதவிகித ஆதாயம் போதும். வாங்கினால் அறுபத்து மூன்று பொற்காசுகளுக்கு வாங்குங்கள். இல்லையேல் போய்க் கொண்டே இருங்கள்'' என்று

கூறினார். அது கேட்டு வாங்க வந்தவர் மூக்கின் மீது விரலை வைத்தார். ''தாங்கள் மட்டும் இத்துணை நேர்மையாக இருக்கும் பொழுது, நான் நேர்மையற்றவனா என்ன? தந்தால் இப்போதைய விலையாகிய தொண்ணூறு பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு தாருங்கள். அதற்கு ஒரு காசு குறைத்துக் கூறினும் எனக்கு அது வேண்டாம்'' என்று கூறினார். ''அறுபத்து மூன்று பொற்காசுகளுக்கு மேல் ஒரு காசேனும் நான் வாங்கேன். அவ்விலை தந்து வாங்கினால் வாங்குங்கள். இல்லையெனில் விற்காமல் கிடந்து விட்டுப் போகட்டும். அநியாயமாகப் பொருளீட்டி நான் இறைவனின் திருமுன் அவமானமுற விரும்பவில்லை'' என்று கூறிவிட்டார் அவர். வாங்க வந்தவரும் அதற்கு இணங்காது அதனை வாங்காது வெறுமனே சென்று விட்டார்.

இத்தகைய நல்லார் தாம், கடைத்தெரு தீப்பற்றி எரியும் பொழுது எத்தகைய திடுக்கமோ, பரபரப்போ அடையாது அமைதியாக வீற்றிருந்தார். அப்பொழுது ஒருவர் அவரிடம் ஓடோடி வந்து, ''கடைத்தெரு தீப்பற்றி எரிகின்றது'' என்று கூறிய பொழுது, ''நல்ல வேளையாகப் போய்விட்டது. நான் விடுதலை எய்திவிட்டேன்'' என்று கூறினார். சற்று நேரம் கழித்து வேறொருவர் அவரிடம் ஓடோடி வந்து, 'தங்களின் கடை மட்டும் எரியாது தப்பிவிட்டது' என்று கூறியபொழுது, ''அல்ஹம்துலில்லாஹ்'' என்று கூறினார் அவர்.

எனினும் இவ்வாறு கூறிய அடுத்த கணம் அவருடைய உள்ளத்தை விவரிக்க முடியாத ஒருவிதத் துயரம் ஆட்கொண்டது. அடுத்த கணம் அவருடைய வாயிலிருந்தும் 'அஸ்தஃபிருல்லாஹ். அஸ்தஃபிருல்லாஹ்' ( என் பவம் பொருத்தருள்வாயாக! என் பவம் பொருத்தருள்வாயாக!!) என்ற சொற்கள் ஆயிரம், ஆயிரம் முறை வெளிவந்தன. இவ்வாறு அவர் கூறி வருந்திக் கொண்டிருந்தது, ஒரு நாளல்ல. ஒரு மாதமல்ல, ஓராண்டல்ல, முப்பதாண்டுகள். மற்றவர்களின் நலன்களையெல்லாம் மறந்துவிட்டு தம் நன்மையை மட்டும் பெரிது கண்டு மகிழ்ந்த அந்த இழி தன்மையை நினைந்து நினைந்து அவர் முப்பதாண்டுகளாக வருந்திக் கொண்டிருந்தார். அது மட்டும் அவர் செய்யவில்லை. தம் இழி தன்மைக்கு மூலகாரணமாக இருந்த அந்தக் கடையையும் அதிலுள்ள பொருள்களையும் தம் உடைமைகளையும், ஏழைகளுக்கு அறம் செய்துவிட்டு ஏழையோடு ஏழையாக அவரும் ஆகிவிட்டார்.

இத்தகு மாண்புமிகு சிலர் அபுல் ஹஸன் ஸரீ இப்னு முகல்லிஸ் அஸ்ஸகதீ ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்களின் மாமா ஆவார்கள். மஃரூபுல் கர்கி (ரஹ்) அவர்களுடையவும் ஹபீப் ராய்(ரஹ்) அவர்களு டையவும் ஆன்மீக மாணவராவார்கள். இவர்கள் வாழ்வைத் துவங்கியது

பழைய பொருள்களை விற்கும் வணிகராகவே யாகும். அதன் காரணமாக பழைய பொருள் விற்பனையாளர் என்று பொருள்படும் 'ஸகதீ' என்று அழைக்கப்பட்ட அவர்கள் தொழுகை நேரம் வந்ததும், கடையின் முகப்பில் ஒரு திரையைப் போட்டு விட்டு உள்ளே சென்று தொழத் துவங்கி விடுவார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஆயிரம் ரஅத்துகள் தொழுவது அவர்களின் நீங்காத வழக்கமாக இருந்து வந்தது. ஒரு நாள் அவர்கள் திரையைப் போட்டு விட்டு உள்ளே சென்று இறைவனை வழுத்திக் கொண்டிருந்த பொழுது ஒருவர் ஆங்கு வந்து அவர்களுக்கு, 'ஸலாம்' உரைத்து அவர்களுக்கு, லுகம் மலையில் வாழும் ஷைகு ஸலாம் உரைத்ததாகக் கூறினார். அப்பொழுது அவர்கள் அந்த ஸலாத்திற்குப் பதில் உரைத்து விட்டு, ''ஷைகு அவர்கள் 'லுகம்' மலையில் தனித்திருந்து இறைவனை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதை விட மேலானது கடைத் தெருவின் நடுவே வீற்றிருந்து இறைவனை ஒரு கணமும் மறக்காது வழுத்திக் கொண்டிருப்பதே யாகும்'' என்று கூறினர்.

வணிகராக வாழ்வைத் துவங்கிய அவர்கள் எவ்வாறு ஆன்மீக ஞானியாக மாறினார்கள்? இக்கேள்வி அவர்களிடமே வினவப்பட்ட பொழுது அவர்கள் பின்வருமாறு பதில் கூறினார்கள்.

''ஒரு நாள் நான் கடையில் அமர்ந்திருந்தேன். அப்பொழுது ஹபீப் ராய் (ரஹ்) அவர்கள் அவ்வழியே சென்றார்கள். அவர்களை நான் அழைத்து ஏழைகளுக்கு வழங்குமாறு அவர்களிடம் சில பொருள்களை வழங்கினேன். அவற்றைப் பெற்றுக் கொண்ட அவர்கள், 'இறைவன் உமக்குப் பேரருள் பாலிப்பானாக!' என்று வாழ்த்தினர். அக்கணத்திலிருந்து என் உள்ளத்தில் உலகப் பொருள்களின் மீதுள்ள ஆசை எடுபடத் துவங்கியது.

''அடுத்த நாள் மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள் ஓர் அநாதைச் சிறுவனை அழைத்து வந்து அவனுக்கு உடையணிவிக்குமாறு கூறினர். அவ்விதமே நான் செய்தேன். அது கண்டு மகிழ்ந்த மஃரூபுல் கர்கீ (ரஹ்) அவர்கள், 'இறைவன் உமக்கு இவ்வுலகை வெறுப்பாக்கி உம்முடைய கவலைகள் அனைத்தையும் விட்டு உமக்கு விடுதலை வழங்குவானாக!' என்று இறைஞ்சினர். அக்கணத்திலிருந்து அவர்களின் உள்ளத்தில் எஞ்சியிருந்த சிறிதளவு உலக ஆசையும் இல்லாதொழிந்தது.

இதிலிருந்து இறைவணக்கத்தில் அல்லும் பகலும் ஈடுபடத் துவங்கிய அவர்கள் சிறந்த ஆன்மீக ஞானியாக, இறைநேசச் செல்வராக விளங்கலானார்கள். ஒரு நாள் அவர்களின் மருகர் ஜுனைத் (ரஹ்) அவர்கள், அவர்களைக் காணச் சென்ற பொழுது, அவர்கள் அழுது

கொண்டிருப்பதைக் கண்டதும் அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவினர். அதற்கு அவர்கள் நேற்று என் சிறு மகள் என்னிடம் வந்து, 'அப்பா! இரவு புழுக்கமாக இருக்கிறது. தாங்கள் இரவில் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வந்துள்ளேன். அருந்தித் தாகம் தீருங்கள்' என்று கூறி ஒரு புதுக் கலயத்தில் தண்ணீர் கொண்டு வந்து உரியில் வைத்தாள். அப்பொழுது எனக்கு உறக்கம் மேலிட்டு நான் ஒரு கனவு கண்டேன். விண்ணகத்திலிருந்து ஓர் ஆரணங்கு கீழே இறங்கி வந்தாள். 'நீ எவருக்காக வந்துள்ளாய்?' என்று நான் அவளிடம் வினவினேன். 'புதுக் கலயத்தில் தண்ணீரைக் குளிர வைத்து அருந்தாதவருக்காக' என்று கூறிவிட்டு மறைந்தாள். திடுக்கிட்டு விழித்தெழுந்த நான் அக்கலயத்தை எடுத்து உடைத்தெறிந்து விட்டு என் அவல நிலையை நினைத்து வருந்திக் கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

இறைச்சி அரசர்களின் உணவு என்பதற்காக, அவர்கள் இறைச்சி உண்பதில்லை. தாம் உண்ணும் எளிய உணவில் சிறிதளவு எடுத்து தினமும் ஒரு பறவைக்குப் போட்டு வந்தார்கள்.

ஒரு தடவை அவர்கள் ஜுர்ஹானி (ரஹ்) அவர்களைக் காணச் சென்ற பொழுது அவர்கள் புட்டு போன்ற ஒருவித உணவை உண்டு கொண்டிருப்பதைக் கண்டனர். அப்பொழுது அவர்கள், அப்பெரியாரை நோக்கி, ''ஏன் இதனைத் தாங்கள் உண்ணுகிறீர்கள்?' என்று வினவினர். அதற்கு அவர்கள் ''ரொட்டியை மெல்லுவதற்கும், அசை போடுவதற்கும் இதனை உண்பதற்கும், உள்ள நேரத்தை ஒப்பிட்டுப் பார்த்தேன். ரொட்டியை உண்ணும் பொழுது, இதனை உண்பதை விட எழுபது தடவை 'சுப்ஹானல்லாஹ்' சொல்லும் நேரம் அதிகமாகிறது. எனவே தான் நான் நாற்பதாண்டுகளாக ரொட்டி தின்பதை விட்டு விட்டேன்'' என்று பதிலுரைத்தார்கள். இது அவர்களுக்கு வழி காட்டும் திருவசனமாக இருந்தது.

இவர்கள் தாம் செய்யாததை ஒரு போதும் பிறருக்கு எடுத்துரைப் பதில்லை. அவர்களின் வாழ்வில், சொல்லும் செயலும் கைகோத்து உலவி வந்தன. ஒரு தடவை இவர்கள் தம் மாணவர்களுக்குப் பொறுமையைப் பற்றி அறிவுரை வழங்கிக் கொண்டிருந்த பொழுது, தேள் ஒன்று அவர்களின் சட்டையினுள் புகுந்து, அவர்களைப் பல தடவை கொட்டியது. அதனைக் கண்ணுற்ற மாணவர்கள், ''தேள் புகுந்து கொட்டுகிறது. தாங்கள் ஏன் அதனை அப்புறப்படுத்தாதுள்ளீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''பொறுமையைப் பற்றி நான் உங்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கும் பொழுது, அதற்கு மாறாக நான் செயலாற்ற நாணமுறுகிறேன்'' என்று மறுமொழி பகர்ந்தனர்.

அவர்கள் மிகவும் தன்னடக்கத்துடன் வாழ்ந்து துறவு நிலையை மேற்கொண்டிருந்தார்கள். அதைப் பற்றி அவர்கள் கூறும் பொழுது, 'என் நப்ஸ் (மனோ இச்சை) தேன் அருந்த வேண்டுமென்று நாற்பதாண்டுகளாக என்னிடம் கூறிக் கொண்டுள்ளது. எனினும் நான் மறுத்துக் கொண்டுள்ளேன்'' என்று அவர்கள் கூறினர்.

அவர்களின் தேவைகளோ மிகவும் சொற்பமானவையாக இருந்தன. ஐந்து பொருள்களைத் தவிர்த்து இவ்வுலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் வீணேயாகும். அந்த ஐந்து பொருள் (1) உயிரை வைத்துக் கொண்டிருப்பதற்கான ரொட்டி, (2) தாகம் தணிப்பதற்கான தண்ணீர், (3) இன உறுப்பை மறைப்பதற்கான துணி, (4) குந்திப் படுப்பதற்கான குடிசை, (5) அமல் ( செயல்) செய்வதற்குத் தேவையான மார்க்க அறிவு ஆகியவையேயாகும் என்று அவர்கள் கூறினர்.

அவர்கள் எளிமையின் திருவுருவமாக விளங்கினர். ஒரு நாள் பெரியார் ஒருவர் அவர்களைக் காண அவர்களின் இல்லம் சென்ற பொழுது, அவர்கள் ஒரு பழைய துணியால் தம் இல்லத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அப்பொழுது அவர்களின் வாய் ''நான் இறைவனின் தாழ்மையான அடியானாக ஆகும் வரை, நான் அவனுடைய திருமுன் செல்ல விரும்ப மாட்டேன். எனக்குத் துன்பம் ஏற்படும் பொழுது கண்களை மூடிக் கொள்வேன். என் ஆன்மா பற்றிப் பிறர் என்ன கூறுகிறார்கள் என்பதையும் நான் பொருட்படுத்த மாட்டேன்'' என்ற கவிதையை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

தாம் ஒரு பாவி என்ற எண்ணமே அவர்களிடம் மிகைத்திருந்தது. எனவே தம் பாவங்களின் காரணமாகத் தம் முகத்தில் கருமை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, அவர்கள் தம் முகத்தை ஒவ்வொரு நாளும் பல தடவை கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும் வழக்கமுடையவர்களாயிருந்தனர்.

இறை வணக்கத்தில் அயராது ஈடுபட்டிருந்த அவர்கள் தம் விலாவை மண்ணிலே சாய்த்துப் படுத்துறங்குவது கூட உடலுக்கு இன்பம் வழங்குவதாகக் கருதினர். எனவே அவர்கள் அவ்விதம் தம் வாணாளில் ஒரு போதும் செய்ததில்லை. இதைப் பற்றி அவர்களின் மருகர் ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்கள் கூறும் பொழுது, ''ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களை விட வியத்தகு மனிதரை நான் காணவில்லை. அவர்கள் தொண்ணூற்று எட்டு ஆண்டு காலம், இவ்வுலகில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடக்கும் பொழுதே யொழிய வேறு ஒரு பொழுதும் அவர்கள் பூமியில் தம் விலாவைச் சாய்த்துப் படுத்திருந்ததை நான் காணவில்லை'' என்று கூறினர்.

அவர்கள் இறைவனை வணங்குங்கால் தன்னை மறந்து தன் சூழலை மறந்து வணங்கினர். ஒரு நாள் ஜுனைத் (ரஹ்) அவர்கள் தம் மாமாவை நோக்கி, ''இறைவன் மீது அடங்காக் காதல் கொண்டவன் துன்பத்தின் வேதனையை நுகர்வானா?'' என்று வினவிய பொழுது, 'நுகர மாட்டான்' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். ''அவனை ஒருவன் வாளினால் வெட்டினாலும் அது அவனுக்குத் தெரியாதா?'' என்று ஜுனைத் (ரஹ்) அவர்கள் வினவிய பொழுது, ''ஆம்; எழுபதுதடவை அவனை வாளினால் வெட்டினாலும் அது அவனுக்குத் தெரியாது'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

மற்றொரு தடவை அவர்கள் இறைகாதலின் மாண்பினைப் பற்றிக் கூறும் பொழுது ''எனக்கு ஒரு நண்பர் இருந்தார். அவர் என்னை விட்டுப் பிரிந்து எங்கோ சென்று விட்டார். அவரை நான் முப்பதாண்டுகளாகத் தேடிக் கொண்டிருந்தேன். அவர் என் கண்களில் தென்பட்டாரில்லை. ஒரு நாள் நான் மலை மீது நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, அவரை ஒரு பாறை மீது அமர்ந்திருக்கக் கண்டேன். அவரை ஆவலோடு அணுகி அவரின் சட்டையின் விளிம்பைப் பிடித்து இழுத்தேன். அப்பொழுது அவர் ''ஸரீ! என் சட்டையை விடும். நண்பனோ மிகவும் பொறாமைக்காரன். அவனைத் தவிர நீர் வேறு எவருடனும் நட்புறவு கொள்வதை அவன் பொறுக்க மாட்டான் என்று கூறினார்' என எடுத்துரைத்தார்கள்.

ஒரு நாள் ஜுனைத் (ரஹ்) அவர்கள் தம் மாமாவை நோக்கி, இறைகாதல் பற்றி விளக்கம் பகருமாறு வேண்டினர். அதற்கு அவர்கள் ''இறைவனுடைய விருப்பத்திற்கு அடிபணிந்தொழுகுதல் என்று சிலரும் இறைவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படிந்து ஒழுகுதல் என்று வேறு சிலரும் அதற்கு விளக்கம் பகர்கிறார்கள்'' என்று பதிலிறுத் தார்கள்.அதன்பின் அவர்கள் தம் முன்னங்கையை நீட்டி அதன் தோலை இழுத்தார்கள், அவர்கள் மிகவும் மெலிந்து இருந்ததால் தோல் எலும்போடு எலும்பாக ஒட்டிக் கொண்டு இழுபட மறுத்தது. அப்பொழுது அவர்கள் தம் மருகரை நோக்கி, ''இறை காதல் என் சதையையும் இரத்தத்தையும் வற்றி வறளச் செய்து என்னை இந் நிலையிலாக்கி விட்டது என்று நான் கூறினாலும் அதில் தவறில்லை'' என்று மொழிந்தார்கள்.

இவ்வாறு கூறிய அவர்கள் அடுத்த கணம் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தனர். மயக்கம் தெளிந்து அவர்கள் எழுந்ததும் ''துவக்கத்தில் இறை காதல் என்றால் என்னவென்றே அறியாதிருந்தேன். அதன் பின் இறைவன்

என் மீது பேரருள் பாலித்ததன் காரணமாக, அதன் இன்பத்தைச் சிறிதளவு சுவைக்கும் பேறு பெற்றேன்'' என்று கூறினார்கள்.

ஒரு தடவை அவர்கள் கடுமையான நோய்வாய்ப்பட்ட பொழுது, எத்தனையோ மருத்துவர்கள் வந்து பார்த்தும் அவர்களுக்கு என்ன நோய் என்றே கண்டுபிடிக்க இயலவில்லை. இறுதியாக ஜுனைத் (ரஹ்) அவர்கள் ஒரு புகழ்பெற்ற மருத்துவரைப் பற்றிக் கேள்வியுற்று, அவரிடம் சென்று தன் மாமாவின் உடல் நிலையைப் பற்றி எடுத்துரைத்தார்கள். ''நல்லது; நாளைக் காலையில் அவர்களின் சிறு நீரை ஒரு புட்டியில் எடுத்துக் கொண்டு வாருங்கள்'' என்று கூறினார் அவர். அவ்விதமே அவர்கள் செய்தார்கள். அதனை நெடுநேரம் பற்பல விதமான முறைகளில் சோதித்துப் பார்த்த அவர் பின்னர் தம் கண்களை வியப்பால் விரித்த வண்ணம் ''இது நோயுற்றவரின் சிறு நீரல்ல; இறைவன் மீது காதல் கொண்டவரின் சிறு நீர் போன்றுள்ளது'' என்று கூறினார்.

அது கேட்டு ஜுனைது (ரஹ்) அவர்கள் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தனர். மயக்கம் தெளிந்து கண் விழித்துப் பார்த்த பொழுது, அவர்களின் கையிலிருந்த புட்டி கீழே விழுந்து சிதறிக் கிடந்தது.

பின்னர் அவர்கள் தம் மாமாவிடம் வந்து மருத்துவர் கூறியதைச் சொன்னபொழுது ''இஃது அவருக்கு எவ்வாறு தெரியவந்தது?'' என்று வியப்பு மொழி பகர்ந்தார்கள் அவர்கள்.

அப்பொழுது ஜுனைது (ரஹ்) அவர்கள் தம் மாமாவை நோக்கி, ''உள்ளத்தில் வளரும் இறை காதல் சிறுநீரில் கூடத் தெரியுமா?'' என்று வினவினர்.

அதற்கு அவர்கள் அளித்த இரத்தின சுருக்கமான பதில் 'ஆம்' என்பதாக இருந்தது.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று விரும்பிய அவர்கள், உலக மக்களின் துன்பங்களெல்லாம் தம் உள்ளத்தில் ஆகிவிட வேண்டும் என்றும் உல மக்களெல்லாம் துன்பங்களிலிருந்து மீட்சி பெற வேண்டும் என்றும் கூறினார்கள்.

அவர்களுக்கு எவரும் ஸலாம் உரைப்பின், அவருக்கு வருத்தத்துடன் பதிலுரைக்கும் வழக்கமுடையர்வகளாக அவர்கள் இருந்தனர். இது பற்றி அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''ஒருவருக்கொருவர் ஸலாம் கூறிக் கொள்பவர்களுக்கு ஒரு நூறு அருட்கொடைகள் இறைவனால் வழங்கப்படுகின்றனவென்றும், அவர்களில் எவர் முகமலர்ச்சியுடன் ஸலாம் கூறவோ, ஸலாத்திற்குப் பதிலுரைக்கவோ செய்கின்றாரோ

அவருக்குத் தொண்ணூறு அருட்கொடைகள் வழங்கப் பெறுகின்றன என்றும், அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே தான் எனக்கு 'ஸலாம்' கூறுபவருக்கு தொண்ணூறு அருட்கொடைகள் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் வருத்தத்துடன் பதில் ஸலாம் உரைக்கின்றேன்'' என்று இயம்பினர்.

ஒரு நாள் அவர்கள் தெருவழியே செல்லும் பொழுது ஆங்குக் குடித்துவிட்டு ஒருவன் மயங்கிக் கிடப்பதைக் கண்டனர். எனினும் அவனுடைய வாயிலிருந்து, அல்லாஹ், அல்லாஹ் என்ற சொற்கள் வெளி வந்து கொண்டிருந்தன. அது கண்ட அவர்கள், ''இந்த உணர் வற்றவனுக்கு என்ன விளங்கப்போகிறது? தூய்மையற்ற தன் வாயால் எத்துணை தூய்மையான சொல்லை மொழிகிறான்'' என்று கூறி அங்கலாய்த்தனர். அதன் பின் தண்ணீர் கொணர்ந்து அவனுடைய வாயைக் கழுவி விட்டு அவ்விடம் விட்டு அகன்றார்கள்.

சற்று நேரம் கழிந்தது. தன்னுணர்வற்று மயங்கிக் கிடந்த அவன் எழுந்து அமர்ந்தான். அப்பொழுது ஆங்குக் குழுமி நின்ற மக்கள் நடந்த செய்தியை அவனிடம் எடுத்துரைத்தார்கள். அது கேட்டு அவனுக்கு ஏற்பட்ட நாணத்திற்கு அளவில்லை. அவன் அழுது சலித்து, தன்னை நோக்கி, ''அடே நாணம் கெட்டவனே! இப்பொழுது ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களுக்குக் கூட உன் நிலைமை தெரிந்து விட்டது. இனியாவது அல்லாஹ்வுக்கு அஞ்சி, பாவமன்னிப்புக் கேட்டுக் கொள்'' என்று கூறினான். அக்கணத்திலிருந்து அவனுடைய வாழ்விலே ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டது.

அன்றிரவு ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் அயர்ந்து உறங்குங்கால், ''ஸகதி! நீர் எனக்காக வேண்டி அவனுடைய வாயைத் துப்புரவு செய்தீர். நாம் உமக்காக வேண்டி அவனுடைய இதயத்தைத் துப்புரவு செய்தோம்'' என்று அசரீரி முழங்குவதைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தெழுந்தனர். அதன் பின் தஹஜ்ஜுத் தொழுவதற்காகப் பள்ளிவாயல் சென்ற பொழுது, தாம் பகலில் வாயைக் கழுவிவிட்ட அந்தக் குடிகாரர் இறைவனின் திருமுன் கை கட்டி நின்றும், குனிந்தும் குப்புற வீழ்ந்தும் தொழுது கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்று அவர் தொழுது முடித்ததும் அவரை அணுகி, ''இந்த திடீர் மாற்றம் எவ்வாறு ஏற்பட்டது?'' என்று வினவினர். அது கேட்ட அவர், ''அதனைத் தாங்கள் என்னிடம் ஏன் வினவுகின்றீர்கள்? அல்லாஹ்வே அதனைத் தங்களுக்கு அறிவித் துள்ளானே'' என்று விடையிறுத்தார். அது கேட்டு ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் அளவற்ற வியப்பில் ஆழ்ந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் நன்மை செய்யும் பொழுது அவர்களைப் பாராட்டிய இறைவன் அவர்கள் தவறு செய்யும் பொழுது அவர்களைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் தவறவில்லை. ஓரிரவு அவர்கள் அயர்ந்து உறங்குங்கால் யஃகூப் (அலை) அவர்களைக் கனவில் கண்டனர். அப்பொழுது அவர்கள் அத்திரு மாநபியை நோக்கி, ''என்ன உலகில் எத்துணைப் புரளியை உண்டு பண்ணிவிட்டீர்கள்! தங்களுக்கு அல்லாஹ்வின் மீது பரிபூரண அன்பு இருந்திருப்பின் தாங்கள் யூசுப், யூசுப் என்று அலறிக் கொண்டு இருந்திருக்க மாட்டீர்களே'' என்று வினவினர். அப்பொழுது அசரீரி ஒன்று, ''ஸகதீ! உள்ளத்தைப் பரிபக்குவப்படுத்திக் கொள்ளும்'' என்று முழங்குவதைச் செவியுற்றார்கள். அதன்பின் அவர்களின் முன் அழகெலாம் திரண்டு உருக் கொண்டாற் போன்ற ஆணழகர் யூசுப் (அலை) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி முறுவலித்து நின்றனர். அவர்களைக் கண்டதும் ஸரீ அஸ் ஸகதீ (ரஹ்) அவர்கள், தம் தவறை உணர்ந்தவர்களாய், அலறித் துடித்து மயங்கிக் கீழே சாய்ந்தனர்.

இவை அனைத்தும் கனவிலே நிகழ்ந்தன. எனினும் ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களுக்கு இதன் பின் பதின்மூன்று நாட்களாக மயக்கம் தெளியவில்லை. பதினான்காவது நாள் அவர்களுக்குச் சற்று மயக்கம் தெளிந்ததும், ''இது, எவர் தம் அன்பர்களை இழித்துரைக்கின்றாரோ, அவருக்குரிய தண்டனையாகும்'' என்று அசரீரி முழங்குவதைச் செவியுற்றார்கள்.

இதன் பின் தம் தவற்றை உணர்ந்து அழுது சலித்து வருந்திய அவர்கள் அதற்குப் பிராயச்சித்தமாக முன்னை விடப் பன்மடங்கு அதிகமான வணக்கத்தில் ஈடுபடலானார்கள் ''உங்களை முதுமை கௌவிப் பிடிக்கும் முன், நீங்கள் மறுமைக்கான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள். நீங்கள் முதுமையை எய்திவிடின், உங்களால் என்னைப் போன்று எவ்வித வணக்கமும் செய்ய இயலாது போய்விடும்'' என்று இளைஞர்களிடமும் கூறினர். இவ்வாறு அவர்கள் தன்னடக்கத்துடன் கூறிய போதினும் இளைஞர்கள் கூட அவர்கள் போன்று வணக்கம் நிகழ்த்த இயலா வண்ணம் அத்துணை அதிகமாக வணக்கம் நிகழ்த்திக் கொண்டிருந் தார்கள்.

இரவிலும் பகலிலும் ஓயாது வணக்கம் நிகழ்த்துவதே அவர்களின் நீங்காத வழக்கமாக இருந்து வந்தது. ஓரிரவு இவர்களின் மருகர் ஜுனைத் (ரஹ்) அவர்கள் நள்ளிரவில் துயிலெழுந்து, சூனிஸியா பள்ளிவாயலுக்குச் சென்ற பொழுது ஆங்கு பயங்கரத் தோற்றத்துடன் ஒருவன் வீற்றிருப் பதைக் கண்டு திடுக்குற்றனர். அப்பொழுது அவன் அவர்களை நோக்கி, ''நீர் என்னைக் கண்டு அஞ்சுகின்றீரா?'' என்று வினவியபொழுது, 'ஆம்'

என்று மறுமொழி பகர்ந்தார்கள் அவர்கள். அதன் பின் அவர்கள் அவனை நோக்கி, 'நீ யார்?' என்று வினவியபொழுது, 'இப்லீஸ்' என்று மறுமொழி பகர்ந்தான் அவன். அது கேட்ட அவர்கள், ''நான் உன்னைப் பார்க்க விரும்பினேன்'' என்று கூறினர். அதற்கு அவன், ''நீர் என்னை நினைத்த அக்கணத்திலேயே நீர் உம்மையறியாமல் இறைவனை மறந்துவிட்டீரே சரி; நீர் என்னைப் பார்க்க விரும்பிய காரணம் என்ன?'' என்று வினவினான். அதற்கு அவர்கள், ''ஏழைகள் மீது உனக்கு ஆதிக்கம் இருக்கின்றதா என்பதை நான் கேட்டறிய விரும்பினேன்'' என்று பதிலிறுத்தார்கள். அவன் 'இல்லை' என்று கூறவும் 'ஏன்?' என்று அவர்கள் வினவினார்கள். அதற்கு அவன், ''நான் உலகாயுதப் பொருள்களைக் காட்டி அவர்களை என் வலையில் சிக்க வைக்க நினைக்கும் பொழுது அவர்கள் மறுமைக்கு ஓடிவிடுகிறார்கள். அவர்களிடம் மறுமையைக் காட்டி அவர்களை என் வலையில் சிக்க வைக்க நினைக்கும் பொழுது அவர்கள் இறைவனிடம் ஓடி விடுகிறார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து என்னால் ஆங்குச் செல்ல இயலாது போய்விடுகிறது'' என்று கூறினான். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''நீ அவர்களை வெற்றி கொள்ள இயலாவிடினும், அவர்களைப் பார்க்கவாவது செய்கின்றாயா?'' என்று வினவிய பொழுது, ''ஆம்; அவர்கள் பேரின்பத்தில் மூழ்கி இருக்கும் பொழுது நான் அவர்களைக் காண்கிறேன்' என்று கூறிவிட்டு அவன் மறைந்து விட்டான். இதன் பின் ஜுனைத் (ரஹ்) அவர்கள் பள்ளிவாயலில் நுழைந்த பொழுது ஆங்குத் தலைகுனிந்த வண்ணம் வீற்றிருந்த ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள், தம் தலையைச் சற்று நிமிர்த்தித் தம் மருகரை ஏறிட்டுப் பார்த்து, ''இறைவனின் பகைவனான அவன் பொய்யுரைக்கின்றான். இறைவன் அவர்களை இப்லீஸின் கண்களுக்குத் தென்படா வண்ணம் பாதுகாக்கின்றான்'' என்று கூறினர்.

ஓர் இரவு ஜுனைத் (ரஹ்) அவர்கள் தம் மாமாவுடன் தங்கினர். இரவில் சற்று நேரம் கழிந்த பின் அவர்கள் தம் மருகரை நோக்கி, ''உறங்கி விட்டீரோ?'' என்று வனவினர். ''இல்லை'' என்று அவர்கள் பதிலிறுத்ததும் அவர்கள் பின் வருமாறு கூறத் துவங்கினார்கள்.

''இறைவன் என்னைத் தன் முன் நிறுத்திக் கூறினான்:

ஸரீ! நான் படைப்புகளைப் படைத்த பொழுது, எல்லோரும் என்னை நேசிப்பதாகக் கூறினார்கள். அதன் பின் நான் உலகத்தைப் படைத்த பொழுது பத்தாயிரம் பேர்களில் ஒன்பதாயிரம் பேர் என்னை விட்டு தம் முகத்தை திருப்பி உலக இன்பங்களில் மூழ்கி விட்டார்கள். ஆயிரம் பேர்களே என் பக்கல் எஞ்சியிருந்தனர். பின்னர் நான் சுவனத்தைப்

படைத்த பொழுது அந்த ஆயிரம் பேர்களில் தொள்ளாயிரம் பேர் என்னை விட்டு நீங்கிச் சுவனத்தின் பக்கல் சென்று விட்டார்கள். என்னோடு இருந்த பாக்கி நூறு பேர்கள் மீது பலவிதமான சோதனைகளை இறக்கினேன். அவர்களில் தொண்ணூறு பேர் என்னை விட்டுவிட்டு அந்தச் சோதனைகளைப் பற்றிக் கவலைப்பட்டு, கவலைப்பட்டு அந்தக் கவலையிலேயே மூழ்கி விட்டார்கள். இறுதியாக என்னுடன் பத்தே பத்துப் பேர் தாம் மிஞ் சினார்கள். நான் அவர்களிடம் ''நீங்கள் புவனத்தையும் விரும்பவில்லை. சுவனத்தையும் விரும்பவில்லை. சோதனைகள் கண்டும் வெருண்டோடவுமில்லை. அவ்விதமாயின் நீங்கள் என்ன தான் விரும்புகிறீர்கள்? கூறுங்கள்'' என்று வினவினேன்.

அதற்கு அவர்கள், ''இறைவனே! நான் விரும்புவதை நீ நன்கு அறிவாய்'' என்று பதிலுரைத்தார்கள்.

அப்பொழுது நான் ''உங்கள் மீது உங்களின் தாங்கும் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சோதனைகளை இறக்குவேன். அவற்றை வானளாவிய மலைகளாலும் தாங்க இயலாது. உங்களால் தாங்கிக் கொள்ள இயலுமா?'' என்று வினவினேன்.

அதற்கு அவர்கள் , ''இறைவனே! நீயே அந்தச் சோதனைகளை இறக்கும் பொழுது உன் பொருத்தத்தைப் பெறுவதற்காக உன் உதவி கொண்டு நாங்கள் அவற்றைத் தாங்கிக் கொள்வோம்'' என்று கூறினர்.

அது கேட்ட இறைவன் மகிழ்ந்து ''இன்னக அப்தீஹக்கா' (நிச்சயமாக, நீங்கள் தாம் என்னுடைய உண்மையான அடியார்கள்) என்று கூறினான்.

'இமாமுல் ஒளலியா' என்று மக்களால் அழைக்கப்பட்ட, அவர்கள் மாபெரும் இறைநேசச் செல்வராக இருந்ததோடல்லாது, பல இறைநேசச் செல்வர்களையும் சந்திக்கும் பேறு பெற்றுள்ளார்கள். ஒரு நாள் அவர்கள் முஸ்லிம்களின் அடக்கவிடத்தின் பக்கல் சென்று கொண்டிருந்தார்கள். அங்கு பஹ்லுல் மஜ்னூன் வீற்றிருப்பதைக் கண்டதும், ''தாங்கள் இங்கு அமர்ந்து என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவினர். அவர்கள் ''என்னைத் துன்புறுத்தவோ, என்னைப் பற்றிப் புறம் பேசவோ செய்யாத ஒரு கூட்டத்தினருடன் அமர்ந்திருக்கிறேன்'' என்று பதில் கூறினர்.

அப்பொழுது அவர்கள் அப்பெரியாரை நோக்கி ''தங்களுக்குப் பசி ஏற்படுவதில்லையா?'' என்று வினவினர்.

அது கேட்ட அவர்கள் தம் முகத்தைத் திருப்பிக் கொண்டு ''பசித்திருங்கள். அது பயபக்தியின் (தக்வாவின்) அடையாளமாகும்.

நிச்சயமாக, பசித்திருப்பவனின் பசி விரைவில் நீங்கிவிடும்'' என்று பொருளமைந்த கவிதையைப் பாடினர்.

மற்றொரு நாள் அவர்கள் ஓர் இறைநேசச் செல்வரைச் சந்தித்து, ''தங்களின் பெயர் என்ன?'' என்று வினவினார்கள். 'அது' என்று மறுமொழி பகர்ந்தார் அவர். ''தாங்கள் என்ன உண்ணுகிறீர்கள்?'' என்று மீண்டும் அவர்கள் அவரை வினவினர். அதற்கு அவர்மீண்டும் 'அது' என்றே பதிலுரைத்தார். அதன் பின் அவர்கள் அவரிடம் பற்பல கேள்விகளைக் கேட்க, அவர் அதே பதிலையே கூறிக் கொண்டு வந்தார். ''அது என்றால் என்ன?'' என்று அவர்கள் அவரிடம் வினவினர். அப்பொழுது அவர் ''எல்லாம் வல்ல இறைவன்'' என்று விடையிறுத்தார். அதுகேட்டு அவர்கள் பெரும் சப்தமிட்டுக் கொண்டு அவ்விடத்தை விட்டும் அகன்றார்கள்.

அடுத்து அவர்கள் தாம் சந்தித்த ஒரு மாண்பார்ந்த பெண்மணியைப் பற்றி இதோ கூறுகிறார்கள்.

''ஒரு பெண் இருந்தார். அவர் ஸஹர் நேரத்தில் எழுந்து 'உளூ'ச் செய்து 'தஹஜ்ஜுத்' தொழு முன், 'இறைவனே! இப்லீஸ் என்ற ஷைத்தானும் உன் அடியான் தான். அவனுடைய நெற்றி முடி உன் கையிலே தான் உள்ளது. அவன் என்னைப் பார்க்கிறான். ஆனால், நானோ அவனைப் பார்க்க இயலவில்லை. நீ அவனைப் பார்க்கிறாய். ஆனால் அவனாலோ உன்னைப் பார்க்க இயலுவதில்லை. நீ அவனுடைய அனைத்துச் செயல்கள் மீதும் ஆற்றல் பெற்றவன். ஆனால், உன்னுடைய எந்தச் செயல் மீதும் அவனுக்கு ஆற்றல் இல்லை. இறைவனே! அவன் என்னைக் கெடுக்க நாடின் நீ அவனைத் தடுத்து விடுவாயாக! அவன் என்னைக் கெடுக்கச் சதி செய்யின், நீ அதனை முறியடிக்கச் சதி செய்வாயாக! நான் அவனுடைய பொல்லாங்கிலிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நான் உன்னுடைய பேருதவியால் அவனை அப்புறப்படுத்துகிறேன்'' என்று கூறி இறைஞ்சுவார். இவ்வாறு இறைஞ்சி விட்டுக் கண்ணீர் சிந்தி அழுவார். அழுது, அழுது அவரின் ஒரு கண் பார்வை இழந்தது.

அப்பொழுது மக்கள் அவரிடம், ''இறைவனுக்கு அஞ்சிக் கொள்வீராக! மற்றொரு கண்ணும் பார்வை இழந்து விடா வண்ணம் பார்த்துக் கொள்வீராக!'' என்று கூறினர்.

அதற்கு அவர், ''என் கண் சுவன வாசிகளின் கண்ணாக இருப்பின், நான் இழந்த கண்ணுக்குப்பதிலாக இறைவன் வேறொரு கண்ணைத் தந்து விடுவான். அது முன்னையதை விட நல்லதாயிருக்கும். அது நரக

வாசிகளின் கண்ணாயிருப்பின், அது எனக்குக் கிடைக்காமலே போகட்டும்'' என்று கூறி விடுவார்.

மீண்டும் அவர்கள் தம் இல்லத்தின் அண்மையில் வாழ்ந்து வந்த ஒரு பெரியாரைப் பற்றி இதோ கூறுகிறார்கள். நாமும் கேட்போம்.

''என் அண்டை வீட்டினராக ஒரு 'ஹாஃபிள்' இருந்து வந்தார். அவர் வணக்கமும் பேணுதலும் உள்ளவர். பரம ஏழை. அத்துடன் பிணியும் சேர்ந்து அவரை வாட்டி வதைத்து வந்தது. ஒரு தடவை அவருக்குக் கடுமையான வறுமை ஏற்பட்ட பொழுது, தம் அவல நிலையை எடுத்துரைத்து ஒரு மடல் தீட்டினார். எவருக்கு? தம் நண்பருக்கா? இல்லை. அவ்விதமாயின் தம் ஊரிலுள்ள செல்வருக்கா? இல்லை. இல்லை. அவ்விதமெல்லாம் பிறரிடம் தம் குறை கூறிப் பல்லை இளிக்கும் இயல்பினர் அவர் அல்ல. அவ்விதமாயின் எவருக்கு அவர் மடல் தீட்டினார். அகில உலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே மடல் தீட்டினார். இரவில் நீண்ட நேரம் தொழுத பின், கைகளிலே அந்த மடலை வைத்த வண்ணம் இறைவனிடம் அழுது கெஞ்சி 'துஆ' இறைஞ்சினார். அந்நிலையிலேயே உறங்கிவிட்டார்.

''அவ்விரவு கனவொன்று கண்டார். அக்கனவிலே ஒரு மனிதர் வந்து 'நீர் என்ன, உம் இறைவனுக்கு வெள்ளைத் தாளில் கறுப்பு மையால் கடிதம் எழுதுகின்றீர்?' என்று வினவினார்.

அதற்கு அவர் 'நான் வேறு என்ன தான் செய்வேன்? என் நிலை அவ்வாறாகி விட்டது' என்று அழாக்குறையாக மறுமொழி பகர்ந்தார்.

அப்பொழுது அந்த மனிதர், அவரை நோக்கி 'நீர் இறைவனிடம் ஏதேனும் சொல்ல வேண்டுமென்றால் உம்முடைய நன்றி என்ற கையைத் தியானம் என்ற தண்ணீரால் கழுவி, பொறுமை என்ற எழுதுகோலால் தூய உள்ளம் என்ற தாளில் கௌஃபோடும் (அச்சத்தோடும்) ரஜாவோடும் ( தேட்டத்தோடும்) எழுதுவீராக' என்று கூறினார்.

''நான் என்ன எழுத வேண்டும்?'' என்று அவர் மீண்டும் வினவினார்.

அதற்கு அந்த மனிதர், ''இப்படி எழுதுவீராக!'' என்று கூறிப் பின்வருமாறு வாசகம் கூறலானார்.

''இறைவனே! நீ அளிக்கும் அருள், மற்றவர்கள் அளிப்பதை விட அதிகமானது. நீ வழங்கும் பரிசு, மற்றவர்கள் வழங்கும் பரிசை விட மாண்பார்ந்தது. உனக்கு நன்றி செலுத்துவதற்கு எல்லா நன்றி செலுத்துபவர்களும் இயலாதவர்களாகவே இருக்கின்றனர். பிறரிடம்

இரப்பவர்கள் மூலமாக அவர்களுக்கு வழங்குபவர்களின் இயல்பையும் நான் பார்த்து விட்டேன். அதிலிருந்து நான் தெரிந்து கொண்டது என்னவெனில், ''உன்னைத் தவிர மற்றவர்களை நாடுபவர்கள் துர் அதிர்ஷ்டசாலிகள். எல்லா நன்மைகளும் உன்னிடமே உள்ளன. அவை மற்றவர்களிடம் இல்லை'' என்பதேயாகும்.

''இறைவனே! நான் இன்பத்திலும் துன்பத்திலும் உன்னையே நம்பினேன். என் நாட்டங்கள் உன்னாலேயன்றி வேறு எவராலும் நிறைவேறாது. என் நம்பிக்கை, உன்னையே வட்டமிட்டுக் கொண்டி ருக்கின்றது. எந்த வேலையை நீ எனக்குக் காட்டினாயோ, அதனை எய்தப் பெற எனக்கு வழியும் காட்டுவாயாக!

''ஆற்றல் மிகுந்தோனே! உன்னிடம் கேட்பதில் நான் களைப் படைவதில்லை. அரசனே! உன்னை நாடுபவர் அனைவரும் உன் முன்னே தலை தாழ்த்தி வணங்குகின்றனர். ஒவ்வொரு நிமிடமும் நான் உன் அருட்கொடைகளால் சூழப்பட்டுள்ளேன். அந்த அருட்கொடைகளும் உன் பேரருளினாலேயே என் மீது சொரியப்பட்டன. இறைவனே! உன் பேரருளிலானாலேயே மனிதன் உன் அருட்கொடைகளுக்கு தகுதியுடை யவனாகிறான். உன்னைத் துதி செய்வதன் காரணமாக, அவன் மீது உன்னுடைய அருட்கொடைகள் அதிகரிக்கின்றன. சோதனைகளின் போது ஓர் அடியான் கொள்ளும் பொறுமையை, அவனுக்குக் கேடயமாக ஆக்கியவனே! அவன் நன்றி செலுத்துவதன் மூலம், அவன் மீது அருட்கொடைகளை அதிகரிக்கச் செய்பவனே! நான் என் சோதனைகளில் பொறுமையை மேற்கொள்ளவும் நீ அளிக்கும் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தவுமான 'தௌஃபீக்'கை நீ எனக்கு வழங்கியருள்வாயாக! உன் சோதனை என் பொறுமையை விட மேலானதாகும். நீ அளிக்கும் அருட்கொடை நான் செலுத்தும் நன்றியுணர்வை விட மாண்புடைத் ததாகும். என் பேச்சுக்களின் மீது உன்னுடைய மன்னிப்பு என்னும் போர்வையைப் போர்த்தி விடுவாயாக! என் பாவங்களை மன்னிப் பாயாக!''

என்று கூறிவிட்டு அந்த மனிதர் மேலும் கூறினார். ''அபுல் பஷரே! நீர் இறைவனை அணுக வேண்டிய இடத்தில் அணுக வேண்டிய முறையில் அணுகி அவனிடம் மன்னிப்பைக் கோருவீராக! மிகவும் தாழ்மையுடனும் நன்றியுணர்வுடனும் அவனை வேண்டிக் கொண் டிருப்பீராக!'' என்று கூறினார்.

அப்பொழுது அந்த ஹாஃபீள் ''நல்ல 'துஆ'வைக் கற்றுத் தந்தீர்'' என்று கூறினார்.

அதற்கு அந்த மனிதர், ''இஃது வானவர்களின் 'துஆ'வாகும்'' என்று கூறி, அந்த ஹாஃபிளின் நெஞ்சிலும் முதுகிலும் தடவினார்.

''இதன் பின் திடுக்குற்று விழித்தெழுந்தார் அவர். கனவில் தமக்குக் கற்றுத்தரப்பட்ட அந்த 'துஆ' அவரின் நெஞ்சத்தில் நன்கு பதிந்திருந்தது. வைகறையில் பள்ளிக்குத் தொழ வந்த அவர், தொழுது முடித்ததும் தாம் கண்ட கனவையும் அதில் தமக்குக் கற்றுத்தரப்பட்ட 'துஆ'வையும் கூறினார். அதனை ஆங்கிருந்த அனைவரும் எழுதிக் கொண்டோம்.

ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் சிறந்த நாவன்மை பெற்ற நாவல்லவராகவும் விளங்கினர். அவர்களின் வாயிலிருந்து உதிர்ந்த அறிவார்ந்த சொற்கள் கேட்டார் பிணைக்கும் தகையவாய், கேளாரும் கேட்க விரும்பும் தன்மையதாய் விளங்கின. அவர்களின் அறிவுரை கேட்டு நேர்வழி பெற்றோர் ஆயிரம், ஆயிரம் பேர்களாவர். அவர்களின் மகாத்மியத்தையும் நாவண்மையையும் பற்றிய பேச்சு அரண்மனைக்கும் எட்டியது. ஒரு நாள் அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கும் பொழுது, கலீபாவின் நெருங்கிய நண்பரும் எழுத்தருமான அஹ்மது யஜீத் என்பார் தம் ஏவலாளரும் அடிமைகளும் புடை சூழ ஆங்கு வந்து அமர்ந்தார். அப்பொழுது ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு பேசிக் கொண்டிருந்தார்கள்.

''பதினெண்ணாயிரம் உலகங்களிலும் உள்ள இறைவனின் படைப்புகளில், மனிதனை விடப் பலவீனமான படைப்பு வேறொன்றுமில்லை. ஆனால் இறைவன் படைத்த படைப்புகளில் மனிதனைத் தவிர இறைவனுக்கு மாறு செய்யக் கூடிய படைப்பு வேறொன்றுமில்லை. அவன் நற்செயல்களை ஆற்றி நல்லவனாக இருப்பின், அவன் அடையும் மகோன்னத நிலையைக் கண்டு வானவரும் அவன் மீது பொறாமையுறுகின்றனர். அவன் தீய செயல்களையாற்றித் தீயவனாய் இருப்பின் அவன் அடையும் இழிநிலையைக் கண்டு ஷைத்தானும் அவனுடன் உறவு கொள்ள நாணமுறுகிறான். மனிதன் இத்துணை அற்புதமான படைப்பாக உள்ளான். எத்துணை பலவீனனாக இருந்து கொண்டு, தன்னுடைய பலவீனத்தை உணராது சர்வ வல்லமையுள்ள இறைவனுக்கு மாறு செய்கிறான். ஆயிரம், ஆயிரம் விதமாக இறைவன் அவனுக்கு அறிவுரை பகர்ந்து, அவனை நேர்வழியின் பால் அழைத்த போதினும், லட்சக்கணக்கான இறை தூதர்களை அவனுக்கு அறபோதம் வழங்குவதற்காக , நேர்வழி காட்டுவதற்காக அனுப்பி வைத்த போதினும் அவனுக்கு அவற்றால் எத்தகைய பலனும் ஏற்படவில்லை. எனினும், இறைவனுடைய திருவசனங்களாலான திருக்குர்ஆன் ஒரு கணத்தில் அவனுடைய மனத்தை மாற்றக் கூடியதாக அமைந்துள்ளது.''

இவ்வாறு அவர்கள் பேசி முடித்தது தான் தாமதம், அஹ்மது யஜீத் என்பார் 'ஓ' வென்று அலறிய வண்ணம் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார். அதன் பின் சற்று நேரம் கழித்து மயக்கம் தெளிந்த அவர், இல்லம் திரும்பினார். இல்லம் திரும்பிய அவர் அன்றிரவு யாதோர் உணவும் அருந்தவுமில்லை. எவருடனும் உரையாடவும் இல்லை.

அடுத்த நாள் அவர் ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களின் பேச்சைக் கேட்பதற்காக நடந்து வந்தார். அதற்கு அடுத்த நாளும் அவர் நடந்தே வந்தார். ஆனால் தனியாக வந்தார். அவருடைய முகம் வெளுத்திருந்தது. கண்கள் குழி விழுந்திருந்தன.

ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் பேசிமுடித்ததும், அவர் அவர்களை அணுகி, ''ஐயா! தங்களின் பேச்சு என் உள்ளத்தை நெகிழச் செய்து விட்டது. உலக வாழ்வு எனக்கு இப்பொழுது வேம்பெனக் கசக்கின்றது. நான் உலகைத் துறந்து, இறைவனின் நல்லடியார்கள் செல்லும் பாட்டையில் அடியெடுத்து வைத்து நடந்து செல்ல விரும்புகின்றேன். அன்பு கூர்ந்து அதனை எனக்குக் காட்டியருள்வீர்களாக!'' என்று வினயமாக வேண்டி நின்றார்.

''எப்பாதையில் தாங்கள் அடியெடுத்து வைத்து நடந்து செல்ல விரும்புகின்றீர்கள்? ஷரீஅத்துடைய (மார்க்கச் சட்ட திட்டங்களின்) பாதையிலா? மஃரிபத்துடைய (ஆன்மீக) பாதையிலா?'' என்று வினவினர் ஸரீ அஸ் ஸகதி.

அதற்கு அவர், ''அவ்விரண்டையும் பற்றி எனக்குத் தெளிவாக எடுத்துரையுங்கள்'' என்று வேண்டினார்.

அதற்கு ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு பதிலிறுத்தார்கள்.

''ஷரீஅத்துடைய வழி நாளொன்றுக்கு ஐந்து வேளை இமாம் ஜமாஅத்தோடு தொழுவதும் பணம், சொத்து ஆகியவை இருப்பின், அவற்றில் இரண்டரை சதவிகிதத்தை அறவழியில் செலவழிப்பதுமாகும். மஃரிபத்துடைய வழி உலகை முற்றிலும் துறந்து, உலக மாய்கையில் மூழ்காது தப்பி வாழ்வதாகும்.''

ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களின் இச்சொற்கள் அஹ்மத் யஜீதின் உள்ளத்தைக் கௌவிப் பிடித்தன. அடுத்த கணம் அவருடைய கால்கள் அவரைக் கானகம் நோக்கி இழுத்துச் சென்றன.

சின்னாட்கள் கழிந்தன. ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் தங்களின் [illegible] வீற்றிருந்தார்கள். அப்பொழுது ஒரு மூதாட்டி அழுத

கண்ணும் சிந்திய மூக்குமாக வந்து, ''முஸ்லிம்களின் இமாம் அவர்களே! என் மகன், அழகெலாம் திரண்டு உருக்கொண்டாற் போன்ற இளவல் அஹ்மத் யஜீத் தங்களின் அவைக்குப் புன்முறுவலுடன் வந்தவன், இல்லம் திரும்பும் பொழுது அழுது கொண்டு வந்து சேர்ந்தான். அதன் பின் இரண்டாம் நாளும், மூன்றாம் நாளும் தொடர்ந்து தங்களின் பேரவைக்கு வந்து கொண்டிருந்தவன் திடீரென மாயமாய் மறைந்து விட்டான். எங்கு சென்றுள்ளான். யாது செய்து கொண்டுள்ளான் என்பது எவருக்குமே தெரியாத புதிராக உள்ளது. அவன் என்னை விட்டுப் பிரிந்ததிலிருந்து என் உள்ளம் ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கியுள்ளது. அன்பு கூர்ந்து அவன் திரும்பி வர ஏதாவது வழி செய்யுங்கள்'' என்று வேண்டி நின்றார்.

அவர் அவ்வாறு கூறி அழுது கெஞ்சியது ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களின் உள்ளத்தை நெக்குருகச் செய்தது. ''அம்மணி! கவலை யுறாதீர்! நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று எண்ணி அமைதியுறுவீர். தங்களின் மகன் திரும்பி வருங்கால் தங்களுக்குத் தகவல் அறிவிக்கிறேன். அவர் இவ்வுலகைத் துறந்து ஆத்மீக ஞானிகளின் பாதையில் அடியெடுத்து வைத்துச் சென்று விட்டார்'' என்று ஆறுதல்மொழி பகர்ந்தனர்.

சில காலம் கழிந்தது. அஹ்மத் யஜீத் திடீரென ஓரிரவு ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களின் திருமுன் தோற்றம் வழங்கினார். மெலிந்து துரும்பாகிக் கூனல் விழுந்து காணப்பட்ட அவர், ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களை நோக்கி, ''ஷைகு அவர்களே! என்னை அறியாமை இருளி லிருந்து விடுவித்து, அமைதிப் பாதையை எனக்குக் காட்டியருளியதற்கு இறைவன் தங்களுக்கு ஈருலகிலும் பேரருள் பாலிப்பானாக!'' என்றுகூறினார்.

இதன் பின் அவர்களிருவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென அஹ்மத் யஜீதின் அன்னையாரும் அவரின் அருமை மனைவியும், அருமந்த மைந்தனும் உள்ளே நுழைந்தனர். தம் மகன் மெலிந்து துரும்பாகி, கூனிக் குறுகி, குழி விழுந்த கண்களுடன் வீற்றிருப்பதைக் கண்ட அன்னை 'கோ' வென்று கதறி அழுதார். அவரின் மனைவியும் அவரின் சின்னஞ்சிறு மகனும் அவர் அருகே நின்று கண்ணீர் வடித்து அழுது அவரை இல்லம் வருமாறு அழைத்தார். ஆனால் அவரோ முடியாது என்று மறுத்துரைத்தார். அவர்கள் அனைவரும் எவ்வளவோ அழுது பிரலாபித்து வேண்டிய போதினும் அவர் கேட்டாரில்லை.

அதன் பின் அவர் ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களைநோக்கி, ''ஏன் என் வரவை என் அன்னைக்குத் தெரியப்படுத்தினீர்கள்?'' என்று வினவினார்.

''தங்களின் அன்னை அழுது கெஞ்சிப் பல தடவை வேண்டிக் கொண்டார். எனவே தெரியப்படுத்தினேன்'' என்று பதிலிறுத்தனர் ஸரீ அஸ் ஸகதி.

சற்று நேரத்திற்கெல்லாம் அஹ்மத் யஜீத் இல்லம் புறப்பட - இல்லை,இல்லை - கானகம் புறப்படத் தயாராகி விட்டார். அது கண்ட அவரின் மனைவி, ''தாங்கள் உயிரோடிருக்கும் பொழுதே, என்னை ஒரு விதவையாகவும், தங்களின் மகனை ஓர் அநாதையாகவும் ஆக்கி விட்டீர்களே. குழந்தை அப்பா எங்கே என்று கேட்கும் பொழுது, நான் என்ன பதில் கூறுவேன்? எனவே அவனையும் தங்களோடு அழைத்துச் செல்லுங்கள்'' என்று வெறுப்போடு கூறினாள்.

''அப்படியா! அதுவும் நல்லது தான்'' என்று கூறித் தம் சின்னஞ்சிறு மகன் அணிந்திருந்த பட்டாடைகளையெல்லாம் களைந்து, அவன் மீது கம்பளித் துணி ஒன்றைப் போர்த்திக் கையில் கமண்டலம் ஒன்றைக் கொடுத்தார்.

தன் கண்மணியனைய மகனை இவ்வித அலங்கோல நிலையில் காணச் சகியாத அன்னை அவனை வெடுக்கெனத் தன் பக்கல் இழுத்துக் கொண்டாள்.

''நானும் என்னை உன் கையில் ஒப்படைத்து விடுகிறேன். நீ விரும்பின் என்னை விடுதலை செய்து விடு'' என்று கூறினார் அஹ்மத் யஜீத்.

அது கேட்டுக் கண்ணீரை ஆறாகப் பெருக்கி நின்றாள் மனைவி.

இதன் பின் கானகம் மீண்டார் அஹ்மத் யஜீத். அவரைப் பற்றி யாதொரு செய்தியும் எவருக்குமே தெரியவில்லை.

சில ஆண்டுகள் ஓடி மறைந்தன. ஓரிரவு தஹஜ்ஜுத் நேரத்தில் ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களின் திருமுன் ஒரு மனிதர் வந்து, ''அஹ்மத் யஜீதிடமிருந்து வருகிறேன். அவர் தம்முடைய வாழ்வு முடிவுறும் நிலையில் இருப்பதாகக் கூறச் சொன்னார்'' என்று மொழிந்தார்.

அது கேட்ட ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள், வந்தவருடன் அவரைக் காண்பதற்காக விரைந்து சென்றார்கள். அஹ்மத் யஜீத் இறப்பின் விளிம்பில் நின்று கொண்டிருந்தார். அவருடைய நா, ''ஏதேனும் நன்மை செய்யக் கூடியவர்களெல்லாரும் இதைப் போன்றதற்காகப் பாடுபடவும்'' என்ற 37:61 ஆவது திருவசனத்தை முணு முணுத்துக்

உடனே ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் அவரின் அருகே அமர்ந்து, அவரின் தலையைத் தூக்கித் தம் நெஞ்சிலே வைத்தனர். அப்பொழுது அஹ்மத் யஜீத் தம் கண்களை திறந்து பார்த்தார். தம் ஆசானின் அருளொழுகும் முகம் அவரின் கண்களில் தென்பட்டதும், அவரின் முகத்தில் இலேசான புன்முறுவல் படர்ந்தது. ''ஷைகு அவர்களே! தாங்கள் சரியான நேரத்தில் வந்துவிட்டீர்கள். என் காலம் முடிவுற்றது'' என்று கூறினார். அத்துடன் அவருடைய மூச்சும் நின்றது.

அது கண்டு ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் கண்ணீர் வடித்தார்கள். அழுத கண்களோடு அவர்களை நல்லடக்கம் செய்வதற்காக நகருக்குள் சென்று மக்களை அழைத்து வரப் புறப்பட்டார்கள். வழியிலே மக்கள் அவர்களை நோக்கித் திரள் திரளாக வந்து கொண்டிருப்பதைக் கண்டு என்ன செய்தி?'' என்று வியப்புடன் வினவினார்கள்

''சென்ற இரவு அசரீரியாக ஒரு சப்தத்தைக் கேட்டோம். ''அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவரின் இறப்புத் தொழுகையில் கலந்துகொள்ள விரும்புவோர், சூனிஸியா அடக்க இடத்திற்குச் செல்லலாம்' என்று அந்த அசரீரி கூறியது. எனவே அதற்காக வந்து கொண்டுள்ளோம் என்று அவர்கள் கூறினர். அது கேட்டு ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களின் புருவங்கள் மேலேறின.

இவ்வாறு இறைநேசச் செல்வராக இருந்து, இறைநேசச் செல்வர் பலர் தோன்றுவதற்குக் காரணமாக விளங்கிய ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களின் ஊழியத்தில் இருப்பதற்காகப் பலர் தவம் கிடந்தார்கள் என்றே கூறலாம். அவ்வாறு தவம் கிடந்தவர்களில் ஒருவர் அவர்களின் உடன் பிறந்தாளாவர். அவர்களின் வணக்க அறையைப் பெருக்கித் தூய்மைப் படுத்தும் பணியைத் தமக்கு வழங்க வேண்டும் என்று அம்மங்கை நல்லார் எவ்வளவோ வேண்டியும், ''நான் அதற்குத் தகுதியுடையவனல்லன்'' என்று அவர்கள் பணிவோடு கூறிவிட்டார்கள். ஒரு நாள் அவர் தம் அண்ணனின் வணக்க அறைக்குள் நுழைந்த பொழுது எவரோ ஒரு கிழவி பெருக்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும்,'' என்ன அண்ணே! தங்களுடன் பிறந்த எனக்கு நல்காத பேற்றினை எவரோ அந்நியப் பெண்மணி ஒருவருக்கு வழங்கி விட்டீர்கள்'' என்று வருத்தத்துடன் கூறினார். அது கேட்ட அவர்கள், ''சகோதரி! கவலற்க, அப்பெண்மணி என்மீது காதலுற்று என்னை மணந்து கொள்ள விரும்பினாள். நான் மறுத்து விட்டேன். அதன் பின் அவள் என் வாழ்வின் ஒரு பாகமாக ஆகிவிட வேண்டுமென்று இறைவனிடம் இறைஞ்சி மன்றாடினாள். அதன் காரணமாக, இறைவன் என் அறையைப் பெருக்கும் பணியை அவளுக்கு வழங்கியுள்ளான்'' என்று பதிலிறுத்தார்கள்.

ஆன்மீகத் துறையில் அவர்கள் இத்துணை உச்சத்தை எய்தி இருந்த போதினும், அவர்களின் மகாத்மியத்தை மார்க்க விற்பன்னர்கள் பலர் அறியவில்லை. எனவே அவர்கள், அம்மாதவருக்கு எதிர்ப்புகள் பல காட்டி வந்தனர். அவ்வாறு அவர்களுக்கு எதிர்ப்புக் காட்டி வந்த வர்களில், மூலவரும் முதல்வருமாக விளங்கியவர்கள் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் என்பதை அறியும் பொழுது நமக்குப் பெருவியப்பு ஏற்படுகிறது.

எவர் மீதும் காழ்ப்போ விரோதமோ கொள்ளாது வாழ்ந்து வந்த ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள், இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள், தம் மீது காட்டிய வெறுப்பையும் எதிர்ப்பையும் பொருட் படுத்தாது அவர்களின் அன்பைப் பெறுவதற்காக அவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். எனினும் அவர்கள் அன்பளிப்பு வழங்குந்தோறும், அதனை இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ( ரஹ்) அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துக் கொண்டே வந்தார் கள். ஒரு நாள் அவர்கள் இமாம் அவர்களை நோக்கி, ''அஹ்மதே! அன் பளிப்பை ஏற்றுக் கொள்ளாததான ஆபத்திற்கு அஞ்சிக் கொள்ளுங்கள்'' என்று கூறினர். அதற்கு இமாம் அவர்கள், ''என்ன கூறினீர்கள்? கூறியதை மீண்டும் கூறுங்கள்'' என்று சொன்னார்கள். மீண்டும் அதனை அவர்கள் கூறவே, இமாம் அவர்களின் மூளை சுழன்றது. தாம் செய்த தவற்றினை அவர்கள் உணர்ந்தார்கள். ''நல்லது; என்னிடம் ஒரு மாதத்திற்குப் போது மான உணவுப் பொருள் உள்ளது. அது முடிந்ததும் தங்களின் அன் பளிப்பை ஏற்றுக்கொள்கிறேன். அதுவரை அதனை எனக்காகப் பத்திரப்படுத்தி வையுங்கள்'' என்று கூறினர்.

அன்பும் அடக்கமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்த ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள், தங்களைப் பற்றிக் கூறும் பொழுது, ''மனிதர்களில் சிலர் உள்ளனர். அவர்களின் சொத்து எவ்வளவாக இருந்த போதினும் அதில் பாதி அநியாயமாக வந்த சொத்தாக இல்லாமல் இருக்காது. அத்தகையோரில் ஒருவனாகவே நான் என்னையும் கருதுகின்றேன்'' என்று கூறினார்கள்.

அவர்களின் அழகுத் திருவாயிலிருந்து அவ்வப்போது மணி மணியான கருத்துக்களெல்லாம் உதிர்ந்து கொண்டிருந்தன.

''எவன் தன்னைப் பற்றித் தன்னிடமில்லாத ஒன்றை மக்களின் முன் பறை முழக்குகின்றானோ, அவன் இறைவனை விட்டும் தொலைவிலாகி விட்டான்'' என்று அவர்கள் கூறினார்கள்.

மூன்று காரணங்களினால் மனிதன் பாவம் செய்ய அஞ்சுகின்றான். அவை (1) நரகத்திற்குப் பயந்து (2) சுவனத்தை விரும்பி (3) இறைவன் திருமுன் செல்ல நாணமுற்று என்றுஅவர்கள் இயம்பினர்.

''மனோ இச்சையின் காரணமாக ஏற்படும் தவறுகளுக்கு இறைவனிடம் மன்னிப்பு உண்டு. பெருமையின் காரணமாக ஏற்படும் தவறுகளுக்கு இறைவனிடம் ஒருபோதும் மன்னிப்புக் கிடையாது'' என்று கூறிய அவர்கள், தம் கூற்றிற்கு ஆதாரமாக, மனோ இச்சையின் காரணமாகத் தவறிழைத்த ஆதம் (அலை) அவர்கள் மன்னிக்கப் பெற்றதையும், பெருமையின் காரணமாக தவறிழைத்த இப்லீஸ் மன்னிக்கப் பெறாததையும் எடுத்துரைத்தார்கள்.

வணக்கத்தைப் பற்றி அவர்கள் கூறுங்கால், ''தனித்த ஓர் இடத்தில் அமர்ந்து, ஒருமித்த மனத்தோடு இறைவனை இரண்டு ரகஅத் தொழுவது, அண்ணலெம் பெருமான் ( ஸல்) அவர்கள் கூறிய எழுபது - ஏன், எழு நூறு பொன் மொழிகளை எழுதி வைப்பதை விடச் சிறப் புடையதாகும்'' என்று அவர்கள் கூறினர்.

அவர்கள் மக்களை நோக்கி ''வணக்கம் செலுத்த மிகவும் மேலான காலம் ஒருவனின் இளமைப் பருவமேயாகும்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள். மேலும் அவர்கள் மக்களை நோக்கி, ''நீங்கள் பணக்கார அண்டை வீட்டினரின் தொடர்பையும், பணத்திற்காகத் தங்களின் மார்க்க அறிவை விற்பவர்களின தொடர்பையும் தவிர்ந்து கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள்.

இவ்வாறு கூறிய அவர்கள் ''மருத்துவர்களே பிணியாளர்களாக இருக்கும் பொழுது எவரிடம் சென்று மருத்துவம் செய்து கொள்வது? கிள்ரே பாதையில் தடுமாறும் பொழுது, எவரை வழிகாட்டியாகக் கொள்வது?'' என்று மனம் வருந்திக் கூறினார்கள்.

மாணவர்கள் அவர்களிடம் அறிவுரை வேண்டிவரின் ''இறைவனே! அவர்கள் என்னிடம் அறிவுரை கேட்டு மீண்டும் வந்து என்னுடைய வணக்க வழிபாடுகளுக்கு இடையூறாக இராவண்ணம் அவர்களுக்குப் போதுமான மார்க்க அறிவை அளிப்பாயாக!'' என்று இறைஞ்சுவார்கள்.

அவர்கள் அடிக்கடி செய்யும் இறைஞ்சுதல் ''இறைவனே நீ எனக்கு எத்தகு தண்டனையை விதித்த போதினும் சரி, உன்னைத் தரிசிப்பதைத் திரை செய்யக்கூடிய தண்டனையை மட்டும் எனக்குத் தந்து விடாதே' என்பதாகவே இருந்தது.

வயதாக, ஆக ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களுக்கு மரண பயம் அதிகரித்துக் கொண்டு வந்தது. ''நான் பகுதாதில் இறப்பெய்த விரும்ப

வில்லை. பூமி என்னை ஏற்றுச் கொள்ளாது என்னை வெளியே தள்ளி அவமானப்படுத்தி விடுமோ என்று அச்சமாக உள்ளது'' என்று அவர்கள் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இறப்புப் படுக்கையில் கிடக்கும் பொழுது, அவர்களை அப்துல்லாஹ் இப்னு புஸைல் காணச் சென்ற பொழுது, தம்மை யறியாமல் தேம்பித் தேம்பி அழுதார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி ''ஏன் அழுகிறீர்?'' என்று வினவினார்கள். ''தங்களின் நிலையைப் பார்த்து'' என்று மறுமொழி பகர்ந்தார். அதற்கு அவர்கள், ''அழாதீர், இதுவரை இறைவன் என்னை வைத்திருந்த நிலையை நோட்டமிட்டுப் பார்த்தேன். 'என் வாணாளில் நான் இருபதாண்டு காலம் இறைவனின் தேட்டத்தில் இருந்தேன். அதன் காரணமாக நான் அவனை அடைந்து கொண்டேன். பின்னர் இருபது ஆண்டுகள் அவன் என் ஊழியத்தைப் பெற்றுக் கொண்டான். அதன் பின் இருபது ஆண்டுகள் அவன் என்னை அழ வைத்தான். பின்னர் இருபது ஆண்டுகள் அவன் என்னை இன்பத்தில் திளைக்கச் செய்தான். பின்னர் இருபது ஆண்டுகள் என்னை அவனளவில் அழித்துக் கொள்ளும் 'ஃபனா' நிலையில் ஆக்கினான். இப்பொழுது அவன் எனக்குத் தன்னுடன் தரித்திருக்கும் 'பகா' நிலையில் ஆக்குவான் என்ற நம்பிக்கையோடு உள்ளேன். எனவே அவனுடைய பேரருளால் நான் அவனுடன் இருக்கும் பொழுது நான் மகிழ்ச்சியுறவே வேண்டும்'' என்று கூறினார்கள். பின்னர் அவர்களைக் காண ஜுனைத் (ரஹ்) அவர்கள் சென்ற காலை, அவர்கள் கண்ட காட்சியை, அவர்கள் இதோ வர்ணிக் கிறார்கள். நாமும் கேட்போம்.

''நான் ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்களைக் காணச் சென்றேன். அவர்களின் உடல் நோயால் வாடி மெலிந்திருந்தது. 'இது தங்களுக்கு இறை நேசத்தால் நேர்ந்தது' என்று நான் கூறினேன். அது கேட்டு அவர்கள் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தனர். மயக்கம் தெளிந்ததும் அவர்களின் முகம் பூரண மதியம் போன்று பொலிவுற்றுத் துலங்கியது.

அப்பொழுது நான் அவர்களை நோக்கி ''தங்களின் உடல் நிலை எவ்வாறு உள்ளது?'' என்று வினவினேன்.

அதற்கு அவர்கள், ''என்னுடைய சோதனைகளையும் வேதனை களையும் பற்றி நான் ஏன் இறைவனாகிய மருத்துவனிடம் குறை கூற வேண்டும்? எல்லாம் அவன் விட்டது தானே'' என்று கூறினார்கள்.

அப்பொழுது அவர்களின் அருகில் ஒரு விசிறி கிடப்பதைக் கண்டு அதை எடுத்து அவர்களுக்கு விசிறினேன். அவர்கள் என்னை நோக்கி, 'ஜுனைத்! விசிற வேண்டாம். ஏனெனில் நெருப்பு, காற்றை விட

ஒளியுடையதாகும். மேலும் எவரின் உட்புறம் எரிந்து கொண்டிருக்கிறதோ அவருக்கு விசிறியின் காற்றால் என்ன சுகம் ஏற்பட்டப் போகிறது?'' என்று கூறினர். அதன் பின் அவர்கள் பின்வரும் பாடலைப் பாடினர்.

''இதயம் எரிகிறது. கண்ணீர் வழிகிறது. துக்கங்கள் சேர்ந்து விட்டன. பொறுமை தூரமாகிவிட்டது. இத்தகைய ஒருவருக்கு நிம்மதி எவ்வாறு கிடைக்கும்? இறைகாதலே அவரை இந்நிலையில் ஆக்கிவிட்டது.''

இப்பாடலை பாடி முடித்ததும், அவர்கள் இருகரம் ஏந்தி ''இறைவ எம்பெருமநான் உயிரோடிருக்கும் வரை எதைக் கொண்டு எனக்கு நிம்மதி ஏற்படுமோ, அதனை நீ எனக்கு அளித்தருள்'' என்று இறைஞ்சினர். அப்பொழுது நான் மாமாவை நோக்கி, ''தங்களின் நிலை எவ்வாறு உள்ளது?'' என்று மீண்டும் வினவினேன். அதற்கு அவர்கள், 'எச்செயலையும் ஆற்ற சக்தியில்லாத ஓர் அடிமையின் நிலைமை எவ்வாறிருக்குமோ, அவ்வாறு உள்ளது' என்று பதிலிறுத்தனர்.

இறுதியாக, அவர்களின் முடிவும் அண்மியது. இதனை உணர்ந்த ஜுனைத் (ரஹ்) அவர்கள், தமக்கு இறுதி அறிவுரை (வஸிய்யத்) வழங்குமாறு வேண்டினர். அது கேட்ட ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் தம் மருகரை நோக்கி, ''இறைவனின் படைப்புகளுடன் கலந்துறவாடு வதன் காரணமாக, இறைவனை அசட்டை செய்து விட வேண்டாம்'' என்று கூறினர். அதற்கு ஜுனைத் (ரஹ்) அவர்கள், ''இதனைத் தாங்கள் என்னிடம் ஏற்கனவே கூறி இருப்பின் நான் தங்களுடன் தொடர்பு கொண்டிருக்க மாட்டேன்'' என்று நவின்றனர். அவர்கள் இவ்வாறு கூறி வாய் மூடு முன் ஸரீ அஸ் ஸகதி (ரஹ்) அவர்கள் தம் மருகருடனும், இவ்வுலகுடனும் கொண்டிருந்த தொடர்பை அறுத்தெறிந்துவிட்டு, இறை தொடர்பை நாடி, இறுதியாகக் கண்களை மூடிக்கொண்டார்கள். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 253 ஆம் ஆண்டிலாகும். அப்பொழுது அவர்களுக்கு வயது 98. பக்தாதிலுள்ள சூனிஸியா அடக்க இடத்தில் அவர்களின் பொன்னுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவர்கள் இறந்தபின் ஒருவர் அவர்களைக் கனவில் கண்டு ''இறைவன் தங்களை எவ்வாறு நடத்தினான்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''இறைவன் என்னுடைய பாவங்களை மன்னித்து விட்டான். என்னுடைய ஜனாஸாத் தொழுகையில் எவர்கள் கலந்து கொண்டார்களோ அவர்களின் பாவங்களையும் மன்னித்து விட்டான்'' என்று பதிலிறுத்தார்கள்.

பொருளடக்கம்



அப்பொழுது அவர் ''நானும் தங்களின் ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொண்டேனே'' என்றார்.

உடனே அவர்கள் ஒரு மடித்த காகிதத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்தார்கள். அதில் அவரின் பெயர் தென்படவில்லை.

அப்பொழுது அவர், ''நிச்சயமாக நான் தங்களின் ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொண்டேனே'' என்று கூறினார்.

அவர்கள் மீண்டும் அதனைப் பிரித்துப் பார்த்தார்கள். அதில் அவரின் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது. அவர் மகிழ்ந்தார்.

## 20. அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்)

**அ**வருடைய பாட்டனார் ஷாருபானோ நெருப்பை வணங்குபவர். ஆனால் அவரோ அல்லாஹ்வின் அன்பிற்குரிய நேசராக விளங்கினார். *அவரின் அன்னை கருவுற்றிருக்குங்கால் ஆகுமானதா, ஆகாதா என்று அறிய இயலாவண்ணம் ஐயத்திற்குரியதாய் உள்ள பொருள் ஒன்றை எடுத்து உண்ண வாயில் வைப்பின், அன்னை வயிற்றில் அவர் முட்டி அன்னை அதனை வெளியே துப்புகின்ற வரையில் அவர் ஓய்வு கொள்வதில்லை.

அவர் சிறுவராக இருக்குங்கால் ஓரிரவு அவர் தம் அன்னையின் தாளில் அமர்ந்து குர்ஆன் ஓதிக் கொண்டிருக்குங்கால் அன்னை அவரை நோக்கி, ''மகனே! தாகமாக இருக்கிறது. தண்ணீர் கொண்டு வா'' என்று கூறினார். அன்னையின் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொண்டு வரும் நோக்குடன் அவர் தண்ணீர்ப் பானையை அணுகிய பொழுது அதில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. அக்கம் பக்கத்து வீடுகளுக்காவது சென்று தண்ணீர் வாங்கி வரலாமென்று சென்றாலோ, அவையெல்லாம் தாளிடப் பெற்று அவற்றின் உள்ளிருந்து குறட்டை ஒலி தான் வந்து கொண்டிருந்தது. எனவே அவர்களை எழுப்பி வீண் தொந்தரவு கொடுக்க விருப்பமில்லாது, சற்றுத் தொலைவிலிருந்த நீர்ச் சுனைக்கு விரைந்தோடிச் சென்று நீர் கொணர்ந்தார் அவர். ஆனால், இல்லம் திரும்பிய காலை அன்னை அயர்ந்து உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவரின் துயில் கலைத்து அவருக்குத் துயர் தர விரும்பாத தனயன், கையில் தண்ணீர்க் கூஜாவுடன் அன்னையின் காலடியில் ஆடாது அசையாது வீற்றிருந்தார்.

---

* அவருக்கு ஆதம், அலீ என்ற இரு உடன் பிறந்தார்கள் இருந்தனர். அவர்களும் சூஃபிகளாக இருந்தார்கள். எனினும் அவரைப் போன்ற ஆன்மீக உச்சத்தை அவர்கள் எய்தப் பெறவில்லை ''வானவர்களில் ஜிப்ரீல் எவ்வாறு மேலானவரோ அதே போன்று மெய்ஞ்ஞானிகளில் மேலானவராக இவர்கள் இருந்தனர்'' என்று ஜுனைத் (ரஹ்) அவர்கள் கூறினர். இவர்களின் தந்தை ஈஸா, பிஸ்தாமில் பிரபலமானவராக விளங்கினார்.

இரவு ஓடியது; எனினும் அன்னை கண் விழிக்கவில்லை. இறுதியாக, அது ஓடி அலுத்து வைகறைக்குள் நுழைந்தது. இப்பொழுது தான் அன்னை கண் மலர்ந்தார். தம் அருமை மகன் தம் காலடியில் தண்ணீர்க் கூஜாவுடன் வீற்றிருப்பதைக் கண்டதும், தாம் அவ்விரவின் துவக்கத்தில் தாகம் தணிக்கத் தண்ணீர் கொணருமாறு தம் மகனிடம் கூறியது கனவு போல் அவரின் மனக் கண்முன் காட்சி வழங்கியது. தம் அருமை மகனை வாரி அணைத்து முத்தமிட்டு,''இவ்வளவு நேரமாக விழித்துக் கொண்டா இருக்கின்றாய் என் மகனே'' என்று வினவினார். ''ஆம், அம்மா! தாங்கள் விழிப்பீர்கள், விழிப்பீர்கள்! என்று எண்ணி விழித்துக் கொண்டே இருந்தேன். விடிந்து விட்டது'' என்று அடக்கமாகப் பதில் கூறினார் தனயர். அது கேட்டு அன்னைக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. ''இறைவனே! நான் எவ்வாறு என் மகன் மீது நிறைவுற்றேனோ அவ்வாறே நீயும் அவன் மீது மன நிறைவுறுவாயாக!'' என்று இறைஞ்சினார். இத்துடன் பொழுதும் புலர்ந்தது.

இறைவன் அவரின் அன்னையின் இறைஞ்சுதலை ஏற்றுக் கொண்டானோ என்னவோ, இதிலிருந்து அவரின் சின்னஞ்சிறு மகனின் வாழ்வில் ஒரு மாறுதலும், போக்கில் ஒரு திருப்பமும் காணப்பட்டன. ஒழுங்காகப் பள்ளி சென்று பயின்று வந்த அவர் ஒரு நாள் அவருக்கு ஆசிரியர் சூரத் முஸம்மிலை ஓதிக் கொடுத்த பொழுது, அதனை ஓதி முடித்து விட்டு இல்லம் விரைந்தோடி வந்தார். இல்லத்தின் முகப்பில் தந்தை ஈஸா வீற்றிருப்பதைக் கண்டதும், ''அப்பா! இன்று எனக்கு ஆசிரியர் சூரத் முஸம்மிலை ஓதித் தந்தார்'' என்று கூறினார். அது கேட்ட தந்தை 'நல்லது, மகனே!' என்று கூறி வாய் மூடுவதற்கு முன், ''அப்பா! அதில் இரவில் நின்று தொழுமாறு இறைவன் பணிக்கின்றானே. அது எவரை?'' என்று வினவினார். ''அதுவா? அது அண்ணலெம் பெருமான் முகம்மதெங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களை'' என்று மறுமொழி பகர்ந்தார் தந்தை. ''அவ்விதமாயின் தாங்களும் ஏன் அவ்வாறு செய்யவில்லை'' என்று மறுகேள்வி விடுத்தார் தனயர். ''மகனே! அது சிறப்பு மிகுந்த நற்செயலாகும். அதனை எம்பெருமானார் அவர்களை ஆற்றுமாறு பணித்து, அவர்களுக்குச் சிறப்பளித்தான் இறைவன்'' என்று கூறினார் தந்தை. ''அப்படியா!'' என்று வியப்புடன் கேட்டார் மைந்தர். இத்துடன் உரையாடல் முடிந்தது.

அடுத்த நாள் பள்ளியிலிருந்து வந்த தனயர், தந்தையை அணுகி, ''அப்பா! உம்முடன் உள்ளோரில் ஒரு கூட்டத்தினர் இரவில் நின்று வணங்குகின்றார்கள் என்று இறைவன் அதில் கூறுகின்றானே, அவர்கள் யார்?'' என்று வினவினார். ''அண்ணலெம் பெருமானின் அருமைத்

தோழர்கள்'' என்றார் தந்தை. ''அவ்விதமாயின் அண்ணலெம் பெருமானை அவர்களின் அருமைத் தோழர்கள் பின்பற்றும் பொழுது, தாங்கள் ஏன் பின்பற்றவில்லை?'' என்று வினவினார் தனயர். தந்தைக்கு மறுமொழி கூற வாய்ப்பில்லை.

இதன் பின் தந்தை நள்ளிரவில் துயில் எழுந்து, இறைவனை வணங்கத் துவங்கினார். இதனை ஓரிரவு அவரின் மைந்தரின் சின்னஞ்சிறு பிஞ்சுக் கண்கள் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தன. பொழுது புலர்ந்ததும், அவர் தம் தந்தையை அணுகி, ''அப்பா! இரவில் நின்று தொழுவதற்கான முறைகளை எனக்குச் சொல்லித் தாருங்கள்'' என்று வேண்டினார். அதற்குத் தந்தை, ''மகனே! நீயோ சின்னஞ்சிறு பாலகன். இப்பொழுது அமைதியாக இரு. வயது வந்ததும், இரவில் தொழுது கொள்ளலாம்'' என்று கூறினார். அது கேட்ட தனயர் ''மறுமை நாளில் இறைவன் எல்லோரையும் நோக்கி, ''இரவில் துயில் எழுந்து தொழுதோர் சுவனம் புகுக!'' என்று கூறுங்கால், ''என் தந்தை என்னை இரவில் தொழவிடாது தடுத்து எனக்குக் கேடு சூழ்ந்து விட்டார்'' என்று இறைவனிடம் தங்கள் மீது நான் குறைபடுவேன்'' என்று கூறினார். தம் அருமை மகனின் இவ்விடிச்சொல் கேட்டு அதிர்ந்து போன தந்தை அக்கணமே அவருக்கு இரவில் துயில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுவதற்கான முறைகளைச் சொல்லிக் கொடுத்தார். இது முதற் கொண்டு இரவில் துயில் எழுந்து தொழத் துவங்கிய அவர், தம் இறுதிநாள் வரை அத்தொழுகையைத் தொழாது விடவில்லை.

ஒருநாள்அவர் பள்ளியில் குர்ஆன் ஓதிக் கொண்டிருக்குங்கால், ''எனக்கும் உங்களின் பெற்றோர்களுக்கும் நன்றியுடையவர்களாயிருங்கள்'' என்ற திருவசனத்தை (31: 13) ஓதியதும் அவருடைய மூளை சுழன்றது. பல்வேறு எண்ணங்கள் அதில் குமுமின. உடனே அவர் தம் ஆசிரியரை நோக்கி,தமக்கு இல்லம் சென்று வர அனுமதி வழங்குமாறு வேண்டினார். ஆசிரியர் அனுமதி வழங்கியதும் இல்லத்திற்கு ஓடோடி வந்தார் அவர்.

எதிர்பாரா வேளையில் தம் அழகுத் திருமகன் தம் முன் வந்து நிற்பதைக் கண்டதும் அன்னை அவரை நோக்கி, ''மகனே! தைஃபூர்!! என்ன செய்தி? ஏன் இவ்வேளையில் வந்தாய்?'' என்று வினவினார்.

''அம்மா! திருக்குர்ஆனை ஓதி வரும்பொழுது, 'எனக்கும் உங்களின் பெற்றோர்களுக்கும் நன்றியுடையவர்களாய் இருங்கள்' என்ற திருவசனம் வந்ததும் என் மூளை சுழன்றது. என் உள்ளத்தில் கவலை எண்ணங்கள் குமுமின. நானோ பலவீனன். என்னால் எவ்வாறு இரண்டு எசமானர்களுக்கு ஊழியம் புரிய இயலும்? எனவே தாங்கள் விரும்பின் என்னைத்

தங்களின் ஊழியத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இல்லையெனில் இறைவனின் ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்துவிடுங்கள். என் பற்றிய வரையில் இரண்டும் ஒன்று தான். அன்னையின் பணியே ஆண்டவன் பணி. ஆண்டவனின் பணியே அன்னையின் பணி'' என்று கூறினார்.

அது கேட்டு உணர்ச்சி மீக்குற்ற அன்னை, ''மகனே! ஒன்றிற்கும் கவலற்க! இக்கணத்திலிருந்து நான் உன்னை இறைபணிக்கு அர்ப்பணித்து விட்டேன்'' என்று கூறினார். அது கேட்டுத் தனயரின் உள்ளம் துள்ளி விளையாடியது. துள்ளிக் குதித்த வண்ணம் பள்ளிக்கு விரைந்தோடினார் அவர்.

நாட்கள் உருண்டோடின. தனயரின் உள்ளம் பக்தாது மாநகர் சென்று உயர்கல்வி பெறவேண்டுமென்று பெரிதும் அவாவுற்றது. அன்னையிடம் விடைபெற்று பக்தாது சென்று கல்வி பயின்றார் அவர். எனினும் அவரின் மனம் நிறைவுறவில்லை.

அது கண்டு பெரிதும் மனச்சோர்வுற்ற அவர் ஆன்மீகக் கல்வி பயில்வதற்காகப் பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்கள் உட்பட முந்நூற்று அறுபதுக்கும் மேற்பட்ட ஆசான்களிடம் கல்வி பயின்றார். ஹனபி மத்ஹபைச் சேர்ந்த அவர் அபூ அலீ சித்தீ என்பவருக்கு ஹனபீ மத்ஹப் பற்றிய சட்ட திட்டங்களைப் படித்துக் கொடுத்து அவரிடமிருந்து தஸவ்வுஃபைக் கற்றுக் கொண்டார். இதன் பின தான் அவருக்கு ஆன்மீக ஒளி ஏற்படலாயிற்று.

ஆன்மீக ஒளி எய்தப் பெற்ற அவர் நாடு, நாடாக நகரம், நகரமாகச் சுற்றித் திரிந்து மக்களின் உள்ளத்தில் அறிவொளியை, ஆன்மீக ஒளியை ஏற்றினார். அவரின் அறிவுரை கேட்டு இருளடைந்து கிடந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் உள்ளங்கள் ஒளிமயமாயின. அவர் ஆன்மீக தீபம் ஏந்தி, இப்பொழுது பங்களதேஷிலுள்ள சிட்டகாங் வரை வந்து, இஸ்லாத்தைப் பரவச் செய்தார். அதன் காரணமாகவே அவ்வூர் ஒளிநாடு என்று பொருள்படும் சட்டகான் என்ற பெயர் பெற்றது என்றும் அதுவே பின்னர் சிட்டகாங் என்று திரிந்தது என்றும் கூறுவர்.

இவ்வாறு பல நாடுகளில் சுற்றித் திரிந்து முப்பதாண்டுகளைக் கழித்தபின் அவர்கள், தம் முதலாவது ஆன்மீக ஆசான் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்களை அணுகி, மீண்டும் அவர்களின் காலடியில் அமர்ந்து ஆன்மீகக் கல்வி பயிலலானார்கள். அப்பொழுது ஒரு நாள் அவர்களின் ஆசான் அவர்களை நோக்கி, ''அபூ யஸீத்! அந்தச் சன்னலிலிருந்து புத்தகத்தை எடுத்து வாரும்'' என்று கூறினார்கள். ''சன்னலா? எங்கே உள்ளது?'' என்று வினவினர் அபூயஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள்,

''என்ன இவ்வாறு கூறுகின்றீர்? இத்தனை நாட்களாக நீர் இங்கு வந்து போய்க் கொண்டுள்ளீர். சன்னலைப் பார்க்கவில்லையா?'' என்று வினவினர் ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்கள், ''இல்லையே! நான் தங்கள் முன் வந்தமரும் பொழுது யாதொன்றையும் ஏறிட்டும் பார்ப்பதில்லை. நான் அவற்றையெல்லாம் பார்ப்பதற்காகவும் இங்கு வரவில்லையே'' என்று கூறினர் அபூயஸீத் (ரஹ்). அதுகேட்ட ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்கள் வியப்பு மேலிட்டவர்களாய் அவர்களை நோக்கி, ''அபூ யஸீத்! நீர் இப்பொழுது உம் ஊராகிய பிஸ்தாமுக்குச் சென்று, உம் அன்னைக்கு ஊழியம் புரிவீராக! இங்கு உம் அலுவல் முழுமை பெற்றுவிட்டது'' என்று கூறினர்.

''எவன் ஒருவனுக்கு ஷைகு இல்லையோ, அவனுக்கு ஷைகு ஷைத்தானாக இருப்பான்'' என்று பிற்காலத்தில் கூறிய அபூ யஸீத் (ரஹ்) அவர்கள் தம் ஆன்மீக ஆசானாக ஜஃபர் ஸாதிக் (ரஹ்) அவர்களைப் பெறும் நற்பேறு பெற்று தம் ஊர் நோக்கித் திரும்பி வருங்கால், அவர்களுக்கு முன்னால் அவர்களின் புகழ் பரவி ஆங்காங்கே அவர்களுக்கு மகத்தான வரவேற்பு வழங்குமாறு செய்தது. அவர்கள் எங்கு சென்ற போதினும், ஆங்கெல்லாம் மக்கள் கூட்டம் அவர்களை ஈயென மொய்த்து நின்று அவர்களிடமிருந்து ஆன்மீகத் தேனை உண்டு களித்தது.

அது ரமலான் மாதமாக இருந்தது. அவர்களின் வரவைப் பற்றிக் கேள்வியுற்ற பிஸ்தாம் மக்கள், அவர்களை எதிர் கொண்டழைத்து நல்ல வரவேற்பு வழங்க அவர்களை நோக்கி விரைந்தோடி வந்தார்கள். ஆனால் அவர்களோ தாம் தம் இல்லம் அடையும் பொழுது மக்கள் தம்மைச் சூழ்ந்து வந்து தம் அமைதியைக் குலைக்கக் கூடாது என்று விரும்பினர். எனவே மக்கள் தம்மீது வெறுப்புற்று வெருண்டோட வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்கள், தம் சட்டைப் பையிலிருந்த ஒரு ரொட்டித் துண்டை எடுத்து யாவரும் அறிய அதனை உண்டனர். ரமலான் மாதத்தில் அவர்கள் இவ்வாறு செய்ததைக் கண்டதும், மக்களுக்கு அவர்கள் மீதிருந்த மதிப்பெல்லாம் எங்கேயோ ஓடி மறைந்தது. அவர்களை விட்டும் அவர்கள் விலகி ஓடினார்கள்.

அப்பொழுது அவர்கள் தம் மாணவரை நோக்கி, ''பார்த்தீரா! நான் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்றைப் பின்பற்றும் பொழுது, அவர்கள் அனைவரும் என்னைப் புறக்கணித்து வெருண்டோடி விட்டனர்.'' என்று கூறினர். அவர்கள் இவ்வாறு கூறியதற்குக் காரணம், பயணிகள் பயணத்தின் போது நோன்பு நோற்காது, பின்னர் அதனைக் 'களா'ச் செய்யலாம் என்று மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்

டிருப்பதேயாகும். மக்கள் இதனை உணராது தம்மைத் தவறாக மதிப்பிட்டதையே அவர்கள் இவ்வாறு வேடிக்கையாகக் கூறினார்கள்.

இதன் பின் பொழுதடையும் வரையில் ஓரிடத்தில் தன்னந்தனியாகத் தங்கி இருந்த அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், இருள் சூழ்ந்த இரவில் தம் இல்லம் அடைந்தார்கள். அப்பொழுது அவர்களின் அன்னை, ''இறைவனே! நான் என்மகனை உன் பக்கல் ஒப்படைத்து விட்டேன். அவனைக் காத்தருள் புரிவது உன் மீது கடமை'' என்று கூறி இறைஞ்சிக் கொண்டிருந்தார்.

இது தனயரின் செவிப்பட்டதும், அவர்களால் தம் உணர்ச்சியை அடக்க இயலவில்லை. இத்தனை ஆண்டுகள் கழித்தும் தம் அன்னை தம்மை மறவாது, தமக்காக இறைஞ்சிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவர்களின் உடலெல்லாம் சிலிர்த்தது. 'கோ'வென்று அலறி விட்டார்கள்.

இவர்களின் அழு குரலைக் கேட்ட அன்னை, அதனை விளங்கிக் கொண்டு, ''என் மகனே! வந்து விட்டாயா, என் கண்மணியே!'' என்று கூறினார். ''ஆம், அம்மா வந்து விட்டேன். கதவைத் திறவுங்கள்'' என்று கூறினர் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்).

கதவு திறக்கப்பட்டது. அடுத்த கணம் என்ன? அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் தம் அன்னையின் காலடியிலே வீழ்ந்து கிடந்தார்கள் - தம் கண்ணீரைக் காணிக்கையாக வைத்து.

அப்பொழுது அவர்களின் அன்னை தம் தளர்வுற்ற கைகளால் அவர்களின் முகத்தைத் தடவி,''உன் முகத்தை நான் மீண்டும் காண வேண்டுமென்று எத்துணை ஆவலோடு இருந்தேனடா, மகனே! என் செய்வது? நான் கொடுத்து வைக்க வில்லை. உன்னை நினைத்து,அழுது அழுது என் கண்ணொளி மங்கிவிட்டது. கண்ணே! நீ பெரிதும் தாமதித்து விட்டாய். என்னால் உன்னைப் பார்க்க இயலவில்லையே'' என்று கூறிக் கண்ணீர்வடித்தார்.

அன்னைக்கு ஆறுதல் பல கூறிய அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் இதன் பின்அன்னையை விட்டு அகலாது, அவரோடிருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து வந்தனர். இவ்வாறு சில ஆண்டுகள் உருண்டோடின.

ஒரு நாள் அவர்களிடம் சிலர் வந்து ஓரிடத்தில் வாழ்ந்து வந்த பேரறிஞர் ஒருவரைப் பற்றி அவர்களிடம் எடுத்துரைத்தனர். அவரைக் காண வேண்டுமென்ற அவா உந்த, அவர் வாழ்ந்து வந்த இடம் நோக்கி

அவர்கள் அடியெடுத்து வைத்து நடந்தார்கள். அவர்கள் அவரை அண்மிய பொழுது, அவர் 'கிப்லா'வின் பக்கல் பள்ளியில் தரையில் எச்சிலைத் துப்பியதைக் கண்டதும், அவரைச் சந்திக்காமலேயே அவர்கள் திரும்பி விட்டார்கள். ''அவர் உண்மையில் பேரறிஞராய் இருப்பின், கிப்லாவின் திசையில், அதுவும் பள்ளியில் எச்சில் துப்பி இருக்க மாட்டாரே'' என்று அவர்கள் தங்களின் உள்ளின் உள்ளேயே கூறிக் கொண்டார்கள்.

அன்றிரவு அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டனர். அப்பொழுது அண்ணலார், அவர்களை நோக்கி, அபூ யஸீதே! நீர் செய்ததற்கான நற்பேறு (பரக்கத்) உம்மை வந்தடைந்து விட்டது'' என்று அருள் வாய் மலர்ந்தார்கள். அடுத்த நாளே நீர் என்னை இன்று எந்நிலையில் காண்கிறீரோ, அத்தகுதி என்னை வந்தடைந்தது'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

பிஸ்தாமில் அவர்களின் இல்லத்திற்கும் பள்ளிவாயலுக்கும் இடையே நாற்பது அடி இடைவெளியே இருந்தது. எனினும், இந்த இடைவெளியில் அவர்கள் தங்களின் வாணாளில் ஒருபோதும் எச்சில் துப்பியது கிடையாது. இறைதிரு ஆலயத்திற்கு அவர்கள் அத்துணை மதிப்பும் மரியாதையும் வழங்கி வந்தார்கள்.

அவர்கள் இறைவனின் முதற்பெரும் ஆலயமாகிய கஃபாவிற்கு முதன் முதலாகச் சென்ற பொழுது தாம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும், 'இரண்டு ரகஅத்'கள் தொழுத வண்ணம் சென்றார்கள். இதன் காரணமாக அவர்கள் ஈரான் நாட்டிலுள்ள பிஸ்தாமிலிருந்து அரபு நாட்டிலுள்ள மக்கமா நகர் சென்றடைய பன்னிரண்டு ஆண்டுகள் ஆயின.

''இவ்வாறு தாங்கள் ஏன் செய்கின்றீர்கள்?'' என்று அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''இது மண்ணாளும் மன்னர்களின் மணி மன்றமா,என்ன? விருட், விருட்டென்று ஓடுவதற்கு'' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

இறுதியாக அவர்கள் மக்கமா நகர் வந்தடைந்து, கஃபாவைத் தம் கண்களால் தரிசித்து, அதனை இடம் சுற்றி வந்தார்கள். அதன் பின் ஹஜ்ஜுக் கடமைகளைப் பேணுதலுடன் ஆற்றினார்கள். ஆற்றி முடிந்ததும் அவர்கள், அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தைத் தரிசிப்பதற்காக மதீனா சென்றார்களா என்றால் இல்லை. அதற்கு மாறாக பிஸ்தாம் திரும்பி விட்டார்கள்.

''இறைவனின் ஆலயத்தைத் தரிசிக்க வந்த தொக்கில் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தையும் தரிசிக்கச் செல்வது

முறையல்ல. எனவே மீண்டும் ஒரு முறை அதற்கென 'இஹ்ராம்' அணிந்து மதீனா செல்வேன். மாநிலம் புரக்க வந்த மாநபியின அடக்க இடத்தைத் தரிசிப்பேன்'' என்று கூறினார்கள்.

அடுத்த ஆண்டு அவ்வாறே அவர்கள் தம் ஊரிலிருந்து புறப்பட்டு நடுவழியில் இஹ்ராம் அணிந்து கொண்டு, மதீனா செல்லும் வழியிலே சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் மதீனா செல்வதை அறிந்த மக்கள் அவர்களுடன் தாங்களும் மதீனா செல்லும் பேறு பெறுவதற்காக அவர்களின் பின்னே அடியெடுத்து வைக்கலானார்கள். அது கண்டு அவர்களுக்கு எரிச்சல், எரிச்சலாக வந்தது. ''இறைவனே! இவர்கள் உன்னை விட்டும் திரும்பி என்னை நோக்கியல்லவோ தங்களின் முகத்தைத் திருப்பிக் கொண்டுள்ளார்கள். இஃதென்ன விந்தையாக இருக்கிறது. இறைவனே! உன்னை அவர்களின் கண்களிலிருந்து மறைக்கும் திரையாக என்னை ஆக்கிவிடாதே'' என்று இறைஞ்சினார்கள்.

இதன் பின் மக்கள் தம்மைப் பின்பற்றி வருவதை எவ்வாற்றானும், தடுத்து நிறுத்திவிட வேண்டுமென்று விரும்பிய அவர்கள், ஒரு நாள் வைகறைத் தொழுகை தொழுது முடித்ததும், தம்மைச் சூழ வீற்றிருந்த மக்களை நோக்கி, ஒரு வெடி குண்டைத் தூக்கி வீசி எறிந்தார்கள். ''மக்களே! நிச்சயமாக நான் தான் அல்லாஹ் . என்னைத் தவிர வேறோர் இறைவன் இல்லை. எனவே என்னையே வணங்குங்கள்'' என்று கூறினார்கள்.

அது கேட்ட மக்களுக்குத் தங்களின் காதுகளையே தங்களால் நம்ப இயலவில்லை. 'இவர் என்ன இவ்வாறு உளறுகின்றார். இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?' என்று தங்களுக்குள்ளே தாங்கள் பேசிக் கொண்டார்கள்.

இதனை விளங்கிக் கொண்ட அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், ''நிச்சயமாக நான் தான் அல்லாஹ். என்னைத் தவிர வேறோர் இறைவன் இல்லை. எனவே என்னையே வணங்குங்கள்'' என்ற இறைவசனத்தைத் தாமே கூறுவது போன்று பாவனை செய்து உரத்து சப்தமிட்டுத் திரும்பத் திரும்பக் கூறினார்கள்.

அது கேட்ட மக்கள், ''நிச்சயமாக இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. இதில் ஐயமே இல்லை'' என்று கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டும் ஒருவர் பின் ஒருவராக வெளியேறினார்கள். அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் மட்டும் ஆங்குத் தன்னந்தனியே வீற்றிருந்தனர். அவர்களின் உள்ளம் 'கலுக்' கென்று சிரித்துக் கொண்டிருந்தது.

இதன் பின் அவர்கள் தனித்து மதீனா நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார்கள். வழியிலே ஒரு மனிதனின் மண்டை ஓடு கிடந்தது. அதனை அவர்கள் கையிலே எடுத்தார்கள். என்ன வியப்பு! அதன் மீது, ''செவிடு, ஊமை, குருடு - அவர்கள் அறியமாட்டார்கள்'' என்ற பொருள் பொதிந்த இறை திருவசனம் பொறிக்கப்பட்டிருந்தது. உடனே அவர்கள் அதனைத் தங்களின் இரு கண்களிலும் ஒற்றிக் கொண்டார்கள். அப்பொழுது அவர்கள், ''இது இறைவனளவில் தம்மை அழித்துக் கொண்ட ஓர் ஆன்மீக ஞானியின் மண்டை ஓடு போன்றுள்ளது. அவர் தம்மை இறைவனளவில் அழித்துக் கொண்டதன் காரணமாக, இறைவனின் நிரந்தரமான குரலைக் கேட்க அவருக்குக் காதில்லை. அவனின் நிலையான அழகைக் காண கண்களில்லை. அவனின் புகழ்பாட நாவில்லை. அவனைப் பற்றி அணுவத்தனையேனும் அறிந்து கொள்ள அறிவில்லை. இவ்வசனம் அவருக்குப் பொருத்தமாக உள்ளது'' என்று கூறினார்கள்.

அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், பாலை நடுவே சென்று கொண்டிருந்தார்கள். அவர்களின் அருகே அவர்களின் ஒட்டகை அவர் களின் உணவு, உடை ஆகியவைகளைக் கொண்ட சுமைப் பொதிகளைச் சுமந்த வண்ணம் சென்று கொண்டிருந்தது. அப்பொழுது வழிப்போக்கன் ஒருவன், ''பாவம்! இந்த வாயில்லாப் பிராணி மீது இத்துணை அதிகமான சுமைகளையா ஏற்றிச் செல்ல வேண்டும்? இஃதென்ன அநியாயம். இஃதென்ன அநியாயம்!!'' என்று அலறினான். அது கேட்ட அவர்கள், ''இளைஞனே! அந்தச் சிறு ஒட்டகம் தான் அச் சுமைகளைச் சுமந்து செல்கின்றது என்று எண்ணிக் கொண்டாயா,என்ன? இல்லவே இல்லை'' என்று கூறினர். உடனே அவன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அதனை உற்று நோக்கினான். ஒட்டகையின் முதுகுக்கும் சுமைப் பொதிகளுக்கும் இடையே ஒரு சாண் இடைவெளி இருந்ததைக் கண்டதும், அவனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. ''அல்ஹம்துலில்லாஹ்! இஃதென்ன புதுமையாக உள்ளது'' என்று அலறினான் அவன். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''உண்மையை உன் கண்களிலிருந்து மறைத்தால், நீ என்னை ஏசுகின்றாய். உண்மையை உனக்குத் திறந்து காட்டினால், உன்னால் அதனைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இந்நிலையில் நான் என் செய்வது?'' என்று கூறினர்.

அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் இதன் பின் மதீனா சென்று, அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்த பின் தம் பிறந்தகம் திரும்பி, ஆங்கு ஆன்மீகச் செங்கோல் நடத்தி வந்தனர்.

ஒரு நாள் அவர்களின் மாணவர் ஒருவர் அவர்களை நோக்கி,''ஷைகு அவர்களே! நானும் தங்களின் திருமுன் வந்து தங்களின் அருளுரைகளை அணுவத்தனையும் விடாது கேட்டு வருகின்றேன். முப்பதாண்டுகளாகப் பகலெல்லாம் நோன்பு நோற்று இரவெல்லாம் விழித்திருந்து வணங்கி வருகின்றேன். எனினும் தாங்கள் கூறும் ஆன்மீக ஒளியை நான் அணுவத்தனையும் பெற்று நுகரும் பேறு பெறவில்லையே. இதற்கான காரணம் யாது?'' என்று வினவினார்.

அது கேட்ட அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், ''நீர் உமக்கே திரையிட்டுக் கொண்டுள்ளீர். எனவே நீர் அகக்கண் குருடராயுள்ளீர்'' என்று கூறினர்.

''அதற்கு நிவாரணம் யாது?' என்று அவர் வினவ, ''அதனை நான் உம்மிடம் எடுத்துரைப்பின் அதனை நீர் ஏற்றுச் செயலாற்ற மாட்டீரே'' என்று கூறினர்.

அதற்கு அவர்,''அதனைப் பணியுங்கள். நான் செய்கிறேன்'' என்று கூறினார்.

''அப்படியா நல்லது'' என்று கூறிப் பேச்சைத் துவங்கிய அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், ''இக்கணமே நீர் இங்கிருந்து எழுந்து சென்று உம்முடைய தலையையும் தாடியையும் மழுங்கச் சிரைத்துக் கொள்ள வேண்டும். அதன் பின் நீர் அணிந்திருக்கும் இவ்வுடைகளைக் களைந் தெறிந்து விட்டு, இடுப்பில் மட்டும் கம்பளித் துணி ஒன்றைக் கட்டிக் கொள்ள வேண்டும். ஒரு கோணிப் பையில் பாதாம் பருப்புகளை நிரப்பி அதனைக் கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டு கடைத் தெருவுக்குச் சென்று, சிறுவர்களையெல்லாம் ஒருங்கழைத்து, ''நீங்கள் ஒருவர் பின் ஒருவராக என் கன்னத்தில் அறைந்து செல்லின் உங்கள் ஒவ்வொரு வருக்கும் ஒரு பாதாம் பருப்பு அன்பளிப்பாகத் தருகின்றேன் என்று கூறவேண்டும். இவ்வாறு ஊர் முழுவதும் சுற்றிக் கூறிக் கொண்டு திரிய வேண்டும். குறிப்பாக உம்மை நன்கு விளங்கிய மக்கள் மத்தியில் நீர் இவ்வாறு கூறிக் கொண்டு நடமாடித் திரிய வேண்டும். இதுவே உம்மு டைய ஆன்மீகக் குருட்டுத் தன்மைக்கு நிவாரணமாகும்'' என்று கூறினர்.

அது கேட்ட அவர்களின் மாணவர் தம் ஆற்றாமையை உணர்த்த, ''எல்லாப் புகழும் இறைவனுக்கே! வணங்குதற்குரியோன் அல்லாஹ் ஒருவனன்றி வேறில்லை'' என்று அலறினார்.

''நீர் கூறுவது போன்று, ஓர் இறை மறுப்பவன் கூறியிருப்பின் அவன் இறை நம்பிக்கையாளனாகி விடுவான். ஆனால் அதனை நீர் கூறியதன்

காரணமாக நீர் ஓர் இறை மறுப்பவனாகி விட்டீர்'' என்று கூறினர் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள்.

''எவ்வாறு?'' என்று இடைமறித்து வினவினார் மாணவர்.

''நான் கூறியவண்ணம் செய்ய இயலாத பெருமைக்காரராக நீர் இருப்பதனால், நீர் ஓர் இறைமறுப்பவராக மாறி விட்டீர். அல்லாஹ்வைப் புகழ்வதற்காக நீர் அவ்வசனங்களைக் கூறவில்லை. உம்முடைய முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவே நீர் அவ்வாறு அலறினீர்'' என்று கூறினர் அவர்கள்.

''ஆம்; இதனை என்னால் ஆற்ற இயலாது தான். இதைத் தவிர வேறு ஏதேனும் வழி வகைகள் இருப்பின் கூறுங்கள். செய்கிறேன்'' என்றார் அவர்.

''நான் கூறியது தான் அதற்கான ஒரே வழி'' என்றனர் அபூ யஸீத் பிஸ்தாமி.

''அதனை என்னால் ஆற்ற இயலாதே'' என்றார் அவர்.

''நீர் அதனை ஏற்றுச் செயலாற்ற மாட்டீர் என்று நான் ஏற்கெனவே கூறவில்லையா'' என்று கூறித் தம் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தார்கள் அவர்கள்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களை நோக்கி, ''நான் தங்களுடன் தொடர்பு கொண்டு பல்லாண்டுகளாக வாழ்ந்து வந்த போதினும், ஆன்மீகத் துறையில் முன்னேற என்னால் இயலவில்லையே. நான் என் செய்வேன்?'' என்று வினவிய பொழுது, ''அதற்குக் காரணம், உம் முடைய நஃப்ஸை உம்மால் அடக்கியாள இயலாததேயாகும். மதிப் பையும் அவமதிப்பையும் உம்மால் ஒன்றாகக் கருத இயலாததேயாகும். இனிமேலாவது இரண்டையும் ஒன்றாகக் கருதி வருவீராக!'' என்று அவர்கள் அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

ஒரு நாள் ஒருவர் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களை அணுகி, ''ஷைகு அவர்களே! தாங்கள் வழக்கமாகத் தொழும் பள்ளியில் நான் தங்களுடன் அமர்ந்திருக்க விரும்புகின்றேன்'' என்று கூறினார்.

''அது உம்மால் முடியாதே'' என்று அவர்கள் கூறினார்கள்.

''அதனை எனக்கு முடியுமாறு ஆக்கித் தாருங்கள்'' என்று அவர் கூறினார்.

''நல்லது; அவ்விதமே செய்யும்'' என்று அவர்கள் அவருக்குத் தம்முடன் இருக்க அனுமதி வழங்கினார்கள்.

அவர் அவர்களுடன் ஒரு நாள் முழுவதும் பட்டினியோடு பள்ளி வாசலில் அமர்ந்திருந்தார்.

அடுத்த நாள் அவருக்கு யாது செய்வதெனத் தெரியவில்லை. அவர் அவர்களை அணுகி ''ஷைகு அவர்களே! நாம் எது இன்றி வாழ இயலாதோ, அதனை நாம் பெற வேண்டாமா?'' என்று கூறினார்.

அதற்கு அவர்கள், ''நாம் இறைவனின்றி யாதொன்றும் செய்ய இயலாது தான். அவனை அடையவே நாம் முயன்று கொண்டுள்ளோம்'' என்று அவர்கள் கூறினர்.

''அதனை நான் கூறவில்லை. நாம் உண்ண வேண்டாமா? நமக்கு உணவு தேவையில்லையா?'' என்று கூறினார்.

அதற்கு அவர்கள் ''இறைவணக்கமே நமக்கு உணவு'' என்று கூறினர்.

அப்பொழுது அவர் ''இறை வணக்கம் செய்வதற்கும் தென்பு ஏற்பட உடலுக்கு உணவு வேண்டமா?'' என்று வினவினார்.

''உடலுக்குத் தென்பூட்டுவது இறைவனல்லவா?'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

தம்மால் அவர்களுடன் ஒத்து நடைபோட இயலாது என்பதை விளங்கிக் கொண்ட அவர், சொல்லாமல், கொள்ளாமல் அவ்விடத்தை விட்டும் நழுவி விட்டார்.

ஒரு நாள் அவர்கள் தெருவழியே சென்று கொண்டிருக்கும் பொழுது, ஒருவர் அவர்களின் தடத்தின் மீது தம் கால்களை வைத்து நடந்து சென்று, அவர்களை அணுவத்தனையும் பிசகாது பின்பற்றுவதாகத் தம் நண்பர்களிடம் பிதற்றித் திரிந்தார். பின்னர் அவர் அவர்களை அடைந்து அவர்கள் அணிந்திருக்கும் தோலாலான அங்கியில் ஒரு சிறு பகுதியைக் கிழித்துத் தமக்குத் தருமாறும், அவற்றை அணிந்துகொண்டு தாம் ஆன்மீகத் துறையில் முன்னேற விரும்புவதாகவும் கூறினார்.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நீர், நான் அணிந்திருக்கும் தோல் உடையைக் கிழித்துக் கேட்கிறீர். நான் என் உடல் மீதுள்ள என் தோலைப் பிய்த்து உமக்குத் தரினும் நீர் நான் செய்யும் ஆன்மீகப் பயிற்சிகளான வழிபாடுகளை நிகழ்த்தாத வரையில் உம்மால் ஆன்மீகத் துறையில் முன்னேற இயலாது'' என்று அவர்கள் அவருக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

ஆன்மீகத் துறையில் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் அடைந்த உச்சமோ மகத்தானதாக இருந்தது. எனினும் ஷரீ அத்தை அணுவத் தனையும் பிசகாது பின்பற்றுவதே ஆன்மீக உச்சத்தை அடைவதற்கான வழி என்றும் அவர்கள் கருதினார்கள். எனவே தான் ஒருவர் அவர்களிடம் வந்து ''மகான் என்றால் யார்?'' என்று வினவிய பொழுது, அவர்கள் ''இறைவனின் ஏவல் விலக்கல்களைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்பவர்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். இவ்வாறு அவர்கள் கூறியதற்குக் காரணம், ஒருவன் இறைவனை அதிகமதிகமாக நேசிக்க, நேசிக்க அவன் இறைகட்டளைகளுக்கு அதிகமதிகமாகக் கீழ்ப்படிந்து ஒழுகுகிறான். அவன் விலக்கியவற்றை விட்டும் அவன் அதிகமதிகமாக வெருண்டோடுகிறான் என்பதனாலேயாகும்.

அவர்கள் ஆன்மீகப் பரிபக்குவம் பெறுவதற்காகத் தம் அறையில் தியானத்தில் அமருமுன், அறையின் கதவுகளையெல்லாம் அடைத்து விடுவர். அப்பொழுது தான் வெளிச் சப்தத்தால் யாதோர் இடையூறு மின்றி இறைவனின் குரலைக் கேட்கலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

தூய்மையற்ற வாயால் இறை நாமம் மொழிவது கூடத் தூயோனாகிய இறைவனின் கண்ணியத்திற்குக் குறைவு செய்ததாகும் என்று கருதிய அவர்கள், ''நான் இறைவனின் திருப்பெயரை ஜபிக்குமுன், மூன்று முறை வாயைத் தண்ணீரால் அலசிக் கொப்பளித்துத் தூய்மை செய்து கொள்வேன். இவ்வாறு செய்வதை நான் முப்பதாண்டுகளாக என்னுடைய நீங்காத வழக்கமாகக் கொண்டுள்ளேன்'' என்று கூறினர்.

மேலும் ஆத்ம ஞானிக்கு உடல் தூய்மை மட்டும் பற்றாது; உள்ளமும் தூய்மையாய் இருக்க வேண்டும் என்று அவர்கள் கருத்துக் கொண்டிருந்தார்கள். எனவே இவ்வுலகு பற்றிய எண்ணம் ஏதேனும் ஏற்படின் நான் உளூச் செய்து, என்னைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறேன். மறு உலகு பற்றிய எண்ணம் ஏதேனும் ஏற்படின், நான் குளித்துத் தூய்மை பெறுகிறேன்' என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் இவ்வாறு கூறியதற்குக் காரணம், இவ்வுலகம் அநித்தியமானது. எனவே அத்தகைய ஒன்றைப் பற்றி எண்ணுவது தூய்மையற்றதாகும். மறு உலகமோ கைபாக (மறைவாக) உள்ளது. அது இன்பத்தின் இருப்பிடம். எனவே அதைப்பற்றி எண்ணுவது தூய்மை யற்றது ( ஜனாபத்) ஆகும். எனவே குளித்துத் தூய்மை பெறுவது கடமையாகி விடுகிறது என்று அவர்கள் கருதியதனாலேயாகும்.

இறையளவில் தங்களையே தாம் அழித்துக் கொண்டு மிக மிக உயரிய நிலையை அவர்கள் எய்தப் பெற்றிருந்தார்கள்.

''நான் அவர்களுடன் பதின்மூன்று ஆண்டுகள் வாழ்ந்துள்ளேன். எனினும் அவர்கள் ஒரு நாளாவது தங்களின் அழகுத் திருவாய் திறந்து ஒரு சொல்லேனும் கூறியதை நான் கேட்கவில்லை. எப்பொழுது பார்த்தாலும் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அவற்றின் மீது தம் தலையை வைத்த வண்ணம் வீற்றிருப்பார்கள். சில பொழுது தலையை உயர்த்திப் பெருமூச்சு விட்டு மீண்டும் தங்களின் முழங்கால் களுக்கிடையே முகத்தைப் புதைத்துக் கொண்டு ஆழ்ந்த தியானத்தில் மூழ்கி விடுவார்கள்'' என்று கூறுகின்றார் அவர்களின் மாணவர் ஈஸா.

''அவர்கள் எப்பொழுதும் இறைபோதையிலேயே மூழ்கித் தம்மை மறந்த நிலையில் இருப்பர். தொழுகைக்கான நேரம் வந்ததும் போதை தெளிந்து தொழுது விட்டு மீண்டும் இறைபோதையில் மூழ்கிவிடுவர்'' என்று கூறுகிறார் மற்றொருவர்.

''இல்லை, இல்லை. அவர்கள் எப்பொழுது பார்த்தாலும், இப்படி இருப்பதில்லை. தம்மை மறந்த ஃபனா நிலையில் தான் இவ்வாறு இருப்பர். வேறு நிலையில் அவர்கள்மற்றவர்களுடன் உரையாடிக் கொண்டும், அவர்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டும் இருப்பர்'' என்று கூறுகின்றார் ஸஹ்லகி.

மேலும் அவர் கூறுகின்றார்; ''ஒரு நாள் அவர்கள் தம்மை இறைவ னளவில் அழித்துக் கொண்ட நிலையில், ''சுப்ஹானீ! எல்லாப்புகழும் எனக்கே. என்னுடைய மாண்பு மிகப் பெரியதாகும். நான் தான் உங்களின் இறைவன். முஹம்மதின் கொடியை விட என்னுடைய கொடி பெரியதாகும்'' என்று கூறினர். இதன் பின் அவர்கள் தன்னுணர்வு பெற்ற பொழுது, அவர்களின் நண்பர்கள் அவர்களை அணுகி அவர்கள் கூறியதை அவர்களிடம் எடுத்துரைத்த பொழுது, ''அல்லாஹ் உங்களின் எதிரியாகி விட்டான். அபூ யஸீதும் உங்களுடைய எதிரியாகி விட்டான். நான் இனிமேல் அவ்விதம் கூறின் என்னைக் கண்டதுண்டமாக வெட்டித் தீர்த்து விடுங்கள்'' என்று கூறி அவர்களின் மாணவர் ஒவ்வொருவரிடமும் ஒரு வாளைக் கொடுத்தார்கள்.''

அதன் பின் அவர்கள் தம் மறந்த நிலையில் மீண்டும் ''சுப்ஹானீ; எல்லாப் புகழும் எனக்கே. என்னுடைய மாண்பு மிகப் பெரியதாகும். நான் தான் உங்களின் இறைவன். முஹம்மதின் கொடியை விட என்னுடைய கொடி பெரியதாகும்''* என்று கூறவே, அவர்களின்

* இதைப் பற்றி ஷம்ஸுத்தப்ரீஸ் (ரஹ்) விளக்கம் கூறும் பொழுது, '' அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''நான் எந்த நிலையில் உன்னை அறிந்திருக்க வேண்டுமோ அந்த அளவு நான் உன்னை அறியவில்லை'' என்று இறைவனை நோக்கிக் கூறி இருக்க

நண்பர்கள் பாய்ந்தோடிப் போய் அவர்கள் கொடுத்த வாளினை எடுத்து வந்து அவர்களைக் கொல்ல முற்பட்டனர். இக்காலை அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் விஸ்வரூபம் எடுத்தாற்போன்று அறை முழுவதும் நிரம்பிக் காணப் பெற்றார்கள். அவர்களின் நண்பர்கள் அவர்களின் மீது நாலா திசைகளிலிருந்தும் தங்களின் வாட்களை ஓச்ச, அது தண்ணீரைக் கிழிப்பதுபோன்று அவர்களின் உடலினுள்ளே ஓடி வெளிவந்த போதினும், அவர்களின் உடலில் சிறு கூறையேனும் செய்யவில்லை. இதன் பின் அவர்களின் உருவம் சிறிது சிறிதாகக் குறைந்து அவர்களின் சுய உருவை அடைந்தது. அவர்களும் தன்னுணர்வு பெற்றார்கள். அப்பொழுது அவர்களின் நண்பர்கள் அவர்களை அணுகி, நடந்தவற்றை அவர்களிடம் எடுத்துரைத்த பொழுது, நீங்கள் இப்பொழுது பார்த்தவர் தாம் அபூ யஸீத். நீங்கள் அப்பொழுது பார்த்தவர் அபூ யஸீதல்ல'' என்று கூறினர். மேலும் அவர்கள் கூறுங்கால், ''நான் மனப் பூர்வமாக அல்லாஹ்வைத் தவிர வணங்குதற்குரியோன் வேறில்லை என்று கூறிவிடின், அதன் பின் நான் எதையும் பொருட்படுத்த மாட்டேன்'' என்று இயம்பினர்.

மற்றொரு தடவை அவர்கள் தம் நண்பர்களை நோக்கி, ''இறைவன் மறுமையில் என்னை விசாரிக்கும் பொழுது, 'என் அடியானே' என்று அழைத்துவிடின், அதுவே எனக்குப் போதுமானது' என்று கூறினர்.

ஒரு நாள் அபூ மூஸா அவர்கள் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களை நோக்கி, ''இந்த ஆன்மீக வழியில் தங்களுக்கு எது சிரமமாக இருந்தது?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், நெடுநாட்களாக என்னுடைய நஃப்ஸை அல்லாஹ்வின் சந்நிதானத்தில் கொண்டு வந்து நிலை நிறுத்த முயன்று கொண்டே இருந்தேன். அது நிற்க மறுத்து அழுது கொண்டே இருந்தது- ஒரு நாளல்ல இரண்டு நாட்களல்ல, முப்பது ஆண்டுகள். பின்னர் அல்லாஹ்வின் உதவி கிடைத்த பின், நஃப்ஸை அல்லாஹ்வின் முன் கொண்டு போய் நிறுத்தினேன். நஃப்ஸும் ஃபனாலாகி விட்டது'' என்று கூறினர்.

மற்றொரு நாள் மக்கள் அவர்களிடம் வந்து, ஜிஹாதைப் பற்றி வினவிய பொழுது, ''நான் மேலான ஜிஹாதைப் பற்றிக் கூறின் அதைக்

---

இவர்கள் இவ்வாறு கூறியதற்குக் காரணம் இவர்களின் ஆன்மீக அறிவுத் தாகம் ஒரு முடக்குத் தண்ணீரில் அடங்கி விடுவதாக இருந்தது. ஆனால் அண்ணல் அவர்களின் ஆன்மீக அறிவுத் தாகமோ, நீர் பருகப் பருக அடங்காது அதிகரித்துக் கொண்டிருந்தது. எனவே பிஸ்தாமியைப் போன்று தாம் எய்திய நிலையே இறுதியானது எனக் கருதாது அவர்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்'' என்று எடுத்துரைத்தனர்.

கேட்க உங்களுக்குத் தகுதியில்லை. ஆதலின் சிறிய ஜிஹாதைப் பற்றிக் கூறுகின்றேன். கேளுங்கள். ஒரு நாள் நான் என் நஃப்ஸை நோக்கி, 'எனக்கு வழிப்படு' என்று கூறினேன். அது மறுத்தது. அதன் காரணமாக நான் அதற்கு ஓராண்டு வரைத் தண்ணீர் கொடுக்கவில்லை. பின்னர் நான் என் நஃப்ஸை நோக்கி, 'இந்த உடலை இறைவனுக்கு வழிப்பட இணங்குமாறு செய். இல்லையெனில் தாகத்தினால் உன் உயிரை விட்டு விடு' என்று கூறினேன்'' என்று சொன்னார்கள்.

ஓரிரவு அவர்கள் வணக்கத்தில் அதிகமாக ஈடுபட்ட பொழுது அவர்களின் 'நஃப்ஸ்' சோம்பலுற்றது. இதற்குக் காரணம் யாது என அவர்கள் சிந்தித்த பொழுது, தாம் வழக்கத்திற்கு மாறாக அன்றிரவு அதிகமான தண்ணீர் அருந்தியது அவர்களுக்கு நினைவுக்கு வந்தது. எனவே ஓராண்டு வரை அவர்கள் தண்ணீர் குடிக்காமல் இருந்தார்கள். பின்னர் தம் நஃப்ஸின் மீது இரக்கமுற்று தண்ணீரில் மண்ணை நனைத்து அதனை வாயில் சற்று நேரம் வைத்திருந்து துப்பி விட்டனர். அதன் பின் தம் நஃப்ஸை நோக்கி, 'நஃப்ஸே!இனிமேல் நீ வணக்கத்தில் சோம்பல் காட்டின் உனக்குத் தண்ணீரும் உணவும் ஒருபோதும் தரமாட்டேன்' என்று கூறினர்.

''நான் இறைவனை இரண்டு எட்டுகளில் அடைந்தேன். ஓர் எட்டை என்னுடைய நப்ஸின்மீது வைத்தேன். மற்றோர் எட்டை என்னுடைய காதலனின் தெருவின் மீது வைத்தேன்'' என்று கூறினார்கள். இவ்வாறு அவர்கள் கூறியதன் பொருள் ''தன் நஃப்ஸை அறிந்தவன் தன் இறைவனை அறிந்தான்'' என்பதேயன்றி வேறில்லை.

ஒரு தடவை அவர்கள் கூறினார்கள்; ''நான் நாற்பது ஆண்டுகள் வணக்கம் செய்த பொழுது ஒரு நாள் திரை நீக்கப் பட்டது. அப்பொழுது நான் அழுது சலித்து 'இறைவனே! என்னை நேர்வழியில் ஆக்கிவை' என்று கூறினேன். அப்பொழுது, 'உன்னிடம் உடைந்து போன கூஜாவும் கிழிந்து போன துணியும் இருக்கும் வரை, உனக்கு உத்தரவு கொடுக்க இயலாது' என்று அசரீரி முழங்கியது. உடனே அதை தூக்கி எறிந்து விட்டேன். அப்பொழுது மீண்டும் அசரீரி முழங்கியது. 'மஃரிபத்தைப் பற்றி உம்மிடம் கேட்பவர்களிடம் கூறிவிடும். நாற்பது ஆண்டு வணக்கத்தின் பலனை அபூயஸீத் கூஜாவையும் பழம் துணியையும் தூக்கி எறியும் வரைப் பெறவில்லை. நீங்கள் உலக ஆசையில் மூழ்கிக் கொண்டு மஃரிபாவை விரும்பின், அதனை நீங்கள் எவ்வாறு எய்தப் பெறுவீர்கள்? ஒரு போதும் எய்தப் பெறமாட்டீர்கள்,' என்று.

''பசியைப் பற்றி நீங்கள் எப்பொழுதும் புகழ்ந்துரைத்துக் கொண்டுள் ளீர்களே! காரணம் என்ன?'' என்று மக்கள் வினவிய பொழுது, ''ஃபிர்

அவ்ன் ஒரு நாளாவது பட்டினியாக இருந்திருப்பின், அவன் நான் தான் இறைவன் என்று கூறி இருக்க மாட்டான். காரூன் ஒரு நாளாவது பட்டினியாக இருந்திருப்பின், அவன் இறைவனுக்கு எதிராகப் புரட்சி செய்திருக்க மாட்டான்'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

ஒரு நாள் அவர்கள் தம் தலையை நெஞ்சிலே தாழப் போட்ட வண்ணம் வீற்றிருந்தனர். அதைக் கண்ட ஒருவர் அவர்களின் துன்பத்திற்கான காரணத்தை வினவிய பொழுது, ''நான் இன்று ஜும்ஆ தொழுவதற்காகப் பள்ளி சென்ற பொழுது கதீப் மேடை மீது ஏறி, ''வமா கதருல்லாஹ ஹக்க கதருஹு'' ( இறைவனே! உன் மாண்பினை எவ்வாறு விளங்க வேண்டுமோ, அவ்வாறு நான் விளங்கவில்லையே) என்ற இறை திருவசனத்தை ஓதினார். அது கேட்ட நான் என் தலையை மேடை மீது இடித்து, மயங்கிய வண்ணம் கிடந்தேன். பின்னர் உணர்வு பெற்ற பொழுது, ''இறைவனே! இந்தப் பொய்யான மனிதனுக்கு உன் மாண்பினை அறியும் தத்துவத்தை எவ்வாறு வழங்கினாய்?'' என்று கூறினேன். என் உடல் முழுவதும் நடுங்கியது. '' என்று கூறினர். அது கேட்ட அவர், ''எவ்வாறு அந்தத் தத்துவத்தை எய்தப் பெற்றீர்கள்?'' என்று வினவிய பொழுது, ''முப்பது ஆண்டுகளாக உண்மையின் பக்கல் காலை வைத்து, இறை சந்நிதானத்தை உன் தாடியால் வருடி, உன் தலையை இரண்டு கால்களின் நடுவில் வைத்துத் தியானிப்பின் அந்தத் தத்துவத்தை நீ அறிவாய். அதனை ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் விளங்கிக் கொள்வதென்றால் இயலுமா?'' என்று அவர்கள் கூறினர்.

ஒரு நாள் அவர்கள் தங்களின் கையில் செக்கச் செவேலெனச் சிவந்திருந்த ஓர் ஆப்பிள் பழத்தை எடுத்து ''ஆகா இது என்ன அழகாக ( ஜமாலாக) உள்ளது'' என்று கூறினர். அப்பொழுது அவர்களின் உள்ளிலிருந்து, ''அபூ யஸீத்! நீர் என்னுடைய பெயரை ஓர் ஆப்பிள் பழத்திற்குச் சூட்டுவதற்கு நாணமுறவில்லையா?'' என்று அசரீரி முழங்கியது. இதன் பின் அவர்களுக்கு நாற்பது நாட்கள் வரை இறைவனின் திருப்பெயரே நினைவில்லாமல் போய்விட்டது. அப்பொழுது அவர்கள் இனிமேல் எக்காலும் பிஸ்தாமில் காய்ந்த பழங்களை உண்பதில்லை என்று உறுதி பூண்டார்கள். அவ்வுறுதியை அவர்கள் தம் இறுதி நாள் வரைக் காக்கத் தவறவில்லை.

அவர்கள் தொழுவதற்காகப் பள்ளிவாயலுக்குச் செல்லுந்தோறெல்லாம், அதன் வாயிலில் நின்று அழுவார்கள். ''ஏன் இங்கு நின்று அழுகின்றீர்கள்?'' என்று எவரேனும் அவர்களிடம் வினவின், ''மாதவிடாய் வந்த மங்கை போன்று எனக்கு உணர்வு ஏற்படுகிறது. பள்ளியின்

உள்ளே நுழைந்து, அதனை அசுத்தப்படுத்த எனக்கு நாணமாக உள்ளது'' என்று அவர்கள் கூறுவார்கள்.

தங்களின் இறை நம்பிக்கை பற்றி அவர்கள் பெரிதும் அச்சமுற்றார்கள். அது இறைவனால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருள் என்றும், அதனைப் பேணிப் பாதுகாப்பது தம்முடைய மாபெரும் பொறுப்பு என்றும் அவர்கள் கருதினார்கள். ஒரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி ''நான் பள்ளி செல்லும் பொழுது, என் இடுப்பில் கிறிஸ்தவப் பாதிரிகள் அணியும் சிவப்புப்பட்டி இருப்பது போன்று எனக்குத் தெரிகிறது. அதன் காரணமாக நான் நரக நெருப்பில் வீழ்ந்து விடுவேனோ என்று அஞ்சுகிறேன். நான் பள்ளியில் நுழையும் வரைக் கூட என்னை இப்பயம் ஆட் கொண்டுள்ளது. பள்ளியில் நுழைந்ததும் அது என்னை விட்டும் நீங்கி விடுகிறது. இதனை நான் ஒவ்வொரு நாளும் ஐந்து வேளையும் பள்ளிக்குச் செல்லும் பொழுது கவனிக்கிறேன்'' என்று கூறினார்கள்.

ஒரு நாள் அவர்கள் தம் முகத்தைக் கண்ணாடியில் பார்த்த பொழுது தம் தாடியில் சில நரை மயிர்களைக் கண்ணுற்றனர். அப்பொழுது அவர்கள் தம்மை நோக்கி, ''எனக்கு நரை தோன்றிவிட்டது. எனினும் என் குறை தான் நீங்கவில்லை. மேலும் எனக்குத் தெரியாது என்ன வென்ன உள்ளதோ அறியேன்'' என்று கூறினார்கள்.

ஒரு தடவை அவர்கள் ஹஜ்ஜுச் செய்வதற்காக மக்கா நோக்கிப் புறப்பட்டார்கள். ஆனால் புறப்பட்ட சிறிது நேரத்தில் அவர்கள், திரும்பி விட்டார்கள். ''ஏன் மக்கா செல்லாது திரும்பிவிட்டீர்கள்?'' என்று அவர்களின் நண்பர்கள் அவர்களை வினவியபொழுது, ''நான் புறப்பட்டுச் சிறிது தொலை சென்றதும், கையில் வாளுடன் கருநிற வண்ணன் ஒருவன் என் முன் தோன்றி, ''மரியாதையாகத் திரும்பிப் போய்விடு. இல்லையேல், உன் தலை என் வாளுக்கு இரை. அல்லாஹ்வை பிஸ்தாமில் வைத்து விட்டு அவனைத் தேடி அவன் இல்லம் செல்கின்றாயா, என்ன? என்று அதட்டினான். நான் திரும்பி விட்டேன்'' என்று கூறினர்.

முன்பொரு தடவை தாம் இவ்வாறே மக்கா புறப்பட்ட பொழுது, ஒரு மனிதன் தம்முன் எதிர்ப்பட்டு, ''நீ எங்கே போகின்றாய்?'' என்று வினவியதாகவும், ''மக்காவிற்கு ஹஜ்ஜுச் செய்யச் செல்கின்றேன்'' என்று தாம் கூறியதாகவும், உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது'' என்று அவன் வினவியதாகவும், ''இரு நூறு திர்ஹங்கள்'' என்று தாம் பதில் கூறியதாகவும், ''அதனை என்னிடம் கொடு. நான் ஒரு பிள்ளைக் குட்டிக்காரன். என்னிடம் அதனைக் கொடுத்து விட்டு ஏழு தடவை

என்னைச் சுற்றி வா, அதுவே உன்னுடைய 'ஹஜ்' என்று அவன் கூறியதாகவும் அவர்கள் இயம்பினர்.*

மேலும் அவர்கள் கூறினார்கள்: ''ஒரு நாள் நான் என் தியான அறையில் வீற்றிருந்தேன். அப்பொழுது என்னுடைய உள்ளத்தில், நான் இக்காலத்து ஷைகாகவும் மகானாகவும் விளங்குவதாக எண்ணம் உதித்தது. என்ன இத்துணைத் தவறான எண்ணம் என்னுடைய உள்ளத்தில் உதித்து விட்டது என்ற வருத்தத்துடன் ஆங்கிருந்தும் எழுந்து குராஸானை நோக்கிச் செல்லும் பாதையில் அடியெடுத்து வைத்து நடந்து சென்றேன். ஆங்கு ஒரு விடுதியைக் கண்டு அதில் போய் அமர்ந்தேன். அல்லாஹ் என்னிடம் ஒருவரை அனுப்பி என்னைப் பற்றி, என்னிடம் அறிவிக்காத வரையில் நான் இவ்விடத்தை விட்டும் கிளம்புவதில்லை என்று உறுதி கொண்டேன். மூன்று இரவும் பகலும் அங்கேயே வீற்றிருந்து இறைவனை வணங்கிக் கொண்டிருந்தேன். நான்காவது நாள் ஓர் ஒற்றைக் கண் மனிதர் ஒட்டகை மீது இவர்ந்து என்னை நோக்கி வந்தார். அவருடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினேன். அதில் ஒருவிதத் தெய்வீகக் களை பரிணமித்தது. நான் அவ்வொட்டகையை நிறுத்த சைக்கினை செய்தேன். ஒட்டகையும் நின்றது. அதன் மீதிருந்த அம் மனிதரும் என்னைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''மூடப்பட்ட ஒரு கண்ணைத் திறக்கவும், பூட்டப்பட்ட கதவைத் திறக்கவும், அபூ யஸீத் உள்பட பிஸ்தாமிலுள்ள அனைவரையும் மூழ்கடித்துச் சாகடிக்கவும், என்னை இத்துணைத் தொலை வரச் செய்துள்ளீர்'' என்று கூறினார். அது கேட்டு நான் மயக்க நிலையில் ஆனேன். ''எங்கிருந்து வருகிறீர்?'' என்று வினவினேன். ''நீர் இவ்விடுதியில் வந்து உறுதி பூண்ட கணத்திலிருந்து மூவாயிரம் கல் நடந்து வந்துள்ளேன்'' என்று கூறிய அவர், ''அபூ யஸீத்! ஜாக்கிரதை!! உம்முடைய உள்ளத்தை எச்சரிக்கையுடன் கண்காணித்து வாரும்'' என்று கூறிவிட்டு விரைந்து சென்று விட்டார்.

ஓரிரவு அவர்கள் பாலை நடுவே உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களுக்கு இந்திரிய ஸ்கலிதம் ஏற்பட்டு விட்டது. உடனே விழித்தெழுந்த அவர்கள் அவ்விரவிலேயே குளித்து தூய்மை பெற விரும்பினார்கள். ஆனால் அவ்விரவோ கடுமையான குளிராக இருந்தது.

---

* அவர்களும் மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்ற பொழுது ஒரு சூபி அவர்களின் முன் எதிர்ப்பட்டு மக்காவுக்குச் சென்று கஃபாவைச் சுற்றி வருவதற்குப் பதிலாக தம்மைச் சுற்றி வருமாறும் அது கஃபாவைச் சுற்றி வந்த பலனை அவருக்கு வழங்குமென்றும், கஃபா, அல்லாஹ்வின் வீடாக இருந்த போதினும் அதனை இடம் சுற்றி வருவதுமதக் கடமையாக இருந்த போதினும், தாம் அவனின் இரகசியங்களின் இல்லமானதால் அதை விட மேலானவன் என்று கூறியதாகவும் மற்றொரு வரலாறு எடுத்துரைக்கிறது.

எனவே பொழுது புலர்ந்ததும் குளித்துக் கொள்ளலாம் என்று அவர்களின் உள்ளம் கூறியது. எனினும் அவர்கள் கேட்கவில்லை. தூய்மையற்ற நிலையில் இருப்பதை விரும்பாத அவர்கள் எழுந்து சென்று, அண்மையில் கிடந்த ஒரு பனிக்கட்டியை உடைத்து நீருண்டாக்கி, அந்நீரால் தம் உடலைத் தூய்மைப்படுத்தியதோடு தாம் உடுத்தியிருந்த துணியையும் கசக்கிப் பிழிந்து அணிந்து கொண்டார்கள். கடும் குளிரில் ஈரத் துணியை அணிந்து கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் குளிர் தாங்க இயலாது மயக்கமுற்றுக் கீழே வீழ்ந்து விட்டனர். சற்று நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து பார்க்கும் பொழுது தாம் உடுத்தியிருந்த துணி காய்ந்திருப்பதைக் கண்டதும் அவர்களுக்கு அளவற்ற வியப்பு ஏற்பட்டது. எல்லாம் இறைவனின் பேரருள் என்று எண்ணி அவனின் புகழ்பாடி மகிழ்ந்தனர்.

ஒரு நாள் அவர்கள் தம் மாணவர்களுடன் தெருவழியே செல்லும் பொழுது ஒரு நாய் எதிர்ப்பட்டது. அத்தெரு குறுகலான தெருவாக இருந்தமையின் அந்நாய்க்கு வழி விடுவதற்காக அவர்கள் சற்று ஒதுங்கினார்கள். அது கண்டு பெரிதும் வியப்புற்ற அவர்களின் மாணவர் ஒருவர் தம் உள்ளின் உள்ளே, ''இவர்களோ மகான்களின் மன்னர். ஞானிகளின் அரசர். இவர்கள் என்ன, அற்ப நாய்க்கு வழிவிட்டு ஒதுங்குகிறார்கள்'' என்று எண்ணினர்.

இதனை மானசீக முறையில் விளங்கிய அபூ யஸீத் பிஸ்தாமி ( ரஹ்) அவர்கள்,அவரை நோக்கி, ''இளைஞரே! அந்த நாய் வாயில்லாப் பிராணியாயிருந்த போதினும், எனக்கு நாயின் தோலைப் போர்த்தி என்னை மக்களெல்லாம் இழிவாகக் கருதவும், உமக்கு மகான்களின் அரசருக்கான போர்வையைப் போர்த்தி மக்களெல்லாம் உம்மை உயர்வாகக் கருதவும் நான் என்ன தவறிழைத்தேன்'' என்று என்னை நோக்கிக் கேட்பது போன்று இருந்தது. எனவே தான் அதற்கு மரியாதை செய்யும் முகத்தான் நான் அதற்கு வழிவிட்டு விலகினேன்'' என்று கூறினார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் தெருவழியே சென்று கொண்டிருந்த பொழுது, ஒரு நாய் அவர்களோடு ஓடி வந்தது. அப்பொழுது அவர்கள் அந்நாயைப் பிடித்துத் தம் துணியால் மூடிக் கொண்டு நடந்தார்கள். அப்பொழுது அந்நாய் அவர்களை நோக்கி,''நானோ தூய்மையற்றவன். நீரோ தூய்மையானவர். அவ்விதமிருக்க நீர் என்னைத் தூக்கி உம் துணியில் வைத்து உம்மை அசுத்தப்படுத்திக் கொண்டீரே'' என்று கூறியது.

அப்பொழுது அவர்கள் அந்நாயை நோக்கி, ''நீயோ வெளியில் தான் தூய்மையற்றதாய் உள்ளாய். நானோ உள்ளில் தூய்மையற்றவனா

யுள்ளேன். வா, நாம் இருவரும் ஒன்று சேர்ந்து உழைத்து இருவருமே புனிதம் பெறுவோம்'' என்று கூறினர்.

அப்பொழுது அந்நாய் அவர்களை நோக்கி, ''என்னுடன் பயணம் செய்வதற்கும், என்னுடன் பங்காளராய் இருப்பதற்கும் தங்களுக்குத் தகுதி இல்லையே. நானோ எல்லோராலும் இழிவாகக் கருதப்படுபவன். என்னை எவரேனும் காணின் கல்லால் எறிகிறார்கள். தங்களைக் கண்டதும் எதிர்கொண்டு அழைத்து வரவேற்புச் செய்கிறார்கள். தாங்களோ நாளைக்கென மூடை மூடையாகத் தானியங்களைக் குவித்து வைத்துள்ளீர்கள்'' என்று கூறியது.

அது கேட்டதும் அபூ யஸீத் (ரஹ்) அவர்களுக்கு அழுகை, அழுகையாக வந்தது. ''எனக்கு நாயுடன் சேர்ந்து பயணம் செய்வதற்குக் கூடத் தகுதி இல்லையே. நான் எவ்வாறு எங்கும் நிறைந்த, என்றும் உள்ள இறைவனுடன் பயணம் செய்வது? படைப்புகளில் மேலான மனித னுக்குப் படைப்புகளில் கீழான நாயால் அறிவு புகட்டி என் திமிரை அடக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்'' என்று கூறினார்கள் அவர்கள்.

இதன் பின் நடந்ததை அவர்களே கூறுகிறார்கள்:

''என்னை ஓர் இனம் தெரியாத கவலை ஆட்கொண்டது. இறை வனின் நல்லடியானாக இருப்பதிலேயே எனக்கு அலுப்புத் தட்டியது. மக்களிடையே எனக்குள்ள மதிப்புக் குறைய வேண்டுமென்ற எண்ணத் துடன், முஸ்லிமல்லாதார் அணியக் கூடிய கச்சை ஒன்றை அணிந்து கொள்ள விரும்பிக் கடைத் தெரு சென்றேன். ஆங்குக் கடை ஒன்றில் அது இருப்பதைக் கண்டு அதன் விலை ஒரு திர்ஹம் (வெள்ளிக்காசு) இருக்குமென்று எண்ணிய வண்ணம் அதன் விலையைக் கேட்டேன். கடைக்காரனோ அதன் விலை ஆயிரம் தீனார் ( பொற்காசு) என்று கூறினான். அப்பொழுது நான் என்ன செய்வதென அறியாது தலை குனிந்தேன். அப்பொழுது விண்ணிலிருந்து அசரீரி ஒன்று, ''உம்மைப் போன்று ஒரு மனிதனின் கச்சையை அவன் ஆயிரம் தீனாருக்குக் குறைந்து தரமாட்டான் என்பதை நீர் அறிய மாட்டீரா?' என்று முழங்கியது. அது கேட்டு இறைவன் தன் அடியார்களைக் கண்காணித்து வருகிறான் என்பதை எண்ணி என் உள்ளம் பூரித்தது.

ஓரிரவு அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களுக்கு வணக்கத்தில் இன்பமே ஏற்படவில்லை. அதற்கான காரணம் யாது என அவர்கள் சிந்தித்தார்கள். இறுதியாக அதற்கான காரணத்தை அவர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். அவர்கள் தம்மாணவர்களை நோக்கி, ''இங்கு

ஏதேனும் விலை மதிப்புள்ள பொருள் இருக்கின்றதா என்று தேடிப் பார்த்தார்கள். ஒன்றையும் காணோம். ஒரு மூலையில் ஒரு திராட்சைக் குலை மட்டும் தொங்கிக் கொண்டிருந்தது. அதை அவர்கள் வந்து தம் ஆசானிடம் கூறவே, அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''அதனை எடுத்து வந்து உங்களிடையே பங்கு வைத்துத் தின்று விடுங்கள். என்னுடைய இல்லம் பழக் கடையாக இருக்கக் கூடாது'' என்று கூறினார்கள். உடனே அவ்வாறு செய்யப்பட்டது. அதன் பின் தான் அவர்களுக்கு வணக்கத்தில் இன்பம் ஏற்பட்டது.

மற்றொரு நாள் அவர்களுக்கு வணக்கத்தில் இன்பம் இல்லாமல் போய்விட்ட பொழுது, அதற்கான காரணம் யாதாக இருக்குமென்று அவர்கள் சிந்தித்தார்கள். ஹராமான ( தவறான) உணவுகளை உண்டிருப் போமோ என்று அவர்கள் எண்ணினார்கள். அவ்விதம் உண்டதாக அவர்களுக்கு நினைவே இல்லை. தம்மைக் கருவுற்றிருக்கும் பொழுதோ, தமக்குப் பாலூட்டும் பொழுதோ தம் அன்னை ஹராமான பொருள் எதையேனும் தின்றிருப்பாரோ என்று எண்ணினார்கள். அது பற்றித் தம் அன்னையிடம் விசாரித்த பொழுது, முதலில் இல்லை என்று கூறிய அவர் பின்னர், ''ஆமடா! மகனே!!நான் உன்னைக் கருவுற்றிருக்குங்கால் ஒரு நாள் மேல் மாடிக்குச் சென்ற பொழுது, அடுத்த வீட்டு மாடியில் பால் கட்டியை வெயிலில் காய வைத்திருப்பதைக் கண்டு, சிறிது அதில் எடுத்து உண்டது இப்பொழுது தான் எனக்கு நினைவு வருகிறது'' என்று கூறினர். உடனே அவர்கள் தம் அன்னையை நோக்கி உரியவரிடம் சென்று அவர் தின்ற பால் கட்டிக்கு 'ஹலால்' பெற்று வருமாறு கூறினர். அவ்வாறே அவர் சென்று பெற்று வந்த பின் தான் அவர்களுக்கு வணக்கத்தில் இன்பம் ஏற்பட்டது.

ஒரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''முப்பது ஆண்டுகளாக என் கண்முன் சுவனமும் ஆங்குள்ள இன்பங்களும் காட்டப்பட்டு வந்தன. ஆனால், நான் அவற்றை ஏறிட்டும் பார்க்க வில்லை. என் முழுக் கவனமும் இறைவனுடைய நினைவிலே இலயித் திருந்தது. ஒரு நாள் நான் என் அருகிலிருந்தவரை உற்று நோக்கினேன். அதன் காரணமாக, பத்து நாட்கள் வரை எனக்கு வணக்கத்தில் இன்பம் ஏற்படவில்லை'' என்று கூறினார்.

ஓரிரவு அவர்கள் தங்களின் இல்லத்தில் அமர்ந்து வணக்கம் நிகழ்த்திக் கொண்டிருந்த பொழுது திடீரென அவ்வில்லம் முழுவதும் ஒளி மயமானது. அதைக் கண்ட அவர்கள் அவ்வொளியை நோக்கி, ''நீ ஷைத்தானாயிருப்பின் உன்னை விடப் பெரிய சக்தி என்னிடமுள்ளது. நீ இறைவனின் பேரொளியின் ஒரு பகுதியாக இருப்பின் நீயே என்னிடம் வா'' என்று சொன்னார்கள்.

அற்புதம் ஆற்றுவது அவர்களுக்கு அற்பத்திலும் அற்பமாக இருந்தது. அற்புதம் ஆற்றுவதற்கெல்லாம் அப்பாற்பட்ட உயரிய நிலையை அவர்கள் எய்தப் பெற்றிருந்தார்கள்.

ஒருவர் தம்முடைய அற்புத ஆற்றலைப் பாமர மக்களின் கண்களுக்குத் தென்படுமாறு செய்வது கூடத் தவறு என்று அவர்கள் கருதினார்கள். ''இறைநேசர்கள் அல்லாஹ்வின் மணப்பெண்களாவர். மணப்பெண்கள் அவர்களை மண முடிக்க விலக்கப்பட்ட (மஹ்ருமான) உறவினர்களைத் தவிர, மற்றவர்களால் பார்க்கக் கூடாதல்லவா?'' என்று அவர்கள் கூறினார்கள்.

ஒரு நாள் அவர்கள் தஜ்லா நதிக்குச் சென்ற பொழுது, அகோரமான புயல் வீசியது. அப்பொழுது அவர்கள் அந்நதியைநோக்கி, ''எனக்குக் கர்வம் இல்லை. உன்னை நடந்து வேண்டுமானாலும் கடந்து சென்று விடுவேன். காசு கொடுத்தும் கடந்து சென்று விடுவேன். ஆனால் கராமாத் (அற்புதத்)தை விட, கரீமையே ( இறைவனையே) நான் பெரிதும் விரும்புகின்றேன். அருளைச் சொரிந்து கொண்டிருக்கும் அல்லாஹ் விடமிருந்து, அவனின் அருளையே விரும்புகின்றேனே அன்றி அற்புதத்தையல்ல'' என்று கூறினர்.

அவர்கள் இறைவனை நோக்கி, ''இறைவனே, உன் அடியார்கள் விண்ணிலே பறக்கவும், நீரின் மீது நடக்கவும் ஆற்றல் தருமாறு வேண்டினர். நீ வழங்கினாய். பறவைகள் கூட விண்ணிலே பறக்கவும் மீன்கள் கூட நீரிலே நீந்தவும் தான் செய்கின்றன. அவற்றை நான் உன்னிடம் கேட்கவில்லை. எனக்கு அசையா இறை நம்பிக்கை ஏற்படவும் நபிவழி நான் நடக்கவும் உன் அன்பு மாறாதிருக்கவும் உன் தரிசனம் எனக்கு எப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருப்பதற்குமே நான் உன்னை இறைஞ்சி நிற்கிறேன்'' என்று கூறி அவர்கள் இறைஞ்சினார்கள்.

ஒருவர் அவர்களை நோக்கி, ''தாங்கள் தண்ணீர் மீது நடக்கின்றீர் களாமே என்று வினவிய பொழுது, ''மரக்கட்டை கூடத்தான் தண்ணீரின் மீது மிதக்கின்றது'' என்று அவர்கள் கூறினார்கள். அதன் பின் அவர், அவர்களை நோக்கி, ''தாங்கள் விண்ணிலே பறக்கின்றீர்களாமே'' என்று வினவிய பொழுது, பறவைகள் கூடத்தான் விண்ணிலே சிறகு விரித்துப் பறக்கின்றன'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள். அதன் பின் அவர் அவர்களை நோக்கி, ''தாங்கள் ஒரே இரவில் கஃபாவிற்குச் சென்று வணங்கி விட்டுத் திரும்புகின்றீர்களாமே'' என்று அவர் வினவிய பொழுது, ''மந்திரவாதி கூடத்தான் ஓரிரவில் இந்தியாவிலிருந்து தெமாவந்துக்கு வந்து போகிறார்'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள்.

அவ்விதமாயின் உண்மையான மனிதனின் உயரிய பண்பு என்ன?'' என்று அவர் வினவிய பொழுது, ''இறைவனைத் தவிர உள்ள வேறொன்றின் மீது உள்ளத்தைப் பதிக்காதிருப்பதுதான்'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். *

மற்றொருவர் அவர்களை அணுகி, ''தங்களின் இறைஞ்சுதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றதாமே'' என்று வினவிய பொழுது, ''காஃபிர் களுடைய இறைஞ்சுதலைக் கூடத்தான் இறைவன் ஏற்றுக் கொள் கின்றான். அவ்விதமாயின் ஒரு முஸ்லிமுடைய இறைஞ்சுதலைப் பற்றி என்ன கூறுவது?'' என்று பதிலிறுத்தார்கள்.

உண்மையில் அவர்களுடைய இறைஞ்சுதல் இறைவனால் உடனுக்குடன் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவே இருந்தது. ''ஒருவன் இன்று இறைவனை வணங்கியதற்கான பலன் நாளை வரை ஒத்திப் போடப்படுமானால் அவன் இறைவனை இன்று ஒழுங்காக வணங்க வில்லை என்று தான் பொருள்படும்'' என்று அவர்கள் கூறினர். அவர்கள் இவ்வாறு கூறியதற்கான காரணம், ஒவ்வொரு வணக்கத்திற்கானவும் தியானத்திற்கானவும் பலன் உடனுக்குடன் அளிக்கப் பெறுகிறது என்று அவர்கள் திடமாக நம்பியதேயாகும்.

ஒரு நாள் ஒருவர் அவர்களிடம் வந்து தம்முடைய விருப்பங்களை ஒன்றின்பின் ஒன்றாக எடுத்துரைத்து, அவற்றை நிறைவேற்றித் தருமாறு இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்டி நின்றார். அப்பொழுது அவர்கள் இருகரம் ஏந்தி, ''இறைவ எம்பெருமா! அவரோ உன்னுடைய படைப்புகளில் ஒருவர். நீயோ அவர்களைப் படைத்தவன். அவருடைய நிலைமையை முழுக்க முழுக்க அறிவாய். அவ்விதமிருக்க உனக்கும் அவருக்கும் இடையில் குறுக்கிட நான் யார்?'' என்று கூறித் தம் கையைக் கீழே போட்டு விட்டார்கள்.

ஒருவன் அவர்கள் மீது பொறாமையுற்று அவர்களின் மாண்பினைப் பற்றி ஐயுற்றதோடல்லாது இவர்களைக் குறை கூறிக்கொண்டு அலைந்து திரிந்தான். அவர்கள் ஆற்றுவது போன்று தானும் ஆற்றிக்

* மற்றொரு வரலாற்றின்படி, 'பறவைகள் கூடத்தான் பறந்து செல்கின்றன. ஆனால் இறை நம்பிக்கையுள்ள மனிதன் பறவைகளை விட மேலானவன் ஆவான். இறைவனின் கண்களில் ஏழு வானங்கள், பூமி, அர்ஷு, குர்ஷு ஆகியவற்றை விட மேலானவன். ஆதலின் ஒருவன் அற்புதங்களை ஆற்றின் அதைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அவன் ஏவல்களை எடுத்து நடந்து விலக்கல்களை தவிர்ந்து கொள்கின்றானா அல்லவா என்பதை உற்று நோக்குங்கள். இல்லையெனில் அவனைப் போலி என்று எண்ணி ஒதுக்கித் தள்ளுங்கள்'' என்று பதிலிறுத்தார்கள்.

காண்பிப்பதாகவும் பிதற்றித் திரிந்தான். ஒரு நாள் அவன் அவர்களிடம் வந்த பொழுது, அவர்கள் ஒரு பெருமூச்சு விட்டார்கள். அடுத்தகணம் அவன் மூர்ச்சையுற்றுக் கீழே வீழ்ந்தான். மூன்று நாட்கள் வரை அவனுக்குப் பிரக்ஞை ஏற்படவில்லை. பின்னர் அவன் மூர்ச்சை தெளிந்த பொழுது அவர்கள் அவனை நோக்கி, ''யானையுடைய பளுவைக் கழுதைகள் சுமக்க இயலாது என்பதை அறிந்து கொண்டாயா?'' என்று வினவினர். அவன் யாது கூறுவதென அறியாது நாணித் தலைகுனிந்தான்.

மற்றொரு நாள் ஒருவர் அவர்களின் மாண்பினைச் சோதித்தறிவ தற்காக அவர்களிடம் வந்து, ''இந்த இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தாங்கள் பரிகாரம் கூறுங்கள்'' என்று சொல்லிப் பல்வேறு பிரச்சினைகளை ஒன்றின்பின் ஒன்றாக அவர்களின் முன் அடுக்கிக் கொண்டே சென்றார்.

அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி,''இந்த மலையிலுள்ள ஒரு குகையில் என்னுடைய நண்பர்களில் ஒருவர் வாழ்ந்து வருகிறார். அவரிடம் சென்று இக்கேள்விகளைக் கேளும். அவர் பதிலுரைப்பார்'' என்று கூறினர்.

உடனே அவர் ஆங்கு விரைந்து சென்றார். மலைமீது ஏறிக் குகையினுள் நுழைந்ததும் ஆங்குப் பயங்கரமான மலைப் பாம்பு ஒன்று படம் எடுத்து ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவருக்கு ஏற்பட்ட அச்சத்திற்கும் அதிர்ச்சிக்கும் அளவில்லை. அக்கணமே அவர் மயக்க முற்றுக் கீழே வீழ்ந்து விட்டார். மயக்கம் தெளிந்ததும் உடனே அவர் எழுந்து தம் காலணிகளைக் கூட அணிய மறந்து விட்டு வெருண் டோடினார். இறுதியாக அவர் அபூ யஸீத் (ரஹ்) அவர்களை அணுகி, அவர்களின் காலடியில் வீழ்ந்து தம்மை மன்னித்தருளுமாறு வேண் டினார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நீர் இறைவனின் படைப்பு ஒன்றிற்குப் பயந்து செருப்பைக் கூட மாட்டிக் கொள்ளாது வெருண்டோடி வரும் பொழுது உம்மால் அல்லாஹ்வின் மறைவான இரகசியங்கள், அல்லாஹ்வின் நல்லடியார்களின் மாண்பினை எவ்வாறு அறிந்து கொள்ள இயலும்?'' என்று இடித்துரைத்தார்கள். அக்கணத் திலிருந்து அவர் அறிவுத் தெளிவு பெற்றார்.

ஒரு நாள் ஷகீக் பல்கி (ரஹ்) அவர்களும், அபூ துராப் பக்ஷியாவும் இவர்களைக் காண வந்த பொழுது, அவர்களுக்கு அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் விருந்தொன்று வைத்தனர். அதில் கலந்து கொள்ளுமாறு அருகிலிருந்த ஒருவரையும் அவர்கள் அழைத்த பொழுது, ''நான் நஃபில் நோன்பு நோற்றிருக்கிறேன்'' என்று அவர் பதிலுரைத்தார். ''அதனால் பாதகமில்லை. நோன்பை முறித்து இதில் கலந்து கொள்ளும். ஒரு மாதத்தில் அதற்கான பலனை எய்தப் பெறுவீர்'' என்று அபு துராப் (ரஹ்)

கூறினார்கள். அவர் மறுத்தார். அப்பொழுது ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள் அவரை நோக்கி, ''இந்த விருந்தில் நீரும் கலந்து கொள்ளும், ஓராண்டுக்கான நன்மையை எய்தப் பெறுவீர்'' என்று கூறினர். மீண்டும் அவர் மறுத்தார். அப்பொழுது அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், அவ்விருவரையும் நோக்கி, ''அவரை விட்டு விடுங்கள். அவர் நமக்கு அப்பாற் பட்டவர்'' என்று கூறினர். என்ன வியப்பு? சின்னாட்களில் அவர் திருடத் துவங்கி, அதன் காரணமாக அவர் கை வெட்டப்பட்டார்.

ஒரு நாள் ஒருவர் அவர்களை அணுகி, ''தபரிஸ்தானில் ஒரு மனிதர் இறந்து விட்டார். அவருடைய அடக்கச் சடங்கில் நான் தங்களை கிள்ரு(அலை) அவர்களுடன் கண்டேன். அவர்கள் தங்களின் தோள் மீது கையைப் போட்டிருந்தார்கள். தாங்கள் அவர்களின் முதுகின் மீது கையை வைத்திருந்தீர்கள். அவரை நல்லடக்கம் செய்து விட்டு, மக்கள் திரும்பிய பொழுது, தாங்கள் விண்ணிலே பறந்துசெல்வதைக் கண்டேன்'' என்று கூறினார். அது கேட்ட அவர்கள், ''ஆம்! நீர் உண்மை கூறினீர்'' என்று பதிலுரைத்தார்கள்.

மற்றொரு நாள் அபூதுராப் (ரஹ்) தம் மாணவர் ஒருவரை நோக்கி, ''நீ அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களைத் தரிசித்து வருவது நல்லது'' என்று கூறினர். அவர் தமக்கு அதை விடப் பெரிய அலுவல்கள் இருப்பதாகக் கூறினார். அவர்கள் பன்முறை அவரிடம் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களைத் தரிசித்து வருமாறு கூறிய பொழுது, அவர் கேட்டாரில்லை. அவர்களின் நச்சரிப்புத் தாங்க இயலாது அவர் ஒரு நாள் அவர்கள் அவ்வாறு கூறிய பொழுது ''நான் அபூ யஸீதின் இறைவனையே பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, அவரைப் பார்த்து என்ன பலன் அடையப் போகிறேன்'' என்று கூறினார். அதற்கு அபூதுராப் (ரஹ்) அவர்கள், ''நீ இறைவனை எழுபது தடவை பார்ப்பதை விட அபூ யஸீத் (ரஹ்) அவர்களை ஒரு தடவை பார்ப்பது மேல்'' என்று கூறினர். அது கேட்டுத் திடுக்குற்ற அவர், 'எவ்வாறு?' என்று வினவினார். அதற்கு அவர்கள் ' நீர் இறைவனைக் காணும்பொழுது, அவன் உம் தகுதிக்குத் தக்கவண்ணம் தோற்றம் வழங்குவான். ஆனால், நீர் அபூ யஸீத் (ரஹ்) அவர்களைக் காணும் பொழுது இறைவனின் பெருமைக்குத் தக்கவண்ணம் அவனைக் காண்பீர். இறைவனைக் காண்பதிலும் பல்வேறு படித்தரங்கள் இருக்கின்றனவல்லவா? நியாயத் தீர்ப்பு நாளின் போது இறைவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முன் பேரொளி மயமாகக் காட்சி வழங்குவான். ஏனையோரிடம் அவர்களின் தகுதிக்குத் தக்க வண்ணம் காட்சி வழங்குவான் என்பதை நீர் அறிய மாட்டீரா என்ன?' என்று கூறினர்.

இதன் பின் அவர்களிருவரும் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களைக் காண்பதற்காக அவர்கள் தவம் செய்து வந்த காடு நோக்கிச் சென்றார்கள். அங்குள்ள குகையிலிருந்து அவர்கள் நரித்தோலைப் போர்த்திக் கொண்டு வெளியே வந்தார்கள். அவர்களைக் கண்டதும், அபூதுராப் (ரஹ்) அவர்களின் மாணவர் ஒரு பெரும் சப்தம் செய்தவராகக் கீழே வீழ்ந்து உயிர் நீத்தார். அப்பொழுது அபூதுராப் (ரஹ்) அவர்கள் அபூ யஸீத் (ரஹ்) அவர்களை நோக்கி, ''தங்களை ஒரு முறை பார்ப்பவர்கள் உயிர் நீக்க வேண்டியதுதானோ?'' என்று வினவினர்.

அதற்கு அவர்கள், ''அவ்வாறன்று, தங்களின் மாணவர் உண்மை யாளராக இருந்தார். அவரிடம் மறைந்திருந்த இரகசியம் என்னைக் காணும் வரையில் வெளியாகாதிருந்தது. என்னைக் கண்டதும் அது வெளியாகி விட்டது. எனினும் அவரால் அதனைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. எனவே உயிர் நீத்தார். யூசுஃப் (அலை) அவர்களைப் பார்த்த எகிப்து நாட்டுப் பெண்மணிகள், அவர்களின் அழகில் மயங்கித் தம்மையே மறந்த நிலையில் தங்களின் கைவிரல்களை நறுக்கிக் கொள்ள வில்லையா?'' என்று விளக்கம் பகர்ந்தார்கள்.

அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் அண்டை வீட்டுக்காரராக ஒரு தீ வணங்குபவரும், அவரின் குடும்பத்தினரும் வாழ்ந்து வந்தார்கள். அவ்வில்லத்தில் சிலபொழுது விளக்கு இல்லாத பொழுது, ஆங்குள்ள சிறு குழந்தை ஒன்று அழுவது வழக்கமாக இருந்து வந்தது. ஒரு நாள் அக்குழந்தை அழுதபொழுது, அதற்கான காரணத்தை விளங்கிக் கொண்ட அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் ஒரு விளக்கை ஏற்றி, அதனைத் தாங்களே அங்கு எடுத்துச் சென்றார்கள். அப்பொழுது அக்குழந்தையின் அழுகையும் நின்றது. உடனே அத் தீ வணங்குபவர், ''அபு யஸீத் எங்களின் இல்லத்திற்கு அறிவு விளக்கை, ஆன்மீக விளக்கை ஏற்றி வந்ததன் பின் நாங்கள் அஞ்ஞான இருளில் கிடந்து உழல்வது அறிவுடைமையாகாது'' என்று கூறித் தம் குடும்பத்தினருடன் இஸ்லாத்தை தழுவினார்.

அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் இறைவனின் பேரருளில் அளவற்ற நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர். ஒரு தடவை அவர்கள் ஒருவர் பின்னே நின்று தொழுதனர். தொழுது முடித்ததும் அவர், இவர்களை நோக்கி, ''நீங்கள் ஒரு வேலையும் செய்வதில்லை. எவரிடமும் யாதும் வாங்குவதுமில்லை. பின்னர் எவ்வாறு நீங்கள் உங்களின் செலவுகளைச் செய்து கொள்கின்றீர்கள்?'' என்று வினவினார். அதற்கு அவர்கள், ''சற்றுப் பொறுங்கள், தொழுதுவிட்டுப் பதில் கூறுகின்றேன்'' என்றனர். 'தற்பொழுது தானே என் பின் தொழுதீர்கள்? மீண்டும் என்ன தொழப் போகின்றீர்கள்'' என்று வினவினார் அவர்.

அதற்கு அவர்கள், ''எவர் இரணம் அளிப்பவனை விளங்கிக் கொள்ள வில்லையோ, அவர் பின்னால் நின்று தொழுவது கூடாது. எனவே தங்களுடன் நின்று தொழுத தொழுகையை மீண்டும் தொழப் போகின்றேன்'' என்று கூறி விட்டார்கள்.

மற்றொரு நாள் அவர்கள் மாணவர்களை நோக்கி, ''நான் ஒரு பெண்ணை மணமுடிக்க விரும்பினேன். மணமுடித்தால் மனைவிக்கு மாதாமாதம் செலவுக்குப் பணம் கொடுக்க வேண்டி இருக்குமே என்று எண்ணினேன். அப்பொழுது என்னை ஒரு திடுக்கம் ஆட்கொண்டது. 'இறைவனே! மனைவிக்கு மாதாமாதம் செலவுக்குக் கொடுப்பதை விட்டும் என்னைக் காத்தருள் புரிவாயாக!' என்று இறைஞ்சி விடலாமே என்று எண்ணினேன். எனினும் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களே அந்தச் சுமையைச் சுமந்திருக்கும் பொழுது நான் எவ்வாறு அதனைப் புறக்கணிப்பது என்று எண்ணி ஒரு பெண்ணை மணமுடித்து அச்சுமையைச் சுமந்து கொள்ள முன் வந்தேன். அதன் காரணமாக அல்லாஹ் எனக்குப் பலவிதமான வசதிகளை வழங்கினான்'' என்று கூறினார்கள்.

தமக்கு என்ன நேரிடினும் அதனை இனிய முகத்துடன் ஏற்றுக் கொள்ளும் உளப் பண்பு அவர்களிடம் குடி கொண்டிருந்தது. ஒரு நாள் அவர்கள் சிவப்புத் தலைப்பாகை அணிந்தவர்களாய் ஒரு பள்ளியின் அருகே நடந்து சென்ற பொழுது ஆங்குப் பயின்று கொண்டிருந்த மாணவர்கள் அவர்களைப் பிடித்து, ''யூதனே! நீ இஸ்லாத்தை ஏற்றுக் கொள். இல்லையெனில் நாங்கள் உம்மை வெறுமனே விடமாட்டோம்'' என்று கூறினர். அது கேட்ட அவர்கள் தங்களின் சுண்டு விரலை உயர்த்தி இஸ்லாமிய மூல மந்திரமான திருக்கலிமாவைக் கூறினர். அது கேட்டு மகிழ்ந்த அம்மாணவர்கள் அவர்களை ஒரு நொண்டிக் கழுதையில் ஏற்றி ஊர் சுற்றினார்கள். பின்னர் இதுபற்றி அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்ட பொழுது, ''நான் சற்று இறைவனை மறந்தேன். எனவே அம்மாணவர்கள் எனக்கு இறைவனை நினைவுறுத் தினார்கள். எனக்குக் காலில் வேதனையாக இருந்தது. எனவே அவர்கள் என்னைக் கழுதை மீது ஏற்றி எனக்குச் சிரம பரிகாரம் வழங்கினர்'' என்று அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

ஓரிரவு அவர்கள் பள்ளியில் அமர்ந்திருந்தக்கால் தம் அருகே சிலர் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கவும், மற்றும் சிலர் கால் கடுக்க நின்று வணங்கிக் கொண்டிருக்கவும் கண்டு இருவர் மீதும் அல்லாஹ் தன் அருள் மழையைச் சொரிந்து கொண்டிருப்பதை எண்ணி, எண்ணி வியந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது, ''அபூ யஸீதே! வணங்கு

கிறவர்கள் என்னுடைய தண்டனையை நினைத்து என்னை வணங்கு கின்றார்கள். உறங்குகின்றவர்கள் என்னுடைய பேரருளை நினைத்து அமைதியுடன் துயில் புரிகின்றார்கள்'' என்று அசரீரி முழங்குவதைச் செவியுற்றதும் அவர்கள் அறிவுத் தெளிவு பெற்றனர்.

ஒரு நாள் அவர்கள் ஒருவழியே சென்று கொண்டிருந்த பொழுது ஆங்கு இறை போதையில் மூழ்கிய ஒருவர் ''இறைவனே! என்னை ஏறிட்டுப் பார்'' என்று திரும்பத் திரும்பக் கூறிக் கதறிக் கொண்டி ருந்ததைக் கண்டு அவர்களுக்குப் பெரு வியப்பேற்பட்டது. அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''இறைவன் உம்மை ஏறிட்டுப் பார்க்க வேண்டுமென்று கரடியாய்க் கத்திக் கொண்டிருக்கிறீரே. அதற்கு உமக்குத் தகுதி வேண்டாமா? அதற்கான தகுதி தான் உம்மிடம் என்ன உள்ளது?'' என்று வினவினார்கள்.

அப்பொழுது அவர், ''இறைவன் என்னை ஏறிட்டுப் பார்ப்பானாயின் அதற்கான தகுதிகள் அனைத்தும் என்னிடம் அக்கணமே ஆகி விடுமல்லவா?'' என்று பதில் மொழிந்தார்.

அவரின் பதில் அவர்களின் உச்சியைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. அவரின் மாண்பினை அவர்கள் அப்பொழுதே உணர்ந்தார்கள். தாங்கள் சாமான்யர் என்று கருதிய அவர் மாபெரும் மகானாக இருப்பதையும், அவருடன் தாம் தவறாக நடந்து கொண்டதையும் பற்றி அவர்கள் பெரிதும் வருந்தினார்கள்.

அவர்களின் காலத்தில் இருவர் ஒருவர் மற்றொருவரை உயிரினும் மேலாக நேசித்து வந்தனர். அப்பொழுது அவர்களில் ஒருவர் திடீரென இறந்து விடவே மற்றவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. அதன் காரணமாக நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகக் கிடந்த அவரை ஒரு நாள் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் காணச் சென்றனர். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''நீர் துவக்கத்திலேயே தவறிழைத்து விட்டீர். இறக்கும் ஒருவனை நேசித்தீர். அதற்குப் பதிலாக இறப்பே இல்லாத இறைவனை நேசித்திருந்தால் உமக்கு இந்நிலை ஏற்பட்டிருக்குமா, என்ன!'' என்று கூறினர். அவர்களின் அவ்விடி மொழி அவரின் அறிவுக்கண்ணைத் திறந்து விட்டது. அக்கணத்திலிருந்து அவர் தம் நண்பனின் இறப்பினால் ஏற்பட்ட ஏக்கத்தை விட்டொழித்து, இறைவனை நேசிக்கத் துவங்கி விரைவில் இறைநேசச் செல்வர்களில் ஒருவராக ஆகிவிட்டார்.

ஓரிரவு அவர்கள் முஸ்லிம்களின் அடக்கவிடங்களுக்குச் சென்று விட்டு இல்லம் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவன்

குடித்துவிட்டுப் புல்லாங்குழல் ஊதிக் கொண்டிருந்ததோடு, அவ்வழியே வருவோர் போவோரையெல்லாம் வாயில் வந்தபடி திட்டிக் கொண்டிருந்தான். அவ்விதம் செய்ய வேண்டாமென்று அவர்கள் கூறினார்கள். அடுத்த கணம் அவன் அவர்கள் மீது வசைமாரி பொழிந்த வண்ணம் சரேலெனப் பாய்ந்து தன் கையிலிருந்த புல்லாங்குழலால் ஓங்கி அடித்தான். புல்லாங்குழல் உடைந்து சுக்கு நூறாகியது. பாயஸீத் (ரஹ்) அவர்களின் நெற்றியும் உடைந்து குருதி சிந்தியது. அவர்கள் யாதொன்றும் கூறவில்லை. குருதியைத் துடைத்தவண்ணம் அவர்கள் இல்லம் சேர்ந்தார்கள்.

அடுத்த நாள் காலை அவர்கள் தம் ஊழியன் ஒருவனிடம் தின் பண்டங்களும், திர்ஹங்களும் ஒரு மடலும் கொடுத்து அவற்றை அந்தக் குடிகாரனிடம் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருமாறு கூறினர். அவ்வாறே அவன் செய்தான்.

தனக்கு வந்த மடலைப் பிரித்துப் பார்த்தும் அக்குடிகாரனின் தலை சுழன்றது. அவனுடைய எண்சாண் உடலும் ஒரு சாணாக நாணிக் குறுகியது. அப்படி அதில் என்ன எழுதப்பட்டிருந்தது?

''அன்புள்ள ஐய! சென்ற இரவு என்பொருட்டு தங்களின் புல்லாங்குழல் உடைந்தது கண்டு நான் பெரிதும் வருந்துகிறேன். தயை கூர்ந்து இத்துடன் வரும் பணத்தைக் கொண்டு புல்லாங்குழல் வாங்கிப் பயன்படுத்துவீர்களாக! சென்ற இரவு தாங்கள் பயன்படுத்திய தீய சொற்களால் தங்களின் நா இன்சுவையுணர்வு அற்றிருக்கலாம். எனவே தங்களின் நாவுக்கு இனிமை நல்கும் முறையில் தின்பண்டங்களை அனுப்பியுள்ளேன். அவற்றை உண்டு மகிழ்வீர்களாக!''

இதன் பின் அந்தக் குடிகாரன் தன் நண்பர் குழாத்துடன் பாயஸீத் (ரஹ்) அவர்களிடம் வந்து மன்னிப்புக் கோரி, மதுவை ஏறிட்டும் பார்ப்பதில்லை என்று சூளுரை பகர்ந்து நெறி வாழ்வு வாழத் துவங்கினான்.

ஒரு நாள் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் ஒரு குன்றின் மீது வீற்றிருந்தார்கள். அப்பொழுது அவர்களின் உள் மனம் அவர்களை நோக்கி, ''கால் நடையாகச் சென்று நாற்பது தடவை ஹஜ்ஜையும் இரண்டாயிரம் தடவை திருக்குர் ஆனையும் ஓதவும் செய்தவர் இவ்வுலகில் உம்மைத் தவிர வேறு யார்?'' என்று கூறியது. அது கேட்டு அவர்கள் துடித்து விட்டார்கள். ''என்ன மனமே! உனக்கு இத்துணைக் கர்வமா? உன் கர்வத்தை இன்னும் சற்று நேரத்தில் அழித்தொழிக்கிறேன்'' என்று சூளுரை பகர்ந்து குன்றின் மீதிருந்து கீழே இறங்கி வந்தனர். அதன் அடிவாரத்திலுள்ள ஒரு சிற்றூரை அணுகி, ''மக்களே! நான் நாற்பது

தடவை ஹஜ்ஜுச் செய்துள்ளேன். இரண்டாயிரம் தடவை திருக்குர்ஆனை ஓதியுள்ளேன். இவற்றை எவரேனும் ஒரு ரொட்டிக்குப் பகரமாக இங்கு வாங்குவாருண்டோ? வாங்குவாருண்டோ?'' என்று கூவினர். அது கேட்ட மக்கள் அவர்களுக்குப் பித்துப் பிடித்து விட்டதோ அல்லது பசியின் கொடுமையினால் தான் அவ்விதம் பிதற்றித் திரிகின்றாரோ என்று எண்ணி நகைத்துச் சென்றனர். ஆனால் அவர்களில் ஒருவர், அவர்கள் மீது இரக்கமுற்று அவர்களுக்கு ஒரு ரொட்டியைக் கொடுத்தார். என்ன வியப்பு! அவர்கள் அவ்விடத்திலேயே இரண்டு ரகஅத் தொழுது தாம் செய்த நாற்பது ஹஜ்ஜையும், தாம் ஓதிய இரண்டாயிரம் குர்ஆனையும் அவருக்கு அந்த ரொட்டிக்குப் பகரமாக வழங்கிவிட்டதாக அவர் ஊர் அறிய, உலகறிய, நாடறிய, நகரறிய இறைவனின் திருமுன் ஆணை யிட்டுக் கூறினார்கள். அது கேட்டு ஆங்குக்குழுமியிருந்தோர் அனை வரும் தாம் காண்பது கனவா, நனவா என்று ஐயுறலாயினர்.

இதன் பின் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் கால்கள் அவர்களைக் குன்றை நோக்கி இழுத்துச் சென்றன. அப்பொழுது ஒரு நாய் அவர்களின் பின்னே ஓடி வந்தது. அவர்கள் குன்றின் உச்சியை அடைந்து, தாம் முன்பு வீறறிருந்த இடத்தில் போய் அமர்ந்ததும் அந்த நாயும் அவர்களின் முன் வந்து குந்தியது. அப்பொழுது அவர்கள் தம் உள் மனத்தை நோக்கி, ''மனமே! இப்பொழுது உன்னிடம் இந்த ரொட்டித் துண்டைத் தவிர்த்து வேறு ஏதேனும் உள்ளதா?'' என்று வினவினர். 'இல்லை' என்று அது சலிப்போடு பதில் கூறியது. அதன்பின் அவர்கள் அந்த ரொட்டியைத் துண்டு துண்டாகப் பிய்த்து அந்த நாயின் முன் போட்டனர். நாய், வாலை ஆட்டிக் கொண்டு அதனைத் தின்றது. பின்னர் அவர்கள் தம் உள் மனத்தை நோக்கி, ''இப்பொழுது உன்னிடம் என்ன உள்ளது?'' என்று வினவினர். 'ஒன்றுமில்லை' என்று அது நலிவோடும் நாணத்தோடும் பதில் உரைத்தது. அது கேட்டு அவர்கள் மகிழ்ச்சியுற் றார்கள்.

இதன்பின் அவர்கள் அக்குன்றிலிருந்து இறங்கி நடந்து வருங்கால் யூதன் ஒருவன் அவர்களை நடுவழியில் சந்தித்து அவர்களைத் தம் மதத்தில் சேர்க்க விரும்பித் தம் இல்லம் அழைத்துச் சென்றான். ஆங்கு அவர்கள் அல்லாஹ்வை வணங்கியதைக் கண்டு வியப்புற்ற அவன் அவர்களை நோக்கி, ''ஐய! தங்களையும் தங்களின் நடைமுறையையும் பார்த்தால் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர் போல் தோன்றுகிறது. நாளை எங்களுக்கோர் நன்னாள்; பெருநாள். அன்று எங்களுடன் தங்கி, எங்களின் கோயிலுக்கு வந்து நாங்கள் வழிபடும் முறையையும் கண்டு மகிழ்வீர்'' என்று வினயமாகக் கூறினான். அதற்கு அவர்கள் எவ்வித மறுப்பும் கூறாது ஒப்புதல் வழங்கினார்கள்.

இப்பொழுது அவர்கள் இருவரின் உள்ளங்களும் வெவ்வேறு கோணத்தில் சுற்றிச் சுழன்றன. அவனோ அவர்களைத் தம் கோயிலுக்கு அழைத்துச் சென்று தம் மதத்தில் சேர்க்க விரும்பினான். இவர்களோ, அவனுடன் அவனுடைய கோயிலுக்குச் சென்று அவனை மட்டுமின்றி அவன் இனத்தவர் அனைவரையும் இஸ்லாத்தில் இணைக்க எண்ணினார்கள்.

பொழுது புலர்ந்தது. அன்று அந்த யூத நகரமே கோலாகலமாகக் காட்சி வழங்கியது. ஆங்குள்ள யூதக் கோயில் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களும் இறை ஆணைப்படி யூதர்களின் உடை அணிந்து அந்த யூதனுடன் கோயிலுக்குச் சென்று ஒரு மூலையில் அமைதியாக அமர்ந்திருந்தார்கள்.

சற்று நேரம் சுழிந்தது. பெரிய மதகுரு கம்பீரமாக நடந்து வந்து மேடை மீதிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். ஆனால் அவர் வழக்கத்திற்கு மாறாக வெகு நேரம் வரை வாய் மூடி இருப்பதைக் கண்டு மக்கள் ஒருவரோடு மற்றொருவர் கண்மொழியால் ''யாது காரணம்? யாது காரணம்?'' என்று வினவிக் கொண்டார்கள். இதனை விளங்கிக் கொண்ட அப்பெரிய மதகுரு மக்களை நோக்கி, ''மக்களே! உங்களிடையே ஒரு முஸ்லிம் வீற்றிருக்கின்றார். அவர் உங்களையும் என்னையும் சோதிப் பதற்காக இங்கு வந்துள்ளார்'' என்று கூறினார்.

அது கேட்டு ஆங்கு வீற்றிருந்த அனைவரும் கொதித்தெழுந்தார்கள். ''அவர் யார் என எங்களுக்குக் காட்டுங்கள். நாங்கள் அவரைக் கொன் றொழிக்கிறோம்'' என்று சூளுரை பகர்ந்தார்கள். ''அது வேண்டாம். நாம் அவரை நம்முடைய அறிவாற்றலால் தோற்கடிப்போம்'' என்று கூறி அவர்களை அமைதிப்படுத்தினார் அவர்.

அதன்பின் அவர் தம் இருப்பிடத்திலிருந்து எழுந்து நின்று ஆங்கு வீற்றிருந்த மக்களை நோக்கி, ''முகம்மதின் மீது ஆணையாக இங்கு வீற்றிருக்கும் அவரின் மதத்தினர் எழுந்து நிற்பாராக!'' என்று கூறினார். உடனே அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் எழுந்து நின்றார்கள். அவர்களின் திருவாயிலிருந்து இறைவனின் திருப்புகழ் வெளிவந்து கொண்டிருந்தது.

அப்பொழுது அந்தப் பெரிய மதகுரு அவர்களை நோக்கி, ''முஸ்லிமே! நான் உம்மிடம் சில கேள்விகள் கேட்கின்றேன். அதற்கு நீர் சரியான பதில் கூறிவிடின் நாங்கள் உமக்கு வழிப்படுவோம். இல்லையெனில் உம்மை எம் வாளுக்கு இரையாக்குவோம்'' என்று கூறினார்.

''நல்லது; அவ்விதமே செய்யுங்கள். தங்களின் கேள்வி அறிவுக்கு ஏற்றதாயிருப்பினும் சரியே, ஏற்றதாயில்லா திருப்பினும் சரியே பதில் கூறுகின்றேன்'' என்று அடக்கத்தோடு கூறினர் அவர்கள்.

இதன்பின் அவர்களிடையே பின்வரும் உ ரையாடல் நிகழ்ந்தது.

பெரிய மதகுரு : 'ஒன்று உண்டு. இரண்டில்லை. அது என்ன?''

அபூ யஸீத் : ''அல்லாஹ்''

பெரிய மதகுரு : ''இரண்டு உண்டு. மூன்றில்லை அது என்ன?''

அபூ யஸீத் : ''இரவும் பகலும் என்று கூறிய அவர்கள் 'நாம் இரவையும் பகலையும் அடையாளத்திற்காகப் படைத்தோம்' என்ற இறை திருவசனத்தை ஓதினர்.

பெரிய மதகுரு : ''மூன்று உள்ளது. நான்கு இல்லை. அது என்ன?''

அபூ யஸீத் : ''அர்ஷு, குர்ஷு, கலம்.

பெரிய மதகுரு : ''நான்கு உள்ளது. ஐந்து இல்லை அது என்ன?''

அபூ யஸீத் : ''தௌராத், ஸபூர், இஞ்சீல், புர்கான்''

பெரிய மதகுரு : ''ஐந்து உள்ளது. ஆறு இல்லை. அது என்ன?''

அபூ யஸீத் : ''ஐந்து கடமைகள் அல்லது ஐந்து வேளைத் தொழுகை.''

பெரிய மதகுரு : ''ஆறு உள்ளது. ஏழு இல்லை. அது என்ன?''

அபூ யஸீத் : ''திட்டமாக நாம் வானங்களையும் பூமியையும் இவற்றிற்கு நடுவில் உள்ளவற்றையும் ஆறு நாட்களில் படைத்தோம்'' என்ற இறை திருவசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : ''ஏழு உள்ளது. எட்டு இல்லை. அது என்ன?''

அபூ யஸீத் : ''ஏழு வானங்களையும் நாம் அடுக்கடுக்காகப் படைத்தோம்' என்ற திருவசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : ''எட்டு உள்ளது. ஒன்பது இல்லை. அது என்ன?''

அபூ யஸீத் : ''அர்ஷை எட்டு வானவர்கள் சுமந்து கொண் டுள்ளனர்'' என்று இறை திருவசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : 'ஒன்பது உள்ளது. பத்து இல்லை. அது என்ன?'

அபூ யஸீத் : ''ஒன்பது மனிதக் கூட்டத்தினர் உலகில் குழப்பம் விளைவித்தனர்'' என்ற கருத்தமைந்த ஒரு வசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : ''பூர்த்தியான பத்து உள்ளது. பதினொன்று இல்லை அது என்ன?''

அபூ யஸீத் : ''மக்காவில் ஹஜ்ஜுச் செய்துவிட்டு குர்பான் கொடுக்க இயலாதவர்கள் அங்கு மூன்று நோன்பு களும் பின்னர் ஊர் திரும்பியதும் ஏழு நோன்புகளும் நோற்றுப் பத்து நோன்பையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற கருத்தமைந்த இறை திரு வசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : ''பதினொன்று என்ன?''

அபூ யஸீத் : ''யூசுப் (அலை) அவர்களின் பதினொரு அண்ணன் மார்கள்.''

பெரிய மதகுரு : ''பன்னிரண்டு என்ன?''

அபூ யஸீத் : ''ஆண்டின் பன்னிரண்டு மாதங்கள்.''

பெரிய மதகுரு : ''பதின்மூன்று என்ன?''

அபூ யஸீத் : ''யூசுப் (அலை) அவர்கள் கண்ட கனவு ''நான் பதினொரு விண்மீன்களையும், ஒரு சூரியனையும், ஒரு சந்திரனையும் பார்த்தேன்'' என்று பொருள் பொதிந்த இறை வசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : ''பொய் சொல்லிச் சுவனம் புகுந்த கூட்டம் எது?''

அபூ யஸீத் : ''யூசுப் (அலை) அவர்களின் பதினொரு அண்ணன் மார்கள். பொய்யான இரத்தத்தைச் சட்டையில் தடவிக் கொண்டு வந்தார்களே, அவர்கள்'' என்ற கருத்தமைந்த இறை திருவசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : ''உண்மை கூறி நரகம் புகுந்தவர் யார்?''

அபூ யஸீத் : ''யூதரும், கிறிஸ்தவரும், ''அவர்கள் உண்மை யானவர்கள் என்றும் அவர்களைத் தாம் நரகத்திற்கு அனுப்பியதாகவும், இறைவன் கூறும் திருவசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : ''வஸ்ஸாரியாத்திஸர்வா என்றால் என்ன?''

அபூ யஸீத் : ''அது நான்கு வகைக் காற்று.''

பெரிய மதகுரு : ஃபல் ஹாமிலாத்தி விக்ரா என்றால் என்ன?''

அபூ யஸீத் : ''இடி''.

பெரிய மதகுரு : ''ஃபல் ஜாரியாத்தி யுஸ்ரா என்றால் என்ன?''

அபூ யஸீத் : ''கடலில் செல்லக் கூடிய படகு.''

பெரிய மதகுரு : ''ஃபல் முகஸ்ஸிமாத்தி அம்ரா'' என்றால் என்ன?''

அபூ யஸீத் : ''ஷஃபான் பதினைந்தாம் இரவு இரணத்தைப் பங்கிடும் வானவர்கள்..''

பெரிய மதகுரு : ''உயிரில்லாது பேசும் பதினான்கு பொருள்கள் என்ன?''

அபூ யஸீத் : ''ஏழு வானமும், ஏழு பூமியும் இறைவனுடன் பேசுகின்றன என்று கூறி அதற்கு ஆதாரமான இறை வசனத்தை அவர்கள் ஓதினர்.''

பெரிய மதகுரு : ''ஒரு புதைகுழி. தன்னில் அடக்கப்பட்ட ஒருவரைத் தூக்கிக்கொண்டு அலைந்தது. அது என்ன?''

அபூ யஸீத் : ''யூனுஸ் ( அலை) அவர்களின் மீன்.''

பெரிய மதகுரு : ''நபிமார்கள், ரசூல்மார்கள் எத்தனை பேர்?''

அபூ யஸீத் : ''ஒரு லட்சத்துப் பல ஆயிரம் நபிமார்கள், 313 ரசூல்மார்கள்.'

பெரிய மதகுரு : ''உயிரில்லாது மூச்சு விடுவது யாது?''

அபூ யஸீத் : ''வைகறை நேரம். வைகறை நேரம் மூச்சு விடுகிறது' என்ற இறை திருவசனத்தை அவர்கள் ஓதினர்.

பெரிய மதகுரு : ''விண்ணிலிருந்தோ, மண்ணிலிருந்தோ வராத தண்ணீர் என்ன?''

அபூ யஸீத் : ''சுலைமான் (அலை) அவர்கள் பல்கீஸுக்கு அனுப்பிய குதிரையின் வியர்வை நீர்.''

பெரிய மதகுரு : ''தகப்பனின் முதுகுத்தண்டிலிருந்தோ தாயின் வயிற்றிலிருந்தோ வராத நான்கு உயிர்ப் பிராணிகள் யார்?'

| | | |
|---|---|---|
| அபூ யஸீத் | : | "1. இஸ்மாயில் (அலை) அவர்களுக்காக வந்த ஆடு. 2. ஸாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகம். 3. ஆதம் (அலை) அவர்கள். 4. ஹவ்வா (அலை) அவர்கள்." |
| பெரிய மதகுரு | : | "இறைவன் ஒன்றைப் படைத்து, அதனை வெறுத்தான். அது என்ன?" |
| அபூ யஸீத் | : | "கழுதையின் குரல். திட்டமாக நாம் கழுதையின் குரலை வெறுக்கிறோம்" என்ற இறைவசனத்தை அவர்கள் ஓதினர். |
| பெரிய மதகுரு | : | "மண்ணிலே முதன் முதலில் இரத்தத்தை ஓடச் செய்தவர் யார்?" |
| அபூ யஸீத் | : | "காபீல். அவன் தன் உடன் பிறந்தான் ஆபீலைக் கொலை செய்து முதன் முதலில் மண்ணில் இரத்தத்தை ஓடச் செய்தான்." |
| பெரிய மதகுரு | : | "இறைவன் ஒன்றைப் படைத்து, அதனை மேன்மைப்படுத்தினான். அது என்ன?" |
| அபூ யஸீத் | : | "அது பெண்களின் சூழ்ச்சியாகும்" என்று கூறிய அவர்கள், "அவளின் சூழ்ச்சி மேலானதாக இருந்தது" என்ற இறை திருவசனத்தை ஓதினர். |
| பெரிய மதகுரு | : | பெண்களில் மேலானவர் யார்?" |
| அபூ யஸீத் | : | "ஹவ்வா, கதீஜா(ரலி), ஆயிஷா(ரலி) ஆசியா, மர்யம் ஆகியோர்" |
| பெரிய மதகுரு | : | "ஆறுகளில் சிறந்தவை எவை?" |
| அபூ யஸீத் | : | "ஸைஹூன், ஜைஹூன், புராத், நீலநதி" |
| பெரிய மதகுரு | : | "மலைகளில் சிறந்தது எது?" |
| அபூ யஸீத் | : | "தூர் ஸீனா" |
| பெரிய மதகுரு | : | "மிருகங்களில் சிறந்தது எது?" |
| அபூ யஸீத் | : | "குதிரை" |
| பெரிய மதகுரு | : | "மாதங்களில் சிறந்தது எது?" |
| அபூ யஸீத் | : | "ரமலான்" |
| பெரிய மதகுரு | : | "அல்தாமியா என்றால் என்ன?" |

அபூ யஸீத் : ''உலக முடிவு நாள்''

பெரிய மதகுரு : ''ஒரு மரம் உள்ளது. அதற்குப் பன்னிரண்டு கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளையிலும் முப்பது இலைகளும் ஒவ்வொரு இலையிலும் ஐந்து பூக்களும் உள்ளன. அவற்றில் இரண்டு வெயிலிலும் மூன்று நிழலிலும் உள்ளன. அது என்ன?''

அபூ யஸீத் : ''மரம் ஓராண்டாகும். பன்னிரண்டு கிளைகள் பன்னிரண்டு மாதங்களாகும். முப்பது இலைகள் முப்பது நாட்களாகும். ஐந்து பூக்கள் ஐவேளைத் தொழுகையாகும். அவற்றில் இரண்டு பகலிலும் மூன்று இரவிலும் நிகழ்த்தப் பெறுகின்றன.''

பெரிய மதகுரு : ''அதற்கு ஹஜ் கடமையாக இல்லாத போதினும் அது ஹஜ்ஜும் தவாபும் செய்தது. அது என்ன?''

அபூ யஸீத் : ''நூஹ் ( அலை) அவர்களின் கப்பல்.

பெரிய மதகுரு : ''நான்கு பொருள்கள் உள்ளன. அவற்றிற்கு மூலம் ஒன்றேயாயினும், அவற்றின் ருசியும் நிறமும் வெவ்வேறானவை. அவை என்ன?''

அபூ யஸீத் : ''கண்களும் காதுகளும் மூக்கும் வாயும் ஆகும். அவற்றில் கண்ணீர் கைப்பு, மூக்கு நீர் புளிப்பு, காதின் நீர் கசப்பு, வாய் நீர் இனிப்பு. இவை அனைத்திற்கும் மூலம் மூளை.''

பெரிய மதகுரு : ''ஸபத், லபத் என்றால் என்ன?''

அபூ யஸீத் : ''செம்மறி, வெள்ளாடு ஆகியவற்றின் மயிர்''

பெரிய மதகுரு : ''தம், ரம் என்றால் என்ன?''

அபூ யஸீத் : ''ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதற்கு முன்பிருந்த இனத்தவரின் பெயர்களாகும்.''

பெரிய மதகுரு : ''கழுதை கத்தினால் அதன் பொருள் என்ன?''

அபூ யஸீத் : ''கழுதை ஷைத்தானைப் பார்த்துச் சபிக்கிறது.''

பெரிய மதகுரு : ''நாய் குரைப்பதன் பொருள் என்ன?''

அபூ யஸீத் : ''நரகவாசிகளுக்கு வைல் என்ற ஓடை உள்ளது என்று அது குரைக்கின்றது.''

பெரிய மதகுரு : ''குதிரை கனைப்பதன் பொருள் என்ன?''

**அபூ யஸீத்** : ''அல்லாஹ், பொய் பரவும் பொழுது என்னைக் காப்பானாக என்று அது கூறுகிறது''

பெரிய மதகுரு : ''ஒட்டகம் கத்துவதன் பொருள் என்ன?''

**அபூ யஸீத்** : ''இறைவன் எனக்குப் போதுமானவன்'' என்று கத்துகிறது.

பெரிய மதகுரு : ''புல் புல் கத்துவதன் பொருள் என்ன?''

**அபூ யஸீத்** : ''இறைவன் தூய்மையானவன் என்று கூறுகிறது''

பெரிய மதகுரு : ''ஜின், மனிதர், வானவர் ஆகியோரல்லாத ஒன்றின் மீது இறைவன் 'வஹீ' இறக்கி வைத்தான். அந்த ஒன்று யாது?''

**அபூ யஸீத்** : தேனீ. ''உம்முடைய இறைவன் தேனீ மீது 'வஹீ' இறக்கி வைத்தான்'' என்ற இறை திருவசனத்தை அவர்கள் ஓதினர்.

இவ்வாறு யூதர்களின் பெரிய மதகுரு கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் அவர் கேட்டு வாய் மூடு முன்னே அவர்கள் பதில் வழங்கியதைக் கண்ட அந்தப் பெரிய மதகுரு இனி யாது கேட்பதென அறியாது வாயடைத்து வீற்றிருந்தார். அப்பொழுது அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் அவரை நோக்கி, ''அவ்வளவுதானா? இன்னும் இருக்கின்றதா?'' என்று வினவினர். ''அவ்வளவுதான். இனி ஒன்றும் இல்லை'' என்று அவர் பதில் கூறினார்.

இதன்பின் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் அந்தப் பெரிய மதகுருவை நோக்கி, 'சுவனத்தின் திறவுகோல் யாது?'' என்று வினவினர்.

அவர் யாதும் கூறாது மௌனமாக வீற்றிருந்தார். அதைக் கண்ட அவர்கள், ''நான் தாங்கள் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் பதில் கூற தாங்கள் நான் கேட்கும் ஒரு கேள்விக்குப் பதில் கூறாது உள்ளீர்களே'' என்று கூறினர்.

இதற்கும் அவர் மௌனம் சாதிக்கவே, மற்றவர்கள் அவரை நோக்கி ''தங்களுக்கு அவரின் கேள்விக்குப் பதில் இறுக்க இயலவில்லையா?'' என்று வினவினர். ''நான் மௌனம் காப்பதன் பொருள், என்னால் அதற்குப் பதில் இறுக்க இயலவில்லை என்பதல்ல. நான் அதற்குப் பதிலிறுப்பின் நீங்கள் என்னுடன் சேர்ந்து ஒத்துழைப்பீர்களா என்று நான் அஞ்சுகின்றேன்'' என்றார் அவர்.

''ஒத்துழைக்கின்றோம்'' என்று ஒருமித்து முழங்கினார்கள் அவர்கள்.

அடுத்த கணம் அவர்களின் பெரிய மதகுரு எழுந்து 'சுவனத்தின் திறவு கோல். லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் ரசூலுல்லாஹி' என்ற திருக்கலிமாவாகும் என்று கூறித் தம் பூணூலை அறுத்தெறிந்து, தம் யூத உடையைக் களைந்து வேறு உடை அணிந்து அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் கரம் பற்றி இஸ்லாத்தைத் தழுவினர். அவ்வாறே ஆங்கிருந்த ஐநூறு பேர்களும் செய்தனர். அப்பொழுது இறைவன் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களுக்கு ''நீர் ஒன்றை அணிந்து கொண்டீர். நாம் ஐநூறை அறுத்தெறிந்தோம்'' என்று செய்தி அறிவித்தான்.

இத்தகு மாண்பாளராகச் சிறந்து விளங்கிய அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களைச் சந்தித்து வருமாறு ஹஜ்ஜுக்குச் செய்யப் புறப்பட்ட தம் மாணவர் சிலருக்கு அறிவுரை வழங்கினர் ஷகீக் பல்கி (ரஹ்). அவ்வாறே அவர்கள் பிஸ்தாம் அடைந்து, அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களைச் சநிதித்த பொழுது, ''நீங்கள் எவருடைய ஆன்மீக மாணவர்கள்?'' என்று வினவினர் அவர்கள். ''நாங்கள் ஷகீக் பல்கி (ரஹ்) அவர்களின் ஆன்மீக மாணவர்கள்'' என்று விடையிறுத்தார்கள் வந்தவர்கள். அது கேட்ட அவர்கள் ''தங்களின் ஆசான் என்ன கூறுகின்றார்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் ''எங்களின் ஆசான் மக்களை விட்டும் ஒதுங்கி இறைவனின் பேரருளில் அசைக்க முடியாத ஆதரவு (தவக்குல்) வைத்து அமைதியாக அமர்ந்துள்ளார்கள். 'விண்ணும் மண்ணும் பொன்னாலாக் கப்பட்டு மண்ணில் யாதொன்றும் விளையாமலும் விண்ணிலிருந்து மழை பொழியாமலும் இருந்து உலகிலுள்ள எல்லா மக்களும் என் குடும்பத்தினராக இருந்த போதினும் நான் இறைவன் மீது ஆதரவு வைப்பதை விட்டும் திரும்ப மாட்டேன்' என்று கூறுகின்றார்கள்'' என்று சொன்னார்கள். அது கேட்ட அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், ''இஃது இறை மறுப்பவர்களுடையவும் இணை வைப்பவர்களுடை யவும் பண்பல்லவோ? நீங்கள் அவரிடம் திரும்பிச்செல்லின், இறை வனை இரண்டு ரொட்டிகளுக்காகச் சோதிக்க வேண்டாம் என்றும் எப்பொழுது பசி எடுக்குமோ அப்பொழுது இறை ஆதரவை (தவக் குலை) ஒரு பக்கம் ஒதுக்கி விட்டு உணவருந்துமாறும், இல்லையெனில் உலகமே அழிந்து விடும் என்றும் கூறுங்கள்'' என மொழிந்தனர்.

இதனைத் தம் ஆசானிடம் தெரிவிப்பதற்காக உடனே பல்க் திரும்பிய தம் மாணவர்களை ஷகீக் பல்கீ (ரஹ்) அவர்கள் வியப்புக் கண்களுடன் நோக்கி, ''என்ன இத்துணை விரைவில் திரும்பி விட்டீர்கள்?'' என்று வினவிய பொழுது நடந்தவற்றை அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

அது கேட்ட ஷகீக் பல்கி (ரஹ்) அவர்கள், "நல்லது, மீண்டும் அவர்களிடம் சென்று 'தாங்கள் எவ்வாறு உள்ளீர்கள்?' என்று கேட்டு வாருங்கள்' எனக் கூறினர். அவ்வாறே அவர்கள் பிஸ்தாம் சென்று அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களிடம் வினவிய பொழுது, "ஷகீக் பல்கி செய்த இரண்டாவது தவறு இது. "நான் என்னுடைய நிலையைக் கூறின் நீங்கள் அதனை விளங்கிக் கொள்ள மாட்டீர்களே" என்றனர். "அவ்விதமாயின் அதனை எழுதித் தாருங்கள்" என்றார்கள் அவர்கள். "நல்லது! எழுதிக் கொள்ளுங்கள்" என்று கூறி, அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பேரதனால் துவங்குகின்றேன். என்னிடம் 'நான்' என்பதில்லை. 'நான்' அணுப்போன்று கூட இல்லை" என்று எழுதிக் கொடுத்தார்கள்.

அதனைப் பெற்று ஷகீக் பல்கி (ரஹ்) அவர்களின் மாணவர்கள் தம் ஆசானை அடைந்தபொழுது அவர்கள் இறப்புப் படுக்கையில் அபூ யஸீத் (ரஹ்) அவர்களின் பதிலை எதிர்பார்த்த வண்ணம் கிடந்தார்கள். அக்கடிதத்தைப் பார்த்ததும் அதனைத் தம் கண்களிலே ஒற்றிக் கொண்டு கலிமாச் சொன்ன வண்ணம் உயிர் நீத்தார்கள்.

இதன்பின் அஹ்மத் பின் கஸ்ரவிய்யா (ரஹ்) அவர்கள் தம் ஆயிரம் மாணவர்களுடன் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களைக் காண்பதற்காக பிஸ்தாம் வந்து சேர்ந்தனர். அவர்கள் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் தவமடத்தின் வாயிலை வந்தடைந்ததும் தம் மாணவர்களை நோக்கி, "ஆற்றலுள்ளோர் உள்ளே வாருங்கள். ஆற்றலற்றோர் வெளியே நில்லுங்கள்" என்று கூறினார்கள். எனினும் எல்லோரும் அவர்களின் பின்னே உள்ளே சென்றனர். அப்பொழுது அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் அஹ்மத் பின் கஸ்ரவிய்யாவை நோக்கி, "ஏன் ஊர் ஊராகச் சுற்றுகிறீர்கள்?" என்று வினவினர். அதற்கு அஹ்மத் பின் கஸ்ரவிய்யா "தண்ணீர் ஓரிடத்தில் தேங்கிக் கிடப்பின் அது கெட்டு விடுமல்லவா?" என்று கூறினர். அதற்கு அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் "அவ்விதமாயின் தாங்கள் ஏன் கடலாக மாறிவிடக் கூடாது" என்று பதிலிறுத்தனர்.

அதன்பின் அஹ்மத் பின் கஸ்ரவிய்யா, பிஸ்தாமி (ரஹ்) அவர்களை நோக்கி, "எங்களின் சிற்றறிவுக்கு எட்டும் வண்ணம் ஆன்மீகம் பற்றி எடுத்துரையுங்கள்" என்று வேண்டினர். அவர்கள் இவ்வாறு பலதடவை வேண்டியபின் அவர்கள் அது பற்றி அவர்களுக்கு விரித்தோதினார்கள்.

அதன் பின் அஹ்மத் பின் கஸ்ரவிய்யா ( ரஹ்) அவர்கள் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களை நோக்கி, "நான் இப்லீஸைத் தங்களின் தெருவில் தூக்கிலிடக் கண்டேன்" என்றனர் "ஆம்; அவன் பிஸ்தாமின்

அருகே வருவதில்லை என்று என்னிடம் உறுதிப் பிரமாணம் செய்திருந்தான். எனினும் ஒருவனின் உள்ளத்தில் ஐயத்தை ஏற்படுத்தி விட்டான். அதன் காரணமாக அவன் தூக்கிலிடப்பட்டான்'' என்று கூறினர் அபூ யஸீத்.

''இங்கு ஒரு கூட்டத்தினர் பெண்களின் முகத் தோற்றத்துடன் வீற்றிருப்பதைக் காண்கிறோம். அவர்கள் யார்?'' என்று அஹ்மத் பின் கஸ்ரவிய்யாவின் மாணவர்களில் ஒருவர் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களை வினவிய பொழுது, ''அவர்கள் வானவர்கள். அறிவுரை பெறுவதற்காக வந்துள்ளார்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நான் விடையிறுக்கின்றேன் '' என்று அவர்கள் பதில் கூறினார்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: ''ஓரிரவு நான் கனவொன்று கண்டேன். அதில் முதல் வானத்து அமரர்கள் என்னிடம் வந்து, ''எழுந்திரும். நாம் இறைவனைத் துதிப்போம்'' என்று கூறினர். அதற்கு நான் ''அவனைத் துதிக்க எனக்கு நாவில்லையே'' என்று விடை பகர்ந்தேன். இதன்பின் ஏழு வானத்து அமரர்களும் ஒருவர் பின் ஒருவராக என்னிடம் வந்து இவ்வாறே கூற, நான் அவர்கள் அனைவருக்கும் இதே மறுமொழியை வழங்கினேன். அப்பொழுது அவர்கள் என்னை நோக்கி, ''அவ்விதமாயின் நீர் எப்பொழுதுதான் அவனைத் துதிக்கப் போகின்றீர்?'' என்று வினவினர். அதற்கு நான் ''தியாயத் தீர்ப்பெல்லாம் முடிந்து, நல்லோர் சுவனத்திற்கும் தீயோர் நரகத்திற்கும் அனுப்பப்பட்ட பின்னரே அபூ யஸீத் அல்லாஹ், அல்லாஹ் என்று அலறித் துதித்த வண்ணம் அல்லாஹ்வின் அரியாசனத்தைச் சுற்றி வலம் வருவான் என்று கூறினேன்.''

உண்மையில் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் அடைந்த ஆன்மீக உச்சம் அவர்களின் சமகாலத்து இறைநேசச் செல்வர்கள் அடைந்த ஆன்மீக உச்சத்தை விட மேலானதாக இருந்தது. இதற்குக் காரணம் அவர்கள் மனிதர்களிடமிருந்தல்லாது, இறைவனிடமிருந்தே ஆன்மீக அறிவைப் பெற்றதாகும்.

ஒருநாள் அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த பொழுது கூட்டத்திலிருந்த சிலர், ''இன்னார்,இன்னாரிடமிருந்து அறிவு பெற்றார்'' என்று பேசிக் கொண்டிருந்தது அவர்களின் செவிப்பட்டதும், ''பாவம்! அவர்கள் இறந்தவர்களிடமிருந்து அறிவு பெறுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் நாமோ இறப்பேயில்லாது என்றும் உயிரோடுள்ளவனிடமிருந்து அறிவைப் பெறுகிறோம். எல்லோரும் இறைவனை நோக்கிப் பேசுகி றார்கள். நாமோ இறைவனிடமிருந்து (செய்திகளைப் பெற்று) பேசுகிறோம்'' என்று கூறினார்கள்.

ஆம், அவர்கள் இறப்பேயில்லாது என்றும் உயிரோடுள்ள வனிடமிருந்து அறிவைப் பெற்றுச் செய்திகளை அறிந்ததன் காரணமாக அவர்களின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் தனித்தன்மை பெற்ற வையாக, புனிதத்தன்மை வாய்ந்தவையாக விளங்கின.

ஒரு சமயம் சிலர் அவர்களை அணுகி, அவர்களிடம் சில கேள்வி களை வினவினர். அவற்றிற்கு அவர்கள் உடனுக்குடன் பதில் இறுத்தார்கள். அவை வருமாறு:

''இறைவனை எவ்வாறு எய்தப் பெறுவது?''

''உலகத்தை நோட்டமிடாதீர்கள். உலகத்தைப் பற்றிய செய்திகளைச் செவி கொடுத்துக் கேளாதீர்கள். உலகாயுதவாதிகளுடன் உரையா டாதீர்கள்.''

''தங்களின் பேச்சைப் போன்று ஏனையோர் பேச்சு இனிமை பயக்கவில்லையே, ஏன்?''

''நான் தூய பொருளை உங்களுக்கு வழங்குகிறேன். அவர்கள் கலப்படப்பொருளை உங்களுக்கு வழங்குகிறார்கள். அவர்கள் 'அவன்' என்றும், 'நான்' என்றும் இறைவனை விட்டும் தங்களைப் பிரித்துப் பேசுகிறார்கள். நானோ 'நீ' என்று மட்டும் கூறுகிறேன்.''

''இறை நேசர் என்றால் யார்?''

''இறைவனைத் தவிர வேறொன்றையும் நேசியாதவர்.''

''ஒருவன் தன்னுடைய ஆன்மீகப் பயிற்சியில் மேற்கொள்ள வேண்டிய எச்சரிக்கை யாது?''

''தன்னுடைய ஆன்மீக முயற்சிகளிலோ, பயிற்சிகளிலோ கவனம் செலுத்தாது இறைவனில் மட்டுமே தன் முழுக் கவனத்தையும் செலுத்துவதாகும்.''

ஒருநாள் அவர்களின் மாணவர் ஒருவர் அவர்களை அணுகி, ''அல்லாஹ்வை அறிந்தபின் அவனை வணங்காதிருக்கின்றானே, அவனைப் பார்த்துத்தான் நான் வியப்புறுகிறேன்'' என்று கூறினார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''அல்லாஹ்வை அறிந்தபின் அவனை வணங்குகின்றானே அவனைப் பார்த்துத்தான் நான் வியப்புறுகிறேன்'' என்று கூறினார்கள். அவர்கள் இவ்வாறு கூறியதற்குக் காரணம், ''இறைவனைப் பார்த்தபின் ஒருவன் எவ்வாறு தன்னுணர் வோடு இருந்து இறைவனை வணங்க இயலும்? இறைவனைப் பார்த்தபின் அவன் பேரின்ப போதையில் மூழ்கி, தன்னையும் தன் சூழலையும் மறந்து விடுவானே'' என்பதேயாகும்.

ஒரு தடவை அவர்களும் உதுமான் கைபரீ (ரஹ்) அவர்களும் ஒருங்கு சேர்ந்து தொழுதனர். அப்பொழுது உதுமான் கைபரீ (ரஹ்) அவர்கள் ''இறைவனே நான் விரும்பும் அனைத்தையும் எனக்கு ஈந்தருள்வாயாக!'' என்று இறைஞ்சினார்கள்.ஆனால் பாயஸீத் (ரஹ்) அவர்களோ, ''இறைவனே! நான் விரும்பும் அனைத்தையும் ஒழித்தருள்வாயாக!''என்று இறைஞ்சினர்.

அது கேட்டு உதுமான் கைபரீ (ரஹ்) அவர்கள் வியப்புடன் பாயஸீத் (ரஹ்) அவர்களைநோக்கி, ''என்ன, இவ்வாறு இறைஞ்சி விட்டீர்கள்?' என்று வினவினர்.

அதற்கு அவர்கள் ''இறைவனைத் தேடிக் கொண்டிருக்கும் ஒருவன் தன் நப்ஸின் விருப்பத்தை நிறைவேற்றித் தருமாறு எவ்வாறு வேண்டுவான்? அவன்தான் அல்லாஹ்வைத் தவிர அனைத்தையும் துறந்து தன்னையும் மறந்த நிலையில் ஆகிவிட்டானே'' என்று பதிலிறுத்தார்கள்.

ஒருவர் அவர்களிடம் வந்து ''அமீர் யார்?'' என்று வினவியபொழுது, 'தனக்கென ஒரு விருப்பத்தைப் பெற்றிராதவனேயாவான். அல்லாஹ்வுடைய விருப்பமே அவனுடைய விருப்பமாக இருக்கும்' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

ஒருவர் அவர்களை அணுகி, ''தாங்கள் தங்களின் காலை நேரத்தை எவ்வாறு கழிக்கின்றீர்கள்'' என்று வினவிய பொழுது ''நான் இறை நினைவில் என்னையே மறந்து, பகலையும் இரவையும் அறியாதிருக்கும் நிலையில் காலை நேரத்தை நான் எவ்வாறு அறிவேன்?'' என்று அவர்கள் பதிலிறுத்தார்கள்.

ஒரு தடவை மக்கள் அவர்களிடம் வந்து ''தாங்கள் ஏன் மக்களை ஆன்மீகப் பாதையில் வழி நடத்திச் செல்லாதிருக்கிறீர்கள்?'' என்று வினவினர். அதற்கு அவர்கள் ''இறைவன் தன்னுடைய திருச்சமூகத்திலிருந்து எவர்களை அப்புறப்படுத்திவிட்டானோ, அவர்களை ஏற்றுக் கொள்ளுமாறு என்னால் அவனிடம் எவ்விதம் பரிந்துரைக்க இயலும்?'' என்று பதிலிறுத்தார்கள்.

ஒருவர் அவர்களிடம் வந்து ''தங்களுக்கு வயது என்ன?'' என்று வினவினார். அதற்கு அவர்கள் ''நான்கு'' என்று பதில் கூறினார்கள். ''என்ன இவ்வாறு கூறுகிறீர்கள்?'' என்று அவர் வியப்புடன் வினவிய பொழுது, ''என்னை இவ்வுலகம் எழுபது ஆண்டு காலமாகத் திரையிட்டு மறைத்திருந்தது. கடந்த நான்கு ஆண்டுக் காலமாகத் தான் என்னால் இறைவனைப் பார்க்க இயன்றது. இறைவனை விட்டும் திரையிட்டு

மறைக்கப்பட்ட காலத்தை நான் வாழ்ந்த காலம் என்று கணிக்க இயலுமா என்ன?'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

ஒரு நாள் அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''நான் இறைவனை முப்பதாண்டுகளாகத் தேடினேன். ஆனால் ஆழ்ந்து கவனிக்கும் பொழுது அவனே தேடுபவனாகவும், நான் தேடப்படும் பொருளாகவும் இருந்ததை உணர்ந்தேன்'' என்று கூறினர்.

ஒரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''அல்லாஹ்வின் நல்லடியார்களில் சிலர் இப்படியும் இருக்கிறார்கள். சுவனத்தில் அவர்கள் அல்லாஹ்வைக் காணாவிடின், அவர்கள் அந்தச் சுவனத்தையும் விரும்பு வதில்லை. நரகத்தில் உழல்பவன் எவ்வாறு அதனை வெறுப்பானோ அதே போன்று அவர்கள் அந்தச் கவனத்தையும் வெறுக்கத் துவங்கி விடுவார்கள்'' என்று கூறினர்.

மற்றொரு தடவை அவர்கள் தம் மாணவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினர்: ''நானோ அவனுடைய அடிமை. அவ்விதம் இருக்கும் பொழுது எவ்வாறு நான் என் விருப்பத்தை அவனுடைய விருப்பத்திற்கு முன்னால் கொண்டு போய் வைப்பது?''

''நான் மக்களுக்கு நாற்பது ஆண்டுகளாகப் பிரச்சாரம் செய்தேன். அதனால் மக்கள் யாதொரு பயனும் அடைய வில்லை. ஆனால் அவன் விரும்பிய பொழுது நான் அவர்களுக்கு யாதொரு அறிவுரையும் பகராதிருக்கும் பொழுது அவர்கள் ஆன்மீகத் துறையில் முன்னேறலா னார்கள்.''

''இறைவன் ஒருவனை நேசிக்கும் பொழுது அவனுக்குத் துன்பத்தையே வழங்குகின்றான்.''

''நற்செயல்கள் ஆற்றுவதை விட நல்லோர்களுடன் நட்புறவாடுவது மேலானதாகும். தீய செயல்களை விடத் தீயோருடன் தொடர்பு கொண்டிருப்பது தீதுடைத்ததாகும்.''

''உன்னுடைய முயற்சியை நம்பி இராதே. இறைவனின் அருளை நம்பி இரு.''

''உன்னுடைய வாணாள் இன்று மாத்திரம்தான். அதற்கு மேலல்ல என்று கருதுவாயாக!''

''இறைகாதலானது ஒருவனை இவ்வுலகை மட்டுமல்லாது மறு உலகையும் மறக்கச் செய்து விடுகிறது.''

''ஒருவன் நோன்பு நோற்பது இறைவனின் கருணை மேகத்தை கட்டவிழ்த்து விட்டு அவன் மீது அருள் மழையைப் பொழியச் செய்கிறது.''

ஹாத்திம் அஸம் (ரஹ்) அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''மறுமையில் நரக வாசிகளுக்காக உங்களில் எவர் இறைவனிடம் பரிந்து பேசவில்லையோ அவர் என்னைச் சேர்ந்தவரல்ல'' என்று கூறியது அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் செவிப்பட்டதும், ''என் மாணவன் எவனெனில் நரகின் விளிம்பில் நின்று கொண்டு நரகில் உள்ள ஒவ்வொருவனையும் கைகொடுத்து வெளியில் எடுத்துச் சுவனம் சேர்த்த பின் அவனுக்குப் பதிலாக நரகம் புகுகின்றானே அவன் தான்'' என்று பதிலிறுத்தார்கள்.

அவர்கள் தொழுவதற்காக துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள், அவர்களுக்குத் தொழுகை விரிப்பு ஒன்றை அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவர்களோ, ''இந்தத் தொழுகை விரிப்பு இப்பொழுது எனக்குத் தேவை இல்லை. நான் சாய்ந்து கொள்வதற்குத் திண்டு அனுப்பி வைக்கச் சொல்லும்'' என்று கூறி அந்தத் தொழுகை விரிப்பை ஏற்றுக் கொள்ள மறுத்துத் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

அவர்கள் இவ்வாறு செய்ததன் மூலம் தாம் தொழுவதான நிலையைக் கடந்து அப்பாற்பட்டு விட்டதைச் சொல்லாமல் சொல்லியுள்ளார்கள் என்பதை விளங்கிக் கொண்ட துன்னூன் மிஸ்ரீ (ரஹ்) அவர்கள் கேட்டனுப்பிய வண்ணம் ஒரு திண்டு வாங்கி அனுப்பி வைத்தார்கள். அது அவர்களை வந்தடைந்த பொழுது அவர்கள் இறை காதலில் மூழ்கித் தங்களையே தாங்கள் உருகச் செய்து முள்ளும் தோலுமாக இருந்தார்கள். ''அல்லாஹ்வுடைய அருளையும் அன்பையும் தம்முடைய திண்டாகக் கொண்ட ஒருவனுக்கு, அவனுடைய படைப்புகளில் ஒன்றால் அனுப்பி வைக்கப்பட்ட திண்டு எதற்கு?'' என்று அவர்கள் கூறி அதனையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளாது திருப்பி அனுப்பி விட்டார்கள். அவர்களிடமிருந்து மட்டுமல்ல, வேறு எவரிடமிருந்தும் அவர்கள் யாதொன்றையும் பெற விரும்பவில்லை.

நாளாக , ஆக அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் ஆன்மீகத் துறையில் பற்பல படித்தரங்களைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். இதனை அவர்கள் பின்வருமாறு அழகாக எடுத்துரைக்கின்றனர்.

''முதல் தடவையாக நான் கஃபாவிற்குச் சென்ற பொழுது நான் கஃபாவைக் கண்டேன். இரண்டாவது தடவை நான் கஃபாவிற்குச் சென்ற பொழுது நான் அங்குக் கஃபாவின் இறைவனைக் கண்டேன். மூன்றாவது

தடவை நான் கஃபாவிற்குச் சென்ற பொழுது நான் அங்குக் கஃபாவையும் காணவில்லை. கஃபாவின் இறைவனையும் காணவில்லை.''

இவ்வாறு கூறித் தாம் தம்மை இறைகாதலில் அழித்துக் கொண்டதன் காரணமாகத் தாம் ஒன்றையும் காணவில்லை என்றும் தாம் அங்கு எதையேனும் கண்டதாய் இருப்பின் அது இறைவனையே கண்டதாய் இருக்கும் என்றும் அவர்கள் கூறாமல் கூறினார்கள்.*

ஒரு நாள் ஒருவர் அவர்களின் இல்லத்திற்கு வந்து ''இங்கே அபூ யஸீத் இருக்கின்றார்களா?'' என்று அவர்களிடமே வினவினார். அதற்கு அவர்கள், இங்கு இறைவனைத் தவிர வேறு எவரும் இருக்கின்றார்களா என்று அவரையே வினவினார்கள். வந்தவரோ யாது பதில் கூறுவதென அறியாது திரும்பிவிட்டார்.

இதற்கு ஹுஜ்வீரி (ரஹ்) அவர்கள் தம்முடைய 'கஷ்' புல் மஹ்ஜூப்' என்ற நூலில் விளக்கம் கூறும்பொழுது ''எவ்வாறு யூசுஃப் (அலை) அவர்களைப் பிரிந்த யஃகூப் (அலை) அவர்களுக்கு அனைத்து நாட்டமும் யூசுஃப் (அலை) அவர்களைப் பற்றியதாக இருந்ததோ, எவ்வாறு லைலா மீது அடங்காக் காதல் கொண்ட மஜ்னூனுக்கு உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் லைலாவாகவே தோற்றமளித்ததோ அதே போன்று இறைகாதலில் மூழ்கித் திளைத்த அபூ யஸீத் பிஸ் தாமி (ரஹ்) அவர்களுக்கும் அனைத்தும் இறைவன் மயமாகவே காட்சியளித்தன'' என்று கூறுகிறார்கள்.

ஒரு நாள் அபூ யஸீத் (ரஹ்) அவர்கள் தங்களின் இல்லத்தில் வீற்றிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் அவர்களைக் காண வந்தார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''வந்த அலுவல் யாதோ?'' என்று வினவினர். அவர்கள் எவரென அறிந்து கொள்ளாத அவர், '' அபூ யஸீத் (ரஹ்) அவர்களைக் காண்பதற்காக, அவர்களைத் தேடி வெகு தொலைவிலிருந்து வந்தேன்'' என்று கூறினார். அது கேட்ட அவர்கள், ''நானும் தான் அபூ யஸீதை முப்பதாண்டுகளாகத் தேடிக் கொண் டுள்ளேன். எனினும் அவர் பற்றி ஒரு சிறு துப்புக் கூடக் கிடைக்க வில்லையே'' என்று கூறினார்கள்.

---

* ''நான் முதன் முறையாக மக்கா சென்ற பொழுது அங்குக் கஃபா ஒன்றையே கண்டேன். நான் இரண்டாவது முறையாக அங்குச் சென்ற பொழுது அங்கு கஃபாவையும் கஃபாவுடைய இறைவனையும் கண்டேன். நான் மூன்றாவது முறையாக அங்குச் சென்ற பொழுது அங்கு இறைவன் ஒருவனையே கண்டேன்'' என்று அவர்கள் கூறியுள்ளார்கள் என்று மற்றொரு வரலாறு கூறுகிறது.

இச்செய்தி துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்களுக்குத் தெரிய வந்ததும், ''அல்லாஹ் என் சகோதரர் அபூ யஸீதுக்குப் பேரருள் பாலிப்பானாக! அவர் இறை காதலில் தம்மை அழித்துக் கொண்டவர்களின் கூட்டத்தில் கலந்து தம்மையே தாம் காணாமல் ஆக்கிக் கொண்டார்'' என்று கூறினர்.

ஆம்; அவர்கள் தம்மையே இறைவனளவில் அழித்துக் கொண்டு தம்மை மறந்த நிலையிலேயே வாழ்ந்து வந்தார்கள். அவர்களிடம் ஒருவர் இருபதாண்டுகளாக ஊழியம் புரிந்து வந்தார். அவர் ஒவ்வொரு நாளும் அவர்களிடத்தில் வரும் பொழுது அவர்கள் அவரை நோக்கி, ''மகனே! நீ யார்? உன் பெயர் என்ன?'' என்று வினவுவார்கள். அஃது அவருக்குப் பெரிதும் வியப்பாக இருந்தது. தம் ஆசான் பெயரைத் தம்மிடம் ஒவ்வொரு நாளும் வினவி, தம்மைக் கேலி செய்கின்றார்களா என்று கூட அவருக்கு ஐயம் ஏற்பட்டது. ஒரு நாள் அவர் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு அதனை அவர்களிடம் கேட்டே விட்டார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி, 'மகனே! அப்படியல்ல. இறைவனின் திருப்பெயர் என் உள்ளத்தில் நுழைந்து மற்றப் பெயர்களையெல்லாம் என் உள்ளத்தை விட்டும் அப்புறப்படுத்தி விடுகிறது. எனவே அவற்றை என்னை அறியாமல் மறந்து விடுகிறேன்'' என்று அவருக்கு ஆறுதல் மொழி கூறினார்கள்.

ஒரு நாள் அவர்களுக்கு யஹ்யா இப்னு முஆதிடமிருந்து மடலொன்று வந்தது. அதிலே அவர்கள், ''ஒரு முடக்கு மதுவருந்தி, அதன் காரணமாக முடிவில்லாத போதையிலுள்ள ஒரு மனிதனைப் பற்றித் தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?'' என்று வினவி இருந்தார்கள். அதற்கு அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள், ''அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இங்கு ஒருவர் உள்ளார். அவர் இரவு பகலாக மதுக்கடலை அருந்துகிறார். எனினும் இன்னும் வேண்டும்; இன்னும் வேண்டும் என்று அலறுகிறார். அவரையே எனக்குத் தெரியும்'' என்று எழுதினர். இதில் அவர்கள் 'அவர்' என்று கூறியது தங்களையேயன்றி வேறில்லை.

அதற்கு யஹ்யா இப்னு முஆத் பதில் எழுதுங்கால், ''நான் தங்களிடம் ஓர் இரகசியத்தைக் கூற விரும்புகிறேன். அதனை நான் சுவனத்தில் தூபா என்ற மர நிழலில் வைத்துக் கூறுகின்றேன். இத்துடன் ஜம் ஜம் தண்ணீரில் நனைத்துக் குழைக்கப்பட்ட மாவில் சுட்ட ரொட்டி ஒன்றையும் தாங்கள் உண்பதற்காக அனுப்பி வைத்துள்ளேன்'' என்று குறிப்பிட்டார்.

அதற்கு அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் பின் வருமாறு பதில் எழுதினர்.

''தாங்கள் கூறும் சுவனத்துத் தூபா மர நிழலில் இப்பொழுதே நான் வீற்றுள்ளேன். தாங்கள் அனுப்பிய ரொட்டியை நான் உண்ணவில்லை. காரணம், அது எந்த நீரில் குழைக்கப் பட்டுச் சுடப்பட்டது என்பதைக் கூறியுள்ளீர்களேயன்றி எத்தானியத்தை விதைத்து அந்தமாவுக்கான தானியத்தை அறுவடை செய்தீர்கள் என்பதைத் தாங்கள் அம்மடலில் குறிப்பிடவில்லை.''

இம்மடலைக் கண்ணுற்றதும் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களைக் காண வேண்டுமென்ற அவா யஹ்யா, இப்னு முஆத் (ரஹ்) அவர்களுக்கு அளவு கடந்து அதிகமாகியது. எனவே அவர்களைக் கண்டு வருவதற்காகப் புறப்பட்டார்.

அவர்கள் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் இருப்பிடத்தை அடைந்த பொழுது, பொழுதும் அடைந்து விட்டது. அவர்கள் இறை வணக்கத்தில் ஈடுபடுவதற்காகப் பாலைவனம் போயுள்ளார் என்பதை அறிந்து ஆங்குச் சென்றார்கள் அவர்கள். ஆங்கு அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) வணக்கத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு, அவர்களின் வணக்கத்தைக் குலைக்க மனமில்லாதவர்களாய் அவர்கள் வணக்கத்தைத் தாமாக முடிக்கும் வரையில் அங்கு வீற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் இரவு முழுவதும் கால் கடுக்க நின்று கடும் தவம் செய்தார்கள். பொழுது புலர்ந்த பொழுதுதான் அவர்களின் தவம் கலைந்தது.

அப்பொழுது யஹ்யா இப்னு முஆத் (ரஹ்), பிஸ்தாமி (ரஹ்) அவர்களை அணுகி அவர்களுக்கு 'ஸலாம்' உரைத்து அவர்களுக்கு அன்றிரவு ஏற்பட்ட மெய்ஞ்ஞான அனுபவங்களைப் பற்றி வினவினர்.

அதற்கு அவர்கள் ''எனக்கு இருபதுக்கும் மேற்பட்ட படித்தரங்கள் காட்டப்பட்டன. ஆனால் அவற்றில் ஒன்றைக் கூட நான் விரும்ப வில்லை. ஏனெனில் அவை அனைத்தும் திரையிடப்பட்டிருந்தன'' என்று கூறினார்கள்.

அது கேட்ட யஹ்யா இப்னு முஆத் (ரஹ்) அவர்கள் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களை நோக்கி, ''மெய்ஞ்ஞானத்தை (மஃரிபாவை) இறைவனிடம் தாங்கள் கேட்டிருக்கலாமே. அவன் தான் மன்னர்களின் மன்னனாயிற்றே. ''நீங்கள் விரும்பியதைக் கேளுங்கள்'' என்றும் கூறியுள்ளானே'' என்றனர்.

அதற்கு அவர்கள், ''யஹ்யா! வாயை மூடிக் கொண்டிரும். அவனை அறிவதில் எனக்கே என் மீது பொறாமையாயுள்ளது. அவனையன்றி வேறு ஒருவரும் அவனை அறியக் கூடாது என்று நான் விரும்புகிறேன்.

அதுவே அவனுடைய விருப்பமாகவும் உள்ளது. அதில் தலையிட நான் யார்?'' என்று இடித்துரைத்தார்கள்.

அது கேட்ட யஹ்யா இப்னு முஆத் (ரஹ்) அவர்கள், ''இறைவனின் மகத்துவத்தின் மீது ஆணையாக, தங்களுக்குச் சென்ற இரவு கிடைத்த இறை அன்பளிப்புகளில் ஒரு பகுதியை எனக்குத் தந்துதவுங்கள்'' என்று கூறினர்.

அதற்கு அவர்கள், ''ஆதம் (அலை) அவர்களை உலகில் தன் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தது போன்ற தேர்வையோ, ஜிப்ரீல் (அலை) அவர்களின் புனிதத்துவத்தையோ இப்ராஹீம் (அலை) அவர்களின் தோழமையையோ, ஈஸா (அலை) அவர்களின் தூய்மையையோ, எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அன்பையோ உமக்குத் தந்த போதினும் நீர் திருப்தியுறக் கூடாது. உம்முடைய குறிக்கோளை மிகவும் உயரத்தில் வைத்திரும். அவனிடமிருந்து, அவனை மட்டுமே தேடுவீராக! அவ்விதம் தேடுவீராயின் நீர் அனைத்தையுமே பெற்றுக் கொள்வீர். நீர் உம்முடைய குறிக்கோளைக் கீழே கொண்டு வர வேண்டாம். கீழே கொண்டுவரின், நீர் எதில் கொண்டு வந்து உம்முடைய குறிக்கோளை நிறுத்துகின்றீரோ அதிலே வைத்து மூடப்பட்டு விடுவீர்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

அவர்கள் வேறொருவரிடம், ''மூஸா (அலை) அவர்கள் இறைவ னோடு உரையாடல் நிகழ்த்தினார்கள். ஈஸா (அலை) அவர்களுக்கு இறைவன் மகத்தான ஆத்மீக பலத்தை வழங்கினான். இந்தப் பேறு களெல்லாம் எனக்குக் கிடைத்தால் கூட நான் அவற்றிற்கு அப்பாலுள்ள ஒன்றை இறைவனிடம் கேட்பேன். ஏனெனில் இப்பேறுகளை யெல்லாம் விடச் சிறப்பு வாய்ந்த எண்ணிலடங்கா நற்பேறுகள் இறைவனிடம் உள்ளன'' என்று கூறினர்.

மேலும் அவர்கள் தங்களைப் பற்றிக் கூறும் பொழுது, ''நான் இறைவனுக்கு இரண்டே வயது இளையவன்'' என்று கூறினர். அதன் பொருள் இறைவனின் தனிப்பெரும் பண்புகளான தானே இயங்குதல், சர்வ வல்லமை ஆகிய இரண்டைத் தவிர்த்து ஏனைய அனைத்தையும் மனிதன் பெற இயலும். அவற்றை எய்த அவன் பாடுபட வேண்டும் என்பதேயாகும்.

ஓரிரவு அவர்கள் அயர்ந்து உறங்குங்கால் அவர்கள் இறைவனைக் கனவில் கண்டு, ''இறைவ எம்பெரும! உன்னை அடைவதற்கு வழி யாது?'' என்று வினவினர். அதற்கு அவன் ''ஃபாரிக் நஃப்ஸக வதஆல்'' (நீர் உம்முடைய நஃப்ஸை விட்டும் அப்பால் வாரும்) என்று அருளுரை பகர்ந்தான்.

மற்றொரு தடவை இறைவன் அவர்களை நோக்கி, ''எனக்கு என் திருச் சமூகத்தில் இல்லாதவற்றைக் காணிக்கையாக வழங்குவீராக!'' என்று கூறினான். அதுகேட்ட அவர்கள் அதிர்ந்தே போய்விட்டார்கள். இறைவனின் திருச் சமூகத்தில் இல்லாத பொருள் யாது எனச் சிந்தித்துச் சிந்தித்து அவர்களின் மூளையும் அலுத்தது. எல்லாம் அவன் மயமாக இருக்க, எல்லாம் அவனாக இருக்க அவனுடைய திருச் சமூகத்தில் என்ன பொருள் இல்லாமல் உள்ளது என்று எண்ணி, எண்ணி அவர்கள் சலித்தார்கள். அவர்களின் அறிவுக்கு ஒன்றுமே வசப்படவில்லை. எனவே அவர்கள் இறைவனை நோக்கி, கண்ணீரை ஆறாகப் பெருக்கி அழுது, ''இறைவ எம்பெரும! நானோ பலவீனன், நீ ஆணையிட்ட வண்ணம் உனக்குக் காணிக்கை வழங்க நானும் சிந்தித்தேன், சிந்தித்தேன். ஒன்றுமே எனக்குப் புலப்படவில்லை. எல்லாம் நீயாக இருக்க, உன்னிடமில்லாதது என்னிடம் என்ன உள்ளது - உனக்குக் காணிக்கை வழங்குவதற்கு. எனவே என் ஆற்றாமைக்காக என்னை மன்னித்தருள். நீ என்னை மன்னித்து ஆட்கொள்ளாவிடின் நான் கதி இழந்தவனாவேன். உன்னையும் இழந்தவனாவேன். அவ்வித நிலை ஏற்படாது என்னைக் காத்தருள்'' என்று கதறி அழுதனர். அது கண்ட இறைவன் மகிழ்ச்சி மீக்குற்று, ''அபூ யஸீத்! நீர் எனக்கு நல்ல காணிக்கைகளை வழங்கி விட்டீர்!'' என்று கூறினான். அதுகேட்டு அவர்களுக்கு ஒன்றுமே விளங்க வில்லை. 'எவ்வாறு' என்று வினயமாக வினவினார்கள். ''நீர் பணிவு, ஆற்றாமை, தாழ்மை, துயரம் என்னும் காணிக்கைகளை எனக்கு வழங்கினீர். அவையே என் திருச் சமூகத்தில் இல்லாதவையாகும். அவற்றை எவர் எனக்கு வழங்குகிறாரோ அவரை நான் என் அண்மையில் ஆக்கிக் கொள்கிறேன்'' எனறு மறுமொழி பகர்ந்தான் இறைவன். அப்பொழுது அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் அகமும் முகமும் ஒருங்கு சேர்ந்து மலர்ந்தன.*

வேறொரு தடவை நான் என் மனத்தை ஒருமுகப்படுத்தி இறைவனை வணங்கித் துதித்து வழுத்திக் கொண்டிருந்தேன். அப்பொழுது இறைவன் என்னை நோக்கி, ''நீர் என்னிடம் எதைக் கொண்டு வந்தீர்? என்று வினவினான். அதற்கு நான் ''உலகை வெறுப்பதையும் துறவு நிலையையும் கொண்டு நான் உன்னிடம் வந்தேன்'' என்று விடையிறுத்தேன். அப்பொழுது இறைவன் ''அபூயஸீதே! உலகின் தகுதி

* மற்றொரு வரலாறு பின்வருமாறு உள்ளது. ''நான் முப்பது ஆண்டுகளாக இறைவனை வணங்கினேன். அப்பொழுது ஒருவர், ''அபூ யஸீதே! அவனுடைய கருவூலங்கள் வணக்கங்களால் நிரம்பியுள்ளன. அவனை நீ அடைய விரும்பின், நீர் பணிவையும் கீழ்ப்படிதலையும் மேற்கொள்ளும்' என்று கூறியதைச் செவியுற்றேன்'' என்று அவர்கள் கூறினர்.

யெல்லாம் என்னிடம் ஒரு கொசுவின் இறக்கைக்குச் சமானமேயாகும். அதில் நீர் எதனை வெறுத்தீர்?'' என்று வினவினான்.

அவன் இவ்வாறு கேட்பதைக் கண்டு எனக்கு யாது பதில் கூறுவதெனத் தெரியவில்லை. எனவே நான் என்னுடைய ஆற்றாமையை உணர்ந்து, ''இறைவனே! நீ என்னை மன்னித்தருள்வாயாக! நான் உன் பேரருளில் ஆதரவு (தவக்குல்) வைத்து உன்னிடம் வந்தேன்'' என்று கூறினேன்.

அப்பொழுது இறைவன் ''அபூயஸீதே! நீர் என் பேரருளில் ஆதரவு (தவக்குல்) வைத்து வந்தேன் என்று கூறுகின்றீரே. நான் அதற்கேற்ற வண்ணம் உம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க வில்லையா?'' என்று வினவினான்.

மீண்டும் எனக்கு முன்னர் போன்ற நிலை ஏற்பட்டது. ''இறைவனே! நீ என் பிழை பொறுத்தருள்வாயாக! நான் உன்னைக் கொண்டே உன்னிடத்தில் வந்தேன்'' என்று வினயமாகக் கூறினேன்.

அதுகேட்ட இறைவன் ''அபூயஸீதே! இப்பொழுது தான் நான் உம்மை ஒப்புக் கொண்டேன்'' என்று அருள்மொழி பகர்ந்தான்.

ஒரு தடவை ஒருவர் அவர்கள் எவ்வாறு வணக்கம் நிகழ்த்துகிறார்கள் என்பதை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவர்கள் 'அல்லாஹ்' என்று பெரும் சப்தமிட்டுக் கூறிய வண்ணம் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தனர். அவர்களுக்கு மயக்கம் தெளிந்தபொழுது மக்கள் அவர்களை அணுகி, ''தங்களுக்கு யாது நிகழ்ந்தது?'' என்று வினவினர். அதற்கு அவர்கள், ''நான் அல்லாஹ் என்று கூறியபொழுது சுவனத்தில் நுழைந்தேன். அங்கு பெரிய பாம்பொன்று என்னை விழுங்கும் நோக்குடன் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது. நான் அதனிடம் இறைவன் சுவனத்தில் வாழ்வதாகத் தன் திருமறையில் கூறியுள்ளானே அவனுடைய இருப்பிடம் இங்கு எங்கு உள்ளது? நான் அங்குச் சென்று அவனைக் காண்பதற்கு? என்று வினவினேன். அப் பொழுது''இறைவன் உலகிலுள்ள உடைந்த உள்ளங்களில் வாழ்கின் றான்'' என்று அசரீரி முழங்கியது என் செவிப்பட்டது.

இதன்பின் நான் இறையண்மையை எய்திய பொழுது ''நீர் விரும்பியதைக் கேளும்'' என்று இறைவன் என்னிடம் கூறினான்.

''அதற்கு நான் உன் விருப்பமே என் விருப்பம்'' என்று கூறினேன்.

அப்பொழுது இறைவன், 'நீர் நம்முடன் என்றென்றும் வாழ விரும்பின், உம்மை அழித்துக் கொள்வீராக!'' என்று அருண்மொழி பகர்ந்தான்.

''அவ்விதமே செய்கிறேன், இறைவ! என்று கூறி நான் அடி பணிந்தேன்'' என்று பதிலுரைத்தார்கள்.

''பின்னர் ஒரு நாள் நான் இறைவனிடம் ஒன்றின் பின் மற்றொன்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அவன் என்னை விட்டும் தொலை விலேயே இருந்து கொண்டிருந்தான். ஆனால் என் இதயம் அவனுடைய தரிசனத்தால் வெளிச்சம் பெற்றபொழுது, என் தேவையெல்லாம் எனக்கு மறந்து விட்டன. நான் அவனிடம் யாதொன்றையும் கேட்பதையும் மறந்து விட்டேன். அப்பொழுது நான் அவனை நோக்கி, ''இறைவனே! நீ அபூ யஸீதுடையவனாகி விடு. நீ விரும்பிய வண்ணம், அவனை என்ன வேண்டுமானாலும் செய்துகொள் என்று கூறினேன்.'' என அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

''எனக்கு அகிலத்தின் ஆட்சியே கொடுக்கப்பட்ட போதிலும் அது நான் சென்ற இரவு இறைவனை விட்டுப் பிரிந்ததன் காரணமாக விட்ட ஒரு பெருமூச்சுக்குப் பகரமாக மாட்டாது'' என்று அவர்கள் கூறி, இறைவனுடன் இடைவிடாத் தொடர்பு கொண்டிருப்பதே தம் அனைத்து விருப்பமுமாகும் என்று கூறாமற் கூறினர்.

வேறொரு தடவை அவர்கள் கூறினார்கள் : ''நான் 4440 பெரியார் களை அணுகி நான்கு வினாக்களுக்குச் சரியான விடை பகருமாறு வேண்டி நின்றேன். அவர்கள் அளித்த விடை ஒன்றும் எனக்குத் தெளிவை அளிக்கவில்லை. மாறாக, மயக்கத்தையே வழங்கின.

பின்னர் மக்கா சென்ற நான் கஃபாவின் வாயலிலிருந்த வளை யத்தைப் பிடித்துக் கொண்டு, ''இறைவ என்பெரும! என் மார்க்கத்தின் விமோசனம் எதில் உள்ளது. கூறுவாய், கூறுவாய்'' என்ற கதறினேன். அதற்கு ஒரு வானவர், ''அபூ யஸீத்! நீர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதிலேதான் உள்ளது'' என்று மறுமொழி பகர்ந்தார். அதன்பின் நான் ''இறைவ என்பெரும! எனது இறை நம்பிக்கையின் விமோசனம் எதில் உள்ளது. கூறுவாய், கூறுவாய்'' என்று அலறினேன். அதற்கு ஒரு வானவர், ''அபூ யஸீத்! அது தீய சொல், வீண் வார்த்தை, பொய், புறம், கோள் ஆகியவற்றை வாயெடுத்தும் பேசாதிருப்பதிலே தான் உள்ளது'' என்று பதில் கூறினார். அதன் பின் நான், ''இறைவ எம் பெரும! என் ஆன்மாவின் விமோசனம் எதில் உள்ளது, கூறுவாய், கூறுவாய்'' என்று கதறினேன். அதற்கு ஒரு வானவர், ''அபூ யஸீத்! அது மன இச்சைகளை விட்டொழிப்பதிலே தான் உள்ளது'' என்று விடை பகர்ந்தார். இறுதியாக நான், ''இறைவ என் பெரும! என் உள்ளத்தின் விமோசனம் எதிலுள்ளது? கூறுவாய், கூறுவாய்'' என்று அலறினேன்.

அதற்கு ஒரு வானவர், ''அபூ யஸீத்! அது உலக இன்பங்களை விட்டொழிப்பதிலே தான் உள்ளது'' என்று மறுமொழி பகர்ந்தார்.

இதன்பின் அவர்கள் அறிவுத் தெளிவு பெற்று ஆன்மீகப் பாதையில் படிப்படியாக முன்னேறிச் சென்றார்கள்.

ஆன்மீக ஞானத்தின் வளர்ச்சியைப் பற்றி அவர்கள் கூறும் பொழுது, ''அதன் விதை ஆதம் (அலை) அவர்களின் காலத்தில் ஊன்றப்பட்டது நூஹ் (அலை) அவர்களின் காலத்தில் அது முளையிட்டு தளிர்த்தது. இப்ராஹீம் (அலை) அவர்களின் காலத்தில், அது கொடியும் கிளைகளுமாக விரிந்து படர்ந்தது. மூஸா (அலை) அவர்களின் காலத்தில் அது கொடி முந்திரிக் காய்களைக் காய்த்தது. ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் அக்காய்கள் தீஞ்சுவைக் கனிகளாகப் பழுத்தன. முஹம்மது எங்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் காலத்தில் அவற்றிலிருந்து சாறு பிழிந்து அருந்தப்பட்டன'' என்று அவர்கள் கூறினார்கள்.

மேலும் அவர்கள் நபிமார்களுடையவும் வலிமார்களுடையவும் ஆன்மீகப் படித்தரங்களைப் பற்றிக் கூறும் பொழுது ''நபிமார்கள் பெற்றிருப்பது தேன் நிரம்பிய பையாகும். அதிலிருந்து ஒரு சொட்டு கீழே விழுகிறது. அதுவே வலிமார்களுக்குரிய பங்காகும். அந்தப் பையிலுள்ள தேன் அனைத்தும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு உரியதாகும்'' என்று கூறினர்.

வலிமார்களுக்குரிய ஒரு சொட்டு ஆன்மீகத் தேனிலிருந்து தமக்குக் கிடைத்த அனுவத்தனை ஆன்மீகத் தேனை உண்டதன் காரணமாக அவர்கள் அடைந்த ஆன்மீக உச்சமோ மகத்தானதாக இருந்தது. அது பற்றிக் கேள்வியுற்ற ஒருவர் அவர்களை அணுகி, 'ஷைகு அவர்களே! தாங்கள் இத்தகு உயரிய நிலையை எவ்வாறு எய்தப் பெற்றீர்கள்?'' என்று வினவிய பொழுது, அவர்கள் ''ஒட்டிய வயிற்றாலும் வெற்றுடலாலும்'' என்று பதிலுரைத்தார்கள். மற்றொருவர் அவர்களிடம் வந்து இதே கேள்விகையக் கேட்ட பொழுது ''இறைவனுடன் நல்லுறவு கொண்டிருந்ததன் காரணமாக'' என்று அவர்கள் விடையிறுத்தார்கள். இறைவனுடன் நல்லுறவு கொண்டிருத்தல் என்பதன் பொருள் இறை ஆணைக்குக் கீழ்ப்படிந்து வெளியிலும் அந்தரங்கத்திலும் ஒழுகுவதேயாகும் என்பதேயன்றி வேறில்லை.

பிறிதொருவர் அவர்களை அணுகி இதே கேள்வியை வினவிய பொழுது, ''நான் அடைந்திருக்கும் அனைத்தும் அவனின் பேரருளால் எனக்குக் கிடைக்கப்பட்டனவேயன்றி என்னுடைய முயற்சியாலோ, ஆன்மீகப் பயிற்சியாலோ கிடைக்கப்பட்டனவல்ல'' என்று அவர்கள் பணிவோடும் நன்றியுணர்வோடும் கூறினார்கள். அதன் பின்

வேறொருவர் அவர்களிடம் வந்து இதே வினாவை வினவிய பொழுது அவர்கள் பின்வருமாறு பதிலுரைத்தார்கள் :

''நான் இளம் வயதில் ஓரிரவு பிஸ்தாமிலிருந்து புறப்பட்டு வெளிப் போந்தேன். அப்பொழுது வெண்ணிலா ஒளி சிந்திக் கொண்டிருந்தது. உலகம் முழுவதும் அமைதிப் படுக்கையில் கிடந்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது என் முன் விவரிக்க வொண்ணா மாபெரும் தோற்றம் ஒன்று காட்சி வழங்கியது. அதன் முன் பதினெட்டாயிரம் உலகங்களும் அணுப் போன்று காட்சி வழங்கின. நான் உணர்ச்சி மீக்குற்றேன். பேரின்பப் போதை என் தலைக்கேறியது. அப்பொழுது நான், ''இறைவ என் பெரும! இத்துணை மாபெரும் மாளிகை இத்துணைக் காலியாகக் கிடைக்கின்றதே'' என்று அலறினேன். அப்பொழுது ''மாளிகைக்கு எவரும் வராததனால் அது காலியாகக் கிடக்கவில்லை. எல்லாரும் அதில் நுழைவதை நாம் விரும்பாததால் தான் அது காலியாகக் கிடக்கிறது. முகம் கழுவாத எவனும் அதில் தங்கி இருக்க அருகதையற்றவனாவான்'' என்று அசரீரி முழங்கியது.

''அப்பொழுது நான் எல்லாப் படைப்பினங்களுக்காகவும் இறைவனிடம் இறைஞ்ச எண்ணினேன். அக்காலை இறைவனிடம் பரிந்துரைக்கும் பெரும் தகுதி முகம்மதெம்பெருமான் (ஸல்) அவர்களுக்கு மட்டும் தான் உரியது. அதில் குறுக்கிட எனக்குத் தகுதி ஏது? என்ற எண்ணம் மேலிட, இறைஞ்சாது பேணுதலுடன் வாய் பொத்தி நின்றேன். அப்பொழுது உம்முடைய பேணுதலின் காரணமாக, என் அன்பிற்குரிய தூதரைக் கௌரவித்ததற்காக நாம் உம் பெயரை மெய்ஞ்ஞானிகளின் பேரரசர் என்று மக்கள் அழைக்கும் வரை, மறுமை நாள் வரை உயர்வு பெறச் செய்வோம்'' என்று அசரீரி முழங்கியது.

''இதன் பின் நான் பன்னிரண்டு ஆண்டு காலம் என்னுடைய ஆன்மாவின் கொல்லனாக இருந்தேன். கடுமையான கட்டுப்பாடு என்னும் உலையில் என் ஆன்மாவைத் தள்ளி, அதனைச் செந்நிறமாக்கும் வரைக் காய வைத்து சுய நிந்தனை என்ற சம்மட்டியால் அதனை அடித்துச் செப்பனிட்டு அதனைக் கண்ணாடி போன்று ஒளிரச் செய்தேன். பணிவு, வணக்கம் ஆகியவற்றால் அதற்கு மெருகு ஏற்றினேன். அதன் பின் அதில் என் உருவை ஓராண்டு வரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது தவறான தன் மதிப்பின் காரணமாக என்னுடைய வணக்கத்தைப் பற்றி நானே பெருமிதம் கொண்டதனால், என்னுடைய இடுப்பில் இறைவனுக்கு மாறு செய்யும் (குப்ரிய்யத்தின்) கச்சை சூழக் கட்டப் பட்டிருப்பதைக் கண்டேன். இதன் பின் ஐந்தாண்டுகள் என் உள்ளத்தை அடக்கிக் கடுமையான வணக்கத்தில் ஈடுபட்டதன் காரணமாக அக்கச்சை அவிழ்த்தெறியப்பட்டது. நான் புது முஸ்லிமாகத் தோற்றம் வழங்

கினேன். அப்பொழுது படைப்பினங்களைப் பார்த்தேன். அவை அனைத்தும் செத்து மடிந்து கிடந்தன. அவற்றிற்காக நான் நான்கு தக்பீர் கூறி (ஜனாஸாத் தொழுகை) தொழுது விட்டு இறையருளால் இறைவனை எய்தினேன்.

''இறைவனின் திருச் சந்நிதானத்தை அடைந்த நான் அவனை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்றேன். அப்பொழுது அவன் என்னை நோக்கி வந்தான். அவனுடைய பேரொளியால் என் உடலம் முழுவதும் ஒளிர்ந்தது. அவனுடைய மறைவான இரகசியங்களின் அற்புதகங்களை எனக்குக் காட்டினான். அவனுடைய மாண்பாரும் மகத்துவத்தை எனக்கு வெளிப்படுத்தினான்.

''பின்னர் நான் என்னைப் பார்த்தேன். என்னுடைய பண்புகளையும் இரகசியங்களையும் பற்றிச் சிந்தித்தேன். அல்லாஹ்வின் பேரொளியின் முன் என் ஒளி இருள் மயமாக இருந்தது. அவனுடைய மாபெரும் மகத்துவத்தின்முன் என்னுடைய மகத்துவம் அணுவினும் அணுவாகத் தென்பட்டது. அவனுடைய புனிதத்துவத்தின்முன் நான் அழுக்கு மயமாகக் காட்சி வழங்கினேன்.

''இதன் பின் நான் மீண்டும் என்னை உற்று நோக்கினேன். இறைவனின் பேரொளி என்மீது படர்வதைக் கண்டேன். என்னுடைய மாண்பெல்லாம் அவனுடைய மாண்பின் காரணமாகவே என்பதை உணர்ந்தேன். நான் ஆற்றியவை அனைத்தையும் அவனின் பேராற்றலின் காரணமாகவே என்னால் ஆற்ற இயன்றது என்பதை உணர்ந்தேன். நான் கண்ணால் கண்டவை அனைத்தும் அவன் மூலமாகவே நான் கண்டேன் என்பதையும் உணர்ந்தேன். என் வணக்கங்கள் அனைத்தும் அவனி லிருந்தே வருகின்றன என்பதையும் என்னிலிருந்து வரவில்லை என்பதையும் ஆனால் நானோ அவனை வணங்கிக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பதையும் உணர்ந்தேன்.

''நான் அவனை நோக்கி, 'இறைவ என் பெரும! இஃதென்ன புதுமையாக உள்ளது'' என்று வினவினேன். அதற்கு அவன், 'எல்லாம் நான் தான். என்னைத் தவிர வேறொன்றுமில்லை' என்று கூறினான்.

''இதன் பின் அவன் என்னை அழித்து அவனில் வாழச் செய்தான். அவன் மூலமாக நான் அவனைப் பார்த்தேன். அவனுடைய பேரொளியில் நின்றும் எனக்கு ஒரு கண்ணைக் கொடுத்தான். அவன் மூலமாக நான் அவனுடைய படைப்புகள் அனைத்தையும் பார்த்தேன். அவனுடைய நாவைக் கொண்டு நான் அவனுடன் உரையாடினேன். அவனுடைய அறிவிலிருந்து நான் அறிவை எய்தினேன். அவனுடைய பேரொளியால் நான் அவனை வைத்த கண் வாங்காது பார்த்தேன்.

''இதன் பின் நான் நாலாயிரம் பாலைகளைக் கடந்து அவற்றின் முடிவை எய்தினேன். ஆனால் என் கண்களை அகல விரித்துப் பார்க்கும் பொழுது அது நபித்துவத்தின் துவக்கமாக இருப்பதைக் கண்டேன்.

''இதன் பின் எல்லையில்லாப் பெருவெளியில் பறந்து சென்றேன். ''ஒருவரும் இந்த எல்லையை அடைந்திருக்க இயலாது. இதற்கு மேல் ஒன்றும் இல்லை' என்று எண்ணினேன். அடுத்த கணம் நபியின் பாதத்தில் என் தலை போய் உராய்ந்தது. அப்பொழுது தான் வலி மார்களின் முடிவு நபிமார்களின் துவக்கம் என்பதையும், நபிமார்களின் முடிவுக்கு எல்லையே இல்லை என்பதையும் உணர்ந்தேன்.

''இதன் பின் பறந்து சென்ற எனக்கு நரகமும் சுவர்க்கமும் காட்டப் பட்டன. அவற்றை நான் பொருட்படுத்தாது மேலும் மேலும் சென்று கொண்டிருந்தேன். ஒவ்வொரு நபிமார்களின் ஆன்மாவையும் சந்தித்தேன். அவற்றிற்கு 'ஸலாம்' உரைத்தேன். அதன்பின் இறைவனின் திருத்தோழரின் ஆன்மாவை அடைந்தபொழுது அதற்கு முன்னால் ஓரிலட்சம் நெருப்புக் கடல்கள் இருப்பதையும் அதற்கப்பால் ஓரிலட்சம் ஒளித்திரைகள் இருப்பதையும் கண்டேன். அக்கடல்களில் ஒன்றில் நான் காலை வைத்திருப்பின் நான் பொசுங்கிச் சாம்பலாகி இருப்பேன். எனக்கு என் செய்வதென்றே விளங்கவில்லை. எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. நான் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் மாளி கையை உற்றுப் பார்க்க விரும்பினேன். எனினும் அவ்விதம் செய்ய எனக்குத் துணிச்சல் இல்லை. நான் இறைவனை அடைந்த போதிலும், அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களை அடைய எனக்குத் துணிச்சல் இல்லை.

''அப்பொழுது நான் இறைவனை நோக்கி, 'நான் என் செய்வேன்? என்னால் என்னை விட்டொழிக்க இயலவில்லையே' என்று கூறினேன்.

''அப்பொழுது இறைவன் என்னை நோக்கி, 'நீர் உம்மை விட்டும் விடுதலை பெற விரும்பினால், என்னுடைய அன்புத் தோழரான அரபு நாட்டு முஹம்மதைப் பின்பற்றுவீராக! அவருடைய பாத தூளியால் உம் கண்களுக்கு அஞ்சனமிடுவீராக!' என்று கட்டளையிட்டான் *

* இவ்வாறு தமக்கும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப் போன்று விண்ணேற்றம் நிகழ்ந்தது என்று கூறியுள்ளதைக் கேள்வியுற்ற ஹுஸைன் பின் ஈஸா, இவர்களை பிஸ்தாமை விட்டும் விரட்டினார் என்றும் அவர் இறந்த பின்னரே இவர்கள் பிஸ்தாம் வந்தனர் என்றும் கூறுவர். இவர்கள் பிஸ்தாமை விட்டு விரட்டப்பட்ட பொழுது, ''பிஸ்தாமோ நல்ல ஊர் அதில் வாழ்ந்து வந்த மிக மிகத் தீயவன் பாயஸீத்தான்'' என்று இவர்கள் கூறியதாக 'தத்கிரத்துல் ஒளலியா'வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''என்னுடைய வாணாளில் நான் ஆயிரம் தடவை இறைவனின் முன் நிற்க அனுமதிக்கப்பட்டேன். ஒவ்வொரு தடவையும் எனக்கு இம்மை, மறுமை ஆகியவற்றின் ஆட்சியை இறைவன் வழங்கினான். நான் வேண்டாம், வேண்டாம் என்று மறுத்தேன். 'அவ்விதமாயின் உனக்கு என்ன வேண்டும்' என்று வினவினான் அவன். 'எனக்கு ஒன்றுமே வேண்டாத நிலைதான் வேண்டும்' என்று கூறினேன் நான். அது கேட்ட இறைவன், 'நீ தான் என்னுடைய உண்மையான நல்லடியான்' என்று இயம்பினான்.*

இவ்வாறு அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் அல்லாஹ்வின் அருள் நேசச் செல்வராக விளங்கி அல்லாஹ்வால் தன்னுடைய உண்மையான அடியானாக ஏற்றுக் கொள்ளப் பெறும் நற்பேற்றினையும் பெற்றுப் பொலிவுற்று ஹிஜ்ரி 261-ஆம் ஆண்டில் இறப்பெய்தினர்.

அவர்கள் இறந்த அன்று ஒரு முஸ்லிம் அவர்களின் அண்டை வீட்டுக்காரனான தீ வணங்குபவன் ஒருவனை அணுகி, இஸ்லாத்தை தழுவி விடுமாறு கூறியபொழுது ''அபூ யஸீத் பின்பற்றிய இஸ்லாத்தைப் பின்பற்றுமாறு நீர் கூறின் அதனைப் பின்பற்ற எனக்கு ஆற்றலில்லை. ஆனால் நீர் பின்பற்றும் இஸ்லாத்தைப் பின்பற்றுமாறு நீர் கூறின் அதனைப் பின்பற்ற எனக்கு நாணமாக உள்ளது'' என்று சுடச் சுடப் பதில் பகன்றான் அவன். அவனின் அப்பதில் அபூ யஸீத் (ரஹ்) அவர்கள் அடைந்த ஆன்மீக உச்சத்தின் மாண்பினையும், முஸ்லிம்களின் அவல நிலையையும் நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

அவர்கள் இறந்ததன் பின் ஒருவர் அவர்களைக் கனவில் கண்டு 'முன்கர், நக்கீர் ஆகியோர் உம்மிடம் வந்து எவ்வாறு நடந்து

---

அஹ்மது இப்னு கஸ்ரவிய்யா (ரஹ்) இறைவனைக் கண்ட பொழுது, ''எல்லோரும் சுவனத்தை என்னிடம் கேட்கின்றனர். ஆனால் அபூ யஸீதோ என்னிடம் என்னையே கேட்கிறார்'' என்று இறைவன் கூறியதாக இஹ்யாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் நல்லடியார்கள் முன் சுவனம் அலங்கரித்துக் கொணரப்படினும் அவர்கள் அதை விட்டும் வெருண்டோடுவர் என்றும் அவர்கள் அல்லாஹ்வையன்றி வேறு எதனையும் ஏறிட்டுப் பார்க்க மாட்டார்கள் என்றும் பாயஸீத் பிஸ்தாமியே கூறியுள்ளது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

'நான் அவராகவும் அவர் நானாகவும் ஆகியுள்ளோம். காரணம், உலகிலுள்ள ...கள் அனைத்தும் படைக்கப்பட்டவற்றின் மீது அவேட்கையுடையதாகவும் ...த் தேடுபவையாகவும் இருக்க அவர் மட்டும் என்னையே நாடுபவராகவும் ...தடுபவராகவும் உள்ளார்'' என்று அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்கள் ...துல் காதிர் (ரஹ்) அவர்களிடம் கூறியதாக மற்றொரு வரலாறு

கொண்டார்கள்?'' என்று வினவினார். அதற்குஅவர்கள் ''அவ்விரு வானவரும் என்னிடம் வந்து உம்முடைய இறைவன் யார்?'' என்று வினவினர். அதற்கு நான் ''போய், இறைவனிடமே அதனைக் கேளுங்கள். ஏனெனில் நான் அவனுடைய அடிமை என்று கூறி அக்கூற்றை இறைவன் ஏற்றுக் கொள்ளாவிடின் நான் அவ்விதம் கூறியதனால் யாதொரு பலனும் ஏற்படாது போய்விடும் என்று கூறினேன். அத்துடன் அவர்கள் போனவர்கள் தாம். மீண்டும் வரவே இல்லை'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களின் அடக்க இடம் இன்றும், பிஸ்தாமில் உள்ளது. அவர்களின் வழித்தோன்றலாகிய ஷைகு ஷர்புத்தீனின் மாணவராகிய மங்கோலிய அரசர் உல்ஜைத்து முஹம்மது குதாபந்தா ஹிஜ்ரி 713-ஆம் ஆண்டில், அவர்களின் அடக்க இடத்தின் மீது ஒரு மணி மண்டபம் எழுப்பினார்.

வாழ்க அவர்களின் திருப்பெயர்!
வாழ்க அவர்களின் திருப்புகழ்!!